கணபதி துணை

பார்க்கவ புராணம்

எ ன் னு ம்



விநாயகபுராணம்.

இ ஃ து

ஸ்ரீகைலாயபரம்பரை திருவாவடுதுறையாதீனம்

கச்சியப்ப சுவாமிகள்செய்தருளிய

பாடலுக்கிணங்க,

திருமழிசை

வயித்தியலிங்க முதலியார் குமாரர்

முத்துசாமி முதலியாரால்

வசனரூபமாகச் செய்யப்பட்டு

சென்னை-இட்டா

பார்த்தசாரதி நாயுடு அவர்களால

ஸ்ரீ பத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1911.

GOLDEN PRESS., MADRAS, N. C.

சடவுள்துணை.

(ரண்டு ரூபா முத்திரை ஸ்டாம்பு)

விநாயக புராணமென்னு மிந்நூலின்

எ டி ட ர்

பாத்திய விக்கிரயப் பத்திரத்தின் நகல்.

1908-ஞ்ரு மேமீ 5உ சென்னபட்டணம் பெத்துநாயக்கன் பேட்டை ஆசாரப்பன் தெருவு 84 - வது, நெம்பர்வீட்டில் ஸ்தாபித்திருக்கும் ஸ்ரீபத்மநாபவிலாசம் பிரஸ் தலைவராகிய இட்டா - பார்த்தசாரதிநாயுடி அவர்கட்கு ஷெ யூர் ஷெ பேட்டை குமரப்ப முதலிதெருவு 26 வது, நெம்பர்வீட்டிலிருக்கும் திருமழிசை-வைத்தியலிங்கமுதலியார் குமாரராகிய முத்துசாமி முதலியார் எழுதிக் கொடுத்த பார்க்கவபுராணமாகிய விநாயகபுராண வசன மென்னும் புஸ்தகக் காபிரயிட் விக்கிரயப்பத்திரம் என்னவென்றால், இப்பவும் என்னால் இயற்றப்பட்டு என் பேராலேயே ரிஜிஸ்டர் செய்து யான் உபயோகித்து வருத ஷெ விநாயகபுராண வசனத்தின் காபிரயிட் அவகாசமுதலானவற்றை நாளதுதேதியில் தங்களுக்கு விற்க விலை தீர்மானித்த ரூபா 200. இந்த ரூபா இருநூறும் தங்களிடத்தில் நாளதுதேதியில் நான் பெற்றுக்கொண்டே னுகையால் இனி எனக்கும் அந்தப் புத்தகத்திற்கும் யாதொரு பாத்தியதையில்லை. ஆகையால் தாங்களே வேண்டுமான பதிப்புகளை 1905 - ஞ்ரு அக்டோபர்மீ 1உ முதல் அச்சிட்டு அனுபவித்து மற்றும் உண்டான சுதந்தரங்களையும் பெற்றவேண்டியது. இதற்கு யாதொரு கலனுமில்லை, கலனுளதாகத் தோற்றும்பக்ஷத்தில் நானே முன்னின்று தீர்த்துக் கொடுக்கக்கடவேன். இந்தப்படி என் மனோராஜியில் சம்மதித்து எழுதிக்கொடுத்த விநாயகபுராணவசனக் காபிரயிட் சுதந்தரத்தின் விக்கிரயப் பத்திரம்

இப்படிக்கு,

கி. முத்துசாமி முதலியார்.

சாக்ஷிகள்.

ஜெ. சேஷகிரி ராவ்.

சி. ராஜு முதலியார்.

போ. பார்த்தசாரதி நாயுடி.

திருச்சிற்றம்பலம்.

விநாயக புராண வசன

படல அட்டவணை.

முதலாவது;

உபாசனாகாண்டம்.

கெ	படலப்பெயர்		பக்கம்.
க	கடவுள்வாழ்த்து	...	க
உ	நூல்விபரம்	...	ச
ங	நூற்பயன்	...	சு
ச	அவையடக்கம	...	ஏ
ஞ	மைமிசாரணியபபடலம	...	அ
சு	புராணவரலாற்றுப்படலம்	...	ஙக
எ	சோமகாந்தன்வனம்புகத்துணிந்தபடலம	...	ஙங
அ	சோமகாந்தன் அரசியற்கைப்படலம்	...	ஙசு
கூ	பட்டாபிஷேகப்படலம்	...	உஎ
க0	வனம்புகுபடலம்	...	உஎ
கக	பிருகுமுனியையடித்தபடலம்	...	ஙக
கஉ	இருவகைவினையுமுணர்ததபடலம்	...	ஙசு
கங	சோமகாந்த னெய்தீர்ந்தபடலம்	...	சஉ
கச	வியாசமுனிபிரமதேவனையடித்தபடலம்	...	சஅ
கஞ	வியாசர் உபதேசம்பெற்றபடலம்	...	ஞச
கசு	வியாசர் வரம்பெற்றபடலம்	...	சுஞ
கஎ	சோமகாந்தன் முத்தியடைந்தபடலம்	...	சுஎ
கஅ	மூவ ருபாசித்தபடலம்	...	எஎ
ககூ	மூவர் வரம்பெறுபடலம்	...	அஉ
உ0	விசுவரூபங்காட்டியபடலம்	...	அங
உக	பிரமசிருட்டிப்படலம்	...	அஎ
உஉ	திருமணப்படலம்	...	க0கூ
உங	விண்டுசடாக்கர மனுட்டித்தபடலம்	...	ககஎ
உச	விசுவாமித்திரனை வீமனடித்தபடலம்	...	கஉஎ
உஞ	தக்கன் பிணிதீர்குபடலம்	...	ஙஙங
உசு	முற்கலர் தக்கனுக் குபதேசித்தபடலம்	...	கசக

படல அட்டவணை.

செ.	படலப்பெயர்.		பக்கம்
உஎ	வல்லாளன்வேதனை நீக்குபடலம்	..	கசச
உஅ	வல்லாளன்முத்தியடைந்தபடலம்	...	கசஅ
உசு	தக்கனரசாட்சிபெற்றபடலம்	...	கறுங
உ0	வீமனுபதேசம்பெற்றபடலம்	...	உகசு
உக	உருக்குமாங்கதன்பட்டாபிஷேகப்படலம்	...	உகஅ
உஉ	உருக்குமாங்கதன்சாபம்பெற்றபடலம்	...	உஉசு
உங	நாரதர் சாபநிவாரணமுரைத்தபடலம்	...	உங்ச
உச	இந்திரன்சாபம்பெற்றபடலம்	...	உஉஎ
உறு	அகலிகைசாபநிவாரணமுரைத்தபடலம்	...	உசறு
உசு	கௌதமருபதேசித்தபடலம்	...	உசஎ
உள	இந்திரனுபதேசம்பெற்றபடலம்	...	உறுக
உஅ	இந்திரனுபாசித்தபடலம்	...	உறுங
உக	உருக்குமாங்கதன்முத்தியடைந்தபடலம்	...	உறுள
ச0	கிருச்சமத ருபதேசம்பெற்றபடலம்	...	உறுசு
சக	கிருச்சமதர்வரம்பெறுபடலம்	...	உஙச
சஉ	திரிபுரன் வரம்பெறுபடலம்	...	உசஅ
சங	திரிபுரனரசாட்சிப்படலம்	...	உஎங
ச்ச	தேவர்கள்வரம்பெறுபடலம்	...	உஅ0
சறு	வீமலன்வரம்பெறுபடலம்	...	உஅச
சசு	திரிபுரதகனப்படலம்	...	உஅசு
சள	உமையம்மைவிநாயகவிரதங்கேட்டபடலம்	...	உசுஅ
சஅ	விநாயகசதுர்த்தியனுட்டித்தபடலம்	...	உ0எ
சசு	கர்த்தமன் விநாயகசதுர்த்தியனுட்டித்தபடலம்		உகஅ
ற0	களன்விநாயகசதுர்த்தியனுட்டித்தபடலம்	...	உஉ0
றக	சந்திராங்கனின் விநாயகசதுர்த்தியனுட்டித்தப		உஉஉ
றஉ	சண்முக ரனுட்டித்தபடலம்	...	உஉறு
றங	மன்மதனுருவம்பெற்றபடலம்	...	உங்க
றச	ஆதிசேடனனுட்டித்தபடலம்	...	உங்சு
றறு	இந்திரவிமானம்மண்ணிழிபடலம்	...	உங்கு
றசு	புருசண்டி சங்கட்டசதுர்த்தியனுட்டித்தபடல		உறு0
றள	கிருதவீரியன்றவம்புரிபடலம்	...	உறுஉ
றஅ	அங்காரகனுபாசித்தபடலம்	...	உறுச
றக	சந்திரனனுட்டித்தபடலம்	...	உறுஅ
சு0	விடைகரம்பூலீச்சிவிடுறுபடலம்	...	உசுஉ
சுக	தூர்வையருச்சனைப்படலம்	...	உ.சுசு
சுஉ	தூர்வை யாசகப்படலம்	...	உங்க

படல அட்டவணை.

செ.	படலப்பெயர்.	பக்கம்.
௯ங	தூர்வைதுலியேற்றுப்படலம் ...	ங்கூச
௯ச	வண்ணிமகத்துவப்படலம் ...	ங்கூஅ
௯ஞ	வாமனர்வரம்பெறுபடலம் ...	ச0ஞ
௯ஸ	கீர்த்திமகப்பெறுபடலம் ...	சகச
௯எ	விடங்கர்படலம் ...	சகச
௯அ	சமிமந்தாரவுற்பத்திப்படலம் ...	சகஅ
௯கூ	தேவர்கள் சாபந்தீர்த்தபடலம் ...	சஉக
எ0	கிப்பிரப்பிரசாதன் வரம்பெறுபடலம் ...	சஉஅ
எக	கிருதவீரியன்மகப்பெறுபடலம் ...	சங்உ
எஉ	இந்திரவிமானம்விண்ணெழுபடலம் ...	சங்அ
எங	சூரசேனன்முத்திப்படலம் ...	சஞ்கூ
எச	பரசுராமன்வரம்பெறுபடலம் ...	சகூஉ
எஞ	இராவணன்பூசித்தபடலம் ...	சகூக
எஸ	அகத்தியர்பூசித்தபடலம் ...	சஎக
எஎ	காசிபர்முதலியோரழுட்டித்தபடலம் ...	சஅங
எஅ	சகத்திரசாமப்படலம் ...	சஅஎ
	...	சகஉ

இரண்டாவது,

இலீலாகாண்டம்.

க	வக்கிரதுண்டவிநாயகர்திருவுவதாரப்படலம்...	உ
உ	சிந்தாமணிவிநாயகர்திருவுவதாரப்படலம் ...	ங
ங	கஜானனவிநாயகர்திருவுவதாரப்படலம் ...	ஙசு
ச	விக்கினவிநாயகர்திருவுவதாரப்படலம் ...	ஞ0
ஞ	பயூரசவிநாயகர்திருவுவதாரப்படலம் ...	ஸசு
ஸ	பிங்கியமயூரேசவிநாயகர்திருவுவதாரப்படலம்	ஸஉ
எ	பாலசந்திரவிநாயகர்திருவுவதாரப்படலம் ...	கஉ0
அ	தூமகேதுவிநாயகர்திருவுவதாரப்படலம் ...	உ0ங
கூ	கணேசவிநாயகர்திருவுவதாரப்படலம் ...	உ0ச
க0	கணபதிவிநாயகர்திருவுவதாரப்படலம் ...	உஉஎ
கக	மகோற்கடவிநாயகர்திருவுவதாரப்படலம் ...	உஉஅ
கஉ	உண்டிவிநாயகர்திருவுவதாரப்படலம் ...	உச்ச
கங	வல்லபைவிநாயகர்திருவுவதாரப்படலம் ...	ங்அ0
கச	வேதவியாசருபதேசம்பெறுபடலம் ...	ச0ஞ
	....	சஉங

சுபம்! சுபம்!! சுபம்!!.

கணபதிதுணை.

சிறப்புப்பாயிரம்.

இஃது.

இயற்றமிழாசிரியராகிய

திருத்தணிகை.

விசாகப்பெருமாளையர் அவர்களால்

இயற்றப்பட்டது.

——:o:——

நீலமணிடிலவாசிரியப்பா.

வர்தருகமலக் கண்ணனெண்கண்ணன், பார்தனியகழ்ந்தும்பதற்
துங்காணுத், திங்களணிந்த செஞ்சடைக்கடவுள் புங்கமலர்கொடு
பூசையுஞற்றி, மும்மாதிலு முருக்கிடநின்ற, பெம்மானிங்கரன் பிடு
றுசரிதையைப், பூதரவில்லிதாள் பொற்றுமன்பினனு, மாதவப்பிருகு
மாமுனியென்போன், பூமிகாந்தனிகர் சோமகாந்தற்கு, நேமிசூழ்
தருநெடுகிலவரைப்பில்,ஆரியமொழியிலருளியபடியே, காரியோர்பா
கனற்றாளன் றிப், பிறவோர்பற்றும் பேணிடாஞானந், துறவோர்வா
ழுந் துறைசையம்பதிவாழ், கச்சியப்பனுங் கவிஞர்கோன் புலவர்,
உச்சிமேற் கொள்ள வுயர்தமிழ்ச்செய்யுளான் மொழிபெயர்த்துரை
த்த முதனூலதுதான், வழியறிந்துரைவடுவிலிகிபலுங், கற்றோர்
சிலர்க்கே யன்றிமற்றோர்க்குத், தெற்றென வுணருந் திறத்ததன்ற
தனல், வள்ளவாய்க் கமலத் தஞ்சிறைவண்டு, தெள்ளிளிமுரன்று
தேம்பிழிபூற்ற,முறுக்கவிழ்ந்தொழுகுதறப்பெருவாரிக், கருங்கழன்
மள்ளர் செங்காலன்னம், இரங்குறப்பயிற்றியவெழில்பெறுகழனிக்,
கட்டியைக்கரைப்பக் கரைவழுக்ககல,மொட்டலர்துடவைமுதிர்தா
துருக்குஞ், சிரைக்காட்டுந் திருந்துறுசெல்வக், காரைக்காலிற்கலந்
துவாழ்வுறுவோன் வியனட்பெமக்கெமக் கெண்ணுமேதினியோர், நய
கட்புமீக்கொளு நயனப்பவள்ளல், தகைமைவிளக்கியதனிமைத்தனு
கிப், புகாறு செந்நாப் போதார்புகன்ற, தக்கார்தகவிலரென்பதவர
வர், எச்சத்தாற்காணப் படுமெனுந்தெய்வப், பொய்யாமொழிக்குப்
பொருத்திலக்கியமாய், எய்யாவைய மின்புற வுதித்தோன், மாற்றரு
நிறப்பின்வருத்தியோர்போதுவந், தேற்றவர்தமையவ ரேற்றாட்டா
னென, வேற்பவர்க்காக்குறு மிசைபுகழாளன், நூலினலனென்றுண்
ணிதிற் புணர்வோர், பாலினிசைத்த பண்புடைப்பெரியோன், இலை

சிறப்புப்பாயிரம்.

துணைமலரடிக் தன்பருக்கினியனுக், துகளறு குமாரச் சுவாமிவள்ளல், பூர்க்கவபுராணப் பனுவலதனின், யார்க்குமிலமறை கூயெனவமைக்த, அறமுதலைன்கு மைமமூன்மூன்று, மறமுறைவெளினிடை மலியெனவாங்கு, யாவருக்தேறி யெளிதினர் வகையின, மேலுரச்செய்கென விளம்பினனுகத், தொகுத்தன விரித்துப் விரித்தன தொகுத்தும், வகுத்தனன் வசன காவியமாகக், காவியங்கண்ணினர் கவின்கவர்வுறுபாக் கோவியக்திகழுமொளிர்மணிமாடமூஞ், சிறையளிபாடு நறைகமழ்சோலையும், முறையுரிவழாதமறையவராதி, நாற்பால்வருணமு ரண்ணிவாழ்மறுகும், நூற்பவணத்து நுவன்றிடுகழகமூன், தெற்றியம்பலமுஞ் சிதிரகூடமும், உற்றிடமழிசை யொண்பதியுடையான், எருகும்புகழ்பெறு செங்குந்தர்கடம், பொங்குமரபினன் பொறைநிறைவுடையோன, பதிமுதன்மூப்பொருட் பான்மைதேற்றபு, சதிருறுதலமோ ராறினுக தான்றுவி இ, இரும்புரீருண்டென வின்னுயிரின்பப், பெரும்பரலகரியிற் பெயராவிழுங்கிய, பகைபெறு பவதுயர் பாற்றிவீடளிருத், தகைபெறுவீர சைவசிகாமணி, மூலவல் விருட்கிடங தெழுந்துயிர் மூமலத், தாலபந்தத்திற் சுழலுறச் சுழற்றும், ஓருமூவினையுங் திரிதருகம்போன், றெருசிவங்குருமுத லுயர்மூவடிவாய்த், தன்னருளியலான் மன்னுட லுயிர்பொருண், மூன்றையும்வாங்க முதலுயரொருவி, மூன்றியற்கதுவாமூவாமுழுங்கில, யுறுமெனவுணர்தவ் வுறுதிகாடிய, மறிவமுமனத்தன்மலிர்வரைப்பிற், சிவசாதனமே தவசாதனமெனக், கொள்ளுதலதுவே குணமாண்டோராக, டெள்ளிய நெறியெனத்தெரீ இத்தனி யுடையார், சங்கம மெனவே தாவின்றுணார்தச், சங்கமக்தனக்குறு தனிப்பொரு ளென்போன, சற்குணநிதியெனச் சாற்றுநர்சாற்றுக, நற்குணக்தீரீ இப் பின்காட்டாவேதி, ஏருறுவயிதிய லிங்கவேடவுத்திற், சீருறவுதிதமேதான் சிவன்ருளினைமலர், மறவாவுளத்தன்மாசீறு மதிஞரோ, டுறவாயென்று மொழுகுழ பண்பினன், உயர்ந்துபேர்மாற்றி னுயர்மக்கட்கு, முந்நூல்கிளர்ந்த முறைப்படுத தொகுத்துப், பொதுவறவளர்க்கு முதுகோரன்புடையோன், எளிபொருண் யாவர்வாய்க் கேட்பினு மபொருண், மெய்ப்பொருள்காணுறு மீக்கூர்மதியான், இம்பரினுரைவலா ரிலரெனுமீழுகறு, மிம்பரும்புரினுலவற் தேய்திய, உத்தமக்கவிஞனு மொளிர்குணமேரு, மூத்திச்சமியென் முதுபுகழோனே.

சிறப்புப்பாயிரம்

மூன்றாம்



கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

பார்க்கவபுராணம்

என்கின்ற

விநாயகபுராணவசனம்.

காப்பு

திங்களணி சடைப் பெருமான் பூசை யாறறித்
திரிமதிலுங் கடந்திடமுன் னின்ரு ன் யாவன்
றங்குகடற் புவிவரைப்பி னெடியோ ஞகி
சகலருக்கு மூறுதவிர்க் கின்ரு ன் யாவ
னங்கவன்மெய்ச் சரிதமொழி பெயர்ப்ப வேண்டி
யவனடியே சரணாக வடுதது ளேற்கு
மங்கலசிங் மயமதீரத் தமிழ்ச்செம் பாடல்
வாரிமட மடையுடைத்து வளரு மன்றே

கடவுள்வாழ்த்து

விநாயகர்

அகரமென வறிவாகி யுலக மெங்கு
மமர்ந்தகர வுகரமக ரங்க டம்மாற்
பகருமொரு முதலாகி வேறு மாகிப்
பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில்பொரு ணன்கினிய மிடர்தீர்த் தெய்தப்
போற்றுகருக் கறக்கருணை புரிந்த லார்க்கு
தெரிவின்மறத் கருணைபுரிந் தாண்டு கொள்ளு
மெருமைமணக் கணபதியை நினைந்து வாழ்வாம்.

சித்திபுத்தி.

வேறு.

கருணைமதம் பொழிமுகத்துக் கணேசரவர் தமக்கறிவுத் தொழிலு மான
வருளெனுமுண் மையையெவரு மறியவவ ருருமையினவ தரித்த ஞான்று
மொருமுனியோம் பியதழலி னவதரித்த ஞான்றமுட னுதித் தோன்றித்
திருவுனத்தின் வழிநிற்குஞ் சித்திபுத்தி யெனுமிவர்தான் சென்னிசேர்ப்பாம்.

பரசிவம்.

பூமாது தனைமணக்க புயல்வண்ணப் பெருமானும் புலவர் போற்று
தாமாது தனைமணக்க நான்முகனும் போர்மாது நயக்கு மெண்டோட்
கோமானுஞ் தானேயென் றுணர்த்ததற்கே பிரணவகுஞ் சாமாய்த்தோன்றி
மாமாவின் முகத்தானே யுயிர்த்தானே நினைக்கிறைஞ்சி வழுத்து வாமே. (கூ)

தேரேறி வரும்பரிதி மண்டிலத்துஞ் செழுமதிமண் டிலத்துஞ் சீர்கொண்
டேரேறி வருக்கன்மண் டிலஞ்சத்தி மண்டிலத்து மெண்க ணனு
நீரேறி வருமரிய முருத்திரனு மகேச்சுரனு நிலவச் செய்து
காரேறி வருமவர்த முளத்தமெண் குணத்தானே நயந்து வாழ்வாம். (எ)

சிற்சக்தி.

வேறு.

சத்தியாய் வித்துவாய் மனோன்மனியாய்த் தயங்கிய மகேசையா யுமையாய்
சித்தில வடக்தாழ் முஞ்சிழ்முலைத் திருவாய் செம்பொதுப் வாணியாய் வேரு
யெத்திற மிறைவ னின்றன னவனுக் கியைதர வத்திற நின்று
மெத்திய வுயிரின் மலவிருள் கெடுத்து லிவல்குபூ ரணியையேத் தெடுப்பாம்.

நடேசர்.

வேறு.

மூத்தமக னிடத்தார்வ மீன்றெடுத்த பிதாமகற்கு முதிரு மாற்றூற்
பூத்தபொழிற் சென்னேகர்ப் புருத்துபிர சன்னமுகப் புத்தேளன்ப
சேத்தெடுப்பப் பிரசன்ன மாயிருக்கு மாலயத்து ளெய்தி மன்முட்
கூத்தியற்று மினைப்பாறுஞ் சிதம்பரே சுரர்மலர்த்தான் குறித்து வாழ்வாம். ()

சிவகாமசுந்தரி.

தேனசர் நிரலேயுங் கினகரன்வெம் மையுங்கனலிற் செறிந்த தேசும்
போதளவு நறமணமும் போலிறைவன் குணமான புனிதை வேரு்க்
கோதனவு முயிற்வெத்தைச் காமுறவே விகாமம் கொண்டு நின்ற
காதனவுஞ் சருத்தடக்கட் வெகாம சுந்தரியைக் கருத்தின் வைப்பாம். (எ)

தமரவேள்.

மாத்தனோத்த கணேயானுஞ் சோவெறிந்த நிறலானு மதிக்குஞ் தோறுஞ்
சேர்த்தனக்க வுலகடனுஞ் சேனிகத்த பெருவரையுஞ் நிறத்திற் குன்றக்

சீர்த்தனக்குஞ் குறமுனிக்குஞ் சருத்தின்மயல் பூட்டியதை தவஞ்சால்வெற்பி
னூர்த்தனைத்த சேயிலேவல் வலனுயர்த்த வீரியவனே யுளத்தன் வைப்பாம்

திருக்கேஞ்சலூர்ப் பிள்ளையார்.

மறைதெறியிற் பிறழாத வேதியராண் பால்கறந்த வெளவுக் கீங்கு
முறைபுரியத் தக்கதென வடித்த டித்தப் பாற்கலத்தை முனிந்த தாதை
பொறையுடன்மண் ணிடைப்புர வீருதாளு மரவெறித்த பொல்லாத்தீங்கு
மிறையவன்மெய்ப்பணியாகவிரும்பதத்தையடைந்தவரையிறைஞ்சிவாழ்வாம.

திருநந்திதேவர்

வேறு

வெள்ளி மால்வரை விமலனூர் விளம்பிய வேதந்
தெள்ளு மாகம புராணங்கள் செழுங்கலை பிறவு
மூள்ள வாறுதேர்ந் துலகெலாம் வழங்கமுன் னுரைத்த
வள்ள லாகிய நந்தியங் குரவணி மதிப்பாம். (கo)

சமயகுரவர்.

பருவ மேது மிலார்புகும் பரமதப் பொருள்கள்
கருதி யோம்பவொண் ணுதெனக் கண்ணுதற் பெருமா
னருளி னற்பல வதிசயச் செந்தமிழ் பாடிப
பொருளி தாடெனத தெரித்தகால் வர்களையும் புகழ்வாம். (\

மெய்கண்டதேவர்

சிறிய வாடியிற் பெரிய மால்வரைப் பொருள் செறிந்தசங்
கறிவு நூல்களின் முடிவெலா மகப்படித் தவற்றி
னெறியெ வாம்விளக் கியசிவ ஞானபோதததைக்
குறிசெய் தீந்தமி ழாலுரை குரவணிப் பணிவாம். (கஉ)

நமச்சிவாயதேசிகர்.

வேறு

இருவினை யாதி நிற்றற் கேதுவு மிருளாதி
மருவிய செயலு நீங்கும் வண்ணமு மற்றுந் தேற்றி
யருள்பதித் தெனையு மாட்கொண் டாவடு துறைக்கண் வாழ்ந்
திருவளர் சிவாய தேசிகன் மலர்த்தாள்போற்றி (கங)

கடவுள்வாழ்த்து.

முற்றிற்று

நூல் விவரம்.

—— *.——

"தொகுத்தல் விரித்த றொகையினி மொழிபெயர்ப் பெனத்தகு நூல்யாப் பிரிரண் டென்ப" என்பது கொண்டு சைவசித்தாந்த வேதாந்த சமாச குணரத்ந ஞானதீபகராய், திருவாவடுதுறையாதீனத்தின்கண் எழுந்தருளியிருந்த கச்சியப்ப சுவாமிகள்பால், தயிர், நெய், தேன், கன்னல் என்னும் ஐங்கடலையும் கடைந்து அமுதெடுத்தளித்ததுபோல எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, என்னும் ஐந்திலக்கணமாகிய கடலிக்கடைந்து, முற்காலத்தில் வட மொழியிற் சொல்லப்பட்டிருந்த விநாயக மான்மிய மென்கிற வமுதத்தையெடுத்து யாவரும் இன்போடு செவிமடுத தண்ணத்தக்கதாகத் தமிழில் மொழிபெயர்த்தருளினர்

அஃது மொழிபெயர்த்துச் சுமார் நூறுவருடமாகியும் இது காறும் அதுபத்தியரூபமா யிருத்தலால், நிகண்டு கற்று இலக்கிய ஆராய்ச்சி செய்து, இலக்கண நூல்களிலே பயின்று அடி தொடை முதலிய சந்திகளைக்கூட்டியும் பிரித்தும் உணர வல்ல வித்துவான்களுக்கேயன்றி ஏனையோர்க்குச் சிறிதும் பயன்படாதிருக்கின்றது. அவ்வித்துவான்களுக்கும் நோய், கவலை, மூப்பு முதலிய ஏதுக்களால் விவேகங் குறைந்த காலத்துப் பிரயோசனப்படாது.

கற்று வல்லோர் சிலரேனுங் கற்று வல்லோ ரல்லாதார் பலருக்குத் தாமே யுணர்த்தவும், அக்கற்றுவல்லோ ரல்லாதார் கற்று வல்லோரைத் தாமே யடைந்து உணரவும், அஃது பெருங்காவியமாகியும், அரியநடையாயும் இருத்தலினுல் மிகுதியுங் காலத்தைநோக்கி மடிசெய்கின்றனர். அன்றியுமக் காவியத்தில் வியாச முனிவருக்குப் பிரமதேவ னுணர்த்தியவாறு பிருகு முனிவர் சோமகாந்த னென்னும் ஓரரையனுக் குணர்த்தியபடி சூத புராணிகர் சௌமிசாரணியமுனிவர்கட்குச் சொல்வதாகமுதலிலெடுத்து, முடிவில் அதனைப் பத்தியோடு கேட்ட மந்திரவத்தால் வியாசமுனிவர் வரம் பெற்றதையுஞ் சோமகாந்தரசன்முத்தியடைந்ததையுங் கூறியிருப்பதன்றி, அதற்கு வருத்திருக்கின்ற காண்ட மிரண்டனுள் உபாசனாகாண்டத்திலுள்ளபடலங்கள் பெரும்பாலும் ஒன்றுக்கொன்று தொடர்ச்சி பெற்றுச் சொல்வோரையுங் கேட்போரையும் பலரை

வருவிக்கின்றன. இவைகளெல்லாம் புலமையின் மிக்கார் அறிந்து கொள்ளுவரேயன்றி ஒழிக்தோர்கள் யாவரும் ஆங்காங்குச் சொல்வோரையும் கேட்போரையும் காணுது மயங்குவர்.

அதனால், "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல காலவகையினானே" என்பதுகொண்டு பத்திய ரூபமாயிருக்கின்ற அக்காவியத்தை நிறைந்த கல்வியையுடைய வித்துவான்களும், குறைந்த கல்வியையுடைய பிறரும் எக்காலத்தும் தாமே எளிதில் ஐயந்திரிபின்றி யுணர்ந்து, தன்மார்த்த காமமோக்ஷமாகிய நான்கு புருஷார்த்தங்களையு மடைந்து உஜ்ஜீவிக்குமாறும், ஒருவாற்றானும் தமக்கு நிகரில்லாதவராகிய விநாயகக்கடவுள் இன்ன தன்மையர், அவரை வழிபடத்தக்க நெறிகள் இவ்வகையின, அவர் செய்தருளிய திருவிளையாடல்கள் இத்தகைமைய, அவைகளை யுணர்தலால் வரும்பயன் இவ்வியல்பிற்று என்றறுதியும் ஒள்ளறிவின்றிக் கல்வியின்மையையே தலைநிலவுடைய வெள்ளறிவினராகிய ஆடவரும் ஸ்திரீகளும் பிறரைக் கொண்டேனும் வாசிப்பித்து உணருமாறும், மூற்காலத்திற் பிரமதேவனாலும், பிருகுமுனிவராலுங்கேட்டுணர்ந்த முதலதிகாரிகள் இருவரையும் அந்தப் படலங்களின் மூதலினுங் கடையினும் வருவிக்கின் வியர்த்தமாய்ப் பெருகுவதன்றி வாசிப்போருக்கும் வெறுப்பினை யுண்டாக்கு மாதலால் அவர்களை இடையிற்றழுவா தொழிக்கும் வண்ணம் பன்னிரண்டு படலங்களாக விருக்கின்ற அவர்கள் சரிதநிரல்களை நூன்முகத் துறுப்புக்களுள் ஒன்றாகப் புராண மகத்துவமாக்கி அதனை நான்குவகைச் சரிதத்தினுல் முடித்தும், அவைகளில் விரிந்து அமைந்துகிடக்கின்ற அவ்வாரமூதலியவைகளையெல்லாம் அங்ஙனம் பெருகாதவண்ணந் தொகுத்தும், தொகுத்திருக்கின்ற ஏனையபடலங்களில் அவைகளைவிரித்துப் பிற்காலத்திற் சூதபுராணிகரா லுணர்த்தப்பெற்ற சவுனகாதி முனிவர்களைமாத்திரந்தழுவி யொரேவிடங்களில் இன்றியமையாச் சிறப்பினரா வருகின்ற திலோத்தமாதிகாரிகளை ஆங்காங்கு முடிவினுங் கடையினும் வருவித்தும், உபாசனை காண்டத்திலுள்ள ஐம்பத்தொன்பது படலங்களினும் காவியதலைவர் திருவுருக்கொள்கின்ற படலங்களொழிந்த ஏனையபடலங்களை அவ்வவற்றின் தொடர்பின்படி புணர்த்தி நாற்பது படலங்களாக்கியும், லீலாகாண்டத்திலுள்ள பன்னிரண்டு படலங்களையும் அவ்வாறே யமைத்தும் அவ்வவ்வமையங்களிற் சொல்லப்பட்டிருக்கின்ற தொகைப்பொருள்

களையெல்லாம் பிரித்தும், பிரிக்கப்பட்ட பொருள்களினுடைய பயன்களையும் அவ்வவற்றினடியிற் காட்டியுந், ஆங்காங்கு தோத்திரமாகவுஞ் சாத்திரமாகவுங் கூறியிருக்கின்ற செய்யுட்களையெல்லாம் யாவருந் துதிக்கவுஞ் சிந்திக்கவும் உபயோகமாதற்பொருட்டு வேறு படுத்தாது விடுத்தும், பெரும்பான்மை சந்தி விகாரங்களின் றிச் சிறுபான்மை ஆவசியமாகிய திரிசொற்களையும் வடசொற்களையும் பிரயோகித்தும் கத்தியரூபமாக இயற்றப்பட்டது.

பிரணவப் பொருளாய்ப் பேதம பேதமே பேதா பேதம்
வரமலி பொருளா யொன்றுய் வரம்பிலா வின்ப மாகும்
பரவிய வைங்கைப் புத்தேண் மான்மியம் பகரு ரோல்
விரவிய பார்க்க வத்தை விகாயக புராண மென்பார்

தூற்பயன்.

நித்தியமாய் நிர்க்குணமாய் நின்மலமாய் நிரஞ்சனமாய் நினைவுக்கெட்டாச்
சத்தியமாய்த் தற்பரமாய்த் தத்துவமாய்ச் சச்சிதா னந்த மாகி
யத்துவிதப் பொருளாகி யகண்டபரி பூரணமா யமல ஞான
மெதனியவுள் ளகத்தமர்ந்த விநாயகமான பியத்தவத்தோர் விரும்பிக்கேட்பார்.

விருத்திரனைக் கொன்றருளு நான்முகனு மதுவுயிரை வீட்டினுனு
முருத்திரனும் வழிபடுமோ ரூங்குமொரு தனிமுதலா யுலகுச் செல்லாங்
கருத்தனுமாய் வினையாடுங் கணபதிமான் மியங்கணக்கில் பிறவி தோறும்
பொருத்தமுறத் தவம்புரியார் விரும்பினுமற் றவர்செவியிற் புகாதோர் காளும்.

எவனுடைய வாணையினுற் பிரமனுக்குச் சிருட்டியுமெவ் வுயிரும் வாழ
வுணமுயர்த் தவற்களிப்பு முருத்திரனுக் குலகமெலா மொடுக்கும் வீறும்
பவனனுக்கு வீசுதலும் பாற்காற்குச் சரித்தலும்பன் னுளும் வைகு
மவனுடைய மான்மியத்தை காத்திகர்பா தகர்முதலோ ரறிய மாட்டார். ()

மறையிடத்து மரியயனிந் திரனுதி யமர்மதி யிடத்துத் தோன்று
தலையுமொரு பொருடன்னே வழிபடுவோர் தமக்கருளா லுருவு கொண்டு
நிறையவரங் கொடுத்தசரித் திரமனேத்தும் விளக்கினிலே பேறு செய்த
குறையறமிப் புராணத்தைக் குறித்தவர்க்கு காற்பயனுங் கூடி மன்றே. (சு)

அவையடக்கம்.

பிரணவ சொரூபியாகிய விநாயகக் கடவுளது மான்மியத்தை ஆரியபாடையினின்றுந் திராவிட பாடையின்கண் மொழிபெயர்த் திடுவான் புகுந்த புலவர் பெருமான் கச்சியப்ப சுவாமிகள், தம்மை வழிபடுவோர்க்கு எல்லாக் கலைஞானங்களையும் வரையா தளிக்கவல் லோரில் வள்ளற்றன்மையை யுடையாராகி யிருந்தும் அக்காவியத் திற்கு அவை யடக்கங்கூறுவான் றொடங்கினர்

அறுசீர்க் கழிநெடி லடி யாசிரியவிருத்தம்

சிற்பநூல் வழியிற்செய்த வருவெனச் சிற்பஞ் சாராப்
புற்பொரு ளுருவு மைங்கைப் புண்ணியன் புணர்ந்து நிற்பி
னற்புதப் பூசை கொள்ளு மவன்புக முறைத லாலே
நற்பதம் புணர்த்த ராவென் பாடலு கலத்த தாமே

ஒருபெரும் முழுதுங் காணு ருபபொரு ளியல்பு கூறக்
கருதுவ ரல்லர் மேனுட் கண்ணுதற் பெருமான் றானு
மருவிடை யூறுகண்டு வணங்கினு னென்ற லஃதப்
பொருவிலி கதையான் கூறப் புகுந்தது நகைய தாமே

என்றராயின், அவர் மொழிபெயர்த்தருளிய அக்காவியத்தை ஆன் வசனமாகவையத் துணிந்ததமை அகரவருக்கமெழுத அறி யாதானொருவன் அரியதிருமுறைக்கு உரை வரையக் கருதினமை போலும். ஆயினும், ஆவின்பால் அசுத்தமாகிய மட்கலத்திற்பெய் திருக்கினும் அப்பாலின் பெருமையினியதிற்றோர் மட்கலத்தினது சிறுமையை நோக்கியொழியார்கள் அதுபோல யான் கூறும் இவ் வசன காவியமானது பொருட்சோர்வுமுதலிய குற்றங்களால்நிறை ந்த புன்சொல்லா லாயினும் அஃது தம்மோ டொப்பாரு மிக்காரு மில்லாத விநாயகக்கடவுளது பெரும் புகழோடு கலந்திருத்தலின், ஐவித விலக்கணங்களையுமுணர்ந்து, சிங்காரம் வீரியம் பெருகலை, கருணை, இரௌத்திரம், குற்சை, சாந்தம், அற்புதம், பயம் என் கின்ற நவரச வலங்காரங்களோடுஞ் செய்யுள் புனைய வல்ல கவிவா ணர்க ளாயினோர் அக்குற்றத்தைநோக்கி யொழியார்கள் குணத்தி னையே பாராட்டுவர். ஒல்காப் பெரும்புகழ்த் தொல் காப்பியர் நூற்கும் ஓர் குற்றஞ் சாதிக்கத் துணிவரென்பதற்கு "உண்டு குண மிங்கொருவர்க் கெனினுங்கீழ்க்-கொண்டுபுகல்வதற்குற்றமே·வண்டு மலர்ச், சேக்கையிரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றே·காக் கையிரும்புங்கனி." என்று அவரை நோக்கிப் பழையாரும் எள்ளி யிருத்தலே சான்றும்.

நைமிசாரணியப்படலம்.

திருத்தகு மார்பன் வேதன் சிவபிரான் மூவரோடு
விருத்திர ஞமி யுண்டோன் விண்ணவர் பலரு மேவி
பிருத்தலின் முனிவர் வேள்வி யிலங்குகை மிசமாங் கான
முருத்தகு மேரு வொக்கு முருவமாத் திரமே வேறு.

உலகங்களிற் சிறந்து கோடி சூரியோதயம்போல விளங்குஞ் சத்தியலோகத்தில் தவத்தர், தேவர், குமார வருக்கங்கள் சூழ, பொற்பிரகாசமாக விளங்குஞ் சபாமண்டபத்தின் மூகப்பில் நவரத்தின மயமா யோங்கிய சிங்காதனத்தின்கண் கலைமகள் சமேதனாய் வீற்றிருக்கின்ற பிரமதேவனை முன்னெருநாள் இல்லறங்களை வழுவின்றி யோம்பிய முனிவர் கணங்கள் வந்து சேவித்துப் போற்றி விண்ணப்பஞ் செய்ததாவது, சுவாமீ! இதுகாறுங் கிருகத்தாச்சிரமத்தினின்றனம் இனியரிய தவங்களைச் செய்து, முத்தியினையடைய விருப்புற்றன மாதலால், அதற்குச் சிரேட்டமாகிய தலமொன்றை யதுக்கிரகஞ் செய்யவேண்டுமெனப் போற்ற, பிரமன் தற் கிரங்கி ஒருதருப்பையினை வட்டமாக்கி நிலத்திலுருட்டி, மாதவரே! இதனைத் தொடர்ந்துபோவிரேல் இது நின்றவிடம பவித்திரமாகும் அத்தலத்தில் வதிந்து தவங்களைச்செய்யக் கடவீர்களென்றுசொல்ல, அத்தவத்தர்சேவித்தது விடைபெற்று அத்தருப்பைச் சக்கரத்தின் பின்சென்று அதுநின்ற விடத்தினையே முக்கியமாகக் கொண்டு, அரியதவங்கள் முதலானவற்றைச் செய்திருந்தார்கள். தருப்பை நேமியா லுண்டாயதாகலால் அவ்விடம் நைமிசாரணியம் (நைமிசம்-சக்கர மோய்ந்தவிடம்) என்னுங்காரணப்பெயரை வகித்திருக்கின்றது.

அந்நைமிசாரணியமானது ஒரு சரீரத்தில் உபயனத்திற்கு முன்னும் பின்னுமான இரு பிறவிகளையடைந்து, ஆகவனீயம்-தக்ஷிணாகினியம் - காருகபத்தியம் என்னு * முத்திக்களை வளர்த்து, இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னுநான்குவேதங்களையோதி, சத்தம்-பரிசம்-ரூபம் ரசம் - கந்தம் என்னு மைம்புலன்களைவாட்டி,

---

* ஆகவனீயம்-வேதத்தை வழங்கச்செய்வது தக்ஷிணாகினியம் - தேவர் கட்குத் தக்ஷிணை கொடுக்கச்செய்வது காருகபத்தியம் - பூலோகத்தை இரட்சிக்கச்செய்வது. இவைகளே மாகாக்கினிகளாம்.

ஓதல்-ஓதுவித்தல்-வேட்டல்-வேட்பித்தல் ஈதல்-ஏற்றல் என்னு மறு தொழில்களையுஞ் செய்து, தேவர்-மக்கள்-விலங்கு-புள்-ஊர்வன-நீர் வாழ்வன-தாவரம் என்னு மெழுவகைப் பிறவிகளையுமோட்டி, இய மம் நியமம்-ஆதனம்-பிராணாயாமம்-பிரத்தியாகாரம்-தாரணை - தியா னம்-சமாதி என்னும் அட்டாங்கயோகங்களையும் பூண்டிருக்கின்ற அந்தணர் குழுவுக்களும், சடைமுடியணிந்து, புலித்தோ லுடுத்தி இருவினைகளையு மதஞ்செய்யத்தக்க வெண்ணீறுபூசி, உருத்திராக்க வடந்தரித்து, அருளோடுங்கூடி நிட்டைசெய்திருக்கின்ற முனிவர் சமூகங்களும் வசிக்குமிடமாயிருக்கின்றது அன்றியும் வேதாத்தி யயனஞ்செய்கின்றவர்கள், ஆகமநெறிகளையாராய்கின்றவர்கள், ஒரு நியமங் கடைப்பிடித்து அங்நியமத்தி னெறியே நிற்கின்றவர்கள், பதினெண்புராணங்களையும் வாசிக்கின்றவர்கள், அவைகளைக்கேட் கின்றவர்கள், வேள்விகளைச்செய்து முடிக்கின்றவர்களாகிய கூட் டங்களை அவ்வனமெல்லு நிறைந்திருக்கின்றன. இத்தன்மைய மே லான சிறப்பு வாய்ந்த அவ்வனத்தின் பெருமையையும், அவ்வனத் தில் வசித்திருக்கின்றமுனிவர்கள் மாட்சிமையையும், அம்முனிவர் களாற் செய்துவருகின்ற யாகாதிகளின் தகைமையையும், எம்போ லிகளால் அளவிட்டுரைக்கற்பாலதோ? அந்தமிசாரணியத்திற்சவு னகமுனியென்பவர் சத்திரவேள்வியென்னும் ஒருவேள்வியைச்செய் யத்தொடங்கினர் அவ் வேள்வியைக் காணும்பொருட்டுத் திருநீறு பூசிய திருமேனியையுடையவர்களாயும், மார்பில் உருத்திராக்கவ டந் தரித்திருப்பவர்களாயும், கையிற் கமண்டல மேந்தினவர்களா யும், இன்னுமனைத்த கோலங்களோடும் அளவற்றமுனிவர்கள் வந்து நெருங்கினர்கள். அச்சமயத்திற் பதினெண்புராணங்களையுங்குறை வறக்கற்றவராய், காலகாலராகிய பரமசிவத்தின் திருவடிகளல்லது மற்றொரு கடவுளையும் மதியாதவராயிருக்கின்ற சூதமாமுனிவ ரும் வந்துசேர்ந்தனர். அம்முனிவரை நைமிசவனத்திலுள்ள முனி வர்களும் அயலிடங்களினின்றும் வந்திருக்கின்ற முனிவர்களுங்கண் டவுடன் மேகத்தைக்கண்ட மயில்போல அளவற்ற களிப்படைந்து உள்ளம் பூரித்து, சிறந்த வாசனத்தி லிருக்கச்செய்து, பற்பல வுப சாரங்களோடு பூசித்து, மந்திர மலர்களாலருச்சித்து, சந்தனம் பூசி, அட்சதை சாத்தி, அமுதளித்து இனைப்பாற்றி இதனை வின் னப்பஞ் செய்வாராயினர்.

சுவாமீ! பூர்வ சனனங்களோறுஞ் செய்து மூற்றிய புண்ணிய பலத்தினல் மகா தவசிரேஷ்டர்க ளெல்லாங் கண்டு கொண்டாடத் தக்க தேவரீரை இன்று யாங்களெல்லோரும் ஒருமிக்கக் கண்டு தரி சிக்கப்பெற்றோம். அத்தரிசன விசேடத்தால் எம்மைத் தொன்று தொட்டு வருத்தாநின்ற மாயையீங்கிப்போயிற்று. அஸ்தன்றி வேதங் களா லோதப்படுகின்ற பயன்களெல்லாம் எளிதி லடையப் பெற் றோம். யாங்கள் நிற்கின்ற நிலைகளுங் குற்றங்களி னின்று நீங்கின. எம்முடைய பிதிரர்களுஞ் சீவன் முத்தராஞர்கள் எம்மை யீன் றோர்களும் எம்மாற் பெறத்தக்க பயனை யடைந்தார்கள். கொடிய துன்பங்களை விளைவிக்கின்ற இச் சரீரவாதனையுள் இன் றொழிந்து போயிற்று. இப்பூமியில் யாங்க ளடையக்கருதிய பயன்யாதோ அத னைத் தடையின்றி யடைந்தோம். எங்கட்குத் தேவரீரைப்போலப் பதினெண் புராணங்களை வழுவின்றிச் சாற்றவல்லவர்கள் யாவரிரு க்கின்றனர். அப்பதினெண் புராணங்களை முன்ன ரெங்கட்குத்திரு வாய்மலர்ந்தருளி யிருக்கின்றீ ராயினும், இச் சவுனகமுனிவர் செய்துவருகின்ற வேள்வி நிறைவேறுவதற்குப் பன்னிரண்டு வரு டஞ்செல்லு மாதலால் அதுகாறும் மற்றொரு புராணகேள்வியாகிய வொப்பற்ற வமிர்ததையை தேவரீரா புசித்து அதனுலுண்டாகும் பயனையடைவதே யல்லது சிற்றறிவினை யுடைய யாங்கள் செய்யுங் கடப்பாடு வேறென்ன விருக்கின்ற தென்றார்கள்.

இவ்வாறு மிகுந்த பத்தியோடும் பணிந்து விண்ணப்பஞ் செய் தவர்களைச் சூதமுனிவர் நோக்கி தவசிரேஷ்டர்களே! வித்தினை விதைத்தக்காமல் அவ்வித்தினு லுண்டாகும் பயனை யடையத்தக்கவர் கள் யாவரிருக்கின்றார்கள். அதுபோலப் பிறப்பில்லாத பரமசிவத்தி னுடைய பெருமைகளைத் துதிசெய்யாதவர்கள் நீவினைகளி னின் றும் நீங்கமாட்டார்கள். மேலும் நடுவுநிலைமை தவறுத நல்லறிவினை யுடையவர்களாகிக் கொடுஞ்செய்கைக ளென்ன ஒன்றேனுமில்லா மல் நாளுக்குநாட் கொழுத்துவிட்டு வித்தியாகின்ற சிவபத்தியைக் கொண்டு எக்காலத்தும் திரிபின்றி விளங்கு மனவுறுதிபெற் றிருக் கின்ற நீங்களே ஒரு விசேடத்தினைக் கேட்கப்புகின், அதனை எவ்வி தத்தேனுங் குறைவில்லாமற் கூறல்வேண்டும் அன்றியும் நீங்கள் குலாசார வொழுக்கங்களிற் குறைவில்லாமல் மிக்க கூர்மையான புத்தியினை யுடையவர்களாகி நல்ல தவர் தானமுதலானவைகளைக் கடைப்பிடித்து அம்பிகை பாகராகிய சிவபெருமானது பத்தியென் கிற மரக்கலத்திலேறி யிருக்கின்றீர்க ளாதலால், நீங்களம்மரக்கலத்

தையே துணையாகக்கொண்டு, அப்புராண கேள்வியாகிய கடலிலுங் கடக்காமற் போவீர்களா? உறவென்றும் பகையென்றும் பேதமில்லாமற் பல்லுயிர்க லிடத்துங் கருணைவைத் திருக்கின்ற பரிசுத்த மான வுள்ளத்தை யுடையவர்கள் ஒருகாரியத்தில் விழைவார்களா யின், அக்காரியம் அவர்கட்கும் அவர்களை யடுத்தினோர்கட்கும் பழுதின்றி விளங்கி, மேலாகிய பயனையேதரும் அதுபோல நீங்களும் நல்ல விடயத்தையே மதித்துக் கேட்டீர்கள். கரும்பு தின்பார்க்குக் கூலிகொடுப்பதுபோலப் புண்ணியப் பயனையேகொல்ல விழைவுற்றிருக்கின்ற வெனக்குப்பின்னும் அதிக விழைவினை விர்த்திசெய்தீர்கள். உங்களுடைய விருப்பம் நிறைவேறத்தக்கதாக ஒருபுராணமிருக்கின்றது அதனைச் சொல்வதன்முன் அப்புராணம்வந்தவாலாற்றினைச் சொல்வோங் கேட்பீராக வென்றனர்.

நைமிசாரணியப்படலம்-முற்றிற்று.

புராண வரலாற்றுப்படலம்.

சாற்றுசனற் குமாரமே நாரசிங்கந் தகுகாந்தஞ்
சிவதருமன் கழைதூர் வாசம்
போற்றியகா ரதமேமகா பிலமெல் லோரும்
புகழுசனஞ் சவுமியமாம் பிரமாண் டஞ்சீர்
மாற்றரும்வா ருணங்காளி புராண மேத்தும்
வாசிட்ட மிலிங்கமொடு சவுரம் பாவம்
பாற்றியபா ராசரிய மாரீசம்பார் பகர்சாம்பம்
பார்க்கவமென் றவற்றின் பேராம்.

வே று.

விலக்கரு முனிவர் தம்மால் விளங்கிய வுபபுராணந்
தலக்கிய கிரந்த மெல்லாந் தொகையொ ரிலக்கமாகும்
அலக்கணி யறக்கு மந்தப் புராணமூ வாறனுள்ளும்
கலக்கும்பார்க் கவபுராண நாயக மாகிநிற்கும்.

பிரமம், பதுமம், வைணவம், சைவம், பாகவதம், பவிடியம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரமைகைவர்த்தம், இலிங்கம், வராகம், காந்தம், வாமனம், கூர்மம், வற்சம், காருடம், பிரமாண்டம் என்னும் பதினெண் புராணங்களையும், அவைகளிற்

கூறப்பட்டிருக்கின்ற காலிலக்கத் தெண்ணாயிரங் கிரந்தங்களோடு முன்பு யாம்சொல்லக் கேட்டிருக்கின்றீர்கள். அப்பதினெண் புராணங்களையும் முற்காலத்திற் கைலாசபதியாகிய சிவபெருமான் திருவடிகளிற் பக்திசெய்து பெற்றுக்கொண்ட கந்திதேவராணவர், சனற்குமார முனிவருக்கு உபதேசிக்க, அதை யம்முனிவ ரிடத்தின் மிகுந்த அன்போடு வியாசமுனிவர்கேட்டுச் சுலோகங்களாக்கி இவ் வுலகெங்கணும் விளங்கி வழங்கத்தக்கதாகச்செய்தார். அதுபோலவே இன்னுஞ் சிலமுனிவர்கள் வேறுவேறு பரம்பரைவழியாக வுபதேசம்பெற்று, அம் மகாபுராணங்கட்கு உபபுராணங்களாகத் தங்கடங்கள் அபிதானத்தாற் பதினெண் புராணங்கள் செய்தார்கள். அவைகள் சனற்குமார புராணமென்றும், நாரசிங்க புராணமென்றும், நந்திபுராணமென்றும், சிவதரும புராணமென்றும், துருவாச புராணமென்றும், நாரதியபுராணமென்றும், கபிலபுராணமென்றும் அவுசனபுராணமென்றும், சௌமியபுராணமென்றும், வாருணபுராணமென்றும, கா ளிகபுராண மென்றும், வாசிட்ட மிலிங்கபுராண மென்றும், மானவபுராணமென்றும், சௌரபுராணமென்றும், பாராசரியபுராணமென்றும், மாரீச புராணமென்றும், சாம்பேசபுராண மென்றும், பார்க்கவபுராணமென்றும், வழங்கப்படுகின்றன. இவைகளெல்லாம் ஆரியதத்தில் இலக்கஞ்சுலோகங்களாக விருக்கின்றன. இவ்வுபபுராணம் பதினெட்டினுட் பார்க்கவபுராண மென்பது நாமகமாகியிருக்கும். இப் பார்க்கவபுராணத்திற் பிரணவபொருளாகியும், அப்பிரணவதனின்றும் வேறுபட்ட பேதப்பொருளாகியும், பேதாபேதப் பொருளாகியும், இவைகளனைத்தையுங் கடந்து நிற்கின்ற ஏகவஸ்துவாகியும், பிரமானந்த சொரூபியாகிய மிராகின்ற விநாயகமூர்த்தியினது மகத்துவத்தை விளங்கக்காட்டியிருக்கின்ற மையால் விநாயகபுராண மென்று பெரியோர்கள் வழங்குவார்கள். இவ் விநாயகபுராணத்தை முற்காலத்திற் பிரமதேவன் அநேகதவங்களைச்செய்து, அத தவமுயற்சியினுற் கைலாயத்திற் றிரிநேத்திர தாரியாகிய சிவபிரானு ஆபதேசிக்கப் பெற்று, தன்னை அன்போடு வழிபட்ட வியாசமுனிவருக் குபதேசித்தனர்.

அவ் வியாசமுனிவ ரிடத்திற் பிருகுமுனிவர் கேட்டுத் திருப்பாற்கடலி லெழுந்த தேவாமிர்தம்போல யாவருக்கு மூபயோகமாதற்பொருட்டு உபாசனை காண்டமென்றும், லீலாகாண்டமென்றும், இரண்டுகாண்டங்களாகப் பிரித்து, அவ்விரண்டையும் இருநூற்றைம்பது அத்தியாயங்களாக்கி அவைகட்குக் கூடியதொகை பன்

னீராயிரஞ் சுலோகங்களாகமுடித்து ஒருபுராணமாக்கினர். அப்பு ராணம் பிருகுமுனிவராற் கூறப்பட்டமையால் அக்கருத்தாப்பெய ராக்கொண்டே பார்க்கவபுராணமென்று வழங்கப்படுகின்றது.

இப்பார்க்கவபுராணத்திற்குநாயகர் கணேசமூர்த்தி யாகலால், அதனைக் காணுபத்திய மகத்துவ மென்றும் யாவரு மதட்டித்துப் பெறுதற்கரிய பேற்றினையடைகின்றார்கள் சகவுனகர்முதலிய முனி வர்களே? பார்க்கவபுராண மென்கின்ற விநாயகபுராணம் வந்தவர லாறுவே இப்புராணத்தில் தேவர்கள்முதலிய அளவற்ற ஆன்ம கோடிகள் விநாயகக்கடவுளைப் பலவாறுபூசிக்க அப்பூசனைகட்கு அவர் பிரசன்னமாகி நிறைந்த கிருபையோடுகூடியிருக்கும் அற்புத தரிசனங்களைக்காட்டி, அவ்வவர்களிட்ட காமிபார்த்தங்களை யதாக் கிரகித்தருளிய சரித்திரங்களினதும் விளங்கக் காட்டியிருக்கின் றமையால் இப்புராணத்தை மிகுந்த அன்புடன் கேட்போர்களுக் குத் தருமமுதலிய நான்கு புருஷார்த்தங்களுங் கைகூடும் முன் னொருகாலத்தில் இப்புராணிகராகிய பிருகுமகாமுனிவரானவர்தம் மைபடுத்த சோமகாந்தன் என்னு மகாராஜனுக்குப் பிரமதேவன் வேதவியாசமுனிவருக் குபதேசித்த முறைப்படி திருவாய்மலர்ந்த ருளினர் அதனை, அவ்வரசன் அன்போடுகேட்ட மகத்துவத்தால் தானடைந்திருந்த சகலவிணைகளும் நீங்கப்பெற்றுக் கணேசமூர்த்தி யினுடைய சாயுச்சியபதவியை யடைந்திருந்தான் அம் மகத்துவத் தைச் சொல்லுவோங் கேட்பீராக அவை வருமாறு:—

புராணவரலாறு-முற்றிற்று.

உ

கணபதிதுணை.

உபாசலகாண்டம்.

சோமகாந்தன் வனம்புகத் துணித்தபடலம்.

பன்னிய பிருகு தன்பாற் பார்க்கவ புராணங் கேட்ட
மன்னவன் சோம காந்தன் மழைமதக் களிற்றுத் தேவன்
றன்னுல கடுத்த வாறுஞ் சாற்றினன் சூத மேலோன்
அன்னவ னுரைத்த வாறே யுவையெலாம் புகலட் புக்கேன்.

சிவஞானச் செல்வராகிய முனிவர்களே? மூவுலகத்தினுஞ்சிறந்த இப்பூவுலகத்திற் சகல செல்வங்களையும் பெற்றுவந்து மகிழ்போது

னிய தடாகங்களும், குடிவளப்பமும், வயற்செழுமையுஞ் சிறந்து விளங்கியிருக்கின்ற சௌராட்டிர மென்னும் ஒரு நாடுண்டு அந்த நாட்டிற் பூமிதேவிக்குத் திலகம்போல விளங்கிச் சிறந்த தபதியர்களாற் செய்யப்பட்ட பொறிகள் நிறைந்துள்ள மதில்கள், அகழிகள், கோபுரங்கள், மண்டபங்கள், உத்தியாணங்கள், சித்திரகூடங்கள்முதலிய அளவற்ற சிறப்புகள்வாய்ந்த தேவநகரமென்னும் ஒரு பட்டணமுண்டு. அப் பட்டணத்திற் கருணைபிற் கடலெனறவனுகியும், அறிவிற் பிரகஸ்பதியை வென்றவனுகியும், பொறுமையிற் பூமிதேவியை வென்றவனுகியும், ஒளியிற் சூரியனெனறவனுகியும், கீர்த்தியிற் சந்திரனை வென்றவனுகியும், வீணுகானத்தில் மிதுனகின்னரத்தை வென்றவனுகியும், சுகையில் மேகத்தை வென்றவனுகியும், அழகில் மன்மதனை வென்றவனுகியும், நிதியில் அளகேசனை வென்றவனுகியும், போகத்தில் இந்திரனெனறவனுகியும், கலைஞானத்தில் ஆதிசேடனை வென்றவனுகியுமிருந்து நான்கு வேதங்களையு மாராய்ந்துணர்ந்த நிறைந்தினல் நடுவுநிலைமைகளை நன்றுய்ந்தேர்ந்து தத்துவஞானத்தை யறிந்து தனது வலிமைபெற்ற புயத்திற் பூமி பாரத்தைச் சுமந்து சகல வேந்தர்களையுந் திறைதரவென்று தனக்கு வேரொருவர் நிகரின்றி அரசாட்சி செய்துவருகின்ற இராஜாதி ராஜனுகிய சோமகாந்த மகாராஜ னென்னும் ஓர் அரசனிருந்தான். அவ்வரசனுக்குத் தனது பஞ்சேந்திரியம்போ லிடைவிடாது வழிபட்டுவருகின்ற உருவவான், வித்தியாதேசன், கெமங்கரன், ஞானகம்மியன், சுப்லன் என்கின்ற ஐந்து மந்திரிகளோடு ஆறுயிரந்தேர்களும், பதினுயிரம் யானைகளும், இருபதினுயிரங் குதிரைகளும், கணக்கற்ற பதாதிகளு மிருந்தன. அன்றியும், அவ்வரசனுக்கு எக்காலத்தும் உயிருக்குயிராகவிருந்து தருமாதிகளை வழுவாதி நடத்திக் கற்பி லருந்ததியை நிகர்த்து, அழகில் ரதி, இந்திராணி, இலக்மி, அரம்பை, திலோத்தமை என்கின்ற மாதர்களைப் பகைத்துச் சுதன்மையென்னும் பெயரினைப்படைத்த ஒருமனைவி யிருந்தனன். அம்மனைவி வயிற்றிற் பதினுயிரம் யானைக்குள்ள வலிமையையுடையவனுகியும், தன்னைப்பகைத் தெதிர்க்கின்ற மன்னர்களடுக்கி காணத்தக்கதாகக் கோபித்கின்ற பராக்கிரமத்தினல் இராஜகண்டிரவத்திற் கொப்பானவனுகியும், ஏமகண்டனென்னும் பெயரினையுடைய ஒருகுமாரன் உதித்திருந்தான்.

இவ்வாறு மந்திரிமார்முதலிய சகல பரிசனங்களுந் தன்னைப் புடைசூழ்ந்திருக்க பொன்மயமான சிங்கங்களாற் சுமக்கப்பட்டிருக்

இன்ற இரத்தினாசனத்தின்மீதிருந்து நீதிசாஸ்திரவிதிப்படி தனது செங்கோலேந்தி திசையனைத்தினுஞ் செலுத்தி உறையிற்றங்கிய வாளொளியினும் பகைவராகிய இருட்கூட்டங்கள் கெருங்காதவண்ணந்தரத்தி மனங்களித்துப் புயங்கள்பூரித்து, அளவற்ற மகிழ்ச்சியோடும் இராச்சிய பரிபாலனஞ் செய்துவருகின்ற காலத்தில் அவ்வரசனுக்கு முற்பிறவியிற்செய்த தீவினைப்பயனுற் சரீரத்திற்முழுநோயுண்டாகி, கொழுப்புங் குருதியும் வழிந்து சீயுநோயுங்கொண்டு மணிமந்திர ஔடதங்களினுந்தீராமல் மிக்க துன்பத்தை விளைத்துக்கொண்டுவர, ஒருநாள் அவ்வியாதியின் வருத்தத்தைச் சகிக்க மாட்டாது மனத்தளர்ச்சியடைந்து கொலுச்சபையில் வந்து ஏவலாளர்களைக்கூவி, அமைச்சர்களை விரைவில் வருவிக்கக் *கடவீரென்று கட்டளையிட்டான் உடனே அக்கட்டளையின்படிவந்த அமைச்சர்கள் அரசசமுகத்தில் வந்துபணிந்து தத்தமிருக்கையைச் சேர்ந்திருந்தார்கள் அரசனவ்வமைச்சர்களை நோக்கி மிகுந்தமனவருத்தத்துடன் இதனைச் சொல்லுவானுயினன்.

அன்பிற்சிறந்த அமைச்சர்களீர்! இதுகாறுமென்னைப் பகைத்தெதிர்த்த சத்துருக்களை பெல்லாம் வென்மேற்ன் உலகமுழுவதும் நீதிவழுவாது அரசுசெலுத்தினேன். தேவர்கட்கெல்லாந் திருப்தியாக அருந்தயாகங்கள் முடித்தேன். சுற்றத்தாரையெல்லாஞ் சுகம்பெறச் செய்தேன். யாவர்க்கும் இளபபாபாத்தக்க சோலைகளுண்டாக்கினேன். இன்னு மித்தன்மைபான அளவற்ற தருமங்களைச் செய்தும் ஆலேவாயிற்பட்ட கரும்பைப்பாலை என்னை இடைவிடாதுவாதிக்கவந்த இந்நோயை நீக்கிக்கொள்ளுப் ஏதுவினையொருவித்தினுங்காணேன். முன்னர் எனதுசரீரமானது சந்திரனொளியை நிகர்த்துப் பிரகாசித்திருந்த தன்மையினுலல்லவா சோமகாத்தனென்னும் பெயராயுடையனுயினேன். அத்தன்மையான சிறந்த சரீரத்தில் இத்தன்மையான கொடிய வியாதிவந்து வருத்துமாயின், அதனைவிட்டு நீங்குவதற்கான எண்ணமுமுமல் இன்னுமவ் வியாதியினுல்வருகின்ற துன்பங்களை யநுபவித்துக்கொண்டிருக்கின்ற எண்ணுயினை இனி வலாற்காரமாயாவது விடல்வேண்டும் அன்றியும் மூன்பு இந்திரனுங்கண்டு நாணும்படி இலவமபஞ்சு - செம்பஞ்சு - வெண்பஞ்சு-மயிர்ச்சீசணம்-அன்னத்தூவி என்கிற பஞ்சசயனத்திலிருந்து பெண் ஆடை அணிகலன்-போசனம்-தாம்பூலம்-பரிமளம்-பாட்டு-பூவமளி என்கின்ற அஷ்டபோகங்களையு மநுபவித்து, இப்போது தனதுகாந்தியெல்லாம் ஒரு வியாதியினுல் மழுங்கி யழியும்

படியாக நேர்த்தும் இன்னும் வாழவேண்டுமென்னும் எண்ணமுற் றிருக்கின்ற இவ்வுடலே வாளுக்கிரையாகச் சின்னபின்னப் படுத்து வதே உத்தமமா யிருக்கின்றது அமைச்சர்களே இனிப் பற்பலவி தங்களைப் பேசுவதினுல் ஒரு பிரயோசனத்தையுங் காணேன். யான் முன்படைத்திருந்த களிப்பும், இந்நோயினுல் இப்போ தடைந்தி ருக்கின்ற வெறுப்பும் நீங்களே நன்றுயோசித்துப்பாருங்கள் இனி யிவ்வரசைவிட்டு வனத்திற்சென்று வாசஞ்செய்வதே மிக்கநலமாக விருக்கின்றது என் புதல்வனுகிய ஏமகண்டன் என்னிலுஞ்சிறந்த மேம்பாட்டினை யுடையவனுக விருக்கின்று ஞதலால் அவனுக்கு உம்முடைய உத்தம மந்திராலோசனைப்பிரகாரம் இவ்வுலகத்தைப் பாதுகாத்து வரும்படியான மார்க்கத்தைப்போதித்து நமது அரசு நிமையையும் அவனுக் கொப்புவித்து விடுகின்றேரும். அவனை யென் னிலு மதிகமாக மதித்து நடந்துகொள்ளக் கடவீர்களென்று சொன்னன்

அவை யனைத்தையும் அவ்வமைச்சர் முதலாயினேர் கேட்டு பிக்க மனவருத்தங்கொண் டிருக்கின்ற சமயத்தில், அவ்வரசன் தனது உள்ளத்திலுண்டாகிய துக்கத்தினுலும், வியாதியினு லுண் டாகிய வருத்தத்தினுலுஞ் சோர்வுற்றுமூர்ச்சையாயினன். உடனே அவ்வரசனைப் புடைசூழ்ந்திருந்த அமைச்சர் முதலாயினேர் திடுக் கிட்டுத் தாமு மதனுன்பத்தை யடைந்தவர்களாகி, சிலர் தங்களுளி ளங்கைகொந்து கண்ணீர் சொரிந்தார்கள். சிலர் நாசியின்மீது விரலை வைத்தார்கள். சிலர் அவ்வரச னுடலில் நெருங்கி கையைவைத்தார் கள். சிலர் தெய்வத்தை நொந்தார்கள். சிலர் வயிற்றி லறைந்துகொ ண்டு மெய்வருந்தினர்கள் சிலர் கைகளைநெரித்துக் கலங்கினர்கள் சிலர் கல்வி கேள்வியிற்சிறந்து, இவ்வுலகத்தை நீதியோடுங்காக்க வல்லவராகிய இவ்வரசருக்கும் இவ்வினை வரலாமா வென்றார்கள். சிலர் ஊழ்வினையால்வருந் துன்பத்தை யாவரொழிக்க வல்லவரென் றார்கள். இவ்வாறு பற்பலவிதங்களாகத் துக்கித்திருதயரங்கொண் டிருப்பவர்களை அமைச்சர்கள் கையமர்த்தித் தங்களுள்ளத்தையுந் தாமேதேற்றிக்கொண்டு அரசனருகில்வந்து செவியிற் சுகுவைத் தூதி, குளிர்ந்த சாந்தாற்றி முதலியவைகளைக் கொண்டு சைத்தி யோபசாரங்கள் செய்தார்கள். அதனுல் அவ்வரசன் மூர்ச்சைதெ ளிந்து சேஷைசயனத்தி னின்று மெழுந்த திருமாலைப்போல மெல் லனவெழுந்து பரமேஸ்வரருடைய திருவடிகளைச் சிந்தனைசெய்து கொண்டிருந்தான். அவ்வரசன் கொண்டிருக்கின்ற மனேநிடத்தை

முன்னமே யறிந்திருக்கின்ற அமைச்சர்கள்மீளவும் அவனைப் பணிந்தெழுந்து மண்டலேஸ்வரா! இதுகாறுந் தேவேந்திரனைப்போலப் பல பகைவர்களையும் வென்று எங்களையெல்லாந் தாய்தந்தையரினும் மிகுந்த அன்போடும் பாதுகாத்துவந்தீர் அத்தன்மையான தேவரீருக்கு வியாதிகேரிட்ட தன்பத்தினல் இனி வனத்திற்சென்று வரஞ்செய்யவேண்டுமென்றல் தேவரீரைமாத்திரம்போகவிட்டுயாங்களெங்கள் மனையிற் சென்று வாழ்தலுந் தகுமா? அவ்வாறேயிருப்போமாயின் யாங்களும் புத்தியின் மிகுந்தவர்களாகலாமா? அப்பால் தருமமும் நீதியும் நன்றாகத் தழைத்திருக்குமா? ஆ! ஆ! என்னவிசைஞ்சொன்னீர். தேவரீரது குமாரராகிய ஏமகண்டரோவெனில் தருமமும் அததருமத்திற்கேற்ற பொருளுமாகிய இரண்டையும் இடரின்றிச் சம்பாதித்துத் திசைகண் முழுவதுந் தமதுசெங்கோலிச் செலுத்தி மதுநீதி வழாமல் இவ்வுலகத்திற் கெல்லாந்தாம் ஒருவராகவே யிருந்து அரசியற்ற வல்லவராவர் ஆதலால், அவர் செய்யும் அரசாட்சிக்கு மற்றொருவர் துணையும் வேண்டுமா? யாங்களுந் தேவரீரோடு வனத்திற்கு வருவதாக நிச்சயித்திருக்கின்றோம். இனித்தேவரீர் குமாரரை அரசுக் குரியவராக நியமிப்பி ரென்று விண்ணப்பஞ் செய்துகொண்டார்கள்.

இவ்வாறு நடந்த விசேடங்களையெல்லாம் அத்தப்புரத்திலிருந்த மனைவியாகிய சுதன்மையானவள் கேள்வியுற்று மனஞ் சகிக்க மாட்டாது சரேலென் றெழுந்து, மேகலாபரணங்க ளசையவும் பாதசாலங்கள் கலீரென்று சத்திக்கவும் விரைந்துவந்து சோமகாந்தராஜனவணங்கி எதிர்நின்று, பகைத்தவேந்தர்களெல்லாங்கண்டு வணக்கங் கொள்ளத்தக்க திருபாதோக்கத்தையுடைய எனது பிராணநாயகா! இருதலைப் புள்ளுக்கு உயிர் ஒன்றேபோலே இதுவரையில் தேவரீர்க் குரியனவாகி இன்ப துன்பங்களையெல்லாம் வேறுபாடின்றி யனுபவித்துவந்த யான் இப்போது தேவரீரை மாத்திரம் வனத்திற் செல்லவிட்டு எவ்வாறு தனித்திருந்து உயிர் தரிக்கவல்லேன். ஒருமித்த மனத்தையுடைய மங்கையராயினோர் தங்களவர் உயிர்பெற்றிருக்கும் வரையிற் றாங்க ளுயிர்பெற்றிருப்பதும், அவரிறக்குங்காலத்திற் றாங்க ளிறத்தலுமான கற்புநிலைமை யுள்ளவர்களாயின், அவர்கள் இம்மையிற் புகழடைவதன்றி மறுமையிற் சுவர்க்காதிபோகங்களையு மடைவரென்று சான்றோர்கள் சொல்லி யிருக்

இன்றார்கள், அங்ஙியமப்படி யானுந் தேவரீரோடு வனத்திற் சஞ் சரிப்பதன்றி, ஒரு கணமேனுந் தனித்திரே னென்று சொல்லிச் சூறைக்காற்றினு லடியுண்ட இளங்கொடிபோலவும், அம்புகன்றைத் துப் பதைக்கின்ற பெண்மான்போலவும், உள்ளங்கலங்கி உணர்வழி ந்து கண்களில் நீர்த்தாரைகளைப் பெருக்கித் தன்னுற் றுங்கமாட் டாத துக்கத்தோடும் முறையிட்டனள். அதனே அவள் குமாரனு கிய ஏமகண்டன் கேட்டு மனம் வருந்தித் தானு மவ்வரச னெதிரில் வணங்கி நின்று, என்னருமைத் தந்தையே! சந்திராதித்தர்களைப் பிரிந்த ஆகாயம் போலவும், அக்கினியும் பசுவுமில்லாத யாகம்போ லவும், புருடனையும்புத்திரனையும் பிரிந்த ஸ்திரீகள்போலவும், அமை ச்சு மாசுமில்லாத நகரம்போலவும், என்னை அருமையாயின்ற உம் மிருவரையும்பிரிந்த பின்பு யானெவ்வாறிருந்து அரசாளவல்லேன். புத்திரர்கட்குண்டாகிய கடமை யாதெனில் தம்மையின்ற தாய்தந் தையர் இருக்கும் காலத்து அவர்களைத் தெய்வமாகப் பூசித்தும், இறந்தகாலத்து அவர்களுக்காகப் பிதிரர் கடன்களைச் செய்தும் இருத்தலே யல்லது அவைகளை மறந்து நிலைமையற்ற போகங்களை யிச்சித்து அற்பமாகிய அரசாட்சியில் மூழ்கி யிருத்த லல்லவே. ஆதலால் யான் செல்வத்தை யொருபொருளாக மதித்தவனல்லன். உம்மிருவரோடு யானும் வனத்திற்குவரத் துணிவுற் றிருக்கின்றே னென்றனன். இவ்வாறு குற்றமற்ற அமைச்சர்களும், உயிர்தத் தீணியாகிய சுதன்மையும், புத்திரராகிய ஏமகண்டனும், அவ்வவர் கள் தனித்தனிபே விண்ணப்பஞ் செய்த வார்த்தைகளாகிய அமு !த்தை அரசன் செவியாரவுண்டு மனங்குளிர்ந்து குமாரனுகிய ஏம கண்டனேப்பார்த்து எனதருமை மைந்தனே! நீகிறுபிள்ளையல்லவே புத்தியிற் முழ்வானவார்த்தைகளை யேன்பேசுகின்றாய். சாத்திரவிதி ப்படி தாய்தந்தைய ரிருக்கும்போது அவர்களைத் தெய்வமாகப் பூசி த்து அவர்களுக்குப் பின்பு அளவற்ற தானதிகளைச் செய்து, பலி பிண்ட முதலியதவுஞ் கொடுத்து, மற்றுமுள்ள சருமாதிகளை முடிக்கின்றவனே யாவரும் புகழத்தக்க புத்திரனுயினும், அத்தாய் தந்தையர் சொல்லுகின்ற வார்த்தைகளைத் தடுக்காது நடந்துகொ ள்வதல்லவோ அப்புத்திரனுக்குரிய முதன்மையாகிய தருமம். இத னேயறிந்து நடந்து கொள்பவ னெவனே அவனே பெற்றோர்கள் களிக்கத்தக்க அருமைப்புத்திரனுவன், ஆதலால் என் னுத்தரவின் படி அமைச்சரோடு கூடவிருந்து அவர்கள் மந்திராலோசனைப் பிர காரம் இராச்சியபரிபாலனஞ்செய்துவரக்கடவை அதுவேனக்கு

நீகடத்துகின்ற முதன்மையாகிய தருமமென்று இன்னும் பலவாகிய தேறுதல்களோச் சொல்லி ஏமகண்டனோ யழைத்துக் கொண்டு அரண்மனைக்குச் சென்றான்.

சோமகாந்தன் வனம்புகத்துணிந்தபடலம்.

முற்றிற்று.

அரசியற்கைப் படலம்.

அந்தப்புரஞ்சென்ற சோமகாந்தன் என்னும் அரசன் தனது குமாரனாகிய ஏமகண்டனோத்தன்முன்னாக உட்காரச்செய்து, அரசு செய்ய வேண்டும் முறைமைகளைப் போதிக்கத் தொடங்கினன். எனை உயிரினுஞ்சிறந்த மைந்தனே! உலகத்தவர்கள் யாவரும் ஒழுகி உய்தற்காக வருணச்சிரமங்களும் தருமங்களும் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் ஒவ்வொன்றும் அளவில்லாதனவா யிருக்கின்றன. ஆதலால் அவைகளை யிப்பொழுது சொல்லாதுவிடுத்து உனக்குரிய அரசியலாகிய தருமத்தைமாத்திரங் கூறுகின்றேன். குமாரனே! விடியுமுன் ஐந்தாநாழிகை யளவுள்ள காலமாகிய பிராமீமூகூர்த்தத்திலே நித்திரைவிட்டெழுந்து, படுக்கையறையை நீங்கி, வேரோரிடத்திற் போயிருந்து, கொடிய பாவங்களை யெல்லாம் நீறுக்கும் திருநீற்றினைத் தரித்து, குருவையும் கடவுளையும் மனத்திற் றியானிக்கக்கடவாய். அதன்பின்னர்ப் பரந்த பூமியை எதிராகப் பார்த்து, பூமாதேவியாகிய அன்னையே! அடியேன் தன்பமில்லாமல் நடக்குந்தோறும் எனதுகால்கள் நினது வடிவத்திலே படுதலால் வருகின்றகுற்றங்களைப் பொறுத்தருள்வாயாக என்று மனவுருக்கத்தோடும் பிரார்த்தனை செய்தல்வேண்டும். பின்பு யானைமுகப்பெருமானைத் தியானிக்கக்கடவாய். அன்றியும் அளவில்லாத வேதாகமமுடிபுப்பொருளே! விட்டுணுமுதலாய தேவர்களா யிருப்பவரே! மனவாக்குக் கெட்டாத பரம்பொருளே! அறமுதலிய நாற்பொருள்களையுஞ் சரணமென்று அடைந்தவர்க்கருளும் அருட்கடலே! அநாதிமலமுத்தரே! சகலலோக காரணரே! தத்துவப் பொருளே! எனக்குவருகின்ற நீங்காத பெரிய விக்கினங்களை யெல்லாந் தீர்க்குமாறு இந்த விடியற்காலத்திற் றேவரீரைத் தோத்திரஞ் செய்கின்றேன் என்று அவரையே வேண்டக்கடவாய். கல்வழியில் நடத்தும்

படி சந்திரசேகரனுகிய பரமசிவத்தையும், சம்சாரத்தால்வருந்துன் பங்களைப் போக்கும்படி பார்வதிதேவியாரையும் வழிபட்டு, அரசி யல்செவ்வே நடக்குமாறு பாற்கடலில் அறிதுயில் செய்கின்றவ ரும், சத்துருக்களைத் தேடித்தேடி யறுக்குஞ் சக்கராயுதரும, பூம கள் மணிளருமாகிய திருமாலையும்,' அறிவோடு கன்மமும் வந்து தேறுதற்குக் காரணமான சூரியபகவானையுந் தோத்திரஞ் செய்ய வேண்டும். இவர்களையல்லாமல் மற்றைய தேவர்களையும், முனிவர் களையும், முறையாக வழிபட்டு நித்தியகருமத்தை முடித்துத்தமது நிலை தவருமல் பிராமணர் அமைச்சர்முதலியபெரியோரைத்துணைக் கொண்டு உலகத்தைப் பரிபாலிக்க வேண்டும். புத்திரனே! ஒரு மைப்பட்ட தருமவொழுக்கத்தினுலே பொருளும் இன்பமும்மேரு மலைபோலவும், சமுத்திரம்போலவும் வந்து பெருகிப் பிரயோசனத் தைக் கொடுக்கும். அவ்வறம் யாதென்றல் விருப்புவெறுப்பில்லாத சிவஞானியாவனை அவனது பாதங்களைக் கதியாக அடைதலாம். அறமுதலிய நான்கு உறுதிப் பொருள்களையும் நிறுத்திக் காத்தற் கேதுவாயுள்ள மழைபெய்யும்படி யாகங்களைச் செய்தலும், செய் வித்தலும், வறமைவாராமல் தருமங்களைச் செய்தலும் உறுதிப் பொருள்களினைவையெனத் தெளிவித்து ஐம்பொறிகளையும அடக்கி நிற்கும் அறவரையும் அந்தணரையுங் கல்வியறி வுடையாரையும் வழிபட்டு அவர்கள்மீது நீங்கா அன்புள்ளவனுயிருத்தலுமாம். தீய வினைகளாகிய பெரியோர் சிறிதுகோபிப்பாராயின், அக்கோபாக்கினி யினுலே காவற்கடவுளாகிய திருமாலுங் கலக்கமுறுவர், ஆதலால் அவர்களை வழிபடுவதன்றி யொருகாலு மிகழற்க ஆசாரியரையும் மற்றைய பெரியோர்களையும் அவ்வாறே மதித்து அடக்கக்கடவை. பெறுதற்கரிய சுவர்க்கவின்பத்தையும், அழிதலில்லாத முத்தியின் பத்தையும், இம்மையின்பத்தையும் ஆக்கங்களையுங் கொடுத்தலால் தருமவொழுக்கத்தைக் கைவிடல் நீதேயாம் அதனை யெப்பொழு தும் செய்தல்வேண்டும். செய்யுங்காலத்துக் கடுஞ்சொல், பொரு மை, கோபம்முதலிய குற்றங்களில்லாமற் செய்க அங்ஙனந் தரு மத்தைக் கைக்கொண் டொழுகினுல் அன்புதோன்றும் அதனுல் வரும் இன்பமே யின்பமெனப்படும். மற்றவற்றுன்வரு மின்பமெல் லாம் துன்பத்தையும் பழியையுந் தோற்றுவிக்கும். இன்னகாரணங் களாலே தருமத்தை விடலாகாது. மறந்து விட்டால் உடனே கேண்டாகும்.

பிரமசாரி, வானப்பிரத்தன், சன்னியாசி, தென்புலத்தார், குரவர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், பசுக்கள், பிராமணர், இரக்தார், யாசகர், கூனர்-குருடர்-செவிடர்-முடவர் முதலிய உறுப்பில்லாதவர், நோயாளர், வயோதிகர், பாலர், குழந்தைகள் தம்மையடித்தார் என்னும் இவர்களைப் பாதுகாக்க வேண்டும். வருகிறபொருளுக்கு இயையச் செலவு செய்து வாழுங் கற்புள்ள மனைவியைப் போல வேறு பொருள்களுளவா? இல்லை! இல்லை!! அவளாலே ராயகனுக்குப் புகழும், புண்ணியமும் சத்துருக்கள் முன்னிலையிற் சிங்கம்போல நடக்கும் வலிமையும், முத்திப்பயனும்வரும். ஆதலால் அப்படிப்பட்ட மனைவியோடு கூடியிருந்து ஒருவன் இல்லறத்தை நடத்தவேண்டும். அதுவே சிறந்த அறம் எழுபிறப்பினும் பாவங்களை யடையாச் சிறப்பும், பிதிர்கடன்களைச் செய்யும் மாட்சிமையும் இருத்தலால் எவ்விதத்திலாயினும் நற்குண நற்செய்கையினையுடைய மக்களைப்பெறுதலே செல்வமாகும் பெற்றகாலத்தும் அவர்களுக்கு நல்லறிவுரைச் செய்யக்கடவாய். இடம்பொருள் ஏவல் என்னுமிவைக ளிருந்தாலும் அன்பில்லாத விடத்து அவையாவும் எலும்பில்லாத வுடம்புபோல இருத்தலால், ஒவ்வோ ருயிர்களிடத்தும் அன்புடைமை யாவசியகமாம் அதிதிகள் வருவாராயின் முகத்தைக்கண்டு முகமலர்ந்து, அகமகிழ்ந்து, சிறிதும் வஞ்சகமின்றி இன்சொல்சொல்லி வேண்டியவைகளைச் செய்து நிற்பவ ரல்லவோ மனிடர் எனப்படுவர். காலத்தினாலே செய்த நன்றியினையளவு சிறிதாயினும் வானகத்தினும் வையகத்தினும் பார்க்கப் பெரிதாகும். ஒருவன்செய்த நன்றியை மறக்கலாகாது. நன்றியுட் பிரயோசனங் கருதாது செய்தவைகளே மேலானவை. ஒருவன் தன்பப்படுங்காலத்திற் பிரயோசனங்கருதிச் செய்த நன்றியுஞ் சிறக்கதேயாம். நன்மையைச் செய்தவர்கள் பின் ஒருகாலத்துத் தீமையைச் செய்தாராயினும் தீமையைவிட்டு அவர்செய்த நன்மையையே நினைத்து நடக்கவேண்டும். எந்தநன்றியை மறந்தாலும் மறக்கலாம் செய்ந்நன்றியைமறந்தால் அப்பாவம் மலைபோல நாளுக்குநாள் வளரும் தாழ்ந்த வருணத்திற் பிறந்தவரும் ஒழுக்கத்தினால் உயர்ந்தவரா வர்-உயர்ந்த வருணத்திற் பிறந்தவராலுமும் ஒழுக்க மில்லாவழியி ழிந்தவரேயாவர். இங்ஙனமாய் ஒழுக்கத்தை யுயிரினும் பார்க்க அருமையுடைத் தென்று கொண்டு ஒழுகல் முறையாகும். காமாசையின் காரணத்தினாலே பாவவழியிற் பிரவேசித்துப் பிறன்மனையாளைவிரும்பும் பேதையானவன் சிறுமின்ப முறுதலின் தன்ம

னவி தோளியே சேரத்தகும். பிறன் மனைவியை விரும்புவோனி டத்து பகை, பழி, பாவம், அச்சம் என்னும் நான்குங் குடிபுகும். தருமமும் பெருமையுங் திருவும் அகன்றுவிடும். இக் காரணங்களா ல் அதனைக் கனவிலாயினும் விரும்புதலாகாது. வெறப்புவரும்படி ஒருவன் ஒரு காரணத்தினலாயினும் அறியாமையினு லாயினுஞ்செ ய்த குற்றத்தைப் பொறுத்தலே தருமங்களுட் பெரியதருமமாம். அதனல் கீர்த்தியும் புண்ணியமும் வளராநிற்கும். இதனல் பொறு மை யென்னுங் குணம் உயிர்க்குத் துணையா யிருக்கின்றது.

ஏமகண்ட! அறத்தையும் பொருளையும் இகபா வின்பங்களை யும் அழித்து, அடுத்தார்க்குங்கேடுவிளைவித்து, நரகத்துன்பத்தை யுங் கொடுக்கின்ற அழுக்காறு என்னும் பொறுமைக் குணத்தை யொருவன்கொள்ள லாகாது புதுவெள்ளம் பழையரீரையும் உடை க்கச் செய்து வெளிட்போதல் போல முன்னிருந்த பொருட்கும் நாசத்தைச்செய்து, குடிகெடுத்துப் பெருந் துன்பத்தையும் பழி யையும் உண்டாக்குகின்ற மன்றேரஞ் சொல்லிப் பொன்வாங்குந் தொழிலையுடைய பாதகர் படும்பாடு பெரும்பா டாகலால் அதனை நிணைத்தலுஞ் செய்யற்க. உறவினர் பகையாவர். சினேகிதர்களும் ஓர்காற் பிரிந்தும் வடுச் சொற்களைக் கூறியும் நிற்பா ராதலின் நாடோறும் அறத்தைக்கொன்று அளவில்லாக் குற்றங்களைச் செ யினும் எதிரேநின்று ஒருவனுயிர்போகக் கடுஞ்சொற்பேசினும் மற ந்தாயினும் புறங்கூறுதல் தகாதுமைந்தனே! அறிவினர்க்குவெறுப் பையுண்டாக்கி நகையும் விளைத்து வெளிற் றறிவையுணர்த்தி, நன் குமதிப்பையுங் கெடுத்துச் சிறப்பையுஞ் சிதைத்துத் தருமமுதலி யவற்றின் பயன்களையுங் கொடுக்காது நிற்கும் பயனில்லாத சொல் லைச் சொல்லற்க. ஊர்க்குநடுவே நின்ற ஊருணிபோலவும், கனிகளை யுடைய மரம்போலவும், பெரியோரிடத்துப் பொருந்தப் பெற்ற செல்வம் யாவர்க்கும் பயன்படும், யாசிப்போன் நண்ணிடம்வந்து வறியேன் என்று சொல்லுமுன்னர்க் கொடித்தலும், சொல்லிவேறு சொற்கள் சொல்லத்தொடங்கிற் கொடுத்தலும், சொல்லிவருந்திய பின்னர்க் கொடுத்தலும் முறையே உத்தமம் - மத்திபம் - அதமம் எனப்படும். மரணம்வந்த காலத்தும் பூதவுடம்புக்கே யன்றி உயி ருக் காகாமல் இருத்தல்போல, உலகமழியுமளவும் புகழுடம்பான தநிற்கும். இங்ஙனம் புகழுடம்பு அழியா திருத்தலின் கொடையி னலே அதனைப் படைத்தவரே தேவர்களுர் தொழப்படுந் தன்மை

யுடையார் தருமநூலிற் சொல்லியபடி உலகத்தை யரசாளவேண்டி மாஞல் அமைச்சு, நாடு, அரண் பொருள், படை, நட்பு ஆகிய ஆறும் இன்றி யமையாத அங்கமாம் - அரசர்கள் ஒரு தொழிலைச் செய்யுங் காலத்துப் பயப்படாமையும், அதனைச் செய்வார்க்குப் பொருள் கொடுத்தலும், அதனில் மனஞ் செல்லுதலும், அறிவு கொண்டதனே முடித்தலும், ஆண்மை யுடைமையும் ஆகிய இவைகளோடு கொலை முதலிய பாவங்களே நீக்குதலும், மானம் முதலிய குணங்களை யுடைமையும் அதற்கியல்பேயாம் பிரசைகள் வருத்த முற்றகாலத்து ஆறிலொருபங்கு இறையைவாங்காது விடுத்தும், தங்கள் குறையையவர்து முறையிடி பார்க்குத் தடையின்றி வெளிப்பட்டுத் தெளிவுறக்கேட்டு, இனியசொற்களைச் சொல்லிக் குற்றமுள்ளாரைத் தண்டித்துத் தீர்ப்புச்சொல்லக் கடவாய். யுத்தகளத்தில் அரசனைக்கொன்றும், திறைவாங்கியும் நாட்டினைக் காத்தும் பொருள்சம்பாதித்து, திருடர் ஈகை-குறும்பு முதலியவற்றால் நாட்டுக்குக் கெடுதி யுண்டாகாமற் காத்து உயிர்களை அறமுதலிய உறுதிப்பொருள்களை யடையும் வண்ணஞ் செலுத்த வேண்டும். இது வேசெங்கோலுக்குரிய மாகூறிபாகும். அன்றியும் சந்தேகம், விபரீதம், மயக்கம் என்பனவின்றித் தருமநூல் நீதிநூல்-யானையேற்றம் குதிரையேற்றம் படைக்கலப் பயிற்சி-தேர்கடாவல் முதலியவற்றை யுந் தெளிவாகக்கற்றும், கற்றசோடிணங்கியும், கற்றதின்படி நிற்கவும் வேண்டும் சாதியென்பது உடலைப் பற்றியதேயாம் அதனால் வருகின்ற உயர்வுந் தாழ்வும் அவ்வுடலகன்றபோதே யொழியாநிற்கும். கல்வியாலாகும் பெருமையே உயிர்செல்லுந்தோறும் அதனைத் தொடர்ந்துசெல்லும். ஆதலால் அதனை முயன்று கற்கவேண்டும். வறுமையினாலும் அறியாமையினாலும் வருத்தமுற்று இரங்குங்காலத்து அவைகளொழியுமாறு உதவிசொல்லே துணையாக நிற்றலின், ஒழுக்கமுள்ளாரது வாய்ச்சொற்களைக் கேட்டல் வேண்டும் இழிந்தோன் உயர்ந்த உறுதிச்சொல்லைச் சொன்னாலும், உயர்ந்தவனென்றிருப்பவன் புன்மொழிகூறினாலும் அவை முக்குணவயத்தவாகலின் உள்ள இயல்பையறிந்து பொய்நீக்கி உண்மையைக் காணுதலே அறிவுக் கழகாகும், உயர்ந்தார் எவ்வாறு நடக்கின்றாரோ அவ்வாறு நடந்து தீமைகள் வருமுன்னர்க் காத்துப் பழிபாவங்கட்கு அஞ்சி, நன்னெறியில் பொறிகளைச் செலுத்தக் கடவாயாக.

மைந்தனே! உயர்ந்தோரைப் பேதமில்லாமல் சிநேகிக்கக்கடவாய். கோட்டுப்பூவைப்போல அவ்வவர்களிடத்தும் முகமலர்ச்சியுடையனுய் செல்வம் வந்த காலத்து சந்தோஷப் படுதலும் வறுமை வந்தகாலத்தித்தக்கித்தலும்ஆகா. தவத்தர், ஆசாரியர், அந்தணர், உயர்ந்தோர் இவர்களிடத்துவணக்கமில்லாமையும், அகங்காரமும், செலவுசெய்யவேண்டியவிடத்து செலவுசெய்யாமையும், காமமும், கோபமும், கண்ணேட்டமும் ஆகிய இத்தீக்குணங்களைக் கொள்ளற்க. குற்றஞ்செய்யாமலிருந்து பிறர் குற்றங்களைக் கடியவேண்டும். சிறிதாயினுங் குற்றஞ்செய்யின் சிறுகெருப்பு மலேபோன்ற வைக்கோற் போர்களை யழிக்கு மாறுபோல பெருவாழ்மையு மழிக்கும் பகைவர்களுக்குச் செல்வத்தைக் கொடுக்கும். பெறுகோயில் வருந்தச் செய்யும் கோபமுருத பெரியோரையும் கோபிக்கச் செய்யும். இனிமையுள்ள பொருகள் பலவற்றையும் உறவினரும் பகைவருஞ் சிறிதேதனு மறியாது அநுபவிக்கவேண்டும் உண்ணியொருகாலத்தும், ஒரிடத்தும் புகழ்ந்து பேசற்க கண்மையபக்காத தொழிலினே மறந்தாயினுஞ் செய்யலாகாது. மழைமிகுதியினுலும், மழைக்குறைவாலும், காற்றினுலும், கெருப்பினுலும், கோயினுலும், உலகிற்குவருக் துன்பங்களை யெல்லாம் தேவர்களைக் குறித்தும் உயர்ந்தோரைக் குறித்துஞ் செய்யுஞ் சாந்திக் கிரியைகளினுல் நீக்கியும், பகைவர்களாலும் கள்வராலும் தீவினைசெய்யுங் கூட்டத்தாராலும் வருகின்ற குற்றங்களைச் சதுர்வித உபாயங்களினுல் நீக்கவேண்டும். உனக்குவருகின்ற தீவினைகளை உற்பாதங்களினு லறிந்து அவற்றால் வருத்தப்படாது நடக்கவேண்டும். பகைவர்களுடையவலியும், அவரைவெல்லுங் காலமும் வெல்லுவதற்கு வேண்டிய வினையையும், அதுதொடங்குந் தன்மையினையும், அவ்வினைக்குவருகின்ற இடையூறுகளையும், அவைகளைவிலக்கும் வழியையும், வெற்றிகொள்ளுந் தன்மையினையும், வெற்றியால்வரும் பிரயோசனத்தையும் இன்னும் உனக்கும் பகைவர்க்கும் உள்ளபல நிலைகளையும் முதலில் யோசித்துத் தெளிந்து வினைசெய்ய வேண்டும், வலியவர்களுக்கும் ஒறுத்தலும், மெலியவர்க்குக் கொடுத்தலு மாக அவரவரிடத்து நடக்க வேண்டு முறையைத் தெளிந்து நடக்கக்கடவாய். நீசம்பாதிக்குங் திரவியத்தில் உனக்கு வருந் தன்பத்தை நீக்குதற்காக காற்பாகமும், உண்ணுதற்காக அரைப்பாகமும், தருமத்திற்காக மற்றைக் காற்பாகமும் நியமிப்பது முறையாம் பகைவனை வெல்லுங் காலம் வருமளவும் போர்க்குப்பின்வாங்கும் ஆட்டுக்கடாவைப்போல எண்

ணியிருந்து வினைமுடிக்க யதையரசன் செய்யத்தகாத குற்றங்களை செய்யினும் வெல்லுங் காலம்வரும் வரையும் அப்பகையை வெளியிற் காட்டாமல் கல்ல குணதோடு அளவளாவி சிரித்து உவகை கொள்ளுஞ் சுற்றத்தார் போல ஒழுகவேண்டும் காலம் வந்து விட்டால் கருதிய வினையவ்வளவையுஞ் சிறிதுக் தவருது முடிக்கக் கடவை.

ஊகமில்லாதவனுயினும் இடத்துக் கேற்ற வினையைச் செய்வானுயின் ஊக்கமுடையவனு மழிவான். அவ்வாறு ஒன்றுசெய்யுங் காலத்துப் பிறப்பும், குணமும், அறிவும், நற்செயல்களும், பிரத்தியகூ அநுமான அளவைகளும் கல்வி கேள்விகளி ஞராய்ச்சியும் மிக்குள்ள மந்திரி மாரோடும் ஆராய்ந்து தெளிந்து செய்க. முனி வரையும் புரோகிதரையுங் தூதாக வனுப்பி இந்த அரசன் தரும வழியி னிற்பவனல்லன், இவனை நீக்கி அத்தரும வழியினிற்கும் வேறே ரரசனை அரசாளும்படி நியமித்தற்கு நினைத்தும்; இது எவர்க்கு மொப்பா யுள்ளது; நும்முடைய கருத்தென்னே? என்று ஒவ்வோ ரரசரையும் வினவி அவருட் பலர் சம்மதப்படி அதனைச் செய்க. சேனைபதியையும் அவனைசேர்ந்த சேனைகளையும் தூதாக வனுப்பி இந்த அரசன் மிக்க பொருளாசை யுள்ளவன்; இவனைத் தரத்திக் கொடை யுரிமையுள்ள ஒருவனை நியமிக்க நினைத்தனம்; நீங்களுந் தென்னை என்று ஒவ்வொருவரையும் வினவி அவர் கருத்தையும் ஒட்டி தெளிந்து செய்யக் கடவாய் சுற்றத்தார்களாதவரைத் தூண்டியாகக்கொண்டு ஒருகாரியத்தை யாயினும் யோசிக்கலாகாது பழிபாவங்கட்குப்பயீப்படாதவர்களுடைய நட்பைவிடுக. குணமு மறிவுமுள்ள பெரியோரோடு கூடுக. பெருமிதம், பெரிய செல்வம், பேரழகு, பெரும் யோகம் மிக்க களிப்பு இவைகளில் முழுகி யிருக்கின், ஏமகண்டனே ! பொச்சாபபு சோம்பல்முதலிய வற்று னுண்மைக்காத்துப் பகையை வெல்லுதல் அரிதரிது குற்றஞ் செய்தோர் யாவரா யிருந்தாலும் கண்ணோட்டம் பாராது, நீதியையறிந்து தருமந்தப்பாமல் தண்டஞ் செய்தலே செங்கோ லெனப் படும்.

அச்செங்கோ லில்லாவிடின், மழையினுற் பிரயோசனத்தையடையினும் மக்கட்கு உறுதியில்லையாகும். ஆதலால் மழையினுல் பயிர்வினைக் தொக்கும்படியும், தருமம்வளரவும். வேதநூல் வினங்கவும், பொருள் சம்பாதிக்கவும் யுத்தத்தில் வெற்றி கொள்ளும்படி

யும், குற்றமில்லாமல் வாழும்படியும் செங்கோலையே நடத்த வேண்டும். களவெடுப்போர், ஆறலைப்போர், பிறர்மனையாளை இச்சிப்போர், உயிர்களைக் கொலை செய்வோர், பொய்யர் முதலிய பாதகர்களைக் கொலை செய்தல் பாவமன்று. அது செவ்விய பயிர் விளையும்படி அவைகட் கிடையூறாய் நிற்கின்றகளைகளைப்பிடுங்குதல்போலாகும். சேனைகளினாலும் பகைவர்களாலும் திருடர்களாலும் மற்ற உயிர் வருக்கங்களாலும் தன்னாலும் உலகிற்கு ஓர் துன்பமும் வாராமற் காத்து, நியாயவழியி னினறுந் தவறி நடப்பவரைத் தண்டித்து அவரிடத்துள்ள பொருள்களையுங் கவர்ந்து கொள்ளுதல் அரசர்களுடைய தருமமாகும். இங்ஙனந் தருமவழியிற் றவறுது உலகத்தைக் காத்தால் அந்த அரசனை யவன செங்கோலே காக்கும் குற்றத்தையுங் குணத்தையு மாராய்ந்து செங்கோல் முறைப்படி அரசு செய்யாதவனைப் பகைவர் இல்லையாயினும் அந்தப்பாவமே கெடுக்கும் கடுஞ்சொல், கண்ணோட்டமுடைமை அளவுகடந்ததண்டனை, நடுநிலையில்லாமை, முகமலர்ச்சியின்மை, மந்திரிமுதலாயினோரோடு ஆலோசித்துச் செய்யாமை பிழைசெய்தல். யுத்தம் சிறை ஆகிய இவைகளைச் செய்யாமை திங்கேயாகும். வறுமையிருக்குமாயின் தொழிலை முற்ற விடாமல் நீடவைக்கும்; சோம்பலையும் நித்திரையினையு முண்டாக்குப்; மூர்க்கதனியைக் குடிகொள்ளச் செய்யும்; பகைவர்க்கும் அடிமையாகும்; குடிகெடுக்கும்; ஆதலால் அரசனைப் பார்க்கவும் மானுடருக்குத் தீமையா யுள்ளது வேறென்றுண்டோ? செல்வத்துடனே சோம்பலின்றிச் செய்யும் முயற்சியானது மேன்மேலும் பொருளைப் பெருகச் செய்யும். சுற்றத்தாரையும் உறவினரையும் காக்கும் யாவர்க்கும் உபகாரத்தையுஞ் செய்யும்; கீர்த்தியையுஞ் சேர்க்கும்; தீவினை வந்தாலும் நன்மையையேகொடுக்கும். எனது கண்மணியை யொத்த மைந்தனே! அரசியற்குரிய இலக்கணங்கள் இவைப்போலப் பல உள. அவற்றையெல்லாம் விரித்துரைப்பின் ஆதிசேடற்கு மகாதாகலின் மநுஸ்மிருதி முதலிய நூல்களிற் கண்டுதெளிக.

அரசியற்கைப்படலம் முற்றிற்று.

பட்டாபிஷேகப் படலம்.

காரிணியொத்த களிற்றுச் சேனையையுடைய அரசன் அதன் பின்னர்க் கொலுச் சபையில் வந்து, கணிதசாஸ்திரிகளைக் கூவி, நமது குமாரனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்யவேண்டு மாதலால், அதற்குரிய நாளை ஆராய்ந் தறைப்பீர்க ளென்றனன் அதற்கு அவர்கள் உத்தராயண புண்ணியமாகமாகிய தைமாசத்திற் பூசநட் சத்திரங்கூடிய சுபதினமே நன்முகூர்த்த மென்றார்கள். பின்னர்த் தனது குலகுருவை யடைந்து தனதெண்ணத்தை அவருக் கறி வித்து அவர் கட்டளையிட்ட வாறே எல்லாப் பொருள்களையுஞ் சேகரித்து ஏமகண்டனுக்கும் அவன் மனைவிக்கும் அள வற்ற பெரு மகிழ்ச்சியோடு மகுடாபிஷேகஞ செய்து முடித்தனன். பின் னர் ஏமகண்டன் சகல வைபவத தோடும் உலாப் போந்து திசை யனைத்தினுந் தனது செங்கோலைச் செலுத்தி அரசியற்றி வருகின்ற காலையில், சோமகாந்தராசன் நமது தோட்சுமையை யொழித்தோ மென்னுங் களிப்படைந்தவனுகித் தனது புத்திரனுகிய ஏமகண்ட ராசனைப் பார்த்து மைந்தனே! யான் முன்பு சொல்லியிருக்கின்ற நீதிபின்படி இராச்சியபரிபாலனஞ்செய்து வருவது உனது கடமை இனி என்னிஷ்டப்படி வனத்திற் செல்வது எனது கடமையென்று சொல்லி விரைவிலெழுந்து அங்கிருக்கின்ற அமைச்சர் முதலான வர்களைப் பார்த்து அவ்வவர்கட்குச் சொல்லவேண்டிய கட்டளை களைச் சொல்லிப் பிரயாணஞ் செய்வானுயினன்.

பட்டாபிஷேகப் படலம் முற்றிற்று.

வனம்புகு படலம்.

அவ்வாறு பிரயாணப்பட்டுக் கடைவாயிலை நீங்குவதற்கு முன் னமே அமைச்சர் அந்தணர், நட்போர், நாகரீகர் முதலிய கூட்டங் களோடு சுதன்மையும் ஏமகண்ட ராஜனும் வெளிக்கொண்டு மிக்க மனவருத்தத்துடனே அவனை நெருங்கினார்கள். இவ்வாறு நெருங் கியபேர்கள் யாவருந் தன்னைப் புடைசூழ்ந்து வர அரசன் நன்கு கூப்பிடுதூரம் (குரோசஞ்) சென்று, குளிர்ச்சியுள்ள ஒரு பொய் கையைக் கண்டு, "அதனருகிற நங்கித் தன்னைடு வந்திருக்கின்ற

முனிவர்கள், அத்தணர்கள் முதலான பெரியோர்களை வணங்கி, மற்றவர்களையும் கிருபையோடும் பார்த்து அன்பர்களே! என்னுடன் நீங்கள் யாவரும் ஏன் வீணாக இங்கிருக்கவேண்டும் உங்களுங்களிடங்களிற்சேர்ந்து சுபகரமாயிருங்களென்றுசொன்னன். அதைக் கேட்ட அமைச்சர் முதலாயினோர் மனவருத்தங்கொண்டு விழிகளினின்று நீர்பெருகவீழ்ந்து தீர்க்க தண்டன்செய்து, சார்வபௌமா! நீயினிடத்தில் வெம்மைபோலவும், நீரினிடத்திற்றன்மைபோலவும், சூரியனிடத்தி லொளிபோலவும் மலரினிடத்து மணம்போலவும் உடலினிடத்தி லுயிர்போலவுமிருந்து எங்களையெல்லாம்பாதுகாத்தருளிய தேவரீரது கிருபா சமுகத்தை ஒருகணப்போதேனும்யாங்கள் நீங்கியிருக்கத் துணிவோமா? அப்படி நீங்கியிருக்கினும் நிலவைவிட்டு இருளிற் கிடப்பவர்க் கொப்பாமோ மல்லவா? இனி நகரத்திற் சென்று எவ்வாறு யாங்கள் வாழ்ந்திருப்போம். முற்சனனத்திலன்றி இச்சனனத்திலும் அருந்த புண்ணியங்களை கடாத்தியிருக்கின்றோமாதலால் எந்தத் தீர்த்தத்தினாலோ எத்தவசிரேட்டர்களாலோ இப்போது தேவரீருடலிற் சம்பவித்திருக்கின்ற இவ்வியாதி நீங்கப்போகின்றது. அதுகாறும் யாங்களும் வனத்திலிருந்து பின்பு தேவரீரோடுங் கூடி நகரத்திற்கு வந்து சேருகின்றோமென்று சொன்னர்கள்.

அவையனைத்தையுஞ் சோமகாந்தராசன்கேட்டு அன்பர்களே! இவ்வுலகத்திற் பிறந்த பயனை வேண்டினோர் முதலில் இல்லற வொழுக்கங்களை வழுவாமற் காத்துப் பின்பு துறவறம்பூண்டுவனத்திற் செல்லவேண்டுமென்று வேதங்களிற் சொல்லியிருக்க அதனை இதுகாறுங் கருதாது மறந்திருந்ததினாலல்லவா இப்பொல்லாங்கான பிணியெனக்குச் சம்பவித்தது நீங்கள் இதனைச் சற்றும் ஆலோசியாமலிருக்கின்றீர்கள். அன்றியும் ஓர் ஆலமரத்திற்குப் பழுதுற்ற காலத்தில் அதனைத் தாங்க அதனடியிலிறங்கியிருக்கின்ற விழுதைப்போலனக்குத் துன்ப நேரிட்டகாலத்தில் என்னைப்போலனைதரசரிமையைக் காத்துவருவதற்கு என்மகனேற் பட்டிருக்கின்றான். அவனை என்னிலு மதிகமாக வுங்களையெல்லாம் பாதுகாத்து மேலான புகழை யடையத் தக்கவன். நீங்கள் ஒன்றுக்கு மஞ்சவேண்டாம் இனியான் வனஞ்செல்வதற்கு உத்தரவு கொடுத்து நீங்கள் யாவரும் நகரத்திற்போய்ச் சுகமாயிருங்களென்று சொன்னன். பின்னர் யாவரும் அரசனனியை மறுப்பதற் கஞ்சினவர்களாகி லன்மம்பேசாதிருந்தார்கள். அப்பால் குமா

ரனுகிய ஏமாண்டனனவன் தனது தாய் தந்தையரிடத்தில் வைத்திருக்கின்ற ஆசைதோயானது தன்னையலைக்க, அதனால் வருந்துகின்றமனத்தோடு அருகிலிருப்பவர்கள் தனது கண்ணீரைத் துடைக்கும்படியாகத் துக்கித்து தந்தையெதிரில் வந்து நின்றனன். அவனைச் சோமகாந்தராசன் பார்த்து; என் அருமைக் கண்மணியே! ஏன் கிலேசப்படுகின்றாய் கிருகத்தாச்சிரமத்திலிருக்கின்றபேர்கள் வபதுமுதிர்ந்தால் வனத்திற்குச் செல்வது முறைமை யன்றோ? அந்த முறைப்படி யாமும் வனத்திற்குச் செல்லுகின்றோம். தாய் தந்தையருடைய உத்தரவைத் தடுக்காமல் நடந்துகொள்ளவேண்டுவது புத்திரர்கள் கடமை யாதலால் தசரத மகாராசனி னுத்தரவின்படி அவர் குமாரராகிய ஸ்ரீராமமூர்த்தி வனத்திற்குச் சென்றாரன்றோ? அவ்வாறு உன்னை யான் வனத்திற்குப்போகச் சொன்னேனோ? இல்லையே? சுகமடித்தாலுந் துன்பம் விளைந்தாலுந் தாய் தந்தையர் சொல்லுகின்ற முறைமைப்படி நிற்பதல்லவா புத்திரர்களுடைய கடமை. இஃதுனக்குத் தெரியாததாற் நீ நமது உத்தரவின்படி நகரத்திற் போய்ச் சேர்ந்து சுகமாக இராச்சியபரிபாலனஞ் செய்து கொண்டிருவென்று பல தேறுதல்களைச் சொல்லலும், ஏமகண்டராசன் தன் தந்தையின் பாதங்களிற் சாஷ்டாங்கமாகப் பணிந்து, பல ஆசீர்வசனங்களைப் பெற்றுத் தன் தாயினருகில் வந்து, அவள் பாதமானது தனது கண்ணீரினால் நனையும்படியாக வீழ்ந்து பணிந்தனன்.

உடனே அத்தாயானவள் மிகுந்த துக்கத்தோடு புத்திரனெடுத்துத் தனது கண்ணீரினால் அவன்மார்பி லணிந்திருக்கின்ற சந்தனமெல்லாங் குழையும்படி யனைத்துப் பல தேறுதல்களைச் சொல்லி என்னருமைச் செல்வனே! எவ்வகைப்பட்ட தேவர்களாயினுந் தங்களை யடித்திருக்கின்ற ஊழ்வினையை யொழிக்க வல்லவர்களோ? அவ்வூழை நினைத்துத் துக்கித்திருப்பதனா லென்ன பயன். உன்மனதில் எங்களைக்குறித்து யாதொரு கவலையுங் கொள்ளவேண்டாம் சகல விக்கினங்களையு மொழித்து அவ்வவர்கட்குவேண்டியவரங்களைத் தந்து இரட்சிப்பவர் விநாயகக்கடவுளாதலால், நீ யுன்னரண்மனையைச் சேர்ந்து அவ்விநாயக மூர்த்தியை இடைவிடாமற் பூசித்து, சுவாமி! எனது தந்தையும் தாயுஞ் சகல துன்பங்களும் ஒழியப்பெற்று விரைவில் இந்நகரத்தைச் சேரவேண்டு மென்று பிரார்த்தனை செய்துகொண்டு, உனது அரசாட்சியைக் கிரமமாகச்

செலுத்திச் சிரஞ்சீவியாய் மார்க்கண்டேயரைப் போலத் தீர்க்காயுளும், புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், துகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, தூணிவு, நோயின்மை, வாழ்நாள் என்கின்ற பதினாறு பேறுகளையும் பெற்று மறுமைப் பயனையும் மிக்க சுகமுற்றிருக்கக்கடவையென்று பல ஆசீர்வாதங்களைச் சொல்லி விடைகொடுத்தனள்.

பின்னர் ஏமகண்டராசன் தனது மனத்தைச் சிறிது கொண்டவனும், அங்கிருக்கின்ற அமைச்சர் முதலிய யாவருந் தன்னைப் புடைசூழ்ந்துவர நகரத்தையடைந்து, சதாகாலமுங் கணபதி பூசையை நடாத்திக்கொண்டு இராச்சிய பரிபாலனஞ் செய்துவந்தான். இப்பால் சோமகாந்த ராசனுஞ் சுதன்மையும் அவ்விடத்தினறும் நீங்கி வனத்தைநோக்கிச்செல்லுகையிற் சுபலன், ஞானகம்மியன் என்னும் இரண்டு மந்திரிகளும் பின் தொடர்ந்தார்கள். பின்னர் அவர்களையும் அழைத்துக்கொண்டு நால்வர்களாக வழி நடந்து, வனவாசஞ் செய்து தேன், கிழங்கு, காய், கனி முதலான வைகளை இரண்டமைச்சர்களுந் தெரிந்து சேகரித்துக் கொடுக்கத் தாங்கள் அவற்றை வாங்கிப் புசித்துவருங்காலத்தில் அச்சோமகாந்தராசன் செய்திருக்கின்ற தவப்பயனுனது நெருங்கி வந்தமையாலும், அவன் புத்திரனுகிய ஏமகண்ட ராசன் இடைவிடாது கணபதி பூசைசெய்து வருகின்ற மாட்சிமையாலும், தவசிரேஷ்டராகிய பிருது முனிவராசிரமத்தினருகில் வந்து நடந்த விளைப்பு நீங்கும் படியாகப் பலசோலைகளிழலாற் சூழப்பட்டிருக்கின்ற ஒரு தடாகக்கரையிற் றங்கினார்கள். அச்சோலையில் மயில்கள் ஆடுகின்றனவும், குயில்கள் கூவுகின்றனவும், வண்டுகள் பாடுகின்றனவும், நாகணவாய்ப் பறவைகளோடு கிளிகள் பலவிஷயங்களைப்பேசி வாதாடுகின்றனவும், பூங்கொடிகளெல்லாம் பூவையர்களைப் போல் அசைகின்றனவும், மலர்க்கொத்துகளால் நிறைந்த கிளைகளெல்லாஞ் சூரியமண்டலத்தை யளாவி நெருங்கியிருக்கின்றனவுமாக நிகழும் பல விசித்திரங்களைக் கண்டு நமது அரண்மனையும், இச்சோலைக்கு நிகரல்லவென்று சந்தோஷித்து, அச்சோலையில் வீசுகின்ற தென்றற் காற்றினுல் இளைப்பாறிச் சிறிது நித்திரை செய்வதாயினுன். சுதன்மையானவள் அவ்வரச னருகிற் காவலாக விருந்தனள். இரண்டு அமைச்சர்களும் புசித்தற்கு வேண்டுவனவற்றைக் கொண்டு வருவதற்காகச் சென்றார்கள்.

அச்சமயத்தில் ஒருபாலியன் இராஜகுமாரணைப்போல் அழகு வாய்ந்தவனுகி நீர் கொண்டுபோவதற்கு அத்தடாகத்தை நோக்கி வரச் சுதன்மைபானவள் அவனைப் பார்த்து ஆச்சரியங்கொண்டு, அப்பா குழந்தாய்! சிங்கம், யானை, புலி, கரடி, முதலான துஷ்ட மிருகங்கள் வாசஞ் செய்யத்தக்க இவ்வனத்தில் தேவர்களும் வருவதற் கஞ்சுவார்களே; நீ சிறுபிள்ளையா யிருக்கின்றனையே, இவ்வளவு துணிவோடும் ஒருவர் துணையுமின்றித் தனிமையாக வந்தனையே நீ யார்? உன் பெயரென்ன? உன்னை யின்ற தாய் தந்தையர் யார்? இவ்வனத்திற்கு வந்தகாரணம் யாது? அவைகளை யெனக்கு முறைமையாகச் சொல்லுவாயெனக் கேட்டனள். அதற்கு அப் பாலியன சொல்லுவான் தாயே! யான் முனிசிரேட்டருக்குப் பிறந்தவன், என்பெயர் சிவனன். என்னை யின்றவள் புலோமை என் தந்தை பிருகு முனிவர். யான் இங்கு ஜலங் கொண்டுபோவதற்கு வந்தேன். இதுதா னெனது சரித்திரமென்று சொல்லி, அம்மா! உன்னுடைய சரித்திரம் யாது? இலக்குமியுங் கண்டு நாணத்தக்க அழகினைவாய்ந்த நீ இவ்வாரணியத்தில் இத்தன்மைத்தான பொல்லாப் பிணியாளனைநு வருவதற்குக் காரணமென்ன? இவைகளை எனக்குச் சொல்லவேண்டுமெனக் கேட்டனன். உடனே சுதன்மையானவள் அதற்கிசைந்து தனது விழிகளினின்றும் நீர் பெருகிவர மனமுருகித துக்கித்து, தாங்களிருந்த நிலைமையையும், இப்போ திவ்வனத்திற்கு வந்திருக்கின்ற தன்மையையும, மற்றுந் தமதுள்ளத்தி லிருக்கின்ற துயரங்கள் எவற்றையும் நின்றேனும் விடாது சொன்னள். அதனைக் கேட்ட முனிகுமாரன் மிக்க துயரமடைந்து தனது சிறந்த பேரறிவினுற் பல தேறுதல்களைச் சொல்லிச் சலமெடுத்துக்கொண்டு தன்னுசிரமத்தைச் சேர்ந்தனன்.

வனம்புகு படலம் முற்றிற்று.

பிருகுமுனியை யடித்த படலம்.

வாய்ந்த புகழ் நைமிச வனத்துறவிற் சோம
காந்தன் வன மேயது கரைந்தன மறிந்தீர்
வேந்தனல னற்பிருகு மெய்த்தவ னழைப்பப்
போந்தபடி கேண்மினென வேபுகலுஞ் சூதன்.

இப்பால் அம்முனி குமாரன் நெடுநேரஞ் சென்றுவந்து சேர்தலும், அவனை அவன் தந்தையாகிய பிருகு முனிவர் நோக்கி, அப்பா! நீ இன்று இவ்வளவு காலதாமதப்பட்டு வருவதற்குக் காரணமென்ன? அன்றியும் உன் முகார விந்தமானது அங்கியர் துக்கத்திற் கழுங்கி வாட்டமுற்றிருக்கின்ற தாதலால், நீசென்ற விடத்தில் நடந்தகாரியங்களென்ன? அவைகளை எனக்கு விளங்கச்சொல்லுவாயென்று கேட்டனர் அதற்குச் சிவனருளினவன் தனதுதந்தையைப் பணிந்தெழுது, அண்ணலே! யான் தடாகநோக்கிச் செல்லுகையில் அத்தடாகக் கரையில் ஓருமரத்தினிழலில் இரதிதேவியுங் கண்டு வணங்கத்தக்க பேரழகுவாய்ந்த ஒரு ராஜஸ்திரீயானவள் தன் புருடனோடுங்கூட விருந்தாள் அவள் என்னைப் பார்த்தவுடன் அருகி லழைத்து மிகுந்த அன்போடிருக்கவைத்து, அப்பா! நீ சிறு குழந்தையா யிருக்கின்றனீயே; உன்னை இக்கொடிய காட்டிற்றனியாய் விட்டவர்கள் யார்? உன்பெய ரென்ன? நீ இங்குவந்த வரலா றென்னென்று கேட்டனள். அதற்குத் தக்கபடி விடை கொடுத்துப் பின்னர் அவள் வரலாற்றைக் கேட்டறிய லாயினேன். அக்காரணத்தாற் காலதாமதமாயிற்று அன்றியும் அந்த ராஜஸ்திரியானவள் தன்னை டிருக்கின்றவன் தன்புருட னென்றும், அவன் சௌராட்டிர தேயத்திற்கு அரசனென்றும், அவன் பெயர் சோமகாந்த ராஜனென்றும், அவன் தனது சரீரத்திலிருக்கின்ற தெழுநோயினல் நரகவேதனையினும் அதிக துன்பத்தை யடைந்திருக்கின்றனென்றும், அந்நோயின் காரணத்தால் அவனும் அவன் மனைவியாகிய சுதன்மை என்கின்ற தானும் அரசாட்சி முதலானவற்றைத் தங்கள் குமாரனுகிய ஏமகண்டராசனுக் கொப்புவித்து, இவ்வனத்தில் வந்து வாசஞ்செய்கின்றோ மென்றும், தங்களுடன் இரண்டு அமைச்சர்கள் வந்திருக்கின்றன ரென்றும். அவ்வமைச்சர்கள் கனி, கிழங்கு முதலானவற்றைக் கொண்டுவரச் சென்றிருக்கின்றார் களென்றஞ் சொல்லி, மனங் கலங்கி கல்லுணர்ச்சியினைப் போக்கி, விழிகளில் நீர்பெருக்கித் தேகமுழுவதும் வியர்த்துத் துக்கசாகரத்தில் மூழ்கி, ஐயையோ! அறுசுவை பதார்த்தங்களோடுங் கூடியுண்பதற்கு மகாயோக்கியதரமான உணவைப் பாகத்தோடு செய்துவைத்தாலும், அதினிலொரு இரசசந்தப்பினல் மீட்டும் அதனையுண்ணச்சகியாதவர்களுக் கனி, கிழங்கு, காய் முதலானவற்றை யுண்ணவு நேரிட்டதே யென்றும், சப்பிரகூட மஞ்சத்தில் மல்லிகை, முல்லை, இருவாட்சி முதலான மலர்களைப் பரப்பிக் குளிர்ந்து பரி

மலிக்கின்ற பனீரைத் தெளித்த சயனத்தின்மீது இளந் தென்ற லானது கவரிகளே நிகர்த்து மெல்லவீச, நித்திரைசெய்கின்றகாலத் திலும் அச்சயனஞ் சரீரத்தை யுறுத்துமாயின் நித்திரை கொள் ளாது மற்றொரு சயனத்திற் பள்ளிகொள்பவர்க்கு இம்மணற்பரை யிற் சயனிக்கவு நேரிட்டதே யென்றும், சந்திர விம்பத்தினைப் போற் பிரகாசித்துக் குங்குமம், கஸ்தூரி, புனுகு, சவாதுமுதலான கலவைச் சேற்றினைப் பூசிக்கொண்டு பரிமள மிகுந்த புட்பமாலை களைத் தரித்து, இந்திரனுக்கண் டேடக்கங் கொள்ளத்தக்க போகங் களே யனுபவித்துவந்த இவ் புடல், இப்போது இவ்வகைப் பொல் லாப் பெருநோயிற் பொருந்தியழியுமாறு நேரிட்டதே யென்றும் இதுகாறும்முனிவர், அந்தணர், பெரியோர், மன்னவர், சுற்றத்தார் முதலானவர்களோடு கால்வகைச் சேனைகளும் புடைசூழத் தகுதி யான அளவற்ற செல்வங்களே ஐம்புலாதிகளுக்கும் விருந்தூட்டி இவ்வுலகதனை அரசாட்சி செய்துவந்து, இக்காலத்தில் அவ்வர சாட்சி முதலான செல்வங்களே விடுத்து இக்காட்டில் வந்துவாசஞ் செய்ய நேரிட்டதேயென்றும், இன்னு மிவ்வாறு அநந்தவிதமாகச் சொல்லித் துக்கித்தனள் யானத் துக்கத்தினே யெல்லாங் கேட்டி ருந்தபடியால் எனது முக மதனுக்கிரங்கி வாட்டங் கொள்ளும்படி நேரிட்டதென்றனன்.

அதைக் கேட்ட பிருகுமுனிவர் மனமிரங்கி அருள் சுரந்து, புத்திரனே! அவர்க ளெங்ஙன மிருக்கின்றார்கள். நீபோ யிங்ஙன மழைத்து வரக் கடவையென்று கட்டளையிட்டனர் உடனே சிவ ணன் அதிவேகத்துடன் அவர்களிருக்கின்றவிடத்திற்சென்று அவர் களைக் கண்டு, என் தந்தை யுங்களைக் கிருபையோடும் அழைத்து வருமாறு கட்டளையிட்டா ராதலால், நீங்கள் விரைவி லெழுந்து வரக்கடவீர்களென்று மிகுந்த சந்தோஷத்துடன் கூவிப் பிரயாண ப்படுத்தித் தான் முன்னதாக நடந்தான். அரசன், சுதன்மை, இர ண்டு மந்திரிகள் ஆகிய நால்வரும் அவன் பின்னர் நடந்து அத்திய ந்த சந்தோஷங்கொண்டு, அப்போதே வியாதி நீங்கிவிட்டதாகவெ ண்ணிப் பிருகுமுனிவருடைய ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

அவ்வாசிரமத்திற் புலியானது தன் பாலை மான் கன்றுகளுக் கூட்டுவிப்பதும், யானையானது சிங்கத்தின் முதுகிலிருக்கின்ற மயி ரைக்கோதிச் சிக்கறுப்பதும், பாம்புகளுக்கு மயில்கள் இரை தேடி வந்து கொடுப்பது மாகச் சகல ஜீவராசிகளும் ஒன்றுக் கொன்று

பகையில்லாமல் உறவாடிக் கொண்டிருந்தன. அன்றியும் மழைக் காலமென்று அதிக மழை பெய்வதும், அஃதில்லாத காலமென்று பெய்யாம லிருப்பது மின்றி, சூரிய னெக்காலத்தும் ஒரே விதமாகக் கிரணம் பரப்புவதும், தென்றற்காற்று மிதமிஞ்சி வீசாதிருப்பதும், பனி அதிகரிக்காது சொரிவது - வசந்தருது - கிரீஷ்மருது - வருஷருது - சரருது, ஏமந்தருது - சிசிருது என்கின்ற * அறு வகை இருதுக்களுங் காலவேற்றுமை யில்லாமல் எக்காலத்தும் ஒரே படித்தாக விளங்குவது மாக விருத்தலால், சகலமான விருக்ஷங்களுங் கொடிகளும் புற்களும் எக்காலத்துந் தளிர்த்தும் பூத்தும் காய்த்தும் பழுத்தும் வருகின்ற வளமையை யுடைத்தா யிருந்தன. இத்தன்மையவான பெரு மிதங்களை அரசன் முதலிய நால்வருங்கண்டு மிகவும் ஆச்சரியங்கொண்டு, அளவற்ற முனிபுங்கவர்கள் பிரமதேவனுக்குச் சமானமாக வெண்ணிப் புடைசூழ்ந்திருக்கப் பிருகு மகாமுனிவர் புனிததோலாசனத்திலெழுந்தருளியிருப்பதை நோக்கி, தத்தம் பெயர்களைச் சொல்லிச் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து இரு கரங்களையுஞ் சிரமேற் கூப்பி, அருந்தமுறை துதிசெய்து நின்றார்கள, பிருகு முனிவர் அவ்வரக்குத் தக்க ஆசீர் வசனங்கள் கூறித் தமது கிருபா நோக்கத்தினால் அரசனை அண்ணாந்து பார்த்தனர். உடனே அவ்வரசன் அளவளாவிய அன்பினெடு மீளவும் பணிந்தெழுந்து கடலுண்டுவந்து பெய்கின்ற மேகம் போலக் கண்களினின்றும் ஆனந்த நீர்த் தாரைகளைச் சொரிந்து; சரீரமெங்கும் உரோமாஞ்சிதங் கொண்டு, நெட்டுயிர்ப்புற்று, வியர்த்து, வெங்கனற்பட்ட வெண்ணெய்போ லுருகி சுவாமி! அடியேன பூர்வசன்மத்திற் செய்தன வெல்லாந் தீவினையே யென்றும், அத்தீவினைபால் இவ்வுடலில் இத்தன்மைத்தான பொல்லாத துன்பத்தை யநுபவிக்கப் பெற்றே னென்றும் இதுகாறும் யோசித்திருந்தேன். இன்று யோசிக்கு மிடத்தில் அடியேன் செய்தவெல்லா நல்வினையே யென்றும், இக்நோயானது தேவரீருடைய திவ்விய சரணார விந்தங்களைச் சேவிக்குமாறு எனது பிடரியைப் பிடித்துத் தள்ளுவதற்கான ஒரு முன்னிலை யென்றுந் தெரிந்து கொண்டேன், பின்னுந் தேவரீருடைய கிருபாதரிசனத்தை இத்தினத்திற் கிடைக்கப் பெற்றே னதலால், அடியேனுடைய இம்மை

* இலையே இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என்ச் சித்திரை முதல் இரண்டிரண்டே மாதம் ஒன்றுமி வரும்.

மறுமை உம்மை என்னு முச்சனனங்கட்குஞ் சுத்த பஞ்சேந்திர முண்டாயது. அடியேன் செய்த தவங்க ளெல்லாஞ் சித்தியாய்விட்டன, அடியேனுடைய கல்வியுங் குலமும் அடையத்தக்க பயன்களை யடைந்தன, அடியேனே யின்ற பிதிரர்களும் நல்லபேற்றினையடைந்தார்கள், கற்பகவிருட்சத்தை யடைந்தார்க்கு என்ன குறையிருக்கின்றது, அதுபோலத் தேவரீருடைய பாதார விந்தத்தை அடுத்து ளேற்கு இனி யொரு குறையுண்டாகுமோ? இச்சனனத்தில் அடியேன் செய்த பாவங்க ளொன்றேனும் காணேன, முற்சனனத்தில் என்ன பாவங்கள் விளைந்திருக்கின்றனவோ அவைகளை யறிந்திலேன், மறு சனனத்திற்கும் கற்கதிபை யடைய வொட்டாது இவ்வியாதி வந்து எனது சரீரத்திற் சம்பவித்திருக்கின்றது. இதுநீங்கு மாறு அளவிறந்த ஔஷதங்களைப் புசித்தேன், அளவிறந்த மந்திரங்களை யதுட்டித்தேன் அளவிறந்த தானங்களைச் செய்தேன், அளவிறந்த தவங்களை முடித்தேன், இது காறும் இவ்வியாதியென்னை நீங்காமல் நாளுந்நாள் அதிக உபத்திரவத்தையும் விசனத்தையும் வர்த்தி செய்து வருகின்றது, இனி இவ்வியாதியானது தேவரீருடைய கிருபையினுற் றீரவேண்டுமன்றி மற்ற மணி மந்திர ஔஷதாதிகளாற் றீர்வதில்லை, மேலும் தேவரீருடைய ஆஜ்ஞா மத்திற் பலவகைப்பட்ட பிருகாதி சென்துக்க ளெல்லாம் ஒன்றுக் கொன்று பகையின்றி உறவு கலந்திருத்தலினல் தேவரீரை யடைந்த அடியேனையும், இனி இவ்வியாதி தீண்டப்படுத்தாமல் என்னைவிட்டு நீங்கு மென்பதற்குச் சந்தேகமில்லை, என்றிவ்வாறு அளவிறந்த துதிகளைச்செய்து நின்றனன்.

அவை யணைத்தையும் பிருகு முனிவர் கேட்டு மீளவும் அவ்வரசனைக்கிருபையோடும் பார்த்துச் சற்றுநேரந் தியானித்திருந்து, தமது ஞானதிருஷ்டியினல் அவன் அவ்வியாதியை யடைந்த காரணத்தைத் தெரிந்து கொண்டு அரசனே! நின்மல சொரூபியாகிய கடவுளனுக்கிரகத்தினல் உனதெண்ணம் நிறைவேறுகின்றது இனி உனது மனத்தி லிருகுகின்ற வியாகூலத்தை யொழித்துவிட்டுநிமிகவும் வழிகடந்த இளைப்பால் வாட்டமுற் றிருக்கின்றனை யாதலால். விரைவில் அதனை யூற்றிக்கொள்ளுக வென்று திருவாய் மலர்ந்தனர். அவ்வாக்கினை யவரருகில் நின்ற சீடர்கள் குறிப்பால் அறிந்து அரசன் முதலாயினோரை உள்ளே யழைத்துக் கொண்டு சென்று பலசுகந்த புஷ்பங்களா லூட்டப்பட்டிருக்கின்ற தைலங்களைக் கொண்டு ஸ்நானஞ் செய்வித்துக் கைப்பு - தித்திப்பு - புளிப்பு-

உவர்ப்பு-துவர்ப்பு - கார்ப்பு - என்னும் அருவகைச் சுவைகளோடு உண்டல்-தின்னல்-நக்கல் பருகல்-என்னு நால்வகை * உண்டிகளை யும் ஊட்டுதல்செய்து, அளவற்ற அன்போடும் உபசரித்தார்கள். அதனால, அவ்வரசன் முதலிய நால்வரும் இளைப்பாறி யதிக மகிழ்ச்சியுற்றிருந்தார்கள்.

பிருகுமுனியை யடித்தபடலம் முற்றிற்று

இருவகைவினையு முரைத்தபடலம்.

என்றுமா தவர்கேட்ப விருந்தவத்துப் பிருகுவின்பா
லன்றுவேற் கரத்தரச னடித்ததுரைத் தவனவற்குத்
துன்றுதீ வினைநன்மை சூழ்ந்துரைத்த வவ்விரண்டு
மின்றுசூ றுவன்முறையே யெனச்சூத முனியியம்பும்.

இவ்வாறு சனன வாதையினை வேரோடுங்களையவல்ல அப்பிருகு முனிவருடைய பேரருளைப்பெற்ற 'அரசனுனவன் அன்றிரவெல் லாம் ஆனந்த நித்திரைசெய்து மறுநாள் உதய காலத்தி லெழுந் திருந்து, நித்திய நியமங்களை நிறைவேற்றி ஐம்புலன்களையு மொரு வழிப்படுத்தித் தவசிரேஷ்டராகிய பிருகு முனிவருகில் வந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, இரு கரங்களையுங் குவித்து அவ ரது அருணோக்கத்திற்கு நேராக அந்த முறை துதித்து நின்ற னன். அத்தருணத்தில் விநாயகக் கடவுளுடைய திருவடித் தாம ரைகட்கு அன்பு செலுத்துகின்ற அப்பிருகு முனிவானவர் அர சனை வருத்தி வாட்டுகின்ற நோயினை நீக்கி அவனை யாட் கொள்ளு மாறுலோசித்து ஓர் சிறந்த ஆசனத்தி லிருக்கச் செய்து, அவன் முற்பிறப்பிற் செய்திருக்கின்ற கல்வினை தீவினைகளை யெடுத்து ணர்த்த எண்ண முற்றவராகி முன்னர் அவன் தீவினைகளை விளம்பு வதாயினர். சோமகாந்த ராஜனே? நீ முற் சனனத்தில் விந்த பர்வ தத்தின் சமீபத்திற் கொல்லமென்னும் பட்டினத்திற் சிதம்பரூப ரென்னும் வைசியனுக்கும். சுலோசனையென்னும் அவன் மனைவிக் கும் புத்திரனைச் சனித்துக் காமந்தனென்னும் பெயரை வகித்து, நல்லயௌவன காலத்திற் குடிமபினி யென்பவளை விவாகஞ்செய்து

* அவை சோறுமுதலிய உண்டல் கறிமுதலிய தின்னல். தேன் மூத லிய நக்கல். நீர் முதலிய பருகல் என வறிக

ஏழுபிள்ளைகளையும், ஐந்து பெண்களையும் பெற்று வாழ்ந்திருக்கின் றகாலையில், உனதுதாதை விருத்தாப்பியத்தை யடைந்து இகலோ கவாசையை யொழித்தனன். உனது தாயும் உடனே அதுமரணஞ் செய்தனள்.

அப்பால் உனக்குப் புத்தியுரைக்கத் தக்கவர்களில்லாமல் நீ வேசையர் மையலில் வீழ்ந்து, அவர்களுக்காகப் பெரியோர்களாற் சேகரித்து வைத்த பொருள்களை யெல்லாமழித்தனை. இது தருமமல்ல வென்று மணியாபரணவள் பலவாறு சொல்வதையுங் கேளாமல், ஆபரணங்கள்-வீடுகள் நிலங்கள் முதலானவைகளையும் அவர் கட்கு விற்றுக் கொடுத்தனை பின்னர்க் கொடுத்தற்குப் பொருளில்லாமற் றரித்திரனுகிச் சிறிதுகாள் யாசகஞ்செய்து பொருள் சம்பாதித்துக் கொடுத்தனை சிறிதுகாள் பொய்சாட்சி, கோள், அசத்திய முதலானவைகளைக் கூறி அவைகட்கேற்ற கூலிகளை வாங்கிக் கொடுத்தனை. சிறிதுகாள் சூதாட்டினுலுங் களவாட்டினுலுஞ் சில பொருள்களைச் சேகரித்துக கொடுத்தனை சிறிது காள் ஸ்திரீகள் கைகளிலணிந்த சூடகங்களையும், கால்களிலணிந்த பாடகங்களையும், காதிலணிகின்ற குழைகள் முதலான ஆபரணங்களையும் வழியினின்று பறித்துக்கொடுத்தனை பின்னும் பரஸ்திரீகளைப் பலாத்காரமாகப்பிடித்து அவர்கள் கற்பைகெடுத்தனை. இத்தன்மையன அளவற்ற பொல்லாங்குகளைச் செய்து காமாக்த காரத்திற் சூழன்று, யாவருந் தூர்த்தனென்றுசொல்லியஞ்சத் தக்கவனுகித் திரிகின்ற காரணத்தால் உனது மணியாகிய குடும்பினி யென்பவள் தண்ணைப் பாது காப்பவ ரொருவருமின்றி; மனந் தளர்ந்து பசியால் வருந்திப் பலகாள் புசிப்பின்றிப் பட்டினி யிருக்கச் சகியாத வளாய், தனது தாய்வீட்டைச் சேர்ந்தனள்.

பின்னர் நீ அங்ஙகரிற்றனே இருந்து கள்ளுண்டு, களித்தாடித் தலைகால் தெரியாமல் மனதிஷ்டப்படிக் கெல்லாம் அளவற்ற தீங்குகளை நடத்திக்கொண்டு வந்தனை. இங்நடத்தைக ளணைத்தையும் அங்ஙகரத் தரசன் கேள்வியுற்று உன்னை யங்ஙகரத்தி னின்றுந் தூரத்தி பின்னர்விட, நீகாட்டிற் சென்று. கள்ளர்களுடன் கூடிக் கொண்டு, அவ்வழியிற் போகின்றவர்களையும் வருகின்றவர்களையுங் கொலைசெய்து கொள்ளையிட்டு மிருக்கங்கள்-பட்சிகள் முதலானவை களைப் படையினுற்கொன்று பக்ஷிதர கின்று திரிகின்றகாலத்தில், ஒருநாள் அம்மார்க்கமாகக் கணவர்த்தனென்னும் ஒரு பிராமணன்

வர அவணீ நீ பார்த்தவுடன் பொருக்கென் றெழுந்து எதிர்சென்று மறித்து அவன் கைகளைச் சேரப்பிடித்துக் கொல்ல வெத்தனித் தணீ. அப்பிராமணன் உண்மைக் காண்டலும் எமதூதணீக் கண் டாற்போல நடுங்கிப்பயந்து, பெருமூச்சுவிட்டு, அப்பா! நான் அந் தணன் என்னைக் கொல்லலாமா? நான் வைத்திருக்கிற்ற பொருள் களையெல்லாம் ஒளிக்காமற் றருகின்றேன். என்னைக் கொல்லாமல் மாத்திரம்விட்டுவிடு முன்பொரு கன்னிகையைக் கல்யாணஞ் செய் தேன். அவள் புத்திரப் பேறில்லாமல் இறந்துவிட்டாள். பிதிர் கரு மங்கட்குப் பிள்ளை வேண்டுமாதலால் இப்போது இரண்டாவது கல்யாணஞ செய்திருக்கின்றேன் அவ்வனிதையோ இன்னும் புத் திரர்களைப் பெறமாட்டாத பருவத்தினளா யிருக்கின்றனள். அவ ளுக்கென்னைவிட ஆதரிக்கத்தக்கவர்கள் ஒருவருமில்லை கண்டீனே! எனது பிராணணை உன தடைக்கல மாக்கினேன். யான் தருகின்ற திரவியங்களை வாங்கிக்கொண்டு என்னைக் கொல்லாமல் உயிர்ப் பிக்கை தந்துவிடல் வேண்டுமென்று மேலும் மேலும் பிரார்த்தித் துக்கொண்டனன். அதற்கு நீ கொலை களவு-கள்-காமம் - பொய் என்கின்ற பஞ்சமா பாதகங்களிலே ஒன்றையும் விடாது செய்கின் றவ ளுதலால் அப்பிராமணன் சொல்லைக் கற்பாறை மீதுதாக்கிய கோடாலி யெனத்தள்ளி, சற்றேனு மனதிரங்காமல் உனதுக்ஷத் தின்படி அவணைக் கொன்று விட்டனை. உடனே உன்னைப் பிரமஹத் திபிடித்துக் கொண்டு அனந்த வுபத்திரவங்களைச் செயதுவர, அத னல் ஒருநிமிடம் ஒருகமாகக்கழிதற்குப்பல துன்பங்களையநுபவித்து வந்தணீ. இத்தன்மைத்தான துன்பத்தோடு வருந்தி யிருக்கின்ற காலத்தில் ஒரு புண்ணியப் பலனுங் கிடைக்கப் பெற்றணீ அப்புண் ணிய பலதாலல்லவா? இச்சனனத்தில் இப்பூவுலகத்தை யாள்வ தான அரசுரிமையைப் பெற்றணீ யென்றனர்

இவ்வாறு சொல்லிய பிருகு முனிவரை மீளவும் அவ்வரசன் பணிந்தெழுந்து அப்புண்ணியத்தையுஞ் சொல்லவேண்டு மென்று விண்ணப்பஞ செய்து கொண்டனன் அதற்குப் பிருகு முனிவ ரிசைந்து அரசனே! நீ முற்கூறியவண்ணம் அபபிரமகத்தி பாவத்தி னற் பல துன்பங்களை யநுபவித்து வனத்திற் சஞ்சரித் திருக்குங் காலையில் உனக்கு நடுக்கம, இளைப்பு, கபம், காச முதலான வியாதி கள் சேர்ந்து வயது முதிர்ந்து சவரட்சணை செய்வதற்கான துணை வர்கள் ஒருவரு மில்லாமல் மிக்கதுன்பத்தினை யநுபவித் திருக் கின்ற தருணத்தில் நீஉன்மனைவியை நினைத்து அவளிடத்திற்கொரு

தூதுவனேயனுப்பினே. அத்தூதுவன் அவ்வாறே இராக்கொண்டு சென்றுநீதனியா யிருந்துபடுகின்ற துன்பங்களனைத்தையுஞ்சொல்லினன். அவற்றை உன்மனேவி முதலான மற்றை யாவர்களுங் கேட்டுப்பயந்து இக்காரணம் அரசனறிவானேயின் நம்மெல்லாரையும் ஒருசேரவதைசெய்யத் துணிகுவ்னென்று நடுங்கி அத்தூதுவனேப் பார்த்து நீ இவ்வார்த்தைகளே யெங்கும் வெளியிடாமல் விரைவிற் செல்லக்கடவை யென்று பயமுறுத்தியனுப்பினர்

அதனே யத்தூதுவன்வந்து சொல்லக்கேட்டு இனி யாதுசெய்யக்கடவோ மென்று துன்பமுற்றிருக்குங் காலேயில் முற்பிறப்பிற் செய்த கல்வினேப்பயனது உன்னே நெருங்கிவருங் காரணத்தால் அவ்வழியிற்செல்லுகின்ற ஒருவேதியன் உனதுவரலாறு இன்னதென்றறியாதவனுயுன்னேவந்து யாசித்தான் அவ்வேதியனுக்குநீ ஆடையாபரணமுதலிய திரவியங்களேக்கொடுத்துமீட்டு மவனேப்பார்த்து இன்னும் பிராமணர்களே யழைத்துவருவையாயின் அவ்வவர்கட்கு வேண்டுமட்டுந் தானஞ்செய்கின்றேற னென்று சொல்லினே, அவ்வந்தணன் அவ்வாறே பல ஆசிரமங்களிற்சென்று ஆங்காங்கிருக்கின்ற பிராமணர்களேக்கூவி, ஆடையாபரண முதலான திரவியங்களே ஒருவன் தானஞ் செய்கின்றன். நீங்கள்பாவரும் விரைவில் வாருங்கள் வாருங்களென்று அழைக்க அவ்வேதியர்கள் நீயென்றறியாது அப்பிராமணன் வழிகாட்டியபடி உன்னிடத்திற்கு வந்தார்கள் நீயவர்களேக் கண்டவுடன் மிகவும் பயபக்தியோடு வணங்கினுயாயினும் அவ்வேதியர்களுன்னேப்பார்த்து உன்னே இன்னனென் றறிந்துகொண்டு மனவருத்தமுற்று நகைத்து உன்னேப் பாவியென்றறியாமல் அப்பிராமணன் சொன்ன வார்த்தையைக் கேட்டல்லவோ இங்குவரலாயினேம் ஐயா! பாதகங்களனத்தையும் விடாமற்செய்த மகாபாவியாகிய உன்னே அடுத்தவர்கள், கண்டவர்கள், உன்பெயரைக் கேட்டவர்கள், உன்பெயரைச் சொன்னவர்கள், உன்னேயாசிப்பவர்கள் முதலான யாவர்களும் தீவினேக்காட்டி லகப்பட்டுப்பின்பு நரகக்குழியி லமுந்தி வருந்துவார்களே, ஆயினும் உனக்குத் தருமஞ்செய்யக் கருத்திருக்குமாயின் இவ்வனத்தில் நிர்மலமூர்த்தியாகிய விநாயகக் கடவுளாலய மொன்று அடிமுதல் முடிவரையிற் செடிகண் முதலானவைகளால் மூடப்பட்டுக் கிலமடைந்திருக்கின்றது. அவ்வாலயத்தைப் புதுக்கக்கடவையென்றுசொல்லி, அவ்வவர்களாசீர்மத்திற் சென்று உன்னேக்கண்ட பாவநீங்குமாறு ஸ்நா

னஞ்செய்து செபதபங்கள் முதலானவற்றையுஞ் செய்து பரிசுத் தராளர்கள்.

பின்னர் உன்னே மனேவி முதலாயினர்'வெறுத்துக்|கைவிட்ட தையும் அப்பிராமணர்களுன்னேப் பாவியென்று கழித்ததன்றிசெ ய்யப்புகுந்த தருமத்தையு மேற்றுக்கொள்ளாமற் சென்றதையும், உன்னேப் பல துன்பங்கள் நேர்ந்து வாட்டுவதையும், நீயே எண்ணி யெண்ணி யேக்கமுற்றுச் சகல ஆபத்துக்களேயும் விலக்கி இரட் சிப்பவர் விக்கின கருத்த ராதலால், அக்கடவுளுடைய ஆலயத்தைக் கட்டுவிப்பதைவிட மேலான தருமம் ஒன்று மில்லே யென்று நிச்ச யித்து, அதுவரையிற்பல துன்மார்க்க விஷயங்களாற் சேகரித்து வைத்திருந்த பொருள்களே யெல்லாம் எடுத்துக் கொண்டு பழுது பட்டிருக்கின்ற விநாயக ராலயத்திற்கு மிகுந்த பத்தியுடன் வந்து, அவ்வாலயத்தில் அநாதியா யெழுந்தருளி யிருக்கின்ற கணேசமூர்த் தியைத் தரிசித்து உனது மனக்கவலே யெல்லாம் வாய் விட்டரற்றி, அநந்தமுறை சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து, ஆனந்த பரவச முற்று, ஆடிப்பாடி, சிறந்த கம்மியர் முதலாயினேரை வரவழைத் துச் சொன்னத்தாற் கர்ப்பக்கிருகஞ் செய்வித்து, அதன்முகப்பில் மாணிக்கமுதலிய இரத்தினங்களே யிழைப்பித்து அர்த்த மண்ட பம், மகாமண்டபம், மடைப்பள்ளி, யாகசாலே, ஆகாயதளை யளா வியுயர்ந்தமதில் முதலானவைகளே வெள்ளிமுதலிய உலோகங்களிலும், கருங்கல் - செங்கல் முதலியவைகளாலும், மரங்களினுலும், தெய்வகம்மியர்களுங் கண்டு காணத் தக்கதாகச் செய்வித்து, நாற் றிசைகளினும் நான்குகோபுரங்களேயு மெழுப்புவித்து மாடவீதிக ளேற்படுத்தி, வீடுகள் உப்பரிகைகள் முதலானவைகளே அணியணி யாகக் கட்டுவித்து, ஆலயத்தி னுற்றிசையினு நான்கு தடாகங்க ளேத் தொடுவித்து பொன் வெள்ளி முதலானவைகளால் ஆலயத் திற்குவேண்டிய பாத்திரங்களேச் செய்வித்து, ஆதிசைவப் பிராம ணர்களேக் குடியேற்றி, அவர்களால் விநாயகமூர்த்திக்கு அபிடேக முதலிய ஆராதனைகளேச் செய்வித்து நாடகசாலேயுண்டாக்கி, அதிற் சகல வாத்தியங்களேயு முழக்குவித்து, கணிகைமாதர்களே நடிப் பித்து, யாழ் முதலியவைகளே வாசிப்பித்து, சொன்னத்தாற் செய் யப்பட்டு நவரத்தினங்களா லிழைக்கப்பட்டிருக்கின்ற வாகனங்கள் குடைகள், பல்லக்குகள், இரதங்கள் முதலானவைகளே வரவழைத் து, யாவருங் கண்டு அற்புதம்! அற்புத மென்று கொண்டாடத் தக்க திருவிழாக்களு நடப்பித்தனே, அரச! |இவ்வாறு அளவற்ற

சிறப்புடன் பூசணைகளுந் திருவிழாக்களும் இடைவிடாது நடாத்தி வருகின்ற காலையில், உன்னுடைய வாழ்நாள் முடிவெய்தி இறந்து விட்டனை.

பின்னர், யமதூதருன்னைக் கொண்டுபோய்த் தங்களரசனெதி ரேவிட்டார்கள். அவ்வரசனுகியயமதருமராசன் சித்திரகுப்பதனைக் கூவி, இவன் இதுகாறுஞ் செய்திருக்கின்ற பாவ புண்ணியங்களெ யெல்லாங்கிரமமாகச்சொல்லக்கடவையென்று ஆஞ்ஞாபிக்க, உ டனே அவன்நீசெய்துவந்த துன்மார்க்கங்களெயெல்லாந்தினவரலா றுகவெடித்து மழைபெய்ததுபோல ஒன்றையும்விடாமற்சொல்லிப் பின்னுஞ் சொல்லுவான் தரும பூபதி! இவன் பிறந்த நாட்டொட ங்கி இதுகாறுஞ் செய்துவந்த தெல்லாம் பாவமென்றும், அப்பா வத்தாற் சம்பாதித்ததிரவியங்களைக்கொண்டு அந்தியகாலத்தில் வி நாயகக்கடவுளுடைய ஆலயத் திருப்பணி செய்தானென்றுஞ் சொ ன்னன் இவையனைத்தையும் யமதருமராசன் செவியுற்றுச் சற்று நேரமாலோசித்துப பஞ்சுமலிதலில் ஓழற்பொறி பட்டதுபோல, இவனிதுகாறுஞ்செய்துவந்த தீவினைகளனைத்தையும் விநாயகக்கட வுளின் ஆலயத்திருப்பணிசெய்து பெற்றபேற்றினாலொழிந்து போ யின ஆயினும் இவன பூவுலகின்கண் மீளவும் உற்பவிக்கவேண்டு மென்று யோசித்து ஞாபரென்று திரும்பி, உனது முகத்தைப் பார்த்துச் சொல்லுவான். நீ அளவிறந்த பாவங்களைச்செய்து உன் னைந்திபகாலத்தில் ஓரற்பமானபுண்ணியமொன்றைச்செய்திருக்கின் றபாதலால், முன்னர் உனக்குப் பாவத்திற்கேற்ற பலனையநுபவிக் கவேண்டுமா வென்று கேட்டான். அதற்கு நீ இளகிய கெஞ்சினுல் முன்னர்ப் புண்ணியப் பயனை யநுபவிக்க வேண்டுமென்று சொல் லினை. அவ்வாறே யமதருமராசன் சம்மதித்து உன்னைப் போகும் படி உத்தரவு செய்தான். ஆதலால் நீ இப்பூவுலகத்தில் அரசனுகப் பிறந்து நல்வினைப்பயனை முன்னநுபவித்து, பின்னர் இவ்வியாதி யாற் தீவினைப்பயனை யநுபவிக்கின்றனை. இத்தீவினைப்பயனு மொ ழியுமாறு நீ அவ்விநாயகக் கடவுளையே போற்ற வேண்டுமென்று சொல்லினர்.

முற்றத் துறந்த நிற்கு முனிவர்களே! காமந்தனென்னும்பெ யரைப்படைத்தற் கேற்றபடி காமாந்தகாரனுகத்திரிந்து அளவற்ற பாதகங்களை நாடோறுஞ்செய்துவந்து, இறக்குங்காலத்திற்செய்த

வொரு புண்ணியத்தினால் அப்பாதகங்கள் குறைந்து பின்னிடப் பெற்றனவின், விநாயகக்கடவுளைச் சதாகாலமுஞ் சிந்திக்குந் தன் மையை யுடையவர்கள் எவ்வளவு பேற்றைப் பெறமாட்டார்கள்.

இருவகைவினையுமுரைத்த படலம் முற்றிற்று.

சோமகாந்த ரைய்தீர்ந்த படலம்.

இருவினை பிருகு வெண்போ னெடுத்தியம் பியது சொற்ற
முருவவார் சடையீர் மன்ன னுருக்கிளர் குட்ட நோயை
யருளினன் முனிவன் சீறி யகற்றிய தறிக வென்னத்
தெருளுறு சூத மேலான் சிக்தையின் மகிழ்ந்து கூறும்.

முனிவர்களே! இப்பால் இவ்வளவுகருணையாடும்பிருகுமுனி வரருளிச்செய்த வுண்மையிற் சோமகாந்த ராசனுக்குகிச்சயந்தோ ற்றுமல் சந்தேகங்கொண்டனன் உடனே அவன் சரீரத்திலிருந்து ஆயிரம் வலியபன்பட்கிகள் தோன்றி வச்சிரத்தால் வடித்து வைத்த தற் கொப்பா யிருக்கின்ற மூக்குகளினுற் றெழுநோய்கொண்டசரீ ரத்தையெல்லாங் குத்திக்தைகளே யெல்லாம் பிடுங்கித் தின்றன. அதனுல் அரசன்மிகவும்பயந்து அவ்வுபத்திரவத்தைச்சகிக்கமாட் டாது வருத்தங் கொண்டு பிருகுமுனிவருடைய பாதத்தில் அடிய ற்றமரம்போல் வீழ்ந்து; ஓமேலான தவசிரேஷ்டரே! அபய மப யம் அடியேனுக்குத் தேவரீரை யன்றி வேறு கதியில்லை அபய மப யம் தேவரீரென்னைக் கைவிட்டாலும் உமது திருவடிகளை விட்டு நீங்கேன் அபயமபயம், மகாதவக்குன்றமே! குளிர்ந்த கிருபாசமுத் திரமே! ஓ தயாநிதியே! ஓ ஞானசூரியரே! ஓ புண்ணிய மூர்த்தியே தேவரீரைத் தியானஞ் செய்கின்றபேர்கள் எவ்வளவு தூரத்திலிருக் கினும் அவர்களை யமனுமணுகமாட்டானே; அத்தன்மைத்தான தேவரீர் திவ்விய சமுகத்திற்கு எதிராகநிற்குமென்னை அவ்வலியன் கூட்டங்கள் சின்ன பின்னப் படுத்துவதைப் பார்க்கவில்லையோ தே வரீருடைய ஆசிரமத்தில் எக்காலமும் பறவைகளு மிருகங்களும் பகையில்லாமல் உறவுபெற்று விளையாடுகின்றனவே, தேவரீருடைய திருவடிகளைச் சேர்ந்திருக்கின்ற அடியேன் மாத்திரம் இத்துன்பத் தை யடைந்திருப்பது நீதிதானே? மகாமேருவைச்சார்ந்த காகமும் பொன்னிறமாகின்றதே, அடியேன்படுகிற துன்பத்தை நீக்கி யாட்

கொள்ளாதிருப்பது தேவீருடைய கிருபைக்குத் தக்கதா என்றிவ் வாறு அனந்தமுறை ஓலமிட, அவ்வரசன் தேவியாகிய சுதன்மை யானவள் திடுக்கிட்டுப் பிருகுமுனிவரைச் சாஷ்டாங்கமாகப் பணி ந்து தேக மாத்தியந்தமும் நடுக்குற்று விழிகளினின்று நீர்த்தாரை களைச் சொரிந்து இரண்டு கரங்களையு மேந்தி எங்கள் மனோரதங் களை ஈடேற்ற வெழுந்தருளியதயாநிதியே! அடியாட்குமாங்கல்லிய பிச்சை தந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனள். இரண்டமை ச்சசர்களுங் கீழ்விழுந்துநமஸ்கரித்து, எமக்குஅன்னையும்பிதாவு மா யெழுந்தருளியகருணைந்தமூர்த்தியே! அரசனைவலியன்பக்ஷிக ளெல்லாங் கூடிவதைக்கின்றனவே, அவைகளைவிலக்கியாட்கொள்ள வேண்டாவோவென்று அரற்றினர்கள். அருகிலிருக்கின்ற மற்ற மு னிவர்களும் பயந்து, ஆ ஆ சுவாமீ! இதென்னபாவம். இப்பக்ஷிகள் செய்யுங்கொடுமையைப் பார்க்க இரண்டு கண்ணுங் கூசுகின்றதே. என்றுமிருந்த இரக்கத்தோடுந் தயருற்றுச் சொன்னார்கள். இவ் வாறு யாவரும்வருந்தி மூறையிடப் பிருகு முனிவர் சோமகாந்த ராசனைப் பார்த்து, அரசனே! யாம் சொன்ன வார்த்தைகளை உண் மையென்று கம்பமற் போயினே யாதலால் உனக்கு இத்தன்மைத் தான துன்பங்கள் நேர்ந்தன. இனியாயினும் யாங்கூறியவார்த்தை களிற் சந்தேகமுறாமல் நம்பக்கடவாய். அதனல்நீயும்புனிதனுகலா மென்று மிகுந்த அன்புடன் அருளிச் செய்து, வலியன் பக்ஷிகளை நோக்கி ஒரு உங்காரஞ்செய்தனர். அவ்வோசையைக் கேட்டவுடம் பக்ஷிக ளெல்லாம் ஆகாயத்திற் பறந்து போய்விட்டன.

பின்னர் அரசனுனவன் பிறகு முனிவருளிச் செய்த தனது பூர்வவிணைகளையெல்லாம் உண்மையென்று நம்பி ஆனந்தங் கொண் டனன். சுதன்மைமுதலிய யாவருந் தங்கள் தங்கள் துயர்நீங்கிச் சந்தோஷமானர்கள். இப்பால் பிருகுமுனிவர் தமதுகமண்டலத்திற் சலத்தைதெளித்து, விநாயகக்கடவுளை மனதிற் றியானித்து, இவ்வர சன் படுகின்ற வியாதியை விலக்கியருளவேண்டுமென்று பிரார்த்தி த்து, அவரது மந்திரத்தை நூற்றெட்டுருச் செபித்து அக்கமண்ட லசலத்தைக் கரத்தில் வார்த்துக்கொண்டு அரசன் சரீரத்திற்றூவி னர் உடனே அவ்வரசன்செய்த பூர்வசன்ம பாதகங்க ளெல்லாம் ஒன்றுகச்சேர்ந்து வோருருவங் கொண்டு நின்றதுபோலச் சிவந்து திரண்டுநீண்டிருக்கின்றகால்களும், நீண்டுதெருங்கிப்பரந்திருக்கின் றமயிர்சடைகளும், மேலெழும்பி வளர்ந்திருக்கின்ற கோரப்பற்க ளும்; நீண்டபாதங்களும், குழிபட்டிருக்கின்ற விழிகளும். இருளை

ப்போன்ற கறுத்த நிறமும், அகன்றவயிறும், ஏழுபணமரங் கொண்ட உயரமும், அவ்வுயர்வுக்குத்தக்க பருமையுமாக ஒரு பூதமானது அவன் சரீரத்தினின்றும் வெளிக்கொண்டு நெறுநெறுவென்று பற்களைக்கடித்துக் கண்கள் புருவத்தின்மேலேற நெறித்து, விழிகளிலிருந்து தீப்பொறிகள் எழும்பிச் சிந்தத்தக்கதாகப் பார்த்துத தோள்களைத் தட்டிக்கொண்டு இடிமுழக்கும்போலக்குரலெடுத்துக் கூவி, அரசனே! முன்னாளிலே உன்னுடைய ஆயுதவல்லபங்களைக் காட்டினீரே. அவ்வல்லபங்களே யிப்போதுகாட்டுவாய் பார்ப்போமென்று அதிகவுக்கிரத்தோடு வாய்விட்டுத் தருக்கியெதிர்த்துநின்றது. இவ்வாறு அப்பூதம் அரசனைத் தொடர்ந்து எதிர்த்து நிற்பதைப் பிருகுமுனிவர் கண்டு உங்காரஞ்செய்து பயமுறுத்தி, அரசனருகிற் செல்லவொட்டாமற்றடுத்துக் கையமர்த்தி, பாரிடமே! நீ யார்? உன்வரலா றென்னவென்று கேட்டனர். அதற்கது சொன்னதாவது சுவாமீ! நான் இவ்வரசனைப் பிடித்திருக்கின்ற பிரமகத்தி தேவரீர் கரங்கொண்டு தூவிய சலத்தினாலே யான் அவனை விட்டு வெளிப்பட்டுவந்தேன். எனக்குமிகப் பசியா யிருக்கின்றது. தேவரீர் கிருபையுண்டாயின், இந்நிமிடத்தில் இவ்வரசனையும் இவன் மனைவியையும் இரண்டமைச்சர்களையுந் தின்று செல்கின்றேனென்று சொல்லி உத்தரவு தரும்படிபிரார்த்தித்தது அதற்குப்பிருகுமுனிவர்வியந்து வலிமையிற்சிறந்த கிருத்திமமே! நீ அவசரப்படவேண்டாம் உனக்குஞ் சுகமுண்டாகுங் காரியத்தையே செய்கின்றேம். அதுகாறும் அம்மரத்தின் பொந்தினுட் புகுந்திருக்கக் கடவையென்று தம்மெதிரிலோங்கித் தழைத்திருக்கின்ற ஓர்மாமரத்தைக் கரத்தாற் சுட்டிக்காட்டினர். அவ்வாறே அப்பூதமானது பொந்தினுள் நுழைந்து புகுதலும் அப்பூதமும் மாமரமும் ஒன்றுகவெரிந்து சாம்பராயின.

பின்னர், அப்பூதசரீரத்தினுளிருந்த ஆன்மாவானது மகாதிவ்வியசரீரத்தோடும் ஒருதேவரூபமாகிப் பிருகுமுனிவருடையசரணாரவிந்தங்களில் நமஸ்காரம்புரிந்து கிருபாமூர்த்தியே! இப்பாவிமூற்காலத்தில் என்னை ஆயுதத்தால் மாய்த்துவிட்டான். அந்தத்துர்மரணத்தினால் ஒய்வில்லாமல் மிக்கதுயரத்தைப் பெற்றிருந்த வெனக்குத் தேவரீர் தரிசன விசேடத்தால் நற்கதிகிடைத்ததென்றுசொல்லிநிற்கும்போது, விநாயகமூர்த்தியினுடைய கட்டளையினால் ஆகாயத்தினின்றும், ஒரு தெய்வவிமானமிறங்க, உடனே அவ்விமானத்தில் தேவசரீரம் பெற்றிருக்கின்ற அப்புருடனைவனேறிக்கொண்டு

ஆகாயமார்க்கமாகப் போய்விட்டனன். அவ்வற்புதங்களெல்லாங் கண்டு ஆனந்தபரவசராகித் தீவினைகளெல்லாங் கடியவல்லபிருகு முனிவருடைய திருவடிகளைப்பலமுறை பணிந்து துதித்திருந்தார் கள். இப்பால்பிருகுமுனிவர் சோமகாந்தராசனைப் பார்த்து அரச னே! இதுகாறும் உன்னைத் தொடர்ந்திருந்த பிரமகத்திவிலகிப்போ னதைக்கண்டீனை. இனிஉனது சரீரத்தைத் தொடர்ந்திருக்கின்ற, தொழுநோய் நீங்குவதற்கான நிறத்தையுஞ்சொல்லுவோம்கேட்டக் கடவாயென்று திருவாய் மலர்ந்தருளுவ தாயினர் அரசனே! மூன் றுநேத்திரங்களுள்ள வேழமுகப் பெருமானுகியும், எண்ணமுழுமை யும் ஆட்கொள்ளத்தக்க இறைவனுகியுமிருக்கின்ற விநாயகக்கடவு ளுடைய புராணத்தைக்கேட்பையாயின் சகலதுன்பங்களும்உன்னை விட்டொழியும். அன்றியும் யான் அப்புராணத்தை கேட்டிருக்கி ன்ற மகிமையினல் என்னையடித்த உன்னுடைய தீவினையும் விலகிப் போயது இனி அவ்விநாயக புராணகதைக் கேட்டாலன்றியித்தொ ழுநோ யுன்னைவிட்டுநீங்காது அவ்வியாதிக்கு அதைவிடமேலாகிய ஔடத மொன்றுமில்லை மகத்துவமுள்ள இப்புராணத்தை முற்கா லத்திற் பிரமதேவர் சிவபெருமானு லுப தேசிக்கப் பெற்று, வேத வியாசமுனிவருக் கருளிச்செய்தனர்

அவ்வேதவியாசர் நமக்குபதேசித் திருக்கின்றார் மேலும் பூர் வத்திற் கைலாசபதியாகிய சிவபிரானீர்கித் தங்கன்யாகஞ்செய்த போது, அப்பரமசிவத்தினுடைய கோபாக்கினியினின்றுத் தோன் றிய வீரபத்திரமூர்த்தியினல் அவன் யாகமழிவுற்றுச்சகலதுன்பங் களையு மடைந்தனன் பின்னர் அவை நீங்குமாறு அத்தக்கன் முற் கல முனிவரை யடைந்து அவர் திருவடிகளைப் பணிந்தபக்திசெய் து வந்தனன். அதனுல அம்முனிவருக்கு மனமிரங்கி விநாயகரு டையமகத்துவங்களை யுபதேசித்தனர் அவைகளை அத்தக்கன்மிக் கபத்தியுடனேகேட்டு வந்த பலத்தினுலே சகல துன்பங்களுநீங்கிச் சந்திரசடாதாரக்கடவுளாகிய சிவபெருமானது கிருபைக்குப் பாத் திரனுகி, அதிக மகிழ்ச்சியை யடைந்திருந்தான். ஏழு பிறவிகள் தோறுஞ் செய்து வந்த பாவங்களை யெல்லாம் ஏககாலகதி லொழி ப்பதும், சரீரத்தி லுண்டான வியாதிகளைப்போக்கி வேண்டியவரங் களை யளிப்பதும், நாளுக்குநாள் நூதனமான உயர்ந்த சுகங்களைத் தருவதும், இம்மையிற்றவங்கள் முதலியவைகளைச் செய்யும்படி கூ ட்டுவித்து மறுமையில் முத்தியைக் கொடுத்து இரட்சிப்பதும், அவ் விநாயகமகத்துவத்தின் கேள்வியேயன்றி அதனின் மிக்கது வே

றென்றுண்டோ? அந்தணர், அரசர், வைசியர், சூத்திரர் என்னும் நால்வகைவருணப்களுக்குஞ்கூறியிருக்கின்ற * ஒழுக்கங்களிற்றாழ்வில்லாதவர்களாகியும், பிரமசாரிஇல்வாழ்வோன்-வானப்பிரத்தன்-சந்நியாசி எனனு நால்வகை யாச்சிரமங்களுக்குமுரியவாகச்சொல்லப்பட்டிருக்கின்ற ‡ நன்னிலைகளிற் றவறுதவர்களாகியும் உள்ள சான்றோர்களே அவ்விநாயக மகத்துவத்தைப் பத்தியோடு கேட்பார்களன்றி மற்றையர்கள்கேட்கமாட்டார்கள். கேளாதவர் தங்கள் பிறப்பினும் வருணத்தினுஞ் சரியாகின்று என்ன வொழுக்கத்திலிருந்தாலும் அவர்கள தாழ்ந்தவர்களே யன்றி உயர்ந்தவராகார்கள்.

ஆதலால் அநேக தவங்களைச் செய்து உயர்ந்தவருணத்திலும் நல்ல ஆச்சிரமத்திலு மிருந்து அவர்களுடைய தருமங்களிற் குறைவின்றி நடந்து விநாயக மூர்த்தியினுடைய திருவடிகளே மிகுந்த அன்போடு துதிசெய்யத்தக்கவர்களுக்கே அம்மான்மியத்தை யுபதேசிக்க வேண்டுவதல்லது, மற்றையோர்க்கு உபதேசிக்கத் தக்கதன்று. நீயதனைக்கேட்பதற்கு யோக்கியனதால் அதனையுனக்கு பதேசிக்கின்றேம் நீஸ்நானஞ்செய்துவரக்கடவையென்று ஆஞ்ஞாபித்தனர். இவையனைத்தையுஞ் சோமகாந்தராசன் செவிக்கமுதமாகக்கேட்டு, ஆனந்த பரவசங் கொண்டு, உடனே பிருகுதீர்த்தத்தையடைந்து அதை மும்முறை வலம்வந்து நமஸ்கரித்துப் பின்னர் ஸ்நானஞ்செய்து, நித்திய நியமாதிகளைக் கிரமப்படி முடித்து, விநாயக மகத்துவங் கேட்பதற்குச் சங்கற்ப மோதினன். அந்நிமிடத்தில் அவ்வரசன் சரீரத்திலிருந்த தொழுநோய் மாய்ந்து விட்

---

* அந்தணரொழுக்கமாவது:—ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் எனவாறும். அரசரொழுக்கமாவது:—ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படை பயிற்றல், பொருதல், எனவாறும். வைசிய ரொழுக்கமாவது:—ஓதல், வேட்டல் பொருளீட்டல், ஈதல். பசுக்காத்தல், எருழல் எனவாறும் சூத்திர ரொழுக்கமாவது:—ஓதல், முன்னவர்க் கேவல்செய்தல், பொருளீட்டல், உழுதல், பசுக்காத்தல், வேட்டல், எனவாறும்.

‡ பிரமசரிய நிலையாவது:—ஆசாரியரிட்டதோதி, விரதங்காத்து விவாகமின்றி யிருத்தலும், விவாகஞ்செய்துகொள்ளலுமென விருவகையர். அவர் முறையே கூட்டிகண், உலகுருவாணன் எனப்படுவர். இருகத்த நிலையாவது இல்லறத்தின் வழாது இல்லாளோடுங் கூடிவாழ்தல் வானப் பிரத்தநிலையாவது இல்லக்துறந்து இல்லாளோடாயினுந் தனித்தாயினும் வனத்திற் றவஞ் செய்தல் சந்நியாசநிலையாவது முற்றத் துறத்தல், இவற்றின்விரிவுளையெல்லாங் கூர்மபுராணத்திற் காண்க.

டது. இவ்வாறு வியாதி மாய்ந்து போகலும், அரசன் தனது சரீரத்தைப் பலமுறை பார்த்து ஆனந்தித்து இரவெல்லாந் தியசொப்பனங் கண்டவனுக்கு விழித்தபின்பு எவ்வளவு மகிழ்ச்சியுண்டாமோ அவ்வளவு மகிழ்ச்சியை யடைந்து பிருகு முனிவரிடத்தில் வந்து அவரைச்சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்துசுவாமீ! தேவரீர்கிருபை அடியேற்குக் கிடைத்ததினாலே அடைதற்கரிய பலன்க ளெல்லாம் எளிதிலடையப் பெற்றேன்

அன்றியுஞ் சுவாமிகளிடத்தில் புராணங்கேட்பதற்குச் சங்கற்பமோதிய மாத்திரத்தில் அடியேனை வருத்தியிருந்த வியாதியொழிந்து போய்விட்டது இவ்வற்புதத்தினை யான் என்னென்றுசொல்லமாட்டுவேன். கிருபாமூர்த்தியே, தேவரீரை யடுத்தவர்கட்குக்கிடைக்காதபொருள் சுவர்க்கமத்திய பாதலமென்கின்ற மூவுலகங்களினுமில்லை. ஊரற்று, உறவற்று, மகனற்று, மனையற்று, நாடற்று, நகரற்று, அழகான தேகமற்று, அருமையான போகமற்று, தடாகக்கரையிற் றுன்புற்றிருந்த எளியேனை இங்ஙனம வருமாறுகிருபைசெய்து மகா அற்புதமான சுகத்தைக் கொடுத்தருளிய தேவரீருக்கு யானுதவத் தக்கபொருள் என்னிலிய தன்றி வேறொன்றுமில்லை. இனிமேல் சுவாமிகள் அருள்சுரந்து விநாயக புராணத்தைத் திருவாய் மலரவேண்டு மென்று பிரார்த்தித்தனன். அதனை யன்னைக் கொப்பாகிய பிருகுமுனிவர் கேட்டு மனமிரங்கி, அவனை யருகில் அழைத்துத் தமதுதாமரை மலர்போன்ற திருக்கரத்தினால் அவனுடைய சரீரத்தைத் தடவித்தமது சிறந்தஆசனத்தி லொன்றை யவனுக்குக்கொடுத்து அதில் வீற்றிருக்கச் செய்தனர். பின்னர் அப்பிருகுமுனிவருடையதிருக்கரத்தாற் சரீரத்தைத்தடவிய மகத்துவத்தினாலும் அவராதனத்தினாலிருந்த மாட்சிமையினாலும், அவ்வாசன சரீரமானது முன்னிருந்தகாந்தியினு மிகுந்தகாந்தியை யுடைத்தாயது அவ்வற்புதத்தைக் கண்டவர்களெல்லாம் அதிக ஆச்சரியம் அடைந்தார்கள். தக்கசாகரத்தின் மூழ்கியிருந்த சுதன்மையும் அமைச்சர்களும் தேவாமிர்தம் புசித்தவர்கட் கொப்பாக ஆனந்தித்தார்கள்.

சோமகாந்த னெய்தீர்த்த படலம்

முற்றிற்று.

வியாசமுனி

பிரமதேவனை யடித்தபடலம்.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

என்று சால மொழிந்த சூதன் வியாத னென்னு மிருந்தவற்
கன்று வேத னுரைத்த வாறறி வாபெ னப்பிரு குப்பெய
ரொன்று மாமுனி சோம காந்த னுவப்ப வோதிய வண்ணமே
நன்று றும்வர லாற்றி னேதுத ஞடி னாரு னீடிஞன்.

சௌநகாதி முனிவர்களே! இப்பால் பிருகு முனிவர் கிருபை கூர்ந்து அரசனே! முன்னொரு காலத்தில் சுவாக்க மத்திய பாதலங்களில் அமர்ந்த பிராணிகள் செய்த பிரார்த்தனை கன்மசம்பந்தத்தினால் அளவுபடாத தேவதைகளனைத்தும் ஆதியந்த பதக்கிரமங்கள் தடுமாறிச் சிந்தின அக்காரணத்தினால் விண்ணவர், தவத்தர், மானிடர் முதலாயினோர்க்கு அறிவு விளங்காமல் வேதவாய்மைகளினின்றும மாறிப் பல துராகிருதியங்களை யநுபசரித்து அதற்கடுத்த சில மோகன சாதத்திரங்களை யுண்டாக்கிப் பூவுலகத்தின்கண் முக்கியமாக வழங்குகின்ற தருமங்களனைத்தும் கொடிய பாசபந்த வினையென்று நீக்கிய பாதகங்களுக்கேதுவாகிய மார்க்கங்களை உறுதியாக வெண்ணிச் சகலரு மவைகளைத் தொடாதபடி செய்து வந்தனர் அதை விண்டுவும் பிரமனும் கண்டு பரமசிவ கடாட்சமில்லாது இந்த மாறுபாடு நீங்காதென்று நிசயித்து இந்திரன் முதலான தேவர்களுடன் திருக்கைலையைச் சேர்ந்து முதல் வாயிலிற் றமதாணையை செலுத்திக் கணங்கள் போற்ற வீற்றிருக்கின்ற நந்திதேவரைப் பணிந்து எங்கள் வரவைச் சிவபிரானுக் கறிவிக்கவேண்டுமெனப் போற்றினர். அதற்கவர, கிருபைகூர்ந்து அவர்களை யவ்விடத்தில் நிறுத்தி, கர்த்தனை நிருச்சந்திதானத்திற் சென்றுவணங்கிக் கேசவன் முதலாயினோர் வரவை விண்ணப்பஞ்செய்து அருமதிபெற்றுவந்து, உங்களைச சபைக்கு அழைத்துவருமாறு பரமசிவங் கட்டளையிட்டருளினரென்றனர் அவ்வுறுதிமொழியை அவர்கள் அமிர்தமாகக் கேட்டு ஆனந்த பரவசராய்ச் சிவகணங்கள் காவல்கொண்டிருக்கும் பலவாயிலகளைக் கடந்து திரிசூலத்தை தாரியாகிய சிவபெருமானைத் தரிசித்தவுடன் விழிகளில் ஆனந்தவாரி பெருக, திருவடிகளிற் கற்பகமலரைச் சொரிந்து தீர்க்கதண்டன் சமர்ப்பித்துப் பலமுறை போற்றிக் காங்களைக் கூப்பிக் கர்த்தன் கிருபாலோக்கத்தைப்பெற்று, கட்டளையிட்டவாறே தத்தமக்குரிய விடங்களிலிருந்தனர்.

பின்பு சிவபிரானவர்களேநோக்கி, துங்கள் செய்கைகள் குறை வற நடந்துவருகின்றனவா வெனறுவினவ, கேசவன் எழுந்து துதித்துத் தேவரீர் திருவுளப்படிக்கு அடியேங்கள் விருத்திகள் சிதைவின்றி முற்றுகின்றனவாயினும் பூமியின்கணிராகின்ற தீபாதனர் முதலாயினோர் சிலமோகனசாத்திரங்களிற் பட்டுத் தேவரீரைப்பரமென நினையாது தமது கட்டளையின்படி நடாத்தி வருகின்ற என்னையும் பிரமணியுங் கடவுளாகக் கருதித தொழுகின்றனர் சிலர் மற்றைய தேவர்களுடன் தேவரீரைச் சமமாகத் துணிவுற்றிருக்கின்றனர் சகல கருமங்களைக் கடந்த ஆதிமூர்த்தியு முண்டோவெனச் சிலரவமதிக்கின்றனர் கடவுள் வேறில்லை காங்கற்ற சாஸ்திரவுணர்ச்சியே நித்தியமெனச் சிலர் பாஷிக்கின்றனர் சிலர் ஆகமவிதிப்படி விபூதி உருத்திராக்கங்க ளணிவதை மறந்து தங்களுக் கிஷ்டமான குறிகளைத் தரிக்கின்றனர சிலர் உண்ணல், உடுத்தல் புணர்தல், களித்தலென்னும் இவைகளன்றி வேறெரு நமுதநியு மிருக்கிறதென்பது அஞ்ஞான மெனவும் நினைகின்றனர். இவ்வாறு பற்பல விதங்களிற் சகலரு முயன்று பிறவிச்சாகரத்தைக் கடக்கு முண்மையினை யறியாது உழன்று வேதாகம வரம்பைக் கடந்து பல நெறிகளை முக்கியமாகத் தொடர்ந்து தீவினைகளிற் படர்ந்து அலைந்து மயங்குகின்றார்கள். இவைக ளணைதறிந் தேவரீர் திருவுள்ளத்திற்கு விளங்கியிருபபனவாயினும் அடியேங்கள் அரிக்தவறை விண்ணப்பஞ்செய்தனம். இதனைத் திருவுளத்திற் கொண்டு எங்களுக்காக இரக்கமுற்றுச் தேவராகிகள் மையலீக்கி முமுட்சுக்களாய்த தேவரீர் பாத கமலங்களைக் கருதி மோட்ச வீட்டினைச் சேருதற்கு நிருபை செய்யவேண்டு மென்றிரந்தனர்

அவைக ளணைத்தையும் எமது கர்த்தன் செவிசாய்த்து விண்ணவே! உனது கலைகளில் ஒன்றைக்கொண்டுபூமியின்கணவதரித்துப் பலவாறு மாறுபட்டிருக்கின்ற வேததங்களைச் சேகரித்து அவைகளை நான்குவகைப்படுத்தித தகுதியான இருடியர்களுக்கு அவைகளைப் போதித்து அவ்விருடியாகளால் ஆன்மிகாடிகளது சிற்றுணர்வை மாற்றிப் புனிதராக்கக் கடவை அன்றியும் அவைகளை யோதப் பெறுத சூத்திராதிபர்கள் எளிதின் முத்திபெறத் தக்கதாகவே தன் கட்டு முரதி விதிக்கப்பட்டதாப் * ஆகமமென்று மீருள்ள ஒரு

* ஆகமம் இருபத்தெட்டாவன:—காமிகம், யோகசம், சிந்தியம், அதிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரமம், அஞ்சுமான், சுப்பிரபேதம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சர்வோத்தம், சந்தானம், சக்திஞானம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், முகவிம்பம், பாரமேசுரம், கிரணம், காரணம், விசயம், வாதுளம் என்பனவாம்.

சாத்திரமிருக்கின்றது அஃது நமதுபெருமைகளையே முக்கியமாக விளக்கும். மேலும் வாசித்தவர்களைப் பவித்திரமாக்கவல்ல பதினெண் புராணங்களுள் அவைகளை நந்திக்கருளி யிருக்கின்றனம். அவன் சனற்குமாரனுக்குவரன்முறையாகப்போதித்திருக்கின்றான். அவனிடத்து அப்புராணங்களை யுணர்ந்து சகலருக்கும் ஓதி அறிவிளங்கச் செய்யக் கடவையென்று அதுக்கிரகஞ்செய்ய, அதற் கிசைந்த விண்டுவானவர் பிரமன் முதலானவர்களுடன் கர்த்தனை வணங்கி விடைபெற்று வைகுந்தத்திற்சென்று, யாவருக்கும்விடை கொடுத்தனுப்பிச் சிலகாலஞ்சென்றபின்பு பூமியின்கண் தவமகிமையையுடைய பராசரமுனிவர் ஒருதினம் பிராதக்காலையிற் கங்கையைக்கடக்க ஓடமேறினவராய், அதைச் செலுத்து மச்சகந்தியினது சுந்தரத்தைக்கண்டு மோகித்து அவளைச் சம்மதப்படுத்தி யோசனைகந்தியாக்கிப் புணர, அக்காலத்தில் அவளுடையகருப்பத்திற் பிரவேசித்துத் தண்டகமண்டலத்துடன் அவதரித்து, அவர்களிடத்திற் செலவு பெற்றுச்சென்று வதரிகாச்சிரமென்னும் வனவாசமே யோக்கியமென் றெண்ணி அவ்விடத் தமர்ந்தார்.

அக்காரணத்தினலவர் வாதராயணரென்னுந திருநாமம்பெற்றுப் பரமசிவகடாக்ஷத்தினல்வேதாகமங்களையொருவரிடத்தேதாதாணர்ந்து, அவ்வேதத்தை நான்குவகைப்படுத்தினர் அப்செய்கையினல் * வேதவியாசரென்னு நாமமும்பெற்றுச் சனற்குமாரருக்-குத்திற் பதினெண் புராணங்களையும் வாசித்துணர்ந்து பின்னர் வேதசாத்திரங்களைப் போலவும் மிருதிபைப் போலவும் பொருள் படத்தக்கதாக வினங்கி யிருக்கின்ற அப்புராணங்களைச் சுலோகமாகச் சொல்லுவதற்கு ஆரம்பித்தனர். அப்போது முன்னர்ச் சிவபெருமான் சகலதேவர்களும் புடைசூழ்ந்துவரத் திரிபுரசங்காரஞ் செய்யப் பிரயாணமான காலத்தில் அவர் தம்மைப்பூசியாது பிரயாணங் கொண்டதனல், அவரதுதேரை முரிந்துபோகும்படி செய்த விநாயகமூர்த்தியை நினைக்காமலும் யாவரும் வழிபடத்தக்க கடவுள் அவரேயென்றும், ஒருவர் தம்மைக்கருதி யெடுத்துச் செய்கின்ற காரியங்களை விக்கினமின்றி நிறைவேற்று விக்குந் தெய்வ மவரேயென்றும், அழிவினுக் கழிவுசெய்யுங் கர்த்தர் யானை முகத்தை

---

* வேதவியாசர்=வேதங்களை நான்காகப் பிரித்தவர். வியாசம் - பிரித்தல், வியாதர் பிரித்தற்கு முன்னர் தைத்திரீயம், தலவகாரம், சாமம் பௌடியம், எனப் பெயர்பெற்றிருந்தது.

யுடைய விக்கினேசுவரரே யென்றும், எவ்வளவுந் தன்மனத்திற் றெளியாமலும் ஆரம்பித்தார்.

அக்காரணத்தால் அவருத்தேசித்த காரியத்திற்கு அவ்விக் கின கர்ச்தருடைய கிருபையில்லாமல் எண்ணியபொருள்களொன் றுந்தோன்றுமலும், நடக்கவேண்டுவது இன்னதென்று தெரியாம லும், ஊமைக்கொப்பாகி மயங்கி நமக்குச் சோக முண்டாயதோ பித்தமுயர்ந்ததோ, அல்லது மற் றெதினுலாயினு மயக்கம் வந்து நோந்ததோ வென்று தெரியாமற் சத்தியலோகத்திற்சென்று பிரம தேவனே அட்டாங்கமாக வணங்கிப பலமுறை வந்திதது நின்றனர். பிரமன் அவ்வேதவியாசருக்கு ஓராதனந்தநது நீரிங்கு வந்தகாரிய மென்னென்று வினவ, சுவாமி! பிரபஞ்சத்தின்கண் சிலர் கடவு ளில்லையென்று சொல்லுகின்ற நாஸ்திகராகியும், சிலர் வேதங்களைப் பழிக்கின்றவர்களாகியு மிருந்து அவ் வவர்கட்குரிய வருணச்சிரம தருமங்களைத்தள்ளி நிலைகுலைத்திருப்பதினுலே, அவைகளையொழித் துச் சீர்திருத்தவேண்டியது. இன்னபொருளாலென்று யோசித்து, அவ் வவர்செய்யுங் காரியங்களில் இது செய்யத் தக்கதென்று அறிந்து நடந்து நற்கதியினை யடையுமாறு உண்மையாய் விளக்கா நிற்கும் புராணங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல யாவர்க்குந் தெளிவாய்த் தெரியும்வண்ணஞ சொல்லவேண்டு மென்று ஆரம்பித் தேன். நித்தியவிதி, நைமித்திகவிதி, விவாகவிதி முதலான சகலவி திகளும் நிறைந்திருக்கின்ற மகா வேதசாகைகளில் மேன்மேலும் வளர்ந்தேறி யிருக்கின்ற வன்புத்தியானதுமழுங்கிப்பித்தங்கொண் டவணப்போ லாயினேன் இதற்கென்னசெய்வேன். யாருகென்ன பிழைசெய்தேனோ? அதனையுந் தெரிகிலேன். என்னை மூடியிருக் கின்ற இவ்வறியாமை யென்னை யகலும் மார்க்கதைத் தேவரீர் சொல்லியருள வேண்டுமென்று விண்ணப்பஞ செய்தனர்.

அவை யனைத்தையும் பிரமன் கேட்டுச் சிறிதுநேரந் தியானித் திருந்து, நடந்த விசேடங்களைத் தெரிந்துகொண்டு புன் சிரிப்போ டும் வேதவியாசரைப் பார்த்து இதனைச்சொல்லுவாராயினர். அகா தியாகியும் அமலமாகியும் அகண்டானந்த ரூபமாகியு மிருந்து, அழிவினுக் கழிவுசெய்யத்தக்க விகாயகக்கடவுளது கிருபை யில் லாவிடில் எவ்வகைப்பட்ட புத்தியும் வல்லபமும் உடையவரானு லும் ஈடேற்றமாட்டாது, சோர்வுற்றுப் போவார்கள். விகாயகக்கட வுளை முதலிற் றுதிக்காமல் அளவற்றபோர்கள் தாங்களெடுத்த காரி

யங்களெல்லாங்கைகூடாமல் இகழ்வடைந்தார்கள். பறவைகளுக்கு அரசனுகிய கருடன் முற்காலத்தில் அமிர்தங் கொண்டு வருவதற் காகச்சென்று கோபத்தினலும் அகங்காரத்தினலும் ஐங்கரக்கட வுளே யகத்திற் றியானிக்காமையால், திருமால் ஒரு சொல்லேக் கொண்டு வாகனமாக்க அவடிக்கீழ்நின்று இன்னமுஞ் சுமந்துகிரி கின்றன். உருத்திரக் குரிசிலின் வீரியத்தினின்றுந் தோன்றிய அநுமனனவன் அவனே முதனினைக்காமையால் முத்தியடையாது, இராமனேச் சுமந்து திரிகின்றன் ஸ்ரீராமனும் முதலில் வாலியுடன் எதிர்த்து யுத்தஞ்செய்யச் சத்தியிழ்றி யொடுங்கி நின்றனன்.

பிரணவத்தை முதலாகவுடைய வேதங்கட்கு நீர்வாம்பு செய் தபோது அப்பிரணவத்தை முன்னே உச்சரிக்காமல் வேதமோது வது வழக்கின்மையாதலினுல், பிரணவப் பொருளா யிருக்கின்ற வி நாயகர் தம்மை அப்பிரணவத்தினுல நீர் தோத்திரஞ் செய்ததாக வுட்கொண்டு இடையூறுகள் சேரவொட்டாது காத்திரட்சித்தார். விநாயகமூர்த்தியினுடைய வுருவமம ஓமென்கிறசொல்லாகவிருந்து சகல இடர்களையுந் தீர்க்கத்தக்க தாகலால் ஆகியில் மகேஸ்வரர் வேதத்தைச் சொல்லுவதற்கு ஆரம்பித்த காலத்தில் தாமெடுத்த காரியம் முழுவதுங் கைகூடவேண்டு மென்றே அப்பிரணவத்தை முதலில்வைத்துப் பின்பு வேதங்களே யோதினர். இவ்வுன்றியும் சக லருந் தாங்கள் முயல்கின்ற மகாகாரியங்கட்கும் இவ்வோங்காரரூபி யாயிருக்கின்ற விநாயகமூர்த்தியைமுதலிற்றோத்திரஞ்செய் யவேண்டிய நியமத்தினே யாவையுமுணர்ந்த பெரியோர்கள் முதலில் எல்லா மந்திரங்கட்கும் இவ்வோங்காரமந்திரத்தையே வைத்திருக் கின்றார்கள் அவன், அவள், அதுவன்னுடன ஆண், பெண் அலியென விருந்துயாவையுஞ்செய்துமுடிக்கின்றவரும், தம்மைநியானித்தவர் களுக்கெல்லாம் அநுக்கிரகஞ் செய்கின்றவரும், அவ்வவர்கள்மனத் திற்கெட்டாத அரும்பொருளா யிருக்கின்றவரும், வேதங்களாலும் அளவிட்டுரைக்கக் கூடாதவரும், இந்திரனும் பிரமனுகியயானும்வி ண்டுவும் உருத்திரரும் மற்றுமுள்ளதேவர்களும் அக்கடவுளுடைய ஆக்ஞேயைக் கடக்கமாட்டாமல் அவருடைய பாததாமரையைத் தோத்திரஞ் செய்து தொழும்படியாகத் தலேமைபெற்றதெய்வமாகி யிருக்கின்றவரும், ஒன்றைச் செய்பவரும், ஒன்றைவிலக்குபவரும், ஒன்றைவிட்டு மற்றொன்றை முடிப்பவரும், தம்மைக் கருதாதவர்க ளுக்கு இடர் செய்பவரும் அவ்விநாயகக் கடவுளேயன்றி வேறெ ருவரில்லே. ஆதலால், அத்தன்மையான முதற் கடவுளே நீ மனத்

தால் நினைக்காமலும், வாயால் வாழ்த்தாமலும், காயத்தால் வணங்காமலும், நமக்கொருவர் நிகரில்லையென்கின்ற வித்தியாகர்வத்தினால் உனது சுயவதிகாரமாகப் புராணஞ் சொல்லுவற் காரம்பித்தனை. அதனால் இவ்வளவு தன்பங்கள் வந்து சேர்ந்தன. இனியேனும் வேழமுகத்தையுடைய விநாயகக் கடவுளைத் தோத்திரஞ் செய்து, பரம கருணைநிதியே! சர்வஜ்ஞ மூர்த்தியே! பரமாநந்தசொரூபியே! யாண்செய்த அபசாரத்தைப் பொருத்தருள வேண்டுமென்று பூசை செய்யக்கடவாய். அவ்வாறுசெய்யாமல் உனது சுயாபேட்சையால் ஒரு புராணத்தைத் செய்யத் தொடங்குவையாயின் ஆயிரங்கோடி கற்பகாலமாயினும் ஒரு பாயிரமேனுஞ் சொல்லி முடிக்கமாட்டாய். அன்றியும், அவருடைய மந்திரங்களாகிய,

சுமுகரே யேக தந்தரே கபிலர் சூழ்ந்த கன்னரே நாக
மிமிழ்தரு மிலம் போதர ரெறில் விகட நிலகிய விக்கினராச [யக்க
ரமைவர்சூழ்ந் தேத்துங் கணநிதிப் தூம கேது நன்றருள் கணநத்தி
ருமிழொளிப் பால பந்திரா தான மூற்றிரு நெடுமுங்கரா னனரே.

வக்கிர துண்டர் வங்கிய சூர்ப்ப கன்ன ரேரம்பர் வான்வ ரங்க
டொக்கருள கந்த பூர்வச ரெனவே சொல்லிய பெயர்பதி னறு [ச
மிக்குரைத்திடினுங் கேட்பினுன்னித்தவிவாகம்வேட்டெழும்பிரவே
நிங்க மடுபோர் யாகமா திகளு நினைக்குமுன் முற்றுறும் பிள்ளாய்.

ஓம் சுமுகாயநமः, ஓம் ஏகதந்தாயநமः, ஓம் கபிலாயநமः, ஓம் கஜகர்ணிகாயநமः, ஓம் லம்போதராயநமः, ஓம் விகடாயநம. ஓம் விக்கினராஜாயநமः, ஓம் கணநிபதியேநமः, ஓம் தூமகேதுவேநமः, ஓம் கணாதியக்ஷாயநமः, ஓம் பாலசந்திராயநமः, ஓம் கஜாநனாயநமः, ஓம் வக்கிரதுண்டாயநமः, ஓம் சூர்ப்பகன்னாயநமः, ஓம் ஏரம்பாயநமः, ஓம் ஸ்கந்தபூர்வஜாயநம என்கிற சோடநாமங்களே மாத்திரம் முதலில் வாக்கினுல் வசனித்தாலும், செவியாற் கேட்டாலும் வித்தை, விவாகம், சுபம், சோபனம், யாகம், யுத்தம் இவை முதலான சகல காரியங்களும் நினைக்கு முன்னரே கைகூடும். ஆதலால் அவ்விநாயகக் கடவுளைப் பூசனைசெய்து உமதறிவை மறைத்திருக்கின்ற மயக்கத்தைத் தீர்த்துக் கொண்டு நீரெடுத்த காரியத்தை நிறை வேற்றிப் புகழடையக் கடவீரென்று சொற்றனர் என்று பிருகு முனிவர் சோமகாந்த ராஜனுக்கு உபதேசித்தனர்.

வியாசர் பிரமணியடித்த படலம்

முற்றிற்று.

வியாசர்

உபதேசம் பெற்ற படலம்.

இதமலர்த் தவிசன் வீற்றிருந்தருளு மிறைவனே வியாதமா
முனிமுன், கதமெனவடுத்த வாறினிச்சோம காந்தனே யான்முனி
தனக்கு, விதுவணி சடிலத் தைங்கரப் பெருமான் வியத்தரு மந்தி
ரஞ் செவியின், வதிதரப் புகன்ற மரபுவே ளென்று வழங்குவன்
பிருகுமாதவனே.

சூதமுனிவர் சொல்லுகின்றார். முனிவர்களே! பின்னு மவ்வரச
ணைப்பார்த்துப் பிருகுமுனிவர் கூறியவை யென்னென்றால், வேத்த
னே! வேதவியாசர் இவ்வளவும் உண்மையேயென்று மனமகிழ்ந்து
மீட்டும் பிரமதேவரைப் பணிந்தெழுந்து சுவாமி! பிரணவ ரூபமா
யிருக்கின்ற அக்கணபதி மூர்த்தியைப் பூசனை செய்யத்தக்க முறை
மை எவ்வாரென்று கேட்டனர். அதற்குப் பிரமனிசைந்து வியாச
முனியே! கணேசாகமத்திற் சத்தகோடி மகாமந்திரங்கள் சொல்லப்
பட்டிருக்கின்றன. அந்தச் சத்தகோடி மகாமந்திரங்களினும் சடாக்
கர மந்திரஞ் சிறந்ததாகும் அச் சடாக்கர மந்திரத்தினும் ஏகா
க்ஷர மந்திர மேலாயதாகும். அவ்வேகாக்ஷர மந்திரத்தை உனது
மையல் நோய் நீங்கும்படியாகச் சொல்லுவோம் நீ தடாகத்தில்
சென்று ஸ்நானஞ் செய்து வருவாயாக வென்றனர். அவ்வாறே
ஸ்நானஞ்செய்து வந்தவுடன் பிராமணருக்கு ஆகமவிதிப்படி செய்
யுந்தீட்சை முதலியவைகளைச் செய்து அவ்வேகாக்ஷர மதுவையுப
தேசித்து அம்மகாமந்திரத்தைத்தியானிக்கும்படி தியானமுறைமை
யுந் தெருட்டிப் பின்னுஞ்சொல்லுவார். பராசரனுமைந்தனே! ஊறு
பாடில்லாத உத்தமத்தானத்திலிருந்து மந்திரஜலத்தினுற்புரோக்ஷித்
துப் *பூதசுத்தி முதலானவைகளைச்செய்து, அகம்புறமாகியவிரண்
டினுள்ளும் †நியாசஞ்செய்து ‡பிராணயாமத்திலிருந்து இம் மந்தி
ரத்தைத் தியானிக்கக்கடவாய். இம்மந்திரஞ் சித்தியாக வேண்டு
மெனில், இதற்குரிய கணேசமூர்த்தியினதிருவுருவத்தையெல்லா
மனதிற் றியானித்து அந்தரியாக பூசை செய்யக்கடவாய்.

---

* பூதசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி, திரவியசுத்தி, ஆன்மசுத்தி என்பனவாம். † நியாசம் அங்கத்தைத் தொடுதல் ‡ பிராணயாமம்-பிராண வாயுவை, ஆயாமம் நிறுத்தல். $ சாந்திகாசார்யர் கடவுளும் புண்ணியபாவமுஞ் சுவர்க்க நரகமும் இல்லையென்பார்.

வியாசர் உபதேசம்பெற்ற படலம்.

இவ்வாறு தினந்தோறும் பூசனைசெய்து மேற்சொன்ன மந்திரத்தை உமது சத்திக்குத்தக்க உருச் செபித்துக்கொண் டிருப்பீராயின் எங்கும் பரிபூரணமாயிருக்கின்ற விநாயக மூர்த்தியானவர் உன்னெதிரில் நருவங்கொண்டு அநந்தகோடி சூரிய ருதயமானது போலப் பிரத்தியக்ஷமாகிச் சோதிமயமாயிருக்கின்ற தமது தரிசனத்தைக் கொடுத் தருளுவர். நீ அப்போது மனவுறுதி பெற்று மிருந்த அன்பு பொங்கத துதித்து நமஸ்காரஞ் செய்து சுவாமி! அடியேன் மீது கிருபை புரிந்து இரட்சிக்க வேண்டு மென்று பல முறைவஸ்திப்பா யாஞல் சேய்க்குத் தாயிரங்குவதுபோல உனது தோத்திரங்கட்கு மனமிரங்கி அருள் சுரந்து நீகேட்ட வாங்களெயெல்லாம் வரையாது கொடுத்தருள்வர் இவ்வாறு பூசனை செய்து இம்மந்திர சித்திபெற்றவர்கள், சகல வியாதிகளும் நீங்கத்தாங்கள் முயன்ற கருமங்களெல்லாம் இடையூறின்றி நிறைவேறப் பெற்று அங்கை நெல்லிக் கனிபோல அளவற்ற சித்திகளையடைந்து ஆணவ மலசம்பந்தத்தையொழித்து, அருள் வடிவாயிருந்து, சிவன்முத்தியென்கின்ற மேலான பேற்றினையடைந்து, தேவர்களெல்லாம்புடை சூழ்ந்து வணங்கத்தக்க பரமானந்த சுகத்திற் கற்பகோடிகாலம் வாழ்ந்திருப்பார்கள் விநாயகக்கடவுளைப் பூசனை செய்கின்றவரை விரும்பாமல் காண்கின்றவர்களும். அவர்கள் குணங்களைக் குறித்து வசனிக்கிறவர்களும், அவர்களுடன் அன்போடு கூடுகின்றவர்களும் மற்ற யாவர்களும் இம்மைமுதலிய முப்பிரிவுகளினு நற்கதியடையப்பெறுவார்கள் கடவுளில்லையென்று சொல்லுகின்ற * நாத்திகர்கள், ஒழுக்கமில்லாதவர்கள், துஷ்டர்கள் சோரர்கள் முதலானவர்களை நினைத்தவர்களுக்கும இம்மகா மந்திரத்தை. உபதேசிக்கத்தகாது உபதேசிப்பாராயின் அவர்கள் இரௌரவம், கும்பிபாகம், கூடசாலம், செந்துதானம், பூதி, மாபூதி முதலிய கொடிய நரகங்களிற் சதாகாலமுமிருந்து வருந்துவார்கள்.

வணக்கம் அன்பு-அருள்-ஆசாரம்-வேதாகம நெறிகளிற் றவறுதலொழுக்கம்-நல்லோரிடத்திணக்கம் மந்திர முபாசிக்கவேண்டுமென்னும் ஆசை இவைமுதலான நன்னடைகளுள்ள * ஆத்திகர்களுக்கு உபதேசிக்கவேண்டுமாயின் கிரமப்படி தீக்ஷைசெய்து

---

* ஆத்திகர்—கடவுள் முதலிய புணடு என்பவர் அதனை "பொன்னுலகம் வெற்காகம் புண்ணியபாவம்புரிவார் - தின்மலனு முண்டென்ற நிச்சயித்தா—ரிற்றிலைமை-யாத்திகரே யார்கண்டா ரம்மைப் பலாமென்பார் - நாத்திகரென் தேயுன்துணுமே. "என்றதனு னறிக.

உபதேசித்தல் வேண்டும். இவ்வாறு பக்குவாபக்குவங்களை யறிந்து உபதேசித்தவர்களும், உபதேசிக்கப் பெற்றவர்களும், அளவற்றகாலம் பேரின்ப வீட்டைத் தமக்குக் காணியாக்கி யாகக்கொண்டு வாழ்வார்கள்! இப்பூசாவிதியை முன்பு சுக்கிர சடாதர மூர்த்தியாகிய சிவபெருமான் என்பீதகிருபைசுரந்து உபதேசித்தமுறைமைப்படியே உமக் குபதேசஞ் செய்தோமென்றனன் இவைகளணுத்தையும் வியாசமுனிவர் செவிகுளிரகேட்டு சகலதுயரங்களையுநீக்கிப் பின்னும் பிரமதேவனைத் தோத்திரஞ்செய்து சுவாமி! இதற்குமுன் இப்பூசனைசெய்து பேறுபெற்றவர்களுடைய சரித்திரங்களும் அடியேற்கருளிச்செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தனர் தாமரைமலர் ஆசனஞ்சிய பிரமதேவன் மனவிரக்கங் கொண்டு வியாசமுனிவரே! தேவர்-தானவர்-சித்தர் முனிவர்-நாகர்-இயக்கர்-சாரணர்-விஞ்சையர்-கின்னரர் மனிதர்-முதலான அநந்தம் பேர்கள் விநாயகபூசை செய்து பேறுபெற்றிருக்கின்றார்கள் அவர்களுள் யாமறிந்த வரையிற் சிலரது சரித்திரங்களைச் சொல்லுவோங் கேளுமென்று கல்லு மிரும்புங் கசிந்துருகத்தக்கதாய் கரும்புந்தேனுங் கலந்ததுபோலக்கிருபையோடுஞ் சொல்லுவான்

பின்னர்த் தங்கள் பரப்பிரம சொரூபியாகிய விநாயகமூர்த்தி பெருமை விசுவரூபங்காட்டி பதும், பிரமதேவனுடைய தான் பின்னர் உலகசிருட்டிசெய்ததும், கணேசமூர்த்தி சித்திபுத்தியென்னும் பெயர்களைத் திருமணஞ் செய்ததும், விட்டுணு சடாக்கர மந்திரமநுட்டித்து மது கைடவர்களை வென்றதும புத்திரப்பேறு வேண்டி வனத்திற் சென்றவீமராசன் விசுவாமித்திர முனிவரை யடித்ததும், மூற்கலமுனிவரது வடிவினின்றும் படிந்துவந்தகாற்றினல் தக்கன்பிணி நீங்கியதும், அத்தக்கனுக்கு மூற்கல முனிவ ரூபதேசித்ததும்,விநாயகமூர்த்தி வல்லாளன் வேதனையை விலக்கியதும், அவ்வல்லாளன் முத்தியடைந்ததும், தக்கனராசாட்சிபெற்றதும் விசுவாமித்திரமுனிவர் வீமராசனுக்குபதேசித்ததும் உருக்குமாங்கதராசன் சாபம் பெற்றதும், நாரதமுனிவர் அவ்வுருக்குமாங்கதராசனுக்குச் சாபத் தீர்வு கூறியதும், கௌதமமுனிவரால இக்கிரன்பூசித்து வரம்பெற்றதும், வீமராசனும், அவன் குமாரனுகிய உருக்குமாங்கதராசனும் முத்தியடைந்ததும், கிருச்சமதமுனிவர் தமது தந்தையிடத்திலுபதேசம்பெற்றதும், அக்கிருச்சமதமுனிவர் உபாசித்து வரம் பெற்றதும், திரிபுரன்பூசித்து வரம்பெற்றதும், அத்திரிபுரன் மூவுலகத்தினையும் அரசாட்சிசெய்ததும், அவனழியும் படியாகத் தேவர்கள்

பூசித்ததும், அதனிமித்தஞ் சிவபிரான் வரம்பெற்றதும், அச்சிவபிரான் திரிபுரதகனஞ்செய்ததும், உமையம்மைபர்வதராசனிடத்திற் சதுர்த்திவிரதங் கேட்டதும், பின்னர் அவ்விரதத்தை யநுட்டித்ததும் கர்த்தமகாராசன் பிருகுவாகியகும்பமிடத்தில் அவ்விரதத்தைக்கேட்டு உபாசித்ததும், களமகாராசன் கௌதமமுனிவரால் உபதேசிக்கப்பெற்றுப் பூசித்ததும், சதுரார்ங்கதமகாராசன் அநுட்டித்து முத்தியடைந்ததும், சண்முஞ்ர் வர்துதித்துத் தாருகாசுரனை வென்றதும். மன்மதனருச்சித்து உருவம் பெற்றதும், ஆதிசேஷனாதித்து வரம்பெற்றதும், சூரசேனமகாராசன் இந்திரனைக்கண்டு புருசண்டிமுனிவர் மகத்துவங்கேட்டதும், புருசண்டிமுனிவர் சங்கடசதுர்த்திவிரதத்தைபநுட்டித்ததும், கிருதவீரியமகாராசன்புத்திரப்பேறுவேண்டி வனத்திற்சென்று தவம்புரிந்ததும், அங்காரகன் சங்கட சதுர்த்திவிரத மநுட்டித்ததும், சந்திர னுபாசித்துச் சாபந்தீர்ந்ததும் தூர்வை மகத்துவத்தால் * லிடைகரம் புலீச்சி ஆகியவிம்மூன்றும் விடிற்றதும், கணேசமூர்த்தி அனலாசுரனைவிழுங்கிய வெப்புநீங்கும்படி தேவர்கள் தூர்வையருச்சனை செய்ததும் விநாயகமூர்த்தி தூர்வை யாசகஞ்செய்து பல வற்புதங்களை நடாத்தியதும், வன்னிமகத்துவத்தால் ஓரக்கனும் கிராதனுமுத்தியடைந்ததும், விண்டு † வாமனவதாரத்தில் வன்னி யருச்சனை செய்து மாலியை வென்றதும், கீர்த்தியென்பவள் வன்னிமகத்துவத்தால் மகப்பேறு பெற்றதும், அர்த்தக்கீர்த்தியின்மகன் வன்னிமகிமையால் விடம்நீங்கியதும், சமியென்பவரும் மந்தார னென்பவனும் வன்னியு மந்தாரமுமாக வற்பவித்ததும், தேவர்கட்குச் சாவித்திரியிட்ட சாபத்தை அத்தேவபத்தினிகள் வன்னியருச்சனையா லகற்றியதும் கிப்பிரசாத மகாராசன் வன்னியையருச்சித்து வரம்பெற்றதும், கிருதவீரிய மகாராசன் சங்கடசதுர்த்திவிரத மநுட்டித்து மகப்பேறுபெற்றதும், ஓர்புலீச்சியின் பார்வையால் இந்திரவிமானம் விண்ணிலெழுந்ததும், சூரசேனமகாராசன் சங்கடசதுர்த்திவிரத மநுட்டித்து முத்திபெற்றதும், பரசுராமன் சிவபெருமானிடத்திற் சடாக்கரமந்திரதத்தை உபதேசம் பெற்றுப் பூசித்ததும் ‡ இராவணன்

* லிடை—இடபம் கரம்—கழுதை. † வாமனம்—இரண்டடிக்குறன்உருவம் ‡ இராவணன்—அழுதலேச்செயபவன் அதனை "ஆயிரம் பருவமில்வாற முதலா வாக்கர் கோனுச்-சேய்வுற லியம்பு காம மிராவணனென்றகூறி" என ப் புராணசந்தினமாலிய கூர்மபுராணிங் கூறுமாற்று னறிக.

உபாசித்துத் தான்செய்த அபசாரத்தை நீக்கிக்கொண்டதும், அகத்தியமுனிவர் வந்தித்துத் தமது கமண்டலத்திற் காவேரிதீர்த்தத்தையடைந்ததும், காசிபர்முதலாயினோர் சகத்திரகாமத்தாலருஞ்சித்துப் பல வரங்களைப் பெற்றதும் ஆகிய இச்சரித்திரங்களையெல்லாம் விவரமாகச்சொல்ல வியாசமுனிவர் சிரவணனந்தமாகக் கேட்டு மீளவும் பணிந்தெழுந்து சுவாமீ! இன்னுஞ் சிலசரித்திரங்களை அடியேற்குத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தனர்.

அதற்குப் பிரமதேவ னிசைந்து வியாசமுனிவரே! பரம கருணாநிதியாகிய விநாயகமூர்த்தியானவர் அந்தந்த யுகங்களோறும் உலகங்களில் வெவ்வேறு திருவுருவங்கொண்டு, வேதாகம நெறிகளிற் பிறழ்ந்துநடக்கின்ற துட்டர்களையெல்லாம் மறக்கருணையாற் றண்டித்துந் தமது திருவடிகளை வழிப்பட்ட அன்பினர்க்கு அறக்கருணையால் அநுக்கிரகித்துமிருக்கின்ற திருவிளையாடல்கள் அளவற்றனவாகும். அவைகளுள் முன்னொருகாலத்திற் சிவபெருமான் சுப்பிரமணியமூர்த்திக்குச் சில திருவிளையாடல்களைத் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றனர். அவைகளையுஞ் சொல்லுவோங் கேட்பீராக வென்று பிரமதேவன சொல்லுவான்.

வக்கிரதுண்டவிநாயகர் திருவவதாரஞ் செய்து உருத்திரர்முதலிய எங்கள் மூவர்களையுஞ் சிருட்டித்து அழித்தல், காத்தல், படைத்தல் ஆகிய முத்தொழில்களைத் தந்தருளியதும்,

சிந்தாமணி விநாயகர் திருவவதாரஞ் செய்து கபிலமுனிவருடைய சிந்தாமணியைக்கவர்ந்த கனராசனை யுத்தகோலங்கொண்டு எழுந்தருளி வென்று அதனைமீட்டு மவர்க் களித்தருளியதும்,

கசானன விநாயகர் திருவவதாரஞ்செய்து என்னுடைய கொட்டாவியி னின்றுந் தோன்றிய சிந்தூரன் என்னும் அசுரனைக் கொன்று தேவர்களைக் காத் தருளியதும்,

விக்கினராச விநாயகர் திருவவதாரஞ் செய்து காலரூபனென்கின்ற விக்கினனை யழைத்து உலகங்களை யெல்லாங் காத்தருளியதும்,

மயூரேச விநாயகர் திருவவதாரஞ் செய்து வேதசாத்திரங்களைத் தேவர்களிடத்தி னின்றுங் கவர்ந்த கமலாசுரனைச் சங்கரித்

து மீட்டு மவ்வேதசாத்திரங்களை யந்தத் தேவர்கட்குத்தந் தருளியதும்,

உபமயூரேசர் திருவவதாரஞ்செய்து தேவர்களைச் சிறையில்வைத்த சிந்தாசுரனைக்கொன்று முற்றைய அவுணர்கள்செய்யுமாயை யினை யொழித்ததும்,

பாலசந்திரவிநாயகர் திருவவதாரஞ்செய்து தவராசனுக்கும், அவன் மணவி சுமுதைக்குந் தீங்குசெய்த நிமராசனைக்கொன்று அவ்விருவரையும் பாதுகாத்ததும்,

கணேச விநாயகர் திருவவதாரஞ்செய்து திரிபுராதிகளை வெல்லும் படியாகச் சிவபிரானுக்கு அநுக்கிரகித்ததும்,

கணபதிவிநாயகர் திருவவதாரஞ்செய்து தேவர்களை வருத்திய கய முகாசுரனைக்கொன்று விண்டுவின் சாபந்தீர்த்ததும்,

மகோற்கடவிநாயகர் திருவவதாரஞ்செய்து நராந்தகனையுந்தேவாந் தகனையு நாசஞ்செய்து காசிராசனுக்கு முத்தியளித்ததும்,

துண்டிவிநாயகர் திருவவதாரஞ் செய்து துராசதனைத் திவோதா தன் மனத்தைத்திரித்து விசுவகாதமூர்த்திக்குக் காசிநகரை யளித்ததும்,

வல்லபை கணேசர் திருவவதாரஞ் செய்து மரீசி யிருடி புத்திரியா கிய வல்லபையையும் விட்டுணுமூர்த்தியின் புத்திரிகள் பன் னிருவரையுந் திருமணஞ்செய்து அவ்விட்டுணுவுக்கு யோக ஞான தத்துவப்பொருள்களைப் போதிக்குங் கணேச கீதை யை உபதேசித்ததும்,

ஆகிய இத்திருவிளையாடல்களெல்லாம் விவரமாகச்சொல்லிப் பின்னரும் மனமிகமகிழ்ந்து முகமலர் உற்றுச் சொல்லுகின்றார்.

வியாசமுனியே! வேதசாஸ்திரங்களாலும், மற்றெவ்வகைத்தா கிய பிரமாணங்களாலும் அறிதற்கரிய கர்த்தாவாகிய கணேசமூர் த்தியினுடைய இச்சரித்திரமானது தேவர்கள் முனிவர்கள் முதலி யோரால் பாராயணஞ்செய்யத் தக்கதாயும், பாசபந்தமுதலியவை களை விலக்கத்தக்கதாயும் இருக்கின்றது யாவரேனுந் தங்களிஷ்ட சித்திபெற விரும்புவோர்கள் இப்புராணத்தை இடைவிடாதுபாரா யணஞ்செய்து அதனைத்தடையின்றி யடையக்கடவர்க ளென்ற னர். இவையனைத்தையும் வியாசமுனிவர்செவிக் கமுதாகப்பூரித்து மீளவும் பிரமதேவனைப் பணிந்தெழுந்து சுவாமீ! விண்டுவுக்கு வல்

லபைகணேசர் யோகஞானதத்துவத்தை யுபதேசித்தாரென்றுபொ துப்படச்சொற்றீரே. அதனிவிவரமாக அடியேற் கருள்செய்யவே ண்டுமென்று பிரார்த்தித்தனர். அவ்வாறே அதனைமிகவுந் தெளிவு றக்கேட்ட வியாசமுனிவர் இக்கணேசகீதையை விநாயகமூர்த்தி யால் உபதேசிக்கப்பெற்று மரீசிமுனிவருக்குச் சொல்ல, அவர்மது வுக்குப்போதிக்க, அம்மதுவி னிடத்திலிருந்து பலமுனிவர்கள்கே ட்டு அவ்வவர்கள்பரம்பரையினல் விளங்கவைத்தார்கள்.

இக்கணேசகீதையைத் துன்மார்க்க நடையினோர் கேட்பாரா யின் அவர்கள்தீவினையாவு மொழிந்துபோய்ச் சன்மார்க்க நெறியி னையடைவார்கள். சன்மார்க்கநடையினோர் கேட்பாராயின் கணேச மூர்த்தியினுடைய பாதாரவிந்தத்தைச் சேர்ந்து பிரமானந்த சாக ரத்தின் மூழ்கியிருப்பார்கள் அன்றியும் இனிவருகின்ற கலியுகத் தில் யாவரும் வருணச்சிரம தருமங்களிற் றப்பிப் பிறர்செய்தகன் றியைமறத்தல், எல்லாவுயிர்க்கும் இன்னுதனசெய்தல், கல்வியையு ம் ஒப்புரவையுங் கடத்தல், யாகம் தவம் தருமம் தானம் என்பவை களைச்செய்யாதொழிதல் குருதரூஷிணைகொடாதிருத்தல்* மூப் பாலொழுக்கங்களை முனிதல் † இணைவிழைச்சு, வாயில்விழைச்சு, மலம், மூத்திரம்என்னு நால்வகைஎச்சிலையுங்கருதாதிருத்தல், வண ங்கப்படுந்தேவதை வழிபடுமிடத்தும், தூய்மையின்மையுண்டாயின விடத்தும், மயிர்குலைந்தவிடத்தும், இணைவிழைச் சுண்டானவிடத் தும், கீழ்மக்களுடம்பு தீண்டியவிடத்தும் நீராடாதிருத்தல், நில முதலிய ஐம்பூதங்களையும், பார்ப்பார், பசுக்கள், திங்கள், ஞாயிறு என்னுமிவைகளையுந் தம்முடம்புபோலக்கருதிப் போற்றுதிருத்தல் அரசன், உபாத்தியாயர் தாய் தந்தை மூதறிதான் என்னும் ஐங்கு ரவர்களையுங் கருதிப் பேணு திருத்தல், உண்ணும் உணவைத்தொ ழாதுண்ணல், விருந்தினர், மூத்தோர், பசுக்கள், அடிமைகள் பிள் ளைகள் என்று சொல்லப்பட்ட இவர்கட்கு உணவு கொடாதிருத் தல், தம்மிற் பெரியார்தம் பந்தியிலிருந் துண்ணுமிடத்து அவரு ண்பதற்கு முன்னே தாமுண்டு முந்துற வெழுந்திருத்தல், குரவர் கொடுப்பனவற்றை ஒரு கையால் வாங்கல், அவர்க்குத் தாமொரு கையாற் கொடுத்தல், எவையுஞ்சீறுதல் அந்திப்பொழுதில் விளைத் துண்ணுந் தொழாதிருத்தல். இருதேவர்களுவும், பார்ப்பவர் பலர் நடு

---

* அதாவது அறநூல்வினி, பொருணூல்வினி. இன்பநூல்வினி என்னும் இம்மூன்றுமாம் † இணைவிழைச்சு—புணர்ச்சி. வாயில்விழைச்சு—எச்சில்.

வும் ஊடறுத்துச்செல்லல், புலவிலேகிலம் * ஆப்பி சுடலிவழிநீர்த் தம் தேவர் கோட்டம் நீழல் ஆனிரை நிற்குமிடம் சாம்பல்என்னும் இப்பத்தின் கண்ணும் உமிழ்நீரையும் மூத்திர † புரீடங்களையுஞ் சொரிதல்; பரஸ்திரீ ‡ கமனம் மதுபானம் களவுகுதுகொலைஎன்னு மிவ்வைந்தினையுஞ்செய்யக் கருதல், பொய்குறளை பிறர்பொருளை வௌவவேண்டுங்காதல், பிறர் ஆக்கத்தின் கட்பொருமை என்னு மிப்பெற்றியினை விழைதல், தமக்கென்று உலையற்றல், தெய்வப் பொருட்டன்றித் தங்காரணத்தாற் கொன்றூணையருந்தல், அட்டி லின்கண் எச்சிற்படுத்தல், வீணையுறை தெய்வங்கட்குப் பலியூட்டா தணணல், நெருப்பைக்கடத்தல், சிரசில்வார்த்து வழிந்தஎண்ணெ யையுடம்பிற்றேய்த்தல், தம்முடைய குற்றத்தைப்பிறர்க்குச்சொல் லுதல், தம்மனையர்குணத்தைச் சொல்லுதல, தொடையில்வை த்து அன்னமருந்துதல், தம்முயிரை வாட்டுதல், நகத்தினற் பூமி யைக் கீறுதல், தரித்தவஸ்திரமில்லாமல் தடாகத்தில் இறங்குதல், புலால் புசித்தவரோடிணங்குதல், அவர்வீட்டிற்புசித்தல்,பாம்பாட் டுதல், மந்திரங்களைத் தகாதவர்களுக்கு உபதேசித்தல், மெய்ஞ்ஞா னஉபதேசங்களைக் கேளாதிருத்தல், பெரியோர்கள் இருந்த ஆச னத்தைக் காலினல் உதைத்தல், யாதோர்காரணமில்லாமற் சிரித் தல் ஈகங்களையும் உரோமங்களையும் பல்லினற்கடித்தல், நீர்வீளையா டல் பெரியோர் நித்திரை செய்யுங் காலத்தில அவரை யெழுப்பு தல், பொய்சொல்லுதல், அக்கினியில் இருகால்களையும் காச்சுதல், நல்லவர்களைப்பாவியென்றுகூறுதல், காலோடுகாலைத்தேய்த்துக் கழுவுதல் இடக்கையால்தலையினைத்தொடுதல், உண்ணும்பாத்திரத் தில் உமிழ்தல், பாழ்வீட்டில் நித்திரைசெய்தல், சுடுகாட்டுப்புகை யினிடத்தில் நிற்றல், வடுப்படாத மரங்களை வெட்டுதல், மயிர் கரி எலும்பு சாம்பல் முள் முதலியனவற்றை நீரிற்போடுதல், அக்கினி யை உச்சிக்குக்கீழேபிடித்தல், அக்கினியில் எச்சிலுமிழ்தல், ஒரி டத்து அக்கினியோடு வேறோரிடத்து அக்கினியைச் சேர்த்தல், நீர்வார்த்து அவித்தல், வஸ்திரத்தினலும் மூறத்தினலும்வீசி மூட் டுதல், நின்றுகொண்டும் நடந்துகொண்டும் கிடந்தும் நகைத்தும் உண்ணுதல் கரிசாம்பர் செங்கல் விதிக்கப்படாத மரக்கொம்புகள் என்னுமிவைகளைக்கொண்டு பல்விளக்குதல், வெள்ளருள்ளிமுதலுட் சமைத்த அன்னம் பழங்கறி முட்டை சுரைக்காயருந்தல், களவே விற்றல், கள்ளுண்ணுதற்கு சம்மதித்தல், கள்ளுண்டவரோடு இண

* ஆப்பி—சாணம். † புரீடம்—மலம். ‡ கமனம்—செல்லுதல்.

ங்குதல் சிவனீயும் சிவனடியாரையும் வேதம்சிவாகமம்மிருதிபுராண முதலிய சுத்தவித்தைகளீயும் விபூதி ருத்திராகூங்களீயும்நிந்தித் தல், விடியஐந்துநாழிகைக்குமுன்னர் நித்திரைவிட்டெழும்பாதிரு த்தல், வழிநடக்கும்போது பெரியவரோடு நேராக நடந்துசெல்லல் தம் மனீவியர்க்கு பூப்பு நிகழ்ந்ததால் மெய்யுற லாகாத * நாட்களி னும்,மற்றையவிலக்கப்பட்ட நாட்களினும் அவரைநோக்கல், புணர் தல், விதிக்கப்பட்ட நாட்களிற் புணராதுவிடுதல், தம்மனீவியரோ டுடனுறைதல்,கலியாணநாளினும்,தேவர்க்குச்சிறப்புநாளினும்,பிதி ருக்குச் சிரார்த்த முதலியன செய்யும் நாளினும், திருவிழாநாளி னும், யாகஞ்செய்யுநாளினும், அறஞ்செய்யாதிருத்தல், அந்நாட்க ளில் விருந்தினர்க்குச் சோறிடாதருந்தல், உடை நடை சொற் சோர்வு வைதல் என இந்நான்கும் தம்மாண்மைக்குங் கல்விக்குங்

* பணர்ச்சிக்கு விதிக்கப்பட்ட தினங்களிலே தன் மனீயாரோடு கூடுவோன் இல்வாழ்வா னெனினும், வானப்பிரத்தன் சந்நியாசி பிரமசாரி யென்னு மூவர்களினின்றும் மேலாய பிரமசாரி யெனப்படுவான். புணர்ச் சிக்கு விலக்கப்பட்ட ஐந்து பருவமாவது - நட்சத்திரங்களுள் மூலம், மகம், திருவாதிரை, திருவோணம், செம்மத்திரயம் என்னும் ஐந்தும், திதிகளுள் அட்டமி, சதுர்த்தசி, சதுர்த்தசி, அமாவாசி, பௌர்ணிமைஎன்னும் ஐந்துமாம். இவையன்றி சஷ்டி, திரியோதசி, விதிபாதயோகம், மாசப்பிறப்பு வீராதநி னம், சிரார்த்தநினம், சந்தியா காலங்கள், அர்த்த ராத்திரி, பகற் காலம் என்பவைகளும், வீட்டுக்கு விலக்கானவள், முதலாநாட் சண்டாளிகும், இரண்டாநாட் பிரமக்கொலைசெய்தவளுக்கும், மூன்றாநாள் வண்ணத்திக்கும் ஒப்பாளாதலின் அந்நாட்களும் விலக்கப்பட்டன இக்காலங்களில் ஒருவன் புணர்வானுயின் அவன் பாவம் வறுமைநோய் அற்பாயுள் என்பவற்றையடை தலின்றி, கருச்சிதைத்தபாவத்தையும் அடைவான். அவன்செய்யுஞ் சந்தியா வந்தனம் பூசைமுதலிய சற்கருமங்களும் பலனைக் கொடுக்காவாம். இறப்பி னும் நரகத்திற் சேர்வன். பிள்ளே பிறக்கினுங் கயரோக முதலிய நோய்களே யடைந்து வருந்தும். வீட்டுக்கு விலக்கான காலா நான் முதற் பன்னிரண்டு நாள் வரைக்கும் உள்ள காலமே விதிக்கப்பட்ட காலமாம். அவற்றுள்ளும் மூற்கூறிய காலங்களே நீக்கிச் சேர்க்கடவன் அதனை, " பூத்தகாலைப் புனே யிழை மனீவியை-நீராடியபின் னீராதாகாளும் - கருவயிற் றறாஉங் காலமாத லிற்-பிரியப் பெறு அன்பரத்தையிற் பிரிவோன். ,, என நாற்கவிராச நம்பி யகப்போருளினும், நீண்டாநாண் முக்காளு நோக்கார்சீ ராடியபின் - னீராறு காளு மிகவற்கமென்பதே - பேறறி வாளர் துணிபு. ,, என சூசரசுகோவை யினுங் கூறுமாற்ரு னறிக. அவ்வாறு சேர்வானுயின் சரீரசுகம், செல்வம், சற் புத்திரப்பேறு, தருமவிருத்தி முதலிய புண்ணியங்களே யடைவான். பிறக் கும் பிள்ளேயும் பலமும், அழகும், அறிவும், நோயின்மையும் நீர்க்காயுளு முடைத்தாகப் பிறக்கும் என்க. இதனுலும் புராணம் பதவுரையிற் கண்டது.

குடிப்பிறப்பிற்குந் தகுதியில்லாது செய்தல், பலர் நடுவணிருந்து பிறரைப் பழித்துரைத்தல், அவரைக் காணுதவழி இழித்துரைத்தல், பலர்நடுவணுறங்கல், தமக்குச் செய்யப்பொருந்தாதவற்றைப் பிறர்க்குச் செய்யவுடன்படல், வறியாரையிகழ்ந்து முறைமைகடந்துரைத்தல், வஞ்சனியுரையும் பயன்படாதவுரையும் வாய்காவாது வேண்டியவுரைக்கு முரையும் பிறரைப் பழியுரைக்கு முரையுஞ் சொல்லல், ஒருவன் செய்கை சொன்முதலானவற்றைத் தானும் அவ்வகையிகழ்ந்து செய்துகாட்டல், பிறர்க்குவெளிப்படக் கண்ணிடுதல், தம்மிடத்தைநோக்கி வந்தார்க்கு முறுவலோடு கூடிய வின் சொல்லும் கால் கழுவ நீரும் இருக்கமணையும் கிடக்கப்பாயும் உண்ண வுணவுங்கொடாதிருத்தல், தங்குடியொழுக்கத்தைநீங்கிய தொழில்களைச்செய்தல், பிறரெழுந்து போகத்தொடங்கினபோது அவரைப்பின்னேநின்றழைத்தல், அப்பொழுதுதும்முதல், அவரையெங்கே போகின்றீ ரென்றுகேட்டல், பிறரைப்பார்த்து உடம்பு நன்றாயிருக்கின்றதென்று சொல்லல், வினாக்கினவாயாலாகியவித்தல், அருந்தவரைப் பாதுகாவாது வைதல், பழிநாணுதிருத்தல், தாங்கற்றவற்றைக் குரவர்முன் கூறல், தாய்-மகள்-உடன்பிறந்தாள் பிறன் மனைவென்னு மிவர்களோடு தனித்துறைதல், பெரியராயுள்ளார் உவந்தனவற்றைத்தாமுவத்தல், தம்மில்லத்தினிடத்தும்தேவராலயத்தினிடத்தும் பெரியார்சபையினிடத்தும் கீழ்மக்களைக்கொண்டு புகழல், சிறிப்பு-கொட்டாவி-காறியுமிழ்தல்-தும்மல்-என்னு மிவைகளைத்தம்மிற்பெரியாரிடத்துந்தேவர் கோட்டத்தினிடத்துஞ் செய்தல், கணவனது வடிவத்தையன்றி ஏனைய ஆடவரது வடிவத்தைப் பார்த்தல், கைக்கொடித்தன் முதலியவற்றைச் செய்து ஆடவரை மயக்குதல், தங்குரவர் பெயரைச்சொல்லல், தம்மிற்பெரியாரைமுறைப்பெயர் கொண்டழைத்தல், பிறர்மனையின்கட் புழைக்கடை வாயிலாற் புகல், ஒருவர் பக்கத்தில் வரிசைபடப்போதல், ஒருவருடைய நிழலிலித்தல், முன்னர் ஆராயாமல்பேசும்போதாராய்ந்துபேசல், ஊரிலுள்ளோர் வெறுக்கத்தக்கவைகளைச் செய்தல், அரசரது படையளவைப்பகைவர்க்குறைத்தல், தாமொருவருக்குச் செய்த நன்றியின் பயனிச்சொல்லல்; தமக்கொருவரிட்டவுணவையிகழ்ந்துரைத்தல், தாஞ்செய்த அறத்தையும் விரதத்தையுந்தாமே புகழ்தல், தம்மருகிலிடைத்தற் கரியவற்றைவிரும்பல், தம்மாலிழக்கப் பட்டனவற்றிற்கு வருந்தல், புலையருக்கெச்சிலைக் கொடுத்தல், மேலான நற்கருமஞ்செய்யப் போமிடத்துப் புலைய ரிடத்து காட்

கேட்டுச் செய்தல், சான்றோர் அவைக்களத்து அங்கச் சேட்டை புரிதல், இருவராயிருந்துபேசுமிடத்துப்போகுதல், குரவர்கொடுப் பதை உட்கார்ந்தேற்றல், தம்மிடத்தில் அடைக்கலமாக வைத்த பொருளை அபகரித்தல் முதலான அளவற்ற தீமைகளைச் செய்து வியாதி தரித்திர முதலான துன்பங்களை யடைந்து வாழ்ந்திருப் பார்கள்.

அப்போது வேதாகம விதிகள் மூழ்கிப்போகும் நீதிநெறிகள் தவறிப்போகும் அதனாற் றேவர்களெல்லாந் துன்பமடைந்து அக் கலியுகமுடிவில் கணேசமூர்த்தியினுடைய திருவடிகளைத் தியானித் து மிகுந்தபக்தியினாலுபசரித்துப் பலமுறை தோத்திரஞ்செய்வார் கள். அதற்குவிநாயகமூர்த்தி அருள்சுரந்து தூமிரவர்ணராய்மகோ ற்கட விநாயகர் திருவவதாரங்கொண்டு இரண்டு திருக்கரங்களு டனே ஒரு திருக்கரத்திற் ருமரைமலரும் மற்றொரு திருக்கரத்தில் வாளாயுதமு மேந்திக் கறுத்தக் குதிரையின்மே லாரோகணித்து அளவற்ற படைக்கலங்களோடு கால்வகைச சேணைகளும்புடைசூழ் ந்துவரப் பூவுலகத்திலுள்ள மிலேச்சர்கள் முதலாயினோர்கள் ஒரு வரையும் விடாமற் சங்கரிப்பார். அப்பால் தருமஸ்வரூபமான கிரே தாயுகம்வரும். இத்தயுகத்தில் தருமதேவதை நான்குபாதங்களோ டும் உலாவலால் யாதோர்குறையுமின்றும் இத்தன்மையராகிய வி நாயகமூர்த்தி செய்தருளுந திருவிளையாட்டுக்கு ஓரளவைகள்கூற ம தாயுள்வரையிற் சொன்னதுமுடிவனவன்று. ஆதலால் இதுகாறும் உமக் குரைத்து வந்த மான்மியங்களோடுகொண்டே திருப்தியடை யக் கடவீர் அன்றியும் இப்புராணத்திற்றானே ஓரிடத்தில் விநாய கப்பெருமா னவர் உருத்திரர் முதலிய எங்கள் மூவரைச் சிருட் டித்தாரென்றும், ஓரிடத்தில் உருத்திரமூர்த்தியினுடைய முகத்தி னின்றும் அவர்வெளிக்கொண்டன ரென்றும், ஓரிடத்திற் சிவபெரு மானை அவர்பணிந்தனரென்றும்; ஓரிடத்தில் உமாதேவியார் வயிற் றிலுற்பவித்தனரென்றும், ஓரிடத்தில் அவ்வுமாதேவியார்முகத்திற் ரோன்றினரென்றும், ஓரிடத்தில்உமாதேவியார் அவரைப்பணிந்தன ரென்றும், ஓரிடத்தில் அவ்வுமாதேவியை அவர் பணிந்தன ரென் றும், இவ்வாறுநானவித்தங்களாகக்கூறியிருக்கினும்அவையனைத்தும் அந்தந்த யுகபேதங்களினாலும் அந்தந்தத் தேவர்கள் வல்லபவிகற் பத்தினாலும் அடியார்களுடைய பரிபாக வேற்றுமையினாலும் உண் டாயினவேயன்றி விநாயகமூர்த்தி சகல தேவர்கட்கும் முதன்மை யாயிருக்கின்ற அவரது சுபாவவியற்கை எக்காலத்து மாறுவதில்லை.

இத் தன்மையராகி விநாயக மூர்த்தியினுடைய சரித்திரா னியல்பையறியு மிடத்து மத்திம குணத்தை யுடையவர்கள் இவை யனைத்தும் உண்மையோ அல்லவோவென்று மலைப்பார்கள். உத்தம குணத்தை யுடையவர்கள் உண்மை யென்றே தெரிந்து கொள்ளு வார்கள். உண்மை யென் றெண்ணுதவர்கள் மிகவுங் கொடிய இரு பத்தெட்டுக்கோடி நரகங்களில் வீழ்ந்து வீழ்ந்து பலமுறை வருந் துவார்கள். விநாயகக்கடவுளைத் தேவர்கள் முதலாயினோருபாசித்த சரித்திரங்களும் அக்கடவுள் பற்பல அவதாரங்களைக்கொண்டு செய்தருளிய திருவிளையாடல்களும் விவரமாக வுமக்குச்சொன்னேம். இனி நீவிரு மவ்விநாயக மூர்த்தியை உபாசிக்கக் கடவீரென்று வியாசமுனிவருக்குப் பிரமதேவர் சொன்னதாகப் பிருகு முனிவர் சோமகாந்த ராசனுக்குத தொகையாகத் தெரிவித்துப் பின்னர் அவைகளையெல்லாம் விரிவாகவுங் கூறினர்.

உபதேசம்பெற்ற படலம் முற்றிற்று.

வியாசர்
வரம்பெற்றபடலம்.

இப்பால் பிருகு முனிவரை அவ்வரசன் மீளவும் பணிந்தெ ழுந்து நிருபாமூர்த்தியே! சுவாமிகளுடையகருணைகூடாட்சத்தினாற் றேவர்களாலும் அறிந்துணர்தற்கரிய விநாயகமகத்துவத்தையெளி திற்கேட்டேன். யோகஞான தத்துவத்தையு முணர்ந்தேன் இனி அடியேற்கென்னகுறையிருக்கின்றது. இனி அவ்வேதவியாசர் விநா யக மூர்த்தியை உபாசித்ததும், விநாயகமூர்த்தியால் அவரடைந்த பேறும், அடியேற்குத் திருவாய் மலர்ந்தருள வேண்டு மென்னப் பிருகுமுனிவர் அதற்கிசைந்து அரசனே! வியாசர் மீளவும் பிரம தேவனைத் தொழு தெழுந்து சுவாமீ! பரப்பிரம்ம சொரூபியாகிய விநாயக மூர்த்தி மகிமையை எல்லாம் யான் தெளிவுற்றறியுமாறு திருவாய் மலர்ந்தருளிய தேவரீர்க்கு யானென்ன கைம்மாறு செய்யத் தக்கவனென்று பலமுறை துதிசெய்து, அவருடைய உத்தரவு பெற்றுவிநாயகக்கடவுள் திருமந்திரத்தைச் செபித்துத்தவஞ்செய் வதாகச்சென்று கந்தமூலபலாதிகளுஞ்சமித்துக்களும்கல்லீழலும் எவ்விடத்துள்ளனவென்று தேடிச் சிறிதும் இடையூறுக ளில்லாம

லும் இதர சஞ்சாரமில்லாமல் இருக்கின்ற வொரு வனத்திலிருந்து கணேச மூர்த்தியினுடைய ஏகாக்ஷர மந்திரத்தைச் செபித்துக் கொண்டு தவத்தி லிருந்தனர் அவ்வாறு பன்னிரண்டுவருடஞ்சென்றபின்னர் அத்தவத்திற்குக் கணேச மூர்த்தி கிருபைசுரந்து கோடி சூரியர்கள் ஒன்றுபுதயமானதுபோல மிகுந்தவொளியை வீசுகின்ற சிவந்த திருமேனியும், சிவந்தவஸ்திரமும், சிவந்தபூமாலையும், சிவந்த ஆபரணங்களும், செஞ்சாந்து முடையவராய் மதம் பொழிகின்ற யானை முகத்தோடு வியாச முனிவருக் கெதிரே தரிசனமாயினர்.

வியாச முனிவர் அத் திருமேனியின் உக்கிரத்தைப் பார்க்கக் கூடாமற் பயந்து ஏகாக்ஷர மந்திரத்தை மனதிற் றியானித்து இரண்டு விழிகளையுமூடிக்கொண்டனர். அதனைக்கணேசமூர்த்திகண்டு பராசரன்மைந்தனே! நீ அஞ்சற்க. நின்மனதில் யாவர்வேண்டு மென்று பரிபூரணமாக நினைத்தனையோ அவரேயாகும் உனக்குவேண்டிய வரங்களைக்கேள் தருகிறே மென்று திருவாய்மலர்ந் தருளினர் அதைக்கேட்ட வியாசமுனிவர் விரைவி லெழுந்து வணங்கித் துதித்துக் கர்த்தருடைய திவ்வியசொரூபத்தைக் கண்குளிரப்பார்த்துப் பலமுறைபிரதக்ஷிணம் வந்து, இருகரங்களையுஞ்சிரமேற்குவித்து எதிர்நின்றுவாய்குளறி, விழிகுளிலானந்தவாரிபெருக்கி, உடல் முழுவதும் உரோமாஞ்சிதங்கொண்டு, உள்ளமுருகிக்கணேசமூர்த்தியினுடைய பெருமைகளைப்பாடி அளவற்ற வேதாகமங்களாற்றோத்திரஞ்செய்து காரணகாரணமான கடவுளே! சச்சிதானந்தப்பொருளே! அகண்டபரிபூரணரே! ஆகிமத்தியாந்த ரகிதரே இத்தினந் தேவரீருடைய பாதகமலசேவை தந்தருளி யதனாலே அடியேன்பவித்திரனாயினேன். அடியேன் தவமுஞ் சுத்தமாயிற்று. இத்தேசம், இவ்வனம், இங்கிருக்குஞ் சராசரங்களெல்லாமும் மகத்தானபேறுகளையடைந்தன. இனி அடியேன் குறைதீரும்படியாக எனதறிவிற் செழித்திருக்கின்ற மயக்கத்தைநீக்கி, மலபாசத்தையு மொழித்துச் சுவாமிகளுடைய பாதாரவிந்தத்திற் செலுத்தும்படியானபத்தியை கிரப்பி, மெய்ஞ்ஞானசுகத்தையுங்கொடுத்து ஏக்காலத்தும் அடியேனுள்ளத்திற் றேவரீர்வாசமாயிருத்தல்வேண்டும். அன்றியும்பதினெண்புராணங்களே இடையூறின்றி நிறைவேற்றத்தக்க வல்லபத்தையும் அடியேற்கு அளித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர்.

கணேசமூர்த்தி அதற்கிசைந்து மகாதவசிலனே! நீகேட்டவரங்கள் முழுவதும் உனக்குண்டாகும். நீயுன்பெயருக்குத் தக்கபரி

சுத்த வுத்தமனாகி மிக்கமேன்மைகளைப் பெற்று எல்லாக் குறைகளு மொழிந்து யாவர்க்கும் குரவனாகி மெய்ஞ்ஞானம் பெருகிச் சுகமா யிருப்பாய் பதினெண்புராணங்கட்கு நீ அதிகாரியானதுபோல உப புராணங்களுஞ் சொல்லத்தக்க வல்லபத்தையுடையவனுனுய் முன் னர் அகங்காரத்தினுலே நம்மைத் தியானித்துத்துதிசெய்யாதுபுரா ணங்களைச் சொல்லத்தொடங்கினை ஆதலால் நீ யுன்னினவினை யிழ ந்தாய் அதனேடு வாக்கையும் இழக்கப்பெற்றுப் பின்னர் நமது மான்மியத்தைப் பத்தியோடும் கேட்டு நம்மையு மநுட்டித்தனை. ஆதலால் முன்னர் வினைந்திருந்த பாவங்களனைத்தையும் போக்கி னுய். இனி உன் மனத்துள் யாமிருந்து எல்லாவற்றையுஞ் சொல்லி நிறை வேற்றுகின்றேமென்று அனுக் கிரகித்து அம்முனிவருடைய இதையகமலத்தில் வாசமாயினர். அப்பால் வியாசமுனிவர் பிரக தேஜசுடையவராய் உலகத்தாரெல்லாங் கண்டு அதிசயிக்கும்படி யாக அவ்வனத்தின் கண்ணே யிருந்து கணேசமூர்த்தி தனக்குக் காகுகொடுத் தருளியவிடத்தில் ஓராலயமுண்டாக்கி அதில்விநாய கக்கடவுளைப் பிரதிட்டைசெய்து, வேதாகமவிதிப்படிபூசனைபுரிந்து யாவருங் கொண்டாடத்தக்க பதினெண்புராணங்களையும்ஸ்ரீவின் நி நிறைவேற்றினர் என்று பிருகுமுனிவர் சோமகாந்தராசனுக்குச் சொற்றனர்.

வரம்பெற்றபடலம் - முற்றிற்று

யடைந்த படலம்

முற்றத்துறந்த முனிவர்களே! பின்னும் பிருகுமுனிவர் அவ்வ ரசனைநோக்கிச் சொல்லுவார், வேந்தனே இவ்வாறு வியாசமுனிவர் கணேசமூர்த்தியினுடைய பெருங்கருணையைக்கொண்டு நிறைவேற் றிய பதினெண்புராணங்களையும், தாம்பிரமதேவனுல் உபதேசிக்கப் பெற்ற விநாயகமகத்துவத்தையும், வைசம்பாயனர் முதலாகிய எங் கட்கு உபதேசித்து அவைகளை யாவர்க்கும் வரன்முறையாகப்போ தித்தக் கட்டளை யிட்டனர். யாங்களும் அவ்வாறே பரிபக்குவர் களுக் குணர்த்தினம். அவற்றுள் விநாயகமகத்துவத்தை உனக்குப் பாத்தமாகவுபதேசித்தோம். ஆதலால் இனி நீயும் அக்கணேசமூர்த்

நியைபறஷ்டித்து உனது இட்டகாமியார்த்தங்களை நிறைவேற்றிக் கொள்ளுகவென்று சொல்லினர் பின்னர் அவ்வரசன் அவ்வாசீர் மத்திற்ருனே யிருந்து தான்கேட்ட கணேசமான்மியத்தையும் பிர திதினம் பாராயணஞ்செய்து பிருகுமாமுனிவருடையபாதங்களைத் தினந்தோறும் பூசனைபுரிந்துகொண் டிருந்தனன். இவ்வாறு ஒருவ ருடஞ்சென்ற பின்னர் அவ்வரசன் செய்து வருகினற அநுட்டிப் புக்குக்கணேசமூர்த்தி கிருபைசுரந்து தேவகணங்களைக்கூவி நமது திருவடிக் கன்பனுகிய சோமகாந்தராசனை இங்ஙனம் அழைத்துவ ருவீர்களாகவென்று திருவாய் மலர்ந்தருளினர். அவ்வாறே தேவக ணங்களிசைந்து அஷ்டதிசைகளினுநிறைந்துபிரகாசிக்கும்படியான சோதியை வீசுகின்ற ஒரு தெய்வவிமானத்தைக் கொண்டு வந்து பிருகுமுனிவருடைய ஆசீர்மத்தி லிறக்கினர்கள். அதனை யம்முனி வர்கண்டு சோமகாந்த ராசனைநோக்கி, 'அரசனே! கணேசமூர்த்தி உனதன்புக்கிரங்கி விமானமனுப்பினர். அதில் நீயாரோகணித்து அவ ருலகத்திற்சென்று நித்தியானந்தசுகத்தில் வாழ்ந்திருமென்று சொல்லினர் அதையவ்வரசன்செவிக் கமுதமாகக்கேட்டுப் பிருகுமு னிவரைப்பணிந் தெழுந்து இருகரங்களையுஞ் சிரமேற்குவித்துத் தபோதன சிரேட்டரே! நித்தசுத்தநிர்மல நிராகார நிருபத்திரவ நிர்ச்சங்க நிர்விகார நிருநிகற்ப நிராலம்ப அகண்டானந்த சொரூபி யாகிய கணேசமூர்த்தியானவர் நாயினுங்கடையாய் நீயேனிடத்து வைத்த நிறைந்தகிருபைக்கு அற்பனேன் செய்யத்தக்க கைம்மாறு. இவ்வுலகத்தி லென்ன விருக்கின்றது? தேவரீருடைய கருணையி னலே அக்கர்த்தருடைய அநுக்கிரகத்தை யெளிதிற் பெற்றேன். என்னிற் படர்ந்திருந்த வியாதி முன்னமே தீர்ந்தன. அடியேன் தேவரீர்வசத்தனல்லாமல் இப்பிரபஞ்சத்தில்எனக்குண்டாகியபற்று வேறென்ன விருக்கின்றது சுவாமிகளுடைய கட்டளையாதோ அவ் வாறே அடியேன் நடந்துகொளளுவனென்று பணிந்துதோத்திரஞ் செய்து அளவளாவிய அன்போடும் ஆனந்தக்கண்ணீர் சொரிந்து நின்றனன். அவனை யத்தேவகணங்கள்நோக்கி அரசனே! நீகணேச புராணங்கேட்டமகத்துவத்தினுலேவிநாயகக்கடவுள்கிருபைசுரந்து மகா யோக்கியர்கள்செய்யும் அநுட்டிப்பினுக்குங் கிடைத்தற்கரிய தமது உலகத்திற்கு உன்னை யழைத்து வருமாறு கட்டளையிட் டருளினர்.

பாக்கியமுடையவர்க்குள்ளும் பெரும்பாக்கியமுடையவனீயே யாகும் ஆகலால் நீயுனது மனைவியோடும் இரண்டுமன்திரிகளோடும்

இவ்விமானத்தில் ஆரோகணித்து வரக்கடவாயென்று சொல்லினர். அதை அரசன்கேட்டு மீளவும் பிருகுமுனிவரைப் பணிக்தெழுந்து பலமுறைதுதித்து அம்முனி புங்கவருடைய சீடர்கட்கெல்லாம்வந்தனஞ்செய்து, விமானத்தைத்தொழுது அவ் விமானத்தைக்கொணர்ந்துவந்த தேவகணங்களையும் நமஸ்காரஞ்செய்து தனது பத்தினியோடும் இரண்டமைச்சர்களோடும் அவ் விமானத்தி லேறினன். உடனே அவ்விமானமானது ஆகாயமார்க்கத்தி லெழுந்து சென்றது அவ்வாறு செல்லுகையில் அவ்வரசனுடைய தேவகுகரமானது சுதன்மைக்குத் தோன்ற அச்சுதன்மை தன் கொழுநனை நோக்கி, சுவாமி! ஏமகண்டன் நமதுவரவுக்கு எதிர்பார்த்திருப்பானுதலால் அவனைக்காணுமற் செல்வோமாயின அவன் மிகுதபரத்திலெழுந்து வாடுவான். நாமவனைக்கண்டுகொண்டு பின்னர் நம தெண்ணத்தின் படிசெல்வது உத்தமமா யிருக்கின்றதென்று சொல்லினள். அதையத் தேவகணங்கள் கேட்டு மனதிரங்கிச் சோமகாந்த ராசனையுஞ் சுதன்மையையும் பார்த்துச் சர்வசன மநோரதராகிய சத்திய சிலர்களே! உங்கள் குமாரனுகிய ஏமகண்டராசன் விநாயகமூர்த்தியைத் தினந்தோறும் வேதாகமவிதிப்படியிருந்த அன்புடன் பூசைசெய்து பரிபக்குவனுகி யிருக்கின்றனுதலாலும், நீங்களும் அவனைக்காணுதுசெல்லக் கருத்துருமையினுலும் உங்களெண்ணப்படி இவ்விமானத்தை அந்தகரின்புறத்து நிறுத்துகின்றோம். நீங்கள் அவனைக்கூவி அவன்மனதைத் திருப்திசெய்யுங்களென்று சொல்லி, அந்தகரத்தின் வடதிசைப் புறத்தில் விமானத்தைச் செலுத்திக் கொண்டு போய் நிறுத்தினர்கள். அரசன் அளவற்ற ஆனந்தங் கொண்டு தன்னுடன் வந்திருக்கின்ற அவ்வமைச்சர் இருவரையும் ஏமகண்டராசனிடத் தனுப்பினன். பின்னர் அவ்வமைச்சர்கள்சென்று, இராசகுமாரனைக்கண்டு பணிந்துநின்றனர் அவனுந் தனது கரங்களைக் கூப்பிப் பிரதிவந்தனஞ் செய்து, அவர்களைத் தனதருகி லிருக்கவைத்து, இவர்கள் தனித்துவந்தமையால், நமது தாய்தந்தையர் இறந்தனரோ பிழைத்திருக்கின்றனரோ வென்னுங் கவலிகொண்டமனத்தோடு, அமைச்சர்களே! என்னையின்ற அருங்குரவர்கள் எவ்வாறுகி யிருக்கின்றனரென்று வினவினன். அதற்கு அவ்வமைச்சர்கள் முகமலர்ந்து, நரேந்திரசிகாமணியே! உமதுமனத்திற் கிலேசங்கொள்ளவேண்டாம். உமது தாய்தந்தையர் இதுகாறும் வனத்திற் சுகசீவியராயிருந்து, இப்போது தேவரூபம் பெற்றிருக்கின்றார்கள். அஃதெவ்வாறெனில், யாங்கள் இந்நகரத்தைவிட்டுநீங்கி, மிக்கதய

ரத்தோடும் வனத்திற்சென்று, அவ்விடத்திற் சின்னட்களைக் கழிவு செய்திருக்கையில், உமதுதந்தை தவசிரேட்டராகிய பிருகுமுனிவராலே தொழுநோய் முழுதும் நீங்கப்பெற்று, அம் மகாதபோவனத்தில் விநாயகபுராணங்கேட்டனர். அதனைக்கேட்ட மகத்துவத்தால் அவ் விநாயகமூர்த்திக்குக் கிருபைசுரந்து, சகலதேவகணங்களோடும் ஒருதெய்வவிமானம் அனுப்பினர். அவ்விமானத்தில் யாங்கள் நால்வரும் ஆரோகணித்து ஆகாயமார்க்கமாகச் செல்லுகையில், உமதுகுரவர் உம்மைக் காணவேண்டுமென்கின்ற ஆவலைக் கொண்டு, அவ்விமானத்தோடும் இந்நகரின் புறத்துவந் திருக்கின்றார்கள் ஆதலால், நீரங்ஙனம்வந்து, அவர்களுடைய மனக்கவலையைபொழிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, உடனே ஏமகண்டராசன் பெருமகிழ்ச்சிகொண்டு, வந்தமந்திரிகளோடுந் தன்னிடத்திலிருந்த மந்திரிகளும் புடைசூழ வெளிக்கொண்டனன். அந்நகரத்திள்ளவர்களும் அவனோடுபுடைசூழ்ந்து, யானைக்கூட்டங்கள்போல நெருங்கிவந்தனர். அதனை யவ் விமானத்தலைவர்கள்நோக்கிச் சோமகாந்தராசனைப் பார்த்து, அரசனே! உன தருமைப் புத்திரன் வருகின்றான் நீ அவனைக்கண்டு அளவளாவிச் சொல்லத்தக்க விடயங்களைச் சொல்லக்கடவை யென்றனர். அரசன் அவ்வுத்தரவைச் சிரசில்வகித்து தான் தனது பத்தினியோடும் அவ்விமானத்தினின்று மிறங்கினன்.

உடனே, அப்புத்திரன் விரைந்துவந்து, இருவர்பாதங்களையும் அட்டாங்கமாகப் பணிந்தனன், அவனைச் சோமகாந்தராசன் தழுவியெடுத்து, தனதுமார்பில் அணைத்துக் கொண்டு, அப்பா குழந்தாய்? சாதுசற்சன சம்மத சற்கர்ம சற்புருஷாகார பூசுரோத்தமராகியபிருகுமகாமுனிவருடையகிருபாகடாக்ஷத்தினால், யான்முன்னர் அடைந்திருந்த தொழுநோய்முதலிய துன்பங்களை நீக்கி, இத்தன்மைத்தாகிய மேலான செல்வத்தைப்பெற்றேன். உனக்குத் தரிசனந்தந்து செல்லுவோமென்று மாவலிக்கொண்டு, யாங்களெல்லாம் இத்திருக்கோலத்தோடும் இங்குவந்தனம். இப்போதுகணேசமூர்த்தியினுடைய உலகத்திற்குச்செல்லுகின்றோம் இனியெங்களைக்குறித்து யாதொரு கவலையுங் கொள்ளாமல், நீதிசாத்திர முறைமைப்படி இராச்சியபரிபாலனஞ் செய்துவரக் கடவை என்றனன். அதைக்கேட்ட ஏமகண்டராசன் மிக்கதுயரங் கொண்டு, எனதருமைத்தந்தையே? இதுகாறுந் தங்கள்வரவுக் கெதிர்நோக்கிக்,கணேசமூர்த்தியை இடைவிடாதுபூசித்துவந்தேன். இப்போதுஎனதெண்

ணத்தின்படியே தாங்கள் சகலவியாதிகளையு மொழித்து இத்தன் மைத்தாகிய தெய்வசரீரத்துடனே காணப்பெற்றேன், இனிஅரைக் கணமேனும் தங்களை விட்டுப்பிரிந்திரேன், அடியேணையுந் தாங்கள் செல்கின்றகதியிற் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றுமிகுந்த உருக் கத்துடன் விண்ணப்பஞ் செய்தனன். அதனை அவனெடு அங்க ரத்தினின்றும் வந்த அமைச்சர் முதலாயினோர் கேட்டு, மிக்களிலே சத்தை யடைந்து, சோமகாந்த ராசனைப் பணிந்தெழுந்து, சார்வ பௌமா? யாங்களுங் கணேசமூர்த்தி யுலகத்திற்கு வருகின்றோம். இப்பிரபஞ்ச வாழ்க்கையால் வருவது துக்கமேயன்றி என்ன சுக மிருக்கின்றது தேவரீர் எம்மையும் அழைத்துக் கொண்டு செல்லா மல் இங்கு நிறுத்திவிட்டால், ஓர் இமையளவும் யாங்க ளுயிரை வைத்திரோம். துன்பத்திற்கதுவான பிரபஞ்ச வாழ்க்கையில் எமக்கு யாதொரு பற்றுமில்லையென்று வருந்தி முறையிட்டார்கள்.

இவ்வாறு புத்திரனும் அங்ஙகரத் துள்ளவர்களுஞ்செய்துகொ ண்ட பிரார்த்தனைகளைச் சோமகாந்த ராசன் கேட்டு அன்பிற் சிற ந்த நண்பர்களே? உங்களையுங் கணேசலோகத்திற் கழைத்துக்கொ ண்டு செல்ல எனக்கோராதி பத்தியமில்லை. அவ்வவர்கள் செய்த தவப்பயன் கூட்டி முடிக்கின்றபோது, அக்கர்த்தாவின் கிருபை யால் அந்தமேலான கதியையடையவேண்டுவதேயல்லாமல், அஃது நிச்சயத்தமாத்திரத்திற் கூடுவதான காரியமுமன்று இதற்கு நம்மாற் செய்யக்கூடுமானது ஒன்றுமில்லையென்று சொல்லினன். இவ்வாறு ஒருவர்க்கொருவர் கிலேசங்கொண்டிருக்கின்ற காரணத்தைத்தேவ கணங்கள் பார்த்து, அரசனே? உனது குமாரனுகிய ஏமகண்டரா சன் விநாயகமூர்த்தியைப் பூசைசெய்து மகாயோக்கியனுகிப் பரி பக்குவப்பட்டிருக்கின்றன். அவன் இவ்விமானத்தி லேறத்தக்கவ னெனபதற்குச் சந்தேகமில்லை, இங்ஙகரத்தார்களோவெனில், தேவ தேவராகிய விநாயகக்கடவுள் மகத்துவங்களைச் சிறிதுங்கேட்டவ ரல்லர். அவைகளைக் குறைவில்லாமற் சொல்லவுங்காலமில்லை. ஆயி னும், அவ்விநாயகமூர்த்தி மகத்துவங்களை முழுவதுங் கேட்ட மே லாகிய பயனைத் தானே கொடுக்கத்தக்கதாகியும், நிவிணையனைத்து நீக்கிச் சுகத்தைத் தரவல்லதாகியும் ஒரு சூட்சும மிருக்கின்றது. அஃதியாதெனில், காசித்தலத்திற் சத்தாவரணத்தில், ஐம்பத்தாறு விநாயக மூர்த்தங்களைப் பிரதிட்டை செய்யப்பட் டிருக்கின்றதே. அத்தந்த மூர்த்திகளினுடைய திருநாமங்களைச்சொல்லுகின்றோம். அவைகளை இங்ஙகரத்தார் கேட்பார்களாயின், உடனே சுத்தபவி

த்திரத்தை யடைந்து, அந்த மேலான கதிக்குப் பாத்திரராவார்கள் என்று அவைகளைச் சொல்வாராயினர்.

அதாவது, சற்சனர்களே, முதலாம் ஆவரணத்தில், துண்டிவி நாயகர், துர்க்கைவிநாயகர், அர்க்கவிநாயகர், பிரசன்ன விநாயகர், வீம விநாயகர், சக்திர விநாயகர் என்று ஆறு மூர்த்தங்கள். இரண்டாம் ஆவரணத்தில், சித்தரூப விநாயகர், இலம்போதர விநாயகர், கூபதர்தவிநாயகர், சலாடகவிநாயகர், குலப்பிரியவிநாயகர், சதுர்த்திவிநாயகர்; பஞ்சமிவிநாயகர், முண்டவிநாயகர், சமுகிகவிநாயகர். விடங்கவிநாயகர், நிசவிநாயகர், இராசபுத்திர விநாயகர், பிரணவ விநாயகர், உபதாபவிநாயகர் என்று பதினான்குமூர்த்தங்கள். மூன்றும்ஆவரணத்தில், வக்கிரதுண்ட விநாயகர், ஏகதந்தவிநாயகர், திரிமுகவிநாயகர், பஞ்சமுக விநாயகர், ஏரம்ப விநாயகர், விக்கினராச விநாயகர், வரதவிநாயகர், மோதகப்பிரிய விநாயகர் என்று எட்டு மூர்த்தங்கள். நான்காம் ஆவரணத்தில், ஏகோபயப்பிரதவிநாயகர், சிங்கமுக விநாயகர், கூர்மதாசூக விநாயகர், நிப்பிரப்பிரசாதவிநாயகர், சிந்தாமணி விநாயகர், தந்தவக்கிர விநாயகர், அபிசண்டி விநாயகர், ஊர்த்துவண்டமுண்ட விநாயகர் என்று எட்டுமூர்த்தங்கள் ஐந்தாம் ஆவரணத்தில், மணிகன்ன விநாயகர், ஆசுரிருட்டி விநாயகர், கசகன்ன விநாயகர், கண்டா விநாயகர், சுமங்கள விநாயகர், மந்திர விநாயகர் என்று ஆறு மூர்த்தங்கள் ஆறும் ஆவரணத்தில் மோதக விநாயகர், சுமுக விநாயகர், துன்முக விநாயகர், கணப விநாயகர், அபர விநாயகர், ஆக்ஞை விநாயகர், துவார விநாயகர், அவிமுத்த விநாயகர், என்று எட்டு மூர்த்தங்கள் ஏழாம் ஆவரணத்தில் ஆமோத விநாயகர், பாரீத விநாயகர், அரிச்சந்திர விநாயகர், கபர்த்தி விநாயகர், பந்து விநாயகர் கணகவிநாயகர்என்று ஆறுமூர்த்தங்கள். இவ்வாறு ஐம்பத்தாறு மூர்த்தங்களென்று தேவகணங்கள் சொல்ல, இத்திருநாமங்களைக் கேட்டமாத்திரத்தில்ஏமகண்டராசன் முதலிய யாவர்க்குந் தெய்வசரீர மூண்டாகிச் சோமகாந்த ராசனுடனே விமானத்திலேறி, விநாய லோகத்தைச் சேர்ந்து, கணேசமூர்த்தியினுடைய சாமீபபதவியைப் பெற்று வாழ்ந்திருந்தார்கள்.

சோமகாந்தராசன் அகண்டாகார பரிபூரண சோதிமயமாகிய விநாயகக் கடவுளுடைய சாரூப பதவியைப் பெற்றுப் பரமானந்த சாகரத்தின்மூழ்கியிருந்தனன். ஆதலால் இந்த மேலான புராணத்தை யாவராயினுஞ்சிரத்தையோடும்பத்தியோடுங்கேட்பாராயின்,

அவர்கட்குச் சரணம். மரணம் இடர், வறுமை, வியாதி, துக்கம், சோகம், மோகம், பாவம், அவரிட்டம், பகை, பயம், இடையூறு, மதம், பசி, கோபம், ஊக்கம், நரை, திரைமுதலிய தன்பங்களில் ஒன்றேனு நெருங்காது அஞ்சியும், சூரிபகிரணமுஞ் சந்திரகிரகண மூமாகின்றகாலத்தில், உருத்திரபூமியிற் சென்று, ஆயிரம் பாரம் பொன்னைக் கிரமப்படி சற்பாத்திர மறிந்து தானஞ்செய்த பயனும் போர்முகத்தி னின்றுஞ் சயம்பெற்று வெற்றிமாலை சூடிவந்தவர்கள் பெறத்தக்கபயனு மடைவார்கள். வேள்விமுன்னிலையில் யாதொரு முதிய சகல பொருள்களையுந் தக்ஷிணையோடு தானங்கொடுத்தவர்கள் அடையும்பயன், இப்புராணத்தை ஒருதரம் வாசிக்கின்றவர்கள் அடையும்பயனுக்குச் சரியாகாது. மேலும் இப்புராணத்தைத் தன் காத்தா லெழுதினவனும், ஒருவனுக்குத் திரவியந் தந்து எழுதுவித்தவனும், கோடி கன்னிகாதானங்களையும் கோடி கோதானங்களையும் நல்லநியமத்தோடு செய்தவன் அடையும் பயன் யாதோ, அதனைத் தடையின்றி யடைவன். இப்புராணத்தை யெழுதிவைத்திருக்கின்றவீட்டில் அஷ்டபாக்கியமும் வந்து குடிகொள்ளும் அன்றியும், பூதங்கள் பிசாசங்கள் பாலககிரகங்கள் முதலானவைகெருங் காவண்ணங் கணேசமூர்த்தியானவர் சதாகாலமுங் குடியாயிருந்து அவ்வீட்டி லுள்ளோர்கட் கெல்லாம் எத்துன்பமும் அணுகவொட்டாதும் பாதுகாத்துவருவார் இப்புராணத்தைப் பூசிக்கின்றவர்களையும், புத்தியிற் சிந்திக்கின்றவர்களையுங்கண்டு தரிசித்தபேர்கள், தங்கள் குலாசார வொழுக்கங்களிற் றவறிய அசுத்தர்களாஞலும், உடனேகத்தவித்திரராகி நற்கதியிற் சேருவா ரென்றும், அதைநேரிற் பூசிப்பவர் முதலாயினோர் அடையும் பயனை எவ்வளவிற்றென்றுரைக்கப்படும்

அந்தப் புண்ணிய சீலர்களை பிரமனுதி தேவர்களாலும் அகத்தியாதி முனிவர்களாலுந் தொழற் குரியவர்கள். அவர்கட்கே, *அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்து

---

* அணிமா மிகவுஞ் சிறிய வுயிர்தோறும் பரமகாஷ்டையாயச் சென்றிருத்தல். மகிமா மிகவுமுயர்ந்த மகமேருவைப்போலாக வேண்டுமெனினலாதல். இலகிமா மேருபாரத்தையொத்த யோகியையெடுத்தால் இலேசாயிருத்தல். கரிமா அணுப்போலிருக்குமியோகியையெடுத்தால் மேருபாரம்போலிருத்தல். பிராப்தி எவ்வுலகத்தினும் தடையறச் சஞ்சரித்தல். பிராகாமியம் பராயப் பிரசேசம்பண்ணுதல், அர்த்தாசஞ்சாஞ்செய்தல், பிராயச்சித்தபோகமனுபவித்

தல், மண்ணில் விண்ணில் உள்ளபொருள்கள், முக்காலங்களையுந் தனது தேக காரியமறிதல். ஈசத்துவம் சிவபெருமானைப்போலத் தன்னிச்சைவழியில் முத்தொழிலுஞ்செய்தல் சூரியன்முதலிய கோள்கள் தன் னேவல்கேட்க விடுக்குதல். வசித்துவம் தேவர்முதலிய உயிர்களையும் எல்லாவுலகங்களையுந் தன்வ சமாகக் கொள்ளுதல்.

வம், வசித்துவம் என்கின்ற அட்டமா சித்திகளுஞ கைகூடும். அவர் கட்கே, கற்பகவிருக்ஷம், காமதேனு, சங்கநிதி, பதுமநிதி, சிந்தா மணி முதலானவைகள் எதிர்நின் றேவல்புரியும் அவர்களே, அக்க ரவிலக்கணம், இலிகிதம், கணிதம், வேதபுராணம், வியாகரணம், நீதிசாத்திரம், சோதிடசாத்திரம், தர்க்கசாத்திரம்,யோகசாத்திரம் மந்திரசாத்திரம், சகுனசாத்திரம், சிற்பசாத்திரம், வைத்திய சாத் திரம், உருவசாத்திரம், இதிகாசம், காவியம், அலங்காரம் மதுரபா டனம், நாடகம், நிருத்தம், சததப்பிரமம், வீணை, வேணு, மிருதங் கம், தாளம், அத்திரபரீக்ஷை, கனகபரீக்ஷை, இரதபரீக்ஷை, கஜப ரீக்ஷை,அசுவபரீக்ஷை, இரத்தினபரீக்ஷை, சங்கிராம விலக்கணம், மல்யுத்தம், ஆகருடணம், உச்சாடனம், வித்துவேடனம், மதன சாத்திரம், மோகனம், வசிகரணம், இரசவாதம், காந்தருவவாதம், பைபீலவாதம், கவுத்துகவாதம், தாதுவாதம், காருடம், நட்டம், மூட்டி, ஆகாயப்பிரவேசம், ஆகாயகமனம், பரகாயப் பிரவேசம், அதிரிசியம், இந்திரஜாலம், மகேந்திரசாலம், அக்கினித் தம்பம், சலத்தம்பம், வாயுத்தம்பம், திட்டித்தம்பம், வாக்குத்தம்பம், சுக்கி லத்தம்பம், கன்னத்தம்பம், கட்கத்தம்பம், அவத்தைப் பிரயோகம் என்கின்ற அறுபத்துநான்கு கலைஞானங்களினும், மதங்மிருதி, அத் திரிஸ்மிருதி, விட்டுணுஸ்மிருதி, வாசிட்டஸ்மிருதி, யமஸ்மிருதி, ஆபத்தம்ப ஸ்மிருதி, யாஞ்ஞவற்கியஸ்மிருதி, பராசரஸ்மிருதி, ஆங்கிரசஸ்மிருதி, உசனஸ்மிருதி, காத்தியாயனஸ்மிருதி, சமவர்த் தஸ்மிருதி, வியாசஸ்மிருதி, பிரகற்பதிஸ்மிருதி, சங்கலிதஸ்மிருதி, சாதாண்மஸ்மிருதி, கௌதமஸ்மிருதி, தக்கஸ்மிருதி, என்னும் பதி னெண்மிருதிகளினும், தத்துவப்பிரகாசிகை,தத்துவசங்கிரகம், தத் துவத்திரய நிர்ணயம் மோகாகாரிகை மோக்ஷகாரிகை, நாதகாரிகை, பரமோக்ஷ நிராசகாரிகை, இரத்தினத்திரயம் என்னும் அட்டப்பிர கரணங்களையும், லௌகிகம், வைதிகம், அத்தியான்மிகம், அதிமார்க் கம், மிச்திரம் என்னும் ஞானநூல்களினும், வல்லவராவார்கள். அவ ர்கள் ஒருகாலத்தில் கோபிட்பார்களாயின், சுவர்க்கமுதலாகிய சக லபுவனங்களும்வெந்து நீறுய்யிடும். அன்றியும், இப்புராணத்தைக்

கணபதிமூர்த்தி சக்திகியின் முன்ன ரிருந்து அன்புடன் கேட்பார் களாயின், அவர்கள், கொலை களவு கள் குருநிந்தை பொய் ஆகிய பஞ்சமாபாதகங்களும், ஸ்திரீஹத்தி, கோஹத்தி, சிசுஹத்திமுத லாகிய அளவற்ற தீவினைகளு நீங்கப்பெற்று, அழகு, குணம், ஆயுள் குலம், சம்பத்து, வித்தை, விவேகம், தனம் என்கின்ற அட்டபாக் கியங்களையும், புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல் நல்லூழ், துகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, தூணிவு, நோயின்மை, வாழ்நாள் எனனும் பதினறுபேற்றினையும் அடைந்து சிடைத்தற்கரிய இந்திரபதவியைப்பெற்று வாழ்வார்கள்.

மேலும் இப்புராணத்தை இம்மையிற் சூத்திரர்கேட்டால் மறு மையில் வைசியராவார்கள் வைசியர் கேட்பாராயின் க்ஷத்திரியரா வார்கள் க்ஷத்திரியர் கேட்பாராயின் பிராமண ராவார்கள். பிராம ணர்கேட்பாராயின் தேவராவார்கள் தேவர்கேட்பாராயின் கணேச மூர்த்தியி னுடைய சாரூபத்தை யடைவார்கள் ஆசாரவீனர்களா யினும் இப்புராணத்தை ஆவலோடுங் கேட்பார்களாயின் பின்னர் தமக்கொருவர் நிகரில்லாத ஆசார பூசிதராவார்கள். கணேசமூர்த் திக்குரிய சதுர்த்தியிற் கேட்டவர்கள் இம்மையிற் சகல காமியார்த் தங்களையும்பெற்று மறுமையில் மோட்சார்த்தத்தை யடைவார்கள் இப்புராணத்தில் ஆங்காங் கறையப்பட்டிருக்கின்ற தோத்திரங்க ளெவ்வளவோ அவ்வளவுந் தினந்தோறும் பாராயணஞ்செய்து வரு கின்றவர்கள் ஆணவம் மாயை கன்மம் என்கின்ற * மும்மலங்களி னின்று நீங்கிக் கணேசமூர்த்தியினுடைய மெய்ஞ்ஞான சொரூபத் தையடைவார்கள். மேலும் இவ்வுலகத்தில் அவர்களால் வெல்லக்கூ டாத காரியமென்ன விருக்கின்றது இப்புராணத்தை ஆதிதொட்டு அந்தம்வரையில் அன்போடுபடித்து அல்லது ஒருவர் படிக்கக்கேட் டுத் தானுதிகளைச்செய்து யாகாதிகளை முடித்து, புராணத் திருமு றையை யலங்கரித்து அருக்கியம், பாத்தியம், ஆசமனீயம், கந்தம் புட்பம், நைவேத்தியம், தூபம், தீபம், ஆலத்தி, கண்ணடி, குடை, சாமரம், ஆலவட்டம், நிருத்தம், கீதம், வாத்தியம் என்கிற சோட

---

* அவை செம்பிற் களிதம்போலவும், தண்டுலத்தைப் பற்றிய தவிடு, உமி, மூனை, போலவும், ஆன்மாவைப் பந்தித்து நின்ற வினைகளை யூட்டுவிக் கும். இவற்றுள் தண்டுலம் (அரிசி) ஆன்மா, தவிடு ஆணவமலம், உமி மாயாம லம், மூனை கன்ம மலமாம்.

சவுபசாரங்களோடு பூப்பிரதக்கிணமாகத் திருவிழாவைச் செய்தவர்கள் விண்டுமுதலாயினோர் வணக்கத்தக்க கணேசமூர்த்தியினுடைய சாரூப்பியத்தையடைவார்கள் இப்புராணத்தைக் கன்னிகை கேட்பாளாயின் நல்ல கணவனைச் சேருவள் மலடி கேட்பாளாயின் அழகிய மக்களைப்பெறுவள். தரித்திரன கேட்பானுயின் மிக்க பாக்கியமுடையவனுவன். வித்தையில்லாதவன் கேட்பானுயின் சிறந்த வித்துவானுவன் அன்றியும் எவனெவன் எந்தெந்தப் பொருள்களையடைய விச்சைகொண்டிருக்கின்றனே அவனவன் அந்தந்தப்பொருளையடைந்து கணேசமூர்த்தியினுலை கிருபையைப்பெற்று வாழ்ந்திருப்பன். இப்புராணமேகள்வி மகத்துவத்தினுலே குறள், கூன், ஊமை, செவிடு, குருடு, மூடம், உறுப்பு மயக்கம், உறுப்பில் பிண்டம் ஆகிய எண்வகையுடற் குறைகளும் நீங்கும். பதினெண் புராணங்களை முழுவதுங்கேட்ட பயனும், சகலதீர்த்தங்களில் அன்போடாடியபயனும், இவ்வொருபுராணத்தைக் கேட்பதினுலுண்டாகும் பதினுயிரம்வருடம் அகுகினிநடுவில் ஒற்றைக்கால் அங்குட்டவிரலை யூன்றித் தவஞ்செய்வதினு லடையுமபேறு இப்புராணத்திற் பத்தத்தியாயதைப் பயபகதிபோடுங் கேட்பதினுல் அடையும். அந்திய காலவாயில் இப்புராணத்தைக்கேட்டுப் பலதானங்களைச்செய்வாராயின், மறுமையிற் சக்ரவர்த்திகளா யிருப்ப தன்றிப் பிறந்தநாட்டொடங்கி மரணகாலம்வாையிற் காசிகரில் வாசஞ் செய்தவர்கட்குண்டான பயனைய மடைவார்கள்.

இப்புராணத்தைப்படித்தல், அதன்பயனைக்கேட்டல், அதைப் பூசித்தல், தங்கள்கையாலெழுதல், எழுதி யேற்போருக்குக் கொடுத்தல், ஒருவரைப்படிப்பித்தல், ஒருவரைக்கேட்பித்தல், ஒருவரைப் பூசிப்பித்தல், ஒருவரைக்கொண் டெழுதுவித்தல் என்கின்ற புண்ணியங்களில் ஒருபுண்ணியதைதைக் கைவிடாது காக்கின்றவனெவனே அவனைக்கண்டவுடன் தவிசளித்தல், கைகழுவ நீர்தரல், கால் கழுவநீர்தரல், ஆசமனநீர்தரல், நீராட்டல், ஆடைசாத்தல், மூப்புரிநூல்தரல், தேய்வைபூசல், மலர்சாத்தல், மஞ்சளரிசிதூவல், தூபம் புகைகாட்டல், விளக்கிடல், கருப்பூரமேற்றல், அமுதளித்தல், அடைகாய்தரல், மந்திரமலரா லருச்சித்தல் என்கின்ற சோடசவுபசாரங்களுள் ஒன்றைச்செய்தாலும அவர்கள் சிவபெருமானுடைய சூலாயுதத்திற்கும், விண்டுவினுடைய சக்கராயுதத்திற்கும், இயமனுடைய பாசத்திற்கும், மற்றெருவனுடைய தண்டத்திற்கு மஞ்சார்கள். சகலபுவன கர்த்தராகிய கணேசமூர்த்திக் கொப்பான மற்

ரெருமூர்த்தியும், அவர்மகிமையைக்காட்டுகின்ற இப்புராணத்தை ப்போல மற்றெருபுராணமும், அதைவாசித்தவர்கள் அடையும்பய

ப்போல மற்றெருபயனும் சுவர்க்கமத்தியபாதலமென்கின்ற திரி லோகங்களினுமில்லை இதுசத்தியமேயென்று சகலசுருதிகளுங்கூறு மாயின் இதன்மகத்துவம் என்போலிகளால் அளவிட் டுணர்க்கும் பான்மையையுடையதோ? பொற்கொன்றை சூடிய சடாமகுடத்தி னியுடைய கணேசமூர்த்தியின் மகத்துவத்தை யோதுகின்ற இப்பு ராணமானது தன்மாத்த காமமோக்ஷமென்கின்ற நான்குபுருஷார் த்தங்களையுஞ் சேமித்துவைத்திருக்கின்ற பொக்கிஷமென் றெண் ணக்கடவீர்கள் என்று சூதமுனிவர் சௌமிசாரணிய முனிவர்களுக் குக் கூறினர்

சோமகாந்தன் முதலியடைந்தபடல முற்றிற்று.

——:0:——

மூவர் உபாசித்த படலம்.

கொற்ற வெண் குடையி னீழற் குவலய முழுதுங் காத்த
வெற்றி வேண் மன்ன வேதன் வியாதனுங் குபதேசித்த
திற்றென லாகு மூவ ரினிதுபா சித்த வாறு
தெற்றெனத் தெளிக வென்று செப்புவன் பிருகு மேலோன்.

ஐம்புலங்களை நிக்கிரகித்து அரிய தவங்களைச் செய்து சிறப் பெய்திய சௌநகாதி முனிவர்களே? விநாயக மூர்த்தியினுடைய புராணகேள்விமகத்துவதத்தால்வேதவியாசமுனிவரும், சோமகாந்த ராசனுமடைந்த பேற்றினைச்சொன்னோம், இப்பால் அத்தன்மைத் தாகிய மேலானபுராணத்தைப் பிருகுமகாமுனிவர் திருவாய்மலர்ந் தருளி யிருக்கின்ற முறைமைப்படி மூவருபாசித்த வரலாற்றினைச் சொல்வோங்கேட்பீராக பூர்வத்தில் ஒருபிரமப்பிரளய முண்டான போது * பன்னிரண்டுசூரியர்களும் உதயமாய் நூறுவருடம் மழை யில்லாமல் எரித்துப் பஞ்சபூத பௌதிகாத்மகமா யுள்ள சகங்களே யெல்லாம் பஸ்மஞ்செய்து பூமியைத் தாங்கிக்கொண் டிருக்கின்ற ஆதிசேடனுடைய பணமகுடங்களைத்தகிக்க, அவனுடைய முகங்க

* பன்னிருசூரியர்களாவன-தாதாதிரு, சக்கரன், அரியமன், மித்திரன், வீட்டுணு, அஞ்சுமான், இரணியன், பகவான், விவச்சுவான், பூடா, சவித்திரு துவட்டன் என்பவராம்.

னினின்றுங் காளகூடவிஷாக்கினிபிறந்தது. அந்த விஷாக்கினியுஞ் சூரியாக்கினியும் ஒன்றுகக்கூடி ஆதிசேடன்முதற் றுவாதசாதித்தர் களையும் எரித்து நீறுக்கும், அவ்வாறுநீறுக்கிய அக்கினிகளினின்று ஞ் சத்தமேகங்கள்பிறந்து நூறுவருடபரியந்தம் யானைத் துதிக்கை போல நீர்த்தாரைகளைவருஷிக்க, அது எங்கும்நிறையும். அவ்வரு ஷஜலமும் பஸ்பமும் ஒன்றுகக்கலந்து வாயுவினுல்ஸ்தம்பிக்கப்பட் டுநிற்க அதினின்றும் வடவாமுகாக்கினிபிறந்து ஜலத்தையெல்லாங் கிரகித்துப் பின்னர் அவ்வடவாக்கினி பிரசண்டவாயுவிலொடுங்கும் அவ்வாயு ஆகாயத்திலொடுங்க, ஆகாயம் ஆன்மாவிலொடுங்க, ஆன் மாப்பிரமாவிலொடுங்க, பிரமா விண்டுவிலொடுங்க விண்டு உருத்தி ரனிலொடுங்க, உருத்திரன் மகேச்சுரனி லொடுங்குவர் மகேச்சுரன் சதாசிவனிலொடுங்க சதாசிவன் வித்துவிலொடுங்க, விந்து நாதத்தி லொடுங்கும், நாதஞ்சத்தியிலொடுங்க, சத்திசிவத்திலொடுங்க, சிவ ம்பரத்திலொடுங்கும் பரம் பராபரத்தி லொடுங்காநிற்கும், அப்பரா பரமொன்றுமே எல்லாங்கடந்த தத்துவமுடிவிலே பரப்பிரமசொரூ பமாகி விளங்காநிற்கும் அப்பிரம சொரூபியாகிய பரமான்மா வான வர் நால்வகைத்தோற்றம் எழுவகைப் பிறப்பு எண்பத்துநான்குநூ றுயிரம்யோனி பேதங்களாயுள்ள * ஆன்மாக்களே பெல்லாம கன்ம ங்கட்கீடான சரீரங்களே யெடுத்து ஆதிதைவிகம் ஆதிபௌதிகம் ஆதியாத்மிகம் என்கின்ற ‡ தாபத்திரயாக்கினிகளாற் றகிக்கப்படுந் துயரங்களைநீக்கிச் சிறிது இளைப்பாறும்படியாகத் தம்மிடத்திலொ டுக்கி வைத்துக்கொண்டிருந்து பிரளயம் நீங்கியவுடன் முன்போ

* நால்வகைத்தோற்றமாவன:—பை-முட்டை-வித்து-வியர்வையாம். எ ழுவகைப்பிறவியாவன: தேவர்-மக்கள்-விலங்கு-புள்-ஊர்வன - நீர்வாழ்வன- தாவரமாம். எண்பத்துநான்குநூறுயிரம் யோனிபேதங்களாவன: தேவர்பதி ஞ்னுநூறுயிரம், மக்கள் ஒன்பதுநூறுயிரம், விலங்கு பத்துநூறுயிரம், புள் பத்துநூறுயிரம், ஊர்வன பதினெரு நூறுயிரம், நீர்வாழ்வன பத்துநூறுயிரம் தாவரம் இருபதுநூறுயிரமாம். ‡ ஆதிதைவிகமாவது மாதாவின் கருப்பத்தி லிருக்கும்போது உண்டாகின்ற விசனமும், சனன மரணத்திலுண்டாகின்ற விசனமும், இயமதண்டனையினலும், ரோகத்தினலும் வருகின்றவிசனமுமாம், ஆதி பௌதிகமாவது குளிர், வெப்பம், மழை, காற்று, மின்னல், இடி சுவர்வி முதல், கல்விமுதல் முதலியவற்றால் வருத்துன்பமாம் ஆதியாத்மிகமாவது சரீ ரத்தினலும் மனதினலும் வரும் துக்கமாம். அதனை "ஆதிதைவிக மாதிபௌ திக-மாதியத்தி யான்மிக மென்ன-வோதிய-துக்கமூன்றில தறியான்மிக-மெ ய்யின் மனத்தினியமி லிரண்டே-வளியிற்பித்தில் வினையும்வீனையி னாலுரு தொழிகோயி னுதிப்பித் தொட்பில்-வெப்பித் தூலியின்மக்களில் விலங்கி-லல

கையிற் கல்வரிற் பறவையி னிருதரின்-மைத்தரின் மகரிளின் மனத்திடைத் தணப்பிற்-பேரறம்வளப்பிற் பெருக்திரு நகர்விற்-ரியபார்வை மாதுயர்மாச மன்னத்துற தரகினேப்பருகுசோக-மறிவுருவாக்க மடைவலன்பொருமைமான மாக்கலம் பூணுத மறுத்தல்-இச்சைபலினேத லிருஞ்சினமிருத-லினேயவை முதலாகினேவருக் கிறத்த-வாதிபெள்கிகஞ் சீதமாமழை-யுருப்பவிர் வேனிலு ட்குவரு கடுங்கா-லிருள் ழிழிடமின்பெருவிறலசனி மன்னுபிர்க்குறுகண் டின்னிய வருந்த-லாதியாய வீவருக்கிறத்த-வாகிதைவிகம் பேதையான்வியன்-கருக் குழியமுங்கல் பிறப்புறும்போது-தினாவருந் தீ கமவையில் பேதைமை-மட ங்கலாருயிர்தொடங்கின வவ்வழி-யாவரு ம் விழைபாக்கோன்வாய் கியத்த-லீ ழ்ந்தனவெழா அவான்கழிதின் ப-கினேபமாலை" என்னும் ஒரறுமிர்தக்செய் யுளானறிக,

லவே அலைகட்குத் * தனுகரண புவனபோகங்களைத் தந்து கன் மங்களைப் புசிப்பித்து அக்கன்மவொப்பில் மலசம்பந்தமா யிராநின் ற பாசபந்தங்களைப்போக்கி முத்தியிற் சேர்க்கு நிமித்தம் மீளவுஞ் சிருட்டி-திதி-சங்காரம் என்கிறமுத்தொழில்களை நடப்பிப்பதற்குத் திருவுளங்கொண்டு வக்கிரதுண்ட விகாயகராகச்சகலீகரித்து இரா சதம் சாத்துவிகம்-தாமதம் என்கின்ற தமது முக்குணங்களி னின் றும் பிரமன்-விண்டு உருத்திரன் என்னு மூவர்களுதித்து வருமாறு அவர்கட்கு உருவையும் அறிவையுமுண்டாக்கியருளினர் அவ்வா றவர்க ளுற்பத்தியாகிய பின்னர்த் தங்களைப் படைத்தருளிப் பரப் பிரமசொரூப மின்னதென் றறியவேண்டுமென்று வெறுவெளிகளை ங்குதேடிக்காணுமல் ‡ ஆயிரக் தேவவருடந் தவஞ் செய்தார்கள். அத்தவத்திற்குப் பரப்பிரம சொரூபியாகிய வக்கிரதுண்ட மூர்த் திக்குக் கிருபைசுரந்து கோடிசூரியப் பிரகாசத்தினும அதிகசோதி யையீசுகின்ற திருவுருவமும் சுவரத்நகிரீடம், குண்டலம், புஜகவ சம், சரப்பளி, பதக்கம், பாதச்சிலம்புமுதலாகிய ஆபரணங்களும், துதிக்கையும், நீண்டு வளர்ந்திருக்கின்ற தந்தங்களும், மதத்தைப் பொழிகின்ற யானேமுகமும்; கத்தி, கேடகம், வேல், வில் என்னுமா யுதங்களைத் தரிக்கின்ற நான்கு திருக்கரங்களும், தாமரைமலர் போன்ற இரண்டு திருவடிகளும், சந்திர ஆரத்தினேயுங் கொன்றை மாலேயினேயுந் தரித்திருக்கின்ற அழகிய மார்பும் சகல லோகங்களை யும் ஓர் கொடிப்போதிற் பஸ்மபடலமாக்கவல்ல நுதல்விழியுங்கொ

---

* தனு - உடம்பு. கரணம் - மன. முதலியகருவி. புவனம் - இடம். போகம் - அனுபவிக்கப் படும்பொருள். ‡ மானுடவருடம் ஒன்று கழித்தால் தேவர்கட்கு ஒருநாளாகும். இப்படி மூன்றூற் றறுபத்தைந்து தினங்கொண் டது ஒருவருடம்.

ண்டு அவர்களெதிரிற் பிரத்தியக்ஷமாக உடனே அம்மூவருக்கும் அச்சமும் அன்புமுண்டாகிச் சரீரந்தடுமாற நெக்குவிட்டு நெஞ்சமுருகிக் கரங்களைச் சிரமேற்குவித்தவண்ணஞ் சரீரமென்றெழுந்து அவர்களிச்சையிற் றோன்றியபடி யெல்லாம் ஆடிப்பாடி அநந்தமுறைவலம்வந்து பூமியில்வீழ்ந்து அட்டாங்கமாக நமஸ்கரித்து ஆனந்தபரவசங் கொண்டு தோத்திரஞ்செய்வ ராயினர்.

கற்பமாய் நிறைந்தவா கந்தபூ ரணமாய்
கிருஷி காரமாய் நிர்க்குண மாயத்து விதமாய்
கிருஷி சேடமாய் நிரஞ்சன மாகியொன் றாலு
கிருபி தப்படாக் கணேசனின் ளீள்கழ றெழுதாம். (க)

பிரம மாயொளி யாய்நிரா காரமாய்ப் பெரிதாய்த்
தரணி யாதிதத் துவமெலாங் கடந்ததத் துவமாய்
வரமெ லாந்தரும் வள்ளலா யேகமாய் வகியும்
பரம ஞகிய கணேசனின் பதமலர் தொழுதாம் (உ)

என்று நீங்குறுத் திருவுரு வுடையதா யெங்கு
மொன்றி நினறுணர்ந் நிடுமறி வானந்த வுருவாய்த்
துன்றும் யோகியர் தியானிக்கப் படுஞ்சுக மாகிச்
சென்று சேர்த்தாக் கணேசனின் றிருவடி தொழுதாம். (ங)

உலக காரண காரண மாயுயிர்க் குயிரா
யிலகு ஞானியர் தமையிழுக் தெய்துநற் பேரூய்ப்
பலவு மாய்ப்பரப் பிரமமாய்ப் பரீசமாய்ப் பரமாய்த்
திலக மாகிய கணேசனின் சேவடி தொழுதாம். (ச)

சகல லோகமும் படைத்தளித தழிக்குந்தற் பரமா
யகில லோகத்தும் புகலிடந் தனக்கிலா வமைவாய்ப்
புகலு லோகங்க ளனைத்திற்கும் புகலிடந் தானும்
பகவ ஞகிய கணேசனின் பதவினை தொழுதாம். (ஞ)

உகத்துக் காதியாய்த் தேவருக் காதியா யுலவாச்
சுகத்துக் காதியாய்ச் சுரர்களுக் கீசராய்ச் சுடரும்
மகத்துக் கீசராய்க் கணங்களுக் கீசராய் மகிப்போ
ரகத்துக் கூடிய கணேசனின் னடியிணை தொழுதாம். (ஞ)

இராச தத்தொழி லாகிய சிருட்டியை யியற்ற
விராவி ராசதத் திருக்கொடி பிரமனுய் மேலாய்ப்

பராவு வித்தைக ளீனைத்திற்கும் பயில்பிறப் பிடமா
யொராது நின்றருள் கணேசநின் ஞெளிர்பதந்தொழுதாம்.

சோர்வி லாதசாத் துவிதநற் றெழிலெனுந் திதிக்குச்
சார்வ தான்தா மதந்தனி லுருவுகொண் டரியரய்த்
தீர்வி லாப்பகை யசுரரைச் செகுத்திடுந் தேவர்க்
கார்வமே யருள் கணேசநின் னருட்பதந் தொழுதாம். (அ)

தாம தத்தொழி லானசங்காரமாற் றுதற்குத்
தோம கற்றுசாத் துவிகத்திற் றேன்றுருத் திரனு
யேம முற்றிமை யோர்முனி வோரெலா மிசைஞ்சச்
சேம வைப்பதாங் கணேசநின் சீரடி தொழுதாம். (கூ)

கிரண பந்தியாற் பயிரையுங் கிளர்சுதை பெருக்காற்
பரவு தேவர்க டம்மையு மகிழ்விதத்துப் பார்ப்பார்க்
கரச ளுயுல கத்துவெப் பறுத்திடுந் திங்கட்
சொருவ மாகிய கணேசநின் றுணையடி தொழுதாம். (ம)

ஒளிப்பி ழம்பதா யோகவா யுவினுரு வாகி
வினிப்பில் காலங்க டொரிப்பதாய்த் தொழிலெலாம் வினைத்துக்
களிப்ப தாய்ப்பல சத்திய தானசெங் கதிராய்த்
தெளிப்ப நின்றருள் கணேசநின் றேசடி தொழுதாம். (ஙக)

நிரப்பி றன்மமாய்த் துறக்கமாய் நிறைந்ததத் துவமாய்த்
தரைச்சொ ரூபமாய்ச் சமுத்திர மாய்த்திசைச் சுராய்க்
கரப்பி லாவுலக னீத்துமாய்க் கலந்துநின் றருளும்
பரப்பி ரமமாங் கணேசநின் பாதங்க டொழுதாம். (ஙஉ)

இவ்வாறு தோத்திரங்கள் செய்து சகலபுவனாதார கர்த்தனே! தேவரீருடைய பாதாரவிந்தங்களைத் தரிசித்தபோகளெல்லாஞ்சகல துன்பங்களும் நீங்கிப் பேரின்ப சுகத்தை யடையத் தக்கவர்க ளா

(அ) தமை—பசுபோதங்களை, நற்பேறு—முத்தி. (இ) நற்பரம் - தன்—ஆன்மாவுக்கு, பரம்—மேலானவன், புகலிடம்—பற்றுக்கோடு, ஆதாரம். பகவன்—ஐசுவரியம், வீரியம், புகழ்-திரு-ஞானம் - வைராக்கியம் - என்னும் அறுகுணங்களையு முடையவன் (சு) மகத்து—மகத்துவம். ஈசர்-மகேசுரர். கணங்கள்—பதினெண் கணங்கள், (அ) சாத்து விகத்தில் தாமதகுணம் வருவினர் விட்டுணு வென்க. (கூ) தாமதத்திற் சத்துவ குணவடிவர் உருத்திரர் என்கண்டுக் கூறிய உருத்திரர் கேண்டருத்திராதாம். தோம்—மூக்குற்றறங்கள்.

வார்கள். அடியேங்களுக் தேவரீரைச் சரணாக வடைந்தோம் யாங் கள் கிருதார்த்தர்க ளாகும்படி இரகஷிக்க வேண்டுமென்றுபிரார்த் தித்தார்கள்,

மூவருபாசித்தபடல முற்றிற்று.

மூவர் வரம்பெறு படலம்.

என்று மூவ ருபாசித்த வியல்பிது வாமென் றன்று நான்முகன் வியாதனுக் கருளிய தாக நன்று தேர்ந்தனை யினியவர் பெற்றநல் வரமு நின்று கேளென நிகழ்த்துவன் பிருகுமா தவனே.

கணேசபாத சேவிதராய முனிவர்களே ! மூவர்கள்மீது சர்வா நுக்கிரகராய், அநாதிமலமுத்தராய், சர்வவியாபகராய் நித்தியராய் நித்தியாநந்தராய், சுவதந்திரராய்-சர்வஞ்ஞராய்-சர்வகர்த்தாவாய் அசலராய், சின்மாத்திரமூர்த்தியாய், அதுலராய், அநிருக்குமராய், அநிமகானுய், சாந்தராய், சர்வதோமுகராய், நிருபாதிகராய் சுவ பாவப்பிரகாசராய் அநுபரமாப்தசகியாயுள்ள விநாயகக்கடவுள் கிரு பை வைத்து திருநோக்கஞ் செய்தருளித் திருவாய் மலர்ந்தருளு கின்றார். அன்பர்களே ! நீங்கள் செய்த தோத்திரங்கட்கு மகிழ் புற் றோம். நீங்கள் கருதிய வரங்களைக் கேட்பீராகவென்று திருவாய் மலர்ந்தருளலும், பரப்பிரமசொரூபியே ! தேவரீருடைய திவ்யசர ணாவிந்தங்களில் அடியேங்களுக்குத் திரமான பத்தி யுண்டாகும் படி வரங்கொடுத்து, யாங்கள் நடத்துகொள்ளவேண்டிய பணியினை யும் அருள்செய்தால், அதை அடியோங்கள் நன்முடிக்குப் பொன் முடியாக வணிந்து, நடாத்திவரக் கடவோமென்றார்கள். அதற்கு விநாயகக்கடவுள் சந்தோஷித்து நமதுமுக்குணங்களினின்று மூண் டானவர்களே, நம்மிடத் துங்கட்கு அளவற்ற பத்திகள் பெருக்கத் தக்கதான வரத்தைத் தந்தோம் நீங்கள் நடத்துகொள்ளவேண்டிய பணியுஞ் சொல்லுகின்றோம். அதாவது இராசத வடிவிற்றோன்றிய பிரமனே ! நீ இராசத தாமத நீழலிலிருந்து சகல சீவராசிகளையுஞ்

(கக) கிரணபத்தி—சூரியகிரணவரிசை. சுதை…(சந்திரனது) அமிர்தகி ரணம் சொருவம் ஸ்வரூபம் என்னும் வடமொழித் திரிபு வடிவம் ஏன்பது பொ ருள். (கஉ) தத்துவம்—உண்மைப்பொருள் நிசைச்சரர்—இக்குப் பாலகர் தன்ரை—பூமி.

சிருட்டிசெய்யக்கடவை தாமதவழிபிற்றோன்றிய விண்டுவே ! நீசா
தீமீகத் தொழிலிலிருந்து யாவையுமிரட்சித்து வாக்கடவை. சாத்
விக வடிவிற்றோன்றிய உருத்திரனே ! நீ தாமதத்தொழிலிலிருந்து
யாவையுஞ் சங்காரஞ்செய்து வரக்கடவை யென்றருளிச்செய்து,
வேதாகமபுராண கலிகளைக்கொண்டு யாவையுஞ் சிருட்டி செய்யத்
தக்க சத்தியைப் பிரமனுக்கும் யோகத்தினல் வேண்டிய வடிவங்க
ளைக்கொண்டு யாவையும் இரக்ஷிக்கத்தக்க சத்தியை விண்டுவுக்கும்,
ஏகாக்ஷர சடாக்ஷர மந்திரங்களைக்கொண்டு எங்குந் தானேயிருந்து
யாவையுஞ் சங்காரஞ்செய்யத்தக்கசத்தியை உருத்திரருகுங் கொ
டுத்தருளினர்.

மூவர் வரம்பெறுபடல முற்றிற்று.

விசுவரூபங் காட்டியபடலம்.

இன்ன வாவர மூவரும் பெற்றதென் றெறிவேன்
மன்னர் மன்னவன் மகிழ்கொள வுரைத்தருள் வரதன்
றன்னுளேயுல கனைத்தையுங் காட்டுதன் மையையு
முன்னி யோதுத றொடங்கினன் முதிர்புகழ்ப் பிருகு.

சௌநகாதி முனிவர்களே ! விநாயகமூர்த்தியைப் பிரமன்முத
லியமூவருஞ் அதட்டித்து வரம்பெற்றவரலாற்றினைச்சொன்னேம்.
இப்பால் அம்மூவருக்குந் தமது விசுவரூபங்காட்டி யருளிய திருவி
ளையாடலைச் சொல்லுவோங் கேட்பீராக இவ்வாறு கணேசமூர்த்
தியானவர் அம்மூவருக்கும் வரங்களை யளித்த பின்னர், பிரமதே
வன் மீளவும் வணங்கித்துதித்து தேவோத்தமராகிய சிருபாகரமூர்
த்தியே ! உலகங்களையெல்லாம் அடியேனைச் சிருட்டிசெய்யும்படியா
கத் தேவரீர் கிருபைசெய்தலால், அவைகளை யெவ்வாறு சிருட்டி
செய்வதோ அதனையுங் கடாக்ஷித் தருளவேண்டுமென்று இரந்த
னன். அதற்குக் கருணாகரமூர்த்தியாகிய வக்கிரதண்ட சுவாமிகள்
அவன்மீது கடைக்கண் புரிந்து, பிரமனே ! நீ தமது உதரத்துள்ளே
புகுந்து, அங்கிருக்கின்ற சகலலோகங்களையும் பார்த்து, அவ்வாறே
சிருட்டிசெய்யக்கடவையென்று திருவாய்மலர்ந்து, தமதுதிருக்கை
யிலிருக்கின்ற புழையின்வழியாக அப்பிரமனைவெளித் தள்ளிமூங்கினர்.
அதைப்பார்த்துக்கொண்டிருந்த விண்டுவும் உருத்திரரும் அவ்விரை

யகக்கடவுளைத் தீர்க்கதண்டன் செய்து கைகூப்பிநிற்க, அவர்களையும் அப்புழையின் வழியாகவேயெடுத்து விழுங்கினர் பின்னர் அம்மூவரும் அவர் வயற்றினுளிருந்து பார்க்குமளவில், அதில் அளவிறந்த அண்டங்கள் அடங்கியிருப்பக் கண்டார்கள்.

அகட்டையே யளவிறந்த வண்டங்க ளுறக்கிடந்த
பகட்டெழில்சே ரவற்றென்ற னுட்புகுந்து பார்ப்பளவிற்
றகட்டுவரா லுகளகடல்சூழ் தரைகடுவு மதன்கீழ்மேன்
முகட்டளவும் பலவுலகு முதிர்வளத்தி னீரந்தனவால். (க)

நாதங்க ளோரிடண்டாய் கலமருளுஞ் சதாசிவமாய்ப்
பாதங்க ளொருகான்கும் பதகான்கும் பயில்வித்த
வேதங்க ளறியாத விநாயகர்தந் திருவருளாற்
பூதங்க ளோரைந்தும் புரையின்றி யெதிர்கண்டாம். (உ)

பண்டையூ ழிகடோறும் படைத்தவரும் பரித்தவரு
மண்டுபே ருலகனைத்தும் வருத்தமறத் துடைத்தவருங்
கொண்டபே ரதிகாரங் கொள்ளாது விடுத்தருளே
கண்டுபே ரானந்தக் கடன்முருக வெதிர்கண்டாம். (கூ)

அதிகாரம் புரிகின்ற வலரவனு மாயவனு
நதிபாயுஞ் சடைமவுலி நாயகனு மெண்டிசையின்
வதிவோரு மருக்கருருத் திரர்வசுக்கண் மருத்துவருங்
கதிசேரு நவகோளுங் காதலிப்ப வெதிர்கண்டாம். (ச)

கின்னரர்தங் திருவர்கரு டர்களியக் கர்கிம்புருடர்
தங்கிகர்விஞ் ஞையர்சித்தர் சாத்தியர்பன் னகருரகர்
துன்னியமற் றமரரையுந் தொகுசுர ரரக்கரையு
மன்னியவன் னவர்க்குரிய மாதரையு மெதிர்கண்டாம். (டு)

ஓவிலருட் சனகாதி யோகியர்நா ரதராதி
தேவர்முனி வரர்வசிட்டர் முதலாகச் செப்பலுறும்
பாவுபுகழ் பிரமமுனி வரர்பயின்மா னிடர்தமையுந்
தாவின்மலே கடலாறு தடமிவையு மெதிர்கண்டாம். (கூ)

சிங்கமுதன் மிருகங்க டிகழ்கனிமூன் முதற்பறவை
தங்கியதற் பகமாதி தருகாம வல்லிமுதற்
கொங்கிணர்ப்பூங் பசுங்கொடியம் புயமாதி பலமலரும்
பங்கமறு சராசரமாம் பரப்பினைத்து மெதிர்கண்டாம். (எ)

அவ்வண்டங்களாகிய எண்ணிறந்தன. ஒவ்வொரு அண்டங்களிலும் எண்ணில்பேதமான விசித்திர சிருட்டிகள் காணப்பட்டன, அவையாவன.—

மேலுலகங்களாகிய—பூலோகம்-புவலோகம்-சுவலோகம்-சன லோகம்-தபோலோகம்-மகாலோகம் சத்தியலோகம்-என்பவற்றையும்,

கீழுலகங்களாகிய - அதலம்-விதலம் சுதலம்-தராதலம்-இரசாதலம் மகாதலம்-பாதலம்-என்பவற்றையும்,

கவ வடிவங்களாகிய—சிவம்-சத்தி-நாதம-விந்து-சதாசிவன்-மகேசுரன்-உருத்திரன்-விஷ்ணு-பிரமன் எனபவற்றையும்,

நான்கு பாதங்களாகிய—சரியை-கிரியை- யோகம்-ஞானம்என்பவற்றையும்,

நான்குமுத்திகளாகிய—சாலோகம் - சாமீபம் சாரூபம் - சாயுச்சியம் என்பவற்றையும்,

பூதங்களாகிய—பிருதிவு-அப்பு-தேயு-வாயு- ஆகாயம் என்பவற்றையும்,

நிலங்களாகிய—குறிஞ்சி பாலை-முல்லை - மருதம் நெய்தல் என்பவற்றையும்,

உலோகங்களாகிய—பொன்-வெள்ளி-செம்பு-இரும்பு - ஈயம் என்பவற்றையும்,

மணிகளாகிய—கோமேதகம்- நீலம் பவளம்-புஷ்பராகம் - மரகதம் மாணிக்கம் முத்து-வைடூரியம் வைரம் என்பவற்றையும்.

தீவுகளாகிய—நாவல்-இறவி-சூசை-கிரௌஞ்சம் புஷ்கரம்- தெங்கு-கமுகு என்பவற்றையும்,

வேதங்களாகிய—இருக்கு-யசுர் - சாமம் அதர்வணம் என்பவற்றையும்,

உப வேதங்களாகிய—ஆயுள்வேதம்-அருத்தவேதம்-தநுவேதம் காந்தருவவேதம் என்பவற்றையும்.

வேதாங்கங்களாகிய—மந்திரம்-வியாகரணம்- நிகண்டு-சந்தோவிசிதி-நிருத்தம்-சோதிடம் என்பவற்றையும்,

சாத்திரங்களாகிய—வேதாந்தம்- வைசேஷிகம்-பாட்டம்-பிரபாகரம் பூர்வமீமாஞ்சை-உத்தரமீமாஞ்சை என்பவற்றையும்,

சாதிகளாகிய—பிரமணசாதி-க்ஷத்திரிய சாதி-வைசியசாதி-சூத்திர சாதி என்பவற்றையும்,

ஆச்சிரமங்களாகிய—பிரமசரியம்-கிருகத்தம்-வானப்பிரத்தம் - சந்நியாசம் என்பவற்றையும்,

திக்குப்பாலகர்களாகிய — இந்திரன்- அக்கினி-யமன்-நிருதி-வருணன் வாயு-குபேரன்-ஈசானன் என்பவர்களேயும்,

சூரியர்களாகிய—தாதது ந- சக்ரன்-யமன் - மித்திரன் - வருணன்- அஞ்சுமான்-இரணியன்-பகவான்-விவச்சுவான்-பூடணன்-சவித்துரு-துவஷ்டா என்பவர்களேயும்,

உருத்திரர்களாகிய—மகாதேவன்-அரன்- உருத்திரன் - சங்கரன்-நீலலோகிதன்-ஈசானன்-விசயன்-வீமன்-பவன் கபாலி-சௌமியன் என்பவர்களேயும,

வசுக்களாகிய— அனலன்-அணிலன்-ஆபற்சைவன்-சோமன்-தரன்-துருவன்-பிரதியூசன்-பிரபாசன் என்பவர்களேயும்,

வாயுக்களாகிய—பிராணன்-அபானன்-சமானன்-உதானன்- வியானன்-நாகன்-கூர்மன-கிருகரன்-தேவதத்தன்-தனஞ்சயன் என்பவர்களேயும்.

கிரகங்களாகிய—சூரியன்-சந்திரன்- அங்காரகன் புதன் - பிருகற்பதி சுக்கிரன்-சனி-இராகு-கேது என்பனவற்றையும்,

புறப்புறச்சமயங்களாகிய—உலகோயதம் - நால்வகைப் பௌத்தமம்-ஆருகதம் என்பவற்றையும், அவற்றுள் - சௌத்திராந்திகம், யோகாசாரம, மாத்மீகம், வைபாஷிகம் என்பன பௌத்தமதப் பிரிவாம்,

புறச்சமயங்களாகிய—தார்க்கிகம்- மீமாஞ்சை-மாயாவாதம் - சாங்கியம்-யோகம்-பாஞ்சராத்திரம் என்பவற்றையும்,

அகப்புறச்சமயங்களாகிய—சைவம் - பாசுபதசைவம்-மகாவிரத சைவம்-காளாமுகசைவம்-வாமசைவம்-பைரவசைவம் என்பவற்றையும்,

அகச்சமயங்களாகிய—பாஷாணவாதசைவம் - சங்கிராந்த வாதசைவம்-அவிகாரவாதசைவம்-பரிணமவாதசைவம் - சுத்தசைவம்-பேதவாசசைவம் என்பவற்றையும்,

கணங்களாகிய—தேவர்-சித்தர்-அசுரர்-தைத்தியர்-கருடர் - கின்னரர்-நிருதர்-கிம்புருடர்-காந்தருவர்-இயக்கர்-விஞ்சையர்-பூதர் பைசாசர்-அத்தசர் முனிவர்-உரகர்-ஆகாயவாசிகள்-போகபூமியர் என்பவர்களேயும்

குலமலைகளாகிய—அயிலை-இமயம்-மந்தரம் விந்தம்-நிடதம் - ஏமகூடம் நீலம் என்பவற்றையும்,

மேகங்களாகிய—சம்வர்த்தம்- ஆவர்த்தம் புஷ்கலாவர்த்தம் - சங்காரித்தம்- துரோணம்-காளமுகி-நீலவருணம் என்பவற்றையும்,

சமுத்திரங்களாகிய—உப்புச் சமுத்திரம்-சுக்தோதக சமுத்திரம்-பாற்சமுத்திரம் தயிர்ச்சமுத்திரம் - நெய்ச்சமுத்திரம் - கருப்பஞ் சாற்றுச்சமுத்திரம் தேன்சமுத்திரம் என்பவற்றையும்,

நதிகளாகிய—கங்கை - யமுனை-சரசுவதி- நருமதை-காவேரி-குமரி-கோதாவரி என்பவற்றையும்.

அந்தந்த அண்டங்கள்தோறும் சென்று அளவிறந்த யோனிகளில் அகந்தம்பேர்களாக விளங்கியிருக்கின்ற சகல ஜீவராசிகளையும் கண்டார்கள். கடற்கரையின்கணுள்ள துண்ணிய மணல்களையெண்ணி அளவிட்டாலும் அவ்வக்கிரதுண்டமூர்த்தி வயிற்றினுளிருந்து அம்மூவர்கள்கண்ட சராசரப் பிரபஞ்சங்களையெல்லாம் என்போலிகளால் அளவிட்டுரைக்கற் பாலவோ? இவ்வாறு அளவற்றகாலமங்ஙனேயிருந்து சகலகாரியங்களையும்பார்த்து மீளவும் வெளியில் வரவேண்டுமென்று யத்தனித்தார்கள். அதற்கு அவர்களாலாகாமல் அவருதரத்திலிருந்த வண்ணமே அவர் திருவடிகளைச் சிந்தித்து வேதாகமங்களாற் பலவாறு துதித்தார்கள். அத்துதிகளைக் கேட்டவுடன் வக்கிரதுண்ட சுவாமிகளுக்குக் கிருபைசுரந்து பிரமனேத்துதிக்குரத்தினின்றும், விண்டுவையும் உருத்திரரையும் இரண்டு செவிகளினின்றும் வெளியில் வரவிடுத்துத் தமது திருவுருவைக் காத்தருளினர்.

விசுவரூபங்காட்டிய படலம் முற்றிற்று.

பிரமசிருட்டிப் படலம்.

புகுந்தவழி யேயெண்ணிப் புறத்துப் போக்கிப்
பொலங்குழைசே ரிருகாதின் வழியே பைத்தேன்
றெகிழ்ந் தொழுகு மலர்த்துளவ வித்தழி மாலைத்
தேவரையும் புறம்விடுத்தா னென்றுவேத
னெகிழ்ந்தவுள வியாதனுக்குப் புகன்றனென்று
நெடியதவப் பிருகுமுனி சோமகாந்த
னகந்தழைய வுரைத்தயனு ருத்ர மீளா
வருந்தவஞ்செய் தாக்கியுறு மறையைப் புக்கான்.

சிவஞான சாதனச் செல்வர்களே ! விநாயக மூர்த்தியானவர் பிரமன்முதலிய மூவர்கட்குந் தமது விசுவரூபங்காட்டியருளிய திருவிளையாடலைச் சொன்னேம் இப்பால் பிரமனுலகங்களைச் சிருட்டித்த முறைமையைச் சொல்வோங் கேட்பீராக, இவ்வாறு கணேச மூர்த்தியானவர் தமது விசுவரூபத்தைக் கரந்தருளியபின்னர்ப்பிரமன் உலகங்களைச் சிருட்டிசெய்வதற்காரம்பித்தான், அப்போதுதான்கு வேதங்களாலும் அளவிட்டுரைத்தற்கரிய அவ்வக்கிரதண்ட மூர்த்தியினுடைய சொரூபத்தை மனதிற் றியானித்து, சுவாமி!யானெடுத்த காரியத்தை விக்கினமின்றி நிறைவேற்றவேண்டுமென்று பிரார்த்தித்துத் தொடங்கவேண்டுமென்பது சற்றுந் தோற்றுமல் காமே செய்பலாமென்னு மமதைகொண்டு செய்வதாயினன். அக்காரணத்தால் அவன் நினைத்த ரூபங்களுண்டாகாமல் ஒருதலையும் இரண்டுமுகங்களும் மூன்றுகண்களும் நான்கு சிகைகளும் ஐந்துகாதுகளும் ஆறுகால்களும் ஏழு கைகளுமாக உயர்ந்தசரீரங்களைக்கண்டு அப்பிரமன் பயந்து நடுங்கத்தக்கதான அளவற்ற விகார உருவங்களுண்டாயின பின்னர் இவ்வுருவங்களெல்லாம் அவனைக்கண்டு சில ஊர்ப்பரிக்கின்றனவும். சிலபெருங்கைசெய்கின்றனவும், சிலஅடிப்பதற்கு எழுந்திருக்கின்றனவும், சிலபேசுகின்றனவும் சிலகண்களை யுருட்டிப்பார்க்கின்றனவும், சில அலங்துவிழுந் தள்ளுகின்றனவும், சில பிடிக்கின்றனவும். சில கடிக்கின்றனவுமான பற்பல துன்பங்களைச்செய்தன இக்காரணத்தால் அப்பிரமனுனவன் புந்திகலங்கிஇவ்வாறுன விக்கினங்கள் வருவதற்கென்னவேது? என்று ஒன்றுந் தோன்றுமல் மனத்தளர்ச்சியடைந்திருக்கையில் திரிலோகத்திரங்களோடும் பிரகாசிக்கின்ற யானைமுகத்தினையுடையவக்கிரதண்டமூர்த்தி நமக்கு அங்கைகெல்லிக்கனிபோல விருந்து ஆட்கொண்டருளியிருக்க அவரைக்கருதாது நமது சுயாதிகாரத்தாற் சிருட்டி செய்யத்தொடங்கிய காரணத்தாலல்லவா இவ்வித விக்கினங்கள் வரலாயிற்றென்னுமோரெண்ணம் அக்கடவுள் அநுக்கிரகத்தால் அவனுக்குண்டாகலும், இனி அவ்விக்கின கர்த்தரைப்பணியாது இவ்விடையூறுகள் நீங்காவென்று மனந்தெளிந்து உடனே ஸ்நானஞ்செய்து திருவெண்ணீறு தரித்துக் கிருபாமூர்த்தியாகிய விநாயகக் கடவுள் ஸ்வரூபத்தை மனதிற் றியானித்து யோகத்திலிருந்தான்.

அவ் வியோகத்திற் சத்தசாகரங்களும் ஒன்றுமிக்கலவாது போகின்ற சலப்பிரவாகத்தில் ஓர் ஆலிலையும், அவ்வாலிலையில் ஓர்குழந்

தைசயனித்து நித்திரை செய்வதாகவும், அக்குழந்தையருகில்தான் சென்று கையோச்சி அந்நித்திரையைத் தெளிவித்ததாகவும், அப் போ தக்குழந்தை யானவதனத்தையுடைய விகாயக ஸ்வரூபமாகி தரிசனங் கொடுத்ததாகவுங் கண்டு, உடனே அக்கடவுள் திருவடிக ளைப் பணிந்து தேவரீர் அடியேனச் சிருட்டிசெய்ய ஆக்கியாபித்த வண்ணம் யான் செய்யத் தொடங்குகையில் அனேக விடையூறுக ளுந் தன்பங்களும் உண்டாயின. இனி அவைகளின் மிச்சி நட்டிசெ ய்யுமாறு அதுக்கிரகிக்கவேண்டுமென்று பிரார்த்தித்ததாகவும், அத ற்கவ்விகாயகமூர்த்தி பிரமனே ! நமது கிருபையினும் சகலமாகவே ண்டுவதென்றெண்ணமல் உன்னுடைய நிருவாகங்கொண்டே செய் துமுடிக்கலாமென்றெண்ணி யாரம்பித்ததனை ஆதலால் இத்தனை இடையூறுகளுனக்குண்டாயின வெனியிடையூறின்றிசிருட்டிசெய் வதற்கு நமது ஏகாக்ஷரமந்திரத்தைப் பததுலக்ஷமுருச்செபித்தால் அச்செபமுடிவில் யாம்வந்து மற்றவிபரங்களையும் அனுக்கிரகிக்கின் றோமென்று திருவாய்மலர்ந்தருளி, அவ்வேகாக்ஷர மந்திரத்தைத் தனக்குபதேசித்ததாகவுங் கண்டான் பின்னர் லோகதையைவிட்டு மனவுறுதிபெற்றுத் தாமரைமலரிலொருகாலூன்றி அவ்வேகாக்ஷ ரமந்திரத்தைப் பன்னிரண்டு வருடஞ் செபஞ்செய்தான். அச்செப முடிவில் தமக்கொருவ ரொப்பில்லாதவராகியும் தான்குவே தங்கட்குமெட்டாத பரிபூரணராகியும், அரையிற் சப்பக்கச்சினை வீக்கியிருக்கின்ற விகாயகமூர்த்தியானவர் ஒருகரத்தில் மழுவாயுத மும் ஒருகரத்திற் கமண்டலமும் மற்றவிரண்டுகரங்களாகிய அபய விரதமுங்கொண்டு அவனெதிரிற் பிரத்தியக்ஷமாகித் தரிசனங் கொ டுத்தருளினர். உடனே அப்பிரமன் நமஸ்காரஞ்செய்து அளவற்ற ஆனந்தத்தோடுந் தோத்திரஞ்செய்வானுயினன்.

தோற்றுமே யுலகனைத்துந் தோற்றியளி யாதளித்துப்
பாற்றுமே பாற்றியிடும் பண்ணினின் பதம்போற்றி
தேற்றுமே யுயிரனைத்துந் தேற்றிமல மாயைகண்ம
நீற்றுமே நீற்றியரு ணின்மலநின் பதம்போற்றி.

உரையாலு முணர்வாலு முடலாலு மறிவரியாய்
வரைமார்புந் திணிதோளிமதிமுடியு மலர்ப்பதமும்
விரையார் குங்குமக் கலவை மெய்யணிந்த கோலமுமாய்க்
கரையா நெஞ்சமுங் கரையக் கண்ணெதிர்நின் றினைபோற்றி.

இவ்வாறு செய்ததோத்திரங்கட்கு விநாயகக்கடவுள் கிருபை புரிந்து நீ கருதிய வரங்களைக்கேளென்று திருவாய்மலர்ந்தருளினர் அதற்கப்பிரமதேவன் மீளவுஞ் சேவித்தெழுந்து தேவதேவே! தேவரீருடைய பாதாரவிந்தங்களை எக்காலத்து மறவாதிருக்கத் தக்க வரமும், இவ்வுலகத்தை விக்கினமில்லாமற் சிருட்டி செய்யத்தக்க சத்தியும், அடியேனுக் கருங்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தான், அவ்வாறே யநுக்கிரகஞ்செய்து பிரமனே! நம்மிடத்திருக்கின்ற அநந்தசத்திகளிற் கிரியாசத்தி ஞானசத்தியென்றிரண்டு சத்திகளுண்டு அந்தச்சத்திகளை நீ தியானித்துஉன்சிருட்டித்தொழிலை நடத்தக்கடவையென்று கிருபைசெய்து தமது திருவுருவத்தைக் கரந்தருளினர் இவ்வாறவ் விநாயகக்கடவுள் கொடுத்தருளிய வரங்களைப் பிரமனே சிரமேற்கொண்டு அவ்விரண்டு சத்திகளும் வரவேண்டித் தியானித்தவுடன் அவர்கள் தங்கட்கு வேறொருவர் நிகரில்லாத பேரழகை வாய்ந்து சித்திபுத்தியென்னும் பெயரோடும் அவனெதிரிற் றோன்றினர்கள். அவ்விருவரகளையும் பிரமன் நீர்க்கதண்டஞ்செய்து, என்றவக்கொழுந்தாகிவந்த அன்னையர்களே! அடியேனுக்கு எக்காலத்துமிடையூறு வராமற் காத்துக் கிருபை புரிந்தருளுநிமித்தம் நீங்களிருவரும் அடியேன் அருமைப் புத்திரிகளாகவிருக்கும்படியான வரங் கொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான். அவ்வாறே அவ்விரண்டு சத்திகளுமிசைந்து வரங்கொடுத்தார்கள். பின்னரெளிதின் முத்தியடைந்தவர்கட் கொப்பாகப் பிரமன் முகமலர்ந்து ஆநந்தித்து விநாயகக்கடவுள் இச்சித்திபுத்திகளோடும் வீற்றிருப்பதாகப் பாவித்துத் தியானஞ்செய்து மீளவுஞ் சிருட்டிசெய்வதற் காரம்பித்தான்.

அப்போது ஓரிடையூறுமில்லாமல் தன்மனத்தினுல் ஏழுபுத்திரர்களைச் சிருட்டிசெய்து அவர்களை நோக்கி நீங்கள் இவ்வுலகத்தை பழுதில்லாமற் படைக்கக் கடவீர்களென்று கட்டளையிட்டான் அதற்கவர்களொவ்வாமல் துறவிகளாய்ச்சென்று தவத்தினைச்செய்து முத்தியடைந்தார்கள். மீளவும் ஏழுபுத்திரர்களைச் சிருட்டிசெய்தனுப்பினன். அவர்களும் அவ்வாறேசென்று முத்தியடைந்தார்கள். அதன்பின்னர் சனகர்-சனந்தனர்-சனாதனர்-சனற்குமாரர் என்கின்ற நால்வரோடு நாரதரையும் சிருட்டித்துப் பிராமணர்களையும், அக்கினியையும் தனது முகத்தினின்றும் க்ஷத்திரியர்களைப் புயத்தினின்றும், வைசியர்களைத் தொடையினின்றும், சூத்திரர்களைப் பாதத்தினின்றும், சந்திரனைச் சித்தத்தினின்றும், சூரியனை விழியினி

ன்றும், இந்திரனே வதனத்தினின்றும், பிராணன்முதலாகிய மருத்துக்களைச் செவியினின்றும், ஆகாயத்தை உந்தியினின்றும் தேவலோகமுதலான மேலுலகங்களை முடியினின்றும், பாதலம்முதலான கீழுலகங்களைத் திருவடியினின்றும், திசைக்காதிதிசைகளைக் காதினின்றும் இவ்வாறே பருவதங்கண் முதலான சகலசராசரங்களையுஞ் சிருட்டிசெய்தான். அதுமுதல் இவ்வுலகமானது உருத்திரன் விண்டு-பிரமன்-அக்கினி சலம் பூமி-ஆகாயம்-வாயு-திக்குப் பாலகர்-மநுக்கள் முனிவர்கள்-வசுக்கள்-இயக்கர்கள் மிருகங்கள் மற்றஉயிர் வர்க்கங்கள் என்னும் இருபத்தொரு வகுப்புடனே பொருந்தியிருக்கின்றது.

பிரமசிருட்டிப் படலம் முற்றிற்று.

திருமணப்படலம்.

தொழுகுல மாகிமுன்னர்த் தோன்றிய மகளிர் பின்னர்
பழுதறு தேவயாங்குப் படர்ந்தனர் தெரிக்க வென்ன
விழுமிய வியாதன் கேட்ப வேதனுண் மிழற்தன்னேர்தஞ்
செழுவிய திருக்கல்யாணத் திறத்தினைச் செப்பலுற்றான்.

முனிவர்களே! கணேசமூர்த்தியினுடைய திருபையாற் பிரமலுகங்களைச் சிருட்டித்த வரலாற்றைச் சொன்னேம். இப்பால் அப்பிரமன் புத்திரிகளாகிய சித்திபுத்திகளைக் கணேசமூர்த்தி திருமணஞ்செய்துகொண்ட வைபவங்களைச் சொல்வோம் கேட்பீராக. பிரமதேவன் மேற்கூறிய முறைமைப்படி சகல வண்டங்களையும் படைத்தவுடன் ஆன்மகோடிகள் பலவுமோங்கி நிலைபெற்று வாழ்ந்தன. பின்னர் ஒரு காரணமாக விநாயகமூர்த்தியானவர் கைலாயகிரியிலே சிவபெருமானுக்குப் புத்திரராக அவதரித்திருந்தார், அக்காலத்தில் மகாதவசிரேஷ்டராகிய காசிபமுனிவர் அக்கிர்மலசொரூபியாகிய கணேசமூர்த்தியின் பாதபதுமங்களைப் போற்றுதற்குக் கைலாயபர்வதத்தை நோக்கி மிக்க ஆவலோடுசென்று அப்பர்வதத்தின்கண் பொன்மயமாக விளங்குஞ் சபாமண்டபத்தின் முகப்பில் இரத்தினமயமா யோங்கிய சிங்காதனத்தின்மீது தேவகணங்கள் புடைசூழ்ந்து போற்றுதல்செய்ய வீற்றிருக்கின்ற விநாயகமூர்த்தியைக்கண்டு, அவரது திருவடிக்கமலங்களிற் பணிந்து களிப்புடன் முதித்து வீணையிற் கட்டுண்டிருக்கின்ற ரம்புகளைத்தடவி இசை

யாகிய புதியவமுதத்தை நிறைத்துக் கர்த்தன் புகழைப்பாடி அவர் திருவருளைப்பெற்று இதனைவிண்ணப்பஞ் செய்வாராயினர்

சர்வபரிபூரண கருணாசாகரமூர்த்தியே ! தேவரீரிடத்தில் அடியேன் தெரிக்கதுக்கொள்ளவேண்டுவதொன் றிருக்கின்றது. அதனை விண்ணப்பஞ்செய்யச் செவிகொடுத் தருளவேண்டும். அதாவது தாமரைமலரை யாசனமாகக்கொண்ட பிரமதேவர் முன்னர்தமது தியான சிந்தையினின்றும் உதித்தவர்களாகிய இரண்டு கன்னியரைத் தேவரீர்குத் திருக்கல்யாணஞ்செய்வதான வோரெண்ணத்தையுடையவராயிருக்கின்றீர். அன்றியும் அப்பிரமதேவரே * இலக்கணம் அமைந்த மைந்தர்களை இனிமையாகப் படைக்குங்காலத்தில் மும்மலக்குறும்புகளை நீக்கவல்ல தேவரீர் திருவுருவங்களையெண்ணுவார் மாட்சிமைபெற்ற மங்கையரைப்படைக்குங் காலத்தில் யாவருந் துதித்தற்குரிய அம்மாதர்கள் வடிவங்களை முற்றுங்கருதுவராயின், சுவாமிகள் வனப்பினுக்கேற்ற அவர்கள் பேரழகின் பெருமைகள் இவ்வளவினவென்று அடியேனுளவிட்டுரைக்கற்பாலவோ ஆயினும் எனதறிவிற் புலப்பட்டவாறு அவர்கள் பாதாதிகேசமுதலிய அவயவ விலக்கணங்களைச் சிறிது கேட்டருளவேண்டுமென்று பிரார்த்தித்துச் சொன்னதாவது —

பருத்திடையுஞ் சுருங்குதலுமில்லாது மிருதுவாகி அனிச்சமூலரின்மேல்வைத்தாலுங் குழைந்து வெப்பமடைந்து, கொடிரேகை, மச்சரேகை கவிரேகை, சங்கரேகை, சக்கரரேகை முதலான பலரேகைகளைப்பொருந்தி, அழகியசெந்தாமரை மலரைவென்று சிவந்திருக்கின்ற உள்ளங்கால்களையும், நீளல் குறுகல் நேர்தல் முதலியகுற்றங்களின்றிச் சகலவிலக்கணங்களையும் வாய்ந்தனவாகி, மிக்கவொளிபொருந்திய பவளத்தண்டங்களைச் சிறுமையுற்றழியச் செய்துவிளங்கியிருக்கின்ற பாதவிரல்களையும், செங்கழுநீர்மலரைக் கோபித்

* இலக்கணமமைந்த மைந்தராவார்-வயிறு-தோள்-நெற்றி - நாசி - மார்பு கையடி. இவ்வாறும் உயர்ந்து சிலவுதாதைபெற்றோரும், கண - கை - கன்னம் மூக்கு-மார்பு-இவைகளும்-நீண்டென்மையை யுறறோரும், உரோமம்- உடல்-விரற்கண்-நகம் - பல - இவ்வைந்துஞ் சிறந்து ஆயுள் விருத்தியை யடைந்தோரும், கோசம்-கை - நா - முதுகு இந்நான்குங் குறுகிப் பாக்கியமுடையோரும், தலை-நெற்றி-இவ்விரண்டும் அகலமுற்ற கன்னையையுடையோரும், உள்ளங்கால் - உள்ளகை - கண்கடை - ஊதடு- மேல்வாய்-நகம் இவ்வேழுஞ் சிவந்து இன்பமுடையோரும், வலி - ஒசை - நாபி இம்மூன்றும் ஆழ்ந்தி யாவர்க்குமேலாயினோரும் எனவறிக.

தானத்தைப் பங்கப்படுத்திச் சக்கிரனைப் பயமுறப்பணித்துச் சிறிது சிவந்திறமுடையனவாய் வெளுத்து வட்டமாகிக்குறுமை மிக வொளியுஞ்சுகின்ற பாதவிரல்களினது நகக்கூட்டங்களையுங்கவிப்பையுற்ற கூர்மமானது தன்னுறுபுக்களை யடக்கிக்கொள்ளவும் புலவர்கள் தங்கள் புத்தங்களைச் சேமத்தின் மறைத்து வைக்கவுஞ்செய்து இலக்கணவளவின் மேற்பட்டு மிருதுவாகி ரம்புகள் உரோமங்கள் இல்லாமற்கோல்போல் வளர்தல் மிக்குயர்தல் கோணல் என்கின்ற குற்றங்களன்று பிரகாசிக்கின்ற புறவடிகளையும், கைப்பற்றுக்கொப்பாகி மிகப்பருத்திடலும் உயர்தலும் இல்லாது விளங்குகின்ற குதிக்கால்களையும், ரம்பு தோற்றலும் உயர்ந்திருத்தலும் இல்லாத அழகுபொருந்தத் தசைகளது செம்பொனினாலுஞ் சிறுதாசின் றட்டையொத்து வட்டமாயிருக்கின்ற பாடுகளையும், கன்னிக்கதலியை யொத்து ரம்புமுழுரோமமும் தோற்றுது சிறந்திருக்கின்ற தொடைகளையும், வருந்திச்செய்த அம்புபெய்தூணியை யொத்துரம்பு முரோமமுங் கலவாதுவிளங்குகின்ற கணைக்கால்களையும், வற்றுதலில்லாமல் வட்டமாகியதாளதையொத்துத் தசையைப்பொருந்தி ஞெண்டினைமுழுதுஞ் சினந்து மிக்க அழகுவாய்ந்திருக்கின்ற முழந்தாட்களையும் மெல்லியதொடையைச்சேர்த்துதுணையாக நெருங்கி மதம்பொழிகின்ற யானையினது பிடரியையும் ஆமையையும் வென்று இருபத்துகான்கு அங்குலவளவுவாய்ந்திருக்கின்ற நிதம்பத்தையும், தாமரை மலர்வாய்ந்த குளப்படிகளை மருட்டிச்சிற் றெலியுரோமம்போன்ற நெருங்கிய மிருதுவான மயிர்கள் உள்ளோங்கிய நெடுமையற்ற இடப்பக்கத்திற் பலவான சுழிகளில்லாது எழிலவாய்ந்திருக்கின்ற செவ்விதாகிய வயிற்றுமடிப்புக்களையும், பருத்து உயர்ந்து மிக்கமேன்மை பொருந்தியிருக்கின்ற சகனத்தையும், கொங்கைகளால்வருத்தமெய்தி மெலிவுற்றிருக்கின்ற மருங்கினையும், தக்கவடிவத்தோடும அகன்றுதாழ்ந்து வலஞ்சுழித்தரம்புமுரோமங்களும் நீங்கி மிக்கவொளி பெற்றிருக்கின்ற உந்தியையும் பலவகைப்பட்ட சுழிகளும் உரோமங்களும் நீண்டமடிப்புகளும் இல்லாமல் மூன்று கல்லரேகைகளைப் பொருந்திச் சிறந்தவாலினைபோலவாய்ந்து சொல்லுக்கடங்காத வனப்பில் விளங்கும் வயிற்றுமயிரொழுங்கினையும், என்பு ரம்பு உரோமம் ஆகிய இவைகள்மீதாற்றுமல்கூடியுமாழாமல் மிருதுவாகி இன்புறத்தக்க தசையைப்பொருந்திய பதினெட்டங் குலவளவையுடைய தாய்ச்சிர்கொண்டிருப்பனவாகிய விலாப்புறங்களையும், புடைபரந்து மேலெழுந்து நீலமணிசேர்த்ததற்

கொப்பான சிலீமுகம்வாய்த்து இடைதோன்றுமல் நெருங்கிப்பெரு மை பொருந்திய மார்பினிடமுழுவது நிறைந்ததடையில்லாமம்பரு த்துப்பூரித்துத் தம்முளிரண்டுமொத்து இடையினைவருத்தி நிமிர்ந் திருக்கின்றஅஸ்தனங்களையும், பருத்தல் நீளல் நுதியாழ்தல் உருளே தல் நீங்குதல் கலமறல் ஒவ்வாதிருத்தல் கடினமுறல் ஆகியவிக்குற் றங்கள் பொருந்தாமல் வன்மையாகிய சக்கரம்போலப் பிரகாசித்த அடிகனத்தித் தனக்குத்தானே யொப்பாகியிருக்கின்ற சூசுகங்க ளையும், நீளுதலும் குழுகுதலும் என்பு தோன்றுதலும் இல்லாத கழுத்தடியினையும், என்பு கரம்பு ரோமம் ஆகிய இவைகள் தோன் றுமல் பெருக்காமல் அழகுநிறைந்து திரண்டிருக்கின்றவேய்போற் பிரகாசிக்குந் தோள்களையும், தசைதோன்றுதனவாகிய மூட்டுக்க ளையும், நீண்டகரம்புகளும் உரோமங்களுந் தோன்றுது வன்மை பொருந்திய மகரவீணையையொத்த முன்னங்கைகளையும், வரிசை யாகிய பலரேகைகள் தம்முனெருங்குதலும், மிகவுநீங்குதலும், பச ந்துதோன்றுகிற கரம்புகள் மிகுதலும் உரோமங்கள் பொருந்துத லும், ஒட்டகம் தவளை செங்காய் பாம்பு தேள் கழுகு பூனை கர்த்தப ம் கரி ஈட்டி இவைகளைப் போலிருக்கின்ற வெறுக்கப்பட்ட இரே கைகளுமில்லாமற் கவிகை கூர்மம் வலம்புரிச் சங்கு மச்சம் பதுமம் நவக்கிரகசக்கரம் நகத்தடி தூலாக்கோல் வண்டி இடபம் யானை குதிரை தோட்டி சாமரம் வச்சிராயுதம் ரேமி என்னும் இவ்வகை ரேகைகளைப்பொருந்தி வனத்திற் றிரிகின்ற முயல்வயற்றினு மிரு துவாகிச் செவ்வாம்பல் மலரைப்போலப் பிரகாசிக்கின்ற உள்ளங் கைகளையும், சிவத்தலின்றி வளைந்திருத்தலும் இடைவிட்டு நீங்குத லும் கரம்புமுரோமமும் பொருந்துதலும் நேர்ந்திருத்தலும் மிருது வில்லாமல் மிக்கவன்மையாதலும் இன்றி நீலோற்பலமுகையைவெ ன்று சிவந்த நல்லரேகைகள் வாய்ந்த கைவிரல்களையும், பள்ளமாத லும் வெண்மையாதலும் குணமில்லாமல் சரசரத்திருத்தலும் புள் ளியாகிய வெண்மை தோன்றலும் பொன்னிறமாதலுமில்லாதகிளி யின் வாயினையொத்துச் சிவந்து பிரகாசிக்கின்ற கைவிரல்களினது நகக்கூட்டங்களையும், என்பு தோன்றல் கரம்புமுரோமமு மருவல் உயர்தல் கூனியிருத்தல் முதலியன வகன்று மிருதுவாகிய தசையி னல் மறையப்பட்டு எழுந்தருளிய வனப்பின் மிகுந்திருக்கின்றமுது கினையும், கோணுதல் கரம்பு தோற்றல் மயிர்கினைத்தல் நீளல் வற் றல் என்னுமிக்குற்றங்களின் எழில் வாய்ந்திருக்கின்ற பிடரியினை யும், சூசுகமும் நீளலும் பருத்தலும் உரோமங்களை யுடைத்

தாதலும் கேர்ந்திருத்தலும் மடிப்புறலும் இல்லாமற் கமுக மரத்தி னே காணச்செய்து கான்கு அங்குலத்தோடு மூன்றுரேகைகள் பொ ருந்தி அழகு நிறைந்திருக்கின்ற கண்டத்தையும் இருபகுப்பாதலு ம் பள்ளமிசைதலும் கரம்பு முரோமமு மருவுதலும் குறுகுதலும் நீண்டிருத்தலும் வளைந்திருத்தலும் வற்றியிருத்தலும் இல்லாமல் இருவிரலளவில் வட்டமாய்த் தசையை யுடைத்தாய் எழில்கொண் டு இன்பந்தருவனவாகிய மோவாயினையும் சிறந்தபவளத் தண்டு போற்றிரண்டு இருபக்கமும் குளிர்ந்து அழகிய ரேகையொன்றுபொ ருந்திப்பிரகாசிக்கின்ற கீழதரமும், அதற்குமேற் சற்றுயர்ந்து வன ப்பு வாய்ந்திருக்கின்ற மேலதரமும், மத்தியில் இரேகை யாழ்ந்திரு த்தல் வீங்கல் மதசறக்கருகியிருத்தல் வெருத்திருத்தல் மருவுறல் தொங்கல் உரோமமுறல் மேலும் கீழும் ஒவ்வாது இடைவிட்டிருத் தல் முதலியனவகன்று பவளத்தையொத்துச் சிறந்திருக்கின்றவா யினையும், பரவியும் உயர்ந்தும் அகன்றும் நீண்டும் பசுமையுற்றும் பொன்னிறமாகியும் கறுத்துந் துன்புறுத்துகின்ற குறைகளில்லா மல் மயிலிறகினடிகளையும், வெளுத்த தாளங்களையும் முல்லையரும் புகளையுமொத்து வெண்மையாகவுந் திருத்தமாகவுமிருக்கின்ற முப் பத்திரண்டு பற்களையும் கடினமும் வெண்ணிறமும் கருமையும் நீட் சியும் பருத்தலும் விலகலும் இல்லாமற் சிவந்த வண்ணமாய் மிரு துவாயிருக்கின்ற நாவினையும், வெண்மையும் கருமையும் உயர்வும் நீட்சியும் பொருந்தியிருத்தலாகிய குற்றங்களின்றி வெண்ணெய் என்று சொல்லும்படி மிருதுவெய்திச் சாதிலிங்கத்திலுஞ்சிவந்து செ ழுமைபொருந்தியிருக்கின்ற உண்ணாவினையும், கண்கள் இடுகாமலும் கபோலஞ்சுழியாமலும், பற்கடோன்றுமலும் வறிது நகைபுரியாம லும் மிகு நகைசெய்யாமலும் விளங்குகின்ற முரலியும், வளைதல் கறுத்தல் சிவத்தல் துளியினும் இடையினும் பள்ளமுறல் இலக்க ணவளவில் குறுகுதல் முதலான குற்றங்களின்றித் தூளைகள் சிறு த்தி இருபக்கங்களுஞ் சற்றுணர்ந்து எள்ளின் மலரையொத்து இர ண்டுமூன்றுதரம் அதிசயமுறமெல்லெனத்தும்மலின்றிக்கல்லெனப் பலகால் தும்முதலில்லாத நாசியினையும், வன்மையுறலும் பள்ளமா தலும் உரோமம் பொருந்துதலும் இல்லாமல், கண்ணடியொன்றே யன்றி மற்றவைகட் கொப்பாகாது வட்டமாய்த் தசையையுடைத் தாயமைந்திருக்கின்ற கபோலங்களையும், யானை ஆடி எருமைஇவை களினுடைய கண்ணைப்போலிருத்தலும் வட்டமாதலும் குற்றமுற வலஞ்சுழலுதலும் உயர்ந்திருத்தலும் மாறுதலையுடைத் தாதலும்

புறலினது கண்ணிறமொத்தலும் இல்லாமல் தெளிந்த நீலமணி போலச் சிறப்புறக் கறுத்து வெண்மையொளிகொண்டு கடையிற் செவ்வரி பரந்து நெருங்கிய கருமைவாய்ந்த மெல்லிய வுரோமங்க ளைப் பொருந்தி விளங்குகின்ற நீண்ட விழிகளையும், உரோமம் இடைவிட்டிருத்தலும் பொன்னிறமெய்தலும், பருத்தலும் நீளலு ம் இல்லாத கண்ணிமைகளையும். உரோமம் பருத்திருத்தலும், நீண் டிருத்தலும், பொன்னிறமுற்றிருத்தலும் வண்மையின்றி வனப்ப கன்று இடைவிட்டிருத்தலும் இலலாமல், ஒன்றோடொன்றுநெரு ங்காமல் போர்செய்யும் வில்லைப்போன்று விளங்குகின்ற புருவங்க ளையும். இகழத்தக்க நரம்பும் உரோமமுமுண்டாகிமேல்வளர்ந்து உ யர்ந்திருக்கின்ற குற்றங்களில்லாமல், வள்ளைத்தண்டினைப் போல நீட்சியுற்று, மலரிதழை யொத்து, கற்சுழிகளையுடையனவாய்விளங் கியிருக்கின்ற செவிகளையும், நரம்புமுரோமங்களுமில்லாமல் சுவக்கி ரக சக்கரரேகையைப் பொருந்தி மூவிரலகமாய் அர்த்தசந்திர வடி வங்கொண்டு பிரகாசிக்கின்ற நுதலினையும் பூரணசந்திரனைப் பழித் துக் குளிராச்சிபொருந்திய ஆகாயகங்கையிற்பூத்த தாமரை மலரை யொத்துச் சீமந்தரேகைகளை வாய்ந்து நீண்டுவிளங்குகின்ற முகத் தினையும், வீங்கலும் நீளலும் விரிதலுமுறாமல் இளம்பூவரும்போலச் சீமந்த ரேகைகளை வாய்ந்துமுட்டாத உயர்ந்து, வட்டமாய் அழகுநி றைந்திருக்கின்ற பிடரி மத்தகம் சென்னி ஆகிய மூன்றினையும், இடையிடை வெளிபோற்றுதல் மிகக்குறுகுதல நீளல்தானியிற்பிள ப்புற்றிருத்தல் சிவந்த பொன்னிறமாதல் வண்மையணுகுதல் வாட் டமில்லாதிருத்தல் சடைபற்றியிருத்தல் முதலிய குற்றங்களில்லா மல் வண்டினந் தொடர்ந்ததுபோன்றும்கருமைகொண்டிழைத்தது போன்றும் மேகங்கள் கண்படுத் திருப்பனபோன்றும் கூந்தற்பணை ப்போன்றுமிருந்து கண்டவர்கள் வியப்பெய்த நீண்டு பரிமளித்து நெய்த்து இரண்டு தாழ்ந்து பூங்கொத்துகளைப்பொருந்தி இதனின் மிக்கதழகில்லையென்று சொல்லத்தக்கதாக விளங்குகின்ற கூந்த லினையும் உடையவர்களாயிருக்கின்றார்கள்.

இஃதன்றி புருவமத்தியிலும், நாசிதுணியிலும், நிதம்பப்புறத், திலும், கைகளினிடத்திலும், கழுத்தினிடத்திலும், செவிகளிடத்தி லும், கபோலத்தினிடத்திலும், இடப்பக்கத்திலும் கொங்கைகள் வலப்பக்கத்திலும் சிவந்தமறுவைப்பெற்றிருக்கின்றோரும் திரண்டு அழகு பொருந்திய நெற்றியிலே வடித்தெடுத்த முத்தலிச் சூல

விரேகையைப் பெற்றோரும், கைகளிலும் மார்பிலும் கொப்பூழிலும் காசியிலும் முதுகு வலப்புறத்திலும் அல்குலடிப்புறத்திலும் வல சுழியைப் பொருந்தியிருக்கின்றோரும், பிடரிவலப்புறத்தில் இரண்டு வலசுழியைப் பெற்றோரும், அல்குலடிப்புறத்தில் வண்டியைப்போலு நற்சுழிகளையுற்றோரும், பிரமதேவனால் வளர்க்கவுற்ற அவ்விர ண்டு மங்கையரது பாதபதுமங்களே முன்னர் வணங்கி யருள்பெற் றாரவர் காசிநகரியிற் கறுத்தமறவையுடையோரும், புறங்காலி லும் அல்குலத்தத்திலும் சிறுமச்சங்களைப்போன்ற வடிவைப்பெற் றோரும், நிதம்பந்தொடங்கி யல்குல்வரையில் ஒருசுழியை நிறைந் திருக்கப்படைத்தோரும், அல்குன்முதல்வயிறளவும் ஒருசுழியைப் பொருந்தினோரும் நிதம்பமுதல் வயிறளவும் இருசுழிகளை யடைந் தோரும் விழிகளிற்சுழிமருவினோரும் நீண்டகெற்றியில் வலச்சுழி யுடையோரும் கூர்தலில் வலமும் இடமுமானசுழிகளை வாய்ந்தோ ரும், அரையின் மத்தியிலும் செவிகளிலுங் கண்டத்திலும் குழல்வ ளர்ச்சியினுச்சியிலும் சுழிகளைப்பெற்றோரும், நித்திரைபுரியுங் கால த்திற் பற்களைக்கடிக்கின்றோரும், பகருமித்தன்மைத்தாகியசூற்றங் களையுடையோரெல்லாம் பிரமதேவனுடையகற்றவப்பயனுத்தோ ன்றிச் சிறந்த அவயவங்களை வாய்ந்திருக்கின்ற அம்மங்கையரது வடிவங்களைக்கண்டு தரிசனஞ்செய்தோரல்லர். மனவாக்குக் காயங் களுவபடாத பரிபூரணசொரூபராகிய கணேசமூர்த்தியே ! ஒப் பற்ற அம்மங்கையருடைய வழகின்சாயல்கள் இத்தன்மையவென் றுரைத்தேனன்றி உள்ளவிதத்தை யாவர் சொல்லவல்லவர்களென் றுகாரதமுனிவர் சொன்ன மாத்திரத்தில் கொன்றைமாலை யணிந்த பரமேஸ்வரர் புத்திரராகிய கணேசமூர்த்தி அங்கிகாரஞ் கொண்டு அம்முனிவருக்கு அருள்வழங்கினர். அவ்வருளைப்பெற்ற நாரதமு னிவர் பின்னுந்திருவடிகளில் வணங்கித்துதித்து விடைகொண்டு அ ம்மங்கையரிடத்திற்சென்று பலமுறைதுதித்து அவர்கள் இன்புறத் தக்கதாகவும் இவ்வையக முய்யத் தக்கதாகவும் இதனைச் சொல்வ ராயினர்.

புண்ணியபூமியில் முளைத்து அறமுதலியநாற்பொருள்களையும் பூத்து யாவர்க்கும் இம்மை மறுமைப்பயனை விளைவிக்கவல்லகொடி போன்றவினங்கிய அன்னைமீரே ! யான்விநாயகக்கடவுளுடைய திரு வடிகளை அன்போடுபணிந்து அவரதுசமுகத்தின் முன்னர் உங்கள் வனப்புக்களனைத்தையு மெடுத்துரைத்தேன். அவைகளையுக்கடவுள்

அங்கீகரித்து உம்மைத்திருக்கலியாணஞ்செய்துகொள்ளத் திருவுள்ளங்கொண்டிருக்கின்றனர் இதுநடந்தவிதத் தாங்களறிய வேண்டியதென்ன, அக்கன்னியரும் மனமகிழ்ந்து கணேசமூர்த்தியை விவாகஞ்செய்துகொள்ள மிக்க ஆவல்கொண்டிருந்தார்கள். அப்பால் நாரதமுனிவர் பிரமதேவனிடத்திற்சென்று தாம் நடத்திவந்த காரியங்களனைத்தையுமறிவிக்க பிரமன் மனக்களிப்படைந்து இனி நமது புத்திரிகட்குவிரைவில் விவாகத்தினைச் செய்து முடிக்கவேண்டுமென்று தன்னுள்ளத்தின் மதிக்தெழுந்தவனாய், உடனே கைலாயவரையிற்சென்று சோமன் சூரியன் அக்கினி என்கின்றமூன்றுவிழிகளையுடையவராயும், ஈசானம் தற்புருடம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் என்கின்ற * ஐந்து முகங்களையுடையவராயும், மூவர்க்கு முதல்வராயும் வீற்றிருக்கின்ற சிவபெருமானைப்பணிந்து பலமுறை துதித்துநின்றான் உமாபதியாகிய பரமேஸ்வரர் பிரமனைநோக்கி நீ இங்குவந்தகாரணமென்னவென்று வினவியருள, அதற்குப் பிரமன் சொல்லுவான் எந்தையே ! பிரமன் விண்டு உருத்திராகியஎங்கண் மூவரையும் ஈன்று ஆக்கல்முதலிய முத்தொழில்களைத் தந்து ஆட்கொண்டருளிய கணேசமூர்த்திக்கு இலக்குமியுங்கண்டு காணத்தக்கவனப்பினையாய்ந்த எனது புத்திரிகளை மணஞ்செய்துகொடுக்கஆவலுற்றிருக்கின்றேன், அதற்குத் தேவரீருடைய அனுமதியைப்பெறுமாறுவந்தேனென்றான். அதனைச் சந்திரசேகரமூர்த்தியாகியசிவபெருமான்செவியுற்றுக் கிருபையோடும் உமாபரமேசுவரியினுடைய திருமுகத்தைநோக்க, அவர் பிரமன் முகத்தைப்பார்த்து விநாயகமூர்த்திக்குத் திருக்கலியாணஞ்செய்வதால் யாவர்க்கு நன்மையுண்டாகுமாதலின் அதனைவிரைவின் முடிக்கக்கடவையென்றருள்சுரந்தார்.

இவ்வாறு தாய்தந்தையரிசைதலும் பிரமன் மனமகிழ்ந்துவிடைபெற்றுவந்து கருணைமதத்தைப் பொழிகின்றயானைமுகத்தையுடைய கணேசமூர்த்தியடைந்து நமஸ்காரஞ்செய்து சமானரகித நிகிலசகாரண கர்த்தாகிய விநாயகமூர்த்தியே ! அடியேனிவ்வுலகங்களைச் சிருட்டிக்குமாறு தேவரீர்முன்னர் இரண்டுசத்திகளையளித்தருளினீர். அச்சத்திகளைத் தேவரீர் திருமணஞ்செய்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொண்டான் பூதபௌஷ்ய வர்த்தமானத்மகமாகிய காலத்திரயத்திலும் பிருதிவியாதி பஞ்சபூதாத்மக

* அவற்றுள் ஈசானன் அனைத்தும் ஆளுதல். தற்புருடம்காத்தல். அகோரம் அழித்தல். வாமதேவம் விளக்கல்-சத்தியோசாதம் தோற்றுவித்தல்.

மாகிய காரணத்திரயத்திலும், உள்ளும் புறம்பும் வியாபித்து, அந் தரியாமியாகிய பரமாத்மாவாகியும், சர்வசாக்ஷியாகியுமிருக்கின்றசு வாமிகள் எவ்வாறு நடாத்திக் காட்டுகின்றீரோ அவ்வாறன்றி இப பிரபஞ்சங்களிற் சுகங்காணமாட்டாது. அஃதன்றியும், ஆண்களோ டு பெண்கள் மனங்கலந்து கூடினாலல்லது சுவாமிகளடியேற்குக் கற் பித்தருளிய சிருட்டித்தொழில் பிரகாசமுறாதாதலாற் சுவாமிகள்த யவுசெய்தருளி அடியேனை முற்றிலு மாடகொளவேண்டுமென்று பிரார்த்தித்தான்.

அதற்கு நிலம்-நீர்-தீ-கால்-வெளி-சூரியன்-சந்திரன்-இயமா னன் என்கின்ற அஷ்டமூர்ததவடிவாகிய விநாயகக்கடவுளைசுந்து பிரமனே! நீ யுரைத்த கலியாணத்திற்கு வேண்டிய முயற்சிகளை நடாத்திக்கொண்டிரு, யாம் அவ்விடதற்கு யாவர்களோடும் இட்ட டமாக வருகின்றோமென்று விடைகொடுத்தருளப் பின்னரப் பிரம தேவன் கருணைநாயகராகிய விநாயகமூர்த்தியினது கிருபாகோக்கம் பெற்றுக்கொண்டுபோய் வைகுந்தத்தை யடைந்து திருமகள்கணவ ராகிய திருமாலேவணங்கித் தன்புத்திரிகளது திருக்கல்யாணத்தை யுரைத்து அவ்விடத்தினின்றும் நீங்கித் தனது சத்தியலோகத்தை சேர்ந்து தேவதூதுவரைக்கூவி, அவர்களிடத்தில் சகல ரிஷிகளும் சகலவேந்தர்களும் சகல தேவாகளும் அத் தேவர்கட் காசனங்கிய விதிரணும் மற்றுமுள்ள யாவருந்தங்கடங்கள் குடும்பசமேதர்களா கவிரைந்து வரவேண்டுமென்று திருமணப்பத்திரிகையை வரைந்த ணுப்பிப் பின்னர் விசுவகர்மாவை யழைப்பித்து, எமதுகர்த்தராகிய கணேசமூர்த்தியினது திருக்கல்யாண மஹோற்சவத்தைத் தரிசிக்க வருகின்ற விண்ணுட்டினர் பூமண்டலவாசிகள் பாதலதினர் முத லானவர்கள் வீற்றிருப்பதற்கு யோக்கியகரமான கோயில்கண்முத லியவைகளையும் கல்யாணமண்டபத்தையும் சாதகிர விதிப்படிக்குத் திவிரமாமுடிக்கக் கடவையென்று ஆக்கியாபித்தான். அதற்கவ்விசு வகர்மா அதிகமகிழ்ச்சியையுடையவனாய், இப்பணிவிடைசெய்வதற் கு யானென்னதவஞ் செய்தனனெவென்று ஆனந்தமுற்று, இங்ஙமி டத்திற்றானேதமதிட்டப்படி செய்வேனென்றவிடைபெற்றுச்சென் று ஒருநகரமுண்டாக்கி அதனைச்சூழப் பருத்தோங்கி யிருக்கின்ற மதில்களெழுப்பி, நாற்புறங்களிலும் விசித்திரமுற்று விளங்குகின்ற கோபுரங்களைத் தூக்கி, அதனுட்புரத்தில் கல்யாண மகோற்சவத்தி ல் வசிக்கவருபவர்கள் மனவெழுச்சியுடன் வரசஞ்செய்யத்தக்கூட ங்களும் உப்பரிகைகளு மேற்படுத்தி விலாசமுற்றிருக்கும் வீதிகளை

யும், இடைஇடையிற் சித்திரகூடங்கள்-பளிங்குமண்டபங்கள்-சாந்த
த்திண்ணைகள் முதலியவைகளே வரிசை வரிசையாக வகுத்துக் கல்
யாணத்திற்குரிய பண்டங்களே வைக்கத்தக்க பண்டார வறைகளே
முடித்துத் தாமரை அல்லி முதலிய புட்பங்கள் மலர்ந்திருக்கின்ற
தடாகங்கள்-ஓடைகள்-தேனிகள்-முதலியவைகளைத் தக்கவிடங்களி
ற்றொட்டு, வானேயளாவத் தழைத்தோங்கிக் குளிர்ந்த நிழலேப்பர
ப்பிக் கனிவருக்கங்களேக் கொண்டிருந்குஞ் சோலேகளும் தோப்புக
ளுமுண்டாக்கிப் பரிமளமிகுந்த பலபுஷ்பஜாதிகள் மலர்ந்திருக்கின்ற
நந்தனவனங்களேயும் பூங்காவுகளேயுஞ் சிருட்டித்து முடித்தவுடன்
அங்கரத்தின்முடிவில் மணச்சடங்குகள் முடித்தற்கோர் கல்யாண
மண்டபத்தை விசாலமாகப்படைத்து, அதன் மத்தியில் நவரத்தின
யமான சிங்காதனமொன்றைப் பலவிச்சித்திரங்களோடு அமைத்து
அதைச் சூழ்வரத் திருமாலாகிய தேவர்களும் முனிவர்களும் களி
த்திருக்கத்தக்க பீடங்களே அணிஅணியாக வகுத்துப் பலநிறப்பட்
டுளாற் ஜோடித்திருக்கின்ற விதானங்களினுஞ் சோனமயமாய்த்
தோற்றுகின்ற மண்டபத்தின் மேற்பரப்புகளினும் முத்துமாலேகள்
புட்பச்சரங்கள்-மயிற்பிஞ்சங்கள் முதலியவைகளேத்தொட்டு தொங்
கவிட்டு நவரத்தனங்க ளிழைத்திருக்குஞ் சுவர்ப்புறங்களினும் பருத்
தோங்கிநிற்கும் பலவிதத்தூண்களினும், பொற்பாவைகள்-சித்திரப்
பிரதமைகள் - நிலேக்கண்ணாடிகள் முதலியவைகளேப்பதித்து, ஓம
குண்டத்தையும் விசாலமாகப் படைத்தும் பிரமதேவனேக்கண்டு
அறிக்கையிட்டான்.

உடனே பிரமதேவன் விரைந்து வந்து அவ்வவற்றின் சிறப்பு
களேக்கண்டு, அதிக சந்தோஷங் கொண்டவனாய், மேருவுக்கண்டுரை
ணத்தக்க பிரகாசத்தோடுமிருக்கின்ற இங்கரத்தினழகைக் காண்
பதற்குத் தேவேந்திரனேப்போல ஆயிரங்கண்களேப் பெற்றிலேனே
யென்று ஆசையோடு வருத்தமுற்றனுயின் அத்தேவதச்சனுல் நிரு
மித்த நகரத்தின் சிறப்புகள் எனபோலிகளால் அளவிட்டுரைக்கப்ப
டுவனவோ ? பின்னர்ப் பிரமனுனவன் சிலகாரியகாரரைத் தூரத்தி,
ஆகாயகங்கையைத் தருவித்து, தருப்பை மாவிலே-சமித்து-முதலிய
ஓமதிரவியங்களேச்சேகரித்து, வாழை கமுகு-தெங்கின்குலேமுதலிய
சிறப்புகளே வேண்டுமிடங்களில் அணிபெறநாட்டி வீதிகடோறும்
பனிநீரையிறைத்துப், புழுதியையடக்கி, முற்றமெங்கணுஞ்சந்தனக்
குழம்பினுல் மெழுகிப் பல்வித்திரங்களான கோலங்களேயுமிடுவித்
து பாலிகை கரகமாதிய பல மங்கல வரிசைகளேயும், வருவித்து,

திருவிளக்கு, பலவிளக்கு, சூடாதீபமுதலியசோதிகளியமைத்து இன்னும் இத்தன்மையவாகிய எல்லாச் சிறப்புகளையுஞ்சர்வை ஜாக்கிரதையோடு நிறைவேற்றிக் கொண்டிருந்தான்

அச்சமயத்தில்தான் முன்னர்வரைந்தனுப்பிய திருமணப் பத்திரிகையைக்கொண்டுபோன தேவதூதர்கள் வாயுவேகமும் மனோவேகமுந் தங்கட்குப் பிறப்படத்தக்கதாகவோடி அவ்வவர்கட்கறிவிக்க உடனே அம்மணவோலையைவாங்கி யாவருமிமிர்ந்து வாசித்துச் சந்திரர், சூரியர் முதலிய நவக்கிரகங்கள் முப்பத்துமுக்கோடிதேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள், கருடர் கந்தருவர், சித்தர், வித்தியாதரர், போகபூமியர், ஆகாய வாசிகள், பாதலவாசிகள், சேடனுதிய நாகராஜர்கள்முதல் மற்றைத் தீவாந்திரங்களிலிருப்பவர்களுந் தங்கடங்கண் மணமக்கள் சுற்றதினர்முதலிய கூட்டங்களோடு ஏகமாகத்திரண்டு கடையுகத்திற் சத்தசாகரங்களுஞ்சுரைபுரண்டு மேருவைச்சூழ்வதுபோலத் தேவதேவோத்தமராகிய கணேசமூர்த்தியினுடைய திருக்கல்யாண சம்பிரமத்தைத் தரிசித்து ஈடேறுங்களிப்பினாய்ச் சயவுச்சாகங்களுடன் ஓவென்னுஞ்சத்தமெழ நாற்புறங்களினுமிருந்து தேவதச்சனுல் நிருமித்திருக்கின்ற நகரமெங்கணும் வந்து சேருங்கினர்கள். பின்னர்ப் பிரமதேவனுனவன் வந்த பரிசனங்கட்கெல்லாஞ் சகல வாபரணம் உணவு முதலியவைகளை அவ்வவர்கட்குவேண்டுமட்டும் அளித்துவரும்படி * சங்கநிதி, பதுமநிதி சிந்தாமணி பஞ்சதரு, காமதேனுமுதலானவைகட்காக்ஞாபித்துத் தான் பின்னர்கடதவேண்டிய முயற்சிகளிற் பிரவேசித்தான். இப்பால் அக்காமதேனுமுதலியவைகள பிரமனிட்ட கட்டளையின்படி சகல செல்வங்களையும் வந்தவர்க்கெல்லாந் தந்துவர, அவைகளை இந்திரன் முதலிய தேவர்கள் பெற்றுக்கொண்டு மனக்களிப்படைந்து வேறொரு தெய்வலோகத்திலடைந்தவர்களைப்போல அளவில்லாத ஆனந்த கடலுண்டு மூழ்கினர்கள். அந்நகரத்துள்ளோர்களும் எந்தையாகிய கணேசமூர்த்தியினது திருக்கல்யாணத்திற்குச்செய்துவைத்த நூதன வலங்காரங்களைக் கண்டு முன்னர் காணக்கூடாத வுயர்ந்த பரகதியைப் பின்னரடைந்தவரையொத்துக் களிப்படைந்தார்கள்,

அந்நகரத்தின்கண் பன்னிரண்டுகோடி சூரியர்களுஞ் சந்திரர்களும் உடுக்கூட்டங்களும் ஒருமித்து கூடியிருக்கின்றமையால் அங்கு இராப்பகலென்னுங் காலவேற்றுமைகள் இல்லாது ஒரேதன்மை

யாகியிருந்தது காமதேனுகொடுக்காநின்றவுண்டிகளேயுங் கற்பகத் தருவளிக்கின்ற ஆபரணங்களேயும் அங்கரத்து வந்திருக்கின்ற ஆட வர்களும் மங்கையர்களும் பெற்றுக்கொள்வதலுல் அவர்கள் தங் கள் பெயரின்மாத்திரம் வேறுபட்டிருந்தார்களேயன்றி உருவத்தில் ஒருவரையொருவர் ஒத்தவராகியிருந்தார்கள். பஞ்சதருக்கள் தெ ருங்கிய சோலேகளாலவை தம்முட் பலவதிசயங்களே யுண்டாக்கச் சிலர் அவ்வற்புதங்களேப்பார்த்து அவ்விடங்களேவிட்டு நீங்காதவர் களாயிருந்தார்கள். இளமைப்பருவத்தையுடைய மங்கையரும் பெ ருமைபொருந்திய மைந்தர்களுந் தாங்களிச்சித்தவண்ணம் கற்பக முதலியவைகளாற் றரப்பெற்று மலர்பொதுளிய சோலேகளிற்செ ன்று விளேயாடல் செய்தார்கள். இரத்தினபரணங்களே யணிந்த † குயாரவிர்தங்களேயுடைய மங்கையர் கூட்டங்களிற் சிலர் அம்மா னேயாடுவர்களும், சிலர் பந்தாடுவார்களும், சிலர் புனல்விளே யாடு வார்களும், சிலர் ஊசலாடுவார்களும் சிலர் தங்கடங்க ளன்பினரை யுவந்து தேடுவார்களும், சிலர் அவ்வன்பினரைக் கலந்து களிப்ப டைவார்களும், சிலர் கிளிப்பிள்ளேகளினுடைய மெல்லிய சொற்க ளால் நாகணவாய்ப்புட்களினுடைய மொழிகளேக்கேழ்படுத்துவார் களும், சிலர் இந்நாகணவாய்ப்புட்களினுடைய சொற்களால் அக்கி ளிப்பிள்ளேகளின் மொழிகளேத்தாழ்வுசெய்வார்களுமாகிச் சோலேக ளெங்கு மனங்களித்துலாவியிருந்தார்கள்,

கரும்புவில்லே யேந்திய மதனுங்கண்டு நாணத்தக்க வனப்பினே வாய்ந்த ஆடவர்களிற்சிலர் யானேகளோடுயானேகளேயும், குதிரைக ளோடு குதிரைகளேயும், ஆடுகளோடு ஆடுகளேயும், கவுதாரிகளோடு கவுதாரிகளேயும், காடைகளோடு காடைகளேயும், கோழிகளோடு கோழிகளேயும் பொருவித்துச் சயங்கூறிக் களிப்படைந்தார்கள். வேதாகமமுதலியவைகளேத் தெரிசற வாராய்ந்துணர்ந்து இருவிஞ களினின்று நீங்கிய மகாதவத்தையுடைய வசிட்டர் முதலான ரிஷி புங்கவர்களிற் சிலர் தருமவாதஞ் செய்கின்றவர்களும் சிலர் அருத் தவாதஞ் செய்கின்றவர்களும், சிலர் காமவாதஞ் செய்கின்றவர்க ளும், சிலர் மோக்ஷவாதஞ் செய்கின்றவர்களுமாகி யிருந்தார்கள். சனகர் முதலிய யோகீஸ்வரர்கள் பரதத்துவ சொரூபி யாகிய

---

* சங்கநிதி—சங்குபோன்ற வடிவுடையது. பதுமநிதி—தாமரைபோன்ற வடிவுடையது. பஞ்சதருக்களாவன:—சந்தானம் அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம் என்பனவாம். † குயாரவிர்தம்—குயம்—தனம், அர விர்தம்—தாமரைமொக்கு. தாமரை யரும்புபோன்ற தனங்களாம்.

சிவபெருமானது ஆகமம் பிரமாணத்தினுலுங் காட்சிப்பிரமாணத்தினுலும் சிரேஷ்டமாகிய பதிபசு பாசங்களின் தன்மைகளைப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அணிமாவாதி யட்டமாசித்திகளினும் வல்லசித்தர்கள்தம்மை வணங்காரை யெல்லாம் வணங்குவித்துப் பலவற்புத விளையாடல்களை நடாத்திக்கொண்டிருந்தார்கள். தேவர்கள் தங்களினத்தினரு டன் பற்பலதர்க்கங்களைப்பேசி அவ்வவர்கள் ஆண்மைகளையாதரித் துக்கொண்டிருந்தார்கள். இங்ஙன வாடம்பரங்கள் இவ்வாறிருக்கப் பதுமநிதி-சங்கநிதி-கற்பகதரு முதலியவைகளாற்றந்த ஆடையாப ரணங்கள் அலங்கரிக்கப்பட்டிருக்கின்ற கல்யாண மண்டபத்திற் பொன்னுற்செய்து நவரத்தினங்கள் பதித்திருக்கின்ற தூண்களோ டுகூட்டியிருக்கும் மரகத வாழைகளும், கமுகமரங்களும் கன்னற் றண்டுகளும் கண்டவர்களாசியித்தும்படி பொன்னுபரணங்கள் பட் டாடைகள் அழுதுகள் சிற்றுண்டிகள் முதலானவைகளை யளவில் லாமற் கொடுத்துவந்தன, சுவர்த்தலங்களின் முஸ்மையாகத்தீட் டியிருக்கின்ற சித்திரங்களெல்லாஞ் சுவர்க்கமத்தியபாதல முதற் சகல உலகங்களிலுள்ள வேறுவேறான பொருள்களை வந்தவர்கட் கெல்லாம் வரையாது கொடுத்து ஏவல் செய்துகொண்டிருந்தன. அம்மண்டபச்சபைப் புடைசூழ்ந்த சோலைகளி லமைந்திருக்கின்ற பல சித்திரங்களான பிரதமைகளெல்லாங் கற்பகாதிகளைப்போல அவ்வவர்க்கு வேண்டுவனவற்றை ஆவல்தீர வளிப்பதன்றி அக்கற் பகாதிகளையும்கண்டு ஆலியஞ்செய்து அளவற்றஅற்புதங்களைநடா த்திவந்தன. சாயைத்தோற்றுத்தன்மையராகிய தேவர்கள் வடிவ ங்களை அம்மண்டபத்திற் பதித்திருக்கின்ற இரத்தினங்கள் காட்டுவ தனுல் அத்தேவர்கள் அச்சாயைகளைப் பார்த்து ஈதென்ன காரண மெனச் சங்கேதித்தார்கள். இவ்வாறு அளவற்ற பெருமிதங்களோ டுந் தேவதச்சனுல் நிருமித்த அம்மண்டபத்தின் சிறப்புக்கள் யாவ ராலளவிட்டுறைக்கற்பாலன.

இப்பால் நாரதமகாமுனிவர் சகல சம்பிரமங்களையுங் குறை வின்றி நிறைவேற்றி யிருப்பதைப்பார்த்து மனங்களித்து விரைந் தெழுந்து வெள்ளியங்கிரியைச் சேர்ந்து சிவபெருமான் சந்நிதான த்தை யடைந்து மும்முறை வலம்வந்து வணங்கித் தயாகிதியே! விநாயகப்பெருமான் திருக்கல்யாண மகோற்சவத்திற்குரிய சகல வலங்காரங்களுஞ் செய்து நிறைவேறின. அரசர்கள் தேவர்கள் முனிவர்கள் முதலாயினோர் வந்து நெருங்கியிருக்கின்றனர். தேவ

நீர் அடியேங்கண்மீது கிருபைபுரிந்து யெழுந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துக்கொள்ளலுஞ் சிவபெருமான்கிருபைகூர்ந்து விநாயகமூர்த்தியை யழைத்து, ஐயனே ! பிரமனுல் வளர்க்கலுற்ற சித்திபுத்திகளைத் திருமணஞ் செய்வதற்கான கோலத்தைக் கொள்ளுகவென்று திருவாய்மலர்ந்தனர். அதுகேட்டசுத்தசத்துவமூர்த்தியாகிய விநாயகக் கடவுளானவர் தெய்வகங்கையிலாடித் தேவர்களுடைய இமையாவிழிகளை யிடைவிடாது இமைக்கச்செய்யும் வண்ப்பினைவாய்ந்த தமது திருமேனி னெளியைச் சிறிது தணியச்செய்பவர்போலப் பிதாம்பரத்தை யெடுத்து அறையிற் சாத்தி வாசனை வீசுகின்ற கூட்டு வருக்கச் சந்தனத்தை மார்பினிடத்துந் தோள்களிடத்தும் பூசிக்கொண்டார்.

சந்திரனை முடியிலணிந்ததைத் தெரிந்துகொண்ட மற்றைய கோள்களானவை தாமும் அம்முடிமே லேறியிருப்பதற் கெண்ணி அரிய தவங்களைச் செய்ய அவைகளையுந் தமது நன்முடியிற் சூட்டிக்கொண்டதற் கொப்பாக மிக்க வொளிபொருந்திய நவமணிகளை வரிசையாகப் பதித்த பொன்முடியினைச் சூட்டிக்கொண்டார், சடைமீதிருக்கின்ற சந்திரன் அச்சடையை மறைத்திருக்கின்ற முடிமீதிருந்து திருமணச்சேவைசெய்யானுயின் அவனுள்ளம் வருத்துமென்றெண்ணினர்போல அச்சந்திரனை அப்பொன்முடியின்மீது பொருந்தவமைத்து அதனைச் சூழ்வரக் கொன்றைமாலிகையினையணிந்து கொண்டார். பல்லாயிரங்கோடி யண்டங்களிலுள்ள ஆன்மகோடிகளனைத்தையும் அரைநொடியிற் றகித்து நீறுக்கவல்ல தமது நுதல் விழியின் வெப்பத்தை அக்கல்யாண சபையிற் காட்டாதவண்ணம் அதனைத் தணிவிப்பவர்போல அதன் முன்னர்க் கண்டவர் வியப்படையத்தக்க பிரகாசத்தினையுடைய இரத்தினப் பட்டத்தையணிந்தருளினர். பொன்முடியிலணிந்த மூன்றும் பிறையினது நிலவென்று சொல்லும்படி ஒப்பற்ற நெற்றியில் வெண்டிருநீற்றை யணிந்து அதனடுவின் மிக்க வாசனை கலந்திழைத்திருக்கின்ற சிவந்த திலகமிட்டுக்கொண்டார். திருக்கரத்திலிருக்கின்ற கொடியாகிய மீனும் ஆகாயத்திலிருக்கின்ற அருந்ததியாகிய மீனும் தமது திருமுகமாகிய கருணைக்கடலில் இன்புற்றிருக்க வெண்ணிப் பக்கங்களில் வந்து பொருந்தியிருப்பனபோல அழகு நிறைந்த மணிகளாற் செய்யப்பட்ட மகரகுண்டலங்களைக் காதிலழகுற வணிந்தனர். முகமாகிய பதுமநிதியைத் தாங்குகின்ற சங்கநிதியாகிய கண்டத்திற் சிந்தாமணியைப் போலத் தாள மாலைகளையும் பொன்னரணங்களையும்

களையும் அணிந்து, இடையில் உதரபந்தனந் தரித்துக்கைகளிற்கட கங்களைப்பூண்டு, விரல்களின் மோதிரங்களையணிந்து, திருவடிகளிற் சிலம்புகளை யார்த்து, இன்னும் அளவற்ற ஆபரணங்களைச்சிறப்பெ ய்த வணிந்தருளினர்.

இவ்வாறு விநாயகக்கடவுள் திருமணக்கோலங்கொண்ட சிறப் பைச் சிவபெருமான் கண்களிக்கப்பார்த்து ஈராயிர மருப்பினேடு மலிபோன்று பாரித்திருக்கின்ற அயிராவணத்தை அவருக்குத் தந் தாரும் உமாபரமேஸ்வரியும் இடபவாகனத்தி லெழுந்தருளினர் வேலாயுதத்தையேந்திய முருகக்கடவுள் மயில்வாகனத்திலேறியரு ளினர். துவாதசாதித்தர், ஏகாதசருத்திரர் * அட்ட வித்தியேஸ்வ ரர் அஷ்டவசுக்கள், அஷ்டதிக்குப்பாலகர்முதலிய எல்லாத்தேவர்க ளுஞ் சர்வாலங்கார சோபிதராய் அவ்வவர் வாகனங்களிலேறிப் புடைசூழ்ந்தார்கள். நிரும்பன், சும்பன், சங்கபாலன், குமுதன், பானு, தனஞ்சயன், தசமுகன், காலபாசன், விசயன் முதலிய பூத கணத் தலைவர்களோடு கந்தியசுவரரும் மற்றுமுள்ள கணநாதர்க ளும் நெருங்கினர்கள். யாவருந் துதித்தற்குரிய முதன்மைபெற்றி ருக்கின்ற பிரணவமந்திரம், வேதங்கள், கலைகள், காலங்கள், இரா சிகள், சத்தகோடி மகாமந்திரங்கள் முதலியவைகளோடு, காமிகம் யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம் சகத்தி ரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விஜயம், நிச்சுவாசம், சுவாயம்பு வம், ஆக்கினேயம் வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திர ஞானம், முகவிம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோத்தமம் பாரமேச்சுரம், கிரணம், பேதம், வாதுளம் என்கி ன்ற இருபத்தெட்டாகமங்களும் ஒவ்வொரு தேவவடிவங்களாகித் திரண்டுவந்தன.

இவ்வாறு சகலசம்பிரமத்தோடு யாவரும் புடைசூழ்ந்துநெரு ங்கிய சமையத்தில் விநாயக மூர்த்தியானவர் அயிராவணத்தி லா ரோகணித்துப் பூதகணங்கள் புகழ்பாடிவரவும் மாதவர் வேதமோ திவரவும் சந்திரவட்டக் குடைகள் ஆகாயவெளியை மறைக்கவும்,

* அட்டவித்தி யேசராவார் புத்தியட்டகர் எனப்படுஞ் சூக்குமபுவனமெ ட்டின் அதிபதிகளாம் அவர்கள்-அனாதர், சூட்சுமர், விவோத்தமர், ஏகநேத்தி ரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சென்டி எனப் பெயர் பெறுவர். சூக்கும புவன மெட்டாவன—பைசாசம், இராக்ஷசம், யாக்ஷம், காந்தர்வம், யகே ந்திரம், சௌமியம், பிராசேசுவரம், பிராமம் என்பனவாம்,

பலவித பட்டுக்கொடிகள் இருமருங்கினு கெருங்கவும், சிலர் ஆலவ ட்டங்கள் வீசவும், சிலர் சாமரைகளிரட்டவும், * தோற்கருவி மிட ற்றுக்கருவி என்கின்ற பஞ்சவாத்தியங்கள் காற்றிசைகளினு முழங் கவும், இன்னும் அளவற்ற ஆடம்பரங்களோடு கடல்பெருகு மாறு போல எள்ளிடவிடமில்லாமல் ஒருவரோடொருவர் அடர்ந்து கிரீ டங்கள், புயங்களுடன் புயங்கள் ஊடுதாக்க ஆகாயமார்க்கமாகச் செ ல்லுமளவில் அஷ்டபுயா சலங்களையுடைய சிவபெருமானுமே கணே சமூர்த்தி திருமணக்கோலங் கொண்டெழுந்தருளிவருவதைப் பிர மன் விண்டுமுதலிய தேவகணங்க ளாதியர்கண்டு அளவளாவிய வா னந்தத்தோடும் எதிர்கொண்டு சென்று கற்பகமலர்களைத் தூவியரு ச்சித்து அட்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து அங்கரத்துள்ள இரா சசீதியில் வலமாக வழைத்துக்கொண்டு போய்த் திருக்கல்யாண மண்டபத்தி லெழுந்தருளச் செய்தார்கள்.

உடனே சரசுவதியானவள் பொன் கரகத்திற் நெய்வகங்கை யை யேந்திவந்து கணேசமூர்த்தியினுடையதிருவடிகளில் அபிஷே கிக்க, பிரமதேவன் மிகுந்த வணக்கத்தோடும்அத்திருவடிகளை விள க்கி மெல்லிய ஆடைகொண்டொற்றினன், பின்னர்ச் சிவபிரானும் உமாதேவியும் ஓராதனத்திலிருந்தனர். சுப்பிரமணியர் முதலியமற் றைத் தேவர்களெல்லாம் வெவ்வே றுதனங்களில் அமைந்தனர். விநாயகக்கடவுள் அம்மண்டபத்தினடுவில் அமைத்திருக்கின்றமிர்ணி க்கச் சிங்காதனத்தில் ஆரோகணித்துத் தேவமாதர்கள் நடிக்கின்ற ஆடலினும் பாடலினும் தமது திருக்கண்ணேக்கினேச் சாத்தியிருந் தனர். அளவற்ற தேவப்பெண்கள் வெள்ளாடை, பாகு, வாழைக் கனி, தெங்கின்கனி, மற்றுமுள்ள பலாதிகள், இரத்தினுபரணங்கள் பூமாலைகள், சித்திரப்பட்டுகள் முதலான மங்கலவரிசைகளைத்தனித் தனி பொற்றும்பாளங்களில் நிரப்பித் தங்கடங்கள் கைகளிலேந்திக் கொண்டு, சாமரை பூரணகும்பம், கண்ணுடி, தோட்டிமுரசு, மணி விளக்கு, கொடி, இணைக்கயல் என்கின்ற அட்டமங்கலத்துடன் பல வாத்தியங்களுமுழங்க அங்கரவீதியை வலமாகவந்து விநாயகப்பெ ருமான் வீற்றிருக்கின்ற திருக்கல்யாணமண்டபத்திற் நெருப்பாக வைத்து வணங்கினர்கள், இப்பால் அந்தப்புரத்திலிருக்கின்ற சித்தி புத்தியென்னுங் கன்னியர்களைச் சரசுவதி, இந்திராணி, இலக்குமி

* தொற்கருவி - பேரிகை முதலியன. மிடற்கருவி-வேய்ங்குழல் முதலி யன, தாப்புக்கருவி-வீணைமுதலியன. கஞ்சக்கருவி-தாளம் முதலியன. மிடற் றுக்கருவி-கண்டத்தாற்பாடும் இசைகள்.

அதிதி, அனசூயை, அருந்ததி யென்கிற மாதர்களனைவரும் வணங்கி வாழ்த்துதல் செய்து சிரோரத்தினங்களால் இழைத்திருக்கின்ற ஆசனத்தி லெழுந்தருளப்பண்ணி அங்குவக்திருக்கின்ற தேவமாதர் கட்கெல்லாம் வேறுவேறு கனிவர்க்கங்களையும், வெள்ளடைப் பாக்குகளையும் தங்கள்கை மிதப்பத்தந்து பின்னர் யாவரும்புடைசூழ்ந்து பற்பல ஏவல்களை இயற்றிவர அக்கன்னியர்க்குத் திருமஞ்சன மாட்டுவாராயினர்.

புனுகு சட்டம்-கோட்டம்-ரகப்பூ-முத்தக்காசு-சயிலேகம்-இலாமிச்சம்-இருவேரி-ஆரியக்கோட்டம்-மாஞ்சில்-மலையிரு வேரி பச்சிலை கச்சோலம்-அதிமதுரம்-தக்கோலம்-வாழைப் பூ-நன்னாரிப்பூ-கண்டில்வெண்ணெய்-மகிழம்பூ-தாவரிசி-ஏலம் சாதிக்காய்-வெண் குங்கிலியம்-இலவங்கம்-ரகணம்-மஞ்சட்டி-சண்பகமொக்குஅரத்தை சாம்பிராணி-தகரம்-கருங்குங்கிலியம்-வெட்டிவேர்-மாலிகை என்கின்ற மூப்பத்திரண்டு பொருள்களோடு, கத்தூரி, குங்குமம், கர்ப்பூரம்அகில், சந்தனம்என்கின்ற ஐவகைவாசனைத்திரவியங்களும் காவல்-கடுக்காய்-நெல்லிக்காய்-தான்றிக்காய்-ஆல் அரசு-அத்தி- இத்தி-கோரைக்கிழங்கு மாத்தளிர் என்கிற பத்துவகை துவர்ப்புஞ்சேர்த்து வெள்ளி லோத்திரப் பட்டையையும் அரைத்தசந்தனவண்டலை, யுங் கலந்து மிக்க பக்குவத்தோடு காய்ச்சப்பட்டிருக்கின்ற பரிமளமிகுந்த தயிலத்தை அம்மங்கையர் கூந்தலிற் றிமிர்த்து மிக்க அன்பும் உவகையும் அதிகரிக்கப் பலமாதர்கள் மங்கல வாழ்த்துகளைச் சொல்ல நலங்கிட்டு யானையின் பிடரியிற் கொணர்த்துவந்த கங்காசலத்தினும் திருமஞ்சனமாட்டிப் பனியைப்போன்ற மெல்லிய ஒற்றுடைகளினல் இருவர் திருமேனிகளிலும் ஈரம்புலர்த்திப் பிறந்தபோதே பெண்ணென்று சொல்லுதற்கு ஓரடையாளமாகவந்த உறுப்பினுக்குப் பலஉபசாரத்தோடு முன்னதாகநிறப்புச்செய்வதுபோலப் பட்டாடையினைச் சாத்தி அதன்பின்னருண்டான மற்றோரடையாளமாகிய தனங்கட்கு உபசரிக்கத்தக்கதென்று இயற்கையிற் குளிர்ச்சியும் வெம்மையும் பொருந்திய அவைகட்குச் செய்கையிற் றண்மையுங் கடுமையுஞ் செய்பவர்கள்போல மனமிருந்த சந்தனச்சேற்றை யருவருப்புண்டாகவப்பி மேருமலையிற்படர்ந்த மேகக்கூட்டங்கட் கொப்ப அகிற்புகை முதலிய வாசனைப்புகைகளூட்டினர்கள் பற்பல மலர்கள் நெருங்கிப் பூத்திருக்கின்ற கானகத்தைபோலவும், ஆகாயமுழுவதினும் உலக்கூட்டங்களை நிரப்பிவருகின்ற இருளைநிகர்ப்பவும், சிப்பினல் வாரிப் பரவியிருக்கின்ற கூந்தலிற் பலவிதரீத்

னமாலிகளையொத்த பன்னிறமலர் மாலிகைகளைச் சேர்த்து எருக்கின் * மூரிப்பிணையொப்பக் கொண்டையிட்டார்கள்.

மதம்பொழிகின்ற யானையானது தன் மருப்பிற் றுதிக்கையைச்சுற்றிக் கொண்டாற்போலக் கஸ்தூரிமணங் கமழ்கின்ற உச்சிக் கொண்டையில முல்லைமாலைகளைச் சூழவணிந்துமேகமானதுவெள்ளிய நீர்த்தாரைகளைச் சொரிவதுபோல அவ்வுச்சிக்கொண்டையிற் பிரகாசிக்கின்ற முத்துமாலைகளைத் தொங்கவிட்டார்கள் இந்திரன் தனதுவில்லைத் தன்வாகனமாகிய மேகத்தில்வைத்ததுபோலக்கரிய கூந்தன் மருங்கடந்திருக்கின்ற துதலின்மீது அவ்விந்திரதனுசிலம்பு தொடுத்ததையொப்பதுதலணிமாலியினையணிந்தார்கள், விநாயகப் பெருமான் திருமுடியின்மீது விளங்கியிருக்கின்ற இளந்திங்களையுந் திருக்கரத்தி லேந்தியிருக்கின்ற மயிற் கொடியையும், அவர்காதலியாராகிய சித்திபுத்திகளும் அணிந்துகொள்வது முறைமையென்று சந்திரப் பிறையையும் மயிலணியையும் முடியின்மீ தணிந்தார்கள். இராகு என்னும் கோளானது இக்கூந்தல்முகிலென்று * சைவலமென்றும், முகம் பூரண சந்திரனன்று தாமரைமலரென்றும், கருதிய கலுமாறு மகரத்தினது பேழ்வாயையொத்த சிவந்த நிறத்தையுடைய மணிகளே யழகுண்டாக நெற்றியி லணிந்தார்கள் நாணின்மிவளேத்து அம்புதொடுத்திருக்கின்ற அழகிய விற்போன்ற நெற்றியில் † அத்திரஞ் சத்திரமுதலிய எவ்வித ஆயுதங்களாலும் வெல்லப்படாத விநாயகக்கடவுளுடைய பிரதாபத்தைப்பொதிந்துவைத்ததுபோலச் சிவந்த திலதப்பொட்டினையிட்டார்கள் அமுதபானராகிய தேவர்கள் விழிகளைப் பாற்கடலென்றுங் கொங்கைகளை மந்தரகிரியென்றுங் கருதி யேக்கமுறுத வண்ணம் அவ்விழிகளைக் காத்தற் கோரடையாளமாக அஞ்சனந் தீட்டினர்கள்,

இம்மங்கையர் கண்கள் ஆலத்தையும் அமுதத்தையும், அளிப்பனவன்று சுத்தமாகிய திருப்பாற்கடலேயென்றும், அவைகளிற் றீட்டப்பட்டது அஞ்சனமன்று அதனையுண்பான வந்த மேகமென்றுங்கருதி மயங்குதற் கேற்பனவாக அக்கடலினிடத் தண்டாகிய சங்கநிதியாலின்ற நீண்ட தரளமணியினை காசியின்மீ தணிந்தார்

* மூரிப்பு இது இக்காலத்து கும்பம் எனவும், முசப்பு எனவும் வழங்கப்படுகின்றது.

* சைவலம்—பாசி. † அத்திரம்—கைவிடை, சத்திரம்—கைவிடாப்படை.

கள். அம்மங்கையர் முகாரவிந்தமாகிய சகோரப்பக்ஷியானது நெற் றியைச் சந்திரவிம்பமெனக்கருதி அமுதண்ணவந்திருப்பதைப்போ ல அம்முகாரவிந்தத்தில் விளங்கி யிருக்கின்ற கண்ணிணைகளாகிய நீலோற்பல மலர்களின் அழகை மற்றைய நீலோற்பலமலர்கள் கிர கித்துக்கொள்ளுமாறு இடங்தேடிக்கொள்கின்றன வென்று சொல் லும்படி மிக்க வொளிவிளங்குஞ் செவிகளின்மேல் அன்றலர்ந்த நீலோற்பல மலர்களே யணிந்தார்கள். தாய் தங்தையரைப் போல அம்மங்கையர்கள் வளர்த்த அன்னப் புட்களானவை அவர்கட்கு இரகசியஞ்சொல்லச் செவிகளி னடைத்திருப்பனபோல ஒளிமிகுந்த மணிகளே வரிசையுறச்சேர்த்துப்பதித்த அன்னக்கொப்புகளே யணி ந்தார்கள். உரோகணிமாது இம்மங்கையருடைய வொளிமிகுந்த வனப்பினைத் தன்காதலனுகிய சந்திரனென்றுகருதி விருப்புற்றமித் திருப்பதுபோலக் குளிர்ச்சியு மழகும்வாய்ந்த தரளத்தினுற்செய்த கன்னப்பூவென்னும் ஆபரணத்தினை யணிந்தார்கள்

இம்மங்கையர் முகமானது தேனை யுமிழ்கின்ற தாமரை மலர் போல மலர்ந்து, அமிர்தமொழுகுகின்ற சந்திரனைப்போலக் குளிர்ச் ந்து கம்மைப்போலவும் கிரணங்களைவீசிப் பிரகாசிக்கின்ற தெனக் கருதிச் சூரியனுவன் வணங்க வந்திருப்பதுபோலப் பதுமராகத் திற் செய்த பசியகுண்டலத்தினை யணிந்தார்கள் கன்னிக் கழுதினை யொத்த கண்டத்திற் கண்டோர்களது கண்ணெச்சி லடையாதிருக் கக் காப்புச்செய்தாற்போலக் கிரணங்களையுடைய பல மணிகளாற் செய்த கட்டுவடத்தினை அக்கண்டத்தின்மீ தணிந்தார்கள் கல்யா ணமகிழ்ச்சியினுல் அம்மங்கையர்க்குக் கொங்கைகள் பூரிப்பதனுலுக் தோள்கள் பெருத்திடலாலும் இப்பூமியின்கண் இடமில்லாமற்போ மென்று கருதி அவைகள் பரந்தலைத்தடைசெய்வர்போல ஒளிமி குந்த தனங்கட்குக் கச்சினையுந் தோள்கட்கு வாகுவலயத்தினையுங் கைகட்கு வளையினையும் விரல்கட்கு மோதிரத்தினையுமணிந்தார்கள் மிக்க மதர்ப்பினையுடைய கொங்கைகட்குப் பலவரிசைகளே யளிப்ப வர்போல அக்கொங்கைகளின் மருங்கெல்லாங் கிரணங்களே வீசுகி ன்ற மாணிக்கமாலை, பவளமாலை, முத்துமாலை, வச்சிரமாலை, கோ மேதகமாலை முதலியவைகளோடு அணிபெறக்கோத்த பூமாலைகளே யுமணிந்தார்கள், கொங்கைகளினின்றும் பலமணிவடங்களாகிய நதி கள் ஒளிவிட்டு வீழ்கின்ற நிதம்பமென்னுங் கடலுக்கு நாணிநிருமி ப்பவர்போலப் பற்பல மணிகளாற்றொகுத்துகோத்த மூப்பத்திரண்டு கோவையாகிய மணிவடத்தினையும் அரைப்பட்டிகைமுதலான ஆப

ரணங்களையு மணிந்தார்கள். அளவற்ற காள்தேடியுங் காண்டற் கரு மையனவாயிருந்த திருவடிகளை இன்று கண்டோமென்று நான்கு வேதங்களு மனங்களித்து விடாமற் பற்றிக்கொண்டதுபோல அம் மங்கையருடைய பாதபதுமங்களிற் பாடகஞ் சதங்கை தண்டை நூபுரம் பாதசாலம் பொன்மோதிரம் என்னும் ஆபரணங்களையணி ந்து செம்பஞ்சுக்குழம்புந் தீட்டினார்கள் அம்மங்கையர் ஆபரணமு தலியவைகளாற் செயற்கை யழகுவாய்ந்திருக்கும் ஏனைய மாதர்க ள்போலுருக்கொண்டிருப்பினும் இயற்கையிற்றானே யளவற்றவன ப்புக்களைவாய்ந்தவர்களென்று இதுகாறுஞ்செய்தசெயற்கையழகை மறைத்துக் காட்டுவார்கள்போல அரைதொடுத்துத் தோள்வரை யில் மெல்லிய ஆடையினை யணிந்தார்கள்.

இவ்வாறு சித்தி என்னுந் தேவியார்க்கு இலக்குமி அதிதி இர் திராணி என்னுமூவர்களும், புத்தி என்னுந் தேவியார்க்கு அகரு யை அருந்ததி இரதிதேவி என்னுமூவர்களுமாக மணக்கோலத்திற் குரிய வலங்காரங்களை யெல்லாஞ் சிறக்கச்செய்து முடித்து அவ்வி டத்தினின்று நீங்கிச் சிவபிரான் இடப்பாகத்தமர்ந்த பார்வதிதேவி யாருடைய கடைக்கணிக்கின் நேராகின்று, அன்னையே! முன்ன ம் அடியேங்கள் செய்த தவப்பயனுகத் தேவரீர் ஆக்கியாபித்த பணி விடைகளைக்குறைவின்றி நடாத்திவந்தனமென்றறிவித்து வணங்கி அத்தேவியாருடைய வாஞ்ஞைபெற்று பின்னரவ்விருவகையினரு ம் அம்மங்கையரை நவரத்தினச் சிவிகைகளிலேற்றிப் பலவின்னினின் மாதர்களுந் தோழியர்களும் புடைசூழ்ந்தவரவும் வெண்பட்டுக்கு டைகள் மயிற்பிஞ்சங்கள் முதலிய வலங்காரங்களோடு பலவகைக் கொடிகின்னங்கள் விளங்கவும், குடமுழாமுதலியபலவாத்தியங்கண் முழங்கவுமாக அளவற்ற வைபவங்களோடு வீதியிலெழுந்தருளச்செ ய்தமாத்திரத்தில் முரசு முதலியவெல்லாம் முறைமையாகச் சேர்த் துவைத்திருக்கின்ற கல்யாண மண்டபத்திற் சனக மகாமுனிவர் ஆசிரியராகவந்து தருப்பை வெண்பொரி முதலிய பலவகைப்பொ ருள்களையுஞ் சேகரித்து முகூர்த்தகாலம் பார்த்துக்கொண்டிருந்த னர். அச்சமயத்தில் ஒருவர்க்கொருவ ரொப்பாவதன்றி மற்றொரு வரொப்பில்லாத அம்மணப்பெண்களிருவரும் வீதியை வலமாகவ ந்து திருக்கல்யாண மண்டபத்தி னிறங்கிக் கற்பகதருவின் இருமரு ங்கினும் படர்ந்திருக்கின்ற காமவல்லிக்கொடிபோலக் கணேசமூர் த்தியினுடைய பக்கத்திற் கலந்திருந்தார்கள்.

உடனே மண்ணில் வழுக்கி வீழ்ந்த தேவர்கள் மீட்டும் விண் ணிற்புக்கி மகிழ்வை யடைந்ததுபோல; இதுகாறுங் கணேச மூர்த்

தியை நீங்கியிருந்த அம்மங்கையர் மீட்டும் அவர் சமீபத்திற் கலத் தலும், முன்னறிவேறுபட்டுவிளர்த்திருந்தநிறத்தினேப்போக்கித்தங் கள் சுபாவவடிவத்தினே யடைந்தார்கள் இப்பால் சகலகலாவல்லவ ராகிய சனகமகாமுனிவர் சங்கற்பஞ்செய்த புண்ணியாவசனம் புரி ந்து அம்மணப்பந்தரிலுள்ள பொருள்களெல்லாம் தூய்மையாகக் கணேசமூர்த்தியை வேதாகமங்களாற் முறித்துத் தேன்கலந்த பாலும்பழமுமளித்து அருக்கியம் பாத்தியம் ஆசமனம் என்கின்ற மூன்று மந்திரசலங்களேயுந்தந்து மணப்பெண்களுக்குக் கூறை முத லியவைகளே யணிவித்துப் பிரமதேவனேக்கூவினர். உடனே அப்பிர மதேவன் விரைந்துவந்து தம்பதிசமேதரா எழுந்தருளியிருக்கின்ற விநாயகக்கடவுளுடைய மணவணிக்கோலத்தைமனங்களிக்கக்கண்டு கரங்களேச் சிரமேற்கூப்பித்தொழுது துதித்துத் தன்னருகில் நின் கின்ற சரசுவதியைப்பார்க்க அவள் பலதெய்வப்பெண்களுடன் துரி தமாகச்சென்று திருமஞ்சனங் கற்பகமலர் தூபதீப முதலாகியபொ ருள்களேப் பொற்பள்ளயங்களிலேந்தித் தன்கணவன் சமீபத்தில் வந்து நின்றனன்.

அக்காலத்திற் சனகமகாமுனிவர் பணித்தருளியபடிக்குப் பிர மனுவன் வேதாகம விதிப்படி பாதபூசைசெய்யத்தனித்தவனுப்பொற்றட்டினிடத்தில் விநாயக மூர்த்தியினுடைய திருவடிகளேச் சேர்த்துத் தன்தேவியானவள் தங்கக்குடத்தில் நிரப்பி வைத்திருக் கின்ற கங்காசலத்தை யெடுத்து மெல்லமெல்ல வார்த்துவரத்தான் சுத்திசெய்து திருவொற்றுடையால் ஈரத்தைப்புலர்த்திக் களபகஸ் தூரி முதலியவைகளேச் சேர்த்திருக்கின்ற சந்தனக்குழம்பை யப் பிப் பஞ்ச தருக்களினது புதிய மலர்களேக் கொண்டருச்சித்துச் சாம்பிராணித் தூபத்தைக் காட்டி கர்ப்பூராஞ்சனங் கொடுத்து, சோடசவுபசாரங்களோடும் பூசனைகளே நிறைவேற்றியவுடன் உடல் பொருள் ஆவி என்கிற மூன்றையும் அகாதியிற்றுலே தமக்கு அடி மையாகவுடைய கடவுளுக்குப் பரிபக்குவராயினேர் தங்கள் போத வொழிவினிமித்தமீட்டுமெவைகளேச் * சமர்ப்பிக்கு முறைமைபோல விநாயகமூர்த்தியை அநாதிதொட்டு நீங்காத அச்சத்திகளேப் பிரம தேவனுவன் மீட்டும் பழமை பாராட்டி யளிப்பவனுய்க் கணேச மூர்த்தியினுடைய திருக்காங்களிற்றனது புத்திரிகளாகிய சித்தி

* உடல் பொருள் ஆவி முன்றையுஞ் சமர்ப்பித்தலாவது உடலைத்தன தென் றபிமானித்தலின்றி யிருத்தல், பொருள்களின்மேல் பற்றுதலின்றி யிரு த்தல் ஆவி வருந்தியன்றி வேறென்றைச் சுட்டுதலின்றி யிருத்தல்,

புத்திகளின் திருக்கரங்களைச்சேர்த்துச் சுவாமீ! அடியேன்அருமை யாக வளர்த்தெடுத்த இம்மங்கையரைத் தேவரீர் அங்கீகரித்து, என்னே யாட்கொள்ளவேண்டுமென்று சரசுவதிவிட்ட தெய்வதீர்த் தத்தால் தாராதத்தஞ்செய்து வணங்கினன் அவ்வாறே அத்திருக் கலியாணமகோற்சவத்தில்வந்திருந்த சுவக்கோள்கள்முதலிய சகல வுயிர்களுந் தாமாக வீருந்தும் அக்கன்னியரை ஏற்றுக்கொள்ளு நிமித்தம் அவைகளினின்றும்வேறுகிவீற்றிருக்கின்ற கணேசமூர்த் தியானவர் அவ்விண்ணப்பத்திற்கு அருள்சுரந்து ஓர் தங்கை தன் கையிலிருக்கின்ற வெள்ளடையைச் சிறியமதலை கையிற்றந்து மீட் டும் அதைத்தன்வாயாற் கிரகித்துக் கொள்ளுமாறுபோலமுன்னர் அப்பிரமன் கடைத்தேறுமாறு கடாட்சித் தருளிய அம்மங்கைய ரைமீட்டு மவனிடத்தினின்றும் தாம் ஏற்றுக்கொண்டனர்.

இப்பாற் பிரமதேவன் தன்னிஷ்டசித்தியைப் பெற்றுக் களித் தவனுய்ச் சில காரியகாரரைத் துரத்தி, வாழைக்கனி, மாங்கனி, பலாக்கனிமுதலிய கனிவர்க்கங்களேயும், மதுர மிருந்த கருப்பஞ் சாறு, ஆவின்பால், தேன், சற்கண்டு முதலிய சிறந்த வஸ்துக்களே யும், பொலிவாகத்தருவித்துத் தங்கப்பள்ளயங்களினும் கிண்ணங்க ளினு நிரப்பிக்கொண்டுவந்து கர்த்தனே! தேவரீர் இவற்றினேப்புசி த்தருளி அடியேனே இரட்சிக்க வேண்டுமென்று நிவேதித்தனன். பின்னர் மங்களபேரி, முரசம், மத்தளம், டமா, குடமுழாது தக் கை, வலம்புரிச்சங்கம், வேய்ங்குழல், திருச்சின்னம், பூரி, எக்காள ம், தத்தாரி, சயகண்டை முதலிய பல மங்களவாத்தியங்கள் அண் டங்களதிர்ந்து திசைகள் செவிடுபடத்தக்கதாகத் தாம் தாமென்று முழங்கவும் தேவர்கள் முனிவர்கள் கின்னரர் கிம்புருடர் சித்தர் வித்தியாதரர் கருடர் காந்தருவர் முதலிய சகலசனங்களும் மன வெழுச்சியுடன் தங்க டங்கள் கரங்களேக் கொட்டிச் சயசயவென்று போற்றவும் ஏகாதசருத்திரர்-துவாதசாதித்தர்-அஷ்டதிக்குப்பால கர் முதலிய யாவருஞ் சந்தோஷசாகரத்தின் மூழ்கி இத்தினஞ்சன் மசாபல்லியராய் முத்திக்களாயிருந்தெனென்று பலவிதங்களிற் துதி த்து மங்களவாழ்த்துக்கூறவும் அத்திரி ஆங்கீரசர் கௌதமர் சமத க்கினி, பாரத்துவாசர்முதலிய ரிஷிபுங்கவர்கள் வேதாகமங்களாற் துதித்து வாழ்த்தவும், சமுத்திரகோஷமும் அஞ்சும்படியாக ஆகா யத்தினின்று தேவதுந்துபிகள் கணகணவென்று சத்திக்கவுமான இவ்விதவாடம்பரங்களோடு சனகமகாமுனிவர் ஓமகுண்டத்தைச் சேர்ந்து சுற்றிலும் அந்தணர்களே யிருத்தித்தருப்பைகளேப்பரப்பி,

ளையிறைத்து, மந்திரமலர்களாற் பிரணவமுதலிய பிரதம தேவதை களை வழிபட்டு, பூரணகும்பம் குடவிளக்கு முதலியவைகளை யங் காங்குவிதிப்படி தாபித்துவைத்து முத்தீக்களையு மந்திரபூர்வகமாக வோமகுண்டத்திலெழுப்பி, விநாயகக்கடவுளையுஞ் சித்திபுத்திகளை யும் அதனருகில் எழுந்தருளச்செய்து இருடிபுங்கவர்களும் அக்க ணர் குழுஉக்களும் வேதசாகைகளைச் சொல்லிச் சமித்துக்களைக்கிர மப்படி ஓமகுண்டத்திற் போட்டுவர பசுநெய்யை யூற்றி இடையி டையிற் பொரியையும் பாலையுமிறைத்து ஈவக்கிரக வோம முதலிய கருமங்களை வேதாகமவிதிப்படி விநாயகப்பெருமான் முன்னிலையில் நிறைவேற்றிப் பூரணாகுதியுங் கொடுத்தவுடன் அத்தீயினிடத்தெடு த்தமைக்குழம்பை மாப்பிள்ளையினுடையதிருநுதலிலிட்டுப்பின்னர் அவரைக்கொண்டு கலியாணப் பெண்களுக் கிடுவித்து நாரதமுனி வர் மும்முறை பொரியிட அவைகளை ஓமாக்கினிக் காகுதிசெய்து மற்றைச் சடங்குகளையும் வரன்முறையாக முடித்தனர். பின்னர்க் கல்யாணப் பிள்ளைக்கு மகாவிஷ்ணு தோழராக விருந்து கைலாகு கொடுத்துப் பிடத்திலிருந் தெழுப்பலும், இலக்குமிமுதலிய அறுவ ர்களுந் தங்கள் நாயகியராகிய சித்திபுத்திகளைத் தழுவியெடுத்து அவர்கள் கனிட்ட விரல்களை எமது கர்த்தராகிய விநாயகப்பெரு மானுடைய கனிட்டவிரல்களாற் பற்றச்செய்தார்கள். உடனே சக லருஞ் புடைசூழ்ந்துபோற்றி வரும்படியாகக் கணேசமூர்த்தியான வர் அத்தீக்குண்டத்தை மும்முறை வலம்வந்து வடபாரிசத்திற் சேர்ந்து கல்யாணப்பெண்களின் திருவடிகளைத் தமது திருக்கரத் தாற் தூக்கித்தூக்கி நிலத்திலிட்டு முடிவில் அம்மியின்மீது வைத் துப் பதிவிரதாசிரோன்மணியாகிய வசிஷ்டமுனிவர் பத்தினியை எதிரிலழைத்து அவள்மீது தமதுதிருக்கண் சாத்தினர்.

இவ்விதமாக அக்கினிதேவன், தவத்தர், தேவர் வேதப்பி ராமணர் முதலிய யாவர் முன்னிலையினுஞ் சாட்சியாகத் திருக்கல் யாண சம்பிரமங்களனைத்தும் கிரமமாக முடிந்தவுடன்விநாயகக்கட வுள் தமது தேவியரோடுந் தாய்தந்தையர் திருவடிகளில் வணங்க அத்தாய் தந்தையர் ஆசீர்வதித்து மனப்பூரிப்படைந்து ஈவரத்தின மயமாயிருக்கின்ற ஆசனத்திலிருத்தித் திருமாலேமுக்க, அத்திரு மால் சிவபிரானே வணங்கித் தேவேந்திரனெடுத்து நீட்டுகின்ற தா ம்பூலாதிகளை அகந்தீர்முதல் உருத்திரகண மீறாயுள்ள எல்லாத்தே வர்கட்கும் வரன்முறையாகக் கொடுத்து வந்தனர். அவ்வாறே

கற்பக விருட்சமும் முனிவர் முதலாயுள்ள பரிசனங்கட்கு வேண்டு வனவற்றைவரையாது கொடுத்துவந்தது. இவையன்றி அவ்வவர் கள்குறித்துக்கேட்ட வரங்களையுஞ் சிவபெருமான் தமது பூரண கடாக்ஷத்தால் அறுக்கிரகித்துப் பார்வதி தேவியோடுஞ் சென்று மற்றோரிடத்திற் றனியாக வீற்றிருந்தனர் இப்பாற் சித்திபுத்திக ளிருவரும் அழகிய மணிகளிழைத்த சிவிகைகளிலேறிவர எம்மைய டிமையாகவுடைய விநாயகமூர்த்தியானவர் ஈராயிர மருப்பினையே ந்திய அயிராவணமென்னும் பொருப்பில் ஆரோகணித்துஅடைத்த கடலையுடைத்ததுபோல அளவற்ற வாத்தியங்கள் முழங்கவும்மடை திறந்து விடுத்ததுபோல மங்கலவாழ்த்துக்கள் சத்திக்கவும், தேவர் கள் புட்பவருடம் பொழியவும், சந்திரவட்டக் குடைகள் ஆகாயத் தைக் கவிக்கவும், பலவிருதுக்கொடிகள் அண்டமுகட்டை நெருக்க வும், இருமருங்கினும் வரிசை வரிசையாகக் கவரிகளிரட்டவும் ஒப் பற்ற ஆலவட்டங்களை காற்புறங்களினு மசைக்கவும், கின்னரர் இ டைபாடவும் அரம்பையர் நடமாடவும், மற்றும் இவைமுதலிய சக லவாடம்பரங்களோடும் நந்திதேவர் தமது வெள்ளி வேத்திரத்தால் நெருங்கியிருக்கின்ற சனங்களைவிலக்கி வரும்படியாகப் பைய பைய அயிராவணத்தை நடாத்திக்கொண்டு வீதியில் பவனிவருகின்ற சமயத்தில சில மாதர்கள் நீராஞ்சனம்-பூரணகும்பம் - மணிவி ளக்கு-முளைப்பாலிகை முதலிய மங்கலப்பொருள்களையேந்தியும்சில மாதர்கள் கன்னற்றுண்டு-கதலிக்கனி-மாங்கனி-பலாக்கனி முதலிய வர்க்கங்களைவீசியும் சில மாதர்கள் புட்பம்-சந்தனம்-கற்பம்-பனி நீர் முதலிய பரிமளத்திரவியங்களைச் சொரிந்தும், சிலமாதர்கள் வச் சிரம் வைடூரியம்-கோமேதகம்-புட்பராகம் முதலிய ரத்தினங்களை எறிந்தும் இவ்வாறு யாவரும் மிகுந்த பத்தி விசுவாசத்துடன் பற் பல சம்பிரமங்களைச் செய்து கரங்களைக் கூப்பித்தொழுது வாயார வாழ்த்தினவர்களாயிருந்தார்கள்.

அவருட் சிலதருணமங்கையர் தேவதேவோத்தமராகிய விநா யகக்கடவுளது அற்புதமாகிய ரூபலாவண்ணியங்களைநேத்திரோற்ச வமாகக்கண்டு தங்கடங்கள்சரீரமெல்லாம் பூமியிற்பொருந்தச் சேவி த்தமாத்திரத்தில் வேறொரு செயல்களுமற்றவர்களாய் அளவற்ற ஆசைப்பெருக் கென்னுஞ் சமுத்திரத்தின் மூழ்கியிருந்தார்கள். அவ ருள் ஒருத்தி தன்மையிலைச் சற்றேதணித்தெழுந்து இவ்வாடவரை யொப்பவுர் யாவரிருக்கின்றார்களென்று தென்றற் காற்றினு லசை கின்ற இளங்கொடியைப்போலத் தவண்டைரைப்ப, அதனைக்கேட்ட

யான்தழுவ நினைத்திருக்கின்ற ஆடவர்க்கு நீ துன்ப முற நோக்கினையோவென்று கோபித்தனள். ஒருத்தி சகல ஆபரணங்களும் இழந்தாயகர் திருமேனியிலணிந்ததனு லல்லவா அவைகட் கழகுண்டாகியதென்று வியக்க அதனைக்கேட்ட மற்றொருத்தி அவளையெதிர்த்துச்சீறி நீ உயிர்வாழ்தல் விரும்புவையாயின் இத்தவொப்பற்ற அழகருடைய நினைப்பையொழித்து விடக்கடவை. முன்னமே அவரிடத்து என்மனந் தூதுபோயிருக்கின்றதென்றனள். ஒருத்தி தன்முகத்தைநோக்கி நிமிர்ந்திருக்கின்ற கொங்கைகளைப் பார்த்து ஓ தனங்களே! இச்சித்திபுத்திரன் தங்கள் முகத்தைநோக்கியிருக்கின்ற கொங்கைகளைவிநாயகமூர்த்தியார் தழுவும்படி அரியதவத்தைச்செய்தார்கள். அத்தனங்களைப்போல நீங்களும் என்முகத்தை நோக்குவதிலென்னபயன்? முற்பிறப்பில் அவரைக் கூடுமாறு நற்றவஞ் செய்திலோமேயென்று எக்காமுற்றுரைத்தனள். ஒருத்தி விநாயகக் கடவுண்மீதுகொண்ட பெருங்காதலால் தானேக்குமிடமெல்லாம் அவரைப்போல உருவெளித் தோற்றமுண்டாகக்கண்டு இவ்வியிராவணத்தில் வருகின்ற கட்டழகர் ஒருவரோ பலரோவென்று ஐயமுற்றுத் தன்கலீசோர்வதையு மதியாதவளாகி நின்றனள்.

இவ்வாறு ஆங்காங்கு காமுற்று வருந்துகின்ற மங்கையர்டத்துள் விநாயகமூர்த்தியைக் கைகுவித்துத் தொழுகின்றவருடைய கரங்களுங்கொழுகொம்பற்ற கொடிபோலத் தாழ்ந்துவணங்கிமீளவும் எழுத லில்லாதவர்களுடைய நிதம்பங்களுமே தத்தம்வளைகளோடு கலைகளோடு நிறைந்து விளங்கியிருந்தன. அன்றி, மற்றையர் கரங்களும், நிதம்பங்களும், அவ்வளைகள் சேர்ந்தனவாகவும், கலைகள் வீழ்ந்தனவாகவுமிருந்தன. சிலமங்கையர் கைகளி லணிந்திருக்கின்ற வளைகளெல்லாம் விநாயகப் பெருமானுடைய மார்பைப் புல்லாதகைகளில் காமிருப்பதனலென்னபலன் என்னபயனென்று நழுவிவீழ்ந்தன. சிலமங்கையர் மூடித்திருக்கின்ற கூந்தல்களெல்லாம் அவர்கள் உள்ளநெகிழ்ச்சியை அக்கணேசமூர்த்திக் கறிவிப்பது போல அவிழ்ந்து சோர்ந்தன. சிலகோதையர் ஆனந்தக்கூத்தாடினர்கள் சிலபேதையர் நயந்தெரிந்து பாடினர்கள். சில அரிவையர் குறிஞ்சிமுதலிய பண்களைப்பாடினர்கள். சில தெரிவையர் பாவனையிற்கலந்தாடினர்கள். இவ்வாறுபேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம், பெண் என்னும் எழுவகைப்பரு

வங்களைப் பெற்றிருக்கின்ற * ஸ்திரீசாதிகளெல்லாம் தெருக்களில் நிறைந்து நின்று காதல் கொள்ளத்தக்கதாக என்னையாட்கொள்பவராகிய விநாயகமூர்த்தியானவர் அலங்கரித்திருக்கிற வீதிகளை வலமாகவந்து, மீட்டும் அரண்மனையிற் பிரவேசித்தனர். அத்தருணத்திற் காமதேனு, சிந்தாமணி, பஞ்சதரு, சங்கநிதி, பதுமநிதி என்னும் இவைகள் வேறுவேறுருவங்கொண்டு வந்தவர்கட் கெல்லாம் பெருமைபெற்ற பலதிரவியங்களை அவ்வவர்கள்வெறுக்கும்படியாக மழைபோற் சொரிந்தன.

இவ்வண்ணந் திருக்கல்யாண சம்பிரமங்கண்முழுவதும் நிறைவேறிப் பின்னர்த் தேவர்கள்-முனிவர்கள்-திக்குப்பாலகர் - கணநாதர்கள்-பூமண்டலவாசிகள்-பாதலவாசிகள் முதலிய மற்றைய தீபாந்தரங்களிலிருந்து வந்தவர்கள் யாவருஞ் சிவபெருமான் பார்வதி தேவியாரோடும் வீற்றிருக்கின்ற சபையைச்சேர்ந்து தீர்க்கதண்டஞ் செய்து விடைபெற்று தம்பதி சமேதரா யெழுந்தருளி யிருக்கின்ற விநாயகமூர்த்தியைக்கண்டு பலமுறை துதித்து அடியற்றமரம்போலவீழ்ந்து நமஸ்காரஞ்செய்து அவரது திருவருளைப்பெற்றுத் தங்கடங்கள் பதவிகளிற் சோந்தனர். இப்பாற் சிவபெருமான் தம்மோடு வந்த கந்தவேள்முதலிய காரணர்களெல்லாம் புடைசூழ்ந்து வரும்படியாகச் சித்திபுதி மணாளராகிய கணேசமூர்த்தியை யழைத்துக்கொண்டு பார்வதி தேவியாரோடுங் கைலைக்கெழுந்தருளித் தமது பஞ்சகிருத்தியங்களை நடாத்தியிருந்தனர். விநாயகக் கடவுளும் தமது உலகத்திற்சென்று எமதன்னையராகிய சித்திபுத்திகளோடுங் கலந்து சகலபோகங்களையும் அநுபவித்திருந்தனர்.

திருமணப்படலம் முற்றிற்று

---

* அவர்க்கு முறையே வயதெல்லையாவது ஐந்துமுதல் ஏழனவும்பேதை. எட்டுமுதற் பதினெனனவும் பெதும்பை, பன்னிரண்டுமுதற் பதின்மூன்றனவும் மங்கை, பதினான்குமுதல் பத்தொன்பதனவும் மடந்தை. இருபதுமுதல் இருபத்தைந்தனவும் அரிவை. இருபத்தாறு முதல் மூப்பத்தொன்றனவும் தெரிவை. மூப்பத்திரண்டுமுதல் நாற்பதனவும் பேரிளம், பெண்.

விண்டு சடாக்கரம்

அநுட்டித்த படலம்.

சித்தி புத்திக டிருமணஞ் செப்பினும் வியதா
பைத்த பன்னகப் பள்ளியான் கணேசனைப் பரவி
மெத்து வண்டிறன் மதுகயி டவருயிர் வீதத
வத்திறத் தினைக்கே ளெனவறை குவன்மலரோன்.

சௌநகாதி முனிவர்களே ! எமதுசற்குரு மூர்த்திகளாகிய வியாதர்க்குப் பிரமதேவர் கூறியபடி விநாயகமூர்த்தி சித்திபுத்திக ளோடு திருமணஞ்செய்த சிறப்புகளைச் சொன்னேம். இப்போல் அவ் விநாயகமூர்த்தியை விண்டு உபாசித்தவரலாற்றினையுஞ்சொல்வோ ங்கேட்பீராக முன்னொருகாலத்தில் மகாவிஷ்ணு வானவர் திருப் பாற்கடலிற் சேஷசயனத்தின்மீது நிதநிரை செய்துக்கொண்டிருக் கையில் அவர் செவிகளினின்றும் மிக்க வலிமைபொருந்திய மது கைடவர் என்னும் இரண்டசுரர்கள் ரெருப்பைசொரிகின்ற விழி களும், இடியையொத்துச் சத்திக்கின்ற குரல்களும், யாவருங்கண் டஞ்சத்தக்க உருவங்களும், பிறைபோலவளைந்திருக்கின்ற கோரப் பற்களும், சுருட்டிவிட்டிருக்கின்ற முகமயிரும், சிவந்திருக்கின்ற முடிமயிரும் உடையவர்களாய்த தேவர்களெல்லாரு தன்புறும்படி யாக உற்பவித்து, அம் மகா விஷ்ணுவையு மதியாது அரியதவங்க ளைச்செய்திருக்கின்றமுனிவர்கள் பெரியோர்கள் முதலானவர்களை நிந்தித்து வேதாகமவொழுக்கங்கள் சிறிதுமின்றிப் பூலோகதலத் லோரையெல்லாம் வதைசெய்து பின்னர்த தெய்வலோகத்தையும் அதஞ்செய்யக்கருதிப் பிரமதேவனைப் பிடிக்கச்சென்றார்கள். அதற் கப் பிரமதேவன் அஞ்சித்தன்னுருவத்தை அவ்வசுராக்குத்தோற்ற வொட்டாமல் மறைத்துக் கொண்டு கணேசமூர்த்தியை மனதிற் றியானித்து அவர் திருவருளையே துணையாகப்பெற்று இதனை யோசிக்கலாயினன்.

கறுத்த கடல்போன்ற நிறத்தினை யுடைய இவ்வசுரரை மேக வண்ணராகிய மகாவிஷ்ணு அழிக்கவேண்டுவதே யன்றி மற்றெ ருவரால் ஆகாதென்று நிச்சயித்து உடனே விரைந்து சென்று திருப்பாற்கடலையடித்தனன். அங்கு அத்திருமாலானவர் சேஷசய

* விண்டு—வியாபக முடையவர்—விஷ்ணு என்னும் வடமொழித்திரிபு விட்ணு எனவும் வரும். சடாக்கரம்—ஆறெழுத்து, சடாக்ஷரம் என்னும் வட மொழித்திரிபு.

னத்தின்மீது கண்படுத்திருப்பக் கண்டு யாவராயினும் நித்திரை செய்யுங்காலத்தில் அந்நித்திரையைப் பங்கப்படுத்துதல் தகாதகாரியமாக வேதாகமங்கள் சொல்லுகின்றமையால் நாமிவரை யெழுப்புதல் கூடாதென்று யோசித்து அவர்கண்படுவதற்குக் காரணமாக விருக்கின்ற நித்திராதேவியைக்கூவி, அம்மையே!

சாவித் திரியாய்ச் சந்தியாய்த் தக்கசுவா காசுவ தாவாய்ப்
பாவித்திடு முத்தொழிலாகிப் பண்ணுவோராய்ப்பார்ப்பதியாய்
மேவுற் றிடுந் தேயாதி வெவ்வேறான காலமா
யாவித் தயரும் பசிநாக மாகிப் பையா மாமாயி.

இருளு மிருளு மிரவாதி யிருக்கா திகளா மறையாதி
மருவு மலகி லுயிர்கடோறும வளர்சத்திகளும் பலவாதி
பருகு முததி மயமாதி பாவாய் நின்றிப் பகர்வாரியார்
பொருவிலா நாய்க்கினி நடியேன் புகலப்படுவதொன்றுளதால்.

என்றுந்தமுறைதோத்திரஞ்செய்துநவியே! உனக்கடியேன் செய்துகொள்வதாவன விண்ணப்பமொன்றுண்டு. அதாவது அரக்கர் அவுணர்முதலாயினோருடைய முடிகளனைத்தையும் போர்செய்தருட்டிக் தேவர்களெல்லாம் காக்கின்றவராகியும், அன்பினர் கலியையகற்றவல்லவராகியு மிருக்கின்ற இம்மகாவிஷ்ணுவானவர் நெடுநாள் உனது வயத்நராகித் தயிலுற் றிருக்கின்றனராதலால், அவர் விழித்தருளுமாறு அடியேனமீது கிருபைவைத்து நீயப்பாற் செல்லவேண்டும். ஏனெனில் மதுகைடவ ரென்னும் இரண்டசுரர்கள் பூர்வசன்மத்தில் அரியதவங்களைச் செய்து எண்ணிடத்தினின்றுங் கொடாதவரங்களைப்பெற்று இச்சனனத்தில் இம்மகாவிஷ்ணுவினுடைய செவிகளிலுற்பவித்து மனிதர்களையுந்தேவர்களையும் நடுங்கி யொடுங்கத்தக்கதாக வாட்டி, பின்னர் என்னையும் பிடிக்க வந்தார்கள் அதற்கஞ்சியான் இங்குவராலாயினேன். அப்பொல்லாப்பாவியர் இம்மாயனுலொழியவேண்டுவதேயன்றி மற்றையரால் ஒழிபவரன்று. ஆதலால் இவ்விண்டு எழுந்தருளவும், அவ்வசுரர் மடிந்தருளவும் நீயதற்கிரகஞ் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுதலும், அந்நித்திராதேவி விண்டுவை விட்டு நீங்கினள். உடனே அவரும் எழுந்தருளினர். அத்தருணத்தில் அவ்வசுரர்களாற் துன்பப்படுகின்ற தேவர்கண்முதலாயினோர் ஒருமிக்கத் திரித்துத் தங்களிடும்பைகளைக்கூறி முறையிட்டார்கள். அவை யனைத்தையும் விண்டுவானவர்கேட்டுப் பிரமனைப்பார்த்து, பிரமனே! நீங்கள் இங்

குவர்தகாரிய மெற்றினுக்கென்று வினவப்பிரமன் சொல்லுவான். அனர்தசயன! வஞ்சகத்திற் றெர்ந்த மதுகைடவரென்னு மிரண்டசுரர்கள் தேவரீர் செயியமூக்கினின்றும் தோன்றி யாவரையும் அதஞ் செய்கின்றார்கள். அப்பாதகர்கட்குத் தாய்தந்தைதேவரீரென்றுபிறர்கள் பேசாதவண்ணம் அவர்களே மடித்து எங்களைக் காத்தருள வேண்டி இங்குவந்தோமென்றுவிண்ணப்பஞ்செய்தகொண்டனன்.

இப்பால் அத்திருமாலானவர் விடதத்திற்கொப்பாகிய அவ்வசுரர்கள்செய்யு மாயைக ளனைத்தையுங்கேட்டு யோசித்துப் பிரமனுதியரைப்பார்த்து அஞ்சவேண்டாமென்றுதிடஞ்சொல்லித் தண்ணென்றெழுந்து, பற்பல ஆயுதங்களை யேந்தி ஊழிக்காலத்திற் சலப்பிரளயத்தினுல் எழுகின்ற பேரொலியைப்போலச் சங்காரதஞ்செய்தார் அவ்வோசையை மதுகைடவர்கள் கேட்டு உடனே சீறிவந்து ஒருமலைக்கெதிரில் இரண்டு மலைகள்வந்து நிற்பதுபோல ஆர்ப்பரித்துநின்று, விண்டுவே! எங்கள் தோள்களிற் றினவெடுக்கின்றதால் விரைவில்வந்து யுத்தஞ்செய்யக்கடவையென்று அறைகூவினர்கள். அதற்குத் திருமாலானவர் மிகவுங் கோபங்கொண்டு அசுரர்களே! உங்கள் தோட்டினவை நாமே யடக்குகின்றோம் பயப்படவேண்டாமென்று சொன்னர். பின்னர் இருதிறத்தாரு மெருங்கிப் பூதகணங்கள் வந்து குதிகொள்ளத்தக்கதாகப் பல பாணங்களை ஒருவர்மே லொருவர் பிரயோகித்தார்கள். மீட்டுந் திரும்பி வச்சிராயுதங்களை விட்டெறிந்தார்கள். இராதகண்டிரவத்தை யொப்பவார்ப்பரித்து எதிருக்கெதிர் வேலாயுதங்களையெடுத்துவிடுத்தார்கள் பூமியிற்றுக ளெழும்பும்படியாக வொருவரையொருவர் வலமிடமாகச் சுற்றி வாளாயுதங்களைக்கொண்டுவீசினர்கள். அண்டங்களெல்லாம் வாய்விட்டு வெடிக்கும்படியாகவும், மேகங்கள் தமது கர்ப்பங்கலங்கிவிழும்படியாகவும், கடலானது கரைபுரண்டு பெருகும்படியாகவும்கர்ச்சித்து எதிருக்கெதிர் தண்டாயுதங்களைகொண்டு மோதினர்கள் ஒருவர்க்கொருவர் பாசங்களை யெடுத்து வீசினர்கள். கண்களிரிருந்து வடவாக்கினிக் கொப்பான தீப்பொறிகள் சிதறும்படி நோக்கிக் கோபித்து முடியை முடியினுலுந் தோளைத் தோளினுலும், மார்பை மார்பினுலுந் தொடையைத் தொடையினுலும் அடியை அடியினுலும் கையைக் கையினுலுந்தாக்கி, ஒருவர்க்கொருவரெற்றி தோல்வியின்றி அளவற்ற மல்யுத்தங்களைச் செய்தார்கள்.

இவ்வாறு நெடுநாள் யுத்தஞ்செய்தும்விஷ்ணுவானவர் அவ்வசுரர்களை வெல்வதற்குச் சக்தியில்லாமற் களர்ச்சி யடைந்து கந்

தர்வ வடிவங்கொண்டு மறைந்து, கைலாய பர்வதத்திற்சென்றெளி த்துக்கொண்டு அவ்வரையில் ஓர் பூங்காவனத்திலிருந்து * சிறந்த யாழினேயேந்தித் தண்டு-பத்தர்-நரம்பு-முறுக்காணி கொழுவாணி என்னும் உறுப்புகளேத் திருத்தி, பண்ணல்-பரிவட்டணே-ஆராய்த ல்-தைவரல்-செலவு-கையூழ்-விளேயாட்டு-குறும்போக்கு என்னும் † எண்வகைக் கலேத்தொழில்களேயுஞ்செய்து, வார்தல்-வடித்தல்-உந்தல்-உறழ்தல்-உருட்டல்-தெருட்டல் - எள்ளல்-பட்டடை என்னும் எண்வகை இசைக்கரணங்களேக் கொண்டு, கண்ணிமைத்தல் கண்டுதுடித்தல்-கொடிரசைத்தல்-வாயங்காத்தல்-எயிறுகாட்டல்-வயிறுகுழியவாங்கல்-அழுமுகங்காட்டல்-தலேநடுக்கல்முதலியவுடற் குற்றங்களும், வெடிகுரல்-ஒழோசை-காகுளி முதலிய யாழ்க்குற்ற ங்களும், துள்ளல்-பெருமூச்சுவிடல் முதலிய பாடற் குற்றங்களும், இல்லாது எழுதப்பட்ட சித்திரம்போலவிருந்து பைரவி-தேவக்கிரீ யை-மேகவிரஞ்சி-குறிஞ்சி-பூபாளம்-வேளாவளி-மலகரி-பெளளி-ஸ ராகம்-இந்தோளம்-பல்லதி-சாவேரி-படமஞ்சரி-தேசி - இலலிதை-தோடி-வசந்தம்-இராமக்கிரியை-வராளி-கைசிகம்-மாளவி - நாராய ணி-குண்டக்கிரியை-கூர்ச்சரி - பங்காளம் - தக்கியசி - காம்போதி கௌளி-நாட்டை-தேசாக்ஷரி-காந்தாரி-சாரங்கம் என்கின்றமுப்பத் திரண்டு இராகங்களால் இசையோசை, செய்யுளோசை வழுவாமல் வாசித்துக் கொண்டிருந்தார். அவ்வோசையானது சாமவேதப்

---

* சிறந்த யாழென்றது பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செவ், கொட் டியாழென்னும் இந்நான்கிற்பேரியாழெனப்பெற்றும். இவற்றுள் பேரியாழிற்கு நரம்பு இருபத்தொன்று, மகரயாழிற்கு நரம்பு பதினேழு சகோடயாழிற்கு நரம்பு பதினைரு, செங்கோட்டியாழிற்கு நரம்பு ஏழு அதனே "ஒன்று மிருபது மோரேழ் மேற்பத்துடனே யின்ற பதினேழேழு மேலெங்காற்குன்றுத, கால்வகை யாழிற்கு நன்னரம்பு சொன்முறையே-மேல்வகை நூலோர்விதி" என்னுர் இசைநூலாற் கூறியதனுலறிக.

† பண்ண லென்பது பாடலினேத்த பண்ணுக்கு இணே யினே, பகை தட் பான நரம்புகள் பெயருந்தன்மை மாத்திரைகள் அறிந்தகட்டுதல், பரிவட்ட ணே யென்பது அக்கட்டப்பட்ட நரமபை அகலிரலாலும் புறவிரலாலும் அது காணஞ்செய்து தடவிப்பார்த்தல், ஆராய்த்தலென்பது ஆரோகண அவரோ கண வகையால் இசையத்தெரிதல் தைவரலென்பது அது சுருதி ஏற்றுதல், செலவென்பது ஆளத்தியிலே நிரம்பப்பாடுதல், கையூழென்பது பாட லினேக்க ப்பட்டவண்ணத்திலே சஞ்சாரத்தைவிடுதல், விளேயாட்டென்பது வண்ணத்திற் செய்யப்பட்ட பாடலெல்லாம் இன்பம் பிறக்கப்பாடுதல், குறும்போக்கென்பது குடகச்செலவர் துள்ளற்செலவும் பாடுதல்.

பிரியராகிய சிவபெருமான் திருச்செவிகளிலேறவும் பிருட்டதந்தன் நிகம்பனென்கின்ற பூதகணத் தலைவனைக்கூவி, மது பர்வதச்சார லில் யாழ்வாசிக்கின்றவன் திருமாலாரும், நீங்களவனிடத்திற்சென் று இங்ஙன மழைத்துவரக் கடவீர்களென்று திருவாய்மலர்ந்தருளி னர். அவ்வாறே அவர்கள்சென்று விண்டுவைக்கண்டு திரிபுரதகன ராகிய சிவபிரான் உம்மை யழைத்துவரக் கட்டளையிட்டனரென்று சொல்ல, அதனைப் பெருமகிழ்ச்சியுடன் கேட்டு முதல்வாயிலிற்ற மதாணையைச் செலுத்தி வீற்றிருக்கின்ற நந்திதேவரைப் பணிந்து விடைபெற்றுக் கர்த்தன் சங்கிரனத்தை யடைந்து, பரமகருணை தியாகிய உமாபதி சமுகத்தில் நின்று தீர்க்கதண்டன்செய்து, அவர் கடைக்கண்ணோக்கம் பெற்றவராய் ஒரு பாரிசத்திலிருந்து தமது கையிலிருக்கின்ற யாழினையெடுத்து அதிற் கட்டுண்ட நரம்புகளைத் தடவி இசையாகிய வழுதத்தை நிறைத்து எல்லா உயிர்களும்ஆன ந்தவாரியிற் றிளைத்து உய்யும்படியாக மீளவும் வாசிப்பாராயினர்.

பிள்ளை மதியணிந்த பெம்மான் றிருவடியை
யுள்ளு மவர்கட் குறுத பொருளுண்டே
மெள்ள நறுநெய் விழைந்து விளக்குந் நங்
கள்ள வெலியுங் கடலுலகங் காத்தலே. (க)

ஆத்தி யணிந்த வமலன் றிருவடியை
யேத்து பவர்கட் கிசையாப் பொருளுண்டே
சாத்திய வில்வந் தனக்குத்தளர்மூசுவு
மூத்த வறிவின்முசு குந்தனையதே. (உ)

(க) பெம்மான்-பெருமான் என்பதன் மரூஉ. உண்டே—உண்டோ (இல் லையென்றபடி) விளக்குந்தும்—நீபத்தைத் தூணமும். கள்ளவெலி கடலுலகங் காத்தலைப் பதினெண் புராணங்களுளொன்றய கூர்ம மகாபுராணத்தில்மாவ லி மூவடி மண்ணளித்த வத்தியாயத்திற் காண்க.

(உ) முசு—வண்டு. அதுமுசுகுந்தனுய் அரசாண்டதாவது, திருக்கைலாச மலையின்கணுள்ள சோலையிலே, சிவபிரானும் தேவியுமாக வீற்றிருக்குமும் போது, வண்டுக் கூட்டங்கள் வில்வமரங்களிற் சேர்ந்திசை பாடினிற்க, அவற் றுள் ஓர் வண்டு வில்வவிலைகள் பலவற்றை, அன்புடனருச்சிப்பார்போல அவர் கள் திருமேனியிற் தூர்த்தது அதுகண்ட சுந்தரியாகிய பிராட்டியார் பொரு ராய்ச்சிறிது முனிவுசெய்ய வுன்னும்போது, பெருமானுர் அறிந்துதங்காய்! அத் தவண்டு நம்மை வழிபடச்செய்ததன்றி வேரொன்றன்று. ஆகலிற் சினமுறற்க எனத் திருவாய்மலர்ந்தருளலும், அம்பிகையது தணிந்தராய் அருள்புரிதலும்

பேயினத் தோடாடும் பெருமான் றிருவடியைக்
காயமுறத் தாழ்வோர்கள் காணப் பொருளுண்டே
வாயிழையாற் கோயில் வருத்த சிலம்பியு மோர்
தூயகுலச் சோழனைத் தொல்லுலகம் காத்ததே. (ரு)

இவ்வாறு கர்த்தன் பெருமைகளைப்பாடி யாழ் வாசித்தலுஞ் சிவபெருமான் அவ்விண்டவைநோக்கி, நீ இங்கு வந்த காரியம் யாதென்று வினவத் திருமாலானவர் மனமகிழ்ந்து இதனைச் சொல்லுவார். சர்வபரிபூரணராகிய கர்த்தவியரே! அடியேன் செவிகளினின்றும் இரண்டு தானவர்க ளுற்பவித்து என்னைத் தந்தை யென்று சற்றுங் கருதாது யுத்தஞ்செய்வாராயினர் அவர்களோடஅளவற்ற காலம் யுத்தஞ்செய்தும் யானவர்களை வெல்லமாட்டாது இளைத்து என்னுருவைக் கரந்து இங்ஙனமோடிவந்து தேவரீரது சரணரவிந் தங்களை யடுத்தேன். இனி அவர்களைச் சங்கரிக்கும்படியான வலியினைத்தந்து அடியேனை யாதரிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார். சிவபெருமான் அவ்விண்டவை நோக்கிக் கருட கேதனனே! அவ்வவுணர்களுடனே நீ யுத்தத்திற்குச் சென்றபோது விக்கினேசுவரைப் பூசனை செய்யாமற் சென்றனையாதலால் உனக்கபசயம்

ஐயனும் அம்முசுவின் அகவிருளகற்றி மெய்யுணர் வுதவ வண்டுவந்து அவர்க ளேத்தாழ்ந்து அம்மைபேயப்பா! பொய்யடியனேன் பிழையை பொறுத்தருள வேண்டுமென்று குறையிரக்க வவர் திருநோக்கஞ்செய்து, நீ வில்வலியால் அச்சித்தமையால் மது குலத்திற்பிறந்து உலகமுழுதையும் ஒரு குடையிலா ளுகவென்றனர். அதற்கு வண்டு எம் ஐயரே? அரசசெல்வமாயினும் பொய்ப்பி ரபஞ்ச வாழ்க்கையிற் புகுந்து வருந்தல் அடியேற்கு நன்றன்றே செல்வ வலியிற்பட்டுத் தேவரீரை மறந்து நிறைமையுற்றலேனே யென்ன, நீ பின் நம்மிடம் வருதியென்று அருள் புரிந்து விடைகொடுத்தனர். வண்டு கருவூரிலே அரிச்சந்திரமகாராஜன், வழித்தோன்றலாய்ப் பிறந்து முசுகுந்தனென்னும் பெயருடன் புவனமுழுவதையும் பொதுவறப் புரந்து, வேண்டிய போகமுற்றிப் பின்னர்ப் பொருவிலின்பமுத்தியிற் புக்கது என்க. அதனை "ஆருர்மூழ்கியு மாக்கமிழர் தும்-வாரிசருங்கியும் வாய்மைகிறுத்தித்- தாரணி யாளரிச் சந்திர னென்போ னோர்மரு மானென வேயுதித்தன்றே மாமுகமேமுசு மற்றுனவெல்லாம் - காம னிலேர்தரு காட்சியதாகிக் கோமுறை சேர்முசு குந்த னெனைவொர் - காமவியற் பெயர் நண்ணிய தன்றே. ஆய வழிப்பிற மம்முசுகுந்தன் - றாய பொலன்முடி தொன்முறைசூடி - மாயிரு ஞால வனாகம தின்ன தேயமெலாமொர் செங்கொ டொ காத்தான்., எனவரும் கந்தபுராணத் திருச்செய்யுளா னுணர்க.

(ரு) செல்லி சோழனு யதனைச் சோளத்திப் புராணத்தாற் றெளிக.

வாலாயிற்று. இனியேனும் அவ்விநாயக மூர்த்தியைவழிபட்டுப்பின் னர்ச் சத்துருக்களைக்கொன்று வெற்றியுடன் வாழக்கடவை. அன் றியும் அவ்விநாயகக் கடவுளை யனுட்டிக்கும்படியான மந்திரங்கள் பலவாக விருக்கின்றன அவைகளில் உனக்கேற்ற மந்திரமொன் றுண்டு. அஃது சடாக்கர மந்திரமாகும். அம்மந்திரத்தை யுனக்கு உபதேசிக்கின்றேரும். நீ ஸ்நானஞ்செய்து விரைவில் வருதியென்று கட்டளையிட்டு அவ்வாறே ஸ்நானஞ்செய்து வந்தவுடன் ஆகமவிதி யோடு தீட்சைசெய்து வக்கிரதுண்ட மூர்த்திக்கு உவப்புண்டாகத்தக் கசடாக்கர மந்திரத்தை உபதேசித்து, அதை யனுட்டிக்கு முறை மையினையுந் திருவாய் மலர்ந்தருளினர் அப்பால் விண்டுவானவர் அவ்வருளைச் சிரமேற்கொண்டு அட்டாங்க நமஸ்காரஞ்செய்து, வி டைபெற்றுப் பூவுலகத்தின்கண் வந்து ஓர் தடாகத்தில் ஸ்நானஞ் செய்து திருவெண்ணீறு தரித்து மந்திரசலம் புரோட்சித்துப் பூமி யைச் சுத்திசெய்து புஷ்பதோ லாசனத்தின்மீது வெள்ளை வஸ்திர மிட்டு வடகிழக்காகிய ஈசான்னிய முகமாயிருந்து யானையை நிலம றிந்து செலுத்து * ஆதோரணன்போல இந்திரியங்களை அறிவின்வ ழிச் செலுத்தி, சிரசாதிபாதம் வரையில் அம்முதல் கூம் ஈறுள்ள ஐம்பத்தோரக் கரங்களை விதிப்படி பகர்நியாசஞ்செய்து அவ்வக்கர ங்களில் வம்முதலாயுள்ள நான் கக்கரங்களை மூலாதாரத்திலும், பம் முதலாயுள்ள ஆறக்கரங்களைச் சுவாதிட்டானத்திலும், டம்முதலா யுள்ள பத்தக்கரங்களை மணிபூரகத்திலும், கம்முதலாயுள்ள பன்னி ரண்டக்கரங்களை அநாகதத்திலும், அம்முதலாயுள்ள பதினுயிர் அக்கரங்களை விசுத்தியிலும் ஹ-ள-க்ஷ-வென்னும் இம்மூன்றக்கரங் களை ஆக்ஞையிலுமாக ஆறுதாரத்திலும் அந்தர் நியாசஞ்செய்து ஆத்மசுத்தி-பூதசுத்தி-திரவியசுத்தி-மந்திரசுத்தி-இலிங்கசுத்தி என் கின்ற பஞ்சசுத்திகளையும் செய்து மூலமந்திரத்தைச்செபித்து பிரா ணயாமத்திலிருந்து ஆவாகனம். ஸ்நானம், சந்நிதானம், சன்னி ரோதனம், சகளீகரணம், பரிமீகரணம், அவகுண்டனம், தேனு, யோனி, முத்திகரணம் என்கின்ற திக்குபந்தனுதி மந்திரகிரியா பாவ னைகளைக்கொண்டு விநாயகமூர்த்தியைக் குறைவில்லாமற் பூசித்து சடாக்ஷரமந்திரத்தை முறைப்படி நூறுவருடம் வரையிற் ஜபாணி த்து வந்தார். அப்பால் வக்கிரதுண்ட மூர்த்திக்கு அருள்சுரந்து அத்திருமாலுக் கெதிரிற் பிரத்தியட்சமாகித் தரிசனந் தந்தார்.

* ஆதோரணன்—யானைப்பாகன், அவற்றிற்குமுறையே இடம்-குதம்-கு ய்யம்-நாபி-மார்பு-அடிநா-நெற்றி-நடு-என்பனவாம்.

உடனே விஷ்ணுவானவரெழுந்து காழ்த்து இருகரங்களேயுஞ் சிர மேற் குவித்துப் பலமுறை வேதாகமங்களாற் துதித்துத் தொழுது நிற்க, விநாயகக்கடவுளரை நோக்கிக் கேசவனே! நிர்மல மூர்த்தி யாகிய சிவபெருமானவர் நம்மைப்பூசைசெய்ய உனக்குதவுகிறகி க்கு முன்னரே நீ சுதாவிற்செய்து அப்போர்முகத்திற் சென்றிருப் பையாயின், இவ்வாறு சத்துருக்களாற் றோல்வியடையமாட்டாய ல்லவா? ஆயினும் இப்போதனக்கு என்னவேண்டுவது கேள். அத னைத் தருகிறேமென்று திருவாய்மலர்ந்தருளினர். அதைக்கேட்ட திருமாலானவர் மிக்க ஆனந்தக்களிப்பின் மூழ்கினவராய் மீளவும்ப னிந்தெழுந்து கைகட்டி வாய்புதைத்துக் கிருபாமூர்த்தியே! கற்ப கவிருட்சத்தை யடைந்தோரை வறுமைவந் தணுகவல்லதோ? என் தந்தையாகிய தேவரீரை என் திருவிழிகளுங் குளிரக்கண்டு தரிசிக் கப் பெற்றபின்பும் ஓர்குறை வுண்டாகுமோ? அடியேன் செய்துக் கொள்ளத்தக்க ஒரு விண்ணப்பமிருக்கின்றது. அதாவது யான் நித் திரையிலிருக்குமளவில் என் செவிகளினின்றும் இரண்டசுரர்கள் சகலபுவனங்களுங் கலங்கி நடுங்கத்தக்கதாக வுற்பவித்தனர். அவர் களைக் கொல்லும்படியான வலியை அடியேற்குத் தந்தருளவேண் டும் அப்பாதகர்களே யன்றி மற்றெவ்வகைப்பட்ட துஷ்டர்களாயி னும் அவர்களெல்லாம் என்கையிலழியத்தக்க வரமுங்கொடுத்தரு ளவேண்டும் தேவரீர் திருவடிகளே யெக்காலத்துங் கைவிடாது பத் தியையு மளிக்கவேண்டும். அடியேன் தெரியாமற் செய்யுங் குற்றங் களையெல்லாங் குணமாகக்கொண்டு பொறுத்திரட்சிக்கவேண்டுமெ ன்று பிரார்த்தித்தவுடன் அவ்வாறே விநாயகக் கடவுளுங்கிரகஞ் செய்து நாரணனே! சத்துருக்களே வெல்லும்படியான வலியும் யா வராலு மதிக்கத்தக்க புகழும், நினைத்த வண்ணம் நிறைவேற்ற த்தக்க சத்தியும், உனக்குக் குறைவில்லாமற் கொடுத்தோம், உன்னை முன்னரெதிர்த்த அவ்வசுரர்கள் இப்போது வஞ்சங்கொ ண்டு மறைந்திருக்கின்றனர். ஆதலால் நீ நமது சடாக்ஷர மந்திரத் தைத் தியானஞ்செய்துகொண்டு யுத்தத்திற்குச் செல்வையாயின் அவர்களுன்விழிக்கு வெளிப்படுவரென்று திருவாய்மலர்ந்து தமது திருவுருவத்தைக் காந்தருளினர்.

இப்பால் விஷ்ணுவானவர் பேரானந்தமடைந்து பகைவரைச் சயித்துவிட்டோ மென்னுங் களிப்பினையுடையவராய்த் தன்னேயா ட்கொண்டருளிய பெருங்கருணையை நினைந்து நினைந்து பலவாறு

வந்தித்துத் தரிசனந்தந்து இரட்சித்தவிடத்தில் ஒளிவீசுகின்ற பளிங்குக்கற்களினால் நான்கு கோபுரவாயில்களுள்ள ஓராலயமெழுப்பி அவ்வாலயத்திற் கண்டதியினாலாகிய விநாயகக்கடவுளைப் பிரதிட்டைசெய்து, சந்தனம்-புட்பம்-தூபம்-தீபம்-நைவேதியம்-கோசலம்-கோமயம்-பால்-தயிர்-நெய்-தேன்-வாழைப்பழம்- எலுமிச்சம்பழம்-நாரத்தம்பழம், நெல்லிப்பருப்பு செவ்விளநீர்முதலிய திரவியங்களைச் சேகரித்துச் சிறந்தபூசனைகளை நடாத்தித் தாம்கொண்ட இஷ்டத்தைச் சித்தியாக்கியபடியால், அம்மூர்த்திக்குச் சித்திகணபதியென்று திருநாமமிட்டு வந்தித்து வழிபாடுசெய்து ஆனந்தக்கடலின் மூழ்கியிருந்தார். அதுமுதல் அத்தலமானது சித்திகேத்திரமென்று வழங்கிவருகின்றது. பின்னர் மகாவிஷ்ணுவானவர் அச்சித்திகணபதிமூர்த்தியை மனதிற் தியானித்துக்கொண்டு அவ்விடத்திலின்று நீங்கி உருவைமறைத்து ஒளித்திருக்கின்ற மதுகைடவர்களைக் கணைச ரணுக்கிரகத்தாற் கண்டுபிடித்தனர். அவ்வசுரர்கள் இவரைப்பார்த்து எதிரில்வந்து நின்று உடல்குலுங்க நகைத்து மாயவனே ! முன்னெங்களை யெதிர்த்து யுத்தஞ்செய்தபோது யாங்களொரு சிறியமுட்டியை யுதவப்பெற்று ஓடிப்போயினமீளவும் நாணமில்லாமற் திரும்பிவந்தனை இப்போது பெரியமுட்டியைத் தருகின்றேம் வாங்கிக்கொள்ளென்று பரிகாசஞ்செய்தார்கள். அதைக்கேட்ட விண்டுவானவர் கோபித்து ஏடாமூடர்களே! பின்னேபோய் முன்னே பாய்கின்ற ஆட்டுக்கடாவைப்போலென்று சற்றுந் தெளியீர்களோ? புளிபதுங்குவதெல்லாம் பாய்ச்சலுக்கிடமென்று நம்பக்கடவீர்களெனச் சொல்லலும், அவ்வசுரர்கள் அதனைக்கேட்டு அக்கினியைப்போல ஆக்கிரமித் தெழுந்து கோபாவேசங்கொண்டு மாயனே ! நீ ஒருவர் துணையின்றித் தனியாயிருக்கின்றனையேயென்றும், இரண்டுபேர்கள் ஒருவனுடன் போர்செய்யத் தகாதென்ற நீதியைக்கொண்டும் முன்னர் இலகுவாய் ஓடிப்போம் படிவிடுத்தோம். மீளவும் நீயே அகங்கரித்து எம்மோடெதிர்க்கவந்திருக்கின்றமையாலும், உன்னைருவனுக்கே எம்மிருவருக்குமுள்ள நான்கு தோள்களிருக்கின்றமையாலும் யாவருந்தோடஞ்சொல்வதற்கிடமில்லை. ஆதலால் வீரைவிற் சண்டைசெய்யக் கடவையென்றெதிர்த்தார்கள். விண்டுவும் அதிகவுக்கிரங்கொண்டு எதிர்த்தார்.

பின்னர் இருதிறத்தாரும் ஒன்றுகக்கலந்து ஒருவர்க்கொருவர் ஆயுதங்களைக் கொண்டு புடைத்தார்கள். வேலாயுதங்களைக்

கொண்டெறிந்தார்கள். வாளாயுதங்களே யெடுத்து வீசினார்கள். கோ ருக்குநேர் பாசங்களே யேவிப்பிடித்தார்கள். சர்ப்பங்களேப்போன்ற அளவற்ற அம்புமாரிகளேப் எதிருக்கெதிராகவின்றுசொரிந்தார்கள். ஒருவரையொருவர் வளைத்துக் கீழேதள்ளிப் புரட்டிப் பலவகைப் பட்ட மல்யுத்தங்களேச்செய்து வீரகர்ச்சனை யிட்டார்கள். இவ்வித மாக அளவற்ற யுதங்களேச் செய்து வருகின்ற தருணத்தில் விஷ் ணுவானவர் அதிக கோபங்கொண்டு, நாம் இந்த அற்பர்களோடு சீடித்து யுத்தஞ்செய்வது மிகவுநன்று ! நன்று!! என்று மானம்வா ங்கப்பட்டவராய்க் கடலுடைத்துபோலத் தமது பஞ்சசன்னியத் தை யெடுத்து முழக்கஞ்செய்து சாரங்கமென்கிற வில்லினேவளைத் து, அளவற்ற திவ்வியாசர மாரிகளேத்தூவி அப்பாதகர் விடுக்கி ன்ற பாணவருஷங்களேச் சின்னபின்னப்படுத்திச் சிவபிரானருக்கிர கத்தாற் பெற்ற சக்கராயுதத்தை யெடுத்து விநாயக மூர்த்தியினு டைய திருவடிகளேத் தியானித்து, அப்பாதகர் நிற்கின்றகுறிபார்த் த்துப் பிரயோகித்த மாத்திரத்திற் செங்கரும்பைத் துண்டித்தது போலப் பல துண்டங்களாக விழுந்திறந்தார்கள் * இவ்வாறு விண் ணவானவர் அவ்வசுரர்களாவியை யுண்ட காட்சியைத் தேவர்களெ ல்லாங் கண்டு மனமகிழ்ச்சியடைந்து, ஆகாயத்தினின்றும் புஷ்பவ ருஷங்களேப்பொழிந்தார்கள். முன்னர் அந்த வசுரர்கட்காகப் பய ந்து உருவத்தை மறைத்துக்கொண்டிருந்த பிரமதேவன் அதிக சந் தோஷங்கொண்டு விண்டுவைக்கண்டு சாஷ்டாங்கமாகிப் பணிந்து அவர்பெருமைகளேப் புகழ்ந்து கொண்டாடிநிற்கையில், அவ்விண் ணவானவர் பிரமனே நோக்கிச் சொல்லுவார் அரவிந்த வாசனே ! யான்முன்னர் அவ்வசுரர்களோடு கெடுகொள் யுத்தஞ்செய்தும்அவர் களே வெல்லமாட்டாது பங்கப்பட்டு, என தருவத்தை மறைத் தோடிப்போய் வெள்ளியங்கிரிச் சாரலேயடைந்து யாழ்வாசித்தமுன் னிலேயிற் சிவபிரான் அனுக்கிரகத்தால் விநாயகக் கடவுளுடைய சடாக்ஷர மந்திரத்தைப் பெற்று, பூலோகத்திற்சென்று சித்திகேத் திரமென்னுந் தலத்திலிருந்து அம்மந்திரத்தை வேதாக விதிப்படி யநுட்டித்துக் கணேசமூர்த்தியினுடைய திருவருளேப்பெற்று, மீள வும் அவ்வசுரரோ டெதிர்த்து வெற்றியடைந்தேன். ஆதலால்யும்

* திருமாலானவர் விட்ணுவென்றுஞ் சிட்ணுவென்றும் பெயருள்ள இரண்டு வீரர்களே யுண்டாக்கியேவ, அவர்கள் கொன்றனர் என்று கூர்மபுரா ணத்திற் கூறப்பட்டது.

அத்தலத்தை யடைந்து பூசிக்கக் கடவையெனப் பிரமதேவன் அவ் வாறேசென்று விநாயகக்கடவுளைப் போன்போலே பூசித்துப் பலவர ங்களைப் பெற்றனன். அவனேயன்றிச் சிவபெருமான்உமாதேவிசிவ கணங்கள் தேவர்கள் முதலாயினேரும் ஒவ்வொருகாலத்திற் பூசி த்துப் பலவரங்களைப் பெற்றார்கள். என்று வியாசருக்குப் பிரமதே வர் சொற்றதாகச் சூதமுனிவர் சௌமிசாரணிய முனிவர்க்குக்கூறி னர்.

விண்டுரடாக்கர மறுட்டித்த படலம்-முற்றிற்று.

விசுவாமித்திரனை

வீ ம னு டீ த் த ப ட ல ம்.

ஆறெழுத் தாழி யேந்தி யறுட்டித்த வாறு தேர்ந்தே
னீறிலி காதை யின்னு மியம்பென வியாதன் வேண்ட
வீறுயர் விச்சு வாமித் திரனைவேல் வீமன் சார்ந்து
பேறுபெற் றதனே முற்றப் பேசுவன் வாசக் கஞ்சன்.

பசுபாசஞானத்தைவிட்டுத் தத்துவஞானமாகிய பதிஞானத் தைப் பற்றும் முனிவர்களே ! விண்டு விநாயக மூர்த்தியை யறுட் டித்தமதுகைடவரைவென்ற வரலாற்றைச் சொன்னேன். இப் பால் தக்கனுபாசித்த நிறத்தினைச் சொல்வோங் கேட்பீராக. சமு த்திரஞ்சூழ்ந்த பூமண்டலத்திற் சகலராலும் புகழத்தக்கதான வயற் செழுமையுங் குடிவளப்பமுஞ் சிறந்தோங்கிய விதர்ப்பநாட்டிலே தேவருலகை யளாவிய மாடமாளிகைகள் கூடகோபுரங்கள்முதலிய வலங்காரங்களோடு விளங்கியிருக்கின்ற கவுண்டியமென்னும் ஓர் நகரமுண்டு அந்நகரத்தில் தவசிலனும், வேதமொழுக்கங்களிற்றவ றாதவனும், தானமாரி சொரிகின்ற கரத்தையுடையவனுமெவரி மிருந்த புயங்களையுடையவனுமும், எக்காலத்து மாறாத தருமசிந் தையுடையவனுமும், சிவபெருமானுடைய நற்றல்விழித் தீயாலெரி ந்த மன்மதனுக்குப் பதிலாகவந்த மன்மதனென்று சொல்லத்தக் க பேரழகினனுமும், ஆயிரம் பிரமணர்களும் பத்துக்கோடிசேனை களும் புடைசூழ்ந்துவரும்படி எங்களுடைனது பராக்கிரமத்தைச் செலுத்தி யுலாவுகின்ற சூரனுமும், தாயத்தார்களும் பலதேயங்க ளையாள்கின்ற வேற்றரசர்களுங் கண்டவுடன் பயந்து வணங்கத்தக் தபாதங்களை யுடையவனுமும், தன்னை வணங்காத சத்துருக்கள்

வலியை வேரோடும் அகழ வல்ல கோபாக்கினியை யுடையவனுகி யும் வீமனென்னும் இயற்பெயரினை யுடையவனுயும் ஓராசனிருந்த னன். அவனுக்குக் கற்பி லருந்ததியை நிகர்த்துஇல்லறவொழுக்கங் களிற் றவறின்றி நடந்துவருகின்ற சாருகாசினி என்னுமோர்மனைவி யிருந்தனள். அம்மனைவியோடு சகல செல்வங்களையு மனுபவித்துக் கொண்டு பெரியோர் சொல்கின்ற நெறிகளிற் பிழையாமற் பெரு மைபொருந்திய மண்டலத்தைப் புயத்திற்சுமந்து நீதிமுறைமைப் படி அரசாட்சிசெய்து வருகின்ற காலத்தில், நெடுநாள் ஒரு புத்தி ரப்பேறில்லாமல் மிகுந்த பத்தியினும் பலதெய்வங்களை வழிபட்டும் வேதாகவிதியோடு பலதானங்களைச் செய்தும் அளவற்ற தருமங் களை அன்போடியற்றியும், மாறற்ற வேள்விகளை மனங்தளராமல் முடித்தும், இன்னும் இதன்மையான பல நல்லொழுக்கங்களைப் பூண்டு தனது கவலை யொழியாதவனுகி மனமெலிந்து தன்மனைவி யை யழைத்து, என் மனதுகினிய காதலியே! புத்திரப் பேறில் லாதார் இவ்வுலகத்தை யரசாளினும் இம்மை மறுமைப் பயனை யடையார்களாயின் நாம் வாழ்கின்ற இல்வாழ்க்கையையும் நமக் கொரு பயனைத் தரவல்லதோ? புத்திரப் பேறில்லார்க்கு கற்கதி கிடைக்குமென்ற சாத்திரங்களு முண்டோ? ஐயோ! நமது கட்டழகு ம் நாமடைத்திருக்கின்ற பெருஞ்சிறப்பும், நாம் நடாத்துகின்ற அர சாட்சியும், நாம் செலுத்துகின்ற பராக்கிரமமும், நாம் செய்திருக்கி ன்ற நூற்பயிற்சிகளும், ஒரு புத்திரப்பேறில்லாமல் வீணிற்போகின் றதே இனியாயினும வனத்திற்சென்று பெரியோர்களை யடுத்துத் தவஞ்செய்வோமாயின் பின்னர்ப் புத்திரப்பேறு தவருமற் கிடைக் கும் அஃதில்லாவிடினும் அப்பெரியோர்கள் அநுக்கிரகத்தாற்சுவ ர்க்காதி போகங்களை யனுபவிக்கும்படியான பேறேனுங்கிடைக்கும் இவையிரண்டினுள் ஒன்றேனுங் கிடைக்காமற் போவதில்லை இது வே நாமினி நடந்துகொள்ளவேண்டிய முடிவென்று சொல்லித்தீர் மானித்து, சுகந்து, மகோரஞ்சிதனென்கிற தன்னுடைய இரண்ட மைச்சர்களைப் பார்த்து, அமைச்சர்களே! யான் பூர்வத்திற் செய் திருக்கின்ற வூழின் பயனே? என் மனையாள்செய்த தீவினையின்பய னே? மற்றியாது கொண்டோ இதுகாறும் ஒருபுத்திரப் பேறில்லா மல் சகலவளங்களுங்குன்றி யிருக்கின்றேம் இனியேனும் ஓர் புதல் வனைப்பெற்று யாங்கள் கடைத்தேறுமாறு வனத்திற்குச் செல்ல நினைத்தோம் எனக்குள்ள பூமிமுதலியபொருள்களனைத்தையும் நீங் களிருவருமாகப் பகுத்து யான்வருமளவுங் காத்திவரக் கடவீர்கள்

மீட்டும் வராமற்போவேனுயின் நீங்களே சுதந்தரராக ஆண்டுகொள்ளலாமென்று சொல்லித் தன்மனைவியுடன் எழுந்து பிரயாணமானன். அதனையவ்வமைச்சர்கள் கண்டு கவலையுற்றுக் கண்களில்நீர்த்தாரைகளைச் சொரிந்து மனமெலிந்து அரசன்சொல்லியஆணையைத் தடுக்கக்கூடாதவர்களாகி யிருந்தார்கள். பின்னர் அவ்வரசன் தன் மனைவியோடு வனத்திற்சென்றுவசித்திருக்குங் காலையிற்பூர்வத்திற் செய்த நல்வினைப்பயனுனது அவர்களை விசுவாமித்திரமுனிவர் ஆசீர்மத்தினருகிற் கொண்டுபோய்விட்டது

அவ்விடத்தில் வண்டுகள் இசைபாடி மொய்க்கின்ற தாமரை முதலிய பல புட்பங்களை வாய்ந்து கண்டவர் உள்ளத்தைக்கவர்ந்து கொள்ளத்தக்க வனப்பினேடு மிகக்குளிர்ச்சிபொருந்தி யிருக்கின்ற ஒரு தடாகத்தைக் கண்டார்கள். அதில் அடித்தவர்களை அன்போடு தழுவி என்பைக்கேட்கினும் இனியாது தந்து பல இன் சொற்களோடு நல்ல பயன்களை விளைவிக்கின்ற சான்றோரைப்போலத் தன்னையடைந்தவர்க்கு மணமுங்குளிர்ச்சியும் இளங்காற்றுத்தந்து சகல தன்பங்களையுமொழிக்க வல்ல நிரம்பிய சலத்தைக் கண்டார்கள். சகலமுந்தெளிந்து மனங்குளிர்ந்து இனிய வாய்மை பெற்று நல்ல பயனைவிளைத்து அளத்தற்கரிய நன்னெறிகளையுடைய அறிஞர்களிடத்தில் யாவரும் பல வுபசாரங்களை யேற்றுச்செல்வரென்னு மூதுரையின்படி தெளிந்துங்குளிர்ந்தும் இனிமையுற்றும் நல்ல பயன்களைவிளைவித்தும் அளத்தற்கரிய ஆழத்தோடிருக்கின்ற அத்தடாகத்திற் சகலபட்சிகளு நீரருந்திச் செல்வதைக்கண்டார்கள் சிலமுனிவர்கள் அதிலுள்ள தாமரைகளைப்பிடுங்கிஅவைகளின்கிழங்குகளைத் தங்கள் பசிதீர உண்டு மற்றமலர் முதலியவைகளைக் கரையிலெறிந்துசெல்ல "நிலையற்றேரெல்லாம் உலவுற்றேராவார்" என்னும்பழமொழியின்படி அம்மலர்கள் சூரியவெப்பத்தால் வாடியிருப்பதைக் கண்டார்கள். சேற்கூட்டங்கள் திரண்டு அதன்கரையில் வருகின்ற வரையில் தாமுமுயிரற்றதுபோலிருந்து, பின்னர்க்கண்டவுடன்மூக்கினுற் கொத்தி மேலெழுகின்ற கொக்குகளும், சமயம்பார்த்து நீரின்மூழ்கி மேற்கொண்டு வருகின்ற நீர்க்காக்கைகள் பாவபுண்ணியமறியாத பாதகர்களாயினேர் தங்களுக்குக்கிடைத்த பெருஞ்செல்வத்தை அநுபவியுண்ணுரென்னும் பழமொழியின்படி அவைகளைத் தம்மினங்கட்குஞ் சிறிதும் உதவாதுண்ணுவதைக் கண்டார்கள். அன்

மியும் அதிலுள்ள சிறுமீன்களேயெல்லாம் பெருமீன்கள் வயிறுநிர
ம்பவுண்டு நீந்தச்சத்தியின்றிக் கரையிலொதுங்க "எளியாரை வலி
யரர் வருத்தின் வலியாரைத் தெய்வம் வருத்து" மென்னும் வாக்
கியத்தின்படி அவைகளைப் பறவைகள் கொத்திமேலெழும்புவதைக்
கண்டார்கள். அன்னம், சக்கரவாகம், குருகு தாரா, சிச்சிலி, வர
னம்பாடி, காரை, பெருங்காரை முதலான சகலபட்சிகட்கும் அடுத்த
வர்களே யாதரிக்கின்ற பரமசிவத்தைப்போலத்தான் இடைவிடாது
இரைகொடுத்து வரவுங்கண்டார்கள் இவ்வாறளவற்ற அற்புதங்க
ளே யத்தடாகத்தினிடத்திற் கண்டு அப்பாற்செல்லுகையில் அதன்
சமீபத்தில் ஓர் பொழிலைக்கண்டார்கள். அப்பொழிலின்கண் பகலி
லே சூரியனைக் கண்டு வாட்ட முறுகின்ற குமுத மலர்போலவும்
இரவிற் சந்திரனைக்கண்டு வாட்டமுறுகின்றதாமரைமலர்போலவும்
இல்லாமல், யாவரிடத்தும் உறவுபகையில்லாதமுனிவர்களைப்போல
அச்சூரிய சந்திரர்களுடைய உறவுபகையில்லாமல் எக்காலத்தும்
ஒரேநேராய் மலர்ந்திருக்கின்ற அனிச்சமலர்களைக் கண்டார்கள் கா
தல்முதிர்ந்த காமுகர்களைப்போல ஆணன்றிலும் பெட்டையன்றி
லும் ஒன்றோடொன்று பிரியாது சிறகோடுசிறகினைச் சேர்த்துக்
கொண்டு அவ்வாறே யிரைகளையுந் தேடியுண்டு பல பூங்கிளைகளிற்
புணர்ந்திருப்பதைக் கண்டார்கள். கட்டவிழ்ந்த மலர்களினின்றுக்
குளிக்கின்ற தேனைச் சாதகப்புள்ளானது மழைத்துளியெனக் கரு
தித் தன் வாயைத்திறந்து பருக அதனைமற்ற மலர்களின் மொய்க்
கின்ற வண்டினங்கண்டு பாரியைவிட்டுப் பரத்தையை விழைகின்ற
காமுகரைப்போல அவைகளை விடுத்து அப்புள்ளினது இரண்டு கை
டைவாய்களினு மொழுகுகின்ற தேனைச்சூழ்ந்து பருகுவதைக்கண்
டார்கள் அப்பொழிலானதுவெளுத்த மண்மேட்டின்மீது வெள்ளங்
கொழிக்கின்ற நுரைகளைப்போலத் தேனையும் மலர்களையும் பூந்தா
துக்களையுந் தளிர்களையுஞ் சொரிவதனால் அவைகள் தாழ்ந்த புட்டங்
செடிகளையுடைய கந்தவனத்தை யொத்திருப்பக் கண்டார்கள்

இவ்வாறு அளவற்ற மாட்சிமைகளையப்பொழிவினிடத்திற்க
ண்டு அப்பாற்செல்லுகையில் முனிபுங்கவர்கள் வசிக்கின்றபலஆசிர
மங்களைக் கண்டார்கள். அவ்வாச்சிரமங்களானவை திருமால்அயன்
தேவேந்திரன் முதலிய தேவர்கள் வசிக்கப் பெற்றிருக்கின்றமை
யால் மகாமேருவுக் கொப்பாகி இருக்கவும் அங்கு வசிக்கின்ற முனி
வர்கள் அணிந்திருப்பது சடைமுடி, மரவுரி, திருநீறு, உருத்திராக்
கங்களாயினும் அவைகள் இரத்தினகிரீடந் தரித்த தேவர்கள்வணங்

கத் தக்கனவாகவும், கற்பகமுங்கண்டு சூழத்தக்கனவாகவும் சகல வினைகளும் நீக்கத்தக்கனவாகவும், அருட்கண்களென்று சொல்ல த்தக்கனவாகவு மிருப்பக் கண்டார்கள். மேலும் அம்முனிவர்கள் சதாகாலமும் வேள்வித் தீயைவளர்த்து அதன்முன்னிலையிற்றேவர் கட்கெல்லாம் அவிப்பாகந்தந்து வருவதையும், மேகமானது மாத மும்மாரிசொரிந்து இப்பூவுலகத்துள்ள உயிர்களே யாதரிக்கச்செய்கி ன்ற முறைமையையுங்கண்டு, இதனுலல்லவா திருமாலானவர் தம து காத்தற்றொழிலைக் கைவிட்டவராய்ப் பகலெல்லாம் இரவுபோ லக் கருதித் திருப்பாற்கடலிற் இடைவிடாது கண்டுயில்வதானுரெ ன்றும், சிவபெருமான் பலதிருவிளையாட்களே நடாத்திவருவதும், திருமால் கண்ணுறங்குவதும், பிரமன் வேருங்களே யோதுவதும், இந்திரன் அவுணருயிரைத்தாக்கப் போர்க்குச்செல்வதும், சந்திரா தித்தர்கள் ஆகாயமார்க்கத்திற் றிரிவதும், இம்முனிவர்கள் தருகி ன்ற அவிப்பாகங்களே நாடோறும் மேற்றுவரும் ஆதரவைக்கொ ண்டல்லவாவென்று அதிசயித்தார்கள். பின்னும் அம்முனிவர்கள் வசிக்கு மிடங்களோறும் ஒருபக்கம் யாகத்திற்குரிய பசுக்களும், ஒருபுடைபால் கறந்துவிடுகின்ற பசுக்களும், ஒருபால் யாகம்முடிந் தவுடன் தானஞ்செய்ய விட்டிருக்கின்ற பசுக்களும் ஒருபுறங் கன் னியர் வதுவைக்குங்கட்டிவைத்திருக்கின்ற பசுக்களுமாகச் சூழ்ந்தி ருப்பக் கண்டார்கள். அங்கிருக்கின்ற நடாகங்களிலுள்ள நீலோற்ப லமலரும், சகத்திர தளத்தோடுகூடி விரிந்திருக்கிற தாமரைமல ரும், யாம்முன்னர்க்காமன் கைக்குக் கணையாக விருந்ததனுலல்ல வா அக்காமன் பரமசிவத்தினது நெற்றிக்கண்ணினு லெரிந்தபோது அவனெடு யாமும் அவ்வெரிக்கிரையாயினேம். இனிஅவ்வாறுசொ ல்லாமல் அடித்தோர்க்கிதமே செய்பவராகிய இம்முனிவரிடத்திருந் தால்நம்மை யப்பரமசிவத்திற் குவப்புண்டாக, அவர் திருவடி களில் அருச்சிப்பார்களென்றடைந்து தவஞ்செய்வதுபோலிருக்கக் கண் டார்கள், அங்கிருக்கின்ற கொடி-செடி விருட்ச முதலியவைகளெல் லாம் முனிவர்களுக்குக் கிழங்கு கனி-காய்-மது-மலர்-தளிர் - இலை சமித்து எண்கின்ற பொருள்களே நாடோறும் வழங்கி அவர்கட்கு உவப்பைத் தருகின்ற குற்றமற்றபெருந்தவத்தினுல் அவைகளேச்சி றீது மெளிவின்றிச் சதாகாலமும் தங்களேகளொடு நிறைந்ததழைத் திருப்பதைக்கண்டார்கள். முன்னர்ப்பாற்கடலிலுண்டாகிய அமுத த்தையுஞ் சிவபெருமானர் புசித்திருக்கின்ற தேவர்கட்கும் அம்மு னிவராற்றருகின்ற அவியமுதத்தையும் அவரே கொடுப்பி னல்லா

மல் யாவற்கொடுப்பார்கள். ஆலல் அவர்வடிவாயிருக்கின்ற அக்கினியானது அம்முனிவர்கள் கொடுக்க வாங்கித் தானும்புசித்து அத் தேவர்கட்கும் வழங்கி வருவதையுங்கண்டார்கள், மேலுந் தங்களுடல் வருந்தச்செய்கின்ற தவத்தினலும், வேள்வியினலும், சகலவுலகங்களுமழியாமற் காத்துவந்த அம்முனிவர்கள்மலபாகங்களையொழித்து முத்தியிற் சேர்ந்து வாழ்வதையன்றி ஒன்றுக்கொன்றுதொடர்ந்தப்பட்டு மயங்குகின்றதேவர்களியையடையச் சற்றுங்கருதாதவர்களாயிருப்பதையுங் கண்டார்கள்.

இத்தன்மையாகிய மேலான நிறப்புகள் வாய்ந்த முனிவர்களையும், அம்முனிவர்கள் வசித்திருக்கின்ற ஆசிரமங்களையும் வீமராசனும் அவன் மனைவியாகிய சாருகாசினியுங் கண்டு மகதுரண்மனையும் இவ்வாசிரமங்கட்கு நிகரல்லவென்று சந்தோஷித்து அப்பாற் செல்லுகையில், சகலமுனிபுங்கவர்களும் புடைசூழ்ந்து வணங்கும் படியாகப் பிரமதேவனே நடாகத்திலிருக்கின்ற புண்டரீக வாதனத்தை விடுத்துவனத்திலிருக்கின்ற புலியாதனத்திற் றங்கியிருப்பது போல வேங்கைத் தோலாசனத்தின்மீது வீற்றிருந்து வேதாகமப் பொருளைவிரித்துரைக்கின்ற விசுவாமித்திர முனிவரைக்கண்டுஅட்டாங்கமாக வணங்கினர்கள் அவர்களை யம்முனிவர் தழுவி உங்கட்குப் புத்திரனுண்டாகக் கடவதென் றுசீர்வதித்துத் தமது கரங்களைக் கொண்டெழுப்ப உடனே இருவருமெழுந்து கைகூப்பிநின்றார்கள் பின்னர் அவ் விசுவாமித்திர முனிவர் வீமராசனைப் பார்த்து அரசனே ! நீ யார் ? நம் மாசிரமத்தை நோக்கி வந்தவர்கள் யாதேனும் ஓர் பயனை யடையாமற் போவதில்லை, ஆதலால் உனது கோரிக்கையைச் சொல்லையாயின் அதனைத்தடையின்றி யாந்தருவோமென்று சொல்லலும், அதனை யவ்வரசன் செவிக் கமுதாகக் கொண்டு அப்போதே புத்திரப்பேறுண்டானதுபோலமுகமலர்ந்து சுவாமி ! யான் கவுண்டினிய தேயத்திற்கரசன். என்பெயர் வீமன் இவள் சாருகாசினி யென்னும் பெயரினையுடைய எனது மனையாள் யாங்களிருவோரும் அளவற்ற தருமாதிகளைச் செய்தும் ஒரு புத்திரப்பேறில்லாமையால் மனமெலிந்து அவமானத்துடன் வாழ்கின்ற இல்லறத்தைத்துறந்து இவ்வனத்திற்கு வந்தோம் இதுகாலும் இயற்றிவந்த தவமுதிர்ச்சியோ அல்லது பூர்வசன்மத்திற் செய்த கன்மினைப்பயனோ சகலரும் போற்றத்தக்க இவ்வாசிரமத்தில் வந்து தேவரீரைத் தரிசிக்கப் பெற்றேம், மகமேருவை யடித்தவர்களுங் கூற்

பக விருட்சத்தைச் சார்ந்தவாகளும் அவ்வவர்கள் கொண்ட விழை வை யடையாமற் போவதுமுண்டோ கிருபாமூர்த்தியே ! தேவரீ ரைக் கண்டபோதே இனிப்புத்திரப் பேறுண்டாகுமென்று துணிவு ற்றேன், அஃதன்றித் தேவரீர் செய்தருளிய ஆசீர்வாதத்தால் அத் தினமே அப்புத்திரப்பே றடைந்தவனுயினேன்.

மேலான தவத்திலும், வேதசாத்திர விசாரணையிலும், சிறந்த கருணையிலும், சீலமான விரதத்திலும், மகத்தான வேள்வியிலும் பெருமையுற்ற கலைஞானங்களினும், பெருமை பொருந்திய தருமதா னத்திலும், தேவரீருக்கொப்பாக யாவரிருக்கின்றார்கள். தேவரீர் செய்தருளிய ஆசீர்வாதம் வீணிற்போகுமா ? சுவாமி ? பூர்வத்தி லடியேன் செய்திருக்கின்ற தீவினைகள் இன்னவையென் றுணர்த்தி மீளவும் அவைகளைத் தீர்த்து யான் பவித்திரனுகும்படியான உபா யமு மருளிச்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தான் உடனே விசு வாமித்திரமுனிவர் மனதிரங்கி அவ்வரசன் செய்திருக்கின்ற பூர்வ வினைகளையெல்லாந் தமது ஞானநோக்கினு லறிந்து, நராதிபனே! உனது வம்சத்திலிருந்த முன்னோர்கள் நித்தமும் விநாயகபூசைசெ ய்து மிகுந்த நன்மைகளைப் பெற்று வாழ்ந்திருந்தார்கள். நீயுன்மனை வியிடத்து வைத்திருக்கின்ற விழைவினுல் அப்பூசையைச் செய்யாமற் கைவிட்டாய் அதனுற் புத்திரப்பேறடையாமற் போயினை, இனியா யினும் அவ்விநாயகமூர்த்தியை நீங்களிருவோரும் பத்தியோடுபூச னைசெய்து வருவீர்களாயின் உங்களுக்குப் புத்திரசம்பத் துண்டா குமென்றார்.

விசுவாமித்திரனை வீமனடித்தபடலமுற்றிற்று.

தக்கன்பிணிநீங்கு படலம்.

விதர்ப்பமெனு நாடாளும் வீமவினி விநாயகரை
மதர்ப்பின்விழி மாதோடு மகிழ்விமக வெனுமணியைக்
கதிர்ப்பவயிர்ப் பாய் நமக்குக்கணேசர்குல தெய்வமதா
யதிர்ப்புளத்திற் முயரகற்றியாண்டதுங்கேளெனமொழிவான்.

சரியையுமுதலிய மெய்த்தவங்கொண்ட முனிவீர் ! இவ்வாறு விசுவாமித்திரர் சொல்லிப் பின்னுஞ்சொல்லுவார் பார்த்திபனே ! விநாயகமூர்த்தி உனது குடிக்குக் குலதெய்வமாயிருந்து சகலதுன் பங்களையு நீக்கியிராட்சித்தருளிய கதைகளையுஞ் சொல்வோங் கேட்

பாயாக. பூர்வத்தில் உனது பெரியோர்கள் கருநாடதேயத்திற் கர சராகிப் பானுவென்கின்ற பட்டணத்திலிருந்து இராச்சியபாரஞ்செ ய்து வருங்காலத்தில் உனக்கேழாவது தலைமுறைச் சந்ததியாரில் வல்லவனென்னும் ஓர் அரசனிருந்தான். அவனுக்கும் அவன் மனை வியாகிய கமலியென்பவட்கும் ஒரு புதல்வன் பிறந்தான். அப்புதல் வன் பிறந்தபோதே குருடாகியும், செவிடாகியும் ஊமையாகியும், சரீரமெங்கும் தொழுநோய்கொண்டு சீயுஞ்செங்கீரு மொழுகும்படி யான விரணத்துடனே யிருந்தான் இத்தன்மையவாகிய தன்பத்து டன் பிறந்த பிள்ளையைத் தாய்பார்த்து மிகுந்த துயரங்கொண்டு கண்கள் நீர் சொரியப் புலம்பித் தெய்வமே ! மறுதேயத்து மன்னர் கள் பழிக்கும்படியான இத்தொழுநோய்கண்ட பிள்ளையைவருந்திப் பெற்றதைவிடப் பிள்ளையிலலாமையா யிருப்பது மிகவு நலமாயிற் றே. ஐயோ ! இத்தன்ப முடையபிள்ளையைப் பார்க்கும்படியாகப் பிரமதேவரெனக் கேன்விதித்தார். இப்பிள்ளை பிழைத்திருப்பதை விட இறந்துபோனலுஞ் சுகுணமாச்சுதேயென்று பலவாறுதுயரப் பட்டிருப்பதை அரசனறிந்து மனைவியிடத்தில் வந்து குமாரனைப் பார்த்துத் தானும் மிக்க கிலேசததை யடைந்து ஆ ஆ நாம்செய்த தவப்பயன் நன்றாயிருக்கின்றதென்றரத்தி ஊழ்வினையால்வந்து உற் பவிக்குங் காரியத்திற்கு நாம் தன்பப்படுவதால் ஆவதென்னென்று தன்மனதைத் தானேதேற்றித் தனது மனைவிபடுகின்ற துன்பத்தி னையுமாற்றவேண்டி அவள் சரீரத்தைத் தனது கரத்தால் வருடிக் கொடுத்துகாதலியே ! நீ துயரப்படவேண்டாம் இப்பிரபஞ்சத்துள் ஓர் காலத்திற் தன்பமனுபவிக்கின்றவர்களே மற்றொரு காலத்தில் இன்பத்தையு மெளிதி லனுபவிக்கின்றார்கள்.

பொதியிழந்திருக்கின்ற விப்புதல்வனே காளைச் சகல மாட்சி மையினுஞ்சிறந்த மன்னவனுவன். ஆதலால் மணிமந்திர ஔஷதாதி களாற் பரிகாரஞ்செய்வோம். அவைகளாலுங் குணமாகா விட்டால் தவம், தானம், விரத முதலானவைகளைச் செய்து எல்லாத் தன்ப ங்களையு மொழித்துக்கொள்வோம். சின்னஞ் மாத்திரம் மனம்பொ ருந்திருவென்றுசொன்னன். அதனுலவன் மனைவியானவள் தன்து யரத்தைத் தன்னுலடக்கக்கூடும் வரையிலடக்கி, அப்பொழுபிழைத் த புதல்வனைத் தனது கண்ணீருடன் தண்ணீரும் விட்டுக்குளிப்பாட் டினுள். பின்னர், அரசன் தன்புத்திரனுக்குச் சாத கருமாதிகளைச் சாத்திரவிதிப்படி சிறப்பாக நடப்பித்துச் சோதிடர்களைக் கூவி அவர்கள் சொற்படியே தக்கதென்று நாமதேயம் வைத்து

அப் புத்திரன் பிறந்தாட் டொடுத்துப் பன்னிரண்டு வயதுவரை யிற் பிணியொழிய வேண்டிச்சகல விதத்திலும் அளவற்ற திரவியங் களைச் செலவுசெய்து எண்ணிறந்த பரிகாரங்களையும் பண்ணுவித்த னன். பின்னர் எவ்விதகாரியங்களாலும் பிணிநீங்காமையால் அர சன் மனவெறுப் படைந்து ஓர் தினம் தன் மனையாளை யழைத்துப் பெண்ணே! இதுகாறு மிப்புதல்வற்காக அளவிறந்ததிரவியங்களைச் செலவுசெய்தும் இரவும் பகலுமாகப் பலதவங்களை முயன்றும் அவைகளால் நமது சரீரம் வாடியும் பிணி நீங்குவ தில்லாமையால் இனி இவனிங்கிருக்கலாகாது. இருக்கின் மற்று முள்ள திரவியங்க ளும் வீணிற் செலவழிந்துபோகும் ஆதலால் சற்றுந்தாமதஞ்செய் யாமல் உன்மகனைக்கொண்டு இந்நிமிஷத்தில் வெளியிற் செல்லக் கடவையென்று அழைத்து ஆஞ்ஞாபித்தான்.

அவ்வார்த்தையைக் கமலியானவள்கேட்டு நடுநடுங்கிப் பதை பதைத்துப் பயந்து, அப்புதல்வனைப்பெற்றகாலத்திலுண்டான து யரத்தைப்பார்க்கினும் அதிக துயரங்கொண்டு, ஐயையோ வென்று தூக்கித்து அரசன் மனதிற் கொதிப்புண்டாகி என்மீதிற்கோபஞ் செய்தால் இனி என்னசெய்வேனென்று மனம் கொந்து, கொடுமை யான பிணி கொண்டிருக்கின்ற மைந்தனை உடனே யெடுத்துக் கொண்டு வெளிவந்து புலம்புவாள்.

அன்னே வன்னே மன்னவ னெஞ்சத் தழலாகி
யென்னே வானே லென்னினிச் செய்வே னெனைகொன்று
கொன்னேய் கொண்ட மைந்தனை வல்லே கொண்டோவா
மின்னே யன்ன நுண்ணிடைவாட வெளிக்கொண்டாள்

பற்றார் யாரே பண்டுசெய் நல்லூழ் படர்காலே
யுற்றார் யாரே யோங்கிய தீயூ ழுறுகாலே
யெற்றே வென்ன வீரங்களி னென்னு மிடமாதைப்
பெற்றே னல்லாற் காப்பிலை யென்றே பெயர்குற்றாள்.

ஐயகோவிதியே என்செய்வோம். நல்லகாலத்திற்குப் பகையில் லை, பொல்லாதகாலத்திற் குறவில்லை, யென்றுபெரியோர்கள் சொல் லுகின்றதாதலால் இனி என்னசெய்யப் போகின்றோமென்று இடுக் கண்ணுற்றிருப்பதில் ஆகத்தக்க பயன்யாது மில்லையென்று தன் னுள்ளத்தைத் தானேதேற்றிக்கொண்டு, இனி நமக்குப் பரமசிவத் தையைவிடவேறொருதுணையில்லையென்கின்ற உறுதியுடன் வழிநடந்து வனத்திற் சஞ்சரித்திருந்தனள். அக்காலத்தில் ஒருநாள் கள்ளர்கள்

அவளைப் புடைசூழ்ந்து பூண்டிருக்கிற ஆபரணங்க ளனைத்தையுங் கொள்ளையிட்டுத் துரத்திவிட அதனால்மிகவும் வாட்டமுற்றுப் பய ந்து ஓரிரவுட்சென்று எக்காலத்தும் பசிதாகத்தால் வருத்தமுறு திருந்தவள் அப்பசியாலும் தாகத்தாலு மிளைப்புற்று இத்தன்பங்க ளிற்பட்டு வருந்துவதைவிட உயிர்விட்டிறக்கலாமென்று நினைத்து, மீளவும் புத்திரனிமித்தஞ் சகலசெல்வங்களையுங் கைவிட்டு வந்து இ ங்கு நம்முயிரை விடுத்தால் இவனைப் பாதுகாப்பவரின்றி இறப்பா னேயென்று நிதானித்து, அப்புத்திரனை யோர்கோயிலுள் இருக்க வைத்து அக்கோயிலுக் கடுத்த கிராமங்களில் ஐயமெடுத்து வந்து தன்புதல்வனுக்கூட்டியும் பின்னர்த் தானும் புசித்து இவ்வாறுகா லங்கழித்து வருகையில் தான் நாடோறும் பிச்சையெடுத்தற்குச்செ ல்கின்ற குண்டினபுரத்திற்கு ஒருநாள் கல்வினைப் பயனுனதுதன்னை நெருங்கிவருந் தன்மையளாய்த் தன் புத்திரனையு மழைத்துக்கொ ண்டு வீதியிற்சென்றனள் அப்போது அக்குண்டினபுரத்திற்குச்சமீ பமான ஓர்வனத்திற் சகலஜீவராசிகளும் பகையின்றி யுலவுகின்ற ஆச்சிரமத்திலுள்ள முற்கலமுனிவர் எதிரேவந்தார். கணேசமூர்த் திக்கன்பராகிய அம்முற்கலமுனிவர் மீது படிந்துவந்த காற்றனது அத்தக்கனுடைய சரீரத்திற் பட்டமாத்திரத்தில் அவனுக்குண்டாயி ருந்த பிணிமுழுவதும் நீங்கி. வாய் பேசிச் செவிகேட்டுக் கண்தெரி ந்து புநிதபவித்திரனாகி நடந்தனன்.

பின்னர் அத்தக்கனுடைய வடிவத்தைப் பார்க்கின்றவர்கள் இவன் மன்மதனே ? முருகக்கடவுளோ ? அல்லதுமகாவிஷ்ணுதா னேவென்று நினைக்கத்தக்க பேரழகும் பிரகாசமும் வாய்ந்து விள ங்கினன். இப்படி விளங்கியிருக்கின்ற புத்திரனைத் தாய்பார்த்துமக மகிழ்ச்சி பொங்கிக் கையிலெடுத் தணைத்துக்கொண்டு உச்சிமோந்து உள்ளம்பூரித்து முத்தமிட்டு ஆனந்தக்கண்ணீர் சொரிந்து நமது காதலன் கோபித்த நன்மையாலல்லவா நாமிங்கு வரப்பெற்றுப்பெ ரியோர்கள்மீதிற் படிந்து வந்த காற்றினால் நமது புத்திரன்பிணிநீங் கிப் பிரகாசமாயினனென்று சந்தோஷித்து இதற்குமுன் தன்தலை வன்மீது வைத்திருந்த வெறுப்பை விடுத்துவிருப்புற்றவளாயினள் இவ்வற்புதத்தை அங்கரத்துள்ளோர்கள் அறிந்து இவ்விருவர்மீ தும் கிருபையுண்டாகி நல்லபோனகமும் ஆடைகளுந்தக்கதாதுகா த்துவர, அதையவர்களேற்றுச் சீவித்திருக்குங் காலத்தில் அரவக் கச்சினீலகீக்கி அஷ்டபுயாசலங்களையும் பெற்றுத் திருநேத்திரதாரி யாய் வீற்றிருக்கின்ற சிவபிரானைச் சதாகாலமும் பூசிக்கும் பேற்

மீனை வாய்ந்த ஓர் ஆதிசைவப் பிராமணர் தங்களெதிரில் வரக் கண்டு அவரைத் தானுந்தன் புத்திரனுமாக நமஸ்காரஞ்செய்தார்கள். அவ்வேதியர் அவர்கண்மீது கிருபைவைத்து இருவருக்குந்தீட்சை செய்து கணேசமூர்த்தியினுடைய சடாட்சர மந்திரத்தை யுபதேசித்து அதைச்செபிக்கின்ற முறைமையுங் கூறினர். அவ்வாறேயவர் களிருவருஞ் செபஞ்செய்து வருகையில் கணேசமூர்த்திக்குக் கிருபைசுரந்து அவர்கள் வேண்டிய வரங்களனுக்கிரகிக்கும்படியாக வெழுந்தருளி முன்னர்க் கமலிலக்குத் தரிசனந்தந்து அவள் கோரிய வரங்களை யளித்து, பின்னர்த் தக்கனுக்கெதிரில் வந்து ஒரு முழந் தாள்மீது மற்றொரு திருவடியைவைத்துக்கொண்டு ஒருகொம்பும் இரண்டுசெவிகளும் மூன்று விழிகளும் நான்கு தோள்களுமாகப் பொன்னுடையுடுத்திப் பலவிரத்தினபரணங்களைத் தரித்த திருக் கோலத்துடன் தரிசனமானர். இவ்வாறு தரிசனந் தந்தருளிய கர்த்தனைத் தக்கனவன்கண்டு மனதில் அச்சமும் அன்புமுண்டாகி வணக்கஞ்செய்து பலமுறைவலம்வந்து கரங்களைச் சிரமீது கூப்பி இருவிழிகளினும் ஆனந்தபாஷ்பஞ் சொரிந்து விஸ்வரூபங் கொண்டெழுந்தருளியிருக்கின்ற விநாயகமூர்த்தியைத் தோத்திரஞ் செய்வானெனன்.

அச்சமு மன்புந்தோன்ற வடியிணை பணிந்து சூழ்போ
தச்சியிற் கரங்களேற வொளிவிழி யருவிதாழ
விச்சுவ ரூபனை விநாயகப் பெருமான் றன்னை
முச்சக முழுதும் போற்று முதல்வனைத் துதிக்கின்றானல்.

வேதகா ரணமுநீ வேதமோர் நான்குநீ
பாதமோர் நான்குநீ பதங்களோர் நான்குநீ
போதலி மலியமார் புவனகா ரணருநீ
நாதநின் பெருமையை நவிலவல் லாரெவர். (உ)

(உ) போதலிமலியமார் புவனகா ரணருநீ—போது—தாமரைப் பூவிலும், அலி—திருப்பாற் கடலினிடத்தும், அம்மலி—அழகிய கயிலாய மலியினிடத்தும், ஊர்—இருக்கின்ற, புவனகாரணரும் நீ—உலக காரணராகிய மும்மூர்த்திகளும் நீயே இவரை முறையே பிரமன், திருமால் உருத்திரன் எனக் கொள்க.

புராதனப் பொருளுநீ புறம்பினு முள்ளினும்
விராவுமெய்க் கரியுநீ மிகுமூப நிடதநீ

சராசர குருவுநீ தத்துவ முழுதுநீ
பராபர னினையல் பகரவல் லாரெவர்.

(சு) புராதனப் பொருள்—பழம்பொருள், விராவும் மெய்க்க ரியும்நீ—கலந்திருக்கின்ற தத்துவசாட்சியும் நீயே, குரு—அஞ்ஞா னவிருளைப்போக்குவோன், தத்துவ முழுதும்நீ—அகம்புறமென் னுங் கருவிகளாகிய தொண்ணூற்றாறும் நீயே இவை தத்துவதாத் துவிக மெனப்படும்

மூவர்கா ரணருநீ மூன்றுகா ரணமுநீ
மூவகை யுலகுநீ மொழியுமுச் சுடருநீ
மூவகை யுயிருநீ மூவகை யுருவுநீ
தேவனே நினதரு டெளியவல் லாரெவர். (ச)

(ச) மூன்றுகாரணம்—உலகத்திற்கு முதல்காரணராகிய சுத் தமாயை அசுத்தமாயை பிரகிருதி மாயைகளும், துணைக்காரணமா கிய சிவசத்தியும், நிமித்தகாரணமாகிய சிவமும் என்க. மூவகையு லகு—சுவர்க்க மத்தி பாதலம். மூவகையுயிர்—விஞ்ஞானகலர், பிர ளயாகலர், சகலர் என்பவராம் விஞ்ஞானகலர்—விஞ்ஞானத்தாற் கலையற்றவர். பிரளயகலர்—பிரளயத்திற்கலையற்றவர். சகலர்—கலை யோடு கூடினவர் மூவகை உரு—அருவுருவம் உருவம் என்பன வாம். இவை நிட்களம், சகளநிட்களம், சகளம் என வடநூலாராற் கூறப்படும்.

இந்திரி யங்களி னிசையதி தெய்வநீ
யிந்திரன் முதலிய வெண்டிசைத் தேவர்நீ
யந்திரண் பகலுநீ யறுவகைப் பருவநீ
யெந்தைநின் னுருவினை யியம்பவல் லாரெவர்.

ஏகனீ யநேகனீ யிருளுநீ யொளியுநீ
போகிநீ யோகிநீ புலவரெல் லாருநீ
சாகர மேழுநீ தடவரைக் குலமுநீ
மாகநின் னடிமலர் மருவவல் லாரெவர்.

(சு) போகி—போகத்தையுடையவன், இல்லறத்தான், யோகி யோகத்தையுடையவன், துறவறத்தான், சாகரம்—சுடல், சகரர்க ளால் தோண்டப்பட்டதனல் இப்பெயர் பெற்றது. மாகம்—தொகா யசொரூபியே, வியோகரூபியே.

அறைபிர மேயநீ யப்பிர மேயநீ
மறையும்பா வனையுநீ பாவஞ் நிதநீ

நிறைபரப் பிரமநீ நிலமுத லீன்றநீ
யிறைவனின் னருளினே யெய்தவல் லாரெவர்.

(எ) பிரமேயம்—அளவிடப்படுவது, அறியப்படுவது, அப்பிரமேயம்—அளவிடப்படாதது, அறியப்படாதது, மறையும் பாவனை சொல்லப்பட்ட பாவனைகளும், பாவனை—தியானம், நிலமுதலீன்றது பஞ்சபூதம்.

மிருதிநீ புராணநீ வேறுபல் கலையுநீ
வருணமோர் நான்குநீ வனமுப வனமுநீ
தருவொரு கொடியுநீ சகலசெந்தக்கணீ
யொருவனின் றன்னிய லுணரவல் லாரெவர்.

(அ) வருணமோர் நான்கு—பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரசாதிகள் வனம்—காடு, உபவனம்—பூங்கா, ஒருவ—ஒப்புயர்வில்லாதவனே! நின்றன் இயல்—தேவரீருடையசொரூபதடத்தலக்கணங்களை.

காமமா திகளுநீ கடும்பசி தாகநீ
நாமநித்திரையு நகுவினே தங்கணீ
யேமமார் பொறையுநீ யின்பநீ துன்பநீ
வாமனே நின்கழன் மதிக்கவல் லாரெவர்.

அருளுநீ மறமுநீ யன்புநீ வன்புநீ
தெருளுநீ மருளுநீ செல்வநீ யுமைநீ
வெருளுநீ தேற்றநீ வேறுநீ யொன்றுநீ
குருவனின் குணங்களைக் குறிக்கவல் லாரெவர்.

(ஐ) அருள்—திருவருட்சத்தி, மறம்—கொலை முதலிய தீமை இவற்றுல் வள்ளலாகிய விராயகப் பெருமானது அறக்கருணை மறக்கருணையாகிய தொழில்கள் அறையப்பட்டன. அன்பு—பற்று, வன்பு—பற்று, வன்பு—பற்றின்மை. தெருள்—ஞானபேதம். மருள்—அஞ்ஞான மயக்கம். வெருள்—பயம். தேற்றம்—அபயம்,

புண்ணிய தலங்கணீ பொருவிலீர்த் தங்கணீ
வண்ணமூர்த் திகளுநீ வரந்தரும் வள்ளனீ
பண்ணியம் பலவுநீ பரமதப் பொருளுநீ
யண்ணலே நின்செய லறியவல் லாரெவர்.

செய்வினை முதலுநீ செயப்படு பொருளுநீ
செய்வினைத் தொழிலுநீ செய்கரு மப்பய
னெய்வகை யவரவர்க் குதவவல் லவனுநீ
மெய்வலாய் நினதியல் விளக்கவல் லாரெவர்.

(கஉ) செய்வினை முதல்—கருத்தாப்பொருள். செயப்படுபொருள்—கருமப்பொருள். செய்வினைத் தொழில்—கிரியைப்பொருள் இது எழுவாய் செயப்படுபொருள் பயனிலையெனத் திராவிடத்தில் வழங்கும்.

குணமொடு குறிபல கொள்கைகொள் ளாயெனி
னனிமலர் மணமென வாக்கையி னுயிரெனப்
பணியுயி ரறிவெனப் பயிலுமத் துவிதமாங்
கணபதி நினதியல் காணவல் லாரெவர்.

(கஙு) குணம்—சத்துவ ராசத தாமதமென்னு முக்குணங்கள் மலர்மணம்போலவும், உடலுயிர் போலவும், ஆன்மபோதமுங் கண்ணறிவும் போலவும், பதியத்துவிதமாய் நிற்குநிலை பகரப்பட்டது. அத்துவிதம்—இரண்டன்மை இரண்டின்மையெனப் பொருள்கூறுவர் மாயாவாதிகள்.

இவ்வாறு தோத்திரங்கள் செய்து நிற்கின்ற தக்கனுக்கெதிரில் யானைமுகத்தோடுங் கூடியிருந்த விநாயகமூர்த்தியானவர் அவ்வுருவத்தைமாற்றி முற்கலமுனிவருடையவுருவத்தைத் தரித்துத் தக்கனைப்பார்த்து அன்பனே! நீ செய்த தோத்திரங் கட்கு மனமுவந்தோம் உனக்கு வேண்டியவரங்களைக்கேள் தருகின்றோமென்று திருவாய் மலர்ந்தனர். தக்கன் மீளவும் நமஸ்காரஞ்செய்து தேவாதிதேவனே! அடியேன் மனையில் அஷ்டபாக்கியங்களுண்டாகவும், மிக்க புகழுடனே அடியேன் வாழ்ந்திருக்கவும், அனுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்குக் கர்த்தன் கிருபைசுரந்து தக்கனே! முன்பு நம்மால் முற்கலனென்னும் பெயரைப் பெற்றிருக்கின்ற ஓர் தவச் சிரேஷ்டனுடைய உருவத்தையே இப்போது யாம் பெற்றிருக்கின்றோம். அவனே நமது பாதாமரைக்கன்பன். அவனுயிரே நமதுருவமானதால் அவனுருவே நமதுருவமென்பதையுனக் கறிவிக்குமாறு அவன்போலவே யிருந்து உனக்குத் தரிசனந்தந்தோம். அவனுருவத்திற்படிந்து வந்த காற்றினால் உன்னரிட்டத்தை முன்புநிவிர்த்தி செய்வித்தோம். இனி நீ அவனைச் சரணடையாயின் உன்கோரிக்கையெல்லாம் அவனே நிறைவேற்றி வைப்பான். பின்னர் நீ தேவேந்திரனைப்போலச் சகல போகங்களையும் பெற்று வாழ்ந்திருப்பாயென்று திருவாய் மலர்ந்து தமது திருவுருவத்தைக் கரந்தருளினர்.

தக்கன்பிணிநீங்குபடலம் முற்றிற்று.

முற்கலர்

தக்கணுக் குபதேசித்தபடலம்.

கற்றைச் சடிலத் தேரம்பன் காட்சி கொடுத்து மறைதலொடும்
பெற்றம் பிரிந்த கன்றெனவும் பெருந்தாய் பிரிந்த மகவெனவும்
பற்றும் பொருள்கைப் பெற்றிழந்த படர்கூர் வறுமையாளனெனவும்
சற்றுக் தரியா துளங்கரையத் தக்க னிலமேல் வீழ்ந்தெழுந்தான்.

ஒன்றுகி இரண்டுருவாகியும், ஒரைந்தாய் ஐயைந்தாகியும், நிற்கும் விநாயகக்கடவுளது திருவடிக்கன்புள்ளமுனிவீர்! சந்திரசடாதர மூர்த்தியாகிய விநாயகக்கடவுள் இவ்வாறு கரந்தருளலுற் தக்கனுனவன் பசுவைப் பிரிந்த கன்றுபோலவும். தாயைப் பிரிந்த சேய் போலவும். கைப்பொரு ளிழந்த வறுமையாளன்போலவும் எவ்வள வேனு மனஞ் சகிக்க மாட்டாமல் தரையில் வீழ்ந்தெழுந்து கர்த் தன் கரந்தருளிய திசையை நோக்கி அநந்தமுறை வணங்கிப் பல திக்குகளினுத்துந் தேடித்திரிந்து மீட்டுந் தனக்குக் காட்சிகொடுத் தருளிய நிலத்தில்வந்து வீழ்ந்து வீழ்ந்து புரண்டு புரண்டு அலறி யலறிச் சரக்கொன்றை மரத்திற் பூத்திருக்கின்ற மலர்ச் சரங்களை நோக்கி, சுவாமிகள் திருமுடியி லணிந்திருந்த மாலையென்றெண்ணி அம் மரத்தைத் தழுவி முகந்து வணங்கிய தன்றி தடாகங்களே! பறவைகளே! சுயங்களே! மானிகைகளே! யானைகளே! கமுகமரங் களே! பனைமாங்களே! அன்றில்களே! என்னை யாட்கொண்டரு ளிய கிருபா மூர்த்தியைக் கண்டீர்களோ வென்று புலம்புவான். யானைகளைப் பார்த்து எனதாண்டவருடைய திருமுகத்திற் கொப் பாகவிருக்கின்றீர்களேயென்று நமஸ்காரஞ்செய்து, அழலிற்பட்ட மெழுகினைப்போலச் சரீரமிளகி உருமாறி ஞானக்கூத்தாடி யற்பு தங்கொண்டு, முற்கல முனிவருடைய ஆசிரமத்தை யடைந்தான். அவ்வாசிரமத்தில் அருளென்னுங் கடலைக்கடந்து ஞானத வழுது ண்டு பூரித்திருக்கின்ற மாணுக்கர்கள் தம்மைப் புடைசூழ்ந்து போற்றத் தக்கதாக வேதாகம முதலிய சகல பொருள்களையுந் தெளிந் துணர்த்தி. தேவ தேவராகிய விநாயக மூர்த்தியினுடைய திருவடிகளைச் சதாகாலமுஞ் சிந்தித்திருக்கின்ற அருந்தவத்தினு லும் யோகவலியினுலும்வேண்டிய வண்ணம் வேறுவேறு வடிவங்க ளைக்கொள்ளத்தக்க சத்தியையுடையராய், ஞானசூரியனைப்போல விளங்கியிருக்கின்ற முற்கல முனிவரையும் அவர் கருணை பொழி கின்ற திரிநேத்திரங்கள் சதுர்ப்புயங்கள் முதலிய உருப்புக்களோடு சிற்பசாஸ்திரவிதிப்படி பொன்னினுலும் மணியினுலுங் கனைசமூர்

த்தியினுடைய திருவுருவங்களைச்சமைத்துச் சதாகாலமுந்தரிசித்து வருகின்ற பெருமையுங் கண்டு பணிந்து கெடுநேரம் அவ்வண்ணமே யிருந்து பின்னரெழுந்து, மேகத்தைப்போல ஆனந்தக்கண்ணீர் சொரிந்து பெருமூச்செறிந்து பரவசனுகிக் கரங்களைச்சிரமேற் கூப்பி அளவற்ற தோத்திரங்களைச் செய்துநிற்றலும், அத்தக்கணமுற்கல முனிவர் திருமையோடும் பார்த்து, அவன் பேரன்புக் கதிசயங் கொண்டு, அன்பனே ! உன் பெயரென்ன? நீ வசித்திருக்கும் ஊர் யாது? உன்மனதிற் கருதி வந்த விருப்பங்கள் எவை? சொல்லென்று திருவாய் மலர்ந்தனர்.

உடனே தக்கன் தேவாமிர்த முண்டவனை யொத்துக் களித்த வனுய்க் கரங்களைக்கூப்பித்தொழுது இதனைவிண்ணப்பஞ் செய்வானுயினன். சுவாமீ! என்தந்தை கருநாடதேயத்திலே பாதுவென் கின்ற புரத்தில் அரசாட்சி செய்கின்ற வல்லவராசன் என்தாய் கமலையென்பவள். என்பெயர் தக்கன். மேற்சொன்ன அவ்விருவருக்கும் யான்புதல்வனுய் உற்பவித்தபோதே என்சரீரமானது தொழுநோய் முதலிய பிணிகளோடு மிருந்ததனுல் அவர்கள் மன வருத்தமுற்றுப் பன்னிரண்டு வயதுவரையிற் பற்பலமுயற்சிகளைச்செய்து வந்தார்கள். பின்னர் எவ்வாற்றலும் என்பிணி நீங்காமை கண்டு தந்தை மனவெறுப்படைந்து தாயையும் என்னையுங்கோபித்து வில க்க யாங்கள் அவ்வாணையைத்தடுக்கக் கூடாமல் வெளிக்கடுண்டு இங்கரத்தை யடைந்து பிச்சையெடுத்துச் ஜீவிக்கின்ற காலையில் ஒருநாள் சுவாமிகள் திருமேனியிற் றுதைந்து வந்தகாற்றினுல்என் பிணியனைத்து நீங்கப் பெற்றதுமன்றி ஓர்மறையவ ருபதேசித்தமந் திரத்தை யநுட்டித்து அதன் முன்னிலையிற் கணேசமூர்த்தியினு டைய தரிசனங்கண்டு அவரிட்டருளிய கட்டளையின்படித் தேவரீ ரைச் சரணடைந்தேன். இஃதன்றியும் யானேமுகத்தோடும் என் னெதிர்வந்து காட்சிதந்த கணேசமூர்த்தி யானவர் பின்னர் இவ்வு ருவத்தைமாற்றித் தேவரீர் திருவுருவத்தினைக் கொண்டு தரிசனந் தந்தருளியதால் சுவாமிகட்குந் தேவரீர்க்குந் திருவுருவ மொன்றுக விருக்கின்றது. தேவரீர்அநுக்கிரகத்தால் அடியேற்கு இப்பிரபஞ்ச வாழ்க்கை யிருதியுண்டாக வேண்டு மென்றுங் கோரியிருக்கின்றேன் அவ்வண்ணமே தேவரீர் கருணைகடாட்சம் வைத்து நிரந்தபத்தியும் அடியேற் கருளவேண்டு மென்றுப்பணிந்து பிரார்த்தித்தான் இவை யனைத்து முற்கல முனிவர் கேட்டு அதிக ஆச்சரியங்கொண்டு மைந் தனே ! நீபெரிய பாக்கியமுடையவன் நீயே இவ்வுடம்பின் பயனைப்

பெற்றவன். நீயே நினைத்தகாரியத்தை நிறைவேற்றிக் கொள்ளத்தக்க மகாதவத்தையுடையவன். நீயே விநாயகக் கடவுளுடைய திருவடிகளில் நிறைந்த பத்தியுடையவன், நீயே முற்றத்துறந்தவன் நீயே சீவன் முத்தன்யான் தேவவருடத்தில் ஆயிரம்வருடம் அருமையான தவங்கள் செய்தும், அவ்வாறே அளவற்றகாலந் தியானித்திருந்தும் பலதருமங்களில் முயன்றும், எண்ணிறந்தானங்களை டாத்தியும் அதுகாறும் எனக்குக் கணேசமூர்த்தியானவர் தரிசனந்தந்தருளியதேயில்லை, பிரமன் விண்டு உருத்திரனென்ற மூவருள்ளத்தினின்று சிருட்டி-திதி-சங்காரமென்கிற முத்தொழில்களை டாத்தி அம்முத்தொழில்களை அம்மூவர் முன்னிலையில் இம்மூவகையுலகத்தினு மியற்றுதல்செய்து அம்மூவர்க்கும் முதல்வனுகவிருக்கின்ற ஓர் முதல்வனுக்குத் தாமே முதல்வராயிருக்கின்றவர். அக்கணேசமூர்த்தியே ! அவரையுன் * மூவகைக்காரணத்தாலு முயன்கியிருக்கின்றனையாயின், இப்புவியினுனக் கொப்பாகயாவரிருக்கின்றார்கள். அந்தணர் கழல்வண்ணமாகவும் யோகியர்க்கு மந்திர சொரூபமாகவுமிருந்து அவ்வவர்களுக்குத் தரிசனந்தந்து ஆட்கொள்ளத்தக்க அக்கணேசமூர்த்தியானவர் என்னெதிரிற் காட்சிதந்த தெவ்வாறே அவ்வாறே நீயுங் கண்டதாக மொழிந்தனை, யானுனக்குதரத்தக்க கைம்மாறு என்னவிருக்கின்றதென்று சொல்லி ஆனந்தனஞ்சேய்து தமது கரத்தாற் சரீரத்தை † தைவந்தளவில்லாத அற்புதங்களைக்கொண்டு பற்பல சந்தோஷவார்த்தைகளாடிச் சகலபாக்கியங்களையுந் தரத்தக்க விநாயகமூர்த்தியினுடைய ஏகாட்சரமந்திரத்தை யுபதேசித்து அதைத்தியானிக்கு முறைமையும் அருளிச்செய்தார். இப்பால் அத்தக்கனுடைய தாயாகிய கமலியானவள்தெடுநேரந் தன்புத்திரனைக் காணுமற் றேடினவளாய்ப் பின்னர் ஞானசொரூபியாய் வீற்றிருக்கின்றமுற்கலமுனிவரிடத்திலிருக்கக்கண்டு தானும் அவரைத் தீர்க்கதெண்டன் செய்து நின்றனள், அவரையம் முனிபுங்கவர் பார்த்து மகாவத்தமியே ! நீயும் உன் புத்திரனும் வேதங்களாலு மறியக்கூடாத குணங்குறிகடந்தகொள்கையராகிய கணேசமூர்த்தியினுடைய திருவைக்குப் பாத்திரராவீர்கள். சகலவினைகளையும் வென்றீர்கள். இன்னும்நீங்கள் பெறத்தக்க தென்னவிருக்கின்றது உன்குமாரனுக்கு அவ்விநாயகக்கடவுளுடைய ‡ ஏகாட்சரமந்திரத்தை யுபதேசித்திருக்கின்றேன் ○ அம்மனுவைச் செபஞ்

* மூவகைக் காரணம்—மனம், வாக்கு காயம் என்பனவாம். † தைவந்—தடவி. ‡ ஏகாட்சரம்—பிரணவம், ○ அம்மனு—அந்த மந்திரம்.

செய்து சித்திபெற்ற முடிவிலே இவ்வுலகத்தில் அவன் சக்கிராதிப தியாயிருந்து தேவேந்திரன் முதலாயினோர் கண்டு மதிக்கத்தக்க அரசாட்சியைப் பெற்றுவாழ்ந்திருப்பான். இனியொன்றற்கும் அஞ் சலியென்று சொல்லி விடைகொடுத்தனர் என்று விசுவாமித்திரர் வீமராசனை நோக்கிச் சொன்னர்.

தக்கனுக் குபதேசித்த படலமுற்றிற்று.

வல்லாளன் வேதவண நீங்குபடலம்.

என்றுரை யாடும்வேலை யிலங்குவேல் வீமன் முழுந்து
கன்றுகோய் முனிவன் மெய்யிற் காற்றினுன் முழுகுந்தீர
வன்றுவல் விரைந்தே ரம்ப னவனெதிர் தோன்ற வன்னுன்
றென்றுசெய் தவம்யா தென்னச் சொல்லுவான் காதிமைந்தன்.

சிவசத்திபாதம் வாய்ந்த முனிவர்களிள விராயக மூர்த்தியைத் தக்கனுபாசித்துப் பிணிநீங்கிய சரித்திரத்தைச் சொன்னேம். இப் பால் வல்லாளனுபாசித்த நிறத்தைச் சொல்வோங்கேட்பீராக.வீம ராசன் விசுவாமித்திரமுனிவரை மீளவும் பணிந்தெழுந்து சுவாமி ! முக்கல முனிவர்மீது படிந்துவந்த கரற்றனது தக்கன் சரீரத்தில் பட்டவுடன் அக்கொடிய வியாதி அவனிவிட்டு நீங்கவும் உடனே கணேசமூர்த்தி தரிசனமாகவும், பூர்வத்தில் அவன் என்ன தவத்தி னைச் செய்திருக்கின்றன், இதனையும் அருளல்வேண்டுமென்றுபிரார் த்தித்தான். அதற்கு விசுவாமித்திரமுனிவர் கிருபைசுரந்து அரச னே ! சகலவளமுஞ் சிறந்த சித்த தேயத்திலே பல்லியென்கின்றப ட்டணத்திலே, வைசிய குலத்திலே, கலியாணனென்பவனுக்குங் கற்பிற்சிறந்த அவன் மனைவியாகிய இந்துமதி யென்பவட்கும் முன்செய்து விட்ட தவக்குறையை நிறைவேற்ற வந்தவனென்று சொல்லும்படி ஒரு புத்திரன் அவதரித்தான். அதனுற் கலியாணன் மனமகிழ்ச்சிகொண்டு சகல சடங்குகளையுஞ் சிறக்கச்செய்துஅகே தான தருமங்களியற்றிப் புத்திரன்பிறந்த பன்னிரண்டா நாள் வீட்டை அலங்கரிக்கச்செய்து சோதிடர்களைக் கூவி, அவர்களால் அப்புத்திரனுடைய திதி நிலை முதலிய எல்லா நிலைகளையு நன்குணர் ந்து அவர்கள் சொற்படியே வல்லாளனென்கின்ற காமகரணஞ் செ ய்து அன்போடு வளர்த்து வர, அவ் வல்லாளனென்னும் புத்திரன் நாளுக்கு நாள் இருத்தும் தவழ்ந்தும் நடந்தும் அறிவு தெரிந்

தந் தினமொரு மேனிகொண்டு வளர்பிறைபோல வளர்ந்து விளை யாடிக்கொண்டிருக்குநாளையில், தன்வீட்டைவிட்டுச் சிறுபிள்ளைக ளுடன்கூடித் தோப்புகளிற் சென்றுவிளையாடிக்கொண்டிருப்பான். அவ்வாறு நாடோறும் விளையாடல் செய்யுங் காலத்தில் ஒருநாள் அவனுக்கும் பூர்வ நல்வினைப் பயனுஞ் சேருங்கி வரவும்அத்தோ ப்பி லொருகல்லி லெடுத்துவைத்து அக்கல்லி விநாயக மூர்த்தியா கப்பாவனைசெய்து சலத்தால் அபிடேகித்துப் புட்பத்தா லருச்சித் துப் பத்தியுடன் பூசித்து மீட்டுந் தன் வீட்டிற்கு அச்சிறுபிள்ளைக ளோடுகூடிச் செல்வான். மறுதினம் அவ்வாறே சென்றுதான் பா வனையாலருச்சித்த அவ்விநாயக மூர்த்தியைக்கண்டுதரிசித்து முன் னைநாளிலுமிருந்த சிறப்புகளை நடாத்தி ஆராதித்துவருவான்.

இவ்வாறு நாளுக்குநாள் தனது பூசனைகளை விருத்திசெய்து விளையாடிவருங் காலத்தில் ஒருநாள பிராதநகாலையிலெழுந்து அச் சிறுபிள்ளைகளை யழைத்துக்கொண்டு தோப்பினுட் சென்று மிகு ந்தவிசுவாசத்துடன் தான் பூசைசெய்யுங் நிணைமூர்த்திக்குச் சில பிள்ளைகள் உயரமாகப் பூப்பந்தரிடவும் சிலபிள்ளைகள் பலவாத்திய ங்களிசைக்கவும், சில பிள்ளைகள் கனிவர்க்கங்களைச் சேகரித்து வர வும், சிலபிள்ளைகள் பூச்சரங்கள் கட்டித் தொங்கவிடவும், சிலபிள் ளைகள் திருமஞ்சனங்கொண்டுவந்துவைக்கவும், சிலபிள்ளைகள் பஞ் சாமிர்தங்கூட்டவும், சிலபிள்ளைகள் சந்தனமிழைக்கவும், இவ்வாறு எல்லாப்பிள்ளைகளும் ஒவ்வொரு திருப்பணிகளை நடாத்திவரக்கட் டளையிட்டு வல்லாளன் ஸ்நானஞ்செய்து அநுட்டானமுடித்துப்புட் பங்களாலலங்கரித்திருக்கின்ற ஆலயதலை நுழைந்து மிகுந்தபக்தியு டனேவிநாயகமூர்த்திக் கபிடேகஞ்செய்து, பூச்சரங்களைச்சாத்திப்ப றபலவகைவேத்தியங்களைக் குறைவில்லாமற் கொடுத்து நமஸ்கரஞ் செய்து இருகரங்களையுஞ்சிரமேற்குவித்துப் பலமுறை வந்தனைசெ ய்துகொண்டிருந்தான். அக்காரணத்தால் தன்னெடுவந்த எல்லாப் பிள்ளைகளுங் காலைப்போசனம் மத்தியான போஜனமில்லாமலும் அத்தமிக்கின்றவரையில்தங்கள்வீட்டிற்சென்றுசேராமலுமிருந்தார் கள்.

இப்பால் அப்பிள்ளைகளி னின்றோர்கள்வல்லாளன்மீதுகோபங் கொண்டு அவன்தந்தையாகிய கலியாணனிடத்திற்சென்று உன்பி ள்ளை எங்கள்சிறுவர்களை ஆதிகாலையில் அழைத்துக்கொண்டுபோய்

இன்னும் அவர்களை வீட்டிற்கு அனுப்பாமல் விளையாடிக்கொண்டிருக்கிறான். அவனை நீ தண்டித்து அடக்காவிட்டால் யாங்களிக் கொடுமை அரசனுக்கு அறிவித்து உன்னை இங்கரத்தினின்றுந் துரத்திவிடச் செய்வோம். இதனை யுண்மையாக நம்பக்கடவையென்று சொல்லி அவன் மனத்தைக் கலைத்தார்கள். இவ்வாறு யாவருந் தனக்கு மனவருத்தமுண்டாகும்படிக் கூச்சலிட் டுரைத்தலுங் கலியாணனுக்கு மிகுந்த கோபமுண்டாகித் தடியையெடுத்துக்கொண்டுபோய்த் தன்குமாரன் விநாயக பூசைசெய்து விளையாடிக்கொண்டிருக்கின்ற தோப்பையடைந்து பூவாற் சமைத்தவைத்திருக்கின்ற பூப்பந்தரைப் பிரித்துத்தள்ளி அதிற் கணேசரை ஆவாகனஞ் செய்து வைத்திருக்கின்ற மூர்த்தியை யெடித்தெறிந்துவல்லாளனையும் உதிரமொழுகவடித்துப் பின்னுங் கோபம்ஆறுமையால் அவனை மரத்திடனே சேர்த்து இறுகக்கட்டினன். அப்போது அக்குற்றமற்ற குமாரன் பயந்து தந்தையே ! என்று கும்பிட்டுக் கட்டையவிழ்த்துவிடும்படியாகப் பலமுறை பிரார்த்திக்கொள்ள, அதற்குஅப்பாவி சற்றுமனதிரங்காமல் உதட்டினை மடித்துக்கடித்துக்கொடியவார்த்தைகளாற் பேசி, நீ விநாயகரைக் குறைவில்லாமற் பூசைசெய்திருப்பையாயின் அவரேவந்து யான் கட்டிய கட்டை அவிழ்த்துவிடுவார். அன்னபாலகனை உன்கையிற்றந்து நீ வேண்டியபடி அடுக்கிரகித்து உன்னுயிரைப் பாதுகாப்பார். நீ வீட்டிற்கு வராதிருந்தால் பிழைத்தாய். வருவையாயின் மாண்டுபோவாயென்றுபகைவரைப்போலப் பேசித் தன்னிருக்கையை யடைந்தனன்.

இப்பால் வல்லாளனுக்கு வேறொரு துணையில்லாமல்மிக்கதயரத்தை யடைந்து துதிக்கின்றான்,

முக்கண் யானைமுகத்த வாகினை முற்று கம்பிய காயினேன்
றுக்க மாந்திடின் விக்கினங்க டுரக்குநாத னெனும் பெயர்
தக்க தோசுடர் கால மாறினுஞ் சார்ந்த வன்பர் தமக்கெலாந்
தொக்க பேரருண் மாறி லாயெனச் சொல்லிமைத்தனிதோ துவான்

திரிநேத்திர தாரியாயிருக்கின்ற கணேசமூர்த்தியே ! யான்படுந்துன்பங்களைத் தேவரீர் பார்க்கவில்லையோ ! எல்லாவற்றிற்குந் தேவரீரையே நம்பியிருக்கின்ற அடியேற்கு இத்தன்மைத்தாகியதன்பம் வரலாமா ? இது தகுதியா ? தேவரீர்திருவடித்தாமரைகளை ஆராதிக்கின்ற வெனக்கும் இவ்விடர் சேர்ந்ததே. தேவதேவே!அஃதுதேவரீரது திருபா சமுகத்திற்கு எதிர்ப்பட வில்லையாவென்று

முறையிட்டு ஐயனே ! யானுனக்கடிமையென்ப துண்மையாயின் யான்சமைத்துவைத்த ஆலயத்தை எவன்பிரித்துத் தள்ளினனே யான்பிரதிட்டைசெய்த மூர்த்தியை எவனெடுத் தெறிந்தானே, என துசரீரத்தில் உதிரமுண்டாகும்படி எவன்அடித்து இம்மரத்திற் கட்டினனே, தேவரீரை எவ்வளவேனு மதியாமல் எவன்நிந்தித்தானே அப்பாதகன் இங்நிமிடத்திற் குருடாகியும் ஊமையாகியும் செவிடாகியும் அழுகிய தொழுநோய்கொண்டு அதில் சீயுஞ் செங்ரீருமொழுகத்தக்கதாய்ச் சரீரமாகியுங்கும் விரணங்களுண்டாகித் துன்பப்படக் கடவனென்று சபித்துத் திடசித்தஞகொண்டு நமது உடல்மாத்திரமே கயிற்றால் கட்டுண்டதன்றி உள்ளத்திற்கு என்ன குறையிருக்கின்றதென்று தன்மனதிலுள்ள விநாயகக்கடவுளை யிறுகப்பிடித்துத் தியானித்து உயிரைவிடுவதற்குத் துணிந்தான். உடனே விநாயகமூர்த்திக்கு மனக்களர்ந்து பிராமணச்சிறுவன் போல மாறுவடிவங்கொண்டு அவ்வல்லாளனுக் கெதிராகவந்தார். சூரியோதயத்திற்கு முன்னர் இருரும் பனியும் எவ்வாறு நீங்குமோ அவ்வாறு விநாயகமூர்த்தி பிராமணச் சிறுவனுகிவரவும், அவ்வல்லாளனே இறுகக்கட்டியிருந்தகட்டும், அடிகளாலுண்டான விரணங்ளும், ஒரு கொடிப்போதில் விலகிப்போய்விட்டன. பின்னர் வல்லாளன் அற்புதங்கொண்டு இவரே நம்மையாட்கொள்ளவந்த விநாயகப்பெருமானென்று நிச்சயித்து நமஸ்காரஞ்செய்து உலகரட்சகனே எளியேற்குத் தந்தைதாய் சுற்றமுதலிய யாவருஞ் சுவாமிகளேயன்றி இப்பிரபஞ்சத்தில் வேறொருவரிலலை யென்பது இத்தினத்திற் கண்டுணர்ந்தேனென்று பலவாறு தோத்திரஞ் செய்தனன்.

தந்தைதாய் சுற்றமுற்றுந் தமியனேற் கடிகளன்றி
யிந்தவை யகத்தில்வேறே யிலையென்ப தின்று கண்டேன்
மூந்துல கனைத்துந் தோற்றி முடித்தருண் முதல்வமூவா
வந்தண வென்றுன் மைக்த னந்தண ணழுவிச் சொலவான்.

அதற்கு அப்பிராமணப்பிள்ளை வடிவங்கொண்டு வந்த கணேசமூர்த்தியானவர் வல்லாளனைத் தழுவிக்கொண்டு அன்பிற் சிறந்த குழந்தாய் ! நமக் கபராதஞ்செய்த பாவிகளும் நமதுபத்தருக்கு இடுக்கண்செய்த சண்டாளர்களும் அக்நிமிடத்திற் கொடியநரகவேதனைகளிலழுந்தி இம்மை மறுமையிலும் முடிவுகாணுத பொல்லாத வியாதிகளாற் துன்பப்படுவார்களாதலால், இப்போது நம்மிருவரிடத்துங் குற்றஞ்செய்த கலியாணனுக்கு நீ யிட்ட சாபத்தின்பயனே

அனுபவிக்கச் செய்தோம். நீயுன்துயரத்தை நீங்கி உனக்குவேண்டிய வரங்களைக் கேள் தருகின்றோமென் றருளிச்செய்தார். வல்லாளன் அம்மொழியை யமுதாகக் கேட்டு ஆனந்தபரவசனாகி அடியேற்குத் தேவரீருடைய திருவடிகளில் நீங்காத பத்தியைத் தந்து இவ்விடத்தில் எக்காலமும் சுவாமிகள் வாசமாயிருந்து அவ்வவர்கள் இச்சித்த வரங்களை அளுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, அதற்கு அக்கணேசமூர்த்தியிசைந்து மைந்தனே! உனக்கெமது திருவடிகளி லென்றைக்கும் அழியாத பேரின்பினைத் தந்தோம் அன்றியும் உனது பெயரை நமது பெயர்க்குமுன்னர் வைத்து வல்லாள கணபதியென்று உலகத்தாரெல்லாம் புகழ்செய்யும்படியாக அவ்வவர்களிச் சித்த வரங்களைத் தந்து இங்ஙனே வசித்திருப்போம். சுவர்க்க மத்திய பாதலமென்கிற மூவுலகத்தாரும் இங்கு வந்தெம்மைப் பூசனைசெய்யக்கடவர். இங்ருண்டாயிருக்கின்ற நமதுசொரூபத்தை யாவர் தரிசித்தாலும் அவ்வவர்கள் பெறக்கருதிய அரியபொருள்களையெல்லாம் எளிதிலடையக்கடவர்கள். இனித் தினவுற்சவம், மாதவுற்சவம், வருடவுற்சவம் முதலான வைபவங்கள் இங்குச் சிறப்பாக நடக்கும், இதனை நீ யுண்மையாக நம்பக்கடவையென்று திருவாய்மலர்ந்து, பிராமணப்பிள்ளை வடிவங்கொண்டிருந்த கணேசமூர்த்தியானவர் சகல வுலகத்தாரும் பூசிக்கத்தக்க விக்கிரக வடிவங் கொண்டிருந்தனர்.

வேதிய ருகப்போந்த விநாயகர் மூர்த்தியாகி
மூதுல கனைத்தும் போற்ற முகிழ்பெருங் கருணையோடு
மேதக விருந்தாரங்கு விளம்புவிக் காதை கேட்டோர்
கோதறப் படித்தோ ரெல்லாங் குறைவில்செல்வத்த ராவார்.

வல்லாளன் வேதனை நீங்குபடல முற்றிற்று.

வல்லாளன் முத்தியடைந்த படலம்.

வெற்றிவேன் மீமதக்கன் மேவுமுற் பிறவிசொற்ற
முற்றவப் பிறப்பின் மைத்த னெனுங்கும்வல் லாளனென்போன்
முற்றிய கணேசர் தம்மான் முத்திசேர்ந் ததுவுங் கேளென்
றற்றமில் விச்சுவாமித் திரனவற் கறையலுற்றான்,

இவ்வாறு சொல்லினும் பொருளினும் தொடர்ந் தறிதற்கரிய கணேசமூர்த்தியானவர் விக்கிரக வடிவங்கொண்டு வீற்றிருப்பதை

வல்லாளன் பார்த்து மிகுந்த பத்தியுடனே பணிக்தெழுந்துமுன்போ லவே பூப்பத்தர்புதுக்கி ஸ்நானஞ்செய்து பூசைமுடித்தற்கு வேண்டிய திரவியங்களையும், வாசனைபூட்டிய திருமஞ்சனத்தையும் பரிமளமிகுந்த புட்பவகைகளையும், இனிமையாகிய கர்ப்பூரவர்க்கங்களையுஞ் சேர்த்து அளவற்ற வுவகையோடும் ஆராதித்துக்கொண்டிருந்தான். இங்கிவ்வாறிருக்க இவனைமுன்னர் வருந்திச்சென்ற கலியாணன் தன்வீட்டை யடைவதன்முன் இவனேடும் விளையாடிக்கொண்டிருந்த பிள்ளைகள் விரைவிலோடி இவன் நாயகிய இந்துமதியிடத்திற்சென்று கலியாணன் தன்புத்திரனை யலையக்கண்டதும் சரீரமெங்கும் உதிப்பிரவாகமுண்டாகும்படி எவ்வளவுமிரக்கமின்றியடித்தி மரத்திற்கட்டித் தனியேவிட்டு வந்ததும் விபரமாகச் சொன்னார்கள். அதனை இந்துமதிகேட்டு மிகுந்த தயாரப்பட்டுமனவாட்டமுற்றிருக்கையில், வீட்டை நோக்கி வருகின்ற கலியாணனைவன் தன்கணவனிட்ட சாபத்தினைக் கண்தெரியாமலும், வாய்பேசாமலும், செவிகேளாமலும், சரீரமெங்கும் தொழுநோய்கொண்டுதிகைத்து மதிமயங்கிய நிலையுடன் தன்வீட்டில் வந்து வீழ்ந்தான் அவனை இந்துமதிகண்டு ஈதென்ன பாவமென்று திடுக்கிட்டு நடுநடுங்கி உளம் வருந்தி ஐயையோ! நமது நாயகனுக்கு இவ்விந விடுக்கண்வந்தகாரணம் யாதினைனென்று நினைத்து மனமுருகிக் கண்ணீர்சொரிந்து கொருபிள்ளீது மற்றோர் கொருப்புவிழ்ந்தழுபோலவும்கோயின்மீது வேறோர் நோயுண்டானது போலவும் புருடனும் படுகின்ற துன்பத்தையு மேற்றவளாய் மனஞ் சகிக்கமாட்டாது, தெய்வமே! சிறந்த செல்வத்தோடு நல்ல இளமைப் பருவத்தைச் சேர்ந்திருந்த காலத்தினும் ஒருவருக்கும் தீங்கென்பதை நினையாமல் தருமத்தையேநடாத்தி வந்த இவருக்கும் இவ்வினைவருமாயின் இதுமுற்சனனத்திற்செய்த தீவினைப்பயனே புத்திரனைத் துன்பப்படுத்திவந்தகொடுமையோவென்று துக்கித்து வீட்டிலிருக்கின்ற மற்றைய மாதர்களோடுங்கூடித் தன்புத்திரனிருக்கு மிடத்திற்சென்று அவன்மிகுந்த பத்தியோடு விநாயக பூசைசெய்துகொண்டிருப்பதைக் கண்டு சந்தோஷங்கொண்டு இவனை மரத்திற்கட்டியிருக்கின்றதென்றும் கேள்வியானேமே. அவ்வாறென்றீனையுங் காணேமே? ஈதென்ன ஆச்சரியமென்று தன்னுடனேவந்த மாதர்களோடுஞ் சொல்ல, அவர்களும் வல்லாளனைமகிழ்ச்சியுடனேபார்த்து இச்சிறுவன் கணேசமூர்

த்தியை அன்போடும் ஆராதித்து வருகின்ற மகிமையினாலேயிவ
ன் சரீரத்திலெவ்வளவேனுந் தன்பமணுகவில்லையென்று நிச்சயித்து
அவன் தாயாகிய இந்து மதியைப்பார்த்து விநாயகமூர்த்தியைப் பக்
தியோடு பூசைசெய்பவரில் உன் மகனுக் கொப்பானவர்கள் இப்பிர
பஞ்சத்திலெங்கணுமில்லை, ஆதலால், அவன் சரீரத்தில் யாதொரு
துன்பமும் நெருங்காமலிருக்கின்றதென்று சொன்னார்கள்.

அதை இந்துமதிகேட்டு அக்குமாரனருகிற்சென்று தன்னுள்ள
த்துண்டான அன்பின் பெருக்கினும் குயங்களினின்றும் அமுதம்
பெருகத் தழுவி முகத்தோடு முகத்தையணைத்து முத்தமிட்டு,அப்
பா என்னருமைச் செல்வனே! நீ இப்பிள்ளைமைப்பருவத்திற்றானே
விநாயகமூர்த்தியை யன்போடு அருச்சித்து அவரைவிட்டு மாறாதி
ருக்கின்ற அற்புதத்தாலே யானும் உன்தந்தையுஞ் சன்பசாபல்லிய
ரானேம் ஆயினும் நீ கணேச மூர்த்தியைப் பூசைசெய்யுங் காலம்
போக மற்றைக் காலங்களில உலகநடைக் குரித்தாக மீளவும்வீட்டி
ல்வந்து சேரலாகாதா? அல்லவெனில் வீட்டிற்றானே அக்கடவுளை
வைத்துப் பூசிக்கலாகாதா ? ஏதுமின்றி எங்களைமுழுதுமறந்துவிட்
டுப் பட்டணத்திற்கு வெளியிற்றானே ஒருவர் தங்கியின்றித் தனி
யே வாசமாயிருப்பது உனக்குத் தகுமா ? இப்போதுன்தந்தையா
னவர் யாதோர் காரணமுமின்றி யாவரும் அதிசயிக்கும்படி சரீர
மெங்கணும் புண்கள்கொண்டு. ஊமையாகியுங் குருடாகியுஞ் செவி
டாகியுமிருந்து மதிமயங்கித் தடுமாறி வீட்டில்வந்து வீழ்ந்தார். அ
தையான் கண்டவுடன் முடிவற்ற துயரத்தை யடைந்து உனக்குத்
தெரிவிக்கலாமென் றிங்குவந்தேன், தப்புவழியிற் செல்கின்ற பிள்
ளைகளைத் தாய்தந்தைய ராயினோர் கோபித்தும் அடித்தும் அவர்க
ளை நல்வழிக்குக் கொண்டு வரவேண்டுமென்று வேதசாஸ்திரங் கூற
ப்பட்டிருக்கின்ற முறையின்படி யல்லவா உன்தந்தை யுன்னைத்தண்
டித்தார். அதுநீதானே, தந்தை யாதுசெய்யினும் புத்திரர்கள்
பொறுக்கவேண்டுவது சுபாவமல்லவோ ! அப்பா! இனியேனும்புத்
திரனுவோர்கட்குரிய தருமத்தை நன்றுயோசித்து உன் கோபத்
தை தணித்து உன் தந்தை படுகின்ற கொடியவியாதிகளைப் போ
க்குவதற்கான உபாயமும் மந்திரங்களினுலோ மற்றெவ்வகை யா
லோ அதனை நீயே யறிந்து தீர்க்கவேண்டும். விவேகத்திற் சிறந்த
பிள்ளைகளாயினோர் தங்கள் தாய் தந்தையர் சொல்லுகின்ற வார்த்

தையைக் கீழ்ப்படுத்தாமல் மேன்மையாகக் கொள்வரென்றுசகல நூல்களேயும் ஆராய்ந்துணர்ந்த பெரியோர்கள் சொல்லுகின்றார்கள் ''அன்னேயும்பிதாவும் முன்னறிதெய்வம், தந்தை சொன்மிக்க மந்திரமில்லே, தாயிற்சிறந்தொரு கோயிலுமில்லே'' என்னும் முதுமொழிகளேத்தான் நீ கேட்டதின்றே? ஆதலால் எனது துயரந்தீரும்படியாகயான் சொல்லுகின்ற புத்தியைக்கேளென்று பலவாறு துக்கித்துக் குறையிரந்து நின்றனள்.

அவளே வல்லாளன்பார்த்து அம்மையே! கருபத்திற் கருவாகிவளர்கின்ற காலத்திலும், அதினின்றும்வெளிக்கொண்டு உருவாகிவளர்கின்ற காலத்திலும், சகல வான்மநோடிகட்கும் உயிர்க்குயிராகி இருவினேயின்படி அவ்வவர்கட்குள்ள போகங்களே யூட்டித் தந்தையுந்தாயுமாயிருந்து பாதுகாக்கவல்லகர்த்தரெவரோ அவரே இவ்வுலகத்தில் எனக்குரிய தாய்தந்தையன்றி மற்றைய நீங்களா என்பொருட்டு இரக்கங்கொண்டாளத்தக்கவர்கள் ஒருவர்க்கொருவர் இடையூறுநீக்குவதும் ஒருவர்க்கொருவர் நன்மை செய்வதும் அக்கடவுள் கிருபையைக் கொண்டன்றித் தங்கள் தங்கள் வல்லபத்தாலு மாவதுண்டோ? அவ் வவர்கள்செய்த பாவபுண்ணியங்களே அவ்வவர்களே அனுபவிக்கவேண்டுவதன்றி மற்றையராற் போக்கவுங் காக்கவுங் கூடுமோ? புத்திரர்கள் தங்கள் தாய்தந்தையர் அனுமதியின்றித் தரையாளும் அரசனுக் கேவல்புரிவாயின் அவர்கள் அத் தாய்தந்தையர் ஒறுக்கவல்லரோ? அவ்வா றொறுத்துத் தாங்களுயிர்பெற்று வாழினும் அரசன்பணிக்கு மெனிவுசெய்தமையால் அவனுணேயிற் றப்பிப்பிழைப்பதுண்டோ? சிவபெருமானே கடைக்கண்பார்வை கிடைக்கப்பேராகின்றதாவென்று சமயம்பார்த்திருக்குந்தக்க பேரருளேயுடைய விநாயகமூர்த்தி யாலயத்தைத்தள்ளி என்னேயுந் தன்பப்படுத்தி, என்சுவாமியினுடையதிருவுருவத்தையுந் தன்கையாலெடுத் தெறிந்ததனுலே அவனுக்கு நீங்காத்தொழுநோய்வந்து நேர்ந்தது, இவ்வியாதியை இச்சன்மத்தி லநுபவிப்பதல்லாமல் மறுசன்மத்தினுஞ்சிறிதுகாள் அநுபவித்திருப்பான்.

அஃதெவ்வாறெனில்'நீ மறுசன்மத்தில் வல்லவ ராஜனுடைய மனேவியாகிக் கமலேயென்னும் பெயரை வகித்திருப்பாய் அப்போது உன்புருடனுகிய கல்யாணன் இவ்வியா தியோடும் உன் புத்திரனுக அவதரித்துத் தக்கனென்னும் பெயர்பெற்றுத் தன்பப்படுவான், அக்காலத்துஅவன் தந்தையாகிய வல்லவராசன் மனவருத்தங்கொண்டு பன்னிரண்டு வயதுவரையில் அவ்வியாதி தீரத்தக்க பரிகாரங்கள் அளவற்றதாகச் செய்வான், அவ்வாறுசெய்தும் அது

தீராமையை நோக்கிப் பின்னர் அவ்வரசனுக்குக் கோபமுண்டாகும், அப்போது உன்னையு மவனையுந் தீரத்திவிடுவான். பின்னர் நீங்கள் முற்கல முனிவராலே நன்மைப் பெறுவீர்கள் போவென்று சொல்லி யனுப்பிவிட்டான் இத்தமதி இவ்வார்த்தைகளோக்கேட்டு, அவன் மனைதிடங்கொண்டு பேசுவதைத் தடுக்கக்கூடாமல் தன்வீட்டிற்சென்று சேர்த்தனள் இப்பால் வல்லாளனும் மீளவும் குறைவற்ற அன்போடு விநாயக மூர்த்தியைப் பூசைசெய்து கொண்டிருந்தான். அவனுறுதிக்கு விநாயகக்கடவுள் சந்தோஷங்கொண்டுதேவ கணங்களைக் கூவி நமதன்பனைய வல்லாளனை இங்ஙன மழைத்துவரக் கடவீர்களென்ன, அவ்வாறே தேவகணங்கள் விமானத்தைக் கொண்டுபோய் வல்லாள னிருக்குமிடத்தில் நிறுத்தினர்கள் அவ்விமானத்தை அவன்பார்த்துக் கணேசமூர்த்தியினுடைய திருவருட்குயான் பாத்திரனவனென்று துதித்துச் சாஷ்டாங்கமாகச் சேவித்து இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி நின்றான் தேவகணங்கள் அவ்வல்லாளனைப் பார்த்துச் சர்வலோகமையுள்ள மகாதவசிரேஷ்டனே! விநாயகக் கடவுளுடைய கட்டளையின்படி விமானங்கொண்டுவந்தோம். நீ இதன்மேல் ஆரோகணஞ்செய்யவேண்டுமென்று சொல்ல, அவ்வாறே வல்லாளன் ஆனந்த பரவசனுகியேயினன். தேவகணங்கள் அர்த்தரத்துதி முழங்கினர்கள், சித்தர்கள் சக்கிரவட்டக்குடை பிடித்தார்கள் கருடர்கள் வெண்சாமரை வீசினர்கள் கின்னரர் ஆலவட்டமெடுத்தார்கள் தேவாகள் புட்பவருடம் பொழிந்தார்கள். அரம்பையர் நாட்டிய மாடினர்கள் கந்தருவர் சங்கீதம் பாடினர்கள். முனிவர்கள் இருபக்கங்களிலும் நெருங்கினர்கள். அந்தணர்கள் வேதாகமங்களாற் துதித்தார்கள்.

இவ்வாறு வரிசைவரிசையாகப பலபரிசனங்கள் புடைசூழ்ந்துவரச் சகல சம்பிரமத்துடன் வல்லாளன் ஆகாய மார்க்கமாகச் சென்று விநாயக லோகத்திற்சென்று, இகலோக பரலோக விச்சைகளெலாமுதறுத்து, இந்திரன் முதலிய தேவர்கட்குங் கிடைத்தற்கு அருமையதாகி எக்காலத்தும் இராப்பகலென்பதின்றி ஆதிபௌதீக மத்தியம் அளவிடப் படாதோங்கிய நிரந்தர போகத்தைப் புசித்து, போத வாதனையை யொழித்து கணேசமூர்த்தியினுடைய திவ்வியசரணார விந்தங்களில் இரண்டறக் கலந்து வாழ்ந்தனன். இவ்வற்புதங்களனைத்தையும் அந் நகரத்துள்ளோர்கள் கண் கண்டு மனங்களித்து அங்கு மூர்த்திகரித்திருக்கின்ற விநாயகக்கடவுளுக்குச் சிறந்த சிராபியைக்கொண்டு ஆலயங்கட்டுவித்து அந்தணர்களைக் கொண்டு

காலங்க டவறுமல் பூசனைசெய்வித்து, திருவிழாக்கள் முதலியவை களுஞ் சிறக்கச்செய்தார்கள். விநாயகசதுர்த்திதோறுஞ்சகலசனங் களும் வந்து பூசனைசெய்து வேண்டிய வரங்களைப்பெற்று வாழ்ந் திருந்தார்கள். வல்லாளனுக்கு எல்லா வேதகணங்களும்கூடி அத்தி னமே முத்திகொடுத்தருளிய விநாயகமூர்த்திக்குச் சகலமான டெரி யோர்களும் வல்லாள கணேசரென்று திருநாமந்தரித்துத் துதித் தார்கள். பின்னர்த் தொழுநோய்கொண்டு தன்பப்படுகின்ற கல் யாணன் அச்சனனமுழுவதுமிக்க துன்பத்தை யடைந்து சிலகாட் சென்றபின்பு அவன் மனைவியாகிய இந்துமதியானவள் அவனுக்கு முன்னமே மற்றொருசனனமெடுத்து கமலியென்னும் பெயரைவகி த்துவல்லவராசனுக்கு மனைவியாயிருந்த, அவளிடத்தில் அங்கோயு டன்புத்திரனுயவதரித்துத் தக்கனென்னும் பெயர்பெற்றுத் தன்புற் றிருக்குங்காலியில் தன்தாயாகிய கமலி முற்சனனத்தில்மனைவியாக விருந்து அளவற்ற தருமாதிகளைச்செய்தபலத்தினுலும், அப்போது தன்குமாரனுயிருந்த வல்லாளன் விநாயகபூசைசெய்து முத்தியடை ந்தமகிமையினுலும் முற்கலமுனிவர்மீது படிந்துவந்த காற்றினல் அவன் தொழுநோய் முதலியனவந்தீர்ந்து, ஒரு பிராமணனல் விநா யகமூர்த்தியினுடைய அட்டாக்ஷர மந்திரத்தை உபதேசிக்கப் பெ ற்றுக் கணேசமூர்த்தியைத் தரிசித்து அவர் பெருங்கருணையாற் பின்னர் முற்கலமுனிவருடைய திருவடிகளை யடைந்து அவரால் ஏகாக்ஷரமந்திரத்தையு முபதேசிக்கப்பெற்றுச் சுகமுற்றிருந்தானென் று விசுவாமித்திரமுனிவர் வீமராசனுக்குத் திருவாய்மலர்ந்தரு ளினர்.

வல்லாளன் முத்தியடைந்தபடலம் முற்றிற்று.

தக்கனரசாட்சிபெற்ற படலம்.

அவர்பெருங் கருணைப் பேற்று லத்தகு தக்கனென்பான்
றவகிறை முனிவன் பாதஞ் சார்ந்துபல் பவமுக் தீர்க்குஞ்
சிவமலி மனுவும் பெற்றுன் றெவ்வடி வேலோ யன்ன
னவனிகாவலனுய் வாழ்ந்த வடைவுமீங் குரைத்துங் கேண்மோ.

அழகிய தண்ணளியையுடைய குணக்குன்றீர்! விநாயக மூர்த் தியை வல்லாளனுபாசித்து முத்தியடைந்த வரலாற்றைச் சொன்

னேம். இப்பால் வீமராசனுபாசித்த சிறத்தையுஞ் சொல்லுவோங் கேட்பீராக, அவ்வீமராசன் விசுவாமித்திர முனிவரைப் பணிந்தெழுந்து சுவாமீ! தகசுன் முற்கலமுனிவரால் உபதேசம் பெற்றபின்னர் எவ்வாறுயினன், அதனையுந் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க விசுவாமித்திரர் சொல்லுவார் அரசனே! எல்லாப் பாக்கியங்களையுந் தரத்தக்க ஏகாக்ஷரமந்திரத்தை யுபதேசிக்க முற்கலமுனிவரைத் தக்கன் மிக்க அன்புடனே பூசைசெய்துவிடை பெற்றுத் தானும் தனது தாயும் அவ்விடத்தினின்று நீங்கிக்கவுண்டிய நகரத்தின் சமீபமான ஓர் குளிர்ந்த நந்தவனத்தின்கணுள்ள தடாகக்கரையில் நிவ்வியமாகியும் புராதனமாகியும் ஓர் விநாயக ராலய மிருக்கக்கண்டு அவ்வாலயத்தை யடைந்து கணேசமூர்த்தியினுடைய திருவடிகளைத் தியானித்து முற்கலமுனிவரா லுபதேசிக்கப்பெற்ற ஏகாக்ஷர மந்திரத்தைப் பன்னிரண்டு வருடம் வரையிற் செபித்து, பின்னர்த் திருமஞ்சனம், புட்பம், சந்தனம், தூபதீபநைவேத்திய முதலிய திரவியங்களைச் சேகரித்து, அவ்வாலயத்திலெழுந்தருளி யிருக்கின்ற விநாயக மூர்த்தியை இருபத்தொரு நாள் பூசித்தான், இருபத்தோராநா ளிரவில் நாலாஞ் சாமத்தில், அத்தக்கனுடைய சொர்ப்பனத்தில் ஒருமதயானையானது அதன்று திக்கையாற் பூமாலை கொண்டுவந்து தன்கழுத்திலிட்டு, மீளவுந்தன் னையெடுத்துத் தன்முதுகில்வைத்துக்கொண்டு, ஒருபட்டணத்திற்கூட்கொண்டுபோவதாகக் கண்டு நித்திரைவிட்டெழுந்து, மறுநாளுதயத்திற் தனது நித்தியநியமங்களை நிறைவேற்றிக்கொண்டு, தன்தாயாகிய கமலையைச் சேவித்துத் தான்கண்ட சொர்ப்பனத்தைச் சொன்னன், அவளதைக்கேட்டுச் சந்தோஷித்து அப்பா நமது சிறுமையாவும் இன்றொழிந்தது, நீ இப்போதே அவனியாளத்தக்க அரசனுவையென்று சொல்லி, இருவருமனமகிழ்ச்சியடைந்து முனபோலவே விநாயக மந்திரத்தைத் தியானித்துக்கொண் டிருந்தார்கள். இவர்களிவ்வாறிருக்க அக்கவுண்டினிய நகரை அரசாக்ஷிசெய்துவந்த சந்திரசேனமகாராசன் அற்பாயுத்தினம் ஓர் காரணமுமின்றிஇறந்து போயினன்.

என்னருயி ரனையாயெளி நிருகண்மணி யனையாய்
மன்னுபுவி தாங்கும்பொறை மாற்றிச் சுரருலகம்
பொன்னுர் திணிதோள்வெஃகிய புக்கரையனே நீத்தா
யன்னுவிது தருமோவிது தகுமோவமிழ் தனையாய்.

கொழுகொம்பறு கொடிபோன்மிகு குளிர்நீரறு கயல்போ
லிழுதங்கறு சுடர்போலொளி யெல்லேயறு காள்மீபான்
முழுதுந்துயர் பெருகுங்கடன் முழுகும்படி யெனைநீத்
தொழுகுங்குழ லரமாதரை யுற்றுயிது தகுமோ.

வேள்வித்தழ லெதிரோம்படை மெய்யோரிது காறும்
வாழ்வித்தனை யிப்போதுநல் வழிபாட்டி னுள் யாது
தாழ்வித்தனெ னடியேனது தகவுண்டெனி னுரையாயய்
சூழ்வித்தக வென்பாலிடர் சூழ்வித்தனை தகுமோ,

அங்காளறு மன்போடலர் மனதோவகல் வுற்ற
திங்காளது போலேயய லேருற்றிலை நின்ரு
யென்னேதுயர் வேளென்னுட லின்பார்கர வருடா
யொன்னரிடை யுறுபாவனை யுற்றுயுரு காமே

ஆவாவினி யென்செய்குது மந்தோவென விவ்வா
றேவாதுரை மொழிவாள்விழி யுறைசிந்திட வருகித்
தீவாய்விழு தளிர்போலெளி நீரத்தனு வேருய்க்
காவாதுள மானம்படி கணவன்மிசை விழுவாள்.

முகமெற்றுவ டலையெற்றுவண் முருகார்கர மலராற்
றகவெற்றுவள் கனிவாயிரு தனமுங்குழை வெய்த
மிகவெற்றுவள் வயிறெற்றுவண் மின்னேப்பொதி முகிலி
லுருமைக்குழல் பொதியத்தளி ருருவக்துவ ளுற்றுள்.

உடனே அவன் மனைவியாகிய சுலபையென்பவள் மிகுந்தகய ரங்கொண்டுபுலம்புவாள். என்னுயிருக் கொப்பானவரே ! என்கண் மணிகட் கினையானவரே ! அரசர்க்கரசரே ! இப்பூவுலகத்தையாள் வதைவிட்டுச் சுவர்க்கவுலகத்தை யாளுநிமித்தம் என்னைக் கைவிட் டீரோ ? தேவாமிர்தத்தினுஞ் சிறக்க என் பிராணநாயகா ! இது உமக்குத் தருமமா? கொழு கொம்பற்ற கொடிபோலவும், குளிர் ந்த சலத்தினின்று நீங்கியகயல்போலவும், தைலமில்லாத தீபம்போ லவும், சூரியவொளியில்லாத காள் போலவும் என்னை முழுமையுங் துக்கசாகரத்தின் மூழ்கும்படி விடுத்து நீர் தெய்வ மகளிரோடுஞ் சேர்ந்தீரோ, இது நீதிதானே நானும்மை வேள்வித் தீயின் முன் னர் மாலையிட்டகாள்முதல் இதுகாரும் எனக்கொரு குறைவு வரா மற் காத்துவந்த உமக்கு யான்செய்துவந்த வழிபாடுகளில் இப்போ தென்ன தாழ்ச்சியினைச் செய்தேன், அப்படி யேதேனு முண்

யின் அதனை வாய்விட்டுப் பேசாமல் என்னைப் பலவிடர்கள் சூழும் படி விடுத்தீரே, இஃ தமக்குத் தகுதா ? ஐயையோ ! இனிஎன்ன செய்யப்போகின்றேன். தெய்வமேயென்று நீயில் விழுந்தசெந்தனீர் போல வேற்றுருவாகி விழிகளினின்றும் நீர்த்தாரைகள் பெருகத் தக்கதாய்ப் புலம்பிப் புருடன்மேல் விழுந்துமுகத்தை மோந்திக்கொ ண்டும், தலையை யிடித்துக்கொண்டும், வாயி லறைந்துகொண்டும், தனங்கள் குழையும்படி மார்பிலறைந்துகொண்டும், கைகளை நெரித் துக்கொண்டும், வயிற்றைப் பிசைந்துகொண்டும், இவ்வாறு பதை பதைத்துப் பூமியில் வீழ்ந்து புரண்டு புரண்டு அலரி யலறி, என்பு ருஷகிகாமனியே ! அருவமாயாவது தோற்றிவிசனப்படவேண்டா மென்று ஓராறுதல் சொல்லீரோ. என்னுசைக் கணவரே ! என் பி ராணவல்லபா வென்று கதறிக்கொண் டிருந்தாள். அவளோடு அமைச்சர் முதலான சகல சனங்களும் மிருந்த துயரத்துடன் கெ நேரம் அழுதுக்கொண்டிருக்கையில், புரோகிதன் அவர்களையெல் லாங் கையமர்த்திப் புத்தி கூறுகின்றனன்.

கலங்கவிழித்த நாயகன்போற் கையற்று மிகத்தளர்ந்து
புலம்புரை யெதிர்நோக்கிப் புரோகிதன்மற் றிதுசொன்னன்
புலம்புவதெல் லாதுமக்குப் புணர்சுகத்தைக் குறித்தகன்றே
யுலந்தவனுக் குறுசுகத்தை யுன்னலீர் புலம்பொழிமின்.

காலனுக் கினிச்செய்யுங் காரியத்தைப் புரிமின்கள்
பூவுலகிற் பிறந்தவருட் பொன்றுதா ருளரேயோ
வாவியிறந் தவருடனே யாவியிறந் தவர்யாரே
மேவியவா ஞாலப்பின் விண்ணவரும் வீடுநரே,

செய்தக்க காரியத்தைச் செய்துதனு வீறந்தவரை
யுய்தக்க நற்கதியி லுறுத்துநரே யவர்க் காத்தார்
பொய்தக்க பொருட்கிரங்கிப் புலம்புநர்க ளெஞ்ஞான்று
மெய்தக்க பொருளறியார் வீணென விளம்புதலும்.

உங்களுக்குசுகத்தைக்குறித்து அழுகின்றீர்களேயன்றி, இறந்தவ னடையவேண்டிய சுகத்தையாவரும் நினையாதிருக்கின்றீர்களே, என் வீணிற் புலம்புகின்றீர்கள், இனி நமதரசனுக்குச் செய்யவேண் டிய கருமாதிகளைச்செய்து முடியுங்கள், இப்பூமியிற்பிறந்தவர்களில் யாவரிறவா திருந்தவர்கள். அப்படி இறந்தவர்களோடு கூட இறப் வ ரொருவரு மில்லையே, வாழ் நாள் முடிவானுல் வானுரு

மிறப்பதை யறியீர்களோ ? இறந்தவர்களுக்குச் செய்யத்தக்க கருமங்களைச் செய்து அவர்களை நற்கதியிற் சேர்க்கின்றவர்களே கல்ல அன்பினாவார். அதைகடத்தாமற் பொய்ப்பொருளே யிச் சித்துப் புலம்கின்றவர்கள் மெய்ப்பொருளே யறியாதவீணர்களே யாகும், விரைவில் காரியத்தை நடத்துவதைப் பாருங்கள், நீங்கள் விசனப்படுவதினால் ஆகத்தக்க தொன்றுமில்லையென்று சொல்லித் தேற்ற, அதனாற் சிறிது தயரத்தையாற்றி யிருந்தார்கள்.

இப்பால் இறந்திருக்கின்ற வரசனுக்குப் புத்திரனில்லாமை யால் வுன்னமைச்சர்களாகிய மனோரஞ்சனன் சுமந்து வென்னுமிரு வருள், சுமந்தென்பவன் உங்கள் குலமாயிருத்தலினாலே அக்காத லன் சந்ததியிலிருந்த ஒருவனைக் கொண்டுசகல கருமங்களையும் நடப் பித்துத் தகனஞ் செய்தார்கள். பின்னர்ச்சுலபைஸ்நானஞ் செய்து வேப்பிலையருந்தி அரண்மனைக்குட் சென்று, தர்ப்பணுதிகளை முடி த்துத் தினக்கிரியைகளைப் பதின்மூன்று நாள் வரையிற்செய்துசகல காரியங்களையு முடித்து பின்பு அமைச்சர், புரோகிதர், சோதிடர், பிராமணர்மற்று மந்திரருத்துள்ள காரியகாரர் முதலியோரை ஒற்ற ரைவிட்டு வரவழைத்து, நம்மைச் சத்திருக்கள் நெருங்காத வண் ணம் இனி இப்பூமியைத் தாங்கும் புயபல பராக்கிரமத்தையுடைய ஓரரசனை எற்படுத்தக் கடவீர்களென் றுக்கியாபித்தாள். அதை யவ்வமைச்சர் முதலாயினோர் கேட்டு ஆலோசித்திருக்கின்ற சமய த்தில் முற்கல முனிவர் அவ்விடத்தில் வந்து அச்சபையிலிருக்கின் றவர்களை நோக்கிப் பட்டத்தியானையை அலங்கரித்து அதன்முதிக் கரத்திற் பூமாலை தந்து தனியவிழ்த்தனுப்புங்கள் அது எவனை மாலையிட்டெடுத்துக்கொண்டுவருகின்றதோ அவனையே இவ்வுல காள்வதற்கான அரசராக்கிக் கொள்வோமென்று கிருபையோடுந் திருவாய்மலர்ந் தெழுந்தருளினர் அதனைச் செவியுற்ற யாவரும் வி யப்படைந்து சகனமென்கின்ற பட்டத்தியானையை அலங்கரித்து சுலபைக் கெதிராக நடத்திவந்து நிறுத்த, அவள் தன் கணவன் மார்பிற் றரித்திருந்த பொற்றுமரை மாலையை யெடுத்துவந்து அத் தயானையின் முதிக்கரத்திற் றந்து இவ்விராச்சியத்தை யாளத்தக்க ஓரரசனைகொண்டு வருவையென் றுக்கியாபித்தனள். அதனை யம் மதயானை செவியுற்று மலைகடப்பதுபோலத் தான் முன்னதாக நட ப்ப, அதன்பின்னர் அமைச்சர் முதலான சகல சனங்களும் முன் னர்த் தவஞ்செய்ததற்குரியதானமொன்றைக் காணுமாறு பிரமதே

வனல் விட்ட தருப்பைச் சக்கரத்தின் பின் சென்ற முனிவர் டம் போலத் தம்மையாளற்குரிய வோரரசனைக் காணுமாறு அதிக விழைவோடுந் தொடர்ந்து சென்றார்கள்.

அந்த யானையுந் தங்கள் கணவனேயன்றி மற்றையெவ்வகைப்பட்ட பேரழகுள்ளோராய் எதிர்வந்திருக்கினும் அவர்கள் மேற் சிறிதேனுங் கண்ணேக்கஞ் செலுத்தாத கற்பின் மாதர்களைப்போல அரசாள்வதை விழைந்து, பற்பலர் தன்னெதிரில் வந்து நிற்கினும் அவர்களை யெல்லாஞ் சர்ப்பத்தையொத்துச் ரீறிவிலக்கிக்கொண்டு சுடந்தது, அவ்வற்புதத்தை யாவருங்கண்டதிசயித்து இந்த யானை மஹா பராக்கிரமசாலியாகிய மன்னவனையே தேடிக்கொண்டு வருமென்று நிச்சயித்துச் சந்தோஷங்கொண்டு விதிகடோறுந் தண்ணீர் தெளித்துத் துகளடக்கிப் பரிமளமிருந்த புட்பச்சரங்களாற் றோரண முதலிவைகளைக்கட்டி அலங்கரித்தார்கள். இப்பாலந்த யானையானது கோட்டைவாயிலி னின்று நீங்கி வீதி யெல்லாஞ் சுடந்து, பட்டணத்திற்கு வெளியில் சென்று வனத்திற்புகுந்து முற்கல முனிவருடைய ஆசிர்மத்திற்குச் சமீபமாகவசித்திருக்கின்ற தக்கன ருகிற் சென்று, அவன் கழுத்திற் பொற்றுமரை மாலையைத் தரித்தது.

மூவர் பெருமா னெனையாண்ட முக்கட் பெருமா னரியாதி
தேவர் பெருமா னெருகோட்டுச் செல்வப் பெருமா னடியார்கட்
கியாவை யரிய விருந்தாங்கே யிருந்து தக்க னரசுரிமை
மேவு மெனின்வேல் கரத்தேந்தும் வீமமேலும் விளம்புதுங்கேள்.

வீமராசனே ! இத்தக்கன் தானிருந்த விடத்தே யிருந்து இத்தன்மைத்தாகிய அரசுரிமையைப் பெற்றானையின், மூவர்பெருமானுகியும் ,என்னையாட்கொண்ட முக்கட்பெருமானுகியும், திருமான் முதலிய தேவர்பெருமானுகியும், ஒற்றைக்கொம்பேந்தியசெல்வப் பெருமானுகிய மிருக்கின்ற விநாயகபெருமானைப் பூசைசெய்கின்ற அடியார்க்குக் கிடைத்தற்கரிய பாக்கியங்க ளெவ்வுலகத்திலிருக்கின்றன. இப்பால் அத்தக்கனுக்கு மாலையிட்டவுடனே தேவர்கள் அந்த ரதுந்துபி முழங்கினர்கள் ஆகாயத்தில் புட்பவருஷம் வருஷித்தது யானையின் பின்னர் வந்த சகல பரிசனங்களும் அவ்வவர் கண்மனத்திருந்த கவலைகளையொழித்து ஆனந்தங்கொண்டார்கள். அமைச்சர் முதலாயினேர் இராசயோக்கியமான ஆடையாபரணாதி

களே யெடுத்தணிந்தார்கள். அந்தணர்களெல்லாம் ஆசீர்வாதஞ் செய்து இருபுறத்திலுமிருந்தார்கள். சேனைபதிகள் தூதர், சாரணர் முதலாயினோர் வீரகண்டாமணியைத் தரித்திருக்கின்ற பாதங்களில் வணங்கி யேவலுக் கெதிர்ப்பார்த்தார்கள். இவ்வித சம்பிரமங்களோடும் தக்கனெழுந்து அங்குத் திருக்கோயில்கொண்டு வீற்றிருக்கின்ற கணேசமூர்த்தியை அட்டாங்கமாகச்சேவித்து, அருகிலிருக்கின்ற அந்தணர்கட் கெல்லாம் பற்பல திரவியங்களோடு தானஞ்செய்து தன்னருமைத் தாயை நவரத்தின கசிதமாயுள்ள சொன்னச் சிவிகையிலேற்றித் தான்பட்டத்துயானையின்மேல் உதயகால சூரியன்போல ஆரோகணித்து, அமைச்சர்க ளிருமருங்கிலும் அசுவங்களிலேறிவரவும், தாசிகள் நாட்டியஞ்செய்து நடக்கவும் சமுத்திர கோஷ்டம் போலப் பேரிகை முதலான வாத்தியங்கள் முழங்கவும், இன்னுமிவைமுதலான சகல ஆடம்பரங்களோடு மலியினுச்சியி லுதயமாகின்ற பூரணசந்திரனைப்போல யானைமே லோங்கியிருக்கின்றவெண்குடை நீழலிலிருந்து அதனை மெல்லமெல்ல நடாத்தப் பட்டணத்துள் தூசைத்து பவனிவந்து, அரண்மனையிற் சென்று சொர்ன்னத்தினுற்செய்து சிரோரத்தினங்களா லிழைத்திருக்கின்ற சிங்காதனத்தின்மீதிருந்து, மந்திரத்தலிவர்களை நோக்கிக் ஞளிர்ந்த சொற்களால் அருகிலழைத்து, என்னையாட் கொண்டருளிய முற்கலமுனிவரைச்சிலை சிறப்போடும் இங்ஙனமழைத்துவரக் கடவீர்களென்று கட்டளையிட்டான்.

அவர்கள் அவ்வாறே விரைந்துசென்று தவசிரேஷ்டராகிய முற்கல முனிவரைத் தேரிலேற்றி, ஆடல் பாடல் வாத்திய முதலிய பலமுழக்கங்களுடனே அந்தகரத்துள்ளாயாவரும் ஆனந்தங்கொள்ளத்தக்கதாக அரண்மனைக்குள்ளாக யெழுந்தருளச் செய்தார்கள். உடனே தக்கனெதிர்சென்றழைத்து அளவளாவிய அன்போடுஞ்சிறந்த ஆசனத்தின்மீதிருத்தித் தேய்வையூசி, அகுதை சாத்தி, மந்திரமலரா ருரூச்சித்துத் தூபதீப நைவேத்திய சோடசவுபசாரங்களைச்செய்து, நவரத்தினங்களிழைத்த பொற்றட்டில் ஆடையாபரணங்களை நிறைத்து கனிவர்க்கங்களைப் பரப்பி, முனிபுங்கவர்க் கெதிரில் வைத்து அஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, பலபரிசனங்கள் தன்னைப் புடைசூழ்ந்திருக்க நின்று முற்கலமுனிவரைப்பார்த்து, அருட்கடலே! தேவரீருடைய கருணகடாட்சத்தினுல் அடியேன் இராஜரீகத்தினைப்பெற்றேன், சுவாமிகளுடைய அத்தத்தை அடியேன் முடிமீ

துவைத்த ஆசீர்வதிக்க வேண்டுமென்று மிகுந்த அன்போடு இரு
கரங்களையுங் கூப்பிச் சிரங்கவிழ்த்து நின்றனன், அதற்குக் கிருபா
கரமூர்த்தியாகிய முற்கலமுனிவர்சந்தோஷித்து, அவ்வாறேதமது
கரங்களை அவன்முடிமீதுவைத்து, உனது நற்குணத்திற்கு யாவ
ரும் பகையாக மாட்டார்களென்று திருவாய்மலர்ந்து சகல திரவி
யங்களும்உன்வசத்தாகி,நீ அளவற்ற சுகந்தோஷத்தோடுவாழ்ந்திருக்
கக்கடவையென்று ஆசீர்வதித்து ஓராசனத்திலிருக்கச்செய்து
மிக்க பேருபகாரமோடும் இதனைப்போதிப்பாராயினர். அன்பனே!
இக்கடல்சூழ்ந்த உலகத்துள்ள மனுஷியர்களுக்குணர்த்தியிருக்கின்
ற வருஞ்சிர தருமங்கள் பலவாக விருக்கின்றன. அவைகளுள்
உனக்கு முக்கியமாக உணர்த்த வேண்டுவனவாகிய அரசநீதிகளைச்
சொல்லுவாங் கேட்பாயாக, அருந்தெய்வமாக ஐந்தாழிசைக்குமுத
லாகத் துயிலொழித்து, அமளியைவிட்டு நீங்கி, மற்றோரிடத்திலி
ருந்து சரீரத்தைச் சுத்திசெய்து, கொடிதாகிய வல்வினைக்கூட்டங்
களைப் பொடி படுத்தவல்ல அழகிய திருவெண்ணீறு தரிக்கக்கட
வை.

எண்ணிலாகம மறைக்கெலா முடிவென் விருந்தி மிறைதன்னைக்
கண்ணு ணுதிவிண் ணவர்களா யிருந்திடுங் கணேசனை மனமாதி
நண்ணு ணுதகா யகனைநாம் பொருளை நண்ணுபர்க் கருள்வானை
யண்ண லாகிய வகாதியை யனக்கரு பிடையருட் கடலானை.

சகல லோகமு மளித்திடுங் காரணமான தத்துவன் றன்னை
யகலுறுதவிக் கிணங்களே யாயினு மடித்தவர்க் கறப்பானைப்
புகல்விகாயகக் கடவுளைப் புலரியின் வணங்குகின்றே னென்று
மிகல்செய் காதலின் வழுத்திமற் றமரரை வேறுவே றுறகோக்கி.

உரக மாலையான் சுந்தர சேகர னுழுவையி னுரிசூழ்ந்த
பரமன் போழ கினன்பெருங் கருணையன் பண்ணவ ரனைவோர்க்கும்
வரமெலாங்கொடித் தருள்பவன் பார்ப்பதி மணாளனல் வழிவாராப்
புரநி லாவகை யழித்தபுண் ணியன்றனைப் புலரியிற்றொழுகின்றேன்

பெற்ற முத்தியும் பரப்புபெண் ணரசியைப் பிறழுமுக் கண்ணுளைத்
தத்துவத்தினுக் காதிகர ணியைத் தத்துவஞ் கடந்தானைச்
சித்தர் தேவர்க டிதிகொரு மிறைவியைத் திகழ்சமு சாரத்தின்
புத்தி நீங்குமா ருருமும்பார்ப் பதிதனைப் புலரியிற் றொழுகின்றேன்

தொக்கபாவத்தைச் சத்தருக் குழாத்தினைத் தொடர்ந்துசென் றிறப்பானைத்
தக்க பூமகன் மணாளனைப் பாற்கடற் றனித்துயி லமர்வானை .

மிக்க வீரனுய் வேதிய ரிடர்தப வெறுவே முருக்கொண்டு
புக்க மாயனை யிருதிற னிளவலிப் புலியிற் றொழுகின்றேன்

பெருமை தங்குமெண் ணத்தினை யுடையவன் பேணி வொடுகின்ம
மருவு தற்குமு காரண மானவன் மறையுரு வினனித்த
மிருளுந் தானவர் மாயையுந் தரப்பவ னியாவருந் தொழுகேத்தும்
பொருவி லாதபே ரொளிவளர் பரிதியைப் புலியிற் றொழுகின்றேன்

முறைமினிவ்வகை வாழ்கியேயேனைய முடிகொள்வா னவர்தம்மைக்
கறையி லாமுனி வோர்களை யன்பிஞற் கருதுதறத் தொழுகேக்கி
யறையு நரட்கடன் விதிப்படி முடித்தபி னறங்களின் வாழவாமே
நிறையும் வேதிய ரமைச்சரா தியரொடு நிலம்புரப் பதுமாண்பால்.

அதன் பின்னர்க் குருசுவாமியையும், வழிபடுகடவுளையும் மன திற்றியானித்துப் பூமிதேவியைப்பார்த்து, என்தாயே! யானுலாவு கின்றபோதெல்லாம உனது திருமேனியி லெனது பாதம் படுகின்ற பிழைகளைப் பொறுத்தருள வேண்டுமென்று இரந்து துதிசெய்து, பின்னர், விநாயக மூர்த்தியைத் தியானித்து அளவற்ற வேதாகமங் கட்கெல்லா முடிவா யிருக்கின்ற கணேசனே! மனுவாக்குக் காயங் கட் கெட்டாதவனே! உனது திருவடித் தாமரைகட்கு உதயகால வந்தனஞ்செய்கின்றே னென்றும், அரவாபரணனே! சந்திரசேகர னே! திரிபுர தகனனே! உமாபரமேஸ்வரிமஞ்ஞனே! உனது பா தாம்புயங்கட்கு உதயகால வந்தனஞ் செய்கின்றேனென்றும், திரி சேத்திரதாரியே சகல தத்துவகட்கும் ஆதிகாரணியே! பந்த முத் தியாகிய வீரண்டினையும் வினங்க வைத்திருக்கின்ற பார்வதி தேவி யே! உனது சரணார விந்தங்கட்கு உதயகால வந்தனஞ் செய்கின் றேனென்றும், இலக்குமி மணாளனே! திருப்பாற் கடலின்கண் அறி துயில் செய்பவனே! தேவேசுதிரனுக்குச் சகோதரனுகிய உபேந்தி ரனே! உனது சதோருகத் தாள்களுக்கு உதயகால வந்தனஞ் செய் கின்றே னெனறும், சகல கருமங்களையும் வழுவின்றி முடிப்பதற் குக் காரணமாகி யிருக்கின்றவனே! உலகவி நளியையுந் தானவர்செய் கின்ற மாயையினையும் நாசஞ்செய்ய வல்லவனே! யாவருங் கண்டு தொழும்படியான சூரிய பகவானே! உனது உபயபாத மலர்களுக்கு உதயகால வந்தனஞ் செய்கின்றேனென்றும், இவ்வாறு கிரமமாக மற்றைத் தேவர்களையும் முனிவர்களையும் மிகுந்த அன்போடு துதித் துப் பின்னர் காடோறுஞ் செய்துவருகின்ற நித்திய கருமங்களை விதிப்படி முடித்து, அமைச்சர், வேதியர் முதலான வர்களோடு

மிருந்து அரசாட்சி செய்வதே மாட்சிமையாகும் இன்னும் கீயறிந்து கொள் வேண்டியவற்றைப் போதிக்கின்றோம் மைந்தனே! இக்கிரன் முதலிய இரையவர் பதங்களும் அந்தமில் இன்பத்து அழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ச் தோரால் எடுக்கப்பட்ட பொருள் நான்கு அவை, அறம் பொருள்-இன்பம்-வீடு என்பனவாம்.

அவற்றுள் ஒருகாலத்து ஒருபொருளால் ஐம்புல னுகர்தற் சிறப்புடைத்தாகிய இன்பத்தினையும், சிகதையு மொழியுஞ் செல்லா நிருமைத்தாகிய வீட்டினையுந் தருவது அறமும் பொருளுமாகும். அவற்றுள் அறத்துப்பால் மனுமுதலியநூல்களில் கடவுள்வாழ்த்து வான்சிறப்பு-நீத்தார்பெருமை-அறன்வலி யுறுத்தல் இல்வாழ்க்கை-வாழ்க்கைத் துணைநலம் - புதல்வரைப்பெறுதல், அன்புடைமை-விருந்தோம்பல்-செய்ந் நன்றியறிதல்-நடுவுநிலைமை-அடக்கமுடைமை-ஒழுக்கமுடைமை-பிறனில்விழையாமை, பொறையுடைமை- அழுக் காறுமை, வெஃகாமை, புறங்கூறுமை, பயனில்சொல்லாமை தீவினை யச்சம் ஒப்புரவறிதல்-ஈகை-புகழ் என்னும் இருபத்துமூன்று வகுப் பினவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது பொருட்பால் இறைமாட்சி-கல்வி-கல்லாமைகேள்வி அறிவுடைமை-குற்றங்கடிதல், பெரியாரைத் துணைக்கோடல், சிற்றினஞ்சேராமை தெரிந்து செயல்வகை வலியறி தல்-காலமறிதல் இடனறிதல்-தெரிந்து தெளிதல் தெரிந்து வினையா டல்-சுற்றந்தழால்-பொச்சாவாமை செங்கோன்மை - கொடுங்கோன் மை-மடியின்மை- ஆள்வினையுடைமை- ஊக்கமுழியாமை-அமைச்சு-சொல்வன்மை, வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினைசெயல்வகை தூதுமன்னரைச் சேர்ந்தொழுதல் - குறிப்பறிதல் - அவையறிதல்-அவையஞ்சாமை-நாடு அரண்பொருள் செயல்வகை - படைமாட்சி படைச்செருக்கு நட்பு-நட்பாராய்தல் பழமை-தீநட்பு கூடாநட்பு-பேதமை-புல்லறிவாண்மை-இகல், பகைமாட்சி பகைத்திறந்தெளிதல் உட்பகை பெரியாரைப் பிழையாமை-பெண்வழிச்சேறல் - வரைவின் மகளிர்-கள்ளுண்மை-சூது-மருந்து குடிமை-மானம் பெருமை-சான் றாண்மை - பண்புடைமை - நன்றியில்செல்வம் - நாணுடைமை - குடி செயல்வகை - உழவு - நல்குரவு - இரவு - இரவச்சம் - கயமை என் னும் எழுபது வகுப்பினவாகச் சொல்லப் பட்டிருக்கின்றது.

இவற்றுள், கடவுள் வாழ்த்து என்பது "ஒருப்படு மறத்தினுலே யொண்பொரு ளின்பஞ் செமபொற்-பருப்பதம் கடல்போல் வந்து

பயப்படு மதனைக்கேண்மோ-விருப்பொடு வெறுப்பிலாத மிக்கவெண் குணத்தோ டொன்று-பிருப்பவன்யாவனன்னு னிணையடிவனங்கல் வேண்டும்'' என்றருளியபடி, மூவர்க்கு முதலாயுள்ள மூர்த்தியை வாழ்த்துதல் அஃதாவது, விருப்பு வெறுப்பு அகன்று, தன் வயத் தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கை யுணர்வினனுதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களி னீங்குதல், பேரருளுடைமை, முடிவி லாற்றலுடைமை, வரம்பி லின்பமுடைமை என்னும் எண் குணத்தோடு தனக் கொப்புயர்வற் றிருக்கின்ற கடவுள் யாதோ அதன் திருவடிகளே வணங்குவதாம். இத்தலையாய வறத்தினால் மற் றைப் பொருளும் இன்பமும் மலைபோலவும், கடல்போலவும் பெருகி வளரும்.

வான் சிறப்பு என்பது ''அறமுதற் பொருளுலகமலனினையா - னிறுவுதற் கேதுவாய் நிகழு மாமழை - வறுமை யெய்தாவகை வயங்கு வேள்வியை யுறுதரு மங்களா யுஞற்றல வேண்டுமால்'' என் றருளியபடி, அக்கடவுளது அணையால் உலகமும் அதற் குறுதியா கிய அறம் பொரு ளின்பங்களும் நடத்தற் கேதுவாகிய மழையி னது சிறப்பு அஃதாவது, வானம் வழங்காதாயின் அறநெறியால் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகையோடு தானங் கொடுத்த லாகிய இல்லலமும் மனம் பொறிவழிப் போகாது நிற்றற்பொருட் டித் தவஞ் செய்தலாகிய துறவறமுங்கெடுமாதலால், அவ்வானம்வறு மையெய்தாத வண்ணம் வேள்விகளையுந் தருமங்களையுஞ் செய்து வரல் வேண்டும்.

நீத்தார் பெருமை என்பது ''விழுப்பொருணுன்கையும் விளங் கத்தெள்ளுபு- முழுப்பவைம் பொறியையு முனிந்து நீத்தவர்-வழுப் படாமறையவர் மற்றைக் கல்வியோர் - குழுப் புறத்தாதரங் கூர்தல் வேண்டு மால்—நீத்தவராகியோர் செருப் புயிர்த்திடிற் - காத்திடுங் கடவுளுங் கலங்கு மாதலா - லேத்துவதே கடனென்று மைந்தனே - யார்த்தர்கள் பொறப்பெண நவமதித்திடேல்.—குரவரைப் பெரிய ரைக் கூறு மாகம - விரவுறு மறைகளேமேதகும்படி - பரவுதலலதவர் பாங்கர் நிந்தனை - கரவுறுவுளத்தினுங்கருதொணுதலே'' என்றருளிய படி, முற்றக்குறந்த முனிவரது பெருமை அஃதாவது, அறமாதி நான்குபொருள்களையுந் தெரிந்து பஞ்சேந்திரியங்களை நிக்கிரகித்த முனிவர்கள் வேதியர் புலமையோர் என்னும் இக் கூட்டத்தினரி டத்து அன்புகூர்ந்திருத்தல் வேண்டும். இவர்கள் ஒருகாற்கோபித்து

ரமழற்பொறி யுதிர்ப்பாரையின் காத்தருளுகின்ற கடவுளுங் கலக்க மெய்த்தும். ஆதலால், அப்பெரியோர்களே ஏத்துவதேதகடன். அவர் கள் பொறுப்பரென்று அவமதிக்கத்தகாது. குரவர்களையும், பெரி யோர்களையு, வேதாகமங்களையும் மேலாகவெண்ணிப் பரவத்தக்கதே யன்றி ஒளித்தேனும் ஓர் நிந்தனையைக் கருதலாகாது.

அறன் வலியுறுத்தல் என்பது "தேங்குஷிண் போகமுஞ் சிறந்த முத்தியு-மீங்குறு மாக்கமு மினிதாகல்கலா - லோங்கிய வறத்தினையுள முன் மூன்றினும் - பாங்குற நித்தலும் பரிந்து செய்தியால்.—வழுக் கறு மறத்தினை மற்றுச்செய்து மென் - றொழுக்கிடா தொல்லுமும் வகையின்வச்சொல்லு-மழுகெனு முளத்தழுக்காற் வாமுத - லீழுக் கொடு பெருளியு மின்றிம செய்கலே—அன்புறு மறத்தினு லிச்சு, பின்பே-யினமெனத் தக்கதா லேனையின்பெலாந் தின்பமும் பழி யையுந் தோற்று மாதலால்-வனபுறுமறத்தினை மறப்பிற்கேடுறும்." என் றருளியபடி, அம்மேலோரால் உணர்த்தப்பட்ட உறுதிப்பொ ருள் நான்கனுள் அறமானது பொருள் இனபமவிடு என்னு மூன்ற னையுந் தருவதற் கேதுவாதலால் அவனை வலியுறுத்திக் கூறுதல். அஃதாவது, செல்வம்பொருளும் சுவர்க்கலோக வின்பமும் முத்தி விடும் ஆகிய மூனறினையுந் தருவதான அதத்தினை மனம வாக்குக் காயமெனகிற முகாரணத்தானும் ஒன்றுபட்டு நாடோறும் பரிந்து நாடாத்திவரவேண்டும். அதனை கோடதபோது செய்யாது பின்னுற் செய்து மெனக் கருதி நழுவ விடலாகாது. அவ்வாறு விடாமல் உனக்கியன்றமட்டுஞ் செய்து வருகின்ற காலத்திலும், பிறராக்கம் பொறையையும் புலனகண்மேற் செல்லுகின்ற அவாவும், அவையேது வாகப் பிறர்பால் வருந்ம வெகுளியும அது பற்றிவருங் கடுஞ்சொல் லும் ஆகிய நானகனையுங்கடிதது செய்தல் வேண்டும். அறத்தாலடுக் குந இனபமே இன்பமன்றி, மற்றை யின்பங்களெல்லாந் தின்பத் தினையும பழியையுந் தோற்று விக்கும். அதனை மறந்தோர்க்கு உடனே யல்லாக் கேடும வருது உற்பவிக்கும்.

இல் வாழ்க்கை என்பது "பிரமசாரி வனத்து றைவோன் மாணாக் குரவனி தென்புலத்தார் - குரவர் தேவர் விருந்தொக்கல் கோக் கணை யறையோ நிறைதோர்கு-னிரவலாள ருப்பிலர்சுளைப்பிணி யாளர்சன் புதியோர்-வினவு பாலர் சிசுதமது மிசையாரிவரையோம் புகுவோ—வருவாய்க் கியையவாழ்தலுறு மறுவில் கற்பின் மனையாள் போறு · பொருள்யா வளவா மதுலன்றிப் புகழும் பயனு மிகவுண

டாங் - கருதாதெதிரே யிமிலேற்றுச்காமர்கடையு மூறுமதனு-லொரு வரதவளோ டுவப்புறவே யுற்று வாழ்த்த லறனுகும், " என்றருளிய படி, இல் வாழ்க்கை இல்லறத்தோடுங் கூடிவாழ்தல் அஃதாவது, பிரமசாரி - வானப்பிரத்தன் - சந்நியாசி * பிதிரர் - ருவர் - தேவர் - விருபது - ஒக்கல் - பெரியோர் - மறையோர் - இறந்தோர் - ஏற்போர் - உறுப்பில்லார் - பிணியாளர் - விருத்தர் - பாலர் - சிசுகள் - மூத்தோர் என்னு மிவர்களை யோம்பி இல்லற நெறியை வழுவாமற் செய்வதாம்.

வாழ்க்கைத்துணை நலம் என்பது, அவ் வில்வாழ்க்கைக்குத் தினையாகிய இல்லாளது நன்மை அஃதாவது, ஒருவன் ! எய்தும் பொருள்களுள் மனையறத்திற்குத்தக்க நற்குண நற்செய்கைகளை † உடையவளாயிம், தன்னைக்கொண்டவனது வருவரய்க்குத்தக்கவாழக் கையை யுடையவளாயு மிருக்கின்ற இல்லாளின்மேம்பட்ட பொருள் கள் யாவையுளு. அவளால் மேலான பிரயோசனமும் புகழும் உண் டாவதன்றிப் பகைவரெதிரில் இடபத்தைப் போல மனக்கோட்ட மின்றி நடக்கத்தக்க பெருமித நடையும் உண்டாகும் ஆதலால், அத்தன்மைத்தாகிய மனைவியோடு உவப்புற்று வாழ்வதாம்.

புதல்வரைப் பெறுதல் எனபது "எழுமைப் பிறப்புந் தீவினை வந்தெய்தாச் சிறப்புந் தென்புலத்தார் - முழுது முவக்குங் கடன் சால முடிக்கு மாண்பும் பெறுதலினுற் பழுதி றவங்கண் மிகப்புரிந் திம் பயந்து மைந்தர் தமையவர்க்குக் - குழுமு மவையின் முந்தி ருப் வறிவுகொளுத்தல் வேண்டுமால்." என நருளியபடி, அந்த ணர் முதலிய மூவராலும் இயல்பாக இறக்கப்படுங் கடன் மூன்ற னுள் முனிவர் கடனைக்கேள்வியானும், தேவர்கடனை வேள்வியானும், தென்புலத்தார் கடனைப்புதல்வரைப் பெறுதலானும் அல்லது இதுக் கப் படாமையின், அகடன் இறுத்தற் பொருட்டு நன்மக்களைப் பெறுதல். அஃதாவது, புதல்வராளவர் பிறப்பேழின் கண்ணும் பெற்றோர்க்குத் தீவினைவளராது தேய்ததற்குக் காரணமாகிய நல்

---

* பிதிரராவார் படைப்புக்காலத்து அ ளைத் படைக்கப்பட்டதோர் கட வுட் சாதியார். அவர்கிடந் தென்றிசையாகலின் தென்புலத்தா ரென்றுங் கூறுப. † நற்குணங்களாவன திறந்தார்ப் பேணலும், விருந்தயர்தலும் வறி யார் மாட்டருளுடைமையு முதலாயின. நற்செய்கைகளாவன வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்கள் அறிந்து கடைப்பிடித்தலும், அட்டிற் றொழில் வன் மையும், ஒப்புரவு செய்தலு முதலாயின.

வினைகளையுந் தென்புலத்தார்க் குரிய கடன்களைச் சாலமுடிக்குமாண் பினையும் உடையோ ராதலால் குற்றமற்ற தவங்களைச் செய்தேனும் புதல்வரைப பெறவேண்டும். பின்னர், அப் புதல்வரைப் பெற்றோர் அவையத்தின்கண் அவரினுமிக்கிருக்குமாறு கல்வியுடையராக்கல் வேண்டும்.

அன்புடைமை என்பது " இடனும்பொருளு மேவலரு மிருக் கும் பயனென்னேவந்த - வுடலின் பயனுகிய வன்பையுறுதலிடத்து நொதுமலரும் - படர்செய் பகையு முறவாக்கும் பற்று மளிக்குமனை மைந்தர் - தொடர்பின் வளர்க்குமனபதலுற் சோர்ந்து மன்பின் வழு வற்க " என்றருளியபடி. இல்லறம் இனிது நடாத்தலும் பிறவயிர் கண்மேல் அருள்பிறத்தலுமாம். அஃதாவது, யாக்கையகத்தின்கு ணின்று இல்லறத்திற் குறுப்பாகிய அன்புடைய ரல்லாதார்க்குப் புறத்தின்கண் இடமும் பொருளும் ஏவல் செய்வாருமான உறுப் புக்களெல்லாம் அவறறஞ்செய்வதற்கண் என்ன உதவியைச் செய் யும. ஒருவன் சோர்வுற்ற காலத்தும் அவ் வன்பின் வழுவாதிருத் தல் வேண்டும் அவ்வா றிருந்தாலுல் நொதுமலும் பகையும் உற வாகும். அளவிறந்த சிறப்பெய்தும். மேற்கூறிய வாழ்க்கைத்துணை யையும் மைந்தரையுந் தொடர்பின் வளாத்து வரும்.

விருந்தோம்பல் என்பது "வந்த விருந்துமலராத வதனமோக்கு முன்குழையு - மந்தவடைவா லகத் தன்பை யலர்ந்த முகத்தலில் வெளிப்படுத்திச் - சுருத மணிவாயினிதோன்றச் சற்றும்வஞ்சங் கல வாமே யுந்துஞ் சுவையி மொழியென்று முரைத்தல்வேண்டும் பயன் வேண்டின்." என்றருளியபடி, இருவகை * விருந்தினரையும் பேணி அவர்க்குபசாரஞ் செய்தல் அஃதாவது, பயன்வேண்டினுர் விருந்தி னரைச் சேய்மையிற்கண்டுழி, இன்முகமுமுய் அவர் பற்றிநண்ணியவுழி இன்சொல்லும், பின்னர் உடன்பட்டவுழி வஞ்சங்கலவாத நன்ருற் றலும், இன்றி யமையாத இம் மூன்றனுள், முதற்கண் இன்முகம் வேண்டும் அஃது இல்லாவிடின் மோந்துழியலலது வாடாத அனி ச்சம் பூவினும்விருந்தினா மெலியராதலால் அவர் சேய்மைக் கண்ணே வாடி நீங்குவர்.

செய்ந்நன்றி யறிதல் என்பது " பயன்கா ரணத்தைக் குறியா மற் பறிக்கு காலத்தாற்செய்த - நயஞ்சேர்நன்றி நிறிதேனு நாடினு

* விருந்தினர் என்பது புதியராய்வந்தவர். அவர் பண்டறிவுண்மையிற் குறிக்கவர்தாரும் அஃதின்மையிற்குறியாது வந்தவரும் என இருவகையர்.

தற்கோ ரளவில்லைப் - பயன்காரணததைக் குறித்தினையும் பதத்திற் புரிந்த நன்றியையும் - வியன்பூதலத்திற் பெரிதாக விரும்பி மதித்தல் வேண்டுமால்.—நன்றிபுரிந்தோர் மறவொருகானவைகள் புரிந்தாயிடினு - மொன்று முதலியே மரிக்திட் டேரம்பா நவையை மறத்தவரை - யென்று மறவா திருந்திடுக விகப்பிற் கருவான்மறை யோரைக் - கொன்று தீரிவோர் பிழைதிறுகுறமெனவே பிழை பெருகும்'' என்றருளியபடி, தனக்குப் பிறர்செய்த நனறியை மற வாமை அஃதாவது, இவர்க்கு இது செய்பின் இன்னது பயக்கு மென்று ஆராய்தலில்லாமல் ஒருவனுக்கு இறந்திவந்த எல்லைக்கண் செய்த உபகாரந் தண்ணே நோக்கச் சிறிதாயிருந்ததாயினும் அக்கா லத்தைநோக்க அதற்கோரளவில்லை. அல்லது பயனிலனுங் காரணத்காலேனும் வருந்தும் மகச்திராசெய்த உதவியாயின், அதனை உலகத்திலும் பெரிதாகவிருப்பி மதிச்சல் வற்போராதகடமையாம், மேலும் தமக்கு முன்னெரு நன்மை செய்தவர் பின் கெரன்ரு லொத்த இன்னதவற்றைச செய்தாராயினும், அவர்முன் செய்த நன்மையை மதித்துப் பின்செய்த தீமையைச் செய்தபொழுதே மறத்தல்வேண்டு இல்லையாயின், அந்தணரைக் கொன்றபிழையி னும் மேலானபிழை மலேபோலப் பெருகும்.

நடுவு நிலைமை என்பது ''அக்க மொடுமைக் தரையளிக்கு மவ றற்றை மருமான்வழிக்குரிலே - யாக்குமனைய நடுநிலையை யடுத்தோர் மூதன்மூவரினெப்ப - னெக்குமதசெய் யாதிரா பபி னுரித்துக் கருவி னமைத்தபயன்-போக்கிபிடையே பயன்வேறு பொருநகா பொருந் தும் பெருபபிழையே.'' என்றருளியபடி, அறத்தின் வழுவாகு லப் பகிற்கு நிலைமை, அஃதாவது, பகை நொதுமல நண்பு என்னு மிம் மூன்று பகுதியினுஞ் சமனுக நின்று நோக்கு நிலைமை யுடையார்க் குச் செல்வப்பேறும் மக்கட்பேறும் உண்டாகும். இவ்விரண்டுபே றும் அம்மக்கள் வழியுள்ளார்க்கும் அழிவின்றி நிலைத்திருக்கும். அந்நிலைபையினை யடையாராயின், அஃது அவர்க்குத் தீவினையாற் கேடும், நல்வினையாற் பெருக்கமுமாக மூன்னர் அமைத்திருக்கின்ற பயன்களைப் போக்கி இடையில் வேறுவேறான பெரும் பிழைகள் வந்து பொருந்தும்.

அடக்க முடைமை என்பது ''இல்லிளிருந்தே யைம்பொறியு மெல்ல நகருங் காலத்துஞ் - செல்லும் வழிமெய் மொழிமனதைச் செல்லா தடக்கி னெழுபிறப்பு - நல்லபயனே யாமேனைநல்ல வினை

தந்தை தானே மகனுக்குச் சாரு மென்னு முறையானு
மெந்தை பெருமா னருள்செய்த வியல்பி னுனுங் கிருச்சமதன்
மைந்தன் றனக்குக் கணனுந்து வாவென் மனுவை யுபதேசித் [ன்.
தந்தண்மறை நால்விதியானேயனுட்டிப்பணித்தும் புகன்முழித்தா

மைந்தனே! ஆதிமந்தியாந்தரகிதமாகியும், அகண்டாகாரவஸ்துவாயுமிருந்து எங்குந்தானை விளங்குகின்ற சோதி சொரூபராகிய விகாயக மூர்த்திபினுடைய மந்திரத்தை யுனக்குபதேசிக்கின்றேம் அந்தப் புராதன மந்திரத்தைச் செபித்து வருவையாயின் உனக்குச் சகல சித்திகளுந் தானே யுண்டாமென்றுசொல்லி, கணனுந்துவா வென்னு மந்திரத்தை ஆகம விதிப்படி உபதேசித்து அதை யநுட்டிக்கு முறைமையையுஞ் சொன்னர்.

இப்பால் பலியெனபவன் பேருவகையில்மூழ்கினவனுய்க் கிருச்சமத முனிவருடைய திருவடிகளைப் பணிந்து துதிசெய்து, அவ்வனத்திற்றானே மற்றொருபுறத்திலிருந்து அவரைப்போலவே தானு மொருகாலிலத்திலூன்றிப் பஞ்சேந்திரியங்களையுமொருவழிபடுத்திச் சுழுமுனை, இடை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சங்குவை, அலம்புடை, புருடன், குரு, சங்கினி * என்னுந் தசநாடிகட்கும் உற்பத்தி ஸ்தானமாகிய மூலாதாரத்திலின்றுந் தோன்றியமாகிய இதய கமலத்தில் பிருதிவி தந்துவமுதல் நாததத்துவ மீறாக ஓராதனங்கற்பித்து, அவ்வாதனத்தில் சோதிமயமான ஷண்ணவ சொரூபத்தைப் பிரதிட்டைசெய்து, அந்தச சொரூபத்தில் விகாயக மூர்த்தியை ஆவாகனஞ்செய்து, அம்மூர்த்திக்கு அருளென்னுந் திருமஞ்சனத்தையாட்டி, சாந்தமென்னுஞ் சந்தனத்தைச்சாத்தி, ஞானம், மோனம தவம-தருமம, மனவுகம-கலஷ, கௌவ்வ எனகின்ற அட்ட புட்பங்களைக் கொண்டருச்சித்து, அன்னமயம் பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் † ஆனந்தமயம் என்கின்ற பஞ்சவித்தான்னங்

* அவையாவன சுழுமுனை-ஆதாரமாறினு மூடுருவி நிற்பது இடைபிங்கலை இரண்டுங் கத்திரிக் கால்போற் பின்னி நிற்பன. காந்தாரி - காயிபின் றேன்றிச் சத்த மேழுக்கு மேழு காடியாய்க் கண்டத்தடையுறுவது. அத்தி சிங்குவை - இரண்டும் பத்தாங்குலத்துக்குக் கண்ணினிற்பன அலம்புடை புருடன்-இரண்டுஞ் செவியினூற்றிருபது தூரம்புற்றிருப்பன. குரு-காயிபுறைக்கு ருய்யம்பற்றி நிற்பது சங்கினி உபதத்தத்தைப் பற்றியிருப்பது.

† அவையாவன:—உடல் அன்னமயம். கருமேந்திரியமும் பிராணனும் பிராணமயம் கருமேந்திரியமும் மனமும் மனமயம். ஞானேந்திரியமும், புத்தியும அஞ்ஞானமயம். அவித்தை யானந்தமயம். இவையே பஞ்சகோசம்.

யுள்ள தன்மையை யுடையானைக் காதலித் தொழுகுகின்ற அறிவி னர்களும், வரைவின் மகளிரோடும் இழிகுல மகளிரோடும் கூடி இன்பத்தினை நுகர்வாரும், அறமும் பொருளும் இழத்தலையன்றி அச்சத்தாற்றாங் கருதிய இன்பத்தையும் இடைக்கின்ற ராதலால், பிறனில்லாளைக் காதலிக்குக தீங்கினைக் கடைவிடல்வேண்டும். இல் லாவிடின் பகை-பாவம்-அச்சம்-குடிப்பழி-என்னு நான்கு குற்றமும் ஒருக்காலு நீங்காவாம். எல்லாப் பெருமைகளுமழியும். அத்தீமை யினை யொழித்தோர்கள் அறம் பொருள் இன்பம் வன்னு மூன்றி னோடுங் கூடிவாழ்வார். ஓர் விளையாட்டால் அதனைக் கனவின்கண் கருதிவாராயினும் எல்லாத் தீங்கும் வகுதெய்தும்.

பொறை யுடைமை உன்பது "வெறுப்ப வொருவன் காரணத் தான் மிக்க மடத்தாற் புரிபிழையைப் - பொறுப்பினதலே பேரற மாம்புகழு நிறையு மிகவளருங் - கருப்பொன் றறிபா வறிவினர்கள் கருத்தின் மகிழ்ச்சி யுளவாகு, மொறுபபின் வருவ தொன்றில்லை யதனுற்பொறுமை யுயிர்த்துணையாம்." என்றருளியபடி, ஒருவன் தமக்கு மிகை செய்யின் அதனைக தாமும் அவன்கட் செய்யாது பொறுத்தலே யுடையராதல். அஃதாவது, ஒருவன் காரணத்தாலே னும் மடைமையா லேனுந் தாம் வெறுக்கும்படியாகச் செய்த பிழை யைப் பொறுப்பதே பேரறமாம் தமகருக் தீங்கு செய்தவனை பொறுத்தார்க்கு உண்டாவது கருதியது முடித்தே மெனத்தருக்கி யிருக்கும் பொய்யின்பமாகிய அவலொறு நாளை யின்பமே யன்றி, அதனைப் பொறுத்தார்க்கு உலக மழியுமளவும் உண்டாகும் புகழு நிறையும் அவருக்கில்லை அறிவுடையாரும் மகிழ்ச்சிகொண்டு பொ றையுடையாரைப் பொன்போலப் பொதிந்துகொள்வர். மிகைசெய் தவனைப் பகைசெய்வதால் வருவ தொன்றுமில்லை. ஆதலால், பொறு மையை உயிர்த்துணையாக எண்ணல் வேண்டும்.

* அழுக்காறுமை என்பது "ஒழுக்கா றொழிக்கும் பொருள னேத்து மொழிசரு மிம்மை மறுமையிரண்-வழுக்காதனேத்து முறு விக்கு மருங்குளார்க்குங் கேடுறுக்கு - மிருக்காருடைய வெரிரையத் தேய்க்கு மிதனுலே மகண்டா - வழுக்காறுய பெரும்பகையை யம தரிடத்தும் புரியறக." என்றருளியபடி, பொறுமை செய்யாமை,

* அழுக்காறு என்ப தொரு சொல் அச்சொல் பின்னழுக்காற்றைச் செய்யாமை யென்னும் பொருள்பட எதிர்மறை யாகார இடைகிலேயும், மக ரவைகார விகுதிகளும் பெற்று அழுக்காறுமை யென நின்றது.

அஃதாவது, ஒருவன் தனது நெஞ்சத்தின்கண் அழுக்கா றென்னும் பெரும்பிழையை யுடையானாயின், அது அவனுக்குரியவொழுக்க நெறிகளைக் கெடுக்கும். எல்லாப் பொருள்களையும் ஒழிக்கும். இம்மைக்கட் செல்வத்தைக் கெடுப்பதன்றி அவன் சுற்றத்தினர்க்கும் உண்ணப்படுவன வின்றிக் கெடுத்து, மறுமைக்கண் நரகத்திற் செலுத்திவிடும். ஆதலால், அவ்வழுக்காறென்னும் பெரும் பகையைத் தேவர்களிடத்துஞ் செலுத்தாதிருத்தல் வேண்டும்.

வெஃகாமை என்பது, "படுமுன் பொருட்குப் புதுவெள்ளம் பழைய நீரை யுடைப்பதுபோற் - கெடுதி பயக்குங் குடிகெக்குங் கெடாத பெருந்தின்பமும் விளக்கும் - வடுமிக் கியன்ற பழியெனும் வளர்க்கு மதனன் மறுமையினு-நடுவு நிலையிற் றிரிந்தொருவர் நன்பொன் கவரக் கருத்தெண்ணேல்." என்றருளியபடி, பிறர்க்குரிய பொருளை வெளவக் கருதாமை, அஃதாவது, பிறர்க்குரியன கோடல் நமக்கு அறன் அன்றென்று நடுவுநிலைமையின்றி அவர் நன்பொருளை ஒருவன் கவரக் கருத்துறுவனாயின், அக்கருத்து அப்பொழுதே அவனுக்குப் பலதுறைகளைக் கொடுத்து அவன் குடியையுங் கெடச்செய்யும். என்றும் அழியாத பெருந் தின்பத்தினை விளக்கும். வசையுற்ற பழிசசொற்களையும் வளர்க்கும் பழமையாயுள்ள நீரைப் புதிய வெள்ளங் கொண்டு போவதுபோல அவனுக்கு முன்னுள்ள பொருள்களும் அழிந்துபோம்.

புறங் கூறுமை என்பது "கேளிர் பிரிவர் நட்பினராய்க் கெழுமுவாரு மிலராவர்-மூளும் வடுச்சொ னேராக மொழிவ ரெவருமாத லினு, ளுளுமறத்தைக் கொன்றனைத்த கவைகள் செயினு மெதிர் நின்று-மாள வுரைசெய்யினுஞ் செய்யேன் மைந்தா மறந்தும் புறங் கூறல்." என்றருளியபடி, காணுதவழிப்பிறரை இகழாதுரையாமை, அஃதாவது, ஒருவன் எங்ஙனும் அறமென்பதைக்கொன்று பாவங்களைச் செய்வானாயினுந் தம்மெதிர் நின்று மாள வுரைத்தானாயினும் அவனைக்காணுதவழி இகழ்ந்துரைப்பதை மறந்துஞ் செய்வாராயின், சுற்றத்தினர் பிரிவார். நடப்பினர் நாடார். யாவரும் நேர் நின்று வசைகூறுவர்.

பயனில சொல்லாமை என்பது "தகைமையுடைய வறிவினர்கள் சாலவெறுப்பச் செயுமன்றி - நகையும் வினைக்கும் வெளிற்றறி வைகவிற்று நன்கு மதிப்பெழிக்கு - மிகைசெய் விழுப்பக் தபுமதனால் வினையுமறமாதிகள் பெயவாவலகையினுரைக்கும் பயனிலசொல்

மைந்தா வுரையே யுரையேலே.'' என்றருளியபடி, தமக்கும் பிறர்க்கும் அறம்பொரு ளின்பங்களாகிய பயன்களுள் ஒன்றும் பயவாதவர்சார்களைச் சொல்லாமை அஃதாவது. பயனிலவாகிய பொருள் கூறி ஒருவன் விரித் தரைப்பா னுயின், அஃது அறிவுடையார்க்கு வெறுப்பைச் செய்வதன்றி எல்லாராலும் இகழ்ந்து நகைக்கப்படும். வெளிற் றறிவன் என்னும் பெயரை யுண்டாக்கும். விழுப்பத்தினை யும் மதிப்பினையு நீக்கிவிடும். அறமுதலிய ஞானகு உறுதிப் பொருள் களும் பயக்காது. ஆதலால் யாவரிடத்தும பயனில சொல்லாமை வேண்டும்.

யச்சம் என்பது ''பாயபல் பகைக்குர் தப்பிப் பாரிடை யுய்பலாகு - மேயவக் கதிசென்றுலும் விளிதரா திடங்கு சென்றே-பாயநன்றினைத்தங் கொளறங் கருதுபர் பலரு கல்குர - தீயவல்வினையின் யாதுஞ் செய்யறக வேமகண்டா.'' என்றருளிய படி, பாவங்களாயின செய்வதற்கு அஞ்சுதல், அஃதாவது, இப்பூவுலகத்தின்கண் பலபகைகட்குர் தப்பிப பிழைத்தல எளிதாகுர் தீவினைப் பகையானது, எக்கதியிற் சல்லினும் பின்றொடர்ந்து நண்றென்ப வனைத்தையுங் கொன்று அருந்துயரைப பலவாறளிக்கும். ஆதலால், கொடிய தீவினையில் யாதொன்றுஞ் செய்யா திருத்தல் வேண்டும்,

ஒப்புர வறிதல் என்பது ''ஊருணி நடுவூர் நின்ற வொண்பழத் தருவும்போலப் பேருறு மூயற்சி தன்னும் பெருக்கிய பொருள்க ளெல்லாஞ்-சீருற யாவர்மாட்டுஞ் செலுத்தியொப் புரவிற்றி-யாரு மொப்புரவாற் கேடுண்டாயினு மதுவுன்றே.'' என் றருளியபடி, உலக நடையினை யறிந்துசெய்தல். அஃதாவது, ஒருவன் தனது மூயற்சியாற் பெருக்கிய பொருள்களையெல்லாம் ஊரின் வாழ்வார் தண்ணீ ருண்ணுங் குளம் நீர் நிறைந்தாற்போலும் பயன்படுத்தி வைதாம் ஊர்நடுவே யுள்ள மரம்பழுத்தாற் போலும் யாவர் மாட்டுஞ் செலுத்தி ஒப்புரவினிற்றல் வேண்டும் அவ்வொப்புரவு செய்தலால் அவனுக்குப் பொருட்கேடு வருமாயினும் அக்கேடு தன்னை விற்று மீணுங்கொள்ளுந் தகுதியை யுடையது,

ஈகை என்பது ''இரப்பவன் வாளாதே லிலனெனு மெல்லங் கூறு-கிரப்பினை நிரப்ப னன்று மிதனினன் றுவதாகு மிரப்பவ னில னென் றுரையியம்பிய வெல்லஞ் செல்லென - நிரப்பினும் பிறர்பரற் கூறு நிரக்க மொடுதன் மைந்தா.—அருத்தியு னில னெனறு

ணர்த்தலு மிலரென் றப்பா - லுரைத்தில ஞகச்சாலவுதவலு மேற் கின்றனும் - வருத் துறவில்லெனலுமை வழங்கிட வரையில் செல் வம் பொருத்தலு மொன்றி னென்று புகழ்மிக விளங்கி நிற்கும்— நலமிகு செல்வம் பேறு நல்குவினரைக் காத்த - லிலனற மாதி ரீச் த்தி யிலனெனப் பிறர்சொ லெல்வ-லலனரைக் கஞ்சி யேனும் வறி யரே யிலனென் றெள்ளா - தலர்புகழ பயனும் வேண்டி ஞக்கையு மளிக்க மைந்தர.'' என்றருளியபடி, வறியார் யேற்றார்க்குமாற்றது கொடுத்தல்' அஃதாவது, ஒருவன் தனனிடத்தில் இரக்க வந்தா னை யின் அவன் வீணிற்செல்ல, யான் இதுபொழுது பொருளுடையே னல்லேன் எனக் கரப்பாற் சொல்லுந் சொல்லை யுரையாது அவன் இரப்பினை நிரப்புதலும், யான்வறியேனென்று சொல்லும் இழிவர வைப் பிறர்பாற் கூறுகவென்று நிரம்பினும் அதனையவ்வாறு கூறாது இரக்கமோ டீதலும், இரப்பான் இவனெனறு சொல்வதன்முன் குறிப்பறிந் தீதலும், அது போதாமை பற்றிப் பின்னும பிறனொரு வன்பாற் சென்று அவனுரையாவகை கொடுத்தலும், எக்காலத்தும் வறிய னென்னுவகை அளவின்றி யளித்தலும் ஆகிய இவ்வைகை ஈகையும் ஒன்றுக்கொன்று மேலான புகழோடு விளங்கி நிற்கும். அன்றியும் இவன் நலமிகுந்த செல்வத்தைப் பெற்றுக் தரித்திர ரைக்காக்குந் தன்மையிலன்; அறமாதி புருஷார்த்தங்களு மிலனென் றும பிறர்கூறும் பழியுரைக் கஞ்சியேனும் புகழும் பிரயோசனமும் வேண்டினேன் இரப்பானென் வறியானென்று அவ மதிக்காது தனது யாக்கையையு மளித்தல் வேண்டும்.

புகழ் என்பது ''சாதல்வந் தடுத்த காலுந் தனக்கொரு சாத லின்றிப் பூதல மிறங்குங் காறும் புகழுடம் பிருக்கு மந்தக்-கோதறு புகழின் யாக்கை கொடையிஞற் செல்வங் கூர-வாழ்தலே யுடையா ரன்றே வானமும் வணங்கு நீரார.' என்றருளியபடி, இல்வாழ்க்கை முதல் ஈகையீராகச் சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப்பயனுகி இவ்வுலகதனின்கண் நிகழ்ந்து இறவாது நிற்குங் கீர்த்தி அஃதாவது. பூதவுடம் பிறக்கினும் பூதலமழியுங் காறும் புகழுடம் பிருக்கு மாதலால அம்புகழுடம்போடு வறியார்க்குவரை யாது கொடுக்குங் கொடையால் உண்டாகின்ற செல்வத்தைப் பெற் றுவாழும் பேற்றினையுடையவரே வான் செல்வத்தையுந் தமக்குக் ழோக்கு கீர்மையை யுடையார் என்பதாம்.

இறைமாட்சி என்பது ''உரைசெயு மறத்தினுற்றலொருருடை நிகழ்ற்ற முங்கீர்த் - தாரைமூழுதாளவேண்டிற் றகைபெறு மமைச்சு

நாடு-புடையற மருணே மிக்க பொருள்படை கட்பென்றாலும்-வரை செயப் படாத யாக்கை யுறுப்பெனமதித்துக் கோடி.—வினையினஞ் சாமை நிற்றல் வினைஞருக்களித்தல் செய்யும்-வினையிடை மனமேற் சேறல் விளங்கிய வறிவுவல்லே-வினையினை முடித்த லாண்மை வெங் கொலே யாதி நீக்கல் - வினைவளர் மானமற்றும் வேர்தருக் கியல்பு மைந்தா.—குடிதளர்வுற்ற காலைக் கொள்பொரு ளாறிலொன்றும் - விடுவது செய்து தங்கள் விழுச்குறை முறைசொல் வார்க்குத் தடை யறக்காட்சி நல்கித் தண்ணிய வினைசெல்காட்டி - வடுவற விடுத்துச் சொல்வார் வன்மொழி பொறுத்தல் வேண்டுமே.—செருவிலெட்ட லரைக் கொன்று நிறைகொண்டு நாடு காத்தல - பொருளினே யீட்டிக் கள்வர் புல்லவர் சுற்றமாதி - பருகுத லிலாமைக் காத்துப் பயிலற மாதிமூன்றின் - மருவுற விடுத்துச் செங்கோல் வளர்ப்பது மாட்சி யாமே.” என்றருளியபடி, அரசனது நற்குண நற்செய்கைகள். அஃ தாவது, மேற்கூரிய அறத்தின் வழியால தனது வொரு குடையின் கண் கடல்சூழ்ந்த உலகமுழுவதும் ஆளவேண்டிய அரசன் அமை ச்சு நாடு - அரண்-பொருள்-படை-நட்பு என்னும் இவ்வாறங்கங்களே யும் அவன் யாக்கைக்குற்ற உறுப்புக்களே யொப்ப மதிக்கக்கடவன். அன்றியும் ஓர் வினையின்கண் அஞ்சாமை நிற்றல். அவ்வினை செய் வோர்க் களித்தல், அவ்வினைசெய்தற்கண் மனவெழுச்சியுறல், அவ் வினைவினை விரைவின் முடித்தல், ஆண்மையுறல், கொலையாதிகளை நீக்கல், வீரத்தின் வழுவாத மான முடைமை முதலிய குணங்க ளெல்லால் அவ்வரசனுக்கு இயல்பா யிருத்தல வேண்டும். குடிகள் தளர்வுற்ற காலத்தில் அவர்க ளிடத்தி லிருந்து தான்கொள்கின்ற ஆறிலொன்றுகிய பொருளைக் கொள்ளாது விடுத்து, முறை சொல் வார்க்குக் * குறைசொல்வார்க்குந் தடையற்ற தனது காட்சியைய ளித்து, யாவரிடத்துங் குளிர்ந்த இன்சொற்களைக்காட்டி, தீயனகண் டால் நெருங்கி இடித்துச் சொல்லுந் தன்மையை யுடையார் கூறும் வன்சொற்களையும் பொறுத்துத் தனக்கோதிய * அறத்தின்கண் வழுவா தொழுகி நிற்றல் வேண்டும், மேலும் அவ் வரசன் போர்முகத்திற் பகைவரைவென்று நிறைகொண்டு தன்னுட்

* முறைசொல்வார் வலியான் மெலிவெய்தினர். குறை சொல்வார் வறுமையும் நிரப்பவர் எனக்கொள்க.

* அவ்வறமாவது:—ஒதல்-வேட்டல்-ஈதல் என்னும் பொதுத் தொழிலி னும், படைக்கலம் பயிறல், பல்லியிரோம்பல், பகைத்திறந் தெரிதல் என் னுஞ் சிறப்புத் தொழிலினும் வழுவாது நிற்றலாம்,

டினை யளித்து மணி - பொன் - செல் முதலிய பொருள்களை யீட்டி அப்பொருளைப் பகைவர் - கள்ளர் - சுற்றத்தார் - வினைசெய்வார் முதலாயினோர் கொள்ளாமற் காத்து † அறமாதி மூன்றின் பொருட்டாக விடுத்துத் தனது செங்கோலை வளர்ப்பது மாட்சிமையாகும்.

கல்வி என்பது "ஐயமே திரிவே யென்னு மவையறவறிதி-வையமால் யானே பாய்மா வன்படைத் தொழிறாதி-பையவே கற்றுக் கற்றபண்பின ரோடு நாளு-முய்யவே யளவளாவி யுரைத்தவா நிற்றல் வேண்டும்.,, என்றருளியபடி. அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல், அஃதாவது, அறநூலையும் - தேர்சரி பரிபடைக்கலம் என்னு மிவற்றினூல்களையும், ஐயந் திரிவறக் கற்று அவைகளைக் கற் றிருக்கின்ற பண்பினரோடு நாளும் அளவளாவி சொல்லுகின்ற நெறிக்கண்ணே நிற்றல்வேண்டும்.

கல்லாமை என்பது "உடல்வயத் தாருஞ் சாதி யுயர்ந்தவர் சாதி தாழ்ந்தோர்-திடமுற வுயிரினோடு செல்லுநுங் கல்வி தம்மை - லடைந்தரும் பெருமையெய்தா ராதலா லகக்கண் ணுங்கித் - தொடற்பு நுங் கல்விகல்லாத் தொழிலினை விடவே வேண்டும்,, என்றருளிய படி, கற்றலைச் செய்யாமை. அஃதாவது உடலோ டொழியுஞ் சாதியின்கண் உயர்ந்தாராயினுந் தாழ்ந்தாராயினும் ‡ உயிரோ டொழியுங் கல்வியுயர்ச்சியாற் சிறப்பினை யடையார் மற்றெவ்வகைக் கல்வியாற் சிறப்படைவரெனில், தமக்கோரகக் கண்ணுங்கித் தாமீதுரும் எக்கதியின் கண்ணுந் தொடருந் தன்மையன வாகிய கல்வியினுற் சிறப்படைவாராதலால் இத்தன்மைத்தாகிய பெருங்கல்வியைக் கல்லாமை யென்னுந் தொழிலினை ஒருவன் பற்றற விடல் வேண்டும்.

கேள்வி என்பது "வறுமையான் மடமை தன்னுள் வருந்தி நெஞ்சழியுங்காலை-யுறுதிசெய் தூணையாங் கற்றவர்வாயினை வளர்க்-

† கடவுளர் அந்தணர் வறியோர் என்னு மிவர்க்கும் புகழிற்குக்கொடுத்தலை அறப்பொருட்டாகவும், யானை குதிரை படைதாடி அரண் என்னுமிவற்றிற்கும்,பகையோடு கூடலிற் பிரிக்கப் படுவார்க்குக் கொடுத்தலைப்பொருட்பொருட்டாகவும், மண்டபம்-வாவி-செய்குன்று-இளமரக்கா முதலிய செய்தற்கும், ஐம்புலன்களா னுகர்வனவற்றிற்குங் கொடுத்தலை இன்பப் பொருட்டாகவுங் கொள்க.

‡ உயிரோடொழியுங் கல்வியாவது, அறமுதலாயுள்ள உறுதிப் பொருள்களை யுணர்ந்தாது பிறபொருள்களை யுணர்ந்தவதாம். உயிரோ டொழியாக் கல்வியாவது, அவ்வுறுதிப் பொருள்களை யுணர்ந்திப் பிறபொருள்களை யொழிப்பதாம்.

ருமென்று - மிருதியில்லாத வின்ப மீட்டுதாதலினுற்கற்று - ம்அவற மொழுக்கமுள்ளார் வாய்மொழி கேட்டல் வேண்டும் ,, என்றருளிய படி, கேட்கப்படு நூற்பொருள்களுக் கற்றறிந்தார் கூறக்கேட்டல். அஃதாவது, கசடறக் கற்ற கல்வியோடுங் குற்ற மற்ற * ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல்லானது ஒருவன் வறுமையாலேனுந் தனர் வெய்தி னெஞ்சழியுங்காலத்து உறுதிபயத்தற்கு உற்ற துணைபோலும் எக்காலத்துங் கற்ற வுணர்வினை வளர்ப்பதாயும இறுதியற்ற இன்பத் தை யீட்டுவதாயு மிருக்கின்றதால் அதனைக்கேட்டல் வேண்டும்,

அறிவு வுடைமை என்பது '' இழிந்தவ னுயர்ந்த தொன்றை யியப்பினு முயர்ந்தோர்-வாயி-னிழிந்ததொன் றுறினுமுள்ள வியல் பறிந் தோம்பிநீக்கிப் பொழிற்றெனப் பிறர்தாங்கூறு புலப்படாப் பொருளுந்தெள்ளி-வழிற்றெனத் தெளியக் கேட்போர் மணங்கொளப் புகறல்வேண்டும்—எவ்வகை யுலகத் தள்ளா ரியல்புட னெழுகிரி ன்ஞ-ரவ்வகை யொழுக்கி னினறேயழிவனவருமுன் காத்தத் - தல் வெனும் பழிபாவங்கட புதியெய்தாமையஞ்சித் - செல்விய நெறியினு ளுஞ் செலுத்தகபொறிகளைந்தும்—நலமிகவுபர்ந்தோர் தம்மை கண் புறத் தழுவிக்கொள்க - நிலவிய கயத்துபபீலை நிகர்தரா துயர்ந்த கோட்டி-னலரெனவவர்பானிற்க வாக்கமிக்கடுத்த காலை மலர்வதும் வறங்கூர் காலைக் கூம்பலு மொழிகை மைந்தர் ,, என்றருளுயபடி கல்வி கேள்விகளினுய அறிவோடு உண்மை யறிவுடைய னுதல். அஃ தாவது, யாவர்க்குங் † குணங்கள் மூன்றும் மாறிமாறி வருதல் உண் மையாதலின் இழிந்தவன் உயர்ந்த பொருளை விருப்பினுனுயினும், உயர்ந்தவன் இழிந்த பொருளை உரைத்தா னுயினும், அப்பொரு ளின் கணுள்ள பயனை ஆராய்ந்து கொளல வேண்டுவனவற்றைக் கண்டு ஒழிக்க வேண்டுவனவற்றை யொழிததல் வேண்டும். பிறராற் கூறப்படுஞ் சொற்கள் வழுவுள்ள வாயினும், இனிது விளக்கத

---

* கல்வியுடையா ரேனும் ஒழுக்க மில்லாதார் அறிவில ராகவின், அவர் வாய்ச்சொற் கேட்கப்படா தென்பது தோன்ற ஒழுக்க முடையார் வாய்ச் சொல்லென்றார்.

† குணங்கள் சாத்துவிகம்-இராசதம்-தாமதமென மூன்றும். அவற்றுள் ஞானம்-அருள்-தவம்-பொறை-வாய்மை-மேன்மை-மோனம் ஐம்பொறியடக் கல் ஏன வெட்டுஞ் சாத்துவிகம். மனவூக்கம்-ஞானம்-வீரம்-தவம்-தருமம்-தானம்-கல்வி-கேள்வி என வெட்டும் இராசதம், பேருண்டி-தெடுதுயில் சோம்பு-கீழ்ஜி வழு-வஞ்சம்-மறதி-பொய்-கோபம்-காமம்-கொலை இவைகள் தாமதம்.

னவாயினும். உள்ளபயனைக்கொண் டொழித்தற் தான்சொல்லுஞ் சொற்கள் அரிய பொருளினவாயினுங் கேட்போர்க்கு எளிதாய் விளங்குமாறு அவர் மனங்கொளச் சொல்லல் வேண்டும்! அன்றியும உலகத்தை யெல்லாப யான் நியமித்தலால் என்னை நியமிப்பார் இல்லையெனக்கருதித் தானினைத்தவாறே பொழுகிற் பாவமும் பழிவு மாதலால் உலகம் யாதொரு வகையால் ஒழுகுகின்றதோ அவ்வுலகத்தோடு மேவித்தானு மவ்வாறொழுகிப் பின்னர் வரத்தக்கதாகிய அழவினை முன்னறிந்து காத்திப் பழிபாவ முகலானவைகட் கஞ் ஞிக்குநிரையை நிலமறிந்து செலுத்தும்வாறு வன்போல, மனத்தைப் புலமறிந்து செலுத்துவது அறிவாதலின், அவ்வறிவால் மனத்தை அது சென்ற புலந்தின்கட் செல்லவிடாது அப்புலத்தினது நன்மை தீமைகளை ஆராய்ந்து நியதனினின்று நீக்கி நல்லதன்கட் செலுத்தல் வேண்டும். உலகத்துள் உயர்ந்தவ ராயினுரைத் தமுவிக்கொள்ளுங் காலத்து அவரோடு ஒரு நிலைமையாயிருக்கின்ற கோட்டுப் பூவைப் போல விருப்பதன்றி முன்னா மலர்தலும், பின்னர்க்கூம்புதலுமான வேறுபாட்டினை யுடைய கயப்பூப் போலச் செல்வ மிருந்த காலத்து மலர்தலும் வறுமை யெய்திய காலத்துக் கூம்புதலுமான அறிவன்மையை யொழித்தல் வேண்டும்.

குற்றங் கடிதல் என்பது, ''அருந்தவர் குரவர் மன்னே ராத்தண ருயர்நதோர் தம்பாக் நீருந்தியவனைக்க மின்மை செருக்கவேண்டிய பக்கத்தும் - பொருந்திய பொருள் கொடாமை பொங்கிய வெகுளி காமம் - விருந்துசெய் கருகண்ணேட்ட மிவையெலாம் விடுகமைந் தா.—குற்றம் பிரியாதிருந்து பிறர்குற்றங்களைச் சிறிதேனுங்-குற்றம் புரியிற சிற்றெறிவைக் குவையை யழிக்குமாறேபோற்-பற்றும் பெரு வாழ் வினையழிக்கும் பகைவர்க் காக்கமிகப்பெருக்கு - முற்றுமபெ ருகோ யுழப்பிக்கு முனியாராறு முளிவிக்கும்.—கன்றுமினிய பொ ருள்பலவுங் காதல் பகைவ ரறியாமே - நன்று நுகர்க தனியென்று நன்குமதித்து வியவற்ற - நன்றி பயவா வினையினியு நண்ணு மதத் தான் முடியற்க-வென்றிவிளங்குப் புகழ்விளங்க வீழ்ப்பீம் விழுங்க வேண்டிடினே.,, என்றருளியபடி, எல்லாக் குற்றங்களையும் அர சன் தன்க ணிகழாமற்கடிதல் அமைதாவது, அருந்தவர்-தாய்-தந்தை-முன்னோர் - அந்தணர் - சான்றோர் என்னுமிவர்களிடத்தில் வணக்க மின்மையும், செருக்கும, வேண்டும் வழிப்பொருள் கொடாமையும், வெகுளியும் - காமமும் - கடும்பற்றுள்ளமும் ஆகிய இக் குணங்களை யெல்லாங் கடிதல் வேண்டும். ஒருவன்தன் குற்றங் கடியாதவழிப்

பிறர் குற்றங்கடிதல் பெருங்குற்ற மாதலால் முன்னர்த் தன் குற்றத் தினைக்கண்டு கடிதாது பின்னர்ப்பிறர் குற்றங்களைக் காணுதல் வேண் டும். சிறிதேனுங்குற்றம் பிரிவாலுயின் அதனால் அவன் பெரியசெல் வமானது எரிமுகத்து நின்ற வைக்குவைபோல அழிந்து விடுவ தன்றி அது பகைவர்க்கு இலாபத்தை யுண்டாக்குவ முளியாதவ ராயினு முளிவிக்கும் மூற்றும் பெருகோபை யுழப்பிக்கும் அன்றி யும் ஒருவன் தான காதலித்த பொருள்களை யநுபவிக்கும் அக்கா தல் பகைவரறியாத வண்ணம அநுபவித்தி எஞ்ஞான்றுந தன்னை நன்குமதித்து வியவாததனக்கு நன்மை பபவாத வினைகளை மதக் தான் முடிக்காதிருக்கின் * அவனுக்கு வென்றியும் புகழும் விழுப் பமும் உண்டாகும்.

பெரியாரைத் துணைக்கோடல் என்பது "நுண்மை யறனு மிகத் தெளிந்தநூலி னிபல்புமுலகியல்பும்-வண்மையுறச் தேற்றிடுமாற்றல் வல்லராகி வளர்நீலக் - திண்மை யறிவா யுளிமுநிர்ந்தோர் சேரகன்கு மதித்திடுத - வெண்மையுரியா துயர்த்திடுகவி யம்பும் வழியே நின்றி டுக.—மழையின் மிகுதி மழையின்மை வளிதிப் பிணரால் வந்தது யர் - குழைவி லமரர் தக்கோரைக் குறித்துர் சாந்தி யாற்கடியா - விழைவில பகைவர் கள்வர்வினைசெய்வார் சுற்றமிவர்களினும்-பிழை யை யுபாய நான்காலும் பெயர்க்கும் பெரியரெனுந துணையே.—ந் பாண்மையிறும் றேவர்களா னண்ணலாகு மெதிர்வினையை - யுற்பா தங்க ளானறிந்தேயொழிப்பவர் மனிதரால் வருவ - பொற்பாரவரிங் கிதங் குணமாசாரஞ் செயலாற்புக்கறிந்து - பிற்பாலுறச்செய் குவா தனுற் பெரியோர்துணையே துணையாகும்.,, என்றநூலியபடி, அர சன் நிலெறி விலக்கி னன்னெறி செலுத்தும் பேரறி வுடையாரைத் தனக்குத் துணையாகக்கோடல அஃதாவது, அறத்தினது நுண்மை யையறிந்து நூலினியல்பும் உலகினியல்புமாகிய விரண்டினையுந்தெரி விக்க வல்லராகி, சீலம்-உறுதி-ஆயுள் என்னு மிவைகளின் முதிர்ச் தோரை அரசன் தனக்குந் துணையாகக்கொண்டு, அவரைத் தன்னி

* அறிந்தவழி அவைவாயிலாகப் புகுந்து வஞ்சிப்பார்களின் அறியாத வண்ணம் அநுபவித்தென்றும், தன்னெவியத்தழி இடமும்காலமும் வலியும் அறியப்படாமை யானும், அறனும் பொருளும் இகழப் படுதலானும், எஞ் ஞான்றும் வியவற்க வென்றும், கருதியது முடித்தே விடுவலென்று அறம் பொருளின்பங்கள் பயவாவினைகளை யகப்பின், அவற்றுற் பாவமும் பழியுங் கேடும் வருமாகலின், அவற்றைமதத்தான் முடியற்கவென்றுங் கூறினர்.

னுஞ் சிறந்தவர்க வெண்ணி அவர் இயற்பு நெறியே நிற்றல்வேண் டும். மழையின்மிருஞ் மழையின்மை காற்று தீ பிணி யென்னுக் தெய்வத்தால் வருந்தின்பங்களோ உற்பாதங்களால் அறிந்து கடவுள ரையுங் தக்கோரையு நோக்கிச் செய்யுஞ் சாந்திகளால் நீக்கிவைப்பா ரும், பகைவர்-கள்வர்-சுற்றத்தார்-வின செய்வார்என்று மக்களால் வருந் தின்பங்களோ, குணம்-இங்கிதம்- † ஆகாரம்-செயல் என்பன வற்றை லறிந்து சாம பேத தான தண்டங்களாகிய நால்வகை யுபா யத்தால் விலக்கிவைப்பாருமு, அப்பெரியோராதலால் அவரதுணை யேசிறந்த துணையாரும்.

சிற்றினஞ் சேராமை என்பது "கல்வினைக்கு நற்பயனுக் தீய வினைக்குந் தீப்பயனு-மிலவே யெனும் வல்லிருதையரு மெள்ளுமிட ருந் தூர்த்தர்களுஞ - சொல்லுகடரு முகலாகத் தொக் கசுழலைச சேர்ந்தொழுகின்-புல்லுமறிவைத் திரித்திருபைப் பொருளுங்கெடுக் கும் புகழோடே.,, னைறருளியபடி, சிறிய வினத்தைப் பொருந் தாமை. அஃதாவது, ஒருவன் நல்வினைக்கு நற்பயனுக் தீவினைக்குத் தீப்பயனும் இவ்வெனகிற அறிவிலார்களையும், விடர் - தூர்த்தர் நடர் - முடலிய சுழுனினையுஞ சேர்ந் தொழுகுவனுயின், இம்மை மறுபைப்பயஞ்சு புகழையு மிழப்பனுதலால் எஞ்ஞான்றுஞ் சிற் றினத்தைச் சேராதிருத்தல் வேண்டும் என்பதாம்.

தெரிந்து செயல்வகை என்பது "செய்யும் பொழுதே யழிபொ ருளிற் சிறப்ப தொப்ப திரண்டினளான்-றுய்யவதவி வழிபயக்கு மொண்மை வினையைத் தேர்ந்துளத்தி - னையு மகன்ற வினத்தோடு மாய்ந்ததனித்தும் புரிந்திடுக - வெய்ய வாக்கங் கருதிமுதல் வினிக் கும் வினையைப்புரியற்க.—வலியே காலம் வினையி வற்றுன் மாற்றுன் றனக்குமுனக்குமுள-பலவாகினையும் வினைதொடங்கும் பண்புமதற்கா மிடையூறும் - விலகா ததனைவிலக்குவதும் வெல்லுமாறும் வென்ற தனு - லிலவாப் பயனு முத லனைத்து மோர்ந்து தெளிர்தே வினை செய்க.—பெரியமுயற்சி வினைபயனைப் பேணுவினையேபயன்சிறிதா - மரிய வினையே பின்னுயர மாக்குவினையே புரிந்தாலுங்-பெரியமுயற் சிமுதலாகபேசும்வினைக்கு மறுதலையா-முரிய வினையை விடுத்தாலு முலவாப்பெருமை யொழியிமே—கொடுத்தல் பொருள் வேட்கைய

† இங்கிதம் குறிப்பால் நிகழும் உறுப்பின் ரெழில். ஆகாரம் குறிப் பின்றி நிகழும் வேறுபாடு.

விடத்துங் குளிர்சொற் செவ்வியான் மடிய னடுத்துப் பிறரோ டம ராற் யயர்ந்தா னிவர்பாங் கினும்வேறு-படுத்த நிணையம் படை யின்னின பகுதியொடுசேர விவர்க-ளிடத்து மொறுத்த லிவற்றின் வரா விவர்கீழ் மக்க ளிடத்தினுமாம்.,, என் றருளியபடி அரசன் தான் செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யுந் திறமாம். அஃதா வது, ஓர் வினையைச் செய்யும் பொழுதே அவ்வினைக்கு அழிக்கும் பொருளுக்குப் பின்வரும் ஆக்கம் மேலதாலும், அவ்வழி பொரு ளுக்கு அவ்வாக்கம் ஒத்திருத்தலும் ஆகிய இரண்டிலொன்று உறு வதாயின், அவ்வினையைத் தெரிந்த வினத்தோடும் ஆராய்ந்து பின் னர்த் தானுந் தனித்தெண்ணிச் செய்தலவேண்டும். வலியாங்கால மும் இடனு மறியாது பிறர்மண்கொள்வா ரென்று தண்மண்ணு மிழத்தல்போ லெய்தக்கடவ வூதியத்தினை நோக்கி முன்னெய்தி னின் றமுதலிலும் இழுதற் கேதுவாய வினையைச் செய்யா திருத்தல் வேண்டும். அன்றியும், பகைவர்மேற செல்லுங்கால் வலி காலம் இடம் என்னு மிவைகளால் தனக்கும் அப் பகைவர்க்கும் உள்ள நிலைமைகளும், வினைதொடங்கும் பண்பும், அதற்கு வரும் இடை யூறுகளும், அவற்றை விலக்குவதும், பின்னர் வெல்லுவதும். அத னாற் பெறும் பயனும் ஆகிய இவை யீனத்தையுந் தேர்ந்துணர்ந்து ஓர் வினையைச் செய்தல் வேண்டும், தன் வினைகளுட் செய்பத்தகா தனவாகிய பெரிய முயற்சி யானவும், செய்தாற் பயனில்லனவும், அது சிறிபதாயினவும், ஐயமாயினவும், பின்னர்த் துயர் விளைப்பன வும் ஆகிய இவைகளைச் செய்தாலும் செய்பத்தருந்தனவாகிய அவற் றின் மறுதலை யாயினவைகளைச் செய்யா தொழிந்தானும் எல்லாப் பெருமைகளுங் கெடும். இவ்வாறு தேர்ந்து செய்பத்தக்க கருமமு டிக்கு முபாயத்தை யெண்ணி முபறல வேண்டும். அவ் வுபாயம் தானம் சாமம் பேதம் தண்டம் என நால்வகைப்படும் அவற்றுள் தானமாகிய கொடுத்தலைப் பொருள் கரைபாளன்கண்ணும், சாமமா கிய இன்சொல்லைச் செப்ப முடையான் மடியாளன் முன்னே பிற ரோடு பொருது அயர்ந்தவன் என்னும் இவர்கண்ணும், பேதமாகிய வேறுபடுத்தலைத் தினைப்படைபாளன் தன் பகுதியோடு பொருந்தா தான் என்னும் இவர் கண்ணும, தண்டமாகிய ஏறுதலை இம்மூவி தவுபாயத்தினும் வராதவர் - கீழ்மக்கள் என இவர்கண்ணுஞ்செய்து வெல்லுமாற்றால் முபறல் வேண்டும், மேலும் தான் வலியனு யுள்ள காலத்துத் தான சாம பேத மாகிய மூன்றினை மெலியாரிடத்திற் செய்தாலும் நலியினை யுண்டாக்கு மாதலால். எக்காலத்து எவ்வெ

வரிடத்தில் எவ்வாறு செய்ப வேண்டுவதோ அகாலத்து அவ்வவரிடத்தில் அவ்வாறு செய்தல் வேண்டும.

வலியறிதல் என்பது "வலியாரான காலத்து வழங்கலாகி மூன்றினையு மெலியாரிடத்துச் செய்திடலு மெலியாரான காலத்து-வலியாரிடத்தினெதுத்தலையும் வகுக்கின வேந்தர்க் கவையைதோ-நலிவாமதனு லவரவர்பானடத்து முறைதேர்க தியற்றிடுக.—வினையின் வலிபா திகளுன்னும் வேறுவேறு ஈர்தூகி-னினது வலிமிக் குழிவினையை நிகழ்த்து நிகர்த்த காலத்துப் புனையும் வென்றி யுறுவிழுக்கும் பொருந்து மதனு லதனிடத்து - வினையுந் தோல்வி யுறுங்குறைந்த விடத்தும் வினையை யெண்ணற்க —குறைந்த வலியாயிடினுங் கொற்ற மைந்தர் பலர்கூடி-னிறைந்த வலியென்னுமதனுனோரா தொழிக பலரொளைத்-துறைந்த வூக்கந் தனக்கொண்டே யுற்றதினது வலியளவி-னிறந்தும் வினைமேனடவற்களிகவா வென்றி வேண்டினேனே.—வந்த பொருளிற் காற்கூறு வருமே லிடர் நீக்குதற்கமைத்தி-மைந்த விருகானினைக்காக்கி மற்றைக் காலே வழங்கிடுக-சிந்து நெறிக ளகலாமற் சேரு நெறிகள் சுருங்கிடினு - நந்த லிலதா மொப்பினுமா நாடினதிகச் செலவிழுக்காம்." என்றருளியபடி அவ்வுபாயங்களுள் ஒஅத்தல் குறித்த அரசன் நால்வகை வலியையும் அளந் தறிதல். அஃதாவது தான்செய்யக்கருதிய வினைவலியும்-அதனைச்செய்து முடிக்குந் தன்வலியும், அதனைவிலக்கலுறும் மாற்றான் வலியும், இருவர்க்குந் துணையாவார் வலியும், ஆகிய இனதான்கு வலியினையும் அறிதது சீர்தூக்கித் தன்வலி மிகுமாயின் அவ்வினையைச் செய்தல்வேண்டுமன்றி, இருவர்வலியு மொப்பா யிருத்தலின் கண்ணும் தன்வலிகுறைந்துவிடத்தின் கண்ணும் ஒர்வினையை எண்ணத்தகாது. அதனற் மேலுலியும் இழுக்கும் உண்டாகும் நிறைந்த வலியினன் ஒருவனுக் கினையாகக் குறைந்த வலியார் பலர்கூடினும் அது என்னபயனைத் தரும். ஆதலால், அத்தன்மைத்தாகிய வலியினரைத் தினைகொள்ளுதலும் பலர் கூடினுரென்றும் மனவெழுச்சியாற் றம்மின் வலியாரோடு வினைசெய்யத் தொடங்குதலும் வென்றியைத் தராமாட்டாது. ஈயு நெறியின்கண் தனக்குள்ள பொருளின் எல்லையை யறிந்து அவ்வெல்லையை கான்குகூராக்கி அதில்ஒருபாகத் தைமேல்வரும் இடர்களை நீக்குதற்கும், இரண்டு பாகத்தைத் தன் செலவிற்கும் வைப்பாக்கிடின்றவொன்றினை யீதல்வேண்டும். அவ்வாறீயுமிடத்து அதனிற் சுருங்கக் கூடாதாயின் சிறிது நெறிகளிற்செலவிடாமல் முதலுஞ்செலவுந் தம்முள் ஒப்பினுங் கேடில்லை.

காலமறிதல் என்பது " ஆற்றன் மூன்று முபாயங்க ணுண்கு மிடத்தோ டமைக்திடினும்-பொற்றினைக்கு வென்றியுறும்பொழுது தேர்ந்தே வினைபுரிக - வேற்ற காலம்வருமளவு மெண்ணியிருக்கவது மைக்தா - வீற்றுச் சமர்க்குப்பின் வாங்கும் வெற்றித்தகரே யாகு மால்—மிகைமிக் கியற்றித்திடினும் வெலலுங் காலம் வருமளவும் - பகைமைபுறத்திற் றோறறமற பகைவர்தம்மைப் பண்போடு - நகை செய் தமர்போற் கமக்திடுக நாடுங் காலம் வக்துவிடின் - றகைசெய் வினையை யவ்வளவிற் றப்பாவண்ணமுடிக்திடுக." ஏன்றருளியபடி, வலியான் மிகுதி யுடையனுய்ப் பகைவர்மேற் சேறலுற்ற அரசன் அச்செலவிற்கேற்ற காலமறிதலாம். அஃதாவது, தூங்காமை-கல்வி-துணிவுடைமையன்று மூன்றுற்றலும், சாமம-பேதம்-தானம்-தண்டம் என்னு நான்குபாயங்களும், நல்ல இடனும் ஆகிய கருவிகளை யடைந்திருந்தானுயினும் பகைவரை வெல்லுங் காலமறிந்து அக்காலத்தை-எதிர்ப்பார்த்திருத்தல் வேண்டும் அவ்வாறிருத்தல் பொருகின்ற தகர் தன் பகைகெடப் பாய்தற் பொருட்டுப்பின்னே கால் வாங்குந் தன்மைத்து. அன்றியும் பகைவர் தன்பால் மிக்கசுற்றங்களைச்செய்து திரியினுந் தானவரை வெல்லத்தக்க காலம் வருமளவுந் தன் பகையை அவர் புறத்திற காட்டாது அவரைக் கண்டவுடன் பண்போடு உபசரித்ததனது உறவினரைப்போலப்பணிதல்வேண்டும். பின்னர் அப்பகைவரை வெல்லுங்காலம் வந்து கூடியவுடன் அது கழிவதன் முன்னர்ச்செய்யவேண்டிய வினைகளைத் தான் கருதிய வழியே தப்பாமே செய்து முடித்தல் வேண்டும்.

இடனறிதல் என்பது "வாயி னூழில் வழக்கமற மதிலை வளைத் தொறைறற்கொன்று-மேய தனைபாய்ப்பலபடையு மெலிவற்றிருப்ப மதிலகழி - யேயவியற்றி யரசிருக்க வேற்ற கிடகை நிலத்தோடி - பாய புனலுமுடையதுவே பகையை யழிக்கு மிடனுகும்.—ஊக்கமி லனுயினுமிடத்தோ டுற்ற வினைசெய்குவனுயி னூக்க முடையார்க் கிடனின்று மொழியு மூக்க மிலாதவனுக்-கூக்கமுடையா னுயிடினு மூற்றபடையும் பலவேனு மூக்கமழிவனிடத்தோடு முற்றுவினைசெய் யாவிடினே." என்றருளியபடி, வலியுங்காலமுமறிந்து பகைவர்மேற் செல்லும் அரசன் தான் வெல்லுவதற்கேற்ற நிலத்தினை யறியலாம். அஃதாவது, பகைவராயினேர் வாயிலகளானும் தூழைகளானும்புகலோடுபோக்கொழியும் வகை அரண வளைத்து, ஒன்றற்கொன்று தினையாகப் பலபடைகளு மெலிவற்றிருப்பதற்கு மதில் அகழிமுதலியவைகளைச்செய்து அரசிருப்பிற் கேற்ற நிலக்கிடக்கையும் நீரை

யும் உடையதுவே அவரைலெல்லக் கருதுவோனுக்கு இடமாகும் ஊக்க மில்லாதா னுயினும் அத்தன்மைத்தாகிய இடமறிந்து வினை செய்குவானுயின், அவனை வெவ்வதாக எண்ணி யிருந்த பகைவர் அவ் வெண்ணங்கின் யிழப்பார். ஊக்கமில்லாத பகைவரை வெல்லு வதற்கு அவ்வூக்கமும் படைகளும் உள்ளானேனும் இட மறிந்து வினைசெய்யானுயின் அவ்விரண்டும் பயனின்றி விளங்கும்.

தேரிந்து தெளிதல் என்பது "பிதப்புங் குணமு மறிவுமெனப் பேணுமிவையுஞ் செயல்களையுஞ் - சிறக்குங காட்சியொடு கருத்தே செயரி னூலென்றிவைதம்மை-னிறுக்கு மைமைச்சர் முதலோரை நின் றுராய்ந்து தெளிந்திடுக-வதற்கும் வினையாற்றுதற்பொருட்டு மறை போகாமைப் பொருட்டுமே—அறவோர் புரோகி தரைவிடித்திட் டவராலிந்த வரசன்று-னறவோனல்ல னிவற்போக்கி யறனெடுரிமை யுடையானை - யுறவே வைத்தற்கு கெண்ணினமீதொத்த தெவர்க்கு நின்கருத்தென - னுறவோ தெளிக்கு ஞறவோடு மோர்த்தேயொரு வன்றனைத் தெளிக—சேனைத்தலைவனொடு மவனைச் சேர்ந்தாரையும் விட்டிவ்வரச - னீனப் பொருளா சையனிவனியிழுக்கிக் கொடை யோடுரிமையுடை-யானைப் புரத்தற் கெண்ணினமீ தமைந்தவெர்க்கு நின் கருத்தென - னுறவோ தெளிக்கு ஞறவோடு மோர்த்தேயொரு வன்றனைத் தெளிக—தேனைத்தலைவனொடு மவனைச் சேர்ந்தாரையும் விட்டிவ்வரச - னீனப் பொருளா சையனிவனியிழுக்கிக் கொடை யோடுரிமையுடை-யானைப் புரத்தற் கெண்ணினமீ தமைந்தவெர்க்கு நின் கருத்தென - னுறவோ தெளிக்கு ஞறவோடு மோர்த்தேயொரு வன்றனைத் தெளிக.—தெரனுறு தொட்ட வரிமையொடு சூழ்ந்த தவரூ தாட்டியைவிட் - டொன்றுமுரிமைதனி லிகர ஞனைக்கண் நீங்கி யெனைவிடுத்தாள் - சென்றங் கவனைக் கூடுதியேற் சிறந்த பொருளுங் கூடுனைக் - கென்று தெளியச் சூளுறவாடினைபபித்தனனுங் தெளிக.—ஒருதிமித்த மேலிட்டே போரமைசசா லவன் மனையி லேனை யோரை பொருமையுற வழைப்பித்திவ் கிவர்பிழைப்பக்குழீஇ யினரென் றுறுத்திக் காவ-லொருவனில் வரசனமை யொறுக்க முயன் றுனிவினை யொறுத்துவேறே பொருவணைப் பதற்கிசைக்தே முன் கருத்தென னெனைச்சூள முறைப்பித்தோர்க.—ரல்ல குடியிற் பிறர் தாறு நவையுமறப்பு மடிமிழைப்பென்-றல்லலுறுக்கு மிவைமுதலா மனைத்துரிங்கிப்பழிக்கஞ்சி-யொல்லலுறுதானுடையானே யோர்ந்து தெளியப் படுமைந்தா-வல்ல கல்லதோர்ந் தசற்றூர் மாட்டும்வெளிறு மருவிடுமே.—சுற்ற மிலரா னவர்தம்மைச் சூழல் பழிபா வமுரா ணுர்-பற்றமிலரா குவர்விடுக பண்பார் தருநற்குணங்களே - முற்று முடையாரிலதனை முனியுங் குற்றங் :குணமிவற்றைத் - தென்றென் றுணர்ந்து குணமிகுந்த செம்மை யுடையார்தமைத் தெளிக—பெரு மைசிறுமை யளந்திகொளப் பேணுங் கருவி தத்தமது கருமமது

போற் பிறக்கருவிகழியச்சிறந்த வலவதிக - மருவ காதலாலறியார் மாட்டுவினையை வையற்க-வொருவர் தமையுற்றோராமேயொருகாலத் துந் தெளியற்க.—தேர்ந்து தெளியப்பட்டவன்பாற்றேர்ச்சிவினையுந் தகவிடுக-தேர்ந்து தெளியப்பட்டவனைத் தீதுகாரணமுறாற்க - தேர்ந் தெளியப்பட்டவன் றீராவினையை விடுமதனைத் தேர்ந்து பகைவர் பிரித்திடுவர் தேரான் றெளிவே பேரிடும்பை'' என் றருளியபடி, அரசன் தன் சூழ்வினரை யாராய்ந்து தெளிதல் ஆகாவது, பகை மேற் செல்லுமரசன தவனின் றொருகாலும் பரிந்திடும் அறைபோகா மற்றொருட்டும், அமைச்சர் முதலியினோ ருடையபிறர்பழி குணம்-அறி வுளனு மிவைகளையுஞ் செய்கலையு, மாட்டுகருத்து-ஆகமம் என் னுமளவைகளால் ஆராய்ந்துரிஞ்னர் அரும்பதை-பெருஞ்பதை-இன் பவுபதை-அச்சவுபதை என்னு நான்மையுறுத்தால் அவர் மனவியல் பையோர்ந்து தெளிதல்வேண்டும அமைச்சரிலே:—

முதலாவது—புரோகிதரையும அறிவோரையும் விட்டு அவரால் இவ்வரசன் அறமோ வலலாமையிற் றீவினை போக்கி யறனும் உரிமையு முடையா னெருவனை வைத்தற் கெண்ணினம். இதுதான் யாவர்க்கும் இயைந்தது. நினகருத் தென்னையெனச் சூளுறவோடு சொலலுவித்தல் வேண்டும.

இரண்டாவது—சேனைத் தலைவனையும் அவனே டியைந்தாரை யும் விட்டு அவரால் இவ்வரசன் பொருளாசை யுள்ளவனுகலின், றீவினைப் போக்கிக் கொடையும் உரிமையு முடையவன் ஒருவனை வைத்தற் கெண்ணினம். இதுதான் யாவர்க்கு மியைந்தது நின கருத் தென்னையெனச் சூளுறவோடு சொல்லுவித்தல வேண்டும்.

மூன்றாவது—தொன்று தொட்டு உரிமை யோடும பயின்றவ ளாகிய ஓர் தலைமூதாட்டியை விட்டு அவளால் உரிமையுள இன் னுள் நிலைக்கண்டு வருத்த மூற்றுக் கூடுவிக்க வேண்டு மென்று என்னை விடுத்தாள். அவளைக் கூடுவையாயின் நினக்குப் பேரின்ப மேயன்றிப் பெரும்பொருளுங் கைகூடுமெனச் சூளுறவோடு சொல் லுவித்தல் வேண்டும்.

நான்காவது—ஒருநிமித்தத்தின் மேலிட்டு ஓரமைச்சரால் ஏனை யோரை யுணர்வில்லின்கண் ணழைப்பிதது இவர் அறைபோவான் ஏண் ணற்குக் குழீயினரென்று தான்காவல்செய்து, ஒருவரால் இவ்வரசன் நம்மை கொல்லச்சூழ்கின்றமையால் அதனை நாம்முற்படச் செய்து கமக்கினிய அரசனொருவனை வைத்தால் யாவர்க்கு மியைந்தது. நின் கருத் தென்னையெனக் சூளுறவோடும் வினவுவித்தல் வேண்டும்.

இருகான்கு உபகைகளினுக் திரிபிலராயின், அவர் எதிர்காலத் துக் திரிபிலரென்று தெளியபபடும். மேலும் கல்ல குடியிற்பிறந்து காமமுதலிய அறுவகைக் குற்றங்களோடு மடிமறப்பு முதலியவை களையுக்கி, நமகருகு வடிவருவகொல் என்றஞ்சா நிற்கு ஈணுடைய வனேயே ஓர்ந்தறிதல் வேண்டிம. கற்றற்குரிய நூல்களுக்கற்று மேற் சொல்லிய குற்றங்களோக் களைந்தாரிடத்தும் அறிவின்மை விளங்கி நிற்கு மாதலால், அதனே நுண்ணியதாக ஆராய்தல் வேண்டும். இவ் வாறு ஆராய்ந்து தெளியபபட்டவருஞ் சுற்றமில்லாதாராயின் அவர் களித்துப் பழிபபன ஒழிதற்குரு, புகழவன செய்தற்கும், எதுவா கிய உலக நடை யியல்பு இன்மையின, அவர்கள் பழியாவத்திற் களுசார்கள். ஆதலால சுற்றமாயினுரைச் சூழ்தல்வேண்டும். குணங் குற்றங்களுள் ஒருறேபுடையார் உலகத்தியைமையின் பின்னர் அச் சுறறதினுரிடதில் அப்விரு பருதிகளையும் ஆராய்ந்து குற்றமின் றிக குணமேமிக்கதாயின அவரை வினைக குரியவராக்கிக்கொள்ளல் வேண்டும்.

ஒருவனது பெருமையுஞ் சிறுமையுந் தப்பாமல் அறியவேண் டில் அவனவன செய்யுங் கருமமே உரைகல்லாவதஞ்றிப் பிறிதொன் றின்மையால், அதலுல் அவனைத் தேர்ந்தறிதல் வேண்டும். அன்பு டைமையே பற்றுககோடாகத் தமக்குரியவேண்டுவன அறியாதாரி டத்தில் ஓர் வினேயளிதலே யொழித்தல் வேண்டும் தன்னே யை புடைய ரல்லாதாரைப் பிறப்பு முதலிய வற்றுனுஞ் செயலானும் ஆராய்ந் தறிதல் வேண்டிம அவவாறு ஆராய்ந்து தெளியப்பட்ட பின்னர் அவரை அவர் ஆற்றலுக் கேற்ற வினைகளில் விடுத்தல்வேண் டிம. அவ்வாறு விடுத்த பினைவர் அவரிடத்து ஒருதீது காணுது அர சன் ஐயுறவனுயின் அதனே அவரறிந்து இனி இது நில்லாதென்னுங் கருததால் அவ்வினையினின்று நீக்குவர் அதனைப் பகைவ ரறிந்தால் எளிதிற் பிரிதது விடுவர். பின்னாத் தேரான் தெளிவினைப்போலக் கேடுவருமாதலால் வினைசெய்வரர்பால் நீதி கண்டவழி ஐயுறல் வேண்டும்.

தேரிந்து வினையாடல் என்பது "மூன்னர்ப் பொதுவுகிய வினை யின் மூளவிடத்தித்-நீதகற்றி-நன்மைபுரிந்து வருமாயினுடி யவனைச் சிறந்தவினை-தன்னில் விடுக்க சிறநதவினை சார்ந்துபுரிவா னிடைதிரி யின்-பின்ன ரவனைப் பொதவினையிற் பெயாத்துத் தழுவவிட்டிடுக ஆளுமரசன் பாலன்பு மவலுக் காவ தறியறிவு-நாளு மவற்றைக் கல

ங்காம னன்று முடிக்கு முளத்துணிவு மூளும் வினைக்குத் தன்கரத்
தின் மெய்த்த பொருளின் விழையாத-கோளுமுடையான் புரிவினை
யிற் குற்றமுறுதி குணமேயாய்." என் றருளியபடி, அத்தெளியப்
பட்டாரை அரசன் அவர் செய்யவல்ல வினைகளையறிந்து அவற்றின்
கண்ணே யாளுந்திறம். அஃதாவது, மேற்கூறிய ஸலலாவகையானும்
ஆராய்ந்து தன்னால் தெளியப்பட்டவரை முன்னர்ப் பொதுவாகிய
வினையில் விடுத்தல் வேண்டும். அவர் அவ்வினையின்கண் அவனவும்,
ஆகாதனவு மாய செயல்களை யாராய்ந்தறிந்து, அவற்றுள் அவன
வற்றையே விரும்பி நடாத்தி வருவாராயின், பின்னர் அவரைச் சிற
ந்த வினையின்கண் விடுத்தல் வேண்டும். இவ்வாறு விடுத்தபின்னர்
வேறுபடுவாராயின் மீட்டும் மேற்கூறிய பொதுவினையின் கண் விடு
த்து ஒழித்துவிட வேண்டும். அன்றியும் அரசன் மாட்டன்பும்,
அவனுகரு ஆவனவற்றை யறியும அறிவு, அவை செய்தலின்கண்
கலக்கமின்றி இனிது முடிக்கத்தக்க மனத்துணிவும், அவ்வினையாற்
பொருள் தமது கையுற்றவழி அதன்மேல் அவாவின்மையும் ஆகிய
செய்கைகளையுடையாரே தம்மரசனது வினையைக் குற்றமற முடிக்
கும் குணத்தையுள்ளவர். இவ்வாறு செய்பவரதி லக்கணத்தை
முன்னர் ஆராய்ந்து, பின்னர்ச் செய்யப்படும் வினையினது இயல்
பை யாராய்ந்து இக்காலத்து இவ்விலக்கண முடையான செய்பின்
இவ்வீபல்பிற்றாய வினைமுடிவுமென்று அறிந்து விடுத்தல் வேண்டும்.
ஒருவன் தன்னினத்தின மிக்க வரிமையுடைய சுற்றத்தினுளும்
செய்யு முபாயங்களை யறிந்து செயலாலும இடையூறுகளாலும்
வருந் துன்பங்களைப் பொருத்தி முடிவு செய்ய வல்ல அறிவும் ஆற்ற
லும் இலனாயின், இவ்வினையை இபபொருளாலும இந்நினைவரா
லும் இவன முடிக்கவல்ல னெனக் கூறுபடுத்து ஆராய்ந்து மூன்றாந்
தனனுளியைந்தவழி அவ்வினையை யவன்கண்ணே விடுத்துப் பின்னர்
அதனைத்தானே செய்துமுடிக்கும் ஆற்றலுடையான் ஆக்கல்வேண்
டும். ஒருவன் எப்பொழுதுந்தன் வினையின்கண்ணே முயற்சி தவ
றுதி பிறனாயு கில்லாது கேளிர் செய்யும் உரிமையெல்லாஞ் செய்
தொழுக அதுபொறாதார் கூறுஞ்சொற்களை அரசன்கேட்டு அவனை
அவமதிப்பாகக்கொண்டு பகைப்பனாயின், அவன் அவ்வினையினின்
றீங்குவன், பின்னொருவரும் அவ்வினைக்கு உட்பட்டு முடல்வாரில்
லேயாம். ஆகலே தன் செல்வத்திற்குக் கேடுறாம் வினைசெய்வாரைக்
கோடாதிருப்பராயின் உலகங் கொடாதிருக்குமாதலால், அரசன்
அவர்செயலை நாடோறும் ஆராய்தல்வேண்டும்.

சுற்றந்தழால் என்பது, "பற்றும் வெறுக்கை யொழிக்குழியும் பழையெடுத்துப் பாராட்டுஞ்-சுற்றமதனைப் பெருங் கொடையாற் றூயமொழியாற்றழுவலுறி-னற்றமவனுக் கொருகாலுமணுகாதாக்க மிகப்பெருகு முற்றவினைக்கும் பகைவர்தொழிலின் முற்றதேம கண் டேனே." என்றருளியபடி அரசன் தன்கிளைஞரைத் தன்னினீங்கா மல் அணைத்தல், அஃதாவது, ஒருவன் செல்வக்தொலைந்து வறிய னையகாலத்தும் பிறரைப் போலவிடாது தம்மோடு அவனிடைப்ப ழகை யெடுத்துப் பாராட்டு மிபல்புள சுற்றத்தாரிடத் துளவாக லால் அவரைப் பெருங்கொடையாலும் இன்சொற்களாலும் அர சன் தழுவுவனுயின், அவனுக்கு எக்காலத்தஞ் சோர்வணுகாது. செல்வம் மேலுமேலும் விர்தியாகும். தன்னை வெல்ல நினைக்கும் பகைவர் தொழிலும பயனபொறாது.

பொச்சாவாமை என்பது, பொருமிதம் பெரிய செல்வம் பேரெ ழில் பெரியனின்பக் - தருபி தகளிப்பின மூழ்கித் தங்குறி னேம கண்டா வருமிகு பொச்சாப பந்தமறியா வின்னேக்காத்துப் - பொ ருமிகு பகையையெல்லும் பொருளொர மிழப்பதாகும்.—உற்றிடு மாற்றன் மூன்று முபாயங்க ளுனுக்கு நன்மை - பற்றிய தொழில்க ளோந்தும் பண்புறு குணங்களாறு-பற்றையவனேத்துங்கேடரம் வளர் பிறப் பேமன்காறும்-பற்றிடு நன்மை யின்றும் பாழ்த்த பொச்சாப் புச் சாரின்.—நெஞ்சழுக்கியொன் றின்றிச்செய்ய நினைந்த காரியத் - திற்சென்று - புகழ்ச்சிசெய் முயற்சி செய்பிற் பொருள் பயவாமை யில்லை-யிகழ்ச்சியிற் கெட்டார் தமமை யெண்ணுதல் செல்வையா யின்-மகிழ்ச்சியின் மைந்துறுத வண்மைவந் தடுக்குமைந்தா." என் றருளியபடி, உருவுந் திருவும் ஆற்றலுமுதலியவைகளினுஞ் சோர் தலேச்செய்யாமை. அஃதாவது, அரசனுயினுன் பெருமிதல்-பெருஞ் செல்வம்-பேரெழில்-பேரின்பம் என்றுமிவைகளால் வருங்களிப்பின் மூழ்கினுனுயின் உடனே பொச்சாப்பு உண்டாகும். அதனுல் அவன் பகைவரைவென்று பாதுகாக்கவல்ல எல்லாப் பொருளும் அழிவெய் தும் தூங்காமை முதலிய மூவகையாற்றலும், தானமுதலிய நால்வ கையுபாயங்களும், ஈட்டல் முதலிய ஐவகைத் தொழில்களும், ஈட் பாக்கல் முதலிய அறுவகைக்குணங்களும், மற்றுமுள்ள யாவும் கெ டுவதன்றித் தேவர் முதலிய எழுவகைப் பிறவிகட்கும் நன்மையுறுதி ஆதலால் தான் செய்யக்கருதிய காரியத்தின்கண் நெகிழ்ச்சியுறுமற் சென்று முயற்சி செய்வானுயின், அவனுக்குக் கிடைக்காத பொருள் ஒன்று மில்லே. முற் காலத்தில் அந்நெகிழ்ச்சியினுற் கெட்டவர்களை

நினைத்து காமும் அவ்வா றிருக்கின் நம்மைக் கேடுறுமென்று கருதி அதனைக் கைவிடல் வேண்டும்.

செங்கோன்மை என்பது "எய்திய குற்றத்தோர்கள் யாவராயி னுங்கண்ணோடா-தைதென காடி. நீதியறத்தலைப்பிழையாத்கண்டஞ்- செய்தலே செங்கோ லாகுஞ் செய்பகோலின்றே லென்னு - முய்த்தி செய் மழையான் மக்களுமு பயனுற்றபோதும்—மழைவளஞ் சுரக்கு மாறும் வயனிலம் வினையு மாறும-வினையறம் வளரு மாறும் வேத நூல் விளங்கு மாறுந்-தழைபொரு னீட்டுமாறுஞ் சமரிடைவெல்லு மாறும் - பிழைதப வாழுமாறும் பிறழ்தரக் கோனுஞ்சும்—கருவி ஞஞ் சாதிதம்மாற் காமமாருயிரைக் கொல்வோர் - வெருவரச்சூறை கொள்வோர் மேவியா றலைப்போர் கள்வ-ருருவளர் பிறனில் வேட் போருவர் முதலோரைக்கோறல் - பருவரு பாவமன்று பயிர்க்கூக் கனைதல் போலாம—பரிசனம் பகைவர் கள்வர் படைதரு மூயிர்க டாமென்-றுரைசெயைந் திடத்தினு முலகிடை யிடையூறெய்தா- வரிசையிற் காத்துநீதி வழுக்கிஞர்தம்மை மொத்திக்-கரிசறப்பொரு ஞங்கோடல் கர்வலர் தருமமைந்தர." என் றருளியபடி, அரசனும் செய்யப்படு * முறையினது தன்மை அஃதாவது, மழைவளத்தாற் குடிகட்கு உணவு முதலிய உளவாயினுந தம்மை யாளு மரசன் † ஒழுக்கம் வழுக்கு-தண்டம என்னு மூவகை அறத்தினவழித் தனது செங்கோலைச் செலுத்தில ரூயின அவைகளால் அக் குடிகட்கு என்ன பயன் ஆதலால் செங்கோல் செலுத்தும் வெண்குடை வேந் தனி தீயார் மாட்டுமூவகை யொறுப்பும் உடையனதல் வேண்டும். அமமூவகை யொறுப்பு தன்னஞ் செய்தலும், பொருட் கோடலும்

---

* அம்முறை ஒருபாற் கோடாது செவ்வியகோல் போறலிற் செங்கோ லெனப்பட்டது.

† ஒழுக்கம்-என்பது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக் கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற் கோதிய அறங் களில் வழுவாதொழுகல். வழக்கென்பது ஒரு பொருளைத் தனித்தனியேன தென தென்றீருப்பார் அது காரணமாகத் தம்முண் மாறுபட்டு அப்பொருள் மேற்செல்வது. அது கடன் கோடல், உபநிதி, கூடிமேம்படல் நல்கியதை கல்காமை; ஒப்பிப்பணிசெய்யாமை, கூலிகொடாமை, உடையானல்லான்விற் றல், விற்றுக் கொடாமை கொண்டுள்ள மொப்பாமை, கட்டுப்பாடு கடத் தல், நிலவழக்கு, மாதரோவர் தருமம், தாயபாகம், வன்செய்கை, சொற் கொ ணை, தண்டக்கொடுமை, சூது, ஒழிபு எனப் பதினெட்டாம். தண்டமென் பது அவ்வொழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வலியுடையரை அந்நெறி நிறுத்தற்பொருட்டு ஒப்ப நாடி அதற்குத் தக வொறுத்தல்.

கோறலும் ஆம். அவற்றுள் தன்பஞ் செய்தலாவது குற்றஞ் செய்தவர்கள் உயிரிறுஞ் சிறுதவராயினும் அவர்பாற் கண்ணோடாது, அக்குற்றத்தையே நாடி நடுவு நிலைமையைப் பொருந்தி அக்குற்றத்திற் குச்சொல்லிய தண்டத்தை நூலோரோடும் ஆராய்ந்து அவ்வளவிற் ருகச் செய்வதாம் பொருள்கோடலென்பது சுற்றத்தாராலும் பகைவராலுங்களவராலும் உயிர்வர்க்கங்களாலுந் தன்னுயிர் குடிகட்கு ஓரிடையூறெய்தாவண்ணங் காத்தி, நீதியின்கண் வழுக்கினோர்களைப் புடைத்துப்பொருள் சம்பாதித்தலாம். கோறலென்பது தீக்கொளூ, வுவார், கஞ்சிடுவார், கருவியிற் கொல்வார், கள்வர், ஆறலைப்பார். சூறைகொள்வார், பிறனில்விழையார் என்னுமிவர் முதலாயினுளை உழவன் களையைக் களைகது பைங்கூழைக் காப்பதுபோலக் கொலையாளனுயுத்தத் தக்கோரைக் காத்தலாம். மழைவளஞ் சுரப்பதும், வயனிலம் வீளைவதும், அறம்வளர்வதும், வேதநூல் விளங்குவதும் பொருளீட்டுவதும், சமரில் வெல்வதும், குற்றமறவாழ்வதும், அரசனுற் செலுத்தப்படுகின்ற செங்கோலினுகும். ஆதலால், இத்தன்மைத்தாகிய செங்கோலைத் தனக்குமுட்டு வந்தவழியும்முட்டாமற் செலுத்துவனுயின் அவனை அச்செங்கோலே காக்கும். முறைவேண்டினோர்க்கு எளிய செவ்வியையுடையவனுய் அவர சொல்லியவற்றை நூலோர் பலரோடும் ஆராய்ந்து நின்ற உண்மைக்கொப்ப முறை செய்யானுயின் தனக்குப பகையின்றுமேனும் பழியும் பாவமுந் தேய்த்துவிடும்.

கோடுங்கோன்மை என்பது 'முறைமைமுட்டாது செய்துமூழ நிலங்காப்பினருத-வறைவனேர் செங்கோல் காக்குமெளியசெவ் வியனுமாகான் - குறைவளர் குற்றமீமாரான குணத்தொடு முறைசெய்யானே-நிறைதரு பாவநதேம்க்கு நெடும்பகையின்று மேனும்.—அறுதொழிலாளர் நூல்க ளயர்ப்பரான் பயனின்றருகு முறைபெய லொழியுங் கூழுங் குடிகளு மொருங்கு நீங்கும் - பெறுபய னுட்டிற் குன்றும் பிறங்கொளி நிலபெறுது - கறையினின்மேற் பொருள் கைக்கொண்டு காவலே விடுப்பின்மைநதா. என் றருளியபடி, அம்முறையினது கோடுற்ற தன்மை. அஃதாவது அரசன் பொருளே வெளிக் குடிகளே ,அலைத்தற் றொழிலைத்தன்மேற்கொண்டு முறையல்லவற்றைச்செய்தொழுகுவனுயின அகதனர் நூல்களே மறந்து விடுவர், அவனுட்டுப் பசுக்களும் பால்குன்றும். பருவமழையின் றும் வகைமேகமும் பொழிதலைச் செய்யாது முன்னீட்டிய பொருளும் புன்னிட்டுதற்கேதுவாகிய குடிகளும் ஓழுங்கு நீங்கும். அவனுட்டினைகளுள்ள பெரும்பயனுங் குன்றும் அவன் புகழுங்கெடுமி,

வேரூவந்த செய்யாமை என்பது, "கடுமொழி கண்ணோடாமை கையிகந்திட்ட தண்ட - கடுகிலியின்மை செவ்வியின்மைகன் முகமூ றுமை-யுடனுறச்சூழ்ந்து செய்யாதுறுபிழை யமைச்சர்க் கேற்றல்-படிசமச்ச் சிறைசெய்யாமை பலவுக் தீங்காக்கு மைந்தர." என்றரு ளியபடி, குடிகளஞ்ஞவதும் பகுதியஞ்ஞவதுக தானஞ்ஞவது மாய தொழில்களைச் செய்யாமை. அஃதாவது, அரகனுயின் கடியசொல் லுங் கணோட்ட மின்மையுங் குறைத்தின்மிக தண்டமும் நடுவநிலை யின்மையும், தன்னே காண வேண்டுவார்க்குச் செவவியின்மையுங் கண்டால் இன்ஞ முகத்தினேயுடைமையும், காரியத்தைபற்றி வந்த எண்ணத்தை அமைச்சர்மேல்வைத்து அவரோடு தானும் எண்ணிச் செய்யாமையும், அப்பிழையாற றன்காரியந் தப்பிய வழி சினந்து அவ் வமைச்சரை வெகுளுதலுங், செருவருதற்கு முன்னே தனக் கும் புகலாவதோர் அரண் செய்திகொள்ளாமையும் ஆகிய இவைக ளெல்லாக் தீங்காக எண்ணிவிடல்வேண்டும்.

கண்ணோட்டம் என்பது, "பயின்றவர் தம்மாற்கூறப் பட்டன மறுக்கமாட்டா-வியன்ற கற்குணங்கண்ணோட்ட மித்தகுகண்ணோட் டந்தா - முயன்றுசெய் முறைக்குக்கேடு முன்னுனர்மாட்டுக்கூடா - நயந்தபனிக்குத் தீங்கு நாட்டினுர் தம்பா னுட்டல்." என்றருளிய படி, நட்சம், அஃதாவது, அரசன் தன்னேடு பயின்றுரைக் கண் டால் அவர் கூறின மறுக்கப்படாமையாகிய கண்ணோட்டத்தைத் தான்முயன்று செய்யுமுறைக்குக் கேதுநினேப்பார் மாட்டிம, தனக்கு நன்மை கெடத் தீங்கு நாட்டினுர் மாட்டும், கொள்ளா திருத்தல் வேண்டும்.

ஒற்றுடல் என்பது "உளக்கதீதி நூலாக வொற்றே வெளிக் கண்ணனவிடுத்து - வினக்குஞ் செயலான் மொழிதனுல் வேண் டாசற்றம் வினேஞரையு - மளக்கமைந்த வொற்றுவதையு றுத வுரு வோடு-துளக்க மின்றியென் செயினுஞ்சோர்விலாத தெனவறிக.— ஒருவ ரொருவர் தமையமியா தொருமை வினேக்கண் மூவர்தமை-மருவவிடுக்க மூவர்களும் வந்து மொழிவதோர்ந்துவிடிற்-கருமமதனே மிகத்தெளிக கருமம றைப்பவேண்டுதியேற் பொருவிலவிர் தம் பாற் சிறப்புப்புறக் தோன்றுமற் செய்திடுக" என் றருளியபடி, பகைகொ ணமல் கட்பு என்னுமூன்று திறத்தார் மாட்டுங்கழ்ந்தன வறிதற்கு ஒற்றரையாளுதல். அஃதாவது, அரசன் நீதிநூலேத் தனது உளக்

கண்ணுகவும், ஒற்றை வெளிக்கண்ணுகவும் * விடுத்துத் தன் காரி யஞ் செய்வார் சுற்றத்தார் பகைவர் என்று சொல்லப்பட்ட அனை வரையும் சொல்லானுஞ் செயலானும் ஆராய்தல் வேண்டும். அவ் வாறு ஆராயத்தக்க ஒற்றன் எவ்வாறிருக்க வேண்டுமெனில், ஏனை யோர் கண்டால் ஐயுறுதலடிலோடுபொருந்தி அஞ்சாதுநின்று யாவ ரேனும் ஐயுற்றுப் பிடித்தா என் செய்தி கேட்டானுக தன்னை வெளிப்படுதாதவனு யிருத்தல் வேண்டும். அத்தன்மையாகிய ஒற் றையாளுமிடத்து ஒருவனை யொருவனறியாத வண்ணம் ஆளல் வேண்டும். அங்ஙனமாண்ட ஒற்றர் மூவரை ஒரு பொருண்மேல் வேறுவேறு விடுத்தல்வேண்டும். அக்காரியத்தைப் பின்பு மறைக்க வேண்டுமாயின், அவ்வொற்றர்கட்குச்செய்யுஞ் சிறப்பினைப் பிறரறி யாமற் செய்தல் வேண்டும்.

ஊக்க முடைமை என்பது "ஊக்கமுடையார் கைப்பொருளை யொழித்தாரேது மொழிவில்லா - வாக்கமுடையரே யாவராக்கமிருந்து மசைவில்லா - வூக்க மிலரே லேதுமில ருணர்ந்து முயற்சி பொருள் கொடைக-டேக்கும்புகழ் நற செருக்கினையின் சேரா வேம கண்டனே." என் றருளியபடி, மன மெலிதலின்றி வினை செய்தற்கட் கிளர்ச்சியுடைத்தாதல், அஃதாவது, ஊக்க முடையவர்கள் கைப் பொருளை யிழந்தார்களேனும் அவர்கள் அழிவில்லாத ஆக்கத்தை யுடையவரே யாவார். அவ்வாக்கமிருந்தும் அசைவற்ற ஊக்கமிலரா யின் ஏதுமில ராவார். அவர்கள் முயல்கின்ற முயற்சியும்பொருளுங் கொடையுஞ் செருக்கும் முறையைச் சேராது.

மடியின்மை என்பது "மடியொன் றுளதேல் வல்விரைந்து வருக்குந்தொழிலீலை மீட்டிக்குங் கடியு மறவி தியில்லிளக்குங் கலதி தனைச் சேர்த்திடும் பகைவாக்-கடிமைபுகுத்துங் குடிகெடுக்கு மதனை விடிப்பி ணுண்மையினுங் - குடிமை யிடத்தும் "வேறுளவாங்குமும் பலவு மொழிக்குமே" என்றருளியபடி கருதியன செய்யுங்காற் சோம்புத லில்லாமை. அஃதாவது, ஒருவரிடத்தில் மடியென்ப

* ஒற்றனுதன் கண்செல்லமாட்டாத பரப்பெல்லாஞ் சென்று கண்டு ஆண்டெய்கழ்ந்தன வெல்லா முணர்த்தலானும், நூலானது அங்ஙனங்கழ்ந்தவற்றிற் குத்தன் னுணர்வுசெல்லாமாட்டாதவினைகளெல்லாஞ்சொல்லியுணர்த்தலா னும், இவ்விரண்டனையுமே தனக்கு ஊனக்கண்ணும் ஞானக்கண்ணுமாகத் தினைந்து கொண்டு ஒழுகவேண்டு மென்பதாம்.

தொன்றிருக்குமாயின், அவன்விரைந்தசெய்யுந் தொழிலே நீட்டிக்கும். ஐயமறநி துயில் இவைகளே விளைவிக்கும். கலதியைச் சேர்ப்பிக்கும். பகைவர்க்கு அடிமை புகச்செய்யும. தான்பிறந்தகுடியைக் கெடுக்கும். ஆதலால் அகனைவிடுக்கின் அவனகுடியுள்ளும் ஆண்மையுள்ளும் வந்த குற்றங்கள் ஒழியும.

ஆள்வினை யுடைமை என்பது "விடாததவளிற்செயு முயற்சி மெண்மேற் பொருளே மிகவளர்க்கு-கெடாது நற நற்பினர்தங்கி னேயுந் தாங்கும் யாவர்க்குந - தடாத வுபகாரமும் புரியுந் தடக்தசம ரையாளையுஞ் சேர்கருகும் - படாததவுமுவந திதெரடியும் பயனெனவினைக் கும்பழியின்றும்." என்றருளியபடி, இடைவிடாத மெய்ம்முயற்சி யுடையனதல். அஃதாவது, ஒருவனதவளிலுல விடாது செய்கினற முயற்சியானது பொருளே மேலுமேமேலும வளர்க்கும். சுற்றம் சுட்புகினே ஏஞ்ஞு மிவைகளைக் கெடாதவணணம் தாவகும. யாவர்க்குந் தடையிலாத உபகாரத்தைச செய்விக்கும இலக்குமி விலாச முண்டாக்கும். பயனே விலக்குவதாய் ஊழ் வருத காலதனும் அப்பயனேயே கெடாதவண்ணம் விர்தியாக்கும. பழிகளே நீக்கும்.

இடுக்க ணழியாமை எனபது, "எடுத்த கருமம முடிவதன்மு னெய்துங் தெய்வத் தாலுகக்-தெதாடுத்த முயற்சியாலுடலிற் சோர்ன் , றும் வருத்தத்தாலுக - மடுத்த பொருளின மையினுக மைந்தாவடு க்கி வந்திடினு-மிடுக்கண் னடைக்கு ளழியற்க வின்ப மதுவே யெனத் தெளிக.,, என்றருளியபடி, வினையின்கண் முயல்வான் இடுக்கண் வந்துழி அதற்கு மனங்கலங்காமை. அஃதாவது, ஒருவனுக்குத் தெய்வத்தாலேனும் பொருளினமையாலேனும் மெய்வருதத்தாலே னும் இடுக்கண் வருவாயின் அதற்கழிவுறாது தேவகதி, மக்கட்கதி விலங்கின்கதி நரககதி என்னு நாற்கதியினுமுள்ள உடம்புகள் இடும்பை யென்னும் வாளுக்கு இலக்காவது சுபாவமென்று தெளிர்து தன்மேல் வந்த இடும்பையை இன்பமாகக் கொள்ளுதலாம்.

அமைச்சு என்பது, "கனிபயன் பயப்பச் சினமுயற்சியினு னல த்தருவினையு மறநனய-வினையினைத் தொடங்குங் காலது தனக்கு வேண்டிய பொருள்களும் படையு - மினிதுறு பொழுது முபாய முஞ் செயலு மிடைப்படு மூறுகணீக்கித் - துனிவற முடிவு போக்கிடு மாறுஞ் சூழ்தர வல்லவ னமைச்சன்—மிகைவினை வரினுமகை வுறு வன்கண்ணிழுக்குடிகாத்தலான் வினைமுல்-வகையுறச் சூழ்ந்து விடுவென விடுத்து யருப்பன வகுத்திடல் வேண்டிற் - பகைவர்தன்

தினைபைப் பிரித்தறம் மிடத்துப் பயின்றவர் பகைவர்பாற்புகாமற் றகையுறச் செய்தல் பிரிந்தவர் தம்மைத்தம்மொடு பொருத்தலுமைச்சரம்—அறிவதஞ் செயலுமொழிவது மரசர்க் கரக்கமே குறித்தன வாகுந் - திறனுணர்றறியா வரசருக் குறுதி செப்பலுஞ்செய்வன வேனு - முறுமுல கியறைக் கொத்திடிற் செயலு மொருவி னேக் கியைந்தபல் செயலு நிறுவதொன்றல் வாய்ப்பவெஞ் ஞான் றுகிழ்க்தலு மமைச்சருக் கியல்பாம்.,, எனறருளியபடி, அமைச்சனது தன்மை அருகாவது, சிறிய முபற்சியினுற் பெரிய பயனைத் தருவதான வினையும், அவ்வினை செய்புங்கால் அதற்கு வேண்டிய பொருளும், அதற்கையைந்த படையும், அதற்கேற்ற காலமும், அது தொடங்கும் உபாயமும், அது செய்யுமாறும், அதை இடையூறு நீக்கி முடிவு போகுமாறும அகிய இவைகளோடு தமக்குத் துன்ப நேரிட்ட காலத்தும் வினைசெய்தற்கண் அசைவின்மையும், குடிகளைக் காத்தலும், முயற்சியும், நீதி நூல்களைக் கற்றுச் செய்வன தவிர்வன அறிதலும, வினைவந்துறிப் பகைவர்க்குத் தூணையாயினுரை அவரிற் பிரிக்கவேண்டிற் பிரித்தலும், தன்பாலாரை அவர் பிரியாமற்கொடை இன்சொற்களாற் பேணிக்கொள்ளுதலும், முன்னே தம்மினுந் தம்பாலாரினும் பிரிந்தாரை மீண்டும் பொருத்தவேண்டிற் பொருத்தலும் என ஒரு காரியச் செய்கை பலவாற்றுன்றின. அவற்றுள அமைச்சு ஆவது ஆராய்ச்சறிதலும் அது செய்யுங்கால் வாய்க்குந் திறகாடிச செய்தலும, சிலரைப் பிரித்தல் பொருத்தல் செயற்கண் அவர்க்கு இதுவே செயற்பாலதென்று துணிவு பிறக்கும் வகை சொல்லுதலும், அரசனுக்கு ஆக்கமேகுறித்தனவாகுந் திறலும், அறிந்து சொல்லியாராது அறிவையும் அழித்து அரசன் தானும அறியாளை யாயினும் அக் குற்றம் நோக்கி பொழியாது அவனுக்கு உறுதியாயின கூறுதலும், தூனெறியான் வினை செய்யுந் திறங்களை யறிந்த விடத்தும அப்பொழுது நடக்கின்ற உலக வியற்கையை யறிந்து அதலேடு பொருதச்செய்தலும், தன்னரசன் சுருங்கிய காலத்தும் பெரிகிய காலத்தும் இடை நிகராய காலத்தும் அவன் செய்யப்படும் அறங்களை யறிந்து தனக்கேற்ற கல்விபால் நிறைந்தசொல்லே யுடையவனுய் வினைசெய்யுந் திறங்களை யறிவதும் ஆகிய இவ்வியல்புகளையுமுடையவனே அமைச்சனுவான். செய்யப்படும் வினைகளை முன்னர் அளவுபட எண்ணல்மாத்திர மன்றிச் செய்புங்கால் அவைகளை முடிக்கமாட்டாத அமைச்சனுந் தன்னரசனுக்கு அகிதமெண்ணும் அமைச்சனும் எழுதப்பட்ட சித்திரங்களினு மாகா.

சோல்வன்மை என்பது, சுருக்கிமெய் விளக்கி யிளிமையும் பயனுக் தொருக்கய லார்மொழிகிடையாத் - திருக்கிளர்மொழியைச் சோர்வறவைக்கட் செல்லுமா றஞ்சுத லின்றி - யுரைக்க வல்லவரே யமைச்சர்களாவ ரதுமுறை பிறழ்தரப் பலவாய் விரிக்கவல்லவருங் கற்றது விளங்க விரிக்கமாட்டாருமெல் லியரே.,. என்றருளியபடி, தான் கருதியவினை முடிக்குமாற் றில் அமைச்சியல்கடத்தற்கு வேது வாய சொற்களைச் சொல்லவல்லவனதல். அஃதாவது தன்னிற்பிரிக் கப்பட்டவரும் பகைவருமாகிய இவர்கள் பின்னர்க்கூடி வேறுபடா மலிருக்கும் அப்பகைமை யொழித்து நடப்பினை விரும்புமாறும், அவருள்ளத்தைப் பிரிக்கத்தக்க சொற்களைத் தன்காரிய முடிவேய் தும் வண்ணங்குடிப் பிறப்பினுங் கல்வியினும் ஒழுக்கத்தினும் உரு வத்தினும் பருவத்தினுந் தனக்கும் அவர்க்கும் உளவாய ஏற்றத் தாழ்வுகளை யறிந்து சொல்லல்வேண்டும் அவ்வாறு சொல்லுமிடத் துச் சுருக்கி மெய்விளக்கி இனிமையையும் பயனையுந் தொருத்து அயலார் கூறுமொழிக்கு இடையாத மொழியாக வழுவின்றி அவை சொல்லுமா றஞ்சுதலின்றி யுரைக்க வல்லவனே அமைச்சனுவன். அவ்வாறின்றி மேற்கூறிய சுருக்கன் முதலிய குணங்கட்கு மறு தலையாகப் பலவாய வார்த்தைகளை வீணே விரித்துரைக்க வல்லவ னுங் சற்றுவைத்த நூலைப் பிறரறியும் வண்ணம் விரித்துரைக்கமாட் டாதவனும் மெல்லியனே யாவன்.

வினைத்தூய்மை என்பது, "பொருள் பயக்கிடினு மறப்புகழ் பயவாப்புரைபடு வினையென்றும் புரியார் - மருளின்மற் றெருகரற் புரியினு மிரங்கார் வையகத் தேனையோர்போல - விருமுது குரவர் கற்புடை மகளி ரிளமகவியர் பசித் திடினும் - பெருமிதப் படாத வினைசெய்யாரு ளருபேணு நகர்க்கேமஞ்செ யமைச்சர்.,, என்றரு ளியபடி, செய்யப்படும் வினைகள் நல்லவாதல். அஃதாவது தன்னர சனுக்கு ஆக்கத்தை யுண்டாக்க வல்ல அமைச்சன்பொருளேபன்றி அறமும் இன்பமு மயவாத வினையை எஞ்ஞான்றும் புரியான் ஒருகால் மயங்கி அவற்றைச் செய்தானுயினும் அது செய்தற்குப் * பின்னிருந்திரங்கான் தாய்தந்தையர் கற்புடைய மனையியர் இள

* பின்னிருந் திரங்குவனுயின், அது நீரும் வாயிலறிந்தில னெனவுந் தீப்பயிலனெனவும் பயனில்லனசெய்கின்றனெனவும் தன்பழியைத்தானே னாற்றுகின்றனெனவும், எல்லாருமிகழ்தலிற்பின்னிரக்காமை மன்றென்றார்.

மக்கள் என்னு மிவர்கள் பசியால் வருந்தினும் உலகத்தின்கண் ஏனோர்போல அறிவுடையார் பழிக்கும் வினைகளைச் செய்வான்.

வினைத்திட்பம் என்பது, "ஊறுசேர் வினையைப் புரிதரா சூழா லூறுவந் தடுப்பினுங் கலங்கார்-கேறுகாரியத்தை முடிப்புழியன்றிச் செயன்மொழியாதியா லிடைபே-வேறுபோ மாறு விளங்குரார்துணி ந்த வினைதளங்காது வல் விரைவார் - வீறுசே ரிவரை யுருவுகண் டெள்ளா வேந்தனே வேந்தனு மைந்தா.,, என்றருளி யாங்கு அத் துயவினை முடிப்பா னுக்கு வேண்டுவதாய மனத்திண்மையாம். அஃ தாவது, பழுதுபடும் தீவினைகளைச் செய்யானும், ஊழால் ஊறுவந் தடுப்பினுங் கலங்கானும், செய்யப்படும் வினையை முடிவின்கண் ணன்றி யிடையில் தனது இங்கிதம் வடிவுசெயல்மொழி என்னு மிவைகளால் வேறுபடுமாறு செய்யானும் மனக்தொளிர்து செய்வ தாகத் துணிந்த வினையின்கண் பின்ன ரசைவின்றி முடிக்க விரை வானுமே அமைச்சனுவன். இத்தன்மையனுகிய அமைச்சனே அவ னது வடிவின் சிறுமை நோக்கி இகழ்தலைச் செய்யாத அரசனே அரசனெனப்படுவான்.

வினைசெயல்வகை என்பது, துணிவுறு மளவுஞ் சூழ்ந்துபி னிராது சூழ்வினை பொருந்தம்வா யெல்லாந-தணிவுற முடித்த லது தகரதாயிற் றருபொருள்வினையிடங்கால - மணிபுறு கருவியைந்து மாய்ந்திகலே யடர்ந்த லொட்டார்க்கழி வறங்காற் - பணிவுசெய்தே னுங்காத்தன் முத்தொழிலும் பண்புடை யமைசசர்தங் தொழிலே.,, என்றருளியபடி, அத்திட்பமுடைய அமைச்சன் பகையிற்றன் வலி யுஞய காலத்தும், ஒப்பஞய காலத்தும், மெலியஞய காலத்தும், அவ்வினையைச் செய்யுந்திறம் அஃதாவது, தான் வலியனுய கால த்து இவி இவ்வினை தப்பா தென்னிக் துணிவினைப் பெறுமளவும் விசாரித்தும், அங்ஙனம் விசாரித்துத் துணிவுபெற்ற வினையின்கண் நீடித்தலே யொழித்துத் தன் பகையோடு கேரிற் செய்தலும் அப் பகையிற்ரு னெப்பானுயகாலத்து அழி பொருளும், ஆகு பொரு ளும் தன்ரூனையும், மாற்ரன்ரூனையும், தனக் காங்காலமும் அவற் காங்காலமும், தான் வல் வினையுங், அவன் வல் வினையும், தான் வெல்லு மிடமும் அவன் வெல்லு மிடமும் ஆகிய இவ் வைந்தையு மாராய்ந்து தான் வென்றி யெய்துக் திறத்திற் பிழையாமல் எண் ணிப் படர்தலும், தாளுகின்ற நாடும் அரணும் அற்பமாகித் தன் னின் வலியனு யெதிர்வழித்தன் பகுதி நடுங்கலுக் கஞ்சி மெலியா

ஞய காலத்து அகநிலைக்கு வேண்டுவதாய சந்து கூடுமாயின், அவ ரைத தாழுகது அதனே யறுப்ச் கொளளலும ஆகிய இம் மூவகைத தொழிலும் பண்பின் மிகக அவவமைசசர் தொழிலாகும்.

தூது என்பது, "குடிபபிறக திருநூல கறறறிநதமைசசர் குணங களு மூடையனுய்ச சுறறங் - கடபபடி மரச னிடதது மனபுங் கருதிவேற் றரசரைப் பண்பும் - விடபபடா வினசொல வண்மையு மூருவும் வெருவாததிண்மையு மருவி - யிடததொடு செவ்வியறிநது காலததுக் கேறறவு முரைபபவன றூது, —உறுபொருள காமம் விரும்புறறத் தூயமை யுயிரக்கழி வறிவு மஞசாமை - மறபுலததமை சசர் திணமையாக தனமை வாயமைசொற சோவாறத திணிவு- மறவற வுடைய னுய்வழியுரைபபான மதநிமகதுதனு மூடங்கல- குறுகுபுகொடுபபான கடைபபடுதாகன கூறிய விவரையுக தழீஇக் கொள.,, னெறருளியபடி, * சுருதி விகிரகங்கட்கு வேற்று வேந்த ரிடைச செல்வாரது தனமைபாம. அஃகாவது, தூகருள தலே இடை கடை என மூவகையா ருளா. அவருள அமைசசு பூணறகமைகத குடிபின்கட் பிறகது நீதிநூலே யுணாகத அமைசசரிடைததான் அர நூலேக் கறறறிகது அவ வமைசசரது குணங்களேயு மூடையனுய்த் தான் சுற்றததார மாட்டுக தனனரசன மாட்டும் அனபுடைமை யும, அவர்மாட்டாராயது கூறுஞசொல வனமையும, கண்டார் விரும்புக தோற்றப பொலிவும, இயறகை யறிவும ஆகிய இவையனை தையு மருவி வேற் றரசரிடததுச் செலலுங்கால் அவரிடததுத் தானசெய்யு மூறைமை யறிகது பின்சென்ற கருமஞ சொல்லுதற கேற்ற இடமறிகது அவர்செவவிபாராதுக் காலததோடு பொருகத அதை முடிக்கததக்க உபாயததை யறிநது சொல்ல வல்லவன தலே யாயதனனும. பொருள காமங்களேபபற்றி வேற்றரசரிடதது வேறு படக்கூறுத தூய்மையும், அல்வாறத்தை தனனுயிருகது இறதிதரு மாயினும அதற்கஞ சிலொழியாமையுந் தனகது அவ வமைச்சர் திணேயாக் தனமையும ஆகிய இம மூன்றேடு கூடிய மெமமையுக தனக்குவரும ஏதததிற்கஞசி அவனுக்குத் தாழ்வான வாததையை வாய சோர்நதஞ சொலலாத திண்மையு மூடையவன் இடையாய தூதனும. வேற்றரசரைக் குறுகி ஓலேகொடுத்து நிற்பான் கடையாய தூதனும.

* இவற்றுள் பொருததலுகருச் சுருதியென்றும, பிரிததலுகரு விக்கிரக மென்றும் பெயர.

மன்னரைச் சேர்ந்தொழுகல் என்பது "இறைசிறப்பாக வணி வன துகர்வ வினிதுறு மேனமையா திகடா - முறலறை போத லுரி மையின் மருவலொண்பொருள் வௌவன்மன்னவன் முன் பிறர் செவி மொழிதல் பிறரொடு நகைத்தல் பேணுரூப் பண்புவேர் திள மை-முறைமதித் திகழ்தல் விரும்புரு வினையை முடித்தலுஞ்சேர்ந் தவர்க் காகா,—குறிப்பொடு கால மறிந்திறை விருமபக் கோதறு பயன்மிகப்பயக்கும்-வெறுப்பில வினையவிளமபி வெண்டாதவினை யிங்கேட்பினும விளம்பார் - சிறப்புறவோர்வதாயினு மூலைதான் செப்பிடிற் கேட்பினல் லாது-புறப்பினுங் கொடரா ரோர்தரா ரணு கர் மருங்கு லார்வினை வலித்தார்." என்றருளியபடி, அமைச்சர் அரசனைப் பொருந்தி யொழுகுமாறு, அஃதாவது, அமைச்சனுயின் தன்னுற் சேரப்பட்ட அரசன் அணியப் படுவன துகரப்படுவன மேன்மைப்படுவன முதலானவைகளைத் தான் விரும்புதலும், அத னுற் பொருத்தற்கரிய அறைபோதலும், உரிமையோடு மருவலும், அரும்பொருள் வௌவலும் அரசன் அருகிருந்த காலத்தி அவன் காண ஒருவன் செவிகடட் சொல்லுதலும, ஒருவன் முகநோக்கி நகுதலும், அரசனுக்கு யாம் பழையமெனக் கருதித் தனக் கியல் பல்லாதவற்றைச் செய்தலும், அரசனை எனக்கினியவ னென்றும் எனக்கின்ன முறையினையுடையனென்றுங் கருதி அவமதித்தலும், அரசனுல் யாம் நனகு மதிக்கப்பட்டே மெனக்கருதி அவன் விரும் பாதவற்றைச் செய்தலும் ஆகிய இக்கொடுஞ் செய்கைகளைக் கூடா திருத்தல் வேண்டும் அன்றியும் தன்னரசனுக்குக் காரியஞ் சொல் லுங்கால் அப்பொழுது நிகழ்கின்ற அவன் குறிப்பினை யறிந்து சொல்லுதற்கேற்ற காலத்தையும் நோக்கி அவன் மனம் விரும்பும் வகை வெறுப்பிலவுமாய் வேண்டுவனவு மாய காரியங்களை விளம்பு தல்வேண்டும். எஞ்ஞான்றும் பயனிலவாயவற்றை அவனே கேட் டாலும் விளம்பாதிருத்தல் வேண்டும். தன்னரசனுக்குப் பிறரோடு மறை நிகழ் வுழித்தான் ஓர்தற்கேற்கும் பொருளாயினும் அம்மறை ப்பொருளை அவன்றனே யடக்காது சொல்லியக்காற் கேட்பதல் லாது அவனை முந்கி வினவுவதும் செவி கொடுத்துக் கேட்பதும், அவனிடத்தை விட்டகல்வதும் ஒழித்தல் வேண்டும்.

குறிப்பறிதல் என்பது "அகத்தினடைக் குறித்த காரியமதனை யையுறுதவரவர் விழியான முகத்தினு லறிய வல்லவனுகி முகம்விழி யிரண்டினு மன்றி-யகத்தினடைத் தனக்கு நிகழ்ந்திடுங் குறிப்பா லவ ரவ ரகக்குறிப் பறிந்து - மிகத் தெளிபவனைக் காரமுத லுறுப்புள்

விழைவன கொடுத்துக்கொண் மைந்தா.'' என்றருளியபடி, அரசன் கருதியவதனை அவன் கூறுமலறிதல் அஃதாவது அரசன் தன் மனத்தின்கண் குறித்த கருமத்தைத் தன்னுடன் கூறவேண்டா வகை ஐயப்படாது அவன் முகத்தானும் கண்ணினு நோக்கி ஒரு தலேயாக வுணர வல்ல தன்மையையும், மூநம் விழி இரண்டினுமன் றித் தன்குறிப்பு நிகழுமாறறிந்து அதனுற் பிறர்குறிப்பறியுந் தன் மையையும் உடையாளே அரசன் தனது கரி பரி-ஏபாருள்-நாடுமுத லிய புறத்துறுப்புக்களில் அவன் விழைவன வற்றைக் கொடுத்தாயி னுந் தனக்குத் துணேயாகக் கொள்ளல் வேண்டும்.

அவையறிதல் என்பது ''தொகைபடு செஞ்சொ லிலக்கணச் சொல்லேசூழ்ந்திடுங் குறிப்புச்சொன் மூன்றின்-வகையறிந் தியர்ந் தோரொத்தவர் தாழ்நதோர் மருவுமூன் றவையி மரபய்ந்து தகை யுற வுயர்ந்தோ ரவையின் முந்துரையார் சமத்நினைவ் வாற்றினுங் கிளப்பார் நகைபடுதாழ்வி னொன்றையு மொழியார் நவைபடரச் சொற்பொரு ளாய்ந்தோர்.'' என் றருளியபடி, அரசனே டிருந்த அவையின தியல்பை யறிதல் அஃதாவது, அமைச்ச னுயிலுன் செஞ்சொல் இலக்கணச்சொல் குறிப்புச்சொல் என்னு மூவகைச் சொற்களேயும் செம்பொருள் இலக்கணப் பொருள் குறிப்புப் பொ ருள் என்னு மூவகைப்பொருள்களோடு விளங்கச் சொல்ல வல்லவ னுய், உயர்ந்தோர் ஒத்தோர் தாழ்நதோர் என்னு மூவகைத்தாகிய அவைகளேயு மாராய்ந்து உயர்ந்தோ ரவையின்கண் ஒன்றனே முற் படச்சொல்லாமையும், ஒத்தோ ரவையின்கண் எவ்வழியுஞ் சொல் லுதலும், தாழ்ந்தோ ரவையின்கண் ஒருவழியுஞ் சொல்லாமையும் ஆன நற்குணங்களே யுடையனுதல் வேண்டும்.

அவையஞ்சாமை என்பது ''வல்லவ ரவையுட்கற்றதுஞ் சாது வருத்தரைத் தவருண்மிக்கான நல்லவைகேட்பார் கறறவர் தம்மு ணன்குற மதித்திடப் படுவார் சொல்லவை யஞ்சிக்கற்றன செலுத் தாச் சோர்வினர் கற்றுங் கல்லாத புல்லியரிருந்தும் பொன்றின ரத னுற் போற்றிக வவையஞ்சாதவரை.'' என்றருளியபடி, சொல்லு தற்குரிய அவையினே யறிந்து சொல்லுங்கால் அதற்கஞ்சாமை அஃ தாவது, கற்ற செல்லாரினும் இவன் நன்கு கற்றனென்று உலகத் தாராற் சொல்லப்படும் அமைச்சன் பலநூல்களேயுங் கற்றாலவைக் கண் தான் கற்றவற்றை யஞ்சாது அவர் மனங்கொள்ளு மாறற்றுச் சொல்லி அவற்றின் மிக்க பொருள்களே மிக்க கற்றாரிடத் தறிந்து கொள்ளு நூல்களேக் கற்றலைத்தும், அவற்றும் பயனறிந் தலைத்

தும், நல்லாரிருந்த அவைக்கண் நல்ல சொற்பொருள்களோத் தன் னச்சத்தால் அவர்க் கேற்பச்சொல்ல மாட்டாதான் கற்றுங் கல் லாத புல்லியனுவன். அவன் உயிர்வாழ்கின்ற ஞயினும் உலகத்தா ரால் எண்ணப்படாமையின் இறந்தானே டொப்பன்.

நாடு என்பது "இருபுனல் வாய்ந்த மலைவரு புனலுமிடையி ஈகர்களு முடைத்தாய்ப் பெருகவெப் பொருளு மொழிவற விளைக் கும் பெருங்குடிகளுங் கலங்காலாற் பொருள்பலவீட்டுஞ் செல்வரு மறையோர் புரையறுதவத்தினர் துறவோர் மருளறு கலைஞராதி யோர் பலருமனலிவாழுக திருப்பதாநாடு —பழுதிலீர் நாட்டுக் கம ரர்கள் சாதிபற்று சங்கேதத்தி லீண்டுங் குழுவுமா றலைக்குங் கள் வர்பொய் குறளே கூறுவோர் பன்றி மான் முதலாய்க் கொழுவுமூட் பகையு மளவுபார்த் தரசைக் கெடுக்குங் கொல் குறும்பரு மிக்க- மழைமழை யின்மை யெலிகிளி விட்டின் மன்னரசு கோளுமா மைந்தா.—ஆதலிற் குடிகளாதியோர் தொகவு மழிவுசெய் குழு மூத லகன்று போதவுங் காவல் புரிபிணியின்மை புகழ்திரு விளை வின்ப மனைத்துங் கோதற நாளு மிக வுளதாகுங் குலைகதபஞுகெ ளுறினு மேதகத் தாங்கும் வருதறுதெவையும் வேண்டுழி யளித் திடு மைந்தா." என்றருளியபடி, அவ்வரசனுலும் அமைச்சனுலுங் கொண் டுய்க்கப்படுவதாய் விளங்குவது. அஃதாவது, கீழ்நீர்மேனீர் எனப்பட்ட இருவகைநீரும், மலியினின்றும் வருவதாய நீரும் ஈகர் களுமுடையதாய், எல்லாப் பொருள்களையும் ஒழிவற விளைவு செய் யும் பெருங்குடிகளும், கலத்தானுங் காலானும அறம்பொருவீட் டும் வணிகச்செல்வரும், அந்தணர் தவத்தர் துறந்தோர் கலைஞர் என்னு மிவர்களும் பிறவுமுள்ள பலரும் வாழ்ந்திருக்கத் தக்கதே நாடாரும் இத்தன்மைத்தாகிய நாட்டுக் குற்றமாவது கடவுள் பற் றியும், சாதிபற்றியும மாறுபட்டுகூடும் பலகூட்டமும். ஆதலைப் பார் கள்வர் குறளேகூறுவார் முதலிய மக்களோடு, பன்றி மான் கரடி புலிமுதலிய விலங்களுமான உட்பகைகளும், பொருளினது அளவுபார்த்து அதனைக் கெடுங்கவருங் குறும்பரும், மிக்க பெயல் பெயலின்மை எலி கிளி விட்டில் அரசண்மை என்னு மிவைகளு மாம். ஆதலால் மூற்கூறிய குடிகள் முதலாயினோர் கூடவும் சான்றே தர் முதலாயினோர் ஒழியவும் அந்நாட்டை அரசன் காவல்புரிபவ ஞயின், அது பிணியின்மை புகழ செல்வம் விளைவு இன்பம் முத லியவனைத்தும் எஞ்ஞான்றும் உளவாகும் பிறதேயங்களில் இள்ளார் சூலைந்துவரினும் அவர்களைத்தாங்கும் தங்கண்வாழ்வார் தேடிவருந் தாமல் அவர்கள் வேண்டுழியாவையு மளிக்கும்.

அரண் என்பது "மருங்குரீக் கிடங்கு வெள்ளிடைகான மலை யுறவகன்றுயர்ந் தரங்கொண் டொருங்குபல் பொறியு மணிந்துபே ரிடத்தாயுமு சிறுகாப்பினல் வீரர் நெருங்குபல் பொருளுந் தழுவி யெத்திறத்து கேரலர் கொளப்படாதாகிச் சுழிங்கையாதிகளும் பொ திக்தகத் திறைவோர் தொழிலினி தாற்றுவதரணே.' என்றருளிய படி, அங்ஙாட்டிற் குறுப்பா யடங்கியது அஃதாவது, கீர்க்கிடங்கு வெள்ளிடை நிலம் கானம் மலை என்னு மிவைகளைக்கொண்டு, புறத் தோர்க்கு அகழலாகாத அடி அகலமும், எணியெய்காத வுயரமும், கல் இட்டிகைகளாற் குத்தப்படாததிண்மையும் உடையதாய்ப் பல வகை எந்திரப்பாவைகளையும் அணிந்து அகன்றவிடத்தை யுடைத் தாய், கல்லபடைவீரர்களோடு பல பொருள்களையுந் தழுவிக் காக்க வேண்டுமிடஞ் சிறிதாய் எத்திறத்தினும் புறத்தாற் கோடற்கரிதாய் சுருங்கையாதிகளு மமைந்து அகத்தார்விட்ட ஆயுதமுதலியன புறத் தாரின் மேல் எளிதிற் சேரலும் அவர் விட்டன அகத்தார்மேற் சொல்லாமையுமான போர்நூலைக் கெளிதாய நீர்மையை யுடையதே அரணெனப்படும்.

பொருள் செயல்வகை என்பது, "அருள்கொடு புரக்கம் படுங் குடியன்போடளித்திடு மாறினி லொன்று மிருநிலத்தெடுத்த பழம் பொரு ளுரிமையின்றியே யிறந்தவர் பொருளுமருவிய சுங்கப்பொரு ளுமொட்டலரை மாட்டியு பொருளுமீட் டுகவிப் பொருளறமின் பம் புகழ் தரும் பகையைப் புரட்டு மெய் வினைகளு முடிக்கும்., என்றருளியபடி, பெரும் பான்மையும் காட்டாலும் அரணாலும் ஆக்கலும் காக்கலும் படுவதாய், பொருளைச் செய்தலின் திறம். அஃதாவது, அரசன் - தன்குடிகண்மரட்டுச்செய்யும் அருளோடும் அவர் தன்மாட்டுச் செய்யும் அன்போடுங் கூடி வருகின்ற ஆறிலொன்றுகிய பொருளும், வைத்தார் இறந்துபோக கெடுங் காலம் நிலத்தின்கட் கிடந்து பின்னர்க் கண்டெடுத்த பொருளும் உடையா ரின்மையிற் ருனே வந்துற்றபொருளும், கலத்தின்க ணினுமவரும் பண்டங்க ட்கு இறையாய பொருளும், தன்பகைவரைத் திறையாகக் கொள் ளும் பொருளும் ஆகிய இவ்வகைப்பொருள்களை ஈட்டல் வேண்டும், இவ்வாறு ஈட்டிய பொருளானது அவனுக்கு அறத்தையும் இன் பத்தையும் புகழையுங் கொடுக்கும், மேலும் பெரும் படைவையும் கட்பையும் உண்டாக்கும், ஆகலே பகைவருந்தருக்கொழிந்து தாமே யடங்குவர், எல்லாவினைகளையும் அவனுக் கச்சமில்லாதபடி வல்ல ரையேவித் தானினி திருந்துமுடிக்கும்.

படைமாட்சி என்பது "கரிபரி யிரதந்தானேயு மமைந்தி கருதிமூறஞ்சுறு நிகல்வேந் - திரிதரப் பொருது வெல்வதே படைதா னெய்து கூலிப்படைகாட்டுப பரிபடைகாட்டுப் பண்டதினைப்படை கைப்படை மூலப்படையெனவாறுத் - தெரிபடை யிவற்றுட் சிறந்தது மூலப்படையிதிற் சிறந்தவர் வீரர்.—விரையவன் பகையை வெல்லும் வன்கண்மை வேந்துதா மாவகை காக்கும் புரையறுமானம் போரினரு சினரைப் பொருகடா வொளியறைபோகா - வரையதுதேற்ற முடையாரேறும் வறுமையுஞ் சிறுமையுங் வெறுப்பு - நிரைதன் வெல்லார்தலைவரில் வழியுநேர்ந்திரும பகைவரை வெல்லார்,,, என்றருளியபடி, அப்பொருளினுல் ஆவதாய் வெல்வதாய் படையினதுகன்மை அஃதாவது யானைமுதலிய நான்குறுப்பினும் நிறைந்து போரின்கண் ஊறுபடுதற் கஞ்சாது நின்று பகையிற் செல்வதாகிய படையே படையாகும, அப்படை கூலிப்படை - காட்டுப்படை காட்டுப்படை தினைப்படை கைப்படை மூலப்படை என அறுவகைப்படும. இவற்றுட் சிறந்தது, மூலப்படையாகும், இதிற் சிறந்தரே வீரரெனப் படுவர் இக்கன்மைத்தாகிய படை வீரராயினுேர் பகைவரைக் கடிதிற்கொன்றுகீங்குந் தறுகண்மையும் அரசனுக்குத் தாழாவ வராமற் காக்கும் மானமும், போரின்கண் அஞ்சினுரை எதிர்த்துக்கொல்லும் ஆண்மையும், பகைவராற் மேழுக்கப்படாத தோற்றமும் ஆகிய இக்குணங்களை யுடையரே யாயினும், அரசன் பொருள் கொடாமையால் வறுமையுஞ் சிறுமையும் வெறுப்பும உளராயின பகைவரை வெல்லார். அப்பொருளைக் கொடுத்தகாலத்தும அவர் வினை செய்தற்கண் தமக்குத் தலைவரில்லாத வழியும் வெல்வார்.

படைச்செருங்கு என்பது "வேலெதிர் வரினும் விழித்தகண்ணி மையா வீரமெய் யுறுகணுமே-யாலிய சினத்தி னூழிலாட் டயரு மாண்மையு மழியினல்லாத - சிலவஞ்சினஞ்செய்யா தமைந்தாத தீரமும் வேந்துறினுஞ் செல் - வாலியமறமு மன்கணீருருப்ப மடிதலும் படைச்செருக்காகும்,,, என்றருளியபடி. அப படையினது தருகியாம். அஃதாவது, தமக்கெதிரில் வேல்வருங்காலத்தும் விழித்தகண்ணை இடையாதிருக்கின்ற வீரூப்பும், தமது மெய்யின்கண் ஊறுபடாத நாள்களேயெல்லாம் பயன்படாது கழிந்த காளாகச் சினகது * நூழிலாட்டயர்கின்ற . ஆண்மையும் அவரைக் கொல்லேனுயின் யான் இன்னு லுகுவனென்று கூறிய † ஓர வஞ்சினத்தைத்

* நூழிலாட்டென்பது தன்மெய்யைப் புதைக்கும் மாற்றுர்படையைப் பறித்து அவர்மிதெறிந்து ஓடச்செய்வது. † வஞ்சினம்—சபதமொழி.

தப்பாது முடிக்கவல்ல திறமும் தம்மிறைவன் அது வேண்டாமென்று முனியினும் தமது வீரமிகுதியிற் குன்றுத மறமும், தம்மை யாண்ட அரசன் தனக்குச் செய்தநன்றிகளை நினைந்து கண்களில் நீர்மல்கும் வகைபோரிடை மடியப்பெறும் பெருமையும் ஆகிய இவையனைத்தும் மேற்கூறிய படையினது செருக்காகும்.

நட்பாராய்தல் என்பது, "ஈன்மதி யுடைமை குடிகுணங்குற்ற மில்லினத்தானு மெத்திறத்தும் - பன்முறை யாய்ந்து கடப்பிலைக் கொள்க பாம்பொடும் பழகினும் பிரித - லின்மையா மதனுலாய்க் தலை லொருவரிடத்து நட்புறலறி னவர்செய்-புன்மையும் பழியும் புணர்ந்திருபயனும் போக்குவதின்மை புத்திரனே." என்றருளிய படி, மேற்சொல்லிய விலக்கணத்தாரை ஆராய்ந் தறிகதே நடக்க வேண்டுதலின் அவரை ஆராயுநிதம். அஃதாவது, ஒருவன் மற் றொருவனது மதியுடைமையையும குடிப்பிறப்பினையும் குணத்தினை யும் குற்றத்தினையும் குறைவற்ற சுற்றத்தினையும் எல்லாத் திறத்தி னும் பலவாற்று ஞராய்ந்து நட்புசெய்வானுயின் அந்நட்பு பின்பாம் பொடுபழகிய காலத்தும் பிரிபடாத நிலைமைத்தாம். அவ்வாறு ஆரா யாதிகொள்ளும் நட்புபுன்மையையும் பழியையுந் தந்து இருமைப் பயனையும் போக்கும்.

பழமை என்பது, "கெடுதியி லுதவ வல்லவர் நட்பாற் கினக் கிடாதீதான்றனைச் செயினுங்-கெடும்வகை செய்தல் வேண்டினதா மேகெழுவுதல் பணிவச்சமின்மை-படுதரு மூழிற்புரியினமவற்றைப் பழமையென்றறிச்துள முவப்பி - னெடுநில முழுதுங் கேண்மையா மைந்தா கேரலார்தாமுங் கேளாவார்." என்றருளியபடி, நட்டா ரது பழையராந்தன்மைபற்றி அவர்பிழைத்தன பொறுத்தல். அஃ தாவது, கெடுங்காலத்து உரிமையோடும் உதவ வல்லவராகிய நட்பி னர் தானஞ்செய்யு முதலியைச் கேளாது செய்யினுங் கெடும்வகை செய்தல் தமக்கு வேண்டினதாமே கோடல்பணிவின்மை அச்ச நின்மை என்றிவை முதலாயின ஊழ்வகையாற் புரியினும் அவற் றைப் பழையதாய்வந்த நட்பென் றறிந்து அவர் பிழையையோக்கி விடுதல் செய்யாது விழைந்திருப்பாரைரும்மாட்டும் இவரித்தன்மை யாவரென்று யாவரும் தாமேவந்து நட்பாவர், அன்றியும்ம அத்திரி பின்மைநோக்கிப் பகைவரும் நட்டாராவர்.

தீநட்பு என்பது, "காதலரேனும் விடுவிலமாதர் கள்வரிற் றமக் குறல் குறிப்போர்-பேதையர் கெடுதி யுற்றுழி யுதவார் பெரும்பொ

ருணகுவித்துப் பறிப்பா-ராதருகருமக் தம்மினுகாத தாகவே ஈடிப் பவ ருளமே-மோதலுமொவ்வார் மீனக்கெழீஇ மன்றினறப்பழிப் பாரிவர் தமையே.'' என்றருளியபடி, நீக்குணத்தாரோடு உளதாய நட்பு. அஃதாவது, கொடுப்பாரைக் கொள்ளாது வீலையைக் கொள் ளும் பொதமகளிரைப்போலவும், பிறர்கேடு கோக்காது அவர்சோர் வுகோக்கும் கள்வரைப்போலவும், நட்பளவுபாராது அதனுல்வரும் பயனளவு பார்ப்போரும், எல்லாத் தீங்கினையும் பயப்பவராகிய பேதையரும், அமர்வாராத போதெல்லாம் தாங்குவது போன்று அதுவந் தழிவிட்டு நீங்குவோரும், விடர்-துர்த்தர்-வேழம்பர் என் னுமிவர்களைப்போன்று பலவகையால் நகுவித்துத் தாம் பயன்கொ ண்டொழிவாரும், தம்மான் முடியுங் கருமத்தை முடியாதாக்கிச் செய்யாதாரும உள்ளமுஞ்சொல்லு மொவ்வாது வேறுவேறு யிருப் பாரும், தனியேமனக்க ணிருந்தழி நட்பாடிப் பலரோடு மன்றின்க ணிருந்தழிப் பழிகூறுவாரும், ஆகிய விவர்கள் காதன்மிகுதியாற் பருகுவர் போன்றுமாயினும் அவரைச் சிறிதாயினும் நணுகுதலைப் பறிக்கவேண்டும்.

கூடாநட்பு என்பது, ''நல்லனபலநூல் கற்பினுங் கூடாநட்பி னர்மன நலனெய்தார் - சொல்லின்முன் வணங்கும் வணக்கமுஞ் தொழலுஞ்சொரிந்த கண்ணீருந்தப்பாது - கொல்லும்வன் படையா மாதலிற் பகையுட்கொண்டவர்க் கவரென நீயு-மொல்லுக வதனை நீக்குறுக் காலமுற்றிழி யல்லது வேண்ட.'' என்றருளியபடி, பகை மையால் அகத்தாற் கூடாதிருந்தே தமக்குவாய்க்கும் இடம்பெருந் தீணையும் புறத்தாற்கூடி யொழுகுவார்நட்பு அஃதாவது, நல்ல வாகிய பலநூல்களைக் கற்றவிடத்தும் அதனுல் மனக்திருந்தி நட் பாதலில்லாத கண்டபொழுது முகத்தாலினியவாகச் சிரித்து, எப் பொழுதும் மனத்தால் இன்னுதன செய்யும் பகைவரது சொல்ல ணக்கமும். அவரது தொழுகையும், அவரழுத கண்ணீரும் சொல் லானுங் கையானும் கண்ணுனுர் தேற்றிப் பின்னர்த் தப்பாதகொல் கின்றவன் படையாகும், ஆதலால் பகைமைதோன்றுமற் புறத்தின் கண் நட்பினை மிகச்செய்து அகத்தின்கட் டன்னையிகழும் பகைய ரைத்தானும் அந்நட்பின் கண்ணே யிருத்தி, புறத்தின்கண் அவர் மகிழும்வண்ணஞ் செய்து, * அகத்தின்கண் அதசாம் வண்ணம்

* உன்னொன்று புறமொன்றுதல் ஒருவருக்குத் தகாதாயினும் பகைவ ரிடத்தானுல் தகுமென்பது நீதிநூலது துணிவென்பதற்கு அதன்மேல்வைத் துச் சொல்லினுர்.

பொருந்திநிற்றல் வேண்டும். அப்பகைவர் தனக்கு ஈட்டாராபொழு குங்காலம் வந்தால் தானும் அவரோடு முகத்தால் ஈட்பு செய்து அகத்தால் அதனைவிட்டுப் பின்னதுவுந் தவிர்தல் வேண்டும்.

பேதைமை என்பது, "பழிமுதலனுணர் செய்வனதவிர்வ பார்த் திடார் குடிப்பிறப் பொழுக்க·மெழில்வளர் கல்வியாதிகள் பேணு ரெவரையு முறிக்குஞ் சொற்செயலார் கழிமகிழ்வுடையார் கெடுதி கொண் டாக்கங் கைவிடுவார்செல்வ முறினுங்-கொழிபய னெய்தார் பிறர்க்கலாற் றமக்குக் கொடாரிவர் பேதையசொழிக. ,, என்றரு ளியபடி, யாதுமறியாமை. அஃதாவது, பழிபாவம் வறுமை யென்ப வற்றிற்கு ஈணுமையும், செய்வன தவிர்வன அறியாமையும், குடிப் பிறப்பு ஒழுக்கங் கல்வி முதலானவைகளைப் பேணுமையும், யாவர் மாட்டும்முறிதசொல்லாடுஞ் செயலுடைமையும், ஆகாத வொழுக் கத்தின்கட் காதன்மையும், கேடு பயப்பனவற்றைக் கொண்டு ஆக் கம் பயப்பனவற்றைக் கைவிடுக்குந் தன்மையும், பெரிய செல்வத் தைத் தெய்வத்தாலெய்திய வழியும் பயனெய்தாமையும், மனமொ ழிமெய்கள் அடங்குதற் கேதுவாய நூல்களோதியும் - அவ்வடக் கத்தான் வரும்பயன்களை யுணர்ந்தும் - அதனையறிய வுறப்பிறர்க் குணர்த்தும் - தானவையடங்கி யொழுகாவையும் ஆகிய இப்பெற்றி களையுடையோரைம் பேதைய ரென்று சொல்லுப.

புல்லறிவாண்மை என்பது, "தன்னை யெப்பொருளு மறிந்தவ னுகத் தான்மிகமதிக்கும் புல்லறிவின்-வன்மையை யுடையாணுறுதிச் சொற்கேளான் வல்லவல் லாதுங்கொண் டுரைத்திய - புன்மையைத் தெரிப்பா னவைபுரிக் குலகோர்போனடிப் பான்றனையுணர்த்து-ஈன் மதியினரை யறிவிலராக ஈாட்டுவனிவனையுணர்ணேல்.,, என்றருளிய வாறு, புல்லியவறிவினை யாடற்றன்மை அஃதாவது, தாஞ் சிற்றறி வினராக விருந்தேதமமைப் பேரறிவினராக மதிக்கும் புல்லறிவின் புடையார் தமக்குறுதியாயவற்றை அறிவுடையார் கூறினுங்கேளார்: தாங்கல்லாத நூல்களையுங் கற்றாராக வுரைத்துத் தம் புன்மையை வெளிப்படுத்துவர். தங்களிகழுங் குற்றங்களை யறிந்து கடியாது மறைத்து அவ்வளவாற்றும் உலகத்தினரைப்போல நடிப்பர். தம க்கு நல்லுணர்ச்சியை யறிவிக்கப் புகும் ஆன்றோரை யறிவிலாராக ஈாட்டுவர். ஆகலால் இத்தன்மையரோடு கண்ணுறுதல்வேண்டும்.

இகல் என்பது "இகலைமதித் தின்னுமைபிழையியற்றினுர்க்கும் புரியாபேற்-பகையுமுறவாம் பெருஞ்செல்வம் பலிக்குங்கெடாதபுக

மூண்டா-மிகலின் மிகுந்தின் னுகையற்றினினியதருமமே திலதாய்ப்-பகைமைவளரும் வலிதொலையும் பாழ்க்கும்பாழாவாழ்க்கையுமே.” என்றருளியபடி, இருவர் தம்முட் பொருதுவலி தொலைத்தற் கேது வாய மாறுபாடு. அஃதாவது, ஒருவன் தனக்கு வெறுப்பன செய் தானுயினும் அவனேடு மாறுபடுதலைக் குறித்துத் தான் அவனுக்கு இன்னுதவற்றைச் செய்யாதிருப்பனுயின், அவனுக்குப் பகைவரும் உறவாவர். எல்லாச்செல்வமும் பலிக்கும். கொடை முதலிய காச னங்களாற் புகழும்பெறுவன். பிறரோடு மாறுபடுதற்கண் மிகுதல் எனக்கு இனிதென்று இன்னுதன செய்வனுயின் உடனே தமரும் வதிலராவர். பகைமை வளரும். வலி தொலையும். பொருட் கேடும் உயிர்க் கேடும் அப்பொழுதே யுண்டாகும்.

பகைமாட்சி என்பது “வலியார் பகைகொள்ளல் சுற்றம் வலி கள் பொருணட்பே படையின்-மெலியாரச்ச மறியாமைமேவாத்தன் மை கொடையின்மை-நலியா வெகுளிமறையின்மை னியாங்காமங் கல்லாமை-யொலியார்பழிநோக்காமை மறுவுடையாரிவர்மேற் பகை யுறுக.” என்றுங்கு அறிவின்மை முதலிய குற்றங்களுடைமையாற் பகையை மாட்சிப் படுத்தல். அஃதாவது, படை பொருள் முதலிய ஏற்அமைத்துணையும் ஆகிய இருவகைத்துணையுமுள்ள வலியர்மேற் பகையா யெதிர்த்தலே யொழித்தல்வேண்டும். அவ்விருவகைத்துணை யினும் சுற்றம்பொருள் ஈட்பு படை என்னு மிவைகளினும் மெலிய ராயுள்ளார், அஞ்சவேண்டாதவற்றிற் கஞ்சுவோர், அறியவேண்டு மவற்றை அறியாதார், பிறரோடு பொருத்தமில்லாதார், யாவட்மாட் டும் ஈகையில்லாதார், நலியாத வெகுளியை யுடையார், நிறையின் மையை யுடையார், மிக்கதாமதத்தையுடையார், நீதிநூலைக் கல்லா தார், தமக்குவரும் பழியை யாராயாதார், பண்பில்லாதார் என்னு மிவர்களோடு பகையாதலே யொழியாது விரும்பல் வேண்டும்.

பகைத்திறந்தெரிதல் என்பது “பாரம்பரிக்கவேண்டினுறு பகை ஈட்பாகக் கொண்டொழுகல்-வீரந்தனியாரொடு பொரினும் விதி தானேரோடிகலாமை-சாருந்தினைநிற் பினும்பலரைப் பகையாக்கா மைத் தனிமையுறி-னேருந்தினையா விருவகையு ணீக்கியொன்றை யுறவாக்கல்.—மெலிய தெனவேள விடபகையே மிகுந்தெடுக்கு மிகுத்திடும்-னலிகவினைதாழுவுறிற் றெளிக்தல்லா ரெனவுந் தெளி யாத-மனனெனவு மொதுமலரே மருவலொழுதவ்புரியற்க-வலி செய்படையா கிகள்பெருக்க வகையாய்ந் திருக்க பகைமையற.” என்றருளியபடி பகையதிறமும் பகையிடத்தாக்குந் திறமுமாராய

தல். அஃதாவது, தனக்குவேண்டிய வழிப்பகையை வேறுபடுத்து ஈட்பாகச் செய்து கொண் டொழுகலும், வீரமே யுடையாரோடு பகை கொள்ளாமையும், சுற்றம்-சுட்பு-படைமுதலிய தினையில்லா தவழியும் இருந்தவழியும்பலரோடு பகைகொள்ளாமையும், தனக் குதவிசெய்யுந் தினையில்லாத காலத்தும் பகையிரண்டாயின் அதி லொன்றை வெல்லுமாறு மற்றொன்றை யுறவாக்கிக் கொள்ளுதலும் ஆகியவித்திறக்களே அரசன் இயல்பாக வுடைய ஞதல்வேண்டும், அன்றியும் தான்மெலியதென்று இகழ்ந்தபகையே பின்னர் வலிய தாய்த்தன்னைக் கோயலுறுமாதலால் அவ்வா றாகாமுன்னம் அது மெலியதாய காலத்தே கோதல் வேண்டும். தனக்குப் புறத்தொரு வினையாற் றூழவுவந்துழித்தன் பகைவனே முன் தெளிர்தானுயினும் தெளிர்தலெனுயினும் அவனே கொதமலாக்கி அவனெடு கூடுதலையும் பிரிதலையும் ஒழித்தல்வேண்டும். * பின்னர் அப்பகையைக் கோய வேண்டின் பொருள் படையாதிகளைப் பெருக்கித் தான் அப்பகைக் கெதிரே பொருதாற்றினே யாராய்ந்து, தான்வலியனுய வளவிற்களை தல் வேண்டும்.

உட்பகை என்பது "தமரா யிருந்து புறப்பகையைச் சார்பாங் காலம்வருமளவு - மமரா நிற்கு முட்பகையை யஞ்சிக் காக்க வுறிற் கடிக-மமரா மெனவே கண்ணேடி னல்லவமைச்சா னியைத்தேய்க் குதவா மினத்தைத்தணப்பிக்கு தன்னைக் குடியோ டெளிதழிக் கும்." என்றருளியபடி புறப்பகைக்கு இடனுக்கிக்கொடுத்து அது வெல்லுந் தினையும் உள்ளாய் நிற்கும்பகை. அஃதாவது, புறத்து உறவுமுறைத் தண்மையோடுங்கூடி அமைச்சர் முதலிய உறுப்புக ளைத் தேய்ப்பாரும் சுற்றத்தாரை உள்ளாய் நின்று வேறுபடுத்து வாரும், தன்குடிக்குத் தீங்தாற்றி யழிப்பாரும், உட்பகையாராத லால் அவரையஞ்சி அவரினையாமலும் அவர்க்குடம்படாமலும் தன் னைக் காத்துக்கொண்டொழுதல் வேண்டும். ஒருகாற் கூடுவாயின் உடனே அவரைக் கடிதல் வேண்டும்.

பெரியாரைப் பிழையாமை என்பது "ஆற்றன் மிகுத்த வேந்த ரையு மரியதவத்தி முனிவரையும் - போற்றியொழுகி னெப்பொரு ளும் போற்றலாகு மவமதிப்பிற் - றேற்ற மிகுஞ்சார்பினரேனுஞ்

* முன் தெளிர்தானுயினும் அப்பொழுது கூடாதொழிகவென்றது உள் வாய்நின்று கெடுத்தோங்கி. தெளிர்திலு ஞயினும் அப்பொழுது பிரியா தொழிகவென்றது அவ்வழுவிற்குத் தினையாதனேக்கி ஒழித்தல் வேண்டு மென்னுர்.

தைவர் திகழ்முப்புரச்சூரன்-சாற்றிக் திரன்மா ரதியருக் தளர்த்தர் ரெனிற்சாற்றுவதென்னே." என்றருளியபடி, பெரியாயினுரை அவ மதித்தொழுகாமை, அஃதாவது, பெருமை அறிவு முயற்சியென்னு மூவகை யாற்றல்களுமுடைய வேந்தரையும் தவத்திற்சிறந்த முனி வரையும்போற்றி யொழுக வல்லார்க்கு அவரீட்டிவைத்த எல்லாப் பொருள்களும் விருத்தியடையும். அவமதிப்பார்க்கு அரண்-படை-பொருள்-ஈட்பு என்னும் இச்சார்புகளிருந்தும் அழித்து விடுவர். இப்பிழையொன்றனல் திரிபுரன்சூரபன்மன் முதலிய அசுரர்களும், இந்திரன் திருமான் முதலிய தேவர்களுந் தளர்தன ரென்னில் இன்னு மெவ்வாறுரைக்கற்பாலது.

பெண்வழிச் சேறல் என்பது "தன்னு லாளப்படுமனேவி தன்னு லாளப்படுவானே-லன்னுற் கறனும் பொருளு மூள வாகா தொல்லைப் பொருளாணு-மன்னு பயன்கள் விழுமுடியா மறுமை யணுகா தெப் பிழையு-மூன்னும்பின்னும் பெருகாணு மூவாப்பழியு மறிமைத்தா." என்றருளியபடி, தன்வழியொழுகற் பாலளாய இல்லாள் வழியே தானெழுகல். அஃதாவது, ஒருவன் இன்பங்காரணமாகத் தன்மனே யாளே விழைந்து அவள் தன்மையனு யொழுகுவானெனில் தனக் கின்றுணேயாய அறம்பொருளையெய்தான். செல்வமிகுந்த காலத் தும் ஈதல் துய்த்தல் முதலிய பயன்களைக் கொள்ளான். மறுமைப் பயனேயும் அணுகப்படான் எல்லாப் பிழையும் அவனுக்குரியனிற் கும். பின்னர் அஃது பெரியனுயினும் அழியாப்பழியும் அவனுக் குண்டாக்கும்.

விரைவின்மகளிர் என்பது "எழிலாற்பாட லாடலினு லிச்சை பெருக்கி யுளமொவ்வா - மொழியிற் செயலால் வயமாக்கி முற்றும் பொருளைப்பறித்துவிடும் பழிநாணுத பரத்தையரைம் பற்றுவாய்ந்த பண்புடையா - ரொழியாரவரைப் பேதைமையிலொழியாரேமு கண் டனே.,, என்றருளியபடி, தங்கலம் விலைகொடுப்பார் யாவர்க்கும் விற்பதல்லது அதற்கு ஆவர் ஆகாதார் என்னும் வரையில்லாத மக ளிரது இயல்பு அஃதாவது, ஆடல் பாடல் அழகு என்பனவற்றுல் ஆடவர்க்கு இச்சையைப் பெருக்கி உளமொவ்வாத சொற்செயல் களாற் றம்வசமாக்கி முற்றினும் பொருளைப் பறித்துவிடுகின்ற பழி நாணுத பரத்தையர் முயக்கத்தை யொழியாதவரை ஆய்ந்து செய் யும் அறிவினையுடையார் நீண்டார்.

கள்ளுண்ணுமை என்பது "அறிவையழிக்குஞ் செயலையழிக்கு மழியாமானம் தன்னையழிக்குஞ்செறிவு மறிஞர் மதியாத செருக்கை



வினக்கு மீன்னூறு - முறியும் வெறுப்புமிகவினைக்கு முனிவுவினைக் கும்பகையஞ்சாக் - குறிகள் வினைக்கு கைவினைக்குங் கொள்ளேல் கள்ளுண்டலேமைந்தா.,, என்றருளியபடி கள்ளினையுண்ணுமையினது இறப்பு. அஃதாவது, ஒருவன் கள்ளின்மேற் காதல் செய்தொழுகு வனையின், அது அவனது அறிவையுஞ்செயலையும் மானத்தையும் அழிப்பதன்றிச் சான்றாரால் மதிக்கப்படாத செருக்கினை வினைக் கும். யாதுசெய்யினும் உவக்க வல்ல சான்றாரும் மனமுறிவள். யாவர்க்கும் வெறுப்பையுங் கோபத்தையும் உண்டாக்கும். பொருள் படை முதலியவற்றாற் பெரியனைய காலத்தும் அறிவின்மையாற் பகைவர் அஞ்சார். உள்ளூர் வாழ்பவரால் எஞ்ஞான்றும் நகுதல் செய்யப்படுவதென்க.

சூது என்பது "வென்றிவறினு மதனன்முன் மேவு மொன்றற் காயிரம்பின் - மன்ற விழக்கு மதுவன்றி வைத்த பொருளும் வரு வாயு - மன்றி யீனத்தும் பகைகொள்ளுமமைச்ச ராதியுறுப்பொ ழியு - மொன்று மொளிகல்விகண் மறுமையுறுதி யிலையாஞ் சூதா டேல்.,, என்றருளியபடி, அக் கள்ளுண்ணல போல அறம்பொரு ளின்பங்கட்கு இடையீடாகிய சூதினையாடல். அஃதாவது, சூதினை யாடுவான் தான் வெல்லுமாற்ற லுடையானுயினும் அவ்வென்றபொ ருள் ஒன்றுக்கும்பின் தானெய்திய பொருள் ஆயிரமாக அழியும். அதுவன்றித் தானீட்டிய பொருளுந் தன் பொருள் வருவாயுங் கெடும். அதனைண்டு யாவரும் பகையாவார். அமைச்சர் முதலிய உறுப்புக்களும் ஒழியும், ஒளி-கல்வி-செல்வம்-ஊண்-உடை என்னு மிவைகளோடு மறுமைப்பயனு மூண்டாகாது.

* மருந்து என்பது "மனமெய்ம் மொழிகள் வருந்தாமல் வருத் தத் தொழிலே மாறுபடா - வினிய வுணவை மிகப்பசித்த விடத்தி

நத்தாவது பிணியுற்றவன், அதனைத் தீர்க்கு மருத்துவன், அவனுக் குக் கருவியாகிய மருந்து, அதனைப் பிழையாமையியற்றுவான் என நான்கு பகுதியை யுடைய நான்கு நிறத்ததாம். அவற்றுள் உற்றவன் வகை நான்கா வன:—பொருளுடைமை, மருத்துவன் வழி நிற்றல், நோய் நிலை யுரைத்தல் வன்மை, வருந்தன்பம் பொருத்தல் என விவை. தீர்ப்பான் வகை நான்கா வன:—பல நோய் காண்டற் கஞ்சாமை, ஆசிரியனைவழிபட்டோதிய கல்வியு ணர்ணிறிவு முடைமை, பலகாலுந் தீர்த்தி வருதல், மனமொழி மெய்கள் தூயவாதல் என விவை. மருந்தின் வகை நான்காவன:—பல பிணிகட்கு மேற்றல், கலை-வீரியம்-வீரி வாற்றல்களான் மேம்படுதல். எளிதினெய்தப் படுதல், பகுதியோடு பொருந்துதல் என விவை. இயற்றுவான் வகைநான்கா

இடற்குப் பொருந்தவுணுன்-முளிசெய் பிணிகட்கிடனின்ரு முறை கள் பிறழ்ந்தவர்துவிடிற் - புனிதமுடைப வயித்தியரால் வழி கின் றவற்றைப் போக்குகவே.,, என்றருளியபடி, பழவினையானுல் கார ணங்களானும் மக்கட்கு வாதமுதலிய பிணிகள் வரும் அவற்றுள் பழவினையால் வருவன அதன் கழிவின்க ணல்லது தீராமையின் அவையொழித்து ஏனைக்காரணங்களால் வருவனவற்றைத் தீர்க்கும் மருந்தின் நால்வகைத்திறம். அஃதாவது, † உணவுஞ் செயல்களுஞ் ஒருவன் பருதிக்கொத்த ஆளவினவன்றி அதனின் மிகுமாயினுங் குறையுமாயினும் ஆயுள்வேத முடையோரால் வாதநோய் பித்த நோய் ஐயநோய்என்று சொல்லப்பட்ட மூன்றுநோயும் அவனுக் குத் தன்பஞ்செய்யுமாதலால் மனமொழி மெய்களாலாய தொழில் களைச் செய்யுங்கால், அவைகள் வருந்தாமல் முன்னுண்டது அற் ரூற்பின்னுண்பதனை அறுமளவறிந்து ‡ மாறுகொள்ளாத இனியவு ணவை மிகப் பசித்தவிடத்துத் தன்னுள்ளம்வேண்டிய வளவினுனன் றிப் பிணிவாரா வளவினுல் உண்ணல்வேண்டும். அவ்வா றுண்ணிற் பிணிகளாற்றுன்பம் வீளாத லுண்டாகாது. ஒருகால் அம்முறைகள் பிறழப் பிணிகேருமாயின் * ஆதல னளவினையும், அவன்பால் நிகழ்

வன:—ஆதலன் மாட்டன் புடைமை,மனமொழிமெய்க யேவாதல்,சொல்லி யன அவ்வாறேசெய்தல் வன்மை,அறிவுடைமைஎன்றிவை. இவையெல்லாம் கூடிய வழி யல்லதுபிணி தீராமையின் இத்தொகுதியையும் மருந்தென்றார்.

† அவைகட்கு உணவொத்தலாவது:—சுவை-வீரியங்களானும், அளவா னும் பொருந்துதல்.செயல்க ளொத்தலாவது:—மனமொழி மெய்களாற்செய் யுந் தொழில்களே அதை வருந்துவதற்கு முன்னே யொழிதல்.

‡ மாறு கொள்ளாமை யாவது:—உண்பான் பகுதியோடு மாறுகொள் ளாமையும், கால வியல்போடு மாறு கொள்ளாமையும், சுவை வீரியங்களாற் றம்முண் மாறு கொள்ளாமையுமாம். அவையாவன:—முறையே வாதபித்த ஐயங்களினைய பகுதிக்கு அடாதவற்றைச் செய்வன வாதலும், பெரும்பொ ழுது சிறுபொழுதளன்னும் காலஃவறுபாடெனுள் ஒன்றற்காவனபிறிதொன் றற் காகாமையும், தேனு நெய்யுந் தம்மு ளொத்து கஞ்சாதல் போல் வனவுமாம்.

* ஆதலன் அளவாவது-பகுதி,பருவம்,வேதனை,வலிகளினளவாம்.பிணி யளவாவது சாத்தியம், அசாத்தியம், யாப்பியம் என்னுஞ் சாதிவேறுபாடும், தொடக்கம்-நடு-ஈறு என்னும் அதன்பருமை வேறுபாடும், வன்மை-மென்மை களு முதலாயின வாம். இவற்றுள் சாத்தியம்-தீர்க்கத் தக்கது. அசாத்தியம்- தீர்க்கத்தகாதது, யாப்பியம் பெரும் பான்மை தீர்க்கத் தக்கதும் பெறு பான் மை தீர்க்கத் தகாதது மெனக் கொள்ளத்தக்கது, கால்வளவாவது, மேற் சொல்லியனவாம்.

கின்ற கோயினளவினையும், தன் செயற்கேற்றகாலத்தினளவினையும் நூனெறியாலும் உணர்வு மிகுபொனு ஆராய்ந்து செய்ய வல்ல வைத்திபன் வழிநின்று அப்பிணியை யொழிக்க வேண்டும்.

குடிமை என்பது "உன்னன் மொழிதல் செயன் மூணஞ்சுத் தொடுக்கம் வாய்மை நாணிழுக்கார் மன்னு மனையிற் பிறந்தார்கண் மலர்த லீகை யிகழாமை - கன்னர் மொழிபு மவர்க்கேயா கண்மை பயவா வினவுறமை யின்னலிடத்தும் புரியார்க ளேம கண்டாவினி யறிமோ. ,, என்றருளியபடி, உயர்ந்த குடியின்கட் பிறந்தாரது தன்மை. அஃதாவது, எக்காலத்துக் திரிபிலாத குடியின்கட் பிறந்தார் கருத்துஞ் சொல்லுஞ் செயலுந் தம்முண்மாறுகாது ஒத்திருக்கின்ற வொழுக்கம், மெய்ம்மொழி, நாண் எனப்பட்ட இம்மூன்றன்கண்ணுங் கல்வியா னன்றித் தாமாகவே வழுவார். அவரே தம்மை வறியா ரடைகதவழி முகமலர்தியும், உள்ளன கொடுத்தலும், இகழாமையும், இன்சொற்சொல்லுதலு மாகிய இந்நான்கு முடையார். அவர்கள்வறுமையுற்றவழியுந் தம மொழுக்கம் குன்றாது தொழில்களே செய்யார்.

மானம் என்பது "பெருக்கத் துயர்வாம் பணிவொழியல்பே ணுப்பணிவு சுருக்கத்திற்-செருக்களின்றி யமையாத சிறப்பிற்றேனு மூயர்மான - முருக்கும் வினைபர் செயினியன் மொய்ம்பார் மானமே கெடவுழவர் - தருக்குமெனிற்சாமரைமானியுண்மேமகண் டனே.,, என்றருளியபடி, எஞ்ஞான்றுந் தன்னிலைமையிற் றாழாமையுந் தெய்வத்தாற் றாழவு வந்துழியிர்வாழாமையுமாம். அஃதாவது, குடியிற் பிறந்தார்க்கு நிறைந்த செல்வமுளதாயவழியாவர் மாட்டும் பணிவு வேண்டும். குறைந்த கல்குவ உளதாய வழிப் பணியாமை வேண்டும். தங் குடிப் பிறப்புத் தாழவருஞ் செயகைகளைச் செய்யாதவழி அவைதாம் அமையாத சிறப்பினே யுடையவே யெனினுந் தமதுமானத்தை முருக்கவல்ல அச்செயல்களே யொழித்தல்வேண்டும். தமதுவலியாகிய அம்மானம் ஊழின வலியால் அழியுமெனில் தன்மயிர்த்நிரளின் ஒருமயிர்கீங்கினும் உயிர்வாழாத கவரிமானை யொத்திருத்தல் வேண்டும்.

பெருமை என்பது "ஐது குடியிற் பிறந்தருறு லாய்ந்தசெல வுத் துயர்ந்ததனு - லெய்த லரிதுபெருமையஃதெய்துங் கொடை யொப்புரவாதி - செய்தற்கரிய செய்துபிறர் செயிற்கூறுமற் றருக் காம-அய்து நெறியிற் பிறழாம லொழுகுவார்க்குள் ஞதிணமாத்

என்றருளியபடி, பெரியாரதுதன்மை அஃதாவது, ஒருவன் உயர்ந்த குடியினைட் பிறந்து அருநூல்களையாராய்ந்து செல்வத்திற் சிறந்தானேனும் அளவிறந்த ஈகை ஒப்புரவு முதலியவைகளாற் பிறராற் செயற்கரிய செய்து, பிறர் குற்றங்கூறுமலுக தருக்காமலு மிருந்து தனது கெறியிற் பிறழாமல் தன்னைத்தான்காத்துக்கொண் டொழுகானெனில் அவனுக்குப் பெருமை யில்லையாம்.

சான்றாண்மை என்பது ''அன்பொப்புரவு கண்ணோட்டமுதியா வாய்மை நாணுதி-யின்பம் பெருக்கு நற்குணங்களெல்லா நிறைந்த சானேறோர்க-டினபுற் றவர்க்கு மினியனவேசூழ்வர்துணையின் வினை முடிப்பர்-வன்பிற ளளார் நட்டார்க்குமடங்கித்தோற்ற ஞ்ஞே.,, என்றருளியபடி, பலகுணங்களாறு நிறைதது அவற்றை யாளற் றன்மை, அஃதாவது, சுற்றத்தார் மேலேயன்றிப் பிறர் மேலுமுள தாய அன்பு, யாவர் மாட்டும் ஒப்புரவு செய்தல், பழையார் மேற் கண்ணோடல், பழிபாவங்களி னைல் முதலிய நற்குணங்களால் நிறைந்த சான்றோர்கள் தமக் கின்னதனவற்றைச் செய்தார்க்கும் இனியவற்றையேசெய்வர். ஒருகருமத்தைச் செய்துமுடிக்கப்புகின் அதற்குத்தானேயாவாரைத் தாழ்த்து கூட்டிக்கொள்ளுவர். கடலுங் கரையு ணில்லாமற்காலத்திரிந்தாலுக தாந்திரியார், தம்மினுயர்ந்தார் மாட்டுக் கொள்ளுந் தோல்வியை இழிந்தார மாட்டுக கொள்ளுவர்,

பண்புடைமை என்பது '' அன்ற குடியன் பெண்பதகல் லறீ திகளின் வழுவாமை-சான்ற மக்கட் பண்பாருக் தன்னே யுடையார் நகையாது-மான்று மிகுமார் பகையிடித்து மதிய ரவர்த நற்குண மேமேன்ற வுலகம் பாராட்டு மெல்லாப் பயனு மவர்மாட்டாம்.,, என்றருளியபடி, பெருமை சான்றாண்மைகளிற் றரும் வழுவாது நின்றே எல்லாரியல்புகளு மறிந்து ஒதவொழுகல். அஃதாவது உல கத்தோ டமைந்த குடியினகண் பிறத்தலும், பிறர்மே லன்புடைய ராதலும், யாவர்மாட்டும எளிய செவ்விய ராதலும், அறத்தினும் நீதியினும் வழுவாதிருத்தலும் ஆகிய இப்பண்புகள் சான்றமக்களது பண்பாகும், இத்தீயுடையவர் ஒருவரை விளையாட்டின் கண்ணு மிகழார். பகையிடத்தும் அதனைப் புரியார். அத்தன்மையரது நற் குணத்தையே உலகத்தார் கொண்டாடா நிற்பர்.

நன்றியில் செல்வம் என்பது ''வைத்துப் பொருளைத் தானுக ரான் வழங்கா னினிருந்துஞ் செத்தானே - செத்தபின்ன ரென்செய் வான் றீயார்கொள்வ ரீட்டுதலான் - மெத்தும் வருத்தமேயன்றி

வேறொன்றில்லையாதலினுற்-பொத்தும் வெறுக்கை ஈன்றியுறல் புரித்
திவழங்கலேயாகும். ,, என்றருளியபடி, ஈட்டியார்க்கும் பிறர்க்கும்
பயன்படுதலில்லாத * செல்வத்தினியல்பு அஃதாவது, தன்னினோ
யெல்லாம்நிறைதறகேதுவாயபெரும்பொருளோ ஈட்டிவைத்தும்உலோ
பத்தால் அதனை யுண்ணுதலும் பிறாக்கியாதவணும, உயிரோடிருந்
தானுயினும் இறந்தவனே டொப்பான். அன்றியும் அவன் செத்த
பின்பு அதனைத் தீயார் கொண்டுபோய்ப் பயனபெறுவரல்லது அக்
காலத்து அவனென்செய்ய வல்லன. ஆதலால் அறனும் இன்பமுஞ
செய்துகொள்ளாதனுக்குப் பொருளினை ஈட்டலுங் தின்பமின்பம்.

நாணுடைமை என்பது ''இழிந்த தொழிலி னுணுவதே யெய்
தற்கரிய நாணென்ப - ரொழிந்த மனவாக் குடலொடுக்க மொளிவா
ணுதலார் நாணையாங்-கழிந்த விடநாண் மனைகோடல் கருதார் கல
மெல்லாம்வளர்ப்பா - ரழிந்தநாண்மற் றுயிர்வாழா ராவி யழிந்து
நாளுள்வார்.,, என்றருளியபடி, மேற்சொலலிய சார்பு பண்பு முத
லிய குணங்களா னுயர்ந்தோர் தமகெவ்வாத கருமங்களில் நாணு
தலுடையாராந்தன்மை. அஃதாவது, இழிந்தகருமங் காரணமாக
நாணுவதே எய்தற்கரிய நாணென்று சொல்லப்படும், அஃதன்றி
மனமொழிமெய்கள் ஒடுக்கத் தான் வருவனவெல்லாம் அழகிய
நுதலினையுடைய குலமகளிர் நாண்களாம், ஆதலால் நன்மக்களாயி
னேர்தமக்கேமமாக நாணினைக் கொள்வதன்றி, அகன்ற ஞாலத்
தைதக கொள்ளவும் விரும்பார். அநகாலுணர்ந்நினல் தமது பிறப்பு
கல்வி-குணம்-செயல்-இனபம்-என்பவைகளை வளர்ப்பர். மேலும்,
அவர்நாண்சிதையாமற்பொருட்டு உயிரைவீப்பரேயன்றி உயிர்சிதை
யாமற்பொருட்டு நாணினை வீக்கார்.

குடிசெயல்வகை எவ்வது ''எடுத்த கருமம் முற்றுமை யெய்தின்
முடித்தே விடுவலெனத் தொடுத்த முயற்சி யறிவி ரண்டிற் றோலா
தியர்வார் குடிசெய்வா-ரடுத்த பருவங குறித்தமடியாகி மானங்
கருதுவார் - கெடுத்தல்புரிந்தா லதலினுற் கிளரக் குடியூன்றலின்
மைந்தா.,, என்றருளியபடி, ஒருவன தான்பிறர்த குடியை யுயரச்
செய்தலின் நிறம். அஃதாவது, தன்குடிசெழித்தற் பொருட்டுத்
தொடங்கிய கருமம் முற்றுதாயின, யானெண்ணியகருத்தை முடித்
தேவிடுவேனென்று முயற்சியும், அறிவும்என்று சொல்லப்பட்ட

---

* செல்வக்காலை அஃதுயர்ச்சி செய்யத் தாழ்தலும், அல்லற்காலை அது
தாழ்வுசெய்யத் தாமுயர்தலும் வேண்டு மென்பதாம்.

இரண்டினுள்ளுங் கெடாது உயர்ந்தவனே தன்குடியினை உயரச செய்வானுவன். அச்செயலே நோக்காத † காலத்தை நோக்கி மடியினைச் செய்துகொண்டு மானத்தையுங் கருதுவனுயின் அதனைக் கெடுத்தோனுவன். ஆதலால், தன்குடி ஒருபற்றின்றி வீழாகிற்குங் காலத்தப் பற்றுவன கொடுத்து அதைத் தாங்கவல்லவனே கல்வி ஆணமகனுரும்.

உழவு என்பது "உழுவித்திருவ ரிருவருழுவித்து முழுதுமுண லாகு முழுதுண்பவரே தமக்குரிய ருபகாரியரென் பாவரே - தொழு தண் பவரே பிறர்க்குரியார் தொழின்முற்றுமுந்து முழுவினர்பான் - முழுது மடிப்ப வேண்டுதலின் முதன்மைத்தழுவென்றறிமைந்தர்.,, என்றருளியபடி, சிறுபான்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை வேளாளர்க்கும் உரித்தாய உழுதற்றொழில், அஃதாவது, அந்தணர் - அரசர்-வணிகர்-வேளாளர் - என்னுநால்வகைவருணத்தாருள் முன்னிருவரும் உழுவித்துண்ணலாரும். பின்னிருவர் உழுவித்தும் உழுதும் உண்ணலாரும். ஆதலால், யாவரும் உண்ணும்வகை ,உழுதலே செய்து அதனுற்றமும்உண்டு வாழ்கின்றுரே தமகருரியராய் வாழ்கின்றவர். அவரே தம்மை இரப்பார்க்கு அவர்வேண்டிய தொன்றனைக் கரவாது கொடுப்பவர். மற்றையெல்லாம் தாமும் மக்கட்பிறப்தனரா யிருந்தும் பிறரைதொழுது அவர் சில கொடுப்பத் தபமுயிரோம்பி அவர் பின்சொல்லற் ருரியர் அன்றியும உழுதலைவரும் மெய்வருத்தநோக்கிப் பிறதொழில்களைச்செய்து திரிந்து பொருளெய்தினுரும் முடிவில் தம்முணவின் பொருட்டு உழவர்கட் சொல்லவேண்டுதலின் எத்தொழிலினும் முதற் றன்மைத்தாயது உழவேயாம்.

நல் குரவு என்பது " வறுமை போல வின்னுது வறுமை யன்றி வேறில்லை -மறுவின் மொழிகள் சோர்வுபடும் வாய்ந்த குடிகற்செயன் மொழிக-ளிறுதிபடுமற் றிரப்பாகி யெல்லாத் தயரு முடனுரும்-பிற வினேக்கு மீன்றருபிள்ளா யதவந திடினிறத்தில்,, என்றருளிய படி, நூகரப் பகிவன யாவுமில்லாமை, அஃதாவது ஒருவனுக்கு வறுமைபோல இன்னுதது வறுமையே யன்றிப் பிறிதில்லை. அவ்வறுமையானது இழிந்த சொல் பிரவாத குடிப்பிறந்தார் மாட்டேயும்

† காலத்தை நோக்கி மடிசெய்தலாவது-வெயில்-மழை-பணி என்பன உடைமை நோக்கிப்பின்னர்ச்செய்துமென்றெழிந்திருத்தல்.மானங் கருதுதலாவது - இக்குடியிலுள்ளார் யாவரு மின்பமுற இக்காலத்தத் துன்பமுற வேன் யானேவென்ற உட்கோடல்.

அதுபிறத்தற்கேதுவாகிய சோர்வினே யுண்டாக்கும், தன்னுற்பற்றப் பட்டாருடையபழையகுடி வரலினேயுஞ் செயலிகினேயும் அதற்கேற்ற சொல்லினேயும் ஒருங்கேகெடுக்கும். இரத்தல் முத்லிய எல்லாத் தின் பங்களேயும் * விளேவிக்கும், அதனுற்றன்னே யின்ற தாயானும் பிற னேக்கருதுமாறு போலக்கருதி நோக்கப்படும், ஆதலால் அது வந்த வழி இறத்தலே நன்றும்.

இரவு என்பது "குறிப்பி னுணர்ந்து மொழியாமுன் கொடுப் பார்முன்னின் றிரந்துயிரைத் - தரப்படின்றிச் சிலர்வாழ்வர் தாய் மைமானங் கெடாமையினு - லிறப்ப வுயர்ந்த கொடைமையிரேயெ னினுமிரப்பா நில்லாக்காற் - சிறப்பென் பெறுவ ரவராலே சிறப்பர் கரவா தவர்மைந்தர்,, என்றருளியபடி, மேற்கூறிய இரத்தலே விலக் குவதாய மானந்தீரா விரவு. அஃதாவது, இவ்வுலகத்துள் இரத்தற் கேற்புடையராய சிலர்தம்மைக் குறிப்பினுணர்ந்து மொழியா மூன் னங் கொடுக்க வல்ல ஈவார் மாட்டிரத்தலால் தங்கள் ஒருக்கமும் மா னமுங் குன்றுதலகை தங்களுயிரைத் துறத்தலின்றி வாழ்ந்திருக் கின்றனர், மேலும் ஒருவன் தானியற்றுங் கொடையின்கண் அளவிற் சிறந்தானுயினும் அவன்பாற் சென்று ஒன்றனேயிரந்து கோடலேயி ரும்புவாரில் வழி அவன்மாட்டு ஏன்னபுகழுண்டாம். ஆதலால் ஈவா ருக்கு இரப்பா நில்லாது புகழில்லே.

இரவச்சம் என்பது "கண்ணிற்சிறந்தார் தம்மிடத்துங்காழ்த்த மானக்கெடாவாற் - பண்ணற்குரிய வறங்குறித்தும் படர்ந்தோன் றிரவார் பெருமையினு-லெண்ணிக் சிறந்தார் முயற்சியினு லேவாவுப் பில் வரும்புற்கை - யுண்ணற்கமைந்த தமைத்ததென வுவப்பரேம கண்டனே.,, என்றருளியபடி, மானந்தீர வருமிரவிற்கஞ்சுதல். அஃ தாவது, தமக்குள்ளதுகரவாது இவர் வரப்பெற்றேமென்று உண்ம கிழ்ந்து கொடுக்குங் கண்போலச் சிறந்தாரேனும் அவர்மாட்டு ஒரு வன் மானங்கெடத் தன்னினுல அறத்தைக்குறித்தேனு மிரவாதி ருத்தல் அவ்வறத்தான் பயனெய்தலிற் கோடிமடங்குநன்றும். ஆத லால் நுகரவேண்டுவன வின்றி கல்கூர்த்த வழியும்பிறர்பாற் சென்றி ரத்தலே யுடம்படாத அமைதி எல்லாவுலகும் ஒருங்கியைதலுங்

* எல்லாத் தின்பங்களேயு மென்றதுசெல்வர்களேகொக்கிச் சேரற்றுன் பமும் அவரைக்கண்டற் றுன்பமும், கண்டான் மறத்துழி நிகழும் தின்ப மும் மரூதவழிஅவர் கொடித்தது வாங்கற்றுன்பமும் அது கொவேண்டு நகர் வன கூட்டற் றுன்பமு முதலாயின.

கொள்ளாத பெருமையுடைத்தென்பர் அறிந்தவர்கள் தமது நெறியாய முயற்சி கொடுவங்கு தந்தது செறிவின்றித் தெளிந்த நீர்போலும் அடுபுற்கை யாயினும் அதனை அமிழதத்தோடொக்க நினைத்து மனமுவப்பர்,

கயமை என்பது "அழுக்கற் றெவர்க்கும் வடுக்கண்பா ரச்ச மாசையாலன்றி - யொழுக்கப் புரியார்மறைபிறர்பா லுய்த்துமொழி வார் தம்போல - விழுக்குக் கேதுஞ் கவலார்மு னேற்றமசிச் செம்மாப்பார்-மழுக்கு ளார்க்கே பயனபடிவார் வறிதும் வறியார்க்கிடார் கயவர்,,, என்றருளியபடி, அறமபொரு ளிரண்டனுள்ளும் இதுகாறுங் கூறப்பட்ட குணஙகளுரு யாதுமிலராயகீழாரது தன்மை. அஃதாவது, ஒருவன் தனது செல்வத்தாற்பட்டுந் தகிலு மூடித்தலையும் பாலோடடிசி லுண்டல்லயுங்கண்டு அவற்றைபொரூது அவன்மாட்டுவடுவில்லியாகவும் உண்டாக்கல்லவன் கயவனும் அவன் அரசனுல் ஏதம்வருமென் றஞ்சு மச்சத்தானும தன்னுல் அவாவப்படும் பொருளதனுண்டாகு மென்னு மாசையானுமே யன்றிற் தன்னியல்பின் ஒர் ஆசாரம் புரியான். ஒருவனுற்றன் கேட்டமறைச்சொற்களை இடருதோறுந் தாங்கிக்கெண்டு சென்று பிறர்க்குச் சொல்லுவான். தன்னிற் சுருங்கிப் பட்டியா யொழுகுவாரைக் கண்டானுயின் அவ்வொழுக்கத்தின்கண் அவரிற்றன் மேற்பட்டு அதனுற் றண்மிருதி காட்டி இறுமாப்பன் தானுண்டு பூசிக் கையைத் தெளித்தல்வேண்டுமென்று மெலிபராயுள்ளார் நிநதானுந் தெளியான். இல்வுலகத்துள் அவன் எற்றிற்குரியனென்னில் உளவின்மை முதலிய எவற்றலேனுந்தன்னே யொருதன்பமுற்றக்கால் அதுவே பற்றுக்கோடாக விரைந்து தண்ணப்பிறர்க்கு விற்றற்குரியனே யன்றி வேறெத்தொழிற்கும் உரியானல்லன்,

இவ்வாறு அரசநீதியை ஆறத்தாற்றிஞற்செய்து அகிலத்தைக் - காத்துப் பொருளீட்டவல்ல நிறதத்தினை யெல்லாம் தக்கனுக்கு முற்கலமுனிவர் உபதேசித்தபின்னர், அத்தக்கன் அவையங்கத்தையுஞ் செவிக்கமுதாகக் கேட்டு வாசனபூட்டியதாம் பூலாதிகளை வைத்து அஷ்டாங்கமாக நமஸ்கரித் தெழுந்து பிராமணர் முதலான பெரியோர்கட்கு அளவற்றதானங்களை நடாத்தி ஆதலர்க்குச்சால்-ஏதிவார்க்குணவு - அறுசமயத்தார்க்குண்டி - பசுவுக்குவாயுறை - சிறைச்சோறு - ஐயம் நின்பண்ட நல்கல் - அறவைச்சோறு-மகப்பெறுவித்தல்-மகவுவளர்த்தல்-மகப்பால் வார்த்தல் - அறவைப்பிணஞ்சுடுதல் - மறவைத் தூரியம் சுண்ணம்-நோய் - மருந்து - வண்ணூர் - ஈவிதர் -

கண்ணுடி-காதோலை-கண்மாறுக்து-கலிக்கொண்ணெய்-பெண்போகம் பிறர் தயர் காத்தல்-தண்ணீர்ப்பந்தல்-மடம் தடம்-சேரலை - ஆவுரிஞ் சுதறி-விலங்கிற்குணவு-ஏறு விடுத்தல் - வீலிகொடுத்தியிர் காத்தல் - கன்னிகாதானம் என்கின்றமுப்பா னிரண்டறங்களையுமியற்றி அள வற்ற தேவாலயங்கட்குத் திருப்பணிமுதலியனவைகளை நடப்பித்து, உமாதேவி சரஸ்வதி இலக்குமி முதலிய சத்திகோலயங்கட்கு மங்கி லியம் ஆடையாபரணங்களை வரிசைசாத்து, அதிசைவ பிராமணர் கட்கெல்லாம் ஆகமவிதிப்படி பூசனைபுரிந்து, ஆமைச்சர் முதலாயி னோர்க்குத்தேர்களிபதாதி நிலம் முதலியனவைகளை வெகுமதிசெய்து சிவாலயங்கட்கெல்லாம் திருவிழாக்கள் நடப்பித்து, ஆகாயமுகட்டை யளாவத்தக்க கோபுரங்களோடும் ஓராலயமெழுப்பி, அதில்கணேச மூர்த்தியைப் பிரதிட்டைசெய்து முழுக்கலமுனிவரால் விதித்த விதி யின்படி தினந்தோறும்பூசனைகளை நடாத்தி, வயிற்றிறசுமக்காது பெற்றதாயாகிய சுலபையின் பாதத்தையுந்தாமந்து பெற்றதாயா கிய கமலியின் பாதத்தையும் இடைவிடாதுபணிந்து, எத்திக்கினுஞ் சத்திருக்களில்லாதபடி இலவுலகத்தை யெல்லாந தனதொருகுடை நீழலி லிருத்தி, நீதிநெறி தவறாமல் தேவேந்திரனைப்போலச் சகல போகங்களையு மனுபவித்து, அரசாட்சிசெய்து எல்லா வுயிர்களையு மாதரித்து வந்தான். அக்காலத்தில் அத்தக்கனுடைய தந்தையாகி யுங்குருநாட தேயத்திற்கரயனுகியு மிருக்கின்ற வல்லவராசனனவன் தனதருமாரன் சகலவியாதிகளு நீங்கப் பெற்று கல்ல சீர்த்தியோ டும் விதூர்ப்ப தேயத்தை யாண்டுகொண் டிருக்கிறனென்று கேள்வி யுற்றுத்தனது சேனைசமுகத்தோடும் அங்குவந்துபுதல்வனைக்கண்டு, அளவளாவி மிகுந்த மகிழ்ச்சியோடுங் கலந்திருந்தான். மற்றைய ருஞ் சந்தோஷமாகச் சேர்ந்து வாழ்ந்திருந்தார்கள்.

பின்னர் வீரசேனனென்னும் ஓரரசன் சொர்ப்பனத்தில் விகா யகக்கடவுளெழுந்தருளி, அன்பனே! உனதருமாரத்தி முற்சனனத் திற் செய்திருக்கின்ற பூஜாபலத்தினுல் அவளைத்தக்கன் விவாகஞ் செய்து கொள்ளுவான் அவ்வாறே நீ நடந்துகொள்ளக் கடவ தென்று திருவாய் மலர்ந்தருள, அவ்வரசன் கண்விழித்து ஆனந்த மடைந்து, கணேசமூர்த்தியினுடைய உத்தரவின்படி தன்குமா ரத்தியை அத் தக்கனுக்கு விவாகஞ்செய்து கொடுத்தான். அதன் பின்னர் விகாயகமூர்த்தியினுடைய திருவருளினுல் அவனுக்குப் பிர கற்பானு பிறந்தான். அவனுக்குக் கட்டதரன் பிறந்தான். அவனுக் குச் சுபாலன்பிறந்தான். அவனுக்கு எதாகரன் பிறந்தான். அவ

னுக்கு வபுத்திரன் பிறந்தான் அவனுக்குச் சித்திரசேனன் பிறந் தான், அவனுக்கு வீமனுகிய நீ பிறந்தாய். தக்கன்முதலாக உன்தந் தைவரையி லிருந்த யாவர்களும் விநாயகக் கடவுளுடைய பாதார விந்தங்களிற் குறைவற்ற அன்போடும் பூசைசெய்து வந்தார்களாத லால், இனி நீயுடி அவ்வாறே பூசைசெய்து வந்தால் உனதிட்ட மெல்லாம் உடனே சித்தியாருமென்று சொல்லினர்

தக்க னரசாட்சி பெற்ற படல முற்றிற்று.

வீமனுபதேசம் பெற்ற படலம்

விச்சுவா மித்திரன் வீமனே நோக்கினன்
நிச்சையா னுனைசெய்வா னெனிற்நிலங் கெய்தினுய்
மச்சமா னுலெடு மலரயன் காண்கிலா
வச்சனுண் மலரடிக் கன்புசெய் மரபுகேள்.

பிரமனுதியராலுங் காண்டற்கரிய அவ் விநாயக மூர்த்தியைப் பூசனை செய்யவேண்டிய விதியையுங் கேளென்று விசுவாமித்திர முனிவர் சொல்வாராயினர். அரசனே! விநாயக மூர்த்தியினுடைய கருணை யுண்டாகத்தக்க ஏகாட்சர மந்திரமே பாவங்க ளீரைத்தை யும விலக்கி அவ்வவர்கள் கருதிய வரங்களே இம்மையிற்நூனே தந்து காக்கத்தக்கது. அம்மேலான மனுவை யுனக்குபதேசிக்கின் றேம். நீ ஸ்நானஞ்செய்து விரைவில் வரக்கடவையென்ன, அவ் வாறே வீமராசன் ஸ்நானஞ்செய்துவர விசுவாமித்திரமுனிவர் ஓமா தி்கிரியைகளைச் செய்து கணேச மூர்த்தியினுடைய ஏகாக்ஷரமந்தி ரத்தை யுபதேசித்து, அதை யநுட்டிக்கு முறைமையையுஞ்சொல்லி உனது பட்டணத்தைச் சேர்ந்து முன்னர்த் தக்கனுற் பிரதிட்டை செய்துவைத்த விநாயகராலயத்தி லிருந்து தினந்தோறுஞ் செபஞ் செய்துவருவாயென்று மிகுந்த கருணையோடுஞ் சொல்ல வீமரா சன் அவ்விசுவாமித்திர முனிவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தன்மனைவியோடும அவ்வனத்தைப் பிரிந்து நகரத் தெல்லையைச் சார்ந்தான்.

இப்பால் மீளவும் அரசன் வருகின்றதை அவன் அமைச்சர்க ளறிந்து, பட்டத்து யானையையுஞ் சொன்னச் சிவிகையினையு மலங் கரித்துச் சகல பரிசனங்களும் புடைசூழ்ந்து வரும்படி எதிர்கொ

ண்டு சென்று அரசனைக் கண்டு தீர்க்கதண்டன் செய்து பிரிந்திருந்த தாய்தந்தைபரைக் கண்ட இளம்பிள்ளைகள்போல அதிக மகிழ்ச்சிபொங்க விருந்தார்கள். பின்னர் அரசன் தனதுபட்டத்து யானைமீது ஆரோகணித்துத் தன் மனைவியைச் சிவிகையி லிருக்கச் செய்து, சகல வாத்தியங்களுங் கோஷ்டிக்கும்படியாகப் பற்பலவரி சைகளோடும் பட்டணத்துள் வந்து, அரண்மனைக்குட் பிரவேசித்து, அந்தணர்முதலாயினோர்க்கு அளவற்றதிரவியங்களைத் தானஞ் செய்து, தன்னைத் தரிசிக்கவந்த சகல சனங்கட்கும் தனது கிருபை யைவழங்கி அமைச்சர்களை நோக்கி, மந்திரிகாள்! நீங்கள் முன்பே லவே அரசுரிமையை நடாத்தி வாருங்களென்று கட்டளையிட்டுத் தக்கனும் பிரதிட்டை செய்திருக்கின்ற ஆலயத்திற் சென்று, அங்கு மூர்த்தீ கரித்திருகின்ற விநாயகக் கடவுளைத் தியானித்து வேதாகம விதிப்படி பூசனைசெய்து, சகலமும் விநாயக ஸ்வரூபமாக மனதிலெண்ணி விசுவாமித்திர முனிவரா னுபதேசிக்கப்பெற்ற காயத்ரீ மந்திரத்தை இடைவிடாமற் செபித்து வருகின்ற நாளையில் விநாயகமூர்த்திக்குக் கருணைசுரந்து வீமராசன் கண்டு தரிசிக்கும்படியாக அவனெதிரிற் பிரத்தியக்ஷமாகத் தோன்றியருளினர்.

விநாயகர் தமையும் பூசை விதியுளி யியற்றி யெல்லாம்
விநாயக ருருவ மென்றே மெய்யுறக் கண்டோ வாமை
விநாயகர் மனைவை யெண்ணி வீமனுற் றிருக்கு நாளில்
விநாயகர் கருணை கூர்ந்து விழியெதி தோன்றி நின்றார்.

அப்பொழுது வீமராசன் சுவாமியைக் கண்டு அஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, கர்த்தனே! தேவரீருடைய பாதாரவிந்தங்களில் இடைவிடாத பத்தியும், ஒருசிறந்த புத்திரனும், முடிவில்முத்தியும், அடியேற் கருளவேண்டுமென்று தோத்திரஞ் செய்தனன்.

பூரண ராவனை நோக்கிப் பொருவினம் பாதத் தன்பு
மேரணி கனக மேனி யெச்சமு நினக்குத் தந்தாஞ்
சீரணி முத்தி பின்னர்ச் சேர்த்துது மில்லிற் செல்லென்
றூரண முரைத்த வாயா லறைந்தனர் மறைந்து போனார்.

விநாயக மூர்த்தி வீமராசனைப் பார்த்து, அன்பனே! நீ கருதியவரே உனக்கு நம்மிடத்தன்பையும், சொன்னரூபம் பெற்றிருக்கின்ற புத்திரனையுந் தந்தோம். இனி உனது அந்தியகாலில் முத்தியையுங் கொடுப்போமென்று திருவாய் மலர்ந்து, நீ உன்னரண்

மனைக்குக் செல்லக்கடவையென்று விடைகொடுத்துத் தமது திரு வருவத்தைக் கரந்தருளினார்.

இப்பால் வீமராசன் அரண்மனைக்கு வந்து சிவபிரானையும் விநாயக மூர்த்தியையும் இடைவிடாமற் பூசனை புரிந்து, அந்தணர் முதலாயினோர்க்கு ஆடையாபரணதிகளைத் தானஞ்செய்து ஆனந் தசாகரத்தின் மூழ்கியிருந்தான். உடனே கணேசமூர்த்தியினுடைய பெருங்கருணையால் அவ்வரசன் மனோவியாகிய சாருகாசினி வயிற் றிற் கருப்ப முண்டாகிச் சொன்னமலியே ஒருருவங் கொண்டுவந்த தபோலச் சகலரும் அற்புதங் கொள்ளத்தக்க புத்திரன் உற்பவித் தான். அதனால் வீமராசன் அகமகிழ்ச்சிகொண்டு புத்திரனுண்டா னதற்கு நடத்தவேண்டிய சடங்குகளைக் கிரமப்படி கடப்பித்து அப்புத்திரன் உருக்குமம் போன்ற ஒளியுள்ள சரீரத்தினனுதலால் பெரியோர்கள் வாக்கியத்தின்படி உருக்குமாங்கதனென்னு நாமகர ணந் தரித்து, அவனுக்குப் பிள்ளைமைப் பருவஞ்சென்ற பின்னர், அவனைக் கபிலமுனிவர் சமுகத்திற் கொண்டுபோய் விட்டான். அது முதல் உருக்குமாங்கதனைவன் கபிலமுனிவருடைய திருவடிகளுக் குப் பத்திசெய்துவந்தான். அதனால் சகலவித்தைகளும் அவனுக்கு விருததியாகிவரத் தந்தை ஆனந்தங்கொண்டு விநாயகமூர்த்தியினு டைய ஏகாக்ஷர மந்திரத்தை உபதேசஞ் செய்து அதை யநுட்டி க்கு முறைமையையுஞ் சொன்னன். பின்னர் அவ்வுருக்குமாங்கதன் அதைச் செபஞ்செய்து கணேசமூர்த்தியிடத்தில் தனது தந்தையி லும் மிக்க அன்புடையவனுகிச் சதாகாலமும் அவரை ஆராதித்துக் கொண்டிருந்தான்.

வீமனுபதேசம் பெற்ற படல முற்றிற்று.

உருக்குமாங்கதன்

பட்டாபிடேகப் படலம்.

(*)

கருக்குவந் திடும்பை பூண்டு கலங்குறு முயிர்க்குப் பந்தங் கருக்குவந் தருள்க ணேசப் பெருமனின் னருட்கா லன்பிற் றருக்குள வுருக்கு மாங்கன் றனிமுடி யபிடே கத்தைச் சுருக்கியா முரைக்க வெங்க ணேனுத் துதித்து வாழ்வாம்.

அதை வீமராசன் தெரிந்து தனது அரசரிமையை அவன் பால் ஒப்புவித்தற்கு எண்ணமுற்று, கொலுச்சபையில் வந்து சிங்

காதனத்தி லிருந்து கணிதசாஸ்திரிகளைக்கூவி நமது குமாரனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்யத்தக்கநாளை ஆராய்ந்தறைப்பீர்களென்ன, அவர்கள் அவ்வரசகுமாரனுக்கேற்ற திதிவார நட்சத்திரயோக கரணஇரக ஓரை முதலான நிலைகளை நன்றுகச் சோதித்தணர்ந்து ஓர் சுபதினத்தை நியமித்து அதுவே நன்முகூர்த்தமென் றறிக்கையிட்டார்கள் பின்னர் அரசன் அமைச்சர்களை நோக்கிப் பட்டாபிஷேகத்திற்குரிய பதார்த்தங்களையெல்லாம் இமைக்குமுன் சேகரிக்கக் கடவீர்களென்று கட்டளையிட்டுத் தனது குலகுருவை யடைந்து, இருகரங்களையுங் கூப்பி, சுவாமீ நமது குமாரனுக்கு மகுடாபிஷேகஞ் செய்யத் தனித்திருக்கின்றே னதலால் அதற்குரிய பொருள்களை அடியேற்கு உணர்த்தியருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தான். அவ்வாசியர் மனமகிழ்ந்து அதற்குரிய எல்லாப்பொருள்களையும் ஓர் நறுக்கோலியிற் பொத்தளித்து இதனையுஞ் சொல்லுவார், அரசனே! மகுடாபிஷேகஞ் செய்யத்தக்க தானம் புண்ணியபூமி-சிவசன்னிதானம்-நதி-தீரம் நந்தவனம்-தன்னில் எனனும் இவ்வைந்தில் ஒன்றுகியிருத்தல்வேண்டும் அதிலும் கீழ்த்திசை - வடதிசை-ஈசானதிசை என்னும் இம்முத்திசைகளில் ஒன்றுகி யிருத்தல்வேண்டும். அவ்விடத்தில் ஐந்துமுதல் ஐம்பதைந்தது முழம்அகற்சியுள்ளதாய் முப்பத்தாறு தூண்களோடு ஓர் பூசாமண்டபமும் ஓர் அலங்கார மண்டபமுஞ் சமைத்தல்வேண்டும், அன்றியும மணி-பொன்-வெள்ளி தாமபிரம்-தருப்பை-யாகத்திற்குரிய மரங்கள் - பால்உள்ள மரங்கள் என்னுமிவைகளின் ஒன்றுல அரக வீற்றிருத்தற் கோர்பீடமும் அபிஷேகஞ செய்தற் கோர்பீடமும் அமைத்தல் வேண்டும். அப்பீடங்கள் ஒருமுழம் உயர்ந்து ஒன்றரை முழம் அகன்று, முன்னும் பின்னும் இரண்டுபடிகளைக்கொண்டு நான்கு பாதங்களோடும் இருத்தல்வேண்டும். மேறகூறிய அலங்காரமண்டபத்தில் ஆறுமுழம் அகன்று, இரண்டுமுழம் உயர்ந்திருக்கின்ற இரண்டு வேதிகைகள் செய்தல் வேண்டும. ஆதலால் இருதக், கிரமத்தின்படி மேற்கூறிய மண்டபங்களைத் தகுதியான நிலத்தினுந் திக்கினும் பொருந்த முடிப்பித்து, இரண்டு பீடங்களையும் வேதிகைகளையும் விரைவில் நிறைவேற்றக் கடவையென்றார்.

இவ்வாறு ஆசிரியர் கூறிய மொழிகளை வீமராசன் கேட்டுக் கம்மியர்களைக் கூவி, அவர்கட்கு நவரத்தினங்களையும் பொன்களையுந் தக்க இரண்டு பீடங்கள் செய்துகொண்டு வரக்கடவீர்களென்றுகட்டளையிட்டு, அவற்றைச் செய்யத்தக்க முறைமையையுங்

கூறிப் பின்னுஞ் சொல்லுவான். கமல கரத்தினது மதிலுக் குட் பட்ட நிலத்தில் மிழக்குத் திக்கில் ஐம்பத்தைந்து முழம் எல்லையுள் ளதாய் மூப்பத்தாறு தூண்களோடு ஓர் பூசாமண்டபமும் அலங் காரமண்டபமுஞ் சமைத்து, அவ்வலங்கார மண்டபத்தில் இரண்டு வேதிகைகளைச் செய்து முடிக்கக் கடவீர்களென்று கட்டளையிட் டான். உடனே அக்கம்மியர்கள் நல்லதென்று விடைபெற்றுச் செம்பொன்னேயுருக்கி, இரண்டு பீடங்கள் வார்த்து அவைகளில் இரத்தினங்களைப் பதித்துப் படிகளைச் சேர்த்து வெள்ளியாற் சிங் கக் கற்களே யியற்றிப் பின்னர், அரசன் கட்டளையிட்ட விடத்திற் சென்று நிலந்தோண்டி, அதில் இடிவுகொள்ளாதபடி மணல்சொரி ந்து, அடியில் நீலக் கற்களைப் பரப்பி, இடையிற் பவளங்களைச் சேர்த்து அதன்மேல் மரகத ரத்தினங்களைப் பதித்துக் குறடுக ளாக்கி, அக்குறட்டுகளின்மேல் கோமேதகத்தாலாகிய போதிகைக் கட்டைகளைத் தாங்கும் பதுமராகத் தூண்களை நிறுத்தி, புட்பரா கத்தால் உத்திரமிட்டு, அதன்மேல் வச்சிரப் பலகைகளைப் பரப்பி, வைடூரியத்தினுற் கொடுங்கைகளை யிருத்தி அதிற் சந்திரகாந்தத்தி னுல் யாளிமுகங்கள் சமைத்து முத்துமாலைகளைத் தொங்கவிட்டு, பளிங்குக் கற்களினுற் சுவரெழுப்பி, நாற்றிசைகளினும் நான்குவா யில்களை விடுத்து ஆகாயத்தை யளாவியிருக்கத் தக்கதான மண்ட பங்களாகித் தூண்களோடுங் சூலவாழை மாங்களையும் கமுகுமர ங்களையும் நிறுத்தி, கன்னற்சோலைகளைநாட்டி, விதானங்களைத்தூக்கி இடை இடையிற் றூண்டாளிச்சுருகளைத் தொங்கவிட்டு, அரும்பு மாலைகளையும் மலர் மாலைகளையுங் கட்டி ஒளிமிகுந்த கண்ணாடி வகைகளைப்பூட்டி, நாரத்தை முதலிய கனிவர்க்கங்களைக் கோத்து, நாட்டிப் பற்பல விசித்திரங்களான ஒலியங்களைத் தீட்டி, சுவரத்தி னமயமாயிராநின்ற தோரணங்களைச் சூட்டி, அம்மண்டபங்களைச் சூழச் சந்திரமண்டலத்தை யளாவத்தக்க பந்தர்களைச் சமைத்து, இரண்டு வேதிகைகளையும் முடித்தவுடன் முன் னியற்றப்பட் டிருக் கின்ற பீடங்களைக்கொண்டு அரசன் சமுகத்தில் வைத்து தேவரீர் அடியேங்கட் காக்கியாபித்த வண்ணஞ் சிவபிரானுங் கண்டுகளிக்கத் தக்க இரண்டு மண்டபங்களைக் குறைவற முடித்திருக்கின்றன மென்று அறிக்கையிட்டார்கள்.

அதனை யரசன்கேட்டு மனமகிழ்ந்து சொன்னம் வஸ்திராப ரணமுதலிய திரவியங்களை அவர்கள் வேண்டுமட்டும் வெகுமானஞ் செய்து விடைகொடுத்தவுடன் அச்செய்தியை ஆசாரியர்தெரிந்து

பூசாமண்டபத்தை யடைந்து, அதிற் பதின்மூன்றுவிதக ரூண்டா
கும்படி குறுக்கினும் நெடுக்கினும் பதினொரு நூல்களே விடுத்து,
நூற்றறுபத்தொன்பது வீடுகளாக்கி அவைகளினடுவே இருக்கின்ற
வீட்டிற் சிவபிரானே உமாதேவியாரோடும் எழுந்தருளத் தக்கதாக
நான்கு முழமுள்ள ஒரி இரத்தின வேதிகையை யிருத்தி அதைச்
சூழவிருக்கின்ற எட்டுவீதிகளில் அந்தணர்-சூக்மர்-சிவோத்தமர்-
ஏசகேந்திரர்-ஏகருத்திரர்-திரிமூர்த்தி-ஸ்ரீகண்டர்-சிகண்டி-என்
கின்ற-அஷ்ட வித்தியேஸ்வரர்க்கும், அதைத்சூழ விருக்கின்ற பதினொ
ருவிடகளில், நந்தி-மாகாளர்-பிருங்கி-விகாயகர்-விரூபர்-ஸ்கந்தர்-
தேவி-சண்டேஸ்வரர்-இந்திரன்-அக்கினி-யமன்-நிருதி-வருணன்-
வாயு-குபேரன்-ஈசானன் என்கிற சோடச தாதுக்களை மாகத்
தனித்தனி வேதிகைகளே யமைத்து அதை யடுத்திருக்கின்ற இருபத்
தாறின்கு வீடுகளே யாவரும் உலாவும்படியான வீதியாக விடுத்து-
காற்புறங்களிலும் கடவேயிருக்கின்ற மும்மூன்று வீடுகளே வாயில்க
ளாக்கி, மற்ற நூற்றெட்டு வீடுகளில் சம்புருதிரர் விபூதிருத்திரர்,
கணருத்திரர்-ஆத்தியாட்சருதிரர்-தரியாட்சருத்திரர் திரிதீசவர்
தாதருத்திரர்-பிரபஞ்சருத்திரர்-விட்சணருத்திரர்-அனந்தருத்திரர்-
பாலருத்திரர்-வீரருத்திரர்-பாதாள ருத்திரர்-விருஷபத்துவசருத்தி
ரர்-சௌந்தரிய ருத்திரர்-கிராசன ருத்திரர்-சர்வருத்திரர்-ஸ்மயான
ருத்திரர்-நீலலோகிதருத்திரர்-வைலோகித ருத்திரர்-கபாலீசருத்திரர்
அஜருத்திரர்-ஈசான ருத்திரர்-விஜய ருத்திரர்-புத்திர ருத்திரர்-பவோ
ற்பவ ருத்திரர்-வச்சிரதேக ருத்திரர்-பரமாரத்தன ருத்திரர்-தன ருத்
திரர்-விபுவு ருத்திரர்-சஹஸ்ர ருத்திரர்-பிஞ்ஞக ருத்திரர்-திரிதசாதிப
ருத்திரர்-அக்கினி ருத்திரர் உதாதிருத்திரர்-பிங்கல ருத்திரர்-கண்
டருத்திரர்-ஆதிருத்திரர்-ஹர ருத்திரர்-சுவாலாருத்திரர்-தஹன ருத்தி
ரர்-ஹவ்விய ருத்திரர்-பப்ரு ருத்திரர்-பஸ்மாந்தக ருத்திரர்-கூயாந்த
கருத்திரர்-விதாதிருத்திரர்-தாதரு ருத்திரர்-கர்த்ரு ருத்திரர்-ஸ்ரித
காமருத்திரர்-சர்வவியோக்தி ருத்திரர்-விமோம ருத்திரர்-தர்மருத்தி
ரர்-விசால ருத்திரர்-சமயுத்தருத்திரர்-ஸரிதி ருத்திரர்-வருண ருத்தி
ரர்-ஹர ருத்திரர்-த்ரவத்திருஷ்ட ருத்திரர்-மயான ருத்திரர்-ஊர்த்
தவசேஷ ருத்திரர்-விரூபாக்ஷருத்திரர்-தூமரருத்திரர்-லோகிதருத்
திரர்-தெளஷ்டராக ருத்திரர்-பாலருத்திரர்-அதிபால ருத்திரர்-பாச
ஹஸ்த ருத்திரர்-ஜ்யபதர ருத்திரர்-தீர்க்கபாகு ருத்திரர்-த்யானத்ம
கருத்திரர்-சுஜுமுக ருத்திரர்-அப்தவருத்திரர் சீக்ர ருத்திரர்-இலயரு
த்திரர்-வரயோகருத்திரர்-சூக்மருத்திரர் - நீட்சணிய ருத்திரர்-பயா

ர்தகருத்திரர்-பஞ்சசிகாருத்திரர் - கபர்த்தருத்திரர் - கிரீசருத்திரர் - உருபவருத்திர - தானய ருத்திரர் - சௌமிய ருத்திரர் - சத ருத்திரர் - சடாதர ருத்திரர் - காம ருத்திரர் - பரசாக ருத்திரர் இலகூடீசருத்திரர் - பிரகாச ருத்திரர் - வீரியேச ருத்திரர் - எக்கி யேச ருத்திரர் - ஜேஷ்ட ருத்திரர், வேதாப ருத்திரர், வித்தியாதச ருத்திரர், பூதாவேச ருத்திரர், உலோகருத்திரர். பார்வதீ ருத்திரர், பரமேஸ்வர ருத்திரர், உமாபதி ருத்திரர், ஈஸ்வர ருத்திரர், சதா சிவ ருத்திரர், மஹாவீர ருத்திரர், கிராத ருத்திரர், அர்த்தநாரீஸ்வ ரருத்திரர், ஜலவிகருண ருத்திரர், சாஸ்வத ருத்திரர், மஹேஸ்வர ருத்திர், மஹாருத்திரர் என்கின்ற அஷ்டாதச ருத்திரர்கட்கும் வெவ்வேறு வேதிகைகளை நிறுத்தி, மேல்விடுக்கப்பட்ட வீதிமுற்றி னும்முறையே நவகண்டங்களையு மமைத்தனர்.

அச்சமயத்தில் வீமராசன் அவரையடைந்து சுவாமீ! தேவரீர் முன்னர்ப்பொறித்தருளிய பத்திரிகையினபடி எல்லாப் பொருள்க ளையும் இங்ஙனம் அழைப்பித்திருக்கின்றேனென்று அறிக்கையிட அவர் அப்பொருள்களையெல்லாம் பார்வையிட்டு, அங்கிருக்கின்ற வர்களை நோக்கிச் சிவபிரான் கும்பத்திற்கு மூன்றிழையும், உமா தேவி கும்பத்திற்கு இரண்டிழையுங், ஏனையோர் கும்பங்கட்கெல் லாம் ஒவ்வோர் இழையுமாக நூல்சுற்றிச் சமிதை முதலானவை களை வேறுவேறு ஆராய்ந்துவைக்கக் கட்டளையிட்டு, தாமும் தரு ப்பை முதலானவைகளை ஆராய்ந்து பாலிகைகளில் மணல்சொரிந்து மூளைதைத்து, மற்றமுள்ள கருமங்களை முடித்துக்கொண்டிருந்த னர். அவர் அவ்வாரிருக்க முன்னர் அரசனு லேவப்பட்ட அமைச் சர்கள் மற்றப்பரிசனங்களை நோக்கி அவ்வவர்கட்குரிய பணிகளைக் கட்டளையிட அவ்வாறே யவர்களெல்லாந் தங்கடங்கள் தொழில் களை நிறைவேற்றுவா ரானார்கள். உடனே வள்ளுவனுனவன் உண் ணல் உடுத்தலாதிகளை முடித்துத் தனது முரசினோடு யானைமீதேறி எங்கும் கீக்கமற்று நிறைந்திருக்கின்ற தேவதேவோத்தமர் வாழ்க; சகல வேதாகமங்களும் வாழ்க; வீமராசரும் அவர்கிளைகளும் வா ழ்க; அவரதிநீதிதவறாத செங்கோல் வாழ்க; எல்லாவுலகங்களுங் குறைவின்றி வாழ்க; இக்கர முழுவதுகதைத்தோங்கி வாழ்க என்று முரசறைந்து பின்னுஞ் சொல்லுவான். இங்ஙகரத்துள்ள எல் லாச்சனங்கட்கும் அறிவிப்பது யாதெனில்:—கலைமகள் சயமகள் என்னு மிரண்டு மங்கையர் முன்னரே காணியாட்சியாக் கொண்டி ருக்கின்ற உருக்குமாங்கத ராசருடைய புயங்களின்மீதி லிலமகள்

திருமகள் என்னு மிவ்விருவர்களையும் காலையதினத்திற் புணர்த்தப் போகின்றனர். ஆதலால்யாவரும் நகரத்தை அலங்கரிக்க வேண்டிய து மூன்னையைப்பார்க்கிலும் விசேடமான தருமங்களை யாவரும் நடாத்த வேண்டியது.

பொருளில்லாதவர்கட் கெல்லாம் மகாரா சாவினுடைய நிதிப் பொக்கிசத்தைத் திறந்து விட்டிருக்கின்றது, அதில் அவ்வவர்கட்கு வேண்டுமட்டு மெடுத்துக்கொண்டு நிறை வேற்ற வேண்டியது. பொ ருளுள்ளவர்களாயின் அதனைத் சங்களால் வெருக்கப்பட்ட தெப் வத்தினை யொப்பமதித்து ஓழித்துவிடவேண்டியது. யாவரும் இனிய போசனதிகளை நுகர்ந்து, குளிர்ந்த சுகதனதிகளைப்பூசி, ஆடையா பரணதிகளைத் தரித்து, ஒருவரோ டொருவர் இனிய வார்த்தைக ளோடு அளவளாவி எல்லாத் தேவர்கட்கும் பூசனைகளைச் செய்ய வேண்டும். என்றிவ்வாறுசொல்லித் தன்னிருக்கைச் சேர்ந்தனன் அவையனைத்தையும் அங்நகரத்தார் மிக்க அன்போடு கேட்டு அள வற்ற தருமங்களைச செய்து நகர முழுவதும் அலங்கரித்துத் தங்க டங்கள் குமாரர்கட்கே அரசுரிமை வந்ததுபோல உள்ளமும் உட லும் பூரித்திருந்தார்கள் இப்பால் சேனைத் தலைவனுடைய ஏவலி னால் யானைப்பாகர்கட் கெல்லாம் இறைவனன ஆதேதாரணனுவன் அரசனுடைய பட்டத்துயானையைக்குளிப்பாட்டித் திருமுக மெழு திவெழுதிப்பட்ட மணிந்து அளவற்ற ஒப்பனைகளைச்செய்து முடித் தனன். இரதசாரதிகட் கெல்லாந் தலைவனன வல்லவனுனவன் அர சனுடைய இரதத்திற கொடிகளை யுயர்த்தி ஆடையா பரணதிகளை யணிந்து, பலலக்ஷணங்கள்வாந்த அசுவங்களைப்பூட்டி, வாளாயுத ங்கொடமம்பகழி முதலானபலவாயுதங்களையும் நிரபபினன், குதி ரைப்பாகர்கட்கெல்லாம் முதன்மையான வாதுவனுனவன் எல்லாக் குற்றங்களு மகன்று பலகற்குணங்களைவாய்நது, பகைவரதி உள்ள ங்களைப் பேதிக்க வல்ல அரசனது பட்டத்துக் குதிரையைக்குளிப் பாட்டி ஒளிமிகுந்த ஆபரணங்களைப் பூட்டிக் காதடியி லிருக்கின்ற கேசங்களைப் பின்னிப் பலவித சிங்காரங்களைச் செய்து நிறைவேற் றினன்.

சாரணர் கொண்டு சென்ற திருமுகத்தைப்பிறதேயங்களிலுள் ள அரசர்முதலாயினோர் வாங்கி வாசித்து அளவற்ற அலங்காரங்க ளோடு தங்கடங்கள் மனைமக்கள் சுற்றத்தினருடன் வந்து சேர்ந்த னர், தோரணங்களாற் புனைதல் செய்யப்பட் டிருக்கின்ற மாடவீதி களில் ஓர்பால் வாரண முழக்கமும், ஓர்பால்தோரணி முழக்கமும்,



ஓர்பால் சேனைகள் முழக்கமும், ஓர்பால் ஆரணமுழக்கமும், ஓர்பால் ஆடலின் முழக்கமுமாகி யிருந்தன. சிலர் புனலிற் குளித்து விளையாடுவார்களும், சிலர் மதவுண்டு களிப்பார்களும், சிலர்வாதாடிக்கெலிப்பார்களும், சிலர்வீதியழகை நோக்குவார்களும், சிலர் வேறுபணிகளாக்குவார்களுமாகி யிருந்தார்கள். இவ்வாறு அந்நகரத் துள்ளோரும் பிறநகரிலிருந்து வந்திருக்கின்றவர்களும், அளவற்ற ஆனந்தத்தில் முழுகினவர்களாயிருக்க முன்னர்க் கணிதர்களால் ஏற் படுத்தி யிருக்கின்ற நாள் சமீபித்ததும் ஆசிரியர் பூசாமண்டபத்திற் கெழுந்து, சந்தனம் புஷ்பம்-அக்ஷதை பால்-தயிர் - முதலியவைகளாற் சகல தேவர்களையும்பூசித்து, அவர்கட்குப்பலிபிண்ட முதலியவைகளைக் கொடுத்த யாவரும் இப்பூசாமுகத்தில் எழுந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்து, முன்பு பாகரால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்ற கரி பரி தேர் படைக்கலம் என்னு மிவைகட்கு முறை மைப்படி பூசனைசெய்து, அந்தணர் முனிவர் இரவலர் முதலாயினோர்க்கு அன்னமளித்து, அன்றிரவில் உருக்குமாங்கதனை யழைத்து, அவன் கரத்திற் பொற்கங்கணம் புனைந்து நூதனமாக இயற்றப் பட்டிருக்கின்ற வஸ்திராபரணங்களை யணிவித்து, பூசைசெய்ய யத்தனித்தவராய் பலவகை வாத்தியங்கள் முழங்க, பாவையர்கள் நிர்த்தஞ்செய்ய, முனிவர்கள் மந்திரங் கணிக்க, அந்தணர் வேதங்களை யோத, கேட்டபொருள்களைச் சிலர் எடுத்து கீட்ட, இவ்வித ஆடம்பரங்களோடு முன்னர்ச் சுவர்த்தலத்திற சிற்பியர்களாற சமைக்கப் பட்டிருக்கின்ற சிதிரவாநவாகிய விநாயகமூர்த்தியைப் பத்தியோடுபூசனைசெய்து, பலவித உணவுகளை நிவேதித்து, பரமகருணாநிதியாகிய கணேசமூர்த்தியே! யானியற்றப்போகின்ற வினைகள் இடையூறின்றி நிறைவேற்ற வேண்டுமென்று பிரார்த்தித்து, மூன்விவிராணுக்கமைத்திருகின்ற வேதிகையின்மீது ஆறுமரக்கால் செல்பரப்பி, அதிற்பாதியளவு அரிசியும், அதிற்பாதியளவு எள்ளும், அதிற் காற்கூறு கலக்திருக்கின்ற சவதானியங்களும் பெய்து, அதன்மீதுநிவரும்பத்தைத் தாபித்திச் சகலமங்கலவாத்தியங்களோடு பொற்குடங்களில் யானையின்மீது கொண்டுவந்த தீர்த்தங்களை ஆடையில் வடித்து, அதில் முப்பத்திரண்டுபடி ஜலத்தைக் கும்பத்திற்பூரித்து சொண்ண-சுவரத்தினம்-கோட்டம் - கற்பூரம்- அகில்-சந்தனம் - பஞ்ச கௌவியம்-வெட்டிவேர்-விரைகள் - மலர்-கனிகள் - கொடிகள் ஈண்ணும் இவைகளை உள்ளே சொரிந்து, அதன்மீது மாவிலை - நாரிகேளம் - தருப்பைமுடி முதலானவைகளை வைத்து, மேற்கூறிய செல்

முதலிய அடியிற்பரப் பளவிலும் நீளவிலும் பாதிபாதியளவு அதற் குவாமபாகத்தி லிருக்கின்ற சத்திகும்பத்திற்கும், அவைகளிற் பாதி யளவுமற்றைக் கும்பங்கட்கு மமைத்தலெல்லாக் கும்பங்களையும் அல்லவ் விடங்களிற் றூபித்து மேற்கூறிய பொன்முதலிய வஸ்துக் களைச் சொரிந்து, மாவிலே முதலியவைகளையும் வைத்து, கும்பங்கட் கெல்லாம் இரண்டிரண்டு கலைகளைவெவ்வேறாக உடுத்திவித்தியேஸ்வ ரர்கும்பங்களெனட்டினுள்பொன்-வெள்ளி-செம்பு - இரும்பு - காரீயம் வெள்ளீயம்பித்தளை - வெண்கலம் என்கின்ற இவ்வெண்வகைப் பொ ருள்களையும் ஒவ்வொன்றாகச் சேர்த்து, அவற்றைச் சூழவிருக்கின்ற பதினாகும்பங்களும் அகில்-கந்தம்- அதாரம்- மாட்சிதம் - மனசிலை இரதம்-வெள்ளை அப்பிரகமஞ்சள்- அப்பிரகம்- கௌரி- காஞ்சனம்- சாதலிங்கம்-சிந்தூரம்-தித்தம் - பொன் மிமலை - வெள்ளிமலை-சுத் தம்என்னும்இப்பதினாறுபொருள்களோடு, சோநிமரம்-சோதிக்கொ டிசோதித்திரணம்-பாரசிதை-பயை- சீவை- வினைச்சுரி - சமங்கை-மிச யை-சபை-சகதேவை-பூரனை-கேசை அஷ்டை-சதாவரி - சிவபத்திரி என்னும் இப்பதினாறையுமிட்டு, இத்திருதிசைத்துவாரத்தின் இரு மங்கினுக்கடுத்தபன்னிரண்டுகும்பங்களுள் பலாசுகருங்காலி- ஆப்பி ரம்-கல்லால்-ஆல்-அவிளம்-வன்னி-வாகை-பிப்பிலம்-அத்தி-காரத்தை மாதினை என்னும் இப்பன்னிரண்டுபொருள்களின் பட்டைகளைச் சொரிந்து அக்கினிதிசையிலிருக்கின்ற ஒன்பதுகும்பக்களுள் ஆற் றுமண், ஆனிலைமண்-புற்றுமண்-இபக்கோடு பட்டமண்- கடல்மண் மடுமண்-புண்ணிய தலத்துமண்-மலைமண்-அரசடிமண் என்னும் இவ் வொன்பதினையுந் தனித்தனி ஆராய்ந்து பெய்து, யமதிசைத் துவா ரத்தின் இருமருங்கினு மடுத்தபன்னிரண்டுகும்பங்களுள் கமுகீர் நீலம் வெண்டாமரை-செந்தாமரை-மகிழ்-அலரி-பாதிரி - குரவம் மல்லிகை-பலாசு- கந்தியாவர்த்தம்-சண்பகம் - என்னும் இப்பன் னிரண்டுமலர்களையுமிட்டு. கிருதிதிசையி லிருக்கின்ற ஒன்பது கும பங்களுள் அரைத்தசந்தனம்- வெட்டிவேர் புனுகு-குங்குமம - கஸ் தூரி-தக்கோலம்- அகில்-சாபத்திரி இலவங்கம் என்னும் இவ்வொன் பது விரைப் பொருள்களையும் பெய்து, வருணதிசைத் துவாரத்தின் இருமருங்கினுமுள்ள பன்னிரண்டுகும்பங்களுள் மூதகிலரிசி- கோது மையரிசி - யவையரிசி. காயுருவியரிசி, தினையரிசி, சாமையரிசி, வர கரிசி, உளுந்துளெல்-எள-பயறு - கடுகு எனனும் இப்பன்னிரண் டையுஞ் சுத்தி செய்திட்டு, வாயுதிசையி லிருக்கின்ற ஒன்பது கும

பகைகளுள் இலக்குமி-சங்கபுட்பி-விட்டுணுகாந்தி - அஸ்வினி-துளசி சகதேவி-இந்திரவல்லி - சூரியகாந்தி-பனமினி என்னும் இவ வொன்பதினையும் பெய்து சூரியபரதிசைதகதுவாரம இருமருங்கினு முள்ள பனனிரண்டு குமபங்களுளு பால-தயிர-நெய-கோசலம கோமயம் இளநீர-மாதளுங்கவிரசம நாரதநங்கனிரசம, வில்வக்கனிரசம்-மரங் கனிரசம - தாடிமகாரிரசம - பலாசகனிரசம எனனும இபபன்னி ரண்டையும விடுதது, ஈசான திசையி லிருகினற குமபங்களிலும் எண்டிசையினு இடை இடை முமமனைக வைத்திருகின்ற இருபத்தி நவகுருபாகளி லும வேறுபடினவன வில்லி யாதலால், அவைகளுள முனனமா விட்டி நகினற கந்தமிரோடு நிறுவதிச் சிவ குமபம அமைதிருகினு நபபதகதை மகமேரு வாகவும, அஃ கோடு அகினிசகூபதிநகினற இருபதகத பதஙகளை இளா விருத சனடமாகவும, விரியை வானமாகவும, மறறப் பதமரினை கூள யெலலாம எனபாலத கா அவறறின பதஙகள், அவை கோகரு தாத சனடாரா ராகவும கொணடி, அமமண்டபத்தை காவலகரி பாதி, முனனா மேறவாகததியானிகதபதத் தை அமமி நுனினு ரி புரி பாசவும, அசனருகில இரண்டுவரிசை யாசச ருபகருபவினற பதாரனை அபிரு வின கொடுமுடிகளாக வும பாவிதது, சிவ சகதி விரியெனவா - காதகைகள்-உருத்திரர் முதலிய எலலாகடவாரை மும பிரமுகரிபவைகளைக் கொணடு வரிசைக்கிரமமாக பூரிதது, கிவதலையும சகதியையும் ஏகாதசரும் மிருதியருமாக பூசை செயவ தறகாக நிருமாணிகளாலருச்சித்து, ஏனை யோரையெலலாம அவவவாகடகுரிய மகதிரஙகளால் வழிபட்டு, உணவாதிகளை யூட்டிச துபதிபரிகளைகளாட்டி, ஆடல் பாடலாதி கூலைக கிரமமாக நடபபித்து பினனா நவகுணடங்களமைத்திருக் கினற வீதிகளெழாது, மதிய நவமபோனற குணடகதையெடித்து சுததி முதலானவைகளைச செயது அதில அகினியைத் தாபித்து, பலாச்சமிதை முகலிய உபகரணங்களைக் கொணடு ஓமஞ்செய்யத் தொடஙகினவராய மறறைகிழகதாதி திசைகளிலிருகின்றவரிகள் குணடங்கட்குந் தமமையொதத ஆசிரியர்களைக்கூவி அவர்களுக் காதலனி முதலியவைகளைத தநது, மகதிராகினியையு, மனிதரைச் செலுததினா, அவாகளும் அக்கிழகதாதி குணடங்களில்தனித் தனி அததி-வனனி-ஆல்கருங்காலி - அரசு-பாலூரம - கலலால கூவிளம எனறிவைகளின் சமிதகளைக்கொணடு முறையெரிகாண்டி யதில் பூர்வகமாக அக்கினிகளை யெழுப்பி தமாதிகளா லட்சணஞ் செய்வித்தனா.

இப்பால் முதலாசிரியரானவர் வலஞ்சுழிதலைமுன்ற தியினை புடைய தமது குண்டத்திலிருந்து மூலமந்திரத்தால் நூறும் ஏனைய மந்திரங்களால் பப்பத்தமாகக் கணித்து, அடிக்கடி அவிசொரிந்து முடிவில் அனேத்தையுமெடுத்து ஆருதிகொடுத்து உருக்குமாங்கதனை சேகாக்கி-நீ-அரண்மனையிற் சென்று நித்த சுத்தியோடும் உறங்குவா யென்று கட்டளையிட்டனுப்பி, விடிந்தபின்னர் நித்திய நியமாதிகளை முடித்துப் பூசாமண்டபத்திற் சென்று, இராசகுமாரனே யழைப் பித்து அவனது கற்கனவினைக் கேட்டு மனமகிழ்ந்து இப்பால் முடி க்கவேண்டிய தீக்ஷையைக் குறித்து எல்லாக் குண்டங்கட்கும் நூறு நூறு ஆகுதிகள் கொடுத்துசகல வாத்தியங்களோடு முழக்குவித்து அவன் செவியில் மந்திர உபதேசஞ்செய்து, கரத்திற் புட்பங்களைத் தந்து, கும்பங்கட்குங் கிரமமாக அருச்சனை புரிவித்து லலம் வரச் சொல்லி, சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்வித்து, அலங்கார மண்ட பத்தி லழைத்துக் கொண்டுசென்று, முன்னே கம்பீயர்களா லியற் றப்பட் டிருக்கின்ற பீடங்கட்கும் வேதிகைகட்கும் மிருத்தஞ்சய மந்திரத்தால் அருச்சனை புரிந்து, அம்மண் மண்டபத்தினடுவே ஓர் வேதிகையை யிருத்தி அதன்மேற் செந்நெல் முதலான வைகளைப் பரப்பி, அதன்மேல்வெள்ளோதியரிசிக்கம்பளி கலை என்னும் இவற்றின் தோல்களை விரித்து அதன்மேல் ஓர்பீடத்தை வைத்து, அதன்மேல் சகத்திர தளத்தோடுங் கூடி விரிந்திருக்கின்ற செவ்ன கமலத்தை பிணக்கி, அதன்மேல் வத்திரம்விரித்து மற்றொருபீடத்தை அதற்கு வலப்புறத்தி லிருத்தி, அதனே மந்திரபூர்வமாகச் சுத்திசெய்து சில மங்கையர் மகுடம் - ஆரம் - வஸ்திரம் முதலிய அரச வுறுப்புகளைப் பட்டிகையிலேந்திவர, அவைகளை அப்பீடத்தின்மேல்வைத்து கும்ப சலத்தினும் புரோக்ஷித்து, எதிரிற் றிரையிட்டு அத்திரைக் கப்பால் மற்றொரு வேதிகையைவைத்து அதன்மீது சகலமுதலிய பொருள் களை நிறைத்து வைத்திருக்கின்ற சுவர்னகும்பங்களையும் சகலதானி யங்களையும் அளவற்ற ஆபரணங்களையும் நிரப்பி அதர்வணம் உரு திரை மென்று சொல்லப்பட்ட வேறு வேறுயுள்ள பலமந்திரங்களை யுரைத்தி மகாரோகினி குபேரவிருதயம், இரணியவருணம் கூர்மாண் டம் முதலிய மந்திரங்களை முன்னதாகக்கணித்து முடிவில் மூலமா கிய மிருத்தஞ்சய மந்திரத்தையோதி இப்பால் அபிஷேகஞ் செய்ய வெழுந்து, உருக்குமாங்கதனைக் கீழ்த்திசைமுகமாகப் பீடத்திலிரு [illegible] பலவகைவாத்தியங்கள் சத்திக்க வேதவோசைமுழங்க மனை மாதரது வீசம, அவர்காட்டிய கும்பங்களைக் கொடுத்தோ [illegible]

வீமராசனுக்கும் சாருகாசினிக்கும் அளவற்ற மகிழ்ச்சி பொங்க, சகலதேயத்து மன்னர்களுங் களிப்பெய்தி யார்பரிக்க, இவ்விதஆட ம்பரங்களோடு சகத்திர தாரைகள் விட்டிருக்கின்ற பொன்வட்டிலே க்ஷத்திலேந்தி, எண்ணிறந்த தேவர்களேயும் முனிவர்களேயும் அவ் வவர்கட்குரிய மாதர்களேயும் மனதிற்றியானித்து, அவர்களே கோரி ல்வந்து அபிடேகஞ்செய்வதாகப் பாவித்து எல்லாக் கும்பங்களே யும மந்திர பூர்வமாக வெடுத்து மகுடாபிஷேகஞ் செய்தனர்.

தேவர்கள் முதலாயினோர்வந்து அபஷேகித்ததாகமனதிற் பாவி த்தபடியால் திரிமூர்த்திகள்-அச்சுவினி தேவர்-மருத்துவர்-வசுக்கள் உருத்திரர் முதலிய தேவர்களும் உமாதேவி திருமகள்-சரஸ்வதி-அதிதி-சுவாகாதேவி முதலிய இவர்களோடு கணமுதல் ஆண்ஊருகச் சொல்லப்பட்ட தெய்வ மாதர்களும், தடாகம்-நதி-சமுத்திரம் முத லிய உருவங்களாயிருக்கின்றஸ்திரீகளும், தூருவாசன்-புலன்; புகலத் தியன்-சாபாலீ-மார்க்கண்டன் - கண்ணுவன் - கவுதமன்-பிருகு - பர த்துவாசன்-கபிலன் முதலாயுள்ள முனிவர்களும், அருந்ததி முதலாயு ள்ள இருடியர் பத்தினிகளும் அவ்வரசகுமாரனுக்கு அபிஷேகஞ்செ ய்தவராகியிருந்தார்கள். பின்னர் உருக்குமாங்கதன் ஈரம் புலர்த்தி இடையிற்கிழ்படாத இரண்டிரண்டாகி யிருக்கின்ற ஆடையினே யுடுத்தி மகுடமுதலிய கலன்களே யணிந்து சந்தனக்கலவை பூசி, மாலே முதலியவணிகளேத்தரித்து, சிங்காதனத்தின்மீ தாரோகணித் தனன். உடனே சிலர் ஆலவட்டமசைத்தார்கள்; சிலர்கத்களின்சத் தார்கள்; சிலர்சந்திர வட்டக்குடை பிடித்தார்கள்; சிலர் வீருகதன் பிடித்தார்கள்; சிலர்மங்கல வாழ்த்துப் பேசினர்கள்; சிலர் கவரிக ளெடுத்துவீசினர்கள்; அச்சமயத்தில் அங்கிருந்தவர்கள் ஜெயலெ ன்று திசையை நீக்க உருக்குமாங்கதனனவன் தனக்கெதிரிலுள்ள வேதிகையின்மீது பரப்பி யிருக்கின்ற எல்லாப் பொருள்களேயுங் கன்றேடிருக்கின்ற பசுவினேயும் வெள்ளேற்றினேயும் இரத முதலிய மங்கல வஸ்துக்களேயுங் கண்டு தரிசித்தனன். தமர்களாயினோர் பொன்னுழி முதலிய ஆபரணங்களேக் கையுறை தந்தார்கள். பிற தேயத்தரசர்களெல்லாந் திறைதந்து வணங்கி நின்றார்கள்.

இப்பால் உருக்குமாங்கதன் ஆசிரியரிடத்தில் விடைபெற்று அவ்விடத்தி னின்றுமெழுந்து ஆதோரணன் கொண்டுவந்த ஆனே யின்மீ தாரோகணித்து ஓர் பால்கவிகை-கவரி-கொடி முதலிய சின் னங்கள் சொருகிவர, ஓர்பால் குடமுழா பேரிகைமுதலிய வாத்தி யங்கள அண்டங்களதிர முழங்க, ஓர்பால் இரதகசதுரக பதாதிக

னாகிய நால்வகைச் சேனைகளு மார்ப்பரிக்க, இவ்வித சம்பிரமங் களோடு தேவேந்திரனைப் போல உலாப் போந்ததனது அரண்மனை வாயிலுக்கெதிரில் இறங்கி அங்கமைத்திருக்கின்ற பொற்பலகையின் மீது நின்றனன் உடனே அங்கிருந்த மாதர்கள் அவன் பாதத்திற் பால்சொரிந்து ரோற்கழுவிமெல்லிய ஆடையாற்றுடைத்தி, பூரண கும்பம்-ரோஞ்சனம் - மணிவிளக்கு மூலப்பாலிகை முதலிய மங் கலப் பொருள்களைக் கரத்திலேந்தி ரீர்த்தாரை யொழுக்கி, மும் முறை வலம்வந்து பல ரத்தினங்களால் இழைத்திருக்கின்ற பாத கையை எதிரில்வைத்தார்கள், அதனை உருக்குமாங்கதன் பாததிற் சூடி அரண்மனை புகுந்தனன், பின்பு ஆசிரியர் அவனைப் பூசாமண் டபத்திற்கு அழைத்துக்கொண்டு சென்று முடிவில் செய்யத்தக்க சாந்திகளையுஞ் செய்து எல்லாத்தேவர்களையும் மனதிற்றியானித்து எதிரே பயபத்தியோடும் நின்று புட்பாஞ்சலிகொண்டு தூவி மகுட பிஷேகஞ்செய்ய வந்திருந்த தேவர்கள் முதலிய யாவர்க்கும் விடை கொடுத்தனர். இப்பால் உருக்குமாங்கத னெழுந்து அரண்மனை புகுந்து ஓமாதிகளைச்செய்த அவ்வாசிரியரைப் பூசித்து அவரவர்க்கு நிரம்பத்தக்க தட்சிணை கொடுத்து, முனிவர்கள் அந்தணர்வறியோர் முதலியவர்க்கும் பலதானங்களைச் செய்து, ஞாதியர்-குரவர் - வேற் றரசர் - அமைச்சர் - பாவலர்-நாவலர் - படைவீரர் முதலாயினோர்க் குத்-துகில்-பூண்-துரகம்-வேழம்-இரதம் முதலானவைகளை மேகங் களுங்கண்டு ஞானத்தக்கதாகப் பொழிந்து, உலகமுழுவதுந் தின் கள் மும்மாரிபெய்து தழைக்கும்படியாகத் தனதரசாட்சியை நடா த்தி வந்தனன். பின்னர் வீமராசன் தனது புயச்சுமையொழிந்ததெ ன்று மனமகிழ்ந்து சதாகாலமுங் கணேச மூர்த்தியை ஆராதித்துக் கொண்டிருந்தான்.

உருக்குமாங்கதன் பட்டாபிடேகப்படல முற்றிற்று.

உருக்குமாங்கதன்
சாபம் பெற்ற படலம்.

அருக்கன்வேறுமண்ணிருந்தெனவவிரொளியாதனத்திலேறி யுருக்குமாங்கதனுலகுயிர்க்குளத்திருளுருவகைமுறைசெய்தன் கிருக்குரோணியின்பிருக்கங்கள்வனத்திடையீண்டிவண்பயிராதி முருக்குகின்றனவெனச்சிலபடித்தெதிர்முடிபணிந்தனைசெய்தார்.

முனிவர்களே! இங்ஙனம் மகுடாபிஷேகஞ் செய்துகொண்ட உருக்கு மாங்கத ராசனுவன் தன்தாதை யுபதேசித்த ஏகாக்ஷர மந்திரத்தை இடைவிடாது செபஞ்செய்து வருந்தோறும் கணேச மூர்த்தியினுடைய பாத திருவடிகளில் மிக்க பேரன்புடையனனுகிச் சதா காலமும் அவரைப் பூசை செய்து கொண்டு சுத்தருக்கோ யெல்லாஞ் செயஞ்செய்து, இலக்குமி - சரஸ்வதி - பூமிதேவி என்னு மிவர்கள் தனிக்கும்படியாகத் தன ஞானேயைப்ப பல திக்குகளினுஞ் செலுத்திப் பழமையாயுள்ள வேதப்பிராமணர்கள் உயர்ந்த ராசர் கள் நீதியையுடைய அநேக நிருபர்கள் சகல கலைகளியானங்களினும் வல்லவர்கள் ஆகிய இவர்களெல்லாம் இருமருங்கினுஞ் சூழ்ந்திருக் கப் பூமியை யாளுகின்ற சிற்றரசர்களெல்லாந் திறைகொணர்ந்து நிற் க, அதிதிகள் முனிவர்கள் தபோதனர்கள் பெரியோர்கள் முதலாயி னுேர் ஆசீர்வதிக்க, மகதிமார - புரோகிதர்-தூதர்-சாண ர்முதலான தினைவர்கள்பதகங்களில் தெருவுக, குற்றமற்ற சேணைகள் கூட்டங் கூட்டமாய் வளைதடி - வாள - உடைவாள் முதலிய படை களைக் கொண்டு தலைவாயிலி லுலாவ, சிலமகளிர் வெள்ளிய சாமரை கள் வீச, சிலமகளிர் கட்டியகூற இத்தன்மையாகிய வலங்காரத் தோடு சிறந்த சிங்காதனத்தில் வீற்றிருந்து செங்கோல்முறை வழு வாமல் சகல சீவராசிகட்கும் இன்பமுண்டாகத் தக்கதாய் இராச் சிய பரிபாலனஞ்செய்து வருகின்றகாலத்தில், சில ஜனங்கள் அவ் ருக்குமாங்கத ராசன்சமுகத்திலவந்து பணிந்து ஓ சர்வஜனேபகார! சக்கிரேஸ்வரே! காட்டு மிருகங்கள் கூட்டமாய் வந்து காட்டுப் பயிர்களே வீட்டி யழிக்கின்றனென்று முறையிட்டார்கள். அதை யவ்வரசன்கேட்டு மனதிரங்கி வேட்டையாடிவருவோமென் றெழு ந்து, பலபடைக் கூட்டங்களேயும வீரஞர்களேயு மழைத்துக்கொ ண்டுசகல பரிசனங்களோடுங காட்டிற்சென்று சிங்கம் புலி யானை கரடி முதலிய மிருகங்களைக் கொன்று, பின்னர்த் தான் தனியேசெ ன்று, தனக்கெதிர்ப்பட்டு வருகின்றசெங்காய் கலிமான் புள்ளிமா ன் முதலியவைகளே அதஞ்செய்து வருகையில் அதிகதாகங் கொ ண்டவனுகி இளைப்புற்று, ஓர் கானகத்தில் தழைந்து அங்கு கவி மகாமுனிவர் வாசஞ்செய்கின்ற ஆச்சிரமத்தை யடைந்து அவ்விடத் தில் அவர் பத்தினியாகிய முருந்தை யென்பவள் உல்லாசமாய்த் தனியே உலாவல் செய்திருக்கக்கண்டு அவளருகிற் சென்று அன் னையே! அடியேன் தாகநீங்குமாறு நீர்தரல் வேண்டுமென்று மிருந்த வணக்கத்தோடும் பிரார்த்தித்தான். இவ்வாறு பிரார்த்தித்த அர

சீனை முருக்தைகண்டவுடன் அவனபேரழகினுக் காவலுற்று அதிக வீரசுதாபங்கொண்டு மிக்க விளிப்போடு நீர் தேடிவந்த மெலிவை யுங் கருதாது தன்மனதி லுண்டான வீரசதிணை யவ்வரசனுக்கு அறிவிப்பவளாகி இதனைச் சொல்லுவ தாயினள.

சர்வாலங்கார சோபிதருகிய மகாராசனே! உன்னைப்போ லழ கின் மிகுததவராகளாது தேவர் கூட்டத்திலுங் கண்டதில்லை, உன்திரு மேனியிற் சகல லட்சணங்களு நிறைந்திருக்க இனதாயால் உன்னைக் கண்ட பாவையாகளில் யாவா மோகதகாரி சொல்லுவார்கள். ஓர் காரிகையானவள மற்றோர் பெண்ணை புருடனைச் சாடி ஆவல் கொள ளுவளாயின் உடனே யவளுடு கூடியலலது ஆவள் வீரக மொ ழிபுமோ? முனனா யாவரையும் வலதகு பாடி ஆதரவு விடத்தைத் தனனிடத துடைதாகிய திருபபாற சடலனைத பீட்டு கல்ல வழு தத்தை யினறு யாவரையுய பிழைபபித்தகுபோல உனது பேரழகு ஞாண்டாகிய விரகத்தியானது எனது தனங்கள குழையும்படி உனறேள்களைச் கூடிச கமித்தாலலது தவிரவில்லை யெனறு சொல் லித் தனது தகில் சோரவும, கூர்தல விழுபும. முத்தாரங்களை பெ றியவும், கைவளைகள் கழுவவிழான அளாகோலதோடு அவரச ணுக் கெதிரில் நின்றுள. இவவாறு இரபருபியதையும் மயஙகத்தக்க மிக்க அழகினைவரயாத அபமுருகதையானவள தானே வலாறகர மாய்க் கூடவேண்டுமென்றிருகதும, ஓ நரதமாரசராசன் மனங்க லங்காதவனுகி அம முருகதையை கோரகித தாயே! நீ அகதனர் சூலத்திற் பிறகது ஓர் அருகதவ நாக்கு வாழ்கையகப பட்டவள். யா னோ அரசகுலததிற் பிறக்கு இவவிலரசுகை யாராட்சி செய்திருப் பவன். அன்றியும யான விகாயகமூர்தியைத தொழுகின்ற அன் பனுகும். என்மன தி லகாலதது பரஸதிகமனஞ செய்வதில்லை பெண்களாயினுஞ் தஙகடங்கள கணவரோடு சமறு கோரங் கூடியி ருக்கினும் அதுவே மேலான பெருஞசுகதகதை கொடுகதும. அவ வாறின்றி அகியபுருடரோடு கூடுவாராயின் அநேது உடனே அர சதத்தை யிண்டாக்குவதிலை அர்கட்கென்ன சுகமுணடாகும. மே லும் இம்மையிற் சொல்லுக்கடங்காத துயரங்களைப் பெறறு பற மையில் அளவறற நகரவேதனையி லழுநதி வருநதுவார்கள்.

இறக்தபின்பல்லவோ நரகவேதனை காணப்போகினறோமெனக் கருதுவாயின் நீகொண்ட கெறி தப்பிய காரியததால் இப்போதே ஏங்கும் அவதூறுக் சொற்க ளுண்டாவதன்றி, உன் சனவனுககு ரிய பெருமிதத்திற்குங் குறைவுவரு மாதலால் இனி யுன் மனதை

யடக்கி உனக்குண்டாயிருக்கின்ற விரகதாபத்தை யொழித்து விடு வையென்று பரிவாகச் சொல்லினன். அவைகளனைத்தையும் அம்முகு ன்தைகேட்டு இவ்வரசன் மனமானது எவ்வளவேனும் கலங்குதலில் லாமற் கல்லுக் கொப்பாக விருப்பதன்றி, உறுதியான சொற்களை யும் பேசுகின்ற னென்று மனம் வருந்திச் சரேலென்று அவ்வரச னது முன்கையை கெருங்கிப்பிடித்து அன்பனே! ஸ்திரீகளாயிஞ ர்க்கு இக் கிரேதா யுகத்திலுக் திரேதா யுகத்திலுக் தாங்களே வலு விற் சென்று புருடர்களைக் கூடுவதாய் சுதந்தரத்தைப் பிரமதேவ னளித்திருக்கின்ற ஞதலால் ஓர் கணவனைப் பெற்றிருக்கின்ற மங் கையர் மற்றொரு கணவனையுங் கூடவேண்டுமென்று உடன் படு வாரையின், அவர்கட்கென்ன பாவமிருக்கின்றது. மேற்கூறிய யுகதர் மத்திற்கு விலக்காக நீயே வலுவி லென்னைக்கூட வருமாயின் இவ் வித பழி பாதகங்களை நீக்க வேண்டுவதென்றிக் கிரமப்படி யா னே யுன்னைக்கூட வேண்டுமென் றிச்சையுற்றால் அதனுனக்கென் ன பழிபாதகங்கள் கேரும், இனிமேலுக் தடைசொல்லி பெண்ணைக் கூடாமற் போவையாயின், கீறுகும்படி யுன்னை யெரித்து விடுவேன் அல்லது உன்னழகனைத்துங் சூலேகுது நகரத்தைவிட்டுக் காட்டிற் றிரி யும்படிச் சபித்துவிடுவேன். இதனைத் தீர்க்காலோசனை செய்யக்கட வையென்று சொல்லி, அவ்வரசன் மேலேவிழுந்து மார்பைத் தழு வினுள். உடனே அவ்வரசன் பயந்து, இம்மாதின் செயல் ஈன்று நன்றென்று நகைத்துத் தனது புயங்களால் அவளை நிலத்தில் விழ வுதறி துன்மார்க்கியே! பெருகி வருகின்ற வெள்ளமும் ஓரணைக்கட ங்கி நிற்கும் அக்கினி சர்ப்ப முதலிய தீய செந்துக்களும் ஓர் தடைக் கஞ்சியிருக்கும். அறிவில்லார்க்குண்டான காமமானது அவருடலங் காது. பள்ளங்கண்டு பாய்கின்ற புனலுக் கொப்பாமென்று சான றோர்கள் சொல்லுவர். அதுபோலவே நீயும் இத் தர்க்கியத்திற்கு அஞ்சாது உடன் பட்டனை. உன்செய்கை இத் தன்மையதென்று முன்னறிக்திருப்பேனுயின் யானிங்கொருபோதும் வரத்தணியேன். நீமகா தவசிரேட்டருடைய பத்தினியென்று என் தாகர் தணியு மாறு தண்ணீர் கேட்ட வெனக்கு ரதத்தில் வீழுத்த வல்ல மகா பாதகமான காரியங்களை கடாத்தினை உன்னை யிப்போதே யெனது வாளுக்கிரை யாக்கிவிடுவேன். ஆனல் இருடி பத்தினியென் றஞ்சி விட்டு விட்டே னென்று சொல்லி அவ்விடத்தை விட்டுத் திரும்பி ஞன். பின்னர் மூகுந்தை யானவள் கோபங் கொண்டு அரசனே! ஏன் கற்புக்குலையும்படி யிங்கு வந்தனை, வந்த நீ எனக்கொரு சிகமும்

கொடுத்தாயில்லை யாதலால் உன் சரீரத்திற் குட்டரோக மூண்டாகக் கடவதென்று சபித்தனள். அதனை யவ்வரசனுக்குமாங்கத ராசன் கேட்டு இவளிசசித்தது கிடையாமற் கோபங்கொண் டிருக்கிறாள். இவளிட்ட சாபத்திற்குத் தீர்வு கேட்கினுஞ்சொல்லாள். ஆயினும் நீலியிகட்ட மனத்தையுடைய அப்பாதகி முகத்தை மீளவும் பார்க்கலாகாதென்று திருமபாமற் போயிளிட்டான உடனே அவளிட்ட சாபத்தினுற் சரீரமெங்கும் வெண்குட்ட ரோக முண்டாக அதனை யவ்வரசன் கண்டு மிகுந்த பயரைடைந்து சொல்வான்

பெண்ணிருங் கொலியே போலப் பெண்ணிடுஞ் சாபந் தானு
மண்ணிடைக் கொடிது போனு மாதவ னிடுசாபத்தால்
வெண்ணிறக் குட்ட மெய்யில விரவிய தாக வேங்கிக்
கண்ணிய கருததிண் மாழகிக கணிசரை நினைதலுர் சொல்லுவான்.

அறிந்துயின் றெழும்பிற் சற்று மடியனேன் பழைத்தில்லைச்
சிறந்தவன் புடைபார் மாட்டின் றிருவரு ளுர்வதில்லை
சிறந்தின் னருளுண்டாயிற் றீதெனை யடர்வ தில்லை
யறிந்திடாப் பிழையுண் டாயி னதுபொறுத் தருளல் வேண்டும்.

சிட்டரைக் காப்பா யென்றுந் துட்டரைத் தெருப்பாயென்று
முட்டாது வேத மெல்லா மொழிவது மெப்பே யானுந்
பெட்டவும் முகுந்தை மாமுகப் பிரிக்கதந் தருமமாக
வீட்டவன் சாபத் தாலே யெனக்குரோ யிப்பதாமே.

தூயவிஞ் சையரு ணாணுஞ் சுடரொளி வகைப்பு நீங்கித
தாயரு மிகழக் குட்டஞ் சார்ந்தவென் றுடலு யிர்த்தக்
காயமுற் கட்டதின மாய்ப்ப தல்லது கைக்கொண் டிரிற்
போயர சாட்சி செய்யேன் புனிதனே யென்று கைதான்.

விசாயக மூர்த்தியை மனதில் நினைத்து கர்த்தனே! தேவரீர் பாணிவிடைகளில் அடியேன் மனதறிந்து யாதொரு குற்றமுஞ் செய்ததில்லையே தேவரீர் பாதபதமங்களை யடைந்த அடியார்களிடத்திற் கணப்போதேனுங் திருவுளங் கோணுவதுண்டொ? தேவரீர்கிருபையடியேனிடத்திலு உண்டாயிருக்குமாயின் இவ்விதம் பொல்லாத நோயும் என்னைச் சேரவல்லதோ? அடியேனறியாமற் செய்த வினை தான் யாதாயினுமிருந்தால் அவைகளைத் தேவரீர்பொறுத்தருளல் சுடையவரேரு திஷ்டஜன பரிபாலகரென்று வேதங்களெல்லாங் தேவரீரைத் துதிப்பது மெய்ம்மையல்லவோ? யான் முகுந்தை கொண்ட

மோகத்தை நிராகரித்து வதத்து தருமமாயிருக்க, அப்பாதகியிட்ட கொடுஞ சாபத்தால் அடியேறகு இத்தனமைதான வியாதி யுண்டாகலாமா? தேவாகளுங கண்டு நாணத்தக்க பேரொளி வாய்ந்த எனது சரீரமானது பெற்றவளு மிகழத்தக்க வெண்குட்ட நோய் கொண்டதே. இனி இவ்வுடலை இக காட்டிறுறனே மாய்த்துவிடுவது நல்லது இவ்வியாதியோடு மனைது நகரத்திற சென்று வெவாறு அரசாகூடி செயய வலலவன்? ஐயோ! ஏதெனன கொடுமை யென்று கையரபபட்டு இளைப்பாறி, அவ்வனசதிறறனே ஓரால மரத்தடி மூலை யிருந்தான். இது வரசனுடு வேட்டைகரு வந்த பரிசனங்களெல்லாரு தங்க ளரசனைத் தேடி எஙகுங காணுதவராகளாகி மதிமயங்கி மீளவு நகரத்திறபோயச சோரசாராகள. இபபால உருகுமாங்கத ராசனடைந்த வெண்குட்ட நோகுதைப பாரகக சகியாதவனைப் போலச சூரியனுனவன தன தேரைச செலுத்தி மேறறிசைக கடலில் மறைந்துபோயினான. உடனே அவரசனி நகரத்துளளோர் வந்து காணபராயின மிகக நாணமுறறு வநாதவனென நிரங்கியதுபோல எஙகும இருட்கூடடங்கள பரந்து செறிந்தன. இதுகாலும நமமை யெள்ளோரிடத்தும வாசலு செயயாதபடி வளர்ந்துவந்த இவ்வரசனி இனறு நமது பகைதீர வெகுவேமனக கருதினும் போலப் பசிதாகம இளைபபுளனகிற மூனறு தினபங்களும அவனை நெருக்கி வருந்த செயதன.

உருகுமாங்கதன சாபபெறற படலம முறறிறறு.

நாரதர்

சாப நிவாரண முரைத்த படலம்.

உண்டி யினறி யுறஙகுத லின்றிமுன்
கொணடி டாததுபோ கொணடிடு மன்னவன்
மண்டு மினனலே மாறறவந தானெனத்
தெண்டி ரைக்கடற செங்கதிர் பூத்ததே
காலே முற்றுக் கடன்முடித் துள்ளமென்
ஞாலே யத்தினருட்கண ணாதனே
மாலே யன்பின் மதித்து வழிபடும்
வேலே விண்ணிடை நாரதன வேயினான்.

அருக்கன் வேறகன் வாளியங் குற்றெனப்
பெருக்கெ னச்செல்புத தேளிர் முனிவின்
யுருக்கு மாங்கத னெய்யென கோகினை
னுருக்க மோடுமெங் கோலிடு வானரோ.

இவ்வாறு உண்டி யில்லாமலும் உறக்க மில்லாமலும் என்னுடை யதாத துயரங்களை யடைந்திருக்கின்ற அவ்வரசன் துன்பத்தை இனறு யாம் நீக்கி யிரக்ஷிப்போ மென்று வந்தவன்போல முன்னர் மேற்றிசைக் கடலில் வருந்தி மறைந்த சூரியனனவன் மீளவும் கீழ்த் திசைக் கடலி லுதயமாகினன். பினனர் அவ்வரசருக்குமாங்கத ராசன் காலக்கடனை முடித்ததற் துன்னிய தனதற்கு கணேசமூர்த்தியைத் தியானித்துப் பூசை செய்துகொண் டிருந்தான். அச் சமயத்தில் ஆகாயமார்க்கமாக நாரத முனிவர் செலலக்கண்டு துதிக்கின்றான.

அடிகளே யோல மோல மமராகன் முனிவா வோலம்
வடியிசை யமுதக் தேக்கு மகதியாழத் தலவ வோல
கெடிபவன் முதலோர் தொன்ப மீருவா யோல மோலம்
படிமிசை யடியேன் றுன்பும் பாற்றுவா யோல மோலம்.
அருட்பெருங் கடலெ யுன்ற னடக்கல நாயேன் கண்டாய்
மருட்கடல் கடந்தோய் வீமன் மகளடி யேனென் னும
மூருக்குமாங் கதனீங் கெய்தி யுன்னருள் வழங்கு கென்னு
மெருக்கொளு மம்மர் நீங்கி விளிந்ததிர் தொழுது நின்றான்.

தெய்வமுனியே! * மகதியாழ்த் தலவரே! திருமான் முதலாயினோர் துன்பத்தை நீக்குகின்றவரே! தேவரீர் திருவடிகட் கடியேன்

* மகதி என்றது 'பேரியாழ் எனகொள்க. அருங்கலம், பெருங்கல மென்பதுமுண்டு. அஃதாவது கோட்டினதளவு பன்னிரு சாணும், வணரளவு சாணும், பத்தரளவு பன்னிரு சாணும், இப்பெற்றிக்கேற்ற ஆணிகளும், நிவ வும், உந்தியும் பெற்று ஆயிர நரம்பு தொடுத்து நடப்பது. அது? " ஆயிர நரம்பிற் றியா ழாகு-மேனை யுறுப்ப மொப்பன கொளலே-பத்தர தளவுங் கோட்டினதளவு-மொத்த வென்ப விருமூன்றிரட்டி-வணர்சாணெளித்தென வைத்தனர் புலவர்" என்ற நாடகத் தமிழ்நூற் சூத்திரத்தாற்கண்டது, இசையிற் பெரியோன் நாரதமுனி யாகலானும், " தலமுதலுழியிற்றுணவர்தருக் கறுப்-புலமகளாளர் புரிநரப் பாயிரம்-வலிபெறத் தொடித்த வாக்கமை பேரியாழ்ச்-செலவு முறையெல்லாஞ் செல்கையிற்றெறிந்து- நாத தேக் கேள்வி துணிந்தது" எனப் பெருங் கதையென்னும் உதயணகாவியத் திரைத்துளா ராகலானும், பேரியாழ்முனிவரனர்க்கே பொருந்தியதா மென்க, இது கூர்ம புராண லிருந்தி யுரையிற் கண்டது.

அடைக்கல மடைக்கலம். கிருபா மூர்த்தியே! அடியேன் வீமராச னுடைய புத்திரன். என்பெயர் உருக்குமாங்கதன். சுவாமிகள் இங் நன மெழுந்தருளி அடியேன் படுகிற துன்பங்களை நீக்கி யிரக்ஷிக்க வேண்டுமென்று மிக்க வருக்கத்தோடும் பலமுறை துதித்து ஓல்மி டலுந் தமது ஞானநோக்கினும் சகல மறியவல்ல நாரதமுனிவரான வர் தாம் கருதிச் செய்கின்ற காரியதடை விடுத்துக் கனைகின்ற கன்றை நோக்கிக் கதறி வருகின்ற பசுவைபபோல ஒருவேலென்று நிலத்தில் அரச னெதிரில் வந்தருளினர்.

அவ்வரச னவரை அஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கி, சுவாமீ! அடியேன் இக்கானகத்தை நோக்கி வேட்டையாட வந்த விடத்தில் மிக்க தாகமுண்டாயது, அதனால் இளைப்பாகி நீரிருக்குமிடத்தைத் தேடிச் செல்லுகையில் அங்கோ ராச்சிரமதில் இருடி பத்தினியா கிய சூழுந்தை பென்பவள் எனக் கெதிர்ப்பட, தண்ணீர் தருமாறு கேட்டேன, உடனே அவள் விரகநோய் கொண்டு என்னை வலுவிற் பற்ற யானதற்கிணங்காமையால் எனைச்சபித்து இக் கொடிய நோ யையானடையச செய்தனள் இபபா ழிநோயுடன் எனது நகரத்திற் குச் செல்ல மனமில்லாமல் உயுரை விடவும் நினைத்தேன் அரிய தவங்களைச் செய்து அடியேனைப் பெற்ற தாய் தந்தையர் நிமித்தம் எனதுயிரைக் காத்து வைத்திருக்கின்றேன. அடியேன் தினந்தோ றும் ஆராதித்துவந்த கணேச மூர்த்தியினது கிருபையினாலே இத் தருணத்தில் தேவரீரெனது கணெதிரில் வரப்பெற்றேன். அன் றியும் எனனைத் துன்பப் படுத்துகின்ற இக் நோயைச் சுவாமிகளால் நீக்கிக் கொள்ளத்தக்க பாக்கியத்தையு மடைந்தேனுதலால், இதனின மே வீமராசனுக்கும் புத்திரசந்தான முண்டான தினமாயது. இனி யடியேற்கு இவ்வியாதி நீங்கும்படியான மார்க்கத்தை யருளி இரட் சிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தலும அவ்வரசனை நாரதமுனிவர் கிருபையோடும பார்த்து, அப்பனே! உனது குடைழிலிற்றக்கியிரு க்கின்ற வீதர்ப்ப தேயத்தில் யாண வரும்போது சுருதர்பபமென்னு நகரத்தில் ஓரற்புதத்தைக்கண்டேன். அஃதி யாதெனில் அக்கரத் தில் விநாயகமூர்த்தி ஆலயமொன் றி நக்கின்றது. அவ்வாலயத்தெதி ரில் கணேசகுண்டமென்றும் ஓரு தீர்த்தம் விளங்கும், அதன்மகிமை யைத் தெய்வலோகத்தாரும் அறிந்திருக்கின்றனர், அன்றியும் ஓரு சூத்திரன் சூஷ்ட நோயினால் துன்புற்றுத் தீர்த்தயாத்திரை யாகச் செல்லுகையில் அத்தடாகத்தை படைந்து ஸ்நானஞ் செய்தமாத் தான் உடனே அவனுடைய சூஷ்ட நோய் நீங்கிபுனர்ஜீவ

வினைகளும் நீங்கப்பெற்று விராயக மூர்த்தியினுடைய சாரூபத்தை யடைந்து அவரருளாற் றேவகணங்கள் கொண்டுவந்த விமானத்தி லேறிக் கணேச லோகத்திற் போய்ச சோந்தான் ஆதலால் நீயு மவ் விடத்திற்சென்று அககணேச குண்டத்தில் ஸ்நானஞ்செய்து அங் கெழுந்தருளி யிருக்கின்ற விராயக மூர்த்தியைப் பூசித்துத் தான தருமங்களே இயற்றுவை யாயின் இக் குஷ்டவியாதி புன்னெயிட் டொழிந்து போகும். இவ்வியாதி அவ் விராயகமூர்த்தியாற் றீரவேண் டிய தல்லது இப் பிரபஞ்சத்துள்ள ஓடதிக ளெல்லாம் புசித்தா லும். யானே-குபேரை தேர் முதலிய பல தானங்களைச் செய்தாலுந் தீராவதில்லை யென்றனர்.

காரதர் சாபநிவாரண முரைத்த படல முற்றிற்று.

இந்திரன் சாபம் பெற்ற படலம்

மாடக முறுக்கிபிசை பாடுமுனி நீடுபிணி மாற்று முறைமை
நாடியுரை செய்தலு மகிழ்ந்துகழன் மன்னவ னயந்து பணிவாக்
கூடிகல் லன்பினிது கூறுவ னின்ருதவ கதம்ப நகரிற்
பீடுறவிருந்தபொரு மாமுனிவர் பூசனைகள் பேணினர்களோ.

வீறுமழை வெய்யசுடர் வீசுவளி யென்றிவை தமக்குதவுகை
மாறுமுளை தோபுவியின் மன்னுபிர ளூய்யவரு மாதவனிகர்
கேறிடுகை மாறுமடி யேன்புரிவ தென்னுமா திரங்கியருள்க
சிறியரு ளேலென விரந்திட மகிழ்ந்துமுனி செப்ப லுறுவான்.

இவ்வாறு காரதமுனிவர் சொல்லியவற்றை யெல்லாம் உருக்கு மாங்கதராசன் செவிகுளிர்க்கேட்டு, ஆனந்தங் கொண்டு மீளவும் பணிந்தெழுந்து சுவாமீ! பெய்கின்ற மழைக்கும், காய்கின்ற சுடர் க்கும், வீசுகின்ற காற்றுக்கும், கைம்மாறு செய்ய வல்லவாகள் யாவ ருக்கின்றூர்கள், அதுபோல இப்பிரபஞ்சத்துள்ள உயிர்களெ யெல் லாம் பிழைக்கும்படி யெழுந்தருளிய தேவரீர்க்கு யான் செய்யத் தக்க கைம்மாறென்ன விருக்கின்றது.

என்று கூறிப் பிணங்கு கூறுவான்; முனிவரே! கதம்பவனத் திலெழுந்தருளி யிருக்கின்ற விராயக மூர்த்தியை யாவர் பிரதிட்டை செய்து பூசித்தவர்கள். அந்த விவரத்தையும் அடியேன்மீது கிருபை

பைபுரிந்து கோபஞ் செய்யாமற் றிருவாய் மலர்ந்தருள வேண்டு மென்று இரந்தலும் நாரத முனிவர் மனதிரங்கி இதனைச் சொல் லுவர் ராயினர்,

அரசனே! முன் னொரு காலத்தில் இந்திரனவன் தேவர்க ளெல்லாந் தொழும்படியாக இராதினை சிவகாதனததிலிருந்து அர சுசெய்து வருகின்ற சமயத்தில் நாமங்குச சென்றோம். நமமை யவ் விந்திரன எதிர்கொண்டு பணிந்து ஓராசனததி லிருத்திப் பற்பல உபசாரங்களைச் செயது சுவாமீ! தேவரீர சகல புவனங்களிலுஞ் சஞ்சரிக்கின்றமையால் யாதாயினும ஓரரிய முண்டாயின் அத னைக் கிருபைசெயய வேண்டுமெனறு கேட்டான.

அதறகு யாம சொன்னதாவது, இந்திரனே! யாம் பூவுலகத் திற்குப் போயிருநதேன. அஙகுக கௌதமமுனிவா பததினியாகிய அகலிகையைக் கண்டேன, அவளழகினுக் கொப்பாக இவ்வுலகத் தில் யாவரையுங் காணேன, இலக்குமி, இநதிராணி, ரதி, அண சூயை, திதி, திலோததமை, அதிதி-எனகின்ற இம மாதாகளுடைய அழகும அவ ளழகுகுகு எதிரிற்ப மாட்டாது, திரிபுர சஙகார மூர்ததியாகிய சிவபெருமானுடைய கிவவிய சரணார விதஙகளையே இடைவிடாது தியானிசகின்ற எனமனமும அவளைக் கண்டவுடன் விருபபங் கொளளுமாயின, இப பிரபஞசததில் அவளைக் கண்டு விரும்பாதவர்கள் ஒருவ ரு மிருக்க மாட்டாரகள என்று சொலலி அவ்விடத்தினினறும கீஙகினேம பினனர அய விநாயனுக்குஅக லிகையின்மீது விரகமுணடாகி அழிறபட்ட மெழுகுபோல மன முருகி, உடனே அவள கணவராகிய கௌதம முனிவர் வடிவங் கொண்டு அவர் ஆதிகாலையில ஸநானஞசெய்யச் செல்கின்ற சமயம பார்த்து அகலிகை யிடதகிற்குவநது என் பிராணநாயகியே! விரை விற் கலவிசெய்ய அமளியிடக் கடவையென்று சொன்னன, அதை யவ் வகலிகைகேட்டுச் சுவாமீ! எக்காலத்தும தவறாத வொழுக்கத் தினை யுடைய மகா தவசிரேட்டாகிய தேவரீர் இத்தினம் இவ்வ கைத்தான அற்பகாரியத்திற்கு உடன்பட்ட தென்னகாரணம? ஸநா னஞ்செய்து நித்திய நியமங்களை முடித்தபின முறைமைப்படி சிவபூ சைசெய்யுங்காலத்தில் மிக்க பழுதான காமப்பொருளை யிச்சிப்ப தற் தக்கதாதானே? அப்படித் தகாதகாரியத்தைத் தக்கதாக இத் தினம் தேவரீர கொண்டு இவ்விடம் வந்தது எந்தக் காரணத்தால் அதை அடியாட்கு விளம்பியருள வேண்டு மென்னலும், முனிவர் -டிவம் கொண்டுவந்த தேவேநதிரன் சொல்லுவான், ஏனதன்பிற்

குரிய வனிதாரத்தினமே! யான்காலையில் ரோடச்செல்லுகையில் அற் கோர்மாது வஸ்திரமில்லாமல் ஸ்நானஞ்செய்து கொண்டிருந்தனள் யானவளழகைக் கண்டவுடனே னனது மனம் பேதித்தது, உடனே மிகுந்த விரகதாபம்கொண்டு செய்யவேண்டிய நியமங்களில் மன னதைச் செலுத்தச் சக்தியில்லாமல் வந்துவிட்டேன், இனி எனது உயிர் வாழ்வதும் அரிதாக இருக்கின்றது, விரைவில் என்னுடன் கலவிசெய்து சுகந்தருவாயாக, இதைத் தடுத்திடுவையாயின் உனது உயிரழியுமாறு சபித்துவிடுவே னென்றனை, இவையனேத்தையு மகலிகைகேட்டு மாறுவடிவங்கொண்டு வந்திருந்கின்ற மகாபாதகனேத் தன் கணவனென்றே நினைத்து, அந்திபிரமாட்சிபாகத் தங்கள் கரத் தைப்பற்றிய காரணங்களுந் தெவ்வாறே அவ்வாறே நடந்துகொள் வது பெண்களுக்குரிய கடமையாதலால் அத கருமத்தின்படி யவ ளினைசந்த அமளிபைச் சமீபித்தனள்.

இப்பால் இந்திரன் மனமகிழ்ந்து பெண்ணரசியே! உனது கடைக்கண் பார்வையால் என்னுயிர் பிழைத்து நிகரப பெற்றேனென் றருளாலி அருகிற்சென்று கொண்டதகாரஞ்செய்து கவந்த தினங்கள் பதித்திருக்கின்ற சப்பிரகூட மலைதனிலேதெரிப் பூங்கொத்தினே யொத்த அம்மெல்லியலைத் தனது சரத்தாற்பற்றிச் சமீபத்திலிருக் கவைத்து, அவள் முகாரவிந்தத்திற் புன்னகை யரும்பவும், மேக லாபரணங்கள் பிரகாசிக்கவும், பவளத் துண்டத்தை யொத்த கனி வாயிதழ துடிக்கவும, தேமல் நிறபிய தனங்கள் வளர்ந்தோங்கி னிமமவும், மேலணிந்திருக்கின்ற கசரானது நெகிழ்ந்து கிழியவும், இடைதுவண்டு வருந்தவுமாகப் பலவித சரசசல்லாபங்களைச செய் தி தனது கரங்களால் இரண்டுபிரியாதரங்களையும்வருடி, ஆடையை நெகிழ்த்தெரிந்து, பொலிவற் றிருக்கின்ற நிதம்பதலத்தை தடவிப் பூமாலைக ளணிந்திருக்கின்ற கூந்தலானது அவிழாதும் சோரும்படி யாக லதாவேஷ்டிதம - விருக்ஷாதிருடம - திலதண்டலம் கூரீரம் - ஊர்ப்பிரகூடம் சகஜோபசிலேஷ்ய - ஆதனம் லலாடிகம் எனகின்ற * எண்வகை யாலிங்கனங்களை நடாத்தி நுதலே நீவி, முகத்தின் முத் தமிட்டு, உச்சி-கொங்கைகளின் நடு - சகனம்-முதுகு-கனனம்-பிடர் கெற்றி-தொடை-என்னும் இவ்வெட்டிடத்திலும் - சங்கோசம் - பக்

* இவை முறையே கொடிபோலச் சுற்றித் தழுவுதல், மரத்தைப்போ லேறித் தழுவுதல், எள்ளும் அரிசியும்போலக் கலந்து தழுவுதல், பாலுநீரும் போல ஒன்றுபடத் தழுவுதல், தொடையால் நெருக்கித் தழுவுதல், நூறின் சேர்த் தழுவுதல் எனக் கொள்க.

கந்தம் பிரசஸ்திதகம்-முஷ்டி-கேலம-கத்திரிகை - சந்தங்கிசம் - வித்தை எனகின்ற † எண்வகைத தாடனங்களையுஞ்செய்து, கண்-கபோலம்-கொங்கை-நெற்றி - கைமூலம - நிதம்பம்-வாயிதழ-உந்தி என்கின்ற எட்டிடத்திலுஞ சுமபனமிபற்றி, அர்த்தசந்திரன - மண்டலம் புலி ஙகம் மயூரபதம-முயலடி-உறபலன் என்கின்ற அறுவகை * ஙகக்ரு நிகளையுமிட்டு மூஷகம-அறுசரூகம - பிரவாளமணி - பிரமணி - பிரதமாலி-கோலசாளிதம எனகின்ற அறுவகைத் தந்தக் † குறிக ளையமைதது பெருவிரல-புறஙதாள்-பரடு முழஙதாள-அல்குல்-மாரபி - மார்பு-மூலை-கையூலம-கழுகுத-கபோலம - வாய்-கண்-வெறறி-உசன யென்னும பதினாருதிடங்களிலும-அழுதநிலை-யாராய்ந்து தேக பரம சனுகிக் கிரிடகரு முள நிலையில அவயகலிகையுஞ் சரீரபுளகாங்கித மூறறவளாய், அவ னிரணடு தோளகளினுக தனது கொங்கைக ளாழுத்தத் தழுவி மனமுருகி இவவமுததனினைத் தருவதுபோல அடிக்கடி தனது கொவவைக்கனிலையொதத செவ்விதழூறலைத் தந்தசங்கவனியல்கள் தெரியவும, பாதசாலங்கள் கலீர் கலீரென்று சத்திக்கவும, கண்கள கிடபேறவும், அதரம் வெளுப்புறவும், நெற றியில் வியாவையரும்பவும, கண்டசதில மயில் - புறு - அன்னம் - காடை-வண்டு-குயில்-கோழி - செமபோதது என்கின்ற எண்விதப் புட்ஞரல்களையுங் காட்டி, சறபகதருவைப் பின்னிக்கொண் டிருக்

† இவை முறையே கைவிரலகுவிதது தட்டல, குட்டுதல், அகல்கை யாற் றட்டல், பையகருத்தல, தாச்சனியாலூன்றல், தர்ச்சனியாலும் மத் திமையாலும் நெருகல, மேறபடி விரல்களேமடகிப் பற்றுறுபோலப் பிடித்தல், தர்ச்சனியாற் றுருவுதல் எனகொளக.

* இவைமுறையே கழுதது னிடத்தது கொங்கையினிடத்தும் வளைவா கப் பதித்தல், கடிதடததில எதிரகெதிராகச் சோத்துப் பதித்தல், மேற் கூறிய மூன்றிடதது நுனிவளைவாகப் பதிததல், கொங்கையி னடிப்புறத் தீலொன்றும மேற்புறததில் மற்றைய நாலுமாக ரேகைகள் பொருந்தப் பதிததல், கொகுகளின் முகட்டிடதது ஒதது விளங்கும்படி பதித்தல், கொங்கையின்மீதும் அல்குலினும் பின்புறததினும் மூங்கிலிலையைப்போலப் பதித்தல் எனகொள்க.

† இவைமுறையே அதரத்திற் செவப்புறப்பதித்தல், கபோலத்தி னிடத் தும் அதரத்தினிடத்தும் வடுப்படாமற் பதித்தல், கபோலத்தி னிடத்திப் பல்லு மிதழும் பொருந்தப்பதித்தல், அதரத்தில் பல்தைக்கும்படி பதித்தல், கைம்மூலம்-நெற்றி - மார்பு-தொண்டை இவ்விடங்களில் அழுத்தும்படி பதித் தல், தனங்களின்மேல் மன்மதன் வெற்றியை யெழுதி வைத்ததுபோல நகஷதங்காகப் பதித்தல் எனக்கொள்க.

கின்ற காமவல்லிக்கொடிபோல அவ்விந்திரனைச் சீரத்தோடு சீர மாகவணைத்துக் கரமீ ரூற்றெடுக்கத் தக்கதாகப் பலசுரதகலைகளை கடாத்திவந்தனள்

உடனே இந்திரன் பேரானந்தக்களிப்பின்மூழ்கி உத்தானியம் திரியக்கு ஆகிகசம் ஸ்திதம் ஆனதுதம என்கின்ற *ஐவகைக்கரண ங்களோடு கங்துகதிலை பனனகிலை குந்துடநிலை வெருகுநிலை-வியாக் கிரகிலை † முதலிய பலநிலைகளையும் மற்றையகலவித தொழில்களை யும் ‡ புரிந்து சிநதையோடு சிநதையும், ஆகதீதாடு ஆகதீமும், ஆவி யோடு ஆவியும் ஒன்றுபடக்கலந்து எக்காலதது மறியாத பெரும் போக வாரிதியின்மூழ்கிய தனது எண்ணதகின்படி நிறைவேற்றின வனாய், அளவளாவிய மனகளிபபினுமிம அவ் வகலிகையைப் பார்த்து,

கடலிற பிறவாச சுவையமிழ்தக் கருமபிற பிறவாக் கொழும்பாகே மடன்மென் மலரிற் பிறவாத வாசம் எமழுஞ செநதேனே யுடல மிரண்டே யலதெனாகு முனாகு முயிரொன் றேயன்றே யடர்மெய்த் தவத்தா லுனைபபெறறேற காவதினியென் னெனப்புகழ்ந்தான்.

கடலிற் றோன்றுதுள்ள அமிர்தமே! கருமபிற பிறவா துதித்த சர்க்கரையே! புட்பததிற் பிறவாதெழுந்த செநதேனே! உனக்கும் உடல மொன்றுனதன்றி உயிரு மொன்றுப்பிட்டது மகா தபோபலங்களால் உண்ணக கிடைகப்பெற்ற வெனக்கு இனிமேற் பெறத்தக்கதென்ன விருக்கின்ற தென்று புகழ்தலும், அவ்விந்திர னெடு முறுவலரும்பலும் விழிகள் முகுளிப்ப புரு தேகபரவசங்கொ ண்டு பற்பல லீலாவிநோதங்களை நடாத்திய வின்பபோடு சப்பிர கூடமஞ்சத்திற் சிறிது தலைசாய்ந்திருந்த ஆகலிகையானவள் அவ் வசனங்களைக்கேட்டு மின்னற்கொடிபோல துடங்கி இடைதளர்ந்து மெல்லெனவெழுந்து, துகிலையுடுத்து மஞ்சதனினின்று மிறங்கி மிக வுமச்சங்கொண்டு இவனது வடிவமாத்திரம் தம்முளினிலைபபோ

---

* நிலைமுறையே மல்லாத்தல், குமுக்கு அல்லது ஒருக்கணித்தல், உட் காரவைத்தல், நிற்றல், குனிதல் எனக்கொள்க

† இலைமுறையே குறிஞா-பாம்பு-கோழி-பூனை-புலி-எனப்படும், இவற் றைச் சித்திரகரணமென்றுங் கூறுவர் ‡ கலவிதொழில்களை 'ஆலிங்கன மைந்தும் மிதழ்ப்பானம் பதினொன்றும் மயிர்தம் பதினாறும் முகிரெழுதுங் குறியெட்டுங்-கோலம்புனைதற்குறியெட்டுங் குசலெட்டுங் குலிதாடன மிரு தான்கொடி கூடுக்கலவிக்கே' என்னுஞ்செய்யுளா லறிக.

லிருப்பதன்றி, இவன் சரீரத்துண்டான வாசனையும், இவன்செய்த கலவித் தொழில்களும் இவன்பேசுகின்ற வார்த்தைகளும் வேறுபட்டிருக்கின்ற வாதலால், இவன் நம்மோடு கலவிசெய்யும்பொருட்டுக் கள்ளவேடங்கொண்டுவந்த தேவேந்திரனேயென்று நிச்சயித்துப் புருவத்தைநெரித்துக் கோபித்து எனது முனிபுங்கவனாப்போல மாறுவேடங்கொண்டுவந்த நீயார் உண்மையைப் பேசாவிடிற் சபித்துவிடுவேனென்று சொன்னாள். அதனைத் தேவேந்திரன்கேட்டு, நாமின்னவனென்று அறிவிப்போமாயின் இவள் மிகவுஞ் சந்தோஷங்கொண்டு நமக் கிச்சையுண்டாகுங்காலத் தெல்லாந் தடையின்றிக் கூடுவளெனக்கருதிப் பின்னர் நேர்ந்திடுந் துன்பத்தையெண்ணுமல்மிக்க அன்போடு தனது நிசவடிவைக்கொண்டு அவளெதிராக நின்று பெண்ணரசியே! யான் உம்பருலகத்திற் கதிபதியாகிய தேவேந்திரன், யான் உனதழகின் வளமைகளைக்கேட்டு அத்தெய்வலோகவரசியும் இந்திராணி போகத்தினையும் வெறுத்து, இலக்குமி சரசுவதி முதலாயினோர் வனப்பினையு மதியாமல் உன்னையே யிச்சித்துவந்தேன். எனதெண்ணத்தின்படியே நீயுமிசைந்தனை யாதலால், இத்தினம் நாமிருவரும் புணர்ந்து போகசாகரத்தின் மூழ்கினோம். நம்முயிருமுடலும் இரண்டறக் கலந்துவிட்டன. இனிமேலெண்ணவேறுக நினைப்பையேற் குற்றமாகும் இத்தினத்தில் * பஞ்சபுட்ப பாணங்களை யெனமீது பிரயோகித்த மன்மதனனவன் இன்னும்பிரயோகிக்கின்ற போதெல்லாம் உனது சிருபாதோக்கம் பாலித்தருளி என்னை முற்றினும் பாதுகாக்கவேண்டுமென்று இரந்தான்.

இவையனைத்தையும் அகலிகைகேட்டுக் கோபங்கொண்டு எனதுபிராணநாயகரைப்போல வஞ்சவடிவங்கொண்டு இந்தப்பாவி சந்திரனுக்குற்ற களங்கத்தினைப்போல என்மரபுக்கு எக்காலமும் மாறுக்களங்கத்தையுண்டாக்கி, எனது கற்பையு மழித்து, என்கணவருடைய உள்ளத்தையுங் கொதிக்கச்செய்து, என்னைப் பலவிதத்தினுங்கெடுத்தானே, இதற் கென்னசெய்வேனென்றுசொல்லிப் பயங்துபரிதாபித்திருக்கின்றசமயத்தில் சூரியோதயத்திற்கு முன்னதாகவெழுந்து ஸ்நானஞ்செய்யப்போயிருந்த கௌதமமுனிவரானவர் சகலநியமாதிகளையு முடித்துக் கொண்டு மீளவுந் தமதாச்சிரமத்

* 'நினைக்கு மாலிந்த சீன்பசமே மாம்பூவனைத்துணவு சீக்கு மசோகுவனத்திலுமு, முல்லைத் தைகாட்டு மாதே முழுசீலஸ்-கொல்லு மதனம்பின்குணம்' என்ற செய்யுளை நினைக.

தில்வந்து தலைவாய்தலி னின்றும் மனையைக்கூவித் தண்ணீர்கொ
ண்டுவரும்படியாகக் கட்டளையிட்டனர் உடனே அகலிகையான
வள் நடுகடுங்கிப் பழையவொடுக்கங்க ளில்லாமலுஞ் சுசிகரமில்லா
மலுந் தண்ணீர்கொண்டுவந்துகொடுத்தலும் கௌதமமுனிவர் அவ
ளிருக்கும் அசுத்தகோலங்களைப்பார்த்துப் பெண்ணே! உன்வதனம்
வேறுபட்டிருக்கின்ற காரணமென்ன! இக்கினத்தில் வழக்கம்போல
ஆதனமிடவில்லை விரைவிற் சலங்கொண் டெரவில்லை இனியவசன
ங்களேபேசவில்லை உன்சரீரஞ் சுசியிலை நீ முன்னிருந்த மாதாக
வுந்தோற்றவில்லை ஆகலால்; கடந்த விசேடங்களை உண்மையாகச்
சொல்லக்கடவையென்றார் அதற் கவ்வகலிகை உள்ளங்கலங்கிஉட
லம்நடுங்கித் தன்காதலரைப் பஞ்சாங்கமாகப் பணிந்தெழுந்து, கா
ணங்கொண்டு தலைகுனித்து முகங்கோட்டி, நிலங்கீறி, மதிமயங்கி,
உளைகுழறி, சுவாமி! தேவேந்திரன் தேவரீருடைய வடிவங்கொண்டு
வந்து மாறுபாடுபேசி என்னைக் கலவிசெய்ய வழைத்தலும் அடியே
ன் தேவரீர் என்றுகினைத்துக் கலந்துவிட்டே னென்றனள்

இப்பாற் கௌதமமுனிவர் வந்ததுமுதல் நடந்த காரியங்கள
னைத்தையும் மறைவிலிருந்துகேட்ட தேவேந்திரனவன் மனங்க
லங்கி முட்டையிற் கட்டுண்டிருக்கின்ற கருவைப்போலப் போக்கி
டங்காணுமல் ஐயோ? கடலின்மூழ்கினும் மலையிலொளித்தாலுங்
காமத்தீயானது உடலைப் பற்றியிருக்கின்ற உயிரை அங்கும்வந்து
சுடுவதுபோல நாமெங்கோடி யொளித்தாலும் இந்த முனிபுங்கவ
ருடையகோபம் நீறுக்கிவிடுமே. ஆ? ஆ? என்னகாரியத்தினைச்செய்
தோம் இனி என்னபழி சம்பவிக்கின்றதோ வென்று பயந்து, சன
வுடலங்கொண்ட பூனைவடிவங்கொண்டு வெளியிற் செல்லப் புறப்ப
ட்டனும், மதிமயங்கிச் செல்கின்ற அப்பூனைபைக் கௌதமமுனிவர்
கண்டு இவ்வுருவங்கொண்டவன் தேவேந்திரனேயென்று நிச்சயித்
து, இற்புலியே? யீயார் போகாதேயென்று தடித்தனர், உடனேதே
வேந்திரன் தனது நிசவுருவத்தைக்காட்டி மேலான தன்பராக்கிரம
மெல்லாம் இழந்துநின்றான் அவ்வாறுநிற்பவனைக் கௌதமமுனிவர்
கண்டு, அடாதூர்த்தனே! உன்னை இப்போதே நீறுக்கிவிடுவேன், நீ
தேவர்கட்கெல்லாம் அரசனுகையாலே அத்தேவர்முகத்தைப்பார்க்
கு உன்னைவிட்டுவிட்டேன்; ஆயினும் ஒருபெண்குறியை இச்சித்து
வந்தவனுக்கு உடல்முழுவதும் பெண்குறியாகக்கடவதென்றுசபித்
தனர். உடனே அழிந்தகனியிற்பட்ட கடுங்காரைப்போலக் கௌத
மமுனிவரிட்ட சாபமானது தேவேந்திரனெருங்கலும், செத்தச

வத்திற் கொப்பானவனுகிக் கீழேவிழுந்து தனக்குநேரிட்ட ஆபத்தைநினைக்குந்தோறு மனந்துவண்டு தாங்கற்கரிய துயரத்தையடைந்து, ஐயையோ! இதுவரையிற் கற்றகல்வியும், அரக்கர்குலக்களைச் சயித்தடைந்தசெல்வமும், தேவலோகத்தை யாள்கின்ற ஆராசாட்சியும், மற்றுமுண்டான சகல சம்பத்துக்களுங் காமமென்னுங் கடுந்தீயிற்பட்டு எரிந்துவிட்டனபோ லாயினவேயென்று மனம்வருந்தி, உடனுருகிக் கதறிக்கதறி ஓவென்றழுது, தெய்வமே! பெண்களாயினோர் தங்கட்கிருக்கின்ற ஒருகுறியை மறைக்கு நிமித்தம் மிகவுநீட்சியுள்ள ஆடையினை யுடுத்திருந்தும் ஓர்காலத்து ஆடவர்கூட்டத்துள் வருவதற் கிலர்சையுருவார்களே; அத்தன்மைத்தான பெண்குறிகள் என்னுடல்முழுவதும் அளவற்றனவாக நிறைந்துவிட்டனவே; அவற்றையெல்லாம் ஒவ்வாறுமறைத்து ஒருவரெதிரில் உலாவப்போகின்றேனென்றுகலங்கி அவ்விடத்தினின்று நீங்கி ஓர்மடுவிற் புகுந்து அதிலிருக்கின்ற தாமரைநாளத்தி லொளித்துக் கொண்டனன்

அளவில் பாதகத தாலொரு பெண்ணுரு வாமே
லளவில் பெண்ணுரு வாவதற காற்றுபா தகமே
யளவில் காதலிற் பிறன்மனை யணிநல நுகர்த
லளவில் யோனிமெய் யமரர்கோ னெத்தலி னம்மா.

உருக்குமாங்கதராகனே! இதற்கிவ்விந்திரன் செய்த குற்றத்தாற் றன்சரீரமுழுவதும் அளவற்றயோனிகளை யடைந்திருப்பதைப்பார்க்கின், இப்பூவுலகதனில அனந்த பாதகங்களைச்செய்து ஒருபெண்சனனமெடுப்ப தென்றும், அளவற்ற பெண்சனன மெடுப்பது ஒரு பிறன்மனையை யிச்சித்த பாதகத்தாலென்றும் பெரியோர்கள்சொல்லுவார்கள் அஃதுண்மையாகவே நம்பத்தக்கதா யிருக்கின்றது. எழில்வாய்ந்த இந்திராணிமுதலிய தேவஸ்திரீகள் அனந்தம் பெயர்கள் இருக்கவும், இவ்வேவார் இருடிபத்தினியா லல்லவா அவ்விந்திரன் தன்மாட்சிமையுணர்த்து மழியப்பெற்று, ஒளித்துக்கொள்ளநேர்ந்தது, பெற்றதைச் சிறிதாகவெறுத்துப் பெறுதலைப் பெரிதாக வெண்ணி விரும்புகின்ற ஆணவத்தின்வலியை யாவர்சொல்ல வல்லவர்கள்.

இன்ப மாதரார் போகமென் றியம்புவ ரறியார்
துன்ப மாக்குமோ வின்பமுஞ் சுரர்பிரா னுரைமா

தன்பி னுலழி யாதுய ருழுந்தனன் கணேசன்
றன்ப தாம்புய மலதுவே றின்பெனத் தருமோ.

மங்கையரைக் கூடுவதா லுண்டாகிய போகத்தையுஞ்சிலஅறி வீனர்கள் இன்பமெனச் சொல்லுகின்றார்கள். அஃதின்பமேயாயின் தேவர்கட்கெல்லாந் தலைமைபெற்ற இந்திரனுக்கும் ஒருபெண்ணிச் சையால் இத்தன்மைத்தான துன்பத்தினைக் கொடுக்குமோ! கணே சமூர்த்தியினுடைய சரணாரவிந்தங்களைத் தியானிக்கின்ற இன்பமே யின்பமல்லது வேறொன்றையு மின்பமெனக் கருதப்படுவதோ என் றுசொல்லி முடித்தனர்.

இந்திரன் சாபம் பெற்ற படல முற்றிற்று

அகலிகை
சாப நிவாரண முரைத்த படலம்.

கங்கையும்பிறையுங் கடுக்கையும்புனைந்த கண்ணுத லண்ணலாரீன்ற வைங்கரக் களிற்றி னடியிணைபரவி யவனருள் பெறீஇயியாமன் பங்கமீ றவைத்துக் கவுதமன் சூளிற் பாறையிற் கிடந்திடு மகலியை துங்கநல்வடிவமடைத்ததங்கவஞ்சொற்றிடுமுறைப்படிகிளப்பாம்.

மனத்தை ஒருமைப்படுத்தி, இருவினை கடிந்து, மும்போது ணாண்கு யதார்த்த புருடார்த்தங்களுள் மேலாய வீட்டின்பத்தை அடைவான் ஐங்கரக் கடவுளது அடிமலர்பரவு மந்தணர்களே! கௌதமர் கூறியபடி யாமுங் கூறுகின்றேம்; கௌதமர் அகலிகை யைப் பார்த்து மாதே! நீ கலவித்தொழில் முதலியவற்றுல் காமல் லவென்று தெரிந்தும் மதிமயக்கத்தாலினைந்து கூடினமையால் கரு ங்கல்லாகக் கிடக்கக்கடவாய் என்று சபிக்க, அவள்கேட்டு வருந்தி யதையவர் வரையறுத்துக் கூறுவார். சங்கணிக்தகையும், சரம்போ ன்ற விழியும், குதலைமொழியும், கோங்கமுகைபோன்ற கொங்கை களையுமுடைய அகலிகை யானவள் நூறு இரகு வேண்ட, கௌ தம முனிவர்கூறுகின்றார். பாவாய்! சாபநிவாரணங் கூறுகின்றேம். மாதேவி பாகராகிய சிவபெருமா னெழுந்தருளி யிருக்கின்ற திருக் கைலாய மலையின்கண் விளரி யிராகத்தைப் பாடி யருள்பெறும் இலங்கை மன்னனுகிய இராவணன் செய்கின்ற துன்பத்தைச்சகிக் காத இந்திரன் முதலிய தேவர்களெல்லாம் ஒருங்குகூடித் திருமா

லிடஞ் சென்று தங்குறைகளை முறையிடுவர். அப்போது திருமால் அவர்களைநோக்கி இந்திராதி தேவர்களே! எம்முடைய வடிவத்தில் நான்குகூருகத் தசரதச் சக்கிரவர்த்தியின் புத்திராராய்ப் பூமியின் கணவதரிப்போம்; நீவிர் வனங்களினும் மலைகளினும் வசிக்கின்ற குரங்குகளாயும் பிறக்கக்கடவீர் என்று பணிப்பர் அவ்வாறுகத் தசரத ராஜன் புதல்வரின்றி வருத்தமுற்றுக் கலைக்கோட்டு மகா முனிவரைக் கொண்டு புத்திர காமேட்டியாகஞ் செய்விப்பான். அவ்வியாகாக்கினியினின்றும் ஓர் தெய்வபுருடன் தோன்றி அவிர்ப் பாகத்தைக் கொடுக்க, அதனை நான்கு கூறுக்கித் தன்மனைவியர்க் குக் கொடுப்பான். அவர்கள் உண்டு கருப்பந்தரிக்கப் பெறுவர்கள். அவர்களுட் கௌசலை இராமனையும், கைகேயி இலக்குவனுகிய கு ணசாகரத்தையும், சுமித்திரை பரத சத்துருக்கரையும் பெறுவர். இவர்கட்குச் சாதகருமம் முதலாகிய கிரியைகளையெல்லாஞ் செய்து வேத முதலிய கலைகளையும் பயிற்றுவிப்பான் அவர்கள் அங்ஙனம் வளர்ந்துவருங் காலத்தில் காதிராஜனின் புத்திராகிய விசுவாமித் திர முனிவர் தசரதன் சபைக்குப் போவார் அப்போது அரசன் எதிர்கொண்டு வணங்கி ஆசனத்தி லிருத்தி அடிகளே! தேவரீர்இவ் விடத்திற்கு எழுந்தருளியதைத் தெரிவிக்க வேண்டுமென்று பிரார் த்திக்கக் கேட்க விசுவாமித்திரர் சொல்லுவார்: அரசனே! நானேர் யாகஞ் செய்யத் தொடங்கி யிருக்கின்றேன் அதற்குப் பல இரா கூதர்களாலும் வருமிடையூறுகளைத் தவிர்த்துக்காப்பதற்கு உனது குமாரனுகிய இராமனை என்னுட னனுப்பக்கடவா யென்பார். அத னைக்கேட்ட அரசன் இடிகேட்ட சாப்பம்போலவும், கருமுகில் கண்ட கோகிலம் போலவும் வருத்த முற்று முனிவர் பெருமானே! என்குமாரனை மிகவும் பான்மணமறச்சிறு குழவியாயிருக்கின்றான், இராகூதர்களோ மாயையில் வல்லவர்கள். அவர்களை யிவன் வெல் லுதல் கூடுமோ: ஆதலால் அவனை யனுப்பும்படி கேட்குதல் தேவ ரீர்க்குத் தருமமாகுமோ? என்று பலவாறு வேண்டவும் விசுவாமித் திரர் ஒப்பாதவராய் அனுப்பும்படியாகவே வற்புறுத்திக் கூறுவர்; அப்போது தசரதச் சக்கிரவர்த்தி உடலிலிட்டுப் பிரியும் உயிர் போல வருத்தமுற்று ஒன்றுந் தெரியாதவனுய் மூர்ச்சையாகுவன் அதனைக்கண்ட இராமச்சந்திரன் தந்தையைத்தேற்றிக் கூறுவான்.

எந்தையே! இராகூதர்களால் எனக்குத் தீங்குநேரிடுமென்று வருந்துகின்றீர்: சர்வதோமுகராய், அதிலராய், அசலராய், சின் மாத்திர மூர்த்தியாய் சர்வாணுக்கிரகராய், என்னுக்கு மென்மெய்

போலவும், மணியினைசைபோலவும், மலரின் மணம்போலவும் உல
கமெங்கணும் வியாபித்து விளங்காகின்ற பரப்பிரம பரஞ்சோதிப்
பிழம்பாய், அடைந்தார்க்கு வேண்டியவளருரு மண்ணலாய் இலங்
கும் விராயகப் பெருமானது கிருபையினலும், இம்முனிவரது பல
த்தினலும், அவ்வசுரர்மாயங்க ளெல்லாவற்றையுங் கடந்து நன்மை
யுடன் வந்து சேருவேன். தேவரீர் ஒன்றற்கும் பயப்படவேண்டா
மென் றிவ்வாறு தேற்றி, வசிட்ட முனிவரது உபதேசத்தால் விரா
யகரைப் பூசிக்கத் தொடங்குவன் அவ்வாறு அன்புடன வழிபடு
வதைக் கண்ட விராயகப்பெருமான் தோன்றி என்ன வரம் வேண்
டுமென்று வினவியருள இராமபிரான் சொல்வான்: எங்குலதெய்
வமே! இராக்கதர்களால் வரும் மாயங்களெயெல்லாங்கடந்து அவர்
களையுங்கொன்று விசுவாமித்திரருடையயாகத்திற்கு மொரு இடை
யூறு வாராதபடி வரந் தந்தருள வேண்டு மென்பான். அதற்கு விரா
யகப்பெருமான் இராமபிரானைப் பார்த்து, இராம! நீ வேண்டிய
வரங்களை யாதரித்தோம். நீ நம்மை யன்புடன் பூசித்தமையால் நி
ன்னைக் கண்டார்கள் எண்ணியவற்றை யடையக்கடவார்கள். உன்
னுடைய திருமேனி பிரவப்பூசிய சரீரத்தின் பரிசம்பட்ட காலத்தும்
அவர்கள் தீவினைகளெல்லாம் நீங்கப்பெற்று நற்கதி யடைவராக
வென்று திருவாய் மலர்ந்தருளி அந்தர்த்தான மாகுவர். அவ்வாறு
வரம் பெற்ற இராமன் நீபாறையாய்க் கிடக்கின்ற இடத்தில் வரும்
போது ஐங்கரக்கடவுளுக் கடியவனுய் அவ்விராமனது பாததூளி
பட்டமாத்திரத்தில் நின் சாபம் நிவாரணமாகும்; அதனல் நீ மூர்
தியவடிவங்கொண்டு நம்மைச்சேர்ந்து வாழ்ந்திருப்பாயென்று சாப
த்தீர்வு கூறினர். அகலிகையுஞ் சந்தோஷத்துடன் கேட்டுச் சிலை
யுருவேற்றிருந்தாள்.

அகலிகை சாப நிவாரண முரைத்த மடலம்
முற்றிற்று

கௌதம ருபதேசித்த படலம்.

இந்திர னெய்திய செயலிது
வந்தர ரவனடி வழிபட
மூன்றையி னரசவை முற்றினு
கந்தனீ கரியீனக் கண்டிலார்.

பிறருக்குபகாரஞ் செய்கின்றதே தேவரீர்க்குச் சுபாவகுணமாக விருக்கின்ற தாதலால் தேவரீரையடித்தவர்கள் யாவராயினும் அவர் களைத் தடையின்றிப்பாதுகாப்பீ ரெனக்கருதி எங்களரசன்பொரு ட்டுத் தேவரீர் திருவடிகளில் அடைக்கலம் புகுந்தோம். அடியேங் கட்குத் தேவரீரையன்றி வேறெருரு கதியில்லே யென்று அம்முனிவ ருக்கு இரக்கமுண்டாகத்தக்க இன்சொற்களா லிரங்து தேற்றினார் கள்.

இவ்வாறு விண்ணப்பஞ செய்து கொண்ட தேவர்களைக் கௌ தமமுனிவர்பார்த்து, ஞானேநோக்கினுற் சகல காரியங்களேயும் அறி யவல்ல தேவசமூகங்களே? நீங்கள் மிக்க மனவாட்டத்துடனேஇங் குவந்த காரண மென்னே? உங்கட்கு நம்மா லாகத்தக்க காரியங்கள் ஏதேனுமுண்டா யிருக்குமாயிற் சொல்லுங்களென்று கிருபைசெய் தலுக்தேவர்களெல்லாமனக்களிப்படைந்து, நம்முடையகுரவர்கள் முழுவது நீங்கப் பெற்றேமென்று ஆனந்தித்து, ஓ ? சர்வவல்லமை யுள்ள புண்ணியமூர்த்தியே! பூரண சந்திரனேக்கண்டகடல்போலத் தேவரீர் திருமுக விலாசத்தைக்கண்டு களிப்புற்ற அடியேங்கட்கு இனியொரு குறைவுண்டாமோ? முன்னெருகாலபாது மாதேவர் மன் மதனே எரித்தவாறுபோலத்தேவரீர்க்குத் தீங்கினைச்செய்ததேவேந் திரனே யமனுக்கிரையாகும்படி சாம்பராக்காதுவிட்டது அடியேங் கள் பொருட்டாலல்லவா? ஆதலால் சுவாமிக ளெவ்வாறு நினைத் ததோ அவ்வாறே அடியேங்கண்மீது இன்னுங்கிருபைவைத்து இக் திரன்தேவலோகத்திலிருந்து குறும்பினையடக்கி அரசாளும்படியாக அவன் ஏற்றிருக்கின்ற சாபத்தை நீக்கியருளவேண்டுமென்றுபிரார் த்தித்தார்கள். அவையனேத்தையுங் கௌதமமுனிவர்கேட்டு விபுதர் களே? அறிவில்லாதவன், வஞ்சகன், துஷ்டன, ஆசாரவீனன், தன் னுயிரைப்போல மன்னுயிர்களேயு நினைத் தாதரிக்காதவன், கொடிய நெஞ்சையுடையவன் இவர் முதலாய் மகாபாவிகளே வாக்கால் வ ணித்தலு மாகாது; மனதாதல் நினைத்தலுங்கூடாது; ஆயினும் ஒரு காதகன்மீது பலபேர்கூடித் தயவுவைத்தாராயின் அவன் உடனே புனிதனுகுவன் அதுபோல நீங்களெல்லோரும் பெரும்பாதகனுகிய தேவேந்திரன்மீது கிருபைவைத்திருப்பதினுலே அவனும் இனிப்பு னிதனே யாகுவனென்று சொல்லிப் பிரகஸ்பதிதேவரைப்பார்த்து, தெய்வ மந்திரியே! சிருட்டி முதலிய முத்தொழில்களேயும் பிரமன் முதலிய முத்தேவர்களாயிருந்து நடாத்துகின்ற விநாயகமூர்த்தியி னுடைய சடாக்ஷர மந்திரத்தை உமது வல்லினைகளே வாட்டும்பொரு

உபதேசிக்கின்றேம் நீர் அம்மனுவைத் தேவேந்திரனுக்கு உபதேசஞ் செய்யும். அதனால் அவன் சரீரத்திலுண்டாயிருக்கின்ற குறிகள்மாறிக் கண்களாகும் பின்னும் அவன் செய்திருக்கின்ற பாதகங்கள் அனைத்தும் நீங்குமென்று அச்சடாக்ஷரமகாமந்திரத்தைத் தீட்சைமுடியோடும் உபதேசித்து, அதையதுட்டிக்கு முறைமையையு மருளிச்செய்தார் பின்னர்ப் பிரகஸ்பதிதேவ ரனைத்தங்கொண்டு கௌதமமுனிவரை மறையு தேவர்களோடும் ! அஷ்டாங்கமாகப் பணிந்து விடைபெற்று அவரிடத்தினின்றும் நீங்கினார்

கௌதம முபதேசித்த படல முற்றிற்று

இந்திரன் உபதேசம் பெற்ற படலம்.

கௌதம னருள்பெறுங் கடவு ளார்களுஞ்
சவலியின் மதிமிகு தாமனி யாபெய
ரவனுமென் மொழிப்படி யடுத்து மேருவைத
தவழ்திரை மாமடிச் சார்ந்து கூவுவார்

வாராய் உருக்குமாங்கதராசனே! தன்னே விழைந்தோர்க்கெல்லாம் பலவரங்களீந்ததந்து பாதுகாக்கவல்ல தேவேந்திரன் செய்த ஒருதீமையை இவ்வாறளவற்ற தேவராலெருமித்தபப பலமுயற்சிகளைக்கொண்டு வாடுவாராகளாயின இப்பூவுலகத்துள்ளவர்களால் நாடோறு மிடைவிடாது செயதுவருகின்ற பாவங்கள் எழுவகைப் பிறவிகளினும் விடாது வருதலேயன்றி எவ்வாறு நீங்கப்போகின்றது. இப்பால் கௌதம முனிவருடைய அருள்பெறற பிரகஸ்பதி தேவரும் மற்றைத் தேவர்களும் முன்னாயான் அறிவித்திருக்கின்ற வண்ணமே தேவேந்திரன் ஒளித்திருக்கின்ற விடத்தைக் காணுங் கருத்துடையவர்களாய் மகமேருச் சாரலை யடுத்த மடுக்கரையிற் சென்று கூவுகின்றார்.

ஓவோ சதக்கிரது வேயும்பர் வேந்தனே
யோவோ வயிராணி யின்னுயிர்க்குத் தோழனே
யோவோ தயித்தியர் குலமொறுக்கும் வீரனே
யோவோ மகவான் வெளியுறுதல் வேண்டுமே.

தைத்தியகுலகாலரே ! மருதநிலத்தலைவரே ! வெளியில்வாரும்; வெளியில்வாரும்; உம்மைச்சபித்த முனிபுங்கவரிடத்து யாம்

கள் அனைவருஞ் சென்று பணிந்து உமக்கவர் கருணைபைப்பெற்று வந்தோம். நாரதமகா முனிவரும் எமமோடு வந்திருக்கின்றனர். அவ்வவர்கள்செய்த குற்றங்களே உள்ளத்திலொளிக்காமல் வெளியிட்டால், அவைகளால் வருகின்ற துன்பங்களைப் பெரியோர்கள் விலக்கி வைப்பார்கள்; அவைகளே வெளிவிடாமன் மறைத்தால் மாறுத துன்பத்தினே யடைவார்கள்; ஓ மேகவாகனரே! இங்குவந் திருப்பவருள் நாரதமுனிவா மகாபெரியவர்; நீர்செய்த குற்றத்தை யவரிடத்தில் விண்ணப்பஞ செய்வீராயின் அது நீரத்தக்க மார்க்கத்தை அவரே சொல்லுவார் முனனர்ச சிவபிரானுடைய திருக்கல்யாண மகோற்சவததில உமாதேவியினுடைய காற்பெருவிரண்மீ திச்சைவைத்துப பாவததையும நாணததையும் பரித்துழன்ற பிரமனுவன் மீட்டுமவைகள் நிஙகுமாறு அச்சிவபிரானுடைய திருவருளேயே பெற்று நீக்கிக்கொண்டது உமக்குத் தெரியாததா? ஆதலால் நீர் உமது மனக்கவலேயை விட்டு வெளியில் வருவீரென்று கூவினர்கள் இவையணைதையுங கேதேவேந்திரன் கேட்டுத் தாமரை நாளதனின்றும் வெளிப்பட்டான். உடனே தேவர்கள் அவன் சரீரத்தி லிருக்கின்ற பெண் குறிகளைப் பார்த்துச்சிலர் இவைகளே யாம் பார்ப்பது மகா பாவமென்று நினைததுக் கண்களே மூடிக் கொண்டார்கள். சிலர் தலைகளைக் கவிழ்த்துகொண்டார்கள். சிலர் நாசியைப் பிடித்துகொண்டார்கள பின்னர்த் தேவேந்திரனுவன் தான் செய்த குற்றங்களையெல்லாம் வெளிவிட்டும் பிரகஸ்பதி தேவராற் சடாக்ஷர மந்திரத்தை முறைமையோடும் உபதேசிக்கப் பெறறுஞ் சந்திரனைக்கண்ட செவ்வாம்பன் மலரைப்போல முகமலர்ந்து ஆனந்தமாயினன் அச சடாக்ஷர மந்திரந் தன் செவியிலே றியவுடன் முன்னர்க் கௌதமமுனியிட்ட சாபமானது உடனே எவ்வாறு பற்றிக்கொண்டதோ அவ்வாறே மகா தீவிரத்தோடும் அப்பெண்குறிகளெல்லாங் கண்களாய்விட்டன யாரும் மற்றமுனிஸ்வரர்களும் பல ஆசீர்வசனங்களைச் சொன்னேம். தேவர்கள் புட்பவருஷம் பொழிந்தார்கள். அரம்பையர் நிருத்தஞ் செய்தார்கள். கின்னரர் கீதம் பாடினர்கள். ஆகாயத்தில் அந்தர துந்துபி முழங்கியது

இப்பால் அவ்விந்திரனே மற்றைத் தேவர்களெல்லாம் நீர்க்கதண்டன் செய்து இதுகாறும் உம்மைப்பிரிந்ததனும் சந்திரனில்லாத இரவு போலவும் தாயில்லாத சேய்போலவு மானேமென்று அறித்தார்கள். பின்னர்த் தேவேந்திரன் மிக்க மனக்களிப்போடு வந்தி

ருக்கின்ற முனிவர்களையெல்லாம்பார்த்து ஓ தவசிரேஷ்டர்களே! உங்கள் மகத்துவங்களைச் சுத்தபவித்திரர்கள் அறியவேண்டுவ தல்லது மற்றென்போலிகளால் அறியப்படுவனவோ? அளவற்றதேவர்களொன்றுய்க்கூடினதும் உங்களில், ஒருவருக கொப்பாவார்களோ? சகலபெருமைகளும் வாய்ந்திருக்கின்ற மகான்கள் நீங்களேயென்று துதித்து அஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, பின்பு தேவர்களைப் பார்த்து அன்பிற்சிறந்த மிததிரர்களே? மகாமகத்துவமுள்ள கௌதமமுனியிட்டசாபம் என்னைவிட்டுநீங்கும்படியாக ஏதேதுமுயற்சி செய்தீர்களோ? என்றுங்தீர்ந்திலேன் முன்னா எனக்கியல்பாகவிருந்த இரண்டுகண்களும் இருளடையும்படியாக மிக்க வொளிபொருந்திய ஆயிரங்கண்களைத் தருதீர்கள் உங்களாற் சகல நன்மைகளையும் பெற்றேன். நீங்க ளென்பொருட்டாகச்செய்த வுதவிக்கு யான் செய்யத்தக்க கைம்மாறென்ன விருக்கின்றது. இனி விகாயகமூர்த்தியை யதட்டித்து அவர் கிருபைபெற்று உய்யுமாறு ஓர் திவ்விய கேஷத்திரத்திலிருந்து சிறந்த தவங்களைச்செய்தது பின்னர் இச்சை ப்பிரகாரம் எனது சுவர்க்கலோகத்தையடைந்து அரசாளுகி செய்வ தேயன்றி யானிப்போது வருவதில்லை நீங்களாவரும் அங்குச்சென்று வாசம்செய்திருங்கள். சிலர்மாததிரங் கற்பகவிருக்ஷத்தினிடத்திருந்து நமதுதவத்திற்கு வேண்டிய திரவியங்களையெல்லாங் கொண்டுவந்து கொடுக்கக்கடவீர்களென்று கட்டளையிட்டு யாவர்க்கும் விடைகொடுத்து அனுப்பினன்.

இந்திரன் உபதேசம்பெற்றபடல

முற்றிற்று.

இந்திரன் உபாசித்த படலம்.

இதம்புரியுந் தேவர்களு மிருடியரு நீங்கியபின்
சதம்பவனத் திடையேகிக் காவல்புரி விண்ணவர்கோ
ணதம்பலவுந் தீபலவு மொன்றுனும் போனவையின்
திதம்புதெறு மொருதீர்த்தந் திகழ்தரக்கண் டதையடித்தான்.

அவ்வாறே யாவருஞ்சென்றபினனர்த் தேவேந்திர|மகாராசன் வனத்திற்சென்று அங்கோர் தடாகக்கரையி லிருந்து அதிற்

தேவர்களாற் கொணர்க்துதருகின்ற ஆகாயகங்கையைக் கலக்து அ
தன் கரையின்மீது மிக்க வொளிபொருந்திய பளிங்குக் கற்களினல்
ஓரலயமெழுப்பி அவ்வாலயத்தில் வேதாகமவிதிப்படி விநாயகமூர்
த்தியைப் பிரதிட்டைசெய்து, சகலபதார்த்தங்களுடன் | பிரதினை
ம் பூசனைபுரிந்து ஐம்புலாதிகளையும் அடக்கி ஓராதனத்தி லிருந்து,
இருவிழிகளையும் நாசிதுளியில்நிறுத்திக் கணசமூர்த்தியினுடைய
திருவடிகளைச் சிந்தித்தபடி பஞ்சாக்ஷரமந்திரத்தைத் தி
யானித்துச் சுத்த பவித்திரமான உள்ளதையுடையவனுய் ஆகார
மில்லாமல் ஆயிரம்வருடங் தவஞ்செய்தான் இவ்வாறு செய்துவரு
கின்றதவத்திற்கு விநாயகமூர்த்தி அருள்கூர்ந்து வெள்ளியதிருமே
னியும், நிசைமுழுவதும் விழுங்கதாகக பிரகாசமும், யானைவதன
மும் உருத்திராக்க மாலைகையிலிருகின்ற தாதிக்கரமும், நான்
குபுயங்களும், தண்டை சதங்கை சிலம்புமுதலியவை யணிந்திருக்
கின்ற இரண்டுபாத பத்மங்களும், அரைஞாணும, புயகவசமும்,
மார்பில் முப்புரிநூலும, முத்துமாலை, இரத்தினமாலை, குண்டலம்,
கிரீடமுதலான அளவற்ற அலங்காரத்துடன் சிங்காவாகனமூர்த்
தேவேகத்தினெதிரில பிரதியக்ஷமாயினர

உடனே இருதிரஞனவன அன்புமசமுங்கொண்டு இருகரங்
களையுஞ சிரம்மற் குவித்துதுதி துண்ணென்று ஆசனம்விட்டெழுந்து
இரண்டுகால இரண்டுகை, இரண்டுசீதாள், நெற்றிமாபு என்கின்ற
அட்டாங்கங்களும் பூமியிற்பொருந்தவிழ்ந்து, மீட்டுமெழுந்து சரீ
ரமுழுவதும் புளகாங்கிதங் கொண்டு கூத்தாடி வலம்வந்து ஆனந்
தண்ணீர்சொரிந்து துதிபபானையினன

அறிவாய் விளங்கு மொளியாகி யெங்கு மசைவற்று நின்ற நிறை
வாய்க், குறியாதி யின்ப முதலீ நிலாத குறைவற்ற வின்ப மயமா
ய்ச், செறிவான நீரி னிழல்போலநின்ற திறலோயை யானும் வினை
வேன், வெறுஞான மான திருமேனிகொண்டென் விழிகாண முன்
னர் வரலால. (க)

இருண்மூழ்கு கண்ணின் மலகேவலத்தி னிதமின்றி நின்றவுயிர்
கட், குருவாதி மூன்று முனமுய்த் தவற்றி னுளதாம் விகாரவகை
யா, லிருவேறு கன்ம மிசைவித் தருத்து மிறையோயை யானுமொ
ழிவேன், வெருண்மாயை நீத்த திருமேனி கொண்டென் விழிகாண
முன்னர் வரலீல (உ)

வாதங்கடன்னு பலமாயைகன்ம வகையுங் கடன்து வகைசெய்,
யேதங்கடன்து பொருளொன்று மின்றி யெழுகின்ற மம்மருயிரின்,
போதன்கடன்து தரியங் கடன்த பொருளோயை யாணுமுணர்வேன்,
வேதங்கடன்த திருமேனி கொண்டென் விழிகாண முன்னர்
வரலால். (கூ)

வெங்கட்களிற்றின் மகவான் றுதித்து விழிநீ ருகுத்துள் ளுருகா,
சிங்களு செலுத்தி யெதிர்வந்து நின்ற திகழ்முக்கண் வேழ முகவ,
னிங்குற்று நீசெய் செபமா தியான மிதயங் களித்த னமினிப், பொ
ங்குற்றகாதல் வரம்வேட்டதின்று புகலென்ன வோதுமவனே. (ச)

யோகத்தினலு முணரப் படாமை யுயர்ஞான யோகங்லேயார்
பாகத்தி னென்று படுகின்ற பாத பதமங் கெடாது புரியும்
யாகத்தினை பயனுக் குறக்க மெளியேற் களித்தி யதுவும்
போகத்தின் மல்க விடரின்ற நின்ற புகழோடு மாளும் வகையில் ()

முன்னேயெனக்குமறையோனுரைத்த மொழியாறெழுத்துமனுவைத்
தன்ன தரத்தி னுரைசெய்து யீயித் தனிமக் திரத்தை பொழியின்
மன்னுது விண்ணி னரசாட்சி யென்று வழிவற் புறுத்து மதீனப்
பின்னே மறந்து பிழையிற் படர்ந்து பெரிதான துன்ப ணவினேன்.

பொன்னே னுரைப்ப விடர்மூற் றகன்று புகழா யிரங்க ணுடையே
னின்னு நெழுதுதை யுரைசெய்து பூசை நெடிதாற் றிவந்த பரிசா
துன்னுத தாகி யுரையாத தாகி யுடலிற் படாத பொருளீ
முன்னுகி நின்ற வருளா லெனக்கு முடியாமை யாவ துளதோ. (எ)

கேடாமெ வைக்கு முறுகா ரணங்கள் கிழவோய் பதத்தி னிறையன்
பாடாமை யாகு மதனு லெனககு னடிவா ரிசத்தி லுழுவல்
விடாமை வேண்டு மதுவன்றி யுள்ள விழைவுய்க்கு மிங்குன் வடிவுக்
கேடாத சிறதா மணியென்னு காம முறல்வேண்டு மூர்க்கு முறுக.
தீர்த்தன் தனக்கு மிடுபேர் சிறக்க திகழூர்க் கதன்றி யெவரு

மோர்க்குங் கதம்ப நகரென்ற பேரு முறுகிற்க வூரில் வதிவோ
ரார்க்குன் தடத்தி னறலாடு வோருன் னடியிங் கிறைஞ்ச லுறுவோர்
பார்க்கட் சிறந்த பயனுன்கு மார்க பகவா வெனப்ப கர்தலும். (கூ)

இறைவன் புகன்ற வரமூங் குறக்க மிடரின்றி யாளும் வரமு
நிறையக் கொடுத்து மறையக் கதிர்க்கு நெடுவச் சிரக்கைமகவான்
குறையற் றுமீட்டி முயர்பூசை யாதி குலவிப் புரிந்து விடைபெற்
றுறைபுக் குறக்க நகரெய்தி யன்பொ டாசாட்சி செய்த ருளினன்.

இவ்வாறு தோத்திரங்களைச் செய்து கனமுருகி நிற்கின்ற தே
வேந்திரனே விநாயகக் கடவுள் திருமையோடு பார்த்து, ஓ சுராதி
பனே! நீ இங்கிருந்துசெய்த செபதப முதலானவைகட்கு யாஞ்சங்
தோஷித்தோம். உனக்குவேண்டிய வரங்களைக் கேளென்று திரு
வாய் மலர்ந்தருளலும், தேவேந்திரனவன் ஆனந்த பரவசங்கொ
ண்டு ஓ சகலபுவனதார கர்த்தனே உபர்ந்த ஞானயோகத்தை யது
ட்டிக்கத் தக்க பரிபக்குவ ரெவர்களோ அவர்கள் இருதயத்திலொ
ன்றுபட் டிருப்பது தேவரீருடைய பாதபங்கயம் அதனை அடியே
ற்கருளாது வேள்விப்பயனுகிய சுவர்க்கலோக வரசாட்சியை யருள்
செய்தீர். அந்தச் சுவர்க்கலோக வரசாட்சியையும் ஓரிடையூறில்லா
மற் சகல போகங்களோடும் புகழ்பெற் ருள்வதற்கு முன்னொருகா
லத்திற் பிரமதேவன சடாக்ஷரமந்திரத்தை யுபதேசித்து அதைய
நுட்டிக்கு முறைமையுங்கூறி இதை மறைப்பையாயின் உனது சுவ
ர்க்கலோகவரசாட்சி நிலைபெற்றிராதென்று வற்புறுத்திக் கூறினன்.
பின்னரதனைமறந்து அளவற்ற பிழைகளைச்செய்த காரணத்தால்
மிக்க துன்பங்களை யெல்லா மநுபவித்தேன். மீளவு மதைப் பிர
ஸ்பதி தேவராலும் உபதேசிக்கப்பெற்று அத்துன்பங்களனைத்தி
னும் நீங்கி ஆயிரங்கண்களை யுடையவனுயினேன். அன்றியும் அம்
மந்திரத்தை இடைவிடாதநுட்டித்த பேற்றினல் மனவாக்குக் காய
மென்று மூக்காணாததாலும் அறிதற்கரிய தேவரீரை அடியேன்
முன்பு பிரததியக்ஷமாக வரப்பெற்றேன், இனி முடியாத காரியம்
அடியேற கென்ன விருக்கின்றது தேவரீர் திருவடிகளுக்கன்பியற்று
திருப்பதே சகல காரியங்கட்கும் இடையூறு வருவதற்குக் காரண
மாதலால் தேவரீர் திருவடிகளில் அடியேற் தமாறுத பத்தியை யரு
ளல்வேண்டும். இத்தலத்தில் அடியேன் பூசித்த தேவரீர் திருவரு
வத்திற்குச் சிந்தாமணி விநாயகரென்றும், இத்தலத்திற்குச் சுக
மென்றும், இத்தடாகத்திற்குச சிந்தாமணி தீர்த்தமென்றுந் திரு
நாமமிருக்கவேண்டும். மேலும் இவ் வூரைக் கதம்ப சுகர மென்றும்
வழங்க வேண்டும் இக் கதம்பசுகரத்தில் வசிக்கின்ற யாவருஞ் சிந்
தாமணி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து தேவரீர் திருவுருவமகிய
சிந்தாமணி விநாயகரைத் தரிசிப்பார்களாயின் அவர்கட்குக்கிடைத்
தற்கரிய நான்குபுருஷார்த்தங்களுங் கிடைத்தல் வேண்டுமென்று
பிரார்த்திக்க, கணேசமூர்த்தியு மவ்வாறே அதற்கிசைந்து செய்து,
தமது திருவுருவத்தைக்காத்தருளினர். தேவேந்திரனுந் தன்மனக்
குறைவுகளற்றிச் சிந்தாமணி விநாயகரை மீளவும் பூசித்துச் சடா

கூர மந்திரத்தை விடைபெற்றுத்தனது சுவர்க்க லோகத்திற் சென்று ஓரிடையூறுமின்றி அரசாக்கியை கடாத்தி வந்தனன். மீயும் அவ் விநாயகமூர்த்தியைச் சரணடைந்து பூசிப்பையாயின் இப்பிணி யொன்றுமே நீங்குவதன்றிப் பல வரங்களையும் பெறுவாய்போ வென்று நாரதமுனிவா உருக்குமாங்கத ராசனுக்குச் சொன்னார்.

இந்திரன் உபாசித்த படல முற்றிற்று

உருக்கு மாங்கதன்

முத்தியடைந்த படலம்.

திருக்கி லாமுனி செல்லுமுன்
றருக்கி வாழ்தம ராயினர்
தருக்கமாதி தூரீ இத் தூரீ இ
யுருக்கு மாங்கணி யுற்றனர்

சவுனகர்முதலியமுனிவர்களே! விநாயகமூர்த்தியைத்தேவேந்திரன் பூசித்ததுப் பலவரங்களைப பெற்ற சரித்திரத்தைச் சொன்னேம். இப்பால் உருக்குமாங்கத ராசன் அநுட்டித்த நிறத்தைச் சொல்லுவோங் கேட்பீராக. இவ்வாறு நாரதமுனிவர்சொல்லி அங்கிருந்து நீங்குவதற்கு முன்னமே முன்னா ருக்குமாங்கத ராசனிக் காணுதல் நகரத்திற்குச சென்ற பரிசனங்களெல்லாம் மகிழ்காடு முதலியவிடங்கள்தோறுந் தேடிக காணுதவர்களாகி அவன் நாரதமுனிவரோடுஞ சம்பாஷித்திருந்த வனத்திற்குவந்து, தங்கள ராசன் குட்டநோயுடனிருக்கக்கண்டு மனமெலிந்து, சார்வபௌமா! மாஞ்டு வேட்டையாடிச் சென்ற எமக்கு இந்நோய்வந்த காரண மென்னவென்று கேட்டார்கள். அவர்கட்கு அவ்வரசன் நடந்த காரியங்களனைத்தையும் விவரமாகச்சொல்லி அவ்விடத்தினின்று நீங்கிக் கதம்பநகரஞ்சேர்ந்து, சிந்தாமணி விநாயகரைத்தரிசித்துச் சகலவினைகளோடுமொழிக்கத்தக்க சிந்தாமணிதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தான். உடனே அவன் சரீரத்தைப் பற்றியகுட்டநோய் நீங்கி மூன்னரிருந்த உருக்குமரூபம் உண்டாயது பின்னரவ்வரசன் அளவற்ற ஆனந்தங்கொண்டு மீளவுஞ் சிந்தாமணிவிநாயகரையடைந்து பூசித்து, அந்தணர்களுக்கு அளவற்ற திரவியங்களைத் தானஞ்

செய்து கொண்டிருக்கையில், சிலதேவகணங்கள் அத்தமார்க்க மாக வொருதெய்வ விமானங்கொண்டுவந்து அவ்வரசனுக் கெதிரில் நிறுத்தி, புண்ணிய சீலனே! நீ இக்கணேசகுண்டமாகியசிந்தாமணி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து சிந்தாமணி விநாயகரைப் பூசனை செய்த பேற்றினால் உனக்குண்டாகிய மேன்மையை யாவராலுரைக் கப்படும். நீ இவ் விமானத்தின்பி தாரோகணித்து எம்மோடுங் கணேச லோகத்திற்கு வருவையென்று சொன்னார்கள்.

சின்மயசிற்குணவகண்டாகாரசச்சிதானந்தசேர்ந்தார்தம்மைத் தன்மயமாக்கிமுதல்வன் காரணநீதனவன் நிலைமை சான்ற நன்மைதரு மருளெங்கே நானெங்கே கான்புரிந்த தவங்க ளெங்கே யென்மனமெங்கேயெனது பிறப்பெங்கே யென்னுடைய பத்தியெங்கே.

பண்டுபுரி தவதானு மிதநடத்தி னீராடும்பலத்தினாலு, மண் டர்தொழும் பெருங்கணதீரா நுங்கடெரி சனமடியேற் காயிற் றென்னீ, மண்டுபெருந் தவமாறுசே சாருகா சினியோடு மருவி வீம, ஞண்டரையி னுயிர்தனக்கீவ நிலையவரை யொழித்தெவ் வா றுறுவெனென்ருன்

அதை யவ்வரசன் கேட்டு அத்தேவகணத்தலைவரை அஷ்டா ங்கமாக வணங்கி, சின்மய சிற்குண அகண்டாகார சச்சிதானந்த சாகியும், தம்மையடைந்தோர்களுக்கு தன்மயமாக்குகின்ற முதல்வ ராகியும், காரண நிதராகியு மிருக்கின்ற விநாயகக் கடவுளுடைய பெருங்கருணைக்கு யானெவ்வளவுபாத்திரன். யானென்ன தவங்க ளுச்செய்தேன் என்மன மெவ்வளவு பக்குவமாயிற்று என்பிறவி எவ்வளவு யோகியம என்பதறியெவ்வளவு ? அச்சோ ? யான் முன்பு செய்திருக்கின்ற தபோபலத்தினாலும் இத்தெய்வீய தீர்த்தத் தில் ஸ்நானஞ்செய்த மகிமையினாலும் அடியேன் உம்மூடையதரிச னத்தை யெளிதிற் கிடைக்கப்பெற்றேன். ஆயினும் வீமாசனஞ் சாருகாசினியும் அளவற்ற தவங்களைச்செய்து என்னை யீன்றார்க ளாதலால் அவர்களைவிடுத்து யான்மாத்திரமெவ்வாறு வருவதென் றுசொன்னன், அவையணைத்தையுக் தேவகணத்தலைவர்கேட்டு மிக்க சந்தோஷங்கொண்டு சுசனபரிபாலகனே! நீயுன தாய்தந்தையரை நினைத்து இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து தர்ப்பணம் புரிவையா யின் அவர்களுமுன்னுடன் வருவார்களென்றுசொல்ல, அதையுருக் குமாங்கதராசன்கேட்டு மனக்களிப்படைந்துதர்ப்பையைமுடிக் து அம்முடிந்ததருப்பையைத் தாய்தந்தையுமுதலாயினோரை நினைத்

து ஸ்நானஞ்செய்வித்துத் தானு மடுக்கரைமீதேறிவந்து, தனக்கு வழிகாட்டியாட்கொண்டருளிய நாரதமுனிவரைப் பணிந்து, தன் னேயைப் போக்கியருள அத் தீர்த்தத்தையுங் தந்தித்து, நிர்மல சொரூபத்தையடைந்தான் அவ்வரசனுடனிருந்த மற்றையர்களும் ஸ்நானஞ்செய்து தெய்வரூபம் பெற்றார்கள் அரசன் மீளவுஞ் சிக் தாமணி விநாயகரைப் பூசித்துத் தன்சேனைகளோடும் விமானத்தி லேறித்தனது கவுண்டின்னிய நகரிற்சென்று தான் ஸ்நானஞ்செய் தபலனைத் தாய்தந்தைமுதலாயினோருக்குத தத தஞ்செய்தான். மற் றையசேனைகளும் அவ்வாறே தடாகங்கள் சுற்றதினாகட்குத்தத் தஞ்செய்தாகள் விநாயகமூர்த்தியினுடைய கிருவருளால்உடனே அவர்கட்கு வெவ்வேறு விமானங்கள்வந்தன பின்னர் வீமராசன் முதலாயினோர் அவ் விமானங்களைப பணிந்து, அவைகளி லேறிக் கொண்டு உருக்குமாங்கத ராசனிடும் விநாயகலோகத்திற்போய்ச்

.

உருக்குமாங்கதன் முதலியடைந்த படல முற்றிற்று

கிருச்சமத ருபதேசம்பெற்ற படலம்.

அருந்த வத்து வச்சுவா மித்திரரோ வீமனுறை லாகியாகத், திருந்தியமக னேமிமுத்தி சோந்திடுத லீருகத திகழாநின்ற, பொருந் துபல சரிதமுங்கேட் டணிசோம காந்தனிபிப புகலக்கேளாய், பெருந்த வத்துக் கிருச்சமத னுபாசனையென் றுரைசெய்வான் பிருகு மேலோன்

சவுனகர் முதலிய முனிவர்களே! விநாயகமூர்த்தியை உருக் குமாங்கதராசன் பூசித்துமுதலியடைந்த திறத்தினைச்சொன்னேம். இப்பால் கிருச்சமதமுனிவர் உபாசித்த வரலாற்றினைச சொல்லு வோங் கேட்பீராக முன்னர் முருகுதையிட்டசாபதோடு உருக்கு மாங்கதராசன் அவ்விடம் விட்டு நீங்கியபின்னர் அம்முருகுதைக்கு விரகதாபமேலிட்டு அவ்வரசனையே நினைந்து நினைந்து அனலிற் பட்ட மெழுகையொத்தவளாகியுள்ளங்கரைந்து, உடல்நெகிழ்ந்து, சாமாக்கினியைச் சகிக்கமாட்டாது நந்தவனங்களிற்சென்று உலா வுவாள்; குளிர்ந்த தடாகங்கள் செய்கின்ற மான்கூட்டங்களைக்கண் டாடுவாள், வேய்ங்குழலோசையைக்கேட்டு வெகுவாள்; மந்தமா

ருதம்வீச நடுநடுங்கித் தென்றலே! நீ தீயோடு கலந்துவந்த காரண மென்னனென்று கோபிப்பாள்; பசுவின்கழுத்தி லசைகின்ற மணி யோசையைக்கேட்டு ஐயோ! என்னுயிர் சிந்துகின்றதே ஈதென்ன காலன்வருகின்ற ஓசைதானேவென்று கலங்குவாள்; கடலோசை யைக்கேட்டு, பயோதநீயே! பிறர்க்குத்தீமை செய்கின்ற சிறியர்க ளைப்போல என்னைவருத்துகின்ற ஆபத்குழலோசையோடு நீயுமெ னக்குப் பெருந்துன்பத்தை மூட்டுகின்றனையே இஃதுனக்குமுறை தானே? உன்ணண்மையை யறிக்கவல்ல குறுமுனிவர் குன்றிலிருப் பதை யறிந்திலையோவென்று குழறுவாள்; ஓர்வட்டமாகிய பலகை யின்மீது உருக்குமாங்கதராசன் உருவத்தையெல்லாம் வரைக்து தன்காங்களிற்கொண்டணைவாள்; இரண்டுதனங்களையு மதன்மீது பொருந்தமுயங்குவாள்; முகத்தோடு முகத்தை வைத்து முத்தமி டுவாள்; மீளவும் வருந்தி மாலையைப்போலத் துவளுவாள்; இனி யென்ன செய்வேனென்று மெலிந்து பெருமூச்சு விடுவாள்; பூஞ் சோலையிலுள்ள தளிர்களெல்லாந் தன் சரீர வெம்மையாற் றீய்ந்து மேல் விழுவதினால் அவைகள்பட்ட விடமெங்கும் கொப்புளங்கொ ண்டு தன்னிருவிழிகளி னின்றும், நீரைச் சொரிவாள்; சரீரவெம் மையைச் சகிக்கமாட்டாது விழுந்ததுபோல் மேகமே யொதுங்கும் படியாகவீழ்வாள்; இவ்வித அலங்கோலத்துடன் முருகுந்தை யான வள் தன்னுயிரை சொலலுதற்கரிய பெருந்துன்பத்தின் மூழ்கி வலி குறைந்து அறிவிழந்து நிலைதடுமாறி முடியைச் சாய்த்துச் சோர்வுற் றுத் தன்வசமற்றவளாகி இருந்தனள் இவையணைத்தையுந் தேவே ந்திரன் அறிந்து தானவசேசர வெண்ணினவனுகி அடியிற்பாத க்காப்பும், கணைக்காலில் வீரகண்டாமணியும், விரலிற் கவசமும், கரத்தில் நாணேற்றி யிருக்கின்ற விலலும், மார்பில் மலர்மாலையும், தோளில்அம்புபெய் தூணியுமுடையவனுப்ப் பொற்சரடாற் கட்ட ப்பட்டிருக்கின்ற மயிர்முடியோடு மன்மதசரங்களான முருண்டிருக் கின்ற குமுக்தையினது கொங்கையி லணியப்பட்ட கச்சும் அவள து நெஞ்சமும் கழலும்படியாக உருக்குமாங்கத ராசனேயென்று சொல்லும்படி அவன்சரீரத்துள்ள கோலத்தையெல்லாங்கொண்டு பொருக்கென்றெழுந்து அவளருகிற் சென்றான். அவனைக்கண்டவு டனே முருகுந்தையானவள் மனமகிழ்ந்து முன்னர்த் தடுத்துச்சென் ற உருக்குமாங்கதனே மீட்டும் வந்தானென்று கருதித்தானும் பொ ருக்கென்றெழுந்தாள். உடனே வஞ்சவடிவனுகிய தேவேந்திரன் மனங்களித்து அவளோடு சுயவார்த்தைகளைப்பேசித் தனது மார்பி

லணிந்திருக்கின்ற சந்தனமெல்லாம் அவளிரண்டு தனங்களாற் கலி
யும்படியாகத்தழுவி அடிக்கடியவளது செவ்வித்தழுவலி யுண்டு பல
வித சுரதகலீலை நடாததிவருகின்றசமயத்தில் முகுந்தையென்ப
வள் தன்னறிவுமயங்கி அவன்மாயிற்றனத கொங்கைச் சுவடுபொ
ருந்தும்படியாக வணைதலதேதகபரவசங்கொண்டு காமவாரியைக்
கரைகாணமாட்டாதவளாய் யானுனசகு என்ன கைம்மாறுசெய்ய
வல்லேனென்று பலமுறையவணைப புகழ்ந்து சரசசலலாபமாய்க்
கலந்தனள் தேதீவகுதிரன் அவளன்றிறகு மனபபூரிபபடைந்து நக
க்குறி பற்குறி தம்பனம் சமபனம முதலிய பலலீலைகளை மாறிமாறி
நடாத்தி, அவள்மிடற்றிலெண்வகை புடகுர லோசைகளையுமுண்
டாக்கி, மன்மதனபொழிகின்ற பாணவருஷபகளை மடகி, அவன்
கருப்பு விலலியு மொடிதது, இனனுமவளோடு போரசெய்யாதவ
ண்ணம் அவனைத துரததிவிடடான பினனா முகுநதையானவள்
தனதெண்ணதினபடி நிறைவேறிய கலவிகது மனமகிழ்நது கண
வராகிய கவிமுனிவருகபு பழைபபடி எவலசெயயசென்றனள்.
இநதிரனுக தனது பொயம்வடதைதபபோகசி சுவாகலோகத்
தைச் சோநதனன

உடனே முகுநதையிற்றிற ருவுண்டாகிக கருங்கடலுச்சி
யி லுதயமாகின்ற சூரியனபோல அணடஙகளெலலாம நடுங்கும்
படியாணபோரொலி யெழுபபியிடும ஒருபுதிரன பிறநதனன். அப்புதிர
னைக் கவிமுனிவனாகண்டு மனமகிழசியடைநது இநதிரனுக்குப்பிற
ந்த புதிரனென் றறியாமல தமதுகரததிலெநதிக தேவாகட்கெல்
லாம் அவிர்ப்பாக முதலியவைகளைகொடுதது சாதகருமாதிகளை
யுஞ் சிறப்பெய்த நடாததினா இபபால அபபுதலவனுகுதயிலா
திகளைத நிமிரநது, பரிமளமிகுந்த கலதூரிமஞ்சள் முதலியவைக
ளாற் புனலாட்டி, அகிலசநதனபபுகைகளையூட்டி, இரதினபரண
ங்களைப்பூட்டி, நுதலிற் றிலதநீட்டி, மூலைப்பாலூட்டிப் பெண்
கள் கிரீடியான முகுகதையானவள் சகல செலவதுடன் போற்றி
வருகின்ற நாளையில கவிமுனிவர் அப்புதலவன்றெந்த பன்னிரண்
டாநாள் கிருச்சமதரென்னு நாமகரணந்தரிதது, ஆருவதுவயதில்
உபநயனச் சடங்கினை முடிதது, வேதாகமாதிகளையுநகற்பித்தனர்.
அவ்வாறே கிருச்சமதா சகல வித்தைகளையுந்தந்தைபாறறெளிந்து
ஒருகாற் சொன்னவுடன் ஒருங்குணரு முத்தியினராகி, வீணெ
ன்னும விருக்கத்தைவேருடன் கெல்லவல்ல வெற்றிப்படைக்கொப்
பாகி யிருந்தனர். பின்னர்க் கவிமுனிவரானவர் அப்புதல்வன் ஒழு

க்கமுதலிய நன்னெறிகளிற் பிறழாதிருக்கின்ற பெற்றியினைக்கண்டு மிக்கமனமகிழ்ச்சி யடைந்து, கணஞாதுவாவென்னு மந்திரத்தை யுபதேசித்துக் குழந்தாய்! இம்மனுவை யனுட்டிப்போடு செபித்து வருவையாயின் உனக்குக் கணேசமூர்த்தியினுடைய திருவருளு டாருமென்றுசொன்னர் கிருச்சமதரும் மனமகிழ்ந்து பிரதினம் நித்திய நியமாதிகளைமுடித்து விநாயகக்கடவுளை மனதிற்றியானித் து அம்மந்திரத்தை யன்போடு செபித்துச் சாபாதுக்கிரகசாமர்த் தியராகிச் சகப்பிரசித்தியாய் விளங்கி யிருக்கின்ற காளியில், மகத நாட்டிற் சகலருக்குந் தாய்க்கொப்பானவளுகியும், கொடையிற் கொண்டலே வென்றவளுகியு மிருக்கின்ற சூரனென்னும் பெயரினை யுடைய ஓர் அரசனிருந்தான் அவ்வரசனைவன் தனக்கு உடலு முயிரும்போலிருந்து வழிபடத்தக்க அம்பிகையென்னுமனிவியோ டும் பிரகற்பதி தேவனுஞ சுக்கிர பகவானுங் கண்டு நாணத்தக்க யுத்தியினையுடைய அமைச்சர்களோடு மிருந்து அரசாட்சி செய்து வருங்காலத்தில் அவ்வரசனுடைய பிதாவுக்குச் சிராத்ததினம்வர, அதைக்குறித்தவைகிட்டர் அத்திரிமுதலான முனிவர்களைவரவழை த்தான். அம்முனிவர்களோடு கிருச்சமத முனிவருஞ்சென்றார்

பின்னர் அம்முனிவர் கூட்டத்துள் அத்திரி முனிவருக்குங் கிருச்சமதமுனிவருக்குங் கலைஞானப் பிரசங்கங்களில் ஒருவர்க் கொருவர் விவாதம் நேரிட்டுப போர்செய்வாராயினர், அவருள்கிரு ச்சமதமுனிவரை அத்திரிமுனிவர் வெல்லமாட்டா திளைத்துக்கொ ல்லத்தக்க கோபத்தோடு கெருப்பெழுந்து பறக்கும்படியாகக்கண் களை கெரித்துக் கிருச்சமத முனிவரைப் பார்த்து, நீ மகாயோக்கி யனைப்போற் பேசுகின்றாய் உன் பிறப்பையும் பெருமையையும் நெருப்பிற் கொண்டுபோய்ச்சுடு. எங்களைப்போல நீயுமோர் முனி புத்திரனுகி வாதாடவந்தாய் நீ உருக்குமாங்கத ராசனுக்குப்பிறந் தகதை யொருவருகுந் தெரியாததோ? நீ இச்சபையி லிருக்கத் தகாது. உனக்கு எங்களோடு சேர்ந்துச் சரியானமரியாதையுடன் கக்கூடாது. இங்கிடத்தைவிட்டு வெளியிற் செல்லக்கடவையென் று கையால் மறித்து மறித்துச் சொல்லுகின்றதைக் கிருச்சமதமு னிவர் கேட்டு மிகுந்த கோபங்கொண்டு, கண்சிவந்து, இதழ்துடித் துப் புருவநெரித்து, அங்கிருப்போரெல்லாம் அஞ்சி நடுங்கும்படி யாகத் திரிலோகத்தையு மெரிப்பார்போலக் கொதித்தெழுந்து, வசிட்டர் முதலான முனிவர் கூட்டங்களுக் கெதிராக நின்று மன் னனே சரியாகப் பிரசங்கித்து வெல்வதற்குச் சத்தியற்ற அவமான

த்தால் என்னை உருக்குமாங்கதராசன் புத்திரனென்று அவமதிப் பாகப் பேசினீர்கள். யான் தவகிரேஷ்டராகிய கவிமுனிவருடைய புத்திரனே யானுல் இச்சபையிற் கூடியிருக்கின்ற உங்களையெல் ...ம் இமைப்பொழுதிற் சாம்பராக்கித் தேவர்களெல்லாங் கொண் ...டத்தக்க புகழை யடையக்கடவேனென்று சொல்லி, அவ்விடத் தினின்றுந் தனிச்சென்றகன்று, அதிகவேகத்துடன் சென்று தணி யாத கோபத்தோடுந் தன் தாயாகிய முருந்தையை யடுத்து, ஏ மங்காய்! என்முன்னர்வா; என் தந்தையாரி நடந்தகாரியத்தை எனக்குள்ளபடி சொல்லக்கடவையென்றார் உடனே முருந்தையா னவள் நடுநடுங்கி, மகனே! யானுன்னிட்டப்படி நடந்த உண்மை யைச் சொல்லுகிறேன் நீ அவசியப்படாமற்கேள் ஓர்காள் உருக்கு மாங்கதராசன் மிருகவேட்டையாடி வருகையில் மிக்கதாகத்தோ டும் இருவன் தென்னைத் தண்ணீர் கேட்டான் இவ்வுலக மெங்க ணும் காணற்கரிய அவன் பிரமரூபா பான்கண்டவுடன் என்மனமு ருகியது பெண்பிள்ளைகட்கு விரகமுண்டானபோது தங்களிச்சை யின் வண்ணம் நடந்துகொள்ளும்படி சாஸ்திரங்களில் விதித்திருக் கின்றமையால் அவனுடன் கூடியுன்னைப் பெற்றேன் இதுவே நட ந்த உண்மையென்று சொல்லலும், தவத்திலே மலிக்கோபாக்னி யாகிய கிருச்சமத முனிவர் முன்னரடைந்த கோபாக்கினியின்மீது மற்றொரு கோபாக்கினியைச சொரிந்ததுபோல மனம்வெந்து நீ வனத்திலே பறவைகளுண்ணுத இலந்தை மரமாகக் கடவையென் றுசபித்தனர். பின்ன ரொடுங்கின்ற முருந்தையானவள் தன்னை ச் சபித்த புத்திரனைப் பார்த்து, நீ சகல சாஸ்திரஉகளினும் வல்ல வனுகியிருந்தும் பெற்ற தாயென்று சற்றுங் கருதாமல் என்னை நடு ங்கச்செய்தாய். ஆதலால் இனி உனதுமனமும நடுங்கும்படியாகக் கொடிய குணத்தோடும் ஓர் புத்திரன் உனக்குண்டாகக் கடவதென் றுசபித்து, உடனே காட்டினிடத்தேயிலந்தைமரமாய்நின்றுள்.

இப்பால் கிருச்சமத முனிவர் இராசபுத்திரனென்பதைக்குறி த்து மனம் வெட்கி இவ்விதஅவமானத்துடன் உயிரை வைத்தி ருப்பதைவிட இச்சரீரத்தை யொடுக்கி மாய்வதே நன்மையென் றெண்ணமூற் நிருக்கையில், அவர் மனங் குளிரும்படியாக "நீ தேவேந்திரனுடைய புத்திரன்" என்று ஒரு அசரீரி வாக்கு ஆகா [illegible] அவ்வாக்கினைக் கிருச்சமத முனிவர் கேட்டுத் தெளிதலைப் சிறிது தேற்றஞ்செய்து, முன்னர் கப்பை யடை

மானஞ்செய்த முனிவராதியர் இப்போது நம்மை வணங்கத்தக்க வரங்களைப் பெறறு வருவோமென் றெண்ணமுற்று, அவ்வனத்தை விட்டு நீங்கி மற்றொரு வனத்தை யடைந்தனர்.

கிருச்சமத ருபதேசம் பெற்ற படல முற்றிற்று.

கிருச்சமதர்வரம்பெறுபடலம்.

எந்தை யைங்கரற் கினியமந் திரவுப தேசந்
தந்தை தந்திட முருந்தைதன் மகன்பெற்ற துரைத்தா
மந்த மெய்த்தவன் வரம்பெற லறிகெனப் பிருகு
சுந்த ரம்பெறு சோமகாக் கனுக்குரை தொகுப்பான்.

சோமசாந்தனே! அதில் மல்லிகை, முல்லை முதலிய பலபுட்பக் கொடிகளாற் பந்தலிடப்பட்டிருக்கின்ற பொழிலையும், தாமரை அல்லி நீலோற்பல முதலிய பலபுட்ப வருக்கங்களணிந்த தடாகங் களையுங்கண்டு, வேதவேதாசைகளோடு பல வேள்விகளை நடாத்து கின்ற முனிவர் கூட்டங்களையும் கிரீடாதிபதிகளாகிய தேவர் சமூ கங்களையு மடைந்து நிற்கதண்டன் செய்தனர் அவர்கள் இக்கி ருச்சமத முனிவருடைய கல்வரவு கேட்டு இங்ஙன மிருமென்று கட்டளையிட, அதற்கவர் மனமகிழ்ந்து அவ்வனத்தில் ஓர்பக்கத்தி லிருந்து வலத்தாட் பெருவிரலி லிலத்திலூன்றி ஐம்புலனங்களையு மடக்கிக் கூர்மசமூர்த்தியினுடைய திருவுருவத்தை மனதிற் றியா னித்துத் தமது தந்தை யுபதேசித்த மந்திரத்தைச்செபித்து, தேவ வருடத்தில ஆயிரம்வருடதிற் கொருகால் கண்களை விழித்து மீள வுமூடிக்கொளளுவா இவ்வாறு பதினாயிரம் வருடம் வரையிற் றவஞ்செய்தலும் அந்தத தவாக்கினியானது திரிலோகத்தினுஞ் சென்று சகலரையுந் தீய்த்துவருத்தியது. பின்னர் மனவாக்குக் காயங்களா லெட்டுதற்கரிய பேரொளியாகியும் பரிபூரணமாகியும் யானெனதென்னும் போதத்தை யொழித்த மெய்ஞ்ஞானிய ருள் ளத்தில் எக்காலத்தும் பிரியாவிடையாயிருக்கின்ற விசாயகமூர்த்தி யானவர் கோடி சூரியோதயத்திற் கொப்பான காந்தியுடைய திரு மேனியும், தாமரைப்பூ மாலிகையைத் தரித்திருக்கின்ற மார்பும் பரிமளமிருந்த குங்குமம் கர்ப்பூர முதலியவைகளைச் சேர்த்துப் பனிநீர்விட்டரைத்த சந்தனம் பூசியிருக்கின்ற பத்துப்புயங்களும், இடைவிடாது அசைகின்ற செவிகளும், மதம்பொழிகின்ற முகமு

வதனமும், இளம் பிறையைபொத்த ஒற்றைக்கோடும்விளங்க இரு மருங்கினுஞ் சித்திபுத்திகள் வாசஞ்செய்யுங் கிருக் கோலத்தோடு வெள்ளைநிறமுள்ள சிங்கவாகன மூர்த்து, சந்திரனெளி யெல்லாஞ் சூரியனெளியில் மாய்வதுபோலக் கிருச்சமதருடைய தவாக்கினி யொளியெல்லாந் தமது திருமேனி யொளியின் மழுங்கும் படியாக அவரெதிரிற் பிரத்தியட்ச மாயினர். உடனே கிருச்சமத முனிவர் கண்டு மிரண்டு சுவாமியினுடைய பேரொளியாற் குருமேனியெழில் தோற்றுமற் கண்கூசி, மதிமயங்கி,நமது தவத்திறகு ஈதேதோ ஒரு விக்கினம் வந்ததென்றெண்ணி விகாயக மூர்த்தியை மனதிற் றியா னித்து சுவாமி? இவ்விக்கினத்தை விலக்கி அடியேன்றவ மீடேறும் படி யனுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார் முக்கண் கூ ம்படி எழுந்தருளிய கணேசமூர்த்தியானவர் அதற்குக் கருணைகூர் ந்து ஞானமென்னும் அகக்கண்ணை யளித்தருளினர். பின்னர்க் கவ லேயுற்றிருந்த கிருச்சமத முனிவர் மனமகிழ்ந்து மிக்கபயபத்தியோ டுமெழுந்து சுவாமியைக் கண்குளிரப் பார்த்துச் சாஷ்டாங்கமாக வணங்கி, விகாயகக்கடவுளே நம்மீது கிருபைசுரந்து வேதங்களுங் காணுதற்கரிய தமது திருமேனியோடு மெழுந்தருளின ரென்று தேர்ந்து உள்ளமுருகி, ஆனந்தக் கண்ணீர் சொரிந்து துதிப்பா ராயினர்.

நித்தியமாய் நின்மலமாய் நிர்க்குணமாய் நீடொளியாய்த்
தத்துவமாய்த் தத்துவத்துக் கப்பாலா யப்பா லு
மத்துவித மான வரும்பொருளே நீயடியேன்
சித்த முவப்பத் திருக்காட்சி தந்தணையே.

தண்ணார் மதியந் தயங்குஞ் சடாதாரி
யுண்ணஞ் சமுதே யுலவாச் சுகக்கடலே
விண்ணோ றறியாத வித்தகா நீயடியேன்
கண்ணாரக் காணுமா காட்சி கொடுத்தணையே.

ஆக்காமே யாக்கி யளியா தளித்தவையும்
போக்காமே போக்கிமலம் பொன்றுவித்து மென்றனுக்
தாக்காது நின்ற தனிமுதலே நீயடியேன்
வாக்காரக் கூறுமா வந்தெதிரே நின்றணையே.

இவ்வாறு தோத்திரஞ்செய்த கிருச்சமதமுனிவர்மீது கணேச மூர்த்தி கிருபாலோகம் பாலித்துச் சிரக்கம்பஞ் செய்து, அன்

பனே! உன் தவத்தை மெச்சினேனும் உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்பாயாக. அவைகளைத் தருகின்றேமென்று திருவாய் மலர்ந்தருளினர்.

காண்டல் கருதத் துரைவற்றுற் காணுயைக்
காண்டல் கருத துரையாலுங் கண்டேற்கு
வேண்டும் பொருளின்று முண்டே விமலாநீ
வேண்டுதே னும்மருளாத் தள்ளாது வேண்டுகேன்.

எண்பதது நான்குநூ றுயிரமா யியல்பிறப்பிற்
பண்புற்ற மானுடமாம் பவமரிது மானுடத்து
மெண்பெற்ற நால்வருணத் தியைந்திடு லரிதவற்று
ணண்புற்ற வந்தணராய் நண்ணுவது மரிதாமால்.

அந்தணரு ளறிவுடைய ராதலரி தறிவருளுஞ்
சிந்தைமகி முறுட்டானஞ் செய்குநரா குவதரிது
நிருதைமகி முறுட்டானஞ் செப்பவருட் டிரிவிதமாம்
பருதமறச் சிவஞானப் பயிறுடையா ரரியர்களே.

அத்தகைய சிவஞான மடிகடிரு வடியினுறும்
பத்தியினு வதையன்றிப பயில்வேள்வி தவந்தான
மெத்திரத்து முயற்சியினு மெய்துவதில் லாமையினால்
வித்தகனின் மலர்ப்பதத்தில் வீடாத வன்பருள்க.

எம்பெருமா னிதுதனக்கி லெழுந்தருளி யெஞ்ஞான்று
மும்பர்முத லீனோர்க்கு முவப்பவரம் வழங்கிடுக
நம்பியபுட் பகவனமும் புட்பகமா னகருமென
விம்பரினில் வனந்தனக்கு மிங்ஙகர்க்கும் பெயருறுக.

____னே கிருச்சுமத முனிவர் இருகரங்கூப்பி, சுவாமி! யாவர்க்குங் காண்டல் கருதல் உரை என்னு மிம்மூன்றளவைக்கும் அரிதாயிருக்கின்ற நீதவரீரை அடியேன் காணவுங் கருதவுந் துதிக்கவும் எளிதில் கிடைக்கப்பெற்றேன் இன்று மிதைவிட வேண்டத்தக்க தென்னவிருக்கின்றது. ஆயினும், சுவாமிகளே? அடியேனைக் கொள்ளுமாறு அருளிச்செய்தலால் இனி அடியேன் வேண்டத்தக்க நியாதெனில் எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களா யுள்ள பிறவிகளுள் மானுடப் பிறவி யரிது; அம்மானுடத்துள்ள நால் வகை வருணங்களிற் பிறத்தலிது தரிது; அந்நால்வகை வருணங்களுள் அந்தணராயுதித்தல் அரிது; அவ்வந்தணருள் அறிவுடையவ

ராகி யிருத்தலரிது; அவ்வறிவுடையோரினுஞ் சித்தி சுத்தி பெற்றி
ருத்தலரிது; அச் சித்தசுத்தி யுடையோரில் பொன், மண், பெண்
என்கின்ற மூவாசைகளையு மொழித்துச் சிவஞானசித்தியைப் பெற்
றிருப்பதரிது; அத்தன்மைத்தான சித்தியானது தேவரீர் திருவடி
களிற் செய்கின்ற நிரந்தர பத்தியால் வரவேண்டுவதல்லது வேள்வி,
தவம், தானமாகிய எவ்வகைத் திறத்தினாலும் மற்றெவ்வகை முயற்
சியாலும் வருவதன்று ஆதலால் தேவரீர் திருவடிகளில் அடியேற்
குமாறுத பத்தியை யருளல்வேண்டும். இத்தலத்தில் எக்காலத்துந்
தேவரீ ரெழுந்தருளியது தேவர்கள்முதலிய யாவர்கட்கும் அவ்வ
வர்கள் கருதிய வரங்களை யளித்த நாளல்வேண்டும். இவ்வனத்திற்கும்
புட்பக வனமென்றும், இக்நகரத்திற்கும் புட்பக நகரமென்றும்
பெயருண்டாகவேண்டும்.

இவைக ளனறியும் அடியேனைத் தேவர்கள் - முனிவர்கள் - சித்
தர்கள் - தைத்தியர்கள் - அரக்கர்கள் முதலான யாவர்களும் வழி
பட்டு அடியே ஞணையைக் கடவாமல் நடத்து கொள்ளும்படியான
வரமுங் கொடுத்தருளவேண்டுமென்றார். அதற்குக் கணேசமூர்த்தி
கருணைபுரிந்து அன்பனே? இந்நகரமானது இக்கிரேதயுகத்திற்புட்
பக நகரமென்றும், திரேதயுகத்தில் மவுபூரக நகரமென்றும், துவா
பரயுகத்தில் பானக நகரமென்றும், கலியுகத்தில் பத்திரிக நகர
மென்றும், பெயர்பெற்றிருக்கும் நீ கருதிய மற்ற வரங்களு முனக்
களித்தேனும் இனி நமதநுக்கிரத்தால் நினக்கொருவர் நிகரில்லாத
பூரணிகாம சாலியாகிச் சிவபிரான் தவிர மற்ற யாவராலு மழியாத
வரதணையுடையவனகியும் நமது திருவடிகட்கன்பனகியு மிராநின்ற
ஒருபுத்திர ஞனக்குண்டாவான். உனக்கு மூவுலகதரரும் புகழத்
தக்க கீர்த்திபுண்டாகும். இன்னுமுனகரு வேண்டுங் காரியங்கள்
கைகூடவெனறு நம்மை முன்னராகப் பூசித்து அவைகளைப் பெறக்
ருகாரிபத்தைச் சித்தி பெறக் கருதுகின்றவர்கள்
முதலில் நம்மைச் சருகிப் பூசிப்பார்களாயின் உடனே அவர்கள்
தீவினைகளினின்று நீங்கி அதனையெளிதில் அடைவார்கள். நம்மைத்
தொழாதபோக்கரு எல்லாவிடையூறுகளும் பொல்லாவினைகளுமு
ண்டாகுமென் றருளிச்செய்து தமது திருவுருவைக் கரக்தருளினர்.

இப்பால் கிருச்சமத முனிவர் அவ்விடத்திலோ ராலயஞ்சமை
த்து அதில் விநாயக மூர்த்தியைப் பிரதிட்டைசெய்து அம்மூர்த்
திக்கு வரதகணபதியென்னும் திருநாமம் தரித்து ஓர் தீர்த்த முண்

டாக்கி, அத்தீர்த்தத்தால் அவ்வரதகணபதிக்குத்திருமஞ்சனமாட்டிச் சதாகாலமும் பூசனைசெய்துகொண்டிருந்தார். கணேச மூர்த்திக்கு அபிடேகித்ததினால் அத்தீர்த்தத்திற்குக் கணேச தீர்த்தமென்னும் பெயருண்டாயது அந்நகரங் கணேசமூர்த்தியினுடைய திருபாபை விளங்கியதாற் கணேச நகரமென்றும், யாவர்க்கும் பல சித்திகளை தருவதால் சித்திநகரமென்றும் பெயர் பெற்றது. இஃதன்றியும் அளவற்ற சித்தர்கள் முனிவர்கள் தேவர்கள் முதலாயினோர் அச்சித்திநகரத்தை யடைந்து அங்கெழுந்தருளியிருக்கின்ற சித்தி விநாயகரைத் தரிசித்து அவ்வவர்கள் இஷ்ட காமியார்த்தங்களைப் பெற்றிருக்கின்றார்கள் என்று பிருது முனிவர் சோமகாந்தனுக்கு சொற்றனரென்ன சூதர் கூறினர்

கிருச்சமதர் வரம்பெறு படல முற்றிற்று

திரிபுரன் வரம்பெறு படலம்.

சோம காந்தனே தூத்தகு கவிமகன் பெற்ற
சேம வான்வர மறிந்தனை யினியவன் சிறுவன்
வாம மாரொரு மருப்பினன் மந்திரங் கணித்த
தேம மார்தர வறியெனன் றியம்புவன் பிருகு.

பிருகுமுனிவர் அதிக மகிழ்வுடன் விநாயகரைத் சொல்கின்றார் சோமகாந்தனே! விநாயக மூர்த்தியைக் கிருச்சமத முனிவ ருபாசித்துப் பல வரங்களைப் பெற்ற பேற்றினைச் சொன்னேம். இப்பால் திரிபுரனுபாசித்த திறத்தினைச் சொல்லுவோங் கேட்பாயாக. கணேசமூர்த்தி கொடுத்தருளிய வரத்தினைக் கிருச்சமத முனிவர் சகல முனிவர்களுந் தேவர்களுந் தம்மைத் தொழுதெழுந்து ஏவல் செய்யத்தக்க மாட்சிமையோடு யாகாதிகட்கெல்லாம் உபாத்தியாயராகித் தினந்தோறும் வரத கணபதியைப் பூசனைசெய்து தமது தாதையா லுபதேசிக்கப்பெற்ற மந்திரத்தை இடைவிடாது செபித்துப் பஞ்சேந்திரியங்களையு மடக்கித் தவஞ் செய்துவருகின்ற நாளையில், ஒருநாள் நெடுநேரம் யோகத்திலிருந்து கண்களை விழித்துப்பார்த்தனர். அந்த வேகமுள்ள பார்வையினின்றுஞ் சுவர்க்கமத்திய பாதல முதலிய சகலலோகங்களு நடுங்கும்படியாகப் பிரளயகாலத்தி லுண்டாகின்ற இடியைப்போல வார்ப்பரித்து

பராக்கிரமத்தோடு முன்னர் விகாயகமூர்த்தி தந்தருளியிருக்கின்ற வரத்தின்படி பலியென்னும் பெயரினையுடைய ஓரவுண னுதித்தனன். அவன் சிவந்த நிறமும் மிகுந்த அழகும், ஒளிவீசுகின்ற கிரீடமும், நவரத்தின குண்டலமும், புயகவசமும், அரை ஞாணும் இன்னுமிவை முதலான அளவற்ற அலங்காரக்களோடு சூரியகாந்தியுமமூங்கத்தக்க பிரகாசத்தினையுடையவனுயிருப்பதைத் தவசிரேட்டராகிய கிருச்சமத முனிவர் கண்டு நடுநடுங்கிப் பயந்து, இவன் யாவனென்று மயங்கி மீளவுங் கணிசமுத்தியினுடைய பெருங் கருணையால் நமக்குப் புதல்வனுக வந்தவனென்று தெளிந்து அவனைப்பார்த்து அப்பா? நீயார் எங்கிருந்து வந்தனையென்றுவினவினர்.

பாவ னிவனென் றலமக்தே யிறைவ னருளால் வருமைந்த
னுவ னெனப்பின் தெளிந்துமுனி யார்நீ யென்னப் பலிசொல்வான்
மேவு தவத்தே யறியாமை வியப்பிற் றோன்றி விரிபார்த்த
வோவில் பார்வை யிடையுதித்தே னுனக்கு மகனு னேனப்பா.

அன்னை நீயே பிதாநீயே யனைத்து நீயே யெனைசிலநாண்
மன்ன வளர்ப்பின் யான்மும்மை வையமொருங்கு தாட்படுப்பேன்
பின்ன றறிதி யென்வலியை யென்றுபேசப் பெருமுனிவன்
றன்னு ணடுங்கி யதுமறைத்துத் தனயற் கிதனைச் சாற்றுவான்

அதற்கு அப்பலி யென்பவன் சொல்லுவான். அண்ணலே! தாங்களெனனை இன்னவனென் றறியாதிருப்பது மிகவும் ஆச்சரியமாகவிருக்கின்றது. தேவரீர் விழித்தருளிய பார்வையின் மகிமையாலலவோ யானுண்டாயினேன் யான் தேவரீர் புத்திரன். எனக்குத் தாய் தந்தை முதலிய யாவருந் தேவரீரேயாதும் எனனைச் சில நாள் வயிற்றிற் பாதுகாத்துவிடலவேண்டும் பின்னர் இம்மூவுலகங்களையும் வென்று சயங்கொள்ளுவேன். அப்போ தெனது பராக்கிரமங்களை யெல்லாந் தேவரீரே அறியப்போகிறீரென்று சொன்னன். அவையனைத்தையுங் கிருச்சமத முனிவர் கேட்டு நடுக்க முற்று இதனை வெளியிட லாகாதென்று தம்முள் மறைத்துக்கொண்டு அவனைப் பார்த்துச் சொல்லுவார்.

ஆதி யத்த நடுவின்றி யகண்டா காரமாயொன்றுஞ்
சோதி யான விகாயகர்தந் தொன்மை மனுவா னெஞ்ஞான்று
நீதி யாகக் கணித்துவரு நிகரி லதனை யுரைசெய்கேன்
மீதி லாது கணியுனக்குச் சித்தி யனைத்தும் வருமென்று,

தந்தை தானே மகனுக்குச் சாரு மென்னு முறையானு
மெந்தை பெருமா னருள்செய்த வியல்பி னனுங் கிருச்சமதன்
மைந்தன் றனக்குக் கணனந்து வாவென் மனுவை யுபதேசித் [ன்.
தந்தண்மறை நால்விதியானேயனுட்டிப்பினித்தும் புகன்றெழித்தா

மைந்தனே! ஆதிமத்தியாந்தரகிதமாகியும், அகண்டாகாரவஸ்துவாயுமிருந்து எங்குந்தானு விளங்குகின்ற சோதி சொரூபராகிய விநாயக மூர்த்தியினுடைய மந்திரத்தை யுனக்குபதேசிக்கின் றேம் அந்தப் புராதன மந்திரத்தைச் செபித்து வருவையாயின் உனக்குச் சகல சித்திகளுங் கைகூடுமென்றுரைத்து, கணனந்துவா வென்னு மந்திரத்தை ஆகம விதிப்படி உபதேசித்து அதை யநுட்டிக்கு முறைமையையுஞ் சொன்னர்.

இப்பால் பலியெனபவன் பேருவகையில்மூழ்கினவனுக்குக் கிருச்சமத முனிவருடைய திருவடிகளைப் பணிந்து துதிசெய்து, அவ்வனத்திற்றானே மற்றொருபுறத்திலிருந்து அவரைப்போலவே தானு மொருகாலிலநிற்றலுன்றிப் பஞ்சேந்திரியங்களையுமொருவழிபடுத்திச் சுழுமுனை, இடை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிங்குவை, அலம்புடை, புருடன், குரு, சங்கினி *என்னுந் தசநாடிகட்கும் உற்பத்தி ஸ்தானமாகிய மூலாதாரத்தினின்றுந் தேகமத்தியமாகிய இதய கமலத்தில் பிருதிவி தத்துவமுதல் நாதாந்தத்துவ மீறாக ஓராதனங்கற்பித்து, அவ்வாதனத்தில் பிராதிமையான கணேச சொரூபத்தைப் பிரதிட்டைசெய்து, அந்தச சொரூபத்தில் விநாயக மூர்த்தியை ஆவாகனஞ்செய்து, அம்மூர்த்திக்கு அருளென்னுந் திருமஞ்சனத்தையாட்டி, சாந்தமென்னுஞ் சந்தனத்தைச்சாத்தி, ஞானம், மோனம தவம-தருமம, மனவொருகம-கலவி, பேரளவி எனகின்ற அட்டபுட்பங்களைக் கொண்டருச்சித்தது, அன்னமயம் பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் † ஆனந்தமயம் என்கின்ற பஞ்சவிதான்ன

* அவையாவன சுழுமுனை-ஆதாரமாறினு மூடுருவி நிற்பது இடைபிங கலை இரண்டுங் கத்திரிக் கால்போற் பின்னி நிற்பன. காந்தாரி - காபியிற் றோன்றிச் சத்த மேழுக்கு மேழு காடியாய்க் கண்டத்துறுவது. அத்தி சிங்குவை - இரண்டும் பத்துகாடியுற்றுக் கண்ணினிற்பன அலம்பணை புருடன்-இரண்டுஞ் செவியினூற்றிருபது காம்புற்றிருப்பன. குரு-சுரபியுறைத்து குய்யம்பற்றி நிற்பது சங்கினி உபத்தத்தைப் பற்றியிருப்பது.

† அவையாவன:—உடல் அன்னமயம். கருமேந்திரியமும் பிராணனும் பிராணமயம் கருமேந்திரியமும் மனமும் மனமயம். ஞானேந்திரியமும், புத்தியும அஞ்ஞானமயம். அவித்தை யானந்தமயம். இவையே பஞ்சகோசம்.

களையும் நிலைதித்து, அகங்கார மென்கின்ற தூபங்கொடுத்து, அபிமானமென்கின்ற தீபங்காட்டி, †சிற்சத்தி-பராசத்தி - இச்சாசத்தி-ஞானசத்தி-கிரியாசத்தி யென்னும் பஞ்சாலாத்திதீபங்காட்டி, ஆன்மசொரூபமாகிய ஒப்பில்லா மாலையைச் சாத்தி, ஆன்மாவானது விகாயகப்பெருமானுடைய மேலானபரிபூரணஞானப்பிரகாசத்தை விகாயகப் பிரசாதமாகிய திருவருளால்அறிந்து அங்கிலியில் அழுந்துவதாகிய ‡ ஆவாகனத்தையு மெய்யவற்றையுஞ்செய்து விகாயக விபாபகம் ஆன்மாவில் விளக்குதல் காரணமாகச் செய்யப்படும் பிரதக்கிணத்தையும், தற்போதமென்னும் அதிகாரத்தை கடாத்தும் பிரமவிட்ணுக்களாலே சூக்குமஞானக் கிரியைகளை நீங்கிப் பரமபதியாகிய விகாயகக்கடவுளது அடிமையாகின்று அவருடன் அத்துவிதமுற்றுநிற்றலிலே நிறுப்பதாகிய நமஸ்காரத்தையும் அந்தர் முகத்திற்செய்து, கேவல சகலவாதனைகளையும், அவைநீங்க விளங்கும் அகம்பிரம ஞானத்தினாலே பொருந்தாமல் பரமசாஞ்சாரிய மூர்த்திகளது அநுகூலஞானத்திலே தற்பூரணமெல்லாம் அடங்கப்பெற்று, தற்செய்தி பெல்லாம் அவரது அநுகூலஞானசத்தியின் செய்தியாய் அரிதற்கரிய பரமானந்தத்தை யெய்விடத்துங் கண்டதிருவிளையாடலை விகாயகதரிசனஞ்செய்து தவதையையற்றினன். இவ்வாவாகனம்பலியென்பவன் பதினேயாயிரவருடந் தவஞ்செய்தலேக் கண்டு இன்னும் விகாயகபெருமான் பிரசாதத்தைக்கூர்ந்து, அவனுக் கருள்செய்யுமாறு உதையகாலசூரியாக்கோடிதரணங்களாக ஒருங்குகூடியுதயஞ்செய்தாற்போலத்தோன்றியருளினர் சூரியசந்திரர்களொளியு மழுங்க விரேகழலே யணிந்த அழகிய திருவடிக்கமலத்தையுடைய விகாயகக்கடவுளது ஒளியைக்காணுகின்ற திருமேனியினின்றுந்தோன்றிப் பரக்கின்ற சோதிக்குப் பயப்படாதவனுப், அக்கினி மிகுத்துக் காய்ந்கொடிய தவத்தையுடைய பலியென்பவன் பார்த்தான். வலியஅழகிய நான்கு திருப்புயங்களும், செந்தாமரையும், சூலாயுதமும், மழுப்படையும், மேலதகமுங் கொண்டநான்கு திருக்கைகளுமுள்ள கணேசமூர்த்தியின் திருவுருவங்கள் முழுவதையுந் தரிசித்து, எழுதப்பட்டசித்திரம்போலநின்று. அடியற்றமரம்போல

---

† அவையாவன:— உயிர்க்கொளியாக நிற்பது சிற்சத்தி பிராணன்முதலிய வாயுவாக நிற்பது ஞானசத்தி மற்றை வினைத்துணையாக நிற்பது கிரியாசத்தி ‡ தாபனம், சன்தானம் முதலிய சோடசோபசாரங்களின்தத்துவார்த்தங்களே யெல்லாம் விவேகுந்திராலய மகோற்சவ உண்மைவிளக்க மென்னுநூலிற் கண்டு தெளிக.

எதிரேவிழுந்து, தேவாதிதேவனே! சர்ப்பாபரணனே! அங்குசபாச மேந்தும் அருணமூர்த்தியே! முன்னீப் பழம்பொருட்கு முன்னீப் பழம்பொருளே! பின்னீப்புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே! உன்னீப் பிரானைகப்போற்றிய அடியேறகு வேண்டுவன அளித்தி யென்றுபலவாறு துதித்து நின்றனன்.

அவைகளை யெல்லாந் திருச் செவிக்க ணேற்று நின்றஏரம்ப மூர்த்தியருட் கடைக்கணிக்கஞ் செய்தருளி, பலியே? நின்றவத் திற்கு மெச்சினேம், இலங்கா புரிக்கண் தென்றிசையில் விளங்குவ தாய், அடைக்தார்க்கு வேண்டுவனவற்றை யருள்வதாய் விளங்கும் கதிரை நகர் எனப்பேர்பெற்ற கதிர்காமப்பதியில் அகத்தியன் நற் றுணைவனை வேண்டிச் சொல்லுதற்கரிய கடிந்தவத்தைச் செய்தாற் போல நீயுஞ்செய்தனை நீவேண்டிய வரங்களைக்கேள் தருகி என்றுதிருவாய் மலர்ந்தருளுதலும், பலிசொல்கின்றான் அண்டபகி ரண்டங்களை யெல்லாம ஒரிமைப்பொழுதினில் உண்டாக்கிக் காத் துச்சங்கரிக்கவல்ல பெருமானே, அடியார் வேண்டு வனவற்றை யெல்லாங்குறையாதளிக்க வல்லகிருபா மூர்த்தியே, அமரர் துன்ப மெல்லாம் ஓடும்படியாகப் படையுட னடர்த்த கதிரையும்பதியை னும் ஏமகூடத்தில் பாடி வீடுகொண்டு, சமர்புரிந்து சூரபன்மன் முதலிய அகரர்களது வலிதொலைத்து, விண்குடியேற்றியு வெற்றி வேலாயுதத்தையேந்தியருளியகுமரக்கடவுளை துணைவனைக் கொண்ட குரிசிலே, சித்திபுத்தி எனனுஞ்சத்திகளைக் கொண்டருளிய அகாதி மலமுத்த நித்தபதியே, தேவரீரைக்குறித்து அடியேன் அன்புடன் தவம்புரிந்தது மெய்யேயானல் மூவுலகங்களு மடியேன் வசமாக வேண்டும். இந்திரன் முதலியதேவர்கள் கைகட்டி வாய்புதைத்து, அடியேன் வாயிலிற் காத்திருகுது யானிடுகின்ற வேவல்களைத் தட் டாமல் நடத்திவருகின்ற அரசாட்சிவேண்டும். எந்தப் பொருளை எந்தெந்த வேளையில் நினைத்தாலும் அந்தப்பொருள்கள் அந்தந்த வேளையில் அடியேற்கு எளிதிற்கிடைக்கவேண்டும். தேவரீர்திருவடி களில் அடியேற்கு மாறுத பத்திவேண்டும். என்சீர வந்தத்தில்அடி யேற்கு முத்தியுண்டாக வேண்டுமென்று பிரார்த்தித்தான். இவை யனைத்தையுங் கணேசமூர்த்திகேட்டுச் சிறியவனே நீகருதியவரங்க ளனைத்தையுங் கொடுத்தோம். மூவுலகத்தாரு முன்னேவல் புரிந்து சேவிப்பார்கள். இவைகளன்றியும் கரும்பொன், வெண் பொன், பசும்பொன் என்கின்றமூன்று லோகத்தாலாகிய மூவிதக்கோட்டை

களையும் உனக்களித்தோம். அவைகட்குப்பெயர் திரிபுர மென்று சொல்லப்படும் உண்ணியுலகத்தரெல்லாம் திரிபுர னென்றழைக்கக் கடவர்கள். காம தகனராகிய கங்கா சடாதர மூர்த்தியின் கணேயா லன்றி மற்றையாவராலும் உனக்குமுடிவில்லே நீயினைத்தவிடத்திலு னக்கு முன்னதாகவே அத்திரிபுரங்கள் கூடாடக்கும் பின்னர்ச்சக லமுஞ் சிவபெருமான் விடுகின்ற கணேயாலழிந்து விடும் உடனே உனக்குமுத்தி யுண்டாகுமென்று திருவாய்மலர்ந்து தமதுதிருவுரு வைக்கரத்தருளினர் இவ்வாறு விராயகக் நடவுள் அவனுக்குக் கொ டுத்தருளிய வரங்களேயெல்லாம் தேவர்கள்கேட்டு நடுநடுங்கித்துக்க சாகரத்தின் மூழ்கினர்கள். இப்பாற் பலிபென்பவன் தன்தந்தை யாகிய திருச்சமத முனிவரைக்கண்டு பணிந்து தான் பெற்றுவந்த வரங்களணேத்தையுஞ்சொலலி மூலகதந்தியை சென்று போர்செய் வதான எண்ணத்தோடு அப்புட்பகவனநிலயாசு செய்திருந் தான். சோமகாந்தனே! அவன்திரிபுரமென்றும்பெயருடன் விளங் கினன் அவன்றவமிபற்றிய விடத்தைப் பெரியோர்கள் வங்காள மென்பர் மற்றைச்சரிதம் கூறுகின்றிலேம்.

திரிபுரன் வரம்பெறு படல முற்றிற்று.

திரிபுர னரசாட்சிப் படலம்.

அரியுகைத் தருளுநால்வா யைங்கையா ரணேபதானக்
கரிமுகன் கருணேபெற்றுக் களித்தரி ஞற்றல் ரான்ற
திரிபுரன் யாதுசெய்தான் செப்பினே யியாதன கேட்டப்
பெரியகுண் டிகைசே ரங்கைப் பிரமன்மே லுரைக்கப் புக்கான்.

சவுனகாதி முனிவர்களே! பின்னர் எமது ஆதிரியராகிய வியா தர் பிரமனேநோக்கி, அண்ணலே, திரிபுரன் பின்னர் யாது செய்த னன். அதனேக் கூறுகவென்று கேட்க கூறுவார். பின்னர் அப்பலி யென்பவன் புட்பகவனத்திலிருக்கின்ற கணேச புரத்தில் யாவரும் அதிசயிக்கத்தக்கதாகக் கண்டகற்சிலைகளினல் ஓராலயஞ்சமைத்து, அவ்வாலயத்தை யலங்கரித்துத்தானெவ்வாறு கணேசமூர்த்தியைத் தரிசித்தானே அவ்வாறே அக்கண்டகச்சிலையினல் ஒருதிருவுருவ முங்கண்டு அத்திருவுருவத்தை யவ்வாலயத்திற்பிரதிட்டைசெய்து

தினகதோறு மாராதித்துக் கொண்டிருந்தான். இவ்வாறு சிலநாட் கழிந்தபின்னர், பூலோகத்துள்ளவரசர்களையெல்லாம் வெல்வதற்கு வெளிக்கொண்டுசென்று அவற்றை யுத்தங்களை நடத்திச்சகல வேர் தாகளையும் வென்று, அவாகட்கெலலாக தன்னைக் கீழ்ப்புணிக்து ஏவலசெயது வருமபடி யாகச கடடளையிட்டு, தன்னை வணங்காரை யெலலாம்கிண்குடியேற்றி, பாதாளலோகதத்திற்சென்று அங்கரசாள் கின்ற நாகேகரின் முதலான சகலவீரரகளையுஞசெயித்து அவ்வி டத்துள்ள மணிரத முதலிய செலவஙகளாயெலலாங் கைக்கொண் டுமீட்டும் பூலோகதிற்கு வருதான உடனே அருதததீபார்தரங்களி லுள்ள அபுணாக மெலலாவருது நீரகத் தண்டஞசெய்துதுதிக்க, அவாகட்கெலலாங் கருமை புரிந்து அவரவாட்கு வேண்டிய செல் வங்களையுங கொடுதருபபினனா அவாகளோடு பூலோகத்தினின் றும் பாதல லோகதது னினறுங வருதிருநதினன சேனைகளையு மழை தது கொண்டு செபபப

யாவரையும் அதப்படுத்துகிறேனென்றெழுந்து, வந்தவர்கட்குவி டைகொடுத்துத்தனது சேனைகளெல்லாம் யுத்தத்திற்கு ஆயத்தமா கிவர, நகரமுழுவதுமுரசறைவித்தான் மூன்னர்ப்பலிவிடுத்ததூதர் கள்மீட்டுந் திரும்பிவந்து தங்களரசனைப் பணிந்து ஓ சக்கிரேஸ்வ ரா! யாங்கள் தேவேந்திரனிடத்திற்சென்று ஆவன்கருத்தையாராயு மளவில் அவன்யுதத்தத்திற்கு எதிர்ப்பார்த்திருக்கின்றனனென்ற லும் அழலில் நெய் சொரிந்ததுபோலப் பலியானவன் கோபங் கொண்டு இந்திரன் வரவை எதிர்பார்த்திருக்கனன் இப்பால்தே வேந்திரனவன் முடிகுடை கவரி நாட்டி முரசு சக்கரம் யானை-கொடி-மதில் தோரணம் நீர்நுடம் பூமாலை வங்கு - கடல் மகரம்-ஆ மை-இணைக்கயல்-சிங்கம் தீபம் பீடபம் ஆசனம் என்கின்ற இரு பத்தொரு சின்னங்களோடு * பதாதி - சேனைமுகம், குமுதம், கண கம் வாகினி பிரளயம், சமுதாயம், சக்கரம் அனீகம், அக்குரோணி, ஏகம், கோடி, சங்கம், விந்தம், குமுதம், பதுமம், நாடி சமுத்திரம், வெள்ளம் என்கின்ற பத்தொன்பதுவகைச் சேனைந்தொகைகளுங் கிரமப்படி வீரனாக, மந்திரிமார், புரோகிதார், சற்றத்தார், கடை காப்பாளர், நகரமாக்கள், படைத்தலைவர், இவுளிமறவர்யானைவீரர் என்கின்ற எண்வகைத்த தானைகளுமாக, அவ்வவர்களாயுதங்களோ டும் புடைசூழ்ந்துவரவும், சதுரங்கசேனைமுழுவதுங்கடைந்துதெருங்கியது போன்ற பேரொலியோடு அரண்மனைவாயிலிலிட்டு நீங்கித் தனது ஐராவதத்தில் லாரோகணித்து ஓளிவீசுகின்ற வச்சிராயுதத்தைத் தாங்கி அளவற்ற தேவர்கூட்டங்களாகிகூறி வரவும், செயபேரிகை

பதாதி யென்பது—ஓரியானையும், ஓர்தேரும், மூன்றுபரியும், ஐந்து காலாளுங் கொண்டது. சேனைமுகமென்பது—பதாதி மூன்றுபங்கு கொண் டது. குமுதமென்பது—சேனைமுக மூன்றுபங்கு கொண்டது கணக மென் பது—குமுதமூன்றுபங்குகொண்டதுவாகினியென்பது—கணக மூன்றுபங்கு கொண்டது. பிரளயமென்பது—வாகினிமூன்றுபங்குகொண்டது, சமுத்திர மென்பது—பிரளய மூன்றுபங்கு கொண்டது. சங்கமென்பது—சமுத்திர மூன்றுபங்குகொண்டது அனீக மென்பது—சங்க மூன்றுபங்குகொண்டது அக்குரோணி யென்பது—அனீக மூன்றுபங்குகொண்டது. அக்குரோணி எட் டுப்பங்குகொண்டது—ஏகம் ஏகம் எட்டுப்பங்குகொண்டது—கோடி கோடி எட்டுப்பங்குகொண்டது—சங்கம், சங்கம், எட்டுப்பங்குகொண்டது—விந்தம் விந்தம் எட்டுப்பங்கு கொண்டது—குமுதம். குமுதம் எட்டுப்பங்கு கொண் டது—பதமம். பதமம் எட்டுப்பங்கு கொண்டது—நாடி. நாடி எட்டுப்பங்கு கொண்டது—சமுத்திரம். சமுத்திரம் எட்டுப்பங்கு கொண்டது—வெள்ளம்.

முதலிய வாத்தியங்கள் முழங்கி வரவும், பகைவனுகிய பலியென்ப வனைத்தேடிச் சென்றனன். பலியானவன் தேவேந்திரன் வரவைப் பார்த்து அவனை யோர்திரணமாக மதித்துத் தானும் தன்சேனை களோடு அவனெதிரிற் சென்றான். பின்னர்ப் புண்ணியமும் பாவமும் ஒன்றுப்க் கலந்தது போலத் தேவசேனைகளோடு அவுணசேனை களொன்றுப்க் கலந்து போர் செய்யும்போது அவுண சேனைகட்குச் சிறிதுவலிகுன்றியது. அதனைப்பலியென்பவன்பார்த்துப் புண்ணில் வேல் பாய்ந்தது போலப் பொங்கி மனம்பொறுதவனுகி விழிகளில் அனற்பொறிக ளெழும்பத் தக்கதாகக் கொதித்துப் புகையுண்டா கும்படி பெருமூச்செறிந்து திசைகளெல்லா மதிர நகைத்து, புருவ நெற்றியிலேறக் கோபித்து வடவா முகாக்கினி போலச் சீறிக் குதி ரைமீதேறித் தேவர்களுடைய படைக்கூட்டங்களிற் புகுந்து யாவ ரையுஞ் சின்னபின்னமாக வெட்டிவனுயினன். உடனே தேவர் சே னைகளெல்லாக திசைத்துப் பலாயனங்களோடு வருந்தி மனந் தாப ரிக்க மாட்டாது, நாற்றிசைகளினு மோடிப் பதுங்கினர்கள். சிலர் ஆயுதத்தோடு கையறபட்டவர்களும், சிலர் மாலையோடுமார்புபிளக் கப் பட்டவர்களும், சிலர் கழலோடு கால முறியப் பட்டவர்களும், சிலர்முகுடத்தோடு சிரமுருளப் பட்டவர் களும், சிலர்குடரோடுசோர சரியப்பட்டவர்களுமாக சிலர் வலியோடு வாகழியப் பட்டவர்களு மானர்கள். இவ்வாறுதேவசேனைகளெல்லாம்அவுணராசனல்மடிந்து போவதை இந்திரன்பார்த்து மனம்பொறுமல் அழற் பொறி பறக் கும் படியாக விழித்து, ஆலகாலவிடத்தைப்போலச் சிறிமதம்பொ ழிகின்ற தனது அயிராவதத்தைச் சண்டமாருதத்தினும் அதிகமே கமாகச் செலுத்தி அவுண சேனைகளையெல்லாங் கண்டதுண்டமாக வெட்டி எறிவானுயினன். அதனைப் பலியென்பவன்கண்டு அண்ட கடாகங்க ளெல்லாம் நடுங்கும்படியாக நெற நெறென்று பற்களைக் கடித்து விட நாகத்தினைப்போற் சிறி வீரா வேசங்கொண்டு கரத்தி லிருக்கின்ற வில்லினைத்துக் குணத்தொனிசெய்து குரூரமாகிய பாண வருஷங்களைப்பொழிந்துதோமரம்-சூந்தம்-நேமி-பாசம்-வாள் முசலம்-தண்டம் முதலான ஆயுதங்களை நேருக்கு நேராக விடுத்து ஆகாயத்திலிருக்கின்ற உடுக்கூட்டங்களெல்லா முதிரும்படியாகச் சந்தித்துத் தேவசேனைகளை யெல்லாம் அதப்படுத்திக்கொண்டிருக் கின்றசமயத்தில், இந்திரனுவன் தனது அயிராவதத்தை அதிக வேகத்துடன் நடாத்திவந்து அதன்மத்தகத்தைப் பலியென்பவன் ஏறிநடத்துகின்ற குதிரையின் முன்னங் காலானது மடிந்தொடி யும்படியாகத் தாக்கினன்.

னே பலியானவன் தன் வாளாயுதத்தை விசி இந்திரனை யவ்வயிராவதத்தினின்றுங் கீழே யுழும்படியாகத் தள்ளி, தன் குதிரையைத் தாழ்த்தி அவன் வச்சிராயுதத்தைக் கைக்கொண்டு, அதனால் அயிராவதத்தினுடைய மத்தகத்தில் மோதி அதன் வீரத்தை யெல்லாங் குன்றச்செய்தனன். பின்னர்த் தேவேந்திர னிடமக்கு முன்னரெழுந்து நெடுமூச் செறிந்து மிகுந்த கோபாவேசத்துடன் அப்பலியின்மேற் பாய்ந்து அவன் தலை பிளவுபடும்படியாகத் தன் கையால் பலங்கொண்டமட்டும் மோதுதலும் பலியானவன் மூர்ச்சையாக வீழ்ந்து மீளவுந் தெளிந்தெழுந்து இந்திரனுடைய மார்பிற் பாய்ந்து மோதினன். உடனே அந்திரனு முரச்சித்தவனாகிச் சிறிது தெளிவுந் தெழுந்து பலியைய பாதத்தி லுன்னியுதங்களை விடுத்து என்னெடு மலையுதஞ்செய்து பிழைக்கவல்லீயா வென்றுசொல்ல, அதற்கு அவ்வவுணராசன் சொலலுவான் இந்திரனே! விட்டிற்பூச்சியினுடைய சிறகின் காற்றினாலேபா வடவாமுகாக்கினியும், மதயானையைப்போன்ற வெனக்கு நீகாற்றானை, ஆயினும்அஞ்சவேண்டாம் உனது பெருமை கெடாது இன்னுஞ் சிறிதுகாலம் வாழவேண்டுவையாயின் உனக்குப் பூலோக வரசாட்சியைத் தந்தேன். அங்ஙனஞ் சென்று உன்னகங்காரத்தை யெல்லா மொடுக்கி உன் கிளைஞர்களோடிருந்து வாழ்க்கடவை யென்றனன். அதனை இந்திரன் கேட்டுச் சீரங் குலுங்க நகைத்து, பலியே! இன்னும் யுத்தஞ்செய்ய அழைக்கின்றா னென்று பயந்த நீ இவ்வார்த்தையைப் பேசித் தப்பித்துக் கொள்கின்றாய் இந்நிமிடத்தி லுன்சீரத்தைச் சின்னபின்னமாக்கிப் பருந்துகட் கிரையாக்குகின்றேனென்று தன் புயங்களைத் தட்டினன். அதனைக் கேட்ட பலியானவன் அதிக உருத்திராவேசங்கொண்டு தன் குதிரையைவிட்டிறங்கி உதிரவெள்ளம் ஓடும்படியாக அவ்விந்திரனுடி அளவற்றமல்லயுத்தங்களைச் செய்து, இமைப்போதில் அவன் கால்களைப் பிடித்து ஆகாயத்திற் றாக்கிக் கிறுகிறென்று சுழற்றி வீசினன். அவ்வேகத்தோடு இந்திரனவன் மெலிந்து இமயவரைச் சாரலில் வீழ்ந்து மூர்ச்சித்து, உயிர்போனவனே யொப்பக் கிடந்தனன். இக்காரணத்தை இந்திராணிகேள்வியுற்று நிலத்தில் வீழ்ந்து புரண்டு, அம்மாவோ: என்றழுது சோர்வுற்று மற்றைத் தேவர்களோடுங் கூடித் தன் காதலன் மூர்ச்சையாய் வீழ்ந்து கிடக்கின்ற பர்வதச்சாரலையடைந்து பற்பல சைத்தியோபசாரங்களால் அவன்மூர்ச்சையைத்

தெளிவித்து, சஞ்சிதம்-பிராரத்துவம்-ஆகாமியம் * என்னும்மூன்றினுல் வருகின்ற காரியங்களே யார்தடுக்க வல்லவரென்று பலதேவதலங்களைச் சொல்லி அவ்விமயகிரியினுடைய குகைகளிலே அத்தேவேந்திரனேடு தானும் ஒளிந்துகொண்டிருந்தாள்.

இப்பால் பலியென்பவன் யுத்தகளத்தை விடுத்து இந்திரனுடைய அயிராவதத்திலேறிச் சபரிகை முழக்குவித்து அவனரண்மனையிற் சென்று மிருந்த ஆனந்தத்தோடு சிங்காதனத்திலிருந்து சுவர்க்கலோகத்திலிருக்கின்ற சடிகளெலாம் தனதாணைக்கடங்கி நடந்துகொள்ளக் கடவரென்று எங்கு முரசறைவித்து, அரம்பை மாதரை நாட்டியஞ் செய்வித்துக், கின்னரர்களே வீணைவாசிப்பித்துச் சகல தேவகங்களையுந் தனது பஞ்சேந்திரியங்கட்கு விருந்தூட்டி அரசாட்சி செய்துகொண்டிருந்தான் இவ்வாறு சின்னட் கழிந்தபின்னர்த் திரிபுரனென்பான் பிரமன் வாழ்கின்ற சத்திய லோகத்திற்செல்ல பிரமன் அவன் வரவை யறிந்து பயந்து அவ்வுலகத்தை விடுத்து வைகுண்டத்திற்குச் சென்றன். அவ்வைகுண்டத்தில் வாழ்கின்றவிண்டுவும் அவ்வவுணன் கொடுமைகளைக்கேட்டு நடுநடுங்கி அப்பிரமனைத் தன்னுட னழைத்துக்கொண்டு இந்திரன் முதலாயினே ரொளித்திருக்கின்ற இமயபர்வதச் சாரலே யடைந்தார் பின்னர்ச் சத்திய லோகத்திற் சென்ற பலியானவன் அங்கு பிரமனில்லாததைக் கண்டு அவ்வுலகத்தைத் தன்வசமாக்கி அவ்விடத்தினின்று நீங்கி வைகுந்தத்திற் சென்று, அங்கு விண்டுவில்லாததைக் கண்டு அதனையுந் தன் வயப்படுத்தி, மீளவும் பூவுலகத்திற் குவந்து தனக்கு அளவற்ற வரங்களைத் தந்தருளிய விகாயக மூர்த்தியைப் பூசித்து, சுவாமீ மூன்றடியேற்றுத் தேவரீர் வரமாகத் தந்த மூன்றுகோட்டைகளாகிய திரிபுரங்களே இப்போ தனுக்கிரகிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான். உடனே கரும்பொன்வெண்பொன் பசும்பொன் என்னும் இம்மூன்றினுலாகிய திரிபுரங்கள் ஒவ்வொன்று நூறுயோசனை யுயரமும் நூறுயோசனைவிசாலமுமாக அளவற்ற செல்வங்களோடும ஆகாயத்திற் றோன்றின.

அத்திரிபுரங்களில் கற்பகவிருக்ஷம் காமதேனு-சங்கநிதி-பதுமநிதி முதலாகிய பொருள்களோடு அளவற்ற அற்புத சம்பத்து

* அவையாவன:—முன்சனனத்தில் லனுபவித்து மிருந்த வினைக்குறை சஞ்சிதம். அதனை இந்தச் சனனத்தில் லனுபவிப்பது பிராரத்துவம் இந்தச் சனனத்தில் லேறுகின்ற வினைகள் ஆகாமியம்.

களு நிரம்பியிருந்தன சுவர்க்கம் சதுரியம் வைகுண்டம் என்னும் இம்மூன்றுலங்கள் அப்பலியின் வ மாயினபோது அவைகட்குத் தாழ்ந்த மற்ற லோகங்களெல்லாம் அவன்வசமாய் விட்டன. அப் பலியானவள் சிவபெருமானுல் மூத்தியடையுங் காலத்தன்றி மற் றெக்காலத்திலு மழிவினமையா யிருக்கின்ற மூன்றெயில்களும் அவன் செல்லுமிடங்கடோறுஞ் செல்லுதலால் கடைசெய்யும்படி யான சிவதேகங்கட் கொப்பாயிருந்தன. அத்திரிபுரங்களானவை யாவரும் விரும்பிய போகங்களை வரையாது கொடுத்து வருவதி னுற் காமதேனு நற்பாகம் சிந்தாமணியென்னும் இம்மூன்று நிதி களை யோத்திருந்தன. இப்படிப் பலியென்பவன் திரிபுரனென்னு நாமம் பெற்றவனுப், அளவற்ற ஆனந்தத்தில் மூழ்கித் தானடைந்த அத்திரிபுரங்களில் இரும்பாலாகிய புரத்திற்குச் சுக்கிலமென்றும், வெள்ளியாலாகிய புரத்திற்கு நா சரிலமென்றும், பொன்னாலாகிய புரத்திற்குச் சுவர்க்கதி பொன்னா நாமங்களிட்டுச் சுக்கிலம் பாதல லோகமாகவும், சரிலம் பூதலி லோகமாகவும், சுவர்க்கதி சுவர்க்க லோகமாகவும் ஏறபடுத்தி விநாயகக் கடவுளை அன்புடன் றியானி த்திற் தன்மனத்தால் மூன்று புரங்களை யுண்டாக்கி அம்மூவ ருக்கு வச்சிரதமிட்டிரன், வீமகாயன், காளகூடன் என்று நாமகர ணக்தரித்து, சுக்கிலமென்னு மிரும்புக் கோட்டையை வச்சிரதமிட் டிர னென்பவனுக்கும், சரிலமென்னும் வெள்ளிக் கோட்டையை வீமகாயனென்பவனுக்கும், சுவர்க்கதியென்னும் பொன்கோட்டை யைக் காளகூட னென்பவனுக்குங் கொடுத்து, இம்மூவர்கட்குந் தானதிகாரியாயிருந்து தன்னுணையின்படி யவர்களை நடாத்திவந் தான். மேற்கூறிய மூப்புரங்களானவை ஆயிரம் வருடத்திற் கொரு கால் அவ்விடம் விட்டு மற்றோரிடத்திற் பெயர்வதும், தனக்குள் ளிருந்து அரசுசெய்கின்றவர்கள் எதிர்த்து வேண்டினும் அவைகளை யெல்லாந் தடையில்லாமற் கொடுத்து வருவதும், அவர்க ளெவ் வெவ் விடங்களிற் செல்ல நினைக்கினும் அவ்வவ் விடங்களிற் சென் றிறங்குவதும், தம்மடியி லகப்பட்ட உலகங்களை யெல்லா மழித்து வெற்றிகொள்வதுமாகி யிருந்தன. இப்பால் திரிபுரன் வங்காள மென்னு நகரைச் சேர்ந்து தன் மனத்தால் மீளவும் இரண்டு புத் திரர்களை யுண்டாக்கி அவர்கட்குச் சண்டனென்றும் பிரசண்ட னென்றும் நாமகரணந் தரித்து, சண்ட னென்பவனைச் சத்தியலோ கத்தையும், பிரசண்ட னென்பவனை வைகுண்டத்தையும் அரசா ளுஞ்செய்ய விடுத்துப் பின்னர் ஒரு மனிஷியைக்கூடி அவளால் மத

னென்னும் பெயரினையுடைய ஒரு புத்திரனைப் பெற்றுச் சகல லோகங்களினுந் தனதாணையைச் செலுத்தி அளவற்ற போகபாக்கி யங்களை யநுபவித்துத் தனது கீர்த்தியானது அட்டதிசைகளிலும் பரவத்தக்கதாக நல்ல நீதியைச் செலுத்தி, இடைவிடாமல் விநா யகபூசையுஞ் சிவபூசையுஞ்செய்துகொண்டு அநேககாலம் அரசாட் சிசெய்து வந்தான்.

திரிபுர னரசாட்சிப படல முற்றிற்று.

தேவர்கள் வரம்பெறு படலம்.

தேக்குபுகழ்த் திரிபுரன்முன் னரசாட்சி புரிந்ததிது தெளிக நீயென், றாக்குமிகு வியாகமுனிக் குரைத்தனனன் முகனதனை யுனக்குச் சொன்னேம், வீக்கியபூங் கழற்சோம காந்தவினி விண்ணோர்கள் விமலர் போற்றிப், பாக்கியஞ்சேர் வரம்பெற்ற தறிகவெனப் பிருகுமுனி பகர லுற்றான்

சோமகாந்தனே! விநாயக மூர்த்தியைத் திரிபுரன் பூசித்துவர ங்களைப் பெற்ற வரலாற்றினைச் சொன்னேம் இப்பால் அத்திரிபுர னழியுமாறு தேவர்களெல்லாம் பூசித்து வரம்பெற்ற சரித்திரத் தைச் சொலலுவோங் கேட்பாராக இவ்வாறு திரிபுரனவன் சகல லோகங்களினுந் தனதாணையைச் செலுத்தி அரசுசெய்துவருகின்ற காலத்தில் இமபகிரியின் குகைகளி லொளித்து வேறொரு புகலிட மில்லாமல் துயரமுற்றிருகின்றதேவர்களிடத்தில் ஒருநாள் நாரத மகாமுனிவர் சென்றார், அவரைத தேவர்களெல்லாங்கண்டு சேவித் துப் போற்றி விண்ணப்பஞ் செய்ததாவது—சுவாமி! கொடியவனு கிய திரிபுரன் சகல வெற்றிகளையு மடைந்து மூவுலகங்களையுந் தன் வசமாக்கிக்கொண்டான் அவனுல் யாங்க ளனைவரும் அலைப்புண்டு மனகொந்து நாளுக்குநாள் மெலிகின்ற யடைந்தோம். அவன் யாவ ரால் வரம்பெற்றனன் இப்பால் அவன் யாவரால் அழிவான். இனி அடியேங்கள் செய்யவேண்டிய கடப்பாடுயாது? அதனைத் தேவரீர் கிருபைபுரிந்து திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று பிரார்த்தித் தார்கள். அதற்குச் சகல காரியங்களையுந் தமது ஞானநோக்கினுல் அரியத்தக்க நாரதமகாமுனிவர் சொல்லுவார். தேவர்களே! அத்தி ரிபுரன் விநாயகக்கடவுளைப்பூசனை செய்து அவரால்அளவற்றவரங்

களைப் பெற்றுச் சகல மகிமைகளையும் அடைந்திருக்கிறான். அவனும், அவனரசு செய்கின்ற திரிபுரங்களும், சிவபெருமானுடைய பாணத்தாலழியவேண்டும் அப்படி யாவரால் அழிவதற்கும் விநாயகக் கடவுளுடைய அநுக்கிரகம் வேண்டும். ஆதலால் நீங்கள் யாவரும் விநாயகக் கடவுளைப் பூசை செய்யக் கடவீர்களென்று சொல்ல அதற்கு அத்தேவர்கள் மனமகிழ்ந்து மீளவும் பணிந்தெழுந்து சுவாமி! கணேசமூர்த்தியை யாராதிக்கத்தக்க முறைமை இவ்வாறென்று அடியேங்களறிந்திலேம் அதனையுந் தேவரீரே யநுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். நாரத முனிவர் அதனைக் கேட்டுக் கிருபை சுரந்து நீங்கள் கருதிய வண்ணமே செய்கின்றோம். யாவரும் ஸ்நானஞ் செய்து அதுட்டான முதலியவைகளை முடித்து வரக் கடவீர்களென்று கட்டளையிட்டார். அவ்வாறே அவ்வவர்கள் முடித்துக் கொண்டு வந்த பின்னர் விநாயகக்கடவுளுடைய ஏகாக்கரத்தை யுபதேசித்து அதையனுட்டிக்கு முறைமையையுஞ் சொல்லி அவர்களை விட்டுப் பிரிந்தனர். இடபால் தேவர்களனைவரும் ஒருதானே நிலத்தி லூன்றி விநாயகமூர்த்தியினுடைய திருவுருவதனை மனதிற் றியானித்து ஏகாக்ஷர மந்திரத்தைச் செபித்து, அளவற்றநாள் தவஞ் செய்து கொண்டிருக்கையில் ஒருநாள் தமமை யடைந்த அன்பினரை அவரினுஞ் சிறந்த அன்போடு ஆதரிக்கின்றவராயும் யான் செய்யுங் குற்றங்களையெல்லாங் குணமாகக் கொண்டு காப்பவராயும், வன்மையான நெஞ்சினர் முன்பு ஒருகாலத்தும் வராத உத்தமராகியுமிராநின்ற கணேசமூர்த்தியானவர் கிருபை சுரந்து சொன்னகீடமும் அகில்மூன்றும்பிறையும் கவரத்தின குண்டலமும் புயகவசமும், அரைநாணும் மருப்பிற் சுற்றியிருக்கின்ற துதிக்கரமும், பாசமுமங்குசமும மழுவுந் தாமரைப் பூவென்னுமிவைகளைத்தரித்திருக்கின்ற நான்கு திருக்கரமும், அளவற்ற பேரொளியோடு நிறைந்த திருமேனியுமான கோலத்துடன் அவர்களெதிரிற் பிரத்தியக்ஷமாயினர், உடனே அத்தேவர்களெல்லாம் எதிரிற் காக்ஷி தந்தருளிய சுவாமிகளைக்கண்டு சூரியனெதிர்வரக்கண்ட தாமரை மலர்போல முகமலர்ந்து அன்பும் அச்சமுங்கொண்டு அஷ்டாங்கமாகச் சேஷித் தெழுந்து இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி விழிகளி லானந்த நீர்த்தாரைகளைச் சொரிந்து தோத்திரஞ்செய்வாராயினர்.

தத்துவா தீத போற்றி தத்துவப் பொருளே போற்றி
தத்துவ முதலே போற்றி தத்துவ சொரூப போற்றி
தத்துவத் தியன்ற தாத்து விகங்களு மானாய் போற்றி
தத்துவ வறிவுக் கெட்டாத் தயங்குபே ரறிவே போற்றி.

உடலினுக குயிரே போல வுயிர்ச்குயி ரானாய் போற்றி
யுடனுயிர்க் கறிவு கல்கி யுடலினை கழிப்பாய் போற்றி
யுடனுயி ரெனப்பி னிங்கா வொற்றுமைப் பொருளே போற்றி
யுடனுறை யுயிராகரு மெட்டா வொளிபெருஞ் சோதி போற்றி

வீரவுத்தத் துவத்தி னீங்கு மேலெனை நின்ற வாவி
வரமுறை வருவு கொண்டு வந்தருள் புரவ போற்றி
பரவுமைந் தொழிலை நீதடி யுயிர்களைப் பணிப்பாய் போற்றி
துரியத்தி னுயிரை வாங்குநு டடர்பெருங் கடலே போற்றி.

பத்தர்கள் வழங்கா நின்ற பலபுங்கைக் கொள்வாய் போற்றி
புத்திகள் போகத் தூய்ச்சுப் புணர்க்குருள் போகி போற்றி
மூத்தியை யோகத் தூர்த்து முழுதுதருள் போகி போற்றி
யெத்தொழி லவாத் மகுப பபனரு ளிறைவ போற்றி.

வேண்டிய வடியாய்க் கெல்லாம் விக்கினங் கெடுப்பாய் போற்றி
வேண்டிவந் தணைசெய யாரகு விகுகினங் கொடுப்பாய போற்றி
வேண்டுவர் வேண்டிற் றெல்லாம் விளைத்தருள் வீமல போற்றி
மாண்டதுட் டாகோக் கொலை மதிமுகு மள்ள போற்றி !

செவி கொடுத்தருளிய அதிதிவர்களைக் கிருபையோடும்பார்த்து நீங்கள் கருதிய வரங்களைக் கேளுங்க ளென்று திருவாய் மலர்ந்தருளலும் தேவர்கள் மீட்டும் பணிந்தெழுந்து சகலபுவனதாரஸ்வரூபியே! அடியேங்கள் படுகிறதுயரங்களனைத்தும் தேவரீர்க்குத்தெரியாதனவல்லவே திரிபுரனுக்குத் தேவரீர் கொடுத்தருளிய வரத்தால் திரிலோகங்களையுந் தன்வயப்படுத்தி எங்களை யெல்லாம் பலதுன்பங்களில் மூழ்கச் செய்தனன் ஆதலால் அத்திரிபுரனை யழித்து அடியேங்களை யெல்லாங்காத்து ரட்சிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள் அதற்குக் கணேச மூர்த்தி கிருபை சுரந்து அமரர்களே! உங்கள் சிறுமைகளையுந் திரிபுரன் பெருமைகளையும் அழிப்பதற்கு ஒருபாயஞ்செய்கின்றேரும். அதுகாறும் நீங்களனைவரும் விண்ணந்துசென்று சிவபெருமானை யடையக் கடவீர்க ளென்று திருவாய் மலர்ந்து அத் தேவர்கட் கெல்லாம் விடை கொடுத்து, பின்னர்ப்


பிராமண வடிவங் கொண்டு தமது தேவியோடும் பலமுனி புங்கவர் கள் புடை சூழ்ந்து வரும்படியாகத் திரிபுரன் வாழ்கின்ற வங்காள மென்னு நகரத்தினை யடைந்து அவனரண்மனையிற் சென்றூர்,திரிபு ரன் அவ்வேதியரைக் கண்டவுடனே சிங்காதனத்தை விட்டிறங்கி எதிர் சென்று அட்டாங்க மாகச் சேவித்து மிக்க அன்புட னழை த்துக்கொண்டுவந்து, ஓர்சிறந்த ஆசனத்தி லிருக்கச்செய்து, சுவா மி! தேவீர் யாவர் அடியேனுல் தேவரீர்க் காயவேண்டிய காரியம் யாதோ? அதனைத் திருவாய் மலர்ந்தருளல் வேண்டும் திரிலோகங்க ளும் என தாணையிற் கட்டுண்டிருக்கையாலல் எனக்கெய்தாத காரியம் ஒன்று மிலை தேவரீர்க்கு யாதேனுமுண்டாயின் இக்கிமிடத் திற் றருவே னென்று சொல்லுன வுடற்கு அக்கண மாகி வந்த கணேசமூர்த்திசொல்லுவார் திரிபுரனே! கம்பையாவருங் கலாதர ரென்றுசொல்லுவார்கள் காமோ ஈண்டுளோக முதலிய சகலலோ ங்களின் அலங்காரங்களுமெல்லாம் பார்த்துக்கொண்டு திரிகின்ற சித்தராகும். நீ தியாகம்-புகழ் செல்வம் அழகு ஆயுகவல்லபம்-பரா க்கிரமம்-தேசசு முதலிய சிறப்புகளனைத்தும் விராபக் கடவுளைத் தி னந்தோறும் ஆராதித்து வருகின்ற பத்தினைந்து சதுரங்களாயி னோர்கண்டு நடுங்கி வணகங் கொள்ளத் தகு மிப் தன்மையையு டையவனுதலால் உன்னைக் காணவேண்டி இங்ஙன மெழுந்தருளி னேம், நீ மூவருலகங்களு மெலிகளும் வேண்டேடம் உனதரசாட்சி யையளிக்கினும்வேண்டேம் நீ ஒருவர் கருதிவந்த பொருளைக் கர வாதனிகருங் கடப்பாட்டினையுடைய முயின் வையத்திலெருவி ராயகமூர்த்தியிருக்கின்றது. அம்மூர்த்திக்குரிய திருநாமஞ் சிந்தா மணி விராயக ரென்பர் அவ்விராயகரை உமாபாரமேசுவரி மணாள ராகிய சிவபெருமானனவர் நாடோறும் ஆகமவிதிப்படி யாராதித்து வருகின்றனர் அத்தன்மைத் தான மேலான மூர்த்தியை நமக்கெவ் விதத்தேனும் வருவித்துத்தரல் வேண்டு மென்றூர் அதற்குத் திரிபு ரன் மனமகிழ்ந்து வேதபாரகரே! தேவரீர் இச்சித்த மூர்த்திகைலாச பதியிடத்தி லிருப்பதாகமனத்தளரவேண்டாம் அக்கைலாசபதியே யிண்டு முதலிய சகல தேவர்களுந் தம்மைப் புடை சூழ்ந்து வரும் படியாக அம்மூர்த்தியை இக் கிமிடத்திற் கொண்டு வந்து தேவரீர் மூன்பு வைக்கும்படி செய்கிறேன் அடியேன் பராக்கிரமத்தைத் தேவரீர் பார்த்தருளுமென்று சொல்லி ஆடையாபரண முதலானதி ரவியங்களைக்கொடுத்து, அவ்டாங்கமாகப்பணிந்தெழுந்து, சுவாமி அச்சித்தாமணி விராயக மூர்த்தியையானழைப்பித்துத் தருகிறபரி

யந்தம் தேவீ ரிங்ஙனந்தையைகூர்ந்து வசித்தருள வேண்டு மென்று பிரார்த்தித்தான். இவை யீணத்தையுங் கணேச மூர்த்தி கேட்டருளிப் புன்னகைகொண்டு திரிபுரனே! நீ அம்மூர்த்தியை வரவழைக்கின்ற பரியந்தம் இந்நகரத்தின் சமீபத்தில் வாசஞ் செய்கின்றேம் நீயதற்குரிய முயற்சிகளே விரைவில் நடத்தக்கடவையென்று திருவாய் மலர்ந்து ஆசீர் வாதஞ்செய்து எழுந்தருளினர்.

இப்பால் திரிபுர னைவன் ஒற்றர்களே வரவழைத்து, நீங்கள் கைலாயதிற்சென்று பரமசிவனைப் பணிந்து எங்களரசனுகிய திரிபுரன் தேவரீர்பூசிக்கின்ற, சிந்தாமணி விநாயகரை வாங்கி வருவதாகக்கட்டளையிட்டான் அதனை யெம்மிடத்திற் தரல்வேண்டும். தாரா மற்றடைசெய்வீராயின் அவனை நேரில்வந்து வலாற்காரமாய் வாங்கிக்கொண்டு போவான். அக்காலத்தில் நீர்துயரப்பட நேருமென்று உறுதியாகச் சொல்லி அம்மூர்த்தியை விரவில்வாங்கி வரக்கடவீர்களென்று கட்டளை யிட்டான் அவ் வொற்றர்களும் அவ்வாறே சென்றார்கள்

தேவர்கள் வரம்பெறு படல முற்றிற்று-

விமலன் வரம்பெறு படலம்.



கருங்கழல் புனைந்த சோம காந்தனை வரங்கள் விண்ணோ
ரொருங்கருட் கணேசர் பாங்க ருற்றமை யுணர்ந்தா யன்னோர்
மருங்குசென் றிரப்பச் சூல வள்ளலும் வரங்கள் பெற்ற
பெருங்கதை யினிக்கே ளென்று பேசுவன் பிருகு வென்பான்.

முனிவர்களே! திரிபுரனையழிக்குமாறு தேவர்கள் கணேசமூர்த்தியைப் பூசித்து வரம்பெற்றவரலாற்றினைச் சொன்னேம். இப்பால் அத் திரிபுரனழிவின் பொருட்டுச் சிவபெருமா னுபாசித்து வரம் பெற்ற திறத்தினைச்சொல்லுவோம் கேட்பீராக முன்னர் விநாயக மூர்த்தியால் வரம்பெற்றகன்ற தேவர்களெல்லாம் பின்னர்ச்சிவபெருமானுடைய திருவருளை பெறவேண்டினவர்களாய் நாம் அவரைச்சரணடைந்தவுடன் நம்மீ திரக்க முண்டாக்கத் தக்க வது எதனு லென் றுலோசித்துச் சூரியசந்திரர்களைத் திகிரிகளாகவும் இருசுக்களை உட்பரப்புக்களாகவும், சமயங்களை உள்ளிடமாகவும், பிரமனை

ருதியென்கின்ற மாயையை மூகப்பாகவும், காஷ்டைமுகூர்த்த முத லியகாலங்களே மச்சாகவும், பூவுலகத்தைத் தட்டாகவும், சுவர்க்க லோகத்தை ஆதன மாகவும், கலைகளே முளைகளாகவும். மந்திர கிரி யைகளே மேல்வட்டமாகவும், இமயகிரியைக்கொடிஞ்சியாகவும்,உத யகிரியைக் கூம்புகளாகவும், மற்றைய பர்வதங்களெல்லாம் தூண் களாகவும், தத்துவங்களேக்குடமாகவும், மேகங்களேச் சுற்றுமரங்க ளாகவும், கண்மேற்திரிய ஞானேந்திரியங்களே ஆபரணங்களாகவும், அண்டங்களே மாலேகளாகவும், புராண சாத்திரங்களே மணிவடங்க ளாகவும் நட்சத்திரங்களே விதானங்க ளாகவும், சமுத்திரங்களே யலங்கார வஸ்திரங்களாகவும், மருததுவர்களேப்படி களாகவும், கல் கைமுதலியதெய்வகதிகளேச் சாமரைகளாகவும, மற்றைய கதிகளே யெல்லாம் பதாதைகளாகவும், திதிவார முதலிய நாட்களே நடகின் ற வேகமாகவுஞ் சோடித்த சந்திரசடாதர மூர்த்தி யாகிய சிவ பெருமானுள்ளங் களிக்கத்தக்க ரிரதத்தை யுண்டாக்கி, அந்தவி ரதத்திற்கு வேதங்களேக் குதிரைகளாக்கி,வசுக்களே யக்குதிரைகட் கு வடிகயிறுகளாகத் தொடுத்து, கன்மகாண்டம் ஞானகாண்டமெ ன்னும் இரண்டு வேத மார்க்கங்களேயும் தகுத்தடி யாகப் பூட்டி, உபநிடதங்களே யெல்லாங் குதிரைகட்கு ஆபரணமாகத் தரித்து, பிரணவ மென்னும் மத்திகையைக் கொண்டு, பிரமனேச் சாரத்தி யஞ் செய்வித்து,மகமேருவை வில்லாகவும், வாசுகியை நாணுகவும், விண்டுவைப் பாணமாகவும், யமனே அலகாகவும், வாயுவை இறகா கவும், வடவாமுகாக்கினியைக் கூராகவும் புரிந்து, முன்னர்த் தாங்க ள் செய்திருக்கின்ற இரதத்தோடு இவ் வில முதலிய வாயுங்களேக் கொண்டு கைலாயபர்வததத்தர் சேர்ந்த இரதத்தை வெளியில்நிறு த்தித் தாங்க ளனேவருஞ் சிவபிரான் சந்நிதானத்திற்சென்று, அவர் திருவடிகளிற் பலபுட்பங்களா லருச்சித்து அஷ்டாங்கநமஸ்காரஞ் செய்து பலமுறைதுதித்து இதனே விண்ணப்பஞ செய்வாராயினர்.

ஊரு மூர்தியு மூவர்களே யாகிய வொருத்தற்
காரு மாழ்கினே மடிகளா ரவனுயி ரடர்ப்பச்
சேரும் வையமே வையமாத் திணிசிலே கிலேயாச்
சாரு மாறுசெய் தாமவை தழுவுக வென்றார்.

ஆணவமலத்திற் கட்டுண்டிருந்த சகல ஆன்ம கோடிகட்குந் தனுகரண புவன போகங்களேத் தந்து முடிவில் முத்தியிற் சேர்க்க வல்ல தயாபர மூர்த்தியே, திரிபுர னென்பவனுல் யாங்க ளெல்

லோரு மிக்க துன்பத்தினை யநுபவிக்கின்றோம். சுவாமிக ளவனை யழிக்கவேண்டு நிமித்த மெழுந் தருளுவதற்கு ஓரிரதஞ் செய்து கொண்டுவந்தோம். அதன்மீது தேவரீர் கிருபா கோக்கஞ் சாத்தித் தருளவேண்டுமென்று பிரார்த்தித்தலும், அதற்குச் சிவபெருமான் செவி கொடுத்துப் பார்வதி தேவியாரோடு மெழுந்தருளிக் கோபுர வாயிலுக்கு வெளியில் வந்து, அந்த ரதத்தைத் தமது கண்களிக்க நோக்கி, அதிகசந்தோஷங்கொண்டு அதிதேவர்களைப்பார்த்து இனி யுங்கள் துயரத்தினை நீக்கி ஆனந்த முற்றிருங்கள். உங்கட்குத் தீமை விளைவித்கின்ற திரிபுரனை அழைக்கணப்போதிலெரித்து யாவர்க்குஞ் சுகத்தினைத் தருவோமென்று திருவாய்மலர்ந்து மீளவுங் கோயிலுட் புகுந்தருளினர் அச்சமயத்தில் முன்னர்த் திரிபுரனு லேவிய தூதர்கள் வந்து நிர்க்கதண்டன் செய்து அவன் சொல்ல வாக்கியமாகித்த வண்ணஞ் சொன்னார்கள் அவை யனைத்தையுஞ் சிவபெருமான் கேட்டுப் புன்னகை கொண்டு உங்களரசனை யுத்தத் திற்கு வரச்சொல்லுங்களென்று விடைகொடுத்தனுப்பி, பின்னர்த் தனித்திருந்து திரிபுரனை நாசஞ்செய்யு முபாயத்தினைக்கருதி விழி களை மூடிக்கொண்டு விநாயக மூர்த்தியை மனதிற் தியானித்து, ஏகாக்ஷர மந்திரத்தைச் செபித்துத் சுவதசிலிருந்து இதனைத் தெப்பாராயினர்

சயசர் வேசனே சகலமு மறியுந் தத்துவனே
யயர்விலாப் படைப்பளிப் பழிப்பருளுங் காரணனே
மயரிலாதவ வானவ ரனைவர்க்கு மிறைவ
வுயரருந்தீ யாதலா லுன்னையா னிரக்கேன் (க)

எம்பிரானுன தியற்கை யாகிய வெறிலுருவ
நம்பி னேற்கெதிர் காட்டுக நாரணன் மூதலா
வும்ப ராத்திரி புரன்றனக் குகடன்றீபோய்க் கரந்து
செம்பொன் மேருவிற் றெருமந்தா ரிற்றைநாள் காறும். (உ)

தெளிக்கத் தக்கவர்க் கருள்செயுந் தேவநின் னருளா
லளிக்கத் தக்கவ ரவரிட ரகன்றுபோய்த் தத்தங்
களிக்கத் தக்கவாழ் பதவிகள் கைக்கொளப் புரத்தை
விளிக்கத் தக்கசூழ்ச் சியுமெனக் கருளுதல் வேண்டும். (ங)

ஐந்து பூதமு மடிக ளாணையி னைசை கின்ற
விந்த வையக மிலகுகின் றதுநின திடத்திற்

சிந்தை யாதிபி னகிலமுஞ் செய்வினைக் கெல்லா
மைந்து வேவுமுட் சாட்சியாய் வயங்குகின் றனையால் (சு)

மாயை யாகிய படலத்தி னுண்மறைப் புண்டு
தீய தாஞ்சமு சாரமா கியசெறி வனத்து
மேயி னுரெலாங் தனித்தொறு மிகுதவம் விளைதலுத்
தூயஞா னத்தி னுணர்வினைத் தொடர்ந்துவக் கின்றார். (கூ)

உரிய மாதவம் புரிந்தியா குழப்பவர்க் குளத்தின்
விரியும் வாளெளி யேயகம் பெளிவிடை விலக்கித்
தெரிவு ஞானியர்க் கெங்குமாய்ச் செறிந்தபே ரொளியே
யரிய வான்பொரு ளேயெனப் பராபரத் திரந்தார் (சு)

சர்வேஸ்வரராகியும், சராசரமுழுமையுமல்ல தத்துவராகியும் மகா தவத்தினையுடைய தேவர்படுகின்ற அநுகிரகந் செய்யவல்ல இறைவராகியும், எக்காலத்தும் உகாதிபாகியு மிருக்கின்ற தேவாசமூர்த்தியே, உம்மைக்குறி யிருக்கின்ற வெனக்கு உமது சுயரூபத்தைக்காட்டி யருளவேண்டும் விண்டமுதலிய தேவர்களெல்லாங் திரிபுரனுக்குப் பயந்து இவ்வரையிற் பல நூன்பங்களோடு மகமேருச் சாரலிலுள்ள பலகுகைகளி லொளித்துகொண்டிருந்தார்கள். அடைந்தோரை யாதரிக்கவல்ல ஐங்கரக்கடவுளே, உமது திருவருளாற் சகலத்தையு மளிக்கத் தகுதியாகிய அதிசூவர்க ளெல்லாங் தங்கடங்கள் பதவிகளையடையுமாறு யாம் திரிபுரங்களை யழிக்கத் தக்க உபாயத்தினை யருளவேண்டும். பஞ்ச பூதங்களு மூமதாணையால் அசைகின்றன சகல லோகங்களும் உம்மிடத்தில் அடங்கியிருக்கின்றன. மேலும் இவ்வுலகத்தார் தங்கள் தங்கள் கன்மாதிகளாற் செய்கின்ற வெல்லாக் காரியங்கட்கும் அகச்சாக்ஷியா யிருந்து பிரகாசிக்கின்ற கர்த்தர் நீரேயாதலால், மாயை யென்னும்படலத்தால் மறைப்புண்டு சம்சார மென்னுங் காட்டிற் சிக்கியிருக்கின்ற வான்மாக்களெல்லாஞ் சரீரங்கள் தோறு மிருந்து தவங்கள் செய்து பரிசுத்த ஞானத்தால் உம்மைத் தியானித்து ஆனந்தமடைகின்றார்கள். மகா தவங்களைச் செய்து யோகத்தி லிருப்பவர்களுடைய வுள்ளத்திற் பிரகாசிக்கின்ற சோதியும், அகப்பற்று புறப்பற்றென்னு மிரண்டினையும் விலக்கி உம்மைச் சதாகாலமுந் தியானித்துத் தரிசனஞ்செய்யவல்ல ஞானிகட்கு எங்கும் பரிபூரணமாகியிருக்கின்ற பேரொளியும் நீரேயன்றி மற்றை யாவரிருக்கின்றார்களென்று துதித்துப் பிரார்த்தித்தனர்.

உடனே விநாயகமூர்த்திக்குக் கிருபை சுரந்து அச்சிவபிரான் முகத்தினின்று ஐந்து முகங்களுந் தரித்த திருமேனியோடு தோன்றி எதிராக நின்றனர். உடனே சிவபிரான் அவரைப் பார்த்து மனங்களித்து ஐயனே நீரெங்ஙனமிருந் தெழுந்தளினீர். உமது திருநாமம் யாது? அதனைத் திருவாய் மலரவேண்டு மென்று கேட்டருளினர். அதற் கவ்விநாயகர் கிருபை சுரந்து நீலகண்ட மூர்த்தியே இரவும் பகலு முக்குணங்களோடும் விளையாடுகின்ற என்னை நீரன்புடன் கருதி அளவற்றநாள் தவஞ்செய்தீ ராதலால் மூவுலகத் துள்ள உயிர்களையெல்லாங் காத்தற் பொருட்டு உமது முகாரவிந் தத்தினின்றுந தோன்றி வந்தனம். நமது நாமங் கணேசராகும் உமக்கு வேண்டிய வரங்களைக் கேட்பீராயின் அவைகளை இக்கிமிடத்திற் றருகின்றேமென்று திருவாய் மலர்ந்தருளினர். பின்னர்ச் சிவபெருமான் மனக்களிப்படைந்து கணேச மூர்த்தியே, தேவர்களெல்லாரு திரிபுரனுடைய ஆக்கினைகட் கஞ்சி வருகின்றார்களாதலால் அவர்கள் வருத்தங்களை நீக்குமாறு யான் அத்திரிபுரனைச் சங்கரிக்கவேண்டும் அதற்கேற்றசதந்தி யெனக்குண்டாகும்படி நான்கு வேதங்கட்கு முதனமையாயிருக்கின்ற உமது மந்திரத்தைப் பீஜாக்ஷரத்துடன் உபதேசித் தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார். அதற்குக் கணேசமூர்த்தியானவர் கிருபைசுரந்து தமது மந்திரத்தையும் அதன் பீஜாக்ஷரத்தையும் விவரமாக உபதேசித்து, காலகாலரே. நீர் அத்திரிபுரனை யழிக்கும் படியாகக் கணை விடுக்கின்ற போது யானுரைத்த மந்திரத்தை நூறுருச் செபிக்கவேண்டும் மீளவும் அக்கணையை ஆக்கிஷிக்கும்போது மூன்றுருச் செபிக்கவேண்டுமென்று திருவாய் மலர்ந்தனர். இவை யனைத்தையுஞ் சிவபெருமான் செவிகுளிரக்கேட்டு ஆனந்தமாகிப் பலவாறு துதித்துக் கிருபாமூர்த்தியே, இம்மகா மந்திரத்தையுடையவ ராதலால் சகலதேவ கணங்கட்கும் முதல்வராயினீர் உமக்குக் கணேச மூர்த்தியென்னுந் திருநாமமுண்டாயது,யாவரும் வேதாகமபுராணங்களை யோதுதற் காரம்பிக்கின்றபோது முதலி லும்மைத் துதிசெய்யக்கடவர்கள். வைதிகநெறி சைவநெறியென்னும் இவைகளி லுள்ளோர்க்கும் உம்மையே முதலில் அருட்டிக்கக் கடவர்கள். விண்டு முதல் மனிதரீறுகவுள்ள சகல சீவர்களும் உம்மையே முதலில் அருட்டித்து வசிய முதலிய சகல காரியங்களையும் அடையக்கடவர்கள் உம்மைக் கருதாது ஆரம்பிக்கின்ற காரிய மற்ப மாயினும் அஃது சற்றுங் கைகூடாமற் போகக்கடவது. சைவர்களாயினும்

வைணவர்களாயினும் உம்மைப் பணியார்களாயின் அவர்கள் மகா பாவிகளாகக் கடவரென்றுசொல்லி அங்கு வந்திருக்கின்ற தேவர் களை யழைப்பித்து, விண்ணுலகவாசிகளே! பாவிகட்கெட்டாதபரி பூரணராகிய கணேசமூர்த்தியானவர் நமது பாவிகள் குருள்சுரக்கு இதோ எழுந்தருளியிருக்கின்றனர். அவரை நீங்க ளனைவரும்பூசித் துப் பரிமளமிகுந்த புட்பமாலைகளைச் சாத்திச் சகஸ்திர நாமங் களா லருச்சிப்பீர்களாயின் உங்கள் துயரங்களெ யெல்லாம் ஒரு நொடிப்போதிற் பொடிப்படுத்தி ரட்சிப்பரென்று திருவாய் மலர்ந் தனர். அதை விண்டுமுதலிய சகலதேவர்களுந் செவிக் கமுதாகக் கேட்டு அவ்வாறே கணேச மூர்த்தியை யாகம விதிப்படி பூசித்து சகஸ்திர நாமங்களா லருச்சித்தார்கள் அவர்கட்கு விநாயகக்கட வுளுக்கிரகஞ் செய்து தமது திரு வுருவதனைக் காட்டியருளினார்.

விமலன் வரம்பெறு படலம் முற்றும்.

திரிபுர தகனப் படலம்.

படையெ லாம்பணிப் பவர்க்கருள் பரமனைவ ரதன்பாற்
படைகொள் வான்கதை கேட்டன்ன பாரதிப விலிமீ
லடைய லார்புர மன்வர னழித்ததுங் கேளென்
றிடைய ரூதரைப் டானெழின் மாதவப் பிருகு.

இப்பால் சிவபெருமானிடத்தில் விடைபெற்றுறகன்ற தூதர்கள் திரிபுரனிடத்திற்சென்று தீர்க்கதெண்டஞ்செய்து, இராஜாதிராஜஸ் வரா! தேவரீரிட்ட கட்டளையின்படி யாங்கள் கைலாசாதியினிடத் திற்சென்று சிந்தாமணிவிநாயகரை நமஸ்கரித்தோம். அதற்கவர் சிம் புள்போலக் கோபித்துத் தேவரீரை புத்தத்திற்கு வரச்சொல்லி விடைகொடுத்தனரென்றார்கள்.

அதனைத் திரிபுரன்கேட்டு நகைசெய்து, தன்றவப்பயனுக்கு மூடிவெய்துங்கால நேரிட்டவனுகிச் சிவபிரானோடு யுத்தஞ்செய்யக் கருதிச் சண்டன் பிரசண்டன் முதலிய அவுணவீரர்களையுந் திரிபு ராதிகளையும் வருவதாகவுத்திரவுசெய்தான். அவ்வாறே அவர்கள் வருதலும் நீங்க ளனைவரும் விரைவில் யுத்தத்திற்கு ஆயத்தமாயி ருங்களென்றுசொல்லி,அவ்வவர்கட்குச் செய்யத்தக்கனிறப்புகளையு

கடாதகினன் இவ்வாறு திரிபுரன் படையெடுப்பகைச் சிவபெரு மான கேள்வியுற்று ஈசுதிதேவரை யழைத்து நமதுசேனைகளையெல் லாம விரைவில வரவழைக்கக்கடவுவெனறு கூடலோ யிட்டனர். அவ்வாறேஈசுதிதேவரெஅது முரசறைவிக்க அதனோசை சகல சேனைக ளுங்கேட்டுச சாவாயுத பாணிகளாபவந்து சயவுறசாகத்துடன் கோபுர வாயிலுகு வெதிரினறாரள திரிபுரனுந தனனவுண சே னைகளோடு வந்துசேரதனை ரினனர ஈசுதிதேவா சிவபிரானிடத் திறசெனறு வணஙகிரசுவாபீ சாலமகீனரளுந தஙகடவுகளபடை களோடு கோபுரவாயிலுமகதிரிவநதிருகினறாகள

பிரமதேவனுஈதைகேடாகதிநகொணடு வநதிருகினறுனென் று விண்ணபபஞ செயகலும சிவபிரான தேவரள துபரதத்தை ரீக் கிபாடகொளளுவ ஈசுதிகினராப தீணடு செயகதிருணட கூதலியு டைய தேவியாரோடு மெரிலனறிழுநது, திருவடி தாமரைக ளறி பாதுகைக ள நூட்டு, ரகுபரணவெனறு சயசயவெனறு போ றறிவர கோபுரவாயிலு ஜெபரிபிலலாத பிகவாள அலஙகரித திருகுனற இரதகி லாவாரனி ரதனர ஏடீன வெறறிசசுக முழஙகின தேவாகளெலலாரு ஆகபபடு வாஙகிவநத மாடசிமைக் கொபாச தேராடசகலீசரோடு ஈறாக சநதிரனை மேமேல முடித்த ஆபோலச சிவகணஙகள ஈரணகளறாக வீசுகினற வெளளைக் குடை பிடிதத்தாரள இதுசாறுப சகலமான பினனாகஙகிடநதலிரதி ருநதாம இபபோது சிவபெருமா னெனறிலிருகக பெறறோமே யெனகினறகளப ஆருமபபழுந ரு பெயரபபோலச சிலக்ணஙகள் வெண்சாமரைசேள வீசினாகள ஈதுசாதாநா சாதாசாகஙகடகும் ஒப்புரகொலலர கூடாத பெருஙகரபுனை யுடைபவராதலால் ஒரு வேளை திரபுரனபோ நிமஙகக மெலலாமல விடடுவிடுவ ரென்றகரு தஙகோபதத்தையம சிறு ரசசிறு மூடடுவிபபாபோலச சிலகணங் கள் சாதாறறிகளை எடுதத்தசைத்தாகள சிவபெருமா னுடைய தேர நில அலஙகாரவஸ்திரஙகளாகக கடடியிருகினற சமுதாயரங்களி னினறும அலகளைழுந்து வீசுகினறதைபோலச சிலகணங்கள் வெளளைப்பாவாடைகளை வீசினாகள திரிபுரனோசருசெய்யுமாறு நமதுசிவபிரா னெழுநதருளியதால இனிநமது பாதலலோகத்துவைத் தடையினறி யடையலாமெனனுகளிபபினோடு நாகராசர்த் தாடுவதைப்போலச சிலகணஙகள் ஆலவடடஙகளை வீசினாகள.

சிவபிரானுடைய ஒரேகணபால திரிபுரங்களுமழியப்போகின றமையால நாமிபபாதே அவைகளி லெழுநிலைக காணுவோ மென்று

சமவிலமுருகதுதம்பாலச் சிலகணங்கள் இடப முத்திரையிட்ட பல வெற்றிக்கொடிகளை ஆகாயமளாவ வெடிததார்கள். சிலகணங்கள் படகம்-ஜகுளி-சலவரி பணை-கிணை-குடமுழா-துடப்பறை-கடிகை முரசம்-துடி-தடாரி தண்ணுமை முகுபுரி முகடை-மொந்தை-தொண்டகம் இடகைகை தகுணிதம் பம்பை தூரிபம்பாண்டில் படலிகை யுணிலம்-யாழ் வங்கியமகாளம் பிலிமுதலிய ஆளவற்றவாத்தியங்களை முழக்கினார்கள் சிலகணங்கள் பாடல முடிண்டி - சக்கரம் பிண்டிபாலம் கம்பளரெடியார் முரலம் தாணமவேல் மழு வச் சிரம்-கேடகம் வாள் வில் அமடி கலாபபாசம் கணை குளிரிசலாகைபாசம்-அங்குசமசூலம் குகுரசரிகை புளபாசட்டி தண்டம் முதலாகிய அளவற்ற அயுதங்களைதாங்கி பூரவாதிதிகாவலர்கள் எழுபத்தெண்ணாயிரவேகபடி யுகவெளாவ பாடிபடை சூழவடி இலக்க வீரர் விராயகதகடவுளை எனறும் பிபாகி நிதுக்க முதலாகத்தின்மீ தேறினார் எண்ணாயிரவேகபடி யுகவெள்ளங்கள் புடைசூழும்படி வீரபதிரகடவுளானவர் எறி சூரபதி கதகி பெரிதினார் காலாயிரங்கோடி தேவசாரதிகளின்னவரா புடை சூழவடி பல் வீருபுயாசலங்களையுடைய சண்முகக் கடவுளானவர் மயில் வாகனத்தின் மேலேறினார். மூப்பதுதமுகோடி தேவகணங்களும் அளவற்றவிருடைபர்முதலாயினோர்கள் புடைசூழும்படி தேவாதிதேவ வெள்ளையானையின்மீ தேறினான் சண்டனகதி * மாகாளன் தாளபடாதரன் தேகாகன்னன்-கஜகன்னன் முதலிய அளவற்ற பிரமதகணங்கள் தங்கள் தங்களுடைய பூதவெள்ளங்களோடுஞ்சென்று சிவபெருமானுடைய தேரைபபுடைசூழ்ந்தார்களாக உடனே தூரியபடலங்களாகாயவெளியையமறைக்கும்படி யெழுந்தன அவ்வமையபடிகருதத்தென்றல் சிவபெருமானுடைய தேருருளோருளும் புனிதரிலாகளாகியபூதகணங்களுடைய பாதலக்களும் பூமியின்மீது சாரத்த புணணியபலத்தால் அப்பூமியானது அறுவடிவங்களாகச சென்று சுவாகக மேறுவது போலவும், சகல தேவர்களும் இரதமாகததிரண்டு நமமிடத்து வந்தனராதலால் நாமும் அவரிடதிற் செல்லலாமெனக்கருதிஆவலோடெழுவதுபோலவு மிருந்தன.

---

* மாகாளர் - ஐயனார் இவர் வெபெருமானுக்கும் லிட்டுணுவாயெ மோகினிக்கும் பிறந்தவர். அசனுல் அரிகரபுத்திரன் என்றுமபர கோகன்னன் - புகழின் செலியுடையவன். கஜகன்னன் யானைபோலுஞ் செவியுடையவன்.

மேலும் இத்தன்மைத்தாகிய அளவற்ற சேனைகளெல்லாஞ் சத்தசாகரங்களையொத்தும், இச்சேனைகள் செய்கின்ற வாத்திய முழக்கமெல்லாம் அக்கடலி லுண்டாகின்ற ஓசையையொத்தும், இச்சேனைகளில்விளங்குகின்ற குடைகளும்பீலிக்குஞ்சங்களும் அக் கடல்களி லுண்டாகின்ற நுரைகளையும் பாசடையையுமொத்தும், இச்சேனைகளேந்தியிருக்கின்ற வாளாயுதங்களும்வேலாயுதங்களும் அக்கடல்களில் மேய்கின்றமீன்களையொத்தும், இச்சேனைகள்பிடித் திருக்கின்ற கேடகங்களெல்லாம் அக்கடல்களிலுலாவுகின்ற ஆமை களையொத்தும், இச்சேனைகளினடுவே விளங்குகின்ற பதாகைக ளெல்லாம் அக்கடல்களி லெழுகின்ற அலைகளையொத்தும், இச்சே னைகளா லெழுகின்ற தூளிபடலங்க ளெல்லாம அக்கடல்களையுண் ணவந்த மேகங்களை யொத்தும், தேவர்கள் சொரிகின்ற புட்பவரு ஷங்களெல்லாம் அம்மேகங்கள் சொரிகின்ற சகல வருஷங்களை யொத்துமிருந்தன. அன்றியும் சிவபெருமா னுரோகணித் திருக் கின்ற ரதமானது கடலிற்செல்கின்ற மரக்கலத்தைப் போலவும், அந்தரதத்தின் கொடிஞ்சிகளி லுயர்ததி யிருக்கின்ற கொடிகளிலு ள்ள இடபமுத்திரைகளெல்லாம் அம்மரக்கலத்தை யோட்டுகின்ற மானுடிகளைப்போலவும், பக்கங்களிற் புடைசூழ்ந்திருக்கின்ற சிறு ரதங்களெல்லாம் அம்மரக்கலத்தை நெருங்கி யிருக்கின்ற தெப் பங்களைப்போலவு மிருந்தன. இவ்வாறு சகல சேனைகளும் புடை சூழ்ந்து நெருங்கியினைர்ப் பிரமதேவனவன் அத்தேறிற்கட்டி யிருக்கின்ற வேதப்பரிகளைத் தூண்டி இமய மலையானது மற்றை மலைகளெல்லாந் தன்னைப்புடைசூழவெழுந்து செல்வதுபோலமற்ற வீரர்களுடைய பரிகளும் இரதங்களும் பின்னிடத்தக்கதாக மனோ வேகத்தினும் அதிகவேகமாகச்செலுத்திய திரிபுரனுடைய சேனை கட்கெதிரே கொண்டுவந்து நிறுத்தினன திரிபுரன் அச்சேனைகளி னுடம்பரங்களைக்கண்டு சற்று நடுங்காதவனாகி மேகத்தைப்போலக் கர்ச்சித்துத் தனது அவுணசேனைகளையெல்லா மழைத்துக்கொண் டு குமாரர்கட்குந் திரிபுராதிகட்குந் தங்கள் தங்கள் படைகளோடு தனித்தனியே யுத்தஞ்செய்யக் கட்டளையிட்டுத் தானுந் தேரிலேறி அதனிலவாயுவேகத்தினும் விரைவாக நடத்திச் சிவபிரானுடைய இர தத்திற்கெதிராகக்கொண்டுவந்து நிறுத்தினன். அதைக் கர்த்தன். பார்த்துத் தம்மிடத்திருக்கின்ற சுத்த வீரர்களுடைய கர்வத்தை யழிக்கு நிமித்தமோ மற்றை யாதுகாரணமோ ஓர் நிமையேனுந் திரிபுரன் முதலிய சகலரையு நீறுக்கத்தக்க தெய்வப்படைகள் தம்

மிடத்திலிருந்தும் அவனோடு யுத்தஞ் செய்யுங் கருத்தினராய்க் கணேசமூர்த்தியை மனதிற்றியானித்து மேருவில்லைத் தமது திருக்கரத்திற் பிடித்தருளினர். அவுணர்பெருமானுடைய திரிபுரனும் அக்கணேச மூர்த்தியைத் தியானிதத்த தனது வில்லைக் கையிலேந்தினன். பின்னரிருவரும் தும்பைமாலை சூடிகொண்டு விற்களில் நாணேற்றி உடல் குழைய வளைத்து விரலாற்றெறிதத்தொனிசெய்தார்கள். தொனிசெய்த மாத்திரதத்தில் அஷ்டகுலாசலங்களுடைய சத்தசாகரங்களுந் தளம்பின பூமிகளெல்லாம் பிளந்தன. அண்டங்களெல்லாங் கிழிந்தன விருடிஷங்களெல்லாமடிந்தன சர்ப்பங்களெல்லாங்கலங்கின. உடுக்களெல்லாமுதிர்ந்தன அஷ்டதிசைகளுமழிந்தன தெய்வ லோக மதிர்ந்துதிடுக்குற்றன நாகலோகமுணர்ந்து நடுக்குற்றன.

இவ்வாறு மாறிமாறி நாணைதறித்துத் தொனிசெய்து இருவர் கைகளு மோயாமல் அளவற்ற அம்புமாரிகளை முருவலீதொருவர் சொரிந்தார்கள். சுப்பிர மணியரோடு பிரசண்டனெதிர்த்தான், நந்திதேவரோடு சண்டனெதிர்தான் இந்திரனோடு திரிபுரன் மந்திரி யெதிர்த்தான்; சயந்தனோடு மதனென்பவனெதிர்த்தான். புட்பதந்தனோடு காலகூட னென்பவன் தனது பொன்கோட்டையைச் செலுத்திக்கொண்டு வந்தெதிர்தான் வீராபத்திரருடனே வச்சிரதமிஷ்டிர னென்பவன் தனது இருபபுக்கோட்டையைச்செலுத்திக் கொண்டு வந்தெதிர்த்தான். இலகுருடனே மீமகாப னென்பவன் தனது வெள்ளிக் கோட்டையைச் செலுத்திக் கொண்டு வந்து எதிர்த்தான். புருசுண்டியுடனே மற்ற வீரகளெல்லா மெதிர்த்தார்கள், கண்டன் முதலிய படைத் தலைவர்களோடு திரிபுரன் படைத்தலைவர்க ளெதிர்த்தார்கள் இவ்வாறு ஒருவரோ டொருவர் கைகலந்து போர்செய்யுஞ் சமயத்தில் பூதவீரர்களெல்லாம் அவுண வீரர்களோ டெதிர்த்து வாள்களை வீசுவார்களும், கணைகளை விடுவார்களும், வேலாயுதங்களை யெறிவார்களும், யானைக்கூட்டங்களை யெல்லாம் அவைகளை நடத்துகின்ற பாகரோடு விழும்படியாக வெதிர்ப்பார்களும், இரதங்களையெலலா முரிப்பார்களும், குதிரைகளையெல்லாமடிப்பார்களும், பதாதிகளை யெல்லாங் கண்ட துண்டமாகச் சிதைப்பார்களும் ஆகியிருந்தார்கள். அவுண வீரர்களும் அப் பூதவீரர்கள் செய்யும் போரினைப் பார்த்து விழிகளில் நீப் பொறிகள் சிதறத் தக்கதாகக் கோபித்து அளவற்ற தேர்ப்பாகர்களையுஞ் சின்ன பின்னமாக்கிச் சயவுச்சாகத்துடன் ஆர்ப்பரித்துக்

கொடிஞாக்குவார்களும், பலபாண வருஷங்களைப் பிரயோகித்து அவ்வவர்கள் விற்களை ஒடிக்கதக்கதள்ளுவார்களும், தங்களைத் தாங்கள் புகழ்ந்து வெஞ்சினத்தோடு பேசுவார்களுமாகி யிருந்தார்கள் இவ்வண்ணமாக இருநிற படைசளும் ஒருவரோடொருவர்கலந்து போர்புரியுங் காலையில் சிலர் தாளறுதவராளார்கள்; சிலர் இடையொடிந்தவாளார்கள்; சிலர் தூடலசரிதவராளாகள்; சிலர் வலியற்றவராளாகள்; சிலர் கரபற்றவராளாகள்; சிலர்கைகுறைந்தவராளாகள்; சிலர் தோள் முரிதவராளாகள் சிலர் மூடியிழுந்தவராளாகள்; சிலர் மொழியிழுதவராளர்கள் சிலருதது நிணங்கள் சொரிதன; சிலருது தசைசள சரிதன; சிலருகருகுகண்ட மொழிதன; சிலருடநத செவிளறுதன, சிலருக்குவிழிகள் பிதுங்கின; சிலருக்கு ரலொதுங்கின; சிலருது பிரமொழிதன? வள வற்றகவகதகளாடல பிரபகன; அளவறற, பேய்கள் பாடலை செய்தன; அளவற்றபருகுரன் கூட்டபகழன; அளவறற காயகரிகள் ஓட்டஞ செயதன, இவ்வாறு மயகும் திர வெள்ளத்தாடுகிறைக் திருகின்ற யுகளமான நாளாளாறுதலினில பூமித்தலியாளவள் அளவறற பிணகளை யகதிக்கரண்டு கிருதமாடுவதைப் போலிருகதது

இவ்வண்ணம் பூதப்படைசள அவுணர் படைகளெல்லாம் அதப்படுதுதலைகிலை தருகன சிவபூசன சூரபன்ம னென்னு மூவருமே ஓருருவாகத் தருகநு வகதாறு ப்பானறமகா பராகக்ரமசாலியாகிய பிரசண்டனுனபரா தன படைவீராகளையெலலாம்கூட்டிக் கொண்டு சுப்பிரமணிய கடவுளோடு எதிரகத, உடனே சுப்பிரமணியக்கடவுளானவர் தமது மயில்வாகனதைத வட்டமா யோட்டி வில்லில் நாணேற்றி வள்ளதனுக கடையுகதபிபெய்கின்ற மேகம்போல அளவற்ற பாணவருஷங்களைப் பொழிது அரைகணப் போதில் அப் பாதகனுடைய சேனைகளெலலா மடிதது, அவன்விடுகின்ற கணைகளை யெல்லாம் நிலதது கிரையாக்கி, அவன் வில் முதலிய படைசளையுந் தேரையும் பொடியாகசெய்து, தேவர்களெல்லாரும் கடுங்கச்செய்கின்ற அவன் மாயைக் ளனைதையு நாகளு செய்து, தமது ஐந்துபாணங்களால அவனுயிரை நாசமாக்கினர். பிரளயுகாலதது ஞண்டாகின்ற பிரசண்டமாருதத்திற் கொப்பான சண்டனென்பவனை நந்திதேவரெதிர்த்து, அவன்படைகளையெல்லாங்கண்டதுண்டமாக்கி, ஓர் நொடிப்போதில் அவன் செய்கின்ற போரையெல்லாங் சூன்றச்செய்து தமது மூன்றுபாணங்களைவிட்டு அவனு

யிரைக்கொன்றார். பறவையைப் போலத் தனது பொன் கோட்டை யோடு மெழுந்து ஆகாய மார்க்கமாய்ப் பறந்து போர் செய்கின்ற காலகூடணைப் புட்பதந்த தெரிந்தது அவன் விடுகின்ற பாணங்களை யெல்லாம் விலக்கித் தமதம்பினாலாயும் அநந்தமார்க்கமாகச்செலுத்தி ஐந்து பாணத்தால் அவனுயிரையும் பொடி படுத்தினார், வெள்ளிக் கோட்டையோடு விரைந்து வந்து போர் செய்கின்ற வீமகாயனை இலகுகவீரர் எதிர்ந்து அவர் மார்பு உளையும்படி தங்களைச்செய்து அவன் படைகளையெலாம் அப்படியே பற்பினன். அவனுடலிலிருந்து உதிரவெள்ளம் பெருகுமாயிருக்க, தம்மை நாணாகளை விட்டு நகரமாங்னர். இருபத்தொரு படையைச் செலுத்திப் போர் செய்யவந்த வசுசிரதமிடியனை விரைந்து, கடவிளைத்து இனி நமது யுதத்தில்லையென்று அவன் தேரை அவனுக்கு மலங்கும்படி யாகத் தமது பத்தை அவனுக்கு ஏவுகர் பிரயுத்த நாணங் களை விடுத்து அவனுயிரைப் பானஞ்செய்தனர். இருநாணனவன் திரிபுரன் மகதிரிப்பா டெரிந்து ஆயிரம் மாயைகளைச் செய்து, அவன் படைகளை யெல்லாம் பிரமாஸ்திர தனது வச்சிராயுதத்தால் அவன சிரதத்தை யறுத்தெறிந்து வெற்றிமாலை சூடிகொண்டனர். சயத்தனனவன மதினனையனை பொதிரதத அவனவிடுகின்றபடை களையெலாமுரித்தும் மீளவும் கண்ணகையும் சன்னபின்னபடுத் திதத தனது வாளினுலுமா கிரமுருமுபடி வெட்டினன் புருசண்டி யென்பவர மறைய வீரர்களையும், கணடனமுதலிய சேனைத்தலை வர்கள் திரிபுரன்சேண்ட தலைவர்களையு மெதிர்தது போர்செய்து அவர்சரீரங்களையெல்லாம் கழு து பருந்துமுதலானவைகட்குவிருந் தூட்டினர்கள்.

இப்பால் மகமேருவை வில்லாகவுடைய எமது கர்த்தரானவர் திரிபுரனேந்தியிருக்கின்ற வில்லைக் கண்டணுண்டமாக்கி, அவனைப் புடைசூழ்ந்திருந்த அவுணவீரர்களையெல்லாம் அரைக்கணத்தில் நாசஞ்செய்தனர் உடனே திரிபுரன் மற்றொரு வில்லை யெடுத்து வளைத்து அண்டகடாகங்களு மதிரும்படியாகச் சந்தித்துத் திரு மாலே இடபமாக வூர்ந்தருளிய சிவபெருமானுடைய ரதத்தின்மீது ஒரு கொடிப்போதில் நூறு ஆயிரம்-பதினுயிரம்-கோடி யென்னுங் கணக்கினு மளவுபடாத அளவற்ற பாணங்களைப் பொழிந்தனன். அவைகளையெல்லா மெமது கடவுளானவர் இமைப்போதில் விலக் கித் தமது மேருவில்லி லளவற்ற கணைகளைத்தொடுத்து அப்பாதக னுடைய கிரீடம்-கவசம் - வில்-தூணி-தேர்-உதவித்தேர் முதலான

எல்லாச செருக்கையும பொடியாக்கித் தும்சப் படித்தினுர், பின்னர்த் திரிபுரனனவன் வேணிறகாலத்து ஒதிய மரம்போல ஆயுத முதலான சகல வாதாரவுகளுமற்று மிக்க நாணத்தோடு நின்றுன். இப்படி நிற்கின்றவனே எம்மை யடிமையாகவுடைய சிவபெருமான் பார்த்து திரிபுரனே! இனனும் எம்மோடு செய்யத்தக்க யுத்தங்கள் யாதேனு மிருகருமாயின, அதனே அப்பாற் சென்று யோசித்து விரைவில் வருது செய்யகடவையென்று திருவாய்மலர்ந்தனர். அச்சமயத்தில திரிபுரனனவன் தனது மைந்தா முதலிய அளவற்ற சேனைகள் மடிநதாகளெனறு கேள்விப்பட்டு ஊழிகாலத்திலுண்டாகின்ற வடவானலதகைப்போலக கொதிதது பெருமூச்செறிந்து தனது கிலேசஙகளேயெலலாம் போககி, வீராவேசங்கொண்டு மூப்புரஙகளேயும் வரும்படி நினைத்தனன். அப்படி நினைக்கு முன்னமே அவைகள் விரைநதுவர அம்மூன்றினுமூன்றுவடிவெடுத்துப் புருந்து, சிவபெருமானுகெதிராகசசெலுதகிகொண்டுபோவான்; மீட்டும அவைகளோடெழுநது ஆகாயததிற் பறப்பான்; அங்கிருந்து சமுத்திரஙகளிற குதிபபான, அவவிடம் விட்டு அட்டதிசைகள்தோறும் பாய்வான்; அவைகளினின்று பூமியிற் பாய்வான்; பூமியிலிருந்து பாதலததிற் பாய்வான்; மீளவு மெழுந்துவந்து மற்றுருடைய மனததினும் கண்ணினும் பாய்வான்; இவ்வாறு எங்கும் பாய்நது வருகின்ற கொடுமையினுலே பதினுலோகங்களும் பயந்தன. அண்டகடாரஙகளெல்லாஙு கலங்கின. சுவர்க்கலோக நாக லோக முதலிய அளவற்ற லோகஙகளெல்லா மதிர்ந்தன. சிவபெருமானுநு தமது தேரை நடாதகிகொண்டு அவன் பாய்கின்ற விடங்கள்தோறும் தாமும் பாய்நது அவன் செய்கின்ற மாயைகளே யெல்லாமாய்த்து அளவற்றகாள் யுததஞசெய்து கொண்டிருந்தனர்.

இவ்வண்ணம நெடுநாள்வரையி லெமது கர்த்தன் போர்புரிந் திருப்பதைத் தேவர்களெல்லாம பாாதது மனந் துவண்டி யாவருமொன்றுகக்கூடி, ஐயோ! நமது சிவபெருமான் தம்மை வணங்கிப் பிரார்த்தித்தவர்கட்கு இமைப போதிற் நமது திருமேனியைத் கேட்கினுங் கொடுததருளுகின்றவராதலால் ஒருவேளை இத்திரிபுரன் பணிந்து இன்னும் பலவரங்களைக கேட்பானுயின். அவைகளைக் கொடுத்தாலுங் கொடுப்பாரேயென்று பயந்தி, யாவருங் கூடத்தில் வந்து அஷ்டாங்கமாகச் சேவித்து நினைதயாருளேல் தொடக்குமுன்னே சகலலோகங்களேயு நீறுசெய்யத்தக்க சுவாமிகள் இத் திரிபுரனுடனே நெடுநாள் நமதருமைத் திருக்கரததி னிரயுதத்த

ஸ்ரீச் சுமந்து யுத்தஞ்செய்யத் திருவுளங்கொண்டிருப்பதைப் பார்க்கின் ஈதொரு விளையாட்டேயன்றி வேறில்லை. சுவாமிகள் திருமேனியை யிடைவிடாது தரிசிப்பதனாலே அவனும் மகா தவத்தினையுடையவனையினன் சுவாமிகளைவீஞ்சி நீடித்து யுத்தஞ் செய்வதைப் பார்த்து யாங்கள் சகிக்கிறோம் தேவரீர் அடியேங்கண்மீது கிருபை வைத்து விரைவில் அவனைச் சங்கரித்து யாங்களெல்லாங் கண்டு தரிசிக்கும்படியாகத் தமது திருமேனியில் வாகைமாலை தரித்தருளவேண்டுமென்று பிராத்திக்கலாயினர் (ஐடப்பாகத் தமர்ந்திருக்கின்ற உமாதேவியாரும் அவ்வார்த்தை விண்ணப்பஞ்செய்துகொண்டனர். அதற்கு சிவபிரான் ஸ்ரீவிஷ்ணுவை பார்த்து பெண்ணே! முன்னொரு காலத்தில் நீ காஞ்சிபுரத்தில் தவஞ்செய்து வாதாகாடினதுபோல இத்திரிபுரனுடைய பராக்கிரமத்தினை நீ காணும்பொருட்டு இதுகாறுமவனோடு யுத்தஞ்செய்தனம் (ஸ்ரீ. அவனையும் அவன் திரிபுரங்களையும் யாமழிக்கின்றதைப்பார்க்க கடவையென்று திருவாய்மலர்ந்து கணைசந்தித்ததை ஸ்ரீசரிந்து தமது திருக்கரத்தில் முத்தலைச் சூலத்தைபெடுத்தனர் உடனே யாவருந் திரிபுரமும் பலியும் வெந்து நீறுணைந்தகண்டார்களென்பன். அருமையிவ்வாறு சென்றதென்று ஒருவருங் கண்டதிலை

இப்பால் சிவபிரான் செய்த யுத்தவலக்காரத்தை அத்தரவாசிகளாயிருந்து தரிசித்த முனிவர்கள் முதலாயினோர் அவற்றைகளிப் படைந்து இத்திரிபுரன் தேவர்களென்றெல்லாம் வெற்றி கொள்ள வல்ல பராக்கிரமசாலியாயினும் தன்னின் மிக்காரோடு மெதிர்க்கச் செல்வது முறைமைதானே? ஆயினும் போகியாகியும், போகியற்குப் போகியாகியுமிருந்து சகல ஜீவராசிகளையு நடிப்பிக்கவல்ல ஏகனுடைய சமது சிவபெருமானே இத்தன்மைதானான போரினைச் செய்துகாட்டாராயின் போர்முகத்தின்றும் யுகமாதிகளைக் கிரமப்படி வகுத்து விதியோடு யுத்தஞ் செய்வதற்கு யாவர்க்கும் விளங்காதாகையால் அவற்றினை சமது கர்த்தனுல் விளக்கிக் காட்டுமாறு இத்திரிபுர ரெருமுன்னிலையாக விருந்தனனென்று துதித்தார்கள். சிவகணங்களெல்லா மாரவாரித்துச் சந்தோஷித்தார்கள். தேவர்கள் மலர்மாரி சொரிந்தார்கள் பிரமன்விண்டு முதலாயினோர் நமது தன்பமின்று நீங்கியதென்று ஆனந்த சாகரத்தின் மூழ்கினர்கள். சிவபெருமான் விட்ட சூலமானது மீட்டுந் திரும்புவதன் முன்னர்த் திரிபுரன் கர்த்தன் திருவடிகளில் வந்து ஐக்கியமாயினன். அன்று

முதல்எமது கர்த்தனைத் திரிபுராரி யென்னு காமத்தால் யாவருங் துதிப்பாராயினர். அமர்க்களத்தில் மடிந்த பூதகணங்கள்மீது சிவ பிரான் கடைக்கண் பார்வை செய்தலும் அவைகளனைத்து மெழு ந்துவந்து கர்த்தன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினபின்னர்க் கர் த்தன் மீட்டுங் கைலாயவரையைச் சேர்ந்து தம்மைத் தொழுகின்ற அடியவர்கட்கெல்லாங் குருவருள் சுரந்து கொண்டிருந்தன திரிபுர னைத் தகனஞ்செய்த தினத்தில் விண்டு முதலிய தேவர்களெல்லாஞ் சிவபெருமானுக்குத திருவிழா நடதத்தித் தங்கள் தங்கள் பதவிக ளைச் சேர்ந்தார்கள். திரிபுரன் முத்திபடைந்தது புரட்டாதி மாதம் பூரணி யாதலால் அதனைதனை யாவரும் பாகுளியென்று வழங்கு கின்றார்கள். வருடந்தோறு மததினதகில் யாவரேனுஞ் சிவபிரானு க்குத் திருவிழாச் செய்தாலும் அவ்வவர்கள் சத்திக் கேற்ற வண் ணம் அருச்சனை முதலானவைகளை நடாத்தினாலும் நெய்யாலாயி னுந் தைலத்தாலாயினுந திருவிளக் கேற்றிவைத்தாலும் அவர்களை எக்காலத்தினுந் தீவினையணுகாது, இவ்வாறு ஒரு சிவபுண்ணியமே னுஞ் செய்பவராயின் திரிபுரனல் தேவர்களெவ்வளவு துன்பமடைந் தார்களை அவ்வளவு துன்பதனை யடைவார்கள் இதனைச் சத்திய மாக எண்ணக்கடவீர்கள் அன்றியும் அத்தினத்திற் பிராதக்காலியி லெழுந்து நித்தியநியமங்களை முடித்துச சிவபெருமானை யன்போடு பூசிப்பார்களாயின் அவர்கட்கு முற்பிறப்பிற்செய்த பாவங்களெல் லாமொழியும் உசசிகாலததி லாராதிப்பார்களாயின் அம்மூற்பிற வியினெடு இம்மையிற்செய்த பாவங்களெல்லா மொழியும். மாலைக் காலத்தில் வந்திப்பார்களாயின் மூற்பிறவிகள்தோறுஞ்செய்து மூற் றிய பாவங்களெல்லா மொழிவதன்றி அவ்வவர்க ளிச்சித்த சகல பொருள்களுந் வந்து கைகூடும்.

திரிபுர தகனப் படல முற்றிற்று.

விநாயக விரதங்கேட்ட படலம்.

அமைவன் முப்புரம் பலியொடு மழித்தவா ரிதுவாங்
குமை யயிற்படைச் சோமகாந் தப்பிபயர்க் கோவே.
யுமை விநாயகர் சதுர்த்தியின் விரதங்கேட் டுணர
யிமைய மன்னவ னிசைத்ததோ ரெனச்சொலும் பிருகு.

காதலின் விநாயகர் கதைக ளின்னுமீ
போதுதல் வேண்டுமென் றுயர் வியாதனு
மாதவ னிரத்தலு மகிழ்ந்து தாமரைப்
போதமர் நான்முகப் புனித னெனுவான்.

முனிவர்களே! சிவபெருமான் விநாயகமூர்த்தியை வணங்கித்தன் திரிபுர தகனஞ் செய்த வரலாற்றினை சொன்னோம். இப்பால் உமைபங்கை யுபாசித்த திறத்தினை சொலலுவோம் கேட்பீராக. முன்னொருகாலத்திற் பிரமன்குமாரர்களில் ஒருவனெனப் பவன் அரிய தவங்களைச் செய்து சகல தேவதை நாயகியாகிய உமாதேவி தனக்குப் புத்திரியாகி வரவும், தேவர்கள் முதலாயினோர் தனதாணையைக் கடவாமல் நடந்து கொள்ளவும், இன்னு மிவை முதலிய அளவற்ற வரங்களைப் பெற்றுச் சகல செல்வங்களையும் அநுபவித்து மிகவும் பிரசித்தனுகி வாழ்கின்ற காலையில், உமாதேவி தனக்குப் * புத்திரிபாகிவர அவ்வம்மையைச் சிவபிரானுக்குத் திருக்கல்யாணஞ் செய்துகொடுத்துப் பின்னை பொருகாள் கைலாயத்திற் சென்று கர்த்தன் சந்நிதானத்தை யடைந்தபோது மருமகனுகிய சிவபெருமான் தன்னைக் கண்டபுடனெழுந்து மரியாதை செய்யவில்லையென்னுங் கோபத்தாலே அவ்விடத்தினின்று நீங்கித் தன் னரண்மனையைச் சேர்ந்து கர்த்தரைக்குறித்து அவரினுந்தானு யர் வடையவேண்டுமென்னுங் கருத்தினாலே விண்ணாதி சகலதேவர் களையும் வரவழைத்து அவர்கள் முன்னிலையில் ஒரு யாகத்தை நடத்துவானுயினன். அதனை யெமதன்னையாகிய பார்வதி தேவியார் கேட்டுச் சிவபெருமானிடத்தில் விடை பெற்று சென்று தம்சுரவர்களாகிய தக்கனையும் வேதவல்லியையுங் கண்டு வந்திக்க அதற்கவர்கள் சற்றும் போற்றுதல் செய்யாது நிந்தனை செய்தார்கள். உடனே உமாதேவிக்கு அதிக கோப முண்டாகி இந்த யாகசாலை பேய் விளையாடுஞ் சுடலைபோலக் கடவதென்று சபித்து மீட்டும் கைலாயவரையைச் சேர்ந்து, தக்கன் செய்துவருஞ் கொடுமை யிவ்வாறென்று சிவபிரானுக் கறிவித்தலும் அவருக்குக் கோப மூண்டாகி அக்கோபாக்கியினின்றும் வீரபத்திரக் கடவுள் தோன்ற அரைக்ஷணத்தின் பார்த்தருளி ரீரங்கிமிடத்திற் சென்று, தக்கன் யாகத்தை பழித்து வருவீரென்று கட்டளையிட அவர் அவ்வாறே சென்று

---

* தக்கனுக்கு புத்திரியாய்த் தாக்ஷாயிணி யென்னும் பெயர் பெற்றனர் என்று கந்தபுராணமும், சதி யென்னும் பெயருற்றனர் என்று கூர்ம புராணமும் கூறுமென்க.

அங்குவந்திருக்கின்ற சகலரையு நாசஞ் செய்து மீட்டுங் திரும்பிய மாத்திரத்தில் சிவபிரானுக்குக் கிருபைசுரந்து யாகத்தி லிறந்தவர் களையெல்லாம் பிழைப்பித்து, இனி தூர்க்கிருதியங்கட் குடன் படாதீர்களென்று சுட்டளையிட்டு அவ்வவர்கள் பதவிகளிற் செல்ல விடைகொடுத்துப் பின்னர்த் தக்கனருகில் வந்து அவன் தம்மை நிந்தைசெய்தவ ணதலால் அதற்கோர் அபராத அடையாளமாக ஆட்டுத் தலையை யவனுடலிற் பொருத்தி யெழுந்திருக்கும்படிச் செய்தார் இப்பால் பார்வதி தேவியார அவையினத்தையும் பார்த் துச் சிறிது கோபந்தனிந்து நமது நாயகரை நிந்தித்த தக்கனுக்கு நாம் புததிரியா தேஞமென்று உலகமபழிக்குமாதலால் அப்பாதகனுல் வளர்க்கலுற்ற சரீரத்தை வைத்திருத்தலாகாதென்று மனவருத்த முற்று, தமது யோகாக்னியினுற் றேகதகதைவிடுத்துப் பர்வத ராச னுடைய தபோபலத்தினாலும், மேனை செய்த தரும விருத்தியினு லும் அவர்கட்குக் குமாரியாகத் திருவவதாரஞ செய்து நாளுக்கு நாள் வளர்பிறைபோல வளர்ந்து, பந்து கழங்கு ஊஞ்சல் முதலிய திருவினையாடல்களைச செய்து பறபல வேதாகம சாஸ்திரங்களைப் பயின்று வருங்காலத்திற் சிவபெருமான் கங்கையைக் கல்யாணஞ் செய்துகொள்வதன் முன்னர்த தம்மைச செய்து கொள்ளவேண்டு மென்னுங் கருததினுறி தகதையாகிய பர்வதராசனை யடைந்து, தமதெண்ணததை யறிவித்து இது நிறைவேறுதற்கு ஓர்விரதத்தை யுணர்ததவேண்டுமென்று வினவ, அதனை யமமலையரசன்கேட்டலு மனமகிழ்ந்து அதற்குத தக்கபடி ஓர் விரதத்தை யாராய்ந் துணர்ந்து இதனைச சொல்லுவானுயினன்.

தன்மக விரத்தனுக் தயங்கு பேரொளிப்
பொன்மலி மன்னவன் புகதி நாடியே
வின்மையென் ணதரு மியு மைங்கர
னன்மைகொள் விரதததை நயந்து கூறுவான்.

மந்தண மாவது வல்லி நாற்பயன்
றந்திட வல்லது சாபந் தீர்தர
விந்திர னுற்றிய திறைமை மூவரு
மைந்துற வாற்றியே மருவு

அரும்பிய விடரெலா மறுக்கத் தக்கது
பெரும்பிணி முழுவதும் பெயர்க்கத் தக்கது
பொரும்பகை வலிகளும் போக்கத் தக்கது
விரும்பிய பொருளெலாம்

தேவர்க டேவன் கிந்தூர முகத்தவன்
மூவர்கண் முதல்வன் முத்தொழிற்குங் காரணன்
மேவர மகிழ்வது விளம்பு நாமமுக்
தாவறு விநாயக சதுர்த்தி யென்பரால்

தாயே! மிகச்சிறப்பை யுடையதும் விரைவில் நற்பயன்களை யளிப்பதும், இந்திரன் சாபத்தை நீக்கியதும், பிரமனுதியர்க்குஞ் சிருட்டியாதி தொழில்களைத் தக்கதும், சகல விடர்களையு நீக்கத் தக்கதும், சகல பொருள்களையு மளிக்கத்தக்கதும், இன்னு மிவை முதலான அளவற்ற மகிமைகளையுடைய ஈரு விரதமிருக்கின்றது. அவ்விரதம் தேவதேவோத்தமராகியும், முழுவ முதல்வராகியும், முத் தொழிற்குக் காரணராகியு மிருக்கின்ற யானைமுகக் கடவுளுடைய சதுர்த்தி விரதமாகும் இத்தன்மைத்தாகிய மேலான விரதத்தை யனுட்டிப்பீராயின் நீர் கருதிய வண்ணம் உடனே பெற்றிக்கு மாதலால் அதனை யனுட்டிக்கு முறைமையையுஞ் சொல்லுவென்கேட்பீராக.

ஆவணிமாதம் பூர்வபக்கத்தில் வருகின்ற சதுர்த்தி தினத்தில் அவ்விரதத்தை யாரம்பிக்கவேண்டும் அவ்வண்ணமாரம்பிப்பவர்கள் அத்தினம் ஆதிகாலையி லெழுந்து, ஸ்நானஞ்செய்து நித்திய வனுட்டானங்களை நிறைவேற்றி, அபிஷேகத்திற்குரிய திரவியங்களையும் அருச்சித்தற்கேற்ற மலர்களையும் நிவேதனத்திற்குத்தக்க பதார்த்தங்களையும் தூபதீபங்கட்கு வேண்டும் பொருள்களையுஞ் சேகரித்து, ஓர் பூசாமண்டபத்தை யழகுபொருந்தச் சமைத்து, பரிசுத்தமான விடத்தில் மிருத்திகையெடுத்து வந்து அதில் வேர்கள், செல்லுமுதலிய செந்துக்கள், கல்லுகள் என்னு மிக்குற்றங்களில்லாமற் சோதித்து, அதனைப் பிசைந்து சிற்பசாத்திரத்திற்கூறியிருக்கின்ற முறைமைப்படி விநாயக மூர்த்தியினுடைய திருவுருவஞ் சமைக்க வேண்டும் இதுவன்றியும் பொன்னிலொரு திருவுருவமுஞ் சமைக்க வேண்டும். செய்யச் சக்தியில்லாதவர்களாயின் ஒரு பலம் அரைப்பலம் காற்பலம் என்னு மிவ்வித அளவிலேனுஞ் சமைத்தல் வேண்டும். பின்னர் ஆசிரிய ருத்தரவின்படி சுத்த கங்கையில் ஸ்நானஞ் செய்து திருவெண்ணீரணிந்து சிரம், கண்டம், கரம், செவி என்னு மிவ்விடங்களில் உருத்திராக்ஷ கண்டிகை தரித்து, மேற்சொன்ன பூசாமண்டபத்திற்கு வந்து தண்டிலம் பரப்பி அதன்மேல் இழை சுற்றி நீர் நிரப்பி யிருக்கின்ற பொற்கும்பத்தைவைத்து, முன்னர்ச்

சமைத்திருக்கின்ற மிருத்திகை மூர்த்தியையும், பொன்மூர்த்தியை யும் அதனருகி லெழுந்தருளச் செய்து, ஆகமவிதிப்படி பூசித்து ஒன்று இரண்டு - நான்கு ஐந்து - ஆறு-எட்டு-பத்து-பன்னிரண்டு-இருபத்தெட்டென்னு மெழுதுதற்களுள்ள மந்திரங்களுள் ஒரு மந்திரத்தைச் செபிக்கவேண்டும் இவற்றுள் ஒன்று - இரண்டு - நான்கு என்னு மெழுத்துக்களுள்ள மந்திரங்களே இலக்க உருச் செபிக்கவேண்டும். அதற்குக் கூடாமையின் அவ்வெண்ணிற் பாதி யுருவேனுஞ் செபிக்கவேண்டும் ஐந்து - ஆறு-எட்டு பத்து-பன்னி ரண்டு என்னு மெழுத்துக்களுள்ள மந்திரங்களே நூறுபிர மூருச் செபிக்கவேண்டும்: அதற்குக் கூடாமையின பதினையிரமுருவேனுஞ் செபிக்கவேண்டும் இருபத்தெட் டெழுத்துள்ள மந்திரத்தைக் குறைவில்லாமற் பதினையிரம உருச் செபிக்கவேண்டும் இவ்வாறு செபித்துங்காலையில் பத்துக்காருகால் தருப்பணஞ் செய்யவேண் டும் பகலுத் தருப்பணத்திற் கொருகால ஒரு ஓமஞ் செய்யவேண் டும் பத்து ஓமத்திற் கொருகால் அறுசுவை பதார்த்தங்களோடு அன்னதானஞ செய்யவேண்டும் இந்தக் கிரமமாகப் பூசைசெய்து நிறைவேற்றுங்காலத்தில பொன் பூமி முதலானவைகளைத் தானஞ் செய்யவேண்டும் அடுத்த மாதஞ சுகிலபக்ஷ சதுர்த்தி வரையில் நாள்தோறு மேறசொலலிய முறைமைப்படி பூசைசெய்து மிருத்தி கையினல் செய்யப்பட்ட விநாயக மூர்த்தியை மிருத்த தீதவாத்தி யங்களோடு மெழுந்தருளச்செய்து மடியிலாவது தடாகத்திலாவது நதியிலாவது வைத்துவிடவேணும்

இவ்வாறு பூசைசெய்கின்ற முப்பதுநாளும் ஆகாரநித்திரை யில்லாமல் சத்தாதி விஷயங்களை நிகரிசரித்து முப்பத்தோராநாள் விருந்து, ஒக்கல், அதிதிகள், பரதேசிகள் முதலானவர்களோடு போசனஞ் செய்யவேண்டும் முப்பதுநாளும் ஆகாரபின்றி யிருக் கச் சத்தியில்லாதவர்கள் இவ்விரதத்தை யாரம்பிக்கு முதல்நாளி லாவது அவ்வர்றிருந்து மறுநாள் தொட்டு அரிசி, பழம், பால் இவைகளி லொன்றைப் புசித்துக்கொண்டு விரதமனுட்டிக்கவேண் டும். முப்பதுநாள் அநுட்டிக்க மாட்டாதவர்கள் ஆரம்பித்த ஒரு நாள் மாத்திரமாவது ஆகார முதலியவைகளை நிகரிசரித்து மேற் சொன்ன முறைப்படி யநுட்டிக்கவேண்டும் தானஞ்செய்யுமுறை மையில் அவ்வவர்கள் செல்வத்திற்குத் தக்கபடி செய்யவேண்டும். எவ்விதத்தேனும் இருபத்தொருபேருக்கு அன்னதானஞ் செய்து வரல்வேண்டும். அன்றியும் ஒருருவத்திற்பூசிப்பவர்கள் தனதானிய

புத்திரசம்பத்துண்டாகி அநேக பந்துவர்க்கங்களோடும் வாழ்ந்திருப்பார்கள். இரண் டுருவங்களிற் பூசிப்பவர்கள் தங்கள் கருத்தின்படி அளவற்ற காரியங்களெல்லாஞ் சித்தியாகப் பெறுவார்கள். மூன்றுருவங்களிற் பூசிப்பவர்கள் நவரத்தினங்களு மலீபோலக் குவித்திருக்கப் பெறுவார்கள். நான்குருவங்களிற் பூசிப்பவர்கள் தருமமுதலிய நான்கு புருஷார்த்தங்களுங் கிடைக்கப்பெறுவார்கள். ஐந்துருவங்களிற் பூசிப்பவர்கள் சார்வ பௌமராக வாழ்வார்கள். ஆறுருவங்களிற் பூசிப்பவர்கள் சிருட்டியாதி முத்தொழில் கட்குந் தலைவராவார்கள். ஏழு எட்டு ஒன்பது என்னு மிவ்வுருவங்களிற் பூசிப்பவர்கள் சர்வஜ்ஞத்வ முடையவராவார்கள். பத்துவடிவங்களிற் பூசிப்பவர்கள் நிகழ்காலம் இறந்தகாலம் எதிர்காலம் என்னுந் திரிகால ஞானத்தையுடையவராவார்கள். இந்தப் பத்துருவங்களிற் செய்யும் பூசாபலத்தினால் சனகராதி முனிவர்களும் விண்டுவாதி தேவர்களும் அளவற்ற அதிகாரங்களைப் பெற்றார்கள். பதினேருருவங்களிற் பூசிப்பவர்கள் சகல ஆன்பங்களுந்தொலையப் பெறுவார்கள். பன்னிரண்டு முதல் நாற்பெட்டுருவங்கள் வரையிற் பூசிப்பவர்கள் ஒன்றுக்கொன்று மேலான பயன்களையெல்லாங் கிடைக்கப்பெறுவார்கள். ஆயிர முருவங்களிற் பூசிப்பவர்கள் இம்மையில் மலவிருளினின்று நீங்கி மெய்ஞ்ஞான சுகத்தைப்பெற்று வாழ்வதன்றி மறுமையில் மோக்ஷ சாம்ராச்சியத்தை யடைந்து தங்களிருபத்தொரு தலைமுறைகளிலுள்ளவர்களையுமுத்தியிற்சேர்ப் பார்கள்.

மேலும் ஏழுமூர்த்திகளை மூன்றுநாள் பூசைசெய்தால் சகல பிணிகளும் இடர்களுந் தொலையும்; ஒன்பதுநாள் பூசைசெய்தால் அனந்தசித்திகளுமுண்டாகும்; ஐந்துவருடம் வரையிற் பூசித்தால் எல்லாப் பாதகங்களுந் தீரும். இடைவிடாது அந்தியகாலம் வரையில் பூசித்தால் விநாயக மூர்த்தியினுடைய சாயுச்சிய பதவியை யடைவார்கள். இவ்வாறு அவ்வவர்கள் சத்திக்கேற்றபடி எத்தனை மூர்த்திகளிற் பூசித்தாலும் அப்பூசனையில் மூலமந்திரம், ஏகாட்சர மந்திரம், சடாக்கரமந்திரம் என்னும் இம்மூன்றிலொன்றைச் செபித்து முடிவில் தருப்பணங்களை முடித்துத் தம்பதி பூசையுஞ்செய்யவேண்டுமென்றுஞ் சொல்ல, அவையனைத்தையும் பார்வதி தேவியார் கேட்டு மனமகிழ்ந்து இவ்விரதத்தை முன்னர் யாவரனுட்டித்திருக்கின்றார்களென்று கேட்கப் பார்வதாசான் சொல்லுவான்.

தாயே! முன்னொருகாள்சகலதேவர்களும்புடைசூழ்ந்துவணங் கத்தக்கதாகச் சிவபெருமான் கைலாயத்தி லெழுந்தருளியிருக்கின் றபோது சுப்பிரமண்ணியக் கடவுள் அச்சந்நிதானத்திற்கு வந்து கர்த்தனீட பலமுறைவந்தித்து விண்ணப்பஞ் செய்ததாவது:—சு வாமீ! அளவற்ற விரதங்களுள் மேலான விரதமாகவும், விரைவில் சகலபயன்களையு மளிக்க வல்லதாகவும்,மிகவுஞ் செவ்வையானதா கவு மிருக்கின்ற ஓர்விரதத்தை அடியேற்குந் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்ன, அதற்குக் கர்த்தன் கிருபைசுரந்து மைந்தனே! சகலவிரதங்கட்கு மேலானது விநாயகமூர்த்தியினுடைய சதுர்த்தி விரதமாகும் அதுவேவிணைத்த காரியங்களை விரைவில் முடிக்கத்தக் கது. அதுவே யாதினும் செவ்வைபா யிருப்பதென்று சொற்ற ருளினர்.

முதல் லாமுத லாகிய முதலவ னினது
பதம்வி ராவுறும் விரதங்கள் பலவுள வவற்று
ளிதமெ லாந்தரும் விரதமொன் றுளவியம் பாது
மதம்வி ராவிய முகந்தவன் விரதத்தை வகுத்தாய். (க)

னைக்கு முன்னவ னுயிர்கு மிறைவனெம் பெருமான்
றனக்கு மைந்தனே தானவன் றம்பிரானை
னினக்கு மேலென நிற்பினன் றேயவன் விரதந்
தனக்கு மேன்மைமெய் தருமம்பல விரதங்க டம்முள். (உ)

அமரநாயக வடியனே னகத்துறு மல்லற்
றிமிரந் தீர்தரச் செய்யவாய் மலர்த்துக வென்று
குமர வேள்பணிந் திரத்தலுங் குழகனு ரைப்பார்
சமரவேலவ சரதமே னினக்குரைத் தனமால். (ங)

அதனைச் சண்முகக்கடவுள் கேட்டு, சுவாமீ! ஒன்றிருக்க மற் றொன்றைத்தேவரீர்திருவாய்மலர்ந்தருளியது அடியேன்சிறுபிள்ளை யென்று நினைத்தோ? அல்லது அதுவே சத்தியந்தானோ? ஆதிமத் தியாந்த ரகிதமாயிருக்கின்றதேவரீரது விரதங்கள் அளவற்றதாக விருக்கின்றன. அவற்று ளொன்றினை யறுக்கிரகஞ்செய்யாமல் விநா யகமூர்த்தியினுடைய விரதத்தையே மேலானதாகத் தெரிவித்தீர். அவ்விநாயகமூர்த்தி அடியேனுக்கு மூத்தவராயினும் தேவரீர்க்கவர் புத்திர ரல்லரோ? சகலபுவனகார சொரூபியாகிய தேவரீரினும் அவர் மேலானவரா யிருக்கின் சுவாமிக ளனுக்கிரகித்தவாறு அவர் விரதமும் மேலானதாகவேயிருக்கும், ஆதலால் அடியேன் மனதிற்

கொண்ட சங்கேதத்தை நிவர்த்திசெய்தருளுமென்று பணிந்து பிரார்த்தித்துக்கொண்டார். அதற்குச் சிவபெருமான் சந்தோஷித்து 'குழந்தாய்! யாம்சொன்னது சத்தியமேயாகும். அஃதெவ்வாறெனிற் சொல்லுதுங்கேள்

ஒன்ற தாய்ப்பல வாயரு வாயுரு வாகி
நின்றெ லாவுல கதனினு நீகமி லாத
துன்று சோதியே கணபதி பெனசொலு நாம
நன்று தாங்கிய தறிமதி நாமெலா மூய்ய (க)

பிரண வத்தினின் றுகொடு பிரவருச நனது
சரண பங்கயந தொழுவரு டநதிமா முகத்தோ
னரண மட்டநா ணமகுமந நிரமறைந தனன்முன் [தான்
மூரணுமுததொழின் முகிழ்த்தெமம்மா டிருவாகுங் கொடுத்

கலதி செய்திடுங் காழுக மனதவா தமமைக
குலனெ டுங்கெடித தடியவாக கருளெயந குறிததே
யுலக மீதுபல் வேறவ தாரங்கொண் டற்புன்
புலவு வேலவ நமகுமோ மகனெனப புகுநதான. (ங)

உருவு முள்ளுறு முயிருமே யெனவிரு வேமு
மருவி நிற்றலின மற்றிரு வெஙகளே வேறுயச
சுருதி யாகம புராணஙகள் சொலாதொன்மே யென்னுங்
கருதும் யோகியர் தாங்களு மனனதே கரைவா. (ச)

ஆதலாலவ ணீவாக்கு மேலவ னவன்மெய்ப
பாதநாடிய விரதமு மேலெனப படுமா
லோத லாகுமவ் விரதமே யன்றியு மொன்றுண்
டேத நீநதிடுஞ சங்கட சதுர்த்தியென் றிசோயோய். (ஞ)

எந்த நண்மையு மிணக்குவ விரதங்க ளாலு
மந்த நம்பனே காகர மந்திர மாதி
மந்திரங்களி னலும்வந தருளவ தாரச
சுந்திரந்திகழ் மூர்த்திபூ சனைத்தொழி லாலும் (ரு)

வணக்கஞ் செய்தலி னலுமற் றவனுரு மனத்தி
னினைக்கஞ் செய்தலி னலுமேத் தெடுத்தலி னலும்
பிணக்கஞ் செய்தபல் லிடரெலாம் பெயர்த்திருண் மலமு
மூணக்கஞ் செய்தாநாற் பயனையு மூற்றவர் பலரே. (ரு)

என்று முத்தலே வேலவ னிலிகொள் வேலவனுக்
கன்று ரைத்தண நீகரன் விரதமா திகளே
யின்று னக்கவை யிபம்பின மெனவரை யரையன்
மன்ற லங்குழற் குமரிக்கு வகுத்துரைத் திட்டான்.

ஒன்றுகியும், பலவாகியும், அருவாகியும், உருவாகியும், எல்லாவுலகத்திலும் நீக்கமற்று நிறைந்திருக்கின்ற சுயஞ்சோதி சுவரூபமே உலகமெலாம் உய்யும்படி யாகவும், சகலபுவனங்களுந் தமதுசரண பங்கயங்களே தொழுதுமுதலியடையும்படியாகவும், பிரணவத்தினின்றுஞ் சகளீகரித்துக் கணபதியென்னுந் திருநாமத்தை வகித்திருக்கின்றது. மேலும் அக்கணபதி மூர்த்தமிய முன்னர் யாம் திரிபுரத்தை யெரிக்கதக்க மந்திரதந்தை பெமக்குபதேசித்தவர். அவரே சிருட்டிதிதி சங்காரமென்கிற முதலெழில்களைப் பிரமன் விண்டு உருத்திரனுகிய எங்கண் மூவருக்கும் அருளிச்செய்தவர். இவ்வுலகத்தில் துஷ்டசன நிகிரகஞ் சிஷ்டசன பரிபாலனஞ் செய்யும் பொருட்டு அனேக முறைவேறு வேறு திருவவதாரங்களைக்கொண்டிருக்கின்றனர். மற்றோ ரவதாரத்தில்மகுக்குப்புத்திரராக அவதரித்திருக்கின்றனர். யாங்களிருவருமுட லுமுயிரும்போலமருவியிருத்தலினுல் சகல வேதாகம புராணங்கள் எங்களிருவரையும் ஒன்றுசச்சொல்லுமேயன்றி வேறுபடிததாது எங்களைத்தியானிக்கின்ற பெரியோர்களும் அவ்வாறே தியானிப்பாகள். ஆதலால் அவ்விகாயகமூர்த்தமிய மேலானமூர்த்தி; அவரது சதுர்த்தவிரதமே மேலானவிரதம்; அவ்விரததையநுட்டிப்பவர்கள் யாவரேயாயினும் அவர்கட்குமாயாசம்பிரதம் ததுவசம்பிரதம்-மோகினிசாலம் மாலினிவித்தை-மகாசம்மோகனம் மஞ்ஞேபதம் தந்திரபேதம் குய்யதந்திரம்-கலாவாதம்கலாசாரம்-குண்டிகாமதம்-அஞ்சனவித்தை பாதுகைவானபாத்திரம்-பரகாயப்பிரவேசம்-இரசவாதம்-பைபீலவாதம்-சங்கிராம விலக்கணம் * முதலிய எல்லாவித்தைகளுங் கைகூடிவரும்.

---

* மாயா சம்பிரதம் - ஓரிடத்தில் ஊர்போலவும், வனம் போலவும், மலை போலவும், நதிபோலவும் தோற்றுவித்தல் - தத்துவ சம்பிரதம் - ஒருபூதத்தில் ஒருபூதத்தைத் தோற்றுவித்தல். யோகினி சாலம் – மயானத்தில் உபாசித்து யோகினிகளைக் காண்பித்தல். மாலினிவித்தை - சமுத்திரக்கடலைச் செய்தல் மகா சம்மோகனம்-விழித் திருக்கின்றவர்களே மெய்மறந்து நித்திரைகொள்ளச் செய்தல். மஞ்ஞே பேதம்-மனத்தைப் பேதிக்கச் செய்தல் தந்திரபேதம்-ஓரிடத்தும் வெளிப் படாத மந்திரத்தை வெளிப்படச் செய்தல். குய்ய தந்திரம்-வெளிப் பட்டதை மறைப்பித்தல். கலாவாதம் - மன்மத வித்தை. கலா

சாம்-வருணத்தை அதிகரிக்கப் படித்தல். குண்டிகாமதம்-குளிகையிலு லே இனமை அடைதல் தஞ்சனு பித்தை-மறைபட்ட பொருளைச் சாண்பித் தல். பாதுகை-செருப்பைதொட்டு நினைக்கில் நினைத்த இடத்தில் விடுத்தல் பானபாத்திரம்-ஒரு கரத்தில் நினைந்த பான மெல்லாந்தருதல். பரகாயப் பிரவேசம்-பிராண னிலவாத உடம்பிலே புகுதல். இரசவாதம் - உலோகத் தைப் பேதிக்கச் செய்தல பைபீல வாதம் மைமபுகளின் பேச்சறிதல். சஞ்சி ராமலிலக்கணம்-போர்வித்தை என வறிக

அச்சதுர்த்தி விரதமின்றிச் சங்கட சதுர்த்தி யென்று மற்றொரு விரதமுண்டு. அஃதெல்லா நன்மைகளையும் எளிதிற்றரவல்லதாகும். மைந்தனே! விநாயகக்கடவுளுடைய மகத்துவம் இத்தன்மைத்தா கும் மேலும் அவருடைய சிறந்த விரதங்களை பனுட்டிப்பதினலும், அவருடைய திருவவதார மூர்த்திகளை பூசிப்பதினலும், அவரது திருவுருவங்களை மனதிற் தியானிப்பதினலும், அவர்திருவடிகளைத் துதிசெய்வதினலும், அளவற்றபோகள் இருவினைகளினின்று நீங்கி மும்மலங்களையு மொழிதது நான்கு பயன்களையு மடைந்திருக்கின் றார்கள். என்றுசிவபிரான் கப்பிரமணியருக்குபதேசித்ததாக உமா தேவிக்குப் பர்வத ராசன் சொன்னன்

விநாயக விரதங் கேட்ட படல முற்றிற்று

விநாயக சதுர்த்தி

அநுட்டித்த படலம்.

விரதங் கேட்ட வினங்கிழை யென்செய்தாள்
குரவ வோதெனைக கோதில் வியாதனுக்
குரவுத் தேன்கம ழொள்ளிய கஞ்சமேல
வரதன் கூற வலித்தன னென்பவே

இப்பால் உமா பரமேஸ்வரியார் அவை யனைத்தையுஞ் செவி குளிரக்கேட்டுத் தந்தைபாகிய பர்வத ராசனைப் பார்த்து, யானிவ் விரதத்தை அநுட்டிக்கும் வேண்டிய திரவியங்களை யெல்லாஞ் சேகரிக்க வேண்டுமென்று திருவாய் மலர்ந்தருள, அதனைப் பர்வத ராசன் கேட்டு மனமகிழ்ந்து ஏவலாளர்களைக் கூவி அவ்வவர்கட்கு வேறு வேறு பணிகளை யிட்டனன். உடனே அப்பணிகளைச் சிர

மேற் கொண்டு சிலர் தெய்வலோகத்திற் சென்று கற்பக மலர்களும் பலவிதத் தளிர்களும் உண்டிகளுங் கொண்டு வந்தார்கள். சிலர் பற் பல தீபங்களிற் சென்று ஆங்காங் கிருக்கின்ற அளவற்ற அற்புதப் பொருள்களைக் கொண்டு வந்தார்கள்

சிலர் பூலகத்திற் சென்று அனந்த புதுமையான வஸ்துக் களைக் கொண்டு வந்தார்கள்; சிலர் பாதலத்திற் சென்று அங்கிருக் கின்ற ரூணிக்கமுதலிய திரவியங்களைக்கொண்டு வந்தார்கள், சிலர் உவர்க்கடல் நீரொன்று தவிர மற்ற எல்லாக் கடல் நீரோடு சக்கர வாளகிரிக்கு அப்பாலிருக்கின்ற பெரும்புறக் கடல் நீரையும் பரிசுத் தத்தோடு கொண்டு வந்தார்கள்; சிலர் கங்கை காவிரிமுதலிய அள வற்ற தீர்த்தங்களை மங்கல வாத்தியங் களோடும் கொண்டு வந்தார் கள்; சிலர் பரிமளம் வீசுகின்ற மலர் மொக்குகளும் இளந் தளிர் களும் அறுகுகளும் வண்ணிமுதலிய பத்திரங்களும் கொண்டு வந்து ஆராய்ந்து வைத்தார்கள்; சிலர் கோத்தமாலி, கொத்துமாலி, தொ டுத்த மாலி, சுருக்கு மாலி, கட்டு மாலி, அரும்புமாலி முதலாகிய மாலிகளைச் செய்து பூக்குடலைகளில் நிரப்பினார்கள்; சிலர்சொர்னத் தினல் ஓர் மண்டபஞ் சமைத்து அதில் நவரத்தினங்களை யிழைத்த பற்பல மணிமாலிகளாலும் மலர் மாலைகளாலும் அலங்கரித்தார் கள்; சிலர் தூண்கள் தோறும் தாழை கமுகு கன்னல் இவைகளை நாட்டி அவைகளி னுச்சியிலதாழை நாரதத்தைதாதுமாதுளைஎன்னு மிவற்றின் கூலைகளோடு பற்பல பழ வருக்கங்களையு மாலையாகக் கோத்துத் தொங்க விட்டார்கள்; சிலர் விதானங்களை உயர்த்தூக்கி அழகிய தூண்களோடும் நவரத்தனங்கள் நிறைத் திருப்பன போல கொடிகளைக் கட்டினார்கள்; சிலர் அக்கினிதேவனுக் குறைவிடமா கிய ஓம குண்டத்தை யமைத்தார்கள்; சிலர் புழுகு சந்தனம் பனி நீராகிகளைக் கலந்து மெழுகிப் பரிமளப் புகைகளை யூட்டினார்கள்; சிலர் சுவர்கள் தோறும் எண்ணிறந்த சித்திரங்களையெழுதினார்கள்; சிலர் அறுகு முதலியவைகளை நிரப்பினார்கள்; சிலர் முத்து, நீலம், பச்சை, பொன் முதலியவைகளைப் பொடி செய் தெடுத்துக் கோ லங்க ளிட்டார்கள்; சிலர் சொர்ணதிபாத்திரங்களைச் சுத்திசெய்து பரிசுத்தப் படுத்தி யிருக்கின்ற இடங்கள் தோறும் விதிப்படி வைத் தார்கள்.

இவ்வாறு எவர்களும் பணி செய்திருக்கச் சகலபுவனேஸ்வரி யாகிய பார்வதி தெய்வ கங்கையி லாடிப் பூசா மண்டபத்தில்வந்து திருவெண்ணீறு உருத்திராக்க முதலியவைகளை யணிந்துச்சிரசாதி

பாதம் வரையில் நியாசஞ் செய்து ஆசமனம் புரிந்து பிராணாயா மத்தி லிருந்து பூதசுத்தி முதலானவைகளை கடாத்தி.

ஏவங்குண விசேஷ ண விசிஷ்டா யாம் சபதிதௌ ஆஸ்மா கும்ஸ குடும்பானும் கேஷமஸ் தெயர்ய விஜயா யுரா ரோக்கி யைஸ் வர்யா ணமுத்தரோத்தரா பிவருத்யர்த்தம தர்மார்த்த காமமோக்ஷ சதுர்வித பலபுருஷார்த்த சித்பாத்தம் ஸ்ரீசித்தி விநாயக தேவதா முத்தியஸ்ய ஸ்ரீசித்தி விநாயகப் ரீத்பார்த்தம் கல்போக்த ப்ரகாரே ணத்யானு வாஹனதி ஷோட சோபசார பூஜாங்கநிஷ்யே

என்று சங்கற்பங் கூறி சந்தன மாததா லாகிய ஓர் வேதிகை வைத்து அதன் மீது தண்டுலம் பரப்பி சொர்ணவஸ்திர மொன்றை விரித்து அதன்மீது இழைசுற்றி நீர் நிரப்பி யிருக்கின்ற பொற் கும் பத்தை ஸ்தாபித்து அதில் அதிதிதத்வர், ஆகந்தவர், அரசந்தவர், மாந்தவர், காவற்றவர் எனனும் ஐவகைத தவிர்களோடு சுகந்தி-பொன்-மரகதம்-மாணிக்கம முத்து என்னும் பஞ்ச ரத்தினங்களை யும் பெய்து அதற்குச் சந்தனம் புஷ்பம் அக்ஷதை முதலானவைக ளைத் தரித்து

கலசஸ்யமுகே விஷ்ணு கண்டே ருத்ரஸமாஸ்ரத மூலே தத் ரஸ்திதோப்ரம்ஹ மத்யே மகர ரணஸ் மிரதா குரேஷாது சாகரா ஸர்வே ஸப்தத்வீபாவ சுந்தரா ருகவேதோ யசுர்வேத சாமவேத அதர்வண அங்கைஸ்ஸச இதாசாவே கலசாம்புஸமாஸ்ரித ஆயே ந்து கணேச பூஜார்த்தம துரிதக்ஷபகாரக, கங்கேசய முனைசவ கோதாவரி ஸரஸ்வதி - நாமதேத நிதுகாவேரி - சலேஸ்மின் ஸன்னி திங்குரு.

என்று கும்பபூசை செய்து அக்கும்பத்திற்கு மேற்றிசையில் யந்திரமிட்டு அதன்மீது தெய்வ கம்மியர்களால் சொர்ணத்தினு லும் பிருதிவியினுலும் செய்துவைத்திருக்கின்ற இரண்டு மூர்த்தி களில் சொர்ன மூர்த்தியை யெழுந்தருளச் செய்து கவரத்தினங் களாகிய மற்றொரு வேதிகையின்மீது பிருதுவி மூர்த்தியைபெழுந் தருள்ச் செய்து, சங்கு முதலிய பூசா கருவிகளைச் சுத்தி செய்து கங்கை முதலிய தீர்த்தங்களை வைத்திருக்கின்ற பாததிரங்களில் குங்குமம்- பச்சைகர்ப்பூரம் புட்டம்-அறுகு முதலிய வைகளோடு பற்பல பரிமளத் திரவியங்களையும் பெய்து, மணிவட்டிகைகளைப்ப ரப்பி, அவைகளில் ஜலம்-அரிசி-பால்-தருப்பை தூனி-மலர்-வெண் கடுகு-கெல்-எள் முதலிய திரவியங்களை விதிப்படி யமைத்து, அரு

க்கியம் பாத்தியம் ஆசமனம் என்னும் மூவகை நீர்களையும் மந்திர பூர்வகமாக உண்டாக்கி, கரத்திற்புஷ்பமும் அக்ஷதையுங்கொண்டு,

த்யாயேத்கஜானனம் பீதம் தப்தகாஞ்சன லக்ஷிபம்-சதுர்ப் புஜம் மஹாகாயம் ஸர்வாபரண பூஷிதம் தண்டாக்ஷ மாலாபரண பூர்ணமோதக தாரிணம் பாசாங்குசதரம் தேவம்-த்யாயேத் சித்தி விநாயகம், ஸ்ரீசித்தி விநாயகாய நம தியானம் ஸமர்பயாமி.

என்று சிந்தித்து.

விநாயக நமஸ்தேஸ்து கௌரீபல ஸமுத்பவ - இமாம் க்ருதாம்மயாம் பூஜாமக்ருஹாண கணநாயக, ஸ்ரீகணநாயகாயநம-ஆவாஹனம் ஸமர்பயாமி

என்று ஆவாகனத்துடனே ஸ்தாபனஞ் செய்து.

மௌக்திகை புஷ்பராகஸ்ப நாரரத்ன விராசிதம் திவ்ய வஸ்திம் ஹாசனம் சாரு ப்ரீதியர்த்தம் ப்ரதிக்ருப் ஹதாம், ஸ்ரீவிநாயகாய நம:-ஆஸனம் ஸமர்ப்பயாமி

என்று பீடமிட்டு

அர்க்யம் க்ருஹாணதேவேச - கணேஷ பகஜானன-கந்தபூர்வா க்ஷதையர் யுக்தம-கங்காஜல மிதம்சுபம் ஸ்ரீ கஜானனாயநம அர்க்யம் ஸமர்ப்பயாமி, கௌரி புத்ர நமஸ்தேஸ்து-சங்கரப்ரியநந்தன-பக்த யாபாத்தியம் மயாதத்தம் க்ருஹாணசுரசத்தம், ஸ்ரீகௌரீ புத்ராய நம-பாத்யம் சமர்ப்பயாமி அநாதநாத சர்வேச-நீர்வாண சுரபூஜித நிர்மலம் கந்தஸம்யுக்தம்-க்ருஹாண சமனம் விதேபா ஸ்ரீஸர்வேஸ்வராயநம-ஆசமனீயம் சமர்ப்பயாமி

என்று அருக்கியம் பாத்தியம் ஆசமனங் கொடுத்து

ததிக்ஷீ ரஸ்யுக்தம்-மத்வாஜ்யேனஸமன்விதம் மதுவர்க்கம் க்ரு ஹாணேதம் - கஜவக்த்ர நமோஸ்துதே, ஸ்ரீகஜவக்த்ராயநம - மது வர்க்க நைவேத்தியம் ஸமர்ப்பயாமி

என்று தேன்கலந்த பால்பழ முதலியவைகளைக் கொடுத்து.

ஸ்நானம் பஞ்சாமருதேர் திவ்ய குருஷ்வசர ஸ்நாத்ம பக்த்யர் தியம் மயாதத்தம், விக்நராஜ நமோஸ்துதே, ஸ்ரீவிக்நராஜாயநம-பஞ்சாம்ருத ஸ்நானம் ஸமர்ப்பயாமி, கங்காதி ஸர்வதீர்த்தேஸ்து-ஆனீதையர்நிர்மலில் சுபை - வாஸிதைருத கைர்தேவ ஸ்நபயாமிக ஜானன, ஸ்ரீகஜானனாய நமஸ்நாநீய ஜலம் ஸமர்ப்பயாமி.

என்று ஐந்தமிர்தத்தையும் கங்கைமுதலிய திவ்விய தீர்த்தங்களையும் ஸ்நானஞ் செய்விதது

ரக்தவஸ்த்ரம்த் வயம்தேவ கௌரீபவபவப்ரபோ க்ருஹாணேதம் மயமாதத்தம்-விக்னராஜ நமோஸ்துதே ஸ்ரீவிக்ன ராஜாயநமஸ்வஸ்திரஸ்துயுக்மம் ஸமர்ப்ப யாமி.

என்று இரண்டு பீதாம்பரங்களை யுடுததி.

உபவீதம் ப்ரம்ம சூத்ரம்ப்ரம்ஹணே நமிதம்புரா - காகயக் ஞோப வீதேதம்-க்ருஹாண கணநாயகம், ஸ்ரீகணநாய நாயகம் யக் ஞோபவீதம் ஸமர்ப்பயாமி

என்று பூநூல் தரித்து,

சந்தனு கருகற்பூரம் குங்கும ஸமன்விதம்-கஸ்தம் தாஸ்யாமி விக்னேஸ ஸர்வாபிஷ்டப்ரதாயக ஸ்ரீவிகனேஸாயநமகந்தான்தாரையாமி(என்று திருமேனி முழுவதுஞ்சந்தனதையப்பி) அக்ஷான் தவளாம் சுப்ரான் ஹரிதரா மிஸ்ரிதாபிமஸானமர்ப்பிதான் தேவ க்ருஹாணத் விரதானன ஸ்ரீஸர்வாபிஷ்டப்ர தாயகாயநம அட்சதாம் ஸமர்ப்பயாமி

என்று மஞ்ளரிசி-பொற்சுண்ணம் பூந்தாதி முதலியவைகளை அதன்மீதுதட்டி,

சுகந்தினி - சபுஷ்பாணிஜாசிகுஸ்த முகர்னிஸ ஸகலிம்சதிபுஷ்பாணிக்குஷாணத்வம்விநாயகஸ்ரீ விநாயகாயநமபுஷ்பாணிபூசையாமி.

என்று மலர்களை சாததி.

ஓம் கணேசாயநம	பாதௌ பூசையாமி
ஓம் விக்னராஜாயநம	ஜானூபூசையாமி
ஓம் ஆகுவாஹனாயநம	ஊரும் பூசையாமி
ஓம் ஏரம்பாயநம	கடிம் பூசையாமி
ஓம் தேவதேவாயநம	நாபிம் பூசையாமி
ஓம் லம்போதராயநம	உதரம் பூசையாமி
ஓம் கணநாயகாயநம	ஹ்ருதயம் பூசையாமி
ஓம் ஸ்தூலகண்டாயநம	கண்டம் பூசையாமி
ஓம் ஸ்கந்தாக்ரஜாயநம	ஸ்கந்தௌ பூசையாமி
ஓம் சதுர்ப்புஜாயநம	புஜௌ பூசையாமி
ஓம் பரசுஹஸ்தாயநம	அஸ்தான் பூசையாமி
ஓம் கஜவக்த்ராயநம	வக்த்ரம் பூசையாமி
ஓம் விக்ன அந்திரேநம	நெத்திரே பூசையாமி

ஓம் சூர்ப்பகர்ணயநம கர்ணௌ பூசையாமி.
ஓம் ஏகதந்தாயநம தந்தம் பூசையாமி.
ஓம் குமாரகுருவேநம சிரம்பூசையாமி
ஓம் சர்வேஸ்வராயநம சர்வாங்காணீ பூசையாமி.

என்று பாதம், முழந்தாள், தொடை. நிதம்பம், நாபி, வயிர், இதயம், கண்டம், கழுத்தடி, தோள், உள்ளங்கை, நாசி, கண், காது, நகதம், சிரம், சர்வாங்கம் - என்னு மிப்பதினெறிடங்களினும் அங்க பூசை செய்து

ஓம் சுமுகாயநம மாசிபத்ரம்பூசையாமி
ஓம் கணாதிபதியேநம பிரிங்கராஜபத்ரம்பூசையாமி
ஓம் உமாபுத்ராயநம வில்வபத்ரம்பூசையாமி
ஓம் கஜானனாயநம தூர்வபத்ரம்பூசையாமி
ஓம் லம்போதராயநம பத்தீபத்ரம்பூசையாமி
ஓம் அரூணீவேநம தூத்தூரபத்ரம்பூசையாமி
ஓம் கஜகர்ணயநம துளசிபத்ரம்பூசையாமி
ஓம் குகாக்கிரசாயநம கரமஞ்சரிபத்ரம்பூசையாமி
ஓம் ஏகதந்தாயநம புரஹதீபத்ரம்பூசையாமி
ஓம் கஜவத்திராயநம சமிபத்ரம்பூசையாமி
ஓம் சுரக்ரகண்யாயநம தேவதாரபத்ரம்பூசையாமி
ஓம் பாலசந்த்ராயநம மருவபத்ரம்பூசையாமி
ஓம் விகடாயநம கரவீரபத்ரம்பூசையாமீ
ஓம் விநாயகாயநம துருமோற்பலபத்ரம்பூசையாமி
ஓம் கபிலாயநம அர்க்கபத்ரம்பூசையாமி
ஓம் பின்னதந்தாயநம அர்ச்சுனபத்ரம்பூசையாமி
ஓம் பத்நிஹஸ்தாயநம விஷ்ணுகிராந்திபத்ரம்பூசையாமி
ஓம் வடவேநம தாடிமபத்ரம்பூசையாமி
ஓம் சூர்ப்பகர்ணயநம ஜாசிபத்ரம்பூசையாமி
ஓம் மூஷிகவாகனயநம கண்டலேபத்ரம்பூசையாமி
ஓம் சர்வசித்திப்ரதாயகாயநம ஏகவிம்சதிபத்ராணிபூசையாமி

என்று மாசிப்பத்திரம், கரசராங்கனி, வில்வம், அறுகு, இலந்தை, ஊமத்தை, துளசி, நாயுருவி, சிறுவழுதலை, வண்ணி, மந்தாரை, மருவு, அலரி, கோங்கு, வெள்ளெருக்கு, மருதம், விஷ்ணுகிராந்தி, மாதுளை, சாதிமல்லி, தாழை, என்னு மிவ்விருபத்தொருபத்திரங்களால் அருச்சித்து.

ஓம் விநாயகாய நம
ஓம் விக்னராஜாய நம
ஓம் கணநாதாய நம
ஓம் கஜாணனாய நம
ஓம் மஹோதராய நம
ஓம் மகாதேவாய நம
ஓம் ஸ்தனித்காஞ்சன
ஓம் ஏசதமஷ்டோத்தரசதாய நம
ஓம் தேவாய நம
ஓம் கஜவக்த்ராய நம
ஓம் மகாபலாய நம
ஓம் நாகயக்ஞோபவீதினே நம
ஓம் நாகாபரணபூஷிதாய நம
ஓம் ஸர்வார்த்த ஸம்பதாதாராய
ஓம் கணாத்யக்ஷாய நம
ஓம் வரப்ரதாய நம
ஓம் ருத்ரஸ்யதன்யாய நம
ஓம் உதாராய நம
ஓம் நாயகாய நம
ஓம் ப்ரமதாதிபாய நம (உ0)
ஓம் பத்மராகத்வதயே நம
ஓம் ஸோமாய நம
ஓம் ரக்தமால்யா ய நம
ஓம் அபலாய நம
ஓம் பாலரூபிணே நம
ஓம் சுமுகாய நம
ஓம் சுப்ரயாய நம
ஓம் ப்ரபவே நம
ஓம் புண்யாய நம
ஓம் பூர்ணாய நம (ந0)
ஓம் பூர்ணேதராய நம
ஓம் புண்ணியக்ரத்தியே நம
ஓம் புராதனாய நம
ஓம் பார்த்ரே நம
ஓம் சிவாய நம
ஓம் சாந்தாய நம
ஓம் ஜகந்நாதாய நம
ஓம் சாஸ்வதாய நம
ஓம் ஸ்வேதபரிதாநாய நம
ஓம் த்ரயக்ஷாய நம (ச0)

ஓம் கணகசுப்ரபாய நம
ஓம் சிவஸாம்யாய நம
ஓம் மகாதேஜஸே நம
ஓம் மகாபலபராக்ரமாய நம
ஓம் ஸர்வக்ஞாய நம
[யே நமஓம் க்ஞானசம்பன்னாய நம
ஸமத்துய்ஓம் ஸாவாபரணபூஷிதாய நம
ஓம் பாபாபஹனாதனய நம
ஓம் சண்டவிக்ரமாயநம
(க0)ஓம் அலம்ஷும்மலநாசனாயநம (ஞ0)
ஓம் குமாராய நம
ஓம் காரணாய நம
ஓம் காரிதாய நம
ஓம் ஸர்வசிதப்ரதாயகாய நம
ஓம் விபவே நம
ஓம் நயாய நம
ஓம் நயபுதராய நம
ஓம் ஸ்ரீபார்த்தப்ரதாபகாயநம
ஓம் ஸ்ரீதாய நம
ஓம் சுபாய நம (சு0)
ஓம் ஏகதந்தாய நம
ஓம ஏகவீராய நம
ஓம் அநேகதாய நம
ஓம் ஏகஸ்மை நம
ஓம் ஏகப்ரதே நம
ஓம் விஸ்வப்ரதே நம
ஓம் விஸ்வபூஜ்யநம
ஓம் விஸ்வஸ்மை நம
ஓம் விஸ்வகிஞாய நம
(ஞ0)ஓம் ஸர்வபாதனாய நம (ஏ0)
ஓம் பாக்யதாய நம
ஓம் பவதாய நம
ஓம் பாகினே நம
ஓம் போக்தாய நம
ஓம் போகபாவிஞாய நம
ஓம் கவயே நம
ஓம் கார்யாய நம
ஓம் கனீஞாய நம
ஓம் கர்த்தரே நம
(ச0)ஓம் க்ரதவே நம (அ0

ஓம் க்ருஷ்ணே நம ஓம் புதாய நம
ஓம் க்ருத்யவிதேய நம ஓம் ஓங்காராயா நம
ஓம் அத்யுக்ராய நம ஓம ப்ரம்ஹவிதே நம
ஓம் காந்ததர்சிதே நம ஓம் ப்ராமஹணுப நம
ஓம் க்ருதாந்தகாய நம ஓம் ப்ரம்ஹ்ணே நம
ஓம் ஸ்துத்யாய நம ஓம் ப்ரம்ஹபராய நம (ஈ)
ஓம் ஸ்தோத்ரே நம ஓம் பராய நம
ஓம் ஸ்தோகாய நம ஓம் ஸர்வக்ஞாய நம
ஓம் ஸ்தோத்ராய நம ஓம் ஸக்த்தமேய நம
ஓம் த்ரயீமயாய நம (கூ0)ஓம் ஸர்வலோகவேத்யாய நம
ஓம் வேதாய நம ஓம் ஸர்வதர்ய நம
ஓம் வேதாந்தக்ருதே நம ஓம் சுபகாயநம
ஓம் வேத்யாய நம ஓம் அவ்யயாய நம
ஓம் விதுஷாம்புத்திதாயநம ஓம் சித்திவிநாயகாய நம (கo அ)

என்று அஷ்டோத்தர சதநிவ நாமபூசை செய்து,

தசாங்கம் குங்குளம் தூபமுத்தமம் கணநாயக, க்ருஹாணகண ராஜேந்த்ர விக்ன ஹாரின்னமோஸ்துதே, ஸ்ரீ கணநாயகாயநம: தூப மாக்ராபயாமி - ஸர்வக்ஞஸர்வலோகேச ஸர்வபூத ஹிதேரத-க்ரு ஹாண மங்களம்தீபம் ருத்ரப்ரிய நமோஸ்துதே, ஸ்ரீ ஸர்வக்ஞாய நம: தீபம்தர்சயாமி நைவேத்யம் ஸட்ரசோபேதம் பலலட்டுதசம்பு தம்-மோதகம்பரமான்யம்ச நமஸ்துதே விக்னநாசன-ஸ்ரீவிக்னநாசன யநம: நைவேத்யம ஸமர்ப்பயாமி, தாம்பூலமுத்தமம் தேவக்ருஹா ண சுரபூஜித சர்ப்பூர சூரணசம்ரக்தம் மயாதத்தமி தம்வீபோ-ஸ்ரீ ருத்ரப்பாயநம: தாம்பூலம் சமர்ப்பயாமி, ஸதாந்தனவிக்னேசபுஷ் டலானிதனுசி - பூம்யாஸ்திதானிபசவன், ஸ்வீகுருஷ்வ விநாயக ஸ்ரீவிக்னேசாயநம: ஸ்வர்ண புஷ்பம் சமர்ப்பயாமி.

என்றுதூபம் கொடுத்துத் தீபங்காட்டி நைவேத்தியஞ் செய்து, தாம்பூலமும்ஸ்வர்ண புட்பமும் கொடுத்து.

விக்னராஜ நமஸ்துப்யம் - பாபக்ஞானபஞ்சன, புனர்யம் ப்ர தாஸ்யாமிக்ருஹாண சுரசத்தம ஸ்ரீவிக்ன ராஜாயநம. புனர்ய்ம் ஸமர்ப்பயாமி,

என்று அர்க்கியங்கொடுத்து,

ஓம் கணேசாய நம ...தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி.
ஓம் உமாபுத்ராய நம ... ,,
ஓம் அகநாசாய நம ... ,,

ஓம் விகாயகாய நம ... தூர்வாயுக்மம்ஸமர்ப்பயாமி.
ஓம் ஈஸ்வரபுத்ராய நம ... ,,
ஓம் விக்னராஜாய நம ... ,,
ஓம் ஏகதந்தாய நம ... ,,
ஓம் இபவக்த்ராய நம ... ,,
ஓம் ஆகுவாகனாய நம ... ,,
ஓம் குமாரகுருவே நம . ,,
ஓம் சுமுகாய நம .. ,,
ஓம் சுராக்கிரகண்யாய நம . . ,,
ஓம் ஸ்தூலகண்டாய நம ... ,,
ஓம் குகாக்ரசாய நம ... ,,
ஓம் லம்போதராய நம . ,,
ஓம் பின்னதந்தாய நம . ,,
ஓம் விசாலாக்கினே நம ... ,,
ஓம் காமரூபியே நம ... ,,
ஓம் பாலசந்த்ராய நம ... ,,
ஓம்சர்சித்திப்ரதாயகாயநம. . ஏகலிம்சதிதூர்வாயுக்மம்ஸமர்ப்பயா

என்று சந்தனத்திற் றோய்த்த இரண்டிரண்டு அறுகினால் இந்த இருபத்தொரு திருநாமங்களாலுஞ் சொல்லி அருச்சித்து,

நமஸ்தே தேவதேவேச நமஸ்தே ஏணகாயக, நீராஞ்சனம் ப்ரயஸ்சாமி-ப்ரஸன்னோபவ மேப்ரபோ, ஸ்ரீ தேவ தேவாய நம:-நீராஞ்சனம் ஸமர்ப்பயாமி.

என்று ஆலத்தி சுத்தி

ஆகுவாகன தேவேச விஸ்வவ் யாபின்கஜானன-ப்ரதக்ஷிணம் கரோமித்வாம்-மமத்வம் ஸங்கிதம்குரு ஸ்ரீ ஆகுவாஹனய நம: ப்ரதக்ஷணம் சமர்ப்பயாமி.

என்று வலம் வந்து,

நமஸ்தே கஜவக்த்ராய நமஸ்தேகணநாயக-நமஸ்தேதேஹி வேசகௌரீபுத்ர நமோஸ்துதே, ஸ்ரீ கௌரீபுத்ராய நம: நமஸ்காரம் ஸமர்ப்பயாமி.

என்று தீர்க்கதண்டன் செய்து.

தேவதான வகோடீர-மணிரஞ்சித பாதக-க்ஷமன்வதேவதேச புத்ராக்னீர்த்திஞ்சதேஹிமே,ஸ்ரீகஜவக்த்ராயநம-ப்ரார்த்தனைர்ப்பயாமி.

என்று பிரார்த்தித்து.

க்ருதவர்த்தி ஸஹாஸ்த்ரேஸ்ச-கர்ப்பூர சகலஸ்ததா - தீராஞ் சனம் மயாதத்தம் - க்ருஹாண வரதோபவ ¡ஸ்ரீ கணேபாயநம-தீராஞ்சனம் ஸமர்ப்பயாமி.

என்று ஆலத்தி சுத்தி,

தேவதேவகணத்யட்ச-சுராசுரவரார்சிதா - அவிக்னம் குருமே தேவ - ஸர்வகார்யேஸ்து ஸர்வதா-விநாயக நமஸ்தேஸ்து ஸத்தம மோது கப்ரய-அவிக்னம்குருமேதேவ-ஸர்வகார்யேஸ்து ஸர்வதா.

என்று க்ஷமாபக்தனஞ்செய்து.

ஏவங்குண விசேஷண வசிட்டாயாம்-சுபதிதௌ-ஸ்திரீ சித்தி விநாயகமுததிஸ்ய-ஸ்திரீ சித்திவிநாயக ப்ரீத்யர்த்தம், ஸ்திரீசித்தி விநாயக பூஜாஞ்சோபா யனதானங் கரிஷ்யே.

என்று சங்கற்பங்கூறி, சந்தனபுஷ்பாக்ஷதைகளைக் கொண்டு ப்ராமணபூசைசெய்து,

கணேசா பரதிக் ருண்ஹாத் கணேசாவைத தானிகம்-கணே சஸ்தார கோபாப்யாம்-கணேசாய நமோநம.

என்று வாயன தானஞ்செய்து, இவ்வாறுஎல்லாப் பூசனைகளை யுங் குறைவற நடாத்திய பின்னர் ஒருபக்கத்திலிருந்து விதிப்படி நியாயஞ்செய்து தியாஞ்சிகளைமுடிதலுக்கொண்டு ஓர் மாதமளவும் ஊணுறக்கங்களை நீத்து, அநுட்டிப்பி னீற்றுகாளில் முன்போலவே எல்லாப்பூசனைகளையுநிறைவேற்றித் தருப்பண ஓமாதிகளைக் கிரமப் படி நடாத்தின.

சில சேடியர்கள் முத்து மாலைகளால் அலங்கரித் திருக்கின்ற பந்தலின்கீழ் கவரி-குடைமுதலியசின்னங்கள்விளங்கப்பலவிதவாத் தியவொலியோடு நெய்ப்பொங்கல்-சுத்தப் பொங்கல்-தயிர்ச்சோறு-பாற்சோறு-மிளகோதனம்-கடுகோதனம் - இலவங்கோதனம் - எள் ளோதனம்-சர்க்கரைப் பொங்கல்-முதலாகிய சித்திரான்னங்களும் உழுந்து, சீரகம், பெருங்காய முதலியவைகளைக் கூட்டிப் பாகப்ப டுத்தி யிருக்கின்ற பூசினிக்காய் குழம்பு, மற்றையகாய்கனி, பூண்டு, இலை, கிழங்கு இவைகளினால் வெவ்வேறுகச்செய்திருக்கின்ற குழம் புகளும், பலவித பொரிக்கறிகளும், பலவித துவட்டுக் கறிகளும், பலவித ஊறுகாய்களும், பலவித துவையல்களும், பலவிதவறையல் களும், பருப்பு-பிட்டு-மா-பொரி முதலாகிய பண்டங்களும், பலவித

கண்டல்களும், வெல்லப் பச்சரியும், வறுத்த பருப்பும், சர்க்கரை, பயறு, எள்ளு, தேங்காய் முதலியவைகளோடு ஏலமுதலியவாசனை வஸ்துக்களையுங் கலந்து செய்திருக்கின்ற உண்டைகளும், வெவ் வேறு மோதகங்களும், அடை, முறுக்கு, பணிகாரம், அப்பம், தேன் குழல், பிட்டு, வடை, இலட்டுகம், தோசைமுதலிய சிற்றுண்டிக ளும், மற்ற வுணவுகளும், வெள்ளரிக்காய் முதலிய காய்வருக்கங்க ளும், தெங்கின்கனி-பலாக்கனி-மாங்கனி வாழைக்கனிமுதலியகனி வர்க்கங்களும் தேன்-நெய்-பால்-தயிர்-மோர்-நீர்மோர்-முதலிய அமு தங்களும், இளநீர்-வெந்நீர்-தண்ணீர்-சர்க்கரைநீர்-கரும்புநீர்-பழநீர் முதலிய நீர் வகைகளும் ஆகிய இவைகளை யெல்லாம் வேறு வேறு தட்டுகள்-தாம்பாளங்கள்-கிண்ணங்கள் கரகங்கள்முதலியபலவகை ப்பாத்திரங்களில் அமைத்துக் கொண்டுவர, அவைகளை யெல்லாம் மந்திர பூர்வகமாக நிவேதனஞ் செய்து நீர்விளாவிப் பாத்திய நீரா தனையுந் தந்து, வாசனைத திரவியங்கள் சேர்ந்த பாகடை துகர் வித்து, அகில்-சந்தனம்-கருங்காலி-வில்வம்-அரிச்சுனம் என்கின்ற பஞ்ச தூபங்களைக் கொடுத்து, கட்சத்திரதீபம் முடதீப முதலிய பலதீபங்களைக்காட்டி, கண்ணாடி-குடை-சாமரை-கொடி - ஆலவட் டம்-விசிறிமுதலிய சின்னங்களை வழங்கி, கணநாதாவா வென்னு மனுவைச் சொல்லி மந்திர புட்பஞ்சாத்தி, ரியசாத மந்திரத்தால் கர்ப்பூர நீராஞ்சனஞ் சுழற்றி, வலம்வந்து, திருவடிகளில் வணங்கி, அன்னதானம்-வஸ்திரதானம் - கன்னிகாதானம்-கோதானம் - பூதா னம்-இரணியதானம்-உபயமுகிதானம்-மகிஷ்தானம் அஸ்வதானம்-சுவேதஸ்வதானம்-காலதானம் - காளாமுகிதானம்-மகமேருதானம்-கற்பகவிருட்சதானம்-வித்தியாதானம்-மகாதானம் என்கின்ற சோ டசதானங்களையும்வழங்கி, கணேச மூர்த்தியைத் தமது இதயகம லத்தி லிருத்தி பொன்னுற்செய்த மூர்த்தியையுங் கும்பத்தையும் பல திரவியங்களோடு புரோகிதருக்களித்து, பிருதிவி மூர்த்தியைப் பல மங்கலவாத்தியங்களோடு மெழுந்தருளச்செய்து, நதியிற் சல வாசமாக வைத்து, மீட்டுந்தமது அரண்மனையைச்சேர்ந்து, சுற்றத் தினரோடு மிருந்து போசனஞ்செய்து, விநாயக மூர்த்தியினுடைய பேரருளைக் கொண்டு சிவபெருமான் கங்கைக்கு முன்னர்த் தம்மை விவாகஞ்செய்து கொள்ளப் பெற்று தமது மனக் கவலைகளை யொ ழித்திருந்தனர். குறைவற்ற கிருபாநிதியாகிய விநாயகமூர்த்தியினு டைய சதுர்த்தி விரத மகத்துவத்தை ஆண்மாக்கள் கேட்டறி வாராக.

இச்சரித்திரத்தைச் சகலருங் கேட்டு மனமகிழும்படி பிரசங் கித்த புண்ணிய சீலர்களும், இச்சரித்திர முழுவதும் ஆராய்ந்து ஆனந்த பரவசத்தராய்க் களித்த குண சம்பன்னரும், இதனிலுமு வின்றி வாசித்து இதன்பயன்களைத் தெரிந்து மனப்பூரிப்புடனிருக் கின்ற மேன்மக்களும், இப்பூவுலகின் கணிருக்கின்ற பரியந்தம்இலக் குமியை யொத்த வனப்பும், அருந்ததியை நிகர்த்தகற்பும், பூமிதே வியை எதிர்த்த பொறுமையும் வாய்ந்த கன்னிகையை மணந்தின் புற்று நன்னெறிகளை யநுசரித்து, அரும் புதல்வர்களையும் பயந்து தனதானிய முதலிய செல்வங்களை யடைந்து, அந்திய காலத்தில் மோட்சமுங் கிடைக்கப்பெற்று, நிழ்ழி காலம் விநாயகமூர்த்தியினு டைய திருவடிநீழலிற் குடிகொண்டிருப்பார்கள்.

விநாயக சதுர்த்தி யநுட்டித்த படல முற்றிற்று.

கர்த்தமன்

விநாயகசதுர்த்தியநுட்டித்த படலம்.

தன்னலருக் குருமணைய சோம காந்தா விமய
மன்னவனர் மகணேற்ற மரபறிந்தா யவ்விசதந்
தன்னையா தரித்தோ டுள் தம்முளே சிலர்தம்மைப்
பன்னுவாங் கேனென்று பகர்தருமாற் பிருகுமுனி.0

சோமகாந்தனே ! உமையம்மை விநாயக மூர்த்தியினுடைய சதுர்த்திவிரதத்தை யநுட்டித்துச் சிவபிரானைத் திருமணஞ்செய்த ருளிய முறைமையைச்சொன்னோம் இப்பால்கர்த்தமராசன் அநுட் டித்தகிறத்தையுஞ் சொல்லுவோங்கேட்பாயாக. இப்பூவுலகமுழுவ தும்ஒரே குடைநீழலிலிருத்தித் தனது ஆஞ்ஞாசக்கரத்தைத்திசை யெங்கணு முருட்டிச் சத்துருக்களையெல்லாஞ் செயிக்கத்தக்க புச பல பராக்கிரமத்தோடு சகல சிவராசிகளுக்கும் ஒரு தன்பமும் நேராத வண்ணம் அரசாட்சியை நடாத்திவருகின்ற கர்த்தமனென் னும் ஓரரசனிருந்தான். அவ்வரசனிடத்தில் ஒருநாள் தவத்தின் மிகுத்த பிருகு மகாமுனிவ ரெழுந்தருளிவர அவரை யவ்வரசன் பெருமகிழ்ச்சியோ டெதிர் கொண்டு வரவழைத்து, ஆதனத்தி லிருத்தி, அன்புடன் பூசித்து, கையுறைதந்து, விசிறிகொண்டியர் வையைமாற்றி, குளிர்ந்தவுபசார வார்த்தைகளைப்பேசி, இனைப்பாற்

கர்த்தமன் விநாயகசதுர்த்தி அநுட்டித்த படலம்.

றி, பின்னர் மிக்க மூசுமலர்ச்சி யோடும் இதனைப்பேசுவானுயினன். எல்லாத் தேவர்களும் ஏவலுக் கெதிர் பார்த் திருக்கத் தக்க மகா பெருமையினையுடைய தவசிரேஷ்டரே! அடியேன் யாதொருவருத் தமுமின்றி இவ்வுலகமுழுமையும் எனதொரு குடையில் நிறுத்திப் பகைவர்கள் எல்லாரும் பகுதிகர வென்று ஆளவற்ற செல்வத்தை அனுபவிக்கின்றேற ஞதலால், இத்தன்மைத்தாகிய செல்வம் அடி யேற் குண்டானது எந்த தெதுவினுலோ? அதனைத்தெரியச்சொல்ல வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொண்டான் அதனை அத்த வாரஜ சிகாமணி யாகிய பிருகுமுனிவர்கேட்டு அரசனை? நீ முற்ச ணனத்தில் வைசியகுலத்திற்பிறந்திருந்தனை ஆயினும் அக்காலத்தி நீ அதிகசெல்வத்தை யுடையவனுயிராததால உனது குலதருமங் களைக்கைவிட்டனை. அதனுல் உனது சுற்றத்தா ரெல்லாம் உன்னை வெறுத்துப் பலவாறு தூஷித்தார்கள். அந்தூஷண வார்த்தைகளை நீகேட்டமாத்திரத்தில் உனது இரு செவிகளும் கைத்துக்கொடிய காட்டிலேனுஞ் சென்று உயிரை நீங்கிக்கொள்ளுவோமென் றெண் ணி மனம் வெறுத்து வீட்டைத் துறந்து காட்டிற் செல்கின்ற போது, அங்கோ ராச்சிரமத்தினைக் கண்டனை. அவ்வாச்சிரமத்தில் வேதாகம புராணங்களை வாசிக்கின்றவர்களும் அவைகளைக் கேட் கின்றவர்களும், பலதவமாதிகளைச்செய்து முடிக்கின்றவர்களுமான அளவற்ற முனிபுங்கவர்கள் புடைசூழச் சவுபரி மகாமுனிவரைமூர் தருளி யிருப்பதைக்கண்டு அவரருகிற் சென்று அஷ்டாங்கமாகப் பணிந் தெழுந்து நின்றனை அக்கால் அம்முனிவர் உன்வதனத்தை நோக்கி நீமிக்க மனவருத்தத்துடன் இங்கு வந்த காரிய மென்ன வென்று வினவ, அதற்கு நீ சொன்னதாவது, சுவாமி? அடியேற்கு வறுமைநேர்ந்த காரணத்தால் சுற்றத்தின செல்லாம் வெறுத்தனர். அதற்கு மனஞ் சகியாதவனுகி, நமது உயிரைக் காட்டிற் சென்று கைவிடுவதே உத்தமமென் றெண்ணி வெளிக்கொண்டு வந்தேன். அவ்வாறு வந்த என்னை முற்பிறவியிற் செய்திருக்கின்றனதுதவப் பயனுனது தேவரீருடைய திவ்விய சமூகத்திற் கொண்டு வந்து விட்டது. இனிஅடியேற் கென்னகுறை யிருக்கின்றதென்று சொல் லலும், அவையனீத்தையுஞ் சவுபரிமுனிவர் கேட்டு மிகவு மிரக்க முற்று, உனக்குத் தீட்சைசெய்து விநாயகக் கடவுளுடைய மந்தி ரத்தை யுபதேசித்து, அதை அநுட்டிக்கும் முறைமையினையுஞ் சொன்னர். அதை நீ அவ்வாறே அநுட்டித்து வருங்காலத்தில், விநாயகசதுர்த்தி வந்தது. அத்தினத்தில் சதுர்த்தி விரதத்தை

உன்னுடன் கூடவிருந்து ஆகம விதிப்படி முடிப்பித்தார் பின்னர் அவ்விரதமநுட்டித்த மகிமையினாலே விநாயகக்கடவுளுக்குக் கிரு பைசுரந்து உன்துவீடுமுழுவதும் பொன்மணிமுதலான சகலபொ ருள்களும் அளவற்ற செல்வங்களும் நிறையும்படியாகச்செய்தார்.

அதனைத்தவசிரேஷ்டராகியசவுபரிமுனிவர் தெரிந்துகொண்டு உனக்குறிவித்து நீ வீட்டிற்குச் செல்லும்படியாகக் கட்டளையிட்ட னர் உடனே அவருடைய திருவடிகளை வணங்கிவந்தித்து விடை பெற்றுக்கொண்டு உனதுநகரத்திற்சேர்ந்து அளவற்ற பாக்கியங்க ளோடு நிறைந்துள்ள வீட்டினை யடைந்து முன்னர் வெறுத்த சுற் றத்தினரெல்லாம் எதிர்கொள்ளப் பெருமகிழ்ச்சியை யுடையவனாகி யளவளாவிய போகங்களை யனுபவித்திறந்தனை இச்சனனத்திலும் அவ்வாறே அனுபவிக்கின்றாய் இத்தனை ஐசுவரியமும் நினக்கு முன்னமே சகல சித்திகளையு மளித்தவை சதுர்த்தி விரதத்தின் மகிமையாதலால் அதனை எக்காலத்துங் கைவிடாது அநுட்டித்து வரக்கடவையென்று திருவாய் மலர்ந்து விடைபெற்றுத் தமது ஆச் சிரமத்தை யடைந்தனர் பின்னர் கர்த்தமராசன் அளவற்ற ஆனந் தத்தில் மூழ்கி வருடந்தோறும் அவ்விநாயக சதுர்த்தி விரதத்தை இடைவிடாதநுட்டித்துத் தனது புத்திரன் புயத்திற் பூபாரத்தை ச்சுமத்திக் கணேசமூர்த்தியினுடைய கருணையால்எவர்க்குங் கிடை த்தற்கரிய பேரின்பமுத்தியை யடைந்தான்.

கர்த்தமன் விநாயக சதுர்த்தி யநுட்டித்த பாடலம்
முற்றிற்று.

நளன்

விநாயகசதுர்த்தியனுட்டித்தபடலம்.

அளிபரந் திசைகள் பாட வகலெழிற் றலர்க ளெல்லாங்
களிமதுப் பழையர் போலக் காலங்க டோறும் வாக்குந்
தளிரியல் சோலை சூழ்ந்து தங்கிய நிடத நாட்டில்
வளியதா மாட மேடை மாவிந்த நகராண் மன்னன்.

சோமகாந்தனே!விநாயகக்கடவுளுடையசதுர்த்திவிரதத்தைக் கர்த்தமராச னதநுஷ்டித்து இம்மையிற் செல்வத்தையும் மறுமையில் முத்தியையுமடைந்த பேற்றினைச் சொன்னேம். இப்பால் நளராச

னனுஷ்டித்த திறத்தை சொல்லுவோம் கேட்பாயாகவண்டினங்கள் இசைபாடிமொய்க்கின்ற பூஞ்சோலைகள் சூழ்ந்த நிடதநாட்டில் நவ ரத்தினை சொர்னமயமா யிருக்கின்ற மாடமாளிகைகள் நிறைந்த மாவிந்தநகரமென்னும் ஒருபட்டணமுண்டு. அப்பட்டணத்தில்தன் னேக்கண்ட மாதர்களெல்லாம் உடனே மன்மதபாணக்கட் டினை யாக்கத்தக்க பேரழகுமுடையவனுகியும், இரந்தோர்க் கினியதை விக்கின்ற * வள்ளலாகியும், அளகேசனே மருட்டும்படியானஐசுவரி யத்தையுடையவனுகியும் எதிர்த்தவருகின்ற சத்துருக்களுக்கு இடி யே றெத்தவனுகியும், தருமசாத்திரங்களில் ஆராய்சிமுனிக் கொப் பானவனுகியும், நளனென்னு மிபற்பெயரையுடைய ஓரரசனிருந் தான். அவ்வரசன் () பதுமவத்தனென்கின்ற அமைச்சனுடனினை யணைத்தினும் தனது செங்கோலைச் செலுத்திச் சகல உயிர்களையும் பாதுகாத்துத் தமயந்தியென்னும மனேவியுடன் வாழ்ந்திருக்கின்ற காலையில் அவனிடத்தில் வச்சிராயுதத்தை யேந்திய இந்திரனுக்கு இளைப்போதில் ஆயிரங்கண்களைத்தந்த கௌதம முனிவ ரொழுந்த ருளினர். அம்முனிவரை அவ்வரசன், எதிர்கொண்டழைத்தலுன்று ஓராசனத்திலிருத்தி பலவித உபசாரங்களுடன்பூசித்து அஷ்டாங்க வந்தனஞ்செய்து, இருகரங்களையுஞ் சிரமேற் கூப்பிநின்று சுவாமீ அடியேனுய்ப்புமாறு ஓர்விரதத்தைத் தேவரீர் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தலும், அம்முனிவர் கிருபை சுரந்துஇ தனைச்சொல்லுவா ராயினர்.

அரசனே நீ முற்சனனத்தில் கற்றவர்களால் புகழத்தக்க கவு டதேசத்திற்கரசனுகிப்பலவின் பங்களையுங் குறைவின்றியனுபவித்து அரசியற்றி வருங்காலததிற் சத்துருக்களெல்லாஞ் செயித்து அவர்கள்தேசங்களைக் கைவசமாக்கிக்கொள்ளு நிமித்தம்சகலசேனை களோடும் வெளிக்கொண்டு செல்கின்றபோதுஓர்வனத்தின்வழியா யிருக்கின்ற கௌசிப முனிவனையடைந்து தேவர்களெல்லாம்வண ங்கத்தக்க அவரது திருவடிகளைப் பணிந்தெழுந்து பலவாறு துதித் துநின்றனை. அம்முனிவர் கன்றைக்கண்ட பசுவைப்போல உன்மீது கிருபாதோக்கஞ்செய்து தமது ஞானதிருஷ்டியினல் உனதுவரலை

* இவ்வரசன் முதல்வள்ள லெழுவருள் ஒருவன். அதனை, "மிக்கசெம் பியனேகாரி விராடனே கிருநிதானும், தக்கதுர் தமாரி தானுஞ்சகரனுனை நுந்தாமுன், , "என்றகிகண்டே செய்புனானு மறிக.

() பதுமவத்தன்-தாமரை மலர்போன்ற கையையுடையவன்.

யறிந்துகொண்டு விரைவில் முத்தியளிக்கவல்ல விநாயகக் கடவுளு டைய சதுர்த்திவிரதத்தை உனக்குபதேசித்து, அதை ஆகம விதிப் படி அநுட்டிப்பித்தார், பின்னரம் முனிவரிடத்தில் விடை பெற்று உனதிநகரத்தையடைந்து சத்துருக்களே யெல்லாம் வென்று சகல தேசங்களேயும் கைவசமாக்கி அளவற்ற சிறப்போடும் வாழ்ந்திருந் தனே. அந்தப்புண்ணிய பலத்தினுல் இசசனனத்திலும் அளவற்ற போகங்களே யனுபவிக்கின்றாய். ஆதலால் பொற்கொன்றை சூடிய விநாயகக்கடவுளுடைய சதுர்த்திவிரதமே எல்லாவிரதத்தினுமேலா னவிரதமாகும். அவ்விரதத்தையே சதாகாலமு மநுட்டித்துவருவை யென்றுசொல்லித தெய்வலோகத்திற் கொப்பான தமதாச்சிரமத் துக் கெழுந்தருளினர். பின்னர் நளமகாராசன் வருடந்தோறும் அ வ்விரதத்தை யநுட்டித்து மெய்ஞ்ஞான சுகத்தை யடைந்து பரமா னந்த வெள்ளத்தில் மூழ்கினன்.

நளன் விநாயக சதுர்த்தி யநுட்டித்த படலம்
முற்றிற்று.

சந்திராங்கதன்.

விநாயகசதுர்த்தி யநுட்டித்தபடலம்.

மகரநீ ரோடை சூழ்ந்த மாளவ தேயர்தன்னி
னகரினுட் சிறந்தசுன்ன நகரொனும் பட்டினத்து
ளிகல்கடந் திலகுவைவே லிறையவன் சந்திராங்க
னகமகிழ் சிறப்பவிந்து மதியொடு மமர்ந்து வாழ்நாள்.

அகங்கார மமகாரங்களாலாய பிறவிவேரை யறவெரியு முனி வர்களே, விநாயக மூர்த்தியினுடைய சதுர்த்தி விரதத்தை நளராச னநுட்டித்துச் ககலவேநதர்கட்குஞ் சகலரேஸ்வரனன திறத்தைச் சொன்னேம். இப்பால் சந்திராங்கதராசன் அநுட்டித்த திறத்தினே ச்சொல்லுவேநம் கேட்பீராக சகலவளப்பமும் பொருந்திய மாளவ தேசத்தில் எல்லா நகரத்தினுஞ் சிறந்த கன்னநகரத்திற் சத்துருக் களே நாசஞ்செய்யத்தக்க வேலாயுதத்தைத் தாங்கிச் சகல வுயிர்கட் கும் இதயஞ்செய்து வருகின்ற சந்திராங்கதனென்னும் ஓராசனிரு ந்தான் அவ்வரசனுனவன் இந்துமதி யென்கின்ற தனது பரிவி யாடுஅளவற்ற போகபாக்கியங்களே குறைவின்றியனுபவித்துவரு

கின்றநாளில், ஒருநாள் அவ்வரசனே மந்திரித்தலைவர்கள் வணங்கி மண்டலேஸ்வரா காட்டில் மிருகங்கள் மிருத்திருக்கின்றதால்வேட்டையாடுவதற்கு கெழுந்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார்கள். வேந்தர்க்கு வேட்டையாட விரித்திருக்கின்ற வேதமுறை மைப்படி தானதற்கிசைந்தெழுந்து, மள்ளர்கள் முதலான சேனைகளோடுமலைச்சாரலகளிலுள்ள வனங்களிற் புகுந்து, புலி-மான்-கரடி-டெருமை-கரடி - பன்றி - காட்டானே - முட்பன்றிமுதலான மிருகங்களேயெல்லாம் கொலைமுகத்தி லிரைன்ற யமனிப்போலச் சரடிக்கொண் டிருக்கின்ற சமயத்தில சில இராக்கதர்கள் வந்து அவனே டெதிர்க்க, அவர்களுடைய தாள்களேயுந் தோள்களேயுங் கண்டதண்டமாகச் சேதித்து நிலத்தி லுதிர வெள்ளமோடும்படியாகச் செய்தான். இவ்வாறு அரசன் அக்காரியையுண்ட செய்தியை ஓரக்கிகேள்விப்பட்டு வந்து அரசனே யெதிர்த்துப் போர்செய்து அவன்கரத்தைப் பற்றுமாறு நெருங்கி வருதலும், அரசன் வலியிழந்து அவ்வனத்தி லிருக்கின்ற ஓர் மடுவிற் பாய்ந்தான். அம்மடுவில் ஸ்நானஞ்செய்ய வந்திருந்த நாகலோகஸ்திரீகள் அவ்வரசனைக் கண்டவுடன் இன்று நமக்குப் பெருஞ் செல்வம வந்ததென்று மனங்களித்து அவனே யழைத்தக்கொண்டு தங்க ளுலகத்தைச் சேர்ந்து ஆடையாபரண முதலான வைகளைக் கொடுத்து இனிய அமுதங்களே யூட்டித் தம்மைப் புணர்ந்து இன்புற்றிருக்குமாறு அவனே வேண்டினார்கள். அதற்கவன்சம்மதியாது நான் ஏமகர்தராசனுடைய புத்திரன் எனது ஈயஸ்திரீயையன்றிப் பரஸ்திரீகளே யான் கவனிச்கின்ற தில்லையென்று மறுத்து விட்டான். இவ்வாறு அரசன் மறுத்துரைத்தும் அந்நாகலோகஸ்திரீகள் அவன் மீது வைத்த ஆசையை வெறுக்காதவர்களாய் அவனே எவ்விதத்தேனும் தங்கள் வசமாக்கத்தக்க இனிமைகளேப் பலவாறு காட்டிச் சற்றுங் கோபியாமல் அவ்விடத்திற்றானே நிறுத்தி, அளவற்ற வுபசாரங்களேச் செய்து கொண்டிருந்தார்கள். இப்பால் அவ்வரசனேடு வேட்டைக்குவந்த பரிசனங்களெல்லாம் தங்கள் நாயகனே எங்குந் தேடிக் காணுமல் மடுவில் வீழ்ந்திறந்தானென்றுணர்ச்சயித்து அவன்மனேவியாகிய இந்துமதிக்குச் சொல்ல, அவளதுகேட்டலும் விடந் தலைக்கேறின வேளப்போல மிகுந்தபரிதாபமுற்று, மார்பி லணிந்திருக்கின்ற முத்தாரங்களெல்லாஞ் சிதறும்படியாகச் சோர்ந்து வீழ்ந்து வேறொரு தேறுதல் காணுமல் தனது யில்லாத துக்கக்கடலில் மூழ்கிமங்கிலிய விர்ச்சனஞ் செய்து, இ-

ய்யத்தக்க கருமாதிகளையுஞ் செய்து முடித்தமிக்க கவலையுற்றிருக்கின்ற காலையில், பன்னிரண்டு வருடஞ் சென்றபின்பு திரிலோகசஞ்சரியாகிய நாரதமுனிவ ரங்கெழுந்தருள அவரை அவ்விராமனி கண்டு சாஷ்டாங்க வந்தனஞ செய்து எதிர் நின்றனள்.

நாரத முனிவர் அவளைப்பார்த்து வனிதாரத்தினமே உன்னை வருத்துகின்ற மனக்கிலேசத்தை யொழித்துவிடு. மன்மதனை வெல்லத்தக்க பேரழகினை வாய்ந்த உன்கணவன் நாகலோகத்தி லிருக்கின்றன். அவனவவிடத்தையகன்று விரைவில் இங்ஙனம் வருவதற்கு ஒருபாயமுண்டு. அஃது சந்திரசேகர மூர்த்தியாகிய விநாயகக் கடவுளின் சதுர்த்தி விரதமேயாம். அவ் விரதத்தை யன்போடு நடாத்தக்கடவை யென்றுசொல்லி அதனையநட்டிக்கு முறைமையுந் தெரிவித்து ஏகாக்ஷர மந்திரத்தை யுபதேசஞ்செய்து எழுந்தருளினர். அத்தினமே தன்னினைவன் புயங்களைச்சேரப் பெற்ற வள்போல மனங்களித்து ஆனந்தமாகிசதுர்த்திவிரதலை எதிர்நோக்கியிருந்தனள். பிஸ்னர் அதுவருதவுடன் அவ்விரதத்தை ஆகம விதிப்படி அநுஷ்டித்தாள். உடனே கணேச மூர்த்திக்குக் கிருபையுண்டாக, அக்கிருபையினால் நாகலோகவ நிரீகளுக்கு மனமிரங்கிக் கற்பின் மகளிரை யொத்தர சற்றேனு மனங்கலையா திருந்த சந்திராங்கத ராசனைக் குதிரையின்மீதேற்றி ஆபரணமுதலிய அளவற்ற திரவியங்களைத் தந்துமுன்னர்த் தாங்க ணடைத்துவந்த மடுக்கரையிற் கொண்டுவந்து விடுத்துத் தாங்களு அவன்மீது வைத்திருந்த பல நாள் ஆசைகளையும் ஒருநாளி லொழித்து, மீட்டுந் தங்களுலகத்திற்குச் சென்றார்கள் இப்பால்அரசன் குதிரைமீதேறி வருகின்ற சேதியை நகரதாரிரிந்து அமைச்சர்களுக கறிவிக்க, அவ்வமைச்சர்கள் பொருக்கென் றெழுந்து எதிர் கொண்டோடித் தங்களரசனைக்கண்டு முத்தியின்பத்தை யடைந்தவர் களைப்போல ஆனந்தமாகி அலங்காரஞ செய்த பட்டத்து யானையைக் கொண்டு வந்து நிறுத்தினர்கள் பின்னர் அரசனவன் மேகவாகனனுடைய தேவேந்திரனைப்போல் அளவற்ற மகிழ்ச்சி யடைந்தஅந்தயானைமீ தாரோகணித்து நகரத்தை வலமாகவந்து தனது அரண்மனையைச் சேர்ந்து நவரத்தின மயமாயிராகின்ற சிங்காதனத்தில் வீற்றிருந்து புரோகிதர் முதலியபெரியோர்களை கூவித் தலைவணிப்பிரிந்தஸ்திரீகளும், ஸ்திரீகளைப்பிரிந்ததலைவனும் பின்னொன்று பகுங்காலத்தில் நடத்தவேண்டிய விதிக ளென்னென்று வினவ, அவ் வேதியர் வேநாகலங்களையாராய்ந் தணர்ந்து அறிவிக்க, அவ்வாறே சகல சட

ங்குகளையு நிறைவேற்றி, ஆடையா பரணங்களைத் தானஞ் செய்து தன் மனைவியோடும் இன்புற்று வாழ்ந்திருந்தான். பின்னர் இந்த மதியானவள் மணவறையிற் றன்புநடஞ்செ கலந்திருக்கின்ற சமயத்தில்முன்னர் தன்னிடத்தில் நாரதமுனிவரெழுந்தருளி அரசன் க்ஷேமத்தையரிவித்ததும், அவனை மீட்டுமடையுமாறு கணேசமூர்த்தியி னுடைய சதுர்த்தி விரதத்தை யுபதேசித்ததும், அவ்வாறே அவ்விரதத்தைத் தானனுட்டித்ததும் விவாமாகசொல்ல அவைகளனைத்தையுஞ் சந்திராங்கதாசன் கேட்டறிக்க மனகளிப் பூண்டு விகாயக மூர்த்தியைப் பலவாறு துதித்தி அவரது சதுர்த்தி விரதத்தைத் தன் மனைவியோடும் துடைவிடாது அநுட்டித்து அர்த்தத்தில் போன்பவீடடைந்து ஆனந்தராகரதில் மூழனினன்.

சந்திராங்கதன விநாயக சதுாததிய நடடிதத படலம்.

முற்றிற்று.

சண்முகராஜுட்டித்தபடலம்.

நீருக ளுங்கய லோவெனும் வாட்கண் ணெடுங் கூதல்
வாருக வீங்கு தனத்தமை மாதும ணுளை பாற்
சீருக நூற்றினெ டெட்டரசாளுந் திறனுறருன்
ருருக னென்றொரு தானவன் முன்பு தவழத்துள்ளான்

முனிவர்களே விநாயக மூர்த்தியினுடைய சதுர்த்தி விரதத்தால் சந்திராங்கத ராசன் தாளிழந்த நகரத்தினை மீட்டும் அடையப் பெற்று முடிவில் முத்தியடைந்த வரலாற்றினைச சொன்னேம். இப்பால்சண்முகதேவர் அநுட்டித்ததிறத்தினைச் சொல்லுவோங்கேட்பீராக. முன்னொருகாலத்தில் உமா பரமேஸ்வரி மணாளராகியசிவ பெருமானிடத்தில் நூற்றெட்டு யுகம்வரையில் அரசாளுந்திறத்தைப்பெற்ற தாருகாசுரனென்னும் ஒர்அசுரனிருந்தான். அவ்வசுரனவன் தேவேந்திரன் ஆபரத்தைட் டண்டங்களையும் ஆண்டு வருவதை நோக்கிமனஞ்சகியாத அவைக ளனைத்தையுந் தன்னொரு கூடைநீழலின்கீழிருத்தித்தேவர்களெல்லாம்வெளியிடாமற்சிறை யில்வைத்து தன்பப்படுத்தினன். அச்சிறையி லகப்படாமல் இந்திரன், பிரமன், விண்டுமுதலிய சிலதேவர்கள மாத்திரம் அப்பாதகன் விழிக்குத் தப்பி மகமேருகிரியைச் சார்ந்து வெல்ல

யரணியுரி போர்த்தருளிய சிவபெருமான் திருவடிகளைச் சிந்தித் திருந்தார்கள். அப்போது அக்கடவுளுடையகிருபையினல், விண்டு வாதியரே நீங்கள் ,தேவர்கட்குவந்த இடுக்கண்களை நீக்கக் கருது வீராயின் சிவபெருமான் சுப்பிரமணிய தேவரைத் தருவதான ஏதுக்கள் யாதோ அதனை யறிந்து, விரைவில் மூயலக் கடவீர்கள். என்று ஆகாயத்தில் ஒரு தெய்வ வாக்குண்டாயது அத்திருவாக் கை யவர்கள் செவிகுளிரக் கேட்டு ஆனந்தங்கொண்டு வெள்ளியங் கிரியையடைந்து சிவபெருமானைத்தரிசிக்கச் செல்லுகையில் சிவ பெருமான் சந்திதானத்தி லிராததை நோக்கி மிக்க ஏக்கங்கொண்டு தின்புற்று வாடினர்கள். அச்சமயத்தில் அவர்கள் மனத்தளர்ச்சி நீங்குமாறு பார்வதி தேவியார் ஏதிரே வர உடனே அத்தேவர்க ளெல்லாம் ஆனந்தக் களிப்படைந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து, துதிப்பாராயினர்.

ஆரணி காரணி பூரணி நாரணியரனுர்தஞ்
சீரணி தாரணி நாயகி தியோன் சிலர்தம்மை
யோரணு வுங்கழ லாதசி றைக்க ணுறுவித்தான்
முரணி மீதறும் யாங்கள் கரந்தே தளர்கின்றேம்.
எங்க ளிடும்பையை மூற்று மகற்றி யெமைவிண்மேற்
றங்கவி ருத்துத னின்கட ணுகுந் தளர்சேய்க்குப்
பொங்கரு டாயே யல்லது வேறும் புகலுண்டோ
நங்கையி ரங்கா யென்றுப ணிந்து நவின்றேமால்.

சகலபுவனேஸ்வரியே தத்துவகாரணியே சதுர்வேதநாயகியே அவுணபாதகனுகிய தாருகனுனவன் தேவர்களே யெல்லாம்பிடித்து அணுவளவேனும் அப்பால் அகலக்கூடாத சிறையில் வைத்து வரு த்துகின்றனன். அடியேங்கள் மாத்திரம் அக்கொடியவன் விழிக னில் அகப்படாதவண்ணம் இப்பூலோகத்தி லொளித்துக் காலங் கழிக்கின்றேம். தாயே யாங்கள் படுகின்ற தின்பங்களை நீக்கிவிண் ணுடியேற்றுவித்தல்உமது கடமையாகும். தளர்வுற்றபிள்ளைகட்குத் தாயையன்றிவேறென்ன கதியிருக்கின்றது. என்றுபலமுறைபிரார் த்தித்தார்கள்.இவையணைத்தையும்உமாதேவிகேட்டுக்கிருபைசுரந்து தேவர்களே இக்கைலாய பர்வதத்தைச்சூழ்ந்த நான்குபர்வதத்தில் மதகிரியினிடத்தில் விஷ்ணுவுக்கும் புடபகிரியினிடத்தில் பிரமனுக் கும், சந்தானகிரியினிடத்தில் தேவர்களுக்கும் மூற்காலத்திற் சிவ பெருமான் யோகத்திலிருந்து தத்துவஞானத்தையுபதேசஞ் செய்

தருளியதுபோலவே இக்காலத்திற் கோளகிரியி லெழுந்தருளி முனி வர்களுக்கு உபதேசிக்கின்றனர். ஆதலால் நீங்களனைவரும் அவ்வி டத்திற்சென்று உங்கள் கவலைகளை யொழிக்கக் கடவீர்க ளென்று திருவாய்மலர்ந்து சென்றனள். அவ்வாறே விண்டுவாதி தேவர்கள் அக்கோளகிரி யருகிற்சென்று சிவபெருமான் யோகத்தை நீங்கு மாறு ஓ ராலோசனைசெய்து மன்மதனையழைத்து இதனைச் சொல் லுவாராயினர். அனங்கனே உனது பெருமைகளைப் பேசுவதற்கு யாவராலாகும். கருப்பு வில்லைக் கொண்டு திரிலோகங்களையும் வெ ன்று உனது கீர்த்தியை எங்கும் நாட்டி யிருக்கின்றனை. ஆதலால் எங்களுக்குநேர்ந்த மனவருத்தங்களைப் போக்குவதுனக்குப்பெரி தல்ல யாங்கள் தாருகாசுரனல் மிகவுங்கலக்கப் படுகின்றனம்அதை நீக்கும் பொருட்டு நீதயைசெய்து அக்கோளகிரியில் மோனத்தி லிருக்கின்ற பரமசிவத்தின்மீது உன் பாணங்களைச் செலுத்தி விரக முண்டாக்கி அவர் உமாதேவியோடுங் கூடச் செய்வையாயின் யாங் களனைவருஞ் சிலகாலஞ் சுகுக்கியத்தி லிருப்போ மென்று சொல்ல லும், இவையனைத்தையும் மன்மதன்கேட்டு நடுநடுங்கி ஒருகாலத் தினுங் தீரவரிதாய பாதகங்களுக் கேதுவாகிய வார்த்தைகளைக்கே ட்கவுமாச்சரியமே தென்ன அநியாய மென் றேசித்து அத்தேவர்க ளாணையைக் கடக்கக்கூடாமல் தன்படை வீடாகிய வனசம் சூதம், அசோகு, முல்லை, நீலம், என்கின்ற பஞ்சபுட்பசரங்களினிற் புகு ந்து உன்மத்தம், மதனம், சம்மோகம், சந்தாபம், வசிகரணம்என் கின்ற () பஞ்ச பாணங்களையும் அம்புபெய் குதையினிரப்பி முதுகி லிறுக்கி நீங்காரத் தொனிகளை விளைக்கும் வண்டுகளை நாரியாகவு டைய கருப்புவில்லைச் சேவித்தெடுத்து புயத்தில்மாட்டிக் கொண்டு தங்கத் தகட்டினைப்போலப் பிரகாசிக்கின்றதாழம்பூவாகியவாளினை இடையிறசொருகி மகிழம்பூமாலையைத்தரித்து கிரீடம், குண்டலம் வாகுவலயம், மதாணிப் பதக்கமுதலான ஆபரணங்களை யணிந்து, இனிப் பரிபூண்ட தென்றற்றேரினீதது ஆரோகணித்து, சமுத்திர மாகிய செயபேரிகைமுழங்கவும். குயின்முழக்காகிய காளமூதவும் கழுகும்பாளைகளாகிய வெண்சாமரைகள் வீசவும், கங்குலாகிய யா

() அவை செய்யு மவத்தை; சுப்பிரயோகம், லிப்பிர யோகம், சோகம், மோகம் மரணம், அவையாவன; சுப்பிரயோகம்-சொல்லும் நினைவும், லிப்பி ரயோகம்-வெய்துயிர்த் திரங்கலும, சோகம்-வெதுப்புந் துய்ப்பன் தெவிட் டலும், மோகம் - அழுங்கலும் மொழிபல பிதற்றலும்,மரணம் - அயர்ப்பும் மயக்கமும்,

ணக்கூட்டங்கள் நெருங்கவும் மங்கையராகிய சேணைகள் புடை சூழவும், மீன கேதனம் படபடென்றசையவும் வெண்மதியாகியகுடை நிழற்றவும் இவ்வித ஆடம்பரங்களுடன் கோளகிரியை யடைந்துப் புலியினையெழுப்பச்சொல்லும் மானைப்போல சிவபெருமான் பெதிரிற்சென்று தனதுகரத்தில் வில்லியெடுத்து நாணேறிட்டுப் பஞ்ச புட்பபாணங்களையும், அதிற்பூட்டிக் கர்த்தன் இதய கமலத்திற்கு நேராகக் குறிபார்த்துப் பிரயோகித்தான். அவைகள அதிகவேகமாகச்சென்று சிவபெருமான் திருமேனியிற் றுக்கிய மாத்திரத்தில் தமது அனல் விழியினர் சிறிது திறந்து மன்மதனைப் பார்த்தனர். உடனே அவ்வழியினின்றும் பெருகிய சுவாலையால் மன்மதன் உடலங்கரிந்து எரிந்து சாம்பராயிற்று.

இவ்வற்புதத்தை உமாதேவி நோக்கிக் கர்த்தன் அருகில்வந்து அஷ்டாங்க வந்தனமுஞ்செய்து அவர் கோபந் தணியும் படியாகக் குளிர்ந்த வசனங்களைக்கொண்டு சுவாமீ சற்றேனு மிரக்க மில்லாத தாருகனவன் யெமனும் அஞ்சத்தக்கதாக வியற்றுங்கொடுமைகளுக் தேவர்களெல்லாம் அஞ்சித் தங்கடங்கள் பதவிகளைத் துறந்து இதகாரும் மேருவரைச் சாரலி லொளித்திருந்து, இப்போ தா சகலசிவராசிகளுடைய அகங்காரங்களையழிக்கவல்ல தேவரீர் திவ்விய சரணரவிந்தங்களே தஞ்சமாக இங்குவந்தடைந்திருக்கின்றனர். அவர்கள் சுவாமிகளுடைய ஞானத்தைப் பெறுதமடமைத் தன்மையினல் தேவரீரையும் எங்களைப்போலக் கருதி புட்பபாணங்களைப் பிரயோகிக்கும்படியாக மன்மதனே யேவினர்கள். அவனுந்தேவரீர் நுதல்விழிக்கு இரையாயினன். இனித் தேவரீர் அத்தணலைத்தணித்து இங்ஙனஞ்சரண்புகுந் திருக்கின்ற தேவர்கட்குத் திருவருள்பாலிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, கர்த்தன்கருணைகூர்ந்து தமது நுதற்கட்டீயைத் தணித்து யோகத்தை யொழித்துக்கோளகிரியையகன்று கைலாய வரையைச் சேர்ந்து உமாதேவியோடும் அந்தப்புரத்திற் சென்று [] தேவவருடத்தில் அறுபதினுயிரவருடங் கலவிவிலிருந்தனர். இப்பால் விண்டுவாதிதேவர்கள் மனம் வருந்திச் சிவபெருமான் எக்காலத்து சுப்பிரமணியக்கடவுளைத்தந்து நமது இன்பங்களை யொழித்தருளுவரோவென்று கலங்கிமீட்டும் அக்கினி தேவர்களை யேவினர்கள். அவன்திறலியைப்போலவேடங்கொண்டு

[] தக்ஷணயமே தேவர்களுக்கு இரவும், உத்தராயணமே பகலும், இத்திவாராத்திரி கூடியது ஒருதினமுமாம். அத்திநம் முன்னூற்றறுபது கூடினது ஒரு தேவவருஷமாம்.

கைலாயவரையிற்சென்று கர்த்த னெழுந்தருளி யிருக்கின்ற சன்னி தானதிதின் புறம்பினின்று சகல சீவராசிகளையும் படைத்தளித்து அழிக்கவல்ல ஜகதீஸ்வரியே அடியேற்குப் பிச்சைதந்தருளவேண்டு மென்று மூன்றுதரங்கூவினன். அதனை எனது அப்பனும் அன்னை யுங்கேட்டுவந்தவன் அக்கினிதேவனென்றறிந்துகொண்டுகல்லியை விட்டுநீங்கினார்கள். உடனே உமாதேவி சிவபிரானைப்பார்த்து சுவாமீ தேவர்கள் தன்பத்தினியின்று நீங்குமாறு கிருபைபுரிய வேண்டுமென்றுபிரார்த்தித்தலும் கர்த்தல் தமதுவீரியத்தைப் பரமேஸ்வரி கரத்திற்பெய்ய அதனை மதன்னை கையேற்று அக்கினிதேவனருகில் வந்து உங்கட்குக் கிடைத்தபாக்கிய நிதிவரும். இதனை உனதுல யிற்றிற்பூரிக்கக்கடவை. சிறிதேதாமதித்திற் சிறுதுமாயின் திரிபுவ னங்களையும் பொடியாக்கி விடுமென்று திருவாய் மலர்ந்து அவன் கரத்திற்கொடுக்க அவனும்.அவ்வாறே ராக்கிதையோடும்வாங்கிப் புசித்துவிட்டனன். இப்பால் ஒப்பற்ற பரமேஸ்வருடைய வீரிய மானது அக்கினிதேவனுடைய வயிற்றிற் றங்கியமாத்திரத்தில்பொ ல்லாத வெப்பமுண்டாக அவ் வெப்பத்தை அவனற்ற மாட்டாது இமயகிரிச் சாரலுக்கேகடி அங்கிருக்கின்றகங்கையாற்றில் சரவணப் புற்கள் வளர்ந்து மூடப்பட்டிருக்கின்ற ஒருபொய்கையில் அவ்வீரி யத்தை விடுத்தனன். பின்னர் அவ்வீரியமானதுகுமரனாகஅத ற்கு நட்சத்திரஸ்திரீகள் பால்கொடுத்து வளர்த்தி வந்தனர்.

இவ்வாறு கர்த்தன் வீரியமானது சரவணப்பொய்கையில் கு ழைந்தையாகி வளர்ந்துவருவதை மகாவிஷ்ணுகண்டுகைலாயவரை யிறசென்று சிவபெருமான் சந்நிதானத்தை யடைந்து சாஷ்டாங்க மாக நமஸ்காரஞ்செய்து சுவாமீ தேவரீர் கிருபை புரிந்தருளிய கு மாரதேவர் சரவணப் பொய்கையி லெழுந்தருளி யிருக்கண்டேன் என்றுசொல்லலும் அதனைக் கேட்ட பார்வதியார் கர்த்தன் திருவ டிகளைப் பணிந்து விடைபெற்று விண்டு பிரமன் இந்திரன் முதலிய தேவர்கள் அதிதீவிரமாக வந்து பாரிசாதபுட்பங்களை வாரிவாரி இ றைத்துச் சுபங்களைக் கொண்டாடிக்கொண்டு பின்பற்றிவரவும்,ஜெ யபேரி வெற்றிமுரசமுதலிய மங்கல வாத்தியங்களைப் பூதவீரர்கள் அதிகோஷையெழ முழக்கிக்கொண்டு போகவும் இவ்விதமான ஆ டம்பரங்களோடு அச் சரவணப்பொய்கைக்குச் சென்று குமாரதே வனைத் தமதுகரங்களாற் றழுவி யெடுத்துவந்து கொங்கைகளிற் சுரந்தபசும்பூட்டிச் சிவபெருமானது திருக்காத்திற் கொடுக்க உட

னேசிவபெருமான் மனங்களித்துவெட்கிப் பூகிறத்தையொத்தகிறந் தகிருமேனியையுடைய அக்குமாரதேவரை அன்போடுவாங்கி உச் சிமோந்து உள்ளம்பூரித்து அளவளாவிய அன்போடும் ஆதரித்து வந்தனர். இப்பால் பாலசுப்பிரமணிய மூர்த்தியானவர் தந்தையா கிய சிவபெருமானைக் கார்த்திகைத் திங்களிறும்பளித்தகினைக்கார்த் திகேயனென்றும் நகூஷதிரஸ்திரிகள்பாற்கொடுத்துவளர்த்தகினால் அறுமீன் காதலன் என்றும், விசாகநகூஷத்திரத்திற் பிறந்தமையால் விசாகனென்றும், அக்கினிதேவனுக தரித்தும் தங்கியிருந்தமையால் பாவகியென்றும், சங்கரியினது கரத்திலும் அக்கினிதேவன்வயி ற்றினுங் கங்கையினுக தங்கியிருந்ததன்றி, அககங்கையை யுறிஞ்சி மீளவும் விட்டமையால் கார்த்தனென்றும ஆறுமுகத்தை யுடையவர் ஆதலால் சண்முகனென்றும, சகலருக்கும சுவாமியா யிருக்கின்ற சிவபெருமானுக்கு நாதரா யிருந்தமையால் சுவாமிநாதனென்றும், தேவர்களுடைய இடத்தை நிறைவேற்றுதற்குச் சேனாபதியா யிருத்தலினாற் சேனாபதியென்றும மாசேனனென்றும், ஞா னசத்தியாகிய வேலாயுதத்தைத் தாங்கியிருக்கின்றமையால் ஞான சத்திதரனென்றும், அசுரர்குலத்தை வேரோடுங் களைய வல்லராத லால் அசுரர்குல காலனென்றும,மயில்வாகன முடையவராதலால் மயூரேசனென்றும், சேவற்கொடியை யுடையவராதலால் சேவற் கொடியோனென்றும், சகல ஆன்மாக்களின் உள்ளத்திலும், மலை முழைகளிலும், வாசஞ்செய்கின்றதாலகுகனென்றும், கட்டிளமை மாறாதிருத்தலினால். முருகனென்றும், தமக்கு அருமைப்புத்திரரா தலாற் குமரனென்றும், சேயென்றும், நாமகரணஞ் செய்யப்பெற் றுத் திரிலோகங்களும் உய்யும்படித் திருவிளையாடல் செய்திருந் தனர்.

இக்காரணத்தை திருமான்முதலிய தேவர்க ளறிந்து விரைவில் சண்முகக்கடவுளை யடைந்து, தங்கள் மகுடங்களெல்லாம் அவரது திருவடிகளிற் பொருந்தும்படியாகப் பணிந்தெழுந்து ஐயனே அடி யேங்களடைந் திருக்கின்ற எளிமையையும்நீக்கி வையகமுழுதும் உய்யும்படியாகக் கிருபைபுரிய வேண்டுமென்று இரகத பிரார்த்தித்து அபிஷேகமு தலிய ஆராதனைகளை நடத்தினர்கள். இவ்வாறு பிரார்த்தித்த விண் ணோரி தேவர்களை எமது சண்முகப்பெருமான் நோக்கி இனியகிரு பாவசனங்களால் அவ்வவர்க்குத் தக்க ஆதரவுகளைச் சொல்லிப் பலதிருவிளையாடல்களைச் செய்தவருங்காலத்தில் கிருஷ்ண நதிக்கு

வடபாரிசத்திலிருக்கின்ற ஓர்வனத்திற்சென்று கணேசமூர்த்தியை மனத்திற்றியானித்து அவரது சடாக்ஷரமந்திரத்தைச் செபஞ்செய்துகொண்டிருந்தனர். அவ்வாறு சிலகாள் கழிந்தபின்னர், அண்ணலாராகிய விநாயகமூர்த்திக்கு அருள்சுரந்து, அவரெதிரிற் பிரத்தியட்சமாகத்தோன்றிப் பலவரங்களோடு, தாமேறி நடாத்துகின்ற மயில்வாகனத்தையுந்தந்து உனக்கு மயிற்றுவசனென்னும் பெயருண்டாகுகவென்று திருவாய்மலர்ந்து, தமதுதேவகணங்களோடுமாகாயவெளியிற்சுகந்தருளினர். பின்னர், முருகக்கடவுளானவர் தமக்கெதிரிற் றரிசனந்தந்தவிடத்தில் விநாயகமூர்த்தியினுடைய திருவுருவத்தைப் பிரதிட்டைசெய்து இலட்சம் அருகுகளையும், புட்பங்களையுங் கொண்டருச்சித்து மோதக முதலியவைகளை நிவேதனஞ்செய்து, சகலவிலக்கினங்களோடும் பூசித்து அவ்விநாயகமூர்த்திக்கு இலக்க விநாயகரென்று நிருநாமந்தரித்து, மீட்டுங்கைலாயவரைபசேர்ந்து தமதுதாயையாகிய பெரியநாயகியம்மனைப்பணிந்து, அவர்பேரருள்பெற்று, வேலாயுதமுதலியஆயுதங்களையேந்தி தேவர்களெல்லாம் புடைதழும்படியாக மயில்வாகனத்தின்மீதாரோகணித்து எதிர்த்துவந்த தாருகாசுரனுடைய ஆவியை யெளிதிலுண்டு சகலலோகங்கட்கும் ஓரிடையூறும் நேராதவண்ணம் பாதுகாத்தருளினர், சண்முகதேவரால் பிரதிட்டைசெய்த இலக்கவிநாயகரை ஆராதிக்கின்றவர்களுக்குர் சகலபிடர்களுந் தன்பங்களும்பகைகளு நீங்கி, அவ்வவர்கள் புட்டாந்திகளெல்லாம் ஒன்று இலட்சமாகிவளரும். இலக்கவிநாயக தொழுத்தநாமிய அர்த்தல மானது மயூரசமென்னும் பெயரினை வழங்கி வருகின்றது

சண்முக ரூபட்டிடத்தபடல முற்றிற்று.

மன்மத னுருவம்பெற்ற படலம்.

அரத்தக மணிந்த பாதத் தணஙகுமை பாகா கணே
சரத்தினிற் சிறந்தமாரன் றவளரூரை பின்னர்ப்
பரத்தினிற் றணந்த வாவிப் பண்பென விரதிமாழ்கி
வரத்தினிற் சிறந்த வெண்டோள் வள்ளல்சை சரணஞ் சார்ந்தாம்.

முனிவர்களே விநாயகமூர்த்தியை சண்முகக்கடவுளுபாசித்து தாருகாசுரனென்ற திறத்தினைச் சொன்னேம். இப்பால் மன்ம

தன் உருவம்பெற்ற வரலாற்றினைச் சொல்லுகின்றேம் கேட்பிர்களாக, பார்ப்பதிபாகராகிய சிவபெருமான திருத்திவிழியினுல்முன்னர்மன்மதன் நீறுகிவிடவும், இரதிதேவியாலவள் உடலினின்று நீங்கிய உயிர்போன்றவளாய்ப் பதைபதைத்து, தேகமாதியந்தமும் வெயர்த்து பூமியில் விழுந்து புரண்டு, யுரண்டு, அலறியலறி தாமரைவாசியாகிய மகாலட்சுமியினது மனதைக் கினிய மகனே அடியாள் பிராணனுக்குப் பிராணனைப்போன்ற இறைவனே பசியகரும் பினை விலகாகைகொண்டு, திரிலோகங்களையும் வென்று செயங்கொண்டீரனே என்று அளவற்ற துக்கசாகரத்துள்ழாழ்ந்கி, தனக்குப் புகலிடம் பிறிதின்றி வாதகிற் சிறந்த வள்ளலாகிய கைலாசபதியைச் சரணைகவடைநது, பலமுறையும் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, விழிகளில நீர்த்தாரைகள்சொரிநது உடலையொடுக்கி பொருபுறமாகநின்று தினாட்சண்ணியமே சர்வபரிபூரணமே ஏழை பங்காளரே காளகண்ட மூர்த்தியே பக்தவச்சலமே எனதுகாதலர், பிரமன் முதலினோர செய்த வஞ்சகத்தினுல் தேவரிருடைய துதல் விழி அனலுக் கிரையாகி மாண்டனர் அக்காரியம்அவாசுதந்தர புத்தியினுல் நேர்ந்ததன்று ஆதலால் புவர்செய்த அபராதத்தினைப் பொறுத்தருளிப் பழையபடியே உயிர்தந்தெழுப்பி, சுமங்கலிகளாயிருக்கும மற்றைய மாதர்கள் மூங்னிலையில் யான்மாத்திரம் கைம்மையாகிவருந்தாதபடி மாங்கல்யபிரசை தந்தருளவேண்டுமென்று கையேந்திநின்றனள். உடனேபூரியைத் தேராகவுர்ந்துத், திரிபுரங்களை யெரித்தருளிய தேவதேவோர்தமருக்குக் கிருபைசுரந்து னசிறுமியே நம்மாலிறந்த மன்மதனை வன் உனக்குமாத்திரம் எக்காலத்தும்உருவமாகத்தோற்றியிருப்பன். மற்றையர்க்கெல்லாம் அருவமாகியிருப்பன். நீ ஒன்றுக்கும் அஞ்சலியென்று திருவாய் மலர்ந்து, அம்மன்மதன் உயிர்பெற்றெழுகவருமாறு தமதிருவுளத்தில் நினைத்தனர், உடனே அவனெழுந்து கர்த்தன் திருவடிகளில் வீழ்ந்து, சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து அளவளாவிய பேரன்பினோடும் ஆனந்தக்கண்ணீர்சொரிந்து, உள்ளம் நெகிழ்ந்து உரோமமாஞ்சிதமுற்று தோத்திரஞ் செய்வதாயினன்.

ஆருடியவே ணியனே சரணம் அரவா டியவா பரணசரணம்
ஏருடியவார் கொடியாய் சரணம்எரியா டியபா ணியினுய் சரணம்
கூருடியமா தடையாய் சரணங் குரையா டியபூங் கழலாய் சரணம்
நீருடியமே னியனே சரணம் நிகரா ருமிலா தவனே சரணம்.

கன்றல் விளவீழ் கணியாய் சரணங் கதழ்வா சுகிரா ரியினுய் சரணம், குன்ற கியவார் சிலையாய் சரணங் குரைமா மறைவா ணியினுய் சரணம், ஒன்றர் புரமீ றுசெய்தாய் சரணம் உற்றர்த்தமைவீறு செய்தாய் சரணம், நின்ற டுவொன்மன் முடையாய் சரணம் நிகரா ருமிலா தவனே சரணம்.

வடிவார் தலைமா லையனே சரணம் வானுடர்களென் பணிவாய் சரணம், கடியேன்வெண்கோ டுடையாய் சரணங் கடலாமையி னுடையாய் சரணம், குடிமீன் விரியா றுரியினுய் சரணஞ் சுடர் கே சரியீ ருரியாய் சரணம், கெடியோன் விழிசே றடியாய் சரணம் நிகரா ருமிலா தவனே சரணம்.

இவ்வாறு தோத்திரஞ்செய்தலொல்லாமல், வானி தேவரீர்உல கமாதாவாகிய விமலையை சேரும்வண்ணம் தேவர்களெல்லாம் என் னேத்தூண்டிப்புட்ப பரணங்களோப் பிரயோகிக்கும் படியாசு ஆக் கியாபித்தனர். அவ்வாறே அவர்கள் ஆணையைத் தடுப்பதற்கு அஞ் சினவனுய் தேவரீர்கிருபாசமுகத்தின் முன்னர் இத்தன்மைத்தான பொல்லாத்தீங்கினேச், செய்வதற்கு உடன்பட்டாகினேன், இவ்வப ராதத்தை தேவரீர் பொறுத்தருளி பழையபடி கருப்பு வில்லினுல் சகலரையும் வெல்லும்படியான அதிகாரத்தை எனக்குக்கொடித்து இரட்சிக்க வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தகொளளவும்,சில பெருமான் அவனேப்பார்த்து அனங்கனே சகல தேவர்கட்குந் தலைவராகியும், ஐந்து திருக்கரங்களு முடையவராகியு மிருக்கின்ற கணேச மூர்த்தியானவர், உனக்கவ்வதிகாரத்தைக் கொடுத்தருளு வர். நீ அக்கடவுளே வந்திக்கக்கடவை யென்று திருவாய் மலர்ந்து ஏகாட்சர * மனுவை அவனுக் குபதேசித்து, அதை அனுட்டிக் கும்முறைமையையுங் கிருபை சுரந்து, விடை கொடுத்தனர். பின் னர் மன்மதன் பேரானந்தக் கடலின் மூழ்கி கர்த்தன் திருவடிக ளிற் பணிந்தெழுந்து, விடைபெற்று இரதிதேவியோடுஞ் சென்று முன்னர் சண்முகப்பெருமா னனுட்டித்த மயூரேசமென்னுங் தலத் தையடைந்து, அத்தலத்தில் ஆயிரவருடமிருந்து கணேசமூர்த்தியி னுடைய பாத பதுமங்களேப் பேரன்பினேடுந் தியானித்து ஏகாட் சர மந்திரத்தை இடைவிடா தனுட்டித்து வந்தான் இவ்வாறு மன் மதன் செய்து வருகின்ற அனுட்டிப்பினுக்கு விநாயக மூர்த்தி திரு வுளசாரந்து, அவனெதிரிற் பிரத்தியட்சமாகி, அங்கசனே உனதன்

* மனு-மந்திரம்.

புக்குவியக்தோம். நீ இச்சித்தவை யெல்லாங் கேள் தருகின்றேம் என்று திருவாய் மலர்தலும், சர்வ சங்காரகாலத்தில் அண்டகடாகங்களே யெல்லாம் ஆகாரமாகக் கொளகின்ற சிவபெருமானுடைய நுதல் விழிக்குத் தனதுடலேயு முணவாகக் கொடுத்து இனேப்பாற்றிய மன்மதனனவன், அளவற்ற மகிழ்ச்சியை யடைந்து சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து பலமுறை தோத்திரஞ்செய்து, தேவர்களுயகமே அரசர்களும் படையெடுத்தற் கஞ்சும்படியான ஸ்திரீகள் மீது யான்படை யெடுத்துவென்று உடனே இன்பந் தருவதான எனததிகாரத்தை முன்போலச் செலுத்தவும், நல்ல வருவத்தையடையவும் தேவரீர் கிருபைபாலித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தனன். அதற்கு விநாயகக் கடவுள் மனதிரங்கி அன்பனே இனி நெடுமால் கண்ணனுக அவதாரஞ் செய்யப்போகின்றனன். அக்காலத்து நீ அவன் மகவாகுவை. உடனே உனக்குகல்ல உருவமு முண்டாகுமென்று திருவாய் மலர்ந்து தமது திருவுருவைக் காந்தருளினர். பின்னர் அம்மன்மதன், தனக்குக் காட்சிதந்தருளிய விடத்தில் ஓ ராலயஞ் சமைத்து, அதிற் கணேச மூர்த்தியைப் பிரதிட்டை செய்து, அம்மூர்த்திக்கு மகோற்கட விநாயக ரென்று திருநாமமிட்டு காலையினும் மாலையினும் திருமஞ்சனத்தாலாட்டிப் பரிமள மிருந்த புட்பவகைகளாலருச்சித்துநிணமா அப்பவருக்க முதலியவைகளால் நைவேத்தியங்கள் செய்து, அளவற்ற பேரானந்தத்தில் மூழ்கி யிருந்தான். இவ்வாறு இடைவிடாது பூசித்து வருகின்ற நாளையில் மகோற்கட விநாயக ருடைய பெருங் கருணையினுல் முன்போலவே தனது கருப்புவில்லேயும் பஞ்சபாணங்களேயும் பெற்று, சத்தலோகங்களினும் தன் ஆஞ்ஞா சக்கரத்தை யுருட்டி ரதி தேவியோடும் கூடி சுகமாக வாழ்ந்திருந்தான்.

இப்பால் விண்டுவானவர், கண்ணனாகத் திருவவதாரஞ் செய்ய அவருக்கு அம்மன்மதனனவன் புதல்வனுகப் பிறந்து பிரத்தியும்ணனென்கிற பெயரை வகித்து நல்ல வருவத்தைத் தாங்கிச் சகலசாஸ்திரங்களேயும் ஆராய்ந்துணர்ந்து மகா பராக்கிரமத்தோடு யாவரும் புகழும்படியாக வாழ்ந்திருந்தான்.

அக்காலையில் வலிவிற்சிறந்த சம்பனென்கின்ற ஓர்தானவன், இவ்வுலகத்தில் ரதி மன்மதனே நீங்கியிருப்பதைக் கண்டு தெய்வலோகத்திற் சென்று அவ்விரதியை நடுங்கும்படியாகக் கைக்கொண்டு ஆகாய மார்க்கமாகச் சென்றன். அவ்வாறு செல்லுகையில் அப்பாதகனுடைய கரத்தினின்றும் இரதி தேவியானவள் நழுவிக்

கடலில் வீழ அக்கடலில் ஓர் பெரிய மச்சமானது அவளே விழுங் கியது. பின்னர் தான்கடலிலிறங்கித் தன் திறத்தினு லானமட்டும் அதனைக் கலக்கிச் சோதித்து எவ்விடத்திலு காணுதலுனுகித் தன்ப தியைச்சேர்ந்தனன். சிலகாள் கழித்தபின்னர் இரதிதேவியைக் கரு வாகக்கொண்டிருக்கின்ற மீனானது ஓர் வலியிலகப் பட்டது அம் மீனைச்செம்படவன் சம்பர சுரனுக்கு முன்னர் கொண்டுவந்து வைத் தான். அதனை அத்தானவன் பிளக்குமளவில் அதன் கருப்பத்தில் ஓர் பெண்ணிருப்பதைக்கண்டு மிக்கசுகந்தோஷங்கொண்டு தனக்கவ னைப்புத்திரியாக வளர்த்துவந்தனன். இவ்வாறு அத்தானவ னிடத் தில் இரதிதேவி வளர்ந்துவருகின்ற வாலாற்றினை யெல்லாம் நாரத மகாமுனிவரறிந்து கண்ணன்புதல்வனுகிய பிரத்நியும்ன னிடத்தில் சொல்ல, அதனை அவன்கேட்டுத் தன்தேவியைக் கொண்டுவர வே ணுமென்னுங் களிப்போடு சம்பர சுரனிடத்திற் சென்று அவனைப் போர்செய்யக்கூவி அளவற்றநாள் அவனேடு யுத்தஞ்செய்துக் கொ ண்டிருந்தனன். பின்னர் அடபிரத்நியும்னன் தாயாகிய உருக்கு மணியானவள் இதிகாசமும் நமதுபுத்திரன் வரலில்லையே ஈ தென் ன காரணமென்று மனங்கலங்கி யிருந்த அன்போடு விரதக சதி ர்த்தி விரதத்தை அனுட்டித்து வந்தனள். அவ்வாறு அனுட்டித் துவந்த ஆறுநாள் பிரத்நியும்ன னுனவன் சம்பர சுரனுடைய உயி ரைக்குடித்துத் தன்தேவியைக் கதலாமலகம் போலக் கைக்கொ ண்டு அவ்விடத்தினின்று நீங்கித் தன்பதியைச் சேர்ந்தனன். உட னே அவன்தாயாகிய உருக்குமணி யானவள் தன் மகன் வரவை நோக்கிப் பெருமகிழ்ச்சியை யடைந்து தனது விழைவை நிறைவே றச்செய்த சதுர்த்தி விரதத்தை முற்றினுஞ் செய்துமுடித்து சொர் னதானம் முதலாகிய அளவற்ற தானங்களே வழங்கினுள்.

இப்பால் மன்மதனுவன் இரதியோடுங்கூடி வாழ்வுற் றிருக் கும் நாளையில் அனுருத்தன் என்கின்ற ஒருபுதல்வனைப் பெற்றுன், அவ்வனுருத்தன் காளைப்பருவத்தை யுற்றகாலையில் சகல தேசத்து அரசர்களுந் தன்னைப் பணியும்படி அக்கினி மதிலைக் கொண்டு அர சியற்றுகின்ற வாணன்யென்னும் ஓர் அரசனிருந்தான். அவ் வசு ரன் அன்பினுற் பெற்றெடுத்த உஷையென்னும் பெயரினையுடைய ஒருவனிதையானவள் ஒருநாள் அனுருத்தனுடைய பேரழகைத் தன் கனவிற்கண்டு அதனைத்தனது தோழியாகிய சித்திர லேகைக் குச்சொல்ல அவள் உடனே இரக்கங் கொண்டு சென்று அனுரு தன் சித்திரைசெய்யுஞ் சமயத்தை நோக்கி அங்கித்திரை யோடு

னைக் கொண்டுவந்து தனது நாயகியிடத்திற் சேர்த்தனள். அவள வனைக் கண்டவுடன் அதிக மகிழ்ச்சி பொங்கித் துயிலெக்கலெத்தத் தன தெண்ணப்படி அவனை இரகசியமாகத் தன்னிருப்பிடத்தில் வைத்துக்கொணடு கலவிசெய்து வந்தாள். இவ்வாறு சிலநாள் கழிந்த பின்னர் அவ்வுஷை என்பவள் வயிற்றிற்கருப்பமுண்டாக அச் செய்தியை வாணனறிந்து அனுருத்தனைப்பிடித்து அகலக் கூடாத அருஞ்சிறையில் வைத்தனன். பின்னர் அவ்வனுருத்தனுடைய தந் தையாகிய பிரத்தியும்னன்தன் புதல்வனைக்காணமல் எங்குந்தேடித் தேடி அளவற்ற துக்கசாகாத்தில் மூழ்கி வருந்தினன். அதனை அவன் தாயாகிய உருக்குமணிதேவி கண்டு என்னருமைப் புத்திரனே நீமுன்னர் சம்பாசுரனோடு யுத்தஞ்செய்யச் சென்றபோது நெடுநாள் வராமற்றுழ்ந்ததி லிரிந்தம்யான் மிக்க வருத்தத்தையடைந்து நீவிரைவில் வந்தசேருமாறு கணேச மூர்த்தியினுடைய சதுர்த்திவிரதத்தை யநுட்டித்தேன். அநுட்டித்த ஆறுநாள்உன்னை வரப்பெற்றேன், ஆதலால் நீயும் அமமைலானவிரதத்தைநோற்பையாயின் நின்மகன் எவ்வளவு தூரத்தேயத்தி லிருக்கினும்விரைவில் வந்து சேருவனென்று சொன்னள். உடனேபிரத்தியும்னன் அதிக மகிழ்ச்சி யடைந்து அவ்விரதத்தை ஆகமவிதிப்படி மிக்கபத்தியோடனுட்டித்து வருகின்ற விரதநாள் முடியு முன்னம் இவன் தந்தையாகிய கிருஷ்ணனிடத்தில் நாரதமுனிவரெழுந்தருளி அனுருத்தன் செய்தியைத் தெரிவிக்க உடனே அவருக்குக்கோபமுண்டாகி அவ்விடத்தினின்றுநீங்கி வாணனிடத்திற்சென்று அவனோடுஅளவற்ற நாள் யுத்தங்களைச் செய்து அவனை வென்று, அவன் பெண்ணையுந் தனது பௌத்திரனையு மழைத்துக்கொண்டு எதாப்பிரகாரந் தன் பதியைச் சேர்ந்து வாழ்த்திருந்தனன்.

மன்மதனுருவம் பெற்றபடலமுற்றிற்று.

ஆதிசேட னநுட்டித்த படலம்.

தென்மதி கீற்றுப் போலத் திகழுமோர் மருப்பி னாலே
தன்மதி யிருத்தி நோன்பு தகச்செய்து வடிவி லாத
மன்மத னுருவும் பெற்று வாழ்ந்திடுங் கதையி தாகு
நன்மையெய் திடமா சேட னளித்திய வாறுங்கேளாய்.

முனிவர்களே ! விநாயகமூர்த்தியினுடைய சதுர்த்தி விரதத்தை மன்மத னணுட்டித்து உருவம்பெற்ற வரலாற்றினைச் சொன்னோம். இப்பால் ஆதிசேட னணுட்டித்த திறத்தினைச் சொல்லுவோங் கேட்பீராக. முன்னொருகாலத்தில் பிரமனுடைய தேவர்களாலும் * இருக்காதி வேதங்களாலு மறிதற்கரிய சாம்பவ மூர்த்தியானவர் வெள்ளியங்கிரியில் ஸ்வாத்மமயமாயிராநின்ற சிம்மாசனத்தின்மேல் உமாபரமேஸ்வரி சமேதராய் வீற்றிருக்கின்ற ஸபையில், அளவற்ற தேவர்களும் முனீஸ்வரர்களும் வந்து அஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து பலவாங்ஙளையும் பிரார்த்தித்துக்கொண்டிருந்தார்கள். அத்தருணத்தில், சிவபெருமான் சபாகுமடத்தி லிருக்கின்ற ஆதிசேடனைவன் நாம இத்தனீயே பெரும் வணங்கும்படியாக சுவாமியினது நிருமுடி மிருக்கின்றமையா லென்று கர்வங் கொண்டனன். அக்கர்வத்தைகர்த்தனறிந்து தமதுகரத்தாற்றுண்ணென் றிழுத்த நிலதின்மீது மோதினர் உடனே ஆதிசேடன் வெள்ளியங்கிரியில் வீழ்ந்தனன், அவன் சிரமானது ஆயிரம் பிளவாகப் பிளந்துபோயிற்று. அவனுக்கு உல்கத்தைத் தாங்குகின்ற வலியும், அளவற்ற தவங்களாற் கிடைத்த மகத்துவங்களு மிழந்துபோன பின்னர், ஆதிசேடன் நிக்க தன்பமுற்று நம்மை முன்போலவே சிவபிரான் சார்பிலிருக்கச் செய்யும் உபாயம் யாதென்று கருதி ஒன்றுந்தோற்றுது சுவாசமற்று உயிர் ஒண்டோ வில்லையோ வென்று சொல்லத்தக்கதாக பூரந்தலணீப்போலக் கிடந்தான். அத்தருணத்தில் கைலாச பதியைத தரிசிக்கவந்த நாரதமுனிவர் அவனீப்பார்த்து, ஆ ஆ! ஈதென்னபாவம். உனக்கடுத்ததன்பம் யாதென்றுகேட்டார். அதற்குஅப்பஉயிரோடும் வீழ்ந்திகிடக்கின்ற ஆதிசேடன் நாணமுற்று ஒன்றும் பேசாமலிருந்தான், நாரத முனிவர் மீளவு மவனீப்பார்த்து ஆதிசேடனே ! நீகர்வங் கொண்ட படியினலே சிவபிரான் சார்பையற்று, இத்தன்மைதான துன்பத்தில் வாடுகின்றாய், இப்பிழை நீங்குமாறு ஒருபாயஞ் சொல்லுகிறேன் அதனீ அன்புடன் கேட்பாயாக. தம்மை வேண்டினர்க்கு வேண்டியவண்ணம் * பலபேறுகளுத்தந்து ரக்ஷிக்கும்படியான விநாயகக் கடவுடைய சடாட்சர மந்திரத்தை யனுட்டிக்கக்கடவையென்று சொல்லி, அம்மந்திரத்தை அவனுக் குபதேசித்தனர். உடனே

---

* இருக்காதி வேதங்கம் ளாவன.—இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பன. அன்றிஉபவேதம் மாதியவு மெனக் கொளினுமாம்.

அதனை உபதேசிக்கப்பெற்ற மாட்சிமையால், ஆதிசேடனுக்குத் தேகநிடமுண்டாகி, அவ்விடத்தினின்று நீங்கிப், பிரவாள நகரத்தைச் சேர்ந்து மிக்க பத்தியோடுஞ் சடாட்சரமந்திரத்தைச் செபித்து, சதார்த்தி விரதத்தை யனுட்டித்தனன். அவ்வனுட்டிப்புக்கு விநாயகக்கடவுள் மனதிரங்கி ஆனைமுகத்தை யுடையவராய்ப் பத்துத் திருக்கரங்களினும் பத்து ஆயுதங்களோ யேந்திக்கொண்டு சித்புத்தி சமேதராக, சிங்கவாகனமூர்த்த அவனெதிரிற் பிரத்தியட்சமாயினர். உடனே ஆதிசேடன் அஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து, அளவற்ற தோத்திரங்களைச செய்து நினறான். அத்தோத்திரங்கட்குக் கர்த்தன் மனதிரங்கி, அன்பனே! ஆயிரம் பிளவாகப் பிளந்திருக்கின்ற உனது ஒரு சிரமானது அவ்வாறே ஆயிரஞ் சிரங்களாகி யிருக்கக்கடவது. நீ அவ்வாயிரஞ் சிரங்களோடு முன்போலவே பூமியைத் தாங்கியிருக்கக்கடவை, அன்றியும் ஐந்துசிரங்களோடு எந்தையாகியும் எம்பெருமானுகிய பிரானின்ற சிவபெருமானுடைய சடாபாரத்தில் அமர்ந்திருக்கக்கடவை. இப்போதிருக்கின்ற இவ்வுருவத்தோடு நமக்கு உதாரத்தனமாகக்கடவையென்று திருவாய்மலர்ந்து அண்டகோடிகளையுங தாண்டி அப்பாற் சென்ற பேருருவத்தோடு விசுவரூபங்கொண்டு அவ்வாதிசேடனே யெடுத்து வயிற்றிற் சுற்றிக்கொண்டனர். உடனே தேவர்களெல்லாம் புஷ்ப வருஷம் பெய்தார்கள். பின்னர் ஆதிசேடனவன் தனது ஒரு அமிசத்தில் உதாரத்தனமாக விருந்து, மற்ற அம்சங்களேறி தனக்கு நற்கதி கிடைக்கச்செய்த அந்தப் பிரவாளநகரத்தில் சாஸ்திர விதிப்படி ஓராலயஞ் சமைத்து, அதில் விநாயக மூர்த்தியைப் பிரதிட்டை செய்து, அளவற்ற திரவியங்களைக்கொண் டபிஷேகித்துப் பரிமளமிகுந்த பல புட்பங்களாலருச்சனைசெய்து ஆராதித்துக்கொண்டிருந்தான். உடனே கணேசமூர்த்தி தந்தருளிய வரத்

* பலபேறு.—புகழ், கல்வி, வெற்றி, நன்மக்கள, பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, தனிவு, நோயின்மை, வாழ்நாள் என்பன இதனை,

" பொன்வலிநல் லூழறிவுப் பொற்பிளைமைக் கல்விபுகழ்
நன்மக்க ணோயிலிவா ணுட்டுனிவு—நென்னுகர்ச்சி
வெற்றிப் பெருமையே மேவுமீ ரெண்பேறும்
பற்றினர்க் கன்றேபயன்." என்னுஞ்சதார்த்தபோதத்தானறிக.

பத்து ஆயுதம், இன்னதென வல்லபைவிநாயகர் திருவவதாரப் படலத்ட் காண்க.

திஞல் சிவபெருமானுடைய சடாபாரத்தில் வசிக்கப்பெற்றும், இ
வுலகமுழுவதுக் தாங்கப்பெற்றவனுய் அளவற்ற களிப்பில் ஆழ்ந்
ருந்தனன்,

ஆதிசேடனருட்டித்த படலம்
முற்றிற்று.

இந்திரன் விமான மண்ணிழி படலம்.

விநாயகனுக் குரியவிநா யகசதுர்த்தி யனுட்டித்தோர் விழுப் பங் கேட்டாய், கனவிரதத் தோனெவே யுலகமெலாங் கண்டுகழி த்தவர்கட் கெல்லாங், தனதருளாற் தருந்தந்தி முகற்குரிய சங்கட்ட சதுர்த்தி மேன்மை, நினதாவிற் கேளென்று பிருகுமுனி மதிக்காக் தி நிருபற்கோ நம்,

ஐம்புலப் பகையை வென்று சிவஞானச் செல்வத்தை யனுபவி க்கும் முனிசிரேட்டர்களே ஆதிசேடன் விநாயக மூர்த்தியினுடைய சதுர்த்தி விரதத்தை யனுட்டித்துத் தனக்குநேர்ந்த விபத்தை நீக்கி க்கொண்ட பேற்றினைச் சொன்னேம் இப்பால் இந்திர விமானம் ம ண்ணிலிழிந்த திறத்தினைச் சொல்லுவோம் கேட்பீராக அழகு பொ ருந்திய சோலைகள் சூழ்ந்த மத்தியதேயத்தில் [ ] மகருட்சத்திரத்தில் சனிகோள்கூடி எவ்வித சுகங்களையும் போன்றச்செய்யுங் காலத்தி லும், இசன்றோர்கள் இரவாவண்ணம் வேண்டிய வளங்களை யளிக்க வல்ல சகத்திரபுரியென்னும் பட்டணத்தில் தூங்காமை முதலிய மூ வகையாற்றல்களையும் ஒதலமுதலிய () அறுவகைக் குணங்களையும், மனுநிடம் முதலிய மூவகைச் சித்திகளையும் * பதிஞான முதலிய

* மகத்தோடு சனிக்கோள்கூடின் எவ்வகைப் பெற்றியுமற் றின்னலுறு வரென்ப சோதிடாக்கம். இதனை "மகத்திற் புக்கதோர் சனியெனக் காளைய மைந்தனே மணியேமணிவாளா, ஆகத்திற்பெண்டகள் நாலுஞ்றுசொன்ன லழையேற்போ குருடாயெனத் தரியேன், முகத்திற் கண்ணிழந்தெங்ஙனம் வாழ்வேன்முக்கணமுதையோ மறையோதி,புகைக்குந் தண்டகடலோதம்வர் தலவுமொற்றியூரெனு மூருறைவானே" எனனும் ஆளுடைய கம்பிகள் திரு வாக்கானும், "மகத்திரவியின் வாரத்துக் கேழெனனும் வாரப்புத்தேள், புகத் திரவியமு மற்றுப் பொன்றும்" * என்னுங் கசியப்ப முனிவர் கூற்றானு மறிக.

* அறுவகைக் குணங்களாவன.—ஒதல், வேட்டல்,வேட்பித்தல், ஈதல், ஏற்றல்' உலகோம்பல் என்ப.

மூவகை ஞானங்களையும் [ ] சரிதைமுதலிய நான்கு பாதங்களையும், () தரும முதலிய நால்வகைப் பொருள்களையும் எக்காலத்தினும் நீங்காது, பகைவரை வெல்லத்தக்க வேலாயுதத்தை யேந்திப் பொதிரீங்கி உலகமுழுவதுங் காத்து, அந்தணர் தேவர் முதலி யோரை ஆதரித்துக் காமனையொத்த கட்டழகினை வாய்ந்து 0 சுற்றத்தினர் முதலியோரை இன்னல் நெருங்கா வண்ணஞ் சூழ்ந்து, தவம் தூய்மை முதலிய விரதங்களை வாய்ந்து, விண்ணுட்டினுந்தனக்கொருவர் நிகரில்லாத பெருங்கீர்த்தியைப் பெற்று கற்பிற் சிறந்த புண்ணிய சீலியென்னும் மனைவியைப் பொருந்தி குளிர்ச்சி பொருந்திய செங் கோலினால் திசையனைத்தினுந் தனது ஆக்ஞா சக்கரத்தினை யுருட்டி அரசாட்சிசெய்கின்ற சூரசேன மகாராசனென்னும் ஓரரசன் இருந் தான். அவ்வரசன் ஒருநாள் மந்திரியா, புரோகிதர், சேனைபதியர், ஒற்றர், சாரணர், என்கின்ற ஐவகைத் தூணைவர்களும், மற்றுமுள்ள [ ] பரிசனங்களும் புடைசூழ்ம்படியாகச் சிங்காசனத்தின்மீது கொலுவு வீற்றிருந்து குறைகள சொல்வோர்களும், முறைகள் சொல்வோராக்கும அவ்வவர்கள் கருத்தின் வண்ணங் கிருபை செய்துக்கொண்டிருக்கின்ற சமயத்தில் அளவற்ற ரியர்கள் அவனியிற் றங்கினற்போல ஒருவிமான மானது அந்தரமார்க்கமாய்த் தனது கதியிற்றப்பி நிலத்தில் வந்திறங்கியது.

* மூவகை ஞானம் —உலகம் யாவை, ஆன்மா யாவை, பரம் யாவை என உணர்தல்.

* சரிதை முதலிய நான்காவன :—சரிதை. கிரியை, யோகம், ஞானம் என்பன. இஃது வைதிகராயினோர் முறையே அனுட்டித்து வீட்டின் புறுவ தென்ப இதனை "விருமபுஞ் சரிதை முதன் பெய்ந் நான நான்கும் அரும்பு மலர் காய்கனிபோ லன்றே பாபபரமே?" என்னுந் தாயுமானார் திருவாக்கா னுணர்க.

() தரும முதலிய நால்வகைப் பொருள்களாவன :—அறம், பொருள், இன்பம், வீடு என்ப இதனை "ஈதலறந் தீவினைவிட் டீட்டல் பொரு ளெஞ் ஞான்றும், காதலிருவர்-கருத்திறவைத் தாதரவு, பட்டதே யின்பம் பரனினைந் திம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு" என்னும் ஔவையார் திரு வெண்பாவானறிக.

*அரசசுற்றத்தினர்.—நட்பாளர், அந்தணர், படைத்தொழிலர், மருத்துவக்கலைஞர், நிமித்திகப்புலவர் என்ப.

* அரசருக்குப் பரிசனங்களாவார்.—கருமாதிகாரர் சுற்றம், கடைகாப்பாளர் - நகரமாகாள் - படைத்தலைவர் - இவுளிமறவர் - யானைவீரரென்ப.

அதனை அவ்வரசன்கேட்டு உடனே ஒற்றர்களைக் கூவி ஈதோர ஒரு தெய்வவிமானம் பூமியிலிறங்கியது நீங்கள்விரைவிலோடி அஃ தை வந்த வரலாற்றைத் தெரிந்துகொண்டு வரக் கடவீர்களென்று ஏவித் தானும் அதிகவிழைவோடு மெழுந்து அமைச்சர் முதலாயி னோர் புடைசூழ வெளிக்கொண்டு தனது ஆட்டக்குதிரைமீதாரோக ணித்து, அதனை விரைவில்நடத்தி அவ்விமானத்தினருகில் இறங் கிச் சிலதூரம் முன்னதாக நடந்து சென்று அதன் மத்தியில் தேவேந்திரன் வீற்றிருப்பதைக்கண்டு மிகுந்தபோன்பிளுல் அவனை வணங்கி இதனைச் சொல்லுவதாயினன், ஓகூரலோக சக்ரேஸ்வரா, வேள்வியினுலும், வீரத்தினுலும, தவத்தினுலும், தானத்தினுலும், வாள்வித்தைமுதலிய திறங்களினுலும், ஒப்பாருமில்லாததேவரீரை யான் பூர்வத்திற செய்த நல்வினைப் பேற்றினுற் காணலையினேன். அடியேனுடைய கல்வியுங் கேள்வியும் பிறத்தக்க பயன்களை யடைந்தன. தேவரீர் பொன்னுலகத்தைநீங்கி இம் மண்ணுலகத் தில் வந்த வரலாற்றைத் திருவாய் மலர வேண்டுமென்று பிரார்த் திக்க அதற்குத் தேவேந்திரன் இசைந்து தனவாலை அவ்வரசனுக் குத தெரிவிப்பவனுகி, நரோத்தமனே யான்சகதேவர்களும் புடை சூழும்படியாகச் சிம்மாசனத்திலிருந்து அரசியற்றி வருகின்ற தரு ணத்தில், யாழ்வல்லவராகிய நாரதமகாமுனிவர்வந்து பூலோகத்தில் ஒருவர் விநாயகமூர்த்தியினுடைய அநுக்கிரகத்தைப்பெற்றுதெ ய்வத்தன்மையுண்டாகி அந்தச் சரீரத்தினுனே கணேச மூர்த்தியி னுடைய சாரூபத்தைப்பெற்றுச சகலருந தொழும்படியாக வீற்றி ருக்கின்றார். அவர் பெயரைப் புருஷண்டி யென்று சொல்லுவார் கள். அவரை யாமுங் கண்டு தரிசித்து வருதோமென்று சொன் னர். அதனையான் கேட்ட மாத்திரத்தில் அம்மகத்துவைக் காண வேண்டுமென்கிற ஆசையானது எனதுபரியைப்பிடித்துத் தள்ள உடனே அவ்விடத்தை நின்று நீங்கி இம்மண் ணுலகத்தில் இழிந்து அவரெழுந்தருளி யிருக்கின்ற விடத்திற் சென்று அவரது பாத பதுமங்களைச் சேவித்து விடைபெற்று மீட்டுஞ் சொர்க்கலோகத திற் சேரவெண்ணி ஆகாய மார்க்க மாகச் சென்று இவ்விடத்திற்கு நேராக வரும்போது இங்ஙகரத்தில் மிகவுங் குட்டநோய் கொண்ட பெரும்பாவியாகிய ஒருவைசிய குமாரனுடைய பார்வையால் இவ் விமானமானது * கதி தப்பிப் பூமியி லிறங்கியது. இனி இங்ஙகரத்

* கதி - மார்க்கம் வழி

திற்றானே ஒருவன்சங்கட சதுர்த்திவிரதம் அனுட்டிக்கின்றான். அவனுலே இவ்விமானம் பூமியை விட்டெழும்பி ஆகாயத்திற் செல்லும் யென்று சொன்னன். இவையனைத்தையுஞ் சூரசேன மகாராசன்கேட்டு ஓ தானவர் குலகாலரே! தேவரீருஞ் சென்று பணியத்தக்கஅப்புருஷண்டி யென்பவர் என்ன குலத்தார், அவர் செய்த தவங்கள் யாவை, அவைகளையும் எனக்குணர்த்தி யாளவேண்டுமென்றுபிரார்த்தித்தான்.

அதற்கு தேவேந்திரன் சொல்லுவான், அரசனே! தண்டகவனத்திலே, இலக்குமி விலாசம்பொருந்திய பழமையான நந்தரமென்னும் ஒரு நகரமிருக்கின்றது, அந்த நகரத்தின் சமீபத்தில் ஒரு வேடச்சேரியுண்டு, அச்சேரியில் ஆலகாலவிடத்திற் கொப்பான கொடுஞ்செய்கைகளையுடைய விப்பிரதனென்னும் ஒருவேடனிருந்தான், அவ்வேடன் எக்காலத்திலும் எவ்விடங்களினுஞ் சென்று வழிப்போக்கர்களை யெல்லாம் ஒருவரையுந் தப்பவிடாமல் மறித்துப் பொருள்பறிக்கப்பட்டவன். அவனவ்வா றிருக்கின்றகாலத்தில் ஒருநாள் அவன் சஞ்சரிக்கின்ற மார்க்கமாக ஓர்தணனவன் விரைந்துசெல்ல அவனை யவ்வேடன்கண்டு நமக்கு இத்தினம் மிக்கலாப முண்டாயதென்று மனங்களித்து, அதிக வேகத்திடனேடி, அவ்வந்தணன் பின்தொடர்ந்தான். உடனே அவ்வந்தணன்அவனைக்கண்டு இன்று நமகிறுதிகாலம் வந்துவிட்டதென்று பயந்தோட, அவ்வேடனும் அவன்பின்னதாக நெடுந்தூரமோடி தன்னைப் பிடிக்கக்கூடாமல மனம்வருந்தி மீட்டுந் திரும்பி வருகையில் அவ்வனத்தின்கண். விநாயக மூர்த்தியினுடைய கோயிலுந் தீர்த்தமும் எதிரே தோற்றக்கண்டு அவ்விடத்திற்போய்த் தானிளைப்பாறும்படியத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து தாகந் தணியுமாறுஜலபானமுஞ் செய்து அதன் கரையில் இருக்கின்ற ஓர்மரத்தினிழலிற்றங்கி, இரையிழந் தேக்குற்ற வேங்கைபோல் மனக்குறைகொண்டிருந்தான். இவ்வாறிருக்கையில்தவசிரேஷ்டராகிய முகலமுனிவர் அவ்வழியாகச்செல்ல அவரைக் கண்டவுடனேவேடனவன் விரைந்தெழுந்து வாளையுருவிக்கொண்டோடி அம்மகானு பாவருடைய உயிரை வாங்கும்படியாக ஒங்கினன். உடனே முக்கலமுனிவர் திரும்பி அவனைத்தமது விழிகளினு லுற்றுப்பார்க்க, அப்பார்வையின் மகிமையால் அவ்வேடனுடைய வாளும், அவன் அறியாமையும், அவன் செய்து வந்த மகாபாதகங்களும் அவனைவிட்டுநீங்கி மெய்யறிவு வுதித்தன.

உடனே அவன் முக்கல முனிவரைப் பார்த்து அடியேன்செய் துகொள்ளும் விண்ணப்பத்திற்குச் செவிகொடுத் தருளவேண்டுமெ ன்று பிரார்த்தித்து இதனைச்சொல்லுவதாயினன் சுவாமீ! இத்தீர்த்த த்தில் ஸ்நானஞ்செய்கபலதத்தினுலும், தேவரீருடையதரிசனவிசேடத் தாலும், அடியேன்செய்த பாதகங்களனைத்தும் பறந்தன. நற்கதியை யடையவேண்டுமென்னும், நல்லறிவும் உதிக்கதுமேலும்பெரியோ ர்கள் துஷ்டர்களை விசுவாசிக்கின்ற தில்லையாயினும், அவர்கள் குரு பாதோக்கத்தால் அத்துஷ்டர்கள் பயன் பெறுமற்போகின்ற தில் லை, இனிசுவாமிகள் அடியேனிது கடாக்ஷம்வைத்தாள்விதத்தேனு ங் கைவிடாது காத்தருளவேண்டும். அடியேற் கிவ்வுலக வாழ்வில் யாதொரு பற்றுமில்லையென்று அனந்தமுறை துதித்து, மனமுருகி அவர்திருவடிகளிற் றனதுசென்னியைப் பொருந்தவைத்து, இரண் டுகரங்களாலும் அத்திருவடிகளை உடம்புபோலரிடாமற்பற்றி மீட் டுமெழாதபடி அவ்வாறே நிலத்திற் கிடந்தனன். பின்னர் முக்கலமு னிவர், அவ்விப்பிரதனுடைய அன்பையறிந்து, துஷ்டர்களாயினுஞ் சரணடைவராயின் அவர்களைக் கைவிடுதல்தருமமல்லவாதலால், மி க்கஉள்ளன்போடுகூடமைச்சரணமடைந்த இவனுக்குவ்விதத்தேனு ம் ஓர் நன்மையைச் செய்யவேண்டுமென்றுலோசித்து, அவன்வேட னுகையால் விதியுளிபுபதேசித்தல் கூடாதென்று கணேசமூர்த்தியின து திருநாமத்தை மாத்திரம் உபதேசிக்கத்தக்கதென் றெண்ணி நீ விரைவில் ஸ்நானஞ்செய்து வருவையென்று அவனுக்கு ஆக்கியா பித்தார்.

அவ்வார்த்தையை விப்பிரதன், செவிக்கமுதாகக் கேட்டு, உட னே ஸ்நானஞ்செய்து வந்தான். பின்னர்முக்கல முனிவர் அவன் சிரத்தின்மீது தமது திருக்கரத்தை வைத்து, ஓம்கணேசாயநம:வெ ன்னும் மந்திரத்தை யவன்செவியிலுபதேசித்து, அவனெதிரில்ஒரு லர்ந்ததடியைநாட்டு அன்பனே! இத்தடிக்குத் தினந்தோறுங்காலந்த வறுமல் நீர் விட்டுக்கொண்டு அது தளிர்க்கினற பரியந்தம்அதன்ச மீபத்திற்றனேயிருந்து, விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளை மன திற்றியானித்து, யானுபதேசித்த மகாமந்திரத்தைச் செபித்துவரு வையாயின் உனக்கு சகலசித்திகளும் கைகூடும் நாமுஞ்சில நாளில் இன்று வருவோ மென்று சொல்லித தமது ஆசிரமத்திற்கு எழுந்த ருளினர். பின்னர் விப்பிரதன் அளவற்ற மகிழ்ச்சிகொண்டு முக்கல முனிவ ருபதேசித்தவண்ணம் அத்தடிக்கு முக்காலத்தும் நீர்பெய் து அதனருகிலிருந்து விநாயகமூர்த்தியை மனதிற் றியானித்துத்

தாணுபதேசம்பெற்ற மந்திரத்தைச் செபித்துவந்தான். இவ்வாறு ஆயிரவருடபரியந்தம் இடைவிடாது செபித்துவருகையில் அத்தண்டானது தளிர்த்துப்பூத்தது. அச்சமயத்தில் முக்கலமுனிவரும் அங்கெழுந்தருளி, விப்பிரதனுடைய மனவுறுதியைக்கண்டு மிகுந்தசந்தோஷங்கொண்டு முற்றத்துறந்த முனிவர்கட்கும் இவ்வுறுதிவருவது அரிதென்று நினைத்து பலமுறைபும்மியர்த்து பொருக்கென்று தமதுகமண்டலத்துள்ள நீரைமந்திரித்து விப்பிரதன்மீது தூவினர். உடனேகல்லெறியக் கண்டபறவைக்கூட்டங்கள் மரத்தைவிட்டெழுந்தோடுவதுபோல் அவன் பலபிறவிகள்தோறுஞ்செய்து வந்தபாதங்களெல்லாம் பறந்தோடி விட்டன. தளிர்த்துப் பூத்திருக்கின்ற தண்டினைப்போல முக்கலமுனிவர் தூயமந்திரசலமகிமையினல் அவன்புராதமத்தியிற் றரிக்கையுண்டாகி விநாயகமூர்த்தியினுடைய திருவுருவத்தை யடைந்தனன்பின்னர் முக்கல முனிவரானவர் அந்தச்சற்சீடனைத்தழுவிக்கொண்டு கணேசமூர்த்தியினுடைய ஏகாக்ஷர மந்திரத்தை யுபதேசித்தருளினரமைமைந்தனே. நீஇப்போதடைந்திருக்கின்ற வுருவத்தோடுஒருகற்பகாலம் வரையில் வாழ்ககடவாய்: நீபெய்துவந்தசலத்தினற்றளிர்த்துப் பூத்திருக்கின்ற இம்மரமானதுகற்பகவிருட்சமாகக்கடவதென்று சொல்லி அவ்விடத்தினின்றும் மெழுந்தருளினர். உடனே அம்மரமுங்கற்பகவிருட்சமாகி அவ்வவர்கள் வேண்டுவனவற்றையெல்லாம் வரையாது கொடுத்துவந்தன. விப்பிரதன் அன்பேஒருருவமாகிக் கணேசமூர்த்தியினுடையதிருவடிகளைத்தியானித்துதனது புருவத்தினிடையில் தண்டந்தாங்கியிருக்குந் தன்மையால்யாவரும் புருஷண்டியென அழைக்கப்பெற்று முக்கலமுனிவருபதேசித்த ஏகாட்சர மந்திரத்தை முன்போலவே ஆயிரவருடம்வரையிற செபித்துக்கொண்டு வந்தனர் அதற்குக் கணேசமூர்த்தி கிருபைசுரந்து அப்புருஷண்டிக் கெதிரில் ஆகாயமார்க்கமாய்த் தரிசனந்தந்தருளினர்.

னே அத்தரிசனத்தைப் புருஷண்டிமுனிவர்கண்டு ஆடிப்பாடி, ஆனந்த பரவசங் கொண்டு, கரங்களைச் சிரமேற்கூப்பி, ஓ? விண்டு பிரமனுதியரால் அறிதற் கரிய கர்த்தனே? நமஸ்காரம். தேவர்களெல்லாந் தொழும்படியாக முதன்மை பெற்றிருக்கின்ற கடவுளே? நமஸ்காரம். மகாவீரத் தன்மையையுடைய அங்குச பாசங்களை யேந்தும் கரத்தினைப்படைத்த கணேசுவர்த்தியே; நமஸ்காரம். பொய்யார்க்குப் பொய்யராகியும் மெய்யர்க்கு மெய்யராகியும்

விளங்குந்தினதயா பரமூர்த்தியே நமஸ்காரம். ஞானசத்தியும், கிரி யாசத்தியுமா யிருக்கின்ற சித்திபுத்திகள் மணாளரே நமஸ்காரம், என்று அனந்தமுறை தோத்திரஞ் செய்தலும், அத்தோத்திரங்கட் குவிகாயகமூர்த்தி சந்தோஷங் கொண்டு அன்பனே நீகருதிய வரங் களைக்கேள் தருகின்றேமென்று, திருவாய் மலர்ந்தனர். புருஷண்டி யானவர் மீளவும் பணிந்தெழுந்து கர்த்தனே அடியேன் தேவரீரு டைய திருவடியிலல் தேவர்களாலு மடைதற் கருமையனவாகிய செல்வத்தையும், பேரின்பத்தையும் எளிதிற்பெற்றேன் அன்றியுந் தேவரீருடைய திருவுருவத்தையு மடைந்தேன். இனி அடியேன் பெறத்தக்கபேறு தேவரீர் திருவடியையன்றி, வேறென்னவிருக்கின் றது சுவாமீ அத்திருவடிப் பேறதனையே அடியேனருள வேண்டு மென்று பிரார்த்தித்துக்கொண்டனர்.

அதற்கு விநாயகக்கடவுள் மனந்திரங்கி, அவனருகி லெழுந்த ருளி அன்பனே நீகருதிய திருவடிப்பேற்றினை யடைவதற்கு, வே தாகம புராணங்களில் நான்கு உபாயங்கள் விதிக்கப்பட்டிருக்கின் றன. அவ்வுபாயங்கள் சரிதை, கிரியை, யோகம், ஞானம் என்று சொல்லப்படும்.

சரிதை.

அவற்றுள் சரிதையாவது, பிராத காலியிற தேவாலயங்களிற் சென்று பயபத்தியுடனே திருவலகிடுதல் திருமெழுகிடுதல் திருவி ளக்கிடுதல், நந்தவனம் வைத்தல், பூமாலைதொடுத்தல், சாத்தல் பூசை புரிதல், பெரியோர்களைக்காண்டல், கடவுளை வழிபடுதல்போல அவர்களையும் வழிபட்டு வசித்தல் தேவாலயம்-சத்திரம்-சாவடி-மூ தலியவைகளை நூதனமாகச் செய்வித்தல், அவைகள் சீரணித்திருக் கிற் பழுதுபார்த்தல், தினந்தோறுங் கங்கைமுதலிய புண்ணியதீர்த் தங்களில், ஸ்நானஞ்செய்தல், ஆலயங்களில் அங்கப்பிரதக்ஷணஞ் செய்தல், அடியளந்து நடத்தல், நூற்றெட்டு ஆயிரத்தெட் டென்னுந் தொகைப்படி பிரதக்ஷணஞ் செய்தல், தருமத்தின் வழி நின்று பொருள் சம்பாதித்தல், பிரமசாரி வானப்பிரத்தன் சன்னி யாசி யென்னும் இம்மூவருக்கும் பசிபிணி முதலிய இடையூறுக ளுறுவண்ணந் தக்கமுயற்சி செய்தல், பிதிர்தேவதைகளுக்கு யாகா திகருமங்கள், சீர்க்கடன் முதலிய வற்றுல் திருப்தி செய்தல், வந்த விருந்தினரைப் பாதுகாத்தல், இனிவரும் விருந்தினருக்கெதிர்பார்த் தல், உறவினர்கள் உள்ளமகிழவேண்டிய வற்றை யுதவல், தாரு

தன் மனைவியும் ஒருவழிப்பட்டு நடவு நிலைமையை யனுசரித்திருத்தல், அன்புடைமை, அடக்கமுடைமை, ஒழுக்க முடைமை, பொறையுடைமை, யென்னும் நன்னெறிகளை யுற்றிருத்தல், பிறர்பொருள் கவர்தல், புறங்கூறுதல், பயனிலாவற்றை யுரைத்தல், என்னுந் தீநெறிகளிலிலக்குதல். முதலியனவாம் * இவற்றையறிட்டித் தவர்கள் சாலோக பதவியையடைவார்கள்-அதாவது நமது லோகத்தில் வந்திருப்பதாம்.

கிரியை.

கிரியையாவது. சந்தனம், புட்பம், தூபம், தீபம், நைவேத்தியம், கோசலம், கோமயம், பால், தயிர், நெய், தேன், வாழைக்கனி, மாங்கனி, பலாக்கனி, நாரத்தங்கனி, நன்னீர், பனிநீர், சந்தனம் முதலிய பூசாதிரவியங்களைக்கொண்டு வேதாகம விதிப்படி திருமஞ்சனங்களைச் செய்தல், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னுமிவற்றின் வழியாகிய சத்த, பரிச, ரூப, ரச, கந்தமென்கின்ற ஐந்தாசைகளையும், நாளுக்குநாள் அடக்கல், விரத, தேவதாபூசை, மந்திரம், எந்திரம், செபம், யாகம் என்னுமிவைகளை யனுசரித்தல், ஒருயிர்க்கும் இடையூறு வராமற்காத்தல், தவங்களினிற்றல், மனதை யடக்கி, அறிவோடுகலந்து, தற்பதத்தை யுணருகின்ற வரையில் ஆசிரியன் கட்டுரையையுஞ் சரத்திரவிதியையுங் கடைப்பிடித்திருத்தல், கோபமாதிகளைநீக்கல் முதலியனவாம். இவற்றை யனுட்டித்தவர்கள் சாமீப பதவியைப் பெறுவார்கள், அதாவது. நமது சாமீபத்திலிருப்பதாம்.

யோகம்.

யோகமாவது, இயமம், நியமம், ஆதனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எண்வகைப்படும். இவற்றுள்.

க. இயமமென்பது. கொல்லாமை, மெய்யுமை கூறல், கள்ளாமை; பிறர்பொருளிச்சியாமை, இந்திரிய மடக்கல் முதலியனவாம்.

உ. நியமமென்பது தவம், தூய்மை, தத்துவநூலோர்தல், மனமுவந்திருத்தல். தெய்வம் வழிப்படல் முதலியனவாம்.

---

* இச்சரிதாவிலக்கணமேற்கப்பட்ட பிரமசாரியரும், இழிகுலத்தினரும், மாதரும், விருத்தரும், நோயினரும், மற்றோரும் ஆசாரியாபிஷேகமுடையராய் தருமநெறியே வாளாகொண்டு, குருபத்தி, சிவபத்தி, சாத்திரபத்தி அடியார் பத்தி முதலியன வுடையராய், பொய், களவு, காமம், கள், சூதுமுதலிய அவநெறிகளைநீங்கி, சிவசிந்தனையுடையவராயிருத்தல் வேண்டுமென்ப.

ஆதனமென்பது, சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம் கேசரி, மயூரம், பத்திரம், முத்தம், சுகம், எனவொன்பதுவகைப்படும் இவற்றுள்-தொடைக்கும் முழங்காற்குநடுவே இரண்டுஉள்ளங்காலே யுஞ்செலுத்தி யிறுமாந்திருத்தலே சுவத்திகமென்றும் சகனபக்கத்தில் இருகாற்பரட்டையு மாறவைத்து அவ்விருகாற் பெருவிரலேயும் பிடித்திருத்தலேக் கோமுகமென்றும். இருதொடைமேலும் இரண்டுள்ளதுகாலேபுமாறி தொன்றவைத்தலே பதுமமென்றும், வலத்தொடையில் ஓடக்காறு பாட்டை சேர்த்து நிமாபுற் திருத்தலே வீரமென்றும், பீதத்தின்மிசை ஈவெனிபிடத்தப் பாட்டைவைத்து இடதுமுழங்கையை முழந்தாளில் வைத்து [illegible] சியைப் பார்த்திருத்தலே கேசரியென்றும், பீதத்தின் கீழ்சீவனியிடத்து இருகாற் பரட்டையும் வைத்து அவளிரு பாதத்தையும்; இருகையா லிறுகப்பிடித்து அரையா கிருத்தலேப் பத்திரமென்றும், இடக்காற் பாட்டார் சீவனியை யழுத்தி வலக்காற்பாடி அப்பரட்டின்மீ முந்தவிருவித்தலே முத்தமென்றும் முழங்கை யிரண்டும் மூங்கிப்புறத்தி லழுந்தப புனிபிற் கையுன்றிக் காட்டித்தலேநிமிர்ந்திருத்தலே மயூரமென்றும், சுகமுருட்டுமுழ வல்வாறிருக்கினெய்துமேர் அவ்வாறிருத்தலேச் சுகமென்றுங் கூறப்படும்!

ச. பிராணயாமமென்பது பிராணவாயுவை () சோசக, பூரககும்பகஞ் செய்தலாம்.

பிரத்தியாகாரமென்பது ப பாதியைநீக்கி உள்சோர்க்கலாம்.

சு. தாரணையென்பது சண்டம், இதயம், நெற்றி, கபாலம், ஈபி இவற்றிலொன்றிற் சந்ததஞ் சிந்தையைத் திருத்தலாம்.

எ. தியான மென்பது, ஐம்புல மடக்கிச் சிவயோகஞ் செய்லாம்.

அ. சமாதியென்பது, இந்திரிய முதலிய தத்துவ சேட்டைகட் கேதுவாய் யாக்கையுணின்று அவற்றோடு கூடினும் அவற்றிற் பற்றின்றி (ஆன்மாவாகிய) தன்னேத்தான் காண்டலாம. இவ்வையதிட்டித்தவாகள் சாரூபப்பதவியைப் பெறுவார்கள. அதாவதுசும்மைப்போன்று உருவம்பெற்று வாழ்தலாம்.

---

*சீவனி-பீஜத்திற்கும், பெருதொடைக்கு மிடைத்தானம்.

[] அங்குலி-விரல்

[] சோசகம்-மூசசு விடுதல், பூரகம் - மூசசையிழுத்து உள்ளே வாங்கல் கும்பகம் - வாங்கிய மூசசை உள்ளே ஸ்தம்பித்தல்.

ஞானம்.

ஞானமாவது ஞானசாரியாருடைய * தீட்சாக்கிரமத்தினால் ○ வஸ்துத்திரயம் () தத்துவத்திரயம் ○ தசகாரியம் என்னும் மூன்று ஞானங்களேயுமறிந்து அஞ்ஞானத்தினின்று நீங்குதலாம், இந்தமேலான ஞானத்தையனுட்டித்தவர்கள் சாயுச்சிய பதவியையடைவார்கள். அதாவது சம்மோடிரண்டறக் கலந்திருப்பதாம்.

தீட்சை என்பன. சமயதீட்சை, விசேடதீட்சை, நிருவாணதீட்சை என்பன. இதுது ஆசாரியனால் பக்குவாதாமாகச செய்யும் வைதிகர்தர்ம மென்க.

○ வஸ்துத்திரயமாவன. பதி, பசு, பாசம் என்பன. இவற்றின் பதியாவன, ஆதியந்தமின்மை, ரூபமின்மை, குணங் குறியின்மை, அவா வெறுப்பின்மை, ஒப்புயர் வின்மை, எங்கும் பூரணமாயிருக்கை, மனாதி தத்துவாதீதமாயுண்மை. ஆத்மாத்மகமாயிருத்தல். என்னும் அஷ்டமங்கள குணத்தினே வாய்ந்த நித்தளப்பொருளாயிருப்பன. பசுவாவன. அளவிடற்கரியதும், நித்தியத்துவமுள்ளதும், மலவிருளிலமுழ்தியிருப்பதும், இறைவன் திருவருளால் இருவினைக்கீடான சரீரமெடுத்துப் பலவாகிய புவனபோகங்களே அனுபவித்து இதனுற் புண்ணிய பாவங்களைச செய்து பிறப்பிறப்புள்ளதும், புண்ணியமேலீட்டால் இருவினையொப்பு, மலபரிபாக முண்டாகுங் காலத்தில் குருவருளால் முத்தியின்பத்தைச சேர்வதுமாம் பாசமாவது. எகத்துவமும் நித்தியத்துவமும், அளவிறந்த வல்லமையு முள்ளதும், செம்பிற் களிம்புபோலச் சீவனேப்பற்றி அறிவு முழுவதையும்மறைப்பதும், புண்ணியமேலீட்டால் பக்குவப்படுவதும், இரவின் இருளினும் அதிக இருளாயிருப்பதுமாம்.

() (திரயம்-மூன்று) தத்துவத்திரயமாவன. ஆத்துமதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவமென்பன. இவற்றுள். ஆத்துமதத்துவமாவன.—பிரிதிவு-அப்பு, தேயு, வாயு ஆகாயம் என்னும் பூதம் ஐந்தும், சோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை. ஆக்கிராணம் என்னும் ஞானேந்திரியம் ஐந்தும், சத்தம், பரிசம். ரூபம், ரசம் கந்தம் என்னும் தன்மாத்திரை ஐந்தும், வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்னுங் கன்மேந்திரியம் ஐந்தும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்காரணம் நான்கும். ஆகிய இவ்வீருபத்தாறன்குமாம். இவற்றில் பிரிதிவு - உரத்தத்தரிக்கும், அப்பு-குளிர்ந்த பதஞ்செய்யும், தேயு-சுட்டென்றவிக்கும். வாயு - சலித் தெவையுக் திரட்டும், ஆகாயம். நிரந்தரமா யிடங்கொடுக்கும்,—சோத்திரம் - சத்தத்தை யறியும்' தொக்கு பரிசத்தை யறியும், சட்சு-ரூபத்தையறியும், சிங்குவை ரசத்தையறியும், ஆக்கிராணம்-கந்தத்தையரியும்.—வாக்கு-வசனிக்கும், பாதம்-கமனம்பண்ணும், பாணி - இதேதலும் ஏற்றலும் செய்யும், பாயுரு-மலர்க்கத்தை வீடும், உபத்தம்-ஆனந்தத்தைவிடும்.—மனம்-பற்றும், புத்தி-நிக்கும்' சித்தம்-சிந்திக்கும், அகங்காரம்-கொண்டெழுப்பும்.

வித்தியா தத்துவமாவன. காலம், நியதி, கலை வித்தை, இராகம், புருடன், மாயை என்னும். ஏழுமாம்—இவற்றுள் காலம். கிழ்காலம், இறந்த காலம், எதிர்காலம் என்னும் மூக்காலத்தையுங் குறிக்கும்.—நியதி-சன்மத்தை கீச்சயத்தி அநேகசாதி நாமத்துவங்களே யுண்டாக்கும்,—கலை-ஆணவத்தைச் சிறிதே நீக்கி அந்தந்த தேகங்களுக்கேற்ற கருமங்களைப் பற்றவிக்கும்.—வித்தை அறிவையெழுப்பிக் கிரியையோடு ஞானத்தை ஒர்க்கும்,—இராகம்-பெற்றதைச் சிறிதாகிப் பெறுதலில் இசையுண்டாக்கும்.—புருடன் பஞ்சேந்திரியங்களின் வழியாகவிடயத்திலே யழுத்திலிக்கும் —மாயை - தமோமாயை, மோகம், அவித்தை அசிர்தம் என வகையாயிருந்து மயக்கும் இவற்றில் தமம், சிவசைதன்னியத்தை மறைத்தலும், மாயை-சகத்ரூபமான அண்டாதாந்தோற்றத்திற்குக் காரணமாயிறத்தலும், மோகம்-விபரீதஞான முண்டாக்கலும், அவித்தை-உணர்வழித்தலும். அசிர்தம் சகத்ரூபத்தில் நன்னியமாதலுமாம்.

சிவதத்துவமாவன. சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம். சத்தி' சிவம் என்னும் ஐந்துமாம்.—இவற்றிற் சுத்தவித்தை முதலிய சிவத்தத்துவங்களுள் ஞானமேறிக் கிரியை குறைந்திருக்கும், ஈசுரம்-ஞானகுறைந்து கிரியை யேறியிருக்கும். சதாக்கியம்-ஞானமுங்கிரியையும் ஒத்திருக்கும்' சத்தி-கிரியையா யிருக்கும், சிவம்-ஞானமா யிருக்கும்எனவறிக.இவற்றுளசிவம்-சிவனுக்கிடம். நாதமென்றுபெயர். சத்தி-காருண்ணியத்திறகிடம் விந்து வென்றும் பெயர். சாதாக்கியம்-அநுக்கிரகத்துக்கிடம் சதாசிவமென்றும் பெயர். ஈசுரம்-திரோபவத்துக்கிடம். மகேஸ்வரனென்றும பெயர் சுத்த வித்தை, சங்காரத்துக்கிடம். உருத்திரனென்றும் பெயர்

0 தசகாரியமாவன, சத்தவரூபம், ததீதுவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆத்மரூபம் ஆத்மதரிசனம்ச ஆத்மசுத்தி, சிவரூபம, சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம், என்பனவாம்—இவற்றுள். தத்துவரூபமாவது' அவற்றின் குணங்களைக் காண்கை, தத்துவதரிசனமாவது. அவை தன்னிடத்திலே நின்று சிலித்த முறைமையைக் காண்கை, தத்துவ சுதியாவது, அவை தனக்கு வேறென் றறிந்து நீங்குகை, ஆத்ம ரூபமாவது. ஆத்ம ஞானம் அறிவேவடிவெனவறிகை. ஆத்ம தரிசனமாவது, தத்துவங்களையறிந்து நீங்கி நின்ன வறிவுதானென வறிகை ஆத்மசுத்தியாவது; பக்த முத்தியரண்டிலும் சிவனுபகரிக் கின்றானென்று தன்னுடைய சுதந்தர ஞானியை யறிகை, சிவரூபமாவது. தத்துவ மூப்பத்தாறிற்கும் அப்பாலாய். வாக்கு மனாதீதமோ டாமாய், ஞானமே வடிவமா யிருப்பதென வறிகை- சிவதரிசனமாவது. தத்துவ மூப்பத்தாரையும் நீங்கிநிற்கும் ஆத்மாவையுந் தரிசித்து நிற்கின்ற ஞான சொரூபநிலை, சிவயோக மாவது, இந்த ஞானந் தன்னைவிட்டு நீங்காதென்று நிலைத்து நின் அதுவாய் நிற்கை, சிவயோகமாவது; தான் அந்த நேயத்திலே நின்றழுந்திச் சிவத்தைப் பெறுகை யென வறிக.

அன்பணே மேற்கூறியசரிதாதி ரான்குபாயங்களையுங் கடைப் பிடித்து மனதில் ஆசிரியருடைய உருவத்தைப்போல தியானஞ் செய்து, சோடச வுபசாரங்களையும் நடத்துவதாகிய குருபாவனையும், ஆலயங்களில் பூசித்துவரும் வடிவங்களைப்போல மனதிற் தியானித்து அபிடேக முதலியவைகளை நடத்துவதாகிய சொரூப பாவனையும், ஆசிரியர் சொல்லிய குறியைப் பார்த்து மனதைப்பஞ் சேந்திரிய வழியிற் செலுத்தாம லிருத்தலாகிய பூரண பாவனையையும், ஒன்றையுஞ் சுற்றிப்பாராமல் மனதைத் தற்போதத்தில்சேர்ப் பதாகிய அதீத பாவனையையும் அனுசரித்திருப்பதே நமதிருவடி களை யடையத்தக்க உபாயமென்று சகல வேதாகமங்களி னுட் பொருள்களையெலாம அங்கை நெல்லிக்கனிபோலத் தெரிவித்துத் தமது பரிபூரண கடாட்சமும் பாலித்து எழுந்தருளினர்.

பின்னர் புருசுண்டி அவையினத்தையும் அன்போடு கேட்டு மகத்துவத்தால். இப்போதுநீவன்மூத்தராகி யிருக்கின்றனரென்று சொல்ல, மீட்டுஞ் சூரசேனமகாராசன் தேவேந்திரனைப் பணிந்தெ ழுந்து இவ்விடத்தில் சங்கட சதுர்த்தி விரதத்தை யநுட்டிக்கின்ற ஒருவனுல் இவ்விமானம் மீட்டுமெழும்பி தேவலோகஞ் செல்லு மென்று தேவரீர் சொன்னபடியால், அவ்விரதத்தின் மகிமையை யும் அடியேற்குத தெருட்டவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்குத் தேவேந்திரன் சொல்லுவான். அரசனே இப்புருசுண்டி யென்பவர்இத்தன்மைத்தான மகத்துவத்தோடு மிருந்தனர்.

இந்திரவிமானம் மண்ணிழி படலம் முற்றிற்று.

புருசுண்டி சங்கட்ட.

சதுர்த்தியனுட்டித்த படலம்.

கலையடிக் கயவாய்ப் பனைவகிர்ந் தனையகருமருப் பெருமை யூர்ந்தலகி, னலைபுரிந் தவரை யிறுருறப் பிணித்து ரதகர லேழுகோ டியினு, மிலையிலைபுரிந்தா யெனக்கொடும் பாரு மியம்பிவன் றுயர்செயுந் தருமு, னன்னியனே யன்னை னுலகெழு லேக்க வடித்தன ரைத முனிவன்.

ஜகஜீவ பரார்த்த விலக்கணக்களைத் தேறத்தெளிந்து, பரமோ ந்தை முற்றுமகன்அசர்வசித்திப், பிரதாபமுற்ற முனிபுங்கவர்

னேன்? இந்த்ர விமானம் மண்ணினிழிந்ததையும், புருசண்டி முனிவர் ஜீவன்முத்தரான பேற்றையும் முன்னர்சொன்னேம். இப்பால் அப்புருசண்டி முனிவர் சங்கட்ட சதுர்த்தி யநுட்டித்தமையைச் சொல்லத் தொடங்குகின்றேம். சித்தசாதமாகக் கேட்பீர்களாக; பாவஞ் செய்தோரையெல்லாம பலவகை நரகங்களிற செலுத்தி வதைசெய்யவும், புண்ணியஞ செய்தோரை போகபூமிகளில் விட்டு உபசரிக்கவுஞ செய்து தனது நடுவுநிலைமை தவறுத நீதிசெலுத்தி வருகின்ற யமதருமராச லோகத்தின் பெருமையைக் காணும்படியாக ஒருநாள் நாரதமகாமுனிவர் சென்றனர அக்சால் அவரைக் கண்டவுடன் யமதருமராசன் எழுந்திரு, திருகொண்டு வந்து, சோடச வுபசாரங்களும பூசித்து, உமாதேவியார் இங்கெழுந்தருளிய காரியத்தை அடியேற குணாதிய நவேண்டுமென்று பிராத்தித்தான், அதறகு நாரதமுனிவர், உனது உலகத்தின் வளங்களைக்காணவேண்டி இங்கு வந்தனமென்றுசொல்லவும், அவ்வெமதருமராசன் மகாபாகியமென்று ஆனந்தித்து அம்முனிவரை யழைத்துக்கொண்டு அநேகரத்தில் நவரதனசொர்ணமயமா யிராகின்ற அளவற்ற விநோதங்களைக்காட்டி, நரகபூமியிலழைத்துக்கொண்டு சென்று அங்கு அளவறுபேர்கள * இருபத்தெண்கோடி நரகங்களிலும வீழ்ந்து வருந்துவதைக் காண்பித்தனன், அவ் யாதனைகளையும நாரதமுனிவர்கண்டு அபயம் செல்லுகையில் நும்பிபாகமெனனும ஓர் நரகத்துள தேவர்களும புகழ்ந்து வணங்கத்தக்க தவசிரேஷ்டராகிய புருசண்டிபிறுடையசுற்றத்தினரெல்லாங் கிடந்துவருந்துகின்றதைப் பார்த்து, பரமசிவத்தினது திருவடிகளை மனதிற் றியானித்து, யமதருமராசனிடத்தில விடைபெற்று அவ்விடத்தினின்றும் நீங்கி, பிருகுத கிருபையோடும் விரைவாக புருசண்டி யிடத்திற்கு வருது ஓர் சால சித்திப பிரதாபமே! நீர் விநாயகக் கடவுளுடைய பெருங்கருணைபினாலே அவர் சாரூபத்

* இருபத்தெண்கோடி நரகமாவன; கோரம், அசிகோரம் அதிகோரம், அகோரம், குரோதம், தாளதாரம், பயாகரம், காலாத்திரம், பயோத்தகம், சண்டம், மகாசண்டம, சண்டகோலாகலம், பிரசண்டம, பத்மம், மகாபத்மம், விரசிவிமம், வீமவிஷணம், காலாந்தகராளம், விகராளம், வசிரம் திரிசோணம், பஞ்சகோணம், தீர்க்கம், வர்த்தனம், சப்தபௌமம், அஷ்டபௌமம், திப்திமம், மாயாக்கியம் என்பன. முக்கிய நரகம் கூடல் இருது இரௌரு நரகங்களெனக. இவை ஒவ்வொன்றும் ஐந்தைந்து மந்திரி நரகங்களோடு கூடி கலை-வகையினையுடையதாயிருக்கும் தனித்தனி வகை ஒன்றுக்கு கோடியாகி இருபத்தெண்கோடியென வழங்குவ தென்ப.

தைப்பெற்று இங்ஙனமிருக்க, உம்முடைய சுறறத்தின ரெல்லரும் யமலோகத்தில் கும்பிபாக மென்னும் நரகத்தில் வீழ்ந்து வருந்து கின்றார்க ளாதலால் அவர்களை நற்கதியிற் சேர்ப்பிக்கவேண்டிய முயற்சிகளை நடத்தக் கடவீரென்று சொல்லி ஆகாயமார்க்கமாகச் சென்றனர்.

அப்பால் புருசுண்டி யென்பவர் மனம் வருந்தி இதகாரணம் இக் காரணத்தை யாமறியோமே, இதற்கினி யென்செய்யத் தக்க தென்றுயோசித்து சிறிதுநேரந் தியானித்திருந்து தமதுமனத்துள் ஒரு நிச்சயத்தையுணர்ந்து சகல பொருள்களையுஞ் சேகரித்து நர கத்தில் வீழ்ந்து வருந்துகின்ற சுறறத்தினரைக் குறித்து லோதாகம விதிப்படி கங்கட்டசுதர்த்தி விரதத்தை யனுட்டித்து அவ்விரதப் பலனை முன்னர் சம்மை யாட்கொண்டு பதிபசுபாசவிளக்கத்தினை யுபதேசித்தருளிய கணேசமூர்த்தியினுடைய திருக்காரத்தில் தத் தஞ்செய்தனர். இவ்வாறுதத்தஞ்செய்வதன் முன்னமே * கும்பி பாகமென்னுநரகத்தில் வீழ்ந்து வருந்தியிருந்தவர்களெல்லாம் வி மானங்களிலேறித் தெய்வலோகம்போய்ச் சேர்ந்தார்கள் ஆதலால் ஒரு தினத்திற்செய்த அவ்விரதத்தின் பயன் இத்தன்மையதாயின் எக்காலத்தும்அதனையனுட்டித்தவருமவர்களையும்பயன்யாவரா லளவிட்டுரைக்கற்பால தென்று தேவேந்திரன் சூரசேன மகாராச னுக்குச் சொன்னான்.

புருசுண்டி சங்கட்ட சதுர்த்தி யனுட்டித்த படலம்
மூற்றிற்று.

கிருதவீரியன் றவம்புரி படலம்.

வயப்போர் மன்னர்க் கேறனையான் வழங்கு கிருத வீரியனென் றியற்பேருடையான்சுகந்தையெ னியம்பப்படுந்தன் மனைவியொடு கயப்போ டமர்ந்து வாழ்நாளி னைவதிர் கதியுற் றிடுமக்கட் பயப்பா றின்றிமனங்கவன்று படர்ந்து வனத்திற் றவம்புரிந்தான்.

யான் எனதென்னுஞ் செறக்கினையொழித்து சித்தஞ்சிவசொ ரூபமாகித் திகழும் முனிர்திரர்களே ? விநாயகக் கடவுளுடைய சுவ

* கும்பிபாகமாவன். மகாநரகம் கான்கில், பத்துவகைப்பட்ட நிராஜ ராஜேசுவர நரகத்தின் இருதோர் நரகமென்ப.

கட்டகதர்த்திவிரதத்தைப் புருகூண்டி முனிவர் அனுட்டித்தி தம் மினத்தினரை யெல்லாம் விண்ருடியேற்றுவித்த கீர்த்திவரதைச் சொன்னேம். இப்பால் கிருதவீரியன் றவம்புரிந்து பெற்ற திறத்தி னைச் சொல்லுவோங் கேட்பீராக. மீட்டுந் தேவேந்திரன் சூரசேன மகாராசனை நோக்கிசொல்லுவான் அரசனேஉலகமுழுதுங்தொழு தேத்தும்படியாகக் காலக தவருமுல் கீரைச்சுருந்தனிக்கின்ற காவிரி நதிக்கு ஒருறைவிடமாகிய சையவரைச சாரலில் சகல வளங்களு நிறைந்த ஓர்பட்டணத்தில் எல்லா வேதகர்கட்கும் இராச கண்டீர வத்திற் கொப்பானவனும் வையகமுழுதிம வணங்கும்படி அரசாட் சிசெய்துவந்த கிருத வீரியனென்னும் இயற்பெயரையுடைய ஓர ரசனிருந்தான். அவன்சுகதையென்கின்ற மகிஷியோடுவாழ்வுற்றி ருக்குநாளையில தன்னை நாகதியிரசோபகிகலல்ல புத்திரப்பே றின்றி மனவருதத முற்றுந தானுகதன மகிஷியுமாக வனத்திற் சென்று காற்றைபுஞ சருகையும புசிதது டலை வருந்தத் தவஞ் செய்து கொண்டிருந்தான். அதை நாரதமுனிவர அறிந்து பிதிர ருலகத்திற் சென்று அக்கிருதவீரிய மகாராசனுடைய தந்தையைக் கண்டு பிதிர் தேவனே! வேதவொழுக்கங்களில் சின்று தனதுசெவ் விய கோலைத் திசை யனைத்திலுஞ செலுதகி நீதியோடும் அரசாட் சிசெய்து வருகின்ற உனது குமாரனுகிய கிருதவீரிய மகாராச னுனவன் இதுகாறும் ஓர் புத்திரப் பேறில்லாத தக்கத்தினுல் தன் னுகரத்தை விடுத்து வனத்திற சென்று உடல, உயிர்உள்ளம் என்னு மிவைகள் வருந்தும்படியாக அரிய தவத்தினைச் செய்கின் றன். அவன்மனைவியும் அவ்வாறே இருகின்றனள். இனியவர்கட் குப் புத்திர னுதித்தா லன்றி உயிர்வைத திருக்கமாட்டாகள் பின் னர் உனது வம்சமும் விருத்தியிலாமற் போயவிடும், ஆதலால் உனது புத்திரனுகவு மக்கட்பே றுண்டாகத் தக்க முயற்சியை விரைவில் நடாத்தக் கடவையென்று சொல்லித் தமதிருக்கையை யடைந்தனர்.

இப்பால் அவை யனைத்தையும் பிதிர்தேவன் கேட்டமாத்திர த்தில் மனம் வருந்தி அந்திமிடததிற் சத்தியலோகத்திற் சென்று பிரமதேவனைக்கண்டு சஷ்டாங்கமாக வணங்கி சுவாமி! மறத்தாறு கடைந்தீட்டிய பொருளைகளை அறத்தாற்றிற் செலவுசெய்து எல்லாப் புகழையும் எனிதிற் சம்பாதிக்கவல்ல எனது செல்வக்குமாரனுக்கு இன்னமும் ஒருபுத்திரப்பேறில்லாத காரணம் யாதினுலோ அதனை

அடியேற்கு விளம்பி யருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்து கொண்டான். அதற்குப் பிரமதேவன் சொல்லுவான் ஓபிதிர்தேவனே! உன்மைந்தனுகிய கிருதவீரியன் மூற்சனனத்தில் இப்போது வசித்திருக்கின்றவரில் அரசவம்சதிற்றுனே பிறந்து சாம்பனென்னும் இயற்பெயரைவகித்துக் கணேசனென்னும் புத்திரனைப் பெற்றுவாழ்ந்திருக்குங்காலத்தில், (பாம்பின்வெல்வாய்ப்பட்டு வெதும்பு வானைப்போல நிகரற்ற துன்பத்தை நெடுநாளனுபவித்து இரண்டுதினம்மூன்று தினமாகப் பட்டினிகளிருந்து இடையிற்கிடைத்ததைப் புசித்துக்கொண்டு தனது வாழ்நாளைக்கழித்து வருகையில் ஓர் நாள் ஏதுங்கிடையாதவனைய் வருந்திப் பகியின் கொடுமையையாற்றமாட்டாது விதிதப்பிவழிபறித்தின்னை நினைத்து, நெருங்கிய கானகத்திற் புகுந்து, அதில் பன்னிரண்டு பிராமணர்கள் வழிச்செல்வதைநோக்கி, அவர்களைநிரில் யமனையொப்பச்சென்றுஇருப் புத்தடி கொண்டு மோதி யிரைவிசப்பிலேற்றி, உடல்களைக்குகைகளிற்போட்டு அவர்கள் வைத்திருந்த வஸ்திராபரணமுதலியபொருள்களைக் கவர்ந்துகொண்டு, இராக்காலத்தில் வீட்டிற் சென்று தாளிட்டிருந்த கதவைப் பலமுறைத் தட்டித்தன் குமாரனைக் கணேசா, கணேசா, வென்று மூன்றுதரங் கூவினுள் அதற்குஅக்கணேசன் அன்று முழுவதும் அன்னபானங் கிடையாமல், மிக்க சோர்வினை யடைந்து, உயிரிழந்து, தனியாய்வீழ்ந்து கிடைத்தமையால், தனக்குக்கதவந்திறப்பார்ஒருவருமின்றி மற்றொருவரியாகச் சென்று, வீடேறிக்குதித்து, தன்புதல்வன் இறந்து கிடக்கின்றதை பார்த்து, மிக்க துயரங்கொண்டு, தனக்கிருந்த பகியின் கொடுமையினாலும், புத்திரவியோகமென்னும் துக்கத்தினாலும், பிரமஹத்தி சூழ்ந்துகொண்டதினாலும், அன்றிரவெல்லாந் தூங்காதிருந்த தன்மையினாலும், மறுநாள் உதயத்திற் காலைக்கடனையாற் காயத்தை நீங்கினன். அத்தினம் சங்கட்ட சதுர்த்தியாக விருந்ததன்றி, அதற்கு முன்னுள் தனது புதல்வனுகிய கணேசன் அன்ன பானாதிகளின்றி யிறந்தமையால், உடனே தெய்வ விமானம்வர, அதில் அக்கணேசனென்பவனேறி விநாயக லோகத்திற் போய்ச் சேர்ந்தான். மேற்கூறிய சாம்பனெனவெனில்: அத்தினந் தன்புதல்வனைக் கணேசாவென்று மூன்றுதரங் கூவியநன்மையால் பிச்சனனத்தில் உனக்கு புதல்வனுயவதரித்து காமனுங்கண்டு நாணத்தக்க கட்டழகினையுடையவனுகி உலகமெல்லாம் வணங்கத்தக்க அரசாரிமையையடைந்தனன். ஆயினும் அத்தணரைக்கொன்ற பிரமஹத்தி பாவத்தினால்

கிருதவீரியன் றவம்புரி படலம்.

இதுகாறும் புத்திரப்பே றில்லாதவனாயினன். ஆதலால் உன்குமார னாகிய கிருதவீரியனுக்குப் புத்திரப்பே றுண்டாக வேண்டுமென்று கருத்திருக்குமாயின் மேற்சொன்ன கொலைபாதகச் சேடமொழியு மாறு யாணைமுகக் கடவுளாகிய கணேச மூர்த்தியினது சங்கட்ட சதுர்த்தி விரதத்தை யநுட்டிக்க வேண்டும். அவ்விரதத்தை யநுட் டிக்கு முறைமையைச் சொல்லுவோங் கேட்பாயாக.

மாசிமாதத்தில் அமாபட்சதசமி செவ்வாய்க் கிழமை கூடிய சதுர்த்தியில் அவ்விரதத்தைத் தொடக்கி அன்று உதயத்திலெழுந்து ஸ்நானமுதலிய கடன்களைமுடித்து நிருவெண்ணீ றணிந்து உருத் திராக்கம் பூண்டு சுத்தபூமியிருந்து பிராணாதி பாதம்வரையில் விதி ப்படி நியாசஞ்செய்து காமாகினியாதிகளைத் தணித்து கணேச மூர்த்தியினுடைய பாதபதுமங்களை மனதிலிருத்தி ஏகாக்கரமந்தி ரம் சடாக்கரமந்திரம் திரியாரமமந்திரம் என்னும் மும்மந்திரியுக் தியானித்து அன்ன பானாதிகளை நீத்து சுத்தோதய மானவுடனே விநாயகமூர்த்தியை யெழுந்தருளச் செய்து சகல பூசாதிரவியங்க ளோடும் பூசணைமுடித்து சுக்கிரனுக்கும் அருகணியாதிகளை நட த்தி வேதியர்களை வரவழைத்து அவர்களுக்கு அறுசுவையோடுங் கூடிய உண்டியை அன்போடளித்து அன்றிரவு முழுவதும் நித் திரையின்றி யிருந்து விநாயகப் பெருமானுடைய திவ்விய சரித் திரங்களைக் கேட்டுக கொண்டிருப்பது விதியாகும். பெறுதற் கரிய இவ்விரதத்தைச் சதுர்த்தசிதோறும் ஒருவருடம்வரையிற் செ ய்கின் றவர்களுக்குப் புத்திரபேறு முதலான பாக்கியங்களுண் டாகும், மேலும் அதனை மன்னிலிருக்கத் தடியிலிருந்து அனுட் டிப்பார்களாயின் சுகுரு சுநுமுதலிய எச்சங்களொழியப்பெற்று எல்லாப் பொருள்களையும் வேண்டுமட்டும் பெறுவார்கள். ஆதலால் இத்தன்மைத்தாகிய மேலானவிரதமே நோதிய கோரவினைகளைத் தக்கதென்று பிரமதேவன் சொல்ல அவை யனைத்தையும் பிதிர் தேவன் அமுதாகக்கேட்டு மனமகிழ்ந்து கொண்டு மீட்டுந் தொழு தெழுந்து சுவாமீ விநாயகப் பெருமானுக்குரிவவாய்கிழமையில் வருகின்ற சதுர்த்தி முக்கியமா யிருக்கின்ற காரணம் யாதுகொண் டோ அதனையும் அடியேற்குத் தெரிவித்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டனன், அதற்குப் பிரமதேவன்

முன்னொரு காலத்தில் நருமதை நதிதீரத்தில் அரையிற் சர்ப் பக்கச்சினை வீக்கியவிநாயகக் கடவுளுக்கு அன்பராகிய பரத்துவா

றென்னும் ஒரு முனிபுங்கவ ரிருந்தார் அவர் ஒருநாள் அந் நகரு மதையில் ஸ்நானஞ் செய்யப் புக்கபோது யாவருந் தெய்வ ரம்பை யோவென் றெண்ணத்தக்க வனப்பினையுவாய்ந்த ஒரு ஸ்திரீயானவன் சில கூட்டத்துடன் அநுதியில் ஸ்நானஞ்செய்யவந்து அதன்கரை யின்க ணின்றனள். அவளை அப்பரத்துவாச முனிவர் பார்த்தமாத் திரத்தில் அவர் நெஞ்சமானது, கூற்றமோ, கொடும்பகழியோ வென்றுசொல்லத்தக்க அவளது கண்வலையிற் சிக்கி அலமர, அதை யம்முனிவர் சிறிது மாற்றுவதாயினர். அவ்வாறு மாற்றுவதற்கு முன்னமே அவருடைய வீரியம வெளிப்பட்டுப் பூமியில்வீழ்ந்தது. அதற்கம் முனிவர்மனங் குன்றிப் பின்னரொருவா றேதிறித் தமதி ருக்கையைச் சேர்ந்து தவஞ்செய்து கொண்டிருந்தனர். இப்பால் அவ்வீரியமானது விழுந்த, விடத்திற்றானே ஓரிள மகவாகியிருக்க அதைப்பூமிதேவி யெடுத்து நமக்கு நற்பேறு கிடைத்ததென்று அன்போடுவளர்த்து வந்தனள். பின்னர் அக்குழந்தையானது தன தருமேனி செவ்வானம்போலச் சிவந்து, அழல்போல ஒளிவிட்டிருந் தமையால் அங்காரகனென்னும், வீரியமாய் பூமியில் வீழ்ந்து பிள் ளையானதால் பூமகனென்னும், பெயரை யுடித்துத் தெருக்களில் விளையாடிக் கொண்டிருக்குங் காலத்தில், ஓர்நாள் தனதன்னையாகிய பூமிதேவியிடத்தில் வந்து சாஷ்டாங்கமாகவணங்கியெழுந்து அம் மா! அடியேனைப்பெற் றுவளர்த்ததாய்ந் யாரென் தன்னதையாவ ரோ? அறிகின்றிலேன, அதனை இப்போது எனக்குத் தெரிவித்தரு ளவேண்டுமென்று வினவ, அதற்கபபூமிதேவி, இசைந்து உனது தந்தை பரத்துவாச முனிவரென்று அறிவித்து, உடனே அப்பிள் ளையையழைத்துக்கொண்டு அம்முனிவரை ஆசிரமத்திற் சென்று அவர் திருவடிகளில் வணங்கி சுவாமி யுரிமையுன் தேவரீர்வீரியத் தினின்றும் உதித்தவன் இனித்தேவரீரே அவனைகைக்கொள்ள வேண்டுமென்று சொல்லி அவனை யவரிடத்தில் விடுத்துச்சென்ற னள். அதற்கம் முனிவர் மனமகிழ்ந்து தமது இரண்டு கரங்களா லும் அக்குழந்தையைத்தழுவியெடுத்து உச்சிமோந்து உபநயனதி களைச்செய்து, வேதமோதுவித்து கலையாதிகளையுங்கற்பித்து கணே சமூர்த்தியுடைய திருமந்திரத்தை உபதேசித்து அதனைத் தியா னிக்கு முறைமையினையுந்தெருட்டி நீதக்கபிடத்திற்சென்று தவஞ் செய்து கொண்டிருக்கக்கடவை யென்றேவினர் உடனே அங்கார கன் அவ்வாசிரமத்தினின்று நீங்கிமற்றொரு வனத்தின்கட்சென்று ஒப்புயர்வற்ற மகாகணபதியினுடைய திருவடித்தாமரைகளே சார்

பாகப்பற்றி, ஈடோறும் அவர் மந்திரத்தைக் கணித்து, ஆயிரம் வருடம் வரையிற் றவஞ்செய்துகொண் டிருந்தனன். பின்னர் அத் தவத்திற்கு விநாயகமூர்த்தி அருள் சுரந்து,மதம்பொழிகின்றயானை வதனமும், அருட்பார்வையும, திதிக்கரமும், பத்துபுயங்களும், ஒளி வீசுகின்ற திருமேனியும் உடையவராய், அவ்னதிரிற்பிரத்தி யட்சமாக, உடனே அங்காரகன் விரைந்தெழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து ஆனந்தக் கூத்தாடி வேதாகமங்களாற்துதித்து கரைந்து கண்ணீர்பெருகிஉடன் முழுவதும் புளகாங்கிதங்கொண்டு நின்றனன். அதற்குக்கங்கையும், கொன்றையும், அணிந்த சடாபா ரத்தினையுடைய கணேசமூர்த்தியானவர் சந்தோஷித்து, அப்பனே! நீசெய்ததவத்திற்கு மெச்சினேம். உனக்குவேண்டியவரங்களைக் கே ட்பாயாகவென்று திருவாய் மலர்ந்தனர். அங்காரகன் மீட்டுந்தொ ழுதெழுந்து அரிய தவத்தர்கட் கானந்தவீடளிக்குங் கர்த்தனே தேவரீர் திருவடிகளில் இடைவிடாதபதபதியும், தேவர்களோடு கூடி அமுதுண்ணத் தக்கஉறவும், கோள்களோடுஒன்றுகவதியும்பேறும் அடியேற்குக் கிருபைசெய்வதன்றி யான் தேவரீர் தரிசனங்கிடைக் கப்பெற்ற இத்தினஞ்சதுர்த்தியாதலால், இச்சதுர்த்தி திதியில் எனது வாரமாகிய அங்காரக வாளுசேர்ந்து வருகின்ற தினத்தில் சுவாமிகளைத் தொழுகின்ற பேர்களுக்கு விக்ஞப்பற் றுகளொழித் தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அவ்வரே கணேசமூர்த் தி யதிக்கிரகித்துஅன்பனே யாம்சகல மங்களத்தோடும்உனக்குக் காட்சிகொடுத்தமையால், அதைத்தரித்த வுனக்கு மங்களனென்று பெயருண்டாகக்கடவது. நீயுன் னுஞ் சிலகாள வரையில் இவ்விடத் திலிருந்து நம்மைப்பூசித்து வரக்கடவையென்று திருவாய்மலர்ந்து தமது திருவுருவைக் கரந்தருளினர். பின்னரங் வங்காரகன் அவ் விடத்திற்றானே யிருந்து, பசும் பொன்னால் ஓராலயஞ்சமைத்து, அதிற்றனக்குக்காட்சி கொடுத்தருளிய கணேச மூர்த்தியினது திரு வுருவத்தை தாபித்துப் பூசணைசெய்துவந்தான்: இவ்வாறு சிலகா லம் பூசித்துக் கொண்டிருக்கையில் விநாயகப் பெருமானுடையபே ரருளால், ஒரு தெய்வமிமானம் வர அதில் அவ்வங்காரகன் ஆரோ கணித்துத் தேவலோகத்தைச் சேர்ந்து தேவர்களோடுங்கூடி, யமு னை, ரவக்கிரகங்களில் ஒருவனுக்குக் கலந்தனன். ஆதலால் அவ் வங்காரகனது தினத்தில் வந்த சதுர்த்தியானது ஏனைய சதுர்த்தி களைவிட விநாயகமூர்த்திக்கு மிக்கசந்தோஷத்தை யளிப்பதாயிருப் பதன்றி அதைட்டித்தவர்கட்கு எல்லாச் சங்கட்டங்களையும் போக்,

கத்தக்கதாயு மிருக்கின்றமையால், அதைச்சங்கட்டசதுர்த்தியென் று சொல்லப்படும், அவ்வங்காரகனும் பிரதிட்டைசெய்த விநாயக மூர்த்தியானவர் நிணைத்தவரங்களே நிகரின்றியளிப்பவராதலால், எல் லாத் தேவர்களும் அவரைப்பூசித்து சிந்தாமணி விநாயகரென்று திருநாமஞ் சாத்தினர்கள். மேலும்அவ்வரங்காரகன்அம்மூர்த்தியை அவந்திமாநகரத்திற்கு மேற்புறத்திற் பிரதிட்டைசெய்து பூசித்த தால் அத்தலத்திற்குக் காமதமென்று வேறொருபெயர் வழங்குகின் றது. அவ்விடத்தில் யோகிகள் சித்தர்கள் முதலாயினேரும் வந்து வணங்குகின்றார்கள் என்று பிரமதேவன் பிதிர்தேவனுக்குச்சொன் னதாகத் தேவேந்திரன் சூரசேனமகாராசனுக்குச் சொன்னன்.

கிருதவீரியன் றவம்புரி படலம் முற்றிற்று.

சந்திர னனுட்டித்த படலம்.

போற்று கின்றவங் காரக சதுர்த்தியின் போலிவைச்
சாற்றி நிற்றலும் பிதிரனு னவன்றகத் தொழுது
தோற்று சந்திர வுதையத்திற் பூசிக்கச் சொன்ன
மாற்ற மென்னுமி துரையென மலரவன் கிளப்பான்.

உலக லியல்பு, பந்தவியல்பு, மோகூவியல்பு, நரகவியல்பு என் னும் பந்தாதிகாரங்க ளனேத்து முள்ளூர வுணர்ந்து தேகாதி தத்து வங்களே யெல்லாஞ் சிவசொரூப மாகக்கருதி சிவயோகத்தானந்திக் கும் தேவேந்திரர்களே! விநாயக மூர்த்தியைஅங்காரகனனுட்டித்த தையும், சதுர்த்தி அங்காரக சதுர்த்தியான வலாற்றினேயுஞ் சொ ன்னேம், இப்பால் சந்திரனுபாசித்த மான்மியத்தைச் சொல்லு வோங் கேட்பீராக. மீட்டுந் தேவேந்திரன் சூரசேன மகாராசனுக் குச் சொல்லுவான்; அரசனே கிருதவீரிய மகாராசனுடைய பிதிர் தேவன், பின்னும் பிரம தேவனைப் பணிந்தெழுந்து, சுவாமி மேற் கூறிய அங்காரகசதுர்த்தியைச் சந்திரவுதயத்திற்பூசிக்கச் சொன்ன வலாற்றை திருவாய் மலர்ந்தருள வேண்டு மென்று விண்ணப்பஞ் செய்து கொளள அதற்குப் பிரமதேவன் சொன்னதாவது பிதிர் தேவனே முன்னெருகாலத்தில் அண்டர் நாயகராகிய சிவபிரானைத் தரிசிக்குமாறு யான்கைலாயகிரிக்குச் சென்றேன். அப்போது சிவ பெருமான் விநாயக மூர்த்தியோடுஞ் சுப்பிரமணியக் கடவுளோடுந்

திருவோலக்கத்தி லெழுந்தருளி யிருந்தனர். அச்சமயத்தில் நாரத முனிவர்வந்து தமது கையுறையாகக் கொண்டுவந்த ஓர் கனியைக் கர்த்த னெதிரில் வைத்து திருவடிகளில் அஷ்டாங்கமாகத் தொழு தெழுந்து தமது யாழிணைமீட்டி கேஞண்டு பெய்யும் மேகம்போல இசையாகி அமுதத்தைப் பொழிவதாயினர். அவ்விசை யமுதத் தைச் சிவபெருமான் செவிமடித்து அம்முனிவ ருள்ளத்தை மகிழ் ச்சி பெறச்செய்து, அவர் கையுறையாகத் தந்தக் கனியையெடுத்து எனதுமுகத்தை நோக்கிப் பிரமனே நம்மிருபக்கலும் விநாயகமூர் த்தியுஞ் சுப்பிரமணியனு மிருக்கின் றதால் யிவர்களுருள் இக்கனி யை யாவர்க்குத் தரதக்க தென்று வினவிய நா அதற்கு முருகக் கடவுள் இளைய ராதலால் அவருக்கே கொடுக்கத் தக்கதென்று சொன்னேன். அவ்வாறேயதனை அவர்க்களித்தனர். அதைக்கண்ட சமூர்த்தியறிந்து விழிகளிற் பீப்பொறிகள் சிதறும்படியாகக்கோபி த்து என்னை நோக்கலும் முன்னஞ் சிவபிரானால் எனது சிரமறுப் பட்டபோது கொண்டபயத்திலும் அதிகபயத்தை யடைந்தன் னுடனிருந்த கணங்களோடும் அவர் சமுகத்திற் சென்று திருவடி களிற் பீர்க்கதெண்டஞ் செய்து, பலமுறையும் வேதாகமங்களிற் புகழ்த்து, சுவாமீ அடியேன் செய்த குற்றத்தை மன்னித்தருளவே ண்டுமென்று விண்ணப்பஞ் செய்துக் கொண்டேன் அதற்கு அக்க ணேசமூர்த்தி மனதிரங்கி யான்கேட்டுக் கொண்டவாறே கிருபை புரியுஞ்சமயத்தில் அதைப் பார்த்துக் கொண்டிருந்த சந்திரன் தன் னுள்ளத்தின்கண் அவமதிப்பு கொண்டவனுய்ச சிறிது பல்லிக் கா ட்டி நகைத்தனன். அதைக் கணேசமூர்த்தி நோக்கி மிக்ககோபங் கொண்டு பெரியோர்க ளிருக்கின்ற சபையில சிறிதேனுமடக்கமில் லாமல் நகைத்தனே யாதலால் இனி நீ உலகத்தில் பிரகாசமின்றி ம றைந்துபோகக் கடவது உன்னுருவத்தைக் கண்டவர்களும் இடரு ழுக்கக் கடவொன்று சபித்தனர்.

இச்சாபங்கேட் பெற்றவுடனே சந்திரன் ஆகாய மார்க்கமாய் திரிதலற்றுத் தன்னெளியும் மறைப்பட்டவனுய் மிக்க மனவருத்த த்தோடு தன் திருக்கையற்றுனே யிருந்து விட்டனன் பிதிர் தேவ னே ஏனமான நலகையெவரிடத்திற் செய்தாலும் அதனற் பின் னர் தீன்பம் வருமென்று பெரியோர்கள் கூறியிருக்க, அபபெரி யோர்களிடத்தில் அதனைச் செய்து யாவர் பிழைக்க வல்லவர்கள் அவ்வறியாமையால் தெள்ளிய திங்களுச் தீதிற்றதல்லவாஇவ்வாறு

சந்திரன் ஒளிமழுங்கி மறைந்துப் போகலும் தேவர்கட்கு அமுத பானங்கிடையாமல் வருந்தி அவர்கள் இந்திரனிடத்திற் சென்று முறையிட அவ்விந்திரன் அதிக துயரங்கொண்டு இவ்விபரத்தைக் கணேசமூர்த்தியே தீர்க்கதகக்கதென்று நிச்சயித்து எல்லாத் தேவர்களோடும் அவர் சமுகத்திற்சென்று அவரது பாத பதுமங்களைத்தொழுதெழுந்து தீனசரண்ணிய மூர்த்தியே விண்ணுலகத் தார்க்கு அமுதஞ் சுரத்தலும் மண்ணுலகத்தார்க்குப் பயிரை வளர்த்தலுஞ்சந்திரனுக்குரிய கடமையானது தேவரீரது கட்டளையே யனறி வேறன்று. அச்சந்திரன் இப்போ தில்லாமையால் இவ்விரண்டு உலகமுமழிந்து கிருக்கின்றன. சிறியோர் செய்த பிழையைப் பெரியோர்பொறுப்பது கடனதலால் அறிவீனனுகிய சந்திரன் செய்த குற்றத்தைத் தேவரீரே பொறுத்தருளா விட்டால் மற்றை யாவரிடத்தில் பொறுமை நிற்கமாட்டும ஆக்கவும் அழிக்கவும்வல்லபரம் பொருளே; மிக்க துயரத்தில் மூழ்கி பிருக்கின்ற சந்திரன் சாபத்தைத்தேவரீர் கிருபைசுரந்து நிவர்த்திசெய்தருள வேண்டுமென்று பலமுறைதுதித்து நின்றனன். இவ்வாறு மனத்துயாகொண்ட எல்லாத்தேவர்களோடுந் தேவேந்திரன் செய்துகொண்ட விண்ணப்பத்திற்கு விரையக்கடவுள் செவிகொடுத்து இந்திரனே; நெருப்பு சுடாமற் குளிர்ந்தாலும், இருள் சூரியனே விழுங்கப் பட்டாலும், பூமிக்குப்பொறுமையற்றுமிகநமதுவாக்கியம் எக்காலத்தும்மாறுங் கிறமன்று, நம்மை நன்மையோடு வருதி நயநதுபோற்றினை போக்குஇன்மையென்னுந் தன்பமெய்தலுமில்லை, இதுவேநமதுதன்மையென் றறியக்கடவை ஒரு சந்திரனுக்களித்த சாபத்தி னிமித்தம் நீங்கள்யாவரும் பரிந்து கேட்டுக் கொள்வதால் அவனைச் சிறுமை செய்கின்ற சாபத்தை நிவர்த்தி செய்கின்றேம் அஃதெவ்வா றெனில், ஆவணிமாதம் பூர்வபட்சத்தில் வருகின்ற சதுர்த்தியில் மாத்திரம் அதனை யாவரும் பார்க்காதிருக்கக் கடவர்கள. மறந்தேனும் பார்ப்பார்களாயின் அவர்கள் பலவகைப் பாதகங்கட்கும் பாத்திரர்களாகி இடும்பைக்கடலினின்று மெழுந்திரார்கள் மற்றையாள்களி லெல்லாம் முன்போலவே அவனுருவினை யாவரும் ஆகாயத்தின்கண் காணலாம். இதனையறிந்து நடந்துகொள்ளக் கடவீர்களென்று திருவாய் மலர்ந்தருளினர் அத்திருவாக்கினைக் கேட்டவர்;தேவர்களெல்லாம் உயர்ந்தோம் உயர்ந்தோமென்றுதுள்ளிஆனந்தக் கூத்தாடினர்கள். இப்பால்இந்திரன் அவ்விடத்தினின்றும்விடைபெற்றுச் சந்திரனிடத்திற் சென்றவிராயகக்கடவுளைக்

கிரஹித்த முறைமையைக்கூறி அக்கடவுளது ஏகாக்ஷர மந்திரத்தை உபதேசித்து, ஒருமுதாண்பனே! நீ உன்மனதிற் கணேச மூர்த்தியை பிரதிஷ்டித்து, அவர் மனுவாகிய இவ்வேகாக்ஷரமந்திரத்தை இடைவிடாது தியானித்து, அவர் பெருங் கருணையைப் பெற்றுக்கொள்ளக்கடவையென்று சொல்லி, யெல்லாத் தேவர்களோடுங் தனது சொர்க்கலோகத்திற்குப் போய்விட்டான். பின்னர் சந்திரன் அவ்விடத்தினின்றுநீங்கி, சங்காசர்வபித்தி முகமென்று சொல்லத்தக்க ஓரிடத்திலிருந்து மனதிடங்கொண்டு ஏகாட்சர மந்திரத்தைஇருபத்திரண்டு வருடங்ணித்தான். அதற்குக் கணேசமூர்த்தி மனதிரங்கி, ஒற்றைக்கோட்டினைடையயாரீன முகத்தோடும் அவனுக்கெதிரிற்பிரத்தியட்சமாயினர். "டனேசந்திரன் விரைந்தெழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்து, விழிகளில் ஆனந்த நீர்த்தாரைகளைச்சொரிந்து, ஈவாதிர் அறிவிலியாகிய அடியேன் அறியாமற் செய்த பிழையை மூழுதும் பொறுத்து என்னைக குழுமியிரக்கின்ற கொடுந் தன்பதோயை வீழச்செய்து, தேவரீது மெய்யருளைத் தந்து ரட்சிக்கவேண்டு மென்று பிரார்த்தித்தான். அதற்கு விநாயகக்கடவுள் கிருபைசுரந்து சந்திரனே! உனக்கு வேண்டியவரமெல்லாம் முன்னமே கொடுத்திருக்கின்றோம், இன்னுமோர் வரமுந்தருவோங் கொள்ளக்கடவையாக. அதாவது, சங்கடங்களை நீக்கிக்கொள்ள வேண்டினோர் அங்காரக சதுர்த்திதோறும் நீ உதயமாகின்றசமயத்தில் நம்மைப் பூசைசெய்து, உன்னையும் அருச்சித்து, துதிசெய்யக் கடவர். உன்னையாவருந் தொழும்படியாக, உனது கலைகளுள் ஓர் கலைமாத்திரம் நமது முடியின் மீதிருக்கக்கடவது, என்றிவ்வாறு அருள்சுரந்து அவனை ஆகாயமதற்கு செல்ல விடைகொடுத்து, தமதிருவுருவைக்கரந்தருளினர். இப்பால் சந்திரன் தனது பகிர்முகத்துள்ள மலினமெல்லாம் ஒழிந்தமையால், அக முகத்துள்ள இருளுங்கடந்தவனாய், உடனே எண்ணற்ற கிரணங் களைக்கொண்டு, முன்னிருந்ததிலும் அதிகப் பிரகாசத்தினை யடைந்து, அழகுபொருந்திய ஓர் கோயிலைச்சமைத்து, அதில் ஐங்கரக் கடவுளாகிய கணேச மூர்த்தியைப் பிரதிட்டை செய்து, பாலசந்திர விரதமென்று திருநாமங்கூறி, சிறந்த பூசனைகளியற்றி, பழையபடி ஆகாயமார்க்கத்திற்சென்றனன். பின்னர்கணேசமூர்த்தியினுடையதிருமுடிக்கு ஒரணியாக விருக்கப்பெற்றசந்திரனுற்றுபித்திருக்கும், அப்பாலசந்திர மூர்த்தியை அன்புதொட்டு தேவர், முனிவர் முதலாயினோர் வந்து பூசைசெய்கின்றனர். மேலும் இன்றோர்கள் உடனே சகல சித்திகளும் பெறுந் தன்மை

அத்தலம் சகலசித்தித்தலமென்னும் பெயரை யடைந்து எல்லாத் தலங்கட்குந்தலைமை பெற்றிருக்கின்றது. ஆதலால் சங்கட்ட சதுர்த்தி தினத்திலே சந்திரோதய காலத்தை முக்கியமாகச் சொல்லப் பட்டது மேலும், விநாயக மூர்த்திக்குச்செய்த அபராதத்தினால் பலவகைப்பட்ட இடர்களில் சந்திரனே முழ்கிவருந்தினனாயின், அவரதுமேன்மையை என்போலிகளால் எவ்வாறறிந்து சொல்லக் கூடும். சுகம்பெற வேண்டினர்கள் கணேச மூர்த்தியினிடத்தில் மறந்தேனும, வாய் சோர்ந்தேனும, மெய் வழுக்கியேனும், தரு மத்திற் கடாதன வற்றைச செய்வாராயின் பிக்கதன்பங்களே யது பனித்த நரகத்தில் அழுந்தி வருந்துவார்கள், எதல்லாமல் விநாயக மூர்த்தியைக் குறை வில்லாமற் பூசிகின்ற பேர்கள் அவசியம் அறுகுகொண் டருசசிக்கவேண்டும், என்று பிரமதேவன் பிதிர் தேவனுக்குச் சொன்னதாகத் தேவேந்திரன் சூரசேன மகாராசனுக் குச் சொன்னன்

சந்திர னனுட்டித்த படலம் முற்றிற்று.

விடைகரம் புலிசச்சிவிடிறு படலம்.

தூர்வை மகத்துவம்.

மொழிந்திடப பிதிரனு முகமலர்ந தேதன்
பிழிந்தபன் மலரினும் பெருமை யென்கொலாங்
கழிந்திடு மறுகினுக் கெனகக டாவினன்
வழிந்தருகு தேமலர் வள்ளல் செப்புவான்.

சிவானந்தக் கடலிற்படிந்து, திருவருள்விலாசமாயிலங்கும் ஒ! ஒ! முனிவர்களே விநாயக மூர்த்தியினுடைய திருமுடிக்குச் சந்தி ரன் ஓரணியாகிய வறலாற்றையும், அங்காரக சதுர்த்தியிற் சந்திர னைப் பூசிக்கவேண்டிய காரணத்தையுஞ் சொன்னேம். இப்பால் தூர்வை மகத்துவத்தைச் சொல்லுவோம் கேட்பீராக. தேவேந்தி ரனைமீட்டுஞ் சூரசேனமகாராசனை நோக்கிச்சொல்லுவான், அரச னே: பிதிர்தேவன் பின்னும் பிரமனை வணங்கி சுவாமீ, பரிமளமிரு வங்கள் பலவாகவிருக்க அவைகளைப் பார்க்கினும் தாழ்ந்த

அறக்கு அவ்வளவு விசேடம் வந்த காரணம் என்னென்று வினவினன். அதற்குப் பிரமன்சொன்னதாவது. ஒபிதிர்தேவலே! அழகுவாய்ந்த அவந்தியென்கின்ற பட்டணத்தில் சுபஎன்னுமியற் பெயரையுடைய ஓராசனிருந்தான். அவனகுச் சுபத்திரை யென்னும் ஓர் மனைவியிருந்தனள். அவ்வரசன் அவளோடுகூடி நீதிவழுவாது அரசியற்றி வருகின்ற நாளையில ஒருநாள் வறுமைக்கடலுண்மூழ்கி வருந்துகினறவனுடைய கங்காசடாதரராத்தியாகிய சிவபெருமானது பாதபதுமங்களிருசிறந்த பதுதியுடையவனுகியும்நீரிற் றுவைத்து வெளுத்தெடுக்க வலியற்ற கிழிந்த வஸ்திரத்தை யுடையவனுகியும் காத்திற் காமுங் கோலுங்கொண்டுமனைகடோறும் பிச்சையேற்பனுகியு நிரான்ன மதுருதன னென்னும் ஓர் வேதியன் அவனிடத்து வருது யாசித்தான. அபபோது அவ்வரசன் ஏற்றுர்கு மாற்றுது கொடுக்குந தன்மையினுலும் பழைய ஊழின் வலியால் அவனைக்கண்டு நகைததனன். அதை அவ்வேதியன் கண்டு மனம்வருந்தி கண்களில அனறுபொறி சிதறும்படியாகத் தானும் ஊழ்வசதனையக் கோபித்து அரசனே! நீ சிறிதேனும் கல்வித்துறை கண்டவனலலை, கனவினையொதத ன்செல்வச் செருக்காலன்றே என்னை நோக்கி நகைததனை. அது வன்னுள்ளத்தையும் நின் குலத்தையுஞ சுட்டுவிட்டது, பசுவின் பின்புற மோக்து பல்லிக்காட்டுமு இடத்தைபபோல என்னைக்கண்டு பலலிக் காட்டினையாதலால் நீ ஏறிறபூட்டுமு எநதனவடிவாகிய புல்லே யுணவாய்ப் புசிக்கக் கடவையெனறு சபிதனன. அரசாபத்தை அவ்வரசனது மனைவியாகிய சுபதிரை கேட்டு நிக்க தின்பமடைந்து, ஓ வேதியனே! உனது மெய்மமை முழுதும புண்ணியநீர்றைப் பொலிவுறப பூசினையாயினும அதற்கேற்ற இரக்கத்தினை யுன்னிடத்திற் காண்கிலேன், யாவரேனும தெரிநதும தெரியாமலும் ஓர் குற்ற மிழைத்தார்களாயின் விவேகிகள் அதனைபபொறுப்பார்களேயன்றிக் கோபியார்கள். நீ சிறிதேனும தாரதன்மியம் பாராமல் உலகத்தையாளும் இராசனென்னும் யோசியாமல் அறிவற்ற கழுதையைப்போலச் சபித்தனையாதலால் நீ கழுதையாகி ஆடையொலிக்கும் வண்ணுன்வீட்டிற் சிக்கி முதுகுகொளிய வத்திர மூட்டைகளைச் சுமநது வருந்தக்கடவையென்று சபித்தனள். அதை வேதியன் கேட்டு மனங்கலங்கி பெண்ணே குற்றம் உங்கள்மீதிருக்க அதைக் குறையிரந்து நிவர்த்தி செய்துகொள்ள எண்ணுமூரு நீச்சஸ்திரீகளைப்போல எனக்குமபசாபமிட்டனை. பாதலால்;

ச்சியாகி, உண்ணப்படுவனவும், உடுக்கப் படுவனவுமின்றி துன்ப முறக் கடவையென்று சபித்தனன.

ஓ பிதிர்தேவனே பாவங்களென்னும் எல்லாக் கொடிகளும் படர்வதற்குக் கொழுகொம்பாயிருப்பது * வெகுளியாகும். அவ் வெகுளி ஒருவனிடத்திருகுமாயின் அவனுக்குச் சங்கடமும் வறுமையும் இல்லாமற் போவதுண்டோ? இப்பால் அம்மூவருந் தங்களுக்குத் தாங்களே முடித்துக்கொண்ட சாபங்கள் மேலிடலும், சுலபமகாராசன் இடபமாகி அந்தகாதகிலிருக்கின்ற ஒருமுனிவனிடத்திற் சென்று தன் பழமுற் றிருந்தனன். மதருதனென்னும் வேதியன் கழுதையாகி வண்ணகரத்திற்சிக்கி வருத்தமுற்றிருந்தனன். சுபத்திரையென்பவள் புலச்சியாகி அந்தகரத்தின் புறத்திலிருக்கும் புலச்சேரியிற் சென்று வருமையினால் அடக்கக்கூடாத பசியையுடையவளாகி யாவரேனும இடித்தளிக்கும் பிச்சையை யேற்றுண்டிருந்தனள். இவ்வாறு நெடுநாள் செல்ல, ஒருநாள் எருதானது உழவனுடைய ஏறிற் பிணிப்புண்டு, அவனது வெல்லையவனோடு வனோடு உழுதுகொண்டிருந்தது. கழுதை தன் முதுகிலும்புகோக மூட்டையைச் சுமந்துகொண்டுபோய் வண்ணன் தையிற் போட்டுவிட்டுப் புல்லை மேய்ந்துகொண்டிருந்தது, புலச்சியாளவள் குளிர்காய வேண்டி மரப்பட்டைகளையும் புற்களையுஞ் சேர்க்கச் சென்றனள் இவ்வாறு மூன்றும் ஒரிடத்திற் சேர்ந்தபோது மேகமானது ஆகாயத்தில் இருளைப் பரப்பி மின்னலீசி வில்லவனோடு, இடியிடித்து மழையைச்சொரிய அதனால் உழவன் எருதினது பூட்டைத் தரித்துவிட்டுச்செல்ல, அது அவ்விடத்தினின்று போய் அங்கிருக்கின்ற விநாயகமூர்த்தி ஆலயத்திற் புகுந்தது. அக்கோயிலின் மருங்கு மேய்ந்திருந்த கழுதையும், அவனாறே சென்றது. புலச்சியானவள் தான்சேர்த்த புற்கட்டியெடுத்துக் கொண்டு அக்கோயிலின் வெளிப்பிரகாரத்தி லொதுங்கினள், உடனே இராக்கால நெருங்கலும் அக்கழுதையும் எருதும் பையப்பையச் சென்று புலச்சி சுமந்திருக்கின்ற புல்லைப் பிடிங்கிக் கடித்து வாயிற் குதட்டிக்கொண்டிருந்தன. அதை அவள் கண்டு அப்புற் சுமையை நிலத்திலிட்டுக் கோலையெடுத்துக் கழுதையை மொத்தினள். அது தனது காலால் எருதை உதைத்தது. அவ்வெருது தனது கொம்பினால் அக்கழுதையை முட்டியது. இப்படி மூன்று எதிரிகளுக்காலத்தில் ஒன்றுக்கொன்று பிணங்கிப் பேரொலி செய்து

கொண்டிருந்தன. அவ்வொலியை அத்தினம் விநாயக சதுர்த்தியானதால் அவ்விநாயக மூர்த்திக்குச் சந்தியாகால பூசையை நிறைவேற்றி அவரது மந்திரத்தைச் செபித்தக்கொண்டிருந்த முனிவர்கள் கேட்டு, உடனே தடி ஏந்திவந்து அவைகளை அடித்துத்துரத்தினர்கள. அதற்கு அவைக ளஞ்சிக் குளிர்ந்த வாடைக்காற்றினுலும், இடி, மின்னலோடுகூடிய பெருமழையினுலும் வெளிக்கொண்டுபோவதற் கிடமில்லாமல் அவ்வாலயத்தைப் பலமுறை சுற்றிவர அம்முனிவர்கள் அவைகளை மேலுமேலும் துரத்திப் புறம்பிலோட்டிவிட்டனர் அவைக ளவ்வாலயத்தைச் சுற்றிச்சுற்றி ஓடுகையில் மிருகங்கள் வாயில் மென்றுக்கொண்டிருந்த புல்லும் புலேச்சி கையிற் கொண்டிருந்த புல்லும் சரிதிக்கு முன்பாகவிழ அவைகளில் முன்று புல்லமாத்திரங் காற்றினது எழுப்ப அவைகள் கணேச மூர்த்தியினுடைய திருமேனியைச் சார்ந்தன.

அஃதெவ்வாறெனில், புலேச்சி கையினின்று வீழ்ந்த புல்லானது முடியின்மீதும், எருதின் வாயினின்று வீழ்ந்த புல்லானது தும்பிக்கைமீதும், கழுதைவாயினின்று வீழ்ந்த புல்லானது திருவடியின்மீதுஞ் சார்ந்தன. இவ்வாறு அப்புற்களானவை கணேச மூர்த்தியினுடைய திருமேனியிற் றலேமயக்குற்றிருக்கின்றகாரணத்தினல், ஆலயத்திற்குவிழுப்பு வந்துளிட்டதென்று முனிவர்களெல்லாம் ஸ்நானஞ் செய்துவந்து ஆலயமுழுவதுஞ் சுத்திசெய்து கும்பாபிஷேகம் வைத்து திருமஞ்சனந் தூபதீப முதலிய எல்லாப்பொருளேயுஞ் சேகரித்து முதிர்ந்த மெய்யன்பினேடும் பூசித்து, தங்கள் தங்கள் கவலேகளே யொழித்துக்கொண்டனர். இப்பால் அம்முனிவர்களால் அடித்துத் துரத்தப்பட்ட எருது முதலிய முன்றும் அடியுண்ட வருத்தத்தினுலும், காற்றுமழையி லகப்புண்டதனுலும், உணவில்லாக் குறையினுலும், எங்கும் போக்கிடங்காணுமலியிர் பிரிந் திறந்தன. பின்னர் அம்முன்றின் பாலதாய்வந்து வீழ்ந்தபுற்கள் தமக்கருச்சணே செய்ததாகவும், அவைகள் அடியுண்ணமாட்டாது ஆலயத்தைச்சுற்றி சுற்றி வந்தது வலமவந்ததாகவும் முனிவர்கள் விழுப்பு நேர்ந்ததெனக் கருதி இயற்றிய அபிடேகம் அவைகள்செய்த அபிடேகமாகவுங் கொண்டு கணேசமூர்த்தி திருவைகுண்டத்து அவைகளே யழைத்துவருமாறு தேவகணங்களே ஏவினர். அத் தேவகணங்கள் உடனே ஒரு விமானத்தைக்கொண்டுவந்து அம்முன்றுக்குந் தேவருருவந் தந்தி அரம்பையர் புடைசூழ்ந்து ஆடல்பாடல்களைச் செய்தல்முதலிய உபசாரங்களோடு

விமானத்தின்மீ தாரோகணிக்கச்செய்தனர். என்று பிதிர்தேவனுக் குப் பிரமதேவன் சொன்னதாகத்தேவேந்திரன் சூரசேனமகாராஜ னுக்குச் சொன்னன்.

விடைகரம்புலிச்சி வீடுறு படலம் (தூர்வைமகத்துவம்) முற்றிற்று.

பாலசந்திராவதாரம்.

தூர்வை யருச்சனைப் படலம்.

மிக்கிழி பவத்தினின்றார் மிக்குய ருலகஞ் சேரத்
தக்கபுண் ணியத்தைத் தந்த தோரறு கென்றுற் றுன்னைத்
தொக்கருச் சிக்கு மேன்மை சொல்லுக வென்றார்தூயோர்
நக்குள மகிழ்ந்து தேவ நற்கண மவர்க்குக் கூறும்.

மகாமகத்வமிக்க முனீந்திரர்களே * விடைகரம் புலிச்சியா கிய மூவரையும், வீடுபுகச்செய்த தூர்வை மகத்துவத்தைச் சொ ன்னேம். இப்பால் அத்தூர்வை யருச்சனையைச் செல்லுவோங் கேட்பீர்களாக. பின்னும் இந்திரன் சூரசேனமகாராசனே நோக்கிச் சொல்லுவான். அரசனே! பிரமனைப் பிதிர்தேவன் மீட்டும் பணிந் தெழுந்து சுவாமீ புலிச்சிமுதலிய மூவருந் தெய்வசரீரம் பெற்று விமானத்தி லேறியபின்பு அங்குநடந்த காரண மென்னென்று வினவ, அதற்குப் பிரமன்சொன்னதாவது பிதிர்தேவனே . அவ் வா றம்மூவரும் விமானத்திலேறலும் அங்கிருந்த தவசிரேஷ்டர்க ளெல்லாம் அதிசயமுற்று அவ் விமானங் கொணர்ந்து வந்த தேவ கணங்களை வணங்கித் துதிசெய்து, விதியென்பதைச் சிறிதேனுமறி யாத இவர்கள் எந்தகாரணத்தால் இவ்விமானத்திலேறத்தக்கவர்க் ளானர்களென்றுகேட்க, அதற்கக்கணங்கள், சற்றுமின்றியே, தவசி ரேஷ்டர்களே, இவர்கள் கணேசமூர்த்தியை அறுகினுலே பூசனை செய்து அவர்களுடைய பாபசரீரங்களைவிட்டுத் தெய்வசரீரங்கொ ண்டு இவ்விமான மேறப்பெற்றார்க ளென்றுகூற அதை யம்முனி வர்கள்கேட்டு, கணநாதர்களே? இழிந்த சென்மத்தை யுடையவர் கட்கு உயர்ந்தலோகத்திற் சேரத்தக்க புண்ணியத்தை யாதுகொ

---

* லிடை - எருது. கரம்-கழுதை. புலிச்சி - பேச்சலியரி.

* னூர்வை - அறுகு.

டுத்ததாயின், அவ்வறுகைக்கொண்டு விராபகக்கடவுளே யருச்சிக்கு மேன்மையைச் சொல்லியருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய் தார்கள். அதற்கத்தேவகணங்களிசைந்து ஒ, முனிவர்களே நிறைந் தசேலிகளாற் சூழப்பட்டிருக்கின்றதாபரமென்கின்றகாரத்திலே, தென்றிசையிலே, ஒர்பனந்தோப்பிலுள்ள ஒடக்சாயைத் தமக்கா சீர்மமாகவுடைய கவுண்டின்னியரென்னும் ஒ நாமுனிவரி நந்தார் அவர் தமது இல்லறப்பணிவிடையை இடையூறொய்சலவகை நடத் திவருபவளாகிய ஆகிரியையென்னும் பத்தினியோடு தவஞ்செய்து வருகின்றகாளையில் ஆகியந்தமில்லாதவராகியும். மனவாக்குக்காயங் கட்கெட்டாதவராகியு மிராகின்ற விராயகமூர்த்தியை, அவ்வாரீர் மத்தில் ஆகமவிதியோடும் பிரதிட்டைசெய்து, * சத்தாகாரங்களை யும் இணையிடக்கூடாததமதுறைந்த பதிபிஞ்ஞிபிரநிதினமும்பதி ஞபிரம் அறுகுகொண்டுவந்து, அவைகளைக் கற்றமறவாராய்ந்து, அருச்சனைசெய்துவருவார். இவ்வாறுநடத்திவருகின்ற காளையில், ஒருநாள் அவர்பத்தினியாகிய ஆகிரியையென்பவள் தவசிரேஷ்டராகி அக்கவுண்டியன்னியமுனிவரைப்பணிந்து சுவாமீபரிமளிருக்குத்புட் பங்கன்பலவகையிருக்க அவைகளைப்பறித்து அருச்சனைசெய்யாது பிரதிதினமும் அளவற்ற அறுகுகளைக்கொண்டுவந்து அருச்சிக்கின் றீரே, அகுதென்ன காரணத்தினல் அதனை யடியாட்குத் தெரிவித் தருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொண்டனள். அதற் கம்முனிவர் சந்தோஷித்து, பெண்ணே அவ்வறுகின் பெருமை மகாரகசியமுள்ளது, ஆயினும்நீமிக்கபத்தியோடுங் கேட்கின்றமை யால்சொல்லுவோங் கேட்பாயாக.முன்னொருகாலத்தில்ஒருவிசேட தினத்தில்சித்தர், கின்னரர்,கருடர்- விஞ்சையர்- சாரணர்-முனிவர் முதலிய யாவரும்பணிந்து புடைசூழ்ந் திருக்கத்தகதாகயமதருமராசனனவன்- தனதுகொலுச்சபையி லிருக்கின்றசுவாத்தின சிம் மாதனத்தின்கண் மிக்கவலங்காரத்தோடு வீற்றிருக் கின்றபோது அரம்பாஸ்திரீகள், தங்களுள்ளங் கண்ணின்வழிநடப்பதும், அக் கண் கையின்வழிச் செல்வதுமான அபிநயத்தைக் கொண்டு நாட் டியஞ் செய்தார்கள்.

அப்போது அவ்வரம்பாஸ்திரீகளுள் மிக்க அழகினை வாய்ந்த திலோர்த்தமையென்பவளானது மேல்வந்திரம் நழுவிப்போக- அவள்

* சத்தாகாரமாவன. உவர்க்கடல், கன்னீர்கடல், பாற்கடல், தயிர்க் கடல் நெய்க்கடல், கருப்பஞ்சாற்றுக் கடல், தேன்கடல் என்ப. சாகாரம்-சக ராகாரம் றேண்டப்பட்டது.

மிகவும்- நாணமுற்றுத் தலைகுனிந்து- அருகிலிருப்பவர்க ளறியா வண்ணம் அவ்விடத்தைவிட்டு அப்பாற் சென்றனள். யமதரும ராசன் அவளது தனங்க ளிரண்டையும் நன்றாய் கண்டதனால்- உட னே அவன் மனது காமத்தாலுருகி விரகமென்கின்ற அனலாற் கொளுத்தப்பட்டு- அக்கொலுச் சபையினின்று நீங்கி அந்தப்புரத் திற்குச்செல்வதாயினன். அவ்வாறு செல்வதன்முன்- அவன் வீரி யமானது வெளிக்கொண்டு நிலத்தில்வீழ- அதினின்றும் கொதித் தெழுகிறிற வனலுக்கொப்பான கொடுமையோடு கலப்பையைப் போன்ற வெளுத்த கோரைப்பற்களும்- நீண்டு முறுகிச் சிவந்திரு க்கின்ற முகமயிர்களும்- பொருகியோங்கிய அழற்கொழுதினையொ த்து நிமிர்ந்திருக்கின்ற புறமயிர்களும்சிவந்த கண்களும்- தேவர் களுங் கண்டஞ்சத்தக்க அவயவங்களு முடையவனாய்- ஒப்பற்ற பெருவலியினையுடைய அனலாசுரனென்னும் ஓரவுணன் உதித்தெ ழுந்தனன் உடனே அங்கிருந்தவர்க ளெல்லாம் அவனைக் கண்டு பயந்து- அப்பால் ஓடிப்போயினர். இப்பால்- திரிலோகமும் அயரு மும்படியாக முன்னர் திருப்பாற் கடலின்கணுதித்த ஆலகாலதனை யொத்த அப்புதல்வனது கொடிய வுருவத்தை தனதுகா மன்தனியு மாறு அந்தப் புரத்திற் சென்ற யமதரும ராசன் கண்டு பயந்து- அவ்விடத்தில் அவன் நுழையாத வண்ணங் கதவைத் தாளிட்டுக் கொண்டனன் அவர்றை அவனலாசுரனறிந்து, யமதருமராசனை தன்தை யென்கின்ற மதிப்போடுவிட்டு நீங்கிப் பூவுலகத்தி லுண் டான தூலசீவராசிகளையும் புசித்து, இனி இந்திரன் முதலிய எல் லாத்தேவர்களையும் புசித்திடுவோமென்று கருதி விண்ணுலகத்திற் கெழுந்தனன். அதை அவ்விந்திரன் முதலியோ ரறிந்து பயந்து இலக்குமியை மார்பினிடமாகவுடைய மகாவிஷ்ணுவைச் சரணடை ந்து, தங்களிடும்பையைக்கூறி முறையிட்டார்கள். அவை யனைத் தையும் மகாவிஷ்ணுகேட்டு அபபாதகனுடைய பராக்கிரமத்தை யோசித்து இருள் விநாயகமூர்த்தியினுடைய திருக்கரத்தாலழியத் தக்கவனே யன்றி மற்றையரால் அழிபவ னல்லவென்று தெளிந்து எல்லாத் தேவர்களையும் அழைத்துக்கொண்டு ஒரு பாரிசத்திற் கூட்டமாக வீருந்து விநாயக மூர்த்தியினுடைய திருவுருவை மன திற்றியானித்து, வேதாகமங்களாற் பலமுறை தோத்திரஞ் செய்து தங்கள் தங்கள் குறைபினைச் சொல்லி முறையிட்டார்கள், அதற்கு ஆன்றோர்க ளறிவுக்கும் அகப்படாதவராகிய விநாயகமூர்த்தியான வர் மனமிரங்கி, மான்றோல் முடிந்த பூணூல் மார்பின்கண் பிரகா

சிக்கும் படியாகப்பிரமணர் குலத்திற் பிறந்தபிரமசாரியைப்போல வடிவெடுத்து அத்தேவர்கள் முன்னதாகச் சென்றனர்.

உடனே எடுத்ததேகத்தா லடையத்தக்க பயனைஎளிதிலடைந் தவர்களை யொத்துக் களித்து இவரே ஓங்காரத்தி னின்று மெழுந் தருளிய விநாயக மூர்த்தியென்று நிச்சயித்த. விண்டு முதலிய எல்லாத் தேவர்களுஞ் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து ஒ தீன தயாநிதியே! அடியேங்கள் படுகின்ற தன்பப்பாட்டினை பொ ழித்து, அனலாசுரனை யழித்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்து கொண்டார்கள். அதற்குப் பிரமசாரியாய் வந்த விநாயக மூர்த்தியானவரிசைந்து அருள் வழங்கினர். அச்சமயத்தில் சொர் க்க லோகத்திற்சென்ற அனலாசுரன் அங்கு தேவர்களைக் காணுத வனுப்பற் பல விடங்களோடுந் தேடிப் பின்னர் அவர்கள் ஒன்று கூடியிருக்கு மிடத்தினைக் கண்டுபிடித்து விரைந்தோக்கிச் சென் றனன். அப் பாதகன் வரவைப் பார்த்த முனிவர்க ளெல்லாம்உட னே ஒட்ட மெடுத்தார்கள் தேவர்களெல்லாம் நடுநடுங்கி உமாபர மேஸ்வரியார்புத்திரராகியும், மூவர்முதல்வராகியும் வீற்றிருக்கின்ற கணேசமூர்த்திக்குப் பின்பக்கத்தி லடித்து, உயிரற்ற உடல்போல விருந்தார்கள். இவ்வாறு அசுரன் வருவதையும், அவனைக் கஞ்சித் தேவர்கள் பதுங்கலக்கத்தினையும் விநாயகப் பெருமான் கண்டு அவர்களை உய்ந்தோம் உய்ந்தோமென்று களிப்படையும்படியாக, அஞ்ச வேண்டா மென்று அபயாஸ்தந்தந்து, தமது கரவுருவங் கொண்டு, அனலாசுர னருகிற் சென்று அகத்திய முனிவர் ஆழி யுண்டது போன்றும் சிவபிரான் விடத்தை யுண்டது போன்றும் அவனைத் தமது கரதலத்திலடங்கும்படியா வெடுத்து, அசுரனே! நீ இவ்வுலகத்தை மிகவும் வருத்தினை, இதுவன்றி இன்னும் பழமை யான அளவற்ற உலகங்கள் நமதகட்டினுளிருக்கின்றன அவைகளை யும் ஒருகை பார்க்கவேண்டுமென்று ஒருகவள மாய்விழுங்கி விட் டனர். அவ்வற்புதத்தைக் கண்டவர்க ளெல்லாம் அதிசய மடைந் தார்கள் இப்பால் கணேச மூர்த்தியினுடைய உதரத்தில் அனலா சுரனடங்கலும், சகல சராசரங்களினுடைய உதரங்களி லெல்லாம் அனல் பற்றிக்கொண்டதை போல வெப்ப முண்டாயது. தேவர்கட் கும் அவ்வாறேயாயது பின்னர் யாவரும் மிக்கதயரத்தையடைந்து விநாயகப் பெருமான் வயிறு குளிர்ந்தால் யாவர்வயிறும் குளிரு மென்று நிச்சயித்து இந்திரனுடைய ஏவலினுல் சந்திரனுவன்

சுவாமியினது திருமுடியின்மீ திருந்து தனது அமுத தாரைகளே மூற்றுஞ் சொரிந்துகொண் டிருந்தனள். அதனுலும் அவ்வெப்பு நீங்காமல் பின்னர் பிரமதேவனுடைய அன்புகூர்ந்தவிண்ணப்பத்தி னுல் சித்திபுத்திகள் சுவாமியினருகி லிருந்து தமது குளிர்ச்சஅவய வங்களே அவர்திருமேனியில் ஒற்றிக் கொண்டிருந்தனர். அதனு லும் அவ்வெப்பு நீங்காமல் மகாவிஷ்ணுவானவர் அளவற்ற தாம ரைமலர்களேக் கொண்டுவந்து சுவாமிபாதத்தில் சீட்டஅவைகளேத் தாமேவாங்கி வாங்கி ஒற்றிக்கொண்டனர். அதனுலும் அவ்வெப்பு நீங்காமல் வருணன் சீதளநீரைக் கொணர்ந்து அபிஷேகித்தனன். அதனுலும் அவ்வெப்பு நீங்காமல் சிவபிரான்றிக்க உரிமையோடுங் தமது திருமேனியிலணிந்திருக்கின்ற ஆதிசேடனேக் கொண்டுவந்து தரித்தனர். இவ்வாறு அவ்வவர்கள் ஒவ்வொரு விதத்தாற்குளிர்ச்சி செய்தும் அவ்வெப்பு நீங்காதிருக்கப் பின்னர் ஏண்பத்தெண்ணு யிர முனிவர்கள் வந்து ஓவ்வொருவரும் தனித்தனியே இருபத் தொன்று அறுகுகளேக்கொண்டு சுவாமியினுடைய சிரமுதல் பாத மளவுஞ் சொரிந்தார்கள். உடனே அனல் வெப்பம் நீங்கியது. விநா யகப் பெருமானுடைய திருமேனியில் வெப்பங்களும் நீங்கின. பின் னர் யாவரும் வேதாகமங்களால் ஆயிர மாயிரமாகத துதித்து ஆனந்தக் கூத்தாடினர்கள். தேவர்களெல்லாம் புட்பவருடஞ் சொ ரிந்தார்கள். சொர்க்க மர்த்திய பாதலமென்னு மூவுலகங் களுந் தழைத்து மகிழ்ச்சி யடைந்தன. இப்பால் விநாயகமூர்த்தி, அம் முனிவர்களேப் பார்த்து, அன்பர்களே! நமது திருமேனியிலிருந்த வெப்பமான து தேவர்களெல்லாஞ்செய்த உபசாரங்களால் நீங்கா மல் நீங்களருச்சித்த அறுகினுல் அவ்வெப்பஞ் சிறிதுமின்றி நீங்கிய படியால் எமக்குப் பற்பல உபசாரங்கள் செய்து அறுகு ஒன்று மாத்திர மில்லாவிட்டால் அப்பூசணிக்கு யாம்பயனைத் தருவதில்லே உபசாரம் ஒன்று மின்றி அறுகு ஒன்று மாத்திர மிருக்குமாயின் அப்பூசணிக்கு அதிசிக்கிரத்திற் பயனைத்தருவோம். அவ்வறுகை மிகுதியாகச் சேகரித்துப் பூசைசெய்யக்கூடாதவர்கள் இருபத்தோ ரறுகாயினுங் கொண்டு அருச்சித்தல் வேண்டும். அதற்குஞ் சக்தி யில்லாதவர்கள் ஓரறுகாயினுங் கொண்டு பூசித்தல்வேண்டுமென்று திருவாய்மலர்ந்து அவ்வவர்கள் விழைந்த வரங்களேத் தந்தருளது திருவுருவத்தைக் காந்தருளினர். பின்னர் தேவர்களெல்லாம் அவ் விடத்தில் ஓராலயஞ் சமைத்து அதிற்கணேச மூர்த்தியைப்பிரதிட் டைசெய்து பால்-தயிர்-தேன் முதலிய பூசாதிர வியங்களேக்

கொண்டு பூசித்து, பிறந்த அறிவினு லருச்சனைசெய்து, கரலன தீரியத்தாலுண்டான அனலாசுரனை விழுங்கியகாரணத்தால் கா லானலப்பிரசமென்றும், பாலவயதுடன்வந்து அக்கினியும்ஆலமு மஞ்சத்தக்க அனலுருவோடுங் கூடிய அசுரனை விழுங்கினல்லா வுயர்கட்குஞ் சந்திரனைப்போலக் குளிர்ச்சி தந்தமையால் பாலசந் திரனென்றுந் திருநாம மிட்டுதங்கள் தங்கள் பதவிகளைச்சேர்ந்தார் கள், அன்றுமுதல் விநாயகமூர்த்திபினது பூசனைக்குரிய அனந்தம் வஸ்துக்களில், அறுகு சிறந்ததாயது. என்று கவுண்டின்னிய முனி வர் தனது பத்தினிக்குரைத்ததாக தேவகணங்கள் முனிவர்கட்குச் சொன்னபடி பிதிர்தேவனைக்குப் பிரமதேவன் சொன்னன். அந் நீத் தேவேந்திரன் சூரசேனமகாராசனுக்குச் சொல்லினன்.

தூர்வை யருச்சனைப் படலம் முற்றிற்று.

தூர்வை யாசகப் படலம்.

மன்றலங் குளவன் முதலினை வருந்தம் வைப்பினை யடித்து வாழுந் திருந்தா, ரன்றுதொட் டழுகு விநாயகர் பூசைக்கனந்தள பொருளினுஞ் சிறந்த, தென்றுதன மன்னிய சிரியைகன்கறியவிருந் கவுண்டின்னிய னிசைத்தா. னென்றிய முனிவீ ரொருகதையின்னு முணர்மினென் றுரைப்பக் கணத்தோர்.

சவுனகாதி முனிவர்களே! விநாயகமூர்த்தி அனலா சுரனை விழுங்கித் தேவர்களைக் காத்ததும், அவனை விழுங்கிய வெப்பம் நீங் குமாறு முனிவர்கள் தூர்வை யருச்சனை புரிந்ததுஞ் சொன்னேம்; இப்பால் அவ் விநாயகமூர்த்தி தூர்வையாசகஞ்செய்த வரலாற்றி னைச் சொல்லுவோங் கேட்பீர்களாக. பின்னர் தேவேந்திரன் சூர சேனமகாராசனிடத்தில் அரசனே! தேவகணங்கள் முனிவர்களுக்கு மற்றொரு கதையுஞ் சொன்னதாகப் பிதிர்தேவனுக்குப் பிரமன் சொன்னதாவது முனிவர்களே! அருட்செல்வத்தினராகிய துற வறத்தோர்களையும், பொருட்செல்வத்தினராகிய இல்லறத்தோர் களையும் தன்னகம் வீசிக்கப்பெற்று, அளவற்றவளமையோடிரு கின்ற மிதிலாபுரி யென்கின்ற பட்டணத்தில், அன்பு, சாத்திர னர்ச்சி, சுகை, வலி, வெற்றி, ஒழுக்கம், இல்லறநடை, முதலிய லாண்மைகளோடுதனக் கேவலாகக்கொண்டசனக [illegible]

னும் ஏரசனிருந்தான். அவ்வரசன் திசையனைத்தினுங் தனதுசெங் கோலைச்செலுத்தி அரசியற்றி வருகின்ற நாளையில், தமக்கொருவர் ஒப்பில்லாதவராகியும், எல்லாவுலகத்தினுஞ் சஞ்சரிப்பவராகியும், சடாமகுடத்தைத் தரித்தவராகியும், மகதியாழ்த்தலைவராகியு மிரா கின்ற நாரதமகாமுனிவர் ஒருநாளவனிடத்திற்கு வந்தனர் அக்கா லத்து அவன் பரதத்துவ வண்மையை யறியாதவனுய் தனதுபுலன் கள் சென்றவழியே மனஞ்செலுத்தி, ஒருவினைகளையும் விடாமற் புரித்தும், தானேபரத்துவமென்று நிச்சயங் கொண்டிருக்கின்ற மதியின்மையினுல் அந்நாரத முனிவருக்கு வழிபாடு செய்யாதவ னுகியிருந்தனன். அதையம்முனிவர்கண்டு அவனறிவின்மையைத் தமதுமனதில் மறைத்துக்கொண்டு, அரசனே! பகவானுடையகிரு பையினுலே சகலபாக்கியங்களும் பெற்றனை, அப்பாக்கியங்களெவறி யாரிடத்திற் செலுத்திவாழ்கின்றனை, எல்லா நன்னடைகளையுங் கடைப்பிடித்தனை ஆதலால் இன்னம் அச்செல்வத்தை உனக்கு வேண்டுமட்டும் அப்பகவானளித்தருளக்கடவரென்று ஆசீர்வதித் தனர். அதை அச்சனகராசன் கேட்டு முனிவ! வேறே பகவா னிருக்கின்றனரென்றும் அவர் வேண்டிய பாக்கியங்களை யளிப்ப ரென்றும் பேதப்படுத்திச் சொல்வது அறிவில்லாதவர்களுடைய தன்மையேயன்றி அபேதிகளாயிருக்கின்றவர்களுடைய தன்மை யவ்வாறன்று. யாவையுங் கொடுக்கின்ற பகவானும் அவைகளேவற் றுக்கொள்கின்ற யாசகனும் யவையும் அநுபவிக்கின்ற போகியும், அவைகளுக்குற்றமாகவெறுக்கின்றபோகியும் நானேயன்றிவேறில் லையென்று அவமதித்துரைத்தனன். அதையம் முனிவர் மறுத்து, அறிவற்றசனகராசனே! பகவான் வேறில்லையென்று பேதைமை யாற் பேசினை, அப்பகவானுண்டென்பதை நீ நானங் கொள்ளும் படி உன்னெதிரிற்றானே காட்டுகின்றோம்அப்போதேனும் அறிந்து கொள்ளக் கடவையென் றுரைத்து அவ்விடத்தினின்று நீங்கிக்க வண்டினிய முனிவரிடத்திற் சென்றனர் அக்கவண்டினியமுனி வர் நாரதமுனிவரை யெதிர்கொண்டு சென்று தீர்க்கதண்டஞ்செ ய்து அழைத்துவந்து ஓராதனத்தி லிருக்கவைத்துச் [] சோடசோ

---

* சோடசோபசாரமாவன. தவிசளித்தல், கைகழுவீர்தரல், கால்கழுவீர் தரல், முக்குடிநீர்தரல், நீராட்டல், ஆடைசாத்தல், மூப்புரிநூல்தரல், தேய் வையூசல், மலர்சாத்தல், மஞ்சளரிசிஇடுவல், கறும்புகைகாட்டல் விளக்கிடல் கருப்பூரமேற்றல், அமுதமேந்தல், அடைக்காய்தரல், மந்திரமலரா லருச் சித்தல் என்ப.

பசார்க்களோடு பூசனைசெய்து, அளவளாவிய சன்தோஷத்துடன் இனியவார்த்தையாடி இனைப்பாறினர். பின்பு காரதமுனிவரை மூந்து அக்கவுண்டின்னிய முனிவர் பூசிக்கின்ற விநாயகமூர்த்தி சன்நிதானத்திற் சென்று சாஷ்டாங்க மாகப்பணிந்தெழுந்து கரத்தில் யாழினையேந்தி நரம்புகளைத் தடவி பற்பல விசைகளோடும் அவர் பேரருளைப் பாடித்துதித்து, ஈவாமி தேவரீர்கிருபையால் சனகராசனுக்குப் பூலோகவாசாட்சியும், போக்கற்கரிய செல்லமும் உண்டாயிருக்கின்றனை அவைகள் தேவரீர்கிருபையாற்கிடைத்தனவென்று சற்றுங்கருதிலன், தேவரீரைப் பரத்துவமென்றும் எண்ணிலன், மூத்தியிற்கா முற்றவணைப்போல விருக்கின்ருன். பெரியோர்களைக் கண்டால்வந்தனை வழிபாடுகள் செய்யாது தானேபரத்துவமாக மதித்து அகங்கரித்திருக்கின்ருன். அவைகளைத்தேவரீர்திருமுன்பு விண்ணப்பஞ் செய்தக்கொள்ளுமாறு அடியேன் இங்ஙனம் வந்தனனென்றுசொல்லி மீட்டுஞ் சாஷ்டாகமாகச் சேவித்து ஆகாய மார்க்கமாகச் சென்றனர்.

பின்னர் விநாயகக்கடவுள், அரசனகாரசனது மையலைநீக்கி ஆட்கொள்ளுமாறு திருவுளங்கொண்டு, ஓதாழ நோய்கொண்ட சரீரத்துடன் ஒருந்தண ராகவெளிக்கொண்டு, அவ்வரசனுடைய அரண்மனை வாயிலுக் கெதிர்சென்று, அங்கு கரவல்கொண்டிருக்கும் எவ்வாளரைப் பார்த்து யாம் வந்திருக்கின்ற செய்தியை அரசனுக் கறிவிப்பீர்களென்று திருவாய்மலர்ந்தனர், அவர்கள் அவ்வாறேசென்று சேவித்து, ஓ சார்வபௌமா தேவரீர் அரண்மனை வாயிலே நோக்கி நேற்றை யவரைபில் வருதவாக்குள் ஒருவராகிலும், தரித்திரத்தால் வருத்தமுறுகின்ற பேர்களைக் கண்டதில்லை. இத்தினமே ஒருவரைக் கண்டோம் அவர் மகாயோக்கி யமுள்ள அந்தணராயும். தொழுநோய் கொண்ட சரீரத்துடன் மிக்க தன்பத்தையும், பசியையு மூடைத்தானவராயிருக்கிறுரென்று சொல்ல, அதை அரசன்கேட்டு அவ்வேதியரை இங்ஙனங் கொண்டு வரக்கடவீரென்று கட்டளையிட்டான். அவ்வாறே அக்காவலாளர், அவரை யழைத்துக் கொண்டுவருது அரசனெதிரில் விட்டார்கள். யாவரும் அருவருப்புக் கொள்ளத்தக்கசரீரத்தோடுமிருக்கின்ற அந்தணரை யரசன்பார்த்து உமக்குயாது வேண்டி வந்தீரென்று வினவ, அதற்கவ் (விநாயகமூர்த்தியாகிய) வேதியர். அரசனே முன்னர்எனது பசிநோய் நீங்குமாறமுதூட் வேண்டுமென்றார். உடனே அரசன் தன்குமாரனையழைத்து இ

தெயர் பகிதணியும்படியாக*அறுசுவைபதார்த்தங்களோடும்போ
சனஞ் செய்விக்கக் கடவையென்றுகட்டளையிட்டனன். அப்புதல்வ
னதற்கிசைந்து அந்தணரையுள்ளே யழைத்துக்கொண்டு சென்று
வாசனை பூட்டிய சலத்திஞல்அவரது திருவடிகளை விளக்கிஒராதன
த்தி லெழுந்தருளச் செய்து சாஷ்டாங்கமாக வணங்கி ரீண்டிருக்
கின்ற இரண்டு தலைவாழையிலைகளையொன்றுகச்சேர்த்து அவை
களில்அன்னவகறி முதலானஎல்லா வுணவுகளையுங்குறைவறவிறப்பி,
சுவாமி இனித்தேவரீர் முழுதுடித்தருள வேண்டுமென்று இரந்து,
அருகில் விசிறிகொண்டு மெல்லவிசிறி உபசரித்தனன் பிள்ளைஅவ்
வேதியர் எல்லா வுண்டிகளையும்கீர்விளாவிதமது திருக்கரத்தாற்
றொட்டருளிய மாததிரத்தில் அருகிருந்தவர்கள் அவ்விலைகளிலிட்ட
பதார்த்தங்களில்ஒன்றேனுங்கண்டிலராகி ஆச்சரியமடைந்தார்கள்
அரசகுமாரன் உடனே சமையற்காரரைக்கூவி நீங்கள்சமைத்திருக்
கின்ற பற்பலவுணவுகளையுங் கொண்டுவந்து இடுவீர்களென்ன, அவ்
வாறே அவர்கள் அளவற்ற பெற்பள்ளயங்களில் பாகமுழுவதும்
நிறைவேறியிருக்கின்ற பற்பலவுணவுகளையுங் கொண்டுவந்துபடைத்
தனர் படைக்குந்தோறும் அவர்கள் நாணும்படி உடனுக்குடனே
வேதியரும் உண்டருளினர்அதைச் சமையற்காரர்கள்நோக்கிக்குறு
நகைகொண்டு மீளவுஞ்சென்று பாகமானதும் ஆகாததுமாம் மட்
கலத்தோடு வைத்திருக்கின்ற உண்டிகளையெல்லாங் கொண்டுவந்து
படைத்தார்கள். அவைகளையும் அவ்வாறே உண்டருளினர் பின்ன
ரவர்கள் அரசகுமாரனை நோக்கி யாங்கள் சமைத்து வைத்திருந்த
எல்லாவுணவுகளையும் இவ்வொருவருக்கே படைத்து ஆய்விட்டன.
இன்னும் அரைக்கணப்போது பொறுத்திருந்தால் அளவற்றவுண்டி
களைச் சமைத்துக்கொண்டு வருகிறோமென்றுசொன்னார்கள், அதை
அந்தணராய் வந்தஎமதுகர்த்தன் செவியுற்றுத்தமது திருமுடி
யைத் தளக்கிஇனிவெந்த பின்பு என்பசியைவிலக்கும்போதுவிலக்
குங்கள், இப்போது வேகாதிருக்கின்றவைகள் யாதாயினும் இருந்
தால் அவைகளைக் கொண்டுவந்து விரைவிற்படையுங்களென்று தி
ருவாய்மலர்ந்தனர். அதற்கவ் வரசகுமாரன திசயித்துஇவர்க்குஅப்
பண்டங்களை அடிக்கடி எடுத்துவந்து படைப்பது அரிதென்று
நினைத்து. அந்தத்தப் பதார்த்தங்களையுடைத்திருக்கின்றஎல்லாக்
கஞ்சியங்களையுந் திறந்து, சுவாமி இலைகளிற் புகுந்து உமக்கு

* அறுசுவையான. கைப்பு, துத்திப்பு. புளிப்பு, உவர்ப்பு. துவர்ப்பு, கார்ப்பு என்பன.

வேண்டுவன புசித்தருளுவீர் என்றுசொன்னன். அவ்வாறே அக் களஞ்சியங்க ளனைத்தினும் வடவாக்கினியைப்போலப் புகுந்து யாவையும்புசித்தருளினர். இவ்வற்புதத்தைச் சனகராசன்கேள்வி யுற்று ளெரேலென் றெழுந்துவந்தகர்த்தன் திருவிளையாடல்களைப் பார்த்தி, இவ் தனவேயன்றி ணவாகக் காணப்படவில்லை. அரு நில்லாவிடில் ஓர் மாயையென்றெண்ணத் தக்கதேயன்றி மற்றொன் றல்லவென்று மதித்து அங்ஙகரத்திலுள்ளவையும் அங்ஙகரத்தைப் புடைசூழ்ந்தநாடுகளிலுள்ளவுமான பதார்த்தங்களையெல்லாம்மனே வேகமாய்ச்சென்று கொண்டுவரும்படி தூதர்களுக் காக்கியாபித்த னன். அத்தூதர்கள் அக்கட்டளையை ஆங்காங்கிருக்கின்றவல்லாச் சனங்களுகும் அறிவிக்க, அவ்வவர்கள் வெந்ததும் வேகாததுமா யுள்ள அளவற்றபதார்த்தங்களைக் கொண்டுவந்தமலைபோலக்குவித் தார்கள். உடனேசர்வ சங்காரகாலத்தில் சகலலோகங்களையும் அவ் வுலகங்களிலுள்ள எல்லாப் பொருளகளையும், மண்ணிறந்த சிவராசி களையும் இமைப்போதிற்றமது உதரத்துள் ஒளிசகச் செய்யவல்ல வேதியரானவர் அப்பதார்த்தங்களை யெல்லாம் அரசன் காணும் படியாக மூன்போலவே உண்டருளினர்.

இவ்வாறு யாவையும் உண்டருளிய அதிசயத்தைக்கண்டவர்க களெல்லாம் பயந்து, இன்னும் இக்குட்டகோயுற்ற வேதியன்பசி தீராமையால் இனிநம்மையும்எடுத்து விழுங்கிவிடுவனென்றுகூற்றி சையினும் ஒடிப்போனார்கள். அமைச்சர்களெல்லாம்நடுநடுங்கி, இம் மறையன் தேவனே? பூதனே? அசுரனே? மற்றெவ்வகைத்தான வனே அறிகிலோம்; இவன் மனிதனுயின் இவ்வாறுண்ணத் தக்க வனன் றென்று சந்தேகித்தனர். அரசனும்அதிக அச்சங்கொண்டு வடவாமுகாக்கினியே ஒர் வடிவங்கொண்டு வந்ததோ? அல்லது சிவ பெருமானுடைய நுதல்விழித் தீயோவென்றுமனங்கலங்கினவனுய் நமது நகரத்தினையும், காடுகளையும் பாணியுண்ட வினாங்களைபோல வும், உயிர் நீங்கியுடல் போலவுஞ்செய்து, எல்லாப்பொருள்களை யும் இவர் எதிரிற்கொண்டுவந்து படைத்தும்இன்னும்இவர் பசிக்கு இருதி கண்டதில்லை யாதலால் இவர்க்குஅமுதளிப்பவர் மனிதருக்கு ளில்லை யோசிக்குமிடத்தில் தேவர் கூட்டத்தினு மிரார்கள் இனி யாம் செய்யத்தக்கது ஒன்றையும் காணேம். இவரை நல்லவார்த் தையால் வெளிப்படுத்துவது எவ்வுபாயத்தினு லென்றுயோசித்து விராயக மூர்த்தி சமீபத்தில் வந்து, சுவாமி தேவரீர் அத்தணாரா லாயும் இவ்வுலகில் தரித்திரத்தால் மிகவும் வருத்தமுற்றிருக்கின்

திரனும் விரோசனையுங் கைத்தமீட்டுத் தெளிவுற்றுத் தங்களை யடைந்திருந்த வறுமைக்கு விடைகொடுத்தனுப்பினர்கள். மிகுலா புரியினும், அதைசசேர்ந்த காடுகளினு மிருந்து அவ்வவர்கள் முன்னர்கொண்டுவந்திழுதத பண்டங்களெல்லாம்ஒன்று நூறுகவண்டா யின. அவ்வற்புதத்தைக் கண்டவர்களெல்லாம் அதிசய மடைந்தார்கள்.

இப்பால் திரிசிரனும் விரோசனனும் வருமையாற் றளர்ச்சி யடைந்தா ராயினும், அன்பிற் றளர்ச்சியடைதலில்லாத சத்திய சீலர்களாதலால் அவர்கள் மூழுவதும் கடைத்தேறுமாறு தொழு நோய் கொண்டு அருகிருந்து நின்ற அருணகிரான விநாயகக் கடவுளானவர், அவ்வுருவைக்காத்த தமது தெய்வரூபத்தைக்கொண்டு, அழகையுஞ், சகதிரனையுந் தரித்த வடமகுடமும், மழுப்படை, தாமரைமலர், படிகமாலை, ஒற்றைக்கோடு என்னுமிவைகளேந்தாங் கிய நான்கு திருகரங்களும், மூப்பறி நூலணிந்தமார்பும், வேதத் தை இடைவிடாது ஒலித்துக்கொண்டிருக்கின்றசிலம்பணிந்த திருவடிகளும், மணிமுடி, குண்டலம், புயகவசமுதலிய ஆபரணங்களுந் தோன்றும்படியாக அவர்களெதிரே பிரத்தியட்சமாகி நின்றனர். உடனே அவ்விருவர்களுந் திகைத்து அன்பும் அச்சமுங் கொண்டு அளவற்ற புட்பங்களாலருச்சனைசெய்து, அவர் திருவடிகளில் சாஷ்டாங்கமாக வணங்கி, அளவிறந்த தோத்திரங்களைச் செய்து, ஆனந்தக் கூத்தாடி, எண்ணற்ற பிறவிகடோறுஞ் செய்து முற்றியதவத்தினுங் கிடைத்தற்கரிய கிருபாமூர்த்தியே தேவரீர் திருவடிகளே எளிதிற் பெற்றன மாதலால் இனி அடியேங்கள் இப்பிரபஞ்சவாழ்க்கையை வேம்படி ம. தேவரீர் திருவடிநீழலி லிருக்கத்தக்க பேற்றினை யளித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டார்கள். அதற்கு விநாயகக்கடவுள் அருள்கூர்ந்து, அன்பர்களே உங்களுக்கு அந்திய காலத்தில் அவ்வாறே அளிப்போமென்று திருவாய் மலர்ந்தனர். இவ்வாறு அப் * பத்தர்களுடைய வறுமையைநீக்கிப்

---

* பத்தர் சிவனடியாரை வணங்குதல், சிவபூசைத்தொழிலிற் சர்தோஷித்தல், இறைவனேயும் அவனடியாரையும் ஒத்திப்படி அருசரித்தல், தங்களாற் செய்யப்படும் புண்ணியங்க ளனைத்தையும் இறைவன் திருவடிக்கே கொடுத்தல். சிவசரித்திரங்களேயே அன்போடுகேட்டல், இறைவனையே வணங்கி மனம் கெக்குருகி தேகம் நடுக்குற்று உரோமம் புளகிதமாகி ஆனந்தபாஷ்பம் பொழிந்து நாத்தழும்ப பரவசமாதல் எசசெயலினுஞ் சிவசிந்தை மாறுதிருத்தல். பொய்வேட முரைமை, ஆசிய இவ் வெட்டிலக்கணம் நீலபு முடையாரே பத்த ரென்ப.

நும் பாக்கியத்தினை யளித்துத் தமது திருவருளையுங் கடாட்சித் கொண்டிருக்கின்ற சமயத்தில், சனகராச னவன் தனது அரண்மனையிலும், தனதாணைபி டங்கியிருக்கின்ற காணிகர முதலாயுள்ள எல்லாவிடங்களிலும் அளவற்ற செல்வங்கள் அமைந்திருப்பதைகேர்க்கி ஆச்சரிய மடைந்து, கும்மையாசித்தவர்த அந்தணன் ரச்சகனே யாகுமென்று நிச்சயித்து டனே விலாந்தெழுந்து திரிசிரனுடைய மணிக்குட் சென்று, நிருக்கு முதலாயுள்ள சதுர்வேதங்களாலு மறியப்படாத ஈமுகராகியும் அன்பர்களுள்ள மே ஆலயமாக வீற்றிருக்கும் பெருமானுகிய பிரானின்ற விராபக மூர்த்தியை எதிர் கொண்டு * சாஷ்டாங்கமாகப் பணிந்து தெழுந்து, நிழிகளில் ஊற்றெடுத்ததுபோல் ஆனந்த பாஷ்பஞ் சொரிந்து, நெக்குவிட்டு நெஞ்சமுருகிக் கரங்களைச் சிரமேற் கூப்பி,

"அறிவுபோ டடர்ந்தெழுந்த வறியாமைப் பெருவலியாற்
சிறியனே னகம்பிரமஞ் சிந்தித்தபிகத்தாங்கி
மறியுமா பவக்கடலின் மறியாமைக் கரைசேர்க்கு;
நெறியிதா மெனக்காட்டு நின்மலனின் னருள்போற்றி.

நாரதமா முனிவன்தி னவைதீர வுரைத்திட்ட
சீர்தருமம தியாத சிறியேனுங் கரைசேர
வாரதனி யணிந்தபிரான் மதில்கடப்பா வாய்கொடுத்த
வீரதய வாலிங்கு மேவியநின் னருள்போற்றி.

அடியனே னளவன்றி யடியனென் பெருங்கிளையும்
படியிலா நெடும் பொருளும் பதியவரு மவர்பொருளும்
நெடியநீர்க் குளிர்நாடு நின்மலமாய் நினதிருரு
முடிவிலாப் பதஞ்சேர முன்னினைந்த னருள்போற்றி.

திருவியூகா ரணனதியாச் சுடர்மலர்த்தா ளணுகையிடத்
திருகுமனத் தொடுமெதிர்ந்து தெவ்றிசைகோன் பெற்றது
பொருள்பிறழக் கண்டுனது பூங்கழல்பெற் றேனினிநின்
னிருமலரு னந்தெளிய கிகழ்த்துகென விரந்திட்டான்.

அறிவினைப் போன்று மறைத்துக் கொண்டிருந்த அறியாமையால் அகம்பிரமமென்று நினைத்துமிகவுங் கர்வப்பட்டு ஜன்மசாகரத்தில் மூழ்கிப் போம்படியிருந்த அடியேனை அவ்வாறு மூழ்கிப்

* சாஷ்டாங்கம் சிரம், க, கை-உ,, முழந்தான்-உ, மார்பு-க ஆக ஆட அங்கங்களும் பூமியிற் படும்படி வணங்குதலென்ப.

போக வொட்டாமல், கடைத்தேறு மார்க்கம் இதுதென்று காட்டி யருளிய நின்மல மூர்த்தியே தேவரீருடைய கிருபைக்குச் சாஷ்டாங்கநமஸ்காரம், சிவபிராதுக்குத் திரிபுரதகனஞ் செய்யுமாறு கூட்டித்தருளிய ஓ தேவதேவோத்தமரே தேவரீர் திருவடித் தாமரை கட்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் நாரதமுனிவர் கூறிய நன்மார்க்கங்களே சிறிதுமுணராதிருந்த சிறியேனைக் கரைசேர்க்கும வண்ணமெழுந்தருளிய பரஞ்சோதியே தேவரீருடைய பெருங்கருணைக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் அடியேன் மாததிர மன்றி அடியேன் சுற்றத்தார்களும் அடியே னுரைக்கின்ற நாடு நகரங்களும், அவைகளி லுள்ள பதார்த்தங்களும் சுவாமிகளது பாதார விந்தங்களிற்சேரும் படியாகத் திருவுளங்கொண் டெழுந்தருளிய நின்மலமூர்த்தியே தேவரீருடைய கிருபைக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம்.

என்றில்வாறு அனந்த முறை தோத்திரஞ்செய்து கர்த்தனே பிரமனுலும், விண்டுவினுலுந் தேடிக் காணக் கூடாத சிவபெருமானுடைய திருவடிகளே முன்னொருகாலத்தில் எமதருமராசன்எதிர்த்துப்பெற்றதுபோல அடியேன்பரப்பிரமத்தை டாறுபாடாகநினைத்துத்தேவரீருடைய திருவடிகளைபெற்றேன் இனித்தேவரீருடைய நின்மலஞானத்தை அடியேன் தெளியும்படியாக அநுக்கிரகஞ் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தனன், அதற்குக் கர்த்தன் கிருபைசுரந்து அச்சனகராசனதுசித்த பரிபாகத்தை யறிந்து, மீட்டும் அவன் சனனமெடுக்காத மார்க்கத்தினுகுரிய ஆகம நிறைப் படி தீட்சைசெய்து, தயிருளைழுந்த வெண்ணெய்போலத் தக்க முறையா லுபதேசிப்பதாயினர்.

பதி பசு பாச விலக்கணம்.

அரசனே ! பதி, பசு, பாசம் எனமூன்று பொருள்க ளுண்டு, அவற்றுள் ஏகமாகிய நம்மைப் பதியென்றும், அநேகமாகிய ஆன்மாவைப் பசுவென்றும், ஆணவம்-கன்மம்-அசுத்தமாயை-சுத்தமாயை-என்னு மிந்நான்கினையும் * பாசமென்றுங் கூறப்படும். அவற்றுள் பதிக்கு ஒருவருமறிவிக்காமலறிகின்றகுணமும், ஆன்மாவுக்கு அறிவிக்குங்குணமும். அனேகமாகிய பசுவுக்கு அறிவித்தா லறிகின்ற குணமும் பிறருக்கு அறிவிக்கமாட்டாதகுணமுமாம், ஆணவமலத்திற்கு ஆன்மாவேண்டுங் காரியத்தை மறைத்தல், வேண்டாத்

* பாசம், மலம், மாயை, அசுத்தம், அவித்தை என்பன ஒரு பொருட்

காரியத்தில் விருப்பங்கொடுத்தல் புண்ணிய பாவமாகியகன்மமலத்திற்கும் அசுத்தாசுத்தமாகிய மாயா மலத்திற்கும் ஆன்மா ஆணவத்தைப்பொருந்தினல் ஆணவத்தி லழுத்து வித்கின்ற குணமும் பதியைப்பொருந்தினல் பதியில் அழுத்துவித்தல் முதலிய குணமாம். இவ்வாறு பொருளும் வியாபகம், வியாத்தி, வியாப்பியம் யென மூவகையா யிருக்கும். இவற்றுள் வியாபகமாவது நிறைந்திருத்தல் வியாத்தியாவது சமனிறைவாய் இருத்தல், வியாப்பியமாவது அடங்கியிருத்தலாம். அதுதெவவாறெனில் சமுத்திரம வியாபகம் அது போலாகாம். அச்சமுத்திரத்தில தண்ணீர் வியாத்தி அதுபோலாகம் பிடததில் ஆன்மா. அத்தண்ணீரில் உபபு வியாபபியம் அதுபோலும் ஆன்மாவிடத்தில மலமுதலியவைகள்.

பதிபசுபாச மனுபித்தியம,

ஈப்படி இவவாறு பொருளும் ஒன்றிலொன்று கலந்தடங்கியிருப்பதாயினும் அவைகள அனுபித்தியமாகியு மிருப்பன வற்றி எங்கும் வியாபகமாயு மிருக்கின்றன. ஆனல பதிதான் அனுபித்தியம் மற்றைய பசுமுதலியவைகள் எவ்வாறு அனுபித்தியமாமென்னில். சூரியனுள்ளபோதே கண்ணும் அக்கண்ணை மறைத்தஇருளும் அனுபித்தியமேயாம். ஆனல் அவைகள் யெங்நும வியாபகமாயும் இருக்கின்றன வென்றதெவவாறெனில. கண்ணிறந்த கண்களுக்கு ஓராதித்தன் இருந்து அறிவித்தலபோல எலலாப புவனங்களிலும் இருக்கின்ற எண்ணிறந்த ஆன்மாக்க ளுகுமு நாம் ஒருவனிருந்து அறிவித்தலாலும், கண்ணனது சூரியமண்டல முதலிய யெல்லாமண்டலங்களிலும் போக்குவரத் திலலாமல சகல காரியங்களையும் அறிவதுபோல ஆன்மாவானது சகலபுவனங்களிலுமே போக்குவரத்தில்லாமல் எல்லாக்காரியங்களையு மறிதலாலும் இருளொன்று யெண்ணிறந்த ஆன்மாக்களையு மறைததலாலும் பல தானியங்கள் அந்த ஊரில் இருகின் றோர்களுக்கு அங்கங்கே புசிப்பா யிருத்தல் போல பலகன்மங்கள் அந்தந்தப் புவனங்களி லிருக்கின்ற ஆன்மாக்களுக்கு அங்கங்கே புசிப்பாயிருத்தலாலும், சுயவனுனவன் பலபாண்டங்களே அந்தந்த ஊரிலிருக்கின்றோர்களுக்கு அங்கங்கே படைப்பதுபோல அசுத்தாசுத்தமாகிய மாயையானது பலதனு காரணிகளே அந்தந்த புவனங்களி லிருக்கின்ற ஆன்மாக்களுக்கு அங்கங்கே படைத்தலாலும் அவ்வாறுபொருள்களும் வியாபகமென்றே செரல்லப்பட்டன. இப்படி வியாபகமாயிருக்கின்ற ஆறுபொருள்களும் ஒன்றுக்கொன்று யெவ்வாறு சம்பந்தப் பட்டன வெனில்

அநாதியிலே ஆன்மாக்கள் ஆணவ மலத்திற் கிடந்தார்கள். அவ்வாணவமலம் ஆன்மாக்களுக்குக் கன்மத்திலே விருப்பத்தைக்கொடுத்தது, இந்தச்செய்தியை ஈசுவரன் இரக்கத்தினாலே ஆன்மாக்களது விருப்பத்திற்கேற்ற மாயா கருவிகளைக் கொடுத்து அவைகளினிடமாகக் கன்மங்களைப் புசிப்பிப்போம். அநாதியிலே ககல லோகங்களும் உண்டாகின்ற முறைமை இவ்வாறாகும்.

மாயை யுறபவம்.

அநாதியில் ஆன்மாக்கள் ஆணவமலத்திற் கிடந்தன என்றால், அவர்கட்கு அவ்வாணவமலத்தை நாம் கூட்டிவைத்தோமா, அதுதானே வந்து பொருந்திற்றோவெனில், நாம் நின்மலனாகிய சர்வாதீனகிரகனதலாலே நாம் கூட்டிவைத்ததன்று ஆணவ மலஞ் சடமாதலால் தானேவந்து பொருந்தமாட்டாது, ஆதலால் ஆன்மாக்களே ஆணவமலத்தைப் பிடித்தன என்றறிக.

மாயை கற்பிதம்.

ஆனால் ஆன்மாக்களுக்கு ஆணவமலம் இயற்கையோ செயற்கையோவெனில், இயற்கையானால் பாலுக்கு வெண்மையுங் கரிக்குக் கருமையும் ஒருக்காலும்விட்டு நீங்காததுபோல ஆன்மாக்களுக்கு ஆணவமலம் ஒருக்காலும்விட்டு நீங்காதது. செயற்கையானால், வெள்ளை வத்திராதில் அழுக்கேறுவதை போல முத்தியிலும் வந்துப் பொருந்தும், ஆதலால் இரண்டு மன்று. செல்லுக் குமியுபூ செம்புக்குக் களிம்பும், கடல்நீருக்கு உப்பும்போல, ஆன்மாக்களுக்கு ஆணவமலம் அநாதி செயற்கையென்றும் அநாதி சையோக மென்றுஞ் சொல்லப்படும்.

ஆன்மாக்கள் சுதந்தர வீனர்களா யிருத்தலால் நமக்குண்டாகிய செய்தி அவர்கட் குண்டோவெனில வேதாகமங்களிலே விதிவிலக்கும, அவர்கட்கு நரகமோக்கமு முண்டா யிருத்தலினாலே செய்தியுண்டு, ஆனால் ஆன்மாக்களுக்குக் கன்மத்தில் உண்டாகிய விருப்பமோ, ஆன்மாக்களுக் குண்டாகிய விருப்பமோ வெனில் நாம் கொடுத்த விருப்பமானால் ஏன் பாவத்தைச்செய்தி சென்று நரகத்திலிட்டுத் தண்டிக்க வேண்டிவ தில்லை. ஆன்மாக்களுக் குண்டாகிய விருப்பமானால், புண்ணியங்களிருக்கப் பாவங்களைச் செய்யார்கள். ஆதலால் ஆணவமலமே ஆன்மாக்களுக்குக் கன்மத்திலே விருப்பத்தைக்கொடுத்தது. ஆணவமலமும் ஆன்மாக்களுக்குக் கன்மத்தை யறிந்தெடுத்துக் கொடுக்கமாட்டாது. விரும்பிய ஆன்மாக்

களுங் கன்மத்தையறிந் தெடுத்தக்கொண்டு புசிக்க மாட்டார்கள். விரும்பப்பட்ட கன்மமும் ஆன்மாக்களே யறிந்துவந்து பொருந்த மாட்டாது. இந்தச் செய்தியை நாமறிந்து இரக்கத்தினாலே அவ் வான்மாக்கள் கன்மத்திக் கேற்ற * கனிவைக் கொடுத்து அத்த னிவி னிடமாக அக்கன்மத்தைக் கூட்டிப்புசிப்பிப்போம் அஃதெவ் வாறெனில்.

க-வது உபமானம்.

குழந்தைக்குப் பாலின்கணுண்டாகிய விருப்பம் தாய்கொடுத்த விருப்பமோ? குழந்தைக்குண்டாகிய விருப்பமோ வெனில்.—தாய் கொடுத்த விருப்பமானுல் அவள்கொடுகின்ற போதெலாம்பாலே யருந்தல் வேண்டும். குழந்தைக்குண்டாகிய விருப்பமானுல், மார் தங்கொண்ட வேளையினுமாறு தருந்தல் வேண்டும். இவ்விரண்டு மின்மையால், பசியே குழந்தைக்குப் பாலின்கண் விருப்பத்தைக் கொடுத்தது. விருப்பத்தைக் கொடுத்த பசியும், பாலையறிந் தெடுத் தக்கொடுக்கமாட்டாது. விரும்பிய குழந்தையும் பாலையறிந்தெடுத் தக் குடிக்கமாட்டாது. விரும்பப்பட்டபாலுங் குழந்தை வாயில் வந்தபுகுதமாட்டாது. இந்தச்செய்தியைத தாயானவள் அறிந்து, இரக்கத்தினுலே பாலையெடுத்துப் பாலடையிலிட்டுக் குழந்தைவா யிலே வைத்துப் புகட்டுவள். இவற்றுள, குழந்தையைப்போலும் ஆணவமலம், பாலைப்போலும் கன்ம மலம், தாயைப்போலு ஈசம், பாலடையைப்போலுந் தனு எனவறிக.

உவது உபமானம்.

அன்றியும் குருடனுக்கு கோலின்க ணுண்டாகிய இச்சை, கோல் கொடுத்திழுக்கின்றவ னிச்சையோ? குருடனுக்குண்டாகிய இச்சையோ எனில்,—கோல்கொடுத்து இழுக்கின்றவன் இச்சை யானுல் அவன்கொடுக்கின்ற நேரமெல்லாங் கோலைப் பிடித்தல் வே ண்டும், குருடனுக்கு உண்டாகிய இச்சையானுல் எப்போதும் கோ லைப்பிடித்தக்கொண்டே யிருத்தல் வேண்டும், இரண்டு மின்மை யால், குருடே குருடனுக்குக் கோலின்கண் இச்சையைக் கொடுத் தது, இச்சையைக் கொடுத்த குருடுங்கோலை அறிந்து எடுத்துக் கொள்ளமாட்டாது; இச்சித்த குருடனுங்கோலை அறிந்து எடுத்துக் கொள்ளமாட்டான்; இச்சிக்கப்பட்ட கோலுங் குருடன் கையில் வந்து பொருந்தமாட்டாது; இந்தச்செய்தியைஅவனுக்குரிமையா

* தனு-தேகம்.

யுள்ளவனறிந்து இரக்கத்தினுலே கோலியெடுத்து அவன் கையிற் றந்து அவன் நினைத்த இடத்திற் கொண்டுபோய் விடுவன். இவற் றுள் குருடனைப்போலும் ஆன்மா; குருடைப்போலும் ஆணவமலம் கோலிப்போலும் சரீரம், கோல்கொடுத்திழுக்கின்றவனைப்போலும் நாம்; இடத்தைப்போலும் புவனம்எனவறிக.

கூ-வது உபமானம்

ஆணவமலஞ் சடமாயிருத்தலால் அதற்குச்செய்தி யுண்டோ வெனில்;—விஷம், பாஷாணம், தீ,நீர்,காற்றுமுதலியஜடங்கட்குச் செய்தி யுண்டானறிபோல, அதற்குச் செய்தியுண்டு. ஆனல் நாம் ஆன்மாக்களுக்குத் தனக்களைப் படைக்கு மிடத்துமதி நினைவின் படி படைப்போமோ? ஆன்மாக்கள் நினைவின்படி படைப்போமோ வெனில்; ஒரேவடிவன்றிப்பல வடிவங்களாகப் படைத்தலால்,ஆன் மாக்களது நினைவின்படியே படைப்போம் அஃதெவ்வா றெனில் குலாலன்பாண்டங்கள் வேண்டியிடத்தத் தனது நினைவின்படிவேண வரேனு பிறர் நினைவின்படி வேண்டாரேனு வெனில்; தனது நினைவின் படி வேண்டானபின் ஒரேவடிவாக வேனதல் வேண்டும், அவ்வாறின் றிப் பலவடிவங்களாய் வேனதலால் பிறர் நினைவின்படியேவேண்டான் இவற்றுள் குலாலனைப்போலும் நாம், மண்ணைப்போலும், மாயை பாண்டத்தைப் போலுந் தனு பிறரைப்போலும் ஆன்மாக்களென வறிக.

ச-வது உபமானம்.

ஆன்மாக்கள் எங்கும் வியாபகராயிருக்க, எவ்வாறு சரீரத் தைப் பற்றுவரெனில்: படிகமலியானது எக்கப்புறத்தில் வண்ணத் தைக் கொடுத்தாலும் பற்றிக்கொள்வதுபோல, எல்லாப் புவனங் களிலும் வியாபகராபிருக்கின்ற ஆன்மாக்கள் நாம்எக்கப்புவனத்தி லே சரீரத்தைக்கொடுத்தாலும் பறறிக்கொள்ளுவர், அஃதெவ்வா றெனில்? படிகமலியொன்று, படிகமலிக் கொளியொன்று, படிக வொளிக்குப் பற்றுங்குணமொன்று, படிகவொளிக்குப் பற்றுந் தொழி லொன்று, வண்ணமொன்று, வண்ணத்தைப்பற்றுகின்ற வனென்று, ஆக அறுவகைப்படும், இவற்றுள் படிகமலியைப்போ லும் ஆன்மா, படிகமலிக் கொளிபோலும் ஆன்மபோதம், படிக வொளிக்குப் பற்றுங் குணம்போலும் ஆன்மபோதத்திற்குஅறியுங் குணம், படிகவொளிக்குப் பற்றுந்தொழில்போலும் ஆன்மபோ தத்திற்கு அரியுந்தொழில், வண்ணத்தைப் போலும் மாயாகாரி யவண்ணத்தைப் பற்றுகின்றவனைப்போலும் நாம் என்றவறிக.

ஆன்மா மலமாதியால் மறைவுபடும் வகை.

ஆன்மாக்களுக்கு அறியுங்குண மிருத்தலினாலே அவர்களை மல மெல்லாறு மறைக்குமெனில் சந்திராதித்தர்களை இராகு கேதுக்கள் மறைப்பதுபோலும். கொருப்பை நீர்மறைப்பதுபோலும், ஆகாயத்தை மேமறைப்பது போலும், ஆன்மாக்களை ஆணவமிருள் மறைக்கும். இம்மறைப்புத்தான் ஆன்மாக்களுக்கு வருவான் எனினில் அவர்கள் கன்மத்தால் வந்தது. ஆதலி ஆன்மாக்கள் அவயவமின்றி நிரவயவராயிருக்க அக்கன்மந்தான் எவ்வாறு வந்தெனில், நரம் நிரவயவ ரென்பதை மறாதவயவர் நரமென்னுங்கருத்தால் அக்கன்மம்வந்தது. அக்கன்மத்தால் மாயை யுண்டாயது. அம்மாயையால் தனுகரண புவனபோகங்கள் உண்டாயின.

இறைவன் ஆன்மாக்களுக்கு கன்மங்களைப் புசிப்பிக்கு முறைமை

நாம் ஆன்மாக்களுக்கு அக்கன்மங்களைப் புசிப்பிக்கு மிடத்து எவ்வண்ணமாயிருந்து புசிப்பிப்போமெனில் இச்சா ஞானக் கிரியா சொரூபனுயிருந்து புசிப்பிப்போம். அருதெவ்வா றெனில், ஆன்மாக்களை முத்தியிற் சேர்க்க வேண்டுமென்பதே இச்சை. ஆன்மாக்கள் இச்சித்த கன்மங்களை யறிவதே ஞானம். ஆன்மாக்களுக்கு அக்கன்மங்களை யூட்டி யுறக்கித் தொலைபடித்தலே கிரியை எனவறிக. ஆனல் ஆன்மாக்கள் அக்கன்மங்களைப் புசிக்குமிடத்து எவ்வாறிருந்து புசிப்பரெனில், இச்சா ஞானக்கிரியா சொரூபராயிருந்து புசிப்பர். அருதெவ்வாறெனில் பண்ட பதார்த்தங்களிற சென்று பற்றுதலே இச்சை. அவைகளைப் பகுத்தாராய்தலே ஞானம் சர்வத்தையுந் தனதென் றழுந்துதலே கிரியை யெனவறிக.

கன்மவகை.

ஆன்மாக்களுடைய கன்மமெத்தனை வகையாயிருக்குமெனில், தூலகன்மம, சூட்சுமகன்மம், அதிசூட்சுமகன்மம், எனமூவகையாயிருக்கும். இவற்றுள் வினைகளுகெல்லாந் தூலகன்மமென்றும், அவ்வினைகளுக்குப் பின்பலனுக வருகின்ற புண்ணிய பாவக்கட்கெல்லாஞ் சூக்குமகன்மமென்றும், இப்புண்ணிய பாவங்களுக்குப் பின்பலனுகவருகின்ற இன்ப துன்பங்களுக்கு அதிசூக்குமகன்மமென்றும்பெயர். இம்மூன்றும் ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்துவமென்னு மூவகையாயிருக்கின்றன. அவை யெவ்வாறெனில் இரு வினை

அவத்தை மூன்று.

ஆன்மாக்கள் எக்காலத்தினும் பிரபஞ்ச சையோகராதலால் அவ்வான் மாக்கட்கவத்தையேதெனு முண்டோவெனில். கேவலம் சகலம், சுத்தம் என மூன்று அவத்தை யுண்டு. இம்மூன்றும் காரணம், காரியம் என இருவகைப்படும். இவற்றுள் காரண கேவலமாவது. அநாதியிலே ஆன்மாக்கள் அறிவு கெடாமல் ஆணவமலத்தில் அமுந்திக்கிடத்தல்? அஃது எவ்வாறெனில், கண்ணானது இராக்காலத்து இருளிலே ஒளி கெடாமல் விழித்திருத்தல்போலும் காரிய கேவலமாவது, நெற்றி, கண்டம், இதயம், நாபி, மூலம்என்னும் ஐந்திடத்தினும் சாக்கிரம,சொப்பனம், சுழித்தி, துரியம்,துரியாதீதம் என்னும் கீழாலவத்தை ஐந்தையும் அடைதல் காரண சகலமாவது. அநாதிகேவலத்திலே அமுந்திக்கிடந்த ஆன்மாக்கள் மாயா கருவிகளினுலே அக்கேவலம் நீங்கிச் சுத்தக்கங்களை அறிதல், அருகு எவ்வாறெனில். இராக்காலத்து இருளிலே அமுந்திக்கிடந்த கண்ணானது விளக்கினுலே இருள் நீங்கிப் பதார்த்தங்களைக் காணுதல் போலும் காரியசகலமாவது. இலாடத்தானத்திற்றுனே துரியாதீத முதல் சாக்கிர மீறுயுள்ள மத்தியாலவத்தை ஐந்தையும் அடைதல். காரண சுத்தமாவது. அனுதி கேவலத்தினும், சகலத்தினும், அமுந்திக் கிடந்த ஆன்மாக்கள் அருட்டெரி சனத்தினுல் அவைகளை விட்டுநீங்கிப் பிரமானந்தத்தை அனுபவித்தல், அஃதெவ்வாறெனில், இராக்காலத்தஇருளோடும் விளக்கோடும் கூடியிருந்த கண்ணானது ஆதித்த தையஞ்செய்ஞவிடத்து அவைகளை விட்டு நீங்கி அவ்வாதித்தனைக் கண்டுகொண்டிருத்தல் போலும். காரியசுத்தமாவது சின்மல சாக்கிரமுதல் சன்மலதுரியாதீத மீறுயுள்ள மேலாலவத்தை ஐந்தையு மடைதல் எனவறிக.

பஞ்சகிருத்திகமும் ஆன்மாவிற்கே.

நாம் செய்கின்ற பஞ்சகிருத்தியங்கள் இவ் வான்மாக்களுக்கோ? சரீரங்களுக்கோ வெனில், ஆன்மாக்கள் நித்தியர்தலால் கிருட்டி, திதி, சங்காரம்கூடாது. சரீரம் சடமாதலால் திரோபவமும் அனுக்கிரகமும் கூடாது இனிஅச்சரீரங்கள் முத்தொழிற்பயிடத்து அதில்ஆன்மாக்கள் அமுந்துவதினுலும், ஆன்மாக்களினுடைய இரண்டுதொழில் சரீரங்கட்கில்லாமையினுலும், பஞ்சகிருத்தியமும் ஆன்மாக்களுக்கேயாம்.

தால் மேலீக்கு வராமல் நீங்கிப்போய் விடும். இவ்வாறே சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என்னும்மூவகைக் கன்மங்களு மொழியு முறைமை யெனவறிக.

கன்மங்களை ஆன்மாக்களது விருப்பத்திற் கேற்கபுசிப்பிக்கின் றவன் நாமாயிருக்க, ஆன்மாக்களுக்கு முதன்மை எவ்வாறுகற்பிக் கப்படுமெனில். ஆன்மாக்களுக்குக் கன்மத்தின்கண்விருப்பமிருக்க நாம்சொற்கத்திற்கு வாவென்றழைத்தால் வருவரல்லர், ஆதலால் அவ்வான்மாக்கள் பெத்தகாலத்தில் ஆணவமலத்திலழுந்திக் கிடக் கும்போது தாஞ் சற்றுந தோன்றுமல் அதன் மயமாயிருப்பது போல, முத்திகாலத்தில் நம்மிடதிலழுந்தி நமதமயமாய்க் கிடக் கையால் பெத்தத்தில் ஆன்மாக்களும முத்தியில்நாமு முதன்மை யெனவறிக.

ஆன்மாக்களிடத் திறைவ னிருக்கை.

பெத்தான்மாக் களிடதிலும, முததான்மாக்க ளிடத்திலும் நாமெவ்வாறிருப்போமெனில். பெததான்மாக்க ளிடத்தில் பாலுக் குள் நெய்போலவும், முத்தான் மாக்களிடத்தில் தயிருள் வெண் ணெய்போலவும் இருப்போம்.

ஆன்மாக்கள் தனித்தவரல்லர்.

ஆன்மாக்கள் எக்காலத்தும தனித்திருப்ப தில்லையோவெனில் கண்ணுனை ஒருக்கால் இருளோடுங்கூடி யிருப்பதன்றி எக்காலத் தினும் தனித்திராததுபோல், ஆன்மாக்க ளெல்லாம் ஒருக்கால் மலத்திலேயும் ஒருக்கால் நம்மிடத்திலேயுங் கூடியிருப்பதன்றி எக் காலத்தினும் தனித்திரார்கள்.

ஒளியு மிருளும் ஓரிடத்திற் கூடியிராததுபோல அவ்வான்மா க்களிடத்தில் ஆணவ மலமும் யாமுங் கூடி யிருத்தல் கூடாதேயெ னில். ஒருமரத்தில் அடிதொட்டு நுனிபரியநதம் இரசமும் அக்கினி யுங்கூடியிருத்தல்போலயாமும் அவான்மாக்களைக்கூடியிருப்போம்.

இறைவன் தக்கமற்றவர்.

ஆன்மாக்கள் நறகத்திற் துன்பங்களை அனுபவிக்கு மிடத்து அவர்களை நீங்காதநமக்கும் துன்பம் உண்டோ வெனில், ஆதித்த னொளி படிக வொளியிற் கலந்து நின்றவர்னங்களைப் பற்றுவித்துந் தான்பற்றுதவாறுபோலவும், ஒருவனனுபவிக்கின்றதுன்பம்அவன் வயிற்றிற் கிடக்குங்கிருமிகட்கில்லாததுபோலவும் நமக் கொருக் காது மில்லை.

அவத்தை மூன்று.

ஆன்மாக்கள் எக்காலத்தினும் பிரபஞ்ச சையோகராதலால் அவ்வான் மாக்கட்கவத்தையேதேனு முண்டோவெனில், கேவலம் சகலம், சுத்தம் என மூன்று அவத்தை யுண்டு. இம்மூன்றும் காரணம், காரியம் என இருவகைப்படும். இவற்றுள் காரண கேவல மாவது. அநாதியிலே ஆன்மாக்கள் அறிவு கெடாமல் ஆணவ மலத்தில் அமுந்திக்கிடத்தல்? அஃது எவ்வாறெனில், கண்ணனது இராக்காலத்து இருளிலே ஒளி கெடாமல் விழித்திருத்தல்போலும் காரிய கேவலமாவது, நெற்றி, கண்டம், இதயம், நாபி, மூலம்என்னும் ஐந்திடத்தினும் சாக்கிரம,சொப்பனம், சுழித்தி, துரியம்,துரியாதீதம் என்னும் கீழாலவத்தை ஐந்தையும் அடைதல் காரண சகலமாவது. அநாதிகேவலத்திலே அமுந்திக்கிடந்த ஆன்மாக்கள் மாயா கருவிகளினுலே அக்கேவலம் நீங்கிச் சுத்தக்கங்களே அறிதல், அகுது எவ்வாறெனில். இராக்காலத்து இருளிலே அமுந்திக் கிடந்த கண்ணனது விளக்கினுலே இருள் நீங்கப் பதார்த்தங்களைக் காணுதல் போலும் காரியசகலமாவது. இலாடத்தானத்திற்றுனே துரியாதீத முதல் சாக்கிர மீறுயுள்ள மத்திய லவத்தை ஐந்தையும் அடைதல். காரண சுத்தமாவது. அனாதி கேவலத்தினும், சகலத்தினும், அமுந்திக் கிடந்த ஆன்மாக்கள் அருட்டெரி சனத்தினுல் அவைகளை விட்டுநீங்கிப் பிரமானந்தத்தை அனுபவித்தல், அஃதெவ்வாறெனில், இராக்காலத்திருளோடும் விளக்கோடும் கூடியிருந்த கண்ணனது ஆதித்த தையஞ்செய்தவிடத்து அவைகளை விட்டு நீங்கி அவ்வாதித்தனைக் கண்டுகொண்டிருத்தல் போலும். காரியசுத்தமாவது சின்மல சாக்கிரமுதல் சன்மலதுரியாதீத மீறுயுள்ள மேலாலவத்தை ஐந்தையு மடைதல் எனவறிக.

பஞ்சகிருத்திகமும் ஆன்மாவிற்கே.

நாம் செய்கின்ற பஞ்சகிருத்தியங்கள் இவ் வான்மாக்களுக்கோ? சரீரங்களுக்கோ வெனில், ஆன்மாக்கள் நித்தியராதலால் சிருட்டி, திதி, சங்காரம்கூடாது. சரீரம் சடமாதலால் திரோபவமும் அனுக்கிரகமும் கூடாது இனிஅச்சரீரங்கள் முத்தொழிற்படிமிடத்து அதில்ஆன்மாக்கள் அமுந்துவதினுலும், ஆன்மாக்களினுடைய இரண்டுதொழில் சரீரங்கட்கில்லாமையினுலும், பஞ்சகிருத்தியமும் ஆன்மாக்களுக்கேயாம்.

இறைவனே ஆன்மாக்களிடத்து பஞ்சகிருத்தியத்தைநடத்துவன்.

ஈசன் பஞ்சகிருத்தியத்தை ஆன்மாக்களிடத்தில் நடத்துவது எவ்வாறெனில். இவர்கட்கு மாயா கருவிகளைப் படைத்து அறிவை உண்டாக்குவதே சிருஷ்டி. அவர்கட்கு மாயாகருவிகளை நிறுத்தி அறிவைகிலேபெறச் செய்வதே திதி. அவர்கட்கு மாயா கருவிகளை ஒடுக்கி அறிவைப் போக்குவதே சங்காரம், அவர்களுடையஅறியுந் தொழில்களை அருளைக்கொண்டுமலசத்திகளால் மறைப்பித்து அவ் வவர்கள் கன்மங்களைத் தக்கபடி நிறுத்தலே திரோபவம், அவர் களுக்கு இன்பதுன்பங்களைப் புசிப்பித்துப்புண்ணிய பாவங்களா கிய வினைகளை யறுத்தலே அனுக்கிரகம் என அறிக.

ஆன்மாக்கள் பஞ்சகிருத்தியப்படும்வகை.

ஆன்மாக்கள் அப் பஞ்சகிருத்தியப்படுத லெவ்வாறெனில் அவர்கள் அறியுந்தொழிலே சிருஷ்டி, அவர்கள் அறியுந்தொழிலில் நிலைநிற்றலே திதி, அவர்கள் அறியுந் தொழில் நீங்கலே சங்காரம் அவர்கட்கு அறியுந்தொழில் நீங்கு மிடத்துள்ள அறியாமையே திரோபவம், அவர்கள் இன்பதுன்பங்களைப் புசித்துப் புண்ணிய பாவங்களைக் கழித்தலே அனுக்கிரகம் என அறிக.

பிறப்பிறப்பும் மோக்கநரகமும்.

நமது பஞ்சகிருத்தியமும், அவற்றில் ஆன்மாக்கள் படுதலும் இவ்வாறுகியிருக்க. அவர்கள் பிறந்தார், இறந்தார், நரகமுற்றார், மோக்ஷ மடைந்தார் னன்று வேத ஆகமங்களிற் கூறுகின்ற தெவ் வாற்று லெனில், ஆன்மாக்கள் மாயா கருவிகளைப்பற்றி.யறிந்திருத் தலே பிறப்பு, அம்மாயாகருவிகளை நீங்கி அறியாதிருத்தலேஇறப் பு, ஆபாசமுற்றிருத்தலே நரகம், அநாயாச முற்றிருத்தலேமோக் கம் என அறிக.

ஆன்மபோத வொழிபே முத்தி.

ஆன்மாக்கள் மோக்ஷ மடையுமிடத்துக் கெட்டுக் கூடுவரோ கெடாது கூடுவரோ வெனில் கெட்டால் கூடத்தக்கதே யில்லை கெடாதிருந்தாற் கூடவே மாட்டார்கள். ஆதலால், ஆன்மாகெடா மல் விடயத்திற்செல்லும். அவ்வான்மபோதம் நிகழ்ச்சி கெட்டுக் கூடுமென் றறிக.

மலகை ஆன்மாக்கள்.

அவ் வான்மாக்கள் அனந்தரா யிருப்பதனால் அவர்களுக்குள் பேதமுண்டோவெனில். விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகல

மூன்று பேதங்களாயிருக்கின்றனர். இவற்றுள். ஆணவமலம் ஒன்றுடன் கூடியிருக்கின்ற ஆன்மாக்களுக்கு விஞ்ஞானகலர் என்றும் ஆணவமலம், கன்மமலம் என்னும் இவ்விரண்டோடுங் கூடியிருக்கின்ற ஆனமாக்களுக்குப் பிரளயாகலர்என்றும்;ஆணவமலம்,கன்மமலம், மாயாமலம் என்னும் இம்மூன்றோடுங் கூடியிருக்கின்ற ஆன்மாக்களுக்குச் சகலரென்றுஞ் சொல்லப்படும்.

இறைவனன்மாக்களே யாட்கொள்ளும்வகை.

மூவகையான் மாக்களையும் நாமாட்கொள்வ தெவ்வாறெனில் விஞ்ஞான் கலருக்கு ஒளியுருவாயும், பிரளயாகலருக்குத் தேவவுருவாயும், சகலருக்குமனிதவுருவாயுமிருந்தாட்கொள்வோம்.ஆனால் ஆன்மாக்களுக்கு மலப்பிணியினால் சரீரங்கள் உண்டாயின நின்மலனாகிய நமக்குண்டாவதற்குக் காரணமென்னவெனில். பிள்ளைக்குப் பித்தமுண்டானால் அப்பித்தத்தைத் தீர்க்கவேண்டுமென்று பிதாவுக்கு ஆசைப்பிணியுண்டானற்போல, ஆன்மாக்களுக்குள்ள மலப்பிணியை நீக்கவேண்டிநமக்கு ஆசைப்பிணி யுண்டாயது அதனால் சரீரங்கள் உண்டாயின.

ஆன்மாக்களுக்கு மலப்பிணியை எவ்வாறுநீக்குவோ மெனில் அவர்கட்கு இருவினையொப்பு வந்தகாலத்து வண்ணன் வத்திரத்தி லுள்ள அழுக்கை உழமண்ணைக் கொண்டு நீக்குவதுபோல மாயா கருவிகளைக்கொண்டு நீக்குவோம்.

இருவினையொப்பு.

இருவினையொப்ப பாவதியாதெனில். ஒருவன்தான் * விரும்பப்பட்ட பதார்த்தங்களையும், வெறுக்கப்பட்ட பதார்த்தங்களையுங் கண்டால்விருப்பும் வெறுப்புமற்றபதார்த்தங்களை கண்டாற்போல நல்வினைப்பயனுந் தீவினைப்பயனும்வந்தால் அவ்விரண்டினிடத்தும் விருப்பு வெறுப்பின்றிநிற்றல்;அதுதெவ்வாறெனில், ஒருவன்வைப் பாட்டியிடத்திற் சிறிதுநாளும்மனையாட்டியிடத்திற், சிறிதுநாளாகக் காலங்கழித்து வருகையில் இல்லறநூல் கேட்டவிடத்து வைப்பாட்டியை விடுத்து மனையாட்டியோடு வாழ்வதே சரியென்றும். துறவறநூல் கேட்டவிடத்து அம்மனையாட்டியும் பாசபந்தத்திற் கேதுவாகலான் அவளையும்விடுத்துத் துறவுபூண்பதே சரியென்றும்

* விரும்பப்பட்ட பதார்த்தங்கள்-பொன்-வெள்ளி-முதலாயின.வெறுக்கப்பட்ட பதார்த்தங்கள்-தரித்திரம்-வியாதி-முதலாயின. விருப்பும்வெறுப்பு பதார்த்தங்கள்.—திரணம், புதர்முதலியன.

கண்டு, பின்னர் அவ்விருவரிடத்தும்விருப்பு வெறுப்பற்றதுபோல், ஒருவன் பாவமும் புண்ணியமுஞ்செய்து வருகையில் அறநூல்கேட்ட விடத்துப் பாவத்தைநீக்கி புண்ணியஞ் செய்வதே சரியென்றும், ஞானநூல்கேட்ட விடத்து அப்புண்ணியமுஞ் சனனமரணத்திற் கேதுவாகலாய் அதனை விடுத்து ஞானத்தை யடைவதேசரியென்றுங்கண்டு, பின்னர்இரண்டினிடத்தும் விருப்பு வெறுப்பின்றி நிற்றலே இருவினையொப்பென்றறிக.

மலநிவர்த்திக்குக்காரணம் சிவபுண்ணியம்.

இருவினை யொப்பின்கணுண்டாகின்ற மலநிவர்த்திக்குக் காரணம்யாதெனில். அநாதிதொடுத்து மோட்சபரியந்தம் ஆன்மாக்களாலுண்டாகின்ற சிவபுண்ணியங்களாம்.

சிவபுண்ணியங்கள்.

அவைகள். புத்தி பூர்வ சிவபுண்ணியம், உபாயசரிதை, உபாயகிரியை உபாயயோகம், உபாயஞானம், உண்மைச்சரிதை, உண்மைக்கிரியை, உண்மையோகம், உண்மைஞானம், எனப்பத்து விதமாயிருக்கின்றன. இவற்றுள் மூன்றினொன்பதும் மலகிலே அவைகள் ஆன்மாக்களால் செய்யப்படுவன. பிறந்தொன்று அருணிலே. அஃதாவது தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி; ஆத்மரூபம், ஆத்மதரிசனம், ஆத்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் எனப் பத்துவிதமாயிருக்கும.

வருவா.

இந்தப்பத்தையும் பரிபக்குவனனவனுக்கு ஞானாசாரியராக எழுந்தருளி சுத்தாவத்தையின் காரியமாகிய நின்மலசாக்கிரமுதலாயுள்ள ஐந்தவத்தைகளிலடக்கி அந்த உண்மைஞானத்தை யறிவிப்போம். இவ்வாறு அளவற்றகாலம் ஆணவமலத்தினுள்மறைபட்டிருந்த ஆன்மாக்களை முத்தியில் விடவேண்டுமென்று கடல் போன்ற பெருங்கருணையினாலே திருமேனிகொண்டு அவர்களுக்கு அவ்வாணவவிருளினின்று மெடுத்து விஞ்ஞானகலர் முதலியமூன்று வகையாகத் தொகுத்தும், தனுமுதலியமாயாகருவிகளைக்கொடுத்து அவைகளினிடமாக கல்வினை, நீவினையென்னு மிருவகை வினைகளை யூட்டி, அவ்விருவினை யொப்பில்மலபரிபாகமுண்டாக்கி, முத்தியிற் சேர்ப்பவனுகிய சர்வஜ்ஞன் ஞானாசிரியனாயிருக்கின்றோம்.

ஏ ஜனகனே அறிவித்தாலன்றிச் சுதாவில் ஒன்றையுமறிவதற்கில்லாத சிஞ்சிஞ்ஞனைய நீயோபிரமமாவாய்? பிரமம்நீயே யெ

ணுபயாகிஸ்சந்திராசூரியர்கட்சத்திரங்கள், மேகங்கள், சமுத்திரங்கள் மலைகள், காடுகள், பஞ்சபூதங்கள் முதலான பாவையும் உன்னல் ஏன் உண்டாக்கக்கூடாது? உனகருப்புலன்களேதுக்கு? சாக்கிராதி அலை ஐதகளேன்? நீவிரும்பியவண்ணம் விணைப்போகங்கள் சித்தி பாத காரணமென்ன? உனக்குவிணைப்பு மறப்புகள் எங்ஙனமிருந் தெதித்தன? அவனன்றி ஒணுவுமசையாது என்று சகலசாத்திரத் தாலும் உலகத்தாராலுஞ் சொல்லுகின்ற பழமொழியை யேனுங் கேட்டதில்லையோ? மேலும், சகதிசூரியர்முதலிய கிரகங்கள் தத்த முறைப்படி ஆகாயத்திற் சுழன்று உலாவுதலினுலும், மேகமானது சமுத்திர நீரையுண்டு பூரிபிற பொழிதலினுலும், அக்கினியுங் காற் றும் அளவுமீறி யுண்டாகாமையினுலும, கார்முதலிய அறுவகைக் காலங்கள் முறைதவறுமல் வருகையினுலும், பாமபுமுதலிய துஷ்ட ஜெந்துக்கள் மத்திரத்தினுல சமாதலினுலும், எலலா வுயிர்களும் பரம்பரைமாறுமல் வருதலினுலும, சுக்கிலமும், சுரோணிதமுங்கூடி ஒருவருஞ்செய்யாமல சுகுவாய்ப்பிறத்தலினுலும். ஆணமுதலியசக லஜெந்துக்களுமு ஆணும்பெண்ணுங கூடினல் அநதந்த ரூபங்கொ ண்டு உற்பத்தியாவதினுலும் சிலவுயிர்கள் ஆணும்பெண்ணுங்கூடா மலே உண்டாகையினுலும, வித்தினைவருக்கசப்படி விருட்சமுதலிய வைகள்முளைப்பதினுலும், ஆன்மாக்களெல்லாம்ஒருபடித்தாயிராம லிலர் இந்திரியபங்கமுடையவர்களாயும், சிலர்அவயவபங்கமுடை யவர்களாயும், சிலர் சுகமுறறவர்களாயும,சிலர்தக்கமுற்றவர்களா யும், சிலர் செலவமடைநதவர்களாயும், சிலர் வறுமை யடைந்தவர் களாயும் சிலர் அறிவுளளவர்களாயும், சிலர் அறிவில்லாதவர்களா யும், சிலர் புண்ணியஞ செய்தவர்களாயுமு. சிலர்பாவஞ்செய்தவர்க ளாயு பிருத்தலினுலும், ஈவனாயி லென்னுமு ஒன்பதுவழியுடன்பின் னுமொருவழி யுண்டாக்கிக் கொண்டு உடலில் உயிர்வாசஞ்செய்யக் கூடாமையினுலும், ஒருமுப்பு நீங்கினல் அதனீ உடனே உயிர்கள் உண்டாகிக் கொள்ள மாட்டாமையினுலும், ஆண்குழவி வேண்டு நர்க்குப் பெண்குழவி பிறத்தலினுலும், பெண்குழவி வேண்டுநர்க்கு ஆண்குழவி பிறத்தலினுலும், இவ்விரண்டிலொன்று வேண்டுநர்க்கு அலிக்குழவி பிறத்தலினுலும், எதையும்வேண்டாதவர்க்கு எண் ணறற குழவிகளுண்டாதலினுலும், ஒருவனொருவன் வெட்டும் போது மற்றொருவன்வந்து விடுவித்தலினுலும், சிலர்மாற்றுருப்பு பங்கு மறைநதிருத்தலினுலும் சிலர் அம்மாற்றுர் கரத்திலகப்பட்டு மயங்குதலினுலும், கித்தியமாயிருக்கவேண்டுகின்ற சங்கமங்களெல்

ஸ்ரம் விரைவில் இறத்தலினலும் அதைவேண்டத்தக்க விவேகமில் லாத தாபரங்களெல்லாம் அழிவில்லாமல் நீடித்திருத்தலினலும் உ யிர்கள் தமது முற்சனனத்தையும் வருஞ் சனனத்தையும் அறிந்து கொள்ளக் கூடாமையினலும் இவைகட்கெல்லாந் தற்சுதந்தரமா க யாமொரு கடவுளிருக்கின்றோமென்று உறுதியா யறிந்துகொ ள்ளக்கடவை, அன்றி நாமேதான் எவ்வளவேனுந் தற்சுதந்தரமில் லாமல் அளவற்ற பேதமாயுள்ள ஆன்மாக்கள் செய்த நல்வினை தீ வினைகட்கேற்கக் கம்மாளன் ஆபரணங்களை யுண்டாக்குவதும், குய வன் குடங்களையுண்டாக்குவதுமாகிய காரணத்தைப்போலநிமித்த காரணமாயிருந்து தனுவாதிகளைக்கொடுத்து அமமுறையே இரட்சி த்துச் சங்கரிப்பதன்றி அவ்வான்மாக்களுக்குப பக்குவம்வந்தகால த்தில் அனுக்கிரகமுஞ செய்வோம ஆதலால இனியேனும் யாமுப தேசித்த சித்தாந்தத்தைச சிந்தித்து வேறுபாடற்று ஏகமாகியும்அ பாவமாகியும் இருந்த முன்னர் ஆணவமலத்தில் எவ்வாறு சார்ந்து நின்றனையோ அவ்வாறு நம்மிடத்திற் சார்ந்து துவித பாவனையற் றுச் சுகமாயிருக்கக் கடவையென்று திருவாய்மலர்ந்து தமது திரு வருளைக் கான்தருளினர்.

இப்பால் சனகராசன் அவை யனைத்தையுந் தெளிவுபெறக்கே ட்டுச் சிந்தித்து நிருத்தியாசனஞ செய்து நிஷ்டைகூடி இவ்வாழ்வு ஈரதமுனிவரால் வந்ததல்லவாவென்று நினைந்து நினைந்து உருகி உ ருகி, யாவரு மெஞ்ஞானியென்று சொல்லும்படியாக உலகத்தைக் காத்துச் சிவன்முத்தனகி யிருந்தனன், அருந்தவர்களே ஒருமுனை ல் திரிசிரனென்னும் அந்தணனுடைய வறுமையெல்லாம் நாசமாகி ப் பெறுதற்கரிய பெருஞ்செல்வம் அவனுக்குண்டானதன்றி அளவ ற்ற அற்புதங்களும் விளங்கினவெனருள் அதை யெண்ண ளவிற் கொண்டுவருது ஆகமமுறைப்படி யருச்சிப்போர்க ளடையும் பயன் எம்போலிகளா ளவிட்டுரைக்கற்பாலதோ வென்று தேவகணங்க ள் மூனிவர்கணங்களுக்குச்சொன்னதாகப் பிதிர்தேவனுக்குப்பிரம தேவன் சொல்லியபடி தேவேந்திரன் சூரசேன மகா ராஜனுக்குச் சொன்னன்.

துர்வையாசகப்படலம் முற்றிற்று.

தூர்வை துலையேற்றுப் படலம்.

தூத்தல முனிவீ ரொற்றைத் தூர்வையால் வறுமைநீங்கி யேத்தருஞ் செல்வம் பெற்று னிருந்திரி சிரசுவென்பான் சாத்தமவ் வறுகின் மேன்மை தனிலின்னு கேண்மினென்று நாத்திகம் பயிலா நாவி னன்கனை தரர்கள் சொல்வார்.

மகா மகத்வ மிக்க யோகேந்திரர் நிலவிநாயகமூர்த்திதூர்வை யாசகஞ்செய்து திரிசிர னென்னும் அசுரனுக்கு அளவற்ற செல் வங்களே யளித்து சனகராஜனுக்குப் பரத்துவ சிரேயத்தை யுணர்த் தியருளிய திருவினை யாடல்களை விரான்மேனும். இப்பால அத்தூர் வையைத் துலையேற்றிய வரலாறுறை சொலலுவோங் கேட்பீராக பின்னும் தேவேந்திரன் கர்தேவ மகாராணிகோகுகி அரசனேதே வகணங்கள் முனிவாசட்கு வேறெறு நகரையுஞ் சொன்னதாகப் பிர மதேவன் பிதிர்தேவனுக்கு சொலலுவதாயது.

மூற்கூறிய கவண்டின்னியமுனிவர் ஐங்கரக்கடவுளாகியகணே சமூர்த்தியை அனுதினமும் அன்போடு பூசித்துவருகின்றகாலையில் ஓர்நாள் அவர் பத்தினியாகிய ஆசிரியை யென்பவள் மிக்கமனமகி ழ்ச்சியோடு தனது கணவரைநோக்கி ஒருகதை அடியாட்குச்சொல் லியருள வேண்டுமெ யென்று விண்ணபபஞ செய்துக்கொண்டனள். அதற்கு அம்முனிவர் சகுதேரடிங்கொண்டு முன்னர் விநாயகமூர்த் தி மிதிலாபுரியில் இருக்கின்ற திரிசிர னிடத்தில் தூர்வை விருந்துக் கொண்டு அவனுக்கு அவசியற்றபரக்கியங்களை அளித்தருளிய கதை யைச்சொல்ல அதனை அவ்வாசிரியை கேட்டுச் சுவாமீ அம் மிதிலை புரி அந்தணனைப் பாராக்கினும் நாம் அத்தூர்வையை வெகுவாய்க் கொண்டுவந்து கணேசமூர்த்திககு அர்சிக்கின்றோம். அவர் நமக் குமாத்திரம் பாக்கியந்தராமல் இருப்பதற்குக் காரணம் யென்ன வென்று கேட்டனள். நினைத்தமாத்திரத்தில் எல்லாச் செல்வங்களை யும் ஏவலாகக் கொள்ளத்தக்க கவண்டின்னிய முனிவர் அதற்குப் புன்னகைகொண்டு இப்பிரபஞ்சத் துள்ளோர்களும் அத்தூர்வை யின் மகிமையையுணர்ந்து சுத்தபவித்திரராகும்படித் தமது மனத் தின்கண் நினைத்தவராய்ப் பெண்ணே நாம் ஓர் அருகு தருவின் றோம் அதனை நீயெடுத்துக்கொண்டு தேவேந்திர னிடஞ்சென்று அத னிடை யெவ்வளவோ அவ்வளவு பொன் தரும்படி கேட்டு வாங்கி வாக்கடவை யென்று சொல்லித்தாம அருச்சித்தஅருகுகளி

லொன்றையெடுத்துக் கொடுத்தனர். அதற்கு அவ்வாசிரியைஇசை ந்து வாங்கி உடனே சுவர்க்க லோகத்திற்குச் சென்று இந்திரனைக் கண்டு தனது காதலர் ஆக்கியா பித்ததை அவனுக்குத் தெரிவித்த னள். அதை இந்திரன்கேட்டவுடன் மிகவும் அற்புதமாகக்கொண் டு அவ்விருடிபத்தினியைச் சாஷ்டாங்கமாக வணங்கிப்பூசித்துத் த யே ரீர் இவ்வறுகினைக் குபோனிடத்திற் கொண்டு போவீராயின் உமக்குவேண்டிய பொன்னைப பெறுவுக்கொண்டுபோகலாமென்று சொல்லிச் சிலதூதவளா தனியாகக் கூட்டியனுபபினன். அவ்வா றே ஆசிரியை குபேரனிடத்திற்குசெல்ல அவன்கண்டவுடன் இருடிப த்தினியென்று அறிந்துகொண்டு அனந்தமுறை தீர்க்கதண்டஞ்செ ய்து பூசித்தனன். உடனே கூடவந்ததூதர்கள அக்குபேரனைப்பார் த்து இந்த அம்மாள் கைபிற்கொண்டுவந் தி நக்கின்ற ஓர்அழகம்பு ல்லினிடைக்குச் சரியான பொன்னைக கொடுப்பிக்குமாறு இந்திரர் எங்களுக்கு ஆக்கியாபித்தனர். என்று அறிவிக்க அதனைக் குபே ரன் கேட்டு இதறகாகவா நம்மிடதற்குவந்தது என்று குறுகை செய்து அளவற்றசொர்னங்களை மலைபோலக்குவித்து அன்னையே! உமக்குவேண்டிய பொன்னைக கொண்டுபோகலாம் என்றுசொன் னன். அதை ஆசிரியைகேட்டுத தன்னெதிரில் மலைபோலாகக் கு வித்திருக்கின்ற பொற்குவியல்களைபபாரத்து ஐயா ? எனதுகாத லர் இந்த அறுகினிடைக்குச் சரியான பொன்னையே வாங்கிக் கொ ண்டு வருமாறு உதரவு செய்தனர். ஆதலால் இவ்வறுகை ஓர் *துலையின்கண் இட்டு அதறகினையான பொன்னைத் தூக்கித் தரல்வேண்டும்"என்றனள். அதறகுக்குபேரன் இசைந்து உடனே துலாவை யெடுத்து மேலேதூக்கினன். அதில் ஆசிரியை தனது அறுகம் புல்லை ஓர் தட்டில்வைத்தனள். குபேரனுடைய எவலாளர் கள் ஓர் இம்மியளவு பொன்னைக்கொண்டுவந்து மற்றோர் தட்டில் இட்டனர். இப்பால அறுகிட்ட தட்டானது நிலத்திலும், பொன் னிட்ட தட்டானது ஆகாயத்திலுமாகி நிற்க அவவற்புதத்தை அள கேசன் கண்டு தனது எவலாளர்களைநோக்கி, இவ்வறுகமகாதெய் வீகமுள்ளதா யிருகின்றது. இதன் பெருமை எளிதாகக்காணவி ல்லை. இஃது நமது பொக்கிஷத்திருக்கின்ற பொன்னைபுமேயன்றி நம்மையுங் கொள்ளும்போற் றோன்றுகின்றது, ஆதலால்எவ்வளவு பொன்னைக்கொண்டேனும் இரண்டு தட்டுகளையுஞ் சமன்செய்யுங் களென்று கட்டளையிட்டனன். அதைக்கேட்ட எவலாளர்கள் மீட்

* துலை-தராசு.

டும் ஓர் () தொடியளவு பொன்கொண்டுவந்து வைத்தார்கள். அதற்குஞ் சமனுகாமையால் பின்னர் ஓர் தூக்களவு பொன்கொண்டுவந்து வைத்தார்கள். அதற்குஞ் சமனுகாமையால் அதனேடு ஓர் * தூலாப்பொன் கொண்டுவந்து வைத்தார்கள். இவ்வாறுஅளவற்ற பொன்னே வரிசை வரிசையாகக் கொண்டுவந்து மாருமல்வைத்திருந்தார்களேயன்றி அறுகின்தட்டானதுசிறிதேனு நிலத்தினின்றுமே லெழும்பக்கண்டவரல்லர். மற்றொரு தட்டு மாத்திரம் பொன்னே க்கொண்டுவந்து இடுந்தோறும் இடங்கொடுத்துக் கொண்டுவளர்ந்துவந்தது. இப்பால் அவ்வேவுகாரர்கள் குபேரனுடையஅரண்மனையிலடங்கியிருக்கின்ற அவன் சொந்த நிதிகளையெல்லாங் கொண்டுவந்து நிரப்பினர்கள். அதனுலும் அத்தட்டு சமனுகாமலே யிருந்தமையால், அதைக் குபேரன்கேட்டு ஆச்சரியமடைந்து உடனே தனது நகரத்திலுள்ள பொருள்களையெல்லாம் வரவழைத்துக் குவித்தனன். அதனுலும் அத்தட்டு நிலத்திலிறங்கச்சண்டிலனுகிபின்னர் தனது மனைவியோடும்வந்து தலாவைவணங்கி யேறினன் அப்போதும் அவைகள்சமனுகாதிருந்ததுஅவ்வற்புதத்தைத் தேவேந்திரன் கேள்வியுற்றுத் தனதுநிதிகளையுந் தனது நகரத்துள்ள நிதிகளையுங் கொண்டுவந்து தலாத்தட்டின்கணிறப்பித்தானுமேறினன், அதற்கும் அருது சிறிது விறங்கா திருந்தமையால் பின்னரத் தேவேந்திரன் மும்மூர்த்திகளும் வருமாறு மனதில் தியானித்தான். அவ்வாறே அம்மூவர்களுந்தங்கள் தங்கள் பரிசனங்களோடும்வந்துவறினுர்கள். அப்போதும்அவ்வறுகின்தட்டு முன்னிருந்த வண்ணமேசற்றுமசையா திருந்தது.

ஓடிகாத்துமாக்களே! அற்பவரத்தினையுடைய பலபேர்கள்தங்கள்தங்கள் அளவற்றசெல்வத்தோடு வந்தாலும்,பெருந்தவத்தினையுடையாரது ஓர்சிறியபொருளுக்கு மொப்பவரோ! இப்பால் இந்திரன்முதலிய சகலதேவர்களும் இவ்வாறுநிகாயக மூர்த்தியினுடைய திருவடிகளில் அருச்சனைசெய்து மேன்மைபெற்றிருக்கின்றதெனத்தெரிந்து கொண்டு யாவரும் அத்தட்டினே விட்டிறங்கி முடபத்துமுக்கோடி தேவர்களும புடைசூழ்ந்துவரும்படியாக அவ்வவர்களுடைய வாகனங்களிலேறி ஆகாயவெளியெங்குமகிரம்பவெ
ன்கண் வசிக்கின்றகவுண்டின்னியர்முனிவர்களும்படி

() தொடி-ஒரு பலம். * தூக்கு-ஐம்பதுபலம் இடையுள்ளது.
* தொலா-ஒருபலத்தில் மூன்றிலொரு பாகமுள்ளது.

அவ்வாசிரியையோடு வந்திரங்கினார்கள் இவ்வாறுஎல்லாத் தேவர்களுந் திரண்டுவந்ததைக் கவுண்டின்னிய முனிவர்கண்டு, நிடுக்கிட்டெழுந்து, சாஷ்டாங்கமாகவணங்கி. இருகரங்களையுஞ் சிரமேற்குவித்து, ஆடிப்பாடி, ஆனந்தக்கண்ணீர்சொரிந்து,பலமுறைவலம்வந்து அடியேனியற்றிய தவத்தின்பயன்களை இன்றல்லவோ எனது கையிற்கிடைக்கப்பெற்றேனென்று அளவற்ற வேதாகமங்களினுற் றுதிசெய்து, ஒ சர்வஞ்ஞ மூர்த்திகளே! அடியேனிடத்திற் குற்றங்கள் சேர்ந்தனவாயினும், அவைகளைத் தேவரீர்களது நிறைந்தகிருபையினுற் பொறுத்தருளல்வேண்டும். தொண்டர்க்குத்தொண்டனுகிய சிறியேன் இதுகாறும் அறுகின் பெருமையைக் கண்டவனல்லன். இப்போது சுவாமிகளெல்லாம் ஆகாய வெளியின்றும்வரக் கண்ட மாத்திரத்தில் அதனதுமகிமை இவ்வகைத்தென அறிந்துகொண்டேனென்றுசொல்லினர். அதுகேட்டருந்தாரகாதர மூர்த்தியாகிய சிவபிரான் செவியுற்று, அன்பனே! அருகின்பெருமை இம்மாத்திரமேயன்று, அதையாவராலும் அளவிட்டுரைத்தலுமரிது, அத்தன்மைத்தாகிய அருகினைத தரித்திருக்கின்ற விநாயகமூர்த்திக்குப் பத்திசெய்பவருக்குள் உன்னையொப்பவ ரெவருங்களினுமில்லையென்று திருவாய்மலர்ந்து, அனுதவாங்களை மளித்தருள் சென்றனர். மற்றைத் தேவர்களுமே அவரேறே அம்முனிபுங்கவரைப் புகழ்ந்து வெவ்வேறுவரங்களைக்கொடுத்து, அவ்வவர்கள் பதவிகளையடைந்தனர். இப்பால் சிவபிரானது கட்டளையின்படி காமதேனு கற்பக விருக்ஷமுதலியவைகள் வந்து அம்முனிபுங்கவருக்கு ஏவல் செய்திருந்தன, இவையனைத்தையும் அவாபத்தினியாகிய ஆசிரியை கண்டுஅவை தீர்க்கதண்டஞ்செய்து சுவாமிஸ் கணேசமூர்த்தி மகிமையையும். அவரதுஅறுகின் பெருமையையும் இப்போதறிந்துகொண்டனனென்றுதித்து, அன்றுமுதல் தானும் அவ்வறுகினுற் கணேசமூர்த்தியையருச்சித்து இகபர சாம்பிராச்சியத்திற்குரித்தானவளராகி வாழ்ந்திருந்தனள். ஆதலால் அறுகம்புல்லினதுபெருமையை அவ்விநாயகமூர்த்தியேயன்றி இவ்வுலகத்தின்கண் யாவராலுங் கணிக்கக்கூடும், நீங்களும் அவ்வறுகைக்கொண்டு விநாயகக்கடவுளை யருச்சியுங்களென்றுசொல்லித் தேவகணங்கள் விமானத்தைச் செலுத்திக்கொண்டு கணேசலோகத்திற்போய்ச் சேர்ந்தார்கள் அவ்விமானத்தி லேறிச்சென்ற விடை, கரம், புலிச்சியாகிய மூவரும் இப்பிரபஞ்சத்துள் பிறந்திறத்தலாகிய வசதனையை யொழித்து விநாயகமூர்த்தியினுடைய பெருங்கருணையால் அளவற்ற

நாள் சொர்க்காதிபோகங்களே யனுபவித்து, முடிவில்அவரது திரு வடிகளிற் கலந்தார்கள். இப்பால்தேவகணங்களால் அவ்வறிவின் பெருமையைக்கேட்ட முனிவர்களெல்லாம் முருந்தோடுமூன்றிதழ் விட்டிருக்கின்ற அறுகுகளைக்கொண்டு விநாயகமூர்த்தியை யருச் சித்தார்கள். உடனே கணேசமூர்த்தியினுடைய திருபையால்அவ்வ வர்கட்கு வேறுவேறு தெய்வவிமானங்கள்வர அவைகளி லவர்கள் ஆரோகணித்து விநாயகருலகத்திற் சேர்ந்தார்கள். அதனை அந்த கரத்துள்ளோர்களறிந்து அவ்வாறே அத்தூர்வையைக்கொண்டு இ டைவிடாம லருச்சித்துச்சொர்க்கலோகத்தை யடைந்து அளவற்ற போகங்களே யனுபவித்தார்கள். ஆதலால், உன்பத்திரனுடைய திருத வீரியனையும் அவ்வறுகைக்கொண்டு சங்கட்ட சதுர்த்திவிரதத்தை நிறைவேற்றச்செய்யென்று பிரமதேவன் பிதிர்தேவனுக்குச் சொல் லியதாகத் தேவேந்திரன சூரசேன மகாராஜனுக்குச் சொன்னன்

தூர்வை தூலியேற்றுபடலம் முற்றிற்று.

வன்னிமகத்துவப் படலம்.

ஒறு காபினு முதவு முவிடிற்
பூணன் பூசையைப் போறறு மாறெவன்
சோண வுறவினித் தெரிக்க வென்றலு
மாரணன் பிதிரனுக் கறிவிப் பானரோ.

அறிவேசொரூபமாக ஆனந்தமுறும் மாதவர்களே? கவுண்டின்னியமுனிவர் விநாயகமூர்த்தியினுடைய தூர்வையைத்தூலியின்க ணேற்றி அதன் மகத்துவத்தைத் திரிலோகங்களினும் விளங்கச்செய் தவரலாற்றினைச் சொன்னேம். இப்பால் வன்னிமகத்துவத்தைச் சொல்லுவோம் கேட்பிர்களாக; தேவேந்திரன் பின்னுஞ் சூரசேன மகாராசனே நோக்கிச் சொல்லுவான். அரசனே? பிதிர்தேவன்மீள வும் பிரமதேவனைத் தொழுதெழுந்துசுவாமீ? ஒருகேனுங்கிடையா விடின் அக்காலத்து விநாயகக்கடவுளே எவ்வாறு பூசிக்கவேண்டிய தென்று வினவ, அதற்குப் பிரமதேவன்மனமகிழ்ந்து, விநாயக மூர்த்திக்குப் பல பூசாதிரவியங்களிருந்தகாலத்தும்அறுகைப்போல இன்றியமையாச்சிறப்பினதாக இருப்பது வன்னிபத்திரமும், மந் தாரமலருமாகும், இவற்றுள் வன்னியையன்றிப் பூசனைசெய்தோர்

க்கு அக்கணேசமூர்த்தி இரங்கிவரக்கொடுப்பதில்லை. எந்தத் திரவியங்க ளில்லாவிடினும் வன்னியொன்றினில் பூசனைசெய்தால்எத்தன்மைத்தாகிய பயனையும் எளிதிற் கொடுப்பர். அறுகு இல்லாமற் செய்கின்ற பூசைக்கு வன்னியொன்று கூடியிருந்தால் எல்லாப்பயனும் உண்டாகும். அவ்வன்னிக்குரிய பயனையளிக்கும் பொருள் வேறொன்றுமில்லை அதனைக்கொண்டு பூசித்தவர்க ளடைந்த பேறினையுஞ் சொல்லுவோங்கேட்பாயாக.

எல்லாவுயிர்களுந் தன்பமற வாழ்கின்ற விதற்ப தேயத்தில், சகல செல்வங்களும் நிறைந்து அஷ்டதிசைகளிலும் புகழ்பெற்றுவிளங்கி யிருக்கின்ற அதேயமெனுமோ ராகாமுண்டு. அங்ஙகரத்தில் வீழனென்னுமபெயரினையுடைய ஓர்வேடன் நிலையேயன்றி நன்மையென்பதைச்சிறிதும் அறியாதவனுகி எகாரலும் வழிப்போக்கர் களையெல்லா மடக்கிப்பொருள் பறித்தும் நிரகங்களையறைக்கொன்றும் அவைகளைவிலைக்குமாறியும் வாழ்ந்துவருகின்றகாலையில், அங்ஙகரத்திலுள்ளோர்கள் அங்கிருக்கின்ற ஓர் தேவாலயத்தில்திருவிழாவச்செய்ய அதனைக் காணுமாறு அயலூரிலுள்ளகணிருக்கின்ற சில வேதியர்கள்வந்து தரிசித்துவீட்டுக் தமதுபதியிலேபோக்கிச்சென்றனர். அவர்களே யவ்வேடன் வழிமடக்கி அவர்கள் வைத்திருந்த பொருள்கள் அனைத்தையுங் கொள்ளையிட்டுக கொன்றுபோட்டுத திரும்பினன். உடனே அவனதணைக்கொன்ற பிரமஹத்தி அவனைப் பிடித்ததுபோலக் கொலைசெய்வதிற தனனினுஞ் சிறந்தவனுகியும், வலியில் மதயானையை யொத்தவனுகியும், ஈற்றதிற் பொன்னைமகளுந்த சிவப்பினனுகியுமிராநின்ற ஏரக்கனனவன் மரணத் தொடர்ந்துசெல்லும் வேங்கையைப்போல அவனீ மணைப்பின்றொடர்ந்து தூரத்தினன். அதற்கவ வேடனஞ்சி ஓட்டங்கொண்டு ஓர் வன்னிவிருக்கத்திலேறினன். அவனேறியவிசையினலவவிருக்கத்தினின்றும் ஓரிலையானது அதனிலெழுந்தருளியிருக்கின்ற விநாயகமூர்த்தியினது திருவடிகளில் வீழுந்தது. உடனே அரக்கனும் அவனைப்பின்றொடர்ந்தேறினன். அதனல் மற்றோரிலையதிருமுடியில் வீழ்ந்தது இவ்வாறு ஏறிய இருவரும் ஒருவரை யொருவர் கைகளாலிறுகப் பிணித்துக்கொண்டு நிலத்தில் வீழ்ந்து தங்கள் பாவநேகத்தினின்று நீங்கித் தெய்வ வுருவம்பெற்றுக் கணேசமூர்த்தியினுடைய திருவருளினல் பொன்விமானம்வர, அதில் அவ்விருவர்களும் ஆரோகணித்து விநாயகலோகத்திற்போய்ச் சேர்ந்தார்கள்.

பிதிர்தேவனே! இவர்கள் பூர்வத்திற்செய்த வினையையுஞ் சொல்லுகின் றேம்கேட்பாயாக. மேற்கூறிய விதற்பதேபத்தில் அரசாட்சி செய்துகொண்டிருந்த புண்ணியகீர்த்தி யென்னுமியற் பெயரை யுடையஓர் அரசன்வேதாக மங்களில் வல்லவனுகியும், தண்ணியகொடையை யுடையவனுகியும், அளவற்ற யாகங்களை முடித்தவனுகியும், சத்தருக்களை நாசஞ்செய்து நாட்டியவெற்றிக் கொடியை யுடையவனுகியும் இருந்தனன். அவன்தன் மனைவியா கிய மதனவதி யென்பவளோடு மன்மதனும் ரதியும் போல மரு வீச் சந்தோஷ சாகரத்தில் மூழ்கி வாழ்கின்றநாளையில், தன வாழ்நாள் முடிவெய்தி இகலோக * அரசாட்சியையொழித்தனன். உடனே அவன் மனைவியாகிய மதனவதியும் மரணமாயினள்.

இப்பால அவர்களுக்கு நற்கதியைச்சேர்ப்பிக்கவல்ல புத்திரப் பேறிலலாமையால் அவர்கட்காற்றவேண்டியகருமங்களெல்லாம் அமைச்சர்கள் நிறைவேற்றி, ஒருமாதஞ் சென்றபின்னர் இங்ஙன ரத்தை யாளத்தக்கவர்கள் யாவரென்று தமக்குள் ஆராய்ந்து, இறந் தபோன புண்ணியகீர்த்தி யென்னு மரசனுக்கு * ஞாதியாகிய அத் திரிடராசனுடைய குமாரனுகி மிக்க வலிமையுற்றிருந்த சாம்ர னென்பவனை யோசித்து, யவனே பகைவரைக் களையவல்ல பராக் கிரமசாலியென நிச்சயித்து, அவன் பிறப்பை சிறிது முணராது விதிப்படி மகுடாபிஷேக முதலியவைகளைச செய்து, சிம்மாசனத் திலேற்றுவித்து மதித்தற்கரிய சிறப்புக ளனைத்தையுமி நிறைவேற் றித் தங்கட்கு அரசனுக்கிக்கொண்டார்கள், பின்னர் அச்சாம்ப னனவன் நாடுநகரங்களிலுள்ள எல்லாச் சனங்களுந் தன்னருகில் நின் றேவல்செய்யக் குபேரனைப்போல அளவற்ற செல்வத்தோடு வாழ்ந்துவருகின்ற நாளையில், தனது செங்கோல் நிலைமையிற்றவறி, பிரதினமும் கள்ளை யருந்துவதும், உயிர்க்கொலை செய்து உண் பதும், பரஸ்திரீகளைப் புணர்வதும, பிறர்பொருளை கவர்வதுமாகி உலகத்தையெல்லாங் கனல்பற்றிய காட்டைப்போலச்செய்து, தன தருந்திறப்பிய நடைக்கு ஒத்துவராத மந்திரிகளைச் சிறையில் வை த்து, ஒத்துவருகின்ற துற்புத்தியென்னும் பெயரினையுடையஒரு வனை மந்திரியாக்கி, அவனிஷ்டப்படி நடவாதவர்களைச் சதாவில் தண்டிக்குமாறு அவனுக் கதிகாரமும் மீய்ந்து, தான் சதாகாலமும்

* அரசு ஆட்சி--அரசாட்சி. ஆட்சி-சுதந்திரம்
* ஞாதி-பங்காளி.

ஸ்ரீபோகத்தில் அழுந்திக் கிடந்தனன். இவ்வாறு மதிமிகுந்த மன்றிகள் நிறைக்கண்ணிருக்க, தான் எக்காலத்தும் பரஸ்ரீபோகத் திலிருக்க துற்புத்நியென்பவன் தனது பெரியனுக்கேற்க உலகத்தி லுள்ள உயிர்களெல்லாம் மனவாட்டமுறா பாவசெய்கைகளைச் செய்துவந்தனன்.

இவ்வண்ணம் பிரமதேவனை சரஸ்வதியாகிய, பிதிதேவன் பிரமனைப் பணிந்தெழுந்து, சுவயம்பூ சேஷரீ முனிவர் முதலாக சாபானுக்கிரகத்தையுடைய பிறப்பை யோகியாகிய அரசனுக்கு கொடாமலாகின்றது கிருவாய் மலர்ந்தருளியதால், அவனை பிறப்பு எய்வதைத்தடுத்து அருளியும் கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்திக்கனன். அதற்குப பிரமதேவனிசைந்து அப்பாலை அசரசாமானுடைய தகுதியாகிய தத்தகிடனென்பவன், தனக்கு நெடுங்காலம் ஒரு புத்திரனிலமையால் வருத்தமுற்று அனவிறந்த தவங்களையும் தானங்களையும் நிறைவேற்றி வந்தனன் ஆயினும், அவனை இராசாதாசனென்று சிறுவெவ்விய தொழில்களெல்லாம் நடாகூலவுதவனையால், சான * விழைந்த புயனே யடையாமற் போயினன். பின்னர் யுவன னீனியானவள் சேர்ந்துசென்று ஓர் வலிஞனுக்கு கனனைபெற்றனள். இவ்வாறு வலிஞனது வீரியத்தினின்றும் உற்பவிக்க குறாகதிலை அச்சாம் பனைவன் அரசகுலமாக கிருந்தும், கலி கலிஞராகளையும் ஒழுக்கத்தினையுங் காய்ந்து தண்டாகதடையிற் கெலலுவதாயினன். இதுதான் அவன் பிறப்பின் பேதமென் றறிபாகடவை.

பிதிர்தேவனே! மேற்கூறிய வண்ணம் சகரராபன் தனது † மறத்தாற்றினுஞ் சகல வுயிர்களும் மனகரலபசசெய்கின்ற காலத்தில், ஒருநாள் அவன் மந்திரியாகிய கூடி போடையாடித் திரும்பி வரும்போது எண்ணியடிமையாகவுடைய சிகாயகக்கடவு ளாலய மொன்று வானத்தையளாவிய ஸ்தூபியோடு அருகில பல ‡ மறுகுகள் சூழப்பெற்று, அளவற்ற வளப்பங்களோடு பொருந்தி, அழகுற்றிருப்பக் கண்டனன், அவ்வாலயத்தி லெழுந்தருளியிருக்கின்ற கணேசமூர்த்தியோவெனில: முன்னோர் காலத்தில் வஜிட்டமுனிவரால் மிக்க பத்தியோடு பிரதிட்டை செய்ததாகும் பின்னோர்காலத்தில் அம்மூர்த்தியைத் தசரதமகாராசன் வந்தித்துப் பத்தெழுத்தினுள்ள மந்திரத்தைக் கனித்துப் புத்திரப்பேற்றினை யடைந்தனன்.

விழுவு-ஆசை. † மறத்தாறு-கொடுநெறி. ‡ மறுகு-வீதி.

மேலும் அவ்விநாயக மூர்த்தியானவர் தம்மை விண்ணுலகர், மண்ணுலகர் முதலியயாவர்களும் இடைவிடாதுபூசிக்க அவ்வவர்கட்கு வேண்டியபடி வரங்களை யளித்தவருகின்றமையால் அவருக்கு யாவரும் வரதகணபதியென்னும் திருநாமஞ் சாற்றித் துதிப்பர்.. இத்தன்மைத்தாகிய கணேசமூர்த்தியினது திருக்கோயிலைக்கண்ட சாம்பனனவன், தன அமைச்சா முதலிய பரிசனங்களோடும் அதற்குள்ளே நுழைந்து, அங்கு தரிசனஞ்செய்ய வந்திருந்த அளவற்ற சனங்களுள சிலர் பொங்கலிடவும் சிலர் தேங்காயுடைக்கவும், சிலர் எண்ணெய் முதலிய திரவியங்களைக்கொண்டு அபிஷேஷிக்கவும், சிலர் வேதாகம மார்கிகளால துதிசெய்பவும், சிலர் ஆனந்தக்கூத்தாடவும், சிலர் அற்புதமாகப பாடவுங் கண்டு தானுந் தனது மந்திரியுங் காட்டிற் பரித்து மளைர்கள் தலைமேற கொணர்ந்துவந்த தேமாங்கனி முதலிய வருக்ஷங்களை ஓர் விளையாட்டிஞலை கணேசமூர்த்திக் கெதிரே வைத்து, சுவாமீ! யாங்களுங் உனகஞ் அடிமையென்று சொல்லிக் கோயிலைப் பிரதட்சணஞ் செயது போயினர்.

இப்பால முன்போலவே தானவர்கள் மலைபோலவும், கடல்போலவும் புவிபோலவும் நெடுநாள அளவற்ற பெரும பாதகங்களைச் செய்துவருகின்ற காலையில, இவர்களுகஞ் இறுதிநாள் சம்பவித்தன உடனே இயமதூதர்களை வரத நெருங்கிச் சிலர் கொடும்பாதகராகிய இவரிருவர் கரங்களைப பினபுறமாகப பிடித்துக் கட்டியும், சிலர் நீண்ட முருகுகளைக் கொண்டு செவி, அண்ணம, நா, முன்கை, ஆண்குறி, அகங்கை, உதடு முதலிய விடங்களிற் குத்திச் சங்கிலிகளில் மாட்டியிழுததும, சிலர், நீண்டகதாயுதங்களைக்கொண்டு மாறிமாறிப் புடைத்தும, வழிநடக்கச செய்தார்கள். இவ்வாறு அவர்களைக் கொடுமையென்று சொலலுமபடியான கடத்தைகளுஞ் ஒன்றினுள்ளுந தப்பவிடாது எல்லாத தண்டங்களையுஞ் செய்து கொணடு செல்ல, ஆயுதம, அக்கினி, கல முதலியவைகளைச் சொரிகின்ற மழையினாலும், யானி புலி கரடி முதலிய மிருகசாலங்கள் செய்கின்ற இம்சையினாலும், முட்களைப் பரப்பியிருக்கின்ற வழி தோறும் அடிக்கடி அடிபெயர்த்து நடத்தலினாலும், ஹா! ஹா! அவர்கள் பட்ட பாடுகள் யாவரால் வாய் விட் டுரைக்கற்பாலன. பின்னர் அந்த யமதூதர்கள் தமது அரசனுடைய சந்நிதானத்தில் அவர்களைக்கொண்டு போய்விட, அவர்கள், அந்த யமதருமராஜனைப் பார்த்தவளவில் புலியைக்கண்ட மான்போலவும், கருடனைக் கண்ட பாம்புபோலவும், சிம்மத்தைக்கண்ட யானைபோலவும், பசுத

பத்தத்திற் சேர்ந்து வீழ்ந்தனர். இப்பால் யமதருமராசன் சித் திரகுப்தனைக் கூவி, இவர்கள் இதகாறுஞ் செய்த புண்ணியபாவங் களைத் தெரிந்துசொலுக கடவையென்று கட்டளையிட, அவ்வாறே அவன் ஓர் கணப்போதில அவைகளைத் தெரிந்துகொண்டு, தருமமூர்த்தியே! இவர்கள் சீவித்திருந்த நாள் முழுவதும் பாவங்களையே செய்துவந்தனர், ஓர் தினம் விளையாட்டால் சுணைசமூர்த்திக்குச் சிறிது வந்தனை செய்திருக்கின்றார்கள். என்று சொல்லினன் அதனை யமதருமராசன் கேட்டு அவர்கள் செய்த அச்சிறுபுண்ணிய மானது முன் வராமையும், பெறுமாவங்களெல்லா முற்றி முன்வந் திருக்கின்றமையையுஞ் சீர்தூக்கிக்கண்டு, உடனே கண்களில் அனற்பொறி பறக்கும்படியான கோபத்தோடு இடியைப்போன்ற தன துபெருங்குரலினால் கிங்கரர்களைக் கூவி, இவர்களை எல்லா நரகங்களினும் போட்டு வதைசெய்யக் கடவீர்கள் என்று ஆக்கியாபித்தனன். அதனைத் தறுகணாளராகிய அக்கிங்கரர்கள் கேட்டு வடவாமுகக்கினியு மஞ்சத்தகக் கோபத்தோடு கையைப் பிறைபோல விரித்து அவ்விருவரையுமே பிடரியைப் பிடித்து நிலத்தில் விழத்தள்ளிக் கரங்கொண்டமட்டும் மோதி அறைந்து, காலால் உதைத்து, உலகத்தவர்களை முறைமையோடு காவாத பாவச்செய்கையால் அலையச்செய்த மாகாபாவிகாள்! யாங்கள் செய்யும் முறையைபிற் படக்கடவீர்களென்று சொல்லிச் சிலர்கூரிய வேலாயுதங்களைப் பரப்பியிருக்கின்ற நிலத்தின்மீது மல்லாக்கத்தளளி முட்களையுடைய தண்டாயுதத்தினால் உடலானது பிளவாகும்படி யெறிவார்கள். சிலர் இரண்டு உள்ளங்காலினும் ஊசிகளைக் கடாவுவார்கள். சிலர் வெளுத்த பொறியைப்போலத் தள்ளி விழும்படியாகச் சுடுநிலத்தி லிடுவார்கள். சிலர் நாறு பொதுவதுபோல உதிரம், மூளை, தசை முதலியவைகள் சிதறும்படியாகத் தூணில்மோத்து வார்கள், சிலர் பருந்து, கழுகு, காக்கை, நரி, நாய் முதலியதைகள் தங்கள் பசிகெடக் கூறிட்டுப் புசிக்கும்படியாக அவைகட்கு முன் வகுப்பித்தவார்கள். சிலர் உச்சியிலிருந்து மலவாயில் வரையில் ஊடுருவும்படியாக வச்சிரத்தினற்செய்த முள்மூளைகளைச் சொருவு வார்கள். சிலர் தசைகளைத் தண்டத்தண்டமாக வரிந்து புசிக்கச் செய்வார்கள், சிலர் தாய்தை நோண்டுவதுபோல் கண்களைத்தோண்டுவார்கள். சிலர் கைகள் தள்ளிவிழும்படியாக ஆயுதங்களைச் செலுத்தி தறிப்பார்கள். சிலர் வில்லுகளில் அழுதுக்கொப்பான நரம்புகளையேத்தி உடலிற் றைக்கும்படி விடுவார்கள். சிலர் மூடைக்

கிருமபுகளே மேல்வாய்களில் ஊடுருவக்குத்தி வுயர்ளிற் றாக்கிற் சுற் றிலும் நெருப்பை மூட்டித் துன்பப்படுத்துவார்கள். சிலர் மதம் பொழிகின்ற யானையினது கால்களில் தலையை பிடறவிடுவார்கள். சிலர் உதிரமொழுகின்ற இரும்புலக்கைகளேக்கொண்டு மோதுவார்கள். சிலர் கிருமிகள் கிண்டும்படியாக அவைகள் நிரம்பிய குடன் களிலிடுவார்கள் சிலர் சீயுஞ் செகநீருங் குழம்பியிருக்கிற கிணறு களில் எறிவார்கள் சிலர் உடலமானது இரண்டு பிளவாகும்படி இரண்டுபக்கத்திலும் இரண்டுபேரிருந்து ஈர்வாளேக்கொண்டு ஈரி வார்கள். சிலர் உருகுகப்பட்டிருகின்ற செம்பை ஒன்பதுவாரங் களிலும் ஒழுக்குவாகள். சிலர் கரும்பைப்போலத் தூக்கி நெருக் கிய ஆலிபிற சொருகுவார்கள். சிலர் முறுக்கியிருக்கின்ற செக்குக ளில் வைத்து ஆட்டுவாகள. சிலர் உடலிற் செதிலெழும்படி வாச் சியைக்கொண்டு சேதித்து நெருப்பிலிட்டுக் கோபிப்பார்கள். சிலர் உடலியும நயத்தையும ஒன்றுக அகலிற் சோர்த்து நெருப்பின்மீது வைத்து உருகருவார்கள. சிலர் கொதிக்கின்ற நெய்யில முழுதும் படியாக விடுத்து அனலே மூட்டுவார்கள். சிலர் ஊசிகளே யெடுத்து ஆண்குறிகளிலும, நகக்கண்களினுஞ் சொருதுவார்கள். சிலர் அழ லிற் காய்ச்சப்படடிருகின்ற இருமபுகளே உள்ளங்கையில் வைப் பார்கள. சிலர் உருகியிருக்கின்ற செமபொனனே யள்ளி உடல்முழு தும் பூசுவாகள இவ்வாறு யமகிங்கரராகளெல்லாம் அவர்களே ஒவ் வொரு நரகங்களில ஆயிரம் வருடம, பதினாயிரம் வருடம் என் கின்ற கணக்கின்படி போட்டு வதைசெய்ய, அவ்விருவரிரும் பூணை வாய்ப்பட்ட புறுவய கிளியுமபோலவும், பாம்பின் வாய்ப்பட்ட தேரையுக் கவளையும போலவும. வருத்தமெய்தி எல்லா நரக வேத னைகளையும், அனுபவித்து வருகின்ற நாளையில அவர்கள் செய்த கொடும்பாதகங்களெல்லாம குறைந்துபோயின. இப்பால் நின்றி சேடதனே உலகதனிற சனனமெடுத்து அனுபவிக்கும்படி யாக அவ்விருவருவ காகமுங் கூகையுமாகவும், ஓந்தியும் வலூல்று மாக வும், நாகமுக தேளுமாகவும், நாயும பூனையுமாகவும், கீரியும் பன்றியுமாகவும், நரியும செந்நாயுமாகவும, குதிரையும் கழுதையு மாகவும், ஒட்டகமும யானையுமாகவும், மச்சமும முதலையுமாகவும், புலியும் மானுமாகவும, எருதும எருமையுமாகவும் பிறந்தனர்.

அரக்க கிராதகர் முத்திப்பேறு.

இவ்வாறு இழிந்த யோனிகளெல்லாம் பலமுறை பிறந்து, பின்னர் அரக்கனுகவும் * கிராதனுகவும் உற்பவித்து, வண்மரத் தினேறிப் பாவங்களே யொழித்தனர். ஆகியில இவ்வேடன் சாப வினை மரனுயிருந்தபோது தானுக தனது மந்திரியும் ஓர் வினே யாட்டாக வரதகணபதிக்கு நெற்றாக காய் கனி முதலியவைகளே வைத்து காங்களும் உலகுக்கு அடிமையென்றுசொலிக கோயிலப் பிரதக்ஷணஞ் செய்து சென்ற புண்ணியத்தால பிறவிகள்தோறும பெரிய தீவினைகளேச செய்திருந்தும இச்சனனத்தில அவர்கள் வண்னி விருட்சத்தி லேறவும, அதனில யுதிர்ந்த அதற் கடியில் வாமனரால் பூசை செய்யப்பட்டிருக்கின்ற வாமன கணேசர்பேரில் வீழவும், அதை அவர்கள அபுகதி பூலமாகச செய்த பூசனையென்று கணேசர் ஓப்புகொண்டு சாமபிராசையத்தைக் கொடுத்தருளவுமாயது. மேலாறு பிரமதேவன பிதிர்தேவனுக்குச் சொன்னதாகத் தேவேந்திர சூரசேன மகாராசனுக்குச் சொன னுன்.

வண்னி மகத்துவ படலம்

அரக்க கிராதர் முத்திப்பேறு முற்றிற்று

வாமனர் வரம்பெறு படலம்.

தாமரைக் கிழவனீது சாற்றலும் பிதிரன் ரூழ்ந்து
வாமனர்யாவ ரந்த வண்னிமென் னிழலி லேங்கைச்
சாமியைப் பூசை யாற்றுந் தன்மையென் சாற்று கென்ரூன்
ரேமறப் பிதிரன் கேட்கத் தொல்லோன் முகவன் சொல்வான்.

மகா தவவாய்மையுற்ற சவுனகாதி முனிவர்களே! வண்னி மகத்துவத்தால் ஓர் அரக்கனும் கிராதனும் முத்தியடைந்தவரலாற் றினைச் சொன்னேம். இனி அவ்வண்னி நீழலில வீற்றிருக்கின்ற விநாயகரை வாமனர் வழிபட்டு வரம்பெறு பேற்றினைச் சொல்லு வோம் கேட்பீர்களாக

மீட்டும் தேவேந்திரன் சூரசேன மகாராசனை நோக்கிச் சொல்லுவான்.—சிவபத்தியே நிறை சொரூபமாகிய அரசனே! பிதிரிதேவன பிரமதேவனைத் தொழுதெழுந்து சுவாமீ! வாமனர் என்பவர் யா? அவர் வன்னிமரத்தடியில் விநாயக மூர்த்தியைப் பூசைசெய்த காரணமென்ன? அதனையும அடியேறகுச் சொல்லி யருளல்வேண்டுமென்று பிரார்த்திகக்ப பிரமதேவன் சொல்லுவான்.

பிதிதேவனே! வாகியோக முடையோர்க்கு வரம்பில் ஆனந்தததை யளிகக்வல்ல தேசிகனுயும, கேவலதேவனுகியும்: நிகம்பரனுகிய மிருக்கினற சிவபெருமானது பஞசாட்சரத்தைச் சதாகாலமூர்தியானித்து திருவெண்ணீறு பூசி, உருதராட்ச கண்டிகை புனைந்து, அரியதவங்களைச செய்கினற காசிபமுனிவரானவர் அதிதி திதி என்னுந தமது இரணடு பத்தினியரோடும் கூடி வாழ்கின்ற காலையில் அதிதியென்கினற பதநினியானவள் தனது புத்திராகளாகிய இந்திரன் முதலிய தேவாகட்கு உதவியாக இலக்குமிமணாளராகிய விண்டு தனக்குப் புதகிரனுகி வரவேண்டுமென்னும் அவாவினுல் பெரிய தவங்களைச செய்துகொண்டிருந்தனர. அதனை யவட்கு மாற்றுளாகிய திதியென பவளறிந்த தேவர்களினுஞ சிறந்த மேன்மையையும திரிலோகதகிணையுங காக்கவல்ல திறத்தினையுமுடைய புதகிரர்களைப் பெறவேண்டி யோசித்து அருகிலேயிற் றன்கணவராகிய காசிபரைத தொழுதெழுந்து, சுவாமீ! யாது காரணத்தினுலோ காமநோயானது எனமனதைச சுடுகின்றதால் தேவரீரடியாளைக் கூடிச சுகந்தராவிடில எனதுயிர் வாழ்வது அரிதாயிருக்கும் ஆதலால இந்நிமிடமே தடைபொனறுஞ் சொல்லாமற் கூடியருளல் வேண்டுமென்று பிராதகதிதனள். அதற்கம் முனிவரிசைந்து, விறலினகணுண்டான தி அவ்விறலினையே சுட்டெரிப்பதுபோல் அவளகத்தின்கணுணடாகிய விரகநோய் பின்னரவளையே வருத்தின்றதை நோக்கிகூடினர். உடனே விண்ணுலக முதலிய பாவுகடுங்கும்படியாகவும தானவர் குலங்கள் தழைத்தோங்கவும் இரணிய கசிபன், இரணியாக்கனென்னும் இரண்டசுரர்கள் உற்பனித்தனர். அவருள் இரணிய கசிபனென்பவன் லெபிராணி நோக்கி அரியதவங்களைச் செய்து * அத்திரம் சத்திரம்; உள்-புறம்; பூமி-

---

* அதிரம்-கையினின்றும் வீமேபடை, சதிரம்-கையினின்றும் வீசும் கூடாதபடை. இதனை அஸ்திரம சஸ்திர மென்ப

ஆகாயம்; இரா-பகல்; † உயர்நிலை-அஃறிணை; என்னும் இந்த இரண்டு பகுதிகளினும் தனக்கு மரணமுண்டாகா திருக்கவும் தனது உதிரம் பூமியில் விழுந்தால் அதில் நின்று தன்னைப்போல உருவுண்டாகி வரவும் வரமபெற்று, வேதவொழுக்கத்தினைக் கடந்து, திரிலோகங்களையும் ஆண்டு குறைவற்றிருக்கின்ற செலவமென்னும் குன்றிலேறித் தனக்கெவ்விதத்தினும மரணமில்லையென்கின்ற உறுதியோடு இறுமாப்புற்றிருந்தான் அகாசுரனையில மகாவிஷ்ணுவானவர் அவ்விராணிய கசிபனைக கொலவதறகான ஒரு நபாயத்தினை ய மதேடவேண்டுமென்று மனததினைக ணிணைதகவராய், ஒருநாள் பூமியின்க ணெழுந்தருளி, ஓர் வனனிவிருகசத்தடியில விநாயகமூர்த்தியைப் பிரதிட்டைசெய்து, ஆகமவிதிபபடி பூசனைபுரிந்து ஓராதனத்திலிருந்து ஐம்புலாதிகளையு மடகக்கி சடாகசர மகாமிரத்தைக் செபித்துவந்தனர் இவவாறு தவஞ்செய்து வருகின்ற காலையில் ஐங்கரக் கடவுளாகிய கணேச மூர்த்திக்குக் கிருபைசுரந்து அவரெதிரிற் பிரத்தியகஷமாயினர் உடனே மகாவிஷ்ணுவானவர் தொழுதெழுந்து அனந்தமுறை தோத்திரஞ்செய்து, சுவாமீ! எல்லா உலகங்களையும் ‡ அறத்தாறு கடந்த அரசாட்சி செய்துவருகின்ற இரணிய கசிபனுடைய வுயிரை வாட்டுமாறு அடியேற்கு வரந்தர வேண்டுமென்று பிரார்த்திக்க அதறகு விநாயகக கடவுளிணசாது, விண்டுவே, உயர்நிணையும் அஃறிணையுமலலாத வாய்தலிலிருந்து, பகலு மிரவுமல்லாத மாலைப்போதில, விண்ணு மண்ணுமல்லாத மடியி லவரை வைத்து, அதகிர சத்திர மலலாத நகதத்தினாலேகீறிப் பிளந்து அவனுதிரம் பூமியில் விழாதபடி வாயால உறிஞசக்கடவை யென்று திருவாய்மலர்ந்து, அதற்கேறற வலியுங் கிருபைசெய்து, தமது திருவுருவைக் கரத்தருளினர், இபபால மகாவிஷ்ணு நரசிம்ம அவதாரங்கொண்டு, அவ்வுபாயத்தின்படி இரணியகசிபனைக் கொன்றார். அவனுக்குப் பின்னர் அந்த அரசாடசி இரணியாக்கதன் ஆண்டுவந்தான். அவனையும் விநாயகமூர்த்தியினுடைய பெருங்கருணையால் மகாவிஷ்ணுவராக அவதாரமெடுத்து ஒழித்தருளினர்.

இதிர்தேவனே! அண்டர் பெருமானுகிய கணேசமூர்த்தியானவ்விடத்தி லெழுத்தருளி விண்டுவுக்கு வேண்டிய வரங்களை

† உயர்நிணை-நேஷர், மணிதர், ராகர். அஃறிணை-பகுதிபெருகாதி சகரசை

‡ ஆறு = அநம-தருமம, ஆறு-மார்க்கம்.

யளித்தமையால் விண்டு விநாயகரென்னுந் திருநாமத்தினைக் கொண்டனர். பின்னொரு காலத்தில விண்டு வாமனவதாரங்கொண்டு விக்ரயகமூர்த்தியை வந்தித்து வரம்பெற்றிருக்கின்றனர். இதனால் வாமனகணேசரென்னும் மற்றொரு பெயர்ளங்கி நின்றது

அதன் றலாற்றையுஞ் கொலியருளவேண்டு மென்று பிதிர் தேவன் பிரார்த்திக்க, பிரமதேவர் கிருபைகூர்ந்து பிதிர் தேவனே! கேட்பாயாக முன்னர் விஸ்வரூபி னுடைய வராக அவதாரத்தினைக் கொலைபட்ட இரணியாகனுடைய புதகிரனுகிய விரோசனனென்பவன் சூரியனைக் குறித்து அளவற்ற காலந் தவஞ் செய்து கொண்டிருக்க, அதற்குச் சூரியன் மனமிரங்கி அவனெதிரில் வந்து ஓர் சொனைக் கிரீடத்தை யவன கையிற் கொடுத்து, இக்கிரீடத்தை உனது முடியிற்சூடிக்கொண்டிருப்பாயின் மூன்றுலகமும் உனதாக்கினைக் குள்ளாகும் உனக்கு ஓராபத்துவருவதிலலை. இக்கிரீடத்தினைத்தரியாமல் உனது சிரத்தின்பேரில் மறறொருவர் காம்பதுமையின், உடனே உனது சிரம் நூறு வெவாய்ப் பிளக்கப்பட்டு உயிரும் ஒழிந்துபோகுமு ஆகலால் இதை மறவாமல் சாக்கிறதையாயிருக்கக் கடவையென்று சொல்லிச்சூரியன தனதுகதியை சேர்க்கிச் சென்றனன.

இப்பால் விரோசனனு, அப்பொன் முடியைச் சூடிச் கிரிலோகங்களுந தனதேவலகேட்க அரசாட்சிசெய்து மாவலி யென்னும் ஓர் புதல்வனைப் பெற்று வாழ்ந்து வருகின்ற காலையில் இக்கிரன் முதலிய தேவர்கள் வைகுந்தத்திற் சென்று மகாவிஷ்ணுவைத் தொழுதெழுந்து சுவாமி; மூவுலகங்களினும அவுணரக்கினை யதிகரித்திருப்பதால அதனைப்போக்கி யருள வேண்டு மென்று பிரார்த்தித்தார்கள். அதற்குக் காயப்பூ நிறத்தினையுடைய மகாவிஷ்ணு வானவரிடைசந்த, ஸ்திரீகளும் அனுபவிகொண் டிச்சிக்கத்தக்க அழகினையு மோகினியவதாரங் கொண்டு விரோசனனெதிரிற் சென்றனர் உடனே அம்மோகினியி னுடைய பார்வையாலும், புயத்திற் சுமந்திருக்கின்ற புட்ப வல்லியினாலும, மிருதுவாகிய வசனத்தினாலும், குழலசைத்தன்முதலிய நடைகொடி பாவனைகளினாலும், தன்மனதிற் பெணணென்றே நினைத்த மோகக்கடலில மூழ்கினவனைப் பின்சென்றனன். அதற்குப் பெண்வடிவங் கொண்டுவந்த விண்டு வானவர், அரசனே! நீகலவித்தொழிலிற் கைகண்டவனென்று கேள்வியுற்று உன்னைக் கூடவேண்டுமென்னு மிச்சையால் இவ்விடம் வந்தனன், எனது சீர்மையோ வெனில், தயிலமாடாத வர்களது

தேவனே எஞ்ஞான்றும சார்வதில்லை ஆதலால் இப்போது நீதலில் முடி வருவையாயின் என்கொங்கைகள் நினதங்கையவாகும். மூதலால் விரைவில் தயிலதை வருவிபபாயாகில், யானே அதனைத் தேய்க்கின்றே னென்று திருவாய் மலாந்தனர் இவையனைத்தையும் விரோசனன்கேட்டுத் தானடைந்திருகினற மோகத்தினால் முன்பு சூரியன் சொலலிய சொறகளையுமறந்து விரைவிற தயிலங்கொண்டு வருமாறு ஏவலாளர்களுக் காகவியா பிதத்த தயிலமவந்தவுடன்தன தது கிரீடத்தைவாங்கி நிலத்திலவைததனன் பினனா விண்டுவானவர் நமக்கு நல்லசமயம வாய்த்ததெனறு சுகதேவரிந்து, அவனுக்கெதிரில்நின்று, ஒருகையா லவன சிரதைப பிடிதது மறறொருகையாற் றயிலத்தை யள்ளிவிடுத தேய்ததனா இவவாறு அவன்சிரத்திற் றமதுகரத்தைவைததமாத்திரதில சுண்ணமபுகலலின்மேல்சலத்தை விடுத்தாற்போல அவனசிரமானது நாறபிளவுகளாய்ப்பினாந்து இறந்து போயினன

பின்னர் தேவாகளெலலாம விறுகொணடு தமமைபபோற்றும் படியாக விண்டுவானவர் வைகுநததையடைநதனா இபபால்மேற் கூறியவிரோசனனுடைய அரசாடசி யினதையும அவன் புதலிரனுகிய மாவலியென்பவன கைபேறற, பிரமகபாலமேகி அனலா மபெருமானாராகிய சிவபெருமானது நிருவடிகளே இரவும் பகலும விட்டுபபிரியாத சிதையோடு தனதுகேமியை நீதிமுறைப்படி உலகமெலலாஞசெலுகதி வாழநதுவருகினற காலமில, ஒருநாள் தனது குருவாகிய சுகதிரீனை வரவழைதது அவனுககு வநதனமுதலிய வழிபாடெலா நடததி, பினனா ஒரிதனதினாக ணிருக்கைவத்துப் பலவுபசாரங்களுடன பூசனைகளுமபுரிந்த, சுவாமீ ஞாயாயிறறேவேந்திரன் மாதிரஞ சொறகலோகதிறற கரசனுகி அவற்றபோகங்களே யுவலநீர வனுபவித்திருகக, அவைகள் எனக்கில்லாமல் போனதற்குக காரண மென்ன அதனி யடியேற்குத் திருவாய் மலரவேண்டுமென்று விணணப்பஞ் செய்து கொண்டனன். அதற்குச் சுக்கிரன்சொல்லுவான்: அரசனே! தருமஞசெய்தபோன் பேரகத்தை யனுபவிபபத இயற்கையாகும். அபபடி தருமஞ் செயயாத தனது வலலமையினுலுஞ், பிறவி மேம்பாட்டாலும் அடைகின்ற போகமெல்லாஞ்செயற்கையாகும். அவைகள் நீடித்தும நிலையுடையா. சுரலோக சுக்கிரேச்சுரனுகிய இந்திரனுவெளிப் பிரயாகைகள் செய்து சகலபோகங்களையுஞ் தலைமேன்றி யநுபவிக்

கின்றன். அவனைப்போல நூறுமகங்கள் சரியாகச்செய்யாது அனை வற்றையும்போர்கள் அவனைக் கொன்றெரித்து மாய்த்து விட்டனர். உன்க் கப் போகங்களை யனுபவிக்கக் கருத்திருக்குமாயின் விரைவில் எல்ல னைப்போல நூறு *மகத்தையு முடிக்கக்கடவை யென்றனன். இவ் வாறுசுக்கிரன்கூறிய உண்மைகளை மாவலிகேட்டு மனமகிழ்ந்து உட னே வசிட்டர் முதலிய பெரியோர்களைவரவழைத்து, தொண்ணூற் றொன்பது அஸ்வமேதயாகங்களைச் செய்துமுடித்து, இப்பால் நூ றாவது யாகத்தையு முடிப்பதற்கு யத்தனங்கொண் டிருக்கின்ற கா லையில், அதைத் தேவேந்திரனறிந்து, ஐயோ! இனியென்செய்கு வோம்! நமது அரசையும், அளவற்ற போகங்களையும் இன்றொழிந் தனமே நாம எவ்வாறு மாவலியை வாட்டவல்லோம? ஆயினும்முன் னர் நமது பாக்கியங்களைக் கவர்ந்த பாதகர்களை யெல்லாம் இமைப் போதிற் கண்ட தண்ட மாக்கியருளிய கமலக்கண்ண ரிருக்கின்ற ரல்லவாவென்று தேறி, விரைவிற் சர்ப்பசயனத்திற் பள்ளிகொண் டிருக்கின்ற விண்டுவைக்கண்டு, அவரதிருவடிதாமரைகளைப்பல முறைவணங்கி, அளவற்ற தோத்திரங்களைசெய்து, அண்ணலே! இது காறும்என்னை யெதிர்த்தவரந்த தானவர்களையெல்லாம் மண்ணுக்கி ரையாக்கி அடியேனை விண்ணுலகரசாக்கிவைத்தது தேவரீர் கருணையலலவோ? இப்போது அவணுகிய மாவலி பென்பவன் எனதுபதவியைச்சித்த மகஞ்செய்துவருகின்றனன். அவனுபி ரையுந் தேவரீர் குடிக்கருளி யான விண்ணுலகத்தி லிருக்குமாறு அருள்செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்கு விண்டு வானவர் புன்னகைகொண்டு, இந்திரனே! நீ கூறியது கன்றுயிருக் கின்றது. பலமுற பொலைஞ்சுகள் செய்தும், வெதவொழுக்கங்க ளிற் றவறியும், முனிவர்களையுந் தேவர்களையுந் தண்டப்படுத்தியு மிருந்தபோ்களை யெல்லாம் இதுகாறுஞ் சங்கரித்து உனதுபதவிக் குயாதொரு தீங்கும் நேரவொட்டாமற் காப்பாற்றி வந்தனம். இப் போது நீ கூறிய மாவலியோவெனில் வேதாகமமுறைப்படி யாகஞ் செய்து வருகின்றன். தனக்கெக்காலத்தும் அழிவு நேராதவண் ணஞ் சிவபெருமானிடத்திற் றீர்க்காயு ளடைந்திருக்கின்றன். மே லும் எல்லாவிதத்துங் குற்றமற்றகுணத்தை யுடைத்தாயிருக்கின் றன் இதுதன்மையவான மேம்பாட்டினையுடைய அவனை நாம் எவ் வாறு சங்கரிக்கக்கூடும? ஆயினும் நீ நம்மிடத்தலைந்து பிரார்த்தித் தனை யாதலால் உனது பதவிக்குக் குறைவுவராமற் காப்பாற்று

* மகம-யாகம, வேளவி.

வோம், இனியுனது மனக்கவலையொழித்திருவென்று திருவாய்மலர்ந்து, இந்திரனுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டு இதனை யோசிப்ப தானேன்:

மாவலியானவன் நீதிநெறியினும் வேதவொழுக்கத்தினுந் தவறுதலாகஞ்செய்து வருகின்றனனாதலால், அத்தியாகத்தை யழிப்பதற்கு அவன்ஞாதியாய்ப்போனால வெறறிபெறறு வரலாமேயன்றி மற்றசதுர்வித வுபாயதகிஞனும ஏனைய வெவவேறு ஏதுவினாலுங் கூடாது. இனிபாம் இதனை செய்வத தகுதெனறு யோசித்து, மூன்னர் தம்மைப் புத்திரனாகி வருவதறகு ணணைகொண்டுஅரிய தவத்தினைச் செய்திருந்த அதிதிகருப பாலனியபமாலை அவள் கருபபத்தில் வாமனராய்ததங்கி, நான சதிருக்கரங்களுங கையாம்பூ நிறத்தினையு முடையவராய யாவருமு இலகதமியமணனா இவரே யென்று சொலலுமபடியாக அவதாரஞ் செயதனர இவாதன்மை யாகிய காசிபர் அளவற்றமெழ்சசியைபடைதது தமத புதலவருக்குச் சாதககன்மாதிகளைசசெய்து மூனறுமாண்டிற * சவளசடங்கினை நடத்தி ஐந்தாமாண்டில † உபநயனகலயாணததை முடிதது வேதாத்தியாபனமுஞ் செயவித்தனர.

பின்பு வாமனரானவர் சகலவேதாகம புராணஇதிஹாஸஞசமர்த்தியராகித்தமது தந்தையாகிய காசிபரிடததுவந்து மிகுந பேரன்பினோடும் அவரைபபணிந்தெழுநது, ஐயனே! இநதிரபோகத்தையடையுமாறு பலிமகஞ்செயது வருகின்றமையால அவனிடமென்று இந்திரனுக்குச் சுகத்தையுண்டாக்குமவரை யாதுஞலென்றுவினவினர். அதற்குக்காசிபர் தமதுபுத்திரனைநோக்கி கூறுதாய்! நீகூறிய தபோதாயகக்கடவுளுடைய திருவருளிலலாமல முடிவதன்று அவ்வருளைப்பெறுவதற்கு அவரதுசடாகரமானுவைச் செபிக்கவேண்டுமென்று சொல்லி வேதாகமவிதிப்படி தீக்ஷைசெய்து, அந்தச்சடாக்கரத்தையு முபதேசித்தனர். இப்பால் வாமனர் அவ்விடத்தினின்றுநீங்கி விதிப்படியத்தை யடைநது, ஆதேயாகாரத்தில் தென்புறத்தில் வண்ணிவிருக்கத்தினீழலில் விற்றிருக்கின்ற எண்ணியமையாதவுடைய விண்டு விதாயகமூர்த்தியினது திருவடிகளைத் தொழுது தினந்தோறும் பூசனைசெய்து, ஒருவருடபரியந்தஞ சடாக்கரமந்திரத்தை யனுட்டித்திவந்தனர். அவ்வனுட்டிப்பிற்து அடியவருள்ளத்தில் ஒளிக்கொளியாக விருக்கின்ற சோதி ஸ்வரூபராகிய

* சவளசடங்கு-மயிர்வாங்கல். † உபநயனம்-பூணூலணிதல.

விநாயமூர்த்தி திருபைசுரத்து, நீலவெற்பின்மீது மாணிக்கக் குன்றிருந்தாற்போல மயில்வாகனத்தின்மீது பத்துதிருக்கரங்களோடும் யானைமுகத்தோடுந்தோன்றி அளவற்றதேவகணங்கள் புடைசூழும் படியாக அவனெதிரிற் பிரத்தியட்சமாயினர். உடனே தம்மைப் பிழைப்பிக்கவல்ல தயாபர மூர்த்தியினுடைய உருவத்தைக்கண்டலும், வாமனர் நிலத்தில் வீழ்ந்து பணிந்து கண்மையணைத்து மேலெழுந்தனபோல மீளவுமெழுந்து ஆனந்தக் கூத்தாடி அளவற்றவேதாகமங்களினூற் றுதிசெய்து கொழுந்துவிட் டெழுந்த அன்பினல சிரத்திற்குட்டிக்கொண்டு கர்த்தன் சந்நிதானத்திற் கெதிராகக் கைகூப்பி மெய்கொட்டிநின்றனர். அதற்கு எமது பெருங்கருணைப்பெருமானுகிய விநாயகமூர்த்திமனதிரங்கி, வாமனனே! நீ ஒருவருட பரியந்தம் ஆகார முதலியவைகளேநீத்துமிக்க உள்ளன்பிஞலும் நம்மை யனுட்டித்தனபடியால் உனக்கு வேண்டிய வரங்களைக் கேளென்று திருவாய்மலர்ந்தனர். உடனே வாமனர் பணிந்தெழுந்து, சுவாமி! எளியேற்குத்தேவரீரது திவ்விய சரணார விந்தங்களில் இடைவிடாத பக்தியும், தேவேந்திரனுக்கு அழிவில்லாத அரசும், தேவரீருக்கு அடியேனுடைய நாமமும், அடியேன் நினைத்தெல்லாம் எளிதிற்சைகூடி வருந்திறமும், அறிந்தமறியாமல் ஏதேனும் பிழைசெய்வேனுயின் அதனை யானடிமை யென்னுஞ் சுதந்தரத்தாற் றேவரீர் திருவுள்ளத்திற் பொறுக்கும் பொறப்புண்டுருபை செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குத் தேவதேவராகிய கணேசமூர்த்தி அவ்வாறே அநுக்கிரகஞ் செய்து தமது திருவுருவைக் கரந்தருளினர்.

மீளவும் வாமனர் அவ்வண்ணவிநாயக மூர்த்தியை யருச்சனை செய்து அவ்விடத்தினின்று நீங்கித்தமதுதாதையினிருப்பிடஞ்சேர்ந்து, அவரிடத்தினின் றுதாம்பெற்றுவந்த வரங்களனைத்தையுங்கூறி, முன்போலவேயிக்க மனங்களிப்போடு சடாக்கர மந்திரத்தைப் பிரதினமுஞ்செபஞ்செய்து வந்தனர் இப்பால் மாவலியானவன்மற்றொரு வேள்வியுஞ் செய்து வருகையில், வாமனர் அவனிடத்திற்குச்செல்ல, அவனவரை எதிர்கொண்டழைத்துவந்து தீர்க்கதண்டஞ்செய்து, ஓ மகாதவசிரேஷ்டரே! தேவரீர் யாவர்? தாமெம்மையொத்த தமது திருவடி வருத்தப்படி இவ்விடத்திற்கு வரலாகாதா? அடியேற்குத் திருவாய் மலர்வேண்டுமென்று கொண்டனன். அதற்கு வாமனர் மாவலியினுடைய அன்பைநோக்கி, அரசனே! யான் காசிபமுனிவருடைய புத்திரன், நீ பிறந்தவேள்

யைச்செய்து வருகின்றனையாதலால் இச்சமயத்தில் யானிருந்து தவஞ் செய்வதற்கு மூன்றடி நிலந் தானஞ் செய்யுமாறு கேட்க வேண்டி நின்னிடத்திற்கு வந்தனன். அவ்வாறே யளிப்பது நினது கடனையாகு மென்றனர். அதனைக்கேட்ட மாவலி பெருமகிழ்ச்சி கொண்டு அவ்வாறே உமக்குக் கொடுத்தோமென்று சொல்ல அவ் ஞரியஞைய சுக்கிரன் அதனைத் தடுத்து, அரசனே! நின்பாற்கு னம் வேண்டி வந்தவன் த்வசியல்லன். மாலே இமமாய வுருவங் கொண்டு உன்பால் இவ்வுலக மீண்டுங் கைக்கொள்ள வந்தா னென்றனன். அதனே மாவலிமறுத்து, கொடுப்பதனுல்வருங்கேடா னது கொடாமையால் வருஞ் செல்வத்திறு மேலானதென்று கூறித் * தாராபாத்திரத்தையெடுத்துத் தாரைவார்க்கச் சென்ற னன். அத்தருணத்தில் சுக்கிரனவன ஓர் சூக்குமவடிவங்கொண்டு அத்தாராபாத்திரத்தி னின்றுஞ்சலம் வரவொட்டாமல் அதன் மூக் கின்வழியை அடைத்துக்கொண்டனன். அவ்வஞசகத்தை வாமனர் அறிந்துகொண்டு, கொடுப்பதைத்தடைசெய்தலால் வருபயன் இ தாதான் என்று சொல்லும்படி ஓர்தருப்பையை உள்ளேவிட்டுக்குத் தினர். அதனுல் அச்சுக்கிரன் தனதுவிழிகளில ஒன்றை இழக்கப் பெற்று அதினின்றும் அப்பாற்செல்ல, உடனே வாமனர் மாவலி விட்டதத்த நீரைக் கையேற்றுக்கொண்டவராய்க் கொடை செய்த லால் உண்டாகும்பயன் இவ்வளவிற் றென்று சொல்லும்படி, அண் டகடாகங்களினும் ஊடுருவ ஓர் விசுவரூபங்கொண்டு தமது திருவ டிகளினுல் மூவுலகத்தினையும் ஈரடியாக வளாத மூன்றுமடிக்கு அம் மாவலி சென்னியிற் றமதுபாதத்தைவைத்து அவனே பாதலலோக த்திற் செல்லும்படியழுத்தித் தமதுமனத்திற் கொண்ட வஞ்சகத் தை நிறைவேற்றிக்கொண்டு, இந்திரனுக்குச் சொர்க்கலோக அர சாட்சியை நிலைபெறச்செய்தனர். இப்பால் மாவலியானவன் மூன்பு ஸ்ரீபிராணே வழிபட்டிருந்த மகத்துவத்தினுல தனது ஆக்ஞையைச் சகலலோகங்களினும் அப்பாதலோகத்தினின்றுஞ் செலுத்தி, மறு நிதி முறைமைப்படி அரசாட்சிசெய்து தேவேந்திரனைப்போல அள வற்ற போகபாக்கியங்களை அனுபவித்துவந்தனன். இம்மாவலிபரம திவனதுகடாட்சத்தைப் பூரணமாகப்பெற்றிருந்தும் தனது உலகங் களையெல்லாம் கணேசமூர்த்திக்கன்பராகிய வாமனருக்குத் தத்தஞ் செய்தது தான் அவரிடத்தில் நிறைக்கணிருக்கப் பெற்றன ஞதலால், வன்னி விநாயகர், விண்டு விநாயகர், வாமனவிநாயகர், என்னும்

* தாரை என்பது தாராவென மருவியது. தாரை-நீர்

இம்மூன்று திருநாமங்களையும் யாவரேனு நினைத்தாலும், துதித்தாலும், பூசித்தாலும் அவர்கட்குத் தேவேந்திரனைப்போல அளவற்ற செல்வத்திலிருக்கும்படி வரங்கொடுத்து எல்லா விடர்களையும் இம்மைப்போதிற் கெடுத்தருளுவர் என்று பிரமன் பிதிர் தேவனுக்குச் சொன்னதாகத் தேவேந்திரன் சூரசேன மகாராசனுக்குச் சொன்னன்.

வாமனாவதாரம்பெறு படலம் முற்றிற்று.

கீர்த்திமகப்பெறு படலம்.

வன்னி விநாயகா விண்டு விநாயகா வாமன விநாயகரென்றியாவு, ருன்னினுமேத தினுபூசை யுனற்றினுன் னவர்க்கந்த வும் பர்ராச, ரென்னபெரு வரமுபளித தெவ்விடருங் கெடுத்தருள்வா ரென்று வேதன், வனனிபதன் பெருமையினை மற்றுமுரைப் பான் பிதிர்வா னவனுக கம்மா.

வேத வித்துக்களாயுள்ள சவுனகாதி முனிவர்களே! விநயாக மூர்த்தி வன்னிவிருக்கத்தினடியில வீற்றிருக்கின்ற வரலாற்றினையும், அவ் வன்னி விநாயகருக்கு விண்டுவிநாயக ரென்றும் வாமன விநாயக ரென்றும் திருநாம முண்டானதையுஞ் சொன்னேம் இப்பால் அவ்வன்னியால கீர்த்தி மகப்பெறுபேற்றினையும், வாமனர் வரம்பெற்று தைதியர்களை வென்றடைந்த பேற்றினையுஞ் சொல்லுவோம் கேட்பீர்களாக

தேவேந்திரன் பின்னுஞ்சூரசேன மகாராஜனைநோக்கி அரசனே! பிரமதேவன் பிதிர்தேவனுக்கு மற்றொரு கதையுஞ்சொல்வதானன். அதாவது:-முன்னொருகாலத்தில சகலதேவர்களுங் கொண்டாடத்தக்க கைலையங்கிரியில் நவரத்ன மயமாயிருக்கின்ற திருவோலக்க மண்டபத்தில திருவுபாணியாகியும், கங்காதர மூர்த்தியாகியும் மிராரின்ற சிவபெருமானைவர் கொலுவீற் றிருக்கின்றபோது பார்வதராசன் புத்திரியாகிய உமாதேவியார் அவரைத் தீர்க்கதண்டஞ்செய்து, சுவாமீ! கணேசமூர்த்திக்கு எல்லாப்பத்திரங்களிலும் வன்னிப் பத்திரத்தில விழைவுண்டாகி யிருப்பதற்குக் காரணம் யாதோ அதனை அடியாட்குத் தேவரீர் திருவாய் மலர்ந்தருள வேண்டு மென்று விண்ணப்பஞ் செய்துகொண்டனர். அதற்குப் பரமன் திருவை சுரத்து, பெண்ணே! விண்ணுலகத்தினை

ரும் மதிக்கத்தக்க மண்ணுலகத்தில் எண்ணற்ற தருமங்களை யுந் தானங்களையும் இடைவிடா தியற்றி வறியார்களுக் கெல்லாம் வரையாதுகொடித்து பகையாயினரையும் பணிப்பிக்க வல்லபராக் கிரமத்தோடு சகல நற்குணங்களினுஞ் சிறந்தவனுகிய பிரியவிரத னென்னும் ஓர் அரசனிருந்தான். அவனுக் கிரண்டு பரிணியரிருந்த னர். அவருள் முன்னர் விவாகஞ்செய்தவளை கீர்த்தியென்றும், பின்னர் விவாகஞ் செய்தவளைப் பிரபையென்றுஞ் சொல்லுவார்கள். இவருள் இளையாளாகிய பிரபையென்பவளிடத்தில் பிரியம்வைத்து அவளிடத்திற்றானே சகல இன்பங்களை யநுபவித்து அவளுக்கே எல்லாச் சிறப்புகளையுங் கொடுத்துவருதனன். அவனவ்வாறிருந்த போதிலும், மூத்தாளாகிய கீர்த்தியென்பள் நிறிதேனும் மனவரு த்தங்கொள்ளாத கற்பையே கலனுகமித்து தனது கணவனுக்கு ரிய பணிகளில் நிணையளவும் குறைபா டில்லாதபடி நடாத்திவந்த னள். இப்பால் பிரியவிரதன் இளையாளோடு நாளுக்குநாள் நூதன விழைவோடும புணர்ந்துவரும்காலையில், அவள் கருப்பத்திற கரு வுண்டாகிப் பத்தாந்திங்களில் ஓர் ஆண்பிள்ளையைப் பயந்தனள். பின்னர் அப்பிள்ளை பதுமகாபனென்னும் பெயரைவகித்துப் பரு வமுற்றகாலத்தில் பாஞ்சாலனென்கின்ற ஓரசன் இலக்குமிபோன் றதனது குமாரத்தியைச் சகலவித சிறப்போடும் அவனுக்கு விவா கஞ்செய்து கொடுத்தனன். இத்தன்மைத்தாள பெருமிதத்தினுல் இளையாள் தனது மூத்தாளைக் கிருமியினும் கீழ்ப்பட்டவளாகம தித்தொழுகி, ஓர்நாள் கற்புக்கயிற்றுற் கட்டுண்ட கீர்த்தியானவள் தனது காதலனுகுப் பணிபுசெய்ய வேண்டினவளாய்அவன் இளை யாளோடுங் கூடியிருக்குமிடத்திற் சென்றனள். அதை இளையாள் நோக்கி, விரைவாக எழுந்து இங்கேன்வந்தனை யென்று எட்டியு தைத்தனள். அதனை அவ்வரசன்கண்டுங் காணுதவனேப்போலவி ருந்தனன். பின்னர் இளையாள் தன்னைக் காலாலுதைத்தையும், அவனவளிடத்துவைத்த மோகத்தினுல் தனதுகாதலன் என்னகா ரணமென்று விசாரியாது சத்துருவைப்போல விருந்ததையும, கீர்த் தியென்பவள் நினைந்துநினைந்து, மனம் நொந்து, அவ்விடத்தினின் றுநீங்கி, இனி சரீரத்தை வாட்டியேனும், விடத்தை யுண்டேனும், * வரையிருண்டேனும், நிளத்தில் வீழ்ந்தேனும் நமது உடலை ஒழி த்துக்கொள்வோமென்று யோசித்து, நினைக்குந்தோறும் உள்ளத்தி னின்று மெழுகின்ற வெப்பமானது சற்றும் நீங்காமையால் மனம்

* வரையுருளுதல்-மலைமீதேறி புருண்டு விழுதல.

புழுங்கி கண்களில் நீர்த்தாரைகளோச சொரிந்து, சந்திர பிம்பம் போன்ற தனது முகாரவிந்தத்தினுடைய ஒளி மழுங்கும்படியாண கவலையோடு வெளிப்படுவதாயினள். அத்தருணத்தில் அவளது நற் றவப்பயனென்று சொல்லும்படி மிக்கதெய்வத்தன்மையையுடைய ஓர் புரோகிதன் யாசிக்கவந்தனன். அப்போது அவள்கொண்டம னக்கவலைகளை முகக்குறிப்பினு லறிந்து பின்னர அவளால் யாவை யும் தெரிந்துகொண்டு, அம்மணீ! உனது மனக்கவலையை இன்றே டொழித்துவிடு, உனக்கு எலலா நன்மைகளுங் கிடைக்குமாறு ஏனைதையனைய கணேசமூர்த்தியை விரைவில் மெய்ப்பத்தியோடும் பூசணைசெய்யக் கடவை, அதனால நின்பதியாகிய பிரியவிரதன் நின னுமாற்றுள் வசம எவவாறிருக்கின்றனை அவவாறேநின்வசமாகுவா னென்றுசொலலி அவரை யருசிக்கு முறைமையையும் போதித் துச் சென்றனன.

இப்பால கீர்த்தியானவள் மனக்கவலைகளை யொழித்து விதிப் படி ஸ்நானஞசெய்து தனது பூசணைக்குவேண்டிய திரவியங்களைக் கொண்டுவருமாறு பாங்கியருக் குக் கடடளையிட்டு அவ்வாறே அவர் கள் கொணர்ந்தவகை அறுகுதிருமஞ்சன முதலிய திரவியங்களைக் கொண்டு முன்னர் பிரமனுதியர்களாற் பூசிக்கப்பெற்று மந்தாரவி ருக்க நீழலில் வீற்றிருக்கின்ற விநாயகமூர்த்தியைப் பிரதிதினமும் பூசித்துவருகையில், ஓர்நா ளவவறுகு எங்களணு மகப்படாமற் போக அனுதற் பாங்கியர் இதற்கென்ன செய்வோமென்று திகைத் திதமக்கெதிரில ஓர் வனைவிருக்க மிருப்பக்கண்டு காலதாமதமா காதபடி அதனிலைபைப் பறிதது க்கொண்டுபோய் கீர்த்தியினிடத் திற்சென்று, எமதிறைவியே! இததினம் எங்கும் அறுகு அகப்பட வில்லை அதற்குப்பதிலாக வன்னிபதத்திரங் கொண்டுவந்தோம், அஃ து அருச்சனைக்கு உதவும் உதவாதென்பதை யறிந்திலேம், ஆயி னும் அதனைக்கொண்டே இத்தினத்தில் பூசணைசெய்து நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லினர். அதனைக் கீர்த்திகேட்டலும் மனம்வ ருந்தி அறுக்கைக்கொண்டருச்சிக்கு முறைமை இன்றொழிந்ததே யென்று துயருற்று அவ்வன்னிப் பத்திரத்தைக்கொண்டே அத்தி னங் கணேசமூர்த்திக்கு அருச்சனை புரிந்தனள். இவ்வாறு பூசனை நிறைவேறியும் அருகாலருச்சனை செய்யாதகுறை நீங்குமாறுண வினை யொழித்திருந்தனள் அன்றைய விடியற்காலத்தில் அவள்க னவின்கண் ஒற்றைக் கோட்டினையுடைய யானைமுகக்கடவுள் பொழுத் தருளி தமது பொன்போன்ற சடாமகுடத்தில் அவளருச்சித்த

வண்ணிப் பத்திரங்களெல்லாந் தோன்றும்படி எதிர்நின்று, பெண் ணே! நீ வன்னியாற்செய்த அருச்சனையை நாமேற்றுக் கொண்ட னம், அஞ்ஞ நமது சடைமீதிருக்கின்றதுபார், இனி அறுகு அகப் படாமையினு லுனக்குண்டான மனக்கவலையை யொழித்துவிடு, நாம் உனது பரிசுத்தமான பூசனைக்கு உவந்தோம் உனக்கு வேண் டியவரங்களைக்கேள் தருகின்றேமென்று திருவாய்மலர்ந்தருள, கற் பிற்சிறந்த அக்கீர்த்தியானவள் அவரைக்கண்டவுடன் நாண மூற்று வாய்திறவாதிர்க்கத்தண்டஞ்செய்துதெழுந்துஞ்சுதூணின்பக்கமாக ஒதுங்கி நின்றனள். அவ்வொழுக்கத்தினை விநாயகமூர்த்தி கண்டு அவள்கொண்ட எண்ணங்களெல்லாம் நிறைவேறுமாறு தாமேவரங் கொடுப்பதற் கிசைந்து, பெண்ணே! நினதுநாயகன் இருநாள்முதல் நின்னிடத்தில் மிகுந்த அன்புவைத்திருப்பன். உனது மாற்றாட்கு நோய்கள்வந்து நோகச்செய்யும், ஓர்வருடத்திற்குள்ளாக நின்வயிற் றிற் புத்திரனுண்டாவன், அவனுக்குக் கிப்பிரப் பிரசாதனென்று பெயரிடக் கடவை. உனதுமாற்றாள் அவனுக்கு நான்காம்வயதில் போசனத்தில விடங்கடந்திடுவாள் அதனுலவன்மூர்ச்சையடைந்து உடனே இருச்சமதருடைய சேவையினுல் அதனை யொழிகுவன்: என்று இவ்வாறு திருவாய்மலர்ந்து தமது மெய்யடியாருடைய மனக்கோயிலிற்சென்று வாசமாயினர். உடனே கீர்த்தியானவள் கண்விழித்து தனது கனவின்கண் விளைந்தவைகளை நன்றாய்க் கவ னித்து எல்லாக் கவலைகளையுமொழித்து மகிழ்ச்சிகொண்டு பொழு தவிடிந்தவிடன் காலைக்கடன்களை முடித்துப் பாங்கியர் அன்போடு கொணர்ந்துவந்த சந்தனம் புட்பாதிகளால் விநாயகமூர்த்தியைப் பூசித்து, சிவம், சத்தி, விண்டு, கதிர், கணேசர், என்று வேதங்க ளாற் சொல்லப்பட்டிருக்கின்ற கடவுள்யாதோ அதுவே நமதுகன வின்க ணெழுந்தருளியதென்று மதித்து, ஆராமை மீதூர,

அனுதியாம் பரனமலை மால்கதிர்
வினுயக னெனமறை விளம்பு மைவருங்
கனவிடைத் தோற்றிய கடவு ளேயென
மனுவொளி ரல்குலாள் வகுத்துப் பூசித்தாள்.

அகிலமுநீ யதன்காரண னங்கணீ
சகதந் துலமுநீ சாமி நீயெனக்
கிகலருந் தந்தைதா யெவரு நீயென
வுகலரும் பெருந்துதி யோதிப் போற்றினுள்.

ஓ சர்வபுவனதார ஸ்வரூபியாகிய விநாயகமூர்த்தியே! அளவி டற்கரிய அகிலங்களுந் தேவரீரே, அதன் காரணங்களுந் தேவரீரே, சகலதத்துவங்களுந தேவரீரே, அடியாளே யாட்கொள்ளவந்த சுவா மியுந் தேவரீரே, எனக்குந் தாய்தகதைமுதலிய யாவருந் தேவரீரே என்றுமிக்க உள்ளன்பினுடும் அனந்தமுறை தோத்திரஞ்செய்து யதாப்பிரகாரந் தனதிருந்தையைச் சேர்ந்து வாழ்வுற்றிருக்கும்கா ளையில் கணேசமூர்த்தியினுடைய திருவருளினுல் அவள் மாற்றாளாகிய பிரபையென்பவளுக்கு வெப்பநோயுண்டாகி அதன்மூலமாய் அளவற்ற வியாதிகள்வந்து உபத்திரவஞ்செய்ய, அதனுலவள் தன ஆருகனேத்து மிழந்தவளாயினள். இடைவிடாது கணேசமூர்த்தி யைப் பூசணைசெய்யு மகிமையால் கீர்த்தியென்பவள் பெருமகிழ்ச்சி யோடு மிக்க பேரழகினையுடையவளாயினள்.

பின்னர் பிரியவிரதன் இளையாளிடத்தில் வெறுப்புற்று இலக் குமியையொத்த மூத்தாளிடத்தில் விருப்புற்றிருக்க, உடனே அவ ள்வயிற்றிற் கருவுண்டாகி அதுமுதல் ஓராண்டினுள் புத்திர னுற்ப வித்தனன். அதனுல் பிரியவிரதனுங் கீர்த்தியும் பெருமகிழ்ச்சிய டைந்து வேதபாரகராகிய பிராமணர்களைக்கூவி அவர்கட்கு ஆடை யாபரணமுதலிய திரவியங்களைத் தானங்கொடுத்து அப்புதல்வ னுக்குக் கிப்பிரப் பிரசாதனென்று நாமகரணஞ் செய்தனர். அவ னும் நாளுக்குநாள் சந்திரனைப்போலத் தினமொரு மேனியாகவள ர்ந்துவந்தனன். கீர்த்தியெனபவளும் பேருவகையோடும் சுகித்திருந் தனள். என்று சிவபிரான் உமையவட்குச் சொன்னதாகப் பிதிர் தேவனுக்குப் பிரமதேவன் சொல்லியபடி சசிமண்டலனுகிய இந்தி ரன் நாரதசேனமகாரிசனுக்குச் சொன்னன்.

கீர்த்தி மகப்பெறுபடலம்-முற்றிற்று.

விடநீங்குபடலம்.

மதியென விளஞ்சிறுன் வளரக் கீர்த்தியு
முதிர்பெறு மகிழ்ச்சியின் மூழ்கி வாழ்ந்தனள்
கதிருமி ழிளகைகைக் கவுரி யச்சிறுன்
விதியினிக் கேளென விளம்பு மீசனே.

அருமறை யாகமமீனத்து மறிவரிதா யரற்று மற்புதானத்தப் பெருஞ்சோதிப் பெருங்கருணைப் பெருமானது திவ்வியலீலாலை

பவங்களேயே இடைவிடாது செவிவாய்த் தேக்கிச் சித்தஞ்சிவசொரூபமாகப்பெற்ற தபோநிதிகளே? கீர்த்தியென்பாள் மகப்பேறு பேற்றினையும், காயகனெடு விழைவுற் றிருந்தமையையுஞ் சொன்னேம். இப்பால் விடதூங்குபேற்றினைச் சொல்லுவோம் கேட்பீர்களாக அமராபதிக் கிறைவனுகிய இந்திரன் சூரசேனமகாராசனே நோக்கி, அரசனே? எமது தயாவிபவ சாகஷ்தச் சிவபெருமான், உலகமாதாவாகிய உமையம்மைபாருக்குச சொன்னதாகப் பிதிர் தேவனுக்குப் பிரமதேவன் சொன்னதாவது:

மேற்கூறிய கீர்த்தியென்பவள் கிப்பிரப் பிரசாதனென்னுந் தக் தவச்செல்வனேப் போற்றிப் புரக்குநாள அச்சிறுவன் வளர்ந்து வருஞ் கீர்த்தியைப் பிரபையென்பவள் கண்டு மிருந்த பொருணம் கொண்டு, இவன் சீவித்திருப்பானுனில் நமது குமாரனுக்குப் பட்டம் இல்லாமற்போமே யெனனும் நினைப்போடு அவனுக்கு நான்காவது வயதாருங்காலத்தில் போசனத்தில் விடங்கலந்து கொடுத்தனள். உடனே விடமானது தலைக்கேறலும் அவ்விளமைப் புத்திரன் அதனைச் சகிக்கமாட்டாதவனுய்ப் பூமியில் வீழ்ந்து சோபமாயினன். அதனை அவன் தந்தையாகிய பிரியவிரதன்கண்டு நடுநடுங்கி மணிமன்திர அவுடாதிகளாலும் பலவித பரிகாரங்களேச் செய்து அது தீராமையை அவன் தாயாகிய கீர்த்தியென்பவள்கண்டு முன்னர் தனக்கு விநாயகமூர்த்தி கட்டளேயிட்டிருப்பதை நினைந்து, நேஞ்சமே? நமதருச்சனையை அன்போடு மேற்றருளிய விநாயகமூர்த்தி யிருக்கின்றனர். அவர் திருவாய்மலர்ந்த திருச்சமதமுனிவரு மிருக்கின்றார். நீயேன் வீணிற கவலேபற் றழிகின்றனேயென்று தனதுமனதைத் தானேதேற்றிக் கீழேசோபித்து வீழ்ந்து நடுங்கினமைந்தனே யெடுத்துக்கொண்டு திருச்சமத முனி யுடைய ஆசிரமத்தைநோக்கிச் செல்வதாயினள். அவ்வாறு செல்லினும் பாலுசோபத்தோடு மிருந்தமைந்தன் சிறிதும் உயிரின்றி நடுவழியிலே இறந்துபோயிருக்கின்றமையைக் கண்டு பார்பு, தாய், கை, கால்முதலிய விடங்களில் தனதகரத்தைவைத்து முத்தணேபண்ணிய அவன்பற்கள் கரிந்து கிடக்கின்றமையையும், கண்கள் பஞ்சிடைருக்கின்றமையையும் பார்த்து, * ஒன்னர் தகையையும் உற்றூர் தகையையும் ஒழிவித்தமகனே, அடா எனதுகண்மணியே! இளமைபொருந்திய ஆண்சிங்கத்தையொத்த குமாரனே? நின்னல் † மும்மைப்பய

* ஒன்னர்-பகைவர். † மும்மை-மூப்பிதற்பு. இகனே இமமை, அம்மை மறுமை, என்ப.

னும பெறலாமென் றெண்ணியிருந்த என்னை ஆருத்தயரிலழுந்த விட் டிறந்தனையே? மாற்றுரைத்தாயே கூற்றுமென்கின்ற வாக்கியத் தைத்தெளிய வைத்தனையே? அடா எனது தபோபத்தினுல்வந்த அருமருந்தே! பாஷ்யாகிய என்னையும் எனது கெஞ்சத்தையும் நிலை குலையச்செய்து நீற்றுகின்றனையே? உன்னைவ்வாறு யான்கொண் டுபோய் இனி நீற்றவல்லேன்! ஐயோ! உன்னைவிட மிட்டுக்கொன்ற பாதகியே இரக்கக்கண்டு ஆனந்தக்கண்ணீர் விடவொட்டாமலா நீ இக்காட்டின்கண்வருது படிந்துபோயினை! அடா எனது அருமைச் செல்வமே ? என்றிவ்வாறு அக்காட்டுளுள்ள மிருகங்கள் பறவை கள் விருடசங்கள் முதலானவைகளுங் கணைரீவிட் டிரங்கும்படி யாக கெஞ்சங்கலங்கிப பிரலாபித்தனள்.

அதற்கு எனது உன்னைக் கொப்பானவராகிய கணேசமூர்த் திக்குத திருவுளமிரங்யதுபோல அவை யணைத்தையுங் கிருச்சத முனிவர் தமது ஞானநோக்கினு லறிந்துகொண்டு மனதிரங்கிப் ‡ பொள்ளென்று தனதாசிரமத்தை விட்டெழுந்து அவள் வருந்து கின்ற இடத்தையடைந்தும இறந்தமைந்தனை மடியின்மீதுவைத்து எதிரில் வருவோருந தெரியாமல மதிமயங்கி யழுதுகொண்டிருக் கினற கீர்த்தியைக்கூவினர். உடனே தமது புதல்வனைப் பூமியில்வ ளர்த்திமிக உருக்கத்கிஞனும் அமமுனி புங்கவருடைய திருவடி களைப்பணிந்தனள். அதற்கம் முனிவர கிருபைகூர்ந்து அம்மணீ! நீயார்? நீவிம்மிவிமமி ழுது கொண்டிருக்கின்ற காரணமென்ன? அதனைச் சொலென்று வினவலும், கீர்த்தியானவள் சிறிது மனந்தேறி சுவாமி! அடியாளபிரியவிரதனென்னு மரசன்மனைவி; இப்புத்திரனை அடியாட்கு அரியதவப பேற்றினுலுண்டானவன்; இவன்எனது மாற்றுரைட்டிய விடத்தினுல் உணர்வழிந்தனன். அடியாட்கு விநாயகமூர்த்தி புத்திரவரம் தந்தபோதே இவன் நான்காமவயதில் விடமூட்டப் படுவனென்றும், அது கிருச்சமத முனிவராக் தீருமென்றும் திருவாய்மலர்ந்திருக்கின்றனர் அத்திரு வருளைத் தலைமேற்கொண்டு உனர்வழிந்திருக்கின்ற மைந்தனைடுக் தேவரீர் ஆசிரமத்தை நோக்கி இவ்வனத்தை வழிகொண்டு வரும் போது கடிவழியில உயிருமிழந்தனன். அதைக்கண்டலும் எனது மனமானது கவலைக்கடலின்றும் கரையேற மாட்டாமையால் எம தாண்டலராகிய கணேசமூர்த்தியி னுடைய திவாக்கினையு மறந்து பிரலாபிப்பதாயினன். தேவர்களெல்லா மதிக்கத்தக்க பெருங் கீர்த்

‡ பொளெனல-விரைவுக்குறிப்பு

இயினிவரய்ந்த தேவரீரே அடியாட்கிரங்கி வந்தமையால் நஞ்சண் டெமன்கையிலகப்பட்ட எனது குமாரனையெழுப்பி எனியேனையும ஆட்கொண் டருளவேண்டுமென்று பிரார்த்தித்து மீட்டுத் தீர்க்க தண்டஞ் செய்தனள். அதற்கு அக்கிருச்சமதமுனிவர் மனதிரங்கி நீ இனி ஒன்றிற்கும் அஞ்சலியென்று அபயமளித்தந் தந்து இலக்கு மியை யொத்தவளே! முன்னர் வனனிப்பத்திரத்தால் கணேசமூர்த தியைப் பூசைசெய்திருக்கிறனை யதலால், அப்பூசையின் பயனை உனது புத்திரன்கையிற் றத்தஞ்செய்யக்கடவை யென்றனர். அதற் குக் கீர்த்தி இதுவோ எனக்கரிதென்று சாதோஷித்து அவ்வாறே தான்செய்த பூசையின்பயனை அவன்கரதகி தத்தஞ்செய்தனள் உடனே அச்சிறுவன் உறங்கி விழித்தவன்போல எழுந்து கிருச்சம தமுனிவருடைய திருவடிகளைச் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து அவர்பேரருளைப் பூரணமாகப்பெற்று வாழ்ந்திருந்தனன். என்று சிவபிரான் உமையவட்குச் சொன்னதாகப் பிதிர்தேவனுக்குப் பிர மதேவன் சொல்லியபடி தேவேந்திரன் சூரசேன மகாராசனுக்குச் சொன்னன்.

விடகீங்குபடலம்-முற்றிற்று

சமிமந்தார வுற்பத்திப் பலடம்.

கடவீட் கொருநாளதன்பெருமை காணு தருச்சித் திடமைந் தன், விடமவிட்டகல வெழுந்திருந்திருந்தான் மெய்மைத்தவத்தோ யத்தையு, வடருமிலைவன்னியின்பெருமை யறையல் வேண்டுமென விரந்தா, ளுடலம் வெறுத்த கிருச்சமத னுவந்து கீர்த்திக்குரை செய்வான்.

எல்லாந் திருவருட் செயலே யெனத் தேற்றித்தெளிந்த முனி வர்களே: கீர்த்தியென்பள் விகாயகமூர்த்திக்குவன்னிப் பத்திரத் தா லருச்சணைசெய்ததும், அவ்வருச்சணைப் பயனல் விடமுண்டிறந் தபோன அவள்புதல்வனுகிய கிப்பிரப்பிரசாதனுயிர்த்தெழுந்ததுஞ் சொன்னேம். இப்பால் அவ்வன்னியும் மந்தாரமும் உற்பவித்தாவ லாற்றினைச் சொல்லுவாங் கேட்பீர்களாக.

தேவேந்திரன் பின்னுஞ் சூரசேனமகாராசனை நோக்கி, அரச னே! சிவபிரானீ உமையவட்கு மற்றொரு கதையுஞ் சொன்னதாகப்

பிதிர் தேவனுக்கு பிரமன் சொன்னதாவது: மூற்கூறியகீர்த்தியென் பள் மீட்டுங்கிருச்சமதமுனிவரைப் பணிந்தெழுந்து, சுவாமீ! வ்ன் னிப்பத்திரத்தினுடைய மகத்துவங்கெரியாமலேஒருநாள் அதனைக் கொண்டு விநாயகமூர்த்தியை யருச்சித்தேன், அதனால் விடமுண் டிறந்த எனதுமைந்த னெழுந்தான், ஆதலினால்; அதனது பெரு மையை யடியாட்கு விளம்பியருள வேண்டுமென்று பிரார்த்தித் தனள் அதற்கம் முனிபுங்கவரிசைந்து, வாய்மையிற்சிறந்த மரத வத்தோர்க்கும் எட்டுதற்கரிய கணேசமூர்த்தியினுடைய திருவடி களுக்கன்புவைத்திருக்கின்ற அரிவையே! யாவரேனும் ஒருகால்வன் னியென்று வாக்கினைக் கூறுவராயின் * அவ்வாக்கினால் அவர்கள் அனந்தம் பிரவிகள்தோறுஞ் செய்தமுற்றிய தீவினைகளெல்லாம் அழலிற்பட்டபஞ்சுபோலாகும். அதனினிப்பராயின் † மனத்தா ற்செய்தபாவங்களெல்லா நீவிர்த்தியாகும். அதனிவலம் வந்தாலும் நேரிற்சென்று தரிசித்தாலும் கைகளைக்கூப்பித் தொழுதாலும் ‡ காயத்தாற்செய்த பாவங்களெல்லாம் மாறிவிடும். பஞ்சாக்கினிமத் தியினின்று தவஞ்செய்தவனுண்டாகின்ற பேறும், ஐடையாபர ணிகளைத் தானஞ்செய்தவனால் அடைகின்றபேறும், விரதம், யாகம் முதலானவைகளைத் தானஞ்செய்வதனால் வருகின்ற பேறும், ஒருவன்னிப் பத்திரத்தாற் செய்த அருச்சனையா லுண்டாகும் பய னுக்கொவ்வாது, அன்றியும், இம்மையில் அளவற்றபோகங்களை யோர்கணப்போதி லூட்டுவிக்கும். மறுமையில்விண்டு முதலாயினை ருடைய பதவிகளிற் செர்ப்பிக்கும். ¶ ஆணவமுதலிய மும்மலங் களையும் போக்கி மெய்ஞான போகத்தையளித்து கணேச மூர்த் தியினுடைய உள்ளத்தில் மேவச் செய்யும் ஒருகோடி கற்பகாலம் வறையிற்சொன்னாலு முடிவுறுதசிறப்பினைவாய்ந்த அவ்வன்னிப்பத் திரத்தின் மான்மியத்தைத் தேவேந்திரனுக்குந் நாரதமுனிவர் உப தேசித் திருக்கின்றனர். அதனை உனக்குச் சொல்லுவோங் கேட்ப யாக. முன்னொரு காலத்தில் ஈந்திகோத்திர ரென்னும் ஓர் முனிபுங்

---

* வாக்கினுறை செயயும பாதகங்கள பொய், புறங்கூறல், கடுஞ்சொல், வெட்டெனப் பேசல், பரிகாசஞ் செய்தல், நிந்தித்தல் முதலியன.

† மனதாற் செய்யுமபாதகங்கள், அழுக்காறு, அவா, வெகுளி, கோபம் சலஞ்சாதித்தல், மறதி, வீணினைவு, தூய்மையின்மை முதலியன.

‡ காயத்தாற் செய்யும்பாவங்கள்: அவத்தொழில், சோம்பல், தீயினஞ் சேர்தல், கொலை முதலியன.

¶ மும்மலம்: ஆணவம், கன்மம், மாயை.

சுவரிருந்தார் அவருக்கு வேதாகமமாதிகளே யோதியுணர்த்தவரா கியும் எல்லாமேன்மைகளு மியல்பாயுள்ளவராகியு மிராகின்ற அவுர வரென்னும்ஒருபுத்திரரிருந்தனர். அவருக்குசுமேதையென்னும்பெ யரினையுடைய ஒருமனைவியிருந்தனள். அவுரவமுனிவருஞ் சுமேதை யுஞ்சுகித்து வாழ்வுற்றிருக்கும்காலையில் இவர்கட்குச்சமியென்னும் பெயரினையுடைய ஒர்பெண்குழந்தையுண்டாகி அதற்குமணப்பருவ முண்டாகலும், தாய்தந்தையர் அப்பெண்ணிற்கேற்றபுருடனை நாடி க்கொண்டிருந்தனர். அக்காலத்தில் தவுமியமுனிவர் புததிரணுகியும், மகா தவசிரேஷ்டர்களுக்குள் * மடங்கலே றெத்தவனுகியும், சவு னக முனிவரையடித்து அவர்க்கேவல்செய்து கொண்டு தவம் புரிப வனுகியும் மந்தாரனென்னும இயற்பெயரையுடைய ஓர் முனிபுத்திர னிருந்தான். அவனே மேற்கூறிய அவுரமுனிவரும், அவர்பத்தினி யுங்கண்டு இவனே நமதுதவச்செல்விக்கேற்ற மணுளனென்றுயோ சித்து அதிக சந்தோஷத்தோடும் தீர்மானித்துப் பிரமம், பிரசாபத் தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம் பை சாசம் என்னும் † எண்வகை மணத்தினுட்சிறந்த ‡ தன்ம மணத் தினு அவனுக்கு விதிப்படி விவாகஞ்செய்து கொடுத்தார்கள்.

பின்னர் அம்மந்தார னென்பவன் அப்பெண்ணைத் தாய் வீட் டிற்றனே யிருத்தித் தான் முன்போலவே சவுனகமுனியையடைந் தி, அவரிட்டயேவல்களீச்செய்துகொண்டு தவத்தி லிருந்தனன். இவ்வா று சின்னளாகலும் மந்தாரன் அம்முனிவரிடத்தில விடை பெற்றுஅவரீவாசிரமத்தை யடைய, அப்போது சமி யென்பவள் புட்பவதியா யிருத்தமையால் உடனே அவ்விருவருக்குஞ் § சாந்தி

* மடங்கலேறு: மடங்கல ஏறு-அணஞகம.

அப்புத்திரனுக்குங்காணிக் கையுமில்லாமல் ஏணிய அவயவங்க ளெல்லாம மிக்க அழகு வாய்ந்திருப்பக் கண்டு சகந்தமனங் கலங்கி ஐயோ! எனது பங்கிற்அனு இப்பங்கமானபிள்ளை வரவேண் டுமென்று அஞ்சித் திருந்தனள். அதைஅரசன கேள்வியுற்றுத்தர னும் அப்புதல்வனை வந்து பார்த்த அதிகதயரங்கொண்டு கன்ம னைதைத் தானே தேற்றி, பெண்ணே! அப்புத்திரன் விரயகப் பெரு மானுடைய விரதபலத்தினு லுண்டானவ ஞதலால் இவனுக் குண் டாயிப வுடற்குறையை அவ்விசாயக பெருமானே விலக்கி யருளு வர் நீ யொன்றற்கும் அஞ்சலிசென்று தனதுமனைக்குத்தேறுதல் சொல்லிப் பின்னர் அக்குழகதைக்குச் சாதக கன்மாதிகளைச் செய் து, வேதப்பிராமணர்கட்கெல்லாம் இரத்தினங்களையும, பொன்களை யும் மழைபோலச் சொரிந்து, காதத வீரியனுக்குப் பன்னிரண்டு வருடமானபோது தேத்தாதத்திரிய முனிவர்தற்செயலாய்க கிருதவீ ரியனிடத்தில் வர, அவரை யவ்வரசன் எதிர்கொண்டு பணிந்துஓர் தனத்தி லிருத்தி. சுவாமி! அடியேன் பலநாள் அரிய தவங்களைச செய்து ஓர்புதலவனைப் பெற்றேன் அவனை பகைவர்களெலலாய் கண்டு நகைக்கும் படியாகக்காணங் கையுமில்லாதவனுய்த் தோன்றி னன். யானியற்றிவந்த தவங்களில்குற்றம் யாதாயினு முண்டோ அறிந்திலேன் வெகுநாள் புத்திரனிலலாமல் வருந்தினேன். பின்னர் ஓர்புத்திரனைப் பயந்தும் என்மனக்கிலேசந் தீர்ந்தேனல்லேன். என் னசெய்குவேன்? அடியேன்மீது தேவரீர் கிருபைவைத்து அப்புவல் வனுக்கு முடனும் நீங்கு முபாயமொன்றை யனுக்கிரகித்தருள வேண் டுமென்று பிராரத்தித்தனன்.

அதற்கத் தேத்தாத்திரிய முனிவர் மனதிரங்கி, அரசனே! யாம் எனது புதலவனைக் காணவேண்டியே இங்குவந்தோம். ஆதலால் அவனை விரைவிற் கொண்டுவரக் கடவை யென்று சொல்ல, அவ் வாறே அப்புதல்வனைக் கொணடுவந்து எதிரிலவிட, அவனை அம முனிபுங்கவர் பார்த்தருளி, அரசனே! நீ இப்புதலவனைக் குறித்து யாதொரு கியரமும் கொள்ள வேண்டியதில்லை. இவன் இவ்வுலகத் திற்கெல்லாஞ் சக்கிரேஸ்வரனுயிருப்பனென்று சொல்லி, அப்புதல் வனுக்குந் நீகைசெய்து, விநாயக மூர்த்தியினுடைய ஏகாட்சர மந்திரத்தை யுபதேசித்துப்போயினர். பின்னர்கார்த்தவீரியன் தன் தந்தையாகிய கிருத வீரியனைப் பார்த்து, பிதாவே! யான் தேத்தாத் திரிய முனிவ ருபதேசித்தமந்திரத்தை யநுட்டித்து வரும்பொழுது

தற்குஎன்னை வனத்திற்கொண்டு போய்விடவேணு மென்று கேட்டனன் அவ்வாறே அரசன்சகல பரிசனங்களோயுங்கூட்டி, அனுப்பத் தக்கவரிசையோடும் அவனை வனத்திலனுப்பினன். இப்பால் அப்புத்திரன் வனத்திலிருந்து அன்ன பானதிகளை நீத்து, கணேசமூர்த்தியைக் கருத்திலிருத்தி, ஐம்பொறி களோயு நிக்கிரகித்து ஒப்பற்ற ஏகாட்சர மகாமந்திரத்தை இடைவிடாது தியானித்து வந்தனன் இவ்வாறு பன்னிரண்டு வருடஞ்சென்ற பின்பு, அவன் செய்து வருகின்ற தவத்திற்குவிநாயக மூர்த்திகிருபை சுரக்க, அவ்விடத்திலுள்ள ஓர் தடாகத்தினிடமாக அளவற்ற தேவர்களோடுந்தோன்றி பிரத்தியக்ஷ மாயினர். உடனே தானெழுந்து வணங்கக்கூடாமையால், தனது மனத்தாலனந்தமுறை வணங்கினன் அகற்கு விநாயகப்பெருமான் சந்தோஷித்து, அன்பனே! நீகருதிய வரங்களைக்கே ளென்று திருவாய் மலர்தலும், சுவாமி! முடவானுமிய எனதுமுகத்தைநோக்கி முற்றினுங் காத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனன் உடனே விநாயகமூர்த்தி அவனுக்கு இரண்டுகால்களையும் ஆயிரங்கைகளையுந்தந்து, அதற்கேறறவலியையுங்கொடுத்துத் தமதருக் கரந்தருளினர். பின்னர் அவ்விநாயகமூர்த்தியுடன் வந்திருந்த பிரமன்முதலிய எல்லாத்தேவர்களும் அக்கார்த்த வீரியனைப்பார்த்து, ஓ வீரதசிலனே! நீ ஒரு கற்பகாலம்வரையில் ஆயுள் பெற்றிருத்தி யாவர்க்கும் இதமே செய்து எதிர்த்து வருகின்ற சத்துருக்களை யெல்லாம ஐந்நூறுபாணங்களினல்செயித்து வாழ்ந்திருக்கக்கடவை யென்று அநுக்கிரகித்தார்கள்.

இப்பால் தனக்குக் கணேச மூர்த்தி வரங்கொடுத் தகலுமுன்னமே, இரண்டு கால்களும் ஆயிரங்கைகளு முண்டாகக்கண்டு கர்த்தனுடைய கிருபையை நினைத்துநினைந்து, மனமுருகி, ஆனந்தக்கண்ணீர் சொரிந்து, முடிவற்ற அன்பினல் அவர் கரத்தருளிய திசையைப் பலமுறை தணங்கி, சிறபச த்திர விதிப்படி பொன்னினாலும், மணியினாலும் ஓரிலயஞ் சமைத்து சர்வ சுடாதர மூர்த்தியாகிய விநாயகப் பெருமான் தனக்குப் பவள வொளியோடு மெழுந்தருளிக் காட்சி கொடு தமையால், பவளத்தினல் ஓர் மூர்த்தியைச் செய்து அம் மூர்த்தியை அவ்வாலயத்திற்ருபித்துப் பூசித்து வந்தனன். அம்மூர்த்தி பவளத்தினாற் செய்திருக்கின்றமையால் அதற்குப்பிரவாள விநாயகரென்றும், இவ்வனத்திற்குப் பிரவாளவனமென்றும் பெயர் வழங்குகின்றது' அப்பிரவாள விநாயகருடைய பெருமைகளை முழுவதும் யாவராற் பேசக்கூடும். பின்னெருகாலத்

தில் ஆதிசேடன் பூபாரம் பொறுக்கும்படி அவ் வனத்தின்கண் வந்து வந்தித்தனன் அதற்கவர் கிருபைசுரந்து அவன் பூபாரம் பொறுக்கும்படி வரங்கொடுத்தருளினர் பின்னர் ஆதிசேடன் அவ்வனத்தின்கண் ஓர் நகரமுண்டாகி அதற்குத் தரணிதர நகரமென்று திருநாமமிட்டுத் தனதே யாட்கொண்ட பிரவாள விநாயக மூர்த்திக்குத் தரணிதர விநாயகரென்று மறுநாமமுஞ் சாற்றினன். இராவணனும் அம்மூர்த்தியைப் பூசித்து இலங்காபுரி பக்தியம் பெற்றனன். பஞ்ச பாண்டவர்களும் அவரையே பூசித்துத்தமி யோதனருக்கோச் செயித்து அரசாட்சிபெற்றனர். அரசனே! இத்தன்மைத் தான சிறப்பினை வாய்ந்த சங்கட சதுர்த்தி விரதஞ்செய்தபலனிலே, ஒருநாள் விரதபலனை யாராகிலும் நமதுகையில்தத்தஞ் செய்தால் இவ்விமானம விண்ணிலெழுமபும் என்று தேவேந்திரன் சூரசேன மகாராசனுக்குச் சொல்லினன்.

கிருதவீரியன் மகப்பெறு படலம் முற்றிற்று.

இந்திரவிமானம் விண்ணெழுபடலம்.

மூள்ளரை முளரிவாழ்க்கை முன்னவன் பிதிரீ ராற்றல்
வில்லரு மொருகோட் டெருதை விரதசீ ரிசைத்தா மற்றை
வில்லல ருடுத்த தாரு விண்ணர சகங்கொ ணீரான்
மல்லல்வான் விமானமேய வகைகிறி தறைது மன்றே.

சுடர்மனக் குகையுளோமொழிப் பொருளை யடக்கி யாணர்த்மூறுஞ் சவுனகாதிமுனிவர்களே! கிருதவீரியமகாராசன் விநாயகமூர்த்தியினுடைய சங்கடசதுர்த்தி விரதத்தை யனுட்டித்துக் கார்த்தவீரியனைப்பெற்ற காரணத்தைச் சொன்னோம், இப்பால்இந்திரவிமானம் விண்ணெழு பேற்றினைச் சொல்லுவோங் கேட்பீர்களாக; அச் சூரசேன மகாராஜன் தேவேந்திரனைப் பணிந்தெழுந்து, ஓ! சுரலோக சக்கிரேஸ்வரரே! அங்காரக சதுர்த்திவிரதத்தின் மகிமையையும், அறுகு வன்னிமந்தாரை இலைகளின் பெருமையினையும் அடியேற்கு அங்ஙை கெளிலிக்கனிபோல அறிவித்தீர். அதனையெல்லாம் ஐயமில்லாமல் அறிந்து கொண்டேன் இத்தன்மைத்தான மேலாயை விரதத்தை இம்மூவுலகின்கண் ஒருவரும்சொல்லயான்கேட்டதில்லை அதற்கடியேன் புரியுங்கைம்மாறென்னவிருக்கின்றது,என்

றுபலமுறை உபசரித்து எவ்வாறேனும் அக்காரக சதுர்த்தியை அட்டிக்கின்ற ஓர் விதியைக் கண்டுபிடித்து இவ்விமானத்தையின் ணைழுப்பவேண்டுமென்று உத்தேசித்து அவ்விதியைக் கண்டு பிடிக்குமாறு நாறறிசைகளினுந் தூதுவரை யேவினன், அத்தூதுவ ரும் அவ்வாறே சென்று வீடுகள தோறும் விசாரித்துக் கொண்டு வருகின்றபோது மறறொருநிமானம ஆகாயத்தினின்று பூமியிலியங் கக்கண்டு அதன் ரையை யறிவோ மென்று அருகிற் சென்றனர். பின்னர் அவவிமானத்துள்ளிருந்த தேவ கணங்கள் அங்கரத்தி லிருந்த ஓ புலேசனிக்குக் செய்ல சர்ரயகொடுத்த அவனோ ஆடல்பா டல்முதலிய சிறபபுகளோடு அவவிமானத்திலேறறகணடு இதென ன அறபுதமென்று ஆசசரியங் சொண்டவர்களாய் உடனே அவர் களைப் பணிந்தெழுந்து, ஓ கணகரபாகளே ! இவள இப்பிறவியிற் புலேச்சியாயிருந்தனள, லவளவேனுங் தருமமென்றதைச் செய்த நியாள் முற்பிறவியிலயாதேனுஞ் செய்நிருக்கின்றனளோ அதனை யறிந்திலம். அரிய தவத்தர்கட்குங் கிடைத்தற் கருமையதாகிய இதெய்வ விமானதை இவளுக்குத் தந்தீர்களாதலால், இவள தபுண்ணிய டலனை இன்ன தென்று அடியோங்கட்குத் தெரிவித்தருள வேண்டுமென்றுபிரார்த்தித்தார்கள. அதற்கத தேவகணங்களினைச் த சொலலுவார் வைகாள தேபத்தில் அரசாட்சிசெய்து வந்த சர ங்கதரனென்னுய ஓரசனிருந்தன. அவனுகுச்சுருதிரியென்கின் றஒருதல்லி யிருந்தனள். அவள் சித்திய வென்னும் அரசகுமார னுககு மனியாட்டபா யிருந்தனள. அயினும, அவளது இசைக்கி யானத்தினையும வெருண்ட பார்வையினையும், உருவலட்சணத்தி னையும, தேவர்களாயினும அருகுக கெற்பபடுவார்களாயின் உட னே மயங்கமறு செலகை முதலில. இவளுகு கற்பெதைக் கண வினை கண்ணு மற்பாளாகி இலைறமேல்பூகத்தை மீத்து, தன்னை வி ழைதேதவை யெல்லாந் தானும் விழைதது, வருணச்சிரம முதலிய வைகளைத் தூறகுகலந்திருந்தனள. அதை அக்கினி சாட்சியாய் வி வாகஞ் செய்த அவள் கணவன் அறிந்து, அறிவற்றவளே! எனது குலத்தைக் கெடுப்பதற்காகவா எனக்கு வந்து நேர்ந்தனை?. இனி இவ்விடத்தில் வெளியிற் செல்லுவையெனில், உன்தலையை உலகு கேஇரையாக்குவனெனறு கோபித்து அவளைக் காவலில்வைத்த னன். அவ்வாறே சிலகாள் அடக்கி யிருப்பவள்போலிருந்து மன திற் கபடங்கொண்டு தனது கணவன் நித்திரைசெய்யுஞ்சமயத்தில் வாளைக்கொண்டு அவனுயிரை மாய்த்துப்பரபுருடனிடத்திற்போய்ச்

சுவித்திருந்தனள். அதைக்காவலாளர்க ளறிந்து சித்திரராசனைக் கொலைசெய்தவள் இவளேயென்று நிர்மானித்து, அவள் கைகளைக் கட்டி, பிழுத்துக்கொண்டுசென்று, அரசனுத்தரவின்படி யவளைச் சேரித்தனர். உடனே அவளை யமதூதர்கொணடுபோய் அளவற்ற காலங்கொடியநரகங்களிற்செலுத்தி, வதைசெய்து, பின்னர் இங்கு ரத்திலுள்ளசேரியிலே புலைசகியாய்ப் பிறக்குமபடி விடுத்தார்கள். இவள் முன்ஜனன முழுவதும் பாவமே செய்தல ளலலாமல் ஓர் தினையளவும் புண்ணியஞ்செய்ததில்லை. இச்சனனதநில இதுதா றும் ஒரு புண்ணியமுஞ செய்தரியாள். இவள் இதுதன்மைத்தான மகாபாதகியா யிருநதபோதிலும், இன்றுதபகாலத்திற் கள்ளருந் திப் பகலெல்லாம அதிகவெறியினற் றலையெடுக்கமாட்டாது கிடநது பொழுதுபோனபின்பு சிறிதுவெறிதீஙகிய பசியதிகர்க்க, அதனால் இரைதேடி ஓர் வீட்டினருகிற்சென்றனள். அவவாறு செல்லுகை யில் இத்தினம விராபக சதுர்தசியாதலால் அச்சதுர்த்தி விரதத் தையவ் வீட்டிலுள்ளோர்கள் அநுட்டித்துக கணேசமூர்த்திக்கு நிவேதித்த பதார்த்தங்களிற் றுங்கள் புசிதது மிருநதசேடதைதத் தெருவிற் கொண்டுவந்துவிசினர்கள். உடனே இப்புலைச்சியானவள் அதனையெடுத்துத் தனது பசிதீரப்புசித்தனள். மேலுமவ் வீட்டி லுள்ளோர்கள் கணபதி! கணபதி! கணபதி! யென்று துதிசெய்தார் கள் அதனைகேட்ட தானுங் கணபதி! கணபதி! கணபதி! யென்று முக்காற்கூறினள. இவள் சங்கடசதுர்தியிற்றமதுதிருநாமத்தைச் சொன்னாளென்று விராபகமூர்தித்குக் கிருபைசுரநது இவளை அன் புடன் கொண்டுவருமாறு எங்களுக்காக்கியாபித்தனர். அவ்வாறே யாங்கள்வந்து இவளுக்குத கெய்வசரீரநதநது விமானதிலேற்றி னேம இதுதான் புலைச்சியை வீடுபுகச்செய்தகாரணமென்று தே வகணங்கள்கூற, அதைக்கேட்டதூதர்கள மீட்டும் அவர்களைத்தொ ழுதெழுநது, ஓகணத்தலைவர்களே! இந்திரன ஆகாயத்திற்செல்கின் றபோது ஓர் கோபாளியினுடையபார்வையால அவனுடைய விமா னங் கதிதப்பி இப் பட்டணத்தி லிறங்கியது, அஃதமீட்டும் ஆகா யத்திலேறும்படியாக நீங்கள் காட்சிகொடுத்தருளவேண்டுமென் றுபிரார்த்தித்தார்கள். அதற்குத் தேவகணங்களிசையாமல், எமது கர்த்தாவினது கட்டளையாதோ அதனையாங்கள் செய்துவருவதே யன்றி எங்கள்சுதாவில் மற்றொரு காரியமுஞ் செய்யோமென்று சொல்லித நிமிஷத்தில் ஆகாயமார்க்கமாக விமானத்தைச் செலித்துக்கொண்டு போனார்கள்.

இப்பால் சிறகுற்றெழுந்த மலைபோல் ஆகாயவீதியைக் கிழித்தச்செல்கின்ற அவ்விமானத்தில் புகுச்சரீரமொழித்து, தெய்வசரீரம் பெற்றிருக்கின்றவளது பார்வையானது இந்திரனுடைய விமானத்தின்மீதுபட்டன உடனே ஆண்டவனுடைய திருக்கண்ணேக்கத்தால் ஆணவமலத்தினின்று மெழுந்தவர்கள்போல அவ்விமானமும் எழும்பி ஆகாயமார்க்கத்திற் சென்றது. பின்னர் அத்தூதர்கள் தங்களரசனிடத்திற்சென்று பணிந்தெழுந்து ஆகாயத்திலிருந்து மற்றொரு விமானம் வந்ததையும், அதமீட்டுத் தனதுகதியிற்சென்றதையும, அதனுல் இந்திரவிமானம் விண்ணிலெழுந்ததையும் விவரமாகச்சொல்ல, அவையனைத்தையும் சூரசேனமகாராசன்கேட்டு அவ்விரண்டு விமானத்தையுஞ் சாஷ்டாங்கமாகத் தொழுதெழுந்து, பிறவித்தளித்திரனுக்குப் பெரும்பாக்கியங்கிடைத்ததுபோல ஆனந்தமுற்றுததனது அரண்மனையிற் சென்று விநாயகப்பெருமான் பெருங்கருணைபை நினைந்து நினைந்தும், அவனடியாரது பெருமையை உள்ளூர்மகிழ்ந்து மிருந்தனன்.

இந்திரவிமானம் விண்ணெழு படலம முற்றிற்று.

சூரசேனன் முத்திப் படலம்.

என்றுமலர்த தவிசாளி யிறைஞ்சியசீர் வியாதமுனிக்
கன்றுபுவி விமானத்தோ டடுத்தமக வான்மீட்டு
மொன்றுவிசும் பெழுமளவு முற்றபல கதைமுழுதுந்
தொன்றுதொடு முறையாகச் சுவையமிழ்த மெனவிரித்தான்.

வேதாகமாந்தமாக விளங்கும் மகாவாக்கியார்த்தமாகிய தேனீயுண்டு, சதாநிஷ்டானந்தமாகிய போகத்தையனுபவிக்கு மஹாத்துமாக்களே! முன்னர் சித்நிமுத்தியாதிகளே வினவித்துச்சகலமுந் தன்மயமாக விளங்கும்பிரணவசொரூபராகிய நமதிவிநாயகப்பெருமான் பரிபாகருடைய ஞறிப்பின்வழியே செல்லத்தக்காருண்மையாதலால், அங்ஙனமே இந்திரனுக் குவந்தமைமையுஞ், சங்கடசதுர்த்தியினதுபோராற்றலையுங் கூறினேம். இப்பால் இந்திரனுற்றி விநாயஞ், கணேசமூர்த்தியினது திருவருட்பேறேதனது செயலெல்லாமெனத்தெளிந்தனுட்டித்துவந்த சூரசேனன் முத்தினப்பேற்றினைக்

கூறுவோம கேட்பிர்களாகவென பிதிர்தேவனுக்கு அடக்கிதழ் முள ரிவாழ்க்கைச் சதமுகன் கூறுவதாயினன்:—

ஓ, பிதிர்தேவனே! சூரசேன மகாராசன் தமக்கு இந்திரனி டத்துச் சனித்த பேருணர்வினலும், விரதவிரத மேண்மையைக் கேட்ட முன்னே வினைசம்பவத்தாலும், கணநாயகரைப் பூசித்தபுண் ணியத்தாலும், அன்பூற்றெடுக்க வூறியவள்ளஞ் சிவசொரூபமோ யினன். அக்கால்தங்குலக்குருபரனுகிய வசிட்டர் வந்தனர் வருத லும் சூரசேனன்பேருவகையோடும் வழிபாடுசெய்த தங்குறைபா டணைத்து முறைகூறி யவரைப்பேராதவராகக் கொண்டு மாசிமாதம் அமரபட்சத்தில் வருகின்ற அங்காரக சதுர்த்தியில், கணேசமூர்த் தியை மனதிற் றியானித்து, வேதாகம முறைமைப்படி விரதமதுட் டித்து, மாதமாம் வருகின்ற சதுர்த்திதோறும் இடைவிடாது பூ சித்து வாழ்கின்றகாலையில், விநாயக மூர்த்தியினுடைய பெருங் கரு ணையால் தேவகணங்கள் ஓர்விமானத்தைக் கொண்டுவந்து அவ்வரச னெதிரி றிறங்கினர்கள். உடனே அரசன் ஆனந்தங்கொண்டு ஒரு ரேலென்று அவ்விமானத் தருகில்வந்து மும்முறை வலஞ்செய்து சாஷ்டாங்மாகப் பணிந்துகின்றனன். அவணித் தேவகணங்கள் நோக்கி, அரசனே! உன்னை யழைத்துவருமாறு கணேசமூர்த்தினல் கட் காக்கியாபித்திருக்கின்ற காதாலால் விரைவில் இவ்விமாத்தின் மீதெழுந்தருள வேண்டுமென்று சொன்னர்கள். அதனியரசன் செவிக் கமுதாகக்கேட்டு, ஓ கணநாதர்களே! இவ்வூரிலுள்ளோர் யாவரும் ஒரு கணப்போதேனும் நம்மைவிட்டுப் பிரிந்திருக்க மாட் டார்கள் ஆதலால் அவர்கள் யாவத்திராளையும், என்னுடனேகூட அ ழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று இரந்தனன். அதற்கு உனதிட்டப்படியே செல்லலாமென்றுவிடைகொடுத்தனர். உடனே அந்தகரிலுள்ளவர்களெல்லாம் அவ்விமானத்தின்கணேறினர் சூர சேனமகாரசேன் தனதுசுற்றத்தினர் முதலியசகல பரிசனங்களோ டுமேறினன். முன்னா நகரத்தார்ஏறியபோது தொழுநோய்கொண் டிருக்கின்ற ஓர் வணிகனுமேறினன். அவ்வணிகன் மகாபாவியாத லால் அவ்விமானம் பூமியை விட்டெழாமல் முன்னர் இந்திரவிமா னம் எவ்வாறழுந்தி யிருந்ததோ அவ்வாறிருந்தது. அதன்காரணத் தைக் கணநாதர்களுணர்ந்து, அரசனே! இவ்விமானத்திலேறியிருக் கின்ற சனங்களிற் குட்டநோய் கொண்ட ஒருவணிகன் இருக்கின் றனன் அதனல் இவ்விமானஞ் சற்றும் எழவில்லை. என்றுகூற சூரசே னன் கணநாதர்களை நோக்கியாது காரணம் விபரமாகச் சொல்லி

யாளவேண்டுமென்ன, கணகாதர் கூறுவதாயினர்: அரசனே அவ்வணிகன் முற்பிறபிற்பெரும் பாதகஞ் செய்தவனதலால இப்பிறவியில் இக்குட்டநோய்கு இரையாயிருக்கின்றனன். அவனதுவரலாற்றைச் சொலலுவாங்கேட்பாயக.

கவுட தேயத்திலே வசில ரென்றொரு வேதியரிருந்தார். அவருக்குச் சானகி யென்னுமொரு மனைவி யிருந்தனள். இவ்விவருஞ் சுகித்து வாழ்கின்றநாளையில் இவர்கட்கு ஓர் புத்திரனுண்டாயினன். அப் புத்திரனுக்குச்சாதகம் பார்த்துப் புதனென்னும் நாமமிட்டனர். அவனும் அப்பெயருக்கேற்றபடி வீரி வளர்ந்து வேதங்களோயோதிக் கலைகளோ யாராய்ந்து அறிஞர்களெல்லாம் புகழத்தக்க அறிஞனாயினன். இப்பாலவன் மணப்பருவமுற்றகாலையில் அவன் தாய் தந்தையர் தங்கள் வருணத்திற் கேற்ற குலங்கோத்திர முதலான வைகளோ விசாரித்துக் கைகால் உதடுநாதோள்நனம முதலிய எல்லா அவயவங்களினுந் தெய்வ ஸ்திரீகளையும ஒப்பிடக் கூடாத வனப்பினை வாய்ந்த சாவித்திரி யென்பவளை விவாகஞ்செய்துவைத்தார்கள். அவளோடு அப்புதனென்பவன் கூடிவாழ்கின்ற நாளையில், ஊழ்வினை வயத்தனாய்ப் பரத்தையிடஞ் சென்று பரிவுற்றிருந்துகளெலி கொண்டவன் போல மதிமயங்கி அவனிடத்திற் றானே புகுத்தலையுஞ் செய்திருந்தனன் அவனிவளாறிருக்க அவன்தாய்தந்தையரவனைக் காணுதலருந்தி வெளியிற்சென்று தேடுவதற்குத் தமது விருத்தாப்பிய நிலையினால கூடாதவர்களாகி, ஆகாரநித்திரையின்றி, ஏக்கமுற்றிருந்து, சின்னாள் சென்றபின்பு இன்னுமது புதல்வன் வரக்காணமே எங்கு எவ்வாறுயினனெனென்று திகைத்து, ஓர்நாள் அவன தந்தையாகிய தவசீலர் தடியூன்றிக் கொண்டு மெல்ல மெல்ல வீதியின் வழியாய்நடந்து தேடிக்கொண்டு செல்லுகையில் எதிரில் வீமனென்பவன்வரக்கண்டு அவனைத் தமதுகுமாரனைக் குறித்து விசாரித்தனர். அவர் உமது குமாரன் வேசையரானையால்மூழ்கி யிருக்கின்றனனென்சொல்ல அதுகேட்டவுடன் மனமழுங்கிப்பின்னும் புத்திரசோபம் விடாமையால் அவ்வேசை யிருப்பிடத்திற்குத் தள்ளாடிச் சென்று அவன்வீட்டின் தலைவாயிலில் நின்று தனதுபுதல்வனைக் கூவி, மைந்தனே! பொய்யை மெயயாகக் கொண்டிருக்கின்றவேசையர் மையலில் விழலுமா? நின்னைப்போன்ற அறிவினர்களும் இவ்வுலகின்கணுண்டா? கல்லொழுக்கங்களையெல்லாங் கைவிட்டனை, நான்மறையோதுதலுந் தவிர்ந்தனை, அழகு வாய்ந்த குலஸ்திரீயை மறந்தனை, நமது வருணச்சிரமத்தினுக்கேற்ற

எல்லாச் சன்மார்க்கங்களையு மொழித்தனே, ஆயினும் உன்னே அருமையா யீன்றெடுத்த எங்களையும் விட்டிருக்கலாமா? அப்பா! எனது மனம் மரமோ கலலோ இரும்போ? பேதைமனத்தையுடையஸ்திரீகளும் வயதின் மூத்தவர்களே விடப்பிரிதல் தருமமல்ல வென்று அவர்கள் சமீபத்திற்றானே காத்திருப்பார்கள். சகல நூல்களையும் உணர்ந்த நீ இவ விருத்தாப்பிய காலத்தில எங்களே விட்டிருப்பது தருமமா? இனியேனும் வீட்டில்வந்திருவென்று இவ்வாறு அனந்த முறை மிகுந்த பரிவோடுங்கேட்டுக் கொண்டனர். அதற்கப் பாதகன் கொதித்தெழுந்து எனக்குப் புத்திகூறவா இங்குவந்தனே யென்று கோபித்துத் தனது உரங்கொண்டமட்டும் அவர்தாடையிலறைந்தனன் உடனே அவர் சுபாவதற்றானே விருத்தாப்பிய நிலையை யுண்டாயிருந்த தன்றிப் புத்திரசோபத்தினலும், ஈரமான புசிப்பில்லாமையினலும், வாடியிருந்தமையால் அவனறைந்ததைத் தாளமாட்டாது எருசார்புமின்றி இறந்தனர் பின்னர் அக்கொடும்பாவி இதுதானுனக்குச் சரியான தண்டனே என்றுகூறி பாவர்க்குந் தெரியாதபடி நிலத்தைக்கீறி அவரை யடக்கஞ் செய்தனன்.

இப்பால் அப்பாவி அவரது பொருளே யெல்லாங் கொண்டு வந்து சேவைக்களிப்போ மென்று கினைத்து தனது வீட்டிற்குச் செல்ல, அவன் தாயானவள் அவனேக்கண்டு நல்லவரவென்று தழுவிக்கொண்டு, அப்பா! நீ இதுகாறும் எங்குபோயிருந்தனே? போகின்றபோது இங்குபோகின்றே னென்று சொல்லிவிட்டுப் போனல் உனது வாய்மூத்தஞ் சிதைப்போமோ? உன்தந்தை உன்னேக்காணுது ஆகாரநித்திரையற்று இரவும்பகலும் ஏக்கங்கொண்டு தனது தள்ளாமையோடும் உன்னேத் தேடிக்கொண்டு சென்றாரே. அவரெங்குற்றாரோ தெரியவில்லேயே. நீயவரை விரைவிற்கண்டு பிடித்து அழைத்துவாவென்று சொல்லினள். அதனே அப்பாதகன் கேட்டு ஆ! ஆ! கன்றுபிருக்கின்றது போனவனே யழைத்துக் கொண்டு வருவதற்கா யானிங்கு வந்தனனென்று கோபித்து சுமணிப்போல ஒரு தடிகொண்டு மொத்தினன் அதனல் அவ ளுயிரிழந்துவீழ அவ்வி டத்திற்றானே ஓர் குப்பையைக்கீறி அவனேப் புதைத்துவிட்டனன்.

அதனே யவன் மனிவிகண்டு ஆ! என்னகாரியஞ் செய்தனே; என்னகாரியஞ் செய்தனே! யென்றலேசித்து, ஐயோ சன்றவர்க

னையுங் கொல்வாருண்டோ! பழிபாவமென்றும பார்த்திலையே! பரத்தையரின்பமே பெரிதாகப் பாவித்தனையே! இதனை அரசனறிந்தால் இப்போதே கழுத்தரியுந்தண்டனை செய்வானே! நீ அத்தண்டனையிற்பட்டு இறப்பையாயின் அப்பாதத்தை யின்பத்தைத்தான் எவ்வாறு அநுபவிக்கலாம்! யாவரும் அஞ்சத்தக்க கொடுங் காரியத்தையல்லவோ செய்தனை? ஹாபையா! இதற்கென்னசெய்வேன்! என்று தூக்கித்துப் பின்னும் அவனைநோக்கிச் சொல்லுவாள். இனி நீகடைத்தேறிச் சுகத்தை யநுபவிக்குமபடியான மார்க்கத்தினைச் சொல்லுகிறேன். அதை இனிமேலாயினுங்கேள். உனக்குவசையர் மீதிருந்த ஆசையிலே வீட்டிலுள்ள பாக்கியங்களெல்லாம் மழித்தனை? வயதுமுதிர்ந்த தாய்தகதையாரையு மிழந்தனை? இருக்கிறவீடு இன்றைக்கோ நாளைக்கோ நமமைவிட்டு ஓழியப் போகின்றது; இனிமேல நாம காட்டிற்போயப் பிழைக்கதே நமோ அல்லது நாட்டிற்போயிருக்க தேநமோ, இவையனைத்தையும் நீ எவ்வளவுமபோகித்தனையில்லை, இவன வேசை பராசை கொண்டவனென்று அரசனறிவானையின் உடனே தண்டனைவிதிப்பன் பின்னரத் தண்டனையைநீகளிக் கொள்ளுமாறு பொருப்பினையொத்த பொருளிருந்தாலும் அவையனைத்தும பொய்யையுடையவர் புகழ்போன்று நாசமாகும், இவ்வாறு திரவியங்க ளழிந்தபின்பு அவ்வேசை அவனை நாயினுங் கடையாக நினைத்துத் தனது குற்றேவலுக் காளாக்கி வைப்பளன்றி, முனபோல இனபதருவளோ? வேசையரின்ப மறுபவித்தலினால நினதுதேகமுனை உடலையும் உயிரையும் வாட்டுப்படியான நோயுகளுக்கு சேரும. விவேகிகள் வெறுக்கத்தக்க குற்றங் களெலலாம இபபோது வருகின்றனவாம. அகத் தன்மில்லாதவர் சினேகம் நிலவுபோலவாகுமு அன்னதான கிடைக்குமோ? இனமையினாலும், அழகினாலும், கறபினாலும், கலப்பான உள்ளத்தினாலும், எனக்கொப்பானவளிருளமுண்டோ? நீ தளர்வுறுவ வண்ணம் அளவற்றபோகங்களை அப் பாதத்தையர்போல் வனக்களிப்பேன் நீ என்னிடத்திற்றானே சதாகாலமும் இன்புற்றிருக்கலாம்; மேலும் சுவிசதற்கு விலக்காகச்சொல்லியிருக்கிற ஆனிமுதலிய நான்குதிங்களினும், அட்டமிமுதலிய வஞ்சபருவங்களினும் நீபுணரவேண்டுமென் றிச்சைகொள்ளில உனதிச்சையின் வண்ணம்பானிசைவேனையறி அதை மறுக்கவல்லனோ! நீ என்னிடதது லெவ்வாறிருக்கினும் பழிபாவங்களில்லை, அதனால் கீர்த்தியுமுண்டே, மற்றெருவர் தலைவாயிலிலிருக்கின் எல்லாப் பழிபாவங்களும உடனே

யுண்டு, ஆதலா லவையீனதையுச் தீர்க்காலோசனை செய்து இனி யேனுங் கடைத்தீதறும் மார்க்கத்தைக் கடைப்பிடியாகக் கொள்ளு வையென்று சொலலலும், அதகாறும அப்பாதகன் உள்ளே அட ங்காத கோபத்தீயை யடக்கிவைத்துக் கொணடு, மேலுக்கு உடன் பட்டுக் கெட்டவன் போலிருந்து, பினபு சமயம் பாலலவழுத்து, மெல்லமெல்ல எனகக புத்திசொலலவந்தனன! பென்று பூமியில விழும்படி அவனைத்தள்ளி உதைத்துக் கொனறனன. பின்னர் அப் பாதகன் இக்காரணதைத அரசனறியின் வருதுவலெனறு பயந் தவிட்டிலுள்ள ஆபரணமுதலிய எல்லப் பொருள்களையு மெடுத் துக்கொண்டு அனறிரவிறறோ அதகரதனை விட்டுவிகிப் பரத் தையை யழைத்துக்கொணடு முனிவர்கள் வாழுசெய்கின்ற ஓல வனத்தை நோக்கிச சென்றனன.

அவ்வனத்தில் தாலவனமுனிவர வகிக்கின்ற ஆசிரமத்தின்வழி யாகச் சென்று அமமுனிவரை ஸ்காரஞ செய்யச்சென்ற சமயத்தில உள்ளே நுழைந்து அவர்பதநியிலபாகிய சுலபையென பவளைக் கைப் பிடித்தனன். உடனே அவள் அதிக கோபங்கொண்டு அவன்கை யை யுதறிவிறறு, விழிகளில் நீர்பொறி யெழும்படியாகச சீறி, அடா தூரதனே! உனதுபெயரில மாதங்ம சலபையேயன்றி உனக்கு யாள்சுலபையா, உனது கலைப்பருவதனிலும், காயதி டத்தினிலும், வேளைபோதாத பேழுதினிலுமலலவா மாதரின்பத்தை மறந்தாற்றா லனுபவிகின்றனை? இனியவ் வின்பதனை மறந்தும் அநுபவிக்காதவணணம் ஊனோராறுகினற குட்டநோ யுனக்குண்டா ககடவதென்று சபித்தனள் அவ்வாறு சபித்தலும அவன் அங் குவைத்த அடிவாய்குதற்குமுனனமே அழுதவாய்ந்த மேனியெல் லாங் கருகநத்திக்கை, கண்முழுவதும் இரணமாகிச் சீயுஞ், செரு நீரும்பெருகி, முகம்வேறுபட்டு பார்த்தவாகன பயமுறும்படியான விகாரரூபத்துடனே அவ்வாசிரமத்தினினறும் வெளிப்பட்டுப் பர த்தையிடத்தில் வந்தனன் அவள் அவனைகாண்டலும் அருவருப் புற்றவளாகி பொழிதனள் பினனர் அப்பாதகன் பாலகாப்பவ ரில்லாமல அக்காட்டிற்றனியே அலைந்துதிரிந்து இறந்தனன்.

உடனே அவனை யமதூதர் கட்டியழைத்துக்கொண்டு சென்று தங்கரள்ள நெரிலேயிட, அவன் இப்பாதகன குற்றம்மீது மள வும் கொடிய நரகங்களிற்போட்டு யாதனைசெய்யக் கடவீர்களென்று ஆக்ஞாபித்தனன் .அக் கட்டளையின்படி அத்தூதர்கள் அவனைப்.

படுத்தியபாட்டை ஹர! ஹர! யாவர்சொல்ல வல்லவர்கள். பின்னர் அவனை எல்லாஜகங்களினும் தப்பவிடாமல் வதைசெய்து பூமியிற் பிறக்கும்படி விடுத்தார்கள் அதனை அவன்னுபவித்த மிகுந்தபர பச் சேடத்தினலும் சுலபையிட்ட சாபவெச்சத்தினலும், இப்பி றவியினல் குட்டகோயினை யுற்பவித்தனன். அரசனே பரவங்க ளென்பவற்றிற் பயமில்லாது செல்பவனுகிய அவ்வணிகனைப் பிற ரகடைகிற்பாரைப் பேணுதொழிபபதுபோல ஒழித்துவருவைபெ னில் இவ்வியாகம் விண்ணிலேழும்புமென்று தேவகணங்கள் கூற, சூரசேனமாராசன் சதனைத்தும் உண்மையே யென்று நிச்சயித்து, மீண்டும் அவர்களைப் பனிக்தெழுந்து என்னை யாட்கொள்ள வந்த மகாமுபாவர்களே, அவ்வணிகன வரலாறிவ்வாருயினும் அவனுக் குக் குட்டகோ யுண்டாவதற் கேதுவாயிருந்த பாவங்களைத் தீர்த் துச் சுத்தபவித்திரனுக்கி எம்மொடு அவனையுங் கூடவழைத்துக் கொண்டுபோகும்படியான உபாயத்தையே தேடவேண்டு மென்று பிரார்த்தித்தனன்.

அதற்குத் தேவகணங்க ளிசைந்து அக்குட்டவணிகனை அரு கிலழைத்து, அவன்மீது தமதுகிருபாதோக்கத்தை பரப்பி, அவ னது பாவங்களனைத்தும் பாறும்படியாகக் கணபதியென்னுந் திரு மந்திரத்தை மூன்றுதரம் அவன்செவியில் உபதேசித்தனர். உட னே ,அவன்குட்ட சரீரத்தினின்று மகன்று தெய்வசரீரம் பெற்றுச் சுத்த பவித்திரனுகினன். பலாகுவில விழ்ந்தபாம்புஞ் சாகாதென் கின்ற மூதுரையின்படி பலபேருடன்கூடி யேறிய பாதகன் மீட்டும் பூமியிற் பிறந்து வருந்தாமல நற்கதியை யடைந்தனன்.

பின்னர் சூரசேனமகாராசன் தனதுசுகரத்தினர் முதலாயினேர் புடைசூழும்படி விமானத்தோடு மெழுந்து ஆகாயவெளியெல்லாங் கடந்து, விநாயகலோகம்போய்ச் சேர்ந்து அனந்தகாலம் அளவற்ற போகபாக்கியங்களை நுபவித்து முடிவில் சகலதத்துவ காரணரா கிய சுகணசமூர்த்தியி னுடைய திவ்விய சரணாரவிந்த நிழலை யடை ந்து சுரிபிரமேந்திரர்களாலு மளவிடக்கூடாத பேரின்பசாகரத்தில் மூழகியிருந்தனன்.

சூரசேனன் முத்திப்படலம் - முற்றிற்று.

பரசுராமன் வரம்பெறு படலம்.

தெவ்வரை வணக்குஞ் சூர்சேனனென் றரச னுற்றி
யவ்வுல கடைந்த வாய்மை யறைந்தனன் பரசு ராமன்
கவ்விய வன்பினுற்றங் காதையுங் கேட்க வென்று
வல்விய வியாதன் கேட்ப மலரணைக் கிழவன் சொல்வான்.

ஓ சவுனகாதி முனிவர்களே, விநாயக மூர்த்தியினுடைய சங்க டசதுர்த்தி விரதத்தைச் சூரசேன மகாராச னநுட்டித்து தன்னி னத்தினருடன் முத்தியடைந்த வரலாற்றினைச் சொன்னேம். இப் பால் பரசுராமன் வரம்பெறு திறத்தினைச் சொல்லுவோம் கேட்பீர் களாக. முன்னர் பவளவனத்தில் பவளத்தினால் ஓர் விநாயகமூர்த்தி யைப் பிரதிட்டை செய்து பூசித்துவந்த கார்த்தவீரியனுனவன் பி ன்னர் தனது தந்தையாகிய கிருதவீரியனிடத்தில் வந்து பணிந்த னன். அதற்குக் கிருதவீரியன் களிப்பெய்தி, பல ஆசீர் வசனங்க ளைக்கூறி, தனதருமாரன் விநாயக மூர்த்தியினுடைய பெருங்கரு ணையால் இரண்டுகால்களையும், ஆயிரங் கைகளையும், ஐந்நூறுபா ணங்களையும்பெற்று வந்தமையை நினைந்து நினைந்து மனமகிழ்ந்து தனதரசரிமையை யவன்பாலொப்பிவித்து விநாயக மூர்த்தியினு டைய திருவருளையே துணையாகக்கொண்டு அவரது திருவடித்தா மரைகளைச் சதாகாலமும இடைவிடாது தியானித்து வருதனன், அதற்குத் தம்மைச் சரணமடைந்தோர்கள் ஆண்பரராயினும். பெண்பரல ராயினும் அவாகட்கு இமைக்குமுன் எண்ணற்ற வரங் களினைக்கத்தக்க விநாயகப்பெருமான் கிருபைசுரந்து அவினைத் தம்மிடத்தி ழைத்துவருமாறு தேவகணங்களை யேவ, அவர்கள் ஆகாயமார்க்கமாக ஓர் தெய்வவிமானம் கொண்டுவர, உடனே கிரு தவீரியன் தன் மனைவியாகிய சுகந்தை யென்பவளோடும் மற்றைப் பரிசனங்களோடுந் தெய்வரூபம்பெற்று அவ் விமானத்திலேறி அக ண்டபரிபூரண சச்சிதானந்த ஸ்வரூபியாகிய கணேசலோகம்போய் ச்சேர்ந்து மனவாக்குக் காயங்கட்கு மெட்டுதற்கரிய பேரின்பசாக ரத்தின் மூழ்கினன்.

இப்பால் கார்த்தவீரியன் அரசர்களெல்லாங் கொண்டாடத் தக்க பராக்கிரமத்தோடு உலகமுழுவதையுந் தனது ஆஞ்ஞா சக்க ரத்து ளடக்கி அடங்காரையெல்லாம் ஐந்நூறு பாணங்களால் விசு ம்பேற்றி, இந்திரனும்கண்டு நடுங்கும்படியாகவும், கவிவாணர்களெ ல்லாம் புகழும்படியாகவும், அளவற்ற போகங்களோடும் அரசாட் சிசெய்து தேவர்களெல்லாம் ஏவல்கேட்கும்படி வாழ்ந்திருந்தனன்

அவனிவ்வாறிருக்கும் காலையில், பொழில்களாலும் பொய்கைகளாலுஞ் சூழப்பட்டிருக்கின்ற சையவரைச்சாரலில் ஐம்பொறிகளையும் நிக்கிரகித்து. அறிய தவங்களைச் செய்துகொண்டிருந்த சமதக்கினியென்னும் ஒருமுனி புங்கவரிருந்தனர். அவருக்குக்கற்பில் தன்னேடொப்பாரு மிக்காருமில்லாத பெருமையினேவாய்ந்த ரேணுகையென்னும் ஓர் மனேவி யிருந்தனள். இவர்கட்கு பிருகுமுனிவர் சாபத்தினுல் மகாவிஷ்ணுவே பிள்ளேயாகப்பிறந்து பரசுராமனென்னும் பெயரைவகித்துத் தனது தாய்தந்தையரிடத்தில் இவனின் மிக்கா ரொருவருமிலேயென்று சொலலும் படி மெய்யன்புவைத்துச் சகல முனிவர்களுங் கொண்டாடத்தக்கதாக அவர்கட்குப் பணிசெய்து வாழ்கின்றகாலேயில், அவன் ஓரான கைசிகாரண்ணியத்திற்குச் சென்றிருந்தனன். அச்சமயத்தில் சர்த்தவீரியனுவன் * பலபடைகளோடும பரிசனங்களோடு மெழுந்து காட்டிற்சென்று வேட்டையாடுவான் கருதிசைய வரைச்சாரலேயடைந்து, அவ்வனங்களிற் சென்று அவ்விடங்களிலுள்ள துட்ட மிருகங்களே யெலலாங்கொலேசெய்து திரும்பிவருகையில், தனக் கெதிராக வோர் தபோவனந் தோற்றக்கண்டு, அவ்வனம் யாவரையுடையதென்று விசாரித்து, சமதக்கினிமுனிவருடைய ஆசிரமமென்று தெரிந்துகொண்டு ஆயுதபாணிகளோடு மிருக்கின்ற தனது சேனேகளேயெல்லாம் அவ்விடத்திற்றூரே நிறுத்தித் தனது மருகியர் கல்லரோடும அவ்வாசிரமத்தில் நுழைந்து சமதக்கினிமுனிவரைச் சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்து சுவாமீ! தேவரீரை இங்கு பரமசௌக்கியத்தைப்போலக் கண்டு தரிசிக்கப்பெற்ற பேற்றினுல அடியேன் சுதத பவித்திரனுயினேன் எலலாநன்மைகளும் அடியேற் குண்டாயினவென்று துதித்தனன் உடனே அம்முனிவர் அவனுக்காதனங்கொடுத்து, அரசனே! நீயார் இவ்விடத்திற்கு வந்தகாரணம யாது என்றுவினவ, சுவாமீ! அடியேன் கார்த்தவீரியன், யாண்டனத்தில மிருகவேட்டை யாடிவரும போது முன்செய்த தபோபலத்தினுல் எனக்கெதிரே தேவரீர் ஆசிரமந் தோற்றக்கண்டதன்றி, இங்குவந்த தேவரீர் சினேகமுங் கிடைக்கப்பெற்றேன், இனி இதைவிட மேலானபாக்கியம் யாதென்றனன், அதற்கு முனிபுங்கவர் மனமகிழ்ந்து, அரசனே! இதுகாறும் நினது புகழுடம்பைப் பலகால் கேள்வியுற்றிருந்தனன். இப்போது நினது பூதவுடம்பையுங் காணப்பெற்றேன்: நின்வரவினுல் என்மனமானது மதுபானஞ் செய்தவனே யொத்து மகிழ்ச்சியடைந திருக்கின்றது. சூரியன் உச்சியில்வந்தனன் நீயும், வேட்டையாடி மிகவும்

* பலபடைகளாவன: மூலப்படை, கூலிப்படை, தீண்டப்படை, கைப்படை மூலியன.

இனைப்புற்றிருக்கின்றமையால் இவ்விடத்திற்றானே அமுதுகொண்டு சாவகாசமாய் நகரத்திற்குச் செல்லலாமென்று சொல்லினர்.

அதைக் கார்த்தவீரியன்கேட்டு,சுவாமி! தேவரீரை யொத்தவர்களிடத்தில் தண்ணீரேனும் அருந்திக் செல்லுவது தபோபலனும் யாதே ஒருவனுய்வந்தவனல்லன், என்னுடனே அளவற்றபேர் வந்திருக்கின்றனர். எனது நகரமும் இதற்கு நெடுந்தூரமென்று, ஆதலால் சுவாமிகள் கிருபையோடும விடைகொடுத் தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்குப் பொன்னுலகத்தையும் இம்மண்ணுலகத்தில் வரவழைக்கத்தக்க வல்லபத்தையுடைய அம் முனிபுங்கவர் புன்னகைகொண்டு, அரசனே, நினது சேனைகட்காகயா தொரு சிற்தீனியுஞ் செய்யவேண்டுவதில்லே. உன்னேடிவந்தவர்கள் எத்தனே பேராயினும் அவர்கட்கெல்லாம் அமுதுபடைப்போம். இதனருகிற் காஞைறன்னும ஓர்நதியிறக்கின்றது. நீங்கள் யாவரும் அந்த நதிக்கரையைச்சேர்ந்து சிறிதுநேரம், இனைப்பாறிக்கொண்டிருக்கலாமென்று சொல்லி விடைகொடுத்து, தமது பத்தினியாகிய ரேணுகையைக்கூவி, இத்தினம் அரசன் விருந்துண்ண வருகின்ரு னென்று அறிவித்து, காமதேனுவைத் தியானித்தனர். உடனே அந்தக் காமதேனுவும் வந்தது. அதனேச் சமதக்கினி முனிவரும், ரேணுகைதேவியும பணிந்து பூசைசெய்து, அதன்பால் தங்கள் விழைவை விண்ணப்பஞ் செய்துகொள்ள, அஃது உடனே அவ்விடத்தில் விண்ணுலகமுங்கண்டு நாணத்தக்க ஓ நகரம் உண்டாக்கி அதில் நவரத்னமயமா யிரானின்ற மாடமாளிகைகள், கூடகோபுரங்கள் முதலான சிறப்புகளே நிருமித்து அறுசுவைகளோடுங் கூடிய * நால்வகை உண்டிகளேயும், தாசர் தாசிகளேயும், அறைகடோறும் அளவற்ற பொற்பாத்திரங்களேயும அமைத்து அம்முனி புங்கவருக் கறிவித்தது. அவையணைத்தையும் அச் சமதக்கினி முனிவர்கண்டு சந்தோஷித்து அரசனே யழைத்து வருமாறு ஏவலாளர்களுக் காக்கியாபிக்க, அவர்களவ்வாறே சென்று அரசனே யழைத்தனர், உடனே அரசன் தனது பரிசனங்களோடு மெழுந்துவருகையில் ரூதனமாக ஓர்கர மிருப்பக்கண்டு, ஈதென்ன அற்புதமென்று ஆச்சாரியங்கொண்டு, அக்கரத்து வீதியின் வழியாகநடந்து, அவ் வீதிக

* நால்வகை உண்டியினாவன: உணணல், தின்னல, நக்கல், பருகல என்பன. (உ-ம்) சோறுமுதலியவை உணணல், கறிமுதலியவை தின்னல், தேன் முதலிவை நக்கல் பாலமுதலியவை பருகல். இதனே முறையேவிழுங்கல், மெலலல, நக்கல், குடிததல, என்பர்.

லெல்லாம் ஓர்பால் † பஞ்ச கருவிகள் முழக்கமும், ஓர்பால் ‡ பரத நாட்டியமுழக்கமும், ஓர்பால் சங்கீதப் பிரசங்க முழக்கமும், ஓர் பால் ¶ சத்த சுரங்களின் முழக்கமுமாக விருக்கக்கண்டு, முனிவர் ஆசிரமத்தினருகில்வந்து, அவ்வாசிரமத்தில் இதுகாறும் தான் எவ் விடத்துங் கண்டிராத அளவற்ற விசித்திரங்களோடு ஈரவிற் சலமூ றும்படி உண்டாகின்ற அறுசுவைபதார்த்தங்களினுடைய பரிமளங் கள் நாற்றிசைகளினும வீசக்கண்டு ஈதென்ன விபரீதமென்று மதி மயங்கி, அவையனைத்தையும் தன்னுற் கண்டறியக் கூடாதவனுகி, உள்ளே நுழைந்து, சமதக்கினிமுனிவருடைய பாதங்களிற் சாஷ் டாங்கமாக வணங்கி, அவரது உத்தரவின்படி தனது பரிசனங்க ளோடு மிருந்து போஜனஞ்செய்து கையலம்பி, உண்ட இளைப்பா றியபின்னர் மீட்டுஞ் சமதக்கினிமுனிவரை யடைந்து, சுவாமீ! நான் முன்னர் வந்தபோது இவ்வாசிரமம் காடாக விருந்ததே! யான் ஆற் றில் சென்று திரும்பி வருவதற்குமுன் அளவற்ற மாட்சிமையோடு நகரமாயிற்றே, அன்றியுந் தேடக்கிடையாத திரவியங்க ளெல்லாம் எங்கும் நிறைந்திருக்கின்றதே, ஒருவனுக் கொருத்தி நின்று உப சரிப்பதுபோல் அவ் வவர்களுக்கு அவ்வவ ரிச்சைப்படி அமுதூட் டத்தக்க பரிச ரகா ளவற்றபேர்க ளிருக்கின்றூர்களே, இவைய னைத்தும் ஓர் * நிமைப்போதில் எவ்வாறு உண்டாயினவோ? மாயா விசித்திரமோ? அல்லது தேவரீருடை தவமகிமையோ? இவ் வற்பு தத்தை அடியேற்குணர்த்தி யருளவேண்டுமென்று கேட்டுக் கொ ண்டனன்.

அதற்கமமுனி புங்கவர் புன்னகைசெய்து அரசனே! யிவைய னைத்தும் மாயாவிசித்திரமென் றெண்ணற்க. நமது தவமகிமையி

---

† பஞ்சகருவிகளாவன: தோற்கருவி, தாளகருவி, காமபுக்கருவி, ஞ் சக்கருவி என்பன.

‡ பரதநாட்டிய மாவன: ப-பதம், ர-ராகம, த-தாளம, நாட்டியம்-நட னம் என்பர்.

¶ சத்தசுரங்களாவன: குரல, துத்தம, கைக்கிளை, உழை, இளி, விளரி தாரம என்பன இம்மி மிடறூற குரலும, காவிளுற் றுத்தமும், அண்ணத் நாற கைக்கிளையும, சிரத்தால உழையும, நெற்றியால்இளியும, நெஞ்சாலவிள ரியும, மூக்கால் தாரமும பிறக்கும. இவையே ஏழ்சர மெனவும, வீணையில் ஏழ்சரம் பெனவும் கூறும இசையிலக்கண வகையதென்ப.

* நிமைப்போது - இமைப்பொழுது இஃது ஓர் மாத்திரைகாலமென்ப. அன்றி கண்ணுடிப் பொழுது, அலைத கண்ணுறுப் பொழுத வெனவு கூறுவர்.

ஞல் இவ்வளவு காமதேனுவைக் கொண்டு நடாத்தியிருக்கின்றன மென் றறியக்கடவை யென்றனர். அதனே பரசன்மேட்டும் †கெட்டுயிர்ப் பெறிந்து, மனத்திற் பொறுமைகொண்டு, எவ்விதத்தி லேனும் அக்காமதேனுவை காம கைக்கொள்ளவேண்டு மென்றுகி ணைத்தவனுய், உடனே முனிவரைபபாராது, பசிக்குக் காய், கனி மூ தலியவைகளே யருந்திச் சரீரதகை பொடிக்கு, மனத்திற்றவஞ் செப தகொண்டிருக்கின்ற சேதவரிருக்க அக்காமதேனுவினுல் யாதொரு பயனுமில்லே. எல்லா வுலகங்களும் ஏசசகக்கிரஸ்வரனு யிருக்கின் றனனக்கு அக்காமதேனுவைக் கொடுத்தீராகில் அம்மி அதேககா ரியங்களுக்கு உபயோகமாகும் மேலும் அக்காமதேனு என்னிடத்தி லிருப்பது நியாயமாகவு மிருக்கின்றது ஆதலால் எனகு நீர் அத ணைத் தயவுசெய்து கொடுத்தருளல் வேண்டும். கொடாவிட்டால் பின்னர் பலாத்காரமாய்க் கொண்டு போவேனென்று சொன்னன். அதைக்கேட்ட முனிபுங்கவர் மிருக தீகாபதமேதாடு, பெரிதுமூச் செறிந்து, அரசனே! (பிச்சைக்கு வந்தவன் பெண்டுபிடித்ததுபோ ல) நீயிணைத்த காரியம் மிகவன்று, ஆ! ஆ! எலலாவுலகத்தையும், ஏக சக்கிரத்தினுலாளுகின்ற ‡ மனவர்களுகுருணர்த்திய நீதிநூல் களில் அண்ணியருடையபொருளே யபகரிக்கமாறுகூறியிருக்கின்றன வோ? நிண்ணைக் கல்வியிற் சிறந்தவனென்றும் மதுநீதி தவறுதவ னென்றும், ஒழுக்க முதலியகுணனடைகளை யுடையவனென்றுங் கருதியிருந்தனன நீ இராபபோதிலுறற நீமுலபோல அற்பகு ணத்தையுடையவனுயினே? ஆயினும், என்காமாயிருக்கின்ற அக காமதேனுவை நினது வசமாகிக் கொள்ள தெரியுமானு மிருககு மாயின அதைக்குறித்து தெரணிக்க பிதனன? சாமதமில்லா மல் நின்வசமாகிக் கொள்ளலா மென்று சொல்லினர் அதை அவ் வஞ்ச நீணைவைகொண்ட அரசன கேட்டு உடம்மை தன்னு பாச ணங்கட்குக் கண்சைகை காட்டினன். யுதை அப்பரிசனகள் கண் டுகாமதேனுவினருகிற் சென்றார்கள் அதனை அரசன் சமதக்கினி முனிவருக்குப் பகையாயினனென்று காமதேனுவைநிர்தாகொண்டு, மிகுந்த கோபத்தினல் நெட்டுயிர்ப் பெறிந்தனன். அந்தஉயிர்ப்பினல் அருகில்வந்த எலலாச் சனங்களுஞ் சுருண்டு மாய்ந்து போயினர்.

† நெடு உயிர்ப்பு-பெருமூசசு.

‡ மன்னர்க் குணர்த்திய நீதிநூல் மனுவாதி யெனிட்டோதுமிய தரும நூல் பதினெட்டு மெனவ

அதைக்கண்ட காதத்விரியன மிகுந்த கோபாவேசங்கொண்டு மீள ஏ மகாலக்கைச சேனைகளை வரவழைத்து அதனபேரி லேவினன.

பகைக் காமதேனு கண்டதனது மயிரைச்சிலிர்க்க, உடனே ஒவ் வொரு மயிரிலிருந்து அளவற்ற வீரர்கள சாவாயுத பாணிகளா யுத்தத்தனர இரதகஜதுரக பத்திகளு முண்டாயின பினனர, இர டுசேனைகளுங் கலந்து பேரிசெய்து வருகையிலகாமதேனுவின சே னைகள அரணுடைய சேனைகளெயெல்லாங் கொன்று எஞ்சும உதி ரவெள்ளம் ஓடும படியாகச்செய்தன, அதில் எஞ்சினின்ற சேனைகள மீட்டு மெத்திபபாத களுகியோட, அதன அரசன கண்டு நமக்குத் தோல்வி ஏற்படுமா வென்று அசேனைகடக்குக் கையபாதத்தி, வழிக சாதத்துணடாகின்ற பேரசாலியைப பிரளய சங்காரதஞ்செய் தான. அதனல் பகைகள சுமுத்திரங்கள ஏதலானவைகளெல்லாங் கலங்கிச்சகமெல்லாந்தழியிடட தயிர்போலதகளாகின. இவ்வா றுசகமெல்லாந் தளாந்து காமதேனுவினுடைபசனைகள சிறிதுங் தளராதிருக்கின்றனைத அரசனபாத்து காமதேனுவிறி ஙனருயிருக கின்றதென்ன ரகைத்து மிகுந்த கோபாவேசங்கொண்டு, கரதூஷ விலலியெடுத்து, ஒவ்வொரு எலைக்கு ஐநூறாஐநூறு பாணங்க ளைப பிரயோகித்தான, அபபாணங்கள வழிச காலதத் துண்டா கின்ற மேகங்களெல்லாங் கலங்கச்செயயவலலவைகளாயிருத்தும, அவைகளை அகாமதேனுவின சேனைகள ஒதுக்கி, அரசனமீது அளவற்ற பாலை மழைகளைப பொழிந்தார்கள இவ்வாறுதனது படைகளைகாஞ்சிசெய்ததனறி கனமீதம அளவற்ற பாணங்களை ஏவியதனால காதசவிரியனுக்குப டலசனறி, இனி எவ்விதத்தி னும அமமுனிவரைக கொலலவேண்டுமென்று தனனதில யிரார கியங்கொண்டு ஓடிப் பாயலை அகாமதேனுவும அரசன இவித திருமபாவென்ன நிசசித்துக்கொண்டு, சமத்தகனி முனிவரிடத தில் விடைபெற்றுத்தனது சேனைகளோடுஞ சராசுகலோகபோ யசசேனாபத்தி பின்னர சமத்தகனிமுவா முனபோலவே பஞ்சாட சரத்தைச செலுஞ்செயதுகொண்டு தவத்தி லிருந்தனர. இவ்வாறு சிலநாள சென்ற, ஓர்நாள காதகவிரியனவன அமமுனிபுங்கவா தவத்தி லிருக்கின்றசமயத்தில அவரிருந்தசெனறு ஓர் வாளினால அவருயிரை மாயத்துவிடடனன.

அதை யமமுனிவர பத்தினியாகிய ரேணுகைகண்டு, அடாத போக் உண்டவீட்டிறகு இரண்டகஞ்செய்வோருள உனகுசொப்ப னபாவி எவ்விடத்தேனுமுண்டோ? உனக குலமெலலாம நாசமா

கும்படியான வகையைத் தேடிக்கொண்டனீயே? இத்த அநியாயம் எந்த அரசர்கட்கேனு மடுக்குமோ? 'தவஞ்செய்வோரைக் கொல்ல தோ தரணிவேந்தர்களுடைய முறைமையென்றுசொலல, அவள்மீ திம் இருபத்தோரம்புகளே ஏவினன். பின்னர் அவள் அலைகளேச் சலிக்கமாட்டாது கண்களில் நீர்த்தாரைபெருகும்படியாகச் சோர்ந் அபூமியில்வீழ்ந்ததனது காதலரைத்தியாஞ்செய்துகொண்டு ஈை மிசவனத்திற்குச் சௌதனது புத்திரனுகிய ராமன் வருமளவும் உயிர் வைத்திருந்தனள். அவனுக்தற்செயலாய் அவ்விடத்தைவிட்டு நீங்கித்தனது ஆசிர்மத்திற்கு வந்தனன். அப்போ தவ் வாசிர்மமா னது அனைபான மிலாத ஊரைப்போலவும், மகமேருவில்லாத உலகம்போலவும், இந்திரனில்லாத வசந்தமண்டபத்தைப்போலவு மிருந்ததன்றி, வேதகோஷ்ட மில்லாமலும், வேள்விப்புகை எழாம லும தனதுதந்தையைச் சதாகாலமுந்தொழுதச் செல்கின்ற சீடர் கூட்டம் நெருங்காமலும, புல்லென நிருக்கக்கண்டு, எண்ணதன்பன் கள்நேர்ந்தனவோ வென்கின்றமனவருத்தத்தாடுஉள்ளேதுழைத்து தந்தைவாளினுல் உயிர் நீங்கியிருப்படதயும், தனதுதாய் அமபுகள் பாயப்பட்டுச் சோர்ந்து வீழ்ந்திருப்பதையுங்கண்டு இவர்கள் இவ் வாறுக்கினவர் யாவரென்றுநினைந்துநினைந்து,அழுதழுது, புழுக்கள் உடலெங்கு மூடிப்படியாகப் பூமியில்விழுந்து, டரண்டு, மூர்ச்சை யாகி, எழுதப்பட்ட சித்திரம்போலச் சிறிதுநேர மசைவற்றிரு ந்து, பின்னர் தெளிந்தெழுந்து, அவர்கள் திருவடிகளைப் பல முறை தொழுது, துக்கச்சாகரத்தில் முழ்கி, ஐயோ! இந்திரன் முதலாயினேரும் இறைஞ்சி வழிபடத்தக்க உங்கள், தவமகி மையும், கற்பின பெருமையும் இவ்வாறு உங்களுயிர் பிரியுமாறு எங்கி மொளித்தனவோவென்று அலறிச் சிறிது உயிர் தாங்கிக் கண்களிலநீரைக் கவிழ்த்துக்கொண் டிருக்கின்ற தாயினருகில்வந்து அவள் சிரத்தைதனது தடையின்மீது வைத்து, என்னே யருமை யாயின்றெடுத்த அண்ணலே! உங்கட்குயாதுகாரணத்தால் இவ்வா பத்து நேர்ந்ததோ? அதனே எனக்குச் சொல்லவேண்டு மென்று புலம்பித்தனது கையாற்றடவ, அதை அழகில் இலக்குமியை வென்றவளாகிய ரேணுகைகேட்டுச் சிறிதுதெளிவுற்று, மைந்தனே! இவ்வுலகத்திற்கரசனுகிய கார்த்தவீரியன் வேட்டையாடி வருகை யில் நடதாசிர்மத்தை நோக்கிவர அவனுக்குக் காமதேனுவினுல் சக லசிறப்போடும் யாங்கள் விருந்தூட்டப் பின்னரவன் அக்காமதே னுவைக்கைக்கொள்ளுமாறு அதனேடியுத்தஞ்செய்து தோல்வியுற்ற

னன். அதனால் எங்களை எவ்வித்தத்தேனும் கொல்லவேண்டுமென் கின்ற வெஞ்சினத்தால் சமயம் பார்த்துக் கொன்றுவிட்டுச் சென்ற னன் இக் காரணத்தையுணக் கறிவிக்கும் நிமித்தமே இதுகாறும் னது உயிரைத் தாங்கியிருந்தனன் அப் பாதகன் எனதுடலில் இருந்தகோரபுரை யெய்தாலால் அவன்வம்சத்தில முடிசூடி மன்னர்களேமூவேழ் தலைமுறைவரையிற்சாடி, அவர் சரீரங்களைச் சுத்த பூமியினும் புழுவுபடி வீசி எறிந்து, அந்தணர் குலத்தைத் தெய்வகுலமென்று சொல்லுமாறுயிருத்திசெய்யக்கடவை. எங்கட் குநிறைவேற்ற வேண்டியகிரியைகளைத் தேத்தாத்திரிய முனிவராற் செய்து நிறைவேற்றக்கடவை. யானுண்ணக்காண்டலும், புத்தமு ண்டவளுக கோப்பாயிலன் இனிப்பனசு காதலர்மாட்டுச்செ லுகின்றேனென்று விடைகொடுத்து உயிர்பிரிந்தனள்.

இவ்வாறு ரேணுகை உள்ளமுடைந்து கூறியவசனங்கள் பரசி ராமன் செவியிலேறலும், அள்ளியெழுந்த தழற்கொழுந்துக் கொப் பாகிய உடம்பினது தலைக்கீறி வெளுத்த விழிகள் சிவக்கும்படியா கினதது, எலலாவுலகத்தையும் எடுத்து விழுங்கிவிடுவோலத் தோளி அரசன அந்தணரைக் கொன்றுனென்று சொல்லுஞ் சிறு மைமாறவும், அந்தணரே தவத்திற் சிறந்தவரென்று சொல்லும் பெருமை மீறவும், இனி நமது தாய்தகையரை. யமனிடம்போலிருந் துகொன்ற மகாபாதகனுடைய குலமாதரேமயன்றி, அரசர்களெ னறு சொலலப்படுகின்றவலலாக குலங்களையும் வேருடன்கெல்லிக் கெல்லிவேனென்று சபதங்கொண்டு, அடுத்தவனத்தில் அரியத வஞ்செய்துகொண்டிருந்தகின்ற தேத்தாத்திரிய முனிவரையடைந் தருடன்ற காரியங்களணைதலையும் அவருக்கறிவித்து, பின்னர் அவரைத் தமதுசிரமதசிலைதனிலவரது அவரால் தனது தாய்தன் தையர்களுக்கு நிறைவேற்றவேண்டிய நித்தியக் கிரியைகளைப் பரதி தியமவேதாகம முறைமைப்படி நிறைவேற்றி வருகையில், ஐந்தா நாளிரவில தான நிகதிரை செய்யுங்காலத்தில் தன்மீதார் புலிவந் தபாயச் சொற்பனங்கண்டு வாய்குழறி, தேகமருடுக்குற்று, அம்மச அயமா! என்று கூவி விழித்துக் கொண்டனன். அக்கூக்குரலே அவன தாயாகிய ரேணுகைகேட்டுத்தன்னே யிடையிலழைத்தி காரணத்தால் இருண்டு சுருண்டு தலைத்தாற்பசக்கு தேனெழுகின் றமலர்களே யணிந்திருக்கின்ற கூந்தலும, ஒள்ளிய நுதலும், சுடர் விடுதொனிக்குங்குண்டலங்களே யணிந்தசெவியும், வேல்விஞர்த்தவிழி யும, குமிழம் புட்பத்தினே யொத்தநாசியும், பவளம்போன்ற வாயும்

தோன்றும்படியாக அவனெதிற் றனதுமுகத்தைமாத்திரம் ஆகாய வெளியிற் காட்டியிருந்தனள். அதனைத்தேத்தாத்திரிய முனிவருங் கண்டு, அன்பிற்சிறந்த இராமனே! உனது தாயைப் பதின்மூன்றாந் தினத்தி லழையாது மத்தியிலழைத்தனை யாதலால் தனது முகத் தைமாத்திரம் ஆகாயவெளியிற் காட்டினள். ஆயினுங் குற்றமில்லை இனி கடத்தவேண்டிய கருமங்களையுஞ் சிறப்பெய்த கடாத்தியை யாயின்மற்ற அவையவங்களுஞ் சரியாகி இப்பூலகில் மதசம்பந் தப்பட்ட எல்லாமனுதர்களுக தொழற் தகுந தேவதையாகவாழ்குவ ளென்றுகூற, அவ்வாறே இராமன் மற்றைய நாட்களின் கிரியைக ளைக் குறைவில்லாமற் செய்து முடித்தனன். பின்னர் தனதுதந்தை யாகிய ஜமதக்கினிமுனிவர் பிரமனுலகம்போய்ச் சேர்ந்தனர் இரே ணுகையானவள் தனது வடிவ முழுவதும அடைந்து உலகமெல் லாம் வணங்கும் படியாகத் தெய்வத்தன்மையை யடைந்தனள். தேத்தாத்திரியர் தம தாரீர்மத்திச் கெழுந்தருளினர்

இப்பால அரசகுலங்களை யடியுடன் களையச் சபதங்கொண் டிருக்கின்ற இராமன் ஒருநாள் தனது அண்ணைபைவருமாறு நியா னிக்க, அவ்வாறு அவள்வந்து மைந்தனே! நீயிணைத்தகாரியமறிந்து கொண்டனன். அதனைமுடிக்கும் வகையினைக் சொல்லக்கேள்: நீ இந்த நிமிடத்தில் கைலாயவரையையடுத்து அரவையுஞ் சந் திரனையுமிலங்கு சடாமகுடத்தினை யுடையசிவபெருமானைப்பணிந்து அவர்பேருளைப்பெற்று உன்னிஷ்டகதை இடையூறின்றி நிறை வேற்றக் கடவையென்று சொல்லி யகன்றனள் அசசொல்லை இயா மன் சிரமேற்கொண்டு உடனே கைலாயவடரயிற் சென்றுசிவபெரு மானுடைய திருவடிகளைப் பலமுறை பணிந்து துதிசெய்ய, அதற் குக் கர்த்தன கிருபை சுரந்துஅவன்மீது தமதகடைக்கண்சாத்திச் சுடாக்கர மந்திரத்தை ஆமமமுறைமைப்படி அவனுக்குபதேசித்து, இராமனே தத்துவகாரணமாகியும, தத்துவசொரூபமாகியும், தத்து வமுதலாகியும், தத்துவமுடிவாகியும் இருந்து பிரமன் முதலிய எங் கள் மூவருக்கும் முத்தொழி லளித்தவர் விநாயகப் பெருமானுகும். அவரை நீன்மனதிற் நியானித்து அவருக்குரிய இம் மகாமந்திரத் னை இடைவிடாது செபித்துவருவையெனில், நீகருதிவந்த கோரிக் கையினைவில் நிறையேறுமென்றுதிருவாய்மலர்ந்தனர். அதனை இரா மன் செவிக்கமுதாகக கேட்டு, மீட்டுக தொழுதெழுந்து விடை பெற்று, இம்மையிற்றானே எல்லாநன்மைகளையுக தரத்தக்கமயூர மென்கிற தலதையடைந்து விநாயகமூர்த்தியினுடைய திருவடித்

தாமரைகளே பூசனைசெய்து பேரன்பினேடுஞ் சடாக்கரமந்திரத்தை முறைமைப்படிஜபானித்து ஐம்புலாதிகளேயும்அடக்கி அரியதவஞ் செய்துகொண்டிருந்தனன். அத் தவத்திற்கு விநாயகக் கடவுள் திருவைகருந்து பாசு, தாமரைமலர், ஒற்றைக்கோடு, மோதகம் என் னுமிவைகளே யேந்திய நான்கு திருக் கரங்களோடும், பூரணியினே யேந்தி திக்கரமுமவிளங்க அனனெதிரிற் பிரத்தியட்சமாயினர். உடனே தேவர்க ளெல்லாம ஜய ஜய வென்று சொற்றி புட்பவரு டம்பொழிந்தார்கள் பின்னர் இராமன் சுவாமியைக்கண்டவுடன் திருக்கிட்டுடெழுந்து, விழிகளில் ஆனந்த பாஷ்ப முண்டாக,அன்பு அகத்தையுருக்க, உரைகள் தடுமாற்றங்கொள்ள. உடலெங்கும்உ ரோமாஞ்சிதம பூப்ப, ஐன்மாக்களே ஆணவ விருளினின்று மெடுத்து ஆட்கொள்ள வல்லகணேசரது திருவடித் தாமரைகளே வணங்கி அனந்தமுறை வலமவந்து தேன்மாரி பெய்தாலென்ன அளவற்ற வேதாகமங்களினுற முறிசெய்து நின்றனன். அதற்கு விநாயகக்கட வுள் சந்தோஷித்து, அன்பனே! உனக்கு வேண்டிய வரங்களைக்கே ளென்று திருவாய் மலர்ந்தருள, இராமன்மீட்டுக் தொழுதெழுந்து, சுவாமீ! எனது குரவர்களைக் கொன்ற கார்த்தவீரியனுடையகுலமே யன்றி அரசர் குலமென்று சொல்லப் படுகின்ற யாவரையுங் களைந் தவெற்றிகொள்ளுமாறு ஆடியேற்குக் திருபை புரிய வேண்டுமென் று விண்ணப்பஞ்செய்து கொண்டனன். அவ்வரமே கணேசமூர்த்தி திருவருள்பாலித்து மாருதவலியும, மழுவாயுதமுந்தந்து, என்றுஞ் சிரஞ்சீவியா யிருக்குமபடி வரங்கொடுத்து, அவனுக்குப் பரசுராம னென்னுந் திரு நாமமு மளித்து, அடியரா யிருக்கின்ற போர்கள் மிக்கபிழைகள் செய்தாலும் அவைகளைப்பொறுத்து ஆட்கொள் ளுகவென்று திருவாய் மலர்ந்து கருந்தருளினர். இப்பால் பரசுரா மன் கார்த்தவீரியன் முதலாயுள்ள அரசர்குலங்களையெல்லாம் அ ழஞ்செய்து அவர்களாண்டு கொண்டிருந்த உலகங்களே அந்தணர் கட் களித்துத் தான்கொண்டிருந்தசபதத்தை நிறைவேற்றிச்சொல் லுதற்கரிய பெருந்தவங்களேச்செய்துகொண்டு என்றுஆ சிரஞ்சீவி யாக உலகத்தின்கண் வசித்திருக்கின்றனன்.

பரசுராமன் வரம்பெறு படலம் முற்றிற்று.

இராவணன் பூசித்தபடலம்.

அங்கா ரகநற் சதுர்த்தியொடு மறுகு சமிமந் தாரமுமெய்த்
தங்கா தரவி னனுட்டித்தோர் தமையும் விளங்குத் தெரிதீயால்
கங்கா சுகவிற் படைச்சோம காந்தா வின்னுஞ் சிலகாதை
யிங்கா தரவிற் கேட்டியென வியம்மிம் பிநகு மாதவனே.

திருவருட் செல்வராகிய முனிவர்களே! சமதக்கினி முனிவர புத்திரனுகிய பரசுராமன் விகாயக மூர்த்தியை யநுட்டித்து முடிவற்ற வரங்களைப்பெற்ற முறைமையைச் சொன்னேம். இப்பால் இராவணன் உபாசித்த திறத்தினைச் சொல்லுவோகேட்பீர்களாக.

மூன்றெரு காலத்தில இலங்கைக்கரசனுகிய இராவணனுனவன் ஆகாயமுகட்டையளாவிய வெள்ளிபங்கிரியையபெத்து, அதனி லோர்சாரிருந்து அரியதவத்தினைச்செய்துகொண்டிருக்கு,கொன்றையும், அறுகையும்புனைந்த சடாமகுடதரினையுடைய சிவபெருமான் அதற்குக் கிருபைசுரந்து, அவனெதிற் பிரத்தியட்ச மாயினர். உடனே இராவணன் விரைந்தெழுந்து ஆடிப்பாடி அனந்தமுறை வலம்வந்து சயசயவென்று வேதாகமங்களாற் றுதிசெய்து. விழிகளில் ஊற்றெடுத்ததுபோல ஆனந்தக்கண்ணீர் சொரிந்து, உடலெல்லும் புளகாங்கித முக்து, நெக்குவிட்டு, நெஞ்ச முருகி, கரங்களைச் சிரமீதிகூப்பிநின்றனன். அதனைக் கர்த்தர் கண்டு, உனக்கு வேண்டுவனகேள் தருகின்றேமென்று திருவாய்மலர்தலும், இராவணன்

ட்டுந் தொழுதெழுந்து, சுவாமி! செயர்க்க முதலிய எல்லாவுலகங்களுமழியுங்காலத்திலும் இலங்காபுரிமாத்திரம் அழியாதிருக்கிலபெற்றிருக்க வரந்தர வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்குக் கர்த்தன் அவ்வாறே கிருபைசுரந்து ஓர் சிவலிங்கத்தையவன் கரத்திற் றந்து, இராவணனே! இவ்விலிங்கத்வத உனது இலங்கையபதியிற் பிரதிட்டைசெய்து பத்தியோடு பூசித்து வாக்கடலை. அன்றியுமதனை அப்பதிக்குக் கொண்டு செல்கின்றபோது சித்த சுத்தியோடு வாகனத்தின் மீதேறுதுசெல்லவேண்டும் ; அவ்வாறுசெல்லும்போது வழியிற்பூமியின்கண் வைப்பையெனில் மீட்டும் உன்கையில அகப்படாதழுந்தும். இதனை கன்றுய்க் கவனிக்கக்கடவையென்று திருவாய் மலர்ந்தகரந்தருளினர். பின்னர் இராவணன்பெருமகிழ்ச்சிகொண்டு சிவபிரானளித்தருளிய சிவலிங்கத்தைப் பயபத்தியோடுங் கரத்திலேந்தி அளவற்ற காடினையும் மலைகளையுங் கடந்து

கடல்மத்தியிலிருக்கின்ற தனதுஇலங்காபுரியை நோக்கிச்செல்லு கையில இக்காரணத்தை தேவேந்திரனறிந்து, ஐயோ! இராவணன அச்சிவலிங்கத்தை இலங்கையில் வைத்துப் பூசிப்பானுயின் எக்கா லத்திலும் அவன்அழியானே! இனி இதற்கெனசெய்ய வலலோ மென்று பயந்து முப்பத்து முக்கோடி தேவர்களுந்தண்ணீப் புடை சூழும்படியாகக் கயிலையங்கிரியை யடைந்து அங்கெழுந்தருளியிரு க்கின்ற விநாயகப பெருமானுடைய திருவடிகளைப் பணிந்தெழுந்து தெய்வகங்கைபாலவருக் கபிடேகமாட்டி, கற்பகமலர்களைக்கொண் டருச்சித்து அமுதத்தை நிவேதனஞசெய்து சோடசவுபசாரங்க ளோடும் பூசித்தனன். அதற்கு விநாயகப்பெருமான் கிருபைசுரந்து இந்திரனே! நீயாதுவேண்டிவந்தனை யென்றுவினவ. இந்திரனும்பட் டுத் தொழுதெழுந்து, சுவாமி! இராவணன் சிவபெருமானிடத்தி விருந்து ஓர் லிங்கமபெற்று அதனைத்தனது இலங்கை நகரில்வைத் துப பூசிக்கச் செல்கின்றனன் அவ்வாறேவைத்துபபூசிப்பானுயின் அவனுக்கு எக்காலத்து மரணமிலலையாம் ஆகவே தேவர்குலங்களை விருத்தியெய்தவொட்டாது நாசமாக்குவான ஆதலால் அவன் அப் பதியைச்சேருமுன்னமே ஓரிடையூறவனுக் குண்டாக்கியாங்களோர் தண்பமடையாவண்ணந தேவரீர் காத்தருளவேண்டுமென்றுபிரார்த் தித்தனன்.

அதற்குக் கணேசமூர்த்தி யிசைந்து உடனே வருணனைக்கூவி நீ இராவணன்வயிற்றில நீர்சுரபபிக்க கடவையெனறு பேவினார். அவனும் அவ்வாறே அவனவயிற்றில் நீர் சுரப்பிக்க கணேசமூர்த்தி யானவர் ஓர் பிராமணபபிள்ளை வடிவங்கொண்டு, தமதுதிருவடிகளை நிலமகள் சூடுமபடியாக நடந்து இராவணனெதிரில் வந்தனர். அச் சமயத்தில இராவணன சலபாதையெச்சரிக்கமாட்டாது சிவபிரா னருளிய கடபபாட்டை யெணணி யெணணிதன் னெதிரிலவந கின்ற பிராமணப்பிள்ளையைநோக்கிப் பின்னருங்காரியத்தைபறியா தவனுய் அப்பிள்ளையோடு இனியவார்த்தைகளாடி, அப்பா! எனக் குற் சலபாதை மேலிட்டிருக்கின்றது, ஊரோ நெடுந தூரத்திலிரு க்கின்றது, எதிரில யாவரையுங்காணேன் ஆதலால் உன்மீதுகிருபை செய்து யாஞ்சலஸ்பரிசனஞசெய்துவருமளவும் இச்சிவலிங்கத்தை உனதுகரத்திற்றாங்கியிருக்க வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்கு அந்தணக்கிருணை யொத்தெழுந்தருளிய கணேச மூர்த்தி சொலலுவார்.ஐயாயானேபிள்ளைமைப்பருவமுடையேன்.எனக்கோ இச்சிவலிங்கத்தைத்தாங்கத்தக்கவலியிலலை, நீயாதுகணை எண்ணி

டத்திற் பலாத்காரமாய்த் தருகின்றனை, இவ்வித வாபதத்தினை யில் அதனைத தாங்கவேண்டுவதே ஒருவனுக்குத்தகைமையாயினும் சான்மிக்கவும் சிறியனையிருத்தலால் உன்னை முக்காற் கூப்பிடுவேன்: அதற்குள் வந்து அதனைப் பெறாறுக்கொளவேண்டும்; பெருமற் போவை யெனில் உடனே நிலத்தில் வைத்துவிடுவேனென்று திரு வாய்மலர்ந்தனர். அவையனைத்தையும் இராவணனகேட்டு அபபடி யே ஆகவென்று அவரகரத்தில அசிவலிங்கத்தைக்கொடுத்து ஜலஸ் பரிசத்திற்குச்செல்ல, அவன் வருவத்தருமுனமை மூனறுதரங்கூவி அதனை நிலத்தில் வைத்துவிட்டனர்.

பின்னர் இராவணன் விரைவிலோடிவந்து தனது மேலிபோன்ற இரு கரங்களினாலும் அதனைக் கெலலியெடுக்க, அபபது முனனெனறு காலத்தில் திருமால் வராகரூபமாய்ச் சென்று பேடியும் நாண்டம் கருமையனவா யிருந்த சிவபெருமானுடைய திருவடி களைப்போல ஊடிருவி கற்பின்மகளி ருளளத்தைப்போல அவன கரங்களிற் சிக் காதிருந்தது. அதனைக் கெல்லுந்தோறும அவன்கரங்களை வாடும்படி லிலமும் நயப்பெய்காதிருந்தது. அதனால இராவணன மனவருத்த முற்று மீட்டுந் தனது கரங்களை வலியுடன பாய்ச்சி யிழுக்க அப் போதச் சிவலிங்கம் பசுவின் காதுபோற சுளைந்து பிரகாசித்தது. அக்காரணத்தால் விண்ணுலகா மண்ணுலகா முதலியவாவரும் அப பதியைக் * கோகரனமென்று சொலலுவாராகள. பின்னர் இராவ ணன் தன்னாற் கூடியவரையில முயன்றும அச் சிவலிங்கம் தன்க ரத்திற சிகாதிருத்தையால். அம்மாம பெருமகா பலமுளள தென்று வியந்தனன். அதனாலசிவலிங்கம் மாபலலிங்கமென்னும் மற்றொருபெயர்பெறறது பிபபால் இராவணன் அசிவலிங்கத்தை நிலத்தில வைத்துப் பிராமணப் பிளளையின்மீது கோபங்கொண்டு தனது கையால் அவர்சிரதத்திலோங்கிக் குட்டினன்.

கோகர்னம்—கோ.பசு, காணட்-காது, பசுவின் காதைப்போலருளை வுபட்ட சிவலிங்கமுள்ள தாகலின் அச்சேதத்திரத்திற்கும் கோகர்ணமெனப் பெயர்வழஙகப்பெற்றன. இஃது துளுவகாட்டிலுள்ள சிவஸ்தலங்களுள் தேவாரம்பெற்ற திருத்தலம். சுவாமிபெயர்-மகாபலேசுவரர், அம்மையார் பெயர்-பெரியநாயகி, இச்சிவலிங்கபிரதிட்டை விநாயகரால் செய்ததை யால் விநாயக லிங்கமெனவும், மகாபல லிங்கமென்பதனால், கோகர்ண லிங்க மெனவுங் கூறுவ. அத் தலவிநாயகர்பெயர் விப்பிரவிநாயகர் என்ப.

உடனே கணேசமூர்த்தியானவர் அப் பிராமணப்பிள்ளை வடி வத்தைமாற்றித் தமது நிசரூபத்தைக்கொண்டு அவ் விராவணனைத் தூக்கரத்தினு லெடுத்து அவன் சிரமானது அண்டமுகட்டில் முட்டும்படி மேலேயெறிந்தும் மீட்டுந் தமது திருவடிகளால் அவன் பாதாளலோகத்தில் முழுந்தும்படி நிலத்தில்விழுத் தள்ளியும், இவ்வாறு பந்தாடுவதுபோல அவன் சரீரத்துள்ள என்புகளெல்லாம் நெக்கு விடும்படி ஆடினார். அதனை பிராவணன் சகிக்கமாட்டாது கூக்குர லிட்டு,

பொய்தவி ரடியார் செய்யும் புண்மையும் பொறுப்பாயோலஞ்
சைதவ மனத்தார் செய்யுங் கடப்பாடும் வெறுப்பா யோலஞ்
செய்தவென் பிழையுஞ் சார்ந்துத் திருவருள் செறிப்பா யோலம்
வெய்தருள் புரியா யாகின் விளிதலே னிலை மென்றான்.

பொய்தவிர்ந்த அடியவர்களைச்செய்யும் புண்மையினைப் பொறுப் பவனே! அபயம். சைதவ முடையோர்களைச்செய்யுங் கடப்பாடை யெல்லாம் வெறுப்பவனே! அபயம் வேண்டி வந்தித்தோர்கட்கு விக்கினங் கொடுப்பவனே! அபயம் வேண்டியாதவர்கட்கு விக்கி னங் கொடுப்பவனே! அபயம். என்று இவ்வாறு அனந்தமுறை ஓலமிட்டு சுவாமீ! அடியேன்செய்த பிழைகளை மன்னித்துக் காத் தருளவேண்டும் அடியேன்மீது சுவாமிகள் திருபாதாக்கள் செலு தது யாளாவிட்டால் இனி யான் நாசமடைவேன். அப்படி யாகா முன்னம் அடியேனது உயிர்ப்பிச்சை தந்தருளவேண்டும். என்று துதிசெய்தனன். அதனது விநாயகக்கடவுள் மனதிரங்கி அவன் பிராவாது பிழைத்திருக்கும் வண்ணந் தமது கடைக்கண் பார்வை யினை அவன்மீதுசெலுத்தி நிலத்தில்விட்டனர். பின்னர் பிராவ ணன் பரிமளமிகுந்த புட்பங்களால் அவர் திருவடிகளை யருச்சித்து அனந்தமுறை வேதாகமங்களால் துதிசெய்து பூசித்தனன். அதற் குக் கணேசமூர்த்தி திருவுளமகிழ்ந்து, பிராவணனே! உனதுகையால் நமதுமுடியில் எவ்வாறு முன்னங் சூட்டினையோ அவ்வாறு உன்மு டியில் சூட்டிக்கொள்ளுகவெனக் கட்டளையிட, உடனே தனதுமு டியில் உதிரமொழுகும்படியாகக் குட்டிக்கொண்டனன். அதனைக் கணேசமூர்த்திகண்டு, யாவரேனும் இவ்வாறு நம்மைக்கண்டவுடன் குட்டிக்கொள்வார்களாயின் அவர்கட்கு எல்லாத் தீவினைகளையும் ஒழித்தருளுவோமென்று திருவாய்மலர்ந்து அவனுக்கு வேண்டிய பலவரங்களைத் தந்து தமது திருவுருவைக் காத்தருளினர். பின்னர்

இராவணன் அவ்வரங்களைச் சிரமேற்கொண்டு தனது இலங்கைப் பதியையடைந்து இன்புற விருந்தனன்.

இராவணன் பூசித்தபடலம்-முற்றிற்று.

அகத்தியர் பூசித்த படலம்.

அராவணி சடைபெம் மண்ண லருளிய வரங்கள் கொண்டே
யிராவண னிலங்கை யெய்தி யின்புற வாழ்ந்தா னிபபா
லிராவணக் கடலேயுண்ட விருடி பூசித்த வாறும்
பராவண விரைப்பக கேட்டி யெனசொலும பதுமச் செல்வன்.

வேதாகம மென்னுஞ் செம்பொருட் சிரதகைச் சித்தாங்கமா
கக்கொண்டு சைவமென்னுந் தவக்குகையிற சுரிப்பவராயெ ழ!
சவுனகாதிமுனிவர்களே! இராவணன் விசாயகமூர்த்தியை அஞ்ட்
டித்து வமமபெறற வரலாறறிஞ்ச சொன்மெனறு. இபபால் இநதி
ரன் வரம்பெறு பேற்றினையும், அகதிய மகாமுனிவர் வகிதத
திரத்தினையுஞ் சொல்லுவோங் கேட்பீராகளாக என்று பிதிரபித
வனை நோக்கிப பிரமதேவன் அனைந்த சருனியோடிமு, சிவானந்த
சாகரத்தண் மூழ்கினவனுய் பூரணாதிதத அவப பருதிகலைலாம
பாவசமாகிக் கூறுவதாயினன்.

இந்திரன் உபாசனை.

பிதிர்தேவனே! முன்னம் கைலாசபதியாகிய சிவபெருமானி
டத்தில் அளவற்ற வரங்களைப்பெற்று ஆயிரதகெட டண்டங்களை
யுமாண்டுவந்த * சூரபதுமனுல், தேவேகநிரன தனது பத்தினியா
கிய இந்திராணியிடமும் விண்ணுலகத்தை விடித்து, இம் மண்ணு
லகத்தில் அளவற்ற மகிமையுற்றிருக்கின்ற † சோகாழிப பதியைய
டைந்து, சிவபெருமானை யருச்சிபபதற்காக ஓர் நந்தனவனமவைத்
து, அதினின்றும் பிரதிதினம் பதிர புட்பங்களைக் கொய்து,
அருச்சித்து வாழ்ந்திருக்கின்ற காலையில், அச் சூரபதுமனுடைய
ஆஞ்ஞையினுல் மேகங்கள் சிறிதும் மழைபெய்யாமல் மாற, அத

* சூரபதுமன்: சூரன் பதுமன் என்னுமிருவரேகோற்பவ மாய ஓர் அசுரனென்ப. பிரதமபுராணம்.

† இஃது, சீ-சிலாதியும், காழி-காளி யென்னும் ஓ பாம்பும் பூசிக்கப் பட்டதாகலின் சீகாழியெனப்பெயர்பெற்றது. பின்னர் பலர் வழிபாட் டால் பிரமபுரம், வேணுபுரம், புகலி, பூந்தராய், வெங்குரு, தோணி புரம், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலமென் னும் பன்னிருதிருநாமங்களையுமேற்றது. இத்தலம் சோழநாட்டிலுள்ள சுரு சிவத்தலங்களுள காவிரியாற்றின் வடகரைப்பெற்ற சிவத்தலம் சுரு-ல் ஒன்று இதில் ஸ்ரீஞானசம்பந்த சுவாமிகளும், ஞானாயனரும் அவதா ரம். மேற்படி சுவாமிகளருக்குச்சிவபெருமானேவலால் உமையம்மையார் பொன்தன்னத்தில் திருமுலைப்பால் கொடுத்தருளியது. அன்றிசமயகுரவர் மூவராலும் எகதேவாரத்திருப்பதிகங்களாற் பாடப்பெற்றன. சுவாமி பெயர் பிரமபுரீசுவரர், அம்மையார் பெயர் திருநிலோநாயகி.

னால அத்த நந்தனவனமானது வாடி யுகந்தகளமபோ லாயது பின் னர் இந்திரன் அதனைக் காணுற்றோறும வருந்தி; இதற்கினி என்ன செயய வலலோமென்று எங்கித் துயருற திருக்கின்ற சமயத்தில், சிவபிரானுடைய கிருபைபெறுதல் "இந்திரனே! வருந்தற்க, நினது நந்தவனத்திற்கு ஓர் நதிவந்துபாயும்; அஞ்சாது பூசைசெய்யக்க டவை" என்ற அசரீரியாக ஆகாயத்தின்கண் ஓர் திருவாக்குண்டா னது. அதனை இந்திரன்கேட்டு மனம மகிழ்வுற் றிருக்கின்றபோது அவனிடத்திற்குத தற்செயலாய் நாரதமுனிவரவர, அவரை இந்தி ரன் பணிந்தெழுந்து, சுவாமி! நூறபதமான்செய்யுங் கொடிமைக்க ஞ்சி மிகவு மனகவலியோடி யிபபதியிலவந் தொளித்திருக்கின்ற மையால், அக்கவலை நீங்கும்வண்ணம் சாகாதச் சிவபிரானுடைய திரு வடிகளே யருச்சிப்பதற்கு ஓர் நந்தனவனமை வைத்தேன். அஃதுமழை யில்லாமல வாடிபபோனதன்றி, அதிலுளள மலர், தளிர், அரும்பு முதலானவைகள கணவற்கீங்கிய கற்பின்மகளிரைப் போலா யின ஆதலால் இனி அதற்குச் சலம்பாயத்தக்க உபாயத்தினை யுணர்ந்தி யருளவேண்டுமென்று பிரார்த்திக்க, நாரதமுனிவர் மன திரங்கி, இந்திரனே! கைலாசவரையிலிருந்த காவேரிநதியை, முன் னர் சிவபிரான் அகத்திய முனிவருக் களித்திருக்கின்றனர். அதனை யம்முனிவர் தமது கமண்டலத்தில் லடைத்துச் சையவரைச் சாரலில் வந்திருக்கின்றனர். அக்நதி பெருகிவருமாயின் உமது நந்தனவனம் பிழைக்கும். அது பாயும்படிசெய்ய வல்லவர் சர்வகாரணராகிய விநாயகக் கடவுளேயாகும். ஆகலால் அவரை விரைவில் வழிபடக் கடவையென்று சொலலிச் சென்றனர். இபபால் இந்திரனவன், தாயினுஞ்சிறந்த தயாநிதியாகிய விநாயகமூர்த்தியைப் பூசித்து, அவரது திருவடித்தாமரைகளை அனந்தமுறை வேதாகமங்களாற்

அக் காரணத்தை யின்றி பிரமனுதியர் கண்டு, இனி நமக்கு யாது சம்பவிக்க விருக்கின்றதோ வென்று பயந்து, யாவரும் மிருந்த வணக்கத்துடன் கணராசனை யெதிர்கொண்டு அளவற்ற கையுறைகளைத் தந்து இனிய வார்த்தைகளாடி வணங்கிச் சென்றனர். அதற்குக் கணராசன் மனமகிழ்ந்து யாவருக்குந் தனதுகிருபையை வழங்கி அவ்வவர்களுடையு உலகங்களிற் றனது முத்திரைமோதிரச் சுவடை வழங்குப் படிசெய்து பூவுலகத்திற்கு வந்து தனது தாய்தந்தையர்களைப் பணிந்தெழுந்து நேயர்களாற் ரரப்பெற்ற பல கையுறைகளை அவர்களெதிரில் வைத்து அவ்வவர்களைச் செயித்து வந்த திறங்களனைத்தையுஞ்சொல்லி வேதமுறையினின்றும் வழாத படி நீதியினைச் செலுத்தி உம்பர்களுங் கண்டு உலப்பெய்ததக்க பல தருமாதிகளையிடைவிடாதியற்றி அழகிற்சிறந்த அனேகமாதர்களை மணஞ்செய்து நெடுநாள் களிப்பென்னுங்கடலுண்மூழ்கி வாழ்ந்திருந்தனன். இவ்வாறிருந்து நாளையில் ஒருநாள் வனத்தின்கணுள்ள சிலவேடர்கள் கணராசன் சமுகத்தில் வந்துபணிந்தெழுந்து அடியேங்களுடைய கூழுங்குடியுங் கெடாதபடி வளர்த்துவருகின்ற ருரிசிலே! வனத்தின் கண பலவகைப்பட்ட மிருகவர்க்கங்கள் மிருத்து அவ்விடத்துள்ள பயிர்களை யெல்லாம் நாசஞ் செய்துவருகின்றனவென்று முறையிட்டார்கள். அதனைக் கணராசன் கேட்டு, வேட்டையாடுவான் செல்லவத்தனித்து, மந்திரிகளைக் கொண்டு சில சேனைகளோடு நாய் வேட்டைக்காரர் வலைஞர் முதலியோரை வரவழைத்துத் தான் நிலவத்திரமுடித்து, யிடையில் நீலக்கச்சினை விக்கி. நீலநிறத்தாலாகிய முன்கை தோற்கட்டுகளையணிந்து. நீலப் போர்வையைப்போர்த்து நீலந்தோய்த்த தலைச்சுற்றினையணிந்து, சுற்றிலும் நீலமணிக்குடை நிழற்றும்படியாகக் கரத்தில் நீலவில்லேந்தி, நீலப்பரிமீ தாரோகணித்துப் பூவுலகை நோக்கிச்செல்லும் யமனைப்போல. வனத்தைநோக்கிச் செல்லுவதாயினன்.

இவ்வாறு கணராசன் செல்லுகையில் முன்னதாக நான்கு ஏவலாளர்கள் நான்கு திசைகளினுமோடி மிருகங்களெல்லாங் கூட்டங்கொண்டிருக்கின்ற விடங்களை யறிந்துவந்துகூற மன்னர்களெல்

லாம் அவ்வவ்விடங்களிற்கவண்களே யெறிந்து, எங்கும் வலைவிட்டார்கள். வேடர்களெல்லாம் ஞாளிக்கூட்டங்களே யேவிப்பும்பை கொட்டினர்கள். மறவர்களெல்லாம் பற்பல புதர்களோதுஞ் சென்று குறைத்து வெட்டினர்கள் படைவீரர்களெல்லாம் வில்லேவளைத்து வேட்டையாடினர்கள். சிங்கங்கள், யாளிகள், வராகங்கள், முட்பன்றிகள், யானைகள், ஒட்டகங்கள், காட்டானைகள், மான்கள், மூயல்கள், மரைகள், புலிகள் முதலாயுள்ளயாவுந் தங்கடங்கவிடங்களே யகன்று வனமெங்கணும் பாய்ந்துலாவின: அவற்றுட் சில மிருகங்கள் மள்ளர்களோடெதிர்த்து யுத்தஞ்செய்து மாய்ந்தன. சிலமிருகங்கள் ஒன்றோடொன்று அடர்ந்துமடிந்தன சில மிருகங்கள் வலியின்கண் அகப்பட்டிறந்தன சில மிருகங்கள் ஞாளிகளின் வாயிலகப்பட்டு மரித்தன.

இவ்வாறு கணராசனனவன் தனது படைவீரர், மறவர், வலை ஞர் முதலாயினோரைக் கொண்டும் ஞாளிக்கூட்டங்களைக் கொண்டும் பலவகைப்பட்ட நாடுகளினுஞ் சென்று வேட்டையாடி யானி முதலிய மிருகங்களே யெல்லாங்கொன்று திரும்பி வருங்காலையில் தனக்கு மிகவுந் தாகம்மேலிட அதனால் வழிதப்பி இருவிழிகளும் பஞ்சடையும்படியாக அமைச்சர்முதலிய சேனைகளோடு இருண்ட காட்டினுள்ளே புகுந்து சென்றனன். அப்போதவ்விடத்தில் தெய்வலோகத்தினே நிகர்த்த ஓர்வனந்தோற்றக்கண்டு அதனுள் சேனைகளோடு நுழைந்து மல்லிகை முல்லை முதலிய புட்பச்செடிகளெல்லாம் படர்ந்து தென்றற்காற்றினால் எங்கும்பரிமளத்தை வீசானின்ற ஓர்சோலையையடைந்து அங்கு பெரியோர்களது உள்ளத்தைப் போலத் தெளிந்த தண்ணீரையுடைய ஓர் நதியைக்கண்டு அந்நதியின்கண்மிருந்த ஆவலோடும் ஸ்நானஞ்செய்து சிறிதுதளர்வொழிந்து அவ்விடத்துள்ள கந்தமூலபலாதிகளே உழையர்கள் சேகரித்துக்கொடுக்க வாங்கிப்புசித்து தாகசாந்தியுஞ் செய்து பசியையும் இளைப்பையுஞ் சிறிதாற்றித தன்மீது தென்றற்காற்று வீசும்படியாக ஓர்மரத்து நிழலில் உட்கார்ந்திருந்தனன். இவ்வாறு கணராசன் இளைப்பாறிக்கொண்டிருக்கின்றசமயத்தில் அவ்வனத்தில் வாசஞ்செய்கின்ற கபில மகாமுனிவருடைய சீடர்களிலொருவர் அந்குள்ள நதியில் ஸ்நானஞ்செய்யச் சென்றனர். அப்போது அவர் அந் நதிக்கரையிலுள்ள அரசனையும் அவன் சேனைகளையுங் கண்டு அதனைத் தனது குரவராகிய கபிலமுனிவருக்குத் தெரிவித்தனர். உடனே கபிலமுனிவர் அவ்வரசனை இங்ஙனம் அழைத்துவரக்கடவை என்று கட்டளையிட அவ்வாறே அச்சிடர் கணராஜனிடத்திற் செல்ல அவரை அவ்வரசன்கண்டு வணங்கித் தாங்கள் இங்குவந்த

காரியத்தைத் தெரிவிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொண்டனன். அதற்கு அச்சிடர்! அரசனே! நீர் இங்ஙனம் வந்திருக்குஞ் செய்தியை எனது ஆசிரியராகிய கபிலமுனிவர்தெரிந்து உம்மைத் தமதிடம் அழைத்துவருமாறு ஆக்கியாபித்தனுப்பவந்தனன் என்றனர். அதற்கரசன் மிகுந்த சந்தோஷங்கொண்டு அம்முனிபுங்கவரது ஆசிரமத்திற்குச்சென்று இருட்பகையாகிய சூரியனைப் போன்று பிரகாசிக்குஞ் சிந்தாமணியை மார்பின்கண் தரித்திருக்கின்ற கபிலமுனிவருடைய திருவடிகளைப் பேரன்பினோடு பணிந்தெழுந்துநின்றனன். அவனீ அம்முனிபுங்கவர் கிருபையோடும் பார்த்தருளி ஓராதனத்திலவனீயிருக்கச்செய்து அரசனே நீயார்? இங்கு யாதுகாரணம்பற்றி வந்தனை? என்று வினவ அதற்குக் கணராஜன் சொல்லுவான்: சுவாமீ! எனது நாமமாகணன் என்று சொல்லுவார்கள். யான்வனத்தின்கண் வேட்டையாடி திரும்புங்காலையில் மிக்க இளைப்பினால் வழிதப்பி இவ்விடத்திலணுகி திவ்வியாகதியில் ஸ்நானஞ்செய்து கந்தமூல பலாதிகளைப்புசித்து இளைப்பாறிப் பூர்வஞ்செய்திருக்கின்ற புண்ணிய பலத்தினால் கிருபைக்கடலாகிய தேவரீருடைய திவ்விய சரணார விந்தங்களைத் தரிசிக்கப்பெற்றேனென்று சொல்லினன். அதனை முனிபுங்கவர்கேட்டுச் சந்தோஷித்து அரசனே! இவ்வாசிரமத்திற்கு வந்தபேர்கள் பசியுடன் சென்றதில்லை. ஆதலால் நீயும்போசனஞ்செய்து பின்னருனது பட்டணத்தைச் சேரலாமென்று இசைவித்து அவனீ சேணைகளோடு வரவழைத்து தந்தவமகிமையை யாவருந்தெரியும்படி மரர்பிலணிந்திருந்த சிந்தாமணியை கரத்திலெடுத்து ஓராதனத்தில்வைத்துப் பூசைசெய்து இங்கு வந்திருக்கின்ற யாவருக்கும் விருந்திடவேண்டுமென்றுபிரார்த்தித்தனர். அதன்பேரில் அசிந்தாமணியானது அழகு பொருந்திய வோர் நகர முண்டாக்கி அதில அளவற்ற மாளிகைகள்; கூடகோபுரங்கள் முதலியவைகளை நிருமித்து அநேக பரிசாரர்களையும் அளவற்ற தங்கப்பாத்திரங்களையுஞ் சகலவித போசனவர்க்கங்களையுஞ் சிருட்டித்து அரசனுக்கும் அவன் சேணைகட்கும் விருந்திட்டது. அவவற்புதத்தைக் காணுந்தோறும் அரசன் பெருமகிழ்ச்சியடைந்து போசனாதிகளை முடித்து மீட்டும் முனிபுங்கவரைக் கண்டுபணிந்து சுவாமீ! தேவரீர் சிருட்டி முதலிய தொழில்களை வேண்டினும் இமைக்கு முன்செய்து நிறைவேற்றவல்ல மகாதவமகிமையை யுடையவராதலால் கையிற்சிந்தாமணியைத் தேவரீர் வைப்பது யாதுக்கு? எனது தந்தைக்கொப்பாகிய தேவரீர் அடியேனைத் தமது புத்திரனைப் பாவித்து அச்சிந்தாமணியை அடியேற்குக் கொடுத்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனன்.

அதனை அம்முனிபுங்கவர்கேட்டு அரசனே! இச்சிந்தாமணியானது எனது உயிரினுஞ் சிறந்ததாகும். ஆதலால் நீதொழியாதீயாது வேண்டினும் தருவோமென்று சொல்லினர். அதற்வ்வரசன் அச்சிந்தாமணிமீது வைத்த ஆசையினால் சம்மதியாது மனதில் விரோதங் கொண்டு முன்னம் பிரபனிடத்தினின்றும பகற்போதில் வெளிப்பட்ட வீரியமானது பின்னாய பகற்போதிற்றானே வயிற்றிற் றங்கிக் கருவாகிப பிறந்த பழுதினால்; அவள் ராஜகுலத்திற் பிறந்தும் இராட்சசகுணம் பேசிடடுத தனது அற்பபுதியினால் அச்சிந்தாமணியை அம்முனி புங்கவரிடத்தினின்றும பலாத்காரமாய்ப் பறித்துக்கொண்டனன் அதனால் முனிபுங்கவர் கோபங்கொண்டு அடா மூடனே! மூவுலகத்தின் கண்ணும அரராடசியைச் செலுத்துகின்ற நீ எனதுபொருளைப பறித்தது தவ்பபுறச செய்தனை யல்லவா? விரைவில் கடவுளானவர உலகத்தின் கண்ணவதரித்து உன்னை நாசப்படுத்தவேண்டும் பதிதனை இனியென்முன்னர் நிற்பையாயின் உன்னைச சரித்து நிருக்கிவிடுவேனைதலால விரைவில் உன திருப்பிடஞ் சேர்க்கடவையென்று சொலலினர அதற்கு கணராசன் பயமுற்றுனியினும அரசர்தபாணியை பிடடும கொடபபதற்கு மனமில்லாதவனைப் மிகக ஆவலோடுகொண்டு தனது நகரைச் சேர்ந்து தான் வனதலில வேடடைகுபர சென்றது முதல நடந்த விசேஷங்களை எல்லாந தனது தாதையிடத்திற்கூறி தான் கவர்ந்துவந்த சிந்தாமணியைகொண்டு பலனித விரோதங்களைக்காட்டிய பற்பல விடர்களினால தீதது அள்ளாற சிந்திகனோடு மூவுலகத்திலுந் தனது ஆசாட்சியை நடாததிவநதனன்

இப்பால் கபிலமாமுனிவர ஜீவாதினத்தை யிழுந்த நாகம் போலத் தமது சிந்தாமணியை யிழுந்தகாரணததை நினைக்குந்தோறும் நெட்டுயிர்ததுநீங்காத துயரத்திற்குளளாகி ஆகார முதலிய வைகளை நீதது நாகதுத திரோகஞ்செயத மகாபாவியை எவ்வாறழிக்க வல்லோமென்று யோசித்து விரைவில் அவனுக்குக் கேடு சம்பவிக்கவேண்டுமென்று அகோர தவத்தினைச் செய்தனர். இவ்வாறு அனவற்றாள் மிகுந்த பதத்தியாகிந தவஞ்செய்து கொண்டிருக்கையில் விஷ்ணுவினுடைய மாயையானது நாற்றிசைகளினும மேல் கீழாகி எங்கும் அக்கினிசுவாலையாய்மூடி அவரது கண்ணுக்குக் காணும்படியாகின்றது. அதை அம்முனிபுங்கவர்கண்டு ஈதென விபரீதமென்றுபயந்தனர். அபபோதுஅஃது அம்முனிவரைக் கூவியான்மாயாசத்தி; எனது பெயர் சாருகாரினி; உமக்குத் துன்பமளித்த கணனென்பவன் சிவபெருமானுடைய வரத்தினால் திரி

மூர்த்திகளாலும் அழிவுறுத மேன்மைபெற்றிருக்கின்றன மூனறு தொழிலுக்கும் நாயகராகிய விநாயகமூர்த்தி திருவுருக்கொண்டு வருவாரெனில் அந்நிமிஷத்தில் அக்கணனுக்கு அழிவுண்டாகு மாதலால் அவ்விநாயகரை நோக்கித தவஞ்செய்யக் கடவையென்று சொல்லியது.

அவை யனைத்தையும் முனிவர்கேட்டு ,ஐயனே! யான் அவரை நோக்கித் தவத்தைச் செய்யவேண்டிய முறைமையினையுந் தெருட்டவேண்டுமென்று பிராத்திதனர். அதற்கு சாருகாசினி அம் முனிவரைநோக்கி ஓதவசிரேஷ்டரே! முன்னர் யான்கூறிய திருப் பெயரே மந்திரமாகக்கொண்டு அதன் முதலினுங் கடையினும் ஓங் காரபல்லவத்தையும நமோ நாதத்தையுஞ் சோதத்துப் பதினெட்டு லட்சம் உருசெபம்பண்ணி ஓமமவனர்த்தித்தருப்பணம். பிராமண போசன முதலானவைகளையுஞ் செய்தால அவ்வோம குண்டத்தி னின்று விநாயகமூர்த்தியானவர் சோதகம தாமரை மலர் மழுவா யுதம் பூமாலை யென்னு மிவைகளை யேந்திய நான்கு திருக்கரங்களு டனே அனந்த ஆபரணங்களையுங தரித்துக்கொண்டு பிரசாதமுற்ற திருமேனியோடு சிங்கவாகனமூர்ந்து சித்திபுத்திசமேதராய் வந்த ருளுவரென்று சொல்லி மறைந்தபோயினன். அவை யனைத்தை யுங் கபிலமுனிவர் செளிருளிரக்கேட்டுத தாமிழைத்த சிந்தாமணியை அப்போதே அடைந்தவாபோல ஆனந்தமுற் றெழுந்து துள்ளி முன்னிருந்த துயரங்களனைத்தையுமபோகி விநாயகமூர்த்தியினு டைய திருமந்திரத்தை முறைமைபடி செபஞ்செய்து ஓமந் தருப் பண முதலான கிரியாதிகளை யெல்லாம் நடாத்தி பூஜை முடிந்தவு டன் அவ்வோம குண்டத்தினின்று இரத்தினகிரீடம் குண்டலம் தோளணிமுத்துவடமுதலிய ஆபரணங்களோடு தேசார்ந்து வனப் பெய்தி யிருக்கின்ற திருவுருவமும கருணைபொழிகின்ற திருநேத் திரங்களும மோதகம முதலியவைகளை யேந்தியிருக்கின்ற நான்கு கரங்களும் எனது கற்போன்ற மனத்தினைக் கரைக்கவல்ல சேவடி களும் விளங்க சித்திபுத்திகள் சமேதராகச் சிங்கவாகன மூர்த்து விநாயகக்கடவு ளெழுந்தருளினார். அவ்வற்புத தரிசனத்தைக் கபி லமுனிவர் கண்குளிரப பார்த்து சாருகாசினிசொன்ன தனைத்துஞ் சத்தியமென்று பலமுறை பத்தியுடனே சாஷ்டாங்கமாகப் பணிந் தெழுந்து உள்ளமுருகி உரோமஞ் சிலிர்த்து இருகரங்களையுஞ் சிர மேற்கூப்பி ஐயனே! அடியேன் குலமுதலிய யாவுஞ் சுத்த பவித் திர மாயின இனி சுவாமிகளுடைய திருவடிகளில் அடியேற்கு மா முத்த பத்தியே யளித்து அந்தியகாலத்தில் உயர்ந்த முத்தியையு மளித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்கு விநாயக

மூர்த்தி கிருபைசுரந்து கபிலமுனியே! எண்ணிறந்த பவங்களேட்
டுஞ செய்துவந்த தவங்களினுலடையும் பயன்களேயெல்லாம் மேது
கிருபையினுல் இச்சுனனத்திற்றானே ஓர்கொடிப்போதினுலேட்டினே
யா மிவ்வுலகத்தின்கண்ணுள்ள தேவர்கள் முனிவர்கள் பெரியோர்
கள் முதலியோருடைய மலபந்தங்களே யொழிக்கவும் வேதாகமங்
களிற் கூறியயாகாதி சற்கருமங்க ளெல்லா மென்மேலும் வளர்ந்
தோங்கவும் உனக்குத் துன்பதினேவினேத்த கணனென்னு மரக்
கன் மாளவும சகல வுயிர்களுக்கும நன்மையைச் செய்யவுமாக
உனது மீனியின்கண்யாம அவதாரஞ் செய்தனம் இப்பொழுதே
அக்கணனென்பவனுடலே நாய் நரி கழுகு முதலானவைகட் கிரை
யாக்கி ஒப்பற்ற சிந்தாமணியை உனது கரத்திற் றருகின்றேம மெ
ன்னு திருவாய்மலர்ந்தனர் அவையினத்தையுங் கபிலமுனிவர்கே
ட்டுச் சந்தோஷமாயினர்.

இங்கிவ்வாறுக அதினமிரவில கணராசன் நித்திரை செய்கி
ன்றபோது கனவுகண்டுவிழித்து அக்கனவினே யறிவிக்குமாறு ஓற்
றரால் தனது தந்தையும அமைசரையும் புத்திரர்களேயும் வரவ
ழைக்க அவ்வமேற அவர்கள் நித்திரைவிட்டெழுந்து கண்துடைத்
துக் கொண்டேவந்து அரசனது சமீபத்திற்போயினர் அப்போது
அரசன் தனது கனவினுலுண்டான துயரதினேற் றலையிரங்கி வந்
தவர்களேப் பாராமலும் அவர்களோடு வார்த்தை யாடாமலும் முக
வொளி மழுங்கியிருந்தனன் அக்குறிபபினே அவர்களறிந்து தாங்
களும் அவனேபபோல மவுனமாயிருந்தார்கள். அவருள் அவ்வர்ச
னுடைய தந்தையாகிய அபிசித்து மகாராசனுனவன் நீதென்ன கா
ரணமென்று சந்தேகித்தது தனது புதல்வினே நோக்கி மைந்தனே
இவ்வாறு உனது முகாரவிந்தமானதுவாடவும் எம்மையிங்கழைப்
பித்து ஒன்றுமபேசாது மீமவுனமாகவிருக்கவுஞ்செய்த பெருந்துய
ரினுக்குக காரணம யாதென்று வினவினன். அதற்குக் கணராசன்
ஒன்றும் பேசாதிருந்தனன். பின்னர் விபசித்து முதலிய அமைச்
சர்கள் அவ்வரசனேப்பார்த்து ஓ சகலபுவன சக்கிரேஸ்வரா! தேவ
ரீர் தந்தை வினவிய கேள்விக்கு மறுமொழி கூறுமலிருக்கின்ற கா
ரணம் யாதென்று கேட்டார்கள். அதற்கும் வாய்திறக்கிலன். இப்
பாலவன் தந்தை மிகவுங் கிலேசங்கொண்டு இதற்கென்ன செய்ய
வல்லோமென்றேங்கி புத்திரனருகிற்சென்று இனியசொற்களினுல்
இதனேச் சொல்லுவதாயினன் மைந்தனே! தேவர்கள்முதலிய யாவ
ரையும் நினக்கு முன்னமேவென்று வெற்றிக்கொள்ளவல்ல பராக்
கிரமசாலியாகிய உனக்கு இத்தனே சிந்தாகுலம் வருவதற்குக் கார
ணமென்ன? அதனே மறைத்துவைத் திருப்பதினு லாகுங் காரியம்

யாலுரி வரத்தக்கதெல்லாம் வக்தேதிரும். ஏதுவரினுங் தரையா ளும்ம் வேந்தர்கள் தயிரியம்விடப்போமா? திரிலோகங்களையுந்திறை தரவென்ற நீயே இவ்வாறு அதைரியங்கொண்டிருப்பையேல் மற் றேர் என்னபாடுபடார்? நீ இவ்வாறிருப்பது சத்துருக்களுக்கும் பலமுண்டாக்கும் ஆதலால் உனது மனத்தின்கணுள்ள துயரத்தை வெளியிட்டுச் சொல்லுகவென்று கேட்டனன். அதற்குமேல் கண ராசன் சிறிது நிமிர்ந்து என்னருமைத் தாதையே! இனி எனக்கு இப்பிரபஞ்சவாழ்க்கை கூடிவராதபடி கனவுகண்டேன். அதனல் இவ்விதத் துயரங்கள் எனக்கு நேர்ந்தன அதனை விவரமாகச் சொ ல்லுவேன் கேட்பீராக எனது கனவின்கண் கபில முனிவர் அளவி றந்த சேனைகளோடும் வெளிகொண்டு வந்ததாகவும் அவரோடு பற்பல ஆயுதங்களை யேந்திய நான்குகரத்தினையுடைய ஒருவன் ஊழிதகீயினை யொப்பவந்து நமது சேனைகளினதையும் விழுங் கினதாகவும் பின்ன ரவன் ஒரு மழுவாயுதத்தினை என்மீதுவிட அதுவந்து எனதுசிரத்தை யறுத்துத்தள்ளியதாகவுங்கனவுகண்டு விழித்தேன் அக்கனவே எனது தைரியத்தையும் பராக்கிரமத்தை யும் தேஜசையுமழித்தது அதனை நிணைக்குந்தோறும் என்சரீரமு நடுங்குகின்றது யான்பெற்ற மேலானவரங்களினதையும் இழிவு பெறச்செய்தது இனி என்செய்வேன் இக்கனவையறிவிக்கும் நிமி த்தமே மங்கையர் மனம்போன்று இருண்ட இவ்விரவில் உங்களை யெல்லாம் வரச்செய்தே னென்றனன்.

இவை யனைத்தையும் பிரமத னென்னு மமைச்சன் கேட்டு ஓ சார்வபெனுமா! தேவரீர் இக்கனவினைக் கருதிகிலேசப்படுவது மிக நன்று மிகநன்று சகலலோகங்களும் நடுங்கி ஒடுங்குமபடியாக யுத் தஞ்செய்து வெற்றிகொண்ட சக்கிரேஸ்வராகிய உமக்கும் ஓர்அச் சம் உண்டாயதென்று சொல்லத தகுமோ வென்றனன்.

கிரந்த னெனுமந் திரிகேட்டுக் கிளப்பா னிலத்தி னுட்கிடந்த
உரந்தங் கியவித் தறல்கலப்பி னுடனே முளைத்து மரமாகும்
பரந்த கருத்தா லொருவர்புரி பாவ வினையும் புண்ணியமும்
கரந்து பயனுங் காலததுக் கதித்துப் பெரிதாய்த் தடித்திடுமே.

அதனைக்கிரந்த னென்னும் அமைச்சன்கேட்டு ஓ பிரமதரே! நீர் என்னவார்த்தை யாடினீர் நிலத்திற்கிடக்கும்வித்தானது சலத் தோடுகூடினல் உடனேமுளைத்து மரமாகும். அதுபோல ஒருவர் செய்த பாவபுண்ணியங்களும் பயனுங் காலத்து அவைகள் கதித் துப் பெரிதாய்த் தடிக்கும். சரீரத்தை வெறுத்துச் சுகத்தையொ

முத்துப் பலதவங்களில் முயன்று வல்வினைகளனைத்தையும் வாட்டவல்லபெரியோர்கள் ஒன்றைச்சொல்லுவார்களாயின் அச்சொல் லினுல் மேல்விளையத்தக்கது வினைந்திடுமே யல்லது வீணிற்போகாது. நமது வேந்தரோ முன்னங் கபிலமுனிவருடைய சிந்தாமணியை ஒருகாரணமுமிலலாமல் பறித்துக்கொண்டனர். அக் கடத்தையப்போல் எங்குங்கண்டதுமில்லை கேட்டதுமில்லை. அதனுல் அந்த முனிபுங்கவருக்கு மனகொதிப்புண்டாகி உடனே சபித்தனர் அச்சாபந்தான் இதுகாறும் முளையைப்போலிருந்து நாளுக்கு நாள் விருதியாகி இப்போது பலித்து வருவதுபோலிருக்கின்ற தென்றனன் இவையனைத்தையும் யுவனருகிலிருந்து கேட்டிருந்த விசுவசுத்து எனனும் அமைசன மிகவும் மனமகொதிப்புற்று அக் கிரகதனென்னு மமைசனை உறுத்துப்பார்த்து ஐயா! நீர் நமதமை சசுரிமைக கேறறவாதனைகளைப் பேசினீரலலீர்

தங்கு மவைகெடுத் தவையறிகு டிழறுன காரி காரியங்கள்
அங்க ணறியான பிறையாயா வாகப புகழான கோளுரைபபான்
சிங்க வருந்தன கெடறியான சிறபபுத தவனேத தான்புகழ்வான்
இங்களுவரைத தெநாபவபவினே வனறுகவனை நதடித்துரைப்பான்.

ஓர் சபையினகண் அறிஞரு பேராதவர்களுமு, சாமி காரியங்களேயறியாதவரையும், பிறையரை புகழ்ந்தவாகளும், கோளுரைக்கின்றவாகளும், தமகருவருங் தேடனை யறியாதவாகளும், தம்மை நதாம புகழகினறவாகளுமாகிய இவாகளெலலாம வீணுய்ச்சனித்தவாகளே யனறி, ஒரு காலதது மயா யோகியாக ளாகரென்று சொல்லினன இவவாறு பிரபநன, கிரதநன, விசுவசித்து என்னு மமைசசா மூவருமு பெரிய வாரநதகள எனனதையும் விதருவிவென்னு மமைசசன கேடபுருந, உடனே அரசனேபபாரத்து; ஓமண்டலேஸ்வரா! யாவா யாது ரோலமு னுஞ் சொல்லுக யான் தேவரீருக்கு இதனேபேபசுவலலேன அதனையெனமாகக் கொள்ளல்வேண்டும். தேவரீர வலிமையிற்சிறந்தவா, இநதிரன் முதலிய தேவர்களேயெல்லாஞ் செயிதவா. தீரததிற்சிறநதசேனைகளே அளவற்றதாகவுடையவர். எதனிக்கினுஞ சததுருக்களில்லாதவர். சிவபிரானுற் சாகா வரம்பெற்றவர். இபபடி எல்லாவிதததினும் பராக்கிரமத்தினேயேயுடைய தேவரீரை யழிக்க வல்லோர்கள் திரிலோகங்களினு மிரார்கள். தேவரீருக்கு மூடிவுநேருமென்னு எக்காலத்தும் நினைக்கவேண்டாம் தேவரீர்கொண்டிருக்கின்ற சிநதாகுலத்தை விடித்து, கபில முனிவரைக் கொல்வதற்கான உபாயமயாதோ அதனே விரை

விடுத்தடவேண்டுமென்று சொல்லினன். ஊழின்வசத்தாற்கெடுங் காலத்துக்கெட்ட மதியே கல்ல மதியாகத் தோன்றுமென்னுமே லோர் வாக்கியத்தின்படி கணராசனனவன் விதாது சொன்ன வார்த்தையினையே மேலாகமதாதது ஊழின்வசத்தா லழிவுகாலம் சேரிட்டவனுக் ஓர் கொடிபபோதில கிலைமுனியாமீது படையெடுக்கு மாறு தனது சேனாபதிகளுக காகியாபிதனன

அதையவன் முதையாகிய அபிசித்து மகாராஜன் கேட்டு, விழிகள சிவபபேறத தனது புதகிரீனபபாரதது, ஓ மைநதனே! நீ யெனனகாரியஞசெயகினாணை? தேவாரா முனிவாகள் முதலிய யாவருகுகும மிகுத பகையாயினை? அநறநேறற பொல்லாத கன வுங்கண்டனை? அது ஒருகாலதாதும பொயகராது, கலலகனவினால் நன்மையேவரும தீயகனவினால தீமைபவரும, நீ இபபோது தவ தாதிசிறநத கபிலமகாமுனிவாமீது பட எடுதது செலலுவது யுகதமனறு அமைசசா, சேனாபதிபா முதலபவாரோடு அளவற் றபடைகள கடலபோலவி ரூசிறும பெரியோாகளைச செயிபபது மிகவும அரிதாதலால இனி நீ பிழைகும வகையினைசசொலலக் கேள, இநதிமிஷததில முனனா அவரிடதினினறும பறிததுவந்த சிநதாமணியை மீடடும முனனதாக அவரிடதிறகுகொடுதது பபிப பின்னா நீ அவருகுரு கோபபவாதபடி சென்றுபணிந்து தோதிரஞசெபது, உபயதி நூலினறு பிழையினைதீாதது கொளளக் கடவையெனறுசொலலின அவவபனிதைகளு கலலியொ தது உளளதனகிய கணராஜன கேடடு, ஏநதாய! தேவரீா அரசா டகிகருள யாணிருகிறும தேவரீா! சொலலும வாதைகள உட ன்படதாகுதனறு சிறியோாகளாயினுா மானங்கெடாத காரிய ங்களை யெடுதது கூறறுமட, மானதைநாகாகவேண்டினுா அவை களைத் தழுவிகொளளுதல வேணடுமெ பெரியோாகளாயினுா மிகவும பிரியமாக மனங்கெடெபடியான காரியதைச சொலலி னும, அசசொலலுகே கேடுவருமென்று சொலலி தனது தாதை சொலலிய வாதைகளை மறுதாதுபபடையெடுதனன் இவ்வாறு கணராஜன் படையெடுததை இநதிரன முதலிய தேவர்களறிது, இவன் நமதுலகதை நோகுகியோ படையெடுதது வருவதென்று நடுங்கினாகள. மறற திசைகளாவலாகள், நாகேநதிரா முதலிய யா வரும் அவ்வாறே நடுங்கினாகள். இபபடி யாவரும நடுஙகும்படி யாகக் கணராசன் பதினொரு அக்குரோணி சேனைகளுடனேவெளி ப்பட்டுக் கபிலமகாமுனிவருடைய ஆசிரமத்திற்குவநதான். அச்ச மயத்தில் அம்முனிபுங்கவா, தீர்த்தமாடி விபூதி உருத்திராக்க முத

லியஸைகளை யணிந்துகொண்டு விநாயகமூர்த்திக்குப் பள்ளியெழுச்சித் திருபூசையைகடாத்திக்கொண்டிருந்தனர். அப்போது அவர் சீடர்களுட் சிலர் கணராஜன் படையெடுத்து வந்தமையைப் பிரசித்து ஓடிவந்து சுவாமீ! முன்னர்தேவரீரிடத்தினின்றுஞ் சிந்தாமணியைப் பறித்துக்கொண்டு சென்றபாதகன் இப்போது தனதுபடைகளோடும் வந்திருக்கின்றனன். இனி அவனுக்கு கல்லவர்ழ்க்கையில்லை. சுவாமிகள விரைவிலவனிக கொல்லு முபாயத்தைத் தேட வேண்டுமென்று சொல்லிகொண்டனர் அதருணத்தில் கண்சர் ஜன் முன்செய்திருக்கின்ற தவப்பேற்றினலே, அவ்வாசிரமத்தின் கண் அவதரிக்கின்ற விநாயகமூர்தியைக் கண்டனன்.

அப்போது அவ்விநாயக மூர்த்தியைக் கபிலமுனிவர் எதிர்கொன்றுபூசிபபதையும, சித்திபுத்திகளிருவருஞ் சுவாமியினுடைய இருபக்கங்களி லிருபபதையும, தான் கனவின்கண் எவ்வாறு கண்டாரோ அவ்வாறே சகலரூபங்களுந தோன்றுமபடியாகக்கண்டு இவனுடைய படையினுல் நமதுமாயவுருவம் மாயாமலீராதென்று மனந்துணிந்தனன் இபபரல்விநாயகமூர்த்திக்கு சகுநதிராமங்களால் பரிமள மிகுந்த புட்பங்களோகொண்டு அருச்சனை செய்திருக்கிற கபிலமுனிவர் கணராஜன் வந்திருக்கின்றதைப் பார்த்துத் தமது பூசையினைக் குறைவற நிறைவேறறிப், பலமுறைசாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து வேதாகபங்களினுலே தோத்திரஞ்சய்து, சுவாமீ! தேவர்கள் முனிவர்கள முதலமீயார்கு எவ்வளவுமின்றி தீங்கு செய்துவருகின்ற கணனென்னு மசுரன் இங்ஙனம் வந்திருக்கின்றனன். அபபாதகனடியேற்கு யாதொரு தீங்கினையுஞ் செய்யாதபடி காத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். உடனேவிநாயகமூர்த்தியானவர் கொதித்தெழுந்த விடத்தினைக்கொப்பாகிய சத்துருக்களையெல்லாம் அடங்கவுண்டு ஏப்பமிடும்படியாகத் தமது சிங்கவாகனத்தை ஊர்ந்தருளக் கருதினர். அமமாத்திரத்தில் சத்திகளையும் படைத்தளித்த தழிக்கவல்ல பராக்கிரமதேதோடு அவர்க்கருகிலிருக்கின்ற சித்திதேவியாரநிது, மிக்க பத்தியோடும் பணிந்தெழுந்து, சுவாமீ! அடர்ந்துவந்த சத்துருக்களுக்கு அடியாளிருக்கத்தேவரீர் சென்று யுத்தஞ்செய்யவேண்டுமோ? தேவரீருடைய கிருபாகோக்கத்தைமாத்திரஞ் சிறிதுபாலித்தருளினுல் கெருங்கிவந்த சேனைகளையெல்லாம் இமைப்பொழுதில் வென்று, மீட்டுந் தேவரீர் திருவடி நீழற்கண்வந்து சேருவேனென்று சொல்லினர். அதனை விநாயகமூர்த்தி கேட்டருளி அவ்வாறேசென்று செயித்து வருமாறு உத்தரவுசெய்து, அவ்வம்மனுடைய கரதலத்திற் பிரவேசித்தருளினர்.

கேட்டீர்களோ சனகாதிமுனிவர்களே! சுத்தசாட்சுணிய மூர்த்தியாகிய விநாயகப்பெருமானுடைய இளைஞனென்னுஞ் சுப்பிரமணியதேவரது அன்பராயிராகின்ற அகத்தியமுனிவர் கரத்திற்குச் சத்தசாகரங்களும் ஆசமன நீராயிருக்குமெனில், அப்பெருமானுடைய தேவியார் கரத்திற்கு ஊழிகாலத்தி லுண்டாகின்ற வேலையும், உருத்தெழுந்துவந்தசேனைகளும், அள்ளவுமபோதுமோ!

இப்பால் விநாயகப்பெருமான் விடைகொடுத்தவுடன் சித்திதேவி மிக்கமனக்களிப்புற்று யுததத்திற்குச்செல்ல சேணியென்போன்றேனுமின்றித தனிமையாய் யுத்ததிற்கு வருகின்ற செயவீனக் கணராஜன்பார்த்து, ஓர் பெண்பாலமமோடு யுத்தஞ்செய்பவருவது வெகுகோர்த்தி! வெகுகோர்த்தி! யென்று கோபித்து, அளவற்றவீரர்களோடுங் கரததில வாவிணையேறி யெழுந்தனன் அதனை யவன் புத்திரர்களாகிய சுலபனுஞ, சூலபாணியுருதெரிந்து உடனே அவனைப்பணிந்தெழுந்து வந்தையே! இவ்வுலகின்கண் உங்கட்கொப்பான வீரர்கள் எங்கணுமிலலை. எங்களை அவளோடு யுத்தஞ் செய்யுமாறு கட்டளையிடடால் ஓர் கொடிப்பொழுதில் அவளையும், அவளைச் சேர்ந்தவர் களையும அழித்துத் திரும்புவோமென்று சொன்னர்கள் அபபடி சொலலிய புதரிர்களையும் மற்ற வீரர்களையுங் கணராசன்பாரதது, யானிதுகாறுந்தெவர்முதலியோருங் கண்டஞ்சாததக பாகக்கிரமததோடிருக்கின்றனன் ஆதலால் அதற்கொரு குறைவிலலாதபடி இபபோது வந்திருக்கின்றசத்துருக்களைசசெயித்து வருவதாலை அவ்வாறே போய்வாருங்கள். செயமற்றுத தோலவியுறுவீராகளாயின் மீட்டும் என்எதிரில் வீரதொழியக கடவீரகளெனறு சொலலி விடைகொடுத்தனன். பின்னர் புத்திரர்களும், மறற வீரகளும் சகல சேனைகளோடுந் திரண்டு எழுநது ஆரபபரிதது வருநதனர. அதனைச் சித்திதேவியார்கண்டு இமைப்போதில் அவைவற்றுசேனைகளைச் சிருட்டித்தனன். அவர்களுட் சிலர் பத்துகரங்களோடும, சிலர் ஐந்துகரங்களோடும், சிலர் மூன்று கால்களோடும், சிலர் நான்குகால்களோடும, சிலர் ஆறுகரல்களோடும், சிலர் எட்டுகால்களோடும, சிலர் நான்கு முகத்தோடும், சிலர் ஐந்துமுகத்தோடும், சிலர் ஆறுமுகத்தோடும், சிலர் பன்னிரண்டுமுகத்தோடும், சிலர் மூன்றுகண்களோடும், சிலர் ஏழுகண்களோடும், சிலர் மேருவையொத்த புஜபல பராக்கிரமத்தோடும் உதித்து வாள், வில், கப்பணம், வச்சிராயுதம், மழுவாயுத முதலிய ஆயுதங்களேயேந்தித் தங்களைப் படைத்தருளிய சித்திதேவியாரது திருவடிகளிற்பணிந்து, விடைபெற்று இரதம், கஜம், துர

கம் முதலிய வாகனங்களிலேறிக்கொண்டு ரணபேரி, ஜெயபேரி முதலியவைகளைச் சத்தசாகரங்களும் அஞ்சத்தக்கதாக முழக்கிக்கொண்டு கொடி, ஆலவட்டம் முதலிய சின்னங்கள் பல மறுங்கினும் அடியிலிருவரும்படியாக ஆர்ப்பரித்து கெருங்கினர்கள். அவர்களைக் கண்ட ராசனுடைய சேனைகள்கண்டு. முன்னாகமதெதிரில் ஒருதனியே யின்றித் தனியாகவந்தவிவள், ஓரொடிப்போதில் ஒவ்வோருவரைத் தினே ஒவ்வொருவரிற்றாடகவல்ல அவரும்ற பூதகணங்களைச் சிருட்டித்து, அவைகட்கெல்லாம் எண்ணிறந்தபடைத்தலைவரையும் உண்டாக்கினள் இவளோடு யுத்தஞ்செய்து ஜெயமடைந்தாலும், அல்லது யுத்தகளத்திற்றானே வீழ்ந்திறந்தாலும அல்லாமலும் கருக்கீர்த்தியை யெனறு நிலைபெற்றுத்தமது சேனைகளையெல்லாங் கிரமப்படி வருகுது, விசுவவிதியென்பவன் சாற்பத்தெனடும், விதாதுவென்பவன் பெருமையோடும், கிரகனென்பவன் முக்கணனோடும், பிரமதனென்பவன் புறமுகனோடும், சுஷேபாணி யென்பவன் பன்னிருமுகனோடும், கலபனென்பவன் சித்தியமமையோடும் எதிர்த்து யுத்தஞ்செய்தார்கள். இவர்களன்றி இருதிறப்படைகளினும் முன்ன ஏனபவீரர்களை யாவரும் ஒருவரை யொருவர் இனம்நின் றெதிர்த்தும போரிசெய்தார்கள

இவ்வாறு சகலசேனைகளுங் கைகலர்ந்து போர்வினைக்கையில் அளவற்றயானைகளுங், புரவிகளும இறந்துவீழ்ந்தன. எண்ணிறந்த இரதங்கள் முறிந்து நிலத்தன சிலர் உயிர்கள் விண்ணுலகையே றின. சிலர் உடலகள் வாளினால் தைக்கப்பட்டுச் சோணிமழை போல அவைகளினின்றும்பெருகிய உதிரமானது நதிபோகச்சென்று கடலிற்பாய்ந்து குடலகள, ஈரலகள், உறுப்புகள், குருதிகள், தோல்கள், மூளைகள், கொழுப்புகள, நிணங்கள, உரோமங்கள் முதலிய வைகளெல்லாம வேறு வேறுக திருங்கநின்ற அசசெங்களம் எவ் வாறிருந்த தென்னில இவைகளனைத்தும் கூடி ஒன்றுபட நின்ற அற்பவுடலே ஓரொருபொருளாக அகநதில் மதிக்கின்றோர் யாவர்? அவர்களை இவ்வுடலின்மாட்சி இவ்வகைதானெனக்காட்டி அவமதித் தலைப்போலிருந்தது.

இப்பால் சித்தி தேவியினுடைய சேனைகளும், கணராசனுடையசேனைகளும வலியோடும், வஞ்சினத்தோடும மூறைமைப்படி படைகளனைத்தையுந் தூண்டிப்போர்செய்துவந்ததில், சித்திதேவியினுடைய சேனைகட்குச் சிறிது வலி குன்றியது அதனைத்தேவி கண்டு, உடனேயாவரும் அதிசயமுறும்படியாக அதிக உக்கிரத்தோடும ஓர்வீரனைச் சிருட்டித்தனள். அவ்வீரன் இலக்கம்வாளிகளோடும, இலக்கம் வில்லுகளோடும், இலக்கம் கேடயங்களோடும்,

இலக்கிய கரவார்களோடும் உதிதது, ஏனேயபடைகளும் ஒவ்வொ
வருக்கு இலக்கம் இலக்கமாக வேதிய இலக்கம் வீரர்களே ஒர்
சேடிப்போதில் சங்கரிகதகதகறதோடும், இலக்கவெள்ளம்
பேயரினே வகிதது, கணராஜனுடைய சேனைமுதகிரங்களிற் புகு
ந்து, தான் ஒருவனே சதகுருகளாற் ஹண்டபபடடு எதிர்க்கும்
படைகள்யாதோ அநதபபடைகடகெலலாம அநதவாறே படை
களைத்தூண்ட, மாறறலாகள வேறுவேறு இலகமிலக்கமாகக்கூ
டிச் சுற்றிலும் வளைது போசெயய அவவவாகண்மீது அளவற்ற
பாணங்களோ மேகமபோலசசொரிது கணராசனகொண்டிருக்கிற
இறுமாப்பழியுமபடியாகச சகலசேனைகளையும ஓகனபபோதில்
மடித்து, அவவரசனுடைய அமைசசரசெலலாம பினனிடடோ
மெபடியாக முடுகி, அவனுடையபுநிரா இருவரையும அவ்வவர்
கள் இரதததோடு கைபபிடியாகபபிடி தது, விநாயகமூாதி சந்நி
தானதகிற கொண்டுவநதுவிடட, விணணுலசமும மண்ணுலகமும்
படியத்தக அவரடி பாக பதுமஙகளைப பலமுறையும பணிநதெ
முந்து சுவாமி! இவாகள கணராசனுடைய குமாராகள, தேவீர்
சரணரவிந்தங்களிற றஞ்சமடைநதன; தேவீர திருவருளாலெதி
ாதது வந்தவாகளெலலா மிறநதனா சிலா பபதோடி பபோயினர்.
கணராசன் மாதகிரம எமமோடு வநது எதிரநதவனலலன் சுவாமி
களுடைய திருவருணிறைக திருபபாகிலை இறகினமோர்கள்
யாவராயினும அவாகளெலலாம முகுபபெறறிருபபினமையால்,
அவ்வரசனையும சுவாமிகளே சங்கரித நமுகதிசொடுததருளல வே
ண்டும சூலபாணியெனறு சுலபினெனறு சொலலாகின்ற இவ
ர்கள் மகாசததவீரகள இவாகள எனறெடு தெடுதேரம அளவ
ற்ற யுததங்களைசெயது முடிவில எனறு கரதலிகபபடுகொ
ண்டனா ஓ குணக்குனறமே! இவாகளியறகையில சிலமுடையோ
ரர்தலால இவாகடகு அககணராசனுடைய அரசாடசியைக கொடு
த்துக் காதருளவேணடுமெனறு பிராாதகிதனன அவவாறே
விநாயகமூாதி அவாகளிடதகிற கிருபையுறறிருநதனா

இபபால் போகளதகில நின்றும ஒடி பபோன மநகிரித்தலை
வர்கள எல்லாங்கணராஜனேயடதனா அவருள்சூடசும புத்தியி
னேயுடைய கிரந்தனென்பவன அரசனெதிறசென்று, தெவீர்குமா
ர்கள் இருவரும யுதகளுசெய்யச சென்றாகளே அவாகள்செய்த
காரியம் யாதேனுமதெரியுமோவென்று கேட்டுக்கொண்டிருக்கின்ற
சமயத்தில், ஒருதூதுவனேடிவநது, உடல்வெயர்க்கவும், முகம்வா
டவுமாக அரசனெதிரினறு, இருகிழிகளினும கீரைசொரிந்து,

அண்ணலே! தேவரீர்குமாரர்கள் சதுரங்கசேனைகளோடுஞ்சென்று கபிலமுனிவருடைய சேனைகளெல்லாஞ் சின்னபின்னமாகவும் வருகின்றதருணத்தில் ஒருவீரன் அளவற்ற ஆயுதங்களோடு யுத்தகளத்திலுள்ள சமதுசேனைகளெல்லாம் நடுங்கி யொடுங்கும்படியாக வந்துநின்றனன். இவ்வாறு அவன் வந்ததைக் கண்டுமன்றி அவன் யுத்தஞ்செய்யக்கண்டிலன். பின்னர் ஓர்கொடிப்பொழுதில் எல்லாச்சேனைகளும் பூமியின்கண் பிணம்பிணமாய் விழுந்துண்டனன். அவன் பராக்கிரமத்தை என்னென்று பேசவல்லேன். இமமந்திரத்தலைவர்கள் எதிர்த்துப் படையெடுப்பதற்கு முன்னே அவ்வீரன் இவர்கள்மேலில் ஒவ்வொரு பாணங்களை ஏவி இவர்களுடைய சாமர்த்தியங்களை யெல்லாமழித்தனன். உடனே இவர்கள் அவனைநெடிநேரம் யுத்தஞ்செய்வதற்கஞ்சி ஓடிவந்துவிட்டனர். சிறிதுநேரமேனும் மிருந்து போர்செய்துநின்ற பெருங்கிறத்தினராகிய தேவரீர் குமாரர்களை, அவ்வீரன் தேரோடும் வளைத்துக் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு போய்த் தனது படைநடுவில் வைத்திருந்தனன் பின்னரவர்கள் எவ்வாறுயினரோ அதனை யறிந்திலனென்று சொல்லினன். அச்சொல்லானது தனது செவியிற் றுழைவதன்முன் மலைபோலத்தரினின்றும பூமியின்கண்விழுந்து புரண்டு புரண்டு, அழுது அழுது, (மதம் பொழிகின்ற யானைகளையெல்லாங் கொல்லுதற்கு சிங்கமானது தனது குட்டிகளைச் சரபப்பட்சிகொண்டுபோக வருதலைபபடுவதுபோல) அறிவழிந்து, மூர்ச்சையுற்றுப், பின்னரருகிருந்தவர்கள் தெளிவிக்கத் தெளிந்து, ஓ என்னருமைச் செல்வனுகிய சூலபாணியே! ஓ பராக்கிரமசாலியும் கிய சுலபனே ஓ எனது புத்திரசோகத்தினைத்தீர்த்த பெருமான்களே! ஓ யென்மனதுக்குத் தெவிட்டாத இன்பத்தைத்தரும் அருந்தத்தைப்போன்ற புத்திரசிகாமணிகளே! உங்களை மலைபோல தெண்ணியிருந்த வென்னை இவ்விதத்துக்க சாகரத்துளழுத்தி நீங்கிவிடலாமோ? விரைவில் ஓடிவந்து எனக்கோர் தயிரியத்தைச் செல்லீர்களோ? மன்மதனையொத்த சுந்தரமும், வீரசிங்கத்தினு மேலாம் பட்டவல்லபமும், கல்வித்திரங்களும், சாத்திர சம்பத்துகளுமுற்று, வில்வித்தை முதலிய பராக்கிரமங்களில் மிருந்து, சகலலோகங்களையுந் திக்குவிஜயஞ்செய்து, தேவர்தானவர்முதலியோர்களை எல்லாம்வென்று, அளவற்ற கீர்த்திகளை எனக்குண்டாகச்செய்த நீங்கள் இன்று ஒருவன்கையினு மகப்பட்டீர்களே! புஜபல பராக்கிரமசாலிகளாகிய உங்களையொருவன் பிடித்துச்சென்ற சேதியைக் கேட்டவுடன் இந்தப் பாழ்த்தவுயிர் நீங்காமல் இன்னமும் வருந்

இந்தாயிருக்கின்றதே! ஆயினும் எனது யுக்கம் தேயம், ஒளி ஆண்மை, வீரம், குலம், அரசாட்சி முதலியவாவும் இன்றுடனிந் போனதால் யான் செத்தவனைப்போலாயினேன். ஓ குமாரர் களே! உங்களுக்குவந்தவிபத்தை நினைக்குந்தோறும் என்மன ஏசோ சுவறுகின்றதே! ஒருவாற்றலும் நிலைபெற் றிருக்கப்படவில்லையே ஐயையோ! இனி என்னசெய்யக்கடவேன்! இனி என்னசெய்யக் கடவேன்! என்று இவ்வாறுபுலம்பிவருந்தும் அரசனை மந்திரத்தலை வர்கள் நோக்கி, இராஜாதிராசனே! உயிர்போவதாயினும் விவேக மூள்ளபேர் மலைபோல அசைவற்றிருப்பார்களையன்றி, ஆயாசமு ரூர்கள். உனதருமைச்செல்வராகிய மைந்தர்கள் இவ்விருவரேயெ ன்று யாவரும் சொல்லிப் புகழும்படி சமரடி அளவற்ற கவந்தங்க ளாடும்படி பகைவருடைய சேனையின்கணுள்ள வீரர்களை யெல் லாங்கொன்று அவர்களுயிரைப பானஞ்செய்துவந்தனர் பின்னர் ஏதோ ஒருகன்மவசத்தினால் அவ்விலக்கன் காதில் அகப்பட்டுக் கொண்டனர். சுத்தவீரராயிருக்கின்ற நேவரீரே அகாரணத்தை நினைந்து கண்பிசைந்து சரீரமெலிவெய்தப் புலம்பினால் இனியென் னகாரியங்கள் நடக்கும்? நாமெல்லோரு மொருமுகமாகச்சென்று, அவ்விலக்கனையும் அவன்சார்பற்றிருக்கும் கபிலமுனிவனையுங்கொ ன்றுவிடுவோம். ஒருவேளை நேவரீர் குமாரர்கள் உயிரோடிருப்பர ராயின், உடனே அழைத்துக்கொண்டு வருவோமென்றுசொல்லினர்.

அவையனைத்தையுங் கணராஜன்கேட்டுச் சிறிதுமனம் தேறித் தான் இரதத்தின் மீதும், மந்திரித் தலைவர்கள் மதயானைகளின் மீதும் ஆரோகணித்து, முன்னம்போர்க்களத்தினின்றும் தப்பிப்பி ழைத்திருக்கின்ற சேனைகளெல்லாந் தம்மைப் புடைசூழ்ந்துவர, இலக்கவீரன் எங்ஙனமிருக்கின்றனனென்று தேடிக்கொண்டு விநா யகமூர்த்தி எழுந்தருளியிருக்கின்ற விடத்திற்சென்று, மலக்குறு ம்புகளையன்று, யோகீஸ்வரர்களுக்கும் கிடைத்தற்கரிய அவரது திருமேனியை முன்செய்த தபோபலத்தினாற் கண்டனராகி, சித்தி தேவி இடப்புறத்தினும், புத்திதேவி வலப்புறத்தினும் வீற்றிருக் கினுஞ் சிங்காசனத்தினை யூர்ந்து, மோதகத்தை யேந்திய திருக்க ரத்தினோடு மிருக்கின்ற காட்சியைப் பலமுறைதரிசித்து, இதுகா றும் இவ்விதத்தினைப்போல எவரையுங்கண்டதில்லையென்று அதிச யித்தார்கள். அப்போது விநாயகப்பெருமான் முன்னர்! துதிசெய் துகொண்டிருந்த கபிலமுனிவரைக் கணராசன்பார்த்து கதிரவன் முன்பிருக்குங்காந்தமானது கனலைக்கக்குமாறுபோலச் சினக்கனலை இடைவிடாது கொட்டுமுகத்தினனாய், ஒகபிலாகருடனை நாகங்கள்

கூடிக் கொல்லுவதுண்டோ, என்னைவெல்லுவதற்கு நீயிப்படியுமின் தாபித்தனீ? இவனீ எனதுகிருபைக்கு பாத்திரனுகும்படியுன்கடவை. விடாமற்போவையேல் அழலிக்கக்காரின்ற ஏசுகளினில் உன்னையும், உனக்குச் சார்வாகவிருக்கின்ற இவனையும் ஓர் கணப்போதிற் கொன்றுவிடுவேன். இவ்வுலகின்கண்ணுள்ள இரு டிகளாயினோர் கருணையே வடிவமாகிக்காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் அறுவகைக் குற்றங்களையுங் கடிந்து ஆண்டவனுடைய திருவடிகளையடைவார்கள். இக்குணங் கட்கெல்லா மாருகப பெருமபானும் பொருளினையே இச்சித்திருக் கின்ற நீ எவ்வகையாய் இருடியாயினையோ அறிந்திலன்? என்னை எதிர்த்துவந்த பலகவர்கள் எத்தன்மைதான பராக்கிரமசாலிக ளேயாயினும அவர்களுக்கெல்லாம அரிட்டமேசெய்யும்படியாகத் தோன்றியிருக்கின்றனன் இதுதன்மைதாகிய எனக்கு ஓரடிட்ட மேனுஞ்செய்ய வுங்களா லாகுமா? உங்களாலே நீங்கள் கெட்டீர் கள். இனியாகிலும மேற்சொன்னபடி நடந்துகொள்ளக் கடவை யென்றுசொல்லினன்

இவை யனைத்தையும் கபிலமுனிவர்கேட்டுக் கண்களி லனற் பொறி எழும்பும்படியாகக கோபித்து, அடா உண்டவீட்டிற் கிர ண்டகஞ் செய்யவல்ல துரோகி! கடல்போன்ற பாவங்கட்கெல்லாம் நீயுறைவிடமாயினை? தேவர்கள் முதலாயினோரையெல்லாந் தாழ்த் திப், பன்றியைபோல மையலெனனுஞ் சேற்றில் மயங்கி, வீழ்ந்து கிடக்கின்றனை உன்னைக் கொல்லுவதற்கு மனுவாக்கு காயங்களி லும் அறிதற்கரியபரமபொருளே விநாயகமூர்த்தியாகவந்து அவ தரித்திருக்கின்றனா குரைகின்ற நாய்கடிக்கவறியாதெனைச் சொ ல்லுவாகாள்; அதுபோல நீயுங்கடைவாய் நுரைக்கும்படி கற்றதெ ல்லாம் நொடிக்கின்றனீ. இனி உதிரவெள்ளந் திரைகொண்டு மே தும்படியாக உனது சேனைகளனைத்தும் நாசமாகிக் கடல்போன்ற பேரொலியோடு உனது மனைவியரெல்லாங் கூக்குரலிட்டழும்படி இறக்கப்போகின்றனீ, ஆதலால் நீ இப்போது கவிழுஞ்சமயத்துற் றகப்பலோட்டம்போலவும், அவியுஞ் சமயத்துற்ற விளக்கொளி போலவுந் துள்ளுகின்றனீ? இனியேனும் அடித்தலை ஆப்பிக் ள்ளவல்ல விநாயக மூர்த்தியினுடைய திருவடிகளிற் சரணுகதியை டைந்து உய்யக்கடவையென்றனர். இலையனைத்தையும் கணா சன்கேட்டு வடவாக்கினியைப்போலக் கொதித்துமூண்டு பார்வதி களையும் உருவிப்பாயவல்ல தனது வில்லினையெடுத்து வளைத்து விழிகளினின்றும் அனற்பொறி எழும்பும்படியாகச்சிறி விநாயகப் பெருமானுடைய ஒப்பற்றதிருமுதலில் ஓர்கணையும், இரண்டு புயம்

கனிக் இரண்டேனையும், தாமரைமலரையொத்த இரண்டு திருவடி களிக் இரண்டேனையும் விடுத்தனன். அவைகள் அவன் குறித்த விடுட விடத்திற் றப்பாமற்சென்று நீறுயின. பின்னர் விநாயகப் பெருமான் இருந்த ஆதனத்தினின்று மெழாமல் தமது கரத்திலே க்கிய மழுவாயுதத்தினைபார்த்து நீ தேவர்கள் முனிவர்கள் முதலா யினோரை வருத்துகின்ற இப்பாதகன்சிரசைக்கடிந்துமீளக்கடவை எனப் பணித்துவிட்டனர், அம்மாத்திரத்தில் மழுவாயுதமானது சோடிசூரியோதயம்போலப்பிரகாசித்துப் பிரசண்டமாருதம்போல வெழுந்து ஆலகாலவிடத்தினும்பாலச் ரீரிவர, அதனைப் பன்னிர ண்டு சூரியர்களுங் கரிந்தார்கள். எட்டுத்திசைகளுஞ் சோதிமய மாயின அட்டகுலாசலங்களும் எரிந்துபோயின. பூமிகளெல்லாம் வெடித்தன கடல்முழுவதும் வரண்டுவிட்டது அண்டகடாகங்க ளெல்லாம் கொறுங்கின. உலகங்கள் எல்லாம் முழுவதும் நீறுபொ டிந்துவிட்டன. இவ்வாறுவிநாயகப்பெருமான் விடுத்தருளிய அம் மழுவாயுதமானது சகலலோகங்களிலுஞ் சென்றுலாவி; யாவரும் பயப்பிராந்திகொள்ளும்படியாக அளவற்றஉற்பாதங்களை விளைத்து மகாபராக்கிரமசாலியாகிய கணராசனுடைய முடியையறுத்து நில த்தில் வீழ்த்திமீட்டும் உலகத்தையெல்லாம் பழையபடிபடைத்து, தெய்வ கங்கையிற்சென்று ஸ்நானஞ்செய்து வந்துதீனசரண்யரா கிய விநாயகப் பெருமானுடைய திருக்கரத்தில் யதாப்பிரகாரஞ் சேர்ந்திருந்தது. உடனே தேவர்களெல்லாம் புஷ்பவருஷஞ் சொரி ந்தார்கள்.

ஓ சவுனகாதி முனிவர்களே! முன்னொருகாலத்தில் மகாவிஷ் ணுவின் புத்திரனுகிய மன்மதனவன் இவ்விநாயகப் பெருமானு டைய தந்தையாகிய சிவபிரான்மீது மலர்வடிவாகிய பஞ்சபாணங் களேவியிறந்தனன். இப்போது, பிரமன் புத்திரனுகிய கணராச னுவன் எமது தந்தையாகிய விநாயகப்பெருமான்மீது அழல்வடி வாகிய பஞ்சபாணங்களே யேவியிறந்தனன். இவர்களெய்த அப்ப ஞ்சபாணங்களேயும் யோசிக்குமிடத்து, அவைகள் தங்களைக்கொல் லுகின்ற அறப்பகையாகிய பஞ்சமா பாதகங்களேப்போலும். இப் படி தேவர்களெல்லாம் உலர்ந்து உறங்கும்படியாக ஒங்கியிருந்த கணராசனுடைய ஆக்கினையனைத்தும் ஓர்கொடியளவிற் புலர்ந்து நீங்குமாறு எழுந்தருளிவந்த புண்ணியமூர்த்தியாகிய விநாயகப் பெருமானது திருவடிகளேப்பணிய வருவான்போலச், சூரியனுன வன் தனது பகையாகிய இருட்கூட்டங்களையெல்லாம் கலந்துதீழ் த்திசைச் சடலிலுதயமாயினன். கணராஜனும் அவன்சேனைகளும் ஒருமுகூர்த்தவேளையில் மடிந்துநாசமாயினதைக்கேட்ட யாவரும்

ஆச்சரியமடைந்தார்கள். விநாயகப்பெருமான் ஏவிய [illegible] மானது கணராஜனது உயிரைவாங்குங் காலத்துப் பயந்தோடிய அமைச்சர் முதலிய யாவரும் அவன் நந்தையாகிய அபிசித்துமகா ராஜனிடத்தில் அடைந்தனர். பின்னர் அவ்வபிசித்துமகாராஜன், தனது குமாரன் படையெடுத்ததுசென்றது முதல் அவன் இறந்த வரையில நடந்தசரிதத்திரங்களையெல்லாம அமைச்சர் சொல்லக்கே ட்டு தனது சுற்றத்தினரோடுஞ்சூழ்ந்து பிரலாபித்தது, ஒவென்றலறி மதிமருண்டு, புத்திரசோபமென்கின்ற வாயுமோதப்பட்டுப், பெரு மூச்செறிந்து, சரீரமுழுவதுங்காந்தி, விழிகளில நீரபபசுமையுற்று உதிரம்பெருக வெயர்த்து நடுநடுங்கி, பிராணன் நிலைபெறுமல் நது, ஓர் மதகளிறறிந்தொத்த குமாரன்! எதிர்த்தவர்த்த சத்து ருக்களுக்கு யமனைபோன்றவனே! மதித்தவர்தோர்களை மகாவிஷ் ணுவைபோலக காக்குஞ்சீரனே மகமேருவையொத்த பிரகாசிக் குங்கீர்த்தி பரதாபனே யுன் சரீரமானது நரிகளாலுங், கழுகுக் ளாலும புரட்டி பிடிபபடடதே? ஓ எனதரிய தவதிறதோன்றிய புதல்வனே நீ என்குலத்தை ஆலமரத்தினகிழ்விழுதுபோல் ஆதரிப் பையென்றிருந்தேனே? ஆ! ஆ! எனைசெயதாய் என்னகாரியஞ் செய்தனை? ஐயையோ! தவதிறசிறந்த தாபதர்களையும் பகைக்க லாகுமோ? நீ இவவுலகில எனக்கண்ணெதிரில வீழ்ந்தது எனது நெஞ்சை உருகவைத்ததனையே? முனனே இதமடுபபசசொன்னோர்களு டைய சொறகளைசசிறிதுங்களாது பினனே அதிதமடுப்பச்சொன் னோர்களுடைய வாதத்தைகளையே தூணையாகக்கொண்டு சென்று சத்துருகளெலலாம நகைக்குமபடி யாக ஓர் கணபபோதி லிறந்த னையே? என்றபுலமபியிருகினற அபிசித்துமகாராசனைக் கிரந்த னென்னும் மாதிரிருங்கி, எமதிறைவனே! யான்கூறும் வசனங்க ளைத்தயைசெயது கேட்டருளுக தேவீர இவ்வாறு விம்மி விம்மி யழுவதுபழுதாகும இவவுலகததில உற்றவாகளழுகின்ற கண்ணீ ரானது செத்தவாகள் முகத்தில விழ்வது உண்மையேயாயினும் அநித்தியமெய்திய உடலைக்கருதி அவலிதிருபபதி லென்பயன் இனி இறநதோாகு நடந்ததவேண்டிய கருமாதிகளை இனிதுமுடிம் பதே மாண்பென்று அவனது கண்ணீரைதுடைத்து அவனையும் அவன் சுற்றத்தினரையும அழைத்துக்கொண்டுசென்று, போர்க்க ளத்தையடைந்து, அங்கு அவன்புதல்வன் வீழ்ந்துகிடக்கின்றதை க்காண்பித்தனன். அதை அபிசித்துமகாராசன் கண்டவுடன் தை றிக்கலங்கிச்சோபித்து மேல்விழ்ந்து சிரம்வேறு, உடல்வேறுகவிழ் கின்ற கோலத்தைக் காணுந்தோறும் பனைபோதைத்து நிலத்தில வீழ்ந்து புரண்டு, சர்ப்பத்தைப்போலப் பெருமூச்செறிந்து, அவ் பனே! சத்துருக்களிடத்தி லிருக்கின்றகோபமானது இன்னமும்

உனது திருமுகமண்டலத்தில் மாறாவில்லையே உனது நெற்றிமான மும்மீனிரண்டும், வலியும் எங்ஙனஞ்சென் றொளித்தனவோ? உன்னை யொத்த சவுரியவான்களே இனி எங்ஙனங் காணப்போகின்றேன் ஐயையோ அடங்கிய அரசர்களெல்லாமடிகளேவருடவும், தேவர் களெல்லாம் வீணைவாசிக்கவுமாகப பஞ்சணையமளியிற் பள்ளிகொ ண்டவனுகிய வுனக்கு இச்செங்களத்திற் பள்ளிகொள்ள கேரிட்டது தே? அரம்பாஸ்திரீகள் எதிரெதிர்நின்று ஆடுமபடியான நினதுசமு கத்தில் இப்போது பேய்கள் கூடி அவ்வாறு கூத்தாடுகின்றனவே, குளிர்ந்த சாந்தாற்றிகளால் விசபபட்டிருந்த உனது சரீரமானது இப்போது கழுகின் சிறகினல் விசப்பட்டிருக்கின்றதே புட்பவிதா னரீழலிலும், இரதத்தின் கவிகை நீழலிலும தாங்கியிருந்த நினது வடிவமானது இபபோது பருந்தின் சிலகாலுன்டான நீழலில்வதி கின்றதே? சிறந்த கவரிமானுடையவாலி லரடடாகின்ற நினது மருங்குல்கள் இப்போது நரி, நாய் முதலியவைகளின் வால்களாலி ரட்டை நின்றனவே? பரிமளமிகுந்த சந்தனகிலேதத்தினாகின்ற நினது மார்பானது இப்போது புலவீனவிகாம உதிரங்கள் பூசவிரு க்கின்றதே காம்புகளோடு மலரிகை முல்லை யாதிகளாற்செய்த மெ ல்லிய அமளியின்மீது பள்ளிகொளளும நினதுவடிவமானது இப் போது பருக்கைகற்கள் நெருங்கிய போர்க்களதைப பொறுக்கி ன்றதே? பேரிகை, குடமுழா, தண்ணுமை, முரசமுதலியவாத்திய வோசைகளெல்லாம் நாய், நரி, பேய், புள்முதலியவைகளின் ஓசை களாயினவே? என்றிவ்வாறு தனது புதல்வனுடைய பிரதாபத்தை யெல்லாஞ் சொல்லிச்சொல்லித் துதிதது, பிணக்குவைகளின் மத் தியில் வீழ்ந்திருக்கின்ற புதல்வனெடுதது சந்தனக்கட்டைகளே யும், அகிற்கட்டைகளேயும் பரப்பி அதன்மீது அவனே வளர்த்தி மங்கையர்களாற்சூடும் மலர்மாலையினே யுடையோனுக்குத் தனது வழியின் வசத்தால் அழன்மாலையைச்சூட்டி அவ்வழலே நாற்புறங்க ளிலும் மூட்டி, இதுகாறும் கணராசனுடைய பராக்கிரமத்தினுக் கஞ்சியிருந்த தேவர்கள் முதலாயினேர் கொண்டவயிற்றெரிவையெ ல்லாமாறறி, நமதருமைப்புதல்வனுசை இன்றே டொழிந்ததே யெ ன்னும் வயிற்றெறிவோடுந்தனது அரண்மனையிற்சென்று மறுதினம் மந்திரிகளே வரவழைத்து முன்னர் தனதுபுத்திரன் கவர்ந்துவந்த சிந்தாமணியைக்கைக்கொண்டு கபிலமுனிவருடைய ஆசிரமத்தினி யலைந்து, சித்திபுத்தினிமேதரா யெழுந்தருளியிராநின்ற விநாயகப் பெருமானுடைய திருவடிமுன்பு அச்சிந்தாமணியினேவைத்துஅங்கி ருப்பவரெல்லா மதிசயமுறப் பலமுறைதீர்க்கதண்டஞ்செய்து, அத்

கடவுளே வழிபட்ட கபிலமுனிவரையுஞ் சாஸ்டாங்கமாகப் பணிந்து தொழுந்துமீட்டும்.

விநாயகமூர்த்தி சந்நிதியின் முன்னர்வந்து தீனராயிருதோன் டர்களுக்கடுத்த வினைகளைப்போக்கிப் பாதுகாத்தருளும் பக்தவத் சலனே! பாசபந்தனைக் களைந்து நன்னெறிகளை யதுட்டித்து வரும் மகத்துக்களுக் கிருபபிடமாகிய ஞானநாயகனே! விண்டுகளிற்றிருக் திருக்கும் வானவருக்குத் தலைமைபெற்றிருக்கின்ற தேவேர்த்தம னே! அஞ்ஞான விருளைபபோகவிப் பேரானந்தத்தைப் பெற்செ ய்யவல்ல பரஞ்சுடரே! வேதாகமங்கள்முதலியவற்றுலெண்ணி ள்ள விடுதற்கரிய கர்த்தனே! சராசரபபிரபஞ்சங்களனைத்தையும் படை த்து, அவைகட்குரிய வினைப்போகங்களை யூட்டியாடும் பரவண்டு வே! தேவர்களிற சிரேஷ்டமாக விளங்குந்திரிமூர்த்திகளில் மூதன் மைபெற்றிருக்கின்ற சிவபிரான் பெற்றருளிய கடவுளே! சிருஷ்டி திதிசங்காரமென்னு முத்தொழில்களை நடாத்திவரு மும்மூர்த்தி களுக்கும முதன்மையாகவிருக்கின்ற விநாயகக்கடவுளே! எல்லா வுயிர்களுந் தேவரீர வயத்ததென்றறியமாட்டாத அற்பகுணத்தி னுற் கணனென்பவன் அவமானத்திற்கஞ்சி சத்துருவைப்போல வந்து தேவரீருடைய மழுவாயுதத்தாலிறந்து மேலான கதியினைய டைந்தனன்.

அலகினெமபுண் ணியவயத்தா லடிபபதுயர்மா னிடப்பிற்வி குலவுமதண்ப பெற்றவாகின் குரைபூங்கழற்ருள் வணங்காரேல் பலனென்பெறுவா பண்ணவருமை பரமாகினேசசூழ்ந் திலாயின் கலதியுடைய ராய்கழ்ாய்க் கவிழ்வரிதுசத் தியமாமே.

தருதாரணமே தியானமே சமாதியேயின் நிவைமருவி வருமாதவர்க ளிருதயததின் வயங்காகின்ற பரம்பொருளே ஒருவாவிருவர்க் கறியாதாய் மூவராயு மொளிர்பவனே பெருஞான்மறைக்கு மெட்டாத பெருமான் பேரானந்தமே.

சரியைகிரியை வளர்யோகந் தக்ஞான மெனநின்றே உரியபணிக ளியற்றாருக் குவபபுறறவவப் பயன்களையே விரியவுதவும் பெருங்கருணை விமலாரீயிங் கவதரித்துத் தெரியவெதிர்நின் றனையதனற் றேவாநின்னைச் சரணடைந்தேன்.

சுவாமி! அளவற்ற புண்ணியங்களினு லடிப்பபது உயர்ந்தமானி டப்பிறவி அதனைப்பெற்றபேர்கள் தேவரீர்திருவடிகளில் வணங்கா ராயின் என்னபயனையடையப்போகின்றனர். பிறந்தேவர்களேயா யினுந் தேவரீரைச்சரணடையாராயின், உடனே அவர்களுக்கலதி

புண்டாகும். அதனால் அவர்கட்கு இழிந்தயோனிகளிற்பிறப்பும் பிறந்தழியவரும். இஃது வேதாகமங்களிற்கூறியிருக்கின்ற சத்தியமன்றோ? ஈகையே, தியானம், சமாதியென்னும் இவைகளை மருவியிருக்கின்ற மகதவத்தவர்களது உள்ளத்தின்கண் பிரகாசிக்கும்பரம்பொருளே! பிரமனுமம் விண்டுவினுமுங் காண்டற்கரிய தெய்வமே! திரிமூர்த்தி சொரூபமாயிருக்கின்ற கடவுளே! நான்மறைகட்கு மெட்டாத் எனது பேரானந்த சொரூபமாயிருக்கின்ற பெருமானே! சரியை, கிரியை, யோக, ஞானமென்னு நான்கியல்பின் கண்ணுமிருந்து பணிசெய்யுமன்பினர்க்கு அதனதன்பயன்களை விரியவுதவும் பெருங்கருணையினையுடைய விமலனே: தேவரீர் இவ்வாசீர்மத்தி லடியேன் அடியேங்கள் காணுமாறு எதிர்நின்றீராதலால், தேவரீர் பாத பதுமங்களில் அடியேன் சரணடைந்தேன். இஃதன்றிப் பிறவிகடோறுஞ்செய்து முற்றியதபோபலத்தினால் முன்னமே தேவரீரது திவ்விய சரணாரவிந்தங்களையடைந்து அருள்பெற்ற சுலபாணியுஞ் சூலபாணியையும் வருணவொழுக்கங்களி னினறும வழாத வண்ணமருவிக கணராசனுடைய அரசுரிமையை அவர்கள்பால்ஒப்புவித்துயெண்ணித்துணியுங்காரியங்களில் தனக்கொருவர் நிகரில்லாதவனகிய சிரந்தனமாத்திரம் அவர்கட்கு அமைச்சனுக்கி அடியேனை இவ்வடற்றுச்சிலிநின்றும் நீக்கி உயர்ந்த ஞானவைராக்கியச் செவ்வத்தினையளித்தருளல் வேண்டும். இதுதான் எனதுகருத்தாகும் இப்பால் தேவரீரதுகிருபை எவ்வாறேவென்று விண்ணபஞ் செய்தனன். இவ்வாறு சத்தியசந்தனகிய அபிசித்துமகாராசன் கூறிய அணித்தையும் விநாயகப்பெருமான் கேட்டு சுதோஷித்துத் தம்மைச் சரணடைந்திருந்த கணராசன் புதல்வர்கட்கு அவ்வாறேகிருபைசெய்துவிடுத்து, அவ்வரசன் கொணர்ந்துவந்த சிந்தாமணியை எடுத்துக் கபிலமுனிவர் கையில் கொடுத்தருளினர். பின்னர் கபிலமுனிவரானவர் விநாயகப்பெருமானைத் தொழுது எழுந்து அச்சிந்தாமணியை அவர் திருவடியின்கண் வைத்து; சுவாமி தேவரீர் எல்லாவுயிர்களும் உய்யும்படி இங்ஙனம் அவரித்து, சிந்தாமணியைக் கவர்ந்த கணராசனைச்சங்கரித்து, அதனைமீட்டும் எனக்களித்தமையால், இத்தினமுதல் யாவரும் தங்கள் வினைகள் பொடிபடும்படியாகத் தேவரீரைச் சிந்தாமணி விநாயகரென்று துதித்தல் வேண்டும் இச்சிந்தாமணியைத் தேவரீரதுதிருமேனியிற் றரித்தருளல்வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அபிசித்து மகாராசனும் பணிந்தெழுந்து, கபிலமுனிவருடைய உள்ளங் களிகூரும்படியாக சுவாமிகள் அதனை அவ்வாறே தரித்தருளவேண்டுமென்றிரந்தனன். பின்னர்

விநாயகப்பெருமானதனைவாங்கி, யாவருங்கண்டு தரிசித்துமுடியா கத் தமது கண்டத்திலணிந்தருளினார் அன்பர்கள் கெடுத்துரைத்தல் பொருளாவியினதையுங் கைகொண்டு இன்பமளிக்கவல்ல விநா யகபெருமானுனவா கபிலமுனிவராற்றந்த சிந்தாமணியைத்தமதி கண்டதிற றரிதருளினமாதிரத்தில், தேவாகள் மலர்மாரிசொ ரிந்தாகள அநதர துநதுமி யைநதுமுழங்கின சிந்தாமணியைத்த ரித்த காரணத்தாற சிந்தாமணிவிநாயகா எனறும, கபிலமுனிவர் ஆசிரமத்தில வதரிதந காரணத்தாற கபிலவிநாயகரென்றும, மலர் நதமுகத்தோடு பெழுநருளிய காரணத்தால சுமுகவிநாயகரென் றும, திருநாமருசாறறினா இப்பால அபிசிதசுமகாராஜன் விநா யகபெருமானுடைய திருவடிபயிணபெறறு விடைகொண்டு, தன ஆபட்டணதகிறசெனறு, பகதராசனாகிய சூலபாணிகருஞ் சூல பணுக்குங் கணாசவுடைய ராசசியங்களைப பகருதுக கொடிதது, விண்ணுலகமும, மணணுலக நம போறறுமபடியாக மனுநீதி முறை மைபபடி செங்கோல செலுதநுவித்துத நானசதகாலமும விநா யகபெருமானைத தியானஞசெய்து, ஞானவைராகியம முதலிய செல்வங்களைபபெறறு வாழ்நிருநதனன

பின்னர் கபில நிறம, கருமை நிறம, பசுமை நிறம், வெண்மை நிறம, மஞசளநிறமுனறுசொலலுகினற ஐவகைநிறங்களோடு(காம தேனுவான நு தனநுகனறினுக சிறநதுமாறுபோல) எல்லாவுயிர்க ட்கும இனிமை புரிநது ஆடகொளளவெழுநதருளிய கபிலவிநாயக மூரதியானவா குறறமறற மகாதவதினையுடைய கபிலமுனிவருக்கு அளவறறவரங்களைக கொடுத்தருளி தமதுருகசரந்தனர்.

இபபால அமமுனிவரும உடனே அகசடவுளைத் தமது தியா னத்தினுற பிணிதது கொணடனர இவவாறு கபிலமுனிவர் தமது ஆசிரமத்தில வளாநதியவளவிக குணடதத்தினின்றும எல்லாவுயிர் கட்கும இன்ப மெபதுமபடியாக விநாயகமூரதி அவதரித்தமை யால், அபபோதவாகருணடானமூனறுதிருநாமஙகளோ யாவரோறும் இடைவிடாது உசசரிததுவருவாகளாயின அவர்கள் இடர், பிணி, பாவம் முதலானவைகளினின்று நீங்கிச சகலபோக பாகியங்க ளோடும தாழ்நதிருநது அநதிய காலத்தில் தேவர்களா யவதரித்த பின்னர் மேலானமோடச சாம்பிராசசியத்தினையும் அடைவுசர்கள் அத்திருநாமங்க ளுண்டானதற்குக் காரணமாயிருந்த இச்சரித்தி தனை அன்போடு கேட்டவர்களும, படித்தவர்களும் அத்த மேலா னபயன்களையே யடைவார்கள், என்று சூதபுராணிகர் சவுனகாதி ரிவர்களுக்கு கூறினார்.

இப்பால் அச்சுவனகாதி முனிவர்கள் சூதமாபுராணிகரைப் பணிந்தெழுந்து சுவாமீ! வேதங்களாலுமறிதற்கரிய கணேசமூர்த்தியினது திருவடிகளைப் பெற்றிருக்கின்ற அக்கபிலமுனிவருடைய குணாதிசயங்களையும், அவருக்குத் தெய்வலோகத்திலிருக்கும் அச்சிந்தாமணிவந்த வரலாற்றினையுந் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று கேட்டார்கள்.

அதற்குச் சூதபுராணிகரிசைந்து, ஓசுவனகாதி முனிவர்களே! கபிலமகாமுனிவருடைய குணாதிசயங்களைச் சொல்லுமிடத்து, அவர் ஐம்பொறிகளையுந் தன்வயமாக்கியபுனிதர்; தவங்கட்கெல்லாம் உறைவிடமாக விருக்கின்றசெல்வர்; நிதமும் முத்தீக்களை நெறிவழாமல் வளர்த்து எல்லாவுயிர்கட்கும் ஓரிடையூறுமில்லாதபடி இருபையாகிய கொடையைவழங்கும்வரதர்; தமதுயோகத்தினல்அரியபரம்பொருளை வேண்டும்போதெல்லாம் தன்வயமாக்கு மியல்பினர்; திரிலோகங்களையுந் தமதிச்சைவழி ஆகவும் அளிக்கவும் அழிக்கவும் வல்லதிறத்தர், மகாதவ சிரேஷ்டாகட்கெல்லாந் திலதம்போற் சிறந்து மாதவர்; அவருடையபெருமையை அளவிட்டுரைக்கயாவராலாகும்? அவருக்கு அருமையாகிய அச்சிந்தாமணிவந்தவரலாற்றினையுங்கேட்பீர்களாக முன்னொருகாலத்தில் தேவேந்திரனனவன் பூவுலகத்திலுள்ள அதிசயங்களைப்பார்க்கவந்து, மீட்டுந் தேவலோகத்தைநோக்கிச் செல்லுகின்றபோது, பகியுந தாகமும மேலிட்டவனுகி, அக்கபிலமகாமுனிவர் வசித்திருந்த ஆசிரமத்தில்வர, அவ்வாசிரமத்தில் ஓர்பால் வானம்பாடி, அன்னம், அன்றில்; பெருநாரை; கருந்தாரா; சக்கரவாகம்; கொக்கு முதலான பறவைகளும்; நாணல் புட்பங்கள் முதலியன நிறைந்திருக்கின்ற தடாகங்களும்; ஓர்பால்; சந்தனம்; தேக்கு; அகில்; அசோகுநாகம்; வேங்கை; காளிகேரம்; பூகதம்; இலவங்கம்; தேவதாரம; சிற்றேலம்; குங்குமம்; தமாத்தை; வெண்ணெசில்; அரசு முதலியவருக்கங்கள் மலிர்ந்திருக்கின்ற சோலைகளும; ஓர்பால்முல்லை; மல்லிகை; இருவாட்சி; குருக்கத்தி; சிறுசண்பகம்; வில்வம; நந்தியாவர்த்தம்; பாதிரி; வெட்சி; கோங்கு; தளசி; கூவிளம்; அலறி; கொன்றை; குருந்தம்; சண்பகம் முதலிய புட்பச்செடிகள் நிறைந்திருக்கின்ற நந்தவனங்களும்; ஓர்பால்வெள்ளாம்பல்; செவ்வாம்பல்; வெள்ளுற்பலம்; வெண்டாமரை; செந்தாமரை; செய்தல்; அங்கிச்சம் முதலிய புட்பங்களைத்தழுவியிருக்கின்றநீ சிறந்த ஓடைகளும்; ஓர்பால்; மிளகு; கோட்டம்; அகில்; தக்கோலம்; குங்குமம்; இருஞல்; தேன்; அறக்கு; மயிற்பீலி; காலி முதலிய மலைபடு திரவியங்களையும்; வனம்படு திர

வியங்களையும்; அலைத்துவருகின்றதிகளும். ஓர்பால் ஒன்றுக்கொன்றுபகையுயிரமில்லாமல் மாதவர்கள்செய்யும்முழக்கிணப்போலச் சிங்கம யாளி யாணை முதலிய மிருகவர்க்கங்கள் முழக்கஞ்செய்துகொண்டிருக்கின்ற பொதும்பர்களும்; ஓர்பால் வேதாகமபுராணங்கள் விசாரிப்போர்களுடைய ஓசையும்; ஓர்பால் விச்சாதரர் இன்னரர்முதலியோர் வாசிக்கும் வீணுகானத்தினோசையும், ஓர்பால் இனி, குயில், நாகணவாய் முதலியவைகள் பாடுங்கீத ஓசையும், இன்னும் இத்தன்மைத்தான பெருமிதங்கள் அளவற்றனவாகவிருப்பக்கண்டு உள்ளங்குளிர்ந்து தனது குதிரையைவிட்டு னிலத்திலிரங்கி களங்கமகிதமாயிரானின்ற நதியில்மிருந்த ஆவலோடும் ஸ்நானஞ்செய்து தன்னேடிருந்த எல்லாதேவர்களோடும அவ்வாற்றின்கண்ணேயிருத்தித் தானதனியே புறப்பட்டுச் சுற்றுமாணுக்கர்கள் புடைசூழ மாறு தவத்தின்கண் வீற்றிருக்கின்ற கபிலமகாமுனிவரை யடைந்து, அவரது பாதபதுமங்களிற் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, மிக்க பேருவகைபோடு தனதுகைகளைக்கூப்பி மெய்கொட்டி நின்றனன். அதனேக்கபிலமுனிவர் தமதுயோகத்தினுலறிந்து விழித்துத் தனியாயிருக்கின்ற இந்திரனேப்பார்த்து, ஓ கரலோக சக்கிரேஸ்வரனே! நீ உனது பொன்னகரைவிடுத்து இங்ஙனம்வந்தகாரியம் என்னென்று வினவினர்.

இந்திர னெதிரவ னிறைவ வீரனேத்
சுந்தர வியையா லைக்கரத் தோமிலா
அந்தணர் தமை யரசுவத் தமங்கியை
முந்துறக் கண்டு நாழாரு முன்னினனன்.

உயர்ந்தவ ஞயிறு மொருவ மற்றவன்
வயந்தகு பெருந்திரு மாயு மென்றுநூல்
இயமபலின் முனிவர ரெழில்கொள் பாதங்கள்
நயந்தகப் போற்றகா னிலத்தில் வந்தநான்.

அந்தருக்குத் தேவேந்திரன் முகமலர்ந்து, சுவாமி! சிவபிரானே, மகாவிஷ்ணுவை, தேவலோகத்தை, பெரியோர்களை, அரசவிருக்கத்தை, அக்கினியை யாவரேனும் கண்டபோது தொழாதுசெல்வராயின் அவர்கள் எவ்வாற்றலும் உயர்ந்தவர்களாயினும் உடனே செல்வங்களனேத்துங்குன்றி இழந்தோர்களாவரென்று வேதாகமங்களிற் கூறியிருக்கின்றமையால், தவத்திற்சிறந்த முனிவர்களேயெல்லாங் கண்டு தரிசிக்க இப்பூதலத்தின்க ணிறங்கியயான், தேவரீருடைய பாதபதுமங்களேயுந் தரிசிக்குமாறுவந்தனன். அடியேன்வந்தகாரியங்களு முடிவெய்தின. தேவரீரைத்தரிசித்த மகிமையினல் அடியேன் கொண்டிருந்த பசியுந்தாகமும் ஒருங்கே நீங்கின; இனி

யான அமராபதிக்குச்செல்ல விடைகொடுத்தருளவேண்டுமென்ற னன். அதனைக் கபிலமுனிவர் கிருபையோடுங் கேட்டு ஓவலாரியே! கதிரவனே உச்சியில்வந்துவிட்டனன். இதுகாறும் இவ்வாசிரமத் தில்வந்தவர்களை இளைப்போடு வேறோரிடத்திற்செல்லவிட்டதில்லை. யாகாதிகளைச் செய்கின்றபோர்கள் வரவேண்டுமென்று பிரார்த்திக் கத்தக்க நீ யிப்போது ஏதோ ஒருபுண்ணியபலத்தினால் இங்குவ துவில் வந்தனை. இங்ஙனஞ் சிறிதுகாலமிருந்து யான்தருவது வெ ருஞ்சலமாயினும் அதனைக் கைகொள்ளவேண்டுமென்று சொல் லித் தேவேந்திரனை அங்ஙனேனிறுத்தி, அவனைவெகுத தேவர்களை எல்லாமழைத்து வறுமாரு தமது சிடர்களை ஏவினர். உடனே அவ ர்களோடி நதிக்கரையிற் றங்கியிருந்த தேவாக்களை எல்லாமழைக்க, அவர்கள் விரைவிலெழுந்துவந்து கபிலகாமுனிவருடைய திருவ டிகளைப் பணிந்தார்கள். இப்படால் கபிலமுனிவர் சாபபாபரணங்க ளைத்தரித்த சிவபிரானைத் தியானிக்க அவரது திருவருளால் ஓர் கொடிப்போதில் பலரூப்பட்ட தேவவுணவுகளெல்லாஞ் சிறக்க உண்டாயின. அவைகளை யெல்லாம இந்திரன் மற்றைத்தேவர்க ளோடு முண்டு இதுகாறு தனது சொக்கலோகத்திலு முண்டறி யாத மிகுந்தசுவையுள்ள அவ்வுணவுகளின் குணுசிசயங்களைப் பல முறைகொண்டாடி அம்முனிவரது மகத்துவதையை நினைத்து நினை த்து ஆச்சரியங்கொண்டவனுய், தவத்திலுங் குணத்திலுஞ் சிறக்த இவருக்கு நாமொரு பரீதிசெய்யவேண்டுமென்று நினைதது உடனே வாயுதேவனைக்கூவி முன்னர் மகாவிஷ்ணு கொடுத்தருளிய சிந்தா மணியானது நமதுபொக்கிசத்தி லிருக்கின்றது, அதனை நீ விரைவி லெடுத்துக்கொண்டு வருவையெனக்கட்டளையிட, அதற்கு வாயுதே வனைசைந் துனதுவேகதேதாடி மனோவேகமும ஒன்றுபடச்சென்று அதனை அப்பொக்கசத்தினினின்றும் எடுத்துவந்து தேவேந்திரன் கரத்திற்கொடுத்தனன் அதனைத் தேவேந்திரன் கையேற்றுக் கபில முனிவருடைய திருவடிகளில்வைத்துப் பலமுறை சாஷ்டாங்கமா கப் பணிந்தெழுந்து அவரது திருவருளைக் குறைவரப்பெற்றுவிடை கொண்டு தனதுசொர்க்கலோகத்தை யடைந்தனன். பின்னர் அச் சிந்தாமணியைக் கபிலமுனிவர் தமதுகரத்திலிணிந்துகொண்டனர். தம்மைக்கருதினோர்களை அளத்தற்ற தூரும்புபோலாக்கவல்ல சிவ பிரானை உள்ளத்திற் பதிப்பவர்கட்குக் கிடையாதபொருள் யாதி ருக்கின்றது.

சிந்தாமணிவிநாயகர் திருவவதாரப்படலம்

முற்றும்.

முன்றாவது

கெஜானன விநாயகர்

திருவவதாரப்படலம்.

இரண்டெ னப்படுமவ தாரமேத்தினும்
குரண்டவெள் ளிறகொடு கோலக் கங்கையும்
திரண்டசெஞ் சடையணி தேவை யுன்னுவோய்
மூரண்டப வறியென முடிதது மேற்சொல்வான்.

திருமாலு நான்முகனு மறைகளுநா துதற்கரிய தேவரான, பெருவாய்மை விநாயகனு ரலகிலுயிர் வருத்தமெலாம் பேணவள்ளத்தி தொருவாத கருணைகொடு சுவேச்சையினுற் கெசானனராயுற்றுப் பேரும், வெருவாத கெசானனரென் றுயர்வாகக் கொண்டருண்மெய்ம்மூர்த்தி தன்னை.

மங்காமற் பலவுலகுந் தரிப்பிக்குந் தாரகத்தை மதைத்துத் துட்ட சங்கார காரகத்தைத் தரணிபா ரந்தவிர்த் தணிக்கன் மங்கள் பொங்கார்வத் தெவ்விடத்து நிறுவுவதைப் பத்தருக்கு போக வீடு சிங்காம லருளுவதைச் சாதுக்க டமைப்புரக்குஞ் செல்வ வாழ்வை.

பெரிதான விக்கினங்க ளனைத்தினையுங் கெடுப்பதணிப் பேசப் பேச, உரிதாகு மூன்றுன வவதாரந் தனையினுநா னுரைக்கலுற்றேன்; அரிதானென் றுலகமெலா மெடுத்தேத்தும் வியாதமுனியகம்விள் ளாது, தெரிதாக முடையவர்க ளொருவர்கொணர்ந் தருணது நீர் தெவ்வு மாபோல்.

ஓ சவுனகாதி முனிவர்களே! அரிபிர மேந்திராதியமாலு மற்றுதற்கரியபரம பொருளாகியும், பலவுலகங்களையும் மங்காமற்றரிப்பிக்கவல்ல தாரகமாகியும், ஆன்மாக்களுடைய மும்மலங்கட்கும் மும்மதங்களைப்பொழியும் மூர்த்தியாகியும், துட்டர்களையெல்லாஞ் சங்கரிக்கும்படியான காரகமாகியும், வேதாகம புராணங்களோங்கு மாறு தரணிபாரந் தவிர்க்கவல்ல சயம்புவாகியும், எல்லாவுயிர்கட்குங் கண்மங்களோபூட்டிப் பிழைப்பிக்குங் கருணாநிதியாகியும், பத்தராயினோர்க்கு இம்மையிற்போகமும் மறுமையில் வீட்டையுமளித்தருளுகின்ற கர்த்தவ்வியமாகியும், சாதுக்களாயினோரை யடுத்துப் புரந்தருளுகின்ற செல்வமாகியும், பெரிதான விக்கினங்களையெல்லாங்கெடுத்து இரட்சித்தருளுகின்ற பெருவாழ்வாகியு மிராகின்ற

விநாயகமூர்த்தியானவர்! கபிலமுனிவருடைய சிந்தாமணியைக் கவர்ந்தகணராசனை வெல்லுமாறும் அவராசர்மத்தினலவதரித்தும், அதைமீட்டுமவர்க்களித்தும், அதனல் கபிலவிநாயகர், சிந்தாமணி விநாயகர், சுமுகவிநாயகரென்னும் இம்மூன்று திருநாமங்களைப்பெற்றதும், அக்கபிலமுனிவருடைய குணதிசயங்களும், அவர்க்கு அச்சிந்தாமணிகிடைத்த வரலாறுஞ்சொன்னேம். இப்பால் அவ்விநாயக மூர்த்தியானவர் உயிர்களது வருத்தமெல்லாம் ஒழியுமாறு தமது பெருங்கருணையோடு சுயேச்சையினுற் கஜானனவதாரஞ்செய்தருளிய திருவிளையாடலைச் சொல்லுவோம் கேட்பிர்களாக.

முன்னெரு கற்பத்திற்பிரமதேவனனவன் சத்தியலோகத்தில் வீற்றிருக்கிறபோது கொட்டாவிவிட்டனன். அதினின்றும் ஓர்புருடனுதித்தனன். உடனே சொர்க்கமத்திய பாதலமென்னும் மூவுலகங்களிலும் இரத்தமாரி சொரிந்தது, அப்புருடன் செம்பரத்தம் பூவினிகர்த்தநிறத்தினையும், பத்துத்திசைகளிலுஞ்சென்று வீசும் படியான இயற்கைமணம் வாய்ந்தவடிவத்தினையும், விண்ணளவி லோங்கிப் பாரித்திருக்கின்ற மெய்யினையும், பஞ்சபுட்பபாணங்களைக் கரத்திலேந்திய மன்மதனையொத்த அழகினையும், யாவருஞ் சிரம்பனென்று சொல்லும்படி வாய்ந்த பததுசிரத்தினையும் உடையவனுகி எதிர்நிற்க அவனை அப்பிரமதேவனேக்கி நீயாரென்று வினவினன். அதற்கச்சிரம்பன் தனதுள்ளச் செருக்கினைமீக்கொண்டு யான்நினது வாண்முகத்தினின்றும் உதித்தமையால் உனக்கு மகனுகும். அறிவிலார்களைப்போலவென்றும் அறியான் போன்று கேட்டது அதிசயமாயிருக்கின்றது. இனியான் வசித்தற்கு இடமும் பெயருஞ்சொல்லவேண்டுமென்று கேட்டனன். அதற்குப்பிரமன் அன்பு மச்சமுங்கொண்டு. மைந்தனே! நீ சிந்தூர நிறத்தினுலியிருத்தலினல் நினக்குச் சிந்தூரனென்னும் பேருண்டாகுக. திரிலோகங்களினுஞ்சென்று நினக்கினியதலத்தினைக்கொள்ளுக உலகமனைத்தும் நினது வசமாகுக. விண்டு முதலிய தேவர்களாலும் உனக்கு எக்காலத்தும் யாதொரு அச்சமும் இன்றுக நீ கோபங்கொண்டு யாவரையேனும் நினதுகரத்தாற் றழுவுவையாயின் உடனே அவர்களுடலம் நீறுகுக. தேவர்களால் விடுகின்ற அத்திர சத்திரங்களாலும்உனக்கு இறுதிகேராதாக. இவையனைத்தையும்உனக்கு யான் புத்திரவாஞ்சையினுற் கொடுத்தவரமாகக் கொள்ளுக என்று பிரமதேவன் கூற அவ்வரமனைத்தையுஞ் சிந்தூரன் கைக்கொண்டு, எந்தையே! தவம், தானம், விரதம், வேள்வி, கருமம்முதலியவைகளொன்று மில்லாதெனக்கு எல்லா வரங்களையும் எளி

திற் றந்தீரையே! யென்றுமகிழ்ந்து விடைகொண்டு, பூவுலகத்தினை நோக்கிச்செல்லுகின்றவன், நமது பிதாவானவர் தவத்தாலுதித்தனரில் ஒன்றையுஞ்செய்யாத நமக்கு அளவற்ற வரங்களை யளித்தனரே அவைகளனைத்தும்பொய்யோ! மெய்யோவென்று ஐயமுற்று, அவைகளைச் சோதிக்கவேண்டும் என்று நிச்சயங்கொண்டு மீட்டும், பிரமதேவனிடத்தில் வந்து ரத்தசாகரங்கள் துளும்பவும், அண்டகடாகங்கள் பிளக்கவும், திரிலோகங்களும் நடுங்கவும், உடுக்களனைத்தும் உதிரவும், கர்ப்பங்களெல்லாங் கலங்கவும் பறவைகள் யாவும் மாயவும், விருட்சங்கள் யாவும்வீழவுமான ஆரவாரத்துடனே அட்டகாசஞ்செய்து, அப்பிரமதேவனைத் தனதுகரத்தாற்றழுவிப் பிடிக்கநேர்ந்தனன். அதற்குப்பிரமதேவன் அஞ்சி, அடாமூடனே! நீ இத்தன்மைத்தானதுட்டனென்றறியாது புத்திரவாஞ்சையினல் வீணே அனந்தவரங்களை உனக்குக்கொடுத்துவிட்டேன். அப்படிக்கொத்த என்னைய தழுவிக்கொல்ல வந்தனையல்லவா? இனி உன்னைக்கொல்ல விநாயகமூர்த்தி அவதரித்தருளுவரென்று சபித்தனன். அதைக்கேட்ட சிந்தூரன் மிகுந்தசோகாபங்கொண்டு மீளவும், ஒரு அட்டகாசஞ்செய்தான் அதனைப் பிரமதேவன் கண்டு நடுங்கி, அலறிப்பெருமூச்செறிந்து அவ்விடத்தினின்றுமோடி, வைகுந்தத்தில் ஆதிசேடன்மீது பள்ளிகொண்டிருக்கின்ற விண்டுவினையடைந்து, கண்களில் நீர் சொரியும்படியாக அவரது பாத பதுமங்களில் வீழ்ந்து பணிந்தனன்.

உடனே விண்டுவானவர் அப்பிரமதேவனுக்கு ஓர் ஆசனத்தந்து இருக்கச்செய்து, ஓ சதுமுகனே! உனக்கு இவ்வாறு நெஞ்சுதுடிக்கவும், நெட்டுயிர்ப்பெய்தவும், சரீரம் நடுங்கவும், மோகாரவிந்தம் வாடவுமான தீங்கு யாது நேர்ந்ததென்று கேட்க, ஐயனே! யான் கொட்டாவிவிட்டேன்; அதினின்றும் ஓர்புருடனுதித்தனன். அவனை எனது புத்திரனென்றெண்ணி அளவற்ற வரங்களைக்கொடுத்தேன், அவனவைகளைக்கைக்கொண்டுசென்று மீட்டும் என்னையே கொல்லவந்து மிகுந்ததுன்பங்களைச்செய்தனன், என்னசெய்வேன்! அப்பாதகனைதிரில் நிற்க வஞ்சி இங்ஙனம் ஓடிவந்தேன். தேவரீர் அவனை எவ்விதத்திலாகிலுஞ் சங்காரித்து என்னைப்பாதுகாத்தருள வேண்டுவென்று பிரார்த்தித்தனன். அவைவனத்தையுந் திருமால் கேட்டுத் துயரமெய்தி "ஆய்ந்தோய்ந்து செய்யாதான் காரியத்தானசாகக்கேடுதரும்" என மேலோர்சொல்லும் வாக்கியத்திற் கிலக்கியமாகச் சிறிதேதனும் அவன் குணதிசயங்களை ஆராயாது வரங்களைக்கொடுத்துவிட்டனை. இனி உன்னலும் நம்மாலும் அவன் அழி

பவ்வன்று. கன்மலயத்தால்வருங் கலக்கங்களோயாவர் வீல்க்கவல்ல வர்களுர்அந்தோ! தேவர்களணேவோர்க்குந் துன்பத்தினேனித்தி விட்டனே வேத ஆகமநெறிகளணத்துங்கெடச்செய்தனே. நம்போக விகட்கெல்லாம் மிகுந்த தாழ்வினேயுண்டாக்கினே. சகலதுட்டர்க ளோயும் நாசஞ்செய்வதற்குச சிவபிரானேயன்றி மறேரணேயோராலும் முடிவதன்று. என்று இவ்வாறு இருவரும் வாதாதையாடிக் கொண்டிருக்கின்ற சமயதில் தொலேயாமல வலவினேதொடர்ந்து வருமாறுபோல, அச்சுரதூரன் அபபிரமணேபெற்றவாது, அவன் விண்டுவினேடு வசனித்திருக்கின்றவைகைக கண்டனன். பின்னர் அவ்விண்டுவை அப்பாதகன் நோக்கி, ஓ மகாமாயனே நீ என்னேடு யுத்தஞ்செய்ய வராமற்போவையெனில் உன்னேயும் உன்னேயடுத்தி ருக்கின்ற இவனேயும இருநிமிடதத்திற் சாமபரகி விடுவேனென்ற னன். அதணக்கேட்ட லும் விண்டுவுகு மனம் நடுங்கி, அகநடுக்க த்தை வெளியிற்றேன்றுதபடி தமமுன் மறைததுகொண்டு இவனே வணக்கத்தோடு நல்லவார்தததைகளாடதபிததுகொள்ளவேண்டு மென நிச்சயித்து, மிகுந்த விநயத்துடனே அவன் முகததை நோ க்கி, ஓ சுத்தவீரனே! மல்யோடும் மலேயுதஞசெய்தால மானமும் புகழுமுண்டாகும். அம்பலேபுனலோடு யுதஞசெய்தால் பராக்கி ரமமுண்டோ? யானே ஓரால்லேயில் ஒன்றிகொண்டிருக்கின்ற கொய்மையன். இவ்தன்றிசாதது வீதகதொழிலேல் காவற்றலே மைபூண்டிருக்கின்றவன் இபபிரபனே வென்றுக; வண்டேறத்தா ங்காதபூவில் வசித்துகொண்டிருகிற வெயின இதலாமல் சா த்திரங்களோக்கூறி உலகங்களேயுண்டாகுமு ஒரே தொழிலினேக் கற்றவன். ஆதலால் யாங்களிருவரும உனனேடு யுதஞசெய்யமா ட்டோம். நீயோ எல்லாரையும வெல்லுதறகக பராககிரமசாலி, உன்னேடு யுத்தஞ்செய்வதற்கு, உகாணதறதையுஞ் சங்கரிக்குந் தொழிலினேயுடைய வொருவனிருகின்றன். அவனே மகாபலத் தையுடையவன். இதுகாறும் அளவற்றபேரை அதஞ்செய்திருக் கின்றன். யாங்களிருவருங்கார்விககின்றபோ லிதல்லாம் அவன்வகது எங்களாண்மைகளே யடக்கி யிருக்கின்றனன். மலேகளுக்கெல்லாம் மேலான மகமேருவை அவன் கரத்தில் வில்லாகபபிடித்திருக்கின் றன். பர்வதங்களணத்தும் ஒன்றுப் திரண்டதற்கொப்பான புஜ பல பராக்கிரமத்தை யுடையவன். அவனுடைய பத்தினியோ மலே கள்யாவுக்கும் அரசனுகிய இமாசலராசன் புதல்வி, அவன் வீற்றி ருக்குமிடமோவெள்ளிமலே, இன்னும் இத்தன்மைத்தான அளவற்ற பெருமிதங்களிளல் அவன் யாவருக்கு மிறைவனுகி யிருக்கின்ற னன். ஆதலால் அவனேடு எதிர்த்து யுத்தஞ்செய்து உனதுபராக்

ரமங்களைச் செலுத்துவையாயின் அதனால் உனக்கு மாண்மும்; புகழுமுண்டாவதன்றி, எல்லாவுலகமும் உனது கீர்த்தியைப் பாராட்டும். அவ்வாறின்றி ஓராலிலைக்குமு அரனிந்தத்திற்கும் இவ்வானகுறைந்த வலியினையுடைய எங்களோடு நீ எதிர்ப்பதுமிகவும் எளிமையென்று சொல்லினர்.

அவையினத்தையுஞ் சிந்தூரன்கேட்டுச் சிவபிரானையே யுத்தஞ்செய்வதற்கு லட்சியமாக்கி, விண்டுவின்சொல்லாகிய மதுவினைப்பானஞ்செய்து, வெறி கொண்டவனைப்போலக்குதித்து, ஊழிக்காலத்தி லுண்டாகின்ற இடியேற்றினையொப்பவார்ப்பரித்துக், கையாய கிரியைநோக்கிப் பாய்ந்தனன். அப்பால் விண்டுவும் பிரமனும் அவன்செய்த கோலாகலத்திற்கஞ்சித் தமது செவிகளைப் பொத்திக்கொண்டு, மண்ணிற் செய்த மாவைப்போலவும், மரத்திற் செய்த பிரதிமைபோலவும்; அசைவற்று நின்றார்கள். தேவர்களெல்லாம் அறிவற்று வீழ்ந்தார்கள். மற்றைய சிவாசிகளைத்தும் எவ்வாறுயினவோ? அதனை யாவராலுஞ் சொல்லிமுடிவதன்று. இவ்வாறு கயிலையை நோக்கிப் பாய்ந்துவந்த சிந்தூரனைச் சிவபிரான் யோகத்திலிருந்தமையால் அவன் வந்ததை அறிந்திலர். அவருக் கருகிருந்த சிவகணங்களிற் சிலர் அவ்வவுணனைக்கண்ட மாத்திரத்தில் பயந்து சோர்ந்தார்கள். சிலர் நெடுமூச்செறிந்து ஓடிப்பதுங்கினார்கள். உமாதேவியாரும் அவனைக்காண்டலும் மனங்குழைந்துபயந்தனள். சிவபிரானை யுத்தத்திற்கு வருமாறு * அறைகூவிய சிந்தூரன் பின்னர் உமாதேவியைப்பார்த்து; அழகில் இவளின் மிகுந்தவர் ஒருவரையுங் காணேமாதலால், எவ்விதத்திலேனும் இவளைக்கொண்டு போக வேண்டுமென்றுநினைத்து, அம்மனுக்கு நேராகவந்தனன். அவன்வரவைக் கண்ட உமாதேவியார் நடுங்கிப் பூனைவரக்கண்ட கிளி போலப்பயந்து; அருகிலிருந்த நாயகரைநோக்கி, சுவாமீ! முனிவர்கள் தேவர்கள்முதலாயினோர் உருகிய உள்ளத்தோடும்வழிபாடுசெய்யஅவர்கட்குத் தருமாதிகாற்பொருள்களையுமுதவவல்ல தேவரீருக்கு நீண்டகாலமாகத்திலிருக்கும்படியான பொருள்வேறில்லையே? இனிசெய்யாமற்செய்கின்ற இதுதியானத்தைவிடுத்து முன்னர்தேவரீருக்குப் பிழையினைச் செய்தவர்களை யெல்லாங் கண்ணும், கையாலும், உகிராலுங் காலாலுங் கடந்து ஜயங்கொண்ட பராக்கிரமத்தினை இப்போது என்னைத்துன்பஞ்செய்ய அஞ்சாது வருகின்ற மேலானவலியினையுடைய இப்பாதகனிடத்துங் காட்டியருளல்வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதைக் கேட்டலுஞ் சிவபிரான்

* அறைகூவல் - போருக்கழைத்தல்.

விழித்தருளி,உடனே வேங்கையாதனத்தை விட்டெழுந்து கரத்திற் முடியுஞ், சூலமுமேந்தி மகா உக்கிரத்தோடும் அவனெதிரிற்சென்ற னர். அவனும் சுவாமியை நீறுக்குவேனென்று தனதுகையாலவ ரைத் தழுவப்போயினன். அச்சமயத்தில் அவ்விருவர்மத்தியிலும் இமைக்குமுன் விநாயகப்பெருமான் பிராமணவடிவங்கொண்டு மிரு ந்தபிராயசத்தோடும வந்து நின்று சிவபிராணியுஞ் சிந்தூரனையும் பார்த்து, நீங்களிப்போது ஒருவரை யொருவர் தழுவிப்பிடித்தலே விட்டு, உங்கள் பராக்கிரமதத்தை அத்திர சதத்திரங்களினல் யுத்தஞ் செய்துக் காட்டுங்கள் பார்ப்போமென்று அவர்கள் மத்தியில் தமது பரசாயுதத்தினை நாட்டி ஒருபாரிசத்தில் நின்று பார்த்துக்கொண்டி ருந்தனர். அந்தணர் வடிவாய்வந்த விநாயகபெருமான் கூறிய வார்த்தைகட்கு இருவருஞ் சம்மதித்து, அத்திரத்திரங்களால் நெடு நேரம்யுத்தஞ் செய்தார்கள் பின்னர் சிந்தூரன அதனையிடுற்று இவ் வாறு நீடித்துயுத்தஞ் செய்வதில் செயமடைவது அரிதென்று நினைத்து, சிவபிராணைத் தனதுகையினற் றழுவச்சென்றனன். அத் தருணத்தில் இருவர்மத்தியிலும நாட்டிருந்த பரசானது எழும்பிச் சிந்தூரன்மீது தாக்கித் தடுத்தது. அத்தடையைத் தடுத்துக்கொ ண்டுசெல்லமாட்டாது மீட்டுந்திருமபிய சிந்தூரனப்பிராமண வடிவ மாய் வந்த விநாயகபெருமான பார்த்து, இனி நீகொலகாலராகிய சிவபிராணுடைய சூலாயுதத்தினல் நீறுகுவை. அமரர் முதலி யோரை ஆல போசனஞசெய்து ஆடகொண் டருளிய கிருபாமூர்த் தியையும் பகைக்கலாமோ? திரிலோகங்களினும அவரைப் பகைத்து வாழ்ந்தவர்கள் யாவரிருக்கினறனர்? இனிதபபி ஓடிப்போகும் வகை யைத் தேடக்கடவையென்று திருவாய்மலர்ந்தனர். அதற்குமேல் சிந்தூரன் பயந்து இனியாமிங்கு நீடித்திருந்தால் இறந்திடுவதற் கையமில்லை. ஆதலால் இவ்வர்தணன் கூறியசொல்லே உறுதியாகு மென்று மனத்தின்கண்கணிச்சயித்து, உடனே அவ்விடத்தின்று நீங்கிப் பூவுலகத்திற் சென்றனன். பின்னர் சிவபிராயுத்தத்தை நிறுத்தி சந்தோஷ முற்றிருந்தனர்.

இப்பால் உமாதேவியார் அந்தணராய்வந்த விநாயகமூர்த்தியை ப்பார்த்து ஐயா எதிர்த்துவந்த சத்துருவை எளிதிற்றொலையவிட்ட நீயாரென்று கேட்டனர். அதற்கவர் வாய்மொழியா அத்தரன்கூறு தாகம் எடுத்திருந்த பிராமண வடிவதனை மாற்றி, ஒரு மருங்கி லுஞ்சித்திபுத்திகளோடும் நான் குத்திருக்காங்களோடும், சிங்கவா கன மூர்த்தி தமது சுரூபத்தைக்காட்டியருளி, ஓ புவனகாரணியே! உன்னைப் பிடிக்க அதி வேகத்துடனே வந்து சென்ற சிந்தூரனைச்

சங்கரிப்பதற்கு யாம் உனது உதரத்தின் கண் அவதரிப்போம் இதனை மறக்கற்க இனியாவர்க்கும் அஞ்சற்க. என்று சில இனிய வார்த்தைகளேயாடிக்கரந்தருளினர். அதை உமாதேவியார் கேட்டுச் சந்தோஷமாயிருந்தனர்.

இப்பால் முன்னம் பூலோகத்தை நோக்கிச் சென்ற சிந்தூரனால் அளவற்றசோலைகள், கால்கள், ஆறுகள், வனங்கள், நகரங்கள், காடுகள் முதலானவைகளோடு, அளவிறந்த வீரர்கள், வேதியர்கள், பெரியோர்கள், முதலானோரெல்லாம் தழுவப்பட்டு, சர்வசங்கார காலத்தைப்போல எங்கும் நீறின. வேதவொழுக்கங்கள், தவங்கள், தானங்கள், மகங்கள், தருமங்கள முதலியவைகளெல்லாஞ் செய்வாரின்றி இந்திரன் முதலிய தேவர்கட்கு அவிப்பாகமுதலானவைகள் கிடையாமல் மிகுந்தபசியால் வாடித் துயரமுற்றார்கள் பூவுலகமுழுவதும் பாழ்படுத்திய அப்பாதகன் மீட்டும் வானுலகத்தையும் பாழ்செய்ய வந்தனன். அதைத தேவர்களறிந்து பயந்து யாவரும் பிரமதேவனிடத்திற சென்று பணிந்து முறையிட்டார்கள். அதைக் கேட்ட பிரமதேவன் தானுந்துயரத்துளழுந்தி இனி இதற்கென்ன செய்யக்கடவோமென்று மனங்கலங்கி பின்னர் ஒருவாறு தேறி எல்லாத் தேவர்களோடுமெ விஞ்ஞக மூர்த்தியைத் துதிசெய்வதாயினன்.

பாவனெருவ னயனெமா லகிலாண் டமுமீன் றெடுக்கின்றுன்
யாவனெருவன் குணமாயு மியமயு மூவருருவாயு
மேவுகுணந் தணுமாயும விளங்கா நின்றுனத்தகைய
தேவன்கமலத் தாளிணைக்குச் சிறியேம் வணக்கஞ் செய்கின்றும்.

பூதமைந்து மிருசுருடம புகழ்சேர் துறக்க முடுதிசைவெற்
போதுநதிகுப் யகரியக்க ருரகரரக்கர் மனிதர்கள்கோக்
காதி விருகங் களுஞ்செந்துக் களுநா ஞூ தமூவே
ழாத னிலேத லழிதலெவ னருளா லவற்குப் பணிகின்றும்

உலக முழுதுந் தனதுதரத் துறைவித் திருக்கின் றுன்யாவ
னிலகு மனுதி சித்தாந்த மாகி யிருக்கின் றுன்யாவ
ணுலகில் பலவே ருமுருவ முடையான் யாவன் மலமணுகா
வலவி லறிவன் யாவனவ னடித்தா மரைக்குப் பணிகின்றும்.

யாவ னெருவ னடியாரை யெய்த்த விடத்திற் புரக்கின்றுன்
யாவ னெருவன் றயித்தியரா லினேவா னவரை யழிக்கின்றுன்
யாவ னெருவன் வழிபடுவா ரிடருக் கிடரைப் புரிகின்றுன்
யாவ னிகரி லாகிறவ னவன்பொற் ருள்கள் பணிகின்றும்.

இவ்வாறு பலமுறை தோத்திரங்கள் செய்துசகல சிவராகிகட்கும் ஆதாரபூதமாயிருக்கின்ற கர்த்தனே! வேதவொழுக்கம், தரு மம், தான முதலானவைகளெல்லாம் கெடுமாறும், நிறியேங்கள் பல விடர்களுள் வீழுமாறும, இடைவிடாது நிங்குசெய்துவருகின்ற கொடும்பாவியாகிய கிரதூரனென்பவன் எந்த விதத்திற் றேவரீ ருடைய திருவருளால் நிருமித்திடபபட்டனனே அறிகின்றிலேம், ஓ தேவேசா! ஓ மகாதேவா! தேவரீரைதரிசனரடசகரென்று எல்லா வுயிர்களுந் துதிசெய்கின்றதால, பாதகங்களணைதலும் ஓர் வடிவமாகி வருகின்ற கிரதூரணைசகங்கிரதது அடியேங்களைத் தன்பமணுக வொட்டாமற காதருள் வேண்டுமெனறு பிரார்தத்தார்கள். அதற்கு விநாயகமூர்தி கிருவிபசுரது அவர்களெதிரில் பிரத்தியட்சமாகி,மிகவதயரத்தோடுமபணிந்தழுது தமகெதிரில் நிற்கின்ற தீனர்கள்மீது தமது கிருபாலோகனத்தினபபரபபி,தேவர்களே! நீங் கள் செய்த தோதிரங்கட்கு மனமுவகதோம அததோத்திரங்களை யாவரேனும் மது சுதாதிபிற சொலலுவார்களாயின, அவர்க ளதுகோய், வறுமை, இடர், அலலல் முதலிய தன்பங்களணைத்தையு மறுத்து, அவ்வவர்கள கோரிய இட்டகாமியார்தங்களைக்கொடுப் போம, பிரதிதினஙு துதிபபோர்கட்கு எகாலதது தன்பமெனப தணுகாதுயாம உமாதேவி வயிறறிறபுதரிருஙு அவதரித்து உம ஙகு தன்பதரிணவினைதது வருஞரிதூரணை சஙகரிதது, மீட்டும் பழையபடி திரிலோகஙகளையுமளிதது ரட்சிபபோமென்று திரு வாய் மலர்ந்து தமது திருவுருவைக்காதருளினர்.

இவ்வாறு அண்டரணடபுவனஙகளாய், மற்றபபொருள்களணை த்துமரீய் எல்லாவுயிர்கட்கும உயிராய், காரணபூதமாய், பிறவுள்ளன வுமாகி; அவற்றிற்குக் காட்சியாயளவுபடாமல விளங்குந தேவதே வோத்தமராகிய எமது விநாயகக்கடவுள திருவாய்மலர்ந்தது தமது ருகுகராதருளினர். உடனே உமாதேவியுதரதத்திற்கருவாயினர். அக் குறிப்பை அத்தேவியாரறிது சிவபிரானைத தொழுதெழுந்து. சுவாமி! அடியாளை வயிற்றிற் கருப்பதரிதிருகுனைமையால் அவ் வூட்டினர் தணியும்படியாகக் குளிர்கசியோடுகூடி வாசணைவீசுகின்ற பலவிருக்கங்களையுடைய நீழலும அனைதவளங்களையுடைத்தாயிருக் கின்ற புனிதமுள்ள நதிகளு மெங்ஙன மிருக்கின்றனவோ அங்ஙன மடியாளைச் சோக்கவேண்டுமெனறு பிரார்தனிக்க அதைச் சிவபெரு மான்கேட்டு உடனே ரிஷபவாகனதின்மீது தானும் தேவியுமாக ஆரோகணித்து அளவற்றதேவர்கள் புடைசூழ்ந்து வரும்படியாகப் பூலகதிலிழிந்து, சோதிமரம், அசோகு, கடம்பு, சூதம் ஈர்கம்,

வாழை, புன்னை, குருந்து, தேக்கு, ஆரம், அகில், குங்குமம், வேங்கை, சண்பகம், சாளம், வன்னி, பலாசு, அரசு, அத்தி, இலவங்கம், சாந்தம், புன்னை, பாடலம், மந்தாரம், முருக்கு, கொன்றை, தாதகி, வஞ்சி, கூதளம, துரவு, கோங்கு, மரா, தேற்றாவெள்ளில், செல்லி, வருக்கை, இலவு, காஞ்சி, வதுளம, நெய்தல், முன்னம், வில்வம், மாதவீ, வெட்பாலை குரிஞ்சி, வெட்சி, நொச்சி, கற்பூரவாழை, கமுகு, தெங்கு, நிரோதி, மயிலை, மாதவிபலலிகை, மௌவல், மூல்லை, பிதகிகை, ஏலம முதலாயுள்ள விருக்கசாதிகளும, கருங்குவளை, ஆம்பல், கமலம, உற்பலம, அனிசமுதலிய புட்பங்கள் மலர்ந்து அன்ன முதலிய பட்சிகள் நிறைந்து, வீளாவகுகின்ற அளவற்றபொய்கைகளும, ஒப்பற்ற வளாகளோடுபெலிந்து, வெளளியதிரைகளைப் பரப்பிதுரைத்துவீளாவகுகின்ற அலாதபொய்கைகளும கொண்டல்ஈளைதும வதுமேம்கலிசெய்பதகக சிறந்தநிகளும், சாதிரகாந்தம் பனிதகுமுதலியவைகளாற கடடபபட்டிருக்கின்ற அளவற்ற உப்பரிகைகள் நிறைந்த விடுகளும, குயில், புறு, கிளி, பூவை, மயில், கினனரம, வண்டு முதலியவைகள உலாவிப பலவகைப்பட்ட கீதங்களைபபாடிகின்ற பெண்மணற குன்றுகளும, சிங்கம, புலி, கரடி, யானை, முதலியவைகள உலலாசமாய் உலாவுதலசெய்கின்ற அனந்தம் பொதுமபர்களும இன்னு இதகலைதகான எண்ணற்றவளங்களை வாய்ந்த பரியிலி எனறும் வளாதிசீயடைந்து, அரிசதனம், கற்பகம், சந்தானம, பாரிசாதம, மந்தாரமெனறும ஐவகைத தருக்கள் அளவற்றனவாக நிருவாகவும பதுமநிதிசஙகநிதி எனறும இருவகை நிதிகள் ஆயிரமாயிரமாக நிறைந்த பலபொய்கைகள் புடைசூழவுமாக வசதிரம், கோமேதகம, புட்பராகமுதலிய நவரதனங்களைக்கொண்டு சிந்தாமணியினால அழகுபொருந்தசமைந்திருகின்ற மண்டபத்தில் தாமுந தமதுமேனியும இடபவாகனத்தினின்று பிரிவின்மையர்த்தருளினர். இவ்வாறு அசதோலிபினகணிறைந்த புட்பங்களின் பரிமளங்களோடு கூடிவருகின்ற சிறுதென்றலானது தமது திருமேனியிற் படும்படியாக அமமண்டபத்தினுவீல்வீற்றிருக்கின்ற அம்மையப்பருடையசநநிதானததின முன்னர் சிலர் ஆனந்தக்கூத்தாடினர்கள் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்தார்கள், சிலர்கைகூப்பி எதிற்நின்றார்கள் சிலர் பாடல்களினைப் புதித்தார்கள். சிலர் தான்குமருங்கினுங் சூழ்ந்திருநதார்கள். சிலர் பணிவிடைகளை நடாத்திவந்தார்கள்.

இவ்விதவைபவங்களோடு வீற்றிருக்கின்றகாலத்தில் சிலநாள் சிவபெருமான் யோகத்திலிருந்தனர். உமாதேவியார் தமதுபாங்கியரோடு நடந்துசென்று வெண்மணற் குன்றுகளிலேறியும், பளிங்கு

உப்பரிகைகளிலுலாவியும் மரநிழல்களிலிருந்தும்,மலைகளின்மீதிலிவ
ர்ந்தும், பொய்கைகள் ஓடைகள் நதிகள்முதலான இடங்களே படைக்
தும், மிகுந்த இன்பத்தோடு தமக்கிஷ்டமானபடி விளையாடல்செய்தி
ருந்தனர். இப்படியிருக்கும் நாளையில் ஒருநாள் சந்திரசேகர மூர்தி
க்கு அன்பனுகிய கயமுகாசுரனென்பவன் அவருவந்து சிந்தாமணி
யாற் சமைத்திற்கின்றவிசித்திரமான மண்டபத்தினையடைந்து அதனை
த்தனது கொம்பிலுல் முட்டியெடுத்து நிலத்தில்விழுத்தள்ளினுன்.

என்று சூதபுராணிகர் செல்லலும் சவுனகாதிமுனிவர்கள் தொ
முதி சுவாமி! சிவபிரானுக்கு அனபனபிருக்கின்றவன் கயமுகத்தை
யுடைய ராட்சசனுதற்குக் காரணமென்ன? அன்றியும்அவன் அன்
பனபிருக்கின்ற கயவரைப்போலச் சிவபிரானைச் சற்றுமதியாமல்
அவரெழுந்தருளி யிருக்கின்ற மண்டபத்தை முட்டிநிலத்தில் வீழ்
த்தவேண்டுவதென்ன? மற்ற வரலாற்றினையுஞ் சொல்லியருளல்
வேண்டுமென்று கேட்டார்கள். அதற்குச் சூதபுராணிகரிசைந்து
ஓ சவுனகாதி முனிவர்களே! முன்னொருயுகத்தில் மயேச்சுரனென்
றும் ஓரரசனிருந்தான். அவன் நான்கு வேதங்களையு மோதிவஸ்து
நிச்சயத்தெரிந்து பதினெண் புராணங்களையும் வழுவரக்கேட்டு
தருமசாஸ்திரங்களை யறிந்து நடாத்தி விபூதி உருத்திராக்க முதலிய
வைகளையணிந்து திரிகாலங்களிலுஞ் சிவபூசையும் வழாது மூப்
பத்திரண்டு லட்சணங்களையு குறைவறவாய்ந்து மலபாசங்களைத்
தறந்து மெய்ஞ்ஞானச் செல்வத்தினிலோங்கி அஷ்ட ஐசுவரியங்க
ளோடு மதுநீதி முறைபபடி உலகமுழுவதுந் தனதரசாட்சியினைச்
செலுத்திக் குறைவற வாழ்கின்றநாளையில் ஓர்நாள் பிரகஸ்பதி
தேவர் அவ்வரசனிடத்திற்செல்ல அவ்வரசன் அவரை எதிர் கொ
ண்டுசென்று அழைத்துவந்து விசித்திரமான ஓராசனத்தின்கணிரு
க்கவைத்து அர்க்கியபாத்திய ஆசமனுதிகளைக்கொண்டு பூசித்து
சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து மிக்கபக்தியோடு பலமுறை
தோத்திரஞ்செய்து நின்றனன். பிரகஸ்பதிதேவர் அவன்செய்த
வழிபாட்டிற்கு மனமுவந்து அரசனே! யாம் உனது ஆண்மையை
யும் புகழையும் நீதியையும் ஊக்கத்தையும் பண்பினையும் பலவாறு
கேள்வியுற்று உன்னைக்கண்டுபோமாறு இங்குவந்தனம் ஆனால் இது
காறுங்கேட்டதைவிட் இப்போது உனதருணதிசயங்களை நேரிற்
காணுமிடத்து எண்மணங்கு அதிகமாகவிருக்கின்றன நமதுபாதங்
களிலன்போடு வணங்கிய உனதுசிரமானது முனிவர்கள் தேவர்கள்
பெரியோர்கள் முதலியோரால் வணங்கப்படுகென்று நுணுகிநினைத்

னர். அதை அவ்வரசன் கேட்டவுடன் அளவற்றமகிழ்ச்சிக்கொண்டு சுவாமி! தேவரீர் கொடுத்தருளிய திருவாக்கு எப்போது அடியேற்குப்பலித்திடுமென்று கேட்டனன. அதற்குப்பிரகஸ்பதி தேவர் சொல்லுவார்: அரசனே நீ எப்போது யானையிடத்திலுற்பத்தியாகின்றனையோ அப்போது நமதுவாக்கு பழுதில்லாது பலிக்கும், இதுவேயன்றி உடனே நீ சிவாலுக்கிரகத்தினல் முத்தியுமடைவையென்று சொல்லி எழுந்துபோயினர். பின்னர் ஓர் காலத்தில் மகேச்சுவராசன் தனது நாடுகளேபெலலாங் காத்தற்பொருட்டு அளவற்ற சேனைகளோடும் பட்டணத்தினினறும வெளிகொண்டு வழியிற் செல்லுகின்றபோது, அவனுக்கெதிர நாரதமுனிவர் வந்தனர். அப்போது முன்னர் அவ்வரசனுக்குப பிரகஸ்பதிதேவர் கொடுத்தருளிய வாக்கு பலிக்குங்காலஞ் சமீபித்ததினலோ அல்லது அவனிடப்புடைசூழ்ந்த அளவற்ற சேனைகள் தொடங்கிப்போனதினல் தனதுபார்வை பெட்டாமற் போனதினலோ, நாரதமுனிவருக்கு அவ்வரசன் வந்தனமுதலிய வழிபாடுக ளசெய்யாமற்சென்றனன். அதனல் அம்முனிவருக்கு மிகுந்தகோபமுண்டாகி, ஓ அரசனே! நீ காட்டிற்சஞ்சரிக்கின்ற யானைபோல வனவணங்காது செல்கின்றனை யாதலால், இந்தரசனமொழிந்தபின்பு யானைக்குழாத்தினுள் யானைமுகனைப் பிறந்து, கயமுகாசுரனெனனும நாமத்தினைக் கைக்கொண்டு சிலகாலந்தின பினனர் சிவபிரானுடைய கரத்தினல் உனது சென்னி அறுபட்டுமீட்டுமவருடைய திருவடியிலே கயிலாயத்தின்கண் மேன்மை பெற்றிருப்பாயென்று சொல்லிசென்றனர். இவ்வார்த்தைகளனைத்தும நீதியிற்சிறந்த மஹேச்சுவராசன் செவியிலேறலும் ஆ! ஆ! என்ன அற்புதம அற்புதமென்று சந்தோஷித்து முன்னம பிரகஸ்பதி தேவர் சொல்லியவாறும் இப்போது நாரதமுனிவர் கூறியரெய்தியும ஒத்தவரத தல்லவாவென்று ஆச்சரியமுற்றப் பின்னும் அளவற்றகாள் அந்தச்சரீரத்துடன் அரசனுகை வாழ்ந்திருந்து தனது ஆயுள் முடிந்தபின்பு பரியலிவனத்தில் வாசமாயிருந்த யானையின்பால் யானைமுகனுகப்பிறந்து கயமுகாசுரனென்னும் பெயரைவகித்து பூர்வக்கியானமுஞ் சிவபத்தியுமுடைய வனுய் அளவற்றகாளிருந்து முற்சனனத்தில் தனக்குப்பிரகஸ்பதி தேவரும் நாரதமுனிவருஞ் சொல்லியதையுக் அச்சொல்லின்படி மறுசனனத்தி லடைந்ததையும் யோசித்து தண்ணீயாட்கொள்ள வல்லசாமியையுங் தியானித்து வந்து, சிவபிரா னெழுந்தருளியிருந்த மண்டபத்தைத் தனது கோட்டினுல் முட்டித்தள்ளினன்.

திருக்கண்டு சிவபிரான் யோகத்திலிருக்கவும் உமாதேவியார் அயர்ந்து நித்திரை செய்திருக்கவுமான காலம் பார்த்து இதுவே நல்லசமயமென்று நிச்சயித்து உடனேவாயுரூபமெடுத்து உலகமாதாவாகிய உமாதேவியார் உதரத்திற் பிரவேசித்து அங்கு நின்மல ஸ்வரூபமாயிருந்து வளர்கின்ற கருவைச் சேதித்து சிரசை வெளியிற் கொணர்ந்து வந்து விந்தவரையினை யடித்து அவ்விடத்துள்ள கருமதை நதியின் பக்கத்திலே வைத்துவிட்டு மீட்டுந் தனது அரண்மனையிற் போய்ச் சேர்ந்தனன் அண்டர் பிரானுகிய விநாயகப் பெருமானது சிரம்விழுந்தவிடம் பெரிய பள்ளமாயிற்று. அப்பள்ளத்தையாவருங் கணேச குண்டமென்று சொல்லுவார்கள் அச்சிரத்தினின்றும் பெருகிய வுதிரமானது ஆறு யோடிய படியால் அஃது சோணநதி யென்னும் பெயரினால் வழங்கி வருகின்றது கணேசகுண்டத்திற்குச் சமீபத்திலிருக்கின்ற சிலைகளனைத்தும் அக்குண்டத்திற் சரிந்து வீழ்ந்து கணேசமூர்த்தியினுடைய திருவுருவத்தை யடைந்து உலகமுழுவதும் பூசிக்கத்தக்க அளவற்ற பயன்களைக் கொடுத்துக்கொண்டிருக்கின்றன ஆதலால் அந்தச் சுயம்பு மூர்த்திகளெயெத்து யாவரேனும் வேதாகமமுறைப்படி பூசித்து வருவாராகளாயின் அவர்கட்கு தரும முதலிய நான்கு புருஷார்த்தங்களும் கிடைக்கும். சிந்தூரன் வந்தசெய்த இடகொடிய செயல அசரிதாவுகுக் கருவாகி வளர்ந்த விநாயமூர்த்திக்குந தெரியுமேபன்றி உமாதேவியாரும் அறியார் சிவபிரான் முதலியயாவரும் அறியார்கள் இத்தன்மைதாகிய கொடுந்தொழிலை நடபபித்துகொண்ட விநாயமூர்த்தியானவர் சிரம்போயும் கருவீணத்தும் முற்றுமபடியாகவே வளர்ந்தனர்.

இப்பால் உமாதேவியாருகுக் ஓ ரபது நிலகளுமாகப் பத்தாந்திங்களில் சிவபிரானவரைப் பார்த்துப பெண்ணே! உனது வயிற்றிற் கருப்பம் நிரம்பிய படியால் இனியாம் கயிலைக்குச் செல்லவேண்டுமெனச் சொல்லி உடனே அவரை ரிஷபவகானத்திற் கொண்டெழுந் தருளினர் போகத்திலிருப்போர்களுக்கு யோகியாயும் போகத்திலிருப்போர்களுக்குப் போகியாகியுமிருந்து அனுக்கிரகஞ் செய்யவல்ல சிவபிரான் பறியலி வனத்தை விடுத்துத் தமது கைலாய வரையையடைந்த பின்னர் உமாதேவியார் உலகத்தாரைப்போல நடத்துமாறு இச்சையுற்று ஆதிமத்தியந்த ரகிதமாய் அனுதி வஸ்துவாய் சகல பிராணிகளிடத்தும் கிரண பூதமாகப் பொருந்தி எண்ணியுமோர் பொருளாகக்கொண்டுதித்துக் களித்திருக்கும் மூலகாரணக் கடவுளாகிய விநாயகமூர்த்தியைப் பிரசவித்தனர். உடனே அவ்விநாயக மூர்த்தியானவர் ஞானசத்தியுத்தராய் அட்டமாசித்திகளையுந் தரித்த

தவராய் சித்திபுத்திகள் சமேதராய் சிங்கவாகனரூடராய் பத்துதித்திரு க்கரங்களோடும் ஆயுதங்களோடும் அவதரித்தருளு. அவ்வவதார கோலத்தை உமாதேவியார்கண்டு முன்னமருளியபடியே வந்து அவ தரித்தனரென்று மனமகிழ்ந்தனர். பின்னர் விநாயமூர்த்தியானவர் தம்மையீன்ற உமாதேவியாரைப் நோக்கி அன்னீயே! உனக்குயாம் அன்றுசொன்னபடியே கொடுமையின் மிருந்த சிந்தூரணிக்கொல்ல வும் பத்தசனங்களாகிய தேவர்கள் முனிவர்வள் முதலியோர்படுந் துன்பத்தினீ நீக்கவும் உமக்குப் பணிசெய்து ஆனந்தமாக்கி வைக்க வுமாக உமது கருப்பத்தினினறும் அவதரித்தோம் என்று திருவாய் மலர்ந்து தமது திருவருளைவைக்கரந்தருளினர்.

இப்பால் உடனே உமாதேவியார் திகைத்து மயங்கினர். மீட்டும் விநாயகமூர்த்தி சிறமில்லாத குழந்தையாய் வந்திருந்தனர். அதனைக் கண்ட உமாதேவியார் ஆவிசோர்ந்து தலமிசை வீழ்ந்து நெட்டுயிர்த் து அவசமாகி நேத்திரங்களால் இதனைப் பாலியேன் பார்க்கப்படுவ தோவென்று பதைபதைத்து ரு லியே! எனது புத்திரீனை யாரோயெ டுத்துக்கொண்டு சென்று கிரத்தரீனச் சேதித்து விட்டு என்முன்னே கொண்டு வந்து வைத்தாகளே! யான் எல்லா வித்தகினும் பாக்கிய வதியாயிருந்தும் புத்திரசம்பத் நிலே எளியவளாயினேனே! இப் போது எனது கண்முனை ரெழுந்தருளிய விநாயகமூர்த்தி எங்ஙன மேனு மொளித்தருள சென்றனரோ! அல்லது சொர்ப்பனமோ? மாய் கையோ! மற்றியா தோ? எனது அருமைப்புதல்வனுக்கு இவ்வாறு சம்பவிக்கலாமோ வென்று புலம்பி அன்று எதிர்த்துவந்த சிந்தூர னல் நீராகிபபோ தேமுனாயின் இன்று இத்தன்மைத்தான சம்பவத் தை யாம்பாக்கவேண்டிவந்தில்லையோ? சுவாமி! அச்சிந்தூரனை அன் றுயென் மிலக்கினென்று சொல்லித் தேம்பித் தேம்பி யழுதனர் இவ்வாறு உலகமாதா அகதப்புத்திலிருந்து தயாரப்படுவதைத் திரு வோலக்கத்திலெழுந்தருளியிருந்த சிவபிரானறிந்து சரேலென்று எழுந்து உமாதேவியாரிடத்தில் வந்து நடந்த செய்திகளனைத்தை யும், வினவியறிந்து. முழுமுதற்றேர்ந்த முதல்வராகிய முக்கண் மூர்த் தியானவர் இப்போது முடியப்போகின்றதையும் இன்ன இன்னபடி யென்றறிந்திருந்தும், அவைகளைத் தமக்குள் மறைத்துக்கொண்டு திருமேனியிற் பழுதுகாட்டியருளிய தமது புதல்வரது மகிமையை உலகத்தாரறிந்து கடைத்தேறுமாறு காட்டும்படி நினைத்தவராய் அக த்தினுள்ள மகிழ்ச்சியை அயலாரறியாத வண்ணம் மறைத்தும், உல கத்தவரைப்போல மிகுந்த முகவாட்டத்துடனே தமது புத்திரனைக் கரத்திலெடுத்துத் தடையின்மீது வைத்துக்கொண்டிருந்தனர். அக்

குறிப்பைகந்திதேவரறிந்து சிவபிரானைப் பணிந்தெழுந்து விடைபெற்
றுப் பிரமன், விண்டு, தேவேந்தின் முதலியோருக்கும் இவ்வற்புதத்
தை யறிவித்து அழைத்துவருமாறு சென்றனர். இந்திரன் முதலாயி
னோர் நந்திதேவர் வரவையறிந்து, உடனே அவரை எதிர்கொண்டு
வந்து பணிந்து ஓர் ஆதனத்திலிருத்திப் பூசித்து, சுவாமீ! தேவரீர்
இங்ஙனமெழுந்தருளிய காரணத்தைத் திருவாய் மலர்ந்தருளவே
ண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அவர்களை நந்திதேவர் பார்த்து
ஓ தேவர்களே! கயிலாயத்தில் உமாதேவியார் திருவயிற்றில் ஓர் திவ்
வியமான குழந்தை சிரமில்லாமற் பிறந்தது. அதை சிவபிரான்கண்டு
ஒருவாரமிருக்கின்றனர். ஆதலால் நீங்கள் அங்குவரவேணுமெனச்
சொல்லினர், அதை விண்டுமுதலினோர் கேட்டலும் இரக்கமுற்று
முன்னர் தாங்கள் அனைவரும் தோத்திரஞ் செய்தபோது பிரத்தியட்
சமாகிய வரங்கொடுத்தருளிய விநாயகமூர்த்தியே அவ்வாறு அவரித்
தனென்று தெரிந்துகொள்ளாமல் அவ்வவர்களுடைய வாகனங்களி
லேறிச் சென்று கயிலாய வரையை யடைந்தார்கள்.

அப்போது நந்திதேவர் முன்னதாகச் சென்று விண்டுமுதலா
யினோர் வரவை சிவபிரானுக்கரிவிக்க, அவர் தமது புத்திரரீ அந்தப்
புரத்தில் நிறுத்தி மீட்டுந் திருவோலக்க மண்டபத்திலெழுந்தருளி
னர். உடனே விண்டுவாதி தேவர்கள் முறைமையாகப் பணிந்தெழுந்
தார்கள் பின்னர் இருநிரனனவன் பிரமன முகந்தை நோக்கி உலக
மாதாவாகிய பரமேஸ்வரியின்றருளிய குழந்தையை இங்ஙனம் வரு
ச்சிக்கவேண்டுமென்று சொல்ல, அவ்வாறே பிரமன வரவழைத்தான்.
அப்போது அக்குழந்தையைச சில தேவர்கள் பார்த்து இப்பங்க
முற்றீ பிள்ளையைக் கொண்டுபோய் கடலிற போடுங்களென்றுசொ
ல்ல, அவர்களைப பிரமன் விழிகளினலறிபொறி பறக்கும்படியாகப்
பார்த்துக் கோபித்தனன். அதற்குத தேவர்களெல்லாம் ஓடுங்கி
அச்சங்கொண்டார்கள். பின்னர் பிரமன் தனக்குள் நடுக்கங்கொண்டு
இக்குழந்தை அந்தரியாமியாயிருக்கின்ற சாவேஸ்வரனே! யென்று
நிச்சயித்து, ஓ கிருபா மூர்த்தியே அநாதி நித்தரா, உலோகங்களை
யெல்லாம் உண்டாக்கவல்ல கருத்தாவாய் அடியேங்களுடைய பாவங்
களனைத்தையு மொழித்து இடர்களைப் பொடிபடுத்தவல்ல இறையவ
ராய், ஏ காளைச சொரூபராய், மனோவாக்குகளுக்கு மெட்டாத வத்
துவாயிருக்கின்ற தேவரீர், இவ்வாறு சிரமில்லாது இங்ஙனமவதரித்
திருக்கின்ற காரணமென்ன? அவ்விரக ரகசியத்தைக் கவலைக்கடலில்
மூழ்கி மயக்கமுற்றிருக்கின்ற அடியேங்கட்கு வெளிப்படுத்தி தெளி
வித்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதனை [illegible]

கேட்டு பிரணவமந்திர சொரூபியாயிரா நின்ற விநாயகமூர்த்தியினது மகிமையைச் சிறிதுமறியாதவராகி ஓ வாணிகேள்வனே! சரீரத்திற் குண்டான உறுப்புக்களில் பிரதான உறுப்பாயிருப்பதுநிரம். அச்சிர மில்லாமல் பிறந்த குழந்தைகள் எவ்வுலகத்திலேனும் பிழைத்ததுண் டோவென்றனர். அதைப் பிரமன் கேட்டவுடன் கோபித்து, நீர் எவ் விதத்தாற் றகாதவார்த்தைகளே மற்றைத் தேவர்களைப் போலப் பேசினீரென்று அவர்வாயிலே யடித்து, ஓ துமுரய்மௌலியே ஆனவ மலத்திலமுந்திக் தீராதமபக்தத்தினையுடைய சிறியோர்களாகிய நம் மைப்போல உடம்பு நுனிகள் கூடாதகாலத்தில அறியுந்தன்மையில் லாத அறிவினையுடையவர் இவர் எங்கும்பரிபூரணவறிவாம், அனந் தையும் ஒருமிக்கவுரியும் பெருமானுதும். மூனனஞ்சிவபெருமா னுடைய வில்லுக்கு நீர் காணையிருந்தகாலத்தில் இந்திரன் முதலிய தே வர்களெல்லாஞ் சிதலாய்வந்து அநந்தரானை அறுத்தனர். அப்போது அந்தாணையிருந்த நீர் உம்முடையசிர அறுபட இறந்துபோனீரே போலவும், உலகத்திற் றவிரிந்தகலாகள உயிர்தரித்துவாழார் என்பதுபோலவும் சகல லோகங்களையுந் தொற்றுவித்சழிக்க யே சுயமபிரகாச மூர்த்தியினை யெல்லப்பிரான் நீர்? பரந்த வுலக தையுந்தமது இரண்டு பாலபிரனைத்தொண்டு சகலத்துவங்களும் பொருந்தத்தோற்றுவித்து, உயிர்களது அஞ்ஞானவிருளை போக்கு நிமித்தக் குருவாதிகளைக்கொடுத்து இடைந்து உயிர்தோறும் உள் ளுக்குள்ளே அந்தரியாமியாயிருந்து அறிவு விளங்கவைத்துத் தாயி னைப்போலவளர்த்து வருகையாலுந்தியினுடைய திருவருவில் ஒருருவுமில்லாதிபல் அவர்க்கென்னருறை? உருவம் வேண்டுமென் றும், வேண்டாமென்றும் வருகின்ற இரண்டு ஊமும் இவர்க்கில்லை. தம்மை அணுகினோர்களுக்கு சகல அரிட்டங்களையும் போக்கவல்ல இவரியல்பைத் தேவர்களுமறியாதகள். அத்தேவர்களெல்லாந் தொ முத் தலமைபெற்றிருக்கின்ற நீருமறிந்திலீர் ஆசாஜடைய அருமை யை அபக்தவர்களறிவார்களோ வென் றுசொல்லினன். அவையணைத் தையுஞ் சர்வஞ்சமூர்த்தியாகிய விநாயகக்கடவுளானவர் செவியில்லா மலே கேட்டுச சந்தோஷித்து, வாயில்லாமலே இதனைவிளம்புவ தாயினர்.

ஓ இரணியகருப்பனே! பூர்வத்தில் யாம் சிருஷ்டித்தொழில் உனக்குத்தக்கபோது ஓர் சலப்பிரவாகத்தில் உன்னுல்யாம் எவ்வாறு காணப்பட்டோமோ அவ்வாறே இப்போது ஈஸ்வரியினிடத்தில் உன் னுற்காணப்பட்டோம். ஆனல் சிரமில்லாமற் காணப்பட்டதற்குக் காரணம் யாதெனில், அதனையுஞ்சொல்லுவோங்கேள். எப்போதுந்

தீமைகளே விளைவித்துவருகின்ற சிந்தூரனைக்கொல்லவும், உன்னட்கு அவன் செய்துவருகின்ற அரிட்டங்களே நீக்கவும், வேதாகமமெறிகளே விருத்தியாக்கவும் உமாதேவிக்குப் பணிபுரியவும் பிரமனது வரத்தின் சிர்த்திபாய்க்காகிருக்கவும் பால் திணையாதிகளின்றி இங்குதோன்றினம். என்று விநாயகமூர்த்தி திருவாய்மலர்தருள ஆம், அதனைப் பிரகஸ்பதிதேவர்கேட்டு சுவாமி! தேவரீர் திரிலோகங்களையும் காத்தருள வேண்டி அவதரித்ததாயின் தேவரீருடைய திவ்யசொரூபத்தை யாவருங் தரிசித்துபயனடையக்காட்டி, அடியேங்கள் மனதிலிருக்கின்ற மயக்கத்தைத்தீர்த்து மகிழ்ச்சியடையவிளைவித்தருளவேண்டுமென்றனர், அதற்கு விநாயகமூர்த்தி சந்தோஷித்து, ஓ தேவகுருவே! முன்பு மயேச்சுரனென்னுமரசன் உன்னை மிகுந்த பக்தியுடனே பணிந்தபோது நீ அவன் தலைக்குக்கொடுத்தவரத்தினால் பின்பு அவன் கஜமுகாசுரனுகபிறந்து, சிவபிரானுடைய சூலாயுதத்தினலுறபட்டுச் சாரூபபதவியைபெற்றிருக்கின்றனன். அவன் சிரமானது அக்கடவுளாலயத்தோரபால் வைக்கப்பட்டிருக்கின்றது. அன்றியும், அவ்வது நீண்ட துதிக்கையினுடனிருக்க அழகாயிருக்கின்றது நமது திருமேனியைபபார்த்து இது என்னவென்று உங்கள் மனதில் எண்ணுகின்ற எண்ணங்களெல்லாம் நீருவதற்கு, அந்தச் சரித்தை நமது சரிதத்தோ கலக்கச்செய்வதேகருமம். அதற்குமிக்க தடையேறுமில்லையென்றனர். அதை பிரகஸ்பதிதேவர் கேட்டு, ஓ திரிகாலங்களேயுமறியவல்ல கடவுளே! தெளிந்த அறிவினையுடைய மயேச்சுர ராஜன்பொருட்டு அடியேன் கூறியவார்த்தையானது இங்குயாவருமறியுமாறு தேவரீராற் திருவாய் மலர்ந்தருளுவதாயதே! விஸ்வரூபியாகியும், விஸ்வேசுவரராயும், பத்தர்களுடைய விடர்களைநீக்கவல்ல பரம்பொருளாயு மிருக்கின்ற தேவரீருடைய சுயம்பிரகாச சொரூபத்தை அடியேன் காணும்படியான அறிவில்லாதவனுயினேன். என்று இவ்வாறு பலமுறைபிருந்த உருக்கத்தோடுந் துதிசெய்துகொண்டிருந்தனர். அச்சமயதத்தில் நாரதமுனிவர் விநாயகமூர்த்தியைப் பணிந்தெழுந்து ஓ சிற்பரானந்தமூர்த்தியே, நித்தியானந்த நிரூப நின்மல, நிரந்தா, நிராகார, நிஷ்கர்ம, நிர்ச்சங்க நிர்விகார, நிர்குணா, நிஷ்கிரிய, நிர்விகற்ப, நிரஞ்சன, நிராலம்ப, நிரதிசயானந்தமுதலிய அளவற்ற குணதிசயங்களேவாய்ந்த தேவரீர் இவ்வுலகமனைத்தினையும் யானைமுகங்கொண்டு காத்தருளும் பொருட்டுத் திருவுளஞ்செய்த மிகுந்த கிருபையோடும் உமாதேவியிடமாக அவதரித்தது மெய்யேயாகும். ஆயினுந்தேவரீர் சரமானது இடைதி லொழிந்ததாகக் காணப்பட்டிருக்கின்றமையால் அடியேன் யாவராலும்

முக்கப்பட்டதோ அதனைத திருவாய் மலர்ந்து, அடியேங்கட்குண்டாகிய சங்தேகத்தினைத் தெளிவித்தருள வேண்டுமென்று பிராத்தித்தனர். அதற்கு விநாயகமூர்த்தி திருவுளங்கொண்டு, ஓ தேவமுனியே! நாம் பரமேஸ்வரிவயிற்றிற் சூலாயிருந்த எட்டாந்திங்களில், முன்னம் பிரகஸ்பதி தேவன், மயேசுராஜன் வழிபிறசென்றபோது உனக்கு வந்தனை செய்யவில்லையென்று கொடுத்தசாபமானது சரியாதற் பொருட்டும் நமது சரீரத்தினின்றும் நீங்கிய பிரமானது விழுந்தவிடத்திலிருக்கின்ற சிலைகளைத்தும் நமது சொரூபத்தினையடையும்பொருட்டும், அவைகளை யெடுத்துபூசித்துவருகின்ற அனமாக்களுக்கு வேண்டியவரங்களைக் கொடுத்தற்பொருட்டும், மனிதர்-நாகர்-தேவர்-முதலியோரால் அழிவுபடாத வலியினைவாய்ந்த சிந்தூரனைச் சங்காரித்தற்பொருட்டும் யாமயானை வதனத்தை யடைதற்பொருட்டுக் திருவுளங்கொண்டு; இந்த மகாதிவ்ய சரீரத்திலிருந்த நமதுபிரமானது நீங்குமாறுயாம் கருவாகிவளர்கின்ற சேதியைசிந்தூரனுக்கு ஆகாயவாக்கினாலறிவித்ததனம அவன் உடனே தனது உருவத்தை மறைத்து மாயரூபங்கொண்டுவந்து சஸ்வரியினுதரத்துட்புகுந்து கருவாயிருந்த சிரத்தை யறுத்துக்கொண்டு சென்றனன. இப்போது யான் கசமுகத்தைத்தரித்துகொண்டு அச்சிந்தூரனை சங்காரஞ் செய்தருளுவமென்று திருவாய்மலர்ந்தனர்.

அவை யனைத்தையும் நாரதமுனிவர்கேட்டு மிகுந்த உவகையோடுமீட்டும் பணிந்தெழுந்து சுவாமீ! அந்தயானையின் பிரமானது அடியேங்கள் சிரத்தினுறங்கத்தக்கதன்று, அதைக்கொண்டுவந்து தேவரீர் திருமேனியிற சேர்க்கத்தக வல்லபமும் அடியேங்கட்கில்லை. ஆக்கல்-காத்தல-அழித்தல் என்று முத்தொழிலுக்கு முதன்மையாயிருக்கின்ற தேவரீரே அதனைவசசெய்துதரித்தருளவேண்டுமென்று சொல்லினார அசசொல நிறைவேற்றுவதற்கு விநாயகமூர்த்தியானவர மயேசனென்கிற யானையின் சிரசையாவருங்கண்டு தரிசிக்கும்படியாக வரசசெய்து தமதுதிருமேனியிற் சேர்த்துக்கொண்டு மகரகுண்டலம் கிரீடம முத்துமாலை பொற்சிறுடிமுதலிய ஆபரணங்களோடு நானகு புயங்களும மூன்றுவிழிகளும் விளங்கும்படி இடப்பாகத்திற் சித்தியும் வலப்பாகத்தில் புத்தியுமாகத் தரிசனந்தந்தனர். இவ்வாறு தரிசனந்தந்தருளிய விநாயகமூர்த்தியைத் தேவர்கள் முதலியயாவருங்கண்டு பிணிமூழுவதுமொழிந்து பேரின்பக்கடலி லாழ்ந்தார்கள்.

மீட்டும் பிரமனுதிதேவர்களு முனிவர்களும் விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளில் முறைமையோடு தாழ்ந்தெழுந்து இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பிநின்று, பரப்பிரம சொரூபமாக விளங்குஞ் சர்த்

தனேபோற்றி, திரிமூர்த்திகள்முதலிய சகலருக்கும் மூலகாரணக் கடவுளாக விருக்கின்ற பரம்பொருளேபோற்றி. ஞானசத்தி கிரியா சத்தி சொரூபமாய் அகிலாண்டமெல்லா மதிட்டித்து விளங்கும் சாக்ஷாத் சித்திபுத்திகளிருமருங்கினும் பொருந்தவைத்து சரசரப் பிரபஞ்சங்கள் விருத்தியடையச் செய்தருளும் தயாநிதியேபோற்றி, யான்எனது என்னும் அங்காரச்செருக்கிற்பட்டு, உலகத்தையாட்டி வரும் அசுரர்களேர சகரிக்கவல்ல தேவ தேவோத்தமனேபோற்றி, எம்மையொத்தவழிக தொண்டர்கட்கு நாதனுகவிருந்து தடுத்தாண்டு ரட்சிக்கும் பக்தவத்சலனேபோற்றி, சோமசூரியாக்கினியைத் திரிநேத்திரங்களாகக கொண்டிருக்கும ஆதிதேவனேபோற்றி, பிறப்பிலியாய்ச் சனனமற்றி எக்காலத்தும விளங்கும் பெருமையினே வாய்ந்ததாணுவேபோற்றி. எல்லாப் பொருள்கட்கும் முதன்மையாகிய பொருள் யாதோ அதற்கதுவாகப் பொருளேபோற்றி. எறும்புமுதல யாணையீறுகச் சொல்லும எண்பத்து நான்குலட்சஞ் சீவபேதங்களிடததும அணுமாவாகப்பொருந்தி ஆட்டியூட்டியுறக்கும, சகலலோகநாயகனே போற்றி வேத ஆகமமுதலிய சாத்திரங்தளின் முடிவில் கினறு நிருபதச்செய்யும் அண்ணலேபோற்றி. உலகங்களில் வாசஞ்செய்யும பிராணிகள் எததகையராயினும் அவ்வவர்கள் வழிபடும அந்தந்த தெய்வங்களாக விளங்கி அவர்கள் மனேபிஷ்டங்களேக் கடாட்சித்தருளுக காரணவத்துவேபோற்றி. மெய்ப்பத்தினுல தேவரீரை ஆராதித்து தெரிசிக்கப்பெற்ற புண்ணியவான்களுகு இம்மையில் போகபாக்கியங்களேயனுபவிக்கச்செய்து மறுமையில் மோட்சராபிராசியத்தையுந் தயைசெய்தருளும் அடிகளேபோற்றி. வேதாகமபுராணங்களேயுண்டுபண்ணி அவற்றினே அன்புடன் பதக்கிரமமாய் பாராயணஞ் செய்துவரும் மேன்மை பெற்றவர்களுக்கு மேலானபுகளித் தருதியாக அனுக்கிரகஞ்செய்துவருஞ் சர்வக்ஞனேபோற்றி. மூபபத்தாறுதத்துவங்களுக்கும் மேலாக விளங்கிநிற்கும்பர மூர்த்தியேபோற்றி.

என்று இவ்வாறு அனந்தமுறை ஒருமைப்பட்டமனதோடு தோத்திரஞ்செய்து, ஓ சகலசீவராசிகளும பிழைக்கும்படி எழுந்தருளியதாதனே! தேவரீர் கஜானனரெனனும் திருநாமத்தினைக் கொள்ளல்வேண்டும், மனிதர்கள் தேவர்கள் முதலியோரெல்லாம் அவ்வவர்கள் செய்யுஞ்சற்கருமங்கள் தோறும் தேவரீருக்கு வழிபாடுசெய்ய அவ்வவ்வழிபாடுகளில் சுவாமிகளெழுந்தருளிக் கிருபைபுரியவேண்டுமெண்று பிரார்த்தித்தார்கள். அப்போது கைலாசபரமேசுவரியும் உமாதேவியும் அக்கணத்தினின்று கீழ்திக் சக்கோணமண்டபத்து

சித்தியைக் கொடுப்பவரும் முத்தியைக் கொடுப்பவரும் இவ்விக்கினராசர், விக்கினராயகரென்று செல்லி ஓப்புதற்கரிய தமது சுமாராஜ்டைய மேன்மைபாரு குணங்களைப்பார்த்து உவகைபூத்தார்கள். பின்னர் விநாயகமூர்த்தியானவர் தமதழகினுல் உலமமமீனத்தும் விக்டரென்னுக் திருநாமத்தாற்றுதிக்கப் பட்டனர். உடனே உமாதேவியார் அவருக்கு நீராஞ்சன முதலியவைகளைச் சுழற்றிப் பணிசெய்துவரச், சிவபிரான் யாவரும் விழுப்பமெய்தும்படி அளவற்ற மகிழ்வோடு பூசனைசெய்தனர். இந்திரன், பிரமன் விண்டு முதலிய தேவர்களும் முனிவர்களுப் விநாயக முர்த்தியினிடத்தில் அளவற்றவரங்களைப் பெற்றுத் தத்தமிடங்களிற் போய்ச சேர்ந்தார்கள்.

சவுனகாதிமுனிவர்களே! இவ்வாறு விநாயமூர்த்தி திருவவதாரஞ் செய்தருளிய தினம் ஆவணிமாதம் பூருவபட்ட சதுர்த்தியாதலால் அந்தச் சதுர்த்தி தினத்தில் விநாயகரைப் பூசைசெய்வோர்கள் அடையும் பயனையார் அளவிட்டுச் சொல்ல வல்லவர்கள். மேலும் அந்த ஆவணிமாதச சதுர்த்தியானது உலகமனைத்தும் பூசிக்கப் பெற்ற இறைவராகிய சிவபிரானை பூசித்த நாள் ஆகலானும், விநாயகப்பெருமான் திருவவதாரஞ் செய்த மேன்மையையுடையதாதலும், அஃது வருடந்தோறும் ஆவணிப பூசிப்பதற்கு முக்கியமாக விருக்கின்றது. யாவரும் விகடமென்று சொல்லுதற்கரிய பேரழகினை வாய்ந்து கஜானனவிநாயகர் இவ்வாறிருக்க, காசுமுனிவர் பூலோகத்திலிருக்கின்ற சிந்தூரனிடத்திற் சென்று அவனுல் வந்தனம் முதலிய வழிபாடுகளைச் செய்யப்பெற்று அவன்பக்த ஆசனத்திலிருந்து, உன்னியோத்த பராக்கிரமசாலிகள் மூவுலகத்தினுமில்லையென்று சொல்லினர். அதைச் சிந்தூரன் கேட்டுச் சற்றே அதிர்ந்து காசுமுனிவரது மலர்ந்த முகத்தை நோக்கி பகவரே! இதுகாறும் மில்லாததாயும், அருமையானதாயும், அற்புதமுற்றதாயுமிருக்கின்ற சரித்தமயாதேனு முண்டாயின் அதனை அடியேற்குச் சொல்லியருள வேண்டுமென்றனன் அதற்கு காசுமுனிவர் மகிழ்ந்து, ஓ சமன்ய வுலகினையும் வென்றசூரனே! நாம் எவ்விடங்களினுஞ் சுபாவமாய்த் திரிகின்றோம். அவ்வாறே உம்மிடத்திற்கும் வந்தனம். உன்னுல் நமக்குவேண்டுவது யாதொன்றுமில்லை. இதுகாறுமில்லாத திவ்வியமான சரித்திரமொன்றுண்டு அதனைச் சொல்லுவோம் கேட்பாயாக கயிலாயத்தில் உமாதேவியாருடைய வயிற்றில் சிசமில்லாமல் ஒரு திவ்வியமான குழந்தைவற்பனித்தது. அதற்குமுன் சிவபிரான் யானையின் சிரமொன்றை உருவகித்து ஓர்பக்கல் வைத்திருந்தனர், அச்சிரத்தை அக்குழந்தையானது தனதுதாய் துயரம் நீங்குமாறு தானேவரும்படி செய்து சிரத்திற்றரித்துக்கொண்டது மேலும் அக்குழந்தையோ மிக்க வலியி

னீயுடையது உயர்ந்த அறிவுனீயுடையது அக்குழந்தைக்கு நிகர் யாரையுங்காணேம் அஃது முதலிற் * கவந்தமாய்ப் பிறந்தது யாது காரணத்தினுலோ அறிகின்றிலம். பின்னர் அதுவே யானைமுகத்தினை தரித்துக்கொண்டிருக்கின்ற தென்றனர். இவையனைத்தையுஞ் சிந்துரன் கேட்டவுடன் அயர்ந்து மூர்ச்சையாகிப் பூமியில் விழுந்து; மீட்டுந் தெளிந்தெழுந்து, உள்ளந்தளர்வெய்தித் துக்கித்து, முன்னம் நமக்கு ஆகாசவாக்கொன்று உண்டாயிருந்தபடி அவனே நமக்குப் பகைவனென்று நிச்சயித்து, ஓ மகதிமுனியே! † கஜானன முகத்தையுடைய மைந்தனை எவ்விதத்திலேனும் யான் கொல்லவேண்டும் கொல்லாது விடுத்தல் அவன் என்னைக்கொல்லுவான். இதுசத்தியம். இத்தினமே அவனிருக்குமிடத்திற் சென்று அவன் தந்தையாகிய பரமசிவன் அவனை எவ்விதத்திற் பாதுகாத்து வைத்திருந்தாலும், பற்றி இழுத்துக்கொண்டு வருது கொன்று பத்துத்திசைகளிலும் எனது பராக்கிரமத்தை நாட்டிவைப்பேனென்று சொல்லினன்.

அதனை நாரதமுனிவர்கேட்டு முகமலர்ச்சி கொள்ளத் தானும் முகமலர்ச்சிகொண்டு மிகுந்த ஊக்கத்தோடும் யுத்தத்திற்கெழுந்தனன். அப்போது நாரதமுனிவர் அவனை நோக்கி ஓ புளிதனே! நாம் உனக்கு இதஞ்சொல்ல இங்கு வந்தனம். நீயோ பிரமதேவனுடைய முகத்திற் பிறந்து அதனால் அளவற்ற மேலான வரங்களைப் பெற்று இதுகாறும் ஓர் வருத்தமின்றி வாழ்ந்திருக்கின்றனை. மேலும் அப பிரமதேவனும் உன்னைக்கண்டவுடன் அஞ்சிப் பதுங்கும் படியாகச் செய்தனை. இத்தன்மைத்தான வல்லபத்தையுடைய உனக்கு நாமுறைப்பதென்ன விருக்கின்றதென்று நயங்கூறி அவ்விடத்தினின்றும் மகன்று கைலாயவரையை யடைந்து உமாதேவியாரெதிரில் நின்று, ஓ சகத்ரட்சகியே? தேவரீர் குமாரனைக் கொல்லும்படியாகச் சிந்துரனென்பவன் இதோ வந்துவிட்டனனென்று சொல்லிப் போயினர்.

இவ்வாறு நாரதமுனிவர்சொல்லி அகல்வதன் முன்னர் அழகிலே சொரியும்படியான விழிகளையுடைய சிந்துரனுனவன் சமீபிலிருக்குவந்து விண்ணுலகம் மண்ணுலகம் எல்லாம் நடுங்கும்படி ஊழிக்காலத்தினுண்டாகின்ற இடியேற்றினையொப்பக் கர்ச்சித்து, குரூரமான சொற்களைக் கொண்டு எனக்குப் பகைவனுக இங்கு உதித்திருக்கின்றவன் எவனை அவன் என்னெதிரில் வரக்கடவன்? யானைமுகத்தோ

* கவந்தம்-தலையற்ற உடம்பு,

† கஜானனர் (கஜம்-யானை, ஆனனம்-முகம்) யானைமுகமுடையவர்.

டு கூடியிருக்கின்ற அவனைக்கொல்லுவதற்கு யான் ராஜகண்டீரவத்தைப் போல வந்திருக்கின்றேன். விண்டு பிரமன் முதலிய தேவர்களில் ஒருவரேனும் என்னெதிரில் நின்று எதிர்த்தவர்களில்லை சராசரங்களை யெல்லாம் ஓர் நிமைப்போதில் சாம்பராக்கி யிருக்கின்றேனென்று சொல்லி ஆர்ப்பரித்தனன். இவ்வாறு ஆர்ப்பரித்து அறைகூவியிருக்கின்ற சிந்தூரன் முன்னே யானைமுகத்தினையுடைய விநாயமூர்த்தி யெழுந்தருளி, அடா துட்டனே! உன்னைக்கொல்லத்தக்க மகாபராக்கிரமத்தியுடைய வீரன்யாமே? நம்மை விண்டு பிரமனதியரைப் போல நினையற்க நம்மையெதிர்த்தேவர்கள், அவுணர்கள், அரக்கர்கள் முதலாயினோரை யெல்லாம் அப்போதைக்கப்போது வந்து சங்கரித்திருக்கின்றனம். வருணம் நான்கினையுங் காய்ந்தனன் நதிகள் முதலானவைகளை யொழித்தனம். மலைகள் முதலானவைகளை யழித்தனம். பிரபஞ்சங்களை யெல்லாம் ஆக்கலும், அழித்தலும் நமது செய்கையே யல்லாமல் வேறும் நினையற உன்னால் மாய்க்கக்கூடாத சகத்தினையெல்லாம் யாம் மாய்ப்போம். உன்னால் மாய்ந்திருக்கின்ற சகத்தையெல்லாம் உனது கண்ணெதிரிற்றானே சிருட்டிப்பேம். தேவர்கள் முதலாயினோர்க்கும் மறலியைப்போன்ற நின்னையும் அவ்வாறே அழித்துவிடுவேம். அதை இப்போது நீ காணக்கடவை யென்றனர்.

அவைபணித்தையும் பராக்கிரமத்தி னிறுத்த சிந்தூரன் கேட்டு, இவனை நமக்குப்பகைவனென்று தன் மனதில் நிச்சயித்தும் அவரைச் சிறுகுழந்தை யென்றும் அவமதித்து, ஓ பிள்ளாய்! நீ யேன் வீணிலென்னைப் பகைத்துப சாவைவேண்டுமே? ஐயோ! உன்னைப் பார்த்தால் எனக்குக் கொல்லச் சம்மதமில்லை, எங்கும் மில்லாத பேரழகைப் படைத்திருக்கின்றனை. நீயுன் தாயிடத்திற் சென்று மூலிப்பாலுண்டு அவள் கண்களிக்கும்படியாக முன்றிலில் விளையாடச் செல்லுகவென்று. 'இழிச்சொல் கூறி நகைத்தனன். அதை விநாயகமூர்த்தி கேட்டு அடாசுத்த மூடசிரோமணியே! கனத்த இருட்கூட்டங்களை ஓர் சிறிய திரியினை வாய்ந்த தீபங்கொல்லும். அண்டமுகட்டை யுறுஞ்சும்படியான பெரிய பர்வதங்களை ஓர் சிற்றுளிபிளக்கும். மும்மதங்களையும் பொழிகின்ற யானைக் குழாங்களை ஓர் சிறிய அங்குசமடக்கும். நமமைச் சிறுகுழந்தையென்றவமதித்துக்கூறினை. யாம்யமனைப்போலவந்து உன்னைக் கொல்லத்தக்க காளியென்றறிந்திலைபோலும், என்று சொல்லி உடனே தமது சிமானது அண்டகோளகையை எட்டும்படியாக நீண்டு, பெரிய பர்வதங்களுக்குச் சமானமான புயங்களோடு, சிரம், விழி செவி, முகம், கரம், பாதமுதலிய உருப்பு

களினைத்தும் ஆயிரமாயிரமாக விளங்க விஸ்வரூபங்கொண்டு, சொர்க்கா தி உலகங்களனைத்தும் ஓர் நொடிப்போதில் தமக்குள்ளே யொடுக்கினர். அவ்வற்புதத்தைச் சிந்தூரன் பார்த்து, சிங்கத்தைக்கண்ட யானைபோலவும், பயந்து நடுங்கினன். அதனைச் சத்துச் சித்தானந்த சொரூபராய் விளங்கிய விநாயகக் கடவுள் நோக்கி, ஓ பேதாய்! சகல லோகங்களுப் நமக்குள் ஒடுங்கியதைக் கண்டனை. மீட்டும் அவைகளை வெளிப்படுத்துவதுங் காண்பாயாக வென்று திருவாய் மலர்ந்து தமது முகத்தில் அநதணரையும், புசத்தில் அரசரையும், முழந்தாளில வணிகரையும், பாததத்தில் சூத்திரரையும. விழியிற் சூரியனையும், இதயத்தில் சந்திரனையும், நாசியில் அக்கினியையும், உந்தியில் ஆகாயத்தையும், முடிவில் விண்ணுலகையும், அடியில் மண்ணுலகையும்: செவியில் திக்குகளும ஏனைய திருவுருவங்களில் கடல்கள் மலைகள் நதிகள் முதலிய பாவபுமுண்டாக்கி; இவையனைத்தையும் கண்டு நடுக்க முற்றிருக்கின்ற சிந்தூரனை பார்த்து நகைத்து, முன்னர் நம்மிடத்திலொடுங்கிய உலகங்களை யெல்லாம மீட்டும் நாமே உண்டாக்கி, இதைக் கண்டனை யல்லவாவென்று திருவாய் மலர்ந்து, சரேலென்று நீண்ட துதிக்கரதத்தில் அசுரேந்திரனை வாரியெடுத்துக் குழைத்துத் தமது மத்தத்தில மகிழ்வோடு பூசிக்கொண்டான்.

இப்பால் திசைகள் தோறுஞ் சென்று கமழும்படியான மரிமளத்தினை வாய்ந்த சிந்தூரனுடைய சரீரமானது ஈங்கரக்கடவுளாகிய விநாயகமூர்த்தியினது மத்தகத்திறகுச் சாதகாகியது. அவனுயிரானது அக்கடவுளுடைய திருவடிகளை யடைந்து போரானந்த மெய்தியது. உடனே ஆகாயத்தில் பஞ்சகருவிகளு முழங்கின. தேவர்கள் புட்பவருடஞ் சொரிந்தார்கள் கந்தருவர்கானம் பாடினர்கள். முனிவர்கள் வேதமோதினர்கள். ஞானவித்தகராகிய விநாயகக்கடவுள் பழையபடி குழநதை யுருவாயமர்ந்தருளினர். உலகமனைத்தும் பேரானந்த வாரியிற்றினைத்தன. உருத்திரன் விண்டு விரமனுகிய தேவர்களெல்லாம் அவ்விடத்தில் வந்து மிருந்த பக்தியோடு விநாயக மூர்த்தியினுடைய திருவடிகளிற் பூசித்தார்கள். கொன்றைப்பூமாலையினையந்த சிவபிரான் அத்தேவர்கள் வேண்டுதலின் பேரில் கஜானன மூர்த்தியினையாவரினும் மேன்பெற்றிருக்குபடி வைத்தனர். பின்னர் பிரதேவன் தனது கரத்திலிருக்கின்ற கமண்டல தீர்த்தத்தால் விநாயக மூர்த்திக்குப் பாத்திய முதலியவைகளைச் செய்து பூசித்து, கரத்திற் சென்தாமரைப் பூவினைக்கொடுத்தனன். அவ்வாறே வருணன் பூசித்து மிருந்த வல்லபத்தையுடைய பாசத்தைக் கொடுத்தனன். தேவேந்திரனுனவன் தனது கற்பகவனத்திற் பூத்த சொந்தாமரைப்பூ

னுலுஞ் செங்குவளை மலரினுலுங் கட்டப்பட்டிருக்கின்ற பூமாலையை த்தரித்து பூசித்து நிறுலத தேதவாக்கியங்களைச் செய்வித்து மகிழ்ந்த னன். சிவபிரான் சூலாயுதத்தைக் கொடுத்தருளினர். மற்றுமுள்ள வர்களனைவரும் வேறுவேறு பூசித்து அவ்வவர்கள் கையிலகப்பட்ட பொருள்களைக் கொடுத்துத நிக்க தண்டஞ் செய்தார்கள். இவ்வா று யாவராலும் பூசிக்கப்பெறறு கஜானன மூர்த்தியானவர் பின்னர் அங்கிருந்தபடி மறைந்தருளினர்.

இச்சரிதத்திரத்தைக் கருபபமுறற ஸ்திரிகள் ஈனமாட்டாது வா தனை படுங்காலத்தில் அவர்கட்குச சொனனால் உடனே வருத்த மனைத்தும் நீங்கிப் பிள்ளையைப் பெறுவார்கள், அக்குழந்தையும் சற் குண நற்செயல்களோடு தளர்வின்றிவளரும், யாவனேனும் யாத்தி ரை செய்யுங் காலத்தில் இதனைச் சொல்லிக்கொண்டு சென்ரால் சென்ற விடத்தில் செயம்பெறுவார்கள். அரசர் முதலாயினோரை வெல்லவேண்டி அவர்கள் சபையிற் சொல்லுவோன்; இதனைப் பத்தி யோடு துதிசெய்து சொல்லுவானுயின் அவன் யாராலும தோல்வியு ருது வெற்றி பெற்றுமீளுவன்.

கெஜானன விநாயகர் திருவவதாரப் படலம்.

முறறிற்று

நாரீகாவது

விக்கின விநாயகர்

திருவவதாரப் படலம்.

கருவினை மயக்கந் தீர்க்குங் கசானன ரவதா ரத்தோ
டருள்வினை யாடல் சொற்ரு மருந்தவ வியாத வையம்
வொருளிடர் முழுதுந் தீர்க்கும் விக்கின ராச சென்னுந்
திருவவ தாரம் கேளா னெததிசை முகன் சொல் வானல்.

மகா மகத்வ முற்ற நைமி சாரண்ய வாசிகளாகிய சவுனகாதி முனிவர்களே! விநாயக மூர்த்தி கஜானன திருவவதாரங் கொண்டு பிரமதேவன் கொட்டாவியினின்று முதித்த சிந்தூரனைக்கொன்று, தேவர்கள் முதலாயினோரைக் காத்தருளிய திருவினையாடலைச் சொ ன்னேம். இப்பால் விக்கினராசர் திருவவதாரங்கொண்டு செய்தரு ளிய திருவினையாடலைச் சொல்லுவோம் கேட்பீர்களாக.

வெள்ளியங்கிரிக்குத் தலிவராகிய சிவபெருமான் தமது திரு மேனிமுழுவதும் திருவெண்ணீற்றினை யணிந்திருப்பதுபோல் ஒக்கா லத்திலுஞ் சத்தமேகங்களுக்கும இருபபிடமாய், அள்ளிடற்கரிய பனிப்படங்களால் எங்கும மூடப்பட்டிருக்கின்றது இமயமலை. அம் மலையிற்றவத்தற்கட் கெல்லாந தலைமைபோலச் சகலவித்தங்களிலுங் கீர்த்திபெற்ற வள்ளத்தோடு தத்துவமனைத்தினையுமுணர்ந்து, அவ த்தைகளினின்று நீங்கிய மெய்ப்பரிவினரல் வேதாகமங்களை யபேட்சி த்து வருகின்ற பக்குவர்கட்கு அவைகளைப்போதித்து, அவர்களை அவக்கடலினின்று மெடுத்தபபாதுகாக்க வல்லவராய், * அகப்பற் றுப புறப்பற்றென்னுமிரண்டினையுந துறந்தவராய், பிரமம், தெய்வம், பூதம், பிதிர்மாநுடம் † என்கின்ற ஐவகை வேள்வினையும் பிரதினை மியற்றும் இயல்பராய், சிவபெருமானுடைய திருவடிகளையன்றி வே றொன்றினைச் சிந்தைசெய்யாதவராய், சாபானுக்கிரக சாமார்த்தியத் தையுடையவராய் விளங்கிய சவுபரியென்னுமொரு முனிபுங்கவரிருந் தார், அவர்குற்றமற்ற கற்பினை மனபாலுந்தனக்கொருவர் நிகரில் லாத பெருமையினை வாய்ந்த மனைமையையும் மனவிபணிசெய்ய வாழ்ந்திருக்கும் நாளையில், ஓர் நாள் அம்முனிபுங்கவர் நதியில் ஸ்நா னஞ் செய்யசென்றனர். அவர்மனைவியானவள் ஆசிரமத்திற் பணி செய்திருந்தனள். அச்சமயத்தில் கருணை நாயகராகிய விநாயகக்கட வுளுடைய திருவடிகட் கிடைவிடாது பூசனைசெய்து வருபவனும், ஆகாயமார்க்கத்திற் சஞ்சரித்துக்கொண்டிருந்த கிரவுஞ்சனென்னும் ஓர் கந்தருவராசன்; அவ்விருடி பத்தினியைபபாததனன். உடனே சூத்திரக்கயிற்று வீழ்ந்தாறபோல ஆகாயத்தினின்று மிறங்கி அவ் வாசிரமத்தில் வந்து, தன்னை முடிக்கிய விரகத்தினால் அவ்விருடிபத் தினியை முன்னதாயொன்றுங் கேளாது, கரம்பற்றினன். இவ்வா று பற்றலும் அவ்விருடிபத்தினியானவள் பூனைவாயிற்பட்ட கிளியைப்

* அகப்பற்று, புறப்பற்று என்பன: உயிர்களுக்கு மாயையினு ண்டாகிய தனு கரண புவன போகங்கள் நான்கினுள், தனு கரணங் களே யான் எனமதித்தலே அகப்பற்றெனவும் புவனபோகங்களே எனது என்று அபிமானத்திலே புறப்பற்றெனவுங் கூறுவ. இவற் றுள்: தனுவென்பது-தேகத்தை, கரணமென்றது - அந்தக்கரணம் புறக்காணங்களே. புவனமென்றது - பூதாதிபிரபஞ்சத்தை. போக மென்றது சத்தாதிவிடயங்களே. அன்றியும் கரணங்கள் தனுவுக்கு அபேதமாயும், புவனங்கள் போகத்திற்கு அபேதமாயு நிற்கையால், தேகபோக மென்றிரண்டாகவுஞ் சொல்லப்படும்.

போல நடுநடுங்கி மனக்தளர்ந்து தனது கற்பின் வலியால் அவனீ யாணமேமலெழுஞ் சிங்கத்தைப்போலச்சீறி தனதுள்ளத்திற் கொதித் தெழுகின்ற கொபத்தினுலவனீப்பார்த்து, அடாபாவி! எனது பிரா ணகாயகரில்லாத சமயம்பார்த்து என்னீக்கைப்பற்றிக் கலவிக்கிழுக் கின்றகீ. இனி என்கரகதையிடாமற் போவையெனில் உன்னீ இர் நிமிடத்தில் நீருக்கிவிடுவேனென்று சொல்லினள் அத்தருணத்தில் ஸ்நானஞ்செய்யச சென்றிருந்தசவுபரி முனிவர்மீட்டும் ஆசீர்மத்தி ற்குவந்து, தமது பதகிணியினுடைய கரத்தைக் கிரவுஞ்சன் பிடித் திழுப்பதைப்பார்த்து, கண்களில் அனற்பொறியெழும்பவும் இதழ் கள் துடிக்கவும் புருவங்கள் நெறியவுமாகக்கோபித்து அடா மூர்க் கனே! ஏபாசாரமுஞ்செய்யாத இவளீ நீ கரம்பற்றி இழுக்கவேண் டுங் காரணமெனன? இவ்வாறு நிரேதுவாய் அவளது கரத்தைப் பற் றிய குற்றத்தினுல் நீ இனி மண்ணிற்து வனீயிலொளிக்கின்ற மூஷிக மாகக்கடவதென்று சபித்தனர். உடனே அக்கந்தருவராசன் பயந்து சுவாமீ! அடியேன் கிரவுஞ்ச னென்னுமரசன் யான் ஆகாயத்திற் செல்லுகின்றபோது இவரழகைக்கண்டு மோகித்துவந்து கரம்பற்றி னேன். அதுவன்றியான்பாதகஞ் செய்தறியேன். அடியேன் இவர் கரம்பற்றிய பிழையினீப்போறுத்துக் தேவரீர் அடியேற்குக் கொடி த்த சாரித்தினீ நீகுபருவால்வேண்டும், அடியேன் தேவரீரைச்சரண மடைந்தேன். இனி அடியேற்குத தேவரீரையன்றி வேறுதுணீ யில்லை என்று பிரார்த்தினன். அதற்கு விருபபும் வெறுப்பு மற்றசவு பரி முனிவர் மனதிரங்கி ஓ கிரவுஞ்சனே! நெருப்பினுடைய சூடு குளிர்ந்தாலுமநீரினுடைப குளிர்ச்சி வெம்மையானுல், நமதுவாக்கு ஒருகாலத்தும் பொய்ப்பதில்லை. நீ தகாதகாரியத்திற்குடம்பட்டை யாயினும் உடனே நம்மைச்சரணடைந்தனீயாதலால் உனக்குயாம் கிருபையோடு சாபத்தீர்வு சொல்லுகினறோம் கேள், திருமாலீ இடப மாக வூர்ந்தருளிய சிவபிரானுடைய குமாரராகிய விநாயகமூர்த்தியான வர் இன்னுஞ் சிலகாலில் பராசவமுனிவருடையகிரகத்தில் அவதரித் தருளுவர். அப்போது நீ அவருக்குவாகனமாகி, வீண்டுவாதிதேவர் கட்குங் கிடைத்தற்கரிய பாக்கியத்தைப்பெற்று யாவரும்வந்து பணி யும்படியான முதன்மையோடும் முத்தியையும் பெறுவை. போவெ ன்று அனுக்கிரகஞ்செய்தருளினர். அப்பால் மேருகிரியைப்போல மற்றெந்தமேருகிரி உண்டானதென்று சொல்லும்படியாக அக்கிரவுஞ் சன் ஒரு மூஷிகமாகி உலகமெல்லுக் திரிந்துகொண்டிருந்தனன்.

இவற்றுள் வேதமோதல் பிரமயாகம். ஓமம் வளர்த்தல் தெய்வ யாகம். பலியீதல் பூதயாகம். தருப்பணமுடித்தல் பிதிர்யாகம். இரப் போர்க்கு உணவுமுதலிய வீதலே மனுடயாகம்.

இவன் சரிதமிவ்வாறுக, இந்திரனுனவன் தனது சுவர்க்கலோக த்தில் அரசியற்றி வருகின்ற நாளையில், ஓர் நாள் நாரதமுனிவர் அவனி டத்திற்கு வருவதாயினர். அவர்வரவை இந்திரன் தூரத்தேயறிந்து, உடனே தனது சிம்மாதனத்தை விட்டிறங்கி அளவற்றதேவர்கள் தன்னைப் புடைசூழ்ந்துவர அவரை எதிர் கொண்டுபோயழைத்து வந்து ஓர் சிறந்த ஆதனத்திலிருக்கவைத்து மிக்க பேரன்பினோடுங் துதித்துப் பூசனை செய்தனன். அவன்செய்த பூசைக்குந் தோத்தி ரங்கட்கும் நாரதமுனிவா மனமகிழ்ந்து, ஓ தேவராசனே! பூலோகத் தில் ஓர் புதுமையைக்கண்டு இங்குவந்தனம். அப்புதுமையைச் சொ ல்லுமிடத்து உனக்குந்தேவாகட்கும் நன்மை பயப்பதாகவேயிருக் கும். அஃதுயாதெனில் இமயகிரிக்கும் விந்தகிரிக்கும் மத்தியில் ஏமவதி யென்னும் ஒரு நகரமிருக்கின்றது அந்நகரத்திற்கரசன், அபி னந்தனனென்னும் பெயரினையுடையவன், அவன் இப்போது ஓர்பெரி யயாகத்தினைச் செய்யத் தொடங்கினன், அந்த யாகத்திற்கு உன்னை வரிக்காது உனது சொர்க்காதிபோகங்களை தனக்குக்கிடைக்கவேண்டு மென்று குறித்திருக்கின்றனன். மேலும் அந்த யாகத்திற்கு இருத்விக் கள் வந்திருக்கின்றார்கள் இந்நிமிடத்தில அவ்வரசனைச செயிக்காமற் போவையெனில் அவன் செய்யத்தொடங்கிய யாகத்தின் முதலினிற் றனே உனது பதவியை இழந்துபோவை. அதனால உனக்குச் சகல இடர்களும் உண்டாகுமாதலால், விரைவில அதற்கேற்றபடி முயலக் கடவையென்று சொல்லி நாரதமுனிவா எழுந்தருளிப்போயினர். பின் னர் இந்திரன் இதற்கென்செய்ய வல்லோமென்று மாலோசனையிற் றலைப்பட்டவனுகி, அவ்வவர்கள் செய்துவரும பலகருமங்களிலும் முதலில் நமக்குஞ், சந்திரனுக்கும, பிரமதேவனுகும், அவிப்பாகங் கொடுக்க வேண்டுமென்று வேதத்திலும, சுருதியிலும், ஸ்மிருதியி லும், சவுதத்திலும், ஸமார்த்தத்திலும விதிதிருக்க, இதுகாறும் அவ்வாறே யாவருங் கொடுத்துவர இப்போது அம்முறைமையினின் றுந் தப்பி யாகஞ்செய்துவருகின்ற அபினந்தன ராசனைச் சங்கரிக் கத்தக்கவன் உலக மனைத்தையுங்கலக்கி யழிக்கத்தக்க காலரூபியே யல்லாமல் வேறொருவ ரில்லையென்று தன்மனதில் நிசசயஞ்செய்த னன். இவ்வாறு நிச்சயிச்குமுன் அக்காலரூபி யென்போன், அவ்விந் திரனுக்கெதிரில் வந்து நின்றனன்.

அவனை இந்திரன் சிறக்கப்பார்த்து, ஓ காலரூபியே! இந்நிமிடத் தில் அளவற்ற ரூபங்களோடும் பூலோகத்திற் சென்று அபினந்தன ராசனையழித்து அவனசெய்கின்ற யாகத்திற்கும், மற்றுமுள்ளோர் களாற்செய்து வருகின்றயாகஙகட்கும் பலவிக்கினங்களை நாடாத்தி


அழித்துவிடக்கடவை என்று சொல்லியனுப்பினன். உடனே அந்
ரூபியானவன் தனது புருவங்களேநெரித்துக் கோபித்து, அளவற்ற
ரூபங்களேக்கொண்டு பூவுலகத்திற்சென்று அபினந்தன சாசனுடைய
யாகசாலேயில் மிகுந்தகோரத்தினேயிம பிரவேசித்து, அவனேயும்
அவன் யாகத்திற்கு வந்திருக்கின்ற இருதுக்களேயும் நாசஞ் செய்து,
மற்றையோரைஎல்லாந்தன்னேத்தெண்டனிட்டோடும்படியாமூடிக்கி,
அவிர்ப்பாகத்திற்குச் சேகரித்திருந்த பொருள்களேயெல்லாம்அள்ளி
யுண்டு, ஓமகுண்டத்தை யிடித்துத் தள்ளி அதிற்புழுதிகளே நிறப்பி
வித்து, யாகசாலே முழுமைபுந்நாளாக்கி பலபண்டங்களேயமைத்து
வைத்திருந்த பாத்திரங்களே எல்லாம உடைத்தெரித்து, அவ்விடத்தி
னின்று நீங்கிநீக்கூடடங்களே எழுந்து செலலுவதுபோலத் சிசை
கள்தோறுஞ் சென்று ஆங்காங்கு செய்துவருகின்றபாங்களே எல்லா
மழித்து, அந்நியாகசாலேவாகளேயும் நாசமாக்கி எவ்விடங்களிலுங்
தன்பங்களேயே விளேத்துத சிலரை உருமமாய்ச்சென்று தாக்கியும்,
சிலரை உருவமாய்ச்சென்று ஒழித்தும், ஓர்காடிப்போதில் நிசை
முழுவதுஞ்சுழன்றும் வேதாகமமெந்நிகளேயெல்லாம் பேதிக்கச்செய்
தும், இவ்விதமான விசேனங்களே நாடோறுஞ்செய்துவருதனன் இவ்
வாறு காலரூபி செய்துவருகின்ற துன்பங்களினுலே அளவற்ற முனி
வர்கள் ஓரிடத்தில் ஒன்றுகூடி, சகல தேவாசிகளேயும் ஆக்கவும்
அழிக்கவும வல்லதாபர சூத்திரத்தினேத் துதிசெய்வதானர்கள்.

எண்ணிலா ருயிராகளி னிரய பங்கய
நண்ணுநா யகவுயிர் நவிறறு கன்மத்தி
னண்ணுசான் முகியவமல மெங்களபாற
றிண்ணிய விக்கினந் தீர்தல்வேண்டுமே.

பல்வகைப் பூதமும் படைகுமு பண்ணவ
நில்வகை யேனத்தையு நிறுத்து நிக்குண
கொல்வகை செய்தருவ கூடுங்கொற்றவ
புல்வகை விக்கினம புரட்டல்வேண்டுமே.

அங்கமே யுபாங்கமென் றவற்றி னேடுறுங்
துங்கநான் மறைகளுஞ் சுவசமாகிய
வங்கண வடியரேமாவி னுங்கிடய்
பொங்கிய விக்கினம் போக்கல் வேண்டுமே.

இவ்வாறு பலமுறை துதிசெய்து, எத்தகையோராலும் வெல்லக்
கப்படுமிறைவனே! சகலலோகங்களுங்கைக்கும்படியாக இடையூறு
விக்கினங்களேச் செய்துவருகின்ற காலரூபியினுல் அடியேனேயும்



3 கணேசர். 4 உமைசதுர்த்திவிரதம்.

படைத்திருக்கின்றனம். இனி அடியேங்களை அவன்செய்துவருமவி
னங்களி னின்றுமெடுத்தருளல்வேண்டும். அடியேங்கள்
சக்தியற்றவர்களாய், ஆதாரமற்றவர்களாய், நித்திய நைமித்திய கா
மங்களில் ஈனராய், இயலபான ஒழுக்கங்களில் வேறுபட்டவர்களாய்
மயக்கங்கொண்டமனத்தினை யுடையவர்களாய், எலலாப்போகங்க
னையுமிழந்து; தேவீருடையசரணரை விச்தங்களில் அடைக்கலமடை
ச்தோம். ஓ சங்கரா! ஓசயம்புவே! ஓ தற்பரா! வென்று பலமுறைபிரா
ர்த்தித்தார்கள். அதற்கு விஸ்வரூபியாகியும் வியாபகராகிய மிருகேந்
ன்ற விநாயகப்பெருமான் கிருபைசுரக்கு அமமுனிவர்கட் கெதிரில்
அதிரிசிவடிவமாயெழுந்தருளி, ஓ தபோதனர்களே! உங்கள்மனதி
லிருக்கும வேதனைகளையும, பயங்களையும ஒழிமீனகள். இனியாவன்
யுந்துன்பஞ்செய்துவருகின்ற விக்கினனை அடக்கவும், வேதாகமசெந்
கனித்தப்பாதுவளர்க்கவும், அடியார்களும சாதுக்களும் வேண்டிய
வைகளை அருள்செயயவும், மூவுலகங்களையுங்காத்து இரட்சிக்கு
மாகயாம அளவற்ற தவங்களைச செய்திருக்கின்ற வரேணிய ராச்சு
டைய கிருகத்தில அவதரிக்கப்போகின்றனமென்று திருவாய்மலர்
தருளினர். அத்திருவாக்கினை எல்லாமுனிவர்களுஞ் செவிக்கமுதாக்
கொண்டு விநாயகமூர்த்தி யினுடைய திருவுருவைகண்களாற் காணு
தவர்களாயினும், இம்மு சுவமிகளுடைய திருவாகசே என்று மிகுந்த
ஆனந்தத்தினையுடையவர்களாகி, அபபோதே சமல விக்கினங்களையு
மொழித்தவர்போல, விநாயக மூர்த்தியினுடைய திருவருளையே
கடைபபிடித்திருந்தார்கள்.

இவர்கள் சரிதமிவ்வாறாக, பூவுலகிற்றானே பெரியதவங்களை
செய்து நிறைவேற்றினவனுய் தேவர்கள் வழிபடத்தக்க யோக்கி
னுய் திசைகளனைத்தினுஞ்சொல்லுமபடியான கீர்த்தியையுடையவ
னுய் வரேணியனென்னும பெயரினையுடைய ஓரரசனிருந்தான். அவ
னுக்குப்புட்பகையென்னும் ஓர் மனைவியிருந்தனள். இவர்களுக்கு
நாள் ஒருபுதிரப்பேற்றினைவேண்டி அளவற்ற தருமங்களையுந்தானங்
களையும் இடைவிடாது செய்துகொண்டுவருகையில் விநாயக
கப்பெருமானுடைய கிருபையினால் புட்பகைவயிற்றிற் கருவுண்டா
கிப்பத்தாந்திங்களிலகருப்பயாதனை கொண்டு ஓர் புதல்வனைப்பெற்
னள். அப்புகல்வனை விநாயகமூர்த்தியானவர் அங்கிருந்தோர்களு
டன் அவன்னம்மனதிற்கொத்தாமே யொரு சூழ்கையாயிருக்க
அங்குழந்தை மிருந்தமுழகும், யானைவதனமும் மழுமுதலிய ஆயு
தனையேந்தியநான்குதிருக்கரங்களும்ஈண்டதிக்காரமும்பெருத்தவ
யிறும் விளங்கியிருக்கின்றதை அங்கிருந்தவர்கள் பார்த்தழப்பர்

ப்போனார்கள் புட்பகமாத்திரம் அவ்வறையினின்றும் அப்பரற்போ
கக்கூடாதவளாய் மயங்கி பிரசவித்த வேதனையினும் பதின்மடங்கு
அதிகமான வேதனையைப்பொருந்தினவளாய், ஐயோ! புத்திரப்பேறு
வேண்டி அளவற்றபெருந்தவங்களணைத்தையுஞ் செய்துமுடித்த
தோமே அப்படிச்செய்தவெமக்குப்புத்திரப்பேறுகிடைத்தும் மீட்
டுந்தள்ளிவிடத்தக்கதாய் தெய்வமதொடுத்ததே? இதற்கினிச்செய்ய
த்தக்கதென்ன விருக்கின்றதென்று சொல்லிக் கூக்குரலிட்டழுதுக்
கொண்டிருந்தனள். அவ்வழுகைபாசையை வரேணியபராசன் கேட்டு
வந்து, அண்டங்களெல்லாம் அழுவாகவும், அணுக்களெல்லாம்
அண்டங்களாகவுமசெய்யவல்ல விநாயகமூர்த்தியதிரிவிருக்கக்கண்டு,
இப்பிள்ளையால் நமக்கு இடையருமென்று நடுங்கி உடனே சிலவீர
களைக்கூவி இப்பிள்ளையை இவ்வீரனிற்முனே கொண்டுபோய் மடிக்க
ரையில் வைத்து வாருங்களென்று கட்டளையிட்டனன். அக்கட்ட
ளையை அவ்வீரர்கள் தடுக்கக்கூடாதவர்களாகி உடனே அக்குழந்
தையை யெடுத்துக்கொண்டுசென்று பராசவமுனிவரது ஆசிரமத்தி
ற்குச் சமீபத்திலிருக்கின்ற மடுக்கரையிற் சிலதழைகளை முறித்துப்
போட்டு அதன்மீது அக்குழந்தையை வளர்த்தி மீட்டுந் தமதரசனி
டத்திற் போய்ச் சேர்த்தார்கள்.

ஓ சவுனகாதி முனிவர்களே! இவ்வாறு வேதங்களினுச்சியினும்
மாதவத்தர்களினுடைய உள்ளத்தினும், பிரமனுடைய மனத்
தினும் நண்ணுதற்கரிய விநாயகக் கடவுளை, தங்கள் மார்போட
னைத்து ஏந்தி வந்த அவ்வீர கருந்தழைகளுஞ் செய்த தானம்
யாதோ அதனை யறிகிலமிலமே.

கருணை நாயகன் குருவெனக் கடைக்கணித் தருளி
வருவ ஞயினுமி பருவமில் லார்டரு வார்கள்
பொருவிலாதவன் புத்திர ஞய்மனைப் பிறந்துத்
தெருளி லாமையின் வரேணியன் பிரிவிட்டனனே.

கருணை நாயகராகிய கடவுளே ஆசிரியவடிவங்கொண்டு திருவை
புரியவருவராயினும், பரிபக்குவ மில்லாதவர்கள் அக்திருவைக்குப்
பாத்திரராகார்கள். அதுபோலத் தம்மோடொப்பாரு மிக்காருமில்
லாத விநாயமூர்த்தியே தனக்குச்சிறந்த புத்திரனுகவந்து அவதரித்
தும் அப்புத்திரனேஞானமில்லாமையால் வரேணியபராசன் கைவிட்ட
வஞ்சினனன். ஒப்பற்ற விநாயகமூர்த்தியைத் தாங்கப்பெற்ற மகாதவ
த்தினையுடைய அம்மடுக்கரையானது கபிலமுனிவருடைய ஆசிரமத்
தையும் கைலாய வரையையும் ஒக்குமேயன்றி, பிரமன் வாழ்கின்ற

சத்தியலோகமுற் றிருமால்கண்படுகின்ற கூர்ராப்தியும் அதற்கு நிகர
ல்ல அம்மடுக்கரையில் பசிய தழைகளின்மீது விநாயகப்பெருமானை
மூக்குருளி யிருக்குங்காட்சி எவ்வாறிருந்ததெனில் மரகதத்தில்விள
ங்கும் மாணிக்கத்திற்போன்றும் கேசவன் மார்பகத்திருக்குங் கவ
த்துவ மணியைப்போன்றும், கருங்கடலுச்சியிலுதித்துங் கதிரவனீ
ப்போன்றுமிருந்த தன்றி, உமாதேவியினுடைய திருமார்பில் விளை
யாட்டயர்தலைப்போன்றுமிருந்தது யானை-புலி-சிங்கமுதலியகொடி
யமிருகவர்க்கங்களெல்லாம் விநாயகமூர்த்தியினுடைய திருமேனியை
க்கண்டமாத்திரத்தில் மலங்களினின்று நீங்கி மெய்யறிவுதித்து ஓர்ந்
மையளவும் அவ்விடத்தை விட்டு நீங்காமல் ஊணுறக்க முதலியவை
களையுந்துறந்து பாதுகாத்திருந்தன அப்போது எம்பிரானுகிய விநா
யகமூர்த்தியானவர் தமது திருமேனிபிறவினுரியைச் சிறிதெழுப்ப அ
தனுல்கோடிசூரியர்கள் ஒன்றுய் உதயஞ்செய்ததுபோலத் திரிலோக
ங்களிலும் பிரகாசமேலிட்டது. உடனே தேவர்கள் முதலாயினோர்க
ளெல்லாம் அதிசயமாகுமபடி இருள்நீங்கின. சத்த சாகரங்களும்
சத்திக்காமலிருந்தன இவ்வுலகெல்லாம் கருகி அளவற்றமிருகங்
கள் இரைதேடுமாறு தத்தமிடங்களையடைந்தன. சோலைகடோறு
முறங்கியிருந்த பறவைக்கூட்டங்களெல்லாந்திசைகடோறுமெழு
ந்துபறந்துபோயின சந்திரனொளியும் உடுக்களினொளியு மழுங்கிவிட்
டன. தெளிந்த நீரிலிருந்த குமுதங்களினைத்து மிதழ்மூடிக்கொண்
டனன். தங்கள் தங்கள் கூலியைநாடுமே புணர்ந்திருந்த ஆடவரெல்
லாமெழுந்துநித்தியபரமாநிலைசெய்வதானர்கள். இப்பால் அறி
யதவத்தினுல் பாசுவமுனிவர்தமது அமலரைபவிட்டெழுந்து யாம்
சந்திசெய்யுங்காலம் தபபிப்போயிற்றேயென்று பதறிக்கரத்திற் றண்
டுகமண்டலமேந்தி அதிவேகத்தோடும் மடுக்கரையைநோக்கிச் செல்
லுவார், அங்குபசியதழைகளின்மீது வடித்துப்பிரகாசித்துக்கொண்
டிருந்த ஜகத்காரணராகிய விநாயகமூர்த்தியைக் கண்டனர். உடனே
ஆனந்தபரவசங்கொண்டாடினர். நகைத்தார். நிகைத்தார். உடன்மு
ழுவது, மூரோமாஞ்சிதம் பூத்தார் இருவிழிகளினும் ஆனந்தபாஷ்
பஞ்சொரிந்தார். அருகில்வந்து குழந்தையினுடைய அவயவங்களின
யெல்லாம் பார்த்துப் பார்த்து மிகுந்த மனமகிழ்ச்சியாயினர். இவ்
வாறு பாசுவமுனிவர் களிப்பெண்ணுங்கடலிற் கரைகாணமாட்டாத
வராகி, யாம்செய்த தவப்பயனுலன்றே நான்குவேதங்கட்கு மெட்
டாதவித்தகராகிய விநாயகமூர்த்தியே நமக்குக்கிருபைசெய்யும்பொ
ருட்டு இங்ஙனமெழுந்தருளினர். அற்றோ! இம்மூர்த்தியினுடை
மகிமையையறியாதவர்கள் யாரோ இவரை அங்கேகொண்டுவைத்

வைத்துவிட்டார்களே. தரிசித்தவுடன் மனமானது மூன்றற்குஞ் சுகத்தை விரும்பிக்கவல்ல இவரையின்றவர்கள் இங்ஙனம்விட்டுச் சென்றது நாமமுஞ்செய்திருக்கின்ற தவப்பயனேயன்றி வேறில்லை இவ் வெப்பற்றமூர்த்தியை யின்றவர்கட்கு நிகரானபேர்கள் திரிலோகங் களினுமிரார்கள், அப்புண்ணியசீலர்களே தவம்-தானம்-விரதம்-தருமம் முதலிய ஒழுக்கங்க ளனைத்தையுங்குறைவற முடித்தார்கள். என்று இவ்வாறு அனந்தமாகபுகழ்ந்து அக்குழந்தையாகிய விநாயகமூர்த்தியைக் கரத்திலேந்திக் தமது ஆசிரமத்திற்கு மீண்டனர். அச்சமயத்தில் அருணனவன் நமக்கு முன்னே இருளினைகலியச் செய்தவன் யாவனோ அவன திருவடிகளைத்தொழுது உய்வோமென்றெண்ணிவருவான்போலகிழ்த்திசையினுதயமாயினன். அதைத் தமதுஆசிரமத்தினேநோக்கிசென்ற பராசுவமுனிவர்கண்டு மயங்கி, அதற்குமுன்னருண்டான ஒளி இக்குழந்தையினதுதிருமேனியினுண்டாள வொளியேயன்றி வேறல்லவென்று மீட்டுந்தெளிந்து, இது காறும்யாம்செய்துவந்த தவப்பயனேயன்றி விசேஷமானபயன்களையும்பழம்நழுவிபாலில் விழுந்தாற்போல இம்முகத்தியாற் கிடைக்கப்பெறுவேமென்றுமனமகிழ்ந்து, விரைவிற்றமதாசிரமத்தினையடைந்து, தமதுபத்தினியாகிய வீரியவற்சலையைக்கூவி, பெண்ணே! வருத்தமின்றியாம்பெற்ற இக்குழந்தையை வாங்கிக்கொள்ளுகவென்று பரிவோடுஞ் சொல்லினர். கற்பிற்சிறந்த வீரியவற்சலையும், உடனே முன்றினின்கண்வந்து அப்புதநிறனுடைய திவ்வியவடிவங்கொண்டபார்த்தலும் அற்புதங்கொண்டவளாய் முகமலர்ந்து, தனங்கள் விம்மவும், தோள்கள்பதரவும், கண்கள்துடிக்கவுமாகதனது காதலையணங்கினதருமைத்துணைவரே! தேவரீர் இந்த திவ்வியமான குழந்தையை எங்ஙனமிருந்துகொண்டுவந்தீர்? யாவனுதனத்தையுடைய இக்குழந்தையின் திருவுருவம். இதுவேமகத்தான தவங்களினுல் வரும்பயன். இதுவேயோகாதிகளால் தியானிக்கப்படுகின்றவஸ்து இதுவே எல்லாச்சோதிகளையும் உண்டாக்குவதற்கு மூலகாரணம். இதுவேவேதாகம புராணங்களில் கூறப்பட்டிருக்கின்றபொருள். இதுவேபரப்பிரமமென்றுசொல்லப்படுகின்ற நித்தியம். என்று அனந்தமுறைதுதி செய்துதனது கரத்திலேந்திக்கொண்டனள். இவ்வாறு மிகுந்தமனமகிழ்ச்சியோடும் வீரியவற்சலையானவள் அக்குழந்தையைக்கரத்திலேந்திய மாத்திரத்தில் தனது தனங்களில் அமுதஞ்சுரந்து வழிய, அவ்வமுதத்தை அக்குழந்தைக்கு ஊட்டி ளவற்றாள் அறிய தவங்களீச்செய்து நிறைவேற்றிய புட்பகையனவள் அக்குழந்தையை விரும்பாது அறந்திருக்கச் சிறிதும் வேண்டாதிருந்த வீரியவற்

ஓ சவுனகாதி முனிவர்களே! இனி அவன் பிரமாணத்து முன்னம் பிரகஸ்பதி தேவர் கூறியபடி முனிவர்கள் தேவர்கள் பெரியோர்கள் முதலியோராற் பணியத்தக்க மேன்மையைப் பெற்றிருந்த வரலாற்றினையுஞ் சொல்லுவோங் கேட்பிராக இவ்வாறு கயமுகாசுரனவன் அன்பர்க்கெளியராகிய சிவபிரான் அமர்ந்திருந்த மண்டபத்தை இரக்கமில்லாதவனபோலத தள்ளுதலும அங்கிருந்த தேவர்கள் முதலியோரெல்லாம பயந்தார்கள். உல்லாசமாய்ச் சென்று உலாவல் செய்திருந்த உமாதேவியார் தமது பாங்கியரோடும் வந்து யோகத்திலிருந்த கர்த்தருக்கு அதனையறிவித்தனர். உடனே சிவபிரானுக்குக் கோபமுண்டாகி அவ்வசுரனமீது தமது சூலாயுதத்தை விடுத்தனர், அச்சூலமானது அவனுடல் முழுவதும நெருங்கிப் பாய அதனாலவன் சோர்வுறுச் சிவாயநமவென்று சொல்லி நிலத்தில் வீழ்ந்தனன். இவ்வாறு கயமுகாசுரனவன். சோர்ந்து நிலத்தில் வீழ்ந்தபோது சொல்லிய மதுவானது சிவபிரான் செவியிலேறலும உடனே அவருக்கு அவனமீது கிருபையுண்டாகி அச்சோ! கயமுகாசுரன் நம்மைத்தியானிக்கு முள்ளதைத யுடையவனென்றறியாமல் மண்டபதைதத் தள்ளினனெனக கொள்ளேமேயென்று மனதிரங்கி அவள முகதைதை ஆவலோடும பார்த்தருளி அன்பனே! உனக்குவேண்டிய வரங்களைக்கள் தருவோமென்று திருவாய் மலர்ந்தனர். அதைப் பூர்வஞாதத்தினையுடைய கயமுகாசுரன் கேட்டலுஞ் சிவபிரானைப் பணிந்தெழுந்து ஓ கிருபாமூர்த்தியே! தேவரீர் அடியேற்கு அழியாத முதத்தினைக்கொடுதத்தருளல் வேண்டும. மூற்சனனத்தில் அடியேனுகுப பிரகஸ்பதி தேவரும காசுதமுனிவருங் கூறிய வாக்கின்படி இச்சனனதத்தில் சமபவிதததன்றி வேறில்லை அதனால் அடியேற்குத் தேவரீருடைய திருக்காத்ஞடிபடவும் தேவரீருடைய பாதபதமங்களைச சேவிக்கவுங்கிடைத்ததென்று சொல்லினன். அதனைச் சிவபிரான் கேட்டு அவனுக்குச்சாரூப முத்தியினைக்கொடுத்து அவனதுபசியதோலினையுஞ் சிரத்தினையும் உயிரைப் போலக்கைக்கொண்டு தோலினைத் தமது அரையிலுடுத்திச் சிரசைப் பத்தவாஞ்சையிலு லோர்பால் வைத்திருந்தனர். அக்கயமுகாசுரனுடைய தோலைச் சிவபிரான் தரித்தருளியதாலே அதமுதல் அவருக்குக் கிருத்திவாசனென்னுந் திருநாமம் வழங்கிவருகின்றது. அத்திருநாமத்தை யாவரேனும் உச்சரித்தால் அஃதவருக்கு முறுத்துகின்ற சமுசாரவாஞ்சை யென்னும் பெரும்பிணிக்கு மருந்தாகி மெய்ஞ்ஞான மயமாகிய வீட்டைக் கொடுத்தருளும

இப்பால் சத்துருவைப் போலவந்து கயமுகாசுரன் இழித்தல் னிய மண்டபத்தைக் கணங்கள் யாவருங்கூடி எடுத்து மூன்போல வே நிறுத்திவைத்தார்கள். சிவபிரானுமஉமாதேவியும் மனமகிழ்ந்து பழையபடி திருவிளையாடல் செய்துக்கொண்டிருந்தார்கள். இவ் வாறு சுவாமியும், அம்மனும் வனதலிலிருக்குமளவில் சிந்தூரனை வன். யெல்லா வுலகங்களினுஞ் சென்றுலாவி எதிர்த்துவந்தவர்களை யெல்லாந் தழுவி நீருகி மீட்டுந் தனது அரண்மனையில் வந்துகொ லுமண்டபத்துக்குள வீற்றிருந்து மனதில் மிகுந்த கர்வங்கொண்டு பிரமன் விண்டு உருததிரன யென்னும மூவர்களும் நமக்குப் புறந் தந்து திரணமாயொழிந்தார்கள். இந்திரனுதிய தேவர்கள் அரக்கர் கள் தைத்தியர்கள் முதலியோரெல்லாம் நமமைக்கண்டவுடனேடிப் பதுங்கினர்கள். எனைய வீரர்கள் யாவரும் நமது கரத்தாலழிந்தார் கள் உலகமனைதது பஞ்சுக்கொப்பாகவும நாம் அழலுக்கொப்பா கவுமிருக்கின்றோம். என்று சொல்லிக்கொண்டிருந்தனன். அப்போ தது தற்செயலாய் அவனுகுக கேழ்கருும்படியாக ஒரு ஆகாயவாக் குண்டாகி ஓ சிந்தூரா! தணைத தானே வீணிற் புகழ்ந்து கொள் ளுவோனுக்கு உடனே அழிவுவரும. உனகு அழிவுகாலம நேர்ந்த தனல் உன்னை நீயே புகழ்ந்து கொள்ளுகின்றனை நிலையில்லாத வுடலை நிலையாகக் கருதி வன் கர்வத்தினுற் பேகின்றாய் உன்னைக்கொல்லுவ தற்கு உமாதேவி வயிற்றில ஒனருன விகாயகமூர்த்தி கருவாகிவளர் கின்றனர். இன்னுஞ் சின்னாளுள் உனது பெயருமில்லாமல் மூடி ந்து போவாய் என்று சொலலி அடஙகியது. அவையணைத்தையும் சிந்தூரன்கேட்டு மனங்கலங்கி சாவுநேர்ந்தால எப்படி யென்று தய ரங்கொண்டு இவ்வார்த்தைகளைப் பேசினவன் யாவன் இங்கிமிடத் திற் பிடித்து அடிக்கக்கடவீர்களெனறு சொல்லிச சில தூதுவரை யேவினன் அவர்கள் அவ்வாக்கினையைக கடக்கமாட்டாமல் எவ்விட ங்களினும் ஒடித்தேடிப்பார்த்து ஒருவரையுங் காணமல்மீண்டுவந்து விட்டார்கள். இப்பால் சிந்தூரனைவன் நமமைக்கொல்ல வளருகின் றகருவை இப்போதே அறுத்து ஈஸ்வரியைத் துயரப்படுத்த வே ண்டுமென்று நினைத்தவனுய் உடனே தானிருந்த சபையிட்டெழு ந்து கயிலாயவரையிற் போய்த் தேடிக்காணுதவனுகி அவ்விடங்களி லுள்ள மலைகள் திசைகள் முதலியவெல்லாந் தேடிச்சென்றனன் பின்னர் ஈஸ்வரியை யெங்குங்காணுமல் மீட்டும் பூலோகத்திற்கு வந்து வனங்கள் தோறுந்தேடிக்கொண்டு செல்லுகையில் தேவர் கள் முனிவர்கள் முதலியோர வசித்திருக்கும் பரியலிகானகத்தின் றனைக்து அதன் மத்தியிலிருக்கும் பூங்காவில் உமாதேவியார் மீற்

சலியானவள் அதனைபெடுத்து வளர்க்கப்பெற்றேனெனில், அவளது புண்ணியத்திரத்தை யார் அளவிட வல்லவர்கள்.

இவ்வாறு குணங்குறி கடந்த கொள்கையராகிய விநாயகப்பெருமான் பராசுவ முனிவர் ஆசிர்மத்தில் நாளுக்குநாள் வளர்பிறையைப் போல வளர்ந்துவருகின்ற நாளையில், முன்னர் சவுபரிமுனிவருடைய சாபத்தினைப்பெற்ற கிரவுஞ்சனெனனு மூடிகமானது ஒருநாள் அம்முனி புங்கவருடைய ஆசிர்மத்தினருகில்வந்து மலிகளை யகழ்த்திச் சாய்த்தும், சுவர்களைகெல்லித்தள்ளியும், மரங்களைக்கிண்டி வீழ்த்தியும், வேதிகைகுண்ட முதலானவைனைத் தோண்டிப் பறித்தும். அறைகளிலுள்ள வத்திரங்களையும் புத்தகங்களையும் கடித்தும். பாழாக்கிக்கொண்டுவர, அவ்வுபத்திரவங்களைப் பராசுவ முனிவராற் சகிக்கக்கூடாமல் அதற்கென்ன செய்வோமென்று மனதிற் கவலை கொண்டனர். அக்கவலையை விநாயகப்பெருமானிந்து நமது கரத்தினுல் அம்மூடிகத்தைப் படைத்து அதனது கொடுஞ்செய்கைகளை யடக்குவோமென்று கூறி அம்முனிவருடைய கவலையை யொழித்து, உடனே அம்மூடிகத்தின்மீது தனது பாசத்தை ஏவினர் அப்பாச வரவை அம்மூடிகங் கண்டாலும், பூமியைக் கிழித்துக்கொண்டு போய்ப் பாதாளலோகமேழினையும்அழித்துமீடடு மேலெழும்பிவந்து, சொர்க்கலோகம் உருத்திர லோகம் அகினிலோக முதலானவைகளை வலித்துக்கொண்டு சிவலோகபரியந்தஞ் சென்றது. அதுசென்ற விடங்களிலெல்லாம் வீணையப்போல அப்பாசமுங்கூடச்சென்று, அம்மூடிகத்தினுடைய பராக்கிரமங்களெல்லா மொடுங்கும்படியாகப் பிடித்திக்காட்டி விநாயகமூர்த்திக் கெதிராகக்கொண்டுவந்து நிறுத்தி வணங்கியது. அப்போது அம்மூடிகமானது விநாயகமூர்த்தியினுடைய திருமுகத்திற்கு நேராகத்தனது தலையையெடுத்துப்பார்த்து, ஓ சர்வஞ்ஞ மூர்த்தியே! அடியேனைக்கொடியனென்றெண்ணி வதை செய்யவேண்டாம். தேவரீசைச்சரணடைந்த அடியேன் சரிதத்தினைச்சிறிது கேட்டருள்க அடியேன்முன்னங் கந்தருவராசனுகவிருந்தேன். எனதுபெயரைக் கிரவுஞ்சனென்று சொல்லுவார்கள். ஓர் நாள் சவுபரிமுனிவருடைய பத்தினியாகிய மனோமையென்பவள் அழகினைக்கண்டு மோகித்தேன். அதற்கு அம்முனிபுங்கவர் அடியேன்மீது கோபித்துமூடிகமாகச்சபித்தனர் அப்பால் யானவரைச் சரணடைந்தேன் அதனலவருக்கு அடியேன்மீது கிருபைசுரந்து இனி நீ தவத்தர்பெருமானுகிய பராசுவமுனிவராசிர்மத்தில் அவதரிக்கப்போகின்ற விநாயகமூர்த்திக்கு வாகனமாகி எல்லாமேன்மை

ಕೋಯುಮ ಪೆರುವೈ ಯೆன்ಱು ಅதுக்கிரததருளினர். ಅவ்வதுக்கிரகத் தின்படி யே இப்போது தேவரீரைச்சரணடைந்தேன் ஆதலால் தே வரீரடி யேயினை முற்றிலுங் காத்தருள வேண்டுமெனறு பிரார்த்தித் தது. அவைபகீனதகைபும விநாபதமூர்த்திகேடடருளி ஓ வலியிற் சிறநத ஆதமே! யாமு னை நா ரிகதிரகை இதறகு முன்னரேயறி வோமாசலால இபபோது உன்னைகொலலாமற பிடிததுக்கொண்டு வருமபடியாகவே நா ரத பாசகதைவிதிதோம். இனியாதொனறிற் கும் அஞசறக இதினமுகலநா ரதருகிக மேமனமையோடும் வாகன மாக இருகககடவையென ப நிநுவபலாது. உடனே அதன் முதுகில காம ஆரோகணிதது, அதனைகதிக்கினைத்துஞ் செலுத்தி வினாயாடி ஒன்றைகைகதது நா பிடி நிருமபிவிதனர.

இவ்வாறு விநாபகரகடவுளாரபினைப பாருவதகிறநேன பெரி தான வலியினபுடைப முஷிகரூபடாகிதமாகவு வாகனமாகக் கொண்டருளிய விநாயகபிரபப பாபமுனிவா பணிதது, பள் ளஙகண்டி பாய்கின்ற புனலிபோலதகப தபோனபினைபபாய்சசி ஒரு பாரிசமாய் தினறு, ஓலோகாதனே! கொடுஞசெய்கைகளிற சிறநத பாராக்கிரமசாலிபாகிப காலநுபிபன றும பாவிகினஞல் சகலபுவ னஙகளுநகலஙகி ரடுகினறன. அவ்வண கவாமிகள சஞசரிதது உலகஙகளில தேவதாகபிரிசையா விநாயகபூசையருள வேண்டுமென்று பிரார்த்திதனர். அபபகவானும பிரம்தருளுவமென்று விநா யகமூர்த்தி கிருபைசுரநதனர.

இசசரிதமிவ்வாறாக, உலகநதில நிகதிபதமிதகியங்கள் காமி யஙகள எனறு சொலலபபடுகினற யாகமுதலானவைகளை கடகக வொடடாமல யாவரையுநசகாகாலமும உபகதிரவபபடுதது வரு கின்றகாலதது பினனும விகடினனால வசிட்டராதி முனிபுங்கவர்கள யாகாதிகளைச செய்யாதுவிட அதனால இநதிரன் முதலானதேவர் கள அவிர்பபாசங்கிடையாமல வறியராகி பின்னர் அமமுனிவாகளுக தேவர்களுமு ஒன்றுகக்கூடி பிரமதேவனிடத்திற சென்று பணிநது, சுவாமீ! சொல்லவுஞ்சகியாத கொடுமைபினை விளைத்து வருகின்ற விக்கினனைக்கொல்லுமாறு அடியேங்கட்கு ஒருபாயஞ்சொல்லி யரு ளல்வேண்டுமென்று பிரார்த்திததார்கள் அதற்குப பிரமதேவன் சொல்லுவான், அன்பர்களே! அநாதியாகிய அமலானந்த அறிவரூ

யிருக்கின்ற சோதிவடிவான விநாயகமூர்த்தியானவர் சகல லோகங் களையும் காத்தற்பொருட்டு பராசுவமுனிவருடைய ஆசிரமத்தில் அவதரித்திருக்கின்றனர். அகடவடீல நீங்கள் யாவருஞ்சென்று சர ணடைந்து பூசித்து, உங்கள் துன்பங்களோ யெல்லாம்போக்கி இன் பங்களை அடைவீர்களென்று சொல்லினன். அதைசொல்லி இந்திரன் முதலிய தேவர்களும் வசிட்டாதி முனிவர்களுந் சென்றுகுளிரக் கேட்டு, ஆனந்தமாகியிருந்து, பூவுலகத்தில் பராசுவமுனிவருடைய ஆசிரமத்திற்கு வந்தார்கள். உடனே பராசுவமுனிவர்கட்கெல்லாந் தனித்தனி ஆசனங்களது இருக்கச்செய்து பின்னர் மிகுந்தபேரு வகையோடும் அவர்களைப்பார்த்து, 'நாயகர்களே! உங்கள் வரவி னல் அடியேன் குலம்; தவம், முகலியபாவனை கதாபலிதமடைந் தனவென்று முகமனகூறி, உபசரித்தனர். பின்னர் தேவர்களும் முனிவர்களும் அப்பராசவ முனிவனைப் பலவாறு புகழ்ந்து துதி செய்து, அடியேங்களையெலாம் பாலைபோல இடைதா ஆட்கொண்டா வித்தருளாகின்ற ஒளமுன முககல்மூர்த்தியே தேவரீருக்குத்திருக் குமாரனாக அவதரித்திருக்கின்றமையால், அம்மூர்த்தியைத் தரிசித் துப் பூசிக்குமாறும், தேவரீருடைய பாதபதுமங்களைத் தரிசிக்கு மாறும் யாங்களிவ்வருமை இதுவரைதனை, முன்னதாகத் தேவரீ ருடைய தரிசனத்தைக் கிடைக்கபெற்றோம். இனிமேல் கர்த்த ருடைய தரிசனத்திற் கெதிர்பார்க்கின்றனமென்று சொன்னார்கள். இவ்வாறு சொல்லும் விநாயகமூர்த்தி கிருபைசுரந்து அவர்களெதி ரில் மூடிகவாகனத்தின்மீது எழுந்தருளினர். உடனே யாவரும் பயந்தெழுந்து பத்தியோடு பலமுறைபணிந்து, ஓ சகல புவனதார சொருபியே! அடியேங்கள் விக்கினஞ்செய்துநுகின்ற இடையூறுக ளால்மெலிந்து பிரமதேவரிடத்திற் சென்றோம் அவர் எங்கள்வாவை யோசித்து தேவரீருடைய சன்னிதானத்திற் போகும்படி விடை கொடுத்தனுப்பினர், அவ்வாறே அடியேங்கள் தேவரீருடைய திவ் விய சரணவிந்தங்களையடைந்தோம். இனி அடியேங்கள்படுகின்றதுன் பப்பாட்டினை நீக்கியருளல் வேண்டுமென்று பிராத்தித்தார்கள்.

அதற்கு விநாயகமூர்த்தி அருளுசுரந்து, இனி நீங்கள்யாதொன் றிற்கும் அஞ்சவேண்டாமென்று அபாயங்கொடித்து, அவர்களையெல் லாந் தம்மைப்புடைசூழ்ந்து வருமாறு உத்தரவுசெய்து, தாம் தமது மூடிகவாகனத்தைச் செலுத்திகொண்டு விக்கினனிருக்குமிடத்திற் சென்று தம்மோடிவருகின்ற தேவர்களையும் முனிவர்களையும்பார்த்து

ஓ தீனர்களே! நமதுவிரத்தைப்பார்மின்களென்று தமது கரத்திலேந் தியிருக்கின்ற அங்குசத்தையெடுத்து நீ இங்கிமிடத்திற் சென்று பராக்கிரமத்திற் சிறந்த விக்கினனைப்பிடித்துக்கொண்டு வாக்கடவை யென்று கட்டளையிட்டு ஏவினர். உடனே அவ்வங்குசமானது சகல புவனங்களும் அதிரும்படியாகச்சென்று, விக்கினனைச்சூழ்ந்து வளை த்திழுத்துக் கொண்டுவந்து விநாயகப்பெருமான் முன்னர்விட்டது அவ்விக்கினன் ஆகாயத்தையாளாவிய சடைமுடியும் கடைவாயிற் பிறக்கு நிகரானகோரைப்பற்களும் சகல சீவராசிகளும், நடுங்கும் படியான ஏனபவடிவங்களும் விளங்க தேவர்கள் முனிவர்களுடைய எண்ணங்களையெல்லாம் நாசஞ்செய்பவல்ல தனது பராக்கிரமத்தோ டும் விநாயகமூர்த்திக்கெதிராக நின்றான் இவ்வாறு நிற்பவனை விநா யகமூர்த்தி தமது மூடிகவாகனத்தின்மீது இருந்தபடியே நெறித் துப் பார்க்க அப்பார்வையால் விக்கினன்பயந்து இவன்நன்மை இலே சாய் விடிவானல்லன். இவனுடைய வல்லபமெல்லாம் அடியோடு அடங்கிக்கெடும்படி யுத்தஞ்செய்யவேண்டுமென்று தனதருவத்தை மறைத்து யுகமுடிவிலுண்டாகின்ற பிரளயத்தினைப்போலச் சலவடி வங்கொண்டு, அலைகளை வீசி காற்றினைகளினும் பெருகிப்பரந்து பூலோகமுழுவதும் சூழ்ந்திப்போகும்படியாக நிறைந்து, இந்திரலோ கம்-பிரமலோகம்-விஷ்ணுலோகம் முதலிய லோகங்களெல்லாங் கவிழ் ந்துபோம்படியாக மேலோங்கினன். அதைத் தேவர்களெல்லாங் கண்டுபயந்தார்கள். முனிவர்களெல்லாம் இனி நமக்குப்போக்கிட மெங்ஙன மிருக்கின்றதென்று வாடினர்கள். இவ்வாறு விக்கினன் சலப்பிரவாகமாயிருக்குஞ் செயலினை விநாயகமூர்த்தி கண்டு, இவன் சாமார்த்தியம் இதுவாவென்று புன்னகைசெய்து அச்சலப்பிரளப் கையெல்லாம் பானம்பண்ணும்படியாகத் தமது மனத்திலெண்ணி ஒருகரத்தை நீட்டினர் அதைவிக்கினனறிந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்தவனாய், அச்சலவடிவினின்று மாறி ஓர் காக வடிவங்கொண்டு ஓர் மரத்தின்மீது நின்று பர்வதங்களெல்லாம் பொ டிபடும்படியாகவும், சுத்த சாகரங்களும் வரண்டும்போம்படி யாக வும், தனதுசிரகினை விரித்துக்கொண்டு திக்கு யானைகளின் மத்தகங் களெல்லாம் பிளக்கும்படி யாகவும் சூரியன்-சந்திரன்-உடுக்கள்-சுவர் க்கலோக முதலியவைகள் உதிரும்படியாகவும், பேரொலிசெய்து சகல புவனங்களுஞ் செவிடடையச் செய்தனன்.

அப்போது விநாயகமூர்த்தி தமதுகரத்திலிருந்த தாமரை மல ரை யவன்மீதுவிட்டனர். அதையவ்விக்கினன் கண்டவுடன் அக்காக வடிவினின்றுமாறி ஊழிக்காலத்திலுண்டாகின்ற வடவாமுகாக்கினி

யைப்போல வடிவங்கொண்டு, மண்ணுலகம் - விண்ணுலகம்-சமுத்திரம் பூர்வதம் முதலானவைகளெல்லாம் நீறுரும்படி எரித்தான். அப்போது விநாயகமூர்த்தி மழைவடிவாகிப்பொழிந்து அவ்வக்கினியை யவித்தனர் அப்பால்விக்கினன் பிரளயகாலத்திலுண்டாகின்ற சண்டமாருதமும் மழைபுமாக வடிவெடுத்துதுரச சுழன்றுசொரிந்தனன். அப்போது விநாயகக்கடவுள், மேகங்களேயெவி அம்மழையையுரிஞ்சிவிடச்செய்துபின்னர் அளவற்றபர்வதங்களாகத் தாமேயுருக்கொண்டு அச்சண்ட மாருதத்தினையும் வீசிவிரட்டாமலிருத்தினர். அதற்குமேல் விக்கினன் அனந்தமான வச்சிராயுதங்களின வடிவங்கொண்டு இந்திரனுடைய வச்சிராயுதமும் இடிபடடதுபோலப பொடிபட்டுப் போகும்படிபாய்தது விநாயகமூர்த்தி கொண்டிருக்கின்ற மலைவடிவங்களெல்லாஞ் சிறிய பரற்களாகும்படியாக வெதிர்த்து யுத்தஞ் செய்தனன். அபபோது விநாயகமூர்த்தி அமமலைவடிவங்களினின்று ஓர் வேலாயுதத்தை நூதனமாய்சிருட்டித்து, நீ சென்று விக்கினனுடைய உயிரைவாங்கி வாக்கடவையென்று ஏவினர். உடனெ அவ்வேலாயுதமானது சூரியனெளியும்படியாக அட்டதிசைகளிலும் பிரகாசித்து வாயுவேகமுடனெ நூறியபடச்சென்ற வச்சிராயுதங்களேபோல வடிவெடுத்திருக்கின்ற விக்கினனெறி அளவற்ற யுத்தங்களே நடாத்தியது. அதருகுமேல் அவ்விக்கினன். வேலாயுதத்தோடுளதிர்க்க நிர்வாகமில்லாமல்பபரதுவசிராயுதவடிவத்தினின்று மாரித்தனது சுயரூபத்தினைக் கொண்டுவந்து விநாயக மூர்த்தியினுடைய திருவடிகளிற்பணிந்தெழுந்து மிருந்தசாந்தத்தோடு இருகரங்களையுசிமேற்கூப்பி, ஓ சர்வவல்லமையுள்ள கடவுளே! அடியேன் தேவரீரை சரணடைந்தேன். சுவாமிகள்விட்ட வேலாயுதம் அடியேனை சங்கரிக்கவொட்டாமற் காப்பாற்றியருளல் வேண்டுமென்று மீட்டும் பணிந்தனன். அதற்கு விநாயகமூர்த்தியானவர் தமது கோபத்தினை மாற்றிக் கிருபைசுரந்து வேலாயுதத்தினை மீண்டும் சும்மாவரும்படி கட்டளையிட்டனர். அதற்குமேல் விக்கினன் பயமகன்று விநாயகமூர்த்தியினுடைய சமீபத்தில்வந்து துதிசெய்தது.

குறிகுணங் கடந்த புராணமுத்தொழிலுங் குயிற்றிடுங் காரண மூத்தலே, யறிவினையிழந்துமிருந்த மோகத்தர டிடிகளோ டமரெதிர்ந்திறைத்த, வெறியனென்றனையு மடியரோ டொன்றுய் விரவுற வாண்டருள்புரிக, செறிதரும் பிரமசொரூபனே யெங்குந்திகழ்ஞர காரணனேயென்றன்.

ஓ திருபாமூர்த்தியே! ஓ குறிகுணங்கடந்த பூரண! ஓ முழுமுதற்காரணமாகிய முதலே! அடியேன் அறிவில்லாமையினால்

தேவரீர்க்குச் செய்த அபராதத்தினைப் பொறுத்தருளல் வேண்டும் முன்னர் அடியேனைத் தேவேந்திரன் கூவியேவினன். உடனே அடியேன் அளவற்ற விக்கினவடிவங்களைக்கொண்டு சகலலோகங்களையுந் துன்பப்படுத்தினேன் அன்றியும், வெறிகொண்டவரைப்போல சுவாமிகளோடுமெதிர்த்து யுத்தஞ் செய்வதாயினேன் இனி அடியேனைச் சுவாமிகளுடைய அடியார்களுள் ஒருவனுகும்படி கிருபை செய்து ஆதரித்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தான்.

அதற்கு இவ்வுலகத்தில் அனவரும் கொடுமைகளைச் செய்தோர் களாயினும் ஒருக்கால் தம்மையடைந்து சரண்புகுவராயின் அவர் களை விடாமற் காத்தருள்வதை விருதாகக்கொண்டிருக்கின்ற விகாய கமூர்த்தி கடைக்கணித்து, திரிலோகங்களிலும் அளவற்ற கொடு மைகளை நடாத்திவந்தும், பின்னர் தம்மையடைக்கலமாகப் புகுந்த நப் பயமகற்றி,

புரிந்த நின்கொடுமைத் திறந்தினை நோக்கிப் பொங்கிய வெகு ளியாலின்னே, யிரிந்திட நினைத்தா மடைக்கலம் புகுந்தாயாதலினளி க்கிடப் பட்டாய், விரிந்தவை யகத்தினியெடுக்குவகை மேலிட ன்மொழிவினைத்தி, பரிந்தமை நினைப்பார் பணிகுவார் புகழ்வார் பாலொருகா லுணர்ந்தி.

வணங்குதல் புரியார் புகழ்தாரார் நினையார் மலிந்த நஞ்சரித்தி ரங்கேளார், குணங்கொளுமடியார்க் கிடர்களைப் புரிவார் குற்றமுங் கூறுவாரோ, டிணங்குறு வார்களிவர் முதலான விழுதையார் தமக் கெலாமென்று, மணங்குசெய்தவர்பாற் பலவுருவாகி யரசுவீற்றிருமு னிகண்டாய்.

ஓ காலரூபியே! நீ இதுகாலும் செய்துவந்த கொடுமையினால் உன்னைச் சங்கரிப்பதற்கே நினைத்தோம் நீ இப்போது நம்மைச்சரண டைந்தனை யாதலால் உன்னை யழிதோடு விடுத்தனம் இனிநமக்கு உவ கையுண்டாகும் படியாக நடந்துகொள்ளுக நம்மைத்தியானிக்கிறவர் களிடத்திலும் பணிகின்றவர்களிடத்திலுந் துதிசெய்கின்றவர்களிட த்திலும், ஓர்போதும் நெருங்கற்க நம்மை வணங்காதவர்கள் துதியா தவர்கள்-நினையாதவர்கள்-நமது சரித்திரங்களைக் கேளாதவர்கள்-நம து அடியார்கட்கு அபசாரஞ்செய்கின்றவர்கள் அவர்களோடு பழகுகி ன்றவர்கள் அவர்களுடன் கூடுகின்றவர்கள் இன்னும் இத்தன்மைத் தான அயோக்கியங்களை யுடையவர்கள் யாவரேயாயினும் அவர்களி டத்தில் நீ என்றைக்கும் அநேக வடிவங்களாய் நின்று துன்பஞ்

செய்து உனது அதிகாரத்தைச் செலுத்துக இப்போது யாம் கூறிய முறைமைகளிற்றப்பாது நடந்து கொள்வையாயின் நீ யுயிருடன் பிழைத்தனை. இல்லையேல் உடனே மாய்ந்தனை. இதையறிந்து புத்தியோடு நடந்துகொள்ளுகவென்று வரமுகொடுத்தனர்.

இப்பால் அவ்வர மனைத்தையுஞ் சிரமேறகொண்ட விக்கினன் மீட்டும் பணிந்தெழுந்து சுவாமீ அடியேன் ஒருகாலத்துந தேவரீருடைய கட்டளையைக் கடந்து நடவேன் அடியேனுடைய காமத்தையுந் தேவரீருடைய திருநாமத்தோடு தரிதருளல் வேண்டுமென்று பிரார்த்தான். அதறகு விநாயகமூர்த்தி சந்தோஷித்து இது முதல் யாவரும் மூன்னே உனது பெயர்வருமபடியாக நமமை விக்னராஜ விநாயகரென்று துதிசெய்யக்கடவர் அவ்வாறு நமமைத்துதி செய்வோர்களை நீ எக்காலத்திலும அணுகாதிருக்க வென்று திருவாய் மலர்ந்தனர் அதனமீது விகினன பெநமகிழ்ச்சி யுறறவனுகி விநாயகமூர்த்தியை அன்போடு பூசித்து விடைபெறறு அவரிட்டருளிய கட்டளையின்படி துன்மார்க்கரகளை தேடிசசென்று அவர்களிடத்தில வாசமாயினன். தேவாகள் பூமாரி பெய்தார்கள் தேவமாதர்கள் விநாயகமூர்த்திபைப பூசிததாகள் இசசரித்திரகளை எல்லாம் வரேணியராசன் கேட்டு மிகுந்த ஆனநததோடு தனது மனைவியாகிய புட்பகையுடனே வநது சுவாமியைப பல முறைபணிநது பூசித்து, வேண்டியவரகளைப பெறறுச சென்றனன் முனிவர்கள். தேவர்கள் முதலாயினேரும சுவாமியைப பணிநது பூசிதது சகல இஷ்ட காமியார்தத பலகளையும பெற்றுத தத்தமிடஙகளிற சேர்ந்தார்கள். இபபால் விக்கினராசர் மீட்டும பராசுவ முனிவருடைய ஆசிரமத்திற் குவந்து அமமுனிவருக்குந தமமைததாய்போல வளர்த்து வநத அவர் பதினிக்குந தமது பெருங்கருணையினல் .ளவறற வரங்களைத் தநது அவாகளிடதினின்றும விடைபெற்றுச சிவபுரத்திலிருக்கின்ற தமதுலகததைச சேர்ந்து வீறறிருநதருளினர்.

விக்கின விநாயகர் திருவவதாரப் படலம்.

மூற்றிற்று

ஐந்தாவது

மயூரேச விநாயகர்.

திருவவதாரப்படலம்.

கொக்கின திருகு மலைத்தவர் குமரனெனிய விநாயக ரூலகில், விக்கின ராசாகிய முறைமையை விரிதருனம் வியாதமாதவனே, விக்கினராசாகிய வரோ விபன்மயூரேசரா யுலகிற், புக்கின வசுரர் தமை த்தெறுங் கதையும் போற்றெனப் புகலுவான் பிரமன்.

மகாதேவந்திரராகிய சவுனகாதி முனிவர்களிள! விநாயக மூர்த்தி, விக்கினராசர் திருவவதாரங்கொண்டு கிரவுஞ்சனென்னும் அசுரனுகிய மூடிகத்தை வாகனமாபூரந்தருளி, காலரூபியென்னும் விக்கினனே யழித்து, உலகங்களைக் காத்தருளிய திருவினையாடலைச் சொன்னேனம். இப்பால் மயூரேசர் திருவவதாரங்கொண்டு கெய்தருளிய திருவினையாடலைச் சொல்லுவோம் கேட்பீராக.

முன்னெரு கற்பத்தில் பிரமதேவனனவன் சிவபெருமானுடைய அநுக்கிரகத்தினுல் விண்டினுடைய நாபிக்கமலத்திலுதித்து, வேதாகமபுராணங்களே எல்லாஞ் சிவபிரான் திருவாய் மலர்ந்தருளக்கேட்டு அம்முறையின்படி சகல லோகங்களையுஞ் சிருட்டிசெய்து, அவ்வேதாகமபுராணங்கள் எழுதப்பட்டிருக்கின்ற புத்தகங்களே நாடோறும் பூசைசெய்து வந்தனன். அபபிரமனது சிருட்டியினுண்டான தேவர்களும், அசுரர்களுந், ஒரு காலத்தில் மிரோதங்கொண்டு, நெடுநாள் மலைந்து யுத்தஞ் செய்தார்கள். பின்னர் தேவர்களெல்லாம் அசுரர்களோடு நீடித்து யுத்தஞ் செய்யச சக்தியற்றவர்களாய்த் தங்களுள்ளத்தில் ஓர் துணிவையாலோசித்து வேதமனுக்களைப் படைகளாக்கி, அப்படைகளே பிரமாஸ்திரத்தேதிவகூட்டி அவர்கள்மீதுப்பிரயோகித்தார்கள். அதனுல் அவ்வசுரர்கள் வலியற்றவளாகி மானத்தையும் ஆயுதங்களையு மிழந்து போர்க்களத்தினின்றும் ஓடி அபசயத்தினுல்மிகவும் வாட்டமுற்றுத் தங்களுக்கு எப்பொழுதும் அடையாறுத சத்துருக்களான தேவர்களே எக்காலத்திற் செயிக்கும்படி நேருமென்று உள்ளத்தில் வெஞ்சினங கொண்டிருந்தார்கள். அவ்வாறு சிலநாள் கழித்த பின்பு ஓ ரவுணன் சங்கினைப்போல வடிவுடையவனும், மிகுந்த பராக்கிரமசாலியாய், அளவற்றவரங்களைப் பெற்றவனும், சங்காசுரனென்னும் பெயரினனுய் விளங்கியிருந்தனன் அவனுக்கினேவனுகிய கமலாசுரனென்பவன், தான் பெற்றிருக்கின்ற பராக்கிரமத்தினும் வரத்தினுந்தன் தமையனிலிடப் பதின்மடங்கதிக

முன்னவனுங், எல்லாமாயைகளினுஞ் சாமார்த்தியனுமே யிருந்தனன், அவனவ்வாறிருந்தும தன்தமையனுடைய கட்டளையைக்கடந்து ஓர் காரியமுஞ்செல்வானல்லன், இவர்களிருவரும உடலும் உயிரும்போ லமருவியிருந்தார்கள். அவாகளே முன்னருதேவர்களால் அபசெயப் பட்டிருந்த அசுராகளெல்லாமடைக்கலம புகுந்து, ஓ மித்திரர்களே! நீங்களும் யாங்களுமம ஒருருலதனானமேரு? எங்கட்குண்டான இழி வுதுயரமும உங்கடகிலலேயோ? முன்னாதேவர்கள எங்களோடி யுத்தஞ்செய்து தலிபசமெய்தாக ளாதலால, அவர்களே நீங்கள், எவ்விதத திலேனும வெலலலவேமையிம. அவாகடகு வேதமனுக் களே ஆயுதங்களாக விருகினறன அவரேவகபுதகதமோ பிரம தேவனிடததிலிருகின்றது அகாமாகபிரமனனே அபகரிக்க வேண்டுமெனறு முறையிடடாகள அவைபரனதையுஞ் சங்கா சுரனகேட்டு உடனே தனதுகமபிபாகிய கமலாசுரனபபார்த்து, நீ இததினம அபபுதகதகதை இங்கேவருமபடி செய்யகடவையென்று ஆக்கியாபித்தான். அமமாதகிரதத்தில கமலாசுரனெழுது தனது மாயையினால் அநுபியாகிய பிரமனிருகுமிடதகிற சென்றனன். அபபோது அபிரமன வேதபுததகதை தனக்கெதிரேவைத் துக்கொண்டு சிவதியானததினுல யோகநிதிரை செய்துகொண்டிரு ந்தனன் அச்சமயததில அபபாதகன அவ்வேதபுததகத்தைக் கைக் கொண்டுவருது தனது தமையன முன்னவைதருனன. அவன் அப புததகத்தைக கொணடுபோய்க கடலிலொளிததுவைதுதக் காவல் செய்தான். வேதமுழுவதுங காவலிலகபபடுக கொண்டமையால் மூவுலகுங்களிலும அவ்வேதநிகா ழாகமலலாமல யாவருக்கும் வறுமைகளும, இடாகளும மிகுதி வருணசிரமாதி நியதிகளெல் லாம்மாறுபடடு, பாவசெய்கைகள மிகுதிபாயுண்டாயின.

பின்னா பிரமன நெடுநாள்சென்று யோக நிதிரையைவிட்டு கண்களைவிழிததான். அபபோது தனகெதிரிலவைதிருந்த வேத புத்தகத்தைகாணாதவனுகி மிகக துயரததினை யடைநது, பின்னர் அதுசென்ற வலாறறிந்ததனது ஞானநோக்கினுல அறிநது கொ ண்டு, அந்தோ! முனனா சிவபிரான நம்மீது கிருபைசுரநது அருளிச் செய்த வேதபுத்தகமே போய்விட்டால் இனிநமக்கு என்னசெய விருக்கின்றது? இனி நமதுயிரைக்காத்து எனனபயன் இனி நமது கடபபாடு என்னுகும் இனி நமது சிருட்டித்தொழில்தான் எவ்வாறு நடக்கும்? நமதுவிழிகள் ஒளியவிருப்பினும் மறைகளொளியவிருக் கும்படி வாய்த்ததேயென்று மனம் வருந்தி, உடனே திருப்பா,

கடவுள வாழ்

னன். அப்போது விண்டுவானவர் தமது யோகநித்திரையினின்று நீங்காதிருப்பக்கண்டு பின்னர் கைலாயவரையை நோக்கிச்சென்று அடியார்களுடைய மலபாசங்களை யொழித்தாள வல்ல சிவபிரானுடைய திருவடிகளிற சாஷ்டாங்கமாக வணங்கிப் பலமுறை துதி செய்து நின்றனன். அவ்வாறு நிற்பவனைச சிவபிரான் பார்த்தருளி ஓ வாணிகேளவனே ! நீ இங்ஙனம வந்தகாரியம் யாதென்று வினவினர் அதற்குபபிரமன் சொல்லுவான் சுவாமி ! யான் தேவரீரைத் தியானஞ்செய்துகொண்டு யோகநித்திரையிலிருக்கின்ற சமயம்பார்த்து என் முன்னா வைத்திருந்த வேதபுத்தகங்களையெல்லாம் சங்காசுரன் கொண்டுபோய்க் கடலுக்குள்ளே வைத்துக் காவல் செய்திருக்கின்றனன். அக்கடலிற் பள்ளிகொண்டிருக்கின்ற திருமாலிடத்திற்குச சென்றேன அவர் கமது யோகநித்திரையில் நின்றுநீங்காதிருக்கின்றனர். அதனை உடனே தேவரீரிடத்திற்கு வந்தேன். இதுவே எனது வரவின் காரணமாகும் ஒளிர்தேவரீர் அவ்வசுரனைச் சங்கரித்து அவ்வேதபுத்தகங்களை கைக்கொண்டு முனிவர்கள் தேவர்கள் முதலாயினோர் பதினாலு ஜன்பாபாட்டினை நீக்கி அடியேனைக் காத்தருளல்வேண்டுமென்று திருபாதங்களை. அவையனைத்தையுஞ் சிவபிரான் கேட்டு, ஓ பிரமதேவனே! திருபபாற்கடலிற் பள்ளிகொண்டிருக்கின்ற கேசவன் இன்னுஞ் சிலதினத்தில் தனது நித்திரையை விட்டெழுந்திருபபன். உடனே அரசனகாசுரனைக் கொண்டு வேதபுத்தகங்களை யாவருக்கு முதலாவனென்று திருவாய் மலர்ந்தனர். அவ்வாத்தையைக் கேட்டவுடன பிரமன் பூமியில் வீழ்ந்து மூர்ச்சையாகிச் சிறிது நேரமசைவற்றிருந்து. மீட்டுந் தெளிந்து சிவபிரானைப் பலமுறை பணிந்தெழுந்து ஓ சகல லோகநாயகனே! பாற்கடலில் நித்திரை செய்கின்றவர் விழிபபதெக்காலம்! சங்காசுரனழிவதெக்காலம்? யான் வேத புத்தகத்தைப் பெறுவதெக்காலம்? முனிவர்கள் தேவர்கள் முதலாயினோர் துயரம் நீங்குவதெக்காலம்? நால்வகை வருணத்தாரும் அவ்வவர் கட்குக் கூறிய கரும நெறியே நடப்பதெக்காலம்? சுவாமிகள திருவாய் மலர்ந்தருளிய அவ்வேதத்தினைத் தினந்தோறும பூசித்து வருகின்ற நியமத்தினின்றும் தப்பிய எளியேனுடைய கவலை நீங்குவ தெக்காலம்? இவையனைத்தும் சுவாமிகள் திருவுளத்திற்கு விளக்கமாயிருந்தும் வாய்விட்டழுங் குழந்தைக்கு வாழைக்கனியினைக் காட்டுமாறுபோல அடியேற்கு ஓர் திருப்தி சொல்லியனுப்பிவிடலாமென்று நினைத்தோ தேவரீர் இவ்வாறு திருவாய் மலர்ந்தருளியதென்று மனமயங்கிப் பயந்து அழுதனன். அவ்வாறு அழுது நிற்பவனைச் சிவபெருமான் புன்னகையோடும்

பார்த்தருளி அவன மீது தமது கிருபா ரோகத்தினைச் செலுத்தி பிரமனே! இனி நீ ஒனறறகும அஞசறகயாம சொலலுவதை ஞாப கத்தோடு கேடடிடுக நீ முறறகூறிய சஙகாசுரனே யன்றி அவனுக் கினைய கமலாசுரன எனபவன ஒருவனிருகினறனன அவனே சகல லோகங்களையு முண்ணறதறகாக பராசரமதறதை யுடையவன், தனது மாயையினலும, வரகதினலும முனிவாசள தேவாகள பெரியோர் கள் முதலாயினோரைப பசைகதினபஞ செயகறகாக கொடியவன். அழலுகு மிஞசிபி கோபகறதை யுடைபவன அவனைகொல்லுவத றகு ஆயிரம உருததிராகள ஒருங்மே கூடினலும பகினபிரம விண் டிகள ஒரு மிகசச ரோசகாலும இலடசம பிரமதேவாகள ஒன்றுய் விரோதிததாலும ஓ நகாலகதலும அவனைக கொலல மாடடாரகள். அவன் உயிரோடிருகினறவரையில அவன தமையனை சஙகாசுரனை வெலலுவதறகு விணடுலினு லாலகெ று ஆகலால அடிததோர்க ளுகசுச சகல விடாகளையும போகி ஆரிகவலலவா விகனைராச ராகும. நீயவரிடகறற சென று சரணடைவையாயின இபபோதே உலகமுழுவதும வேதாகமபுராணஙகளை வழஙகிபநலுவா எனறாத் யுதஞ செபதுவருகினற பர கசிபாசகினபுடைய கமலாசுரனுஞ் சஙகரிபபா சகலலோகதறகும இனபகாகை கொடுபபவா பின்னர் கேசவன சஙகாசுரனைக கொனறு, நீ மிதிகினம யெமததோடு பூசி தறவரத வேதபுதகஙகளைக கொணடுவாது உனகுக கொடுதறடி வன இனியுனது சுயாதகதை விடடுவிடர கடவையெனறு திருவாய் மலாநதனா

இவவாறு சிவபிரான சொலலாகிப அபிதகதைப பிரமன பான ஞசெய்தவுனபு மிகுநத ஆனநதக களிபபோடு தனது லோகதறற சென்று பதுமாசனதலிலிருந், லிகுனை ராஜருடைய திருவுருவத னைமனதிற றியானிதது, அவரது ஏகாடசர மநதிரதகதை செபஞ செய்து கொணடு யோகதலிலிருநதனனை ஆதலோகதறறகு விநாய கமூாதறதி கிருபை சுரநது பரசு - கமலம- பாசம - அஙகுசமெனனுட இவைகளேத தாஙகியிருகினற காணகு திருகரஙகளோடும திரிநே தறதிரஙகள விளஙகுமபடியாக இருமருஙகினுஞ சிதறிபுதறகள் சமே தராய்ச சிஙகவாகன மூாநது பிரதறதியடசமாயினா. உடனே பிரமன் விழிதறதெழுநது மனமுருகி ஆனநதககண்ணீர சொரிநது, அடியற்ற மரம்போலச சாஷ்டாஙகமாக விழுநது மீடடுமெழாதபடி பூமியிற் கிடந்தனன். அவவாறு கிடபபவனை விநாயகமூர்த்தி கிருபையோடும் பார்த்து, தமது திருக்கரததால் அவன் கரத்தைப பிடித்தெழுப்பி, பிரமனே! வேதாகமபுராணஙகளென்று சொல்லப்படுகினற அமுது

ன்றும் நமது முகத்தில் மூன்று கண்களாகவிருந்து பிரகாசிக்கின்
றன அவைகளே நீ இறந்துபோய் விட்டதாக நினைபற்ற அவைகளைக்
குறித்த இனியதொரு துயரமுங் கொள்ளற்காக அவைகளைப்
பழையபடி லோகங்களிற் பிரகாசிக்கச் செய்குவம். தேவர்கள் மூனி
வர்கள் மனிதர்கள் முதலாயினேருடைய துயரம் நீங்குமாறு இப்
போதே யாம் பூலோகத்திற்சென்று கமலாகரனைச் சங்கரிப்போம்
பின்னர் கேசவன் தனது நித்திரையினின்று மெழுந்தவுடன் நமது
கிருபையினல் அவன் தமையனுகிய சங்கசுரனைக்கொல்லுவன். ஆத
லால் இனி உனது கவலைகளை யொழிதது சுகதோஷமாயிருக்கக் கட
வையென்று திருவாய்மலர்ந்து, உடனே விநாயக மூர்த்திபானவர்
பிராமண வடிவங்கொண்டு வேதாகமபுராணங்களை எழுதியிருக்கின்ற
ஓர் புத்தகத்தை புண்டாக்கி அவைகளைத் தமது தோளின்மீதேற்
றிச் சீடர்கள் ஆயிரம்பேர் தம்மைப் புடைசூழ்ந்து வரும்படி அளவ
ற்ற சூரியர்கள் ஏக காலத்திலுதயஞ் செய்தது போல் ஆகாயத்தினி
ன்றும் பூலோகத்திலிறங்கி வந்தனர் அவ்வமயை சுகுசர ஆசிரமத்தில்
வசித்திருக்கின்ற முனிவர சமூகங்களறிந்து அளவற்ற அந்தணர்க
ளுடைய பிரகாசதேஜாகங்கண்டு, இப்பிரகாசம் எங்கன முதித்து
இங்ஙனம் வருகின்ற தென்று இமைபார் நாட்டத்தினராய்ப் பார்த்
துக்கொண்டிருந்தார்கள் பின்னர் அந்தணராய் எழுந்தருளிய விநா
யகமூர்த்தியானவர் தமது திருக்கூட்டத்தோடும் அவ்வாசிரமத்தை
யடைந்தனர் உடனே ஸ்நாம்-சந்தி-செபம் ஓமம் வேதாத்தியயனம்.
தேவபூசை-அதிதிபூசை - தைச்சுவதேவம் என்று சொல்லப்பட்ட
நித்திய கருமங்களெட்டினையுந் தவருது, பல இடையூறுகளினுந்தீ
ரத்தினு மூழ்கியிருந்த முனிவர்களெல்லாம் உய்ந்தோம். உய்ந்தோ
மென்று கூத்தாடி, வெய்யிலால் வாட்டமுற்றிருந்த பயிர்களெல்லா
மழைபொழியக் கண்டதுபோல மனகிழ்ந்து, சீடர் கூட்டத்தோடு
மெழுந்தருளிவந்த அந்தணர் பெருமானுடைய திருவடிகளில் பல்
முறை சாஷ்டாங்கமாக வணங்கி ஆனந்த பரவசங்கொண்டு கைகொ
ட்டிகும் பிட்டு, இதனிசை சொல்லுவதாயினர்கள் ஓ அடியேங்கள்
தவத்தின்பேறுக வெழுந்தருளிய வேதவித்தகரோடாடோறும் இடை
யூறுகள் செய்துவருகிற கமலாசுரனல் அடியேங்கள் பலசடங்கலி
லுழன்று ஆசார மூதலியவைகளை யிழந்து மசசினேயடைந்திருந்தோ
ம். இன்று தேவரீரைக் காணத்தக்கபேறு அடியேங்கட்குக் கிடைத்
தினலில இப்போதே அவ்விடையூறுக ளனைத்தையும் நீக்கிச் சகல
பாக்கியங்களையும் பெற்றோம். பூருவதவ லடியேங்கள் பெரிதான
தவங்களைச் செய்திருந்தடியால் இச்சனனத்தில் தேவரீரைக் காணு
ம்படியான சம்பந்தங் கிடைத்தது அடியேங்கள் எளிதில் கடைத்

தேறுமாறு இங்ஙன மெழுந்தருளிய தேவரீர் பூர்வம்வரித்திருந்த லம்யாது? இப்போது இங்ஙனங்கிருபையோடுமெழுந்தருளியதாரண மென்ன? அதனே அடியேங்கட்குத் திருவாய் மலர்ந்தருள வேண்டு மென்று பிரார்த்தித்தார்கள்.

அதற்கு அந்தணவடிவங்கொண்டெழுந்தருளிய விநாயக்மூர்த் தியானவர் திருபைசுரத்தி. ஓ தவத்தர்களே! உலகத்தில் அவ்வியகல்வியங்கள் சிறிதுமில்லாது நித்தியநைமித்தியமுதலிய கருமங்கள் நின்றிருப்பதை யாமறிந்து, வேதமுதலான சகல நூல்களும் எழுதப்பட்டிருக்கின்ற புத்தகங்களைக் கொண்டுவந்தோம். இவைகளை நீங்கள்வைத்துக்கொண்டு சகலகிரியைகளே முன்போலவே செய்து கொள்ளக்கடவீர்கள். நமது நாமத்தை மல்லாலரென்று சகல சரஸ் திரங்களுங் கூறும் மூவுலகத்தாரும் அப்பெயரே இயம்புவார்கள். நமக்கு இவ்விடத்தில் ஓ நிருக்கைத்து, உங்கள்கவலைகளனேத்தையும் நீங்கிப் பேரின்ப முற்றிருப்பீர்களென்று திருவாய் மலர்ந்தனர். அதைக் கவுதமர் முதலிய முனிபுங்கவர்கள் கேட்டு மனமகிழ்ந்து, நாம் அளவற்ற தவங்களினுல் பிரார்த்தித்துப் பெறத்தக்க வரம் யாதோ அதனேஇவ்வந்தணர்பெருமானே கொடுத்தருளினென்று ஆனந்தமுற்று. அவர் வசித்திருப்பதற் கேற்ற ஓர்விடுதியைத் தெரிந்து கொடுத்து, சகல துயரங்களினின்று நீங்கினவர்களாய்ச் சிலர் பூர்வத்தில் வேதாகமபுராணங்களேயுண்டாக்கியபரம்பொருளே யிவரென்று துதிசெய்தார்கள் சிலர் அவைகளே அடியேங்கட்குத் தேவரீர் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்றுபிரார்த்தித்தார்கள். சிலர் அவரை நான்குவேதங்களேயுங்கிரமமாகச் சொல்லக்கேட்டு ஆனந்தித்தார்கள். சிலர் அவ்வேதங்களினுடைய உண்மைப்பொருள்களேயுங்கேட்டே சந்தேகநிவர்த்திசெய்துக்கொண்டாகள். சிலர் சாத்திரிசாரணையினுல் திரிபதார்த்தங்களினுடைய நிச்சயம் தெரிந்து கொண்டார்கள். சிலர் புராணங்களேயெல்லாம் ஆதியோடந்தமாக வினவிப்பேரின்ப மடைந்தார்கள். சிலர் தாங்கள் கேட்டவாறு மற்றையருக்கும் போதனே செய்துக்கொண் டிருந்தார்கள்.

இவ்வாறு அவ்வாசிரமத்திலிருந்த முனிவர்களெல்லாம் மல்லாலருடைய திருவடிகளேத் தினந்தோறும்பணிந்து அவரால் வேத முதலான சகல நூல்களேயும் வரன்முறையாகக் கேட்டுத் தெரிந்து கொண்டு அவைகளேத் தங்கடங்களுடைய சீடர்கட்குத் தாங்களே ஓதுவித்து அவர்களால் உலக முழுதும் அவைகளேப் பரவச்செய்து யாவருஞ் சகல கருமங்களேயும் நாடோறும் பூர்த்தியாகச் செய்துவி

கொண்டு சந்தோஷமாயிருந்தார்கள். இப்பால் பிரமனுடைய மூன்னர் சிவபெருமான் தனக்கருளிச்செய்த வேதநூலைப் பிரதிதினம் பூசித்ததற்கு உண்டாகிய இடையூற்றினை இன்னும் நீக்கிக்கொள்ளாத சிறிய கவலையையுடையவராயினும் அவ்வேதகெறிகள் எங்குஞ் செழித்தோங்கி நடந்துவருவதினால் தான் பேரானந்தமூர்த்தி சதாகாலமும் விநாயகமூர்த்தியைத் தியானஞ்செய்து வந்தனன். இவ்வாறு வேதாகபுராணங்கள் உலகமனைத்தும் பரவிப்பிரகாசமும் நிருப்பதை உய்யும்வகையுணராத கமலாசுரனறிந்து தனது தமையனுகிய சங்காசுரனையடைந்து, அண்ணலே! யாம் வேத முதலான வைகளை யெல்லாம் அபகரித்தும் வீணியிற்று, அஃ தெவ்வாறெனில் சுந்தர ஆசிரமத்தில ஓரந்தணன் அவைகளைக் கொணர்ந்து வந்தான். அதனால் இரவியைக்கண்ட இருளைப்போல அந்தத் வருணச்சிரம தருமங்கள் குறைவில்லாமல நிறைவேறி வருகின்றன. அவ்வவர்கள் யாகாதி விரதங்களைச்செய்து அவிர்ப்பாகத்தை வருவதினால், தேவர்களெலலாம் அவ்வவிப்பாகங்களை யேற்றுப் பூரித்திருக்கின்றார்கள் இனி அதனைதேவர்களும் விரதியரும் நம்மை என்னமாய் மதிப்பார்கள், இவ்வுலகத் தள்ளோர்தான் என்னமாய் மதிப்பார்கள்! சிறியோர்களுங் கண்டு நகைக்கும்படியான பழிப்பினுக் காளாயினேம் ஓர் காரியத்தைத் திண்ணமோடி செய்யாதிருப்பதெபெருமை அப்படிச்செய்தும் அதிற் பிழைநேருமாயின் அதற்கு மிக்க சிறுமைவேறென்ன விருக்கிறதென்று துயரமுற்றுச் சொன்னன். அதனைச் சங்காசுரன் கேட்டு, மெய்குலுங்கநகைத்து உண்மை பதைக்கும்படியாக இருவிழிகளையும் வேறுகாட்டி தம்பியே ஏன் வீணில் மயங்குகின்றனை மிகுந்த வயிரமான பதார்த்தங்களைச் சேதித்த ஓராயுதத்திற்கு இளம்புல்லைச் சேதிப்பதும் அரிதோ [illegible] ரன்-பிரமன் விண்டு முதலாயினேரும் நமக்கு நிகராகமாட்டார்களே! மனிகடோறஞ் சென்று பிச்சையேற்கின்ற ஓரந்தணனை நமக்கு நிகராகுவன் நீ விரைவில் அவனைக்கொன்று அவன் வைத்திருக்கின்ற வேதநூல்களைக்கைக்கொள்ளுகவென்று விடைகொடுத்தனன். உடனே கமலாசுரன்காட்டைநோக்கிச்செல்லுங் கடுங்கனலிப்போல் வெழுந்து வேவுகாரர்களையழைத்து நமதசுரர்களசேனைகளும் யுத்தத்திற்கா யுத்தமாயிருக்கும்படி வள்ளுவனைக்கொண்டுமுரசரைவித்தலும், சங்காசுரனுடைய அரண்மனைவாயிலுக்குமுன் அளவற்ற வீரர்கள் இரதகஜ துரகபதாதிகளாய் வந்து சேர்ந்தார்கள் அதற்குமேல் கமலாசுரனுவன் ஸ்நானபான முதலிய வைகளைச் செய்து ஆடையாபரணங்களை தரித்துக்கொண்டு தம்

பைரவேயினச் சூழ அரமனைவாயிலில் நின்று புத்தனுன்னுத்தனுப் வெளிக்கொண்டு தனது சேனைசமூகத்தில் வந்து அவர்க்கு வீரர்கட் கேற்ற பின்னும் அளவற்ற ரதங்களையுங்-கஜங்களையும்-பரிகளையும்-பணங்களையும்-உதவிசெய்து தானுங் குதிரைமீ தாரோகணித்து, இலற்றிச்சக்கம்-பேரிகை முதலானவைகள் சத்திக்கவும், மங்கல கீதங்கள்முழங்கவும், மரகதர்வீருதெடுத்துக்கூறவும்குடை-கொடி-சூஞ்ச முதலானவைகள் இருமருங்கினும் நெருங்கவும், தூதர்கள் முன்னதாய் ஓடவுமாக யுகாந்தவெள்ளத்திலெழுகின்ற வடவா முகாக்கினியைப்போலச் சகலசேனை சமுத்திரங்களுந்தன்னேப்புலை சூழ்ந்து வரும்படி சுந்தர ஆசிரமத்தைநோக்கிச்சென்றனன். அப் போது அவ்வாசிரமத்துள்ள முனிவர்கட் கெல்லாங்கேட்கும்படி ஒரு ஆகாயவாக்கானது உங்களேயும்மல்லாலரையு நெருங்கிப்போர் செய்ய அதிகவுக்கிரத்தோடு கமலாசுரன் வருகின்றன் சாக்ரதை யாயிருங்கள் என்றுண்டாயது, அவ்வாக்கினைக்கேட்டமாத்திரத்தில் முனிவர்களெல்லாம் பயந்துமல்லாலரிடத்திற்போய்ப்புடைசூழ்ந்து பலமுறை பணிந்தெழுந்து கைகூப்பி, சுவாமி! எவ்வளவேனும் இர க்கமில்லாமல் சகலலோகங்களினுந் துன்பஞ்செய்துவருகின்றகம லாசுர னென்பவன் ஆலகாலவிடத்தினேப்போல அடியேங்களையெல் லாஞ் சுவளமாகக்கொள்ளும் பொருட்டுச் சதுரங்கசேனைகளோடும் வெளிப்பட்டு வருகின்றனன் அப்பாதகனுல். அடியேங்கட்குண்டா னபயங்கரத்தையாவர் நீக்கவல்லார்கள் இனி அடியேங்கள் யாவரைச் சரணடைவோம் எங்ஙனமேனும் தப்பிஒடிச்செல்லுவதற்கும்ஓர்வழி யையுங்காணேம். ஐயோ? இதற்கென்னசெய்யவல்லோம்! அக்கம லாசுரனேச்சங்கரிக்கத்தக்கவர்கள் யாவரிருக்கின்றாரென்று சொ ல்லீர்களில் நீர்சிக்தும் படியாக யாவரும் மனமொத்துபுலம்பினு ர்கள்

இவ்வாறுபயந்து புலம்புகின்றமுனிவர்களேமல்லாலராக வந்த ...யகப்பெருமான்கிருபையோடும்பார்த்து ஓ-தவசீலர்களே! நீங் கள்யாவரும் என்பின்னே வந்திருக்கக்கடவீர்கள் ஓர்காகமிருக்கு மிடத்தில் அளவற்ற எலிக்கூட்டங்கள் கடல்போலநெருங்கிவந்தா லும் அந்காகத்தைவெல்லமாட்டா, இனியென்னே ஒரேழைப்பிரா மணனென்றெண்ணுதீர்கள், எனது பராக்கிரமத்தை நீங்களே பார் மின்களென்று சொல்லி நினைத்தனர். உடனேதமது மாயையினல் அளவற்றசேனைகள் ஆயுதபாணிகளாயும் வீரகண்டாமணியைத் தரி த்த கால்களேயுடையவர்களாயும் தமது காற்றுகளினுல் கடல்களே யெல்லாந்தக்கவல்ல பெருங்கூட்டத்தினராயும் அண்டகடாகங்களே எல்லாம்பொடிசெய்யத்தக்க ஆண்மையினும் பராக்கிரமத்தினும்

மிகுந்தவர்களாயும் உண்டானார்கள். அளவற்ற வாத்தியங்கள்முழங் கின, குடைகொடி முதலிய சின்னங்கள் எத்திசைகளிலும் நெருங்கி எங்கெங்கும் விருதுகள்பாடினர்கள். அச்சேனைசமுத்திரங்களிலுண் டானஓசையான துயிரளயகாலத்திலுண்டாகுங் கடலொலியினுமிகு த்துச் சத்தித்தது. இச்சேனைகளெயன்றி வேறுவேறான அளவுற்ற வடிவங்களோடு அத்திர சத்திரமுதலிய ஆயுதங்களைத்தாக்கியிருக் கின்ற நால்வகைசேனைகளும் எண்ணிறந்தனவாக உண்டாயின. பின்னரிச்சேனைகள்யாவும் தங்களைப்படைத்தருளிய சுவாமியைப் பணிந்தெழுந்து கைகூப்பி கர்த்தனே! அடியேங்களாலாகவேண்டிய பணிகளை ஆக்கியாபித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தன. இவ் வதிசயங்களையெல்லாம் சுவாமியைப் புடைசூழ்ந்திருந்த முனிபுங்க வர்கள்கண்டு பலமுறை வேதாகமங்களாற் துதிசெய்தார்கள். இவ் வாறு நூதனமாயுண்டான சேனைகளும் முனிவர்களுந் துதிசெய்தி ருக்கின்ற சமயத்தில் மல்லாலராக வெழுந்தருளியிருந்த விநாயக மூர்த்தியானவர் அவ்வுருவத்தினின்றுமாறிப் பத்துத்திருக்கரங்க ளும், அவையுள்ள வலதுகரங்களில் தாமரைமலர்பாசம்-பரசு-அங் குசம்-தண்டம்-சக்கரம்-டமருகம்-தோமரம் என்னு மிவ்வைந்தை யுந் தரித்தவராய், பருத்துநீண்ட திருமேனியையுடையவராய். சந் திரனைதரித்தகிரீடம் மூன்றுகண்களுந் தரித்தவராய், வீரகண்டா மணியைத் தரித்த திருவடியுடையவராய் எழுந்தருளினார் அவ்வற்பு தத்தேவர்கள் முனிவர்கள் முதலாயிவரை கண்டு ஆனந்தமடைந் தார்கள் இவ்வாறுவிநாயகமூர்த்தி செய்தருளிய திருவிளையாடல் களையெல்லாம் முன்னர்கமலாசுரனிடத்தில் நின்றுமோடிவந்ததூதர் களில் அதனென்னும் ஒருவன்கண்டு, உடனே அவ்வசுரனிடத்திற் சென்று பணிந்தெழுந்து, ஆண்டவனே! சுந்தர ஆசீர்மத்தில் நெருந்த மல்லாலனென்னு மந்தணன் ஓர் கொடிப்போரில் நால்வகைச்சேனை களோடு அளவற்ற வீரர்களையுண்டாக்கித்தானுஞ் சர்வாயுதபாணி யாயுத்தத்திற் காயத்தப்பட்டிருக்கின்றனன். அவனே வெல்லவல்ல வர்கள் எவ்வுலகங்களினுமிரார்கள் அவன் உண்டாக்கிய சேனைகட் குள் மிகவுமிளைத்தவனுயிருக்கிற ஒருவன் தாக்குவனுயின் சமதளசே னைகள் யாவும் மடியும்போதும், இப்போது அவன் உண்டாக்கியிரு க்கின்ற சேனைகள் ஒருவேளை தேவரீர் ஆயுதவல்லபத்தாலிளைக்கி னும் உடனேமீட்டும் அளவற்றசேனைகளை யுண்டாக்கி யுத்தஞ் செய்யத்தக்க வல்லமையுடையவன். ஆதலால் இவைகளையெல்லாக் தேவரீர் தீர்க்காலோசனைசெய்தருளவேண்டுமென்று சொன்னன்.

இவ்வாறு உள்ளவித்தையெல்லாம் உரிமையோடு தாதவன் சொல்லியும் அவைகளைக் கமலாசுரன் சிறிதும் பீயாயொது, அழிவு காலத்துக்கேற்ற புத்தியினையே மீக்கொண்டு தனதுபராக்கிரமத்தினையே பெரிதாகமதித்து, ஓ வித்தகனே! இதுகாரும் இந்திரன்-பிரமன்-விண்டு-உருத்திரன்-முதலிய யாவரும் என்னெதிரில் நின்றவல்லர், இப்போதுமுட்டியெடுக்கும் ஓர் அற்பணனே எனக்கு நிகரானவன். அவனே ஓர் அக்கினி அத்திரத்தினுற் சங்கரித்து விடுவென்றேன் பாரென்று சொல்லிக் கண்கள்சிவந்து அழலைச் சொரியும் படியான கோபத்தோடு உலகத்தையெல்லா மெடித்து விழுங்கிவிடு

உடனே அவன்சேனைத்தலைவர்களெல்லாம் அவனைப் பணிந்தெழுந்து தமது தமது கால்வகைச்சேனைகளோடு முன்னேறடந்தார்கள். பின்னர் மல்லாலருடையசேனைகளும் பாவத்தோடு புண்ணிய மெதிர்த்தது போலக் கமலாசுரன் சேனைகளோ டெதிர்தது இரத வீரர்களோடு இரதவீரர்களும், யானைவீரர்களோடு யானைவீரர்களும், குதிரைவீரர்களோடு குதிரைவீரர்களும், வாள்வீரர்களோடு வாள்வீரர்களும், வில்வீரர்களோடு வில்வீரர்களுமாக நெருங்கிப் போர்செய்தார்கள். வேல்வீரர்களோடு வேல்வீரர்கள், அவருள் சிலவீரர்கள் பறவையொத்த பரிகளைப்பூட்டியிருக்கின்ற தமது ரதங்களைச் சிறகும் றெழுந்த மலைகளைப்போலவும், உறவோடபகைக்குங் கயவரைப்போலவும், பகைவர்களுடைய இரதங்களோடு பொருதுவித்து மண்டிலமிட்டார்கள். சிலவீரர்கள் மலைமுழைகளினின்றும் வெளிப்பட்டபறவைகள் அங்குமிங்குமாகப்பறந்து இரைதேடுதல்போல ஒருவர்படைகள் ஒருவர் இரதத்தில் நுழையும்படியாகத் தூண்டி ஆர்ப்பரித்தார்கள். சிலவீரர்கள் மலையின்கண்ணுள்ள விருக்கங்கள் யாவுமழையினாலும் வீழ்வதுபோலப் பகைவருடைய இரதங்கள்மீது தமது படைகளைப் பொழிந்து கொடி-கொடிஞ்சிமுதலியஉறுப்புகளை நிலத்தில்வீழ்த்தினர்கள் சிலவீரர்கள் தம்மோடுபோராடவேண்டினுநடைய இரதத்தைக் குறுகும்போது இடையில் அளவற்ற பிணங்கள்வீழ்ந்து தங்களிரதகை னிடரும்படிச்செய்ய மனம்கொந்து, பின்னர் வேறொரு இரதவீரர்களழைப்ப மகிழ்ந்து போர்செய்தார்கள் சிலவீரர்கள் ஒருவரையொருவரெதிர்த்து குதிரைகளையும் பாகர்களையும் படைகளையுமிழந்து தமதுடலித்தேரின்மீதும், உயிரை வானின்மீதுங் கூட்டினர்கள், சிலவீரர்கள் பன்னிருகோசூரியர்களுந் தமக்குள் பகைகொண்டு யுத்தஞ்செய்வதுபோலத் தமது இரதங்களை ஆகாயமார்க்கத்திற் செலுத்தி ஒருவரோடொருவர் கெடுமொழிகூறிப் போர்செய்தார்கள். சிலவீரர்கள் அந்தரமார்க்கமாகப் பற

ந்து யுத்தஞ்செய்து தமதுவலியும் உயிருங் குன்றும்படியாகப் பில்விழுந்து அங்குள்ள யானை முதலியவைகளையுங்கொன்று உயிர் விடுத்தார்கள் சிலவீரர்கள் தமதுதேர்கள்முறிந்துபோக உடனே சேமத்தேர்களில் சிங்க மேற்றினைப்போலப் பாய்ந்தேறி போராடினார்கள். சிலவீரர்கள் பகைவர்கள் விடுகின்ற படைகளால் உடல்கள் பிளக்கப்பட்டு உதிரவெள்ளமானது தமது பகைவர்களின்மீது பெருகியோடும்படியாகக் கிடைக்க அத்தேர்கள் அருவிபாய்கின்ற மலைகளைப்போலப் பிரகாசித்தன. சிலவீரர்கள்யானைவீரர்களைச்செய்த போரினால் தமது பரிபூட்டிய இரதங்களிற்றானே உயிரைவிடுத்து ஆரம்பைமாதர்களுடைய அல்குலென்னுந் தேரிலுவர்ந்து அவர்கள் கொங்கையாகிய யானைகளை இரண்டு கரங்களினாலும் வளைத்துப் போர் செய்தார்கள்

சிலவீரர்கள் இடியை யொத்துச் சத்திக்கும் பெருங்குரலினாலும் மழையைப்போன்று பொழியுமதத்தினாலும் மின்னலைப்போலப்பிரகாசிக்கும் படைகளினாலும், மேகங்களை யொத்து விளங்குந் தமது யானைகளின்மீது அம்மேகத்தை வாகனமாகவுடைய இந்திரனைப் போல விளங்கியுத்தஞ்செய்தார்கள். சிலவீரர்கள் தமது யானைகளால் பகைவருடைய யானைகளைத்தண்டத்தினாலும்புடைப்பித்து வீண்டகோடகளினால் அவைகளினுடலம் பிளவுபடும்படியாக முட்டிப் பலபடைகளைக்கொண்டு அப்பகைவருடைய உயிரைமாய்த்தார்கள் சிலவீரர்கள் ஓடுகின்ற இரதங்களோடு தமது யானைகளை யோட்டி வரைசிறகரிந்தோனுகி தேவேந்திரனைப்போல அவ்விரதங்களைமுடித்துச் சாடினார்கள் சிலவீரர்கள் பகைவருடைய தேரைமுட்டி யெடுக்கும்படி தமதுயானைகளையே அவைகளவ்வாறே முட்டும்ஏடுக்கவலியின்றி முன்னெருபோது கைலாயவரையையெடுத்த அசுரனைப்போல ஓலமிட்டு முழங்கின சிலவீரர்கள் குதிரைவீரர்களைச்செய்தபோரினால் தமது உயிரையும் யானையையும் விடுத்து அரம்பை
து தனங்களாகிய இருகோட்டு யானைகளை நித்தலும் அணைந்துவி
ழ்வுற்றனர் சிலவீரர்கள் பகைவரைக் கொன்றல்லது மீளக்கூடா
தென்னும் வெஞ்சினத்தை மேற்கொண்டு காற்றேடும்செல்லும்அக்
கினியைப்போல தமது குதிரைகளோடுஞ் சென்று கடல்போன்று
விளங்குஞ் செருக்களத்தைத் திரைபோன்று விளங்கித் துழாவினார்கள். சிலவீரர்கள் தமது குதிரைகளைப்பகைவர் குதிரைகளின்மீது பாயும்படிவிடுக்க, அவைகளவ்வாறே பாய்ந்து கொன்று உடனே தமது தாளினால் நிலத்தினின்று மெழுந்து ஆகாயத்திற்சென்றனரி யதுடைய குதிரைகளோடுஞ் சமர்செய்தன. சிலவீரர்கள்பகைவரு

டைய இரதங்களையும் யானைகளையுங் குதிரைகளையுமதஞ்செய்து அ
வர்கள் விடுத்தவாளியினல் முடிவில் நிலத்தில்வீழ்ந்து தேவமாதர்
களுடைய நயனமென்னும் வாளியினல் மன்மதன் செய்யும் சமரை
வென்றார்கள் இவ்வாறு இரதவீரர்களும் யானைவீரர்களுங் குதிரை
வீரர்களும் ஒருவரையொருவரெதிர்த்து யுத்தஞ்செய்திருக்கப்பதா
தியாயிருக்கின்ற சேனைகளிற் சிலர் இளையோர் - முதியோர்-இடியு
ண்டோர்-பெண்டன்மை பூண்டோர் என்னுமிவர்களையுங் கரிபரிமு
தலியவைகளையு மெதிர்ப்பதைவிட்டுத் தம்மையொத்த படைவீரர்
களோடு யுத்தஞ்செய்தார்கள். சிலர் தமதுருவங்களைக் கேடகங்க
ளினல் மறைத்துக் கரத்தில் வாளினையேந்தி ஒருவரை யொருவர்
இடசாரி வலசாரியாகச் சுழன்று முடி-தோள்-மார்பு-இடை-தொடை
முதலிய உறுப்புகளைக்குறிபார்த்துவெட்டினர்கள் சிலர் தமதுவில்
லுகளைக் குனியவைத்து அளவற்ற சரமாரிகளையொருவர்க்கொருவர்
தூண்டி, மறைந்து போர்செய்வோருடைய வில்லுகளையுந் தூணிக
ளையுங் கீழேவீழத்தள்ளி மலைபோன்ற தோள்களையும் முடிகளையும்
அறுத்தெரிந்தார்கள் சிலர் பகைவருடைய சிரத்தினும் மார்பினுந்
தோளினும் நிணம்-மூளை-தசை-முதலியவைகள் சிதறும்படியாகத்
தண்டாயுதங்களைக்கொண்டு தாக்கினர்கள், சிலர்கதை-தோமரம்-
வின்டி-பாலம்-முசலம்-கப்பணம்-எழு-மழு-சூலம்-குந்தம் முதலிய
படைகளை ஒருவர்மீதொருவர் மாறிமாறிவிடுத்துப்போர்செய்தார்
கள், சிலர் வீரசொர்க்கத்தினையே முக்கியமாகக் கோரினவர்களா
யித் தமதுபடைகள் முழுவதுமிழந்தும் மெய்யிற்றுக்கி யிருக்கின்ற
படைகளைப்பரித்தும் பகைவர்களை யோட்டினர்கள். சிலர்தகரோடு
தகர்தாக்குவதுபோல, முகங்களோடு முகங்களைத்தாக்கி ஒருவரை
யொருவர் இறுகத்தழுவி நிலத்தில் வீழ்ந்தார்கள், சிலர் கைகளைக்
கைகளினலும் கால்களைக் கால்களினலும் பின்னி ஒருவரை யொரு
வர் உள்ளமுடலும் நடுங்கும்படியாக அதட்டினர்கள். சிலர்முட்டிக
ளில் முறைமுறையாகக்குத்தி ஐய உச்சாகத்தோடு ஒருவர்க்கொரு
வர் உயிர்நிலைகடிப்புடைத்தார்கள். சிலர் தமதுவிழிகளினலும்பொ
றி எழும்பும்படி உமிழ்தலோக்கித் தோள்களைமாறிமாறித் தட்டி
ஒருவர்மீதொருவர் பற்களைப்பதியும்படியாக வூன்றி நுணிநாவைக்
கடித்து நிற்போருடைய தாள்களைத்துவி நிலத்திலறைந்தார்கள்.
சிலர் பகைவருடையகன்னங்களில் சிவப்பெய்தும்படியாகப் புடைத்
து, தலைகளை முறுக்கியெறிந்து கால்களிலணிந்திருக்கும் வீரகண்
டாமணியைப்பறித்து வாயில்வைத்துகடித்தார்கள். அளவற்றவீர
ர்கள் பகைவர்விடுக்கின்றவாள்களினலும்வேல்களினலுங் கால்-கை
முதலிய உறுப்புக்களையிழந்து மடல்களொழிந்த பனைகள்போலவும்

கி நின்றார்கள். அளவற்றவீரர்கள் தமது சிரங்களே யிழந்து கவந்த மாகியும் மானமொழியாதவர்களாய் யாளிபோலெதிர்த்துவருஞ் சத்துக்களே வாளினுல்வெட்டியெறிந்து நடனமிடுவார்கள் அளவற்ற வீரர்கள் முன்னர் தழைத்தோங்கியிருக்கு முறுக்கையும், பலாசையும், இலவையும்போலச் சமர்க்களத்தினின்று பின்னர் அவ்விருக்கங்களினின்று வீழ்கின்ற பூவையும் கனியையும்போல உதிரமய மானார்கள்.

இவ்வாறு இருதிறப்படைகளும் ஒன்றேடொன் றெதிர்த்து அகோரமான யுத்தங்களே விளைக்கும்போது அளவற்ற பிணங்கள் அச்சமர்க்களத்தில் மலைமலையாகக் குவிந்தன அம்மலைகளினின்றும் பெருகிய வுதிரவெள்ளமானது பலகுமிழிகளோடுந் திரைகளேவீசிக் கொண்டுசென்று கடலிற்பாய்ந்தது அவ்வுதிரவெள்ளத்தில் லாழ்ந்து மிதக்கின்ற இரதங்களெல்லாங் கப்பல்களேப்போலவும், யானைகளெல்லாம் மலைகளேப்போலவும், குதிரைகளெல்லாம் நீர்காய்களேப்போலவும், கைகால் முதலிய உறுப்புகளெல்லாந் தாமரைமலர்போலவும், வெளுத்த நிணங்களெல்லாம் நுரைகளேப்போலவும், நீண்டகுடல்களெல்லாம் பாசிகளேப் போலவும் விளங்கின.

சிலபேர்கள் அவ்வுதிரவெள்ளத்தில் மிதக்குங் கேடயங்களேத் தெப்பமாகக்கொண்டோ, யீட்டிகளேக் கோல்களாகக்கொண்டு செலுத்திக் குடல்களே மாலையாசத்தரித்து, யானையின் கோடுகளேகொட்டிக்கொண்டு விளையாடல் செய்தார்கள், சிலபேர்கள் யானைகளினுடைய விலாவெலும்புகளேவில்லாகவும் நரம்புகளேநாணுகவும் வீரர்களுடையமுதுகெலும்பினே அம்புகளாகவுங்கொண்டு [illegible]வரோடொருவர் விளையாட்டாகச்சமர்செய்தார்கள் சிலபேய்கள் [illegible]றில கன்றறியாதமுதுமைப்பேய்களுக்குமூளைச்சோற்றினேயுந் தசை யிய உபகரணங்களேயும் யானையினசெவிகளில்மிதப்பவைத்தஅரசர்களின்குடர்களினுல் இறுகக்கட்டி துதிக்கரங்களில் உதிரங்களே நிரப்பித்தோளிலிட்டுக்கொண்டு சென்றுவிருந்தூட்டின. சிலபேய்கள் பந்தலிட்டாற்போலப் பறந்திருக்கின்ற பருந்துகளுடைய நிழலில் உதிரங்களேதெளித்துத், தூளடக்கி யானைகளின் சரீரங்களால் நாற்றிசைகளினும் வேலிகோலிப் பிணங்களாகிய தலிசுகளில் விற்றிருக்க அவைகட்கெதிரில் சிலபேய்கள் தோத்திரஞ்செய்தும் சிலபேய்கள் * தணங்கைகொட்டியுமிருந்தன. இவ்விதமாகப் போர்க்களமானது நிறப்பெய்தி யிருக்குஞ் சமயத்தில் மாதுமையு மறியாத மல்

* தணங்கை இருகையுமுடக்கி விலாப்புற மொத்தியாடல்

லாலமூர்த்தியினுடைய சேனைகள் கமலாசுரனுடைய சேனைகளெ
ல்லாம் வெங்கிட்டோடும்படியாகச்செய்ய அதனைக்கண்ட கமலாசுர
ன் தனதுசேனைகளை கையமர்த்தி ‡ மல்லகதி-மயூரகதி-வியாக்ரகதி
வாரணகதி-விடபகதி என்னும் ஐவகைகடையினையும் வாய்ந்த தன
து குதிரையின்மீதுநின்று, இடியேற்றினைப்போலச் சத்தித்து உல
கங்களையழிக்க வெழுந்த வடவா முகாக்கினியின்மீது நெய்க்கடல்
பெருகுமாறுபோலக் கோபித்துச் சீறினர். அச்சீற்றத்தைக்கண்ட
மாத்திரத்தில் சிலர்கடுங்கியும், சிலர்மெய்மறந்தும், சிலர் ஓடியும் சி
லர் ஊக்கமிழந்தும் போனார்கள் பின்னர் கமலாசுரன் தன் குதிரை
யை இடசாரி வலசாரியாகவோட்டி, மல்லாலமூர்த்தியினுடைய சே
னைசமுகங்களிற்புகுந்து தலைகளுருளவும், உதிரம்பெருகவும், குடர்
களையவுமாக அளவற்ற வீரர்களைச் சின்னபின்னமாக வாட்டி, மீ
ட்டும் எமது கர்த்தனெதிரில் வந்துநின்று நாகப்படையை யெடுத்
துத் தனது குலகுருவாகிய சுக்கிரனுபதேசிக்கப்பெற்ற மதுவை
தூற்றெட்டுருசெபித்து அதிவேகத்தோடு விட்டனன், அப்படை
வெளிப்பட்டமாத்திரத்தில் தேவர்கள்முதலிய சகலரும் விழிகள்கூ
சி மருண்டு விஷமுண்டவரைப்போலக் களைக்கும்படி ஒன்றனைத்தன
மாகச் சொலித்துக்கொண்டு சர்ப்பாபரணத்தைத் தரித்த மல்லாள
மூர்த்தியினுடைய படைகளோடெதிர்த்து தனதுவேகமுள்ளடையி
ர்ப்பினலும் வெப்பமாகிய விடத்தினலும் விஷமிருக்கின்ற பற்களி
னலும், அஞ்சவிழிக்கின்ற பார்வையினலும் பேரொலி செய்கின்ற
சூலினலும், அளவற்ற சேனைகளை அழிப்படவாட்டிநின்றது, அத
ன்கொல்ல முக்கண்மூர்த்தியாகிய மல்லாலர்பார்த்திப்புன்னகைசெ
ய்துமது திருக்கரத்திலிருக்கின்ற சக்கரப்படையை விடுத்தனர்.
அது ஆயிரமாயிரமாக வருக்கொண்டு கமலாசுரனுடைய படைக
ளையெல்லாம் துகள்படுத்தி, ஓர் நிமைப்போதில் நாகப்படையை ய
ழுத்தெரிக்து, கர்த்தருடைய திருக்கரத்தில் மீண்டது பின்னர் கம
லாசுரன் தேவர்களுங்கண்டு நடுங்கத்தக்கதாகத் தண்டாயுதத்தை
யெடுத்துத்தாக்கினன். அதற்கு எமது கர்த்தர் இவன் வலியினெல்
லையைக் காணுதுமென்று தாமுமொரு தண்டாயுதத்தைத் தாக்கி,
நெடுநேரம் அவனெடு சமராடினர். உடனே அவ்வசுரன் மல்லால
ருடைய மார்பின்மீது ஓர் கதாயுதத்தை யேவினன், அதை எமது
கர்த்தர்கண்டு நகைசெய்து அவ்வவுணன்மெய்முழுதும்வெயர்த்து
நடுங்கும்படியாக அதனைத் தமது கதாயுதத்தை விடுத்துத் துகள்
படச் செய்தனர்.

† இக்கதி ஐந்தையும் தூரகதியென்ப.

பின்னர் கமலாகரன் விண்டுவின் சக்கரமும் வாய்புதைத் தே வல் செய்யத்தக்க தனது சக்கராயுதத்தை விதிப்படிசோடசவுபசா ரங்களுடன் பூசித்துச் சுழற்றிச் சிவகுமாரனைக் கண்டித்து வருவ தாகவேண்டி வேகமாய் செலுத்தினன், அஃது அவ்வாறே சீற்றி சைகளினுஞ் சொலிப்பெய்த அளவற்றதீப்பொறிகளே யிறைத்துப் பற்பல ஆயுதவித்தகளைப் படைத்துச் சொல்லப்படாத வற்பாதங்க ளைக் காட்டிப் பிரண்ட மாருதமும் பயந்தொளிக்கும்படி வேகங் கொண்டு சிரிவர அதனை விநாயகமூர்த்திபினுடைய திருக்கரத்தினி ருந்த சக்கரமானது ஒரு கவளமாய் விழுங்கிவிட்டது. இப்பால்விண் ணவர்கள் ஆண்மையையடக்கவல்ல அவுணனனவன் வடவைக்கன லைத் திரட்டிவடித்து வைத்தாற்போல விளங்குந் தனது சத்திப்ப டையை விடுத்தனன். அதனைத்தா னவராண்மையை யடக்கவல்ல எமதையனனவர் தமது அங்குசப்படையினும் அணிசெய்தனர். உ டனே கமலாகரனனவன் விழிகலனற்பொறிபறக்கக் கோபித்துத் தனது மழுப்படையை அதிகவிரைவோடுஞ் செலுத்தினன் அஃது கடலிலெழுந்த கடுவிடத்தைப் போலச்சீறி அடர்ந்துவருதலும் மல் லாலமூர்த்தியானவர் தமது மழுப்படையினைக்கொண்டு அதனைக்க ண்டித்தனர். பின்னர் அவுணபாதகன் பாசத்தை யெடுத்து விடுத் தனன். அதனை எமது கர்த்தரானவர் பலதுண்டங்களாக வறுத்து ஏறித்தனர். இவ்வாறு தனக்கருமையாகக் கிடைத்திருந்த படைக ளெல்லாம் விநாயகப் பெருமானலழிந்துபோன அபாயத்தை கண்ட கமலாசுரன் என்செய்வன் செருக்கற்றுப் பெருமூச்செறிந்து மான முங்கோபமும் மனதைப்பாதிக்கச் சர்ப்பத்தைபோலச்சீறி, இனி இவனைத் தெய்வப்படைகளா லதஞ்செய்யவேண்டுமென்று நியோகி த்தவனுய் வருணஸ்திரத்தையெடுத்து தூபதீபநைவேத்திய தலி ய உபசாரங்களைச்செய்து, நீபோய் மல்லாலனையும் அவன் சேனை களையும் நாசஞ்செய்து மீளக்கடவையென்று மந்திரபூர்வகமாகப் ப யோகித்தனன். அந்தப்பாணமானது வெளிப்பட்டவுடன் சர்வசங் காரகாலத்திற் பரமசிவகடாட்சத்தால் உலகங்களையழிக்க சத்தசா கரங்களையும் உடைத்துக்கொண் டெழும்பெரும்புறக் கடலைப்போ லச் சலப்பெருக்கையுண்டாக்கி அலைகளைப்பெருக்கி இடிகளையொத் ததிர்த்துபுரண்டு அதிவேகமாய் வருவதை தேவாதிதேவராயினமல் லாலர்கண்டு பிரளயவெள்ளத்தைச் சுவற்றும் தீட்சண்ணியமுள்ள அக்கினியாஸ்திரத்தை யெடுத்துவிட்டனர் அதைவிட்ட மாத்திரத் தில் வானத்திலெழுந்து பகபகவென்று ஜகைத்துக் கொண்டல்கொ ண்டலாய்ப் புகையைப் பெருக்கிச் சுவாலைகளை வீசி அனற்பொறி களைக்கக்கி உலகங்களைமூடியிருந்த சலத்தை நிமைப்போதில்வரை உண்டுவிட்டது.

அதைக்கண்ட கமலாசுரனனவன் ரவுத்ராகாரமாகக் கோபித்
தத் தரிதமாய் வாயுவாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகித்தான்,
அது வில்லிலிருந்து வெளிப்பட்டவுடன் ஊழிக்காலத்தில் மோதும்
பிரசண்டவாயுவைப் பெருக்கிச் சுழல்காற்றைப்போ லெங்கும்வீசி,
அக்கினிப்படையினுடைய வலியினையடக்கி நிற்க, அதை மல்லாலி
மூர்த்தி கண்டு விரைவில் நாகாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகித்
தனர் உடனே அஃது தேவர்களும் மயங்க உலகத்தை விளக்குஞ்
சூரியனும் தியங்கி வாடும்படி மேலிட்டு விசாலமாகிய படங்களிலிரி
த்து விஷங்களைக் கக்கிப் பலகோடி சர்ப்பங்களையுண்டாக்கி ஆலகா
லவிஷமுமஞ்சச்சீறி வாயுவின் பெருக்கனைத்தும் கிரகித்து, விஷச்சு
குந்தலிவராக்கி, அவ்வவர்கட்கு நடத்தவேண்டியசிறப்புக்களையும் நடாத்தித் தனக்கு அடங்காதஎதிர்த்துவந்தசம்பாசுரன் நிசும்பாசுரன்-கலாசுரன்-பிரகண்டாசுரன் -வீரத்திராசுரன்-முதலானவர்களோடுநெடுநாள்யுத்தஞ்செய்து ஒடுக்கிப்பின்னரவர்கள்வணங்கிவர அவர்களையும் வேண்டியவரிசைகளோடு அழைத்தக்கொண்டுசென்றுசண்டாசுரனுடனே அளவற்றபோர்களைச்செய்து அவனைக்கொன்று அவன்புத்திரனாகிய பிரபலாசுரனுக்குப்பட்டங்கட்டி பின்னுமேருகஅதிகாரமுதலானவைகளையுந்தந்து இவ்வாறுஅவுணராசர்களையெல்லாம்வென்று பின்னர்சொர்க்கலோகத்திற்சென்றனன் அவன்வரவைத்தேவதூதுவர்களறிந்தோடி முப்பத்துமுக்கோடிதேவர்களும் புடைசூழும்படியாக இரத்தினசிங்காதனத்திற்கொலுவீற்றிருக்கின்றதேவேந்திரனைப்பணிந்து ஆண்டவனே திரிமூர்த்திகளுடையபராக்கிரமங்களைச் சிறிதுமதியாத சிந்துராசன்அவுணசேனைகளோடுஇங்குவந்திருக்கின்றனனென்று அறிவித்தார்கள்அதைக்கேட்டவுடன் தேவேந்திரன் ஆயிரங்கண்களுஞ்சிவந்து உள்ளேகோபாக்கினிமூளதனது வச்சிராயுதத்தையேந்தி அயிராவதத்தின்மீ தாரோகணித்து தேவசேனைகள் தன்னைப்புடைசூழ்ந்துவா சிந்துராசனுடையசேனைகளுக்கெதிரேசென்றான் அப்போது இருவருடையசேனைகளும்வேறுவேறுகஅணிவகுத்து இரதவீரர்களோடு இரதவீரர்களும் யானைவீரர்களோடு யானைவீரர்களும் குதிரைவீரர்களோடுகுதிரைவீரர்களும் படைவீரர்களோடுபடைவீரர்களும் கலந்துபோர்செய்தார்கள்.வாளாயுதத்தோடு குதிரையின்மீதேறியிருக்கின்ற சிந்துராசனோடு இந்திரனெதிர்த்துத் தனது வச்சிராயுதத்தினால் அவன்சிரசின்மீது தாக்கினன்.

உடனே சிந்துராசன் அவ்வச்சிராயுதந் தகள்படும்படி விழுகலிலனற்பொறியெழும்ப உறுத்துப்பார்த்துத் தனதுகுதிரையையுமுடுக்கி அயிராவதத்தின் மத்தகம்பிளந்து இரத்தமொழுகும்படியாகத்தனதுகையாலதணிக்குத்தி அதன்மீதிருந்த இந்திரனைக்காலியிழுத்துநிலத்திலே அறையும்படியாக மேலாகத்தூக்கிச்சுழற்றினன் அச்சமயத்தில் தேவேந்திரனானவன் சுக்குமதேகமெடுத்து அவ்விடத்தினின்றுபோடி வைகுந்தத்திற்சென்று விண்டுவைச் சரணடைந்திருந்தனன்அதற்குமேல் தனக்குயாவரு மெதிரில்லாதசிந்துராசன்தெய்வலோகத்தையுந்தன்வசமாக்கி சிலகாலம்அவ்விடத்திற்றானேயிருந்து அரசுசெலுத்தி சம்மன்றிசம்பன் முதலாயுள்ளஅவுணராசர்களைச்சில சேனைகளோடும்அவ்விடத்தில்நிறுத்திப்பின்னர்அச்சுவர்க்கலோகத்தைவிட்டுநாகலோகத்திற்சென்றுஅங்கராசாள்கின்றநாகராசர்களையு

ம்வணங்குவித்து,மீட்டும் பூலோகத்திற்குவந்துசகலலோகங்கட்கும் இராசதராளியாகியதனதுகண்டகநகரத்தையடைந்திசொர்னத்தாற் செய்து நவரத்தினங்கள் பதித்திருக்கின்ற சிம்மாதனத்தில் ஏகசக்ரா திபதியாய்க்கொலுவிருந்து சகலலோகத்தரசர்களும் வணங்கும்படி சுத்தவீரர்களுடனே உல்லாச காலக்ஷேபமாய் அரசு செலுத்தி எல் லாப்போகபாக்கியங்களையுங்குறைவற வநுபவித்துவாழ்ந்திருந்தனன் இவ்வாறுசிந்துராசன் சகலலோகங்களினுஞ் செய்துவந்ததிக்குவி சயத்தோடு பூலோகத்தில் வாழ்ந்திருக்கின்ற நாளையில் ஒர்நாள்தம் மைச்சரணடைந்தஇந்திரனுக்காக விண்டுவானவர் படையெடுத்து, தமது கெருடவாகனத்தின்மீதேறிச் செலுத்திசொர்க்கலோகத்தை வந்து வளைத்துக்கொண்டுசாதல்த்துணிந்திபோராடவல்ல அவுணவீ ரர்களோடு யுதஞ்செய்வதாயினர். அப்போது சும்பாசுரனோடுஅக் கினியும், காலாசுரனோடு இயமனும், கமலாசுரனோடு நிருதியும்பிரக ண்டாசுரனோடுவருணனும் நிசும்பாசுரனோடுவாயுவும், பிரபலாசுர னோடுகுபேரனும், கதம்பாசுரனோடு மன்மதனும்,சண்டாசுரனோடு விஞ்சையர்களும்,கோலாசுரனோடுஅச்சுவினிகளுமபவுமாசுரனோடு காந்தருவர்களும், வேறு வேறுக்கெருங்கியுத்தஞ் செய்தார்கள். எஞ்சியஅசுரவீரர்களெல்லாம் அங்காரகன்முதலியதேவர்களைதிர் த்துப்போராடினர்கள். இவ்வாறு அவுணவிராசனுந்தேவவீரர்களும் ஒருவரோடொருவர்கைகலந்து வேலாயுதங்களால் தாக்கியும்குந்த ங்களினுறுத்தியும், சக்கரங்களிவிடுதலும், கணைகளத்தொடுத்தும் பாசங்களால் இறுக்கக்கட்டியும, அளவற்றபெருங்கோபத்தோடுஇரு வகுப்பினரும் இடைவிடாமல்வெகுகாலம்வரையில் யுத்தஞ்செய்தா ர்கள். இக காரணத்தைச் சில தூதர்களைவிடி சிந்துராசனுக்கறிவி க்க. அதை அவன்கேட்ட மாத்திரத்தில் மனங்கொதித் தெழுந்து மூன்னா தேவர்களைத் தண்பஞ்செய்யாமல் தயவேயவிடுத்துவந்த குற்றத்தினு லல்லவா இக்காரணம் உண்டாயது. இனி அவர்களை யெல்லாம் பிடித்துக்கொடிய சிறையி லிடுவேனென்று தீர்மானஞ் செய்து பூவுலகத்திலிருந்ததனது சேனைகளோடும் ஆகாயத்திற்பாய் ந்துதேவர்களோடுஞ் சமர்செய்துவருந்துகின்ற அவுணவீரர்களையுஞ் சேனைகளையும்பார்த்து இதுகாறும் நீங்கள் செய்த யுத்தம்போதும் இனிநிறுத்துங்கள்என்றுகையமர்த்திக்கருடவாகனத்தின்மீதுவந்து நிற்கின்ற விண்டுவைநோக்கி அறிவற்றவனே நீயுத்தஞ்செய்துவெல் லத்தக்கஆண்மையுடையவனுயின் அவ்வாண்மையைஎன்னோடுசெய் துகாட்டாமல் யானில்லாதவேளையில் இவர்களோடுபோடித்யுத்தம்

செய்வதும்வீரந்தானே திரிகாலங்களியுமறியத்தக்கஞானமும்யாவரையும் இரட்சிக்கும்படியான தொழில்யும் உடைய நீ என்னோடு பகைத்து யுத்தஞ்செய்தால் நீங்காத துன்பத்தை அதுபவிக்கவேண்டியிருக்குமென்பதைத்தெரிந்துகொள்ளாமற்போயினையே இப்போதேனும் உனக்குயுத்தஞ்செய்து வெல்லதத்தக்கபராக்கிரமமிருந்தால் உனது சகலசேனைகளோடும் ஏகசூரனுபி நக்கின்றனென்னோடுவனுடன்யுத்தஞ்செய்யக்கடவையென்று சொன்னன் இவ்வாறு சிந்துராசன்சொல்லி முடியுமுன்வர்ச்சிதொழந்தவிண்டுவிஷ்ணுவெல்லாத்தேவர்களும்ஒன்முகக்கூடியுவன்மீதுஅளவற்றஅஸ்த்திரங்களைபிரயோகித்தார்கள.அதனமீது சிந்துராசனவன்தனதுகரதத்திலிருந்ததண்டாயுதத்தினாலதேவசேனைகளெல்லாஞ்சின்னபின்னப்படமோதிஇந்திரன்முதலிய எண்மநம்மூர்ச்சையாகுமபடிகொடுமையாயடித்தாக்கினிண்டிவறியிநகதக நடனுடைய வொருபக்கத்திறகையறுத்துபூமியில்விழுத்தள்ளினன்அப்போதுவிண்டு நிகுந்தகோபத்தோடுமெழுந்தமதகரத்திலிநந்த தண்டாயுதத்தினால அவன்சிரத்தைப் புடைத்தார்.உடனே அத்தண்டாயுதமானது முறிந்துகொறுங்கிப்போயது பின்னர்விண்டுவானவர்தமதுசக்ராயுதத்தைப்பிரயோகித்தார்அதைச்சிந்துராசன்கண்டு தானுதனது சக்ராயுதத்தைபபிரயோகித்தான் அவ்விரண்டுசக்ராயுதங்களுமொனறையொன்றெதிர்த்துப்பிளையாக்கினிபோலவும்ஆலகாலவிடம்போலவுஞ்சொலித்துகொண்டுசொர்க்கலோகமுதல்எல்லாலோகங்களினுஞ்சென்றுதகித்தனஅவ்வுற்பாதத்தை இநுவநம்பார்த்து உடனே அவ்வவர்களுடைய சக்ராயுதங்களை அவ்வவர்கள் ஆகருஷ்ணம் பண்ணிக்கொண்டார்கள்,அப்போதுவிண்டுவானவர் சிறிது தினாளித்தகமது அளவற்ற படைகளுள்ளும்சக்ரப்படைமேலானதாயிருக்க அதறகுமேலானதாகஅவனிடத்தில் ஒருசகசமாயிருக்கின்றது அதுவோ சிவபிரானுடைய சூலாயுதத்திற்கிணையாகச் சமர்செய்யவல்லது. அதுவுமன்றி, அச்சூலாயுதத்திற்குயிணையாக வேறொருசூலாயுதம் அவன்கையில் வைத்திருக்கின்றன். ஆதலால் இவனையுத்தஞ்செய்து வெல்லுவது மிகவுமறிது.இவனுக்கு நம்போலிகளால் இறுதியில்லைஇவனை உபாயங்களினுலேசாந்தப்படுத்திநாம் தப்பித்தக்கொண்டுபோயதே காரியமின்றிவேறொன்றைச்சிந்திப்பதுபழுதாகுமென்றதமக்குள்நிச்சயித்துமிகுந்தகாதலோடும் இதங்காட்டுவார்போல அவனிப்பார்த்து,ஓவிராதிவிரனே புருடர்களுடைய ஆண்மைகளெல்லாம் ஓர்நொடிபோதில்மாய்ந்து சிந்தம்படிசெய்யத்தக்கபராக்கிரமம் உன்னிடத்திலிருப்பதால்உன

க்குச்சிந்துவென்கிற பெயர் மிகவுஞ் சிறப்புற்றிருக்கின்றது, உனக்கு எத்தவுலகங்களினும் எதிரிகளில்லை உனது பராக்கிரமத்திற்கு யாம் மெச்சினேம். உனக்கு வேண்டியவரங்களைக்கேள் தருகிறே மென்றுசொல்லினர்.

அதைச் சிந்துராசன் கேட்டு விண்டுவினுடைய கருத்து இன்னதென்று தனக்குள் தெரிந்துகொண்டு, அவர்கூறிய மறுபொருளான வார்த்தைக்குச்சரியாகத் தானுமோர் கபடயுக்திகொண்டு! ஓ விண்டுவே; நீ எனக்குவரந்தருவது மெய்யேயாயின் கொடு. அஃதுயாதோவென்று மலைக்க வேண்டுவதில்லை உன்னையான் எளிதான வரமேகேட்கின்றேன். அஃது யாதெனில் எல்லாத்தேவர்களோடும் நமதுகண்டகரகரத்தில்வந்து நாமிட்ட பணிகளை யாவரோடும்நீசெய்திருக்கும்படி வரங்கொடுக்கவேண்டும்இவ்வரங்கொடாமற்போவாயேல் இந்நிமிடத்தில் உன்னையுத்தமுகத்தில்வென்று அவ்வாறேசெய்விப்பேனென்று சொன்னன் சிவபிரானைப்போலத்திரிசூலத்தையும் சடைமுடியும் சூலாயுதமும்பெற்றிருக்கின்ற சிந்துராசன்சொன்ன சொற்களை விண்டு கேட்டவுடன் மாய்கினவராய்பின்னர் ஒருவாறு தேறி இவன் இனிவலியச்செய்விக்கதக்க காரியத்தை நாமே ஒப்பிச்செய்வது மிகவுமான்பாரும் அதனால் நாம்கொடுத்த வரத்துக்கும் பெருமையுண்டாகுமென்று நினைத்து அந்தோ என்செய்வார் அவ்வாறே தந்தோமென்று சொல்லினர். அச்சொல் முடியுமுன்னமே சிந்துராசனுனவன் அவுணர் கூட்டங்களைஏவி, விண்டு இந்திரன்முதலான சகலதேவர்களையும் வளைத்துக்காவலிட்டுப், பிரமனையும் ஆள்விட்டுப்பிடித்து யுத்தமுகத்தில் நின்றதேவர்களல்லாமல், அந்தந்த லோகங்களிலிருக்கின்ற ஏனையதேவர்களையும் பிடித்தபிடியிற்கொண்டுவருமாறு சில அவுணர்களையேவி, வைகுந்தம்முதலியதேவலோகங்களிலெல்லாம் சும்பாசுரன் நிசும்பாசுரன் விருத்திராசுரன் சும்பாசுரன் முதலான அவுணர்களை யிருத்திப்பின்னர் எல்லாத்தேவர்களோடும் அவ்விடத்தினின்று மகன்று, இரணபேரி செயபேரிமுதலியவைகள் முழங்கும்படியாகப்பூலோகத்திலிழிந்து, தனதுகண்டகரகரமுழுவதும் அத்தேவர்களைச் சிறையில்வைத்து, அவர்கள் தப்பிப்போகாதவண்ணம அவுணர்களை நாற்றிசைகளினும் காவலிருத்தி அவ்வவர்கள் அன்போடு அநுட்டித்துவருகின்ற மந்திரங்களையெல்லாம் அவ்வவற்றின் வடிவங்களோடுகளைது சிந்துராயிற்போட்டுவிடச்செய்து எவ்விடங்களில் யாவரேனும் அவ்வவர்களிஷ்ட தேவர்களைப்பூசிப்பார்களாயின் அவர்களையெல்லாம்பிடித்து வதை செய்யக்கட்டளையிட்டு, எல்லாத் தேவர்களுந் தன்னைப்போல ஓர்

வடிவஞ்செய்து வைத்துப் பூசித்துவருமாறு அமைச்சர்களைக்கூவி எங்கும்பறைபறைவிக்கும்படி ஆக்கியாபித்தனன். அவர்களும் அவ்வாறே செய்வித்தார்கள் அதனல் சகலலோகங்களிலும் வேதநீதிகளிறந்தன யாவரும் சாத்திரவிசாரணையில்லாமல் மாழ்கினர் பெரியோர்களெல்லாங்கடவுளே துணையென்றுநம்பி மிகுந்த மணக்கவலையோடு மொளித்திருந்தார்கள் இவ்வாறுதேவர்கள் முதலாயினோரைச் சிரையிலிட்டத்தன்பருசெய்யும் சித்து ராஜனைவன் தனது குலத்தி லுதித்த உற்சுகையென்பவளை விவாகஞ்செய்து, அவளால் தன் மண் அதன்மனென்றும் இரண்டுபுத்திரர்களைப்பெற்று, அப்புத்திரர்களோடும் பதிவிரதையோடும் தாய்தந்தை முதலானவர்களோடும் அளவளாவி, அவனர்களையெல்லாம் மேன்மைபெறச்செய்து, தேவர்களையெல்லாம் துக்க சாகரத்தில் மூழ்குவித்து, சிறிது பிரக்கமில்லாதபடி நாள்தோறும் கொடுங்கோலிய செலுத்தி கெடுநாள் வாழ்ந்திருந்தனன்

அவனல் அளவற்றநாள் சிறையிலகப்பட்டு துன்பமனுபவிக்கின்றதேவர்களெல்லாம் மிகவும்மனம்நொந்து ஓர்நாள் காவலாளர்களறியாதவண்ணந தங்கள் குலகுருவாகிய பிரகஸ்பதி தேவரைபணிந்துசுவாமி இப்பிந்துராசன் நமதுலோகத்திற் படையெடுத்துவந்தபோது நாம் எவ்வாறடங்கி இருந்தோமோ அவ்வாறேயிருப்போமாயின் சுகமுற்றிருப்போம் அசசுகமில்லாமற்போயினும் இவ்விதஆபத்துகளிலேனும் அகப்படாமலிருப்போம் பின்னர்தேவேந்திரனேநம்பின்ன இரசிறைக்குளாயினும் இனியனுமிச்சிறைநின்றுதப்பி லங்காலத்திற் சுகம்பெறுவோமென்று துக்கித்தார்கள் அதற்குப் பிரகஸ்பதி தேவர் சிறிது ஆலோசித்துத் , மக்குள் ஓர் நிச்சயஞசெய்து ஆகாயவாகளே நாம் அனைவரும்சுகம்பெறத்தக்க மார்க்கதனினேதடவேண்டுமாயின் என்றைக்கும் நமது இடையூறுகளைநீக்கி இரட்சித்துவருகின்ற விநாயகமூர்த்தியுண்டல்லவா அவரை இப்போதும்ம இவ்வனுபாதகர்களையொடுக்கும்படியாக மனதிலன்போடு தியானித்துப் பூசிப்பிர்களென்றுசொன்னர். அவ்வாறே அத்தேவர்களும், பிரகஸ்பதிதேவரும், விண்டுவும், பிரமனும், எனைய முனிவர்களும் விநாயகமூர்த்தியினுடைய திருவுருவத்தை நாடோறும் மனதிற் தியானித்து பூசித்துவந்தார்கள். மத்தியில் விநாயகமூர்த்தியினுடைய சதுர்த்தி வர அப்போதவ்விரதத்தை யாவரும் பத்தியோடு அந்தரங்கமாயனுட்டித்தார்கள். அதற்கு விநாயகமூர்த்தி கிருபைகூர்ந்து பத்துத் திருக்கரங்களும்; அக்கரங்கள்

தோறும் ஆயுதங்களும் விளங்கும்படியாகச் சித்திபுத்தி சமேதராய் சிங்கவாகனமூர்த்து மற்றைய அவயவங்களோடும் அவ்வவர்கண்மன க்தோறும் தரிசனத்தந்து அன்பர்களே! முன்னருங்கட்குத் தீங்கு செய்துவந்த கணன் முதலாயினருடைய உடல்களைப்பிளந்துஎவ் வாறு உங்கட்குச் சுகம்மருவச்செய்தாமோ அவ்வாறே யாம் உமா தேவியினிடத்தில் ஆறு கைகளும் வெள்ளானைமுகமுமாக அவதரித்து ஓர் பெரியமயில்வாகனத்தை யூர்ந்து இசைந்தவையுஞ் சங்கரித்து உங்களைச்சிறையினின்றும் விடுத்தருளுவோம அதுகாறும் நீங்கள் சந்தோஷமுற்றிருங்களென்று திருவாய்மலர்ந்து கரந்தருளினர்.

அதற்குமேல் தேவர்கள் முதலிய யாவரும் விநாயகமூர்த்தி திருவாய் மலர்ந்தருளியதை மனதில் உறுதிபாக வைத்துக்கொண் டு அதியற்த சந்தோஷத்தைப்பெற்று, அதனினீம நிறையினின் றும் விடுபட்டு மேலான பாக்கியத்தைப்பெற்றவர்களைப்போல ஆனந்தமாகி நாள்தோறும் விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளைமன திற் தியானஞ்செய்துகொண்டிருந்தார்கள்

மயூரேசவதாரம்

ஓ சவுனகாதி முனிவர்களே! தேவதேவோத்தமராகியவிநாயக மூர்த்தியானவர் உமாதேவியிடத்திற் புத்திரராக அவதரிக்கும்படி இடைவிடாது தீங்குகளைச்செய்துவந்த சிகதாசனுடைய கிறத்தி ணைச்சொன்னேம். இனி எமதிறைவராகிய விநாயகக்கடவுள் அவ தாரஞ்செய்தருளிய சிறப்பினைச்சொல்லுவாம் கேட்பீர்களாக.

முனிவர்களே!சிந்துராசனுடைய கொடுமைக்கஞ்சித்திரிசங் திகேஷத்திரத்தில் வாசஞ்செய்கின்ற கவுதமர் முதலிய முனிவர்கள் தங்கள் உருவங்களேமறைத்துக்கொண்டு சிவபிரானை நோக்கித் தவ ஞ்செய்தார்கள் அளவற்றகாலம் உபவாசத்தைத்தாமும் அவர்கள்செய்து வந்த தவத்திற்குச் சிவபிரான் கிருபைசுரந்து உமா பரமேஸ்வரி சமேதராய் நிஷபவாகனத்தின்மீ தெழுந்தருளி பூதர் முதலாகிய சிவகணங்கள் புடைசூழ அவர்களெதிரிற் பிரத்தியட்சமாயினர் அவர்கள்சிவபிரானைக்கண்டவுடனே எழுந்திருந்து விழிகளில் ஆன ந்தவாரிபெருகபலமுறை சாஷ்டாங்கமாகப்பணிந்து இருகரங்களை யுஞ்சிரமேற் கூப்பி வேதாகமங்களினால் அளவற்றதோத்திரங்களைச் செய்தார்கள் அவைகளைச்சிவபெருமான் கிருபையோடு பார்த்தரு ளி, உங்கட்கு வேண்டிய வரங்களைக்கேளென்று திருவாய்மலர்ந்த

னர் உடனே முனிவர்களெல்லாங்கிருத்தார்த்தர்களாயினுமென்று மிகுந்த அன்போடுபணிந்து சுவாமி கொடியவனை சிந்தாரனல்சக லலோகங்களினும் வேதமார்க்கங்கள் மூழ்கிப்போயின தேவர்கள் முனிவர்களெல்லாம் அவ்வவர்களுடைய வாழ்வுகளழிந்து அப்பா தகனிட்ட சிறைக்குளானர்கள் அடியேங்கள் சிலபோ்மாத்திரம் அவன்கையில் அகப்படாமல் வேதமார்க்கத்தை யனுட்டித்து இங் ஙனேயிருக்கின்றோம். அக்கொடியவனை எவ்விதத்திலேனும் நாசஞ் செய்யவேண்டும் அவனுக்கு நாசகாலம் இப்போதில்லாவிடின் அக் காலம் வருகின்றவரையில் அடியேங்கட்குத் தீங்குநேரவொட்டா மல் காக்கும்பொருட்டுத் தேவரீர் இங்ஙனமெழுந்தருளி யிருத்தல் வேண்டுமே தேவரீர் இங்ஙனம் எழுந்தருளியிருந்தால் எளியேங்கள் அச்சமில்லாமல் சுவாமிகளைப்பூசைசெய்துகொண்டு வேதமார்க்கங் களை யனுட்டித்துத்தீவினைகளிற் படராமல் இகத்தில் வாழ்ந்திருப் போம் இல்லாவிடில் இனி அடியேங்கள் பலவகைத்துன்பங்கட் கா ளாகுவோமென்று பிராத்தித்தார்கள் பத்தருக்கெளியரான பர மேஸ்வரர் அம்முனிவர்களுடைய அபிஷ்டத்தை நிறைவேற்றத்தி ருவுளங்கொண்டு அவர்கள் உள்ளத்தைப்போலப் பரிசுத்தமாய்த் தெளிந்து தண்ணென் றிருக்கின்ற நீர்வளப்பத்தையும் புட்பங்கள் மலிந்த பலபொழில்களாற் சூழப்பட்டிருக்கின்ற நிலவளப்பத்தை யும்பார்த்து அவர்கட்கு மகிழ்வுண்டாகும்படி, அன்பர்களே! சிந்து வை ச்சங்கரிக்கின்றவரையில யாம உமாதேவியோடும் இப்பூதகண ங்களோடும் இங்ஙனே எழுந்தருளியிருப்போமென்றுதிருவாய்மலர் ந்தருளினர். அதைக்கேட்ட முனிபுங்கவர்களெல்லாம் மேலான மகி ழ்ச்சிபொங்கவிருந்தார்கள். பின்னர் கணத்தலைவர்கள் சிவபிரானும் உமாதேவியும் எழுந்தருளி யிருப்பதற்குச் சொர்ணத்தினுலும், ரத்னங்களினுலும் ஓராலயத்தைக் கயிலாயபர்வதத்திற் கிணையாகச் சமைத்தார்கள்; அவ்வாலயத்தில் சிவபிரான் உமாதேவியாரோடு மெழுந்தருளி முனிபுங்கவர்களெல்லாம் பூசிக்கும்படி தமதுதிருபா தகடாட்சத்தை வைத்திருந்தனர் அக்காலத்தில்சகலவான்மாக்களுக் கும் யோகநிட்டையைத்தெரிவிப்பவர்போலச் சிவபிரான் யோகபா வனையோடு மிருந்தனர் அதை உமாதேவியார் பார்த்துப் பணிந்து, சுவாமி பிரமன் விண்டுமுதலினோர் காள்தோறுந்தேவரீரைத்தியான ஞ்செய்துகால்வகைப்பொருள்களையும்பெறுகின்றார்கள் இஃதுசத்தி யமாயிருக்க, தேவரீர் அவர்களைப்போல விழிகளைமூடிக்கொண்டு தி யானிக்கப்படுங்கடவுள் வேறென்னவிருக்கின்றது, எவர்கள்எதைவி ரும்பினுங்கொடுக்கவல்லது சிந்தாமணியையன்றி அதற்குக்கொடுப்

பவர்கள் ஒருவருண்டோ? பிரமன்விண்டு இவ்விருவர்களோடுசகல லோகங்களையுஞ் சங்காரித்துமீட்டும் அவ்விருவர்களுடன்சகலலோகங்களையுஞ் சிருட்டித்துக் காக்கச்செய்கின்ற உருத்திரமூர்த்தியாகியும், அம்மூவர்களையும் உண்டாக்கி இரட்சிக்கின்ற இறைவராகியுமிருக்குந் தேவரீர்யோகநிட்டை செய்வதென்றால் யாரைத் தியானிக்கிறது? அந்தச்சுத்தசுகத்தை அடியாட்கு கூறியருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர். இவ்வாறு உமாதேவியார் பணிந்து பிரார்த்தித்ததற்குச் சிவபிரான்கிருபைசுரந்து, பெண்ணே! பிரமன் விண்டு இந்திரன் முதலானவர்களால் நாம் எவ்வாறு தியானிக்கப்படுகிறோமோ, அவ்வாறே நம்மாற் தியானிக்கப்படும் பொருளும் ஒன்றுண்டு. அதை விவரமாகச் சொல்லுவோம் கேள்.

ஏகமாகியும்,அனேகமாகியும்,மாயையிற்கலக்துசோகமுதலானவைகளிற் சலிக்காதபேரறிவாகியும், அம்மாயையினுற் றனுகரணாதிகள் நான்கினையுமுண்டாக்கி அவைகளே ஆன்மாக்களுக்களித்தம்மிகாரங்களிற் படாததாகியும், பந்தமோக்கமென்னுமிரண்டினைப்பரப்புவதாகியும், அநாதியாகியும், ஆதியந்தமில்லாததாகியும், அநாதியிற்றானே முத்தியாகியும், அருவமாகியும், உருவமாகியும், அருவுருவமாகியும், இம்மூன்றுமற்றதாகியும், மனம்புத்திசித்தமென்னுமூன்றுமில்லாததாகியும், உள்ளதாகியும், நித்தியமாகியும், நின்மலமாகியும், நிர்க்குணமாகியும், நிராமயமாகியும், அத்துவிதமாகியும், ஆனந்தமாகியும், விளங்காநின்ற மேலான பொருளே நாம் தியானிக்கப்படும் பொருள் அந்தவுத்தமப்பொருளுக்குமேலானபொருள்ஒன்றுமில்லை. அப்பொருள் மனம்வாக்குக்காயங்களினால் அறிதற்கரிதான பொருளாதலால் அஃது நம்மைச் சுத்தசிவடியாய் எப்பொழுதுங் கொண்டருளி, நம்மைப்பணிகின்றவர்களுடைய பூசனைகளேற்புக் கொண்டு அவர்கட்கு சகலவரங்களையுங் கொடுத்தருளும். இவ்வார்த்தைமகாரகசியமாகும் இதனையாவர்க்கும் வெளியிடாமல் உன்மனதிற் சிக்கிக்கடவையென்று திருவாய்மலர்ந்தனர்.

அவையிதனைத்தையும் உமாதேவியார் செவிக்கமுதாகக்கேட்டு மீட்டும் சிவபிரானைப் பணிந்தெழுந்து, சுவாமி! அத்தன்மைத்தான மேலாகியபொருளை அடியாட்குத் தெரிசிப்பிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குச் சிவபிரான் கிருபைசுரந்து, பெண்ணே! சிவராகிகள்தோறும்பரிபூரணமாயிருக்கின்ற அந்த மேலாகிய பொருள் தேவர்களுடைய சிறையைநீக்கும்பொருட்டு இனி உண்ணிடத்தில் ஓர் புத்திரனுகஅவதரித்து அளவற்ற திருவிளையாடல்களைடோ

த்திக்தீவினைகளைச் செய்து வருகின்ற இந்துராஜனைச் சங்கரிக்கும். அதை உனதுகண்ணிஞற் காணப்போகின்றனை. அப்பொருள் உன்னிடத்தில் புத்திரனு யவதரிக்கும்படியாக நீசெய்யத்தக்க கருமம் ஒன்றுண்டு. சொல்லுவதற்கரியமந்திரம் ஒன்றுண்டு அவைகளேயாம் கூறக்கேட்டு அவ்வாறே பன்னிரண்டுவருட மநுட்டி யென்று சொல்லி, அநுட்டிக்கத்தக்க முறைமையையும் மந்திரத்தையும் உபதேசித்தனர்.

பின்னர் உமாதேவியார் அத்திரிருத்தி தேசத்திரத்தில் முன்னை நீர்யெழுந்தருளியிருக்கும் மயூரேசுரகாயகருடைய ஆலயத்திலிருந்து தமது காதலர் உபதேசித்தருளிய ஏகாட்சர மந்திரத்தைச்செபஞ்செய்து, பன்னிரண்டுவருடங் குவதநிலிருந்தனர் அப்பால் பாராதிதத்துவங்களேயெலாங்கடந்து எவ்விடத்தும் நீக்கமறநிற்குஞ் பேராணந்தப்பொருளே ஓர் திருவுருவகொண்டு உருத்திரமுகம் நடுவும் பிரமமுகம்வலமும், விண்டுமுகம் இடமுமாகமூன்றுமுகங்களோவாய்ந்து சந்திரனேதரித்த சடாமகுடங்களும், ஏழுவிழிகளும், சூலம் மழு-கமண்டலம உருத்திராக்கமாலிகை சங்குசக்கரம்என்னுமிலைகளேத்தரித்திருக்கின்ற ஆறுகரங்களும், கற்பூரம்போன்ற தவளமேனியுமுடைய விநாயகமூர்த்தியாகி, வெள்ளேரிஷபவாகனத்தையூர்ந்து உமாதேவியாரெதிரிற் பிரத்தியட்சமாயினர் உடனே உமாதேவியார் சாஷ்டாங்கமாகப்பணிந்து பலமுறை வேதாகமங்களாற்றுதிசெய்தனர், அதன்பி நு உமக்குவேண்டியவரம் யாதென்றுவிநாயகமூர்த்திகேட்க, அதற்கு உமாதேவியார்தொழுது சுவாமீதவரீர் எக்காலத்தும் அடியேற்கு தரிசனங்கொடுத்து முற்றிலுங்காத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர்

அதற்கு விநாயகமூர்த்தி கிருபைசுரந்து, ஓலோகமாயகியே! நாடோறுங்கொடுமைகளேயே நடாத்திவருகின்ற இந்துவைச்சங்கரிக்கவும், நம்மைவழிபட்ட தேவர்களே சிறையினின்று நீக்கி நல்லபதவிகளேக்கொடுக்கவும், யாம் உமக்குப்புத்திரனுக அவதரித்து உம்மிடத்திலேபேவளர்ந்து விளையாடிக்கொண்டிருப்போமென்று திருவாய் மலர்ந்து, தாம்முன்னர்வகித்திருந்த மயூரேசமூர்த்தியிற்கலந்தருளினர். அதற்குமேல் உமாதேவியார் சிவபிரானிடத்திற்சென்றுதமக்கு விநாயகமூர்த்தி தரிசனங்கொடுத்த திருவுருவத்தினுடையசிறப்பையும், அவர்கொடுத்தருளியவரத்தையும் விவரமாகத் திருவாய்மலர்ந்து மிக்க பேருவகையுடன் அவரோடு வாழ்ந்திருக்கின்ற காலத்தில், விநாயகமூர்த்திக்குவப்பாகியசதுர்த்திதேரிட அத்தினத்தில்ஓர்மண்

டபத்தை அலங்கரித்தமிருத்திகையினல் விநாயகமூர்த்தியினுடைய திருவுருவதனைச் சமைத்து வேதாகமமுறைப்படி பூசித்தனர்.

அப்போது அம்மூர்த்தியினின்று ஆச்சரியமாகும்படிவிநாயகக் கடவுள் ஓர்பெருஞ் சோதிரூபமாய்வெளிப்பட, அச்சோதியையுமா தேவியார்பார்க்கமாட்டாது கண்கள்கூசிப்பயந்தனர் அப்பால்சோதியாயெழுந்தருளிய விநாயகமூர்த்தியானவர் அளவற்றகண்களும், அளவற்றவாய்களும், அளவற்ற செவிகளும், அளவற்றமுகங்களும், அளவற்றகைகளும், அளவற்றகால்களுமாய்விஸ்வரூபங்கொண்டு நின்றனர் அதனை உமாதேவியார்கண்டு பயந்தெழுந்து, ஒருணக்குன்றமே தேவரீர் இவ்வுருவதனைநீடுமிருந்தால்எளியேற்கிணங்குமோ சுவாமிகள் அடியேற்கிணங்கும்படியான பாலகன்வடிவை எடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர் உடனேயன்னை உள்ளத்திலமர்ந்த விநாயகமூர்த்தியானவர் திங்களென்பதுசென்றுபிறந்தபாலகனாய், ஆறுகரங்களும் மூன்றுவிழிகளும்விளங்கும்படி. முத்துமாலையைத் தரித்தமார்பாடு உமாதேவியார் முன்நிலை அமர்ந்தருளினர்.

பின்னர் குருககத்தி நிறம்போலக் கோமளவுருவங் கொண்டு எழுந்தருளிய பாலவிநாயகமூர்த்தியை உமாதேவியார் ஆனந்தத் தேறுமெய்தி மடியிலவைத்துத்தமது திருமுலைப்பாலூட்டியருளினர் உடனே ஆகாயத்தில் பஞ்சகருவிகள் முழங்கின தேவர்கள்புட்பவருடனே சொரிந்தார்கள் நாற்றிசைகளினும் மந்தமாருதம் வீசின தேவர்கட்கெல்லாம் வலது தோள்களும் வலதுகண்களும்துடித்தன சிந்துராசனுடையகண்டகரதத்திலே உதிரமழைபெய்தது அவனரண்மனையினுங்கோபுரத்தினும் பகற்போதில் ஆந்தைகள்கூவின அவனுடைய இடதுதோளும் இடதுகண்ணுந்துடித்தன இவ்விதவுற்பாதங்களுண்டாகலுந் தன்பத்தினிலழிந்தியிருந்த தேவர்களெல்லாம் மனமகிழ்ந்தார்கள். கெட்ட வுற்பாதங்களைக்கண்டசிந்துராசன் உடனேசில தூதர்களையேவி இவ்வுலகத்தில்தேதனும் அதிசயமுண்டாயிருக்கில் அதனைத்தெரிந்துவரக் கடவீர்களென்று கட்டளையிட்டனுப்பினன். அங்ஙனமே உலர்ந்த விருட்சங்களெல்லாந் தளிர்த்தன வறந்த பசுக்களெல்லாஞ்சுரந்து கரந்தன இவையனைத்தையும் உலகத்தினுள்ளோர் கண்டு நமக்கெல்லாம் நற்காலம் வந்தாற்போலிருக்கின்றதென்று மனத்துயர்நீங்கிமிக்க அதிசயத்துடனே மகிழ்ந்திருந்தார்கள் கவுதமர்முதலிய முனிவர்களெல்லாம் வரிசைவரிசையாகவந்து சிவபிரானுடைய திருவடிகளில் வந்தனைசெய்து உமாதேவியார் திருக்கரத்தில் அவதரித்திருக்கின்ற பாலவிநாயகமூர்த்தியைச்

சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து அவருக்குக்கணேசரென்றுதிரு நாமஞ் சாத்தித் துதித்தார்கள் இவ்வாறு விண்ணவர்கட் கெல்லாந் தொழுகுலமாயும் வேதங்களினுடைய பயனுதியும், கருதுவோர்க ளுடைய இடர்களைப் பொடிபடுத்துங்களைகணுதியும், எனதுள்ளத் தில் கண்ணி எளியேன்புரியும் பணிகளைக்கைக்கொள்ளு மிறைவனு தியுமிருக்கின்ற விநாயகமூர்த்தியானவர் மனிதர்களுடையமகவைப் போல உமாதேவியாரிடத்திற் குழந்தையாகி வளர்ந்தருளுங்காலத் தில் ஓர்நாள்கிருச்சமதமுனிவர் அத்தலத்தில்வந்து விநாயக மூர்த் தியைப்பணிந்தெழுந்து ஓர் பிரதாம்பரத்தை அவர் திருமேனியிற் சாத்தித் தமதாசிரமத்திற்குப்போயினர். இவ்வாறுஆங்காங்குதவஞ் செய்கின்ற முனிபுங்கவர்களெல்லாம் ஓங்காரப் பொருளா யிருக்கி ன்ற கணேசமூர்த்தியைக்கண்டுபணிந்து போவதும் வருவதுமாயிரு ந்தார்கள், அப்போது ஓர்நாள் மரீசிமுனிவர்வந்து தொழுதுபோக அவரை அந்தமில்க்ஷேத்திரத்திலிருந்த முனிபுங்கவர்களெல்லாஞ் சூழ் ந்து சுவாமீ தேவரீர் அடியேங்கட்குத்துன்பம் நேராதபடி ஒருபாய த்தைத் திருவாயமலர்ந்தருள வேண்டு மென்று பிரார்த்தித்தார்கள் அதற்கு மரீசிமுனிவர் அவ்விருடியர்களைப் பார்த்து அன்பர்களே நீங்கள் என் இவ்வாறு சஞ்சலப்படுகின்றீர்கள் சகல விக்கினங்களை யுந் தீர்க்கத்தக்க விக்கினராசரே இங்கு உமாதேவியாரிடத்தில் புத் திரராயவதரித்திருக்கஉங்களிடத்தில் துன்பமென்பது நெருங்குமா நெருங்காதே ஆயினும் கிரேதாயுகத்தில் பத்துகைகளும் சோதியுரு வமும் சிங்கவாகனமும் திரேதாயுகத்தில் ஆறுகைகளும்வெள்ளைமே னியும் மயில்வாகனமும் துவாபரயுகத்தில் நாலுகைகளும் சிவந்தமே னியும் பெருச்சாளிவாகனமும் கலியுகத்தில் இரண்டுகைகளும்மேக நிறமும் குதிரைவாகனமுமாகப் பிரகாசிக்கும்.

கணபதிதுணை.

விநாயகக்கவசம்.

ஓ ஓ, மகா தவசிரேஷ்டரே அமிர்தண்டகாரணத்தால்அமரெ னப்பெற்ற தேவர்களும்பகைபிணியாதிய துக்கவசத்தினாயிருந்தி ன்றனர் நீங்களோகேட்டல், தெளிதல், சிந்தித்தல்நிட்டைகூடல்என் னும் சதுட்டயங்களையும் சாதுசங்கம் சாத்திரப்பயிற்சி ஓவா முய ற்சியாதிகளையும்நீங்காது இறைவன் றிருநெறித்தாகியசாத்திரஞா ணமிர்தத்தையுண்டு தேக்கத்தினைத்துயோகீச்சுரரெனப்பெயர்பெற்

நீர்கள் உங்களினுமிக்கா ரெங்குமில்லை எல்லாம்வல்ல இறைவனும் அடியார்குறிப்பி னெறியே நடப்பவராயிருக்கின்றனர் ஆதலால்உங் களிற் சிறந்தோரில்லை யில்லை உங்களையடைந்த யானும் புனிதனாயி னேன் சிவபோக ரதியாச்செயலுமுண்டோ இல்லை ஆயினும் எனது புண்ணியப்பேற்றினும் அளவளாவிய எனதுபேராசையினும் நீங் கள் விரும்புவதனும் இதனைச்சொல்லுகின்றேன் அங்ஙனஞ்சிரத் தாபத்தினராய்த் தெளிவீர்களாக.

சர்வகாரணராயும், சர்வாணுக்ரகராயும், சர்வக்ஞராயும், சர் வாந்தர்யாமியாயும் சர்வதாவாயு மிராநின்றது யாதோ அச்சாக்ஷா த்விநாயகக் கடவுளுடைய மந்திரம் ஒன்றிருக்கின்றது அது விநா யக கவசம் என்றுசொல்லப்படுவது அம்மகாமந்திரத்தை முன்னர் அநேக மகத்துக்களனுட்டித்ததன்றி பின்னர் காசிபமுனிவர் மூக்க லமுனிவருக்கும், அவர் மாண்டவியமுனிவருக்கும் அவர் எமக்கும் உபதேசிக்கப்பெற்றது. அங்ஙனம்யாம் முறையாக உங்கட்குபதேசி க்கத் தொடங்கினேன அதாவது:—

அற்புதீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வளர்சிகையைப் பாரபாரமாய் வயங்குவிநாயகர்காக்க வாய்ந்த சென்னி, யளவுபடாவதிகசவுக்தரதேகமதோர்கடர்தா மமர்ந்துகா க்க, வினரறநெற்றியையென்றும் விளங்கியகாசிபர்காக்கப் புருவந்த ம்மைத், தளர்வின்மதோ தரர்காக்கத் தடவிழிகள் பாலசந்திரனூர் காக்க. க

கவினதரங் கசமுகனூர் காக்கத்தா லங்ஙணங்கிரீடர்காக்க,ரவி ல்சிபுகங்கிரிசையதர் காக்கநனி வாக்கையிரா யகர்தாங் காக்க, ரவி ர்நகைதன் முகர்காக்க வள்ளைழிற்செஞ் செவிபாச பாணி காக்க, தவிர்தலுறு நிளங்கொடிபோல் வளர்மணிகாசியைச்சிந்தி தார்த்தர் காக்க. உ

காமருபூ முகந்தன்னைக் குணேசர்களி காக்களங் கணேசா காக்க, வாமமுறு மிருதோளும் வயங்குகந்த பூர்வசர்தா மகிழ்ந்து காக்க, வேமமுறு மணிமூலவிக் கினவிநாசன்காக்க விதயந்தன்னைத், தோமகலுங் கணநாதர் காக்கவகட்டினைத்துலங்கே ரம்பர் காக்க. ஊ

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்கப் பிருட்டத்தைப் பாவலீக் கும், விக்கினகரன்காக்க விளங்கிலிங்கம் வியாளபூடணர்தாங்காக்க தக்கருயர்தன்னைவக் கிரதண்டர் காக்கசக னத்தை யல்ல, லுக் ககண பன்காக்க வூருவைமன் களமூர்த்தி யுவந்து காக்க. ஸ

தாழ் முழந்தாண் மகாபுத்தி காக்கவிரு பதமேக தந்தர்காக்க, வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்கமுன்கையை வணங்குவார்கோ, யாழ்தரச்செய் யாசாபூ ரகர்காக்க விரல்பதுமவத்தர் காக்க, கேழ் கினரு நசங்கள்விகா யகர்காக்கக் கிழக்கினிற்புத் தீசர் காக்க. ஞ

அக்கினியிற் சித்தீசர் காக்கவுமா புத்திரர்தென் ஞைகாக்க, மிக்கவிரு திபிற்கணே சுரர்காக்க விக்கினவர்த் தனர்மேற் கென்னுங், திக்கதனிற் காக்கவா யுவிற்சகசன் னன்காக்கத் திகழு தீசி, தக்கரி திபண்காக்க வடகிழக்கி லீசகந் தனரே காக்க. சு

ஏகதந்தர் பகன்முழுதுங் காக்கவிர வினுஞ்சந்தி யிரண்டன் மாட்டு, மோகையின்விக் ஙினகிருது காக்கவிராக் கதர்பூத முறுவே தாள, மோகினிரீப யிவையாதி யுபிர்த்திறத்தால் வருந்துயரு முடி விலாத, வேகமுறு பிணிபலவும் விலக்குபுபா சாங்குசர்தாம் விரைக் துகாக்க. எ

மதிஞானந் தவந்தான மானமொளி புகழ்குலம்வண் சரீர மூற் றும், பதிவான தனந்தானி யங்கிரக மீனவிமைந்தர் பயினட்பாதி, கதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க காமாபவுத்திரர்முன்னை, விதி யாருஞ் சுற்றமெலா மயூரீச ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க. அ

வென்றிசீ விதங்கபிலர் காக்கசரி யாதியெலாம் விகடர் காக்க வென்றிவ்வா றிதுதணமுக் காலமுமோ திடி னும்பா லிடையூ றெனு று, மொன்றுமு முனிவரர்கா ளறியின்கள் யாரொருவ ரோதினலு, மன்றவரங் கவர்தேகம் பிணியறவச கிரதேக மாகி மன்னும். கூ

என்பனவாம்.

இக்கவசத்தை, யாவரேனும் நித்தியகருமங்களை முடித்துப்பரி சுத்தராய் சித்தசாந்தத்தோடு வசதியான ஓரிடத்திலிருந்துகொண்டு விநாயகக்கடவுள் திருவுருவங்களை மனதிற்குறித்தபடி ஜபஞ்செய்து வந்தால் அவர்களைப் பற்றியிருக்கின்ற பிணி, வறுமை. பேய், பூதம் துயரம்; கவலை, பகை, பழி, பாவம் முதலிய தீமைகளெல்லா மொழி ந்து ஆயுள்; கல்வி, மனைவி, மக்கள், பூமிபொன்,மணி,தானியம்,கீர் த்தி, சுகஜீவனம், வாகனம், ஆளுமை; பந்துஜனசேர்க்கை, தேகதி டம், மனோதைரியம், முதலிய போகபாக்கிய சித்திகளுண்டாகும் அன்றி, மூக்காலத்தினும் ஒதினல் யாதொரு இடையூறும் வராது, பாத்திரை வாசிகள் தோத்திரஞ்செய்தால் சகலவிக்கினங்களுந்தொ லைந்து,மேலான பயன்களைப்பெறுவார்கள் சமர்க்களத்திற் ரோத்திர ஞ்செய்தால் வெற்றி பெறுவார்கள் பிரதினம் ஏழுமுறையாக இரு

பத்தொருகாள்தோத்திரஞ்செய்தால் உச்சாடனம், வித்துவேடணம் ஆகருஷ்ணம; தம்பனமுதலிய வித்தைகளெல்லாங் கைகூடும்; சித்தம் இருபத்தொரு முறை தோத்திரஞ் செய்தால் சிரகதோஷ முதலானவைகள் நீங்கும்: அரசர்களைக்காணும்போது பத்தியோடு மும்மூறை தோத்திரஞ்செய்தால் அவ்வரசன் உடனேவசியமாவன் அம்மந்திரத்தை தானிப்பணியேட்டில் எழுதிப்படித்தாலும் படிப்பித்துக் கேட்டாலும், அன்போடு பூசித்தாலும் சகல இடர்களுந்தீரும் அன்புடனுறதி. ஆசாரம் இவைகளில்லாதார் என்ன கொடுத்தாலும் இம்மந்திரத்தை அவர்கட் குபதேசிக்கத் தகாது

ஆதலால் முனிவர்களே! நீங்கள் இம்மந்திரமிரத்தை அனுட்டிப்பீர்களாயின் உங்களிஷ்டசித்திகளை எளிதிற்பெற்றுசுகிப்பீர்கள் என்றுமகீசிமுனிவர் திருவாய்மலர்ந்து தமது ஆசிரமத்திற்குச்சென்றனர், அது முதல் எல்லா முனிவர்களும் அக்கலச மந்திரத்தைச் செபஞ்செய்து வந்தார்கள்

இவ்வாறுக, முன்னர் சிந்து ராசன் விடுத்த தூதர்கள் வாயுவேகமனோவேகமாய்ச்சென்று பூலோகம் காகலோகம் தெய்வலோகமுதலிய விடங்கள் முழுவதுஞ்சோதித்து எங்கும்ஓர் புதுமையேயுங் காணுதவர்களாகி மீட்டும் பூலோகத்தை நோக்கவரும்போது தண்டகவனத்திலிருக்கின்ற திருசுத்திரத்தை யணுகி அங்குவசித்திருக்கின்ற முனிவர்களுடைய தவப்பெருக்கையும், வேதகோஷ்டங்களையும், உமாதேவியாருடனே சிவபிரானெழுந்தருளியிருக்கின்ற சிலாக்கியத்தையும், வெற்றிவிளங்கும்படியான புத்திரனைப்பெற்ற உமாதேவியாருடைய மனவிருப்பையும், மற்றுமுள்ள செழிப்புகளையுங்கண்டு சிந்து ராசனிடத்திற்சென்று பணிந்து ஆண்டவனே அடியேங்கள் திரிலோகங்களினுஞ் சென்று சோதித்து வந்தோம் ஒரு அதிசயங்களையுங்காணேம் ஆனல் தண்டக வனத்தில் திரிசுத்திகேஷத்திரத்தில் சிவபெருமான் உமாதேவியோடு மெழுந்தருளியிருக்கின்றனர்.

அங்கே அளவற்றமுனிவர்கள் தவஞ்செய்துக்கொண்டு மிக்கதருக்கோடிருக்கின்றர்கள். அவர்களுக்குள் எண்பத்தெண்ணுயிர முனிவர்களிருக்கின்றனர். அவர்களோ நினைத்தமாத்திரத்தில் மூவுலகங்களையுமழித்து மீட்டும் உண்டாக்கி ரட்சித்தவர்கள். அவர்களுடைய பெருமைகளை ஒருவாற்சொல்லி முடிவனவன்று. அன்றியும் சிவபெருமானே அவர்களிடத்தில் வந்திருப்பாராயின் அவர்கள்மேன்

மையை எம்போலிகளாற் சொல்லிமுடிவதோ? இதையே ஓரதிசய மாக நினைக்கவேண்டாம். அவ்விடத்திற்றானே மற்றொருபுதுமையை க்கண்டனம். அஃது யாதெனில். உமாதேவியார்செய்த தவத்தினால் சோமவாரமும், விநாயகசதுர்த்தியும், விசாக நட்சத்திரமுங்கூடிய நேற்றையதினத்தில் சிங்கலக்கினத்தில் ஓர்குழந்தை பிறந்திருக்கின் றது. அக்குழந்தை வெள்ளைமேனியும், ஆறுகைகளும், மூன்றுகண் களும், மிகுந்தபராக்கிரமமுள்ளதாய் முத்துமாலையைத்தரித்த மா ர்போடு விளங்கியிருக்கின்றது முனிவர்களெல்லா மக்குழந்தைக்குக் கணேசரென்று நாமகரணஞ் செய்தார்கள் அதைபாவருங் குழந் தையென்று எண்ணாமல் நான்தோறுந்திரிகாலமும் வந்து பணிகின் றனரென்று அறிவித்தார்கள் அவை யனைத்தையுஞ் சிந்துராஜன் கேட்டு முன்னஞ்சிவபிரான் சொல்லியவாக்கின்படி நம்மைக் கொல் லுவதாகக் கணேசமூர்த்தியே இவ்வாறு உமாதேவியிடத்தில் அவத ரித்தனர்போ லிருக்கின்றதேயென்று நினைத்து இதற்கினியென்ன செய்வோமென்று மனதிற்கவலைகொண்டிருக்கின்ற சமயத்தில்"உன் னை அவனே கொல்லுவான்,, என்று ஒரு அசரீரி உண்டாயது அதனை க்கேட்டவுடனே சிந்துராஜனவன் புண்ணில் வேல் பாய்ந்தாலெ ன்னக்கோபித்து, இவ்வாறு சொன்னவனுர்? அவனை இங்குமிடத்திற் பிடி மின்கள்; அடி மின்கள் அவனைக் கண்டதுண்டமாய் வெட்டிப் பருந்துக்கெதிரே யெறியுமின்கள்; என்று ஏவலாளர்கட்காக்கியாபித் தான் அவர்கள்நாற்றிசைகளினும் ஓடிப்பார்த்து கர்த்தனே அவ்வா றுசொன்னவனே யெங்குங் காண்கிலமென்று கூறினர்கள். அதற் குமேல் சிந்துராஜன்சிறிது மாற்றுதவனுய் விழிகளிரண்டும் அனல் கொப்புளிக்கச் சினந்து எனக்கு மாற்றனுய் வந்த குழந்தையை இன்றேபிடித்து வருவேனென்று ஆங்கிரமித்தெழுந்தான் அதைஅ மைச்சர்கள்பார்த்து சிந்துராஜனப்பணிந்து அவன்மனஞ்சாந்தமாக த்தக்கநெறியினை யாலோசித்து, ஆண்டவனே! விண்டுவேமுதலியதே வர்கள்மூனிவர்கள்யாரையும் அகலக்கூடாத சிறையில்வைத்திருக்கி ன்ற தேவரீர் இஞ்ஞான்தொப்புட்கொடி வாடாதகுழந்தையைச் சத் துருவாகக் கருதிப்போவதுதருமமா? தருமத்தைப் பாராவிடினும், அதனல்தேவரீருடைபெரும் புகழும்பெருமையும் பிரகாசமும் ஒருங் கேகீங்குமன்றே? இதனிமித்தம் நமதுபடைத்தலைவர்கள்வெளிப்படு வார்களாயின் அஃது இழிவாகுமே சிவபிரானுடையபுதல்வனை ஒரு வராற்கொண்டுவரமுடிவதோ ஆதலால்யுத்தத்தினுமாயையினும்வல் லசில அசுரர்களை இரகசியமாயனுப்பி அவர்களால் அங்கிருப்போர் களறியாவண்ணம் அக்குழந்தையை வதைசெய்வதே கருமமென்று

சொன்னார்கள். அவைகளே ராசன்கேட்டு உடனேபோரினும் மாயையினும் வல்லவர்களாய்ப் பாதகமனேத்தும் ஓர் வடிவமாகக்கொண்ட கொள்கையராய்த் திருமான்முதலிய தேவர்களுங்கண்டஞ்சத்தகை கீர்மையினியுடையவர்களாயிருக்கின்ற சிலஅசுரர்களைகூவி நீங்கள் எந்த உபாயத்தினுலேனும் எனக்குச் சத்துருவாகிய சுஸ்வரகுமாரனேவதைசெய்துவரக் கடவீர்களென்று சொல்லி அவர்கட் காடை யாபரணமுதலிய சிறப்புகளையும் இரதம் கசம்முதலிய படைகளையும் உதவிசெய் தனுப்பினன்.

அவ்வசுரர்க ளதற்கிசைந்து பிரதிதினம் வேறுவேறு முறையாகத்தாங்கள் நாசமடையும்படி கணேசரூர்த்திபினிடத்திற் போனார்கள். அவர்களுள் கிருத்திராசுரனென்பவன் ஓர் கழுதுருவங்கொண்டு தனதுநிறகின்காற்றினல் அநேக பர்வதங்களையும் விருக்கங்களையும் நிலகதில்விழுத்தள்ளிப் பெரியமேகங்க ளெல்லாஞ் சின்னபின்னப்படும்படி அலேத்துப்பூமியினுள்ள வலிமையான வத்துக்களையெல்லாம்பொடிபடுத்தி ஆகாயமார்க்கதிற்பாய்ந்து குருரியான துகெருப்பை மின்மினிப்பூச்சென்றுகருதித் தனதுகூட்டில்லைவகை எடுத்துக்கொண்டு செல்வதுபோல உமாதேவியார் குளிப்பாட்டி முன்றிலில்வைத்திருந்த பாலவிநாயகமூர்த்தியின்மீது சரேலென்று பாய்ந்து எடுத்துக்கொண்டுபோயினன். அதைமுனிவர்களெல்லாங்கண்டு பயந்துநின்றார்கள். கணநாதர்களெல்லாம் விநாயகமூர்த்தியை மீட்டுக்கொண்டுவருமாறு ஆகாயத்திற்பாய்ந்தார்கள் அதற்கு அவ்வே தம்மை யெடுத்துச்சென்ற கழுதின்கழுத்தை ஓர்காத்தாற்பிடித்து நெறித்துமீட்டும் உமாதேவியார்மடியிலவந்தமர்ந்தனர் கழுதுருவங் கொண்டிருந்த கிருத்திராசுரன் தனதுசுயரூபத்தோடு பூமியில் உதிரப்பிரவாகமோடும்படியாகவீழ்ந்திறந்தனன். அவன்வீழ்ந்தபோது பத்துயோசணவிசாலத்திற்கிருந்தமரம் கொடிமுதலானவைகளெல்லாந்தகர்ந்தன. அவன் சரீரத்தினின்றும்பெருகிய உதிரப்பிரவாகத்தில் கிரண்டசிலேகளும் மலேகளும்முழுகிப்போயின. இவ்வதிசயத்தைப்பார்த்திருந்த முனிவர்களெல்லாம் மூன்றுகளேய குழந்தை அதிகமாயையினுடைய அசுரனேச்சங்காரித்ததல்லவாவென் றுச்சரியமானர்கள். ஏனைய அசுரர்களெல்லாம்பயந்து ஓடிப்போனர்கள்.

அதற்குமேல் இரண்டாந்தினங்களில் கேமாசுரனென்றுங்குசலாசுரனென்றும் பன்னிரண்டியோசணையுயரமுள்ள இரண்டவுணர்கள் ஆகுவாய் உருவெடுத்துவந்து ஒருவரோடொருவர் சண்டை செய்துக்கொண்டு விநாயகமூர்த்தியின்மீது வீழ்ந்தார்கள். உடனே எம

தையன் பூணியாகத்திருவுருக்கொண்டு அவ்விரண்டு ஆருவையுங்க டித்துக்கொன்றுவிட்டனர் மூன்றுர்த்திகளில் அதிக பராக்கிரமமு ம் பதினேந்துயோசனேவுயரமுள்ள குரூராசுரனென்பவன் பூணியுரு வங்கொண்டு சுவாமிக்கெதிரில்வந்தனன் அதனேச்சுவாமியறிந்து த னதுகான்குவேதங்களேயும்நீண்டத்தருளினர் உடனே அவ்வேதங்கள் காய்வடிவாகவந்து பூணியாகவிருக்கின்ற அசுரனே கடிதுக்கொன் றுபோயின. கான்காந்திங்களில் பலாசுரனென்பவன் ஓர் முனிவர்கு மாரனுகவுருக்கொண்டுவந்து நாம் விளேயாடலாம்வாவென்று விகா யகமூர்த்தியை யழைத்தான் அவனே சுவாமி விளேயாட்டினுலேயே கொன்றுவிட்டனர் அவன் இறந்தபின்புதனதுசயரூபத்தோடு இரு பதுயோசனே விசாலத்திற்குப் பூமியில்வீழ்ந்தான், ஐந்தாந்திங்களில் வியோமாசுரனென்பவன் ஆகாயத்தையளாவிய ஓர் மாமரமாகவு ருக்கொண்டுநின்றன் அதிலுள்ளகாய்கனிகளேச் சில முனிச்சிரூர்க ள்பறித்துத்தின்று அசுரனேமாய்த்தபோனர்கள் அதனுல் அவர் களுடைய தாயர்களெல்லாமிகவுந் துக்கித்து வருந்தினுர்கள் அவ் வதிசயத்தை விநாயகமூர்த்தியறிந்து அந்நிமிடத்தில் அம்மாமரத் தருகில்வந்து அதில் தேன்கூடுகட்டி யிருக்கின்ற ஓர்பொந்தினேக்க ண்டு நுழைந்தனர் உடனே அப்பொந்தானது சுவாமியை உள்ளே யடக்கி மூடிக்கொண்டது.

அதைப்பார்த்து முனிவாகளெல்லாம்கடுங்கி இஃது மாமரமல் ல ஏதோ ஓர்மாயையென்றுபயந்து ஓடினுர்கள். அப்போது சுவாமி அம்மரத்தினுள்ளிருந்தவண்ணமே அதை அலேத்துப் பிளந்து முன் னெருபோது தூணினினறும் உதித்தநரசிங்கத்தைப்போல வெளிவ ந்து அதனடியில் இறந்துகிடக்கின்ற முனிச்சிரூர்கட்கு உயிர்கொ டுத்தெழுப்பினர் பின்னர்யாவரும் ஆனந்தங்கொண்டு ஆயிரத்தெட் டண்டங்களேயும் ஒரேகுடையிலாண்ட சூரபன்மனுகியமாமரத்தை ச்சுப்பிரமணியதேவர் துணிததெறிவாராயின் அவர் தமையனுகிய இவருக்கு இம்மாமரத்தைத்துணிப்பது அரிதோவென்றுதிகைய் தார்கள். ஆருந்திங்களில் ஈ ளொன்றற்கு நூறு எருமைகளேதின் றுவருவதால் சதமயிடபக்கணியென்னும் பெயரினேயுடைய ஓ ரசுர மாதானவள் இந்திராணியைப்போலவுருக்கொண்டு உமாதேவியாரி டத்தில்வந்து தாயே யான் புலோமசை எனதுகாதலர் அவுணராச னுடைய சிறையிலகப்பட்டு நெடுகாளாகவருந்துகின்றனர் யான் அ வர்களி னின்றுந் தப்பி யோடிவந்து தேவரீரைச் சரணடைந்தேன் இனியெனக்குத் துன்பமனுகாதபடி தேவரீர்பாதுகாத்தருளவேண் டுமென்று இரந்தாள் அதைக் கருணேநாயகியாகிய உமாதேவியார்

உண்மையென்றேகருதி, ஓ சசியே! சூரியன் இருளையுண்ணுமாறு போல இன்னுஞசிலகாலையுள் அவுணரையெல்லாம் இவ்வறுபுயராகிய விநாயகமூர்த்தியுண்டருளித தேவர்கட்கெல்லாம் கிருபைவழங்குவர். அப்போது இந்திரன்சிறையுமநீங்கும், அதுகாறும்நீ மனக்கவலையொழிதது இங்ஙனமிருவென்று திருவாய்மலாநது கல்ல போசனமும ஆடையாபரணுதிகளு மவளுகருக கொடுத்தருளினர்.

அவ்வாறே அப்பாதகி சிலகாலிருநது ஓகாள உமாதேவியார் சோர்ந்து நிதநிசையையும சமயமபாதது விநாயகமூர்த்தியைக் கைக்கொண்டு ஆகாயமாகசததிற் சென்றனள் சுவாமி அவள் ஒக்கலிலிருந்தவண்ணமே அவள் செவியைப பிடி தநிமுத்து நிலத்திற் சாய்ந்துநீருகி மீடடும உமாதேவியாரிடதது லெழுநதருளினர் ஏழாநதிங்களில கமடாசுரனென்பவன் சுவாமிதிருவிளையாடல்செய்யுமிடத்தில் ஆமையுருகொண்டி மெலலமெலலஓநதுவந்தான் விநாயகமூர்த்தியானவர முனனாதிருபபாறகடலேகலகியவிண்டுவாகிய ஆமையினுடலேகுழபபியடகுருந தமதுதாளினால அவனதுவலியெல்லாங்குன்றும்படிவைதது தகொனறனர எடடாநதிங்களில் உமாதேவியார்கணேசமூரதநியை யெடுதது தகொண்டு சிலபாங்கியரோடுஞ சேலைகளிற்சென்று வசிதநிருநதனர கணேசமூரதநி அசசேரலியிற்றனியேவிளையாடலசெய்திருநதனர அசசமயதநில வலியில் மகமேருவைநிகாதநதவனுய வேகதநில சூரியனுடையகுதிரைகட்கு ஒப்பானவனுகியிருகினற கற்பகாசுரனெனபவன ஓர குதிரையுருவங்கொண்டி சுவாமிக்கெதிரில்வநதனன் உடனே அக்குதிரையின்மீது சுவாமி ஆரோகணிதது அதனே வாயுவேகதநினும்விரைவாய்த் திரிலோகங்களினுஞசெலுதநி அசசேரலியிலவர்து இறங்கினர் அப்போதக்குதிரையாகிய அவுணனவன் குடலறுபட்டுக் கடைவாயில்விலாவி வழியும்படியாக ஓர பாவதநுசென்று கடலில வீழ்ந்தாற் போலதநது இயல்பானவுருவதனேதாடு இருபதநதைந்து யோசணை விசாலத்திற்கு விழுநதிறந்தான் ஒன்பதாநதிங்களில் தந்துபிக்குரு ளுடைமையாற் முநதுபியென்னும் பெயரினையுடைய ஓரசுரன் விடத்தை நாவற்கனிகளேப்போலச்சமைத்து ஓர்முனிசசிறுன்போல்வுருவெடுத்துவநது கணேசமூரத்தியையழைத்தான்.

அதனிக்கணேசமூர்தநியறிந்து தமக்கு உமாதேவியார் அமிர்தங்கலந்துசெய்துகொடுத்த மோதகதனேதாடும அவனருகிற்சென்று அவன்கொணர்ந்தநாவற்கனிகளேயெல்லாம் வாங்கித்தலையை அசைத்தசைத்து உண்டருளியபின்னர் தமதுகரத்திலிருந்த மோதகத்தை அவனுக்குகொடுததார் நீயோக்கு நல்லபொருளுங்கெட்

டபொருளாகும் என்றுமேலோர்சொல்லும் வாக்கியத்தின்படி அம் மோதகத்தை அப்பாதகன்புசித்தமாத்திரத்தில் அதிற்கலந்திருந்த அமிர்தமேவிடமாகி அவனைக்கொன்றது அவன் கொடுத்த விடமே எமதையனுக்கமிர்தமாயது பத்தாந்திங்களில் விண்ணேமுட்டிய சிர த்தினையுடையவனுகியும் விண்டுவாதிதேவர்களும் அஞ்சத்தக்கவலி யையுடையவனுகியுமிருந்த அசகாசுர னென்பவன் பூமியைத்தாங் கும் ஆதிசேடனேனென்றுமலைக்குப்படியான ஓர்மலைப்பாம்பாகஉரு க்கொண்டு உமாதேவியாரிருக்கின்ற சோலையின்கண்வந்து சிலமுனி ச்சிறார்களோடுஞ் சென்று தனிமைய விளையாடற் செய்திருக்கின்றக ணேசமூர்த்தியையெடுத்தது இராகு சந்திரனைவிழுங்குவதுபோலவி ழுங்கினன். உடனே இடையிற் சர்ப்பக்கசகினைவீக்கிய எமதுகர்த் தன் உதையகிரியிலெழுந்த இளங்கதிராய்போல அப்பாம்பின் கட் டைப்பிளந்துதழுகுந்து திருமனிமுழுவதும் உதிரமாக உமாதேவி யாரிடத்திற் சென்றனர் அவர் தமதுபாலகரை நீராட்டி எடுத்துக் கொண்டு மீட்டுந்தமதுகோயிலேநோக்கிச்சென்றனர் பின்னர் மலைப் பாம்பாகவந்த அசுரன்தனது சுயருபதரிநாடி நாறுயோசனை விசா லம்மலைபோல்விழுந்து இறந்தான் அவனுதரத்தினின்றும்பெருகிய உதிரவெள்ளமானது ஓர்பெரிய ஆறுகண்வாடிக்கடலிற்பாய்ந்தது ப திமினராகந்திங்களில முனைபோல உமாதேவியார சிலவிருடியர் பத்தி னிகளோடுகுளிர்ந்த பொருளிறஞ்சென்று தமது குழந்தையை விளை யாடவிட்டிருந்தனர அப்போது அப்பாலகனிராயகமூர்த்தி அவ்வி ருடியர்பத்தினிகளிடத்திற்சென்று ஒருத்திமடித்தலத்தினின்று மற் றொருமடித்தலத்திலேறியும முதலங்கொடுக்கவேண்டினோர்க்குமுத் தங்கொடுத்தும், சிலர்மாராந்தென்றுதழுவியும், சிலர் தோள்புல் லி ஏறியும் சிலர் ஆபரணங்களையறுத்தெரிந்தும் சிலரை அடித்தோ டி ஓர்மரத்திலே யொளித்துகொண்டும் தம்மை யடிந்தோடியபே ரை உடனேபிடித்துவந்தும் ஒவ்வொருத்திவிழிகளேமூடிவிட்டும்தம விழிகளை அவர்மூடிவிட்டால் புன்சிரிப்போடுமோடி மற்றொருத் தியைப்பிடித்துவந்தும இவ்வாறு பற்பல விளையாடல் செய்திருந்த னர் அப்போது சபலாசுர னென்பவன் எட்டுகால்களையும் இரண்டு தலைகளையும் அழலைப்போன்ற விழிகளையும் பிறைபோல் வளைந்த கோரைப்பற்களையுமுடைய சரபப்பட்சியுருவமாய்த் தனதுசிறகை விரித்துக்கொண்டு ஆகாயமார்க்கமாகப்பறந்து வந்தனன் அவனது சிறகின்காற்றினுல் மலைகளெல்லாமுடிசரய்ந்தும் பறவைகளனைத்து ஞ்சின்னபின்னமாகமுறிந்தும் சமுத்திரங்கள்பொங்கி அண்டபுரண் டும்போயின அதை இருடியர் பத்தினிகள் கண்டு நடுங்கி ஓடிப்போ

னர்கள் உமாதேவியார்பயந்து சிவபிரானுக்கறிவிக்குமாறு விரைந்
துசென்றனர் ஆயினும் முன்னெருபோது நரசிம்மதத்தைத்தாக்கிய
எண்டோட்சரபத்தினுடைய குமாரராகிய கணேசமூர்த்திமாத்திர
மஞ்சாமல் நெடுகவளர்ந்து அவ்வவுணச்சரபத்தினுடைய கால்களை
ப்பற்றியிழுத்து ஓர்பெரிய பாறையின்மீதுமோதிக் கொன்றனர் அ
தைக்கண்ட முனிவர்களெல்லாமாச்சரியங்கொண்டு இவர் தந்தை
முன்னர் சிங்கத்தைவெல்லுவதற்குச்சிம்புளுருக்கொண்டனர். இப்
போதிவர் அச்சிம்புளையே கொன்றமையால் இவரைச்சிம்புட் சிம்பு
ளெனச்சொல்லத்தகுமெனத் துதித்துப்பணிந்தார்கள். பன்னிரண்
டாந் திங்களில் வீமாசுரனென்பவன் ஓர் விசுவகன்மாவாக வுருவெ
டுத்துச்சலாசுரன் சிலாசுரன் என்னு மிருவரை இரண்டு சிலம்புக
ளாக்கிக் கொண்டுவந்து கணேசமூர்த்தியினுடைய திருவடிக்குமு
ன்னேவைத்துப்பணிந்தான் சர்வஞ்ஞமூர்த்தியாகிய எமதையன்
அவ்வஞ்சகத்தை யறியாதவர்போலத் தமது மனத்தில் வேறுரெ
ண்ணத்தை வகித்து அவனோடு இனியவார்த்தைகளாடி மகிழ்வித்
து அச்சிலம்புகளேயெடுத்துத்தடிது திருவடிகளி லணிந்துகொண்டு
நிருத்தமாடினர்.

இவ்வாறு கணேசமூர்த்தி நிருத்தமாடலும் பூதங்கள்-புவனங்
கள்மலைகள்-கடல்கள்-உயிர்த்தொகைகள் வேதாகமபுராணங்கள்மு
தலானவைகளோடுபிரமர்கள்-விண்டுக்கள் உருத்திரர்கள் முப்பத்து
முக்கோடிதேவர்கள்-நாற்பத்தெண்ணூபிரமுனிவர்கள்-கருடர் கின்
னரர்-கிம்புருடர் சித்தர்-வித்தியாதரர்-பூதர்-பைசாசர்-ஆகாய வாசி
கள் போகபூமியர் முதலாயுள்ளசகலரும் ஆடினர்கள். சிலம்புகளா
யிருந்த இரண்டசுரர்களும் அந்நிருத்தத்தைச் சகிக்கமாட்டாது
தங்களாண்மை யணைத்துங்குன்றி மிகவும் வருந்தினர்கள். அப்போ
து கணேசமூர்த்தியானவர் தமது பாதங்களே வீசி உதறினர் உட
னே அச்சிலம்புகள் சவாமி பாதங்களினின்று நீங்கி வீமாசுரன்பே
ரில் விழுந்துபுரட்டிக்கொன்றது. பின்னர் அச்சிலம்புகளாய் வந்த
இரண்டசுரர்களுந்தங்கள் சுயரூபத்தோடு மலைபோல விழுந்திறற
தார்கள். இப்படி அம்மூவருமிறந்தமையை முனிவர்கள் கண்டு சந்
தோஷித்து வேதச்சிலம்பைத் திருவடிகளி லணிந்து மேருச்சிலம்
பை வில்லாகவளைத்துக் கரத்திலேந்திய சிவகுமாரனுக்கு இம்மா
யைச்சிலம்புகளே மாய்ப்பதோ அரிதென்றுபணிந்து திதிசெய்தார்
கள். அப்பனிரண்டாந்திங்களிலேயே மற்றெருநாள்சமர்த்திற்பிறந்
த ஆவிசனென்னும் வெயரீனேயுடைய அவுணனனவன் ஓர் மதயா
னைப்போல வுருக்கொண்டு திசைகளேக் காவல்கொண்டிருக்கின்ற
ஐராவதமுதலிய யானைகளுங்கண்டஞ்சும்படி அட்ட குலாசலங்க

னையும் பிளந்து சில முனிச்சிரார்களோடு கணேசமூர்த்தி விளையாடல் செய்திருக்கின்ற வனத்தில் வந்தனன். அந்தயானையின் வரலாற்றைக்கண்டவுடன் முனிச்சிரேஷ்ட னெல்லாம்பயந்தோடத்தலைப்பட்டனர் அவர்க்குமுன்னெருபோது உமாதேவியுங்கண்டு நடுங்கும்படியாகவந்த ஓர் மதயானையைத்தமக்காடையாக உரித்துப் போர்த்தருளிய சிவபிரான் குமாரராகிய கணேசமூர்த்தி அஞ்சாதீர்களென்றுகையமர்த்தி, அந்தயானையினைநிரிற் சிங்கவேறுபோலப் பாய்ந்து தமதுகரத்திலேந்திய அங்குசப்படையினல் அதன் கவுளிற்புடைத்துமும்மதங்களும் அருவிபோலப்பாயும்படியாக இரண்டுமருப்புகளைக்கரத்தாற் பறிப்பிடரியின்மீதேறி அதனதுகழுத்தடியிற் றமது காற்பெருவிரலையூன்றி மேலங்களைப்போலப் பிளிறிட்டோடும்படியாகவலித்து அதனது வலியெல்லாங்குன்றும்படி அவ்வானையை களிறுங்கடாமி மீட்டுந்தாமிருந்த வனத்தில் வந்தமர்ந்தனர், உடனேயந்தயானை இடிமேயற்றிணைப்போலக் குரல்கூட்டிவீழ்ந்திறந்தது.

இரண்டாமண்டில்கூடாசுரனென்பவன் கணேசமூர்த்தி விளையாடல்செய்திருக்கின்ற வனத்திலுள்ள ஓர் தடாகத்தில் ஆலகால மும்மஞ்சும்படியான கொடியவிடங்களைக்கலந்து ஆகாயத்தில்தனது ருவைமறைத்துப்பார்த்திருந்தனன் அப்போது அத்தடாகத்திற்பறிந்து வருங்காற்றினல் அவ்வனத்திலுள்ள விருக்கங்களெல்லாம் தீய்ந்து விளையாடல்செய்திருந்த முனிச்சிரேஷ்களெல்லாம் மாய்ந்தனர். அதைக்கணேசமூர்த்தி யறிந்து, தமது கிருபாநேரக்கத்தால் அத்தடாகத்தைப்பார்த்தருளினர். உடனே அத்தடாகத்திற் கலந்தவிடமெல்லாம் அமிர்தமாகி அதிற்படிந்து வந்தகாற்றினல் விருக்கங்களெல்லாந்தளிர்த்தன, முனிச்சிரேஷ்களெல்லாம் ஜீவியில்விட்டவர்களைப்போல யெழுந்திருந்தார்கள், பின்னர் காமதகனராகியசிவபிரானுடைய குமாரர், தமதுநெற்றிவிழியினல் ஆகாயத்தைப்பார்த்தனர் உடனே அவ்வாகாயத்தில்மறைந்திருந்தகூடாசுரன்வெந்து நீறுயினன். மூன்றுமாண்டில் அவ்வனத்திற்கு இருபதுயோசனைதூரத்திலிருக்கின்ற மற்றொருவனத்தில் கணேசமூர்த்தியானவர் சில முனிச்சிரேஷ்களோடுஞ்சென்று அவ்விருந்த ஓர்தடாகத்தில் ஸ்நானஞ்செய்து அதிற்படர்ந்திருக்கின்ற புட்பங்களைக்கொய்து ஜீவியாடல்செய்திருந்தனர். அப்போது விகிர்தாசுரனென்பவன் மகாமீனுருவுக்கொண்டு அத்தடாகத்தில் வந்து அலைத்தனன். அதைமுனெருபோது கடலிற்கிடந்த விண்டுவாகியமகரத்தை வலியிட்டுப் பிடித்த சிவபிரான் குமாரராகிய கணேசமூர்த்தியறிந்து உடனே அதனை இறுகப்பிடித்துக் கரையிலெறிந்தனர். அவ்வவுணன்தனது

சுயரூபத்தோடு விழுந்து இறந்தனன். இப்பால் கணேசமூர்த்தியானவர், அவ்வனத்தினின்றுநீங்கித் தமதாரீர்மத்தை நோக்கிவருகையில் இடும்பாசுரனென்பவன் வழியில் ஓர்பர்வதவுருவங்கொண்டு ஆகாயத்தை ஊடுருவவளர்ந்து அட்ட திசைகளையும் விழுங்கிப்பரந்து நின்றனன். அதைக்கணேசமூர்த்திகண்டுநெடுமூச்செறிந்தனர். உடனே அம்மலையானது சண்டமாருதத்திலகப்பட்ட பஞ்சுபோல பினாக்து பொடியாகப்பறந்தது அவ்வற்புதத்தை முனிச்சிரேஷ்டர்கள் கண்டு இவர்தம்பியாகிய சுப்பிரமணியரேயவர் முன்னெருபோது சகலமாயையினும் வல்ல கிரவுஞ்சகிரியைத்தமது வேலாயுதத்தாற் றூளாத்துப் பொடிபடத்தினரென்றறி, இவர் இம்மலையைவென்றதும் ஓர் வியப்போவென்று சந்தோஷித்தார்கள்.

நாலாமாண்டில், ஓர்நாள் உமாதேவியார் ஸ்நானஞ்செய்து சிவலிங்க பூசைசுடாத்திக்கொண்டிருக்கின்றசமயத்தில் வீதியில் விளையாடல்செய்திருந்த விநாயகமூர்த்தியானவர் ஓடிவந்து அம்மனிடத்திற் பாலுண்ணுமாறு அடித்தனர் அப்போது உமாதேவியார் அவரைச் சிவலிங்கபூசைநிறைவேறுகின்றவரையில் நீ அருகில்வரா தேயென்று தடுத்தனர் பின்னர்தடுத்தற்குரிய தலைமைபெற்றகாரியத்தைத்தாமே அவருக்குறுவிப்பார்போல அவர்மனதிற் பாவனை செய்திருந்த வடிவமே தாமாகி ஐந்துமுகங்களுஞ் காளகண்டமும் பத்துகரங்களும் ஏனைய அவயவங்களுந் தோன்றும்படி சதாசிவமூர்த்தி வடிவாக நின்றனர்; அவ்வடிவை உமாதேவியார்கண்டு அன்பு மச்சமுங்கொண்டு சாஷ்டாங்கமாகப்பணிந்து; சுவாமி! அடியேன் செய்தபிழையைப்பொருத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அப்போது தமது தாயினுடைய மனக்குறைவைப் பார்த்து, அன்னையே! இன்றுமுதல்பான் வேண்டும்போதெல்லாந் தடுக்காமல்எனக்குப்பாலகொடுத்து வருகின்றீரானென்று புன்னகையோடுங்கேட்டு, மீட்டும்அவர்மடித்தலத்திற் குழந்தைபாலிப்பாலுண்டிருந்தனர்.

அச்சமயத்தில் கருத்தமாசுரனென்பவன் காடுடவித்தையில் வல்லவன்போல உருவெடுத்து உமாதேவியாரெதிரில்வந்து அங்கு விளையாடிக்கொண்டிருந்த முனிச்சிரேஷ்டர்களை எல்லாம் எடுத்து விழுங்கியும், மீட்டுமவர்கட்குவருத்த முண்டாகாதபடிச்சிலரைத்தனது காதுகளினுலும், சிலரைவிழிகளினுலும், சிலரைநாசிகளினுலும்,வெளிப்படுத்தி மீளவும் அக்காது-விழி-நாசிகளின்வழியாக உள்ளேபுகவிட்டும் பின்னரவர்களையெல்லாம் வயிற்றுவழியாக உமிழ்ந்தும், அளவற்ற விஞ்சைகளைடாத்தி, இவ்வண்ணம் விழுங்கி யுமிழ்கின்றேன்

பார்மின்களென்றுசொல்லி உமாதேவியார் மடித்தலத்திற் பாலுண்டிருந்த கணேசமூர்த்தியையெடுத்து விழுங்கி மீட்டும் உமிழாமல் சரேலென்றெழுந்தனன் அப்போது எமதையன் உமாதேவியார் திருமுகத்தினின்றுந்தோன்றி அவ்வசுரனைக்கன்னத்திற்புடைத்துக் கொன்றனர் அவ்வற்புதத்தைக் கண்ட முனிவர்களெல்லாம் ஆனந்தமடைந்து அண்டகோடிகளையெல்லாந்தாது அகட்டினுள் அடக்கி ஆதரிக்கவல்லகடவுள், ஓர்தானவனுடைய வயிற்றுளடங்குமோ வென்று துதிசெய்தார்கள் உலகமாதாவாகிய சாகூாத் உமாமகேஸ்வரியும் கவலையைபொறித்து முகமலர்ந்திருந்தனர்.

ஐந்தாமாண்டில், கடகாசுரனென்பவன் ஓர் ஒட்டகமாகஉருக்கொண்டுவந்தனன். அதைகணேசமூர்த்தி யறிந்து, அவன் ஒருகாதத்தூரத்தில்வரும்போதே வீட்டினின்றுசென்றுகொன்றனர். மற்றொருநாள் சாயைப்பிடிப்பதில் வல்லவனை சயாசுரனென்பவன் கணேசமூர்த்தியினுடைய சாயையைப்பற்றவந்தனன். அதையெமதுகர்த்தன் அறிந்து அவனை உறுத்துப்பார்த்தனர் உடனே அழலிற்பட்ட பஞ்சுபோல் மாய்ந்து சாம்பராயினன். மற்றொருநாள்சஞ்சலாசுரனென்பவன் முனிச்சிரேர்களோடுதானுமோர் முனிச்சிரேஷ்டனாகி, கணேசமூர்த்தியோடு பந்தாடவந்தனன். அதை எமதையன்றிந்து அவ்வாட்டத்தினூலேயே அவன் வலியகைத்துங்குன்றி தோல்வியுறச்செய்தனர். பின்னரவ்வவுணன் புறங்கொடுத்து ஆகாயத்திலெழுந்தனன், அவனோடு விநாயகமூர்த்தியுமெழுந்து போராடிக்கொன்று விட்டு மீண்டனர் மற்றொருநாள். கணேசமூர்த்தியானவர் முனிவர்களுடைய மாளிகைதோறும் ஏககாலத்திற்சென்று பலகுறும்புகளைச்செய்து விளையாடினர். அதற்கு அம்முனிவர்பத்தினிகள் கோபித்து, பிடித்துக்கொண்டுசென்று உமாதேவியாரிடத்தில் முறையிட்டு அவர்பாலொப்புவித்து மீண்டனர். அவர்கள்மீண்டு தங்கள்மனைகளில்நுழைவதன்முன், மீட்டும்முன்போலவே அவரவர்மனைகளின்கண் பல குறும்புகளைஆடோற்றி விளையாடல்செய்திருந்தனர். அதை அம்முனிவர்பத்தினிகள்கண்டு அச்சமுற்று ஈதென்ன அற்புதமென்று அதிசயித்து சுவாமிஏகமாகியும், அனேகமாகியும் எங்குமாகியும், போகமாகியும் யோகமாகியு மிருக்கின்ற புண்ணியமூர்த்தியாகிய தேவரீருடைய மகத்துவத்தை மோகத்தில் மூழ்கியிருக்கின்ற அடியேங்கள் இன்றறிந்தனம். இனி அடியேங்கள் செய்யும் பூசனைகளைக் கைக்கொண்டு காத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்து, அவ்வவர்கள் மனைகடோறும் அவருக்குப் பூசனை செய்து அப்பம் மோதகம் முதலாகிய சிற்றுண்டிகளை வைத்து நிவேதித்தார்

கள். அதற்கு ஒப்பற்றகணேசமூர்த்தியானவர்மனமகிழ்ந்து இச்சிற் றுண்டிகளை உங்கள்சிறுவர்கட்குக் கொடுமின்கள் இதனால்நமக்குத் திருப்தியாகுமென்றுதிருவாய்மலர்ந்தனர் அன்றுமுதல் கணேசமூர் த்திக்கு நிவேதித்த சிற்றுண்டிகளைத் தங்கடங்கள் சிறுவர்களுக்குக் கொடுத்துவந்தார்கள். அதுபோலவே இக்காலத்திலும் விநாயகமூர் த்திக்கு நிவேதிக்குஞ் சிற்றுண்டிகளைத்தங்கடங்கள் சிறுவர்கட்குக் கொடுத்து வருகின்றார்கள்

பரசு, தாமரை, பாசம், அங்குசங்க ளுற்பவம்.

ஆரூமாண்டில் ஓர்விஸ்வகன்மனுவன் பரசு-தாமரைமலர்-பா சம்-அங்குசம் என்னு மிவைகளைச்செய்துகொண்டுவந்து சிவபிரா னையும் உமாதேவியாரையும் பணிந்தெழுந்த பின்ன ரவ்வாயுதங்க ளைக்கணேசமூர்த்தியினுடைய திருவடிக்குமுன்னேவைத்துவணங்கி ஞன் அவனைக்கணேச மூர்த்திநோக்கி இவ்வாயுதங்கள் யாதென்று வினவினர்; அதற்கவன் பணிந்து, சுவாமி! அடியேன் புதல்வியாகிய சமுஞையென்பவளைச் சூரியனுக்கு விவாகஞ்செய்து கொடுத்தேன், அவள் அவனது சரீரவெம்மையை யாற்றமாட்டாது தனது சாயை யைத்தன்னைப்போலவடிவாக்கிவைத்து மீட்டுமென்மனையின்கண்வந் திருந்தனள் அவன்பின்னையே சூரியனுக்கிதடிவந்தனன் அப்போதவ ள்பயந்துஓர்பெண்குதிரையாக உருக்கொண்டுவனத்திற்சென்றனள் அதற்குமேல்எனதுமனைக்கண்வந்திருந்த சூரியனுடையவுருவத்தை ஆயுதத்தினற்கடைந்தேன்,பின்னரவன்சாந்தமாகித்தானுமோராண் குதிரையாகவுருக்கொண்டு வனத்திற்பெண்குதிரையாகத்திரிகின்ற தனது பத்தினியைச் சேர்ந்தனன் அப்போது அவர்களிடத்தினின் றும் அசுவினிதேவர்கள் பிறந்தார்கள் பின்னரிருவருந் தங்கடங் கள் சுயவடிவைக்கொண்டு வாழ்ந்திருந்தார்கள் சூரியனைக்கடைந்த போ தெதிர்ந்தபொடிகளால் ஓர்சூலாயுதத்தையும், இவ்வாயுதங்களை யுஞ்செய்தேன் சூலாயுதத்தைச் சிவபிரானுக்குக்கொடுத்தேன்,மற்ற இந்தான்கையும் மூலகாரணமாகிய தேவரீருடைய திருவடிக்கண் வைத்தேன் அடியேன்கிருதார்த்தனுகுமாறு சுவாமிகள் அவைகளை த்தரித்தருளல் வேண்டுமென்றுபிரார்த்தித்தனன். அதன்மீதுகணே சமூர்த்தி கிருபைசுரந்து, அன்பனே உலகிலுள்ளவர்கட்கு உபகா ரஞ்செய்யும்பொருட்டு இவைகளையாம் அங்கீகரித்தனமென்றெடுத் துத்தரித்துக்கொண்டு, அவனுக்கு அளவற்ற வரங்களைக் கொடுத் தருளினர். பின்னர் விஸ்வகன்மன்பெருமகிழ்ச்சியோடு சுவாமியிட த்தினின்றும் விடைபெற்றுத்தனது யாதாஸ்தானத்தை யடைந்த

னன் அத்தினம் விருகாசுரனென்பவன் சென்றாயாகவுருக்கொண்டு கணேசமூர்த்திக்கெதிரேவந்தான். உடனேதாம் தரித்தருளிய ஆயுதங்களைப் பரிட்சிப்பவர்போல அதன்மீது அங்குசத்தை யெறிந்து சங்கரித்தருளினர், ஏழாமாண்டில் காசிபமுனிவரும் அவர்பத்தினியாகிய அதிதியும்வந்து கணேசமூர்த்தியைப்பலமுறை பணிந்துநின்று வரங்களைப்பெற்றுச் சென்றனர். அத்தினத்தில் கிருதாந்தன் கானனென்னு மிரண்டசுரர்கள் ஆனியாக வுருக்கொண்டு கணேசமூர்த்திக்கெதிரே வந்தார்கள் அவர்கள் அதிக்கரத்தைச்சுவாமிகள் பிடித்துமுன்னும் பின்னுமாக விழிந்து ஒன்றோடொன்று முட்டவிட்டு சின்னபின்னப்படுத்தி மாய்த்தருளினர்

மயூரவாகனேற்பவம்

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! இவ்வாறு தம்மைக் கொல்லவந்த துட்டர்களை யெல்லாந்தாமே கொன்ற விநாயகமூர்த்தியானவர், எட்டாமாண்டில்மயில்வாகனத்தையுர்ந்தருளியதிருவிளையாடலைச்சொல்லுவோம் கேட்பீர்களாக.

காசிபமுனிவருடையபத்தினிகள் பதின்மூவருள் வினதையென்பவள் மணிக்ரீவுக் கத்துருவென்பவள் சென்றாள் முன்னொருபோது இக்கத்துருவென்பவள், வினதையை வஞ்சகத்தினால் கொடியசிறையில் வைத்தவளாதலால், அதை அவ்வினதையானவள் தன் மனதிலெண்ணி அவள்வரவைக்கண்டும் காணாதவள்போல விருந்தனள். அவள் புதல்வனாகிய சடாயுவென்பவனும் தனது தாயினுடையஉட்கோளை முன்னமே யறிந்திருந்தபடியால் அவளுக்கு மாற்றாளாகிய கத்துருவினுடைய கூந்தலையும், மேல்வத்திரத்தையும் பிடித்திழுத்து வீதியிற்றள்ளி எனது தாயை நெடுங்காலங்கொடியசிறையில் வைத்திருந்த மகாபாவி இன்னும் என்செய்வதற்கு இங்குவந்தீனபோபோவெனறுத் துரத்திவிட்டான் அதன்மீது கத்துருவென்பவள் மிகுந்த அவமானத்தால் முகம் வாடித்தனது புத்திரர்களாகிய நாகர்கள்வாழ்கிற்ற பாதலலோகத்திற்சென்றனள், அவள் முகவாட்டத்தோடு மிக்ககிலேசத்தினை யடைந்து வருவதை நாகராசனுகிய ஆதிசேடன்பார்த்து, மிகுந்தபயபத்தியுடனேஎதிர்சென்றுபணிந்து தாயே தேவர்கள் அசுரர்கள் முதலான ஆன்மகோடிகளைச் சிருட்டிக்க வல்ல காசிபமுனிவருடைய பிரியமுள்ளபத்தினியாகியும், மூவுலகையுந்தாங்கும அடியேனையுள்ளிட்ட நாகர்சர்களைப்பெற்று, தாயாகியுமிருக்கின்ற தேவரீர் மிகுந்த வருத்தத்துடனே முகம்வாடித்தனியாயிங்குவருவதற்குக்காரணம்யாதென்றுகேட்டனன். அதைக்

கேட்டலுங் கத்துருவெண்பவள்களங்கி யழுது, மைந்தனேயெனது மாற்றாளாகிய வினதையிடத்திற் சென்றேன். அவள் என்னைக்கண் டெங் காணுதலவள்போல, விருந்தனள். அதன்மீது அவள்புத்திரனுஞ் சடாயுவென்பவனை, என்னைத்தின்பப்படுத்தினன்தாயென்று சிறிது மறியாமல் என்னைத்தின்பப்படுத்திய சடாயுவையாவரும் அவமதிக் கும்படி நீ இந்தேகுறையில் வைப்பையாயின் இனியான் உயிரோடு வாழ்வேன். இல்லையேல் இந்நிமிஷத்தில் என்னுயிரை மாய்ப்பேனென் றது செல்லினள். அதைக்கேட்ட ஆதிசேடன் அத்தியந்தகோபங் கொண்டு, இந்நிமிஷத்தில்அச்சடாயுவினுடைய உயிரைவாங்குகின் றேனென்று ஆலகாலத்தைப்போலச்சீறியெழுந்தான் அப்போதுவா சுகி அனந்தன்தக்கன் சங்கபாலன் குளிகன் பதுமன்-மகாபதுமன்-கார்க்கோடகன் என்னும் அஷ்ட நாகர்களும் ஆதிசேடனைப் பணி ந்து கர்த்தனே தேவரீர் செல்கின்ற வேலைகருயாங்கள் செல்ல வல் லோமென்று விடைபெற்று ஆளவற்ற நாகசேனைகளுடன் பலவழி யாகப்பூலோகத்தில் வந்து வினதை வசிக்கும் மாளிகையை யடைந் தனர் அதை அவள்புத்திரராகிய சடாயு சம்பாதி சேனன் என்னும் மூன்றுபட்சிராசர்களுங்கண்டு நாகராசர்களின்மீது பாய்ந்து அவர் களையெல்லாஞ் சிறகுகளினலேபடித்தும் மூக்கினுற்கொத்தியும் நக ங்களினுங் கீறியும் சின்னபின்னப் படுத்தினர் அப்போது சிலநாகர் கள் அஞ்சிப்பிலவழியாகப் பாதலத்திற் கோடிப்போனர்கள் அதை வாசுகி முதலிய எண்மருங்கண்டு அவ்விடத்தைகாபமுற்றுஅளவற் றயுத்தங்களைச்செய்து அம்மூன்றுபட்சிராசர்களையுங் கைப்பிடியா கப் பிடித்துத்தமது பாதலலோகத்திற் கொண்டுசென்று அவர்களை அகலற்கரிய அருஞ்சிறையில்வைத்துத்துன்பஞ்செய்தார்கள் அதை க்கண்டகத்துரு வானந்தமாயினள்.

இப்பரில் வினதையானவள், மிகுந்தபரமடைந்து தனதுகா தலராகிய காசிபமுனிவரிடத்திற் சென்று பணிந்தெழுந்து, நடந்த செய்திகளைவிபரமாகக்கூறி, சுவாமி! எனதருமைப்புதல்வர்களுடை ய சிறையினை விடுப்பதற்கு இன்னும் ஓர்பராக்கிரமமுடைய புத்தி ரன் அடியாட்குண்டாகும்படியாகக் கிருபைசெய்ய வேண்டுமெனப் பிரார்த்தித்தனள். அதைக்காசிபமுனிவர்கேட்டு பெண்ணே! நீயொ ன்றிற்குமஞ்சற்க சிறைப்பட்டிருக்கின்ற உனது புத்திரர்களைமீட்ப தற்குயாம் உன்னுடனேகூடி உனதுவயிற்றில் ஓர்முட்டையை உண் டாக்குகின்றோம். அம்முட்டை கசேனசமூர்த்தியாலன்றி மற்றையா வராலும் உடைக்கமுடிவதன்று, அஃது அக்கசேன சமூர்த்தியால் உடைப்பட்டவுடன் அதினின்றும் ஓர் மயிலுண்டாகும். பின்னர்

அம்மயிலின்மீது அக்கணேசமூர்த்தி ஏறிச்செலுத்தி, உனது புத்தி
ரர்களுடைய சிறையைநீக்கியருளுவரென்று சொல்லி, வினதையிட
ங்கூறினர். உடனே அவளகட்டினின்றும் ஓர்முட்டை வெளிப்பட்
டது அம்முட்டையை வினதையானவள் நாள்தோறும் அன்போடு
பாதுகாத்து வந்தனள் இவ்வாறு பாதுகாத்துவரும் நாளையில், ஓர்
நாள் கணேசமூர்த்தியானவாசில முனிச்சிரேர்களோடு கூடி வனத்
திற் சென்றுவிளையாடல் செய்திருக்கையில், கறுத்த நிறத்தினை
யுடைய கிருஷ்ணசரனென்னும் ஓரவுணனவன் ஒருதலையும் இர
ண்டு சிறகும் மூன்றுமுகமும் நான்குசெவியும் ஐந்துமருப்பும் ஆறு
தோகையும் ஏழுகண்ணும் எட்டுக்காலும் உடைய ஓர்பட்சிரூபங்
கொண்டு அவ்வனத்திலவர்கள் சற்றேநடக்கிறதும், சற்றே யிருக்கி
றதும், சற்றேபடுக்கிறதும், சற்றேபயநது ஓடுகிறதுமாக உலாவல்
செய்திருந்தனன். அதை அங்கு விளையாடியிருந்த முனிச்சிரேர்கள்
கண்டு இதாவொரு அதிசயமானபட்சி உலாவிக் கொண்டிருக்கி
ன்றதென்று கணேசமூர்த்திக்கறிவித்தார்கள். அதைக்கணேசமூர்த்
திகண்டு உடனே அதனைப்பிடிக்கப்போயினர். அவரோடு அம்முனி
ச்சிரேர்களுஞ்சென்றனர்கள். அப்போது அப்பட்சியாகிய அசுரன்
அவர்கையில அகப்படுவதுபோல விருப்பதும், நெருங்கத்தூரத்
தில் அகல்வதும், நிற்பதும், போவதுமாக அளவற்றநாடகளையும் மகி
களையுங் கடந்துபோயினன். பின்னர் கணேசமூர்த்தியும் அவனைவி
டாமற் றொடர்ந்துபோயினர் இவ்வாறுதொடர்ந்து போகப்போக
அவ்வசுரன் தமதுதகையி லகப்படாமற் போகவும், கணேசமூர்த்தி
அதிகோபங்கொண்டு பாசதத்தை ஏவினர். உடனே அவன் தனது
சுயரூபத்தோடும் வீழ்ந்திறந்தனன் முனிச்சிரேர்களெல்லாம்அவனி
த்தமது கைகளினு லறைந்துங்கால்களினுதைத்தும் அவ்வவர்கள்
கோபத்தைத் தணித்துகொண்டார்கள்

அப்போதுபாலசந்திரமூர்த்தியானவர் புன்னகைகொண்டு தமதுதாய்தகுதைபர்பயந்து கலங்குவதைப்பார்த்து நீங்கள் யாதொன்றற்கும் அஞ்சாதீர்களென்று நிடங்கூடிய தமது திருவாயினின்று கொண்டல்கொண்டலா பெழுந்திவரும்படிப் புகைப்படலங்களைவிட்டனர். அப்புகைப்படலங்கள் வெளிப்பட்டமாத்திரத்தில் ஊழிகாலத்தில் உலகங்களை யழிகதி முழுகின்ற பிரளய வெள்ளத்தைச் சுவற்றவல்லமேகங்களைப்போல அட்டதிகசரீராயும் இருள்மயமாக மூடிக்கொண்டன. உடனே பராபதிராசாபிகிய தூமராசனும் சத்ருகளைப்போலத் திரிலோகங்களும் அதிரவந்த அவன்சேனைகளும் ஒருவரைபொருவர் காணமாட்டாதமயங்கிப் பாதலலோகத்தில்வீழ்ந்து இறந்துபோனார்கள் மீதவர்களெல்லாஞ் சயசயவென்றுகொண்டாடிப் பரிசாதமுதலிய புட்பங்களைவாரி யிறைத்தார்கள் முனிவர்களெல்லாம் பலதூரதரிசனங்களைக்கொண்டு பாலசந்திரமூர்த்தியைப்பூசித்தார்கள் மாதவராசனுஞ் சுமுதையும் பயமகன்று ஆனந்தமடைந்தார்கள். பாலசந்திரமூர்த்தியானவர் தூமராசனுக்கு கேடுவருவதுகாட்டும்படி ஓர் உற்பாதமாய் விளங்கியதினுமும் அவனையும் அவன் அமைச்சர் முதலாயினோரையும் அவ்வவர்கள் சேனைகளோடு ஓர்கொடிப்போதில் தூமததாற்றொலைத்து வெற்றிக்கொடிநாட்டி யருளியதாலும் அவருக்கு அன்றுமுதல் தூமகேது வென்று மற்றொருதிருநாமம்விளங்கியது பின்னர் பாலசந்திரமூர்த்தியாகவந்து தூமகேதுவென்னும் பெயரீவைகித்தருளிய விநாயகமூர்த்தியானவர் மாதவராசன்முதலியோர் தரிசிக்கும்படியாகத்தம

துதிருவுருவைக்காருது மலபாசங்களையொழிதது, மேலானஞானச் செல்வத்தை யடைந்திருகின்ற பெரியோர்களது மனக்கோயிலில் வதிந்தருளினார் இக்கதையை யன்போடு நினைக்கின்றவர்களும் தீவி னைகளினின்றுநீங்கி பேரானந்தசுகததை யனுபவிப்பார்கள்.

இப்பால் மாதவராசனும்சுமுதையும் யதாப்பிரகாரந்தமதுபட் டணதைசசீராருது முடியிலாத பெரும் பாக்கியத்தைப்பெற்று சகலசவுகியதையும் ஆனநதத்தையும் அனுபவித்துக்கொண்டி ருந்தாகள் இவ்வாறு கிலகாலிருந்தபின்பு சுமுதையானவள்மகிமை பொருநதிபபுகநிரணி மகிழ்பாமைபபந்தனள் அதை மாதவராச னறிநது தனகருப்புகநிரஞரவந மாதவனுக்குச சகல மங்கலத் தோடும் வேதாகமமுறைமைபபடி ராதக கன்மாதிகளைநிறைவேற்றி அளவற்ற தருமாதிகளை நாடோறுஞசெய்துவந்தனன், சுமுதையா னவள் தனது குலகுமாரணபரிநிதினங் குளிபபாட்டி தனதுமு லைப்பாலினை அன்போடு முட்டி. கவானமபமாகிய சுட்டியினையும் அரைவடமபொற்றண்டைமுகலிய ஆபரணஙகளையுந்தரித்துச்சீரா ட்டி பவளகாலகள் வபரசசடடஙகள் நிலரத்னப்பலகை முதலிய வைகளாற் சேரடி கத கதகாரஙகிலிறைந்தும் அழகியதொ ட்டிலிலவளரதநித தாலாட்டி நாளுநாளுவளாபிறையைப்போல வளாதநத பாராட்டிவநதனள் இவ்வாறு அவ்விருவர்களுநதம்மை ப்பாராட்டிவளாகுநதாறும அவாகளுநதப் பிள்ளைக்கலிதீரத்தரு ளிய நாராயணமூரதியானவா நாளுநாளுகற்போருடைய உள் ளதைபபோல வளாநதனா. இபபால மாதவராசன் தனது குமாரனுகுப பிளளைபபரு மகிழகியபின்னா பட்டாபிஷேகம்முத லியவைகளைாரகிறகக செயது தூமராசனுடைய அரசாட்சியை அவாபலாபபுவித்துத தனது பதநினியுநதானுஞ சதாகாலமும் விநாயகமூரதிபைத்தியானிது அநதியகாலதநில் மோட்ச சாம் பிராசகிய தையடைநது பேரானநதத்தை யனுபவித்தாாகள்முன் னர் உலகமனைதையுஞ சிறுகடினைவாய்ந்த விளக்கினைப்போலவி ருந்துகாதது தூமராசனுடைய அரசாட்சியை யெல்லாம் பின்னர் நாராயணமூரதியானவா பெருஞசுடரினைவாய்ந்த பந்தமாகவிளங் கிப் பாதுகாதது புதநிரமிதநிர களதநிராதிகளுடனே சகலபோக பாக்கியங்களையும் அனுபவிதது வாழ்ந்திருந்தனா.

தூமகேதுவிநாயகா திருவவதாரப்படலம்

மூற்றிற்று

எட்டாவது,

கணேசர் திருவவதாரப்படலம்.

வேழெனுக் திருவவ தாரஞ்சாற் றிவ்மே
லெட்ட தாமவ தாரகற் சரிதநீ திசைகூ
சொட்டு மார்வமோ டொழுகுதென வாரிசத்தண்ண
னட்ட கேண்மையி னறைதுஞ்சு வனமுனிவீர்.

ஓ சவுனகாதிமுனிவர்களே! விராயகமூர்த்திபானவர் தாமகேது திருவவதாரங்கொண்டு மாதவராணுக்கும் அவன மனவியாகிய சுமுதைக்குந் தீங்குசெய்யநிர்க்க தாமராசுணன்றொன்று அவ்விருவரைப்பாதுகாத்தருளிய திருவிளையாடலிலொன்றும். அவரேமற்றொருபோது கணேசமூர்த்தி திருவவதாரங்கொண்டு தம்மிடத்தில் அளவற்ற வரங்களைப்பெற்ற பெலியென்னும் ஓர் தானவனனவன், தனது திரிபுரங்களோடுஞ்சென்று திரிலோகங்களையும் அழிக்க, அக்கொடுமைக்குத் தேவர்கள்முதலாயினோர் அஞ்ச அதற்குச் சிவபிரான்மனதிரங்கித் தம்மைத்நியாலிக்க, அப்போது அவர்திருமுகத்தில் ஐக்துமுகத்தோடுந்தான்றி, அவர்கு அத்திரிபுரங்களேரூக்கவல்லவரங்களையுதவி, யாவருங்கணேசரென்று போற்றும்படியாக விளங்கியருளிய திருவிளையாடல் முன்னமே உபாசனை காண்டத்தில் சொல்லியிருக்கின்றனம் இப்பால் கணபதி திருவவதாரங்கொண்டு செய்தருளிய திருவிளையாடலைச் சொல்லுவோம் கேட்டிரிக்களாக.

கணேசர் திருவவதாரப்படலம்

மூற்றிற்று.

ஒன்பதாவது,

கணபதி திருவவதாரப்படலம்.

———:*:———

அன்பனேயவன் சரித்திர முன்னமே யறைந்தா
மொன்ப தாமவ தாரமென் றறைதரு காதை
யின்ப மார்தர வியாதனுக் கலர்மக னிசைத்தாங்
கன்பி னீரறை குதுமுள மொருமையி னுணர்வீர்.

ஓ சவுனகாதிமுனிவர்களே! வெண்டாமரைசெந்தாமரைமலர்களே ஆதனமாகக்கொண்ட சரஸ்வதி யுலக்குமிகள்மூலமாக எல்லாவுல கங்களையும் படைத்துங்காத்துமிராகின்ற பிரமனும் விண்டுவுந் தத தம்நிலைகளிற் பிறழாதவண்ணம் உயர்ந்த வெண்மை நிறத்தினைக் கொண்டதாய், கல்வகைத்தோற்றம் எழுவகைப்பிறப்பு, எண்பத் துநான்குநூறுயிரம் யோனிபேதங்களா யுள்ள சீவான்மாக்க ளெல் லாங் கனமங்கட்டிடான சரீரங்களெடுத்துத் தாபத்திரையாக்கி னிகளாற் றகிக்கப்படுந துயரங்களினின்றுநீங்கி, இளைப்பாறும்படி யாக ஆனந்தநிருத்தஞ்செய் தருளுகின்ற எமது சதாசிவமூர்த்தி யைத்தாங்குந் தகைமையையுடையதாய் கண்டோர்கட் கெல்லாம் புகலிடமாகியிருநது மீட்டும் பிறவிச்சாகரந்நீங்காதபடி மே லாகிய முத்திவீடளிக்க வல்லதாய் சந்திரன் கங்கை விபூதி விடை யிராவணம் என்னுமிவைகளே வெள்ளிதாகக்கொண்ட சிவபெரு மானுனவர், தமது திருமேனியும் தானும் வெள்ளிய சாத்விகத்திற் கொண்டருளியதால் அதனிலைற் கிசையும்படியாகத் தானும் வெள் ளிய நிறத்தினைக்கொண்டதாய் எண்ணமுதலிய முக்கரணங்களினு ஞ் தன்னிலைபடுந் திருமாலினைத் தாங்குந் திருப்பாற்கடலோடு ஏனையகடல்களு மேலெழுகின்ற யுகாந்தகாலத்தில், அண்டபிரளயத் தினுள் யாமடங்குதல் அடாதென்று அதனினுமேலோங்கி யெழுக் து அண்டமுகடுவரையில் அளாவி ஒளிசெய்யவல்லதாய் தெளிந்த மெய்யடியார்க்குப் பெருமை பொருந்திய போகத்தையுந் திருவரு ளையும் வழங்குதலன்றி தம்மையும்வழங்கி அருளிச்செய்யவல்ல எம. தசிவபெருமானுடைய பெருங்கீர்த்தியென்னுந் திருமேனியானது எக்காலத்தும் அவதாத்தணவாது அழிவற்ற ஆலவோடுஞ் சுமந்து அவளைப்போலவே கெடாதபெருமையைப்பெற்றதுபோல ஊழிகள் தோறுமழியாமல் ஒங்கவல்லதாய், சத்தசாகரங்களும் ஒன்றுடனெ ன்று கலக்கவருகின்ற யுகாந்தகாலத்தில் சத்தஞ் சுபாவநிலைகளி

னின்றுமாறித் தடுமாற்றங்கொள்ளுகின்ற திருமால் கண்படுமிடத்தையும் அவனுக்கிப்பதமமாகிய பிரமனிடத்தையுங் கண்டு எமது உருத்திரமூர்த்திக்கு இடையாத்தலமாகி எக்காலத்தும் உடையாவுறுதியோடு நகைப்பதுபோல என்றும் ஒரேயியல்பாய்ப் பிரகாசிக்கவல்லதாய் நம்மைச்சிவபிரான் திருவுளமாகக் கொண்ட செயலாலன்றே அடிதேரர்களையும் பெரிபாரென்று சொல்லும்படியாக நன்மைகளே விளைக்கின்றும் இனி அக்கடவுளதத இடபமூமாகி அவனைத்தாங்கிநிற்போமாயின் எதகாலதமும் அழிபாகிலைமபெற்றிருப்போமென்று சாதவிசமான திருருகொண்டு உலகினையும் ஆர்த்தல்போல ஆரவாரிக்கும அருவிபையுடைபதாய் மேருவும்மந்திரமும் எமதுசிவபிரான் வசிகாபெற்றமையினும அவைகள் ஒரசன் வருதியிபின்னர அவன் கருதிவரு பொருளினைத் தந்தும் அமுதம்வேண்டிய தேவரகட்குக் கடலைக்கலகி கதிரினையளித்தும் இருந்தனவேயென்று எள்ளிததன்னை நந்தி வாயளித்தோர்க்கு வெள்ளியை நிரப்பவல்லதாய் அநதமும் புறதமும் ஒரேதன்மையையுடைமையினுமை சிவபெருமானுடைய அருமைதிருவடிகள்தனதசென்னியில மருவப்படுகையினுல தெளியியவநிஞர்களால லெடுத்து ஏத்தப்படுகின்ற சிறபபினுமை, மலயாசலங்களைதபுறந்த மெய்ஞானியர்களைப்போன்றதாய் ஓபாலதாமைமுதலிய மலர்வருக்கங்களெல்லா மலாந்தும ஓபால வசரிமுதலிய மணிவருக்கங்களெல்லாம் குழுச்கொண்டும் ஆபால சிவகங்காமுதலிய தீர்த்தங்கள்சிறந்தும் ஓர்பால பலாக்கனிமுதலிய பழவருக்கங்கள் பரவியும் விளங்குவதுகயிலையங்கிரி.

அக்கயிலையங்கிரியில் இமாசலராஜன புதலவியாடு எழுந்தருளிய எமது சிவபெருமானுடைய திருவடி கூளிந திருமால்முதலிய தேவர்கள்வழிபட்டு வைகுநதமாதிபதனிகளைப பெறுவார்களாயின் அப்பெருமானுக்கே உறையிடமாயிருகின்ற அதன் பெருமையை உம்பர்களாலுஞ சொல்லப்படுவனவிலா! அக்கிரியின்க ணுளவாகிய கொடி மரம் மிருகம் புள்ளினமமுதலியவைகளை யோசிக்குமிடத்து ஒவ்வொன்றும் கற்பகமாமதேனுபதமணிசிநதாமணிமுதலியவைகளாயிருபபதன்றி, அவைதருகின்ற பொருள்களையுநதருவன. சனங்களோறும் பெரியமாதவங்களைசசெய்து எல்லாப பொருள்களையுமறிந்த யோகியற்கல்லது யேனையசிவர்கட்கெல்லாம் அக்கயிலாயத்தின்கணுள்ள கொடிமுதலானவைகளா யிருக்கதகவாழ்வு மரிதாகும் அன்றியு மிருவகைப் பற்றுக்களையு மொழித்துச் சிவபெருமாணுடைய திருவடிகளிற் பற்றுடையாருக்கே அக்கயிலை யிடங் கொடுப்ப தலலாது, மற்றையர்க்கெல்லா முறவேண்டிய தளித்து

அப்பால்முடிக்குவதன்றி எக்காலத்தும் அன்னவர்க்கு இடமாகும் வகையில்லை இத்தன்மைத்தாகிய கயிலையங்கிரியில் அடியார்க்கருள் செய்யும் பொருட்டு இமாசலராசன் புதல்வியாகிய உமாதேவியார் சோடி சிவபிரானெழுந்தருளி யிருக்கின்ற காலையில் கார்முதலிய இருதுக்களின் காற்றிற்பட்ட இலூவாதியவைகள் சிறக்கனவல்ல வென்று கருதினற்போல, முன்னெருபோது சிவபெருமானுடைய தழல்விழியால் பூளைப்பூவிணப்போல மடிந்து யாவர்க்குங் காமனோ யளிப்பவனுகிய மன்மதனுடைய அணிவிழாச்சிறக்கும்படி இளவேனிலானது தனது தென்றற்காற்றினுல் இறந்துகிடக்கின்ற காளக மாதிகளெமிதித்துத் தளிர்முதலானவைகளைத் தத்தம்நிலைமைகளிற் குன்றுதபடிநிரப்பியது அக்காலத்தில் யாவருக்கும் இனிமைசெய் வோர்க்குற்ற வறுமையானது நீடியாதகழிப்பனபோல இறந்துபோ கிய இருதுக்களினுல் இலைமுதலியவைகளைத் தீர்ந்த கொடிமரம்மூ தலானவைகளெலாம் பொருகென்றுதளித்து, மலர்களிமுதலிய வைகள் தோன்றுகின்றன. மிகுசாந்தமுமுகையு முடையோரிடத் தில் அடைபாதார் ஒருவருமில்லை யென்றுசொல்லுவதுபோல அக் கொடிமரம் முதலியவைகடோறும் தும்பிவண்டு சுரும்புமுதலியபல விதபறவைகளும் நெருங்கியிருந்தன தண்ணீச்சார்ந்த ஓர்பொருளி னுலல்லது சுபாவத்தில தனதுகுணத்தைக்காட்டாத பூமிக்குச்செய் நன்றியை மதித்தல்போல, அங்குள்ளசோலைமுதலானவைகள், மலர் முதலானவைகளைசிந்தி வாசனையூட்டுவதோடும் சிறிதும்நீரில்லாமற் சுருங்கித் தம்மை நெருங்கியிருக்கின்ற படு தடாகம் ஆறுமுதலிய வைகளினுடைய நிரப்பைத்தாமே நீகவெண்ணினுற்போலத் தாழ் ந்த பொழில்களெல்லாமவைகளும் அவைகளில் தேனீச்சிரிவன. துட்டர்களாயினுர் தமக்குநன்றிசெய்தோரிடத்துங் கட்டமாகிய காரியத்தைச் செய்வதுபோல அத்தடாக முதலியவைகளினுள்ளம தூரமானநீரிணப் பானஞ்செய்தெழுந்த எட்டியாதிகள்தம்மிற்கைத் திருக்கின்ற காய்முதலியவைகளை அவைகளிற்சொரிவது தம்மைய டைந்தோர்கள் பக்குவர்களாயினும் அபக்குவர்களாயினும் அவர்க ளையுயர்த்தவல்ல ஞானசாரியரைப்போல வண்டினங்களானவை எ ட்டியாதிவருக்கங்களிற் கவர்ந்துவந்ததேனையும் ஏனைய நல்லவிழுக் கங்களில் முகந்துவந்ததேனையும் ஒன்றுகக்கூட்டிப் பக்குவப்படித் துவது கிடைத்தற்கரிய பலநூல்களோறுமுள்ள பொருள்களையெல் லாமாராய்ந்தெடுத்து யாவரு மினிமையெய்துழ்படி தொடுக்கவல்ல நாவலர்களைப்போலத் தேனீக்களானவை, பூக்களோறுமுள்ளதேன் களை யெல்லாஞ் சிறுகச்சிறுக முகந்துபோய் ஓர்பக்கத்தில் சுரந்து

தேங்கும்படி பலகூடுகளைத்தொடுப்பன இவ்வா றவ்வீக்கூட்டங்கள் பிரயாசையோடு தேன்களையீட்டுவனவாயினும், தேவர்கட்குபயோகிக்கப்படுபனவாயுள்ள மலர்களையும் அவைகள் சிதைக்கின்ற நீங்கினால் அவைகளையழிப்பதே புகழென்று சிலர் ஆங்காங்குதொடுத்திருக்கின்ற கூடுகளையழிப்பார்கள் குற்றஞ்செய்தோரைச் சினந்துபொருள்பறித்தல் வேலைத்தமரசர்க்கு விதியாதலைபோல சிலர்விடியுமுன்னமேசென்று மலர்களை ஊறுசெய்கின்ற ஈக்களையழித்து அவற்றின் கூடுகளிலிருக்கின்ற தேன்களைக் கைக்கொண்டு செல்வார்கள் அங்குள்ள சோலைகளனைத்தும் மேகங்கள் பொப்பவிசுகின்ற தேன் மழையினால் மயிற்கூட்டங்கள் அச்சோலைகளைவிட்டு நீங்கினால் அழார்வுறுது குயில்களும் அவைகளைவிட்டு நீங்கினாலன்றிக்கூவாது. புறத்தேவர்களையுடைய அணிலாதிகள் கல்லமாங்கனி முதலியவைகளையுண்டு தூய உண்டியருடைய குணத்தைத் தெரியப்படுத்தும் மந்திகள் தீயனவும் அவையல்லனவுமான கனிகளை விழைந்து உயர்வுந்தாழ்வுமான உண்டிகளையருந்துவோருடைய தன்மையை விளக்கும் அங்குள்ள தடாகங்களோறும் தமதுகணவனைய சூரியனுக்கு ஞாயியிருக்கின்ற சந்திரனும் பனியினாலும் அழிந்தவகை போக ஏனைய தாமரைகளெல்லாம் வண்டினங்கள் மொய்க்கும்படியாக அலர்வன ஆமபல முதலியவைகள் மலர்ந்திருக்கின்ற தடாகங்களெல்லாந் தெளிந்து மிக்கவனப்போடு சிறப்புற்றன நீண்டஆறுகளெல்லாம் நுண்ணியமணல்களைபபறப்பி அதனமேல் கருமணல்களைவார்த்து நடுவேபுனலொழுகிச் செல்லும்படியாகத் தம்மையிழைந்த உயிர்கட்கெல்லாம் வெயிலின் வெப்பத்தை நீக்குவ வரையாது கொடுப்போரிடத்தில் வறுமை வந்தடுப்பினும் அவர்களக்காலத்தும் உள்ளபொருளைக் கரவாது வேண்டினோர்க்கு உதவுதல்போல் அங்குள்ள மலைகளெல்லாம் இறந்துபோன கார்காலதிற்பருகிய புனல்களை ஆவினவேனிற் காலத்தும் இடைவிடாது பொழிகுவ இத்தன்மைத்தாகிய இளவேனிற்காலம்வந்தபோது சாம்பசிவமூர்த்தியானவர் குளிர்ச்சிவேண்டித்தமதுதேவியாரோடும் உய்யானவனத்தையடைந்து அதில் கொன்றை கூவிளம் கோங்கு மந்தாரம் பாடலம் புன்னகம் சண்பகம் வாழைவகுளம் அசோகு முதலாகிய விருக்கங்கள் மலிந்திருக்கின்ற அலங்காரங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டே வந்து அங்கிருந்த ஓர் சித்திரமண்டபத்து ளெழுந்தளினர்.

அப்போது உமாதேவியார் அம்மண்டபசுவர்களிலெழுதியுள்ள சித்திரங்களைப் பார்த்துக் கொண்டேவர அவைகளில் ஓர்பால்சத்த

கோடிமகாமகந்திர சொரூபங்களும் அவைகட்கெல்லா மூதலில் பிர ணவமந்திரசொரூபமும் அதில்ஆண்யானையும் பெண்பாணையும் புண ர்ச்சிசெய்திருக்கும்பாவனையாகவெழுதியிருப்பதைக்கண்டு சுவாமி! இதென்னவென்று சிவபிராணைக்கேட்டனர். அதற்கவர் தமதுதேவி யாரைப்பார்த்து பெண்ணை யாம் உன்னெடு சம்பந்தமாகி லோகங் கட்குபகாரமாய் நடப்பிக்கத்தக்க கருணாசமாகுமென்று திருவாய் மலர்ந்து புணர்ச்சிசெய்திருக்கின்ற அந்த யானைகளில் ஆண்யானை யைப்பார்த்துக் கொண்டிருந்தனர் உமாதேவியார் பெண்யானையை ப்பார்த்துக்கொண்டிருந்தனர். இவ்வாறுலோககாரணர்களாகிய இரு வரும் அவைகளை அன்பாடுபார்த்துக்கொண்டிருந்ததலும் அந்தயா னைகளினுடைய புணர்ச்சி மூடியில் பிரணவஸ் ரூபியாயிருக்கின்ற விநாயகமூர்த்தியானவர் உயிர்நிலைத்தில் கோடிசூரியர்கள் ஒன்றுய் உதயஞ்செய்ததுபோல ஒளிவற்ற பிரகாசத்தோடும் உதித்தருளி சிவபிராணையும் உமாதேவியாரையும்பணிந்தனர் உடனேஅவ்விருவ ரும் ஆனந்தங்கொண்டு தமக்குப்புத்திரனாகத்திருவவதாரஞ்செய்தரு ளிய விநாயகமூர்த்தியை பரிவோடெடுத்து அணைத்து உச்சிமோ ந்து உள்ளம் பூரித்துருத்து நன்கள் மடியின்மீ துவைத்துக்கொண்டு சிவ பிரான் இதனை தருவாய்மலர்ந்தருளுவதாயினர். ஓகுமாரனே என் னில் மேருகாமல் மனகருப்பிள்ளையாகியிருக்கின்ற உன்னை யார்வ ணங்குகின்றார்களோ அவர்களுடைசகல விடையூறுகளையுந் தீர்த்து அவர்கள் விழைந்த காரியங்களை விரைவில் கைகூடும்படியாக அரு க்கிரகஞ்செய்திடுக கணங்கட் கெல்லாந் தலைமைபெற்றிருந்து இரு பையை வழங்குக அதனால்யாவரும் உன்னைக்கணபதியென்று சொ ல்லுக உன்னையாவரும் வக்காரியத்தின் முன்னதாகவணங்குக அவ் வாறு வணங்காதோர்க்கு இடர்களைப்புரிக இதுவன்றி அசுரர்கட் கெல்லா மரசனுய் யாவருமஞ்சத்தக்க கோரனுய் மிகக்கொடிய நெஞ் சையுடையவனுய் தேவர்கட்கெல்லாந் துன்பத்தை விளைக்கின்றவ னுய் கஜமுகனென்னும் பெயரைவகித்தவனுய் ஒரு அசுரனிருக்கின் றான் அவனை ஈரிரவில் சமர்க்களத்திற் சங்கரிதது விண்டுவே மூத லியோர் சூழ்ந்து யிருக்கின்ற துக்கசாகரத்தைத் தீர்த்து அவர்களைக் கிருபையோடுங் காத்தருள்கவென்று திருவாய்மலர்ந்து உமாதேவி யாரோடு அச்சித்திர மண்டபத்தைவிட்டுக் கணபதிப்பெருமானே யழைத்துக்கொண்டு சென்று அவரைத தமது கைலாய வாய்தலின் முகப்பிலிருக்கவைத்து அந்தப்புரத்திற் சென்றருளினர்.

அப்போது சுக்கிரதேவர் முதலிய கணத்தலைவர்களும் விண்டு மூதலியதேவர்களுங்கருணைநிதியாயெழுந்தருளிய கணபதி மூர்த்தி யைப்பணிந்தெழுந்து வேதாகம முதலியவைகளாற்றுதிசெய்து வி டைபெற்று அவரதுபெருங்கருணையினுல் அவ்வவர்களுடைய பெரி யஅதிகாரங்களைச் செலுத்துவதாகப் போனார்கள் அத்தப்புரத்திற் சென்ற சிவபிரானும் உமாதேவியாரும் சரசசல்லாபத்தோடும் அள வளாவிமகிழ்ச்சி யுற்றிருந்தார்கள் இவ்வாறு மகிழ்சசிபொங்க சரச சல்லாபத்துடனே அளவளாவி யிருக்கின்றபோது சிவபிரான் உமா தேவியாரைப்பார்த்து பெண்ணே நாமிருவருஞ சூதாடுவோம் அச் சூதில் நீதோற்பையாயின் உனது ஆபரணங்களை யெல்லாங் கொடு த்து விடக்கடவை, யாம் தோற்போமாயின் எனது ஆபரணங்களை க்கொடுத்து விடக்கடவோமென்று திருவாய்மலர்ந்தனர் அதற்குஉ மாதேவியார சம்மதித்து அப்போது சிவபிரானை தரிசனஞ்செய்யவ ந்திருந்ததமது சகோதரனுகிய விண்டுவைக்கூவி, ஒசேட்டனே இப் போதுயாமிருவரும் ஆடப்போகின்ற சூதுக்கு நீசாட்சியாகவிருக்க வேண்டுமென்று கேட்டனர் அதற்கவா சம்மதித்திருந்தனர். பின்ன ர்சுந்தரர்முதலிய பரிசனங்களெல்லாம் அக்குறிப்பினையறிந்துசூதா டு கருவிகளைக்கொணர்ந்து வந்து சிவபிரானெதிரில் நீட்டினர்கள் அவைகளைச்சிவபிரான் விண்டுவினிடத்திற்றந்து இவைகளைக் கிரம ப்படி வைத்திடுகவென்று கட்டளையிட்டனர அவ்வாறே விண்டு அ வைகளை யெல்லாங்கிரமப்படி வைத்து அவ்விருவர்களுடைய ஆட் டங்களையும் பார்த்துக் கொண்டிருந்தனர அவ்வாட்டம் முடிவில் உமாதேவியார் கெலித்தனர். அதைச்சிவபிரான்கண்டு பரியாசத்தி னுலோ முற்றியாது காரணத்தினுலோ உமாதேவியாரைப் பார்த்து பெண்ணே! நமக்குத்தோற்றனே ஆதலால. உனது ஆபரணங்களெ ல்லாங் கழற்றி நம்முன் வைக்கக்கடவை யென்று திருவாய்மலர்ந்த னர். அத்தனைக்கேட்டலும் உமாதேவியார சிவபிரானைப்பார்த்து நகை த்து சுவாமி அடியாள்கெலித்திருக்கத் தேவரீர் குற்றமற்றவேதங்க ளைத்திருவாய் மலர்ந்தருளிய வாக்கினுல் ஏற்றிணுக்கு இத்தன்மை த்தானபொய்யை நாணமில்லாமற் சொன்னீர்கள். தேவரீருடைய திருமேனியிலுள்ள ஆபரணங்களை வாங்கி என்முன்னேவைத்தருள் கவென்று கூறினள். அதற்குச்சிவபிரான் புன்னகைகொண்டு பொ ய்ச்சாட்சி சொல்லும்படியாக விண்டுவுக்குத்தமது புருவத்தை நெ ரித்துச்சைகைகாட்டி, மீட்டும் உமாதேவியாரை நோக்கிநாமேகெ லித்தனமென்றுதிருவாய்மலர்ந்தனர். அப்போது விண்டுவானவர் எ ன்செய்வார, மேல்வரும்வினைவச்சிறிது மறிந்துகொள்ளாதவராய்

உமாதேவியாரைப்பார்த்து அம்மணீ! இப்போதுசுவாமிக்குரோதோற்றமையால் உமதுஆபரணங்களை அவருக்குக்கொடுக்கவேண்டுமேர் வென்று கூறினர். அதைக்கேட்டலும் உமாதேவியார்கோபித்து, அவ்விண்ணிலை உறுத்துப்பார்த்து அறிவற்றவனே! எங்களுடையகெவிப்பையுந் தோற்பையுங் கண்ணிற்கண்டிருந்தும் என்னலாபத்தை விழைந்து உண்மைபைச் சொல்லாமல் பொய்சாட்சி சொல்லினீ.நீ இவ்வாறு சொன்னமையால் இனிகண்கெட்டமலிப்பாம்பாகி தன்பமுறக்கடவையென்றுச சிதனா

கேட்டீர்களோ சௌனகாதிமுனிவர்களே! சகல லோகங்களையும் அளிக்கவல்ல விண்டிவானவா சிவபிரானுடைய சார்பைப் பெற்றிருந்தும் ஒருபொய்சாட்சியினால சகித்தற்கரிய சாபத்தினைப்பெற்றனெனில் இவ்வுலகதில் பிரதிதினமும் பொய்யையேபெரும்பாலுங்கூறி வாழ்கின்றவர்கள் அடைபதற்கு நரகவேதனையை யாவரால் அளவிடக்கூடும்

இவ்வாறு உமாதேவியாரிட்ட சாபதைக் கேட்டலும் விண்டுவானவர் நடு நடுங்கிச சிவபிரானுடைய திருவடிகளில் வீழ்ந்துபணிந்தெழுந்து சுவாமி! தேவரீருடைய திருப்புருவ நெரிப்பிற்கஞ்சி உரைத்த பிழையினைப்பொறுத்து உமாதேவியார் கொடுத்தசாபத்திற்ருஓர்தீர்வு சொலலியருளவேண்டுமென்றப் பிரார்த்தித்தனர் அதற்கு அளவற்றகாலம் ஆணவமலதகிலழுந்தி மறைபட்டிருந்த ஆன்மாக்களை முதலியில் விட வேண்டுமென்று நினைத்து கடல்போலுந்த மது பெருங்கருணையிஞலே திருமேனிசொண்டு அவர்களை அவ்வானவ இருளினினறு மெடுத்து, ஆவர்க ளிச்சித்த தனுகரண புவனபோகங்களைக்கொடுத்து, அவைகளினிடமாக நல்வினை தீவினைகளை யூட்டி, அவ்விருளை பொப்பில மலபரிபாக முண்டாக்கி, முத்தியிற் சேர்ப்பிக்க வல்ல சாவஞ்ஞமூர்தியாகிய சிவபிரான் கிருஷ்பசுரந்து ஓ இலக்குமிகேள்வனே வடதிவிற்சென்று நமது திருவடிக்ளைத் தியானஞ் செய்துகொண்டிரு இன்னுஞ்சிலதினத்துள் மூவுலகத்தாருந்குந் தன்பஞ்செய்து வருகின்ற கஜமுகாசுரனைக் கணபதிமூர்த்தியானவர் சங்கரஞ்செய்து அவ்வழியே வருவர். அக்கால் அவரை நீபோர்ததுபோது உனக்குற்றசாபமானது நீங்குமென்று சிவபிரான் திருவாய்மலர்ந்தனர் அதை விண்டு கேட்டு மனமகிழ்ந்து, உடனே அவ்வடதிவிணையடைந்து ஓராலமரத்தடியில் எழுயோசனை விசாலத்திருக்கின்ற இருண்டபொற்தினுள் குருட்டு மலிப்பாம்பாகித் தமது பயங்கரமான ரூபத்தை நினைந்துதோறும் அருவருப் புற்றவராய் சதாசிவபிரானுடைய திருவடிகளையுங் கணபதி மூர்த்தியினு

ஆடிய திருவருளையுள் நியானஞ்செய்து கொண்டு தவத்திலிருந்தனர் விஞ்சியின் செய லிவ்வாறாக.

இக்கிரன் முதலியதேவர்கள், அசுரர்கள் செய்யுங்கொடுமைக் குப் பயந்து சகலதிரவியங்களோடுங் கயிலாயத்தை நோக்கிச்சென் றுமுதல் வாய்தலின் முகப்பில கணத்தலைமைபெற்று வீற்றிருக்கி ன்ற எமது கர்த்தனைப்பணிந்து பூசித்து இருகரக்கூப்பியுஞ் சிரமேற் கூப்பி வேதாகீமங்களினுல் அளவற்றதோத்திரங்களைச் செய்து நின் ருர்கள் அவர்களைக் கணபதிமூர்த்தி கிருபையோடும்பார்த்து அன் பர்களே! உங்களுக்கு வேண்டியவைகளை கேட்டீர்களாகவென்று தி ருவாய்மலர்ந்தனர் அதற்கு நமோல தேவர்கள் ஆனந்தங்கொண்டு அடி யேங்களை நாடோறும் வருத்திவருகின்ற கஜமுகாசுரனைத் தேவரீர் சங்காரஞ்செய்து அடியேங்களுடைய துயரத்தை நீக்கியருளல்வே ண்டுமென்று பிரார்த்திக்தார்ர அதற்குக் கணேசமூர்த்தி, அவ் வாறே செய்தருளுவ மென்று கிருபை வழங்கித்தமது சிம்மாசனத் தைவிடுத்து பூதர்கட்டலைவராக தலைவரை மஸ்பைப்போன்று பரி த்துவிளங்குஞ் சரீரத்தினுல் அகலமென்னும் பெயரை வகித்திருக் கின்ற ஒருவீரகுலி அவனதாகதரகதி ராரகணித்தருளினர். உடனே இரணபேரி ஜயபேரி வெறிரசம் முதலியவாத்தியங்கள் முழங்கின கொடி-குடை சாமரை முகலிய சின்னங்கள் இருமருங் கிலு கெருங்கின இடியேற்றினை பொபபச்சுகிரகும் பெருக்தொ னியையுடையவர்களாய், பிரளயாகினியைச் சொரிகின்றகண்களை வாய்ந்தவர்களாய் பருவதங்களை பொதுவினைகும் புஜங்களில் அ ளவற்ற ஆயுதங்களை யேந்தினவர்களாய், அநேகபூகவீரர்கள் புடை சூழ்ந்தார்கள் பின்னர்கணேசமூர்த்தியானவர் இவ்வித ஆடம்பரங் களோடு கயிலாயத்தினின்றும் வெளிகொண்டு கஜமுகாசுரன் அர சாட்சிசெய்துவருகின்ற மதங்கசுரத்தின் சமீபத்தி லமர்ந்தருளி னர் யோகியர் தங்கள் தங்கள் ஞானவுணர்ச்சியினுலறிந்தாலல்லது மற்றேனையோரால் அறியவொண்ணுத கணபதி மூர்த்தியானவர் இவ்வாறு யுத்தசன்னத்தராய் வெருக்கொண்டு வருவதைக் கஜமு கசுரனறிந்து ஆயிரம் வாகினிசேனைகள் தன்னீப்புடை சூழும்படி யாக வெளிக்கொண்டு கொடிமுதலிய சின்னங்களோடும் அமரர்களு ங்கண்டு நடுங்கத்தக்க ஆயுதங்களோடுமவ்வுயுத்தஞ்செய்யத்தொ டங்கினன். அப்போது பூதவீரர்கள் தாக்கிய தாக்கலிலே அளவ ற்ற அவுணவீரர்கள் துடைகளற்றும் இடைக ளொடிந்தும், வாள் கள்முறிந்தும்,கால்கள்மடிந்தும், தலைகள்பிளந்தும்,நிலைகளிழந்தும், பலதிசைகளினுஞ் சின்னபின்னப்பட்டு ஓடிமாண்டார்கள், அதைக்

கஜமுகாசுரன் கண்டுவடவையைப் போலக்கொதித்து தனித்தனியில் வில் அளவற்றபாணங்களைப் பிரயோகித்துச் சமீபத்திலிருந்த பூத வீரர்களை யெல்லாங்கொன்று கணபதிமூர்த்திக்கெதிரேவந்து விண்டுவாதிதேவர்களாலுங் காணுதற்கரிய அவரது திருமேனியைத்தனது தவமுதிர்ச்சியினுற்கண்டு சிறிதும் அஞ்சாதவனுய் இதனைச் சொல்லுவதாயினன். ஒசிறுபிள்ளாய் இதுகாறும் என்னுடு பகைத்துயர் உயிரோடிருந்தார்கள் தேவர்கள்செய்த தோத்திரத்திற்கு டன்பட்டு நீஎன் வீணிலழிவு தேடிகொள்ளுகின்றனே யான்விட்டு விடுகிறேன் இனியேனுங் தபிதகொள்ளு இல்லையேல்,என்னேடுயுத்தஞ்செய்ய ஆசையிருக்குமாயின் நீகற்றிருக்கின்ற ஆயுதவல்ல பங்களை இப்போதேகாட்டு சிறிதும எனதுபராகிரமத்தை யோசித்து எதிர்க்கவந்த உனக்கு கோரியனுப்பிய தேவர்களை யெல்லாம் நாசஞ்செய்து வெற்றிமாலே தரிகின்றேன் நான்சிவபிரானுடைந்திருக்கின்ற வரங்களைசிறிது மறிந்தாயில்லையென்று சொலலினன்

அதற்குக் கணேசமூர்த்தி புன்னகைசெய்து, அடா பேதாய்! உனகு வரங்கோடுததருளிய அசிவபிரானுடையகிருபையினுலே யே உண்மைச்சங்கரிதது தேவர்களையெல்லாம் யதாப்பிரகாரம் சொர்க்கலோகத்தில் நிலைபெற்றிருகசச செய்கின்றேன் பார் இதைஉண்மையாக நம்பக்கடவை நீஎன்வீணிற்பேசுகின்றாய்? அச்சமின்றிஎன்னேடுயுத்தஞ்செய்ய வல்லபமிருந்தால விரைவில் நடத்துகவென்று திருவாய் மலர்ந்தனா அதை அவுணாபெருமான் கேட்டுக்கோபித்துத்தனது மேருவையொதத வில்லேவட்டாகாரமாக வளைத்து,அளவற்ற குரூரமாகியபாணங்களைக் கோடைமழைபோலப் பொழிந்தான்அதைகளையெல்லாம் எமதுகர்த்தர் தமதுகதாயுதத்தினுலேவிலக்கி அவன்பிடித்திருந்த வில்லைக்கண்டித தெரிந்தனர் பின்னர் கஜமுகசுரன் மற்றொருவில்லேயெடுத்து வளைதது அளவற்றசரங்களை முன்னினும் அதிகமாகத்தொடுத்துவிட்டான் அவைகளையுங்கணபதிமூர்த்தி தமதுமுசலத்தினுலே விலக்கி வில்லையும் பொடிபடுத்தினர்.பின்னர் கஜமுகாசுரனுவன் அதிக உக்கிரத்தோடு நெருங்கிவந்து மற்றொரு வில்லில் இந்திராஸ்திரம் வருணஸ்திரம் வாயுவாஸ்திரம்,பிரமாஸ்திரம் நரசிம்மாஸ்திரம் முதலிய தேவாஸ்திரங்களை மாறிமாறிப்பிரயோகித்தான் அவையனைத்தும் வெளிப்பட்ட மாத்திரத்தில் அனந்த உற்பாதங்களை விளைத்துக் கொண்டுவந்து எமது கர்த்தருடையதிருவடிகளில் வீழ்ந்துவிட்டன. அதைக்கஜமுகாசுரன்கண்டு ஆச்சரியமுற்று மீட்டும் ஓர்தண்டாயுதத்தை யேந்திவந்து யுத்தஞ்

செய்தான். அத்தண்டாயுதத்தைக்கணபதி மூர்த்தியானவர் தனது கதாயுதத்தினற்றுகள் பத்தி அவுர்பெருமான் மார்பிற்ருக்கினர் உடனே அவன் சிறிதுநேரஞ்சோபித்திருத்தனன். அப்போது சுவாமி, தமது மழுவாயுதத்தினல் அவனுடையசேனைகளை யெல்லாஞ்சாம்பலாக்கினர். பின்னர் கஜமுகாசுரன் சோபநீர்த்து, தனதுசேனைகளெல்லாம் அழிந்து கிடக்கின்றமையைப்பார்த்து இவன்மேலான பராக்கிரமசாலியேயன்றி சிறுவனல்லவென்று நிசசயித்தும் மானம் மேலிட்டவனுய், மீட்டும் அளவற்ற ஆயுதங்களைக்கொண்டு யுத்தஞ் செய்தனன். அவன் பெற்றிருக்கின்ற சிறந்தவரத்தைக் கணபதிமூர்த்தியாலோசித்து, தமது வலப்புறக் கோட்டின் முனையைபொடித்து அவன்மீது விட்டனர். அது வெளிப்பட்டமாததிரத்தில் சகல லோகங்களுங்கலங்கும்படியாக வாபபரித்துசென்று கஜமுகாசுரனுடைய மார்பைப் பிளந்துபோய்ச சமுததிரததில் ஸ்நானஞ்செய்து, மீட்டும் சுவாமிகளிடத்தில வந்துசோந்தது

கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே! பகைவர்வந்தபோது அவர்களைப்பாதத்தினுலும், உகிரினுலும், நகையினுலும், பார்வையினுலும்வென்று வெற்றிகொள்ளவலல சிவபிரானுக்குத தமதுகொம்பினுல் அவ்வவுணனுடைய வுயிரைமாய்த்ததும் ஒருபுகழோ? பின்னர் கணபதிமூர்த்தியானவர் சமுததிரத்தில் ஸ்நானஞ்செய்துவந்த கொம்பினை ஓராயுதமாகத் தமது திருக்காதகி லேகதி யருளினர். அப்போது தேவர்கள் புட்பவருடஞ் சொரிந்தார்கள். முனிவர்களெல்லாம் வேதாகமங்களினுற் பலமுறைதோதாதிரஞ்செய்து பணிந்தார்கள். முன்னர் எம்பெருமானுடைய கோட்டினுற் பிளக்கப்பட்ட மேருகிரி அதியோடேபெயாத்து வீழ்ந்ததுமீபாலகிலத்தில்வீழ்ந்த கஜமுகாசுரன், பின்னர்மலைக்கு நிகரான மூடிகமாகி, வட்டமாய்ச் சிவந்து ஆழலியுமிழ்கின்ற விழிகளும, திசையாகைகளை யெல்லாம் வீட்டத்தக்க நீண்டவாலும், கடைவாய்க்கு வெளிப்பட்டிருக்கின்ற பருத்த பற்களும், நீண்டுநிமிர்ந்து அழுத்தமுற்றிருக்கின்றமுகமும் சரீரமுழுவதும் நிறைந்திருக்கின்றமயிரும், மலைகளையும் விருக்கங்களையும் உதைத்துச்சாய்க்க வல்லகால்களும், ஆகாயத்தை யளாவவுயர்ந்து உம்பருலகத்தையு மழிக்கத்தக்க முதுகும் பார்த்தவர்கள் அஞ்சிப் பயங்கொள்ளும்படியான கோரரூபங்கொண்டு சகலலோகங்களையும் கலக்கிசரசம்பண்ணும்படி நடந்தான். அவ்வுருவத்தைத்தேவர்களு முனிவர்களும் பார்த்துப் பயந்து பல திசைகளினும் ஓடிப்பதுங்கினர்கள் இத்தன்மைத்தான கொடியரூபத்தோடு எதிர்த்திருகின்ற மூஞ்சுறினுடைய பராக்கிரமத்தை எமதுகர்த்தன்கண்

டு இமைப்போதில் அதனை அசைவறப்பிடித்து முதுகிலாரோகணித்தருளினர். சுவாமியினுடைய திருமேனி தனது சரீரத்திற்பட்ட மாத்திரத்தில் அவனுடைய அஞ்ஞானமிருள் விலகிப்போய் மெஞ்ஞான ஒளிமிகுத்து மேன்மைபெற்றனன் சித்தர்கள் சாரணர்கள் முனிவர்கள் தேவர்கள் முதலாயினோர், ஆகுவை வாகனமாகவுர்த்த ருளியிருக்கின்ற கணபதிமூர்த்தியைப பூசித்தார்கள் கஜமுகாசுரன் மார்புபிளக்கப்பட்டு உதிரம் பெருகவிழுந்த பகளத்தை உலகத்தார் மாரொத்தமயமென்று சொல்லுகின்றார்கள் அவ்விடத்தில் கணேசமூர்த்தியானவர் ஓரிலிங்கப பிரதிட்டைசெய்து பூசித்து அத்தலத்திற் தங் கணபதீசரமென்று திருநாமந்தரித்தனர் அளவற்றசேனைகளோடு கஜமுகாசுரன யுத்தகளத்தில் இறந்தானென்று அசுரராஜனறிந்து பயந்து தானெருபட்சிரூபங்கொண்டு மேருமலையிலிருக்கின்ற ஓர் குகையிலொளித்துகொண்டான் அசுரர்குருவாகிய சுக்கிரனும ஆகாயமார்க்கமாய் பறந்துபோயினன் இந்திரன் முதலிய தேவர்களெல்லாங் கணபதிபுராதியினிடத்தில் விடைபெற்றுத் தம்பதிகளே யதாபிரகாரமடைந்து வாழ்ந்திருந்தார்கள்

பின்னர் கணபதி மூர்த்தியானவர் தமது ஆகுவாகனத்தைதடாத்திக்கொண்டு சகலதேசனை களுமபுடைசூழ்ந்திவரும்படியாகவட திவிஜோகார்க்கு யெழுந்தருளினர் அமமாதத்திரத்தில்கெடுகாள் ஓராலமரப்பொந்தில் குருடுபடிலப் பாமபாகியிருந்த விண்டுவானவர் அவ்வடிவத்தினின்று நீங்கிபபழையபடி தெய்வரூபம்பெற்றுக் கணபதிமூர்த்திக்கெதிரில்வந்து பணிந்தெழுந்து இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பிநின்று ஓ அட்டமூர்த்தமா யிருக்கின்ற அமலனே! தேவரீருடைபதரிசன வீட்சண்ணியதால் அடியேற்கு ஸ்ரீமாதேவியார் கொடுத்தசாபம் ஒன்றேயன்றி அடியேனுடைய மலபக்தங்களுமநீங்கும்படியான பேற்றினையடைந்தேன இனி இதைவிடயான்பெறத்தக்கபேறு வேறென்னவிருக்கினறது? என்றுமிக்கமனமகிழ்ச்சியோடும்புகழ்ந்து, புட்பம்முதலிய திரவியங்களாற பூசனைசெய்துவேதாகமங்களினுஞ் சோத்திரம்புரிந்து கைதட்டி நிருத்தமாடி, மீட்டும் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து சுவாமி? அடியேற்குத் தேவரீர் தரிசனம் கொடுத்தருளிச் சகல நமைகளாயுங் கைடைக்கச் செய்த இத்தினம் மாகழிமாதம் சஷ்டியாதலால் வருடந்தோறும் வருகின்ற இத்தினத்தில யாவரானுந் தேவரீருக்கு வழிபாடு செய்வார்களாயின், அவர்கள் சகலவரிட்டங்களி னிலுநீங்கி இட்டகாமியார்த்தங்களைப்பெற் றுய்யும்படி அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தனர்.

அதற்குக்கணேசமூர்த்தி, அவ்வாறே செய்தருளுவமென்றுகி
ருபைசுரந்து அவ்விண்டலையுங் தம்மோ டழைத்துக்கொண்டு சக
லலோகேஸ்வரர்களோடுங் கயிலாயபத்திற்குச் சென்று சிவபிரானையும் உமா
தேவியாரையும்பணிந்து விடைபெற்று, தனது யதாஸ்தானமாகிய
மூதற்கோபுரவாய்தலின் முகப்பிலெழுந்தருளினர் அப்போதுவின்
முதலாயினோர் கணேசமூர்த்தியைப் பூசனைசெய்து சுவாமி! அடி
யேங்கள் இதுகாறும் மிகுந்த கொடுமைபான கஜமுகாசுரனுக்குக்
குட்டிக்கொள்ளுதல் முதலாகிய வணக்கங்களைச் செய்து அவனு
டைய பணிவிடைகளைகடாத்துவந்தனம அவ்வணக்கத்தை இன்று
முதல் அடியேங்கள் தேவரீருகெதிரே செய்கின்றனம் அவைகளை
தீதேவரீர் வணக்கமாகக் கொண்டருளல்வேண்டும் அவ்வாறு தேவ
ரீருக்கு வணக்கஞ்செய்வோர்கள் யாவராயினும் அவர்கட்கு இஷ்ட
காமியார்த்தங்களைக் கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்தித்து,
அவ்வாறே தாங்க ளணைவரும் வணக்கஞ்செய்து சகலவரங்களையும்
பெற்று அவ்வவர்களுடைய பதவிகளையடைந்தார்கள். என்று சூத
புராணிகர்சொல்ல, அவைச்சவுனகாதிமுனிவர்கள் பணிந்தெழுந்
துசுவாமி! கஜமுகாசுரன்யார்? அவன்பெற்றவரங்கள்யாவை! அவை
களையுந்திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்றுபிரார்த்தித்தனர் அத
ற்குச் சூதபுராணிகரிசைந்து, ஓ சவுனகாதிமுனிவர்களே! முன்னெ
ருகாலத்தில் தேவேந்திரன் அசுரேந்திரனோடு யுத்தஞ்செய்து அவ
னைப் பின்னிட்டோடப்பண்ணித தான்வெற்றிப்பெற் றிருந்தனன்.
பின்னரசுரேந்திரன் வலியுறுமு நமதுகுலத்தில் தேவேந்திரனைச்செ
யிக்கத்தக்கவீரர்கள் ஒருவருமில்லையென்று மனந்தளர்ந்து தன
துகுலக்குருவாகிய சுக்கிரனைப்பணிந்தெழுந்து சுவாமி! இப்போது
எங்கள்குலத்திலிருக்கின்றவர்களுள் தேவேந்திரனைச்செயிக்கவல்ல
வீரமுடையவர்கள் ஒருவரு மில்லையே! அதனாலவன்வீறி எங்களை
வெல்லுகின்றனனே! தேவரீருடைய அருட்சூட்சியினால் நிலைபெற்றி
ருக்கின்ற எங்கள்குலமானது இவ்வாறு தாழ்ப்பட்டழியலாகுமா!
இனியேனும் அவ்வாறுகாமல் செழித்தோங்கும்படி அழையேன்மடன்
தாகொள்ளத்தக்கது யாதேனுமுண்டாயின் அதனைத் தேவரீர் கிரு
பைசுரந்து திருவாய்மலரவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்
குச்சுக்கிரனவன் மேல்நடக்கப்போகின்றகாரியத்தை தனது சூக்ஷ்
மபுத்தியினாலறிந்து, ஓ அசுரேந்திரனே! வசிட்டமுனிவருடையமர
பிலே மாகதரென்னும்ஓர் முனிவர்வனத்திலே முத்தியை வேண்டி
அரியதவஞ்செய்துகொண் டிருக்கின்றனர். அவரை எவ்வித்தத்திலே
னும் வசப்படுத்திக் கூடும்படியாக உனதுகுலத்தில் ஓர் கன்னிகைக்

குத்திட்டஞ்செய்தனுப்பிவை அவள்வயிற்றினின்று பாணமுகத்தி டனே ஒருவனுதிப்பான். அவன் தேவேந்திரனையடக்கி உன்கள்குல த்தைத் தழைத்தோங்கும்படியாகச் செய்வன், ஆதலால் அதனைவி ரைவில் நடாத்தக்கடவை யென்றுசொல்லி விடைகொடுத்தனன். பின்னர் அசுரேந்திரன் இதுகாறுமடைந்திருந்த துன்பங்களெல்லாம் இத்தினமே போய்விட்டனவென்று மனமகிழ்ந்து சுக்கிரனைப் பலமுறைதுதிசெய்து அவ்விடத்தினினறுநீங்கித் தனதுபட்டணத் தைவிரைந்தடைந்து அசுரகுலதனுள் அழகிற் சிறந்தவளாயிருக் கின்ற ரிபுதையென்னும் ஓர்கன்னிகையிடத்திற்சென்று தனதுமன க்குறையையுஞ் சுக்கிரன்சொல்லிய சூட்சினையும் அறிவித்தான். அ தற்கவளிசைந்து அருகிலிடதில தவஞசெய்திருக்கின்ற அம்மரகத முனிவரிடத்திற்சென்று, அவாசெய்யுந தவமகிமையைப் பார்த்து, இலக்குமியே எதிர்வந்தாலும் இவா சபலிப்பவராயிருக்கவில்லையே வலுவிற்போ யணையலாமென்முல சபித்து நாசமாக்குவரே? தவங்க ளுக்தபோதுங் கூடதடக்கவரலலவே நமதரசனுடைய இஷ்டத்தை எவ்விதததில திருப்திசெய்யப் போகின்றேமென்று எண்ணமிட்டு மனங்கலங்கி, மீடுருதெளிருதெழுந்து எண்ணியகாரியங்களைக் கு றைவில்லாம லடையதக்கவர்கள் தவத்தர்களேயாதலால், இத்தவ சியை வசமாக்குவதற்கு யாம் தவஞசெய்தே வசமாக்கிக் கொள்ள வேண்டுமென்று தனகுள் நிசசயித்து கவலைகளினின்று நீங்கிமரக தமுனிவர் தனக்கு மணாளராகவேண்டு மென்று மனதிற் நியானஞ் செய்துகொண்டு பசிதாகமுதலியவைகளை யடக்கி ஓர்பாரிசத்திலி ருந்து தனது அழகுற்ற சரீரமெலலாம் மழுங்கி வருந்தும்படியாக அளவற்றநாள் தவஞசெய்துகொண்டு வந்தனள்

இவ்வாறு அவள்செய்கின்றதவமும் பழவினையும் ஒன்றுபட ஒரு நாள்மரகதமுனிவா தமதுதவத்தைவிடத்துக் கண்களைவிழித்தனர். அப்போதவ்விடத்தில் ஆணினையும்பெண்ணினையுங்கூடிப் புணர்ச்சி செய்திருக்க அதை யம்முனிவர்கண்டு காமவிகாரந் தலைக்கொண்டு மன்மதனுடையகருப்புவில்லுக்கிரையாகியங்கினர். அதைவிபுதை யானவளறிந்ததமதுதவம் ஈடேறியதென்றுமனமகிழ்ந்து தானுற்ற னதுதவத்தைவிட்டெழுந்து ஞெரேலென்று அம்முனிவர் அருகிற் சென்று வல்லிகொடிபோலகின்றனள். அவளையம்முனிவர்கானும் ஓர்சிறியகாட்டினுள் மூண்டிருக்கின்ற கனலோடு காற்றுங்கூடினுல் பின்னவ்வழல் யாவையுந்தகிக்க மேலெழுவதுபோல, அவருக்குள் ளே பற்றியிருந்த காமவிகாரமானது அவரினின்றுமீறி மேலோங்

தெ துன்பஞ்செய்தது. அதன்பேரில் அம்முனிவர் விபுதையைப்பார்த்து, ஓ பெண்கள்காயகமே! நீ கன்னிகையா ஒருவனுடையமனைவியா? நீ என்னிடத்திற்கு வந்தகாரியம்யாது? சொல்லுகவென்றுகேட்டார். அதற்குவிபுதையானவள் அவரைப்பணிந்தெழுந்துசுவாமி! அடியேன்கன்னிகையே! தேவரீருக்கு அடியேன்மனையாளாஇப் பணிசெய்யும்படியான கன்மையைக்கோரி அளவற்றகாள் தவஞ்செய்துகொண்டிருக்கிறேன், இப்போது எனதுதவம் நிறைவேறும்படியாகத்தேவரீரும் விழித்தருளியதால் இனி அடியாட்குக் கிருபை புரியவேண்டுமென்று பிரார்த்தித்தனள் அதற்கமமுனிவர் சந்தோஷித்து பெண்ணேகாம்செய்த தவபலனே இவ்வாரு நம்மிருவோரையும் பொருந்தக்கூட்டிவைத்ததாதலால, இனி நீ உனது சங்கடங்களையெல்லாம் விடுத்து ஓர்பெண்யாகனையாக வருக்கொளளுகவென் றுசொல்லினர். அவ்வாறே அவள் பெண்யாகனையாயினள், பின்னர் மரகதமுனிவர் கன்யாகனையாக வருக்கொண்டு அவளோடு கூடிபபுணர்ந்தனர். அபபோது இரண்டுகொம்பையுடையவனும், நீண்ட துதிக்கரத்தையுட்டயவனும் மேககர்ச்சனையைபோன்ற குரலினையுடையவனும் கஜமுகாசுரன் பிறந்தான். ஓர் சிங்கக்குட்டியானது தாய்வயிற்றுகின்று முதிக்கும்போதே யானையினுடைய மத்தகத்திற்பாய்ந்து பிளப்பதுபோல அக்கஜமுகாசுரன் தனது தாயுதரத்தினின்றும் உதித்தபோதே சகலலோகங்களையும் வாரியுண்ணத்தக்க தொழிலக்கைக்கொண்டவனும், ஓர்பட்டாக்கத்தியை வீசிக்கொண்டு பர்வதங்களையெலலாம் கால்களினால் தைத்துத்தள்ளியும், கைகளினல் அண்டகடாகங்களைக் குத்திப்பொடியாக்கியும், சத்தசாகரங்களிலும், பாய்ந்து அதனைக்கலக்கியும், பத்துதிசைகளினு மோடியார்ப்பரித்தும், எங்குங்காற்றுடிபோலப்பாய்ந்திரிந்து கொண்டிருந்தான் இவனன்றி இன்னு மளவற்ற அனேக அசுரவீரர்கள் விபுதையாகிய பெண்யாகனையினுடைய மயிர்க்கால்களினின்று சர்வாயுதபாணியர்களாயும் அழலெச்சொரியும் விழிகளையுடையவர்களாயும் பிரந்து ஜர்ப்பரித்தார்கள்.

இத்தன்மைத்தான கோரங்களைப்படைத்தபிள்ளைகளை ஆண்யாகனையாயிருந்த மரகதமுனிவர் பார்த்துப்பயந்தயாவரும் கல்லதென்று கூறுந்திருப்பாற் கடலானது ஓர்காலத்தில்யாவரும் அறியும்படியாக விடத்தைகக்கியதுபோல புகழுத்தக்க தாபனுயிருந்தும் சகலலோகங்கட்கும் அழியாததுயிர்த்தை யுண்டாக்கினேமேயென்று மிலேசித்து மனம்புழுங்கிவாடி தமதுபுத்தியைத்தாமேதேற்றிக்கொண்டு தம்மைப்பிடியாகனையாகி கடியவிபுதையைப்பார்த்து, நீயென்னகுலமென்றுகே

ட்டுத் தெரிந்துகொண்டு, அவனைத்தனது பதவியைநோக்கிச் செல்லு மாறு விடைகொடுத்துத் தாம்முன்போலவேதவத்திலிருந்தனர். அப் விபுதையுங் தானினைத்துவந்தகாரியங் கைகூடியதென் றெஞ் சத்தோடு த்துடன்சென்று தனதிருக்கையையடைந்தனள். கஜமுகாசுரனும்மற் றவீரர்களும் தேவர்கள் முதலியசகலசீவராசிகளையுங்கொன்று தின்று க்கொண்டு சர்வசங்காரகாலகதி லெழுகின்ற உருத்திர மூர்த்தியினு டையகைக்கு இரையப்பாற்றினர்கள் அதனால் சகலலோகங்களினுந்தரு மம்-தானம்-எசை-அருள்-சீலம்-வேதவொழுக்கம முதலான எந்தக்கரு மங்களு மழிந்துபோய், இலக்குமியானவள் எவ்வுலகங்களினும்ம சித்தலன்றித் தாமரைப்பூ வொன்றினிலேயு இடமாகக்கொண்டிருந்த னள். இவ்வாறு அபபாதகர்கள் உலகமீனதையுங்கனல்பற்றியகாட் டைப்போல நாசமாக்கிக்கொண்டு இயங்கியைச்சேர்ந்து அங்குக் வஞ்செய்திருக்கின்ற பெரியோர்களையெல்லாம் உபத்திரவஞ்செய்து யாவரும் இதுதானே பிரளயகாலமென்று சொல்லும்படியாகத்திரிந் திகொண்டிருந்தார்கள் அபபோது சுக்கிரனவன், அவர்கட்குபின் னும் மேலானகாரியங்களை உபதேசிக்கும்படியாக ஆலோசித்துசொ ல்லுவானகித் தானும் நாம்பேசுமுன்னமே யென்செய்கின்றனெவ ன்றுபயந்து, கஜமுகாசுரனுக்கெதிரே சென்றுமைந்தனே! நாம்உனது குலத்திற்குமந்திரியுங்குருவுமாகும்வனது குலத்தைவிருத்திசெய்யவே ண்டியபோது யாம் உனக்குமேலான உறுதியைச்சொல்ல வந்தோ மென்றனன். அதைக்கஜமுகாசுரன்கேட்டு அவனைப்பணிந்தெழுந்து, சுவாமி! இனி எனக்குச் சொல்லவேண்டியது யாதேனு முண்டாயின் அதனைச் சொல்லியருளவேண்டுமென்று கேட்டனன். அதற்குமேல் சுக்கிரன்சந்தோஷங்கொண்டு, அன்பனே! யானைமுகத்தோடுங் கூடிய வுனக்கும் உனது குலத்தினருக்கும தேவேந்திரன் பகைவனுயிருக் கின்றன். அவன் உனது வரலாற்றினைகேட்டுச் சகலசேனைகளோடும் வெளிப்படுவனுபின் அப்போது நீ அவனை என்னசெய்யமாட்டுவை, நீயாரிடத்திலும் வாங்கள் முதலானவைகளைப் பெறவில்லை. ஆதலால் வேறொருகாரியத்தில் மனத்தைச் செலுத்தாமல் இனியேனுஞ்சிவபிரா னைநோக்கித்தவஞ்செய். அவருடையகிருபை உனக்குண்டாயின், அப் போதே எல்லாத்தேவர்களும் உனது ஏவலைக்கேட்பார்கள். நீகினைத் தகாரியங்களெல்லாம் நினைத்தவண்ணமே கைகூடும், இதைச்சத்திய மாக நம்பக்கடவையென்று சொல்லினன்.

இவ்வாறு இதமானகாரியங்களைக் கூறியதனது ஆசிரியனைக்கஜ முகாசுரன்மீட்டும் பணிந்தெழுந்து பலமுறைதுதிசெய்து அவனின்

தீதுண்டான இச்சையினுல் உடனே விடைபெற்றுத்தனது அம்பியர் சூழ்ந்து புடைசூழும்படியாக மகமேருகிரியின் ஓர்பக்கத்திலிருந்து ஆயிரம்வருடஞ் சருகுகளேப்பட்சித்துக்கொண்டு, ஆயிரவருடஞ் சலபானஞ்செய்துகொண்டும் ஆயிரவருடம் யோகாபியாசம் புரிந்துகொண்டும் இவ்வாறு நாலாயிரவருடம் அகோரமாகிய தவத்தைச்செய்தனன். அத்தவத்திறகுச் சிவபிரான் இருபெசுரந்து அவனெதிரிற் பிரத்தியட்சமாகி உனக்கு வேண்டியவரங்களைக்கேளென்று திருவாய்மலர்ந்தனன். உடனேகஜமுகாசுரன் பணிந்தெழுந்து ஆனந்தபரவசமூற்று இருகரங்களையுஞ் சிரமேற் கூப்பி, சுவாமி! விண்டு முதலிய உயர்திணைகளினலும் யாணை முதலிய அஃறிணைகளினும், அத்திரசத்திரங்கள் முதலிய ஆயுதங்களினலும் அடியேன்எக்காலத்தும் அழிவில்லாமலிருந்து தேவர்கள் முதலாயினேர் இரவும் பகலுமடியேணே யேவல்கேட்டு நடந்துகொள்ளும்படியாய் அரசாட்சி செய்யவேண்டும் ஒருவேணே சுவாமிகளுடைய திருபையினுல் அடியேற்கு மூடிவுகேருமாயின் அப்போது அடியேணே மேன்மைபெற்றிருக்கும்படி வரங்கொடுத்தருளவேண்டுமென்று பொருத்தித்தனன் அவ்வாறே சிவபிரான் அவனுக்கு வரங்களேக்கொடுத்தருளி அநுதர்த்தனமாயினர்.

இப்பால் கஜமுகாசுரன்தனது தப்பியரோடு அவ்விடத்தினின்றும் நீங்கத் தனதிருப்பிடத்திற்கு வந்துவிட்டனன், அப்போது அசுரேந்திரனும் சுக்கிரனும் அவனிடத்தில் வந்து கலந்தார்கள் தேவதச்சனவன் அவ்விடத்தில் சகலவளங்களோடும் ஓர் நகரமுண்டாக்கி அதற்கும் தங்நகரமென்று பெயரிட்டுக்கொடுத்தான் அந்நகரத்தில் கஜமுகாசுரனிருந்து திரிலோகங்களினும் கொடுங்கோல்செலுத்தித் தேவர்கள் முதலிய யாவரும் தன்னேவணங்கும்படியாக அரசாட்சிசெய்துவந்தனன். கச்சபநிதி-கர்பநிதி- சங்கநிதி- பதுமநிதிநந்திநிதி-நீலநிதி-மகாநிதி-மகா பதுமநிதி-முகுந்தநிதி என்கின்ற நவநிதிகளும் அரிசாதனம்-கற்பகம்-சந்தானம்-பாரிசாதம்-மந்தாரம் என்கின்ற பஞ்சதருக்களும் காமதேனு சிந்தாமணி முதலியனவும் அம்மந்தங்களாகத்தையடைந்து பணிசெய்திருந்தன இந்திரன் முதலிய தேவர்களும் திரிடதிபதிகளான இராஜர்களும் மிகுந்த பயபத்தியுடன் தினந்தோறும் வந்து அவனேப்பணிந்து ஏவல்செய்துகொண்டு எல்லா இடமாப்புகளேயுமொழிந்திருந்தார்கள் சுக்கிரனும் அசுரேந்திரனும் அவனுக்கு அமைச்சராஞர்கள். பின்னர்கஜமுகாசுரனவன் தனதுகுலத்திலும் தேவர்குலத்திலும் நாகர்குலத்திலும் உள்ளமிக்க அழகான பெண்களே அநேகரைக்கலியாணஞ்செய்துகொண்டு சகலபோகபாக்கியங்

னையுங் குறவற அனுபவித்துத்திரிலோகங்களினும் கொடுங்கோல்செ லுத்திவருகின்றகாலையில் ஓர்நாள் தண்ணிப்பிரதினம் பயபத்தியோ டுபணியவருகின்ற தேவர்களை அப்பாதகன் பார்த்து ஓ விண்ணவர் களே! இன்றுதலாக நீங்கள் நம்மைப்பணியவருகின்றபோதெல் லாம் இருகரங்களையும் முட்டிபிடித்து மூன்றுதாஞ் சிரசில் குட்டிக் கொண்டு பின்னர் அக்காங்களைமாறிச்செவிகளைப்பிடித்துத்தோப்புக் காணம் போடக்கடவீர்கள், இதுவே நீங்கள் நமக்கு இட்டமாகச்செ ய்யத்தக்கவணக்கமென்று ஆக்கியாபித்தனன். அன்றுமுதல் தேவர் கள் யாவரும் அவ்வாறே செய்துவந்தார்கள். மனதில் எவ்வளவே னும் தயையில்லாமல் தேவர்களையேவல் செய்வித்துவந்தகஜமுகாசுர னுடையபிறப்பும், அவனுக்குப்பாக்கியம் வந்த வரலாறும் இதுவா கும். இத்தன்மைத்தானகொடும்பாவியை ஓர் நிமைப்போதில் வெண் றகணபதிமூர்த்தியினுடைய திருவவதாரமகிமையைக்கூறிய இச்சரித் திரத்தைப்பிரதினம் பாராயணஞ்செய்வோர்கள் சகல அரிஷ்டங்க ளினின்றும் நீங்கி மேய்ஞ்ஞான சுகத்தையடைந்து வாழ்வார்கள்.

கணபதி திருவவதாரப் படலம்

முற்றிற்று

பத்தாவது.

மகோற்கட விநாயகர்

திருவவதாரப் படலம்.

கணபதியென் றுலகேத்துங் கண்ணுதலா ரவதாரங்
குணமுறக்கேட் டனையன்றே கோதின்மகோற் கடரென்ன
வுனவலு'முமையிரண்டா மவதார மிதுவிசைகூர்
குணமலிதெய் வதகெறியிற் கொண்மினென் முனிவீர்காள்.

ஓ சவுனகாதி முனிவர்களே! விகாயகமூர்த்தியானவர் கணபதி திருவவதாரங்கொண்டு தேவர்களை வருத்திய கஜமுகாசுரனைக்கொ ன்று விண்டுவினுடைய சாபத்தைத் தீர்த்தருளிய திருவினையாடலைச் சொன்னேம். இப்பால் மகோற்கடாவதாரங்கொண்டு செய்தருளிய திருவினையாடலைச்சொல்லுவோம் கேட்பீர்களாக.

தாமரைத் தாடகங்களும், குடிவளப்பமும், வயற்செழுமையுஞ் சிறந்துவிளங்கியிருக்கின்ற அங்கதேயத்தில், சகலசெல்வங்களோயும்பெற்சிறந்திய காத்திரமென்னுமோர் பட்டணமுண்டு. அப்பட்டணத்தில் குடிகொண்டிருக்கின்ற அந்தணர்கட்குள், வேதமுதலிய சாத்திரங்களோ யாராய்ந்துணர்ந்த உள்ளத்தினனும், போகபாக்கியங்களில் இச்சைவையாத யாகாதிகளைச்செய்கின்றவனும், இரவுத்திரகேதுவென்னும் பெயரினையுடைய ஓர் அந்தணனிருந்தான் அவனுக்குக்கற்பினும் அழகினும் அருந்ததியையும் இரதியையும் நிகர்த்தசாரதையென்னும் பெயருடைய ஓர் மனைவியிருந்தனள். இவ்விருவர்களும் உடலுமுயிரும்போல வாழ்ந்திருக்கின்ற காலையில் அவர்கட்கு இரட்டைப் பிள்ளைகள்பிறந்தார்கள் உடனே தந்தையாகிய இரவுத்திரகேதுவானவன் அவர்கட்குச்செய்யவேண்டிய கருமங்களைச்செய்து நிறைவேற்றி ஒப்பற்றகனிதர்களைக் கூவி திதிபாதி நிலைகளை யாராய்ந்து. தேவர்தகுனென்றும் நரர்தகுனென்றும் ரமகரணஞ் செய்தனன் தாயாகிய சாரதை அவர்களை ஆட்டியும் ஊட்டியும் அன்போடு வளர்த்துவந்தனள்.

இவ்வாறு இருவரையும் சாரதை பராரட்டிவரும்போது, அப்பிள்ளைகள் நாளுகடுநாள் வளர்பிறையைப் போலத தொட்டிலில் வளர்ந்துகொண்டிருக்குஞ்சமயத்தில் சின்னாள் விண்ணுலகைப பகைவர்போல மல்லாந்து ஆகாயத்தைப்பார்த்தும, சின்னாள் பாதலத்தைக் கொள்வார்போலக் கவிழ்ந்து நிலம் பார்த்தும், சின்னாள் அறங்களெல்லாந் தழைத்திருக்கும்படியாக வுட்கார்ந்தும், சின்னாள் மறங்களனைத்தும் வளர்ந்தோங்கும்படியாக வெழுந்தும், சின்னாள் நல்லோர்களுடைய செம்மைமேல்லால் புறங்கொண்டு செல்வதாகநடந்தும், சின்னாள் எங்குஞ்செயிர்வினையாடும்படியாகத் தெருக்களில் விளையாடியுமிருந்தார்கள், இவ்வாறு இவர்களைமல்லாந்தும், கவிழ்ந்தும், இருந்தும், எழுந்தும், நடந்தும், விளையாடியும் இருக்கின்ற காலத்திற்றானே பாரித்த சரீரத்தையுடையவர்களாகித் தங்களடிகளைப் பெயர்த்துவைக்குந்தோறும் பூமிகூயத் தாங்கிநின்ற ஆதிசேடன் மெனியவும், தாங்கள்குதித்து விளையாடுந்தோறுந் தங்கள் முடிபட்டு உடுக்களுதிரமாகவிருந்தார்கள் அவர்கட்கு ஆறுமவயதில் இரவுத்திரகேதுவானவன் உபநயனஞ்செய்வித்துவேதாகமாதிகளையும் ஓதுவித்தனன் அவர்களும் அவைகளைத் தெளிவுபெறுவோதித் தமது தந்தையினும் பதின்மடங்கு அதிகமானார்கள். அக்காலத்தில் ஓர்நாள் காசுமுனிவர் அவ்விடத்திற்வர, அவரை இரவுத்திரகேதுவும்சாரதையும் எதிர்கொண்டழைத்துவந்து

ஓராதனத்திலிருத்திச் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, அவ்வற்ற தோத்திரங்களைச் செய்துபற்பல உபசாரவார்த்தைகளோப் பேசித்தமது புத்திரர்களாகிய தேவாந்தகனையும் நராந்தகனையும் அழைத்து, அவர்கள் நாரதமுனிவரைப் பணியச்செய்து சகல வான்மீகோடிகட்கும் கன்மையைவிளைக்க வெழுந்தருளிய கிருபா நிதியே! இப்புத்திரர்கட்குப் பூரணயுளுஞ் செல்வமுங் கிடைக்கும்படியாகத் தேவரீருடைய அபிர்தவாக்கினல் ஆசீர்வதிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்கு அம்முனிபுங்கவர் கிருபைசுரந்து தம்மைப் பணிந்திருக்கின்ற பிள்ளைகளிருவரையுந் தமதுமடித்தலத்திலெடுத்து வைத்துக்கொண்டு உச்சிமோந்து சரீரமுழுவதுந் தடவிமீட்டுங் கீழேவிடுத்து அவ்விருவருக்கும் ஸ்நானஞ்செய்வித்து, விதிப்படிதீட்சை புரிந்து, பஞ்சாக்கர உபதேசஞ்செய்து அதைசெபிக்கவேண்டிய முறைமையிணையுங்கூறி, மைந்தர்களே! இன்றுமுதல் இம்மகா மந்திரத்தைச் செபஞ்செய்து வருவீர்களாயின், உங்கட்குச் சிவபிரானுடைய கிருபையினல் யாதொருதீங்கும்நேராது சகலசித்திகளுங் கைகூடும் தேவர்களெல்லாம் உங்களைப் பணிவார்கள்யாவன்றி நீங்களவர்களைப்பணியா திருக்கத்தக்க யோக்கியம் உங்கட்குண்டாகுமென்று அனுக்கிரகஞ்செய்து போயினர் அதற்குமேல் அபபுத்திரர்கள்சகல செல்வங்களையுந் தவஞ்செய்து பெறவேண்டுமென்று ஆலோசித்து, உடனே தாய்தந்தையரைப்பணிந்து விடைபெற்றுப் பலவிருக்ஷங்கள் மலிந்திருக்கின்ற ஓர்வனத்திற் சென்று அவ்வனத்தினடுவில் ஓர்சோலையும் அச்சோலைமத்தியில் ஓர் தடாகமும் அத்தடாகத்தினருகில ஓர்சிவாலயமுமிருக்கக்கண்டு அச்சிவாலயத்தி லெழுந்தருளியிருக்கின்ற சிவலிங்கத்தைப் பூசைசெய்து ஓர்காற்பெருவிரலி நிலத்திலூன்றி பஞ்சேந்திரியங்களையுமடக்கிதான் மருங்கினும் அக்கினியைவளர்த்தி ஆயிரம்வருடம் ஒருபொழுதுஅன்னமுண்டி, ஆயிரம்வருடம் தண்டுகளைப்புசித்தும், ஆயிரம்வருடம்நிழலுங்குகளையருந்தியும, ஆயிரம்வருடம் இலைகளைமேய்ந்தும், ஆயிரம்வருடம் கனிகளைநுகர்ந்தும், ஆயிரம்வருடம் காய்களைக்கறித்தும், ஆயிரம்வருடம் சருகுகளை அயின்றும், ஆயிரம்வருடம் சலபானஞ்செய்தும், ஆயிரம்வருடம் வாயுபட்சணஞ்செய்தும், ஆயிரம்வருடம் நிராகாரமாயிருந்தும் இவ்வாறு பதினயிரம்வருடம் சூரியசோபார்த்தல் கொண்டு அருமையான தவஞ்செய்தார்கள் அத்தவத்திற்கு அருட்கடலாகிய சிவபெருமான்கிருபைசுரந்து அவர்கள்தம்மையெவ்வாறு தியானித்தார்களோ அவ்வாறே நீலகண்டமும் மூன்றுமுகமும் பத்து காள்களும் பதினேந்துவிழிகளும் சடைமுடியில் மூன்றும்பிறைசந்தி

ரணம்விளங்கும்படியாக உமாதேவிசமேதராய் இடபவாகனத்தையூர்ந்து அளவற்ற சிவகணங்களும் தேவர்கள் முனிவர்கள் முதலாயினோரும் புடைசூழ, அவர்களெதிரே பிரத்தியட்சமாயினர் உடனே அவர்கள் கர்த்தனுடைய திருவுருவங்களே தியானித்தவாறேதரிசித்து அடியற்றமரம்போலச சாஷ்டாங்கமாகவிழுந்தெழுந்து பலமுறைவலஞ்செய்துகின்று இறைவிழிகளினும் ஆனந்தபாஷ்பஞ்சொரிந்து உடல்முழுவதும் உரோமஞ்சிதம்பூத்து நெக்குவிட்டு நெஞ்சமுருகிக்கரங்களைச் சிரமேற்கூப்பி சாமவேதங்களினால் அளவற்ற தோத்திரங்களைச் செய்தார்கள், இவ்வாறு அவர்கள் வரமபெறற அன்போடு செய்ததறிகட்குச்சிவபிரான் சந்தோஷித்துத் தமதகிருபாதோகத்தாலவர்களைப் பார்த்து அன்பர்களே! நீங்கள கருதிவரங்களைக் கேளுங்களென்று திருவாய்மலர்ந்தனர். அதை அவவிருவாகளுங்கேட்டு ஆனந்தித்துத் தங்கள் நிடசித்தத்தாலும ஆலோசித்து சுலாமி' இருவகைப்பொழுதினாலும் இருவகைத்திணையினாலும இருவகைபபடையினாலும் அடியேங்கள் இறதியில்லாமலிருக்கவும பிரமன் விண்டு முதலியதேவர்கள் அடிபேங்களிட்ட பணிகளைசசெய்யும்படியான செல்வமும் கிருபை செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதறகுச சிவபிரான்கிருபையோடும் அவர்களைப்பார்த்து ழ கிருவர்களே! விநாயகமூர்த்தியினுடைய திருக்கரத்தாலன்றி ஏனையாரால உங்கட்கு நிரியாணமில்லை திருவாய்மலர்ந்து அவாகளகோரிய மறறவரங்களையும் தெய்வப்படையுங்கொடுத்தருளி அந்தர்த்தானமாயினர.

பின்னர் அவ்விருவர்களும் அளவறற மகிழ்சசியோடு தங்கள் பட்டணத்திற்குச்சென்று தாய்தநதையைப் பணிந்தெழுந்து தாங்கள் பெற்று வந்தவரங்களையெல்லாம் அவர்கட்குக்கூறிச்சிலகாள் ஆசோதையுறறிருந்து அதற்குமேல் திரிலோகங்களையும் ஆளவேண்டுமென்று இச்சைகொண்டு திதிவார நட்சத்திரயோககரண முதலியவைகள் சுபமாயிருக்கிற ஓர்நாளை ஆராய்ந்து அங்காளில்நித்திய விதிகளைமுடித்துநெய்யுங்கண்ணடியும்பார்த்துமேவியர்கட்கு அளவற்றதானங்களைக்கொடுத்து அவ்விருவர்களில் மூத்தவனைதேவாந்தகனைவன்னரான் தகனியழைத்துதம்மி நீ இப்பூவுலகத்தையும் பாதாளலோகத்தையும் உன்வசப்படுத்தி அரசாட்சிசெய்து கொண்டிரு யான் தெய்வலோகமுழுவதும்வசப்படுத்தித் தேவர்களை யெல்லாம்பணி கொள்கின்றேனென்று சொல்லி அவனிடத்திலிருந்தனதுதாய்தந்தை யரிடத்திலும்விடைபெற்றுக்கிவத்தியானஞ்செய்துகொண்டுஆகாயமார்க்கமாகச்சென்றுகைலாசத்திற்குச்சென்று அமராவதி பட்டணத்திற்கு வெளியேயிருக்கின்ற

கற்பகச்சோலையைக்கையாலும் காலாலுந்தள்ளியுதைத்து அல்லோல கல்லோலப்படுத்தினன். அதை அங்கிருந்தோர்களிற் சிலர்பலர்தோடி தேவேந்திரனிடம்விண்ணப்பஞ்செய்தனர். அது கேட்டவுடனே இந்திரன் மிகுந்தகோபமுண்டாகித்தனது சேனைத் தலைவர்களைக்கூவிநமது கற்பகவனத்தை ஒரவணன்வந்து அழிக்கின்றானாம், நீங்களிந்நிமிஷத்தில அங்குசென்று அவ்வவணனைக்கைப்பிடியாகப்பிடித்துக் கொண்டுவந்துபாசினியின்காலில் இடறவிக்கக்கடவீர்களென்று ஆக்கியாபித்தான். அவர்களும் அதற்குடன் பட்டுத்தங்கள் தங்கள்சேனைகளோடு வெளிக்கொண்டு தேவேந்திரனை வளைத்துச்சமர் செய்தார்கள். அப்போது சிலானுக் கிரகத்தால் மேலானபராக்கிரமத்தினையடைந்திருக்கின்ற தேவேந்திரன், அதிகோபங்கொண்டு, யானை கூட்டத்தில் ஒண்டிசிங்கம் புகுந்தது போலத் தேவசேனைகளிற் புகுந்து துவிமானங்களைத்தூக்கி விமானங்கள் மீதெறிந்தும், இரதங்களைத்தூக்கி இரதங்கள் மீதுவீசியும், யானைகளைத்தூக்கி யானைகள் மீது எற்றியும், குதிரைகளைத்தூக்கிக் குதிரைகளின்மீது விடுத்தும்பதாதிகளைத் தூக்கிப் பதாதிகள்மீது தாக்கியும், இவ்வாறு காலாந்தருத்திரனைப் போல நிமைப்போதில் நால்வகைசேனைகளையும் அதப்படுத்தி அச் சேனைகட்குத் தலைவராகவந்த வீரர்களையெல்லாங்காலினாலுதைத்தும் கையினாலடித்தும் அனலெழும்பக்கண்களை விழித்தும்: பெருமூச்செறிந்தும், ஆர்ப்பரித்தும், நகைத்தும், குனித்தும், தோள்களைத்தட்டியும், உலாவியும், நிமிர்ந்தும கின்னுபின்னப்படுத்தி விட்டனன்.

இச்சம்பவத்தை இந்திரன்கேள்வியுற்று வடவானலத்தைப்போலக் கொதித்தெழுந்து பின்னும் அளவற்ற சேனைகளோடு தனது அயிராவதத்திலேறித்தேவாசுதகணமோசுகிச்சென்றனன். அத்தேவசூர்தகன் இந்திரனையும் அவன் சேனைகளையும் பார்த்தமாத்திரத்தில் ஓர்மங்கையானவள் ஓரடவனைக்கண்டு வலிதிற்கூடவந்தால் அவ்வாடவனுக்கு எவ்வாறு காமக்கனல் அதிகரிக்குமோ அவ்வாறு அவனுக்குக்கோபக்கனலதிகரித்து மந்திரகிரியை யொத்துப்பாரித்திருக்கின்ற தனது கொடிமரத்தை இருகைகளும் பொருந்தகவளைத்து ஒன்று பத்து நூறு ஆயிரம் பதினாயிரமென்னுங் கணக்கிணுமதிகமாக அளவற்ற திவ்யபாணங்களைக்கோடைமழைபோலப் பொழிந்து ஓர் கணப்போதில் இந்திரனுடைய சேனைகளையெல்லாங் கொன்றனன், அதை இந்திரன்பார்த்து ஊழிகாலம்போலக்கொதித்து தனது கோபத்தை விண்ணில் மூடிக்கிச்சென்று வச்சிராயுதத்தினால் தேவாசுதகனுடைய மார்பில்

இடிபோலப் புடைத்தான். அப்போதவ்வச்சிராயுதமானது அருக்கற் பாறைமீதறைந்த அல்லிக்கொடியைப்போலப் பொடிப் பொடியாய்ச் சிதறிப்போய்விட்டது, இவ்வாறு வச்சிராயுதஞ் சிதறிப்போகலும், இக்கிரஞனவன் தனது அயிராவதத்தைக் குனித்துக் கொம்பினும் அவன் மார்பைப் பிளக்கும்படியாக முடுக்கினன் அஃது அவ்வாறே குனித்து தனது மார்புக்கு நேராக வருதலுங் தேவாந்தகன் ஓரறையி னல் அதனுடைய வீரப்பை யடக்கி மற்றோரறையினல் இக்கிரனுடை யயற்கலெல்லாம் பலபலவென்று உதிரும்படியாகக் கன்னத்திலே புடைத்தான்.

உடனே இக்கிரன் அவ்வடியைத் தாளமாட்டாமல் நிலமிழு ந்து மூர்ச்சையாகிப்பின்னர் தெளிர்தெழுந்து இனியாம் இங்கு நீடித் திருந்தால் இப்பாதகன் அரைக்கணத்தில்கம்மைக்கொல்லுவானென்று பயந்து கார்தோடி மகமேருகிரியிலிருக்கின்ற ஓர் குகையில் ஒளித்துத் தவஞ்செய்துகொண்டிருந்தான். பின்னர் இசசம்பத்தை இக்கிராணி யும் மற்றத் தேவர்களுங் கேட்டுப்பயந்து அவர்களும் அவ்வாறே சென் ன்று அம்மலைக் குகைகளி லொளிதுக்கொண்டார்கள், சொர்க்க லோக மீணத்துங்கலங்கின. அதற்குமேல் தேவாந்தகன் செயபேரி கையறைவித்து இக்கிரனுடைய அயிராவதத்திற்குன் ஆரோகணித்து இராசவீதிகளை வலமாகவந்து சுதனமத்திலிருக்கின்ற சிங்காதனத்தில் ஒற்றைக்குடையின் கிழிருந்து இருமருங்கினும் வெண்சாமரைகள் வீசவும் தேவர்கள் யாவரும் பணிந்து தோத்திரஞ் செய்யவும், அரம் பையர் நடனமாடவுமான கோலத்துடனே கொலுவிருந்து தேவேந் திரனேப்பார்க்கினும் பதின்மடங்கு அதிகமாக யான் உங்களையெல்லா ங்காப்பாற்றுகின்றேன் என்னைச்சத்துருவென்றெண்ணி நீங்கள் கலைய வேண்டாம், யாவரும் பழையபடி அவ்வவர்கள் யதாஸ்தானத்தைய டைந்து களித்திருக்கக் கடவீர்களென்று சொர்க்கலோகமெங்கும் களிதூங்கும் படியாகச்சொல்லி முரசறைவித்தான் அதை யாவருங்கி ண்ணமாக நம்பித்தத்தமிருக்கை யடைந்தார்கள். பின்னர் தேவாந்தக னனவன், அவ்வாறடைந்தவர்களிடத்தில் கிருபையும், அடையாதவர் களிடத்தில் கொடுமையும் வழங்கி முன்னர் யுத்தகளத்தில் உடைந்து சென்ற தேவசேனைகளையும் மிகவும் வருந்தி வாட்டமுற்றிருக்கின்ற அவ்வவர்கள் மாபினரையும் சிலவியவர்களை ஏவிவரவழைத்து அவர்கட் குப்பல ஆதரவுகளையுஞ் சந்தோஷத்தையுஞ்செய்து தனதருகிற் சூழ்ந் திருக்கின்ற அவுணர்களையுங்காத்து அவ்வவர்கட்கேற்ற லே அதிகார ங்களைக்கொடுத்து சிலபிரான் கொடுத்தருளிய மேய்ப்பனவர்களை

விளங்கினவனுப்பின்னர் அவ்விடத்தினின்றும் படையெடுத்து சத்தியலோகத்தையும் வைகுந்தத்தையும் நோக்கிச் சென்றனன். அவன் வரவையும் அவன் பெற்றிருக்கின்ற வரங்களையும் பிரமனும் விண்டுவு மறிந்து நாம் அவனோடு எதிர்த்து யுத்தஞ்செய்வதில் அனுகூலமில் லையென்று நிச்சயித்து அவ்விடங்களினின்றும் ஓடி மறைந்திருந்தார் கள், பின்னர் படையெடுத்துவந்த தேவாந்தகன் அவ்விரண்டு லோகங் களிலும் உடையவர்க ளில்லாமையைக்கண்டு அவ்விடங்களிலிருந்த பாக்கியங்களை யெல்லாங் கைக்கொண்டு அவ்வுலகங்களை அவுணர்க ளாற் பாதுகாத்துவரக் கட்டளையிட்டு மீட்டுஞ்சுவர்க்க லோகத்திற்கு வந்து அதையே தனக்கு உறைவிடமாகக்கொண்டு சகல சந்தோஷத்து டன் அரசாட்சி நடாத்தி வந்தனன்.

அவன் தம்பியாகிய நரான்தகனும் பூவுலகத்திலிருக்கின்ற அரசர் களில் எதிர்த்து வராதவர்களை யமலோகத்திற் சேர்த்துப், பணிந்து வந்தவர்களிடத்தில் பருதிவாங்கி ஆதரித்து, எல்லாராச்சியங்களையுந் தன்வசப்படுத்தித் தன்னெடு சமயுச்சாகத்துடன் குலாவியிருக்கின்ற அவுணர்கட்கெல்லாஞ் சந்தோஷஞ் செய்வித்து அவர்களையழைத்துக் கொண்டு நாகலோகத்திற்குச்சென்றான். அப்போதவ்வவுணர்கள் மா யையினுற் கருடரூபங்கொண்டு அவ்வுலகத்திலிருக்கின்ற நாகர்களை யெல்லாப் பிடித்துப்பிடித்து விழுங்கினர்கள். அதை நாகராசனுகிய ஆதிசேடனறிந்து நாம் இவர்களோடெதிர்த்து யுத்தஞ்செய்வது சரிய ல்லவென்று தீர்மானித்துத் தனது நகரத்திலுள்ள நாகரத்தினமுத லிய நிதியமெல்லா மெடுத்துக்கொண்டுவந்து நரான்தகனெதிரில்வை த்துவணங்கினன். அத்நிதியங்களை அப்பாதகன் கைக்கொண்டு, தன் னேவணங்கிய ஆதிசேடன்மீது சிறிதுங்கிருபைசெய்யாமல் அவனைச் சிறையில்வைத்து அவனுடைய அரண்மனையினும் மற்றவிட்டங்களினு முள்ள பொருள்களையெல்லாங் கொள்ளையிட்டு, ஓரவுணனுக்கு அவ்வுல கத்தை யாளும்படியாக அதிகாரங்கொடுத்து மீட்டும் பூலோகத்திற்கு வந்து மூனிபுங்கவர் முதலாயினோரை தேவர்கட்கு அவிர்ப்பாகந்த ரவொட்டாமல் சிறைப்படுத்தி அரசாட்சி செய்துவந்தனன். இவ்விரு வர்களுடைய பாக்கிரமத்திற்கு இவர்கள் பிதாவாகியிரவுத்திரனே சந்தோஷித்து தனது குலத்தில் அழகிற் சிறந்திருக்கின்ற பெண்களை விவாகஞ் செய்தனன் பின்னர் அப்பெண்களை அவ்விருவர்களுங்கூடிப் பலகொடுமையான புதல்வர்களைப்பெற்றுச் சகலபோகபாக்கியங்களுங் குறைவற வனுபவித்துக் கொண்டுவந்தார்கள்.

இவ்வாறு ஓராட்சசகுலம் மேலிட்டு தேவர்குலம் கீழிட்டுப் போகலும், அதிதியானவள் நாளுக்குநாள் மேலான மகிழ்ச்சிபெற்று வாழ்ந்திருந்தனள். திதியானவள் நாளுக்குநாள் குழைந்து மிகவுந்துயரமடைந்து தனது நாயகராகிய காசிபரைப்பணிந்தெழுந்து இதன்னமுறையிவ்வெதாயினள். சுவாமி! தேவரிருடைய கிருபையினுல் அடியாளின்று வைத்த சொர்க்காதிபதியாகிய இந்திரன் முதலாகிய தேவர்களெயெல்லாம் தேவர்தகனென்றும் நரர்தகனென்றுஞ் சொல்லானின்ற இரண்டவுணர்கள் அளவற்ற துன்பங்களைச்செய்து வருத்துகின்றார்கள். அவ்வருத்தத்தை அவ்விந்திரன் முதலாகிய தேவர்கள் சகிக்கமாட்டாதபடிஎன்னினுமோடிப் பதுங்கியிருக்கின்றார்கள். அவர்கள் அவிர்ப்பாக முதலியவைகளேயுங் கொடுக்காதபடி மூனிவர்கள் முதலாயினோரைச் சிறைப்படுத்தியிருக்கின்றார்கள். சுவாமிகள் திருவுளத்திற்குயாவுந் தெரிந்திருக்கலாம் ஆதலால் தேவரீர் அடியாள்மீது கிருபைசுரத்து அப்பாதகர்களை யழிக்கத்தக்க ஓர் பராக்கிரமமுள்ள புத்திரனை இத்தினமே அடியாட்குத் தரல்வேண்டுமென்று பிரார்த்தித்தனள். இவ்வாறு பிரார்த்தித்த அதிதியைக் காசிபர் பார்த்துத் தமக்கு முன்னெருபோது விநாயகமூர்த்தி கொடுத்தருளியிருக்கின்ற வரத்தையோசித்துப் பெண்ணே! மிக்க பராக்கிரமசாலிகளாகிய தேவர்தகனும் நரர்தகனும் சிவபிரான் நோக்கித் தவஞ்செய்து ஒருவராலும் அழியாத மேலான வரங்களைப் பெற்றிருக்கின்றார்கள்.

ஆதலால் விபலரூளோடுங் கூடிய ஆன்மாக்களைப் புணிதமாகும்படி பஞ்சகிருத்தியங்களை நடாத்துகின்ற கடவுளாய்ப் பரப்பிரமமென்று சொல்லுகின்ற ஓர் பொருளாய் எக்காலத்துந் தனிமுதலாய் மேலான தத்வமூர்த்தியாய் அடுத்தோர்கட்கெல்லாம் ஆனந்த பதவியைக் கொடுக்கத்தக்க பசுபதியாயிருக்கின்ற கர்த்தர யாரோ அவரே அல்லல்மிகுந்த துக்க சாகரத்துள் அழுந்திக்கிடக்கின்ற நம்போலிகட்கு அவற்றினின்றுநீக்கி மேலான சுகக்கரையிலேற்றி வேண்டியவரங்களைக் கொடுத்தருளும்படியாகத் தமது வரம்பெற்ற பெருங்கருணையினுல் விநாயகரென்று சொல்லப்படுகின்ற ஓர் பெரிய திருநாமத்தைத் தரித்துக்கொண்டு அற்பவுயிர்களெல்லாம் ஆனந்தத்தை யடையும்படியாய்க் கஜானனமூர்த்தியெழுந்தருளியிருக்கின்றார். அத்தன்மைத்தான மேலான மூர்த்தியே நமக்குப்புத்திரனுக அடுத்தாலல்லாமல், உனது சிந்தையுளடங்கியிருக்கின்ற துயரத்தைநீக்கிச் சந்தோஷத்தை கொடுப்பவர்க ளெவ்வுலகினுமில்லை. வேதாகம முதலியவைகளாகிய ஞானிதற்கரிய அம்மூர்த்தி நமக்குப் புத்திரனுகவரத்தக்கமார்க்கத்தினே

யுஞ் சொல்லுவோன்கேள், அம்மூர்த்தியானவர் தம்மைத் தியானிக் கப்படுவார் தியானிக்குமுன்னம் அவர்கள் உள்ளத்தையே கோயிலா கத்கொண்டு வீற்றருளுகின்ற பெருங்கருணையை யுடையவராதலால், அவருடைய திருவடிகளே மனதில் தியானஞ்செய்து அவரது திருமன் திரத்தையுஞ் செபித்துப் பூசித்தால் உடனே அவர் புத்திரனாக வந்தரு ளுவர். ஆதலால் இன்றுமுதல் நீ அவ்வாறே செய்துவரக் கடவையென் று சொல்லிப் பிரணவ வல்லபத்தோடு நமோனமஃதத்தோடும் பஞ்சா ட்சரத்தை யுபதேசஞ் செய்து அதை அநுட்டிக்கத்தக்க முறைமையி னையுங்கூறின. அவையனைத்தையும் அதிதியானவள் மிகுந்த பத்தி யோடுங்கேட்டு மிக்க பரியடைந்தோர்க்குத் தேவாமிர்தங்கிடைத்தது போல மனமகிழ்ந்து முன்னிருந்த துயரங்களை நீக்கித் தனது நாயகரி டத்தில் விடைபெற்று அவ்விடத்தினின்று நீங்கி ஓர் வனத்திற்சென்று ஐம்பொறிகளையுமடக்கி ஆகாரமுதலியவைகளை நீத்து விநாயகமூர்த்தி யினுடைய திருவடிகளை மனதிற்றியானித்து அவரது பஞ்சாக்கர மந்திரத்தை அனுட்டிப்போடு செபஞ் செய்துக்கொண்டு நூறுவரு டந் தவத்திலிருந்தனள். இவ்வாறு சரீரம் முழுவதும் வாட நெடுநாள் தவஞ்செய்துக்கொண்டிருக்கிற அதிதியின்மீது விநாயகமூர்த்தி கிரு பைசுரந்து கோடிசூரியாகளுங் குருடடையும்படியான தேஜசோடு செபமாலிகையும பத்துத்திருக்கரங்களுங்கொண்டு நுதலிற் கஸ்தூரிப் பொட்டும் சடையில்மூன்றுமதியைச் சந்திரனும் விளங்கச் சிங்கவாக னத்தின்மீது பிரத்தியட்சமாயினர். உடனே அதிதியானவள் விழித் தெழுந்து தன் பெண்மையினுல சுவாமியினுடைய பிரகாசத்தைப்பார் க்கபயந்து விழித்தவிழிகளைமீட்டும் மூடிக்கொண்டு கர்த்தனே தே வரிருடைய பிரகாசத்தைப்பார்க்க அடியேனுடைய விழிகள் கூசுகின் றமையால் சாந்தவுருவோடு காட்சிகொடுத் தருளவேண்டுமென்று பி ரார்த்தித்தனள். அதை விநாயகமூர்த்தி கேட்டு உடனே மிகுந்த மன மகிழ்ச்சியோடு சாந்தரூபமாயினர். பின்னர் அத்திருவுருவினுடைய வனப்புகளை அதிதியானவள் தனது கண்ருளிரக்கண்டு மிக்க சந்தோ ஷத்துடன் பலமுறை விழுந்தெழுந்து பலமுறை வலம்வந்து அளவற்ற தோத்தி ரங்கள் செய்து இருகரங்களையுங் கூப்பி எதிர் நின்று ஓ! தயாநிதியே! முனிவர்களையுந் தேவர்களையும் ஒடுக்கி எக்காலத்தும் இழுக்கினைச் செய்துவரும் அரக்கர்களையுந் தைத்தியர்களையுந் துணைக்கொண்டுதே வாந்தகனென்றும் ஈசாந்தகனென்றும் இரண்டவுணர்கள் அரசாட்சி செய்து வருகின்றார்கள். அவர்களைச் சங்கரித்துத் திரிலோகங்களையும் முன்ள தன்பங்களை நீங்கும்படியாகத் தேவரீர் ஒரு புத்திரனை யுல

தரித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனள், அதற்கு முன்னமே அவள்கணவராகிய காசிபருக்கு அருள்சுரந்திருக்கின்ற விநாயகப் பெருமான் அவ்வரமே வருமேயமென்று திருவாய்மலர்ந்தருளிருவருவைக்கரந்தருளினர். பின்னர் அதிதியானவள், அவ்வனத்தினின்றுநீங்கித் தனது கணவராயடைந்து பணிந்தெழுந்து தனக்குவிநாயகமூர்த்திகொடுத்தருளிய வரத்தைத்தெரிவித்துப் பிரதிதினம் அவ்வற்றமழுச்சியோடு விநாயகமூர்த்திபைப் பூசைசெய்துவந்தனள்.

இவ்வாறு நடந்துவருகின்ற நாளையில், உலகவ்களில் தருமநெறிகள் தவறிப்போனமையால் பூமிதேவியானவள் துட்டர்களினச்சுமக்கமாட்டாது துன்பப்பட்டு, மகமேருகிரியை யடைந்து அங்கேபல குகைகளினும் ஒளித்துவாசஞ்செய்கின்ற தேவர்கூட்டத்துள்பிரமதேவனைக்கண்டு பணிந்தெழுந்து, சுவாமி! உலகங்களில் துர்ச்சனர்கள் மிகுத்து தருமநெறிகள் வழுவிப்போனமையால் இனி அடியேன் அத்துர்ச்சனர்களினச்சுமக்கமாட்டேன், தேவரீர் சர்ச்சனர்களையும் அடியேனையுங் காப்பாற்றுவிட்டால் எத்தனைபோதும் வாழ்ந்திருவேன். இனை துயரப்பட்டுப்பாதலத்தில் வீழ்ந்துபோவேனென்று முறையிட்டனள். அதைப்பிரமன்கேட்டு அவட்கு நீ அஞ்சவேண்டாமென்றுதைரியங்கூறிப்பின்னர், எல்லாத் தேவர்களோடும் விநாயகமூர்த்திபைப்பூசித்துத்தோத்திரஞ் செய்தனன் அப்போது ஆகாயத்தில்விநாயகமூர்த்தியானவர் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்யும்பொருட்டு காசிபருக்குப்புத்திரராக அவதரிக்கப்போகின்றனர்'' என்று ஒருவாக்கு உண்டாயது அதைப்பிரமன் கேட்டு, மீட்டும் பூமிதேவிபைப்பார்த்து, அம்மணீ! இப்போதுண்டாகிய அசரீரிவாக்கை நீயுங் கேட்டனையன்றே! ஆதலால், இன்னுஞ் சிறிதுகாலம அத்துட்டர்களிச்சகழ்தலிகொண்டிரு; பின்னர் இவ்வளவு துன்பமும் ஒருமிக்கநீங்கும், இனிமேல் யாவருக்கு மின்பமுண்டாகு மென்றுசொல்லி அவளுக்கு விடைகொடுத்தனுப்பி முன்போலவே சகல தேவர்களோடும் விநாயகமூர்த்திபினுடைய திருவடிகளை மனதிற் றியானஞ்செய்துகொண்டிருவதனதிலிருந்தனன்.

இவ்வாறுக, முன்னர் வரம்பெற்றகாள்முதல் பிரதிதினமும்விநாயகமூர்த்திபைப் பூசைசெய்யும்நேமத்தினைப் பெற்றிருக்கின்ற அதிதியானவள், ஒருநாள் சுவாமிபை மிக்கவருக்கத்தோடுந் தியானித்துத் தோத்திரஞ் செய்தனன். அப்போது விநாயகக்கடவுள், கிருபைகூர்ந்து அவளதிருச்செவிகளில் ஆயிரம் முடிகளும், ஆயிரம் நெற்றிகளும்

ஆயிரம் முகங்களும், ஆயிரஞ்செவிகளும் ஆயிரம் வாய்களும், ஆயிரம் நாசிகளும், ஆயிரந் தோள்களும், ஆயிரங்கைகளும், ஆயிரந்தொடை களும், ஆயிரம் அடிகளுங்கொண்டுகைகள்தோறும் ஆயுதங்களும், நெற்றிகள்தோறும் கஸ்தூரிப்பொட்டுகளும், மார்பிற் சிந்தாமணிமா லைமுதலிய அளவற்ற ஆபரணங்களையுந்தரித்து, அளவற்றசேனைகள் ஒருமிக்க வுதித்தாற்போலச் சிங்கவாகனத்தின்மீது பிரத்தியட்சமாயி னர். உடனே அதிதிபானவள் பணிந்தெழுந்து பலமுறை வலம்வந்து இருகைகளையுங்கூப்பி எதிர்நின்று உள்ளமுருகும்படியாக அளவற்ற தோத்திரங்களைச்செய்து அவ்வவர்கள் கோரினபயன்களை அங்கை நெல்லிக்கனிபோல அருளிச்செய்யவல்ல வள்ளலே! முன்னர் அடி யேன்துயரங்குமாறுசுவாமிகள் வரங்கொடுத்தபடி இப்போதுமுடித் தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள் அதைவிநாயகமூர்த்திகேட்டு யாம்உனக்குமுன்னர்கொடுத்தவரத்தை முடிக்கும்படியாகவேஇப்போ தழிருக்கோலத்தோடுவந்தனமென்று திருவாய்மலர்ந்தனர். அதற்கு அதிதிபானவள்மீட்டுமவரைப் பணிந்தெழுந்து சுவாமி! இத்தன்மை த்தானபெரியவடிவத்தோடு அடியேனுக்குப் புத்திரனுகவந்தால், அடி யேன் தேவரிரை எவ்வாறு தரததிலேதடி எவ்வாறு வளர்க்கவல்லே ன், இவ்வடிவம் உலகத்தார்க்கும் இசைவாயிராததால், எல்லாரைப் போலதேவரீரை அடியேன்கைகளிலேதடி குளிப்பாட்டி முனிப்பா ஊட்டி வளர்க்கும்படியாக மிருதுவான குழந்தைவடிவாகிவந்ததுட் டசிந்தையுடைய அசுரகுலம் நாசமாகுமுபடி வளர்த்தருளவேண்டு மென்று பிரார்த்தித்தனள் அதற்குவிநாயகமூர்த்திபானவர் அவ்வா றே அதிதியினுடைய ஆசையை நிறைவேறவும்படியாக திருவுளங் கொண்டு உடனே அன்புபிறந்த குழந்தையைப்போல வடிவெடுத்தெ தமது பவளம்போன்ற திருவாயினின்றிறக்து அழுதனர். அவ்வழு கையோசை வெளிப்பட்ட மாத்திரத்தில் உலர்ந்திருந்தவிருட்சங்க ளெல்லாந்தளிர்த்தன மலடிகளெல்லாங் கருப்பமடைந்தார்கள் எங் குமந்தமாருதம் வீசியது ஆகாயமெல்லாம மறுவின்றி விளங்கியது. வேள்வித்தழல்களுமெங்கும் வலஞ்சுழித்தெழுந்தன சகல தீர்த்தங்க ளுந்தெளிவடைந்தன தேவர்கட்கெலாம்வலுவுதோளும் வடதிசைக் ணுந்துடித்தன அசுரர்கட்கெல்லாம் இடதுதோளும் இடதிசைக்கண்ணுந் துடித்தன. இத்தியாதி உற்பாதங்கள் எங்கணுமுண்டாகும்படி தனக் கெதிரில் வாய்விட்டழுதிருக்கின்ற குழந்தையை எல்லாத்தேவர்கட் கும் நன்றுயென்று சொல்லும்படியான அதிதியாவிவள் ஒன்பதுமாத முஞ் சுமந்து பெற்றவளைப்போல அதிக ஆசையோடும் மகிழ்ச்சியோ டுங் கைகளிலேந்தித்தனது தனங்களிலே விம்மிநின்று சுரந்தபாலே

ஊட்டினள், அவ்வற்புதத்தைமேலான தவங்களோடுடைய காசிபரான
ர் அதிசமமிழ்ச்சியோடுங் கண்டு தமது புத்திரர்க்குச்சாதககன்மாதி
களோ வேதாகமவிதிப்படி நிறைவேற்றி, மகோற்கடரென்று காமகர
ணஞ்செய்தனர். சுவாமியும் நாளுக்கு நாள் பாலசந்திரனேப்போல
வளர்ந்து வந்தனர்.

இவ்வாறு அரிபிரமேந்திராதியரும் ஆராதற்கரிய விநாயகமூர்த்
தியானவர் மகோற்கடரென்னுந் திருநாமங்கொண்டு வளர்ந்துவருகி
ன்ற இரண்டாமாதத்தில் இவ்வற்புதசரிதையை வசிட்டர்லாமதேவர்
முதலிய முனிபுங்கவர்கள் நாரதமுனிவர் சொல்லக்கேட்டு அப்போ
தேபரத்தை யடைந்தவர்போல மேலானமகிழ்ச்சிகொண்டு சுவாமி
பாதாரிக்கவந்தார்கள். அவர்களைக்காசிபர் எதிர்கொண்டழைத்து
வந்து சந்தோஷமாய்க்கலந்து ஒருவர்க்கொருவர் க்ஷேமாதிசயங்களோ
விசாரித்துக்கொண்டு பின்னர் யாவருமன்னந் மகோற்கடமூர்த்தியை
க்கண்குளிரத் தரிசித்துப்பணிந்திருந்தார்கள். அப்போது வசிட்டமு
னிவர்காசிபரைப்பார்த்துத்• திரிபுரத்திலுமே டெருதற்கரிய பேர்
றினை எளிதிலடைந்ததவசிலரே! இக்குழந்தையினுடைய அவயவமா
னது முப்பத்திரண்டு இலக்கணங்களையும் வாய்ந்திருக்கின்றது, ஆத
லால் இஃது மலாகிதமான மூர்த்தியென்றி மனசுகிதமாயிருக்கின்ற
தம்மிலொன்றன்று, இத்தன்மைத்தானமேலானமூர்த்தியானது, அசு
ரர்குலங்களேவேரோடுங் களைவதோடுங்களையும் தேவர்குலங்களே
யும முனிவர்கூட்டங்களையு மாதரித்து, உலகங்களில்வேதாகமநெறி
களை நிலைநிறுத்தவும், தேவரீரும் தேவரீருடையபத்தினியாருஞ்செய்த
தபோபலத்தினால் உங்கட்குப்புத்திரராகத் திருவவதாரஞ்செய்திருக்
கின்றது. இப்போது திரிலோகங்களினும் கொடுங்கோலேச்செலுத்தி
வருகின்ற தேவாந்தகனும் நராந்தகனும், இப்புதல்வரைச்சத்துருவெ
ன்றறிந்து இருவருக்குப்பலவிடர்களைப்புரிவார்கள், ஆனால் இவர்
உலகங்களிலுள்ள சகலவிடர்களையுந்தீர்த்து ஆதரிக்கவலலமூர்த்தியா
தலால், ஓர் இடரும் இவரையணுகாது ஆயினும் லோகசுவரட்சணநி
மித்தம் நீங்களிருக்கவேண்டிய சாக்கிறதையிற் பிழையாமலிருக்கவே
ண்டுமென்று சொல்லினர் அதற்குமேல் காசிபரானவர்வந்த முனிவ
ர்கட்கெல்லாம் விருந்தூட்டிச்சந்தோஷமடைந்தனர் பின்னர் அம்மு
னிவர்களெல்லாம் காசிபரிடத்தில் மிக்க அன்போடு விடைபெற்று
அவ்வவர்களுடையாசிரமத்தை யடைந்தார்கள்.

இப்பால் மகோற்கடமூர்த்திக்கு வயதொன்றுகு முன்னமே
நாந்தகனிருந்து அரசாட்சி செய்துவருகின்ற பட்டணத்திலே

இரத்தமழை பொழிந்து ஆகாயமுழுவதுங்கறுத்து வான்மீன்முதலிய கற்பங்கள் தோன்றி நின்றன. அதன்மீது நாரந்தகன் கண்டு தர்களைக்கூவி இப்போது கண்டிருக்கின்ற உற்பாதங்களுக்கு இன்ன டக்கப்போகின்றது யாதென்று வினவினன். அதற்கவர்கள் கணித சாத்திரங்களிற் சோதித்தறிந்து நாரந்தகனைப்பார்த்து, ஓ மண்டலேஸ்வரா! தேவரீர்கேட்டவாறே சோதித்தறிந்தனம். ஆயினும் உள்ள காரியத்தைவிளம்புவோ மென்றால் தேவரீருக்குக்கோப மூண்டாகு மேயென்று அடியேங்கள மனம் பயமடைகின்றதென்று சொன்னார் கள். அதை நாரந்தகன்கேட்டு கலங்கினான்! நீங்கள்பயப்படவேண்டியதில்லை நடந்திருக்கின்ற உற்பாதங்கட்கு ஏது நீங்கள் சாத்திரங்களில யாதுகண்டீர்களோ அதனையொளிக்காமற் சொல்லுங்களென்று பரிவாய்ச்சொல்லினன். அதற்குமேல் அச்சோதிடர்கள் பயந்தீங்கி ஓ ராசாதிராசனே! உலகளித்தத்தையே யாங்கள் சொல்லக்கேட்டருளுக, அஃது யாதெனில் காசிபமுனிவரும் அதிதியுந்தவஞ்செய்ய அவர்களிடத்தில் நம்மைபெல்லாமபணிசெய்யும்படி ஓர்பிள்ளைபிறக்கிவளர்ந்துவருகின்றது இந்த ஏதுதப்பாமல அழிவுகாட்டு மென்பதற்கு அந்த உற்பாதங்களெல்லாம் இவ்விடதில் உண்டாயினவென்றுசொன்னார்கள். அதைநாரந்தன்கேட்டு மிகுந்த ஆலோசனைகளிற்றலைப்பட்டவனாகி ஐயோ! இவ்வேதுவுக்கினியென்ன செய்வோம் சிறுகுழந்தையைசென்று கொலவது நமது பராக்கிரமத்திற்குச்சரியல்லவே அவ்வாறு செய்வோமாயின் நமது பாகியங்களெல்லாம் பாழாகுமே யென்று பலவாறு சிந்தித்துமீட்டும் ஓர் உபாயத்தையெண்ணிவிரசை யென்னும் பெயரினையுடைய ஓர்வணமாதரைக்கூவி நீ இந்தமிடத்திற் சென்று நமக்குத்தன்பஞ்செய்ய உதிதிருகின்றகுழந்தையைக்கொன்றுவரக்கடவையென்று அனுப்பினன், உடனே அவ்விரசையானவள்குருத்தநிறமும், நெருப்பையொத்தகண்களும் சிவந்தமயிரீழ்ப்பத்து யோசனை விசாலம் உயர்ந்திருக்கின்ற சரீரமும் யானைதந்தங்களைப் போல நீண்டகோரைப்பற்களும் விளங்கியிருக்கின்ற தனதுவடிவத்தைமறைத்து ஓர்பிராமணஸ்திரீயைப்போல வடிவங்கொண்டு காசிபருடைய ஆசிரமத்திற்சென்றனள். அப்போது காசிபர் ஸ்நானஞ்செய்யச்சென்றிருந்தனர். அதிதியானவள் விநாயகபூசை செய்துகொண்டிருந்தனள் ஏனையசிடர்முதலாயினோர் வேறுவேறு பணிகளில் பிரவேசித்திருந்தார்கள். இச்சமயத்தில் அபயாதேவி உள்ளேதுழைந்தமிகைந்தகடமூர்த்தினியாயிருக்கக்கண்டு அவளையெதிர்வரவழையிட்டு விழுந்தித்திருப்பினள் அப்போது அவள்வயிற்றுளடல்லியபிள்ளையுருக்

தியானவர் அங்கிருந்தபடியேதமது தலைவிழிப்பைச்சிறிது திறந்தனர் உடனே அவ்விரசை வயிற்றில் வடவாமுகாக்கினியைப்போல அழுது ண்டாகி அதிகதாகங்கொண்டு அங்கிருக்கின்ற தடாகமுதலியவைகளி ளள்ள சலங்களெல்லாம் வறண்டு போகும்படியாகப்பானஞ்செய் தனள், அவ்வாறுபானஞ்செய்தும் அந்தாகந்தணியாமையால் பின் னரவள் ஆகாயகங்கையைப் பானஞ்செய்தனள். அவ்வாறு பானஞ் செய்தும் அத்தாகந்தணியாமையாலபின்னரவள் ஆகாயகங்கையைப் பானஞ்செய்யநினைத்து மேலெழும்பினள், அப்போது கருணாநிதியா கியமகோற்கடமூர்த்தியாவனர் இனி எங்குபோகின்றனையென்றுதம திதிரிய காற்பெருவிரலினு லூன்றினர். அம்மாத்திரத்தில் திரிலோ கங்களையும் வாப்மடக்கவல்ல அபபாதகியானவள் முன்னெருபோது இராவணனுலெடுக்கப்பட்ட கைலாயவரையானது சிவபிரானுடைய திருவடிகளாலூன்றப்பதைப்பற விருத்தாற்போல அசைவற்றப்பூமி யிலே வீழ்ந்தாள். உடனே இடையிற்சர்ப்பக்கச்சினைவீக்கிய எம்பெ ருமானுனவர், அவளை நிலத்தில் விழவழுத்திய தமதுகாற்பெருவிரல் நகத்தினுலேயே அவள்வயிற்றை உதிரபபிரவாக முண்டாகும்படியா ய்ப்பிளந்து தம்மைவிழுங்கிய மதயானையை வெளிப்படத்தோன்றிய தமது பிகாவைப்போல வெளிக்கொண்டனர். அப்போது முன்னர் பூசைசெய்துகொண்டிருந்த அதிதியானவள், அப்பூசையினைநிறைவே ற்றித்தனது புதல்வனை எடுக்கவந்த காரணதவளாகித்தானுந்தனது தலைவரும் மிருந்த துயரமடைந்து அளவற்றகாடுகளிலும் வெளிகளி லுந்தேடிச்சென்று பின்னர் அப்பாதகியினுடையமார்பில்தமது குமா ரர்பதிந்திருப்பதைக்கண்டுபயந்து, முன்னும்பின்னும் பார்த்து,மிகுந்த ஆனந்தங்கொண்டு உடனே நின்மலமூர்த்தியாகிய குழந்தையைமெது த்துச்சென்று திருமேனிமுழுவதுந் தோய்ந்திருக்கிற உதிரக்கறையெ ல்லாங் கழுவிக்குளிப்பாடி ரோஞ்சனம் முதலியசாந்திகளைச்செய்து பாலூட்டினள்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே? விரசையென்னும் அந்தராட்சசியானவள் மிகவுங் கொடுமையையுடையவளாயினும், சு வாமியைக்கொல்லுமாறு வாய்மமித்தாளாயினும் அவள் அவருடைய திருவுருவைக்கண்ணுரக்காணவுந் தீண்டவுங்கிடைக்கப் பெற்றதினுலே அப்போதே அவள்மலபாசங்களினின்று நீங்கி மோக்ஷசாம்பிராச்சி யத்தையடைந்தனள். இவள் இறந்துபோனமையை ராந்தகன்கேள் விப்பட்டு மிகவும் ஆச்சரியங்கொண்டு மீட்டும் மகோற்கடமூர்த்திக்கு ஆண்டாண்டு வயதாகுங்காலத்து, உத்தினென்றும் அர்ச்சியென்

நும் பெயரினையுடைய இரண்டவுணர்களைக் கூவியழைப்பினுன். அவ் விருவர்களுங் கிளிப்பிள்ளை வடிவங்கொண்டுகாசிபருடைய ஆச்சிரமத் தில்வந்து மரங்களின்மீதிருக்கிறதும் மூற்றங்களிலிறங்குகிறதுமெவ்யலிற் காயவைத்திருக்கின்ற தானியங்களைக்கொறிக்கின்றதுமாகச் சஞ்சரித்தக்கொண்டிருந்தார்கள். அதை அதிதிமடியின் மீதிலிருந்து மூலேப்பாலுண்டருளுகின்ற மகோற்கடமூர்த்திகண்டு இக்கபடர்களைக்கொல்லவேண்டுமென்று திருவுளங்கொண்டு, தமது தாயினுடைய முகத்தைப்பார்த்து அம்மா! இக்கிளிப்பிள்ளைகளை யெனக்குப்பிடித்துக்கொடுவென்று கேட்டனர். அதற்கு அதிதியானவள் என்செல்வனே பறக்கின்றகருளியெவ்கையில் 'அகப்படுமாவென்று மறுத்தனள். உடனேமகோற்கடமூர்த்தியானவர் அதிதியினுடைய மடியினின்றுங்குதித்தெழுந்து ஆகாயத்திலேபருந்து வடிவங்கொண்டுபறந்துதம்மைக்கண்டோடுகின்ற அக்கிள்ளைகளிரண்டையுந் துறத்திப்பிடித்து சிறகுகளையெல்லாம்பறித்தெறிந்து, மூக்கினுலும் நகங்களினுலும் உடல்களைப்பிளந்து பூமியில்விழ உதறித் தாம் முன்போலவே குழந்தைவடிவாகித்தாய்மடியில் வந்து பாலுண்டருளினர். அதை அதிதிகண்டு இவர்தந்தையாகிய சிவபிரான் முன்னொருபோது கிளிப்பரிபூட்டிய இரதத்தினையுடைய மன்னனை இடைப்போதில் நீருக்கினசெனில். இப்போதிவர் இக்கிளிப்பிள்ளைகளைக்கொன்றதோ ஒருபுகுமென்று துதி செய்தனள். காசிபர் அவருக்குப்பூசகர்த்திசெய்து சந்தோஷமுற்றிருந்தனர், கிளிப்பிள்ளை வடிவங்கொண்டவந்த அவ்விரண்டவுணர்களும் மிகவுங் கொடியரால் மறைநெறிகளிற் பிறழ்ந்தவர்களாயிருக்கினும், அவர்கள் எம்பெருமானுறைருக்கப்பட்டு இறக்தமையால், பழயபந்தங்களையெல்லாம் விடுத்து ஆனந்தசாகரத்திற் படிந்தார்கள்.

இப்பால் மகோற்கடமூர்த்திக்கு மூன்றுவது வயதாகலும் தந்தையாகிய காசிபர் அவருக்குசவனச் சடங்கினை வேதாகமமுறைப்படி நிறைவேற்றினர். பின்னர் ஒருநாள் விதிபாதம்வர, அத்தினத்தில்அதிதியானவள் தனதுபுத்திரனை யெடுத்துக்கொண்டு அடுத்தாற்போலிருக்கின்றவொருபொழிலுள்ளதாமரைமுதலியவைகள் மலிந்திருக்கின்றசேமவதியென்னுந் தடாகத்தை நோக்கிச்சென்று, அத்தடாகக்கரையில் லோகாயகராகிய மகோற்கட மூர்த்தியைவிடுத்து, அத்தீர்த்தத்துளிறங்கி ஸ்நானஞ்செய்துகொண்டிருந்தனன், அப்போது சுவாமியும் அதிதியானதபடி அத்தீர்த்தத்திலிறங்கினர் மழலைமொழியுங்குறுகடையுமுள்ள அவரைப்பத்துயோசனைப்பிரமாணமான வடிவோடு அத்தடாகத்திலிருக்கின்ற ஓர் முதலையானது எடுத்துக்கொண்டுபோய்விட்

டனு. அதை அத்தடாகக்கரையிலிருந்தோர்கள்கண்டு பதைபதைத்து ஐயோவென்று இரங்கிவாடினர்கள். அப்போது அதிதியானவள் அச்சம்பவத்தைக்கேட்டுத் திடுக்குற்று வாயனவுதீர்த்தத்திலிறங்கிப் பார்த்து அப்பாலிறங்கக்கூடாமல் மயங்கித் துயரமுற்றனள். அந்த வேளையில் சிலமாணக்கர்கள் தற்செயலாய்வந்து அச்சம்பவத்தினைக் கேட்டு மிக்கதணிவோடு அதிதீர்த்தத்திலிறங்கி கீர்த்திச்சென்னரர்கள். அவர்களை அம்முதலியானது கெருங்கிவாட்டமற் சீரிச்சுவாமிமை வாயிற்கவ்வியபடி மேலெழும்பிவிழிகளில அனற்பொறிகளெயிறைத்து இடம்வலமாகச்சுழன்று திரிந்தது, மீட்டும் அடியிறசென்றுபாய்த்தது. அப்பால் அச்சீடர்கள்மேலவர்து அதற்குமுன்னமே அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து சென்று கமகாசீர்மத்தில் செபஞ்செய்துகொண்டிருக்கின்ற காசிபருக்கு அறிவிக்குமாறு விரைந்தடினர் அச்சமயத்தில் மகோற்கடமூர்த்தியானவர் அம்முதலியின் முதுகிலாரோகணித்து, அத்தடாகத்திலிறங்கியிருக்கின்ற பறவைகளெல்லாம் பறந்தோடவும் தாமரைமுதலியபூட்பவினங்கள் துவளவும், நாற்கரைகளிலும் அலைகள் புரண்டோடவுமாக அல்லோல கல்லோலப்படுத்திமெலெழும்பிமரக்கலத்தையோட்டி விளையாடுவதுபோலச் சிறிதுநேரம் குதும்பாய் விளையாடல் செய்திருந்தனர். அப்போது அதிதியானவள்தனதுகுமாரனை முன்னர் தன்பக்கத்தாடுபார்த்தகண்ணினுல் பின்னர் இன்பக்கத்தாடுபார்த்து இருகரங்களையும்பிசைந்தினின்று, அப்பா என்சாமி! என்கண்மணியே! இத்திருவிளையாடல்போதும் இனியிரைவில் அம்முதலியைச்சரிக்கரித்துவந்தருள்கவென்றுவேண்டினள். அவ்வேண்டுகோளுக்கு மகோற்கடமூர்த்தி கிருபைசுரந்து தாமேறி நடத்துகின்ற அம்முதலியைக்கமையீதற்றினர், அஃது கரைமீதறிய மாத்திரத்தில் உயிர்விட்டிறந்தது. உடனே அதனுடலினின்று ஓர் திவ்விய புருடன்வெளிப்பட்டுவந்து மகோற்கடமூர்த்தியைப் பலமுறைபணிந்தெழுந்து இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பிநின்று இதனைப்பசுவதாயினன் கர்த்தரே? அடியேன்முன்னர் கந்தருவர்கட்கெல்லாம் அரசன் அடியேனபெயரைச்சித்திரசெனன்று சொல்லுவார்கள். ஒருதினம் அடியேன் ஓர்விவாகத்தைமுடிக்கத்தொடங்கினேன். அவ்விவாகத்திற்குப்பிருகுமுனிவர் வந்தனர். அவர்வந்தவேளையில் தேவர்முதலாயினோர்வந்து கூடியிருந்த கலியாணமண்டபத்தில் அக்கலியாண விவாகங்களிலே அடியேன் ஞாபகம் வைத்திருந்தமையால் அம்முனிவரை எதிர்கொண்டழைத்துவந்து வந்தனமுதலிய வழிபாடுகளைச்செய்யாமலிருந்தேன்.

அதற்கு அம்முனிபுங்கவர் சோபங்கொண்டு நீவிவாசகப்பிரமத் தில்மூழ்கி வந்தபெரியோர்களுக்கு வணக்கஞ்செய்யாம லிருந்தனை, ஆதலால் இனி நீதடாகத்திலே முதலியாக மூழுகிக்கொண்டிருக்கக் கடவையென்று சபித்தனர். பின்னரடியேன் பயந்து அவர் திருவடித் தாமரைகளையே பணிந்தெழுந்து சுவாமி அடியேன் அறியின்மையா ற் செய்தகுற்றத்தைப்பொறுத்தருத் தேவரீரிட்ட சாபத்தை நிவர்த்தி செய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தேன். அதற்கப்புண்ணியமூர் த்தி திருவுளச்சாத்து. ஓ கந்தருவராசனே இனி விநாயகக்கடவுள் அஷ் டஐனகிக்கிரகஞ் செய்யும்பொருட்டு காசிபருக்குப் புத்திரராக அவ தரிக்கப்போகின்றனர். அம்மேலான கடவுளுடைய திருக்கரம்பட்ட மாத்திரத்தில் உன்னை இச்சாபம்விட்டு நீங்குமென்று திருவாய்மலர் ந்து எழுந்தருளினர். அவ்வாறே பாவியான அடியேற்கு இத்தினந் தேவரீருடைய திருபாகடாட்சங்கிடைத்தது இதுகாறும் இத்தடா கத்தில் அடியேன் முதலியாகவிருந்து மலர்பறிக்கவும், ஸ்நானஞ்செ ய்யவும் வருகின்றபேர்களுக்கெல்லாம் நூன்பத்தைவினைத்துக்கொண் டிருக்கேன். இத்தன்மைதான கொடியவனை இப்போது கரையேற் றி இன்பத்தைக்கொடுத்ததற்கு என்னசைம்மாறு செய்யவல்லேனென் றும் துதிசெய்தனன். அச்சமயத்தில் மகோற்கட மூர்த்தியுடைய திருபையினுல் ஆகாயமார்க்கத்திலிருந்து ஓர் தெய்வவிமானமிரங்கிய து. அதை அச்சித்திரன்பார்த்து மீட்டும் மகோற்கடமூர்த்தியைப பனிந்தெழுந்து ஓ! சகலலோகநாயகனே! ஓ-தத்துவப்பொருளே! ஓ மூலகாரணக்கடவுளே அடியேன் யெல்லாவிதத்திலுங் கடைத்தேறு மாறு கடாட்சம்வைத்தருளிய திருமூர்த்தியே யென்று அளவற்ற தோத்திரங்களைச்செய்து, சுவாமியினிடத்தில் விடைபெற்று விமான த்தின்மீதேறி ஆகாயமார்க்கமாகச் சென்றனன்.

அதற்குமேல் மகோற்கடமூர்த்திக்கு நாலாவதுவயது வந்தது. அப்போது கயிலாயத்திலே சிவபிராணத்தரிசித்து யாழ்வாசிக்கச் செல்லுகின்ற ஆகா-ஊகூ-தும்புரு என்னும் மூன்று கந்தருவர்கள் காசிபருடைய ஆசிர்மத்திற்கு வந்தார்கள். அவர்களைக்காசிபர் எதிர் கொண்டழைத்துவந்து பல உபசாரங்களைச்செய்து, ஒருவர்க்கொரு வர் சேஷமலாபங்களைவிசாரித்து பின்னர் நீங்கள் விருந்துண்டுபோக வேண்டுமென்று வேண்டினர். அதற்கம்மூவருமிசைந்து தடாகத்திற் சென்று ஸ்நானஞ்செய்துவந்து புட்பஞ்சந்தனம்முதலிய திரவியங்க ளைச்சேகரித்து தாங்கள் பிரதினம் பூசித்துவருகின்றவிகாயகர், சிவ பெருமான், உமாதேவி, கண்டி சூரியன் என்கிற ஐந்துவிக்கிரகங்களை

யும் ஓர்பொற்பலகையின் மீதிருத்தித் தியானஞ்செய்துகொண்டிருந் தார்கள். அவ்வேளையில் லெமுனிச்சிரேஷ்டரோடும் விநோபடல்செய் திருந்த பராபரப்பொருளாகிய மகோற்கடமூர்த்தியானவர் அவ்வி னோபாட்டினின்றும் வந்து, அவர் தம்வைக்துப்பூசித்திருந்த ஐந்தமூர் த்திகளையும்பார்த்து அவைகள்மறைந்து போகும்படியாக ஓர் திருவி னோபாடல்செய்தனர் பின்னவர்களும் தங்கள் தியானங்களினின்றும் நீங்கி மற்றப்பூசனைகளையும் நிறைவேற்றித தொடங்கும்போது தாம் கொளதிரில்வைத்திருந்த விக்கிரகங்களைக் காணுகவர்களாகி மதிமயங் கிக் காசிபரையழைத்து சுவாமி அடியேங்கள் ஆன்மார்த்தமாகப்பூசி க்கின்ற ஐந்து விக்கிரகங்களையும தியானஞ்செய்கின்றபோது இப்போ ற்பீடத்தினின்றும் யாரோ திருடிக்கொண்டுபோய்விட்டார்கள். இனி அடியேங்களுயிரை மாய்க்கின்றோமென்றுசொன்னார்கள். அதைக்கா பெர்கேட்டவுடன் மிக்கதபரமடைந்து விருந்தாகவந்தவர்கள் பூசித் தபோசனஞ்செய்து போவதற்குமுன் அவர்கட்கு இவ்விததுன்பமு ண்டானது நமது தீவினையேயென்று மாழ்கிதம்மிடத்தில் பணிசெய் திருக்கின்ற சீடர்களையெல்லாம்கூவி இவர்கள் பூசித்திருந்த விக்கிரக ங்களை யாரேனுமெடுத்திருந்தால் விரைவிற்கொண்டுவந்து கொடுத்து விடக்கடவீர்கள் கொடாதுவைத்திருப்பீர்களாயின் இந்நிமிடத்தில் உங்களை நீருக்கிரையிடுகின்றோமென்று கோபித்துச்சொல்லினர். அதற் கு அச்சீடர்கள்பயந்து காசிபரைப்பணிந்தெழுந்து சுவாமி தேவரீரு டைய பெருங்கருணையினால் நன்மையேசெய்து கடைத்தேறவேண்டு மென்று அடுத்திருக்கின்ற அடியேங்களை அயலாருடைய பொருள்க ளைத்திருடுவோமோ ஆனால் தேவரீர் அடியேங்கள்மீது இருபைசெய் து சுவாமிகளுடைய குமாரரைக்கேட்டருள வேண்டுமென்று சொன் னார்கள் அதற்குக் காசிபரிசைந்து அவரைநோக்களினிரையில் அழைத் துவாருங்களென்று கட்டளையிட்டனர். உடனே அவர்கள் மகோற் கடமூர்த்தியைத்தேடிச்சென்று எங்குங்காணுமல் ஏகபோசனஞ்செய் கின்ற அறைவீட்டிலே திருமேனிமுழுவதுங திருவெண்ணீறணிந்த கோலத்தோடு விளையாடல்செய்திருக்கக்கண்டு பொங்கிபேவதங்களா லு மறியப்படாத மகோற்கடமூர்த்தியைப் பேரிட்டழைத்து வந்து பி தாவின்முன்னேவிட்டார்கள். அப்பிதாவாகியகாசிபரும் உலகமுறை மைப்படி கையிலோர் பிரம்பினையேந்தி கோபங்கொண்டவரைப் போல ஏதிர்நோக்கிப்பிள்ளாய் இங்குவந்த இப்மூவரும் பூசனைசெய் திருந்த லெலிங்கமுதலான மூர்த்திகளை நீயேகவர்ந்து கொண்டு போ யினை யுமினும் அவைகளை எங்கேயொளித்துவைத்தனை; சொல்லுக

வென்றுகேட்டனர். அதற்கு மகோற்கடப்பிள்ளையார் திருநகைசெய்து தமது வாயினைநன்றாகக்கிறக்குகாட்டி அவைகளே இக்கேதான் ஒளித்துவைத்திருக்கின்றேனென்று திருவாய் மலர்ந்தனர் இவ்வாறு திறக்குகாட்டியவாயினின்று உமாபரமேஸ்வரருடனே கயிலாயமும் விண்டுவுடனே வைகுந்தமும் பிரமனுடனே சத்தியலோகமும் இந்திரனுடனே அமராபதியும் அவுணர்நாயகர், இயக்கர் மனிதர் என்னும் இவர்களுடனே அவ்வவர்கள்வசிக்கின்ற எண்ணிறந்தபதிகளும், அளவற்ற நதிகளும், அளவற்றவனங்களும், அளவற்றமலைகளும், அளவற்ற சமுத்திரங்களும், புஷ்பங்கள்மலிந்த அளவற்ற நந்தவனங்களும் பறவைகளுமாகின்ற அளவற்றநிலங்களும், பதினான்குலோகங்களும், அஷ்டதிக்குப்பாலர்களும், இன்னும் அளவற்றபதார்த்தங்களும் வெளிப்படக்காசிபமுனிவர்கண்டனர். மணம்நொந்திருந்த ஆகா ஊ கும் புருவென்னும் மூவரும் அற்புதத்தைக்கண்டு அளவில்லாத ஆச்சரியமாகி மகோற்கடமூர்த்தியினுடைய திருவடிகளிலேவீழ்ந்து சுவல்களித்து பரிமளமிகுந்தபுட்பமுதலானவைகளைக்கொண்டு பூசித்து நின்றனர். அற்குக்கருணைகாமூர்த்தியாகிய மகோற்கடர் மனமகிழ்ந்து அக்கணமே சந்தோஷிக்குப்படியாக அவர்கள் ஐந்துமூர்த்திகளைத் தமதுதிருமேனியினின்றும் எடுத்து அவர்கள்கையிற் கொடுத்தருளினர். அதற்குமேற் அம்மூவரும் சுவாமியைநோக்கிகைகர்த்தியே சகலலோகங்களைத் திருவாயினாலுய் காட்டியருளிய தேவரீரை அடியேங்கள் அறிவின்மை மிகுந்தபுத்தியினாலே குழந்தையென்று நினைத்தோம் அக்குற்றத்தைத் தேவரீர் பொறுத்தருளவேண்டுமென்று அளவற்ற தோத்திரங்கள்செய்து தத்தம்பூசணிகளைக்குறைவற நிறைவேற்றிப்பழமைகுழுகிப் பாலிலவீழ்ந்தா லொத்தபான்மையராய்க்காசிபரை வீடுகண்டு, மிகுந்த பேருவகையோடும் விருந்தண்டு, சிலநேரங்கேண்மைபாராட்டிப்பின்னர் விடைபெறுதற் கயிலாயகிரிக்குப் போய்விட்டனர்.

அதற்குமேல் சகலலோகநாயகராகிய மகோற்கடமூர்த்திக்கு ஐந்தாவது வயதாக, அபோது காசிபர் தமது புத்திரர்களாகிய தேவர் இராக்கதர் முதலான யாவரையும் வரவழைத்துப்பிள்ளையாருக்குவேதாகம விதிப்படி உபயன கலியாணத்தைமுடிப்பதாயினர் அங்குவந்திருந்த முனிவர்கள் யாவரும் பிள்ளையார்மீது மந்திரார்ச்சதைபைத்துவினர்கள். அச்சமயத்தில் மகோற்கடமூர்த்தியைக்கொல்லும்படி நரான்தகனுல் அனுப்பிய இராக்கதர்களில் பெரிதானசரீரமும் விண்டுவாதியோரும் நடுங்கத்தக்கவன்மிருழியும், மேலானயாக்கிர

மும் உள்ள பிங்களன்-விகிர்தன்-சபலன்-விசாலன் பிங்காட்சன் என் னும் பெயர்களோப்படைத்த ஐந்துபேர் தங்கள் ரூபத்தை மறைத்து முன்னிவர்கள்போலவிபூதி உத்திராக்கந்தரித்துக் கைகளிற் றண்டிமக ண்டலங்களேதாங்கிக்கொண்டுவந்து அட்சதைகளில் அஸ்திரங்களே ஆவாகனஞ்செய்து தாங்களுமூனிவர்களேப் போலவே சுவாமியின் மீது அட்சதைதூவினார்கள் அவ்வட்சதைகளில் ஆவாகனஞ்செய்திரு ந்த தேவாஸ்திரங்களெல்லாம் உடனே தத்தம்ரூபங்களோடு வெளிப் பட்டு சுவாமியின்மீது விழுவதற்குமி யாவருங்காணும்படியாக அவ ருடைய திருவடிகளில் வீழ்ந்து பணிந்தன. அப்போது தைதவர்க்குக் தைதவராகிய மகோற்கட மூர்த்தியானவர் அவைகளேத்தமதுதிருக்கர த்திலேந்திபொய்வேடங்கொண்டுவந்த அந்த ஐந்து இராக்கதர்கண் மீதும்மேற்ற ஐந்திசிகளேயெடுத்துதூவினர் உடனே அவைவந்தும் அஸ்திரங்களாகப்பாய்ந்து அதிக பராக்கிரமதீரதாடி பலிப்போலப் பாரித்திருந்தின்ற அவ்வைந்திராக்கதர்சேனாரூ சங்கரித்தன.

அவ்வற்புதத்தைக் கண்டயாவரும் சுவாமியை வேதாகமங்களி னிலே அளவற்றமீதாந்திரங்களேசெய்தனர். அதற்குமேல் உபாய னத்திற்குரிய சடங்குகளெல்லாங் குறைவறசெய்து நிறைவேறின பின்னர் தேவர்களெல்லாமோரிடத்திற்கூடி சகலபுவன கர்த்தாவாகி ய மகோற்கடபதிவிநாயருக்குக் கிடையாதபொருள் எவ்வுலகங்க ளினுமில்லையாயினும் யாமெல்லாங் கடைதீத ரமபடியான சில உப சாரங்களேச் சேய்வோமென்று ஆலோசித்தது யாவருஞ் சிவபெருமா னேப் பணிந்துநின்றார்கள். அக்குறிப்பைச்சிவபிரானறிந்து பிறகும், திரிசூலம், உடுக்கை, மழு, சடைமதி என்னுமிவைகளே மகோற்கட ப்பிள்ளையாருக்குக்கொடுத்து சடையில்கங்கையைத்தரித்து விருபாக் கன், பாசுபாணி, பாலசந்திரன் என்னும்பெயர்களேயுங்கொடுத்தனர் அதற்குமேல் உமாதேவியார் சிங்கவாகனங்கொடுத்து சிங்கவாகன னென்று பெயரிட்டு தட்டர்களேயெல்லாஞ் சங்கரிக்கக்கடவை என் று ஆசீர்வாதஞ்செய்து மீட்டுமொருவாளாயுதத்தைக்கொடுத்து கட் கதரரென்னும் மற்றொருபெயரையுங்கொடுத்தனர். "இப்பால் பிரமன் தனது அடையாளமாக நவரத்னமயமாயிருக்கின்ற ஒருகமண்டலமூ ம், ஒரு இவ்வியபரிமளத்தோடு மிருக்கின்ற ஒரு தாமரைப்பூவும் மகோற்கடமூர்த்தியினுடைய திருக்கரத்திற்கொடுத்துப் பிரபஞ்சியெ ன்னும் பெயரிட்டுப்பணிந்தனன். விண்டுவானவர், இவ்வியமான ஓர் சீதாம்பரமும் சக்காயுதமும் வைத்து விஷ்ணுபதியென்னும் பெய ரிட்டுப்பணிந்தனர். பிரகற்பதிதேவர், ஓர் இரத்தினபாலிகையை வை

த்துப்பாதனென்னும் பெயரிட்டுப்பணிந்து காசிபருக்கும் பாரனந்தர் என்னு ஓர்பெயரிட்டனர். வருணதேவன் ஓர் பாசத்தைவைத்து சுர வப்பிரியதேவனென்னும் பெயரிட்டுப்பணிந்தான், சமுத்திராசன், பி ராமணவடிவங்கொண்டுவந்து ஓர் மூத்தமாலையைதிருவடிக்கீழ்வைத்து மாலாதரனென்னும் பெயரிட்டுப்பணிந்தனன், ஆதிசேடன், தானே ஒருபடக்கைமெத்தையாகி மகோதரக்கட மூர்த்தியைத்தாங்கிப்பணிரா சவாசனென்னும்பெயரிட்டு பணிந்தனன் யமதருமராசன், ஓர் தண்டாயு தத்தைவைத்து தண்டாதரனென்னும் பெயரிட்டுப்பணிந்தனன், அக்கி னிதேவன், நுதற்கண்ணை மறைத்துவந்த மகோதரகடப்பிள்ளையாருக் குயாவையும் நிற்றவல்ல ஓர் சக்தியைக்கொடித்து தனஞ்செயனென் னும் பெயரிட்டுப்பணிந்தனன் வாயுதேவன் மிகுத்தவலுமையைக் கொ டுத்துப் பிரபஞ்சனென்னுமோர் பெயரிட்டுப் பணிந்தனன். இவ்வாறு அடைக்கலம்புகுந்த தேவர்களெல்லாம் வனம்வாழ்க்கு காயமென்னும் மூன்றினோடு படைக்கல முதலியவைகளைப் பத்திபூர்வமாகக்கொடுத் துப்பணிந்துநிற்க, மகோதரகடப் பிள்ளையார்யாவருமானந்த பெய்தும் படி அப்படை முதலியவைகளை மிக்கபகிழ்வோடு மேற்றுக்கொண்டு அவ்வவர்கட்குச் செப்பத்தக்க அனுக்கிரகங்களையுஞ் செய்தருளினர்.

இப்பால் இந்திரனனவன் மகோதரக்கட மூர்த்தியினுடைய திருவி ளையாட்டினாலே. பறறறதினாலோ தான்மாத்திரம் மதிமயக்குற்றவ னுய் எல்லாதேவர்கட்கும் அரசனகவிருக்கின்ற என்னையாவரும் வணங்கவேண்டுவதே யல்லாமல் யானைருத்தரையும் வணங்கேன் சகல வெள்ளங்களுந்தாழும்படியான சமுத்திரமானது ஓர்சிறியகுட் டைநீரையுமிச்சிப்பதோ! எல்லா மிருகங்களும் பணிந்துபோகத்தக்க இராசகண்டீரவமானது அற்பமான புல்லையும் இச்சிக்குமா என்றிவ் வாறு மூடத்தனமாகப்பேசி அதிக கர்வத்தோடு நின்றனன். அப்படி நிற்பவனைக்காநிமுனிபவர் புத்திரவாஞ்சையினுற் பார்த்து ஒசுவர்க்க லோக வாசனே முன்னர் உனது அரசை நடக்கவொட்டாமற் செய்த சத்துருக்களுடைய யுத்தத்திலே நீ தோற்று இப்போது யாவுமிழந்தி ருக்கின்றனை இடியேனும் உனது போகபாக்கியங்களைப் பெற்று உன துஅரசையும், வீரத்தையும் நீகையேற்றுக்கொள்ளநினைத்தாயில்லைதா கண்ணர்களாகியதேவர்களையும் நான்முகனையுஞ்சங்கரித்து, மூவுல கங்களையும்பாதுகாத்து, எங்கும்வேதாகமகெறிகளை நிலைகாட்டி. உன் னையுங் காத்தருளும்பொருட்டு சர்வவல்லமையுள்ள ஈச்சுரனே இன்று சிறுபிள்ளையாகத்திருவவதாரஞ் செய்திருக்கின்றதை அறிந்திலீலையே? அவர் இது காறுஞ்செய்தருளிய திருவிளையாடல்களைச்சிறிதும் அறிந்

இல்லேபோலும் ஐயோ, எனதையன் திருவவதாரஞ் செய்தருளி ஓரா ண்டாவதற்கு முன் விரசையென்னும் அரக்கியைச் சங்கரித்தனர். இர ண்டாவ தாண்டில் உதத்தன் துந்துபியென்னு மிரண் டசுரர்களைச் சங் கரித்தனர். மூன்றுவதாண்டில் சித்திரனென்னுங் கந்தருவனுக்குச் சா பக் தீர்த்தருளினர், நான்காமாண்டில் ஆகா முதலியமூன்று கந்தரு வர்கட்கு அவர்கள் பூசித்துவந்த பஞ்சமூர்த்தங்களை மறைத்து மீட் டுந் தமது திருமேனியினின்றுங் கொடுத்தனர்.

இப்போது நடந்துவருகிற ஐந்தாமாண்டில் பஞ்சவடிவாய்வந்த ஐந் தசுரர்களை யாவருங்கண் டதிசயிக்கும்படி சங்கரித்தனர். அவ் வற்புதத்தை நீயும் பார்த்தனை. தற்காலத்தில் சிறுபிள்ளையா யிருக்கிற வர்களுடைய சிறியவினையாட்டுகள் இவ்வாறுஞல் பிற்காலத்தில் இவர் பெரியவரான பின்பு செய்யப்போகின்ற பெரிய விளையாட்டுகளை யாவ ரால றியக்கூடும், மைந்தனே! இனியெனும் சுகத்தினைப் பெறக்கோறி, நீயும் அவரைப் பத்தியோடு பூசனைசெய்யென்று சொல்லினர் தனது தந்தையாகிய காசிபர் இவ்வாவு கூறியும் இந்திரன் அவைகளை ஒப்புக் கொள்ளாமல் சுவாமியைச் சோதிப்பான்போல வாயுதேவனைக் கூவி நீ உனது பராக்கிரமத்தோடுஞ்சென்று மகோற்கடமூர்த்தியை அசைத்து வருவாயென் றேவினன். உடனேவாயுதேவன் சுவாமியினுடைய பெரு மையினை யறிந்தாலுயினும் அதனை இந்திரனுக்கு மறிவிப்பான்போல மிண்டிமேலெழும்பிச் சண்டமாருதமாய்ச சுழன்று தாக்கி, யுகாந்தகா லமோவென்று அஷ்டதிசைகளி லுள்ளோரெல்லாம் நடுங்கும்படி தன துபராக்கிரமமெல்லாந் தோன்ற வீசினன். அவ்வீசலினல் அண்டப் பித்திகளிடிந்தன. சமுத்திரங்க ளுடைந்துபோயின. பர்வதங்கள்யாவு ம் பொடியாயின. மரங்கள்யாவும் மூறிபட்டு வீழ்ந்தன. தேவலோக முழுவதும் பூவுலகம்போலப் புழுதி மூடிக்கொண்டது. அனந்த சிவ கோடிகள் இறந்துபோயின, இவ்வாறு மகோற்கடப் பிள்ளையார் மீது வீசிய காற்றினலே சகலலோகங்களும் இவ்வண்ணமா யகியும்போது தேவாந்தகளும் நாகாந்தகளுங் கோபங்கொண்டு நமக்குப்பயந்து ஒடுங் கிக்கிடந்த வாயுதேவனுக்கு இவ்வளவு அதிகாரங்கொடுத்தவர்கள் யா ரென்று ஒற்றர்களைக்கூவி விசாரித்துவரக் கட்டளையிட்டனர்.

அவர்கள் அக்கட்டளையின்படி சென்று விசாரித்து வருமுன்னம் அக்காரியங்களை முன்னமே அறிந்திருக்கின்ற சில வொற்றர்கள் அவ் வரவை ராவர்களெதிரில் ஓடிவந்து ஆண்டவர்களே! நமது பயங்களு டைய சக்தியினை வெல்லும்படியாக இந்திரனுடைய உத்தரவின்பேரில்

வாயுதேவன் தனது வலியெல்லாங்கொண்டு வீசுகின்றனன். இனி அச் காசிபன் முதலாயினோர், எவ்வா றுவார்களோ அறிந்திலேம். அவன் வீசுகின்ற சண்டவேகத்தினால் தேவர்களெல்லாம் திகைத்து நின்று கின்றார்களென்றனர் அதைத் தேவாந்தகனும் நராந்தகனுங்கேட்டுச் சந்தோஷமடைந்தனர். இவ்வாறு வாயுதேவன் தனது வலியனைத்தை யுங்கொண்டு சகல விருட்சங்களும் ஆகாயத்திற் பஞ்சுபோற் பறந்தலை யவீசியும், மகோற்கட மூர்த்தியினுடைய திருமேனியில் ஒரு ரோம மேனும் அசையவில்லே. அதன்மீது இந்திரன் அக்கினிதேவனைக்கூவி நீயும் வாயுவேடுசென்று உனதுவலிமையைக்காட்டக் கடவையென்று கட்டளையிட்டனன். உடனே வாயுதேவனும் அக்கினியுடனும் சண் டமாருதமும் வடவாக்கினியுமாகக் கலந்து சர்வ சங்காரகாலத்திற்பஞ் சபூத பௌதிகரத் மகமாயுள்ள சகங்களையெல்லாம் பஸ்பஞ் செய்வது போலத் தகித்து வருவதினால், சதத சமுத்திரங்களுஞ் சலமின்றி வற் றிப்போயின. சகல லோகங்களும் அக்கினிச்சுவாலையால் வாடிப்போ யின இவ்வதிசயத்தை மகோற்கடப பிள்ளையார் கண்டு சிறிது புன்ன கை செய்தனர் அப புன்னகையை அக்கினிதேவன் தாளமாட்டாது மூர்ச்சையாயினன். அதறகுமேல் மகோற்கட மூர்த்தியானவர் இந்தி ரன்கொண்டிருக்கின்ற அறிவின்மையை நீக்கத் திருவுளங்கொண்டு ஓர் விசுவரூபமெடுத்து அனந்த முடிகளும், அனந்த சிரங்களும், அனந்த முகங்களும் அனந்த விழிகளும், அனந்த செவிகளும், அனந்த வாய் களும், அனந்த புயங்களும், அனந்த கரங்களும், அனந்தவிரல்களும் அனந்த மார்புகளுப, அனந்தவயிறுகளுமாகி ஏனைய அவயவங்களும் அனந்த வனந்தமாய் விளங்க சகலமுந் தாமாகி நின்னர். அப்படி நின்றபோது அவருடைய திருவடிகளெல்லாங் கீழுழு லோகங் கட்கு மப்பாற் போயிறங்கின அவருடைய செவிகளெல்லாம் அஷ்ட குலாசலங்கட்கு மப்பாற்போய் விளங்கின அவருடைய மயிர்க்கால்க டோறும் அளவற்ற அண்டங்கள் தொங்கின. அகேகஞ் சூரியர்கள் ஏககாலத்தி லுதயமானாற்போல அவருடைய திருமேனிகளில் ஓர்சோ தி உண்டாயது. அச்சோதில் அனந்த விஷ்ணுக்கள், அனந்த பிரமாக் கள், அனந்த இந்திரர்கள், அனந்த தேவதைகள், அனந்தமுனிவர்கள், அனந்த விஞ்சையர்கள், மற்று முண்டானபேர்களும் அனந் தானந்த மாகத் தனித்தனியே விளங்கிச் சேவித்திருந்தனர். இவ்வாறு சகல புவன கர்த்தாவாகிய மகோற்கடமூர்த்தியெடுத்திருக்கின்ற விசுவரூபத் தைக் கர்வங்கொண்டிருந்த இந்திரன்பார்த்து மிகவும் பிரமைகொண்டு சுவாமியினுடைய மயிர்க்கால்களிற் றொங்குகின்ற அளவற்ற அண்டங் களில் ஓர் அண்டத்துள் தானும் அதற்குள்ளே சோழுபதினாலு லோ

கங்களும் விண்டு, பிரமன், இந்திரன் முதலான தேவர்களும், ஏனைய வேராதிகளும், ஆலம் விரைகள்போலவும் பனங் கொட்டைகள் போலவும் அனேக வனேகமாக விருக்கக்கண்டு தனக்கு நேர்ந்திருந்த மதி மயக்கத்தையுங் கர்வத்தையு மொழித்து நல்லறிவு உதித்து அங்ஙனே வெளிவருவதற்கு எத்தனங்கொண்டான். அவ்வாறு வெளிவருதற்குச் சக்தியில்லாமற் றிகைத்து அங்கிருந்தவண்ணமே மகோற்கடமூர்த்தியினுடைய திருவடிகளே மனதிற் றியானித்து மிகுந்த பத்தியோடு துதிசெய்வதாயினன்.

தினம்தினம்வை யகமிறைஞ்சத் திகழ்தேவ தேவதின்னே
யனந்தசத் திமமென்றும் விசுவாத்து மானரென்று மனந்தானந்த
மனந்தூய வடிவார்க்கு மாறுது வழங்குமொரு வள்ளலென்று
மினந்தும்மை யில்லாத சிறியேனு மிப்பொழுதிங் கறிந்தேனென்தாய்.

விச்சுவந் தியரென்றுங் கணேசரென்றும் விச்சுவமா மீசரென்றும்
விச்சுவா திகரென்றும் பிரமரென்றும் விச்சுவா தீதரென்றும்
நிச்சலுநித் தியரென்று நிகழ்ச்சி தானநத சொரூப மென்றும்
மூச்சகநா யகரென்று மீசரென்று மூணையடியேன் மூழுப்பக்கண்டேன்.

சர்வவியா பகரென்றுஞ் சுகதுக்கஞ் சர்வருக்குந் தருவாரென்றுஞ்
சர்வவித்தை களுக்குமா கரமென்றுஞ் சருவான்ம சொரூபரென்றுஞ்
சர்வபொருட் களுக்குமிருப் பிடமென்றுந் தருசர்வே கானரென்றுஞ்
சர்வான்ம ஞானத்தி லாபாச ரென்றுமுன்னை சரணஞ் சார்ந்தேதன்.

ஐந்தொழிற்கா ரணரென்றுங் காருணீதரென்று மரவ்மால் வேதன்
றந்தலைவ ரென்றுர்தா பசங்க யத்தினிச்சை தன்னே நாடி
ரந்தலுற வழங்குமொரு நாதரென்றும் விஞ்ஞான சொரூபரென்றும்
புந்தியுரை கடந்தபூ ரணரென்று மறிந்துன்னைப் புகழ்நின்றேன்.

இவ்வாறு தோத்திரஞ்செய்து ஓ பாபவஸ்துவே! முன்னர் அடியேனுடைய பேதமைபுத்தியினுற் றேவரீரைச் சிறுபிள்ளையென்று நினைத்த பெருங்குற்றத்தைப்பொறுத்தருளி அடியேனிடத்தில் தேவரீருடைய திருவருட்பார்வைவழங்கி அடியேனே வெளியில்விடித்து,முன்போலத் தேவரீருடைய சாந்தரூபதரிசனந் தந்தருள, வேண்டுமென்று பணிந்து பிரார்த்தித்தனன் அதற்கு மகோற்கடப் பிள்ளையார் மகிழ்ந்து, அவனே வெளியிலே விடித்தத் தாம் முன்போலவே பிள்ளைப் பருவத்தினராகி யிருந்தனர் அதற்குமேல் தேவர்கள் புட்பவருஷஞ் சொரிய ஆகாயத்தில் பஞ்சவாத்தியங்களும் முழங்க, தேவாம்பனைகள் கூத்தாடுஞ்செய்ய, கந்தருவர்கள் கானம்பாட,முனிவர்கள் வேதமோதி

இவ்வித வைபவங்களோடு இக்கிரஞனவன் மகோற்கட மூர்த்தியை அளவற்ற சிறப்பினோடும் பூசனைசெய்து சுவாமிக்கு எக்காலத்தும்திரு வடிப்பணி செய்திருப்பதற்கு இரண்டு தெய்வஸ்திரீகளைவைத்து, சர்ப்ப கவிருட்சமும் அங்குசமும் வச்சிராயுதமும் பிள்ளையாருடைய திருவடி களில்வைத்து விநாயகரென்னுங் திருநாமமிட்டுத் தோத்திரஞ் செய்த னன் மகோற்கடப்பிள்ளையார் மீட்டுக் தேவேந்திரனிடத்தில் இருபை யுற்று சத்துருக்களுடைய யுத்தத்திற்கு இடையாத பாகுகிரமத்தை அவனுக் கனுக்கிரகஞ்செய்து, அவன்சொன்ன தோத்திரங்களியாவர் துதிசெய்தாலும் அவர்கட்குச சகல சம்பத்துகளும் அளிப்போமென் று வரமுங்கொடித்து விடைகொடுத்தனர் பின்னர் தேவேந்திரன், அவ் விடையை முடிமேற்கொண்டு, மீட்டும் பலமுறை பணிந்தெழுந்து மக மேருகிரியைநோக்கிசென்றனன். மற்றைத்தேவர்முதலியயாவரும்சுவா மியைப்பணிந்து விடைபெற்றுத் தத்தமிருக்கையை யடைந்தார்கள்.

அதற்குமேல் மகோற்கடமூர்த்திக்கு ஆருவது வயதாகுங்காலத் தில், தாமே தமது சுயேச்சையினுல் சகலலீலாகங்களினும் விளையாடும் படித் திருவுளங்கொண்டு அங்குசம பரசு, பாசம், கமண்டலம், தண் டாயுதம், தாமரைப்பூ மான்மேறல் பிதாம்பரம்: முத்துமாலை; மூன்றும் பிறைசசந்திரன், சுத்துரிபபொட்டு, தருப்பையென்னு மிவைகளெல் லாம் பிரகாசிக்குமபடி தரித்துக்கொண்டு சிங்கவாகனமூாகது, ஒருநா ள் விண்டுலோகத்திற்கும், ஒருநாள பிரமலோகதத்திற்கும் ஒருநாள் சோர்க்க லோகத்திற்கும், ஒருநாள் நாகலோகதத்திற்கும், ஒருநாள் அஷ்டதிசைகளுக்கும், ஒருநாள மூவுலகங்களுக்கும், ஒருநாள் வனங் களுக்கும்' ஒருநாள் மலைகளுக்கும், ஒருநாள் சமுத்திரங்களுக்கும், ஒருநாள் தீவுகளுக்குமாகச்சென்று விளையாடல் செய்திருக்கின்றநாள் களில், ஒருநாள் காசிபமுனிவருக்குச் சீடனுகிய நராந்தகனுக்குப் பிரி யவசனங்களைக் கூறிக்கொண்டு காசியிலே அரசாட்சி செய்பவனுய் ஓ ரரசனிருந்தான். அவன் தனது புத்திரனுக்கு விவாகஞ்செய்ய நிணைத் துப் புரோகிதத்தொழிலுக்கு காசிபரை யழைத்துக்கொண்டு போகும் படிதானே சுதீரவாய் அவ ராசர்மத்திற்குவந்து அவரைத்தீர்க்கதண் டஞ் செய்தனன். அவ்வரசனைக் காசிபமுனிவர் புத்திரவாஞ்சையோடு ம் பரிந்தெடுத்து, ஓராசனந் தந்திருக்கச்செய்து அன்பனே! நீவந்தகா ரியம் யாதென்று வினவினர். அதற்குக்காசிராசன் அஞ்சலியஸ்தனுய் சுவாமீ! அடியேன்குமாரனுக்கு விவாகஞ்செய்யுமிரு எத்தனித்திருக் கின்றேன் அவ்விவாகம் சுவாமிகளெழுந்தருளாது நிறைவேறுவதன்று அடியேன் சுவாமிகளையழைத்துச் செல்லத்தக்கபுனிதனல்லேனுயினும்

அக்கரியத்தைவந்து நிறைவேற்றவைப்பது சுவாமிகளுடைய பெருங் கடமையென்றான், அதற்குக் காசிபர் திருவையுற்று அரசனே! யாம் சாதுர்மாசிய விரத மாரம்பித்தோ மாதலால் யாம் வருவதற் கெவ் வாது நமது குமாரனாகிய மகோற்கடன் அக்காரியத்தைச் சிறப்பெய்த நடத்த வல்லவனென்றுசொல்ல உடனே மகோற்கடமூர்த்தியை யழை த்து. அப்பனே இவன் காசிதேசத் தரசன் இவன் உன்னோப் பணியும் படிவஸ்தனன். இவனே உனகுச் சீடனுகும், ஆதலால் இவன் மன திற்கு மகிழ்ச்சியுண்டாகும்படி உனது காட்சியைக்கொடுத்து, இவ னோடுகூட நகரத்திற்குச்சென்று. இவனுடைய புத்திரனுக்கு விவாகஞ் செய்து முடித்து. மீட்டும் இவ்விடத்திற்கு வரவேண்டுமென்று கேட்டு க்கொண்டனர். அதற்கு மகோற்கடமூர்த்தியானவர் இனி வருங்காரி யங்களை யாலோசித்து அதற்கிசைந்தனர், பின்னர் காரோஜன் தனது ஆசிரியரிடத்தில் விருந்துண்டு மிக்கமனமகிழ்ச்சியோடு விடைகொண்டு அவரதுபத்தினியாகிய அதிதி யிருக்குமிடத்திற்சென்று பணிந்தனன். அவ்வதிதி அவனைப்பார்த்து அரசனே! இம்மகோற்கடனே சிறுவன் இவன் ஒன்றையுங் தேருமல் துடுக்காய்ச் செய்யதனினவன், சிறிதும் பயமறியாதவன், இவனால் அனந்த இடையூறுகளும் உற்பாதங்களும் உண்டாகும ஆதலால் அவைகட்கெல்லாம நீ காப்பாற்றி இப்போது நீ எவ்வித வெருசையிலு லழைத்துக்கொண்டி போகின்றனையோ அவ் வாஞ்சையோடு மீட்டு மிவ்விடத்திற் கொண்டுவருது சேர்க்கவேண்டு மென்று கட்டளையிட்டு, சுவாமியைத தனது கரத்தினுறு பிடித்தவர்து அவ்வசன்கையி லொப்புவித்தனள்.

கேட்டார்களோ சவனகாதி முனிவர்களே! அரிபிர மேந்திராதிய ராலும் அரியவேதங்களாலு மறிதற்கரிய பராபவஸ்துவாயிருக்கின்ற மகோற்கட மூர்த்தியை அதிதியானவள் தனது அருமைத் திருக்கரத் தினுற்பிடித்துக் காசிராசனிடத்திலொப்புவிக்க இனி முத்திவீட்டைத் தனக்குக் காணியாட்சியாகக்கொள்ள வல்லோனுகிய அவ்வரசன் மிகு ந்த வுவகையோடும் எமது சூர்த்தரைப்பணிந்து கைப்பற்றினனென் றால் இவர்கள் பூர்வத்திற் செய்திருக்கின்றதவத்தின் பெருமையினை யார் அளவிட்டுரைக்க வல்லவர்கள்.

இப்பால் காசிராசன் மகோற்கட மூர்த்தியைப் பணிந்தெழுந்து அவரை அளவற்ற தோத்திரங்களோடும் வரிசைகளோடும் இரதத்தி லேற்றித் தானுமேறித் தனது காசிநகரை நோக்கிச் செலுத்தினன். அவ்வாறு செலுத்தப்பட்ட இரதமானது கண்டக பர்வதத்திற்குச் சமீ பத்தில் வர, அப்பர்வதச் சாரலில் பதினுயிரம் வருடமாய்ப் புகைந்து

ஆகாரமாகப் புசித்துக்கொண்டு இரௌத்திரகேதுவுக்கு இனியனனும் தேவாந்தகனுக்கும் நரகாந்தகனுக்குங் தகப்பனுமான தூமாட்சனென் னும் பெயரையுடைய ஓரவுணன் மகாவல்லமையுள்ள ஓராயுதம்பெற வேண்டி சூரியனேநோக்கித் தவஞ்செய்திருந்தனன். அவன் தவத்தின் முடிவுநாளுங் காசிராசன் அவ்விடத்தைச் சமீபித்தகாலும் ஒன்றரைநா ழிகைதால் அத்தினம் அவ்வேளையில் சூரியனனவன் தனது லோகத்திலி ருந்த வண்ணம் அவன் தவத்தினுக் கிரங்கி ஓராயுத மனுப்பினன் அவ் வாயுதமானது ஆகாயமெல்லாம் அளவற்ற சோதியைவீசிக்கொண்டு பூமியை நோக்கிவர அதை மகோற்கட மூர்த்திபார்த்து அதன்வல்ல பத்தை யாமறிவோமென்றுநினைத்துச் சரேலென்று இரதத்தினின்றும் ஆகாயத்திற் பாய்ந்து சர்ப்பத்தைக் கருடன் பிடிப்பதுபோல அவ்வா யுதத்தைத் தனதுகரத்தாற் பற்றி மீட்டும் இரதத்தில் வந்திருந்த சூரி யனேநோக்கித் தவஞ்செய்துகொண்டிருக்கின்ற அந்த தூமாக்ஷனமீது ஏவினர் அது அவர் திருக்கரத்தினின்றும் வெளிப்பட்டமாத்திரத்தில் அதிக வல்லபத்தோடுஞ்சென்று தீயாயினோர் பெய்யுந் தவமானது உடனே அவருக்குத் தீமையைவிளைக்குமென்று சொல்லும் மேலோர் வாக்கியம்போல, அப்பாதகனுடைய தலையையறுத்துக் கீழே தள்ளி யது அவனுடைய சரீரமானது ஐந்நூறுகல் விசாலத்திற்கு விழுந்தது இவ்வற்புதத்தைக காசிராசன் பார்த்து மனதில் அதிசயமும பயமுண் டாகி ஐயா! நமக்கு வல்லமையில்லாததினலன்றே நரகாந்தகனுடைய ஏவற்பணிகளே கடாதத்திக்கொண்டு யாவரும் புகழும்படியாக இதுகா றும் ஒரு சங்கடமுமில்லாமல் அரசாட்சிசெய்து வருகின்றோம் நமது குமாரனுக்கு ஒரு விவாகம் நடப்பிக்கவேணுமென்று இத்தினம் இவ ரை இங்ஙன மழைத்துவந்தோம் அதனல் நமது சம்பத்தும் குடியுங் குலமும் ஒருங்கே நாசமாகும்படியாய் நேர்ந்ததே இவரோ புரோகித ருடைய குமாரர் அவனை தனது வெற்றியினல் திரிலோகங்களையுமட க்கி ஆண்மைகொண்டிருக்கின்ற அரசன் இந்தச்சிறியவருடைய சார் பால் நமகுயாது கூடிவரப் போகின்றது

அந்தப் பெரியவனுடைய சார்பையித்தினம் சுத்தமாயிழந்து போ னோமே ஆ அ, ஆ அ, என்னசெய்தோம் இனி என்னசெய்யப்போகி றோம் என் றிவ்வாறு நினையாததெல்லாம் நினைந்து நினைந்து துயரமு ற்றிருந்தனன் அக்குறிப்பினை மகோற்கட மூர்த்தி அறிந்தமை அறியா தவர்போல விருந்தனர். அச்சமயத்தில் இறந்தபோன தூமாட்சனுக் குப் பணிசெய்திருந்த மகா பாகசிரமசாலிகளாகிய செகன்னென்னும் மனுவென்னுஞ் சொல்லாகின்ற அவன் புத்திரர்களிருவர் வந்து

மனோற்கட மூர்த்தியைப்பார்த்து, ஓ பிள்ளாய்! உனக்கு ஒருபிழையுஞ் செய்யாமல் அளவற்ற காலாய் அரியதவஞ் செய்துகொண்டிருக்கின்ற எங்கள் பிதாவை வீணே கொன்றீனையே! அற்பிவற்றவனே! உனது திரு வாகம் அவ்வளவு பெரிதோ? அதை இப்போதே அறிகின்றோம், கர் வங்கொள்ளாதே யென்று சொல்லிப் பயந்திருக்கின்ற காசிராசனைப் பார்த்து, அடா பேதாய், நீ அன்றே ஆடிக் காற்றிலேயும் இலவம் பஞ் சுபோல எங்கும் நிலைப்படாமல் தின்பப்பட்டுக்கொண்டிருந்தனை, அப்படி யிருந்த உன்னைச் சகலபாக்கியங்களையும் அனுபவிக்கவைத்து உனக்கு வேண்டிய உபகாரங்களைச்செய்த எங்கள் பிதாவுக்குப் பிரதி யுபகாரம் இச்சிறுவனைக்கொண்டு அவர் உயிரைவாங்கும்படி செய்வித் தனையல்லவா நன்மை செய்தோர்க்குத் தீமை செய்வோர்களுடைய சம்பத்தும் ஆயுளும் நிலைபெறுமென்ற மபெரியோர்கள் சொல்லும்வாக் கியத்தை உலகத்தார் அறியும்வண்ணம் இப்போதே உன்னிடத்தில் செய் துகாட்டுகிறோம் பாரென்றுசொல்லி ஆக்கிரமித்து அவ்வரசன்மேல் விழுவந்தார்கள். அப்போ தவ்வரசன் பின்னும் பயந்து நடுக்கமுற்று ஒருவர்க் கொருவர் குறைவற்ற பராக்கிரமதனியுடைய வீரர்களே! உங்களுக்கு இடையூறு செய்யும்படி இச் சிறுபிள்ளையை யானழைத்து வந்தவனல்லன், யானடத்தப்போகின்ற விவாக நிமித்தம் அழைத்துவ ந்தேன். எவ்வளவும் அச்சமும் பயமுந தெரியாத மிகவு மிளமையான இச்சிறுவன்செய்த பெரும்பிழையை நீங்கள் பொறுக்கவேண்டும். திரிலோகங்களினுங் கீர்த்திபெற்றிருக்குன்ற நீங்களே எங்கள்மீது கோபித்து உபத்திரவஞ் செய்யத்தொடங்கினால் யாங்கள் என்ன செய் யப்போகின்றோம் என்றிவ்வாறு மனங்கலங்கி நடுங்கும் பலமுறைதா ழ்ந்த வசனங்களாற் பிரார்த்தித்தான், அதை மகோற்கடமூர்த்தி கே ட்டு தாமும் பயந்தவர்போல ஒரு திருவிளையாட்டாகக் காசிராசனைப் பார்த்து அரசனே, என்னை எனது தாய்தந்தையரிடத்தி லிருக்கவொ ட்டாமற் கொண்டுவந்தனை, வந்தவிடத்தில் சத்துருக்களானோர் உபத் திரவஞ் செய்பவன்தால் நீ அவர்களோ டெதிர்த்து யுத்தஞ்செய்துக் கொன்று, என்னைக் காப்பாற்றுகிற வகையைத்தேடாமலி அவர்களோடு இதமாக வார்த்தைகளைப் பேசுகின்றாய், அவ்வாறு பேசினும் அவர் கள் மூர்க்கர்களாகையால் உன்னையு மென்னையு மோதாமல் விடார்கள். உன்னினும் பராக்கிரமமுடைய அரசன் உன்னைக் கோபித்தால் உனது உயிரும் சம்பத்துமே போய்விடும். எனது தந்தையினுடைய மனது சிறிது கோணுமாயின் இப்பிறப்பில் தவம் தானம் சம்பத்து உயிர் முத லானவையாவும் நாசப்படுவதன்றி மறுபிறப்பிலும் வாழ்வைக்கெடுத்து

ஏழு பிறவியும் பலதுன்பங்களோ விளக்குமென்று நீ யறிந்தாயில்லை ஒருவனுக்குத் தவறிலாகிய எனது தந்தையினுடைய திருவை சிறிதுண்டாயின் மேலான பாக்கியமாலிகளாகிய அரசர்களா லுண்டாகு மிடர்கள் அவனுக்குச் சிறிதும் மில்லை சந்திரனிடத்தற்ற முயலிலப்பிடிப்பதற்கு சிங்கம் வல்லதோ என் றிவ்வா று திருபாதியாகிய மகோற்கடமூர்த்தி திருவாய்மலர்ந்தனர் இப்பால் காசிராசன் முன்னர் அவ்வ வுணர்கள் கூறியவன் பொழிகையும், பின்னர் மகோற்கடமூர்த்தி திருவாய் மலர்ந்தருளிய இவ் மொழிகையுங்கேட்டு இருதலைக் கொள்ளியிலகப்பட்ட எறும்போல அவனது மனம் ஒரு நிலைப்படாமல் அங்குமிங்குமாகச் சுழல, அக்காட்சியை மகோற்கடமூர்த்தியறிந்து, எதிர்த்து வந்த இரண்டவுணர்களையு நாம் பெருமூச்செவிட்டனர் அப்பெருமூச்சானது முன்னெருபோ தாகாதே அவருடைய வுயிர்ப்பு கருடனே அந்தரத்தி லலையச்செய்ததோ அவ்வா று அவர்களைக் கொன்றுவாரிக்கொண்டுபோய் நரகாந்தகனுடைய கொலுச்சபையிலே இரண்டு பர்வதங்களைப்போலப் போட்டது அப்போது அளவற்ற உத்திரங்களுடைந்து பொடியாயின வச்சிரத்தூண்களனைத்தும் பிளந்தோயின அழகுறச்சமைத்திருந்த மேடைகளெல்லா மிடிபட்டன, எங்கும் புழுதிகளெழும்பி அவனுடைய சபையைப்பல்லாம் மூடிக்கொண்டன. இவ்வித உற்பாதங்களை நரகாந்தகன் கண்டு பயந்து, தெய்வினையறு சிம்மாசனத்தினின்று மிழிந்து அந்தப்புரத்திற்சென்று, ஒளித்துக்கொண்டு மனங்கலங்கித் தூதர்களை விரைவிற்கூவி இவ்வற்பாதம் யாதுகாரணத்தால் வந்ததோ அதனை அறிதலவசக் கடவீர்களென்று தூதர்தினுன்.

உடனே அவர்களும் அவ்வா றேசென்று தெரிந்துகொண்டு, பதைத்தும் வெயர்த்தும் ஓடிவந்து நரகாந்தகனைப் பணிந்து நின்று ஆண்டவனே, காசி இராசனுனவன் தனது புத்திரனுக்கு விவாகஞ்செய்யு நிமித்தம் தன்னுடைய புரோகிதனுகிய காசிபமுனிவரிடத்தில் சென்று அவரிடத்தில் பாலசந்திரனைப்போல வளர்ந்துகொண்டிருந்த மகோற்கடனை அழைத்துக்கொண்டு மீட்டுங் காசிப்பட்டணத்தை நோக்கிச் செல்ல அம்மார்க்கத்தில் தேவரீருடைய சிறிய தந்தையாகிய தூமாட்சர் தவஞ்செய்துகொண்டிருக்க அப்புதுமையை அச் சிறுவன்பார்த்து ஓர் விளையாட்டாக அவரைக்கொன்றனன். அதை அவருக்குப் பணிசெய்திருந்த அவர் புத்திரர்கள்கண்டு உடனே அச்சிறுவனிடத்திலோடித் தங்களுக்குண்டாகிய மனவருத்தத்தினுல் அவனைப் பலமுறைவைது எதிர்த்து நின்றனர். அதற்கச்சிறுவன் கோபங்கொண்டானில்லை அத்திரசத்திரங்களையுந் தொடவில்லை தனது பெருமூச்சியினுலேயே

அப்புத்திரர்களிறக்கும்படிசெய்து அவர் சரீரங்கள் இச்சபையில் விழ வர்தள்ளினன். அவர்கள் இங்கேவிழுந்ததினாலே சபைமுழுவதுமழி ர்துபோனதன்றி சபையிலிருந்தவர்களிற் சிலர் தலையலானர்கள், சிலர் தோள்முதலிய அவையவங்களே யிழந்தார்கள். சிலர் தப்பி ஓடி ப்போனர்கள். இப்போது அக்காசிராசன் அச்சிறுவனோடு தனது தே ரைச்செலுத்திக்கொண்டு அம்மார்க்கமாகப் போகின்ற னென்றார்கள். அவையண்டத்தையும் நராந்தகன்கேட்டுக் கோபாக்கினிகொண்டு, பெரு மூச்செறிந்து இங்கிருந்துவெளிப்படி முன்னமே தண்ணீரினின்று நீங் கிய முதலையைப்போலக் காசிபனிடத்தினின்றுநீங்கிச்செல்லுகின்ற அ ம்மூனிச்சிறுனைக் கொல்லுகின்றேனென்று வைராக்கியஞ் செய்துகொ ண்டுகொடுமையிற்சிறந்த இராக்கதர்களில் ஐந்நூறுபேரையழைத்துநீங் கள் இந்நிமிடத்திற்சென்று காசிபன் மகனையுங் காசிராசனையுங் கைப் பிடியாகப்பிடித்து நமக்குமுன் கொண்டுவந்து விடக்கடவீர்கள். ஒரு வேளை அவர்கள் மறங்கொண்டு போர்செய்வார்களாயின் உடனே அவர்களைக்காக்கைக்கும் கீழுருக்கு மிரையாக்கி வாருங்களென்று ஆக்கியாபித்தனன் அம்மாத்திரத்தில அவர்கள் இதோ முடித்தோ மென்று பணிக்தெழுந்து ஓர்கொடிப்போதில் சூரியனே மேகங்கள்சூழ் ந்துகொண்டாற்போலக் காசிராசனுடைய தேரைசசுற்றிலுஞ் சூழ்ந்து ஊர்ப்பரித்துக்கொண்டு மகோதகடமூர்த்தியைபிடிக்க நெருங்கினர் கள். அப்போது எமதையன் ஓராயுகமேலுங்கைப்பற்றாது மேககர்ச் சனையைப்போல ஒரு பேரொலிகாட்டினர். அப்போதொலிக்கு அவ்வீ ரர்கள் தாளமாட்டாது பேரிகையோசையினைக்கேட்ட அசுனமா எவ் வாறு நடுங்கி இறக்குமோ, அவ்வாறுயாவரும் பூமியிலேவீழ்ந்துபதை பதைத்து இறந்துபோனர்கள், சாசிராசன் தனது தேரைசெலுத்தி க்கொண்டு போயினன். அவ்வதிசயத்தைக்கண்ட சிலதூதர்கள் விரை ந்தோடி நராந்தகனைப் பணிக்தெழுந்து. ஆண்டவனே? மூன்னர்தேவ ரீருடைய கட்டளையின்படிசென்ற வீரர்களெல்லாங் காசிராசனுடைய தேரைச்சூழ்ந்து கொண்டார்கள். அப்போது அவ்வீராசனோடு மிருக் கின்ற அப்பிராமணச்சிறுவன் கோடைகாலத்து இடிபோலப்போல ஓர் தொனியிட்டு ஆர்ப்பரித்தான், அத்தொனிக்கு நமது வீரர்கள் தாள மாட்டாமல் சர்ப்பங்களைப்போல பூமியில்விழுந்து இறந்துபோனர் கள், ஆண்டவனே; உருவிலே சிறுவனென்று நினைத்து அத்தக்தெய்வ ச்சிரேஷ்டனைப்பகைத்தால் சகல துன்பங்களும் வரும் அவனுடைய வலியைக்குறித்தியோசனைசெய்து அவனைப்பூசித்தால் பெருமை பெற --மென்று சொன்னர்கள். அதைக்கேட்டமாத்திரத்தில் காய்ந்த செ

ப்பூசியைக் காதிலேற்றினாற்போல நராந்தகனுக்குக் கோபமேலிட்டு சரீரமெல்லா மழல்போலச்சிவந்து தனக்கு அழிவுகாலம்கோரிட்டபடி யால் தூர்ப்புத்திமேலிட்டவனுகிய, மிக்க ஆவேசத்தோடும் அத்தூதர் களைப்பார்த்து அறிவீனர்களே! யுத்தத்தில் எதிர்த்துவாதவணத்தை ய்வச்சிரேஷ்டனென்று சொன்னீர்கள். உங்களுடைய பேதமைப்புத் தியினல் உங்களுக்கு நீங்களே பேடியென்று காட்டிக்கொண்டீர்கள். யாங்களோ சிவபிரானேநோக்கி அளவற்றநாள் தவஞ்செய்து அரியவ ரங்களைப்பெற்று பிரமன் முதலிய தேவர்களையெல்லாம் ஒடுக்கி நமக்கு ஏவலாக்கி வைத்திருக்கின்றோம் எங்களுடையபராக்கிரமத்தை எவ் வளவும் யோசியாமற்போளீர்கள் அம்முனிப்பயலோ நேறறையதின த்தி னுதித்தவன், ஒருகல்வியுங் கல்லாதவன். ஆயுதபரிட்சை ஒன்றுந் தெரியாதவன், அரியதவங்களைச்செய்துபெரியவரங்களைப் பெறுதவன் ஓர் சேனையேனு மில்லாதவன், யாதுமற்ற ஒருவனுயிருக்கின்றபையலை நீங்கள் மேலான வீரனென்று சொன்னீர்கள். ஒரெலி பூமியைத்தோ ண்டி மலையைச்சாய்க்குமோ ஓர்மிட்டிப்பூசி வடவாமுகாக்கினியைய வைக்குமோ அதுபோல. ஓர் சிறுபையல் என்னுடனே யுத்தஞ்செய்து கொல்லுவானென்று நீங்கள் அவனை என்னினு மேலாகச்சொன்னீர்க ளல்லவா! ஆ. ஆ ஆ, ஆ! நன்றுயிருக்கின்றது நன்றுயிருக்கின்றது என்றிவ்வாறு அத்தூதர்கள்மீது தன்னுபிரைப் பாதுகாத்துக்கொள் ளும்வகையினைதென்னு தெரிந்துகொள்ளாத நராந்தகன், கோப வேசங்கொண்டு அவர்களை அத்தடசணமே கொண்றுவிட்டு. வேறே சிலதூதர்களைத் தனது மனதிற்கேற்றபடி ஆராய்ந்துவைத்து, மாயை யினும் யுத்தத்தினும்வல்ல சில அவுணர்களை அங்கிமிடத்தில் வரவழை த்து, அவர்கட்கு அளவற்ற வெகுமதிகளைக்கொடுத்து, நீங் நண்பர்க ளே? நீங்கள் யாவரும்விரைவிற்சென்று காசிராசனையும்காசிபனுடைய மகளையும் பிடித்துக்கொண்டு வாருங்களென்று ஆக்கியாபித்தனன். அவ்வாறே செய்துவருகின்றோமென்று அவ்வீரர்கள் பணிந்து விடை கொண்டார்கள்.

இப்பால் விடைகொண்டு காசிராசனை நோக்கிச் சொல்லுகின்ற அவ்வீரர்கள் ஓரிடத்தில் யாவரும் ஒருமிக்கக்கூடி மேலான வல்லமை யையுடைய மகேபற்கடனுக்கெதிரே நாம்போய் வென்றுவருவது மிக வுமரிதாதலால் நாமனைவருந் தனித்தனி வெவ்வேறு மாயவடிவங்களை க்கொண்டு சென்று அவ்விருவரையுங் கொல்லவேண்டும். அல்லது மற் றெந்தவிதத்தாலாவது அவர்களைக்கைப்பிடியாகப்பிடித்து, நமது அர சனெதிரிற் கொண்டுவந்து விடவேண்டும். இந்த இரண்டிலொன்றைச்

செய்து நமது ஆண்டகைக்குச் சக்தேதாஷமுண்டாக்கிவைப்பதே நமக் குரிய பெருங்கடமையென்றிவ்வாறு யாவருந் தீர்மானஞ் செய்துகொ ண்டு அதிக வேகத்தோடும் நடந்தார்கள். அதற்குள்ளே காசிராசன் ம கோற்கடமூர்த்தியினுடனே அனேகங்காடுகளையும் மலைகளையுங்கடந்து சென்று தனது நகரவெல்லையை யடைந்தனன். அப்போது அரசன் வருகிறசெய்தியை அமைச்சர்களும் அங்கராவாகிகளும் அறிந்துகா சிப்பட்டணம் முழுவதும் அலங்காரஞ் செய்வித்து வீதிகளையெல்லாம் தேவேந்திரலோகம்போலச் சகதனம். பதிர், தமனியப்பொடி, மலர் கள் இரத்தினங்கள் முதலியவைகளால் அழகுறச்செய்து அளவற்ற வரிசைகளோடு மெதிர்சென்று பணிந்தார்கள இவ்வித வைபவங்க ளோடு தேவதேவோத்தமராகிய மகோற்கட மூர்த்திபானவர் நகரத் தினுள் பிரவேசிக்க அப்போது அவ்வைபவங்களைக் காணவந்த ஸ்தி ரீகளெல்லாம் மகோர்கட மூர்த்தியினது அதிபுதமாகிய ரூபலாவண் ணியங்களை நேத்திரோற்சவமாகக்கண்டு அளவற்ற ஆசைப்பெருக்கெ ன்னுங்கடலில் மூழ்கினார்கள அவருட்சிலர் பற்பதங்கள் மீதிருக்கும் அரம்பாஸ்திரீகளைப்போல ஆகாயவளவீலோங்கிய உப்பரிகையின்மீ திருந்து நமக்குள்ள புத்திரவாஞ்சையோடு மகோற்கட மூர்த்தியைக் கண்டு தரிசிக்க உடனே அவர்கள் மனமானது கரைபமாறு இரண்டு குசங்குகளிலும் பால்சுரந்து பாயும்படி நின்றார்கள். சிலர் மலைமுழை யிற்றவஞ்செய்கின்ற சந்நியாசிகளைப்போலத் தகதகடங்கள் மூகங்களைச்சா ளரங்களின் வழியாக நிறுத்திக் கொலத்தொழில் தமது கண்களைக்குளி ரும்படித் தரிசித்தார்கள். சிலர் வட்டிலின்கணுள்ள பாலைக் கிள்ளைக் கூட்டுக்குதழிலோடு விரைந்துசென்று மகோற்கட மூர்த்தியினுடைய பேபழகைக்கண்டு அக்கிள்ளையினிய அவர்பால் தூதாகவிடுத்தார் கள் சிலர்தாங்கள் எழுதிக்கொண்டிருந்த சித்திரத்தைவிடுத்தமகோற் கடமூர்த்தியைத் தரிசிக்கச்சென்று மீட்டும்வந்து முன்னெழுதிய வரு வத்தை முடிக்கவெண்ணினவர் அவ்வருவோடு மகோற்கட மூர்த்தி யினுடைய வருவையும் எழுதிமுடித்து ஆசசரியபபடுவார்கள். யிவர் ஒருகண்ணுக்கு அஞ்சனந்தீட்டி யோடிவந்து திருபாதியாகியமகோ ற்கட மூர்த்தியைத் தரிசித்துச்சென்று, மற்றொருகண்ணுக்குமஞ்சனந் தீட்ட அப்படித்தீட்டியும் சுவாமியைத் தரிசித்ததனுண்டான ஆனந் தபரவசபத்தால் முன் தீட்டிய அஞ்சனமழிந்துபோக. ஒருகண்மையி னர்களேயானார்கள். சிலர் அண்ணலாராகிய மகோற்கடமூர்த்தியைக் கண்டவுடன் தமது ஆசைப்பெருக்கத்தால் அணிகளெல்லாம் கழன் றுவிழ, அவைகளை மீட்டு மெடுத்தணிபவர் தமது மதிமயக்கத்தால்

நுதலிலணியும்படியான இரத்தின மாலைகளே மூலைகளுக்கும் மூலையில ணியும்படியான முத்துமாலைகளே நுதல்களுக்கும் கால்களிலணியும்படி யான கிண்கிணிகளைக் கரங்களுக்கும் கரங்களிலணியும்படி யான வளை களைக் கால்களுக்கு மணிவார்கள். இவ்வாறு பேதமைமுதல் பெதும் பையீறுயுள்ள எழுவகைப்பருவங்களுடைய ஸ்திரீகளெல்லாங் கண் கள் கிழிந்தும் வளைகளிழந்தும் குழல்கள் சோர்ந்தும் வார்கள் நெகி ழ்ந்தும் மேகலையொழிந்தும் நின்றார்கள். அங்கு வந்திருந்த ஆடவர் களும் இம்மணித்தேரின்மீது வருகின்ற புண்ணியமூர்த்தி முன்னர் திரிபுராதிகளை யெரித்தருளிய சிவபிரானே? விண்டுவே? பிரமனே? அறிகிலமென்று பேசிக்கொள்ளுவார்கள், இவ்வண்ண மாடவரும் ஸ்திரீகளும் ஆசைக்கடலில் மூழ்கி ஆனந்த மெய்தும்படி எமதையனு கிய மகோற்கடமூர்த்தியொருவரே புத்திரனாக நினைத்தவர்கடகுப்புத் திரனாகவும். பிதாவாக நினைத்தவர்கட்குப் பிதாவாகவும் (தமையனாக வும், தம்பியாகநினைத்தவர் கட்குத் தம்பியாகவும், மருமகனாக நினைத் தவர்கட்கு மருமகனாகவும, மைத்துனனாக நினைத்தவர்கட்கு மைத்து னனாகவும், மாமனாக நினைத்தவர்கட்கு மாமனாகவுந் தரிசனங் கொடு த்தருளாமல், மாலாக நினைத்தவர்கட்கு மாலாகவும், பிரமனாக நினை த்தவர்கட்குப் பிரமனாகவும், இந்திரனாக நினைத்தவர்கட்கு இந்திரனாக வும், சிவபிரானாக நினைத்தவர்கட்குச்சிவபிரானாகவு மிருந்து எவ்வெவர் எந்தெந்த தெய்வமாக நினைக்கின்றார்களோ அவ்வவர்கட்கு அந்த ந்த தெய்வமாகத் தரிசனந்தந்து யாவருக்கும் போனகத்தையளித் துக்கொண்டுச் சென்றனர்.

அச்சமயத்தில் நராந்தகனுலேபிப அளிணவீரர்களில் தந்தூரனென் றும் விகண்டனென்றுஞ் சொல்லுகின்ற இரண்டுவீரர்கள் அக்காரி நகரத்துப்புரோகிதனுடைய குமாரர்களைப்போல மாயரூபங்கொண்டு மகோற்கட மூர்த்திக்கெதிரே மிக்க அன்புடன் வருகின்றவரைபோல அதிகவேகமாய் வந்தார்கள். அவர்களே சுவாமியும் ஆவலோடு எதிர் கொள்பவர்போல உடனே தேரைவிட்டுக் குதித்து அவர்களருகிற் சென்றனர் அப்போது அப்பாதகர் சுவாமியைத்தழுவ நேர்ந்தனர், சுவாமியு மதற்கிசைந்து தாமுமவர்களைத்தழுவுவார்போல இருவரை யும் ஒன்றாக இறுகத்தழுவி அவர்களுடைய பராக்கிரமத்தையும், வலி யையும், வஞ்சனையையும் மாயையினையும், சரீரத்தினையும் ஒரு மிக்கவ ழித்து அனிச்சம்பூவைக்கசக்கியெறிவதுபோலத் தமதுகரத்தினுல் அ வர்களைக் கசக்கியெறிந்து மீட்டுந் தேரின்மீதாரோகணித்தனர், அவ் அற்புதத்தை யாவருங்கண்டு ஆச்சரியமடைந்தார்கள். உடனே யதன்க

னென்றும் வீதலனென்றுஞ் சொல்லுகின்ற இரண்டவுணர்கள் சண்ட மாருதம்போல வுருக்கொண்டுமேகங்களீனத்துங் கீழுபுதிரும்படியா கமிருந்த ஆரவாரங்களைக்காட்டிக் காசிபட்டணத்திலுள்ள மாடமா ளிகை கூடகோபுரம் முதலானவைகளெல்லாம் பெயர்த்திடித்து வீதி களிளே குப்பல் குப்பலாகத்தள்ளி, சுவாமி ஆரோகணித்திருக்கின்ற இரதத்தையும் பெயர்க்கும்படி மறித்தார்கள் இவ்வாருகவே அசுரகர த்திலுள்ளவர் என்செய்யவல்லர். யாவரும் அல்லோல கல்லோலப்ப ட்டுவருந்தினர்கள் அவ்வுருசுகத்தை மகோற்கடப் பெருமானறிந்து தமதரைக்கண்ணிறைந்திருக்கின்ற ஆதிசேடனை யெடுத்து விடுத்தனர்; அவ்வாதிசேடன் வெளிப்பட்ட மாத்திரத்தில் தனது ஆயிரம் வாய்க ளாயுந்திறந்து சண்டமாருதத்தையெல்லாஞ் சீறி விழுங்கிவிட்டனன். அதனால் அப்பாதகர் வலியிழந்து தங்கள் சுயரூபத்தோடு சுவாமிக் கெதிரில் நின்றார்கள் உடனே மகோற்கடமூர்த்தி இரத்தத்தினின்றுங் குதித்து, ஒருகரத்தால் அவர்கள் இரண்டுகையினையும் பிடித்துக்கிறு கிறென்று சுழற்றி நெற்கதிரை போதுவதுபோல பூமியிலறைந்து அப் பட்டணத்திற் காப்பாற்போய் விழும்படியாக எறிந்து வீதிகளில்அழி ந்து கிடைக்கின்ற மாடமாளிகையெல்லாம் பார்த்தருளினர் அவைக ளனைத்தும் வீதிகளைவிட்டெழும்பி வதாப்பிரகாரந் தத்தம வடிவங்க ளோப்பெற்று முன்னிலு மதிமமாக அழகினை யடைந்திருந்தன. இவை யனைத்தையுங் காசிராசன் பார்த்து; அச்சோ, நமது அறிவின்மையி னால் முன்னர் இவரைச்சிறுபிள்ளை யென்று நினைத்தோமே ஆ, ஆ! என்னகாரியஞ்செய்தோம் இதுகாறும் இவர் நடாத்திவந்த காரியங் களைப்பார்த்தால் அற்புதகங்களாகவே பிருக்கின்றன இவர்சகலலோக சாண்னியரான சர்த்தாவேயன்றி வேறல்லவென்று தனக்குள் நிடங் கொண்டுமிருந்தபதற்றியோடும் ஆவலோடும் அவர்த முறைவலம்வந்து அஷ்டாங்க பஞ்சாங்கமாக நமஸ்காரஞ்செய்து தனது தேரை விரை வித்தசெலுத்திக்கொண்டுதோரணமூலாகிய அலங்காரங்களால் நிறைந்த தனது அரண்மனைவாய்தலின் முன்னதாகவந்தனன். அப்போதுகூட னென்னும் ஓரவுணன் சுவாமியை உள்ளே நுழையவொட்டாமல் தடுக்கவேண்டுமென்றெண்ணி அவ்வாய்தலில் ஓரடைக்கல்லாக வடிவ ங்கொண்டிருந்தனன். அக்காரியத்தை மகோற்கடமூர்த்தியறிந்து சமீ பத்திலிருக்கின்றகாசிராசனை நோக்கி அரசனே! இவ்விடையூறு நீங்கு வதற்குப்பிள்ளையாருக்கு ஆயிரந் தெங்கின்கனியுடைக்கவேண்டு மென் று திருவாய்மலர்ந்தனர், அதை அருகிருந்தவர்கள்கேட்டு உடனே ஆயிரந் தெங்கின்கனிகளைப் பொதிகளிலேபோட்டுக் கொண்டு வந்து

வைத்தார்கள், அவர்களின்மீது மகோற்கடமூர்த்தி மந்திர நீர்தெளித்து அங்கிருந்த முழுக்களைப்பார்த்து நீங்களனைவரும் ஒவ்வொருகனியையெடுத்து இவ்வடைக் கல்லின்பேரில் தூளாகும்படி அறையுங்களென்று கட்டளையிட்டனர்.

அக்கட்டளையை அங்கிருந்தோர் யாவருஞ் சிரமேற்கொண்டு ஒவ்வொருவர் ஒவ்வொருகனியையெடுத்து அப்பாறை மீதறைந்தார்கள். பின்னர் அவ்வளவும் அத்திரங்களாகி அப்பாறையைப் பொடிப்பொடியாகச் சிதைத்துவிட்டன. அதற்குமேல் பாறைவடிவங்கொண்டிருந்த அப்பாதகன் தனது சுயரூபத்துடனே ஆக்கிரமித்து நின்று அரசன்முதலிய யாவருமே பயந்தோடும்படி யத்தனித்தான். அதனை மகோற்கடமூர்த்தியறிந்து, தமது பரசாயுதத்தை அவன்மீதுவிடுத்து அவனுயிரைமாய்த்தனர், உடனே அவ்வவுணன் ஓர்ப்பர்வதம்போலப் பூமியிலேவிழ அதை யாவருங்கண்டு நடுக்கமுற்றார்கள் அப்போது மகோற்கடமூர்த்தியானவர் தமது புருவங்களேநெளித்துப் பூமியைப் பார்த்தனர். உடனே பூமியானதுபிளந்து அவன்சரீரம் பாதலத்திற் போய்விழும்படி விழுங்கிவிட்டது. அவ்வற்புதத்தை யாவருங்கண்டு ஆனந்தமடைந்தார்கள். அதற்குமேல் மகோற்கடமூர்த்தியாவர் இரதத்தினின்றுமிறங்கிப் பூமியிலேநின்றனர் அப்போது சுமங்கலிய ஸ்திரிகள்வந்து சுவாமிக்கு அரக்குநீர் சுற்றிப்போயினர் அரசனும் சிலபெரியோர்களைச் சுற்றியிருந்து கன்னுறாகழித்து கூட்டங்கூட்டமாயிருக்கின்ற சனங்களிலக்கித் தனது முன்னங்கையை நீட்டினன், அக்கையின்மீது மகோற்கடமூர்த்தியானவர் தமது திருக்கரத்தினைவைத்துக் கொண்டு திருவடிகளிற் பாதுகைசூடி மெல்லமெல்ல அரமனைக்குள்ளாகச்சென்று சொர்ணத்தாற்சமைத்து நவரத்தினங்களிழைத்திருக்கின்ற சபாமண்டபத்தையடைந்து தமது அன்பர்களுள்ளம் பேரின்ப வின்னங்களாற சுமக்கப்பட்டிருக்கின்ற ஆசனத்தின்மீதெழுந்தருளினர். அப்போது அங்கிருந்தயாவரும் மிகுந்த பக்தியோடுபணிந்தார்கள், ஸ்திரிகள் ஆட்டியஞ்செய்தார்கள். சுவாமி தம்மைப்பணிந்தெழுந்தவர்கட்கெல்லாம் அருள்வழங்கினர். பின்னர் அரசன் அங்கிருந்தவர்களையெல்லாம் விலக்கித் தனதுமனைவியர் மக்கள்முதலான யாவரையு மழைத்துச் சுவாமியைப் பணியும்படிசெய்து பின்னர் தானும் சுவாமியுமாகப் போசனஞ்செய்து முடித்து அந்திக்காலம் வந்தவுடன் சுவாமிக்குப்பள்ளியறை சோடித்துவைத்தனன். அதில் மகோற்கடமூர்த்தியெழுந்தருளினர். அரசன் சிலகாவலரைகூவி அப்பள்ளியறைவாய்தலிலே காத்திருக்கும்படிசெய்து, தானும் நித்திரைசெய்

தனன். முன்னர் தேவர்இராஜ் விடுத்த இரண்டுதோழியர்களும் சுவா மிக்கு இராமுழுதுந் திருவடிப்பணி செய்திருந்தார்கள்.

அதாதியிற்றானே ஆணவமிருளில் மறைப்பட்டிருந்த ஆன்மகோ டிகளெல்லாங் கன்மங்களிடான சரீரங்களையெடுத்து தாபத்திரயாக் னிகளாற் றகிக்கப்படுந் துயரங்களினின்றுஞ் நிறுத்தப்பாறும்படி சர்வசங்காரகாலத்தில் அவைகளை தமதுகரத்தி லொடுக்கிவைத்து மகாசுழுத்தியிலிருக்கும்படி அக்காலமுடிவரையில் தாமும் பிரமானந் தநித்திரைக்கொண்டு மீட்டுமவைகட்குத் தனுகரண புவனபோகங்க ளாற் கன்மங்களைப்புசிப்பித்து அக்கன்மவொப்பில் பாசபந்தங்களைப் போக்கி முத்தியிற்சேர்க்குநிமித்தந் திரிமூர்த்திகள் சொரூபமாகச்சக ளங்கொண்டருளிய விநாயகமூர்த்தியானவர் அவ்வான்மாக்கள் நித்த நித்த மனுபவிக்கின்ற அல்லல்களினின்றுநீங்கச் சிறிது சுகத்தையளு பவிக்கும்படியாக நித்தியசுழுத்தியையுந் தரிவெண்ணித் தாமத்திருப் பள்ளியில் அமைத்திருக்கின்ற மலாமளியின்மீது சிவானந்தநித்திரை செய்தருளினர்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! காசியாஜன் தனதுஅ ரண்மனைபச்சேருகின்ற வரையில் மகோற்கடமூர்த்தி செய்தருளிய திருவிளையாடல்களிதுவாகும் பின்னர்செய்தருளிய திருவிளையாடல் களையும் பார்த்தமாகச்சொலுவேஙம் கேட்பீர்களாக, சர்வான்மாக் களுந் நித்தியசுழுத்தியிலிருந்து நிறுதுசுகத்தை யனுபவிக்கும்படிசி வானந்தநித்திரைசெய்தருளிய மகோற்கடமூர்த்தியானவர் பின்னரவ் வான்மாக்களெழுந்து விணைப்போகங்களைப் புசிக்குமாறு வைகறைப் போதில் தழுது திருவிழியை மலர்த்தி உலகமனைத்தும் உய்யும்வகை யைகாடி நித்தியநியதிகளை நிறைவேற்றும்படி ஒப்பாருமிக்காரு மில் லாத தாமும நித்தியநியதிகளை நிறைவேற்றித் தம்மைத் தரிசித்தோ ரெல்லாஞ் சனனவாதையினின்று மொழியும்படியாகப்பின்னர் வீதி யிலெவிளையாடல்செய்கின்ற பிள்ளைகளோடு தாமும்விளையாடல்செய் வாராயினர். இவ்வாறு சகலபுவன கர்த்தாவாகிய விநாயகமூர்த்தியா னவர் காசியாஜன் கடைத்தேறும்படி அவன் அரண்மனையிலெழுந்த ருளியிருக்கிறாரென்று அவ்வரசன் புரோகிதராயிருக்கின்ற தருமதத் தர் கேள்வியுற்று மிகவும் ஆனந்தபரவசத்தராய் அவ்வமயமனைக்கு வந் தனர். அவ்வரவைக்காசியாசனநித்து அவரை எதிர்கொண்டழைத்து வந்து ஓராசனத்திலிருத்திப் பூசைசெய்து இருகரங்களையுங்கூப்பி சு வாமி தேவரீர் இங்ஙனம் எழுந்தருளுவதான பெரும்பாக்கியமடியே ற்குக்கிடைத்தது யாதுகாரணத்தினாலோ அதனைத் திருவாய்மலர்ந்த

ருளவேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்கு அத்தப்புரோகிதர் சொல்லுவார் அரசனே சகலலோகங்களும் உய்யும்படித் திருவவதாரஞ்செய்தருளிய நமதுகர்த்தாவை இக்கோத்திரத்துள்ளோர் யாவரும் சீவன்முத்தியடையும் படியாக நீ யழைத்துவக்கயன்றே ஈன்ற புருஷார்த்தங்களையும் மேலான கீர்த்தியோடு பெற்ற நின்னியல்புள்ள புனிதர்கள் இவ்வுலகின்கண் யாவரிருக்கின்றார்கள் இத்தன்மைத்தான மேலானபாக்கியத்தை நீயடைந்திருக்கின்றனை யாதலால் நமது மனத்தின்கண் ஓரிச்சையுண்டாயது அஃதுயாதெனில் நமக்கு இரண்டு புத்திரிகள் உற்பவித்திருக்கின்றனர். அவர்களை உனதுபாக்கியமெய்வந்த மகோற்கடமூர்த்திக்குக் கன்னிகாதானமாக விவாகம் செய்விப்பதற்கு ஓரிச்சைகொண்டிருக்கின்றோம், அவ்விச்சையை நீயே நின்று வேற்றிவைக்கவேண்டுமென்று சொல்லினர் அதை அரசன் செவிகுளிரக்கேட்டு நமது ஆசிரியருடைய குமாரற்குச்சரியான சம்பந்தத்திலே விவாகஞ்செய்து முடிக்கவேண்டுவது முறைமையியாதலால் நேரிட்டகாரியத்தைக் கூட்டிமுடித்துவைப்பதுகருமமென்று துணிந்துசுவாமி அவ்வாறேசெய்து முடிப்போமென்று சொல்லினன் அதைத்தருமதத்தர்கேட்டவுடன் அவ்விடத்தினின்று நீங்கி வீதியில்சிறுபிள்ளைகளோடு விளையாடல்செயதிருக்கின்ற மகோற்கடமூர்த்தியினிடத்தில் வந்து அவரதுகரங்களைப்பிடித்துக்கொண்டு கட்டழகுவாய்ந்த யர்களாய் நமது தருதையாகியகாசிபர் எனக்குமிகவும் அருமைச் சினேகர் யாங்களிருவரும் உடலில் இரண்டாகவிருப்பதன்றி உயிரில் ஒன்றுகவேயிருப்போம் அப்படிப்பட்டதருடைய சுவத்தினுலே அவரிடத்தில் அவகாரஞ்செய்த உம்மை முக்கியமாய்க் காணவேண்டிமிருந்த ஆவலோடும்வந்தேன்: இனி எனது சரகம் பவத்திரமாகும்படி இத்தினமேலீர் அவ்விடத்திற்குவந்து எனது புத்திரிகளிருவரையும் விவாகஞ்செய்துகொடுக்கப்பெற்று எனது குலங்களைக்காத்தருளவேண்டுமென்றுசொல்லி மகோற்கடமூர்த்தியை ஓர்பல்லக்கின்மீதேற்றிச் சகலவைபவங்களோடுந் தமது ஆசிரமத்திற்கு அழைத்துக்கொண்டுபோயினர். அப்போது காமனென்றுங்குரோதனென்றுஞ் சொல்லுகின்ற இரண்டசுரர்கள் கழுதைவடிவமெடுத்துக் கொண்டு ஒன்றோடொன்று சண்டைபோடுவதுபோல ஈன்றகுதிரைகளிலும் புழுதிமூடிக்கொள்ளும்படி சுவாமிக்கருகவந்தார்கள். அவரை மகோற்கடமூர்த்தியதிர்ந்து ஓர் சரணமெடுத்து இரண்டாகக்கிள்ளி அந்த இரண்டுகழுதைகளின்மீதும் வீசினர். உடனே அத்தருமபுத்திரனே வேங்கையாகி அவ்விரண்டுஇராட்சசக்களிற்றைகளையும் பிடித்துதிருந்



11 மகவாகவந்த மயூரேசர்.



12 தூமகேது.

தக்கொண்டு வனத்திற்குப் போய்விட்டன. இவ்வாறு மாயாகாரியங் களிலேவல்ல அவுணவீரர்களில் அளவற்றபேர் மகோற்கட மூர்த்தியி னிடைய வல்லபத்தை அறிந்துகொள்ளாமல் விட்டிற்பூச்சிகள்தாமே விளக்கில் வீழ்ந்து இருக்கின்றற்போல், காடோறும் இறக்துவருகின் றனைகேள்வியுற்றிருந்த தருமதத்தர் கேரிலுங்கண்டவராகி, மகோற் கடமூர்த்தியைச் சாஷ்டாங்கமாகப் பணிக்தெழுந்து இருகரங்களையுஞ் சிரமேற்கூப்பி சுவாமீ! இதுகாறுக் தேவரீர் செப்தருளிய திருவிளை யாடல்களையெல்லாம் னெது இரண்டு செவிகளுங் குளிருப்படி கேட்டு அளவற்ற மகிழ்ச்சி யடைந்திருந்தேன். இப்போது தாரிப் செய்தரு ளிய திருவிளையாட்டை யெனது இரண்டு கண்களுங் குளிராக்கண்டு பே ரானக்கக் கடலில் மூழ்கினன் ஓ பாபபப் பொருளாகிய சர்த்தனே! மனிக்காட்டி மானிப்பிடிப்பதுபோல், வேதங்களாலு மறியக்கூடாத தேவரீர், அடியேங்களை யெல்லாம் ரற்கதியிலே சேர்ப்பிக்கு நிமித்தம் அடியேங்களைப்போல ரூபங்கொண்டு உண்ணல் - உதைதல் - உறங்கல் முதலானவைகளையுஞ் செய்து, விளையாடுகின்றீர். தேவரீருடைய பெ ருமையை யாவராலறியக்கூடும். என்றிவ்வாறு அளவற்றதோத்திரங்க ளோச்சொல்லி அவ்விடத்தினின்று நீங்கிச சுவாமியை யழைத்துக்கொ ண்டு சிறிதுதூரஞ் சென்றனர் மீட்டுங்குண்டனென்னு மோரவுணன் யானை ரூபங்கொண்டு மும்மதங்களும் ஒழுகிப்பாயும்படி அதிக வேக த்துடனே சகலரும் நடுங்கி ஓடதைக்தாகச் சீறிக்கொண்டு தடுக்க வந்த வீரர்களையெல்லாம் அதா அதப்படுத்தி, அடுக்கடுக்கா யிரானி ன்ற மாடமாளிகைகளை யெல்லா மிடித்தெறிந்து, தனது பார்வைக்கெ திரே கொண்டுவந்த பிடியாக்களெல்லா முடுக்கி, எங்கும் அல்லோல கல்லோலப் படுத்திக்கொண்டு மகோற்கட மூர்த்திக்கருகில் திருப் பாற்கடலைக் கலக்கிய மந்தர கிரியைப்போல ஆர்ப்பரித்துக்கொண்டு வந்தான் அப்போது தருமதத்தர், பயந்து மெபபபாந்து தமக்குச் சுவாமியின் மீதிருக்கின்ற விழைவினாலே, அவரைத தோளின்மீதே ற்றி, அப்பாலோடிப்போக வேண்டுமென்று கருதி, மகோற்கட மூர்த் தியை யெடுக்க கேர்ந்தனர். உடனே மகோற்கட மூர்த்தியானவர் தம் மை எடுக்கநேர்ந்த தருமதத்தருடைய காங்களை இம்மென்று தள்ளிப் பயந்து ஓடி வருகின்றவர்களை யெல்லாம் அஞ்சாதிர்களென்று கையம ர்த்தி நீஞ்சீரென்று பல்லக்கினின்று மிறங்கி அச்சமற்று வருகின்ற அந்தயானையின் சமீபத்திற்சென்று அதன் மத்தகத்தின்மேலில் தமது கரங்களைக்கொண்டமட்டி மறைத்து, வாலைப்பிடித்துக் கிறுகிறென்று வட்ட

மாகச்சுழற்றி, துதிக்கையைப் பிடித்துப் பறபறவென்று முன்னும்பின்னுமாக வீழ்த்தி, பாதங்களினால், என்புகள் முறியுமபடியாக வதைத்து, சிறிது தூரம்போய் அங்கிருந்து வந்து பிடிகொடாதவகை பாய்ந்து, குபபுறக் கீழேவிழுததள்ளி, அதன் மத்தகததை மிதித்த வன்னம் பிடரின் மீதேறியுட்கார்ந்து, யாவருங்கண்டு சகரோஷிக்கும்படியாக அதனை நான்கு வீதிகளினூ மோடவிட்டு உபததிரவப் படுத்தினர். அவ வுபதத்திரவததை அவ்வவுணனுகிய யானைசுக்கமாட்டாமல், பூமியிலே வீழ்ந்திறந்தது அதறகுமேல மகோதகட மூர்த்தியானவர், ரீட்டிம பலலகின் மீதாரோ கணிதது தருமததருடைய ஆசிரமத்தை யடைந்தனர் உடனே தருமதத்தா சுவாமியை ஓராதனதது லிருத்தி சநதனம் புட மமுதலிய திரவியங்களைக்கொண்டு பூசைசெய்துக் கொண்புருஞனர். அபபோது முனனர் இறந்துபோன தூமாட்சனுடைய மனனவியாகிய சிமபை யென்பவர், தனது கணவனுக்குகாகத சம்பவத்தைக்கேட்டு மனமவருந்தி, ஒரு தினகுசெறபாத ரமது பராக்கிரமசாலியாகிய கணவனைகொனறு காதகன் எவனோ? அவனை எவ்வித வுபாயதது னுலேனுமயாமகொலலவேண்டுமென் று வஞ்சினங்கொண்டு தருமதததருடைய பாதுகாவலுள ளாஸ்திரீயைபபோல சூபங்கொணடு விடங கலந்திருநதின்ற தயிலததைக கையிலேந்தி வருது மகோதகட மூர்த்தியை மிகுந்த பதத்போடு பணிந்து தோதத்திஞ செய்த சுவாமீ! இக்தயிலம பரிமளம ஊட்ட படடிருக்கின்றது ஸ்நானஞ செய்வதறகு படகாமபாகிய மூளது. "இதைத தேவரிருகைன றே பானருமையாய்ச செயதுகொணடு வரிகை. ஆதலாலிதை சுவாமிகளுடைய திருமேனியிற பூசுமபடி உதரவாகவேண்டுமெனனு பிராதத்திதனள அவ்வஞசகததை மகோதகடமூர்தியறிது வபபுக்கொணடனர். உடனே அபபாதஞ சுவாமியை வேமிருராதனதது லிருக்க வைதது அவருடைய முடியிற தயிலததை விட்டுத தேய்ததுத திருமேனி முழுவதம அததயிலததையே கடலினள.

கேடமாகளோ சவனகாதி முனிவாகளே! முனனெருபோது தேவாகள முதலிய யாவருமம பயந்தோடிம படியாகத திருபபாற கடலின் கணணுதித்த ஆலகாலவிடததைச சிவபிரான அமுதாகபபுசிததன ரென்றல, அவர் குமாரராகிய மகோற்கட மூர்ததிக்கு இவ்விடதையில மென்ன செய்யவல்லது, ஒருததா பாறகேடுசெய்ய நினைத்தவர்கட்கு அக்கேடு அவர்களைததானே பற்றுமென்று பெரியோாகள சொலலும வாக்கியததைபபோல அததயிலததிறகலாத வீடமெலலாம அச்சிரமபை க் கேதலிலிகொண்டு இறந்துபோயினள். இவவற்புதத்தை அங்கிருந்த

யாவருங்கண்டு ஆனந்தமடைந்தார்கள். இப்பால் மகோற்கட மூர்த்தி யானவர் ஸ்நானஞ் செய்தனர். உடனே தருமதத்தர் வீடுமுழுவதும் அலங்காரஞ் செய்தனர். காசிராசன் தனது சேனைசமூத்திரங்களோடும் வந்துசேர்ந்தனன். மகோற்கட மூர்த்தி வேறொரிடத்திற் சென்று சகலவாபரணங்களையும் தனது திருமேனியிலணிந்து கொண்டனர். தருமதத்தருடைய புத்திரிகளாகிய சித்தி புத்திகளும் நீராடித் திருமணக்கோலங் கொண்டனர். பின்னர் தருமதத்தர் என்பவர் மகோற்கட மூர்த்தியையுஞ் சித்திபுத்திகளையும் சலிபாணப்பத்தலி லெழுந்தருளச்செய்து முத்தீக்களையும் மூமகுண்டத்தி லெழுப்பி, அத்தீயின் முன்பாக மந்திரநீரினல் தமது புத்திரிகளை மகோற்கட மூர்த்திக்குத் தத்தஞ் செய்தனர் முன்னரே தமக்குக் தேவையாகாயிருந்த சித்திபுத்திகளை மகோற்கட மூர்த்தியானவர் மீட்டும் உலகமெல்லாம் கடைத்தேறுமாறு தருமதத்தரினின்று மேற்றுக்கொண்டவராய், விவாகவடங்குகளையுங் கிரமப்படிசெய்து முடித்திருந்தனர்.

என்று சூதமுனிவர் சொல்லி வரும்போது சவனகாதி முனிவர்கள் அவரைப் பணிந்தெழுந்து சுவாமி! அச்சித்திபுத்திகள் யார்? தருமதத்தரென்பவர் யார்? அதனையுந் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர் அதற்குச் சூதபுராணிக ரிசைக்து ஓ சவனகாதிமுனிவர்களே! சதுர்வேதங்களானும் இன்னும் அறிதற்கரிய வக்ரதுண்டமூர்த்தியானவர் காசிபமுனிவருக்குப் புத்திரராக வரப்போகின்ற செயஸ்ரீ முன்னரே பிரமதேவனறிந்து அக்காலத்தினும் அவரைத் தரிசிக்க வேண்டுமென்னும் ஸிழைவால் தருமதத்தராக வந்து பிறந்திருந்தனர் என்னர் அவ்வக்ரதுண்ட மூர்த்திக்குஞானசத்தியுங் கிரியாசத்தியுமாகி யெக்காலத்தும் பிரிதலில்லாத சித்திபுத்திகளும் முன்போல வேதங்களை சுவாமி விவாகஞ் செய்துகொள்ளும் நிமித்தம் பிரமதேவனுடைய அத்தருமதத்தரிடத்தில் புத்திரிகளாகி, முன்வகித்திருந்த திருமணத்தினையே வகித்து வளர்ந்து கொண்டிருந்தனர். அதனல் மகோற்கட மூர்த்தி அவர்களை யாவரும் உய்யும்படியாக விவாகஞ்செய்துகொண்டனர்.

இப்பால் விவாககாரியங்களை யெல்லாம் நிறைவேற்றி யருளிய மகோற்கட மூர்த்தியைக் காசிராசன் பணிந்தெழுந்து சுவாமி! தேவரீர் அடியேனுடைய அரண்மனைக் கெழுந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்குப் பராபர வஸ்துவாகிய மகோற்கட மூர்த்தியிசைந்து தமது தேவிமார்களோடு சிங்காசனத்தி லாரோகணித்த

னர் காஞ்சராசன் தனது படைகளோடு குதிரைமீதேறினன் அங்ஙகரக் திலுள்ளோர் யாவரும் பற்பல வரிசைகளோடு நான்கு மருங்கிலுஞ் சூழ்ந்தனர். மங்கல வாத்தியங்கள் தாம்தாமென முழங்கின. முனிபுங் கவர்கள் யாவரும் வேதாகமங்களாற்றுதி செய்தார்கள். இவ்விதவை பவங்களோடு எமதையனுகிய மகோற்கடமூர்த்தி தருமதசதருடைய மணியினின்றும் வெளிக்கொண்டு காஞ்சராசனுடைய அரண்மனையைச் சேர்ந்து, சித்திபுத்திகளோ அத்தப்புரத்தி லிருத்தித் தாம் அடியவருள் ளம்போலப் பிரகாசித்துக்கொண் டிருக்கின்ற சபையில் இரத்தின மய மா யோங்கிய சிம்மாதனத்தின்மீது யாவருந் திரிக்குப்படியாக வெ ழுந்தருளி யிருந்தனர். அப்போது காஞ்சராசன், ஒரு பக்கத்திலிருந்து அங்குவந்திருந்த அமைச்சர் முதலிய தனது துணைவர்களைப் பார்த்து அன்பர்களே! நமது குமாரனுக்கு விவாகஞ் செய்விக்க வேண்டு மென் னுங் கருத்தை ஆகிரியராகிய காஞ்ச முனிவருக்கு யாதறிவிக்க அவர் இப்புண்ணிய மூர்த்தியை யனுப்பினர். யான் செய்த தவத்தின் பெருமையை என்னென்று சொல்லுவேன், அரிபிரமேந்திராதியரா லுங் காண்டற்கரிய கருணாநிதியே! இக்காரிய முள்ளோர் யாவரும் தரிசித்துப் பரிசுத்தராகும்படி வந்திருக்கின்றனரென்று சொல்லினன். அதனைக் கல்லியினுங் கேள்வியினுஞ் சிறந்த, ஆலோசனையினும் புத்தி யினும் மிகுந்திருக்கின்ற ஓர் மந்திரி அவ்வரசனைப் பார்த்து ஆண்ட வனே! துன்பார்க்கதிற் சிறந்த தேவாந்தகனுக்கும் நாராந்தகனுக் கும் நமது தலிலைகளைப் போக்கத்தக்க இக்கர்த்தாவினுற் பகையாயி னேனும், அவர்கள் எவ்விதத்தினும்படையெடுத்து இங்கேவரு மார்கள். அபபடி அவர்கள் வந்து சுவாமிகளுடைய திருக்கரத்தினுல் முத்திய டைந்த பின்பு நமது விவாகச்தை யதனால்தால் ஓர் இடையூறில்லா மல் நிறைவேறும். அதற்குமுன் யத்தனஞ் செய்தோமாயின் இடை யிடையில் அப்பாதகர்களுடைய சல்லியங்கள் நேரிட்டுக் கொண்டே யிருக்கும். ஆதலால் ஓருபட்சம், அல்லது ஒரு மாதமளவும், யா தொனறுஞ் செய்யாமல் சும்மாயிருக்க வேண்டுமென்று சொன்னன், அ ற்கு அரசன் ஒப்புக்கொண்டனன். சுவாமியும் புன்னகை செய்து அவ்விரண்ட வுணர்களும் இங்ஙனம் விரைந்து வந்து எமது கையி னுல் மடிவரல்லாமல் எங்ஙனம் போக வல்லவர்க ளென்று திரு வாய் மலர்ந்தருளினர். அவ்வாக்கியத்தை அமைச்சர் முதலிய யா வரும் செவி குளிரக்கேட்டு ஆனந்த பரவசத்தராகி, ஓவ்வொரு வராய் சுவாமியைப் பணிந்து விடைபெற்றுத் தத்த மிருக்கையை யடைந்தார்கள். பின்னர் அஸ்தமானகாலம் வந்துவிட்டது. உடனேம கோற்கடமூர்த்தியானவர் உலகத்தாபைப்போலத் தாமும் சந்தியா வந்

தனம் முதலியவைகளை நிறைவேற்றிப் போசனஞ்செய்து தமதிதே
வியர்களோடு சபரிரகூடமஞ்சத்தின்மீது பள்ளிகொண்டருளினர் அவ்
விரவில் விதாரணன் சுவாலாமுகன் வியாக்கிரமுகன் என்று சொல்லு
கின்ற மூன்றரசர்கள் அப்பட்டணத்தை யழிக்கும்படி வந்து விதார
ணன் பெருங்காற்றாகவும் சுவாலாமுகன் நெருப்பாகவும் கலந்து அப்
பட்டணத்துக் கோபுரவாய் தலைப்பாளத்து உள்ளே நுழைந்தார்கள்.
வியாக்கிரமுகன் அவ்வாய்களில் ஒடிவருகின்றவர்களை யெல்லாங்கொ
ல்லுப்படிபாகத் தனது மேலுதடு ஆகாயத்தையும்- கீழுதடு பூமியையு
ம் பொருத்தப்படி வாயைத் திறந்திருந்தான். இவ்வாறு
இம்மூவருங் கூடிசெய்துவந்த கொடுமையினாலே பாட மாளிகைகளெ
லலாம் மெலிந்தன பஞ்சலோகங் கலைலலா மொடிந்து உருகிப்போயி
ன. இரதினங்க ளெல்லாம் பொரிந்தன. கற்களிலும் பொடிப்
பொடியாயின. ஆகாயமுழுவதும் புகைப்படலங்கள் மூடிக்கொண்ட
ன. விருட்சங்களிலைத்துங் கரிந்தன அந்நகரத்திலுள்ளோர் யாவரும்
நித்திரையினின்றும் திடுக்கிட்டெழுந்து மனங்கலங்கிப் பல்திசைகளி
லும் ஓடியொளிக்க இடந்தேடினர்கள். சிலர் எவ்விடத்தினும் தீப்ப
ட்டெரிவதினாலேதங்க இடமில்லாமல் தத்தளித்தார்கள். சிலர்யானைக
ளையழித்து விட்டார்கள், சிலர் பசுக்களை யழித்து விட்டார்கள்
சிலர் கன்றுகளை யழித்துத் தாமுந்தினர்கள். சிலர் விருத்தர்களையும்
சிறுபிள்ளைகளையுங் குழந்தைகளையும் வந்திக்கொடு இவர்களை எங்
கேவைத்துக் காப்பாற்றுவோ மென்று மங்கினர்கள் சிலர் தங்களிட
மில்லாமல் நெருப்புக் கிரையானார்கள். ஒருவாறுதப்பியோடிப் போகி
ன்றவர்களும் வியாக்கிரமுகனுடைய வயிற்றினுக்கிரையானார்கள். இவ்
வாறு அம்மூன்று பாதகர்களால் காசிநகரமுழுவதும். அல்லோல கல்
லோலப்பட்டதன்றி நெருப்புச் சுவாலையினு லுண்டாகின்ற சத்தமும்
யானை குதிரை முதலானவைகளா லுண்டாகின்ற சத்தமும் சனங்களு
டைய கூக்குரல்களினாலுண்டாகின்ற சத்தமும், ஒன்றுக்கலத்தலி
னால் வெகுதூரத்திலிருக்கின்றோர்களுங் கேட்டவுடன் நடுங்கிப் பயந்
து போயினர். இச்சம்பவத்தை யறிந்த சில தூதர்கள் விரைந்தோடி
அரசனையெழுப்பி யறிவித்தார்கள். அவ்வரசன் அதைக் கேட்டவுடன்
பயந்து மகோற்கட மூர்த்திபிடத்திற் சென்றெழுப்பியறிவித்தனன்
கனவிர்சுழித்தியோடு மிருக்கின்ற மகோற்கடமூர்த்தியானவர் ஒன்று
மறியாதவர்போல விரைந்தெழுந்து வெளிக்கொண்டு பயந் திருக்கின்
ற அரசனைத் தேற்றிக் கமண்டலத்திலிருந்த சலத்தைத் தமது திருக்
காத்திற்கொண்டுவீசி வடவா முகாக்கினியையுஞ் சண்டமாருதத்தை

யுங் தொலைத்து அந்தந்தரூபத்தைக் கொண்டுவந்த இரண்டவுணர்க ளையுங் கொன்று அப்பட்டனைத்தி னுடைய வாய்தலின் வழியையடைத்து வாயைத் திறக்துகொண் டிருக்கின்ற வியாக்கிரமுகனிடத்திற்செ ன்று தாமும் ஓர் பேரருவைக்கொண்டு அப்பாதகன் பூமியில் வைத் திருக்கின்ற கீழுதட்டின்மீது தமது இரண்டு திருவடிகளை வைத்து மெறித்து ஆகாயத்தை யளாவிய மேலுதட்டைத் தமது திருக்கரங்க ளில் பற்றிக்கிழித்து ஓர் பர்வதம்போலப் பூமியிலே வீழும்படிக் கொ ன்று இறந்துபோன வுயிர்களையும் அந்தகத்தையுந் தமது திருபா தோக்கத்தாற் பார்த்து முன்னிருந்தபடியே யாவையு முண்டாக்கி அரு ண்மனையைச் சோந்தனர். அவ்வற்புதத் திருளிளே பாட்டினை அரசன் பார்த்து இருளிழிகளினும் ஆனந்த பாஷ்பந் சொரியும்படியாக சுவா மியெதிரில்வந்து பலமுறைப் பணிந்தெழுந்து, வேதாகமங்களுலே ளவற்ற தோத்திரங்களைச்செய்து, சுவாமி, இத்தினம் தேவரீரிடத்தி இல் சிருஷ்டி, திதி, சங்காரமென்கிற முத்தொழில்களையுங் கண்டே ன் அடியே னுடைய தீவினைகளெல்லாம விட்டேன், பிரமவிண்டுக் களாலும் அனுபவித்தற்கரிய சுகத்தை யானனுபவித்தேன், என்று பலமுறை திதிசெய்து ஆனந்த பரவசனகி யிருந்தனன்.

இப்பால் அவ்வவுனபாகர்களுடைய உள்ளக்கறப்பும் உடற்கறு ப்பும் ஒழிந்து போனமையை மகோற்கடமூர்த்தி யருளிக்கக்கறுத் தவான் கறப்பானது கண்டு ஒழிந்ததுபோல இருளொழிந்து உடனே அக்காசிப்பட்டனத்தினுடைய ஆதனவலங்காரத்தைத் தரிசிக்கவரு வான்போலச் சூரியன் கீழ்த்திசைக்கடலி லுதயமாயினன். அதற்கு மேல் காசிராசன் காலைக்கடன்களை நிறைவேற்றி அந்தப்புறத்தி லிரு க்கின்ற தனது பட்டபி தேவியையடைந்து, பெண்ணே! நாமெல்லா மூப்பும்படிமமோகற்கட மொன்னுந் திருநாமத்தோடு அவதரித் தருளிய சுவாமிகள் என்னுடு காசிபருடைய ஆச்சிரமத்தைவிட்டு வருகின்ற மார்க்கத்திலே தாமாட்சனென்பவனைச் சங்கரித்தருளினர். பின்னர் தம்மையெதிர்த்தவந்த அவன் புத்திரர்களிருவரையுந் தமது சுவா சத்தினல் ஓர் நிமைப்போதில் சங்கரித்தருளினர். அதற்குமேல் சரா சகனுடைய ஏவலினல்வந்த ஐந்நூறு அவுணவீரர்களைத்தமது ஒரே கர்ச்சனையினல் நாசமாக்கினர். இப்பட்டனத்திற்கு வந்தபின்பு மாயை யினல் வடிவங்கொண்டுவந்த அளவற்ற அவுணவீரர்களை மாய்த்தனர். இவைகளையெல்லாம் யாவருஞ்சொல்ல நீ கேட்டிருக்கின்றனையல்லவா இன்னுமித் தன்மைத்தான உபத்திரவங்கள் எத்தனைவரினும் ஓர்நிமை ப்போதில் அவரோ நீக்கவல்லவர். காம்முற்பிறப்பில்யாது தவஞ்செய்தி

ருக்கின்றீரேமோ அறியோம்! வேதங்களாலும் காணற்கரிய கர்த்தா வே நம்மிடத்தில் வந்திருக்கும்படியான பாக்கியத்தைப் பெற்றிருக் கின்றோம். ஆதலால் இக்த மேலான மூர்த்திக்கு யாம் சதாகாலம்பணி செய்துகொண்டிருப்போமாயின், தரும முதலிய நான்கு பொருள்க ளையும் எளிதிற் பெறலாமென்று சொல்லினன். அவையிணைத்தையும் இராசபத்தினிகேட்டு ஆனந்தபரவசத்தளாகி சுவாமிக்குத் தனதுகை யினல் அன்பே முழுவதும் பரிமளிக்கும்படியாக் கிருந்து சமைத்த னள். அதை அரசன்கண்டு தனது கையினல் சுவாமிக்குத் தயிலமா ட்டி, வாசனையூட்டி, யிருக்கின்ற திவ்விய தீர்த்தங்களினல் ஸ்நானஞ் செய்வித்து, திருவோற்றடைசாத்தி, பூர்தனமாகச் செய்யப்பட்டிருந்த குழை அங்கதம் பொன்முடி கடகம் முதலிய இரதினு பரணங்களை யும் பிதாம்பமுதலிய வஸ்திரங்களையும் அன்போடு தரித்துத் துதி செய்தனன். அதற்குமேல் இராஜபத்தினிவந்து தீர்க்க தெண்டஞ்செ ய்து சுவாமி! தேவரீர் அழுதுசெய்யத் திருவுளங்கொண்டருள வே ண்டுமென்று பிரார்த்தித்தனள். அதற்கு மகோற்கடமூர்த்தி யிவசத்து அரசனுந்தாமும் போசனஞ்செய்கின்ற விடத்திற்சென்று வெவ்வே ருதனங்களிலிருந்தனர், உடனே இராசபத்தினியானவள் இருவருக் கும் பரிகலமைவைத்து அதில் காலவகை யுண்டிகளையும் பரிமாறினள் பின்னரவ்விருவரும் சந்தோஷத்தோடுமுழுதுஞ்செய்துகொண்டிருக்கை யில் அரசன் சுவாமியையும், அவர் பரிசலதையையும் பார்த்தனன். அப் போது அவர்மீது தானணிந்த ஆபரணங்களன்றிப் பின்னுஞ் சிலமே லான ஆபரணங்கள் பிரகாசிக்கவும் பரிகலத்தின் தனமுபத்தினியிட்ட பதார்த்தங்களன்றி இன்னுஞ் சில இனிமையான பதார்த்தங்கள் விள ங்கியிருக்கலாகண்டு ஈதென்ன ஆச்சரியமென்று நினைத்து, ஒளிரே லென்று சுவாமியைத்தொழுது கர்த்தீர நானணிந்த ஆபரணங்களுந் தம், எனது மனைவியடைத்த பதார்த்தங்களும் தவிர இன்னுஞ்சிலபதா ர்த்தங்களும் ஆபரணங்களும் விளங்கிப் பிரகாசிக்கின்றனவே ஈதென் ன அற்புதம்? இக்காரியததை அடியேற்கு இன்னதெனத் தெரிவித்த ருளவேண்டுமென்றுப் பிரார்த்தித்தான். அதற்கு மகோற்கடமூர்த்தி புன்னகைசெய்து அரசனே, நமது திருமனையில் திவ்வியமான ஆப ரணங்கள் பிரகாசிப்பதும், நமது பரிகலத்தில் வேறு வேறான பதார்த் தங்கள் விளங்கியிருப்பதும் உனக்கு விவரமாகச் சொல்லுகின்றோம் கேள். நமதன்பர்களிலொருவன தண்டகவனத்திலே வசித்திருக்கின்ற னன். அவன்பெயர் புருசுண்டியென்பார்கள். அவனே தேவர்களும் வழிபடத்தக்க யோக்கியதையை யுடையவன். அப்படிப்பட்டவனை

இத்தினம் தனக் கிணையான விநாயகமூர்த்தியினுடைய சதுர்த்திவிரத மாதலாலே, ஈசுமை மிகுந்தபத்தியோடு பூசனைசெய்து இவ்வாபரணங் களையும் உணவுகளையும் நமக்கு அற்பிதஞ்செய்தனன். அவன் பத்தி பூர்வமாக அற்பிதஞ்செய்த யாவும் இங்கேநமக்கு இஷ்டமாயின. அவ னுடைய பெருமைகள் யாவரானுஞ்சொல்லி முடிவதன்று. நீகண்ட அதிசயத்திற்கு இதுதான் காரணமென்று திருவாய் மலர்ந்தனர். அ வை யீண்டையும் அரசன் செவிருளிர்க்கேட்டு ஆனந்தபரவசனாகி உட னே வாய்பூரிவந்து, கர்த்தனே! அத்தன்மைத்தான மேலான மூனிவ ரை அடியேன் அவசியம் பணியவேண்டும். அவரை இங்ஙன மழைத் து அவருடைய திருவடிகட்குச் செய்யத்தக்க பணிவிடைகளை அடி யேன் செய்தல்வேண்டும். ஆகலால் சுவாமிகள் அடியேற் குண்டாகிய இச்சையை நிறைவேற்றிவைப்பது பெருங்கடமையென்று பணிந்து விண்ணப்பஞ்செய்தான் அதற்கு மகிகாற்கடமூர்த்தி கிருபையுற்று, அரசனே! அவ்வன்பன் இங்கேவர வேண்டுவையெனில். யாம் சொல் வதைக்கேள், நீ இப்போது தண்டக வனத்திற்சென்று தவசிரேஷ்ட னை அவனுடைய மேலான பாதங்களைப்பணிந்து துதிசெய்து இருக ரங்களையுஞ் சிரமேற்கூப்பி நின்று உனது அபீஷ்டங்களை அவனிடத் தில் விண்ணப்பஞ்செய்து யாம் விரைவாக நிற்கதம் உனது கிரகத்தில்வந் திருப்பதையும் உண்ணிட்டு யாம் அழைத்துவரச் சொன்னதையும் விவரமாகச்சொல்லி, அழைத்துவரக் கடவையென்று திருவாய் மலர்ந் தருளினர். அதைக் கேட்டவுடன் அரசன் அளவற்ற மகிழ்வையடை ந்து சுவாமி சட்டளையிட்ட வண்ணம் அப்போதே பணிந்து விடை பெற்று இரதத்தின்மீதேறி வாயுவேகத்தினு முந்தி அளவுற்ற மலைக ளையுங் காடுகளையுங்கடந்து தண்டகவனத்தைச்சேர்ந்து திருமூர்த்திக ளுடைய உலகங்கட்கினியான ஆச்சிரமத்தை யடைந்து தவசிரேஷ்ட ராகிய புருசுண்டி மூனிவரைக்கண்டு அவருடையபாத பதுமங்களைப் பலமுறை பணிந்தெழுந்து இருகரங்களையும் சிரமேற் கூப்பிநின்று வேதாகமங்களினால் அளவற்ற தோத்திரங்கள்செய்து நின்றனன். அவனை அமரமூனிபுங்கவர்பார்த்து அரசனே! நீயார்? இங்குவந்த காரியமென்ன? சொல்லென்று கேட்டனர். அதற்கரசன் ஆனந்தமா கி சுவாமீ? அடியேன் காசிதேசத்தரசன். அடியேனுடைய கிரகத்தில் விநாயகமூர்த்தி யெழுந்தருளி யிருக்கின்றனர். நேற்றையதினம் சுவா மியும் யானும்போசனஞ் செய்துகொண்டிருக்கும்போது தேவரிருடை ய பூசாமகத்துவம் சுவாமியினிடத்தில் விளங்கியது. அதன்மீதுசுவாமி கள் தேவரிருடைய மகிமையினைத் திருவாய்மலர்ந்து தேவரைத் தம்

மிடத்திற்கு அழைத்து வரும்படி அடியேற்குக் கட்டளையிட்டனுப்பினர். அதுகாரணமாக அடியேன் இவ்விடத்திற்கு வந்தேன். ஆதலால் தேவரீர் அடியேன்மீது கிருபை செய்து எழுந்தருளுமென்று பிரார்த்தித்தனன். அவையனைத்தையும் புருகண்டிசேட்டு அரசனே! விநாயக மூர்த்தியென்பவர் யார்? அதனை விவரமாகச் சொல்லுகவென்று கேட்டனர். அதற்காசன் சொல்லுவான்: சுவாமி, விநாயகமூர்த்தி காசிப முனிவருக்குப் புத்திரராக அவதரித்திருக்கின்றனர். அவர் அடியேனுடைய புத்திரன்ஸ்ரீவாகமித்தம் இப்போது எனதுகிரகத்திலெழுந்தருளியிருக்கின்றன ரென்றனன். அதற்குமேல் புருகண்டிமுனிவரவனைப்பார்த்து அரசனே! விநாயகமூர்த்தி தேவர்கள் முகலியோரா லும் தொழுதற்க்க காசிப முனிவருக்குப் புத்திரராக அவதரித்திருப்பதமெப்பியானால், அவருடையமரபு எவ்வகைப் பட்டதென்று கேட்டனர். அதற்காசன் அவரைப் பணிந்தெழுந்து சுவாமி! வேதங்களாலும் விண்டு பிரமாதிகளாலும் மனமவாக்குகங்களாலும் எண்ணிய அளவைகளினுலும் அவ்விநாயக மூர்த்தியினுடைய இயற்கைகளை பதரிது. எங்கும் நிறைபொருளா யிருக்கினறு அவருடைய இயற்கை அவ்வாறு இருக்கினும், அவருடைய கிருபையினால் அடியேன் அறிந்தமட்டிலுஞ் சொல்லுகிறேன். பிராகிருதிராகிதராயும் பரிபூரணராயும், ஞானம் பத்தினைவராக்கிய சமபன்னராயும், நிரந்தர சந்தோஷத்தையடைந்தவராயும், நித்தியதிருத்தி யடைந்தவராயும், சச்சிதானந்த பிரம சொரூபராயும், தேசகாலவஸ்து பரிச்சேகரகிதராயும், சுசா தினிசாதி சுகதபேத ரகிதராயும், சட்பாவ விகாராகிதராயும், சுத்த புத்த முத்த நித்திய பரமானந்த சொரூபராயும், சர்வபரிபூரண கருணாசாகராயும் நிர்வியாச்சிய நிர்லேப நிச்சங்க நிர்வாண நிஷ்காம நிரவ நிரந்தர நிர்வபவ நிர்விசேஷானந்த நிருபத்திரவ நிபந்த நிர்மேலகுண நிர்க்குண நிரஞ்சன நிசசல நிஷ்ப்பபஞ்ச சொரூபராயும், அரூபாதிய அக்ஷி லேத்திய அதிகோஷிய அதாகிய அசல அவர்க்கிய அநாமய அகூர அப்பிமேய அசிந்திய அநியமாகிய அக்ருதோக அனிர்காக்கிய அநிரிசிய அகாரிய அனுகார ஆனந்த அகண்டாகார ஸ்வரூபராயும், விசுவதை தக பிராஞ்ஞைக் கதிதமான பிரத்தியக்கு சைதன்னிபராயும், விராட்டிரணியகர்ப்ப வவ்வியாகிருதங்களே யறிகின்ற சர்வசாட்சியாகியும், மூலப்பிர கிருதிபகண்டாகார விருத்தியானந்த விருத்திய தீதராயும். கிருதகிருத்தியராயு மிராகின்ற விநாயகக் கடவுள் தமது 'சுயேச்சையால் துஷ்டசன நிக்ரக சிஷ்டசன பரிபாலனஞ் செய்யும

பொருட்டு அதிதியினுடைய புத்திராக அவதரித் திருக்கின்றன ரென்று மகத்துகள் யாவருஞ் சொல்லக் கேட்டிருக்கின்றேன். அம்மாதன் றி அடியேனுடைய கண்களினால் அவர் அளவற்ற அவணவீரர்களைச் சங்கரித்து, அவர்கள் செய்த இடையூறுகளை யெல்லா மொழித்து, சகல ஆன்மாக்களையும் பாதுகாக்கக் கண்டிருக்கின்றேன் அங்கிட்கள மூர்த்தியினுடைய பெருமையை யான்கண்டவளவில் சொன்னனன்றி சரியாபடி யாவராலு சொலக்கூடி மென்றனன். இவையணைத்தையும் புருசுண்டி முனிவர் ஆனந்தபரவசமாய்க் கேட்டு, அரசனே! நீ சொன்னதனைத்தும் உண்மையே. உனது கண்களைச் சிறிதுநேரம் மூடிக்கொண்டிருந்து பின்னர் விழித்திடுகவென்று கூறினர். அவவாறே அரசன் கண்ணைமூடிக்கொண்டனன். அப்போது புருசுண்டி முனிவர் அவ்வரசன் முடியின்மீது தமதுகரத்தை வைத்து வாங்கினர். பின்பு அரசன் கண்களைத் திறந்தனன். திறந்தபோது அவ்வனத்தையும் புருசுண்டி முனிவரையுங் காணாதவனாகித், தனது காயிபட்டணத்தையும் அரண்மனையையுங்கண்டு, அதில் மகோற்கட மூர்த்தி எழுந்தருளி யிருக்கப்பார்த்து அளவற்ற ஆச்சரியமும் ஆனந்த பரவசமுங் கொண்டு, மகோற்கட மூர்த்தியினுடைய திருவடிகளைப் பணிந்தெழுந்து தான் கண்டகவனத்திற்குப் போனது முதல் நடந்த சங்கதிகளையும் விவரமாகச் சொல்லினன். அவையணைத்தையும் மகோற்கட மூர்த்தி கேட்டு பெருன்னகைசெய்து, அரசனே! நீ மீளவும் அவனிடத்திற்சென்று கஜானனமூர்த்தி உன்னை யழைக்கிறா ரெச்சொன்ன ரென்று சொல்லுவையாயின் உடனே வருகுவனென்று திருவாய்மலர்ந்தனர். கருணைக்கடலாகிய மகோற்கட மூர்த்தி இவ்வாறு திருவாய் மலர்ந்தருளலும் அரசனதுகைசேர்ந்து மீட்டுமபணிதெழுது, அவ்வா றெழுந்துவன் சுவாமியையுங் காசிநகரதையுங் காணாது முன்போலத் தன்கட வனதையுங் புருசுண்டி முனிவரையுங் கண்டு ஆசரியமாகி அவருடைய திருவடிகளிற் பணிந்தெழுந்தனன். அப்போது புருசுண்டி முனிவர் சந்தோஷமுற்று, அரசனே! நீ மீட்டும் வந்தகாரியம் யாதென்றவினவினர். அதற்கு அரசன் சொலலுவான்: சுவாமீ பாதியிற்சிறந்த தேவரீரைக் கஜானனர் அழைத்துவரச சொன்னரென்று சொல்லினன். அவ்வசனத்தைக்கேட்ட பாத்திரத்தில், புருசுண்டிமுனிவர் பரவசராகி உடல் முழுவது மோமாஞ்சிதம பூத்து விழிகளில் ஆனந்த பாஷ்பஞ்சொரிந்து பூமியிலே வீழ்ந்து புரண்டு மெய்ம்மறந்து நெஞ்சு முருகிப் பலமுறை விம்மி விம்மி ஓவென்றலறிப் பத்தியென்னுங் கடலின் மூழ்கிக் கரைகாணா மாட்டாதராகி அரசனையுந் தம்மோடழைத்

துக்கொண்டு மத்தியிலொருபாதமும் அவி முத்தத்திலொருபாதமு மாகவைத்துச் சென்று அவ்வரசனுடைய அரண்மனையை யடைந்தனர். பின்னர் பல அதிசயங்களை உடனிருந்தறிந்த அரசனானன், அம்முனிவரைக் கொலுச்சபையி லழைத்துவந்து சுவர்த்தின மையமாகிய சிம்மாதனத்திலிருக்கவைத்து, முறைமைப்படி பாதபூசை முதலியவைகளைச் செய்து, அதிக இரத்தினங்களாலும் விசித்திரமான படிகளாலும், அளவற்ற ஆபரணங்களாலும், அழகிசிக்குப் படியான பல விம்மிதப் பொருள்களாலும், அவர் திருவடிகளில் வைத்துப் பணிந்தனன். அதற்குப் புநருண்டி முனிவர் சந்தோஷங் கொண்டு அரசனே! கஜானனமூர்த்தி யெங்ஙன மிருக்கின்றனை யென்றுகேட்டனர், உடனே வீதியில் சிறுபிள்ளைகளாடும் ஆட்டில் செய்திருந்த மகோற்கட மூர்த்தியானவர், கன்றைத்தேடி வருகின்ற பறவைப்போல எதிரே வந்தனர். தேவதங்களாலும் இவ்வருவன் இப்படிப்பட்ட இவனிறை வன் என்று காட்டுதற்கரிய மகோற்கட மூர்த்தியை அரசன் தனது கையினுஞ்சுட்டி, இவர்தான் கஜானனமூர்த்தியென்று காட்டினன் அவ் வாறு காட்டலும், புருசண்டி முனிவர் சுவாரியைபபார்த்து முன்னர் தாம் தரிசித்திருக்கின்ற திருமேனியைக்காணாது இரண்டு கரங்களும் மனித முகமும் படைத்த வினாய அவைபலங்களும் வேறுவே யிருத்த லுக்கண்டு இவர்தானே கஜானனமூர்த்தியென்று மனதிற் சந்தேகங் கொண்டனர். அச்சந்தேகத்தை மகோற்கட மூர்த்தியறிந்து, உடனே முன்னர் அவருக்கு எவ்வாறு தரிசனந் தந்தருளினரோ அவ்வாறே தரிசனந்தருளினர். பின்னர் புருசண்டி முனிவர் திகைத்து தமதி அதத்தில் எவ்வாறு எங்களுக்கு தரிசித்துக் கொண்டிருக்கின்றீரோ அவ் வாறே புறத்திலும் பகதகுலங்கள், அக்காலங்களிலோதும் ஆயுதங்கள், சந்நிதானத்திற்தசுமதுடம, யானைவதனம், ஒற்றைக்கோடு, சிலம் பணிந்தஞ் திருவடிகள். இருபருங்கினுஞ் சித்திபுதிகள், சிங்கவாகனம் முதலியனவுங்கண்டு அதிசயமாகி முன்போலவே ஆனந்தபரவசமுற்று மெய்ம்மறந்து பூமியிலே விழுந்து புரண்டெழுந்து ஆனந்தக்கூத்தாடி பலமுறை வலம்வந்து வேதாகமங்களினால் துதிசெய்து கண்களிலே இடைவிடாமல் ஆனந்த வெள்ளத்தைப் பெருக்கி மனமானது அனலிறபட்ட மெழுகுபோல் வருகும்படினின்று ஓவென்றலறிக் கர்த்தனே! ஓ ஆண்டவனே! ஓ கிருபாநிதியே பிரமானந்த சொரூ பனே! தேவரீபாதாரவிந்தமலரினை நினைத்த அடியேனுடைய குற்றத் தைப் பொறுத்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குக் கஜானனமூர்த்தி நீபையுற்று, அன்பனே! எவரெவர் என்னைத்த

வடிவமாக நம்மைத் தியானிக்கின்றார்களோ, அவரவர்கட்கு அந்தந்த வடிவமாகத் தரிசனந்தந்தருளுகின்ற பெருங்கருணையினையுடைய யாம் நட்டரைச் சங்கரித்தற் பொருட்டும், சிட்டரைப்பாதுகாத்தற் பொருட்டும்; இப்போது அதிதிக்குப் புத்திரராக அவதரித்து மகோற்கட ரென்னுந் திருநாமத்தை வகித்து இங்ஙன மிருக்கின்றோம். நீரம்மைச் சந்தேகங் கொண்டதினாலே மூவுலகத்தாருங் காணுதற்கரிய திருவுரு வத்தை முன்போல உன்னெதிரிற் காட்டினோம். ஓ பத்தியிற் சிறந்த தவமே ! உனக்குவேண்டிய வரங்கேட்கள் தருகின்றோ மென்று திருவாய் மலர்ந்தனர் உடனே புருசுண்டிமுனிவர் பணிந்தெழுந்து, திருகாங்கேயுஞ் சிரமேற்கூப்பி ! ஓ பரம்பொருளே ! தேவரீரை யான் எக்காலத்தில் எந்த உருவாய்த் தியானிக்கின்றேனோ அக்காலத்தில் அந்த உருவாய அடியேற்குத் தரிசனம் கொடுத்தருளி எப்போதும் தேவரீருடைய திருவடிகளிற் சலியாத பத்தியுங்கொடுத்து அடியேன் தெரிபாடையினும் பிழைசெய்தனையினும் அதனைப் பொறுத்தருளல் வேண்டும். அன்றியும் அடியார்கள் விரும்பிய காரியங்களை யெலாம் விக்கினமில்லாமல் நிறைக்கின்ற படியால தேவரீர் ஆசாரபூசித்ரென்னு மோர் திருநாமத்தையுந் தரித்தருளல் வேண்டும். இவையே யான் தேவரீரிடத்தில் வேற்றுக்கொள்ள விரும்பிய வரங்களென்று பிரார்த்தித்தருளினர். அசமுகக் கஜானனமூர்த்தி மனமகிழ்ந்து அவர்விழைந்தபடி வரங்கொடுத்தருளி அறுவகைச் சுவையோடுங்கூடிய நானுவிதவுண்டிகளையும் அமுதினியுடன் கூடினதாய் போசனஞ் செய்து தாமுமவருமாகப் பலமுறையும் சபாமண்டபத்தில்வந்து வீற்றிருந்தனர். பின்னர், அரசன் ஆனந்தக்கடலில் மூழ்கினவனாகி இத்தினம் திரிமூர்த்திகளாலுங் காணுதற்கரிய திவ்விய தரிசனத்தை எளிதிற் கிடைக்கப்பெற்றோம். இதைவிட மேலானபாக்கியம் நமக்கென்ன விருக்கின்றதென்று சுவாமியையும் அமுதினிவரையும் பலமுறை பணிந்தெழுந்து அஞ்சலியஸ்தனாய் நின்றனன். அசசபையின்கண் வந்திருந்த அங்கத்தினரும் அவ்வாறே பணிந்தெழுந்து வேண்டிய வரங்களைப் பெற்றுக்கொண்டு தத்தமிருக்கையை யடைந்தார்கள். அதற்குமேல் புருசுண்டிமுனிவர், மகோற்கட மூர்த்தியினிடத்தில் விடைபெற்றுச் சென்று தண்டகவனத்திலிருக்கின்ற தமது ஆச்சிரமத்தை யடைந்து நித்தியானந்தசுகத்துடனேகூடி வாழ்ந்திருந்தனர்.

அத்தினம்போய் மறுதினங் காலையில் அரசனவன் சகலபரிசனங்களும் புடைசூழ தமது சபாமண்டபத்திற் கொலுவிருந்தனன். அப்போது எல்லா மாயைகளினும் வல்லமைகனென்னும் ஓரவுணன்

சோகியனுகவடிவங்கொண்டு வலதுகையிற் செபமாலிகையும், இடது கையிற் புத்தகமும் மேலந்திவந்து அரசனெதிரிற்போய் நின்றனன். அவனுக்கு உடனே அரசன் வணக்கஞ் செய்து ஓராசனத்திலிருத்தி, ஐயா! நீபார்? இங்குவருகாரிபம்யாது? உமது கையிலிருக்கின்றது என்ன புத்தகமென்று அண்மிபோடி வினவினன். அதற்கு வஞ்சகவடிவங் கொண்டு வந்தசோகியன், தான் கருதிவந்த காரிய நித்தியாகுமென்று நிணைத்தவனும் அண்ணலே, நாம கர்தருவலோகத்திலிருக்கின்றன சோகியன். நமது ஆகுயிலிருக்கின்றது சோதிடசாத்திரம். நாம் ஒருபய ணக்குறித்தன்று இங்ஙனம் வந்தது லோகோபகாரமாகவே இங்ஙன ம் வந்தோம். யாவரொருவர்தமக்கு ஈட்டிப்பொருளாக இதத்தைதீதே வார்களோ அவர்களை உலகங்கட்கெல்லா மிதஞ்செய்வார்கள். அதி பாலப் புவிபாருநும் மன்னவர்கட்கு இதமின்மையாயின், அவனுரு கையில் அடங்கிய வுலகங்கடகு மிதமின்மையா மாதலால், உமக்கு இதமான காரியங்களைச் சில சொல்லுகின்றோம். அதை நீர் ஊக்கத் தோடும் ஞாபகத்தோடுங் கேட்கவேண்டும். நமக்கு எப்போதுந் திரி காலக்கியானமுண்டாகின்றதுபோன்றபோயிருக்கும் அதை நீர் அறிவேண் டில் முன்னடக்கதும், இப்போது நடக்கின்றதும், இனி நடக்கப்போ கின்றதும் யாம் சொல்லுகின்றோங்கேள், ஓ தோன்றலே! நெருப்பை மின்மினிப்பூச்சென்று கருதி அகண்டதன தகண்டி னுள்ளே வைத் துக்கொண்டு நாகமடைகின்ற சூருவிபம்போல நீர் ஓர் பிராமணப் பிள்ளையைக்கொண்டுவந்து இப்பட்டணத்தில் வைத்திருக்கின்றீர் அதனல் அளவற்ற இடையூறுகள் நேர்ந்ததைப் பார்த்திருக்கின்றீர். அப்பிராமணச் சிறுவன் விக்கினராசனுகலா லே அநேகவிக்கினங்கள் அடிக்கடி நேர்ந்துகொண்டேயிருக்கும். ஓர் விக்கினமுமில்லாதவு மக்கு அவன் இங்கிருக்கின்றவரையில் விநியாகதை விட்டொழியாத காற்றுபோல. விக்கினம் ஒழிகிறதில்லை. நீர் பூர்வத்திற்செய்த நல்விப்ப யனலே இதுவரையில் வந்த விக்கினக்களனைத்து மொழிந்ததோயின. இனி விளையப்போகின்ற விக்கினங்கள் வெகு விபரீதங்களே விளைவிக்கு மேயன்றி வீணிற்போவதில்லை ஆதலால், அபிராமணச்சிறுவனேவிரை வில் இப்பட்டணத்தினின்றுங் கொண்டுபோய்க் காட்டிற்சேர்த்திடு வீராயின் உம்மிடத்திலே நீராத கோபத்தை வைத்திருக்கின்ற சராக் தகனும் முன்போல அன்புவைத்திருப்பன். அப்பால் யாதொன்றிற் கும் பயமில்லை. இஃதன்றி, இன்னமும் ஒன்றுசொல்லக்கேள், அசுத் தன்-ஆசுசன்-கபடன்-அதிசூரன்-தனக்கு மிக்கவன் என்னும் இவ் வைவருக்குள் ஒருவனுடைய சினேகமிருந்தாலும் கர்தருக்களில்

லாமலே கேடுவிளையும். இவ்வைவருள் அப்பிராவணச்சிறுவன் உமக்கு மிக்கவன். அன்றியும், அதிசூரன் இவ்விராண்டு மாயிருத்தலினல் நீர் உயிர்தப்பிப்பிழைத்தலரிது. பிழைக்க வேண்டுமீராயின் இக்கிமி ஷத்தி லவனுறவை பொழித்தல்வேண்டும். இதுகாறும் உமக்குயாம் உண்மையான காரியங்களைச் சொன்னேமேயன்றி வீணனகாரியங் களைச் சொல்லவிலலை அறிந்தவர்கள் அறியாதவர்களுக்கு அறிவிக்க வேண்டுவது நீதியாகலால். சகலமும் அறிந்தயார் நீர்மனதறிந்து மாயாதவண்ணம் மேலாகபகராமாகச் சொன்னேமென் றன்றனன். அவையணைத்தையும் அரசன்கேட்டு அவன் சொன்னதிலலாம் வஞ்ச மாகுமென்று தனக்குள் நிச்சயித்து மேலுக்கு ஒப்புக்கொண்டவன் போல அப்பாதகனைபபார்த்து, டீ சோதிடபண்டிதனே! நீர் கூறிய தன்னத்தும் உண்மை யே, அகாலமை நீரறிவித்துக்கொண்டீபாய்க் காட்டில் விடிமென்றுசொலலி அருகிருந்த உழையர்களைகூவி இவருக்கு நீக்கள் வீதியில விடையடிக்கொண்டிருக்கின்ற மகோற்கட வைக்காண்பித்து அவரை இவர் அழைத்துக்கொண்டுபோமபோழுது யாவரேனும் தடுத்தால் அவர்களை விலக்கித் தடையில்லாமல் இவர் அழைத்துக்கொண்டீபோம்படி செப்பிவரத் கடவீர்களென்று கட் டளையிட்டனன். அக்கட்டளையை உழையர் வாய் புதைத்துக்கேட்டு சோதிடரையழைத்துக்கொண்டுசென்று குகையிலிருக்கின்ற சிங்கத் தை யாணைக்குக்காட்டி மாறுபோலத் தரிதரனி முழுவதும் புழுதி படும்படியாக வீதியில விடுபாடலிசெய்திருக்க மகோற்கடமூர்த் தியைக் காண்பித்தார்கள்.

உடனே மகோற்கடமூர்த்தி அச்சோசிய னருகில்வந்து அவ னுடைய வஞ்சகத்தைத தாமறிந்துகொண்டு, ஐயா! அண்டையி யில் ஓர் சோசியர் அரசனிடத்தில் வார்த்தையாடிக் கொண்டிருக் கின்றனரென்று சிலர்சொன்னர்கள். அவர் நீதானே வென்றுசொல் லித் தமது திருமேனி முழுவதுங் குலுங்க நகைத்துக் கேட்டனர். அவ்வளவில் அவ்வஞ்சகனுடைய மனமானது கலஙகி, தான்தானென் று சொல்லினன், அதற்குமேல் மகோற்கடமூர்த்தியானவர் இப்பட் டணத்திற்கு என்ன இடுக்கண் சம்பவிக்க விருக்கின்றது எனக்கென்ன அபாயம் நேரிடும் அவைகளை உமது கூர்மபுத்தியினு லாராய்ந்து சொல்லவேண்டுமென்று கேட்டனர், அக்கேள்விக்கு அப்பாதகன் பயந்து மனமும் உடலும் நடுக்குற்றவனுகி, அந்நடுக்கம் அக்கிழப் பருவத்தாலும் வாதரோகத்தாலும் உண்டானதுபோல வேறு காட்டிச் சமாளித்துக்கொண்டு சுவாமி கேள்விக்கு உத்தாரஞ் சொல்

லத்துணிக்தமைந்தனே! இப்பட்டனத்திற்கு யாதேனுமினும் இருட்டினுலும் சலத்தினுலும் தப்பா திடிக்கனுலும் இதுண்மை, ஒரு வேளை இம்மூன்றுக் தப்பினுல் அளவற்ற அபாயங்கள் ஒருவருக்குக் தெரியாமல் வரும் உனக்கு வரவிருக்கின்ற அபாயத்தினையுஞ் சொல்லுகின்றேருங் கேள் முதல் கிணற்றில் விழுக்திறாகது போவாய்; அது தப்பினுல் விஷக்தின்று சாவாய், அதற்குக்தப்பினுல் பின்னர் அதிக அபாயங்கள் கேரிடும்; இவையனைத்தும் காலுகு தினத்திற்குள் உண்டாகும், அந்த காள்குதினமும் என்பின்னுகக் காட்டிற்கு வந்திருப்பையினில், இவ்வபாயங்கட்கெல்லாங் உன்னைப் பாதுகாத்து, மீட்டும் இப்பட்டனத்திற் கழைத்துவந்து யதார்ப்பிரகாரம் சுகமாயிருக்கவைப்பேன். என்று சொல்லினன். அவைபனைத்தையும் மகோற்கட மூர்த்திகேட்டு, ஐயா! நீர் சொன்னகனைத்தும் உண்மையோ; காளும் இப்போதே உம்மோடே காட்டிற்கு வருவேன்றேனென்று சொல்லி அவனுக்கு வெகுமானஞ் செய்பவர்போலக் தமது மார்பிலணிந்திருக்க முத்துமாலையைவாங்கி அவ்வஞ்சகனுடைய கழுத்திலே போட்டனர். அம்மாத்திரத்தில் அம்முத்துமாலையினின்றும் அழற்சுவாலையுண்டாகி அப்பாதகனைச் சுட்டு நீருக்கியது. அவ்வற்புதத்தை யாவருங்கண்டு ஆச்சரியமடைக்காகள்.

அதற்குமேல் கூபனென்றுங் கந்தனென்றுஞ் சொல்லுகின்ற இரண்டவுணர்களும் நூர் பழங்கினைருகவுந் தவஸ்யாகவும் உருவமெடுத்துக்கொண்டிருந்தார்கள். அதை மகோற்கடமூர்த்தியறிந்து அப்பட்டணத்திற்கு வெளியில் எங்குக் தேன்கூடுகள் கட்டப்பட்டிருக்கின்ற தோப்புகளில் விளையாடச் செல்லுகின்றவரைப்போலக் கம்மோடிருக்கின்ற நிருவர்களையெல்லா மழைத்துக்கொண்டுசென்று அக்கிணற்றினுக் கருகேபோய் விளையாடிக்கொண்டிருந்து, பின்பு அதனையெட்டிப்பார்த்தனர். கற்றப்பிள்ளைகளும் எட்டிப்பார்த்து இதனுழத்தை யறியவேமென்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு, ஒவ்வொருவராய் அக்கிணற்றிலெயிறங்கிச சோதித்தது ஒருவரானும் ஆழத்தினளவு காணமாட்டாமல் மீட்டும் வெளியில்வந்து தலைகவிழ்ந்திருக்கின்ற மகோற்கட மூர்த்தியைப்பார்த்து, நீ யேதோ சில சாமர்த்தியங்களையெல்லாஞ்செய்கின்றனையே! இக்கிணற்றில்மாத்திரமிருக்கு அதனடிப்பரப்பில் மணலே கின்கையிலெடுத்துக்கொண்டு வருவையாயின் நீ யெல்லா வித்தத்தினுஞ் சமர்த்தன்தானென்று சொன்னர்கள். அதற்கு மகோற்கடமூர்த்தி புன்னகைகொண்டு தமதுஇளமைப்பருவத்திற்குத் தக்கபடியே அதற்கிசைந்து, ஆ! ஆ! இதோ மணலே அள்ளிக்கொண்டு

வந்தேன் பாருங்களென்று சொல்லி ஞெரேலென்று கிணற்றுக்குள்ளே குதித்துப் பாய்ந்தனர். அக்நிமுஷத்தில் கிணறுயிருந்த அவுணன் விரிந்து பெரிய கடல்போலே யம்ர்ந்திருந்தனன். அதற்குள்ளே கவலையாக அடங்கியிருந்தவன் அவ்வநுவிற்றானே பெரிய பர்வதம்போல் உலாவியிருந்தனன். உள்ளேகுதித்துப்பாய்ந்த மகோதரன் மூர்த்தியானவர் விரைவில் அதனுழுதினளவையறிந்து தண்ணீர் நுரைத்துக் குமிழி யெழும்படியாக அடிப்பரப்பினது மணலையள்ளி யகரத்தோடு வெளியேவந்து அதனைத் தமதுகூட்டாளிபிள்ளைகளுக்கெதிரிலெறிந்து எங்கும்பரந்து ஆரவாரித்திருக்கின்ற சலத்தில் விளையாடிக்கொண்டிருந்தனர். அப்போது மலைபோலப் பரிந்திருந்த மண்டுகமான மகோதரன் மூர்த்தியினுடைய பாதத்தைப் பிடித்து மிகவும் கொடிதாக அழுத்திக் கடித்தது உடனே சுவாமியானவர் அமமண்டுகத்தினுடைய கால்களிலொன்றைப் பிடித்திழுத்துக் கரையிலே யெறிந்தனர் அம்மாத்திரத்தில கிணருகளிருந்த அருணனும் தவளையாக விருந்த அவுணனும் அவ்வநுவகளினமாறித் தங்கள் சுயரூபங்களைக்கொண்டு பூமியிலே மலைபோலேவீழ்ந்து இறந்துபோனார்கள். இவ்வற்புதத் திருவிளையாடலை அரசன் முதலாயினோர் கேடடு ஆனந்தமடைந்தார்கள்.

இவ்வாறு நராந்தகனு லெளிய அவுணவீரர்கள் யெல்லாம் தனியாகவும் கூட்டமாகவுஞ்சென்று மகோதரமூர்த்தியால் அழிந்து போசு, அதை நராந்தகன் கேள்வியுற்றபிருந்த கோமுங் கவலையுங் கொண்டவனாகி மீட்டுஞ்சிறிது தீதநிதானத்தைக்கு இளைபவனுகிய பதங்காவர னென்பவனுக்குப் புத்திரர்களாகி அம்பா, ரன்-அந்த காசுரன்-துங்காசுரன்-என்னும் பெயர்களை வகித்திருந்த தனது தம்பிமார் மூவரையும் வரவழைத்து அவர்கட்கு அவற்ற வெகுமதிகளைச் செய்து அகத்திற்கொண்டிருக்கின்ற கவலையானது முகத்திலுந்தோன்றும்படியாக அவர்களைப் பார்த்து அன்பிற்சிறந்த இளையாரே! நீங்கள் குழந்தைப் பருவத்துளளபோதே தேவர்களெல்லாங்கண்டு நடுங்கும்படியாகத்தசையாகளை யெல்லாஞ்சென்று கலக்கினீர்கள் இரண்டுபேல் மூளைப்பதற்கு முன்பே பாதாளலோக முழுவதுங் கொள்ளையிட்டு அங்குள்ளவர்களை யெல்லாஞ்சிறையில் வைத்தீர்கள். மங்கையர் மையல்செய்யற் கிடமில்லாத பிள்ளைபைப் பருவத்திறருனே திரிலோகங்களையெல்லாம் வென்று வலம் வந்தீர்கள், இப்போது சகலகலைகளையும் கற்றிருப்பதன்றி, எல்லாவிதத்தினும் பராக்கிரமசாலிகளாயிருக்கின்றீர்கள். உங்களுக்குச் சமமகாதகாரியம் எந்த உலகங்களி

லிருக்கின்றது. தருப்பையும் மாவிலையும் உலர்ந்த சமிதைகளையுங் காட்டிற் பொறுக்கிவந்து ஓளபாசனஞ் செய்து கொண்டிருக்கின்ற காசி பனுக்கு ஒருமகன் பிறந்திருப்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? அவனை நம்மவர்களே யெல்லாந் திருமபாக மதித்து அளவற்ற அன்பை மாய்ந்தனன். அவன் இப்போது காசிப்பட்டணத்தில் விருக்கின்றனர்கள் விரைவில் அப்பட்டணஞ் சென்று அப்பையபலி எவ்வித்தத்தினாலுங் கொன்றவரைக் கடவீர்களென்று கட்டளை பிட்டான். அவ்வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் / அம்மூவரும் அவனைப் பணிந்து தொழுந்து, அண்ணா! தேவரீர் அடியேங்கட்குத் தமையனுக விருப்பதினாலும், எங்களை முற்றினுங் காப்பாற்றவதினாலுமன்னை இமைகள் காப்பதுபோல எங்களையே நினைத்து எங்களுக்கேற்ற காரியத்தைச் செய்ய கட்டளையிட்டீர்கள் அன்றியுந் தேவரீருக்குச் சிறிய தந்தையாகிய எங்கள் பிதாவானவர் நேற்றையதினம் அப்பையலிச் சுமந்து காற்றுக்கு சென்றலித்தனர். அதற்கப்பையல் அவரை வீணைகொன்றன். அக்கொடுமையை நினைந்துந்தோறும் உள்ளம் பகிலென்பு பதைக்கின்றது ஆகலால் அப்பகையை யாங்களே போய் முடித்து வருகின்றோம் இத்தனஞ்சென்றால் வேறேதானில்லை யென்று சொல்லி ஆக்கிரமித்தெழுந்தார்கள். இவ்வாறு ஆக்கிரமித் தெழுந்த அம்மூவரும் உடனே காசிப்பட்டணத்தை யடைந்து அவருள் அந்தகாசுரனென் பவன் சூரியனுங்கண்டு ஒளிக்கும்படியாக ஓர் கொடிபபோதில் எல்லாவுலகங்களினும் பகற்போதை மறைத்து இருள்மூடச் செய்தனன். உடுக்களுஞ் சந்திரனுங் காணப்படாத அம்மாய விருளானது இரவைப் போலிருண்டு போனதால், கைகட்குங் கண்கள் தெரியாமல்போயின. அப்போது பிறபல விவகாரங்களிலிருந்த யாவரும் திடீரென்று வந்த அவ்விருளுக்குப் பயந்து சூரியனுக்குஞ் சந்திரனுக்கும் இது நிகாள் நேர்ந்ததோ? உமாதேவியார் சிவபிரானுடைய விழிகளே மீட்டுந்தமது கரத்தினுல் மறைத்தாரோ: அல்லவெனில் விந்தபர்வதமானது முன் போல் வளர்ந்ததோ? மற்றை யாதுகாரணமோ? நடுப்பகலிலே கல்வியற்றவர்களுடைய மனத்தினு மிகுந்த இருளானது ஞங்கும் மூடிக்கொண்டதே யென்றுமுடிவுசெய்தார்கள். அந்தணர் - அரசர் வைசியர் சூத்திரரென்னும் நால்வகை வருணத்தார்களுந் தத்தந் தொழில்கள் நடைதேறுமைக்கு வருந்த முற்றார்கள். மைந்தர் - சோம்பர் ஏவலாளரென்னு மிவர்கள் மனக்குழப்பமில்லாமல் அவ்விரவைமெச்சி ஆனந்த நித்திரைசெய்தார்கள் காமுக ராயினோர் மிகுந்த சந்தோஷத்தோடு மங்கையரிடத்திற் பற்பல கலவிகளைச் செய்து கொண்டு இன்

பவெள்ளத்தி லழுத்தினர்கள். அவ்விருளுக்குப் பயந்து கலவிக்கிண
ங்காத சில ஸ்திரீகள் தீமுதலிய விளக்கங்களைத்தங்கடங்கள் மனைகளி
ல்வைத்து வருத்த மூற்றிருந்தார்கள் தொழில்மூலமாகச் சென்ற யா
வருந்தத்தம் பதிகளைமீட்டும் வந்து சேரமாட்டாமல் எவ்வெவர் எங்கி
ருந்தார்களோ அவ்வவர் அங்கங்கே யிருந்து கவலையுற்றார்கள் இரை
தேடிச்சென்ற பறவைகள் முதலிய யாவும் இராக்காலத்தில் வந்து ஒடு
ங்குகின்ற கத்தம் மெழில்களையுங் குகைகளையுங் காணமல்வருந்தின,
இவ்வாறு சகல ஜீவான்மாக்களுந் தன்பமடையும்படியாக அந்தகாக
ரன் எங்குமிருளாக மூடிக்கொண் டிருக்கத் துக்காசுர னென்பவன் த
னது மாயையினல் அக்காசிப்பட்டணத்தைச் சுற்றிப் பத்தியோசனை
ப்பரப்பில் எங்கும் போகவும் வரவும் வழியில்லாமல் மலையாகச்சுற்றி
வளைத்துக் கொண்டனன். அம்மலையின்மீது சோதிமரம் சோதிக்கொ
டி சோதிப்புல் சோதிமணி என்னு மிவைகள் அளவற்றனவாய் சோதி
யே வுருக்கொண்டதுபோலப் பிரகாசிக்க அதனை யாவருங்கண்டு
ஈதென்ன அதிசயமோ தெரியவில்லையே ? இப்பட்டணத்திற்குச் சமீ
பத்தில் கவர்ந்தின முகலானவைகளா லுண்டான பிரகாசத்துடனே
யானை - சிங்கம் - புலி முதலியவைகளால் உலாவப் பட்டிருக்கின்ற
ஓர்மலை ஆகாயகங்கை யளாவவுயர்ந்து எங்கும் வளர்ந்திருக்கின்றதே
இதற்குமுன் யாரும் கண்டதில்லையே ? யென்று மனங் கலங்கினர்கள்.
இப்பால் அம்பாசுரன் அப்பாவகத்தின்மீது தவழ்கின்ற மேகவுருவா
கி நெருப்பைப்போல மின்னலைளீன்றி ஆகாயமெங்கும் பரந்து மூடி
க்கொண்டு விபரீதமான இடிகளை யுண்டாக்கி சமுத்திரமே ஆகாயத்தி
லெழும்பி நதிகளோடு தாரையாக வீழ்வதுபோல அளவற்ற வருஷங்க
ளைச்சொரிந்தான். அவ்வருஷ தாரைகளினுலே பாறைகளோல்லாங்கிழி
ந்தும், மாடமாளிகை கூடகோபுரங்களைத்து மிடிந்தும், அங்ஙகரமு
ழுவதும் அழிந்து போயின உடனே பிரளய காளத்தில் சத்த சாகர
ங்களும் ஒன்முக ஆகாயத்தை யளாவப்பொங்கி சக்கர வாள்கிரியைச்
சேர்ந்து நாசஞ் செய்வதுபோல துங்காசுரனுல் வளைத்துக்கொள்ளப்ப
ட்ட காசிப்பட்டணத்தின்மீது அம்பாசுரனுல் பொழியப்பட்ட வருஷ
ங்கள் அப்பட்டணம் முழுதும் பெரும்புறக் கடல்போல நிரம்பியிருந்
தன. அக்கொடுமையை மகோற்கட மூர்த்தியறிந்து பத்தியோசனை
யுயரத்தில் எண்டிசைகளையும் பரந்தோடும்படியான கணைகளோடுங்கூடி
எண்ணற்ற விழுதுகள் நிலங்கிழித்துப் பாய்ந்திருக்கின்ற ஓர் ஆலமரத்
தை யுண்டாக்கித் தாமதற்கேட்டபடி ஓர்பெரிய பறவையுருக்கொண்டு
அம்மரத்தின்மீதேறி யுட்கார்ந்து இரண்டு சிறகுகளையு முதறினர். உட

னே. அவ்விரண்டு சிறகுகளினின்றும் உண்டான காற்றினால் மேகங்க
ளெல்லாம் பஞ்சிற்பொடர் தூனியைப்போலக்கலைத்து சுற்றியிருக்கின்ற
மலைகளிலே யொதுங்கின. பின்னர் அம்மலையும் இடிந்து பொடிபட்டு
ப்போயிற்று அப்போது மகோற்கட மூர்த்தியானவர் தமது துதல்வி
ழியைத் திறந்தருளினர். அந்நுதல் விழிபினின்றும் உண்டான தீயினா
ல் இருளெல்லா மொதுங்கிப் பிரவாகமாய் நிறைந்திருக்கின்ற சகல மூ
ழவதும் வறண்டு போய்விட்டது. இவ்வாறு இருளாகவும், மலையாக
வும், மழையாகவும் வந்து பலகொடுமைகளைச் செய்த அவுணபாதகர்
களுடைய மாயைகளை யெல்லாம் எமது மகோற்கட மூர்த்தி கொண்
டருளிய பறவையின் காற்றினு லழிக்கும், அப்பாதகர் அப்பறவையி
ன் வலியை அறிவோமென நினைத்து அம்மூவரு மொருவன் மற்றோ
ராலமரமாயினன். ஒருவன் கண்ணியாயினன். ஒருவன் வேடுவனுகி
முன்னருண்டான ஆலமரத்தின்கணுள்ள பறவையை போட்டினன். உ
டனே பறவைவேடங் கொண்டிருக்கின்ற மகோற்கட மூர்த்தியானவர்
அவ்வேடனைத் தமதுமூக்கினுற்கவ்விக்கொண்டு சென்றுவேறுபுண்டா
யிருக்கின்ற ஆலமரத்தில் பாய்ந்து, அதிலிருக்கின்ற கண்ணியோடி அ
வ்வாலமரத்தைக் காலினுற் றாக்கிக்கொண்டு ஆகாயமார்க்கமாய்த்
தேவலோகம் வரையிற்சென்று அங்கிருந்தபடி அவ்வால மரத்தையுங்,
கண்ணியையும், வேடனையும பூமியிலே விழும்படி விடுத்தனர். அம்மா
த்திரத்தில் அம்மூவரும் உயிர்நீங்கி அவர்களுடைய சரீரம் மூன்றும்
அவர்கள் தாயாகிய பிரமரை யென்பவளுடைய வீட்டுவாயலில் வீழ்ந்
து தொறுங்கின. இவ்வாறு பிரேதமாய் தொறுங்கி வீழ்ந்த மூவரை
யும் அங்கிருந்த சிலசேடியர்கண்டு திடுக்கிற்று உல்லாசமாய் உலாவிக்
கொண்டிருக்கின்ற பிரமரை யிடத்திலோடி அம்மா! உமது குமாரர்க
ள் மூவரும் பிரேதமாகி நமது வீட்டு முன்றிலில் வீழ்ந்திருக்கின்றன
ரென்றி சொன்னர்கள். அதைக்கேட்ட மாத்திரத்தில பிரமரை யென்
பவள் நடுக்குற்று நாமிதுவரையில் ஒரு குற்சகுனங்களையுங் காணு
திருக்க நமது புத்திரர்கள் எவ்வாறிறப்பார்களென்று வகைகளை நெறித்
துக் கொண்டோடி முறறத்திலே தொறுங்கி வீழ்ந்திருக்கின்ற மூன்று
பிரேதங்களையும் பார்த்து நமது பிள்ளைகளே யென்று நிச்சயித்து நெடு
நேரம் மூர்ச்சித்துக்கிடந்து, பீட்டுந் தெளிந்தெழுந்து தனது கையி
னல் மக்களா! மக்களா! வென்று மார்பிலறைந்து கொண்டு கூந்த
லானது நாற்றிசைகளினும் விரிந்து பூமியை வரும்படியாகப் புரண்டு
புரண்டு அழுதனள். அப்போது அருகிருந்த சேடிகள் அவளைத்தே

ற்ற, ஒருவாறு தேறியெழுந்து, அதிக கோபா வேசத்தினைக்கொண்டு என்பிள்ளைகளை எவன் கொன்றானே அவனை யான் கொல்லாவிட்டால் அக்கினி சாட்சியாக விவாகஞ் செய்து கொண்ட கணவனுக்குத்து ரோகஞ் செய்தவள் போகின்ற பாதகம் யாதோ ? அப்பாதகத்தில் யான்போகக்கடவேனென்று சபதஞ் செய்து கொண்டு, இனி கொல்லப் பட்ட என் மைந்தரோடு கொன்றவனையும் ஒன்றாக வைத்துத் தகனஞ் செய்வேனையன்றி இவர்களை மாத்திரந் தகனஞ்செய்யேனென்று சொல்லி அந்நாள் வருகிற வரையில் தனது மக்களாகிய மூன்று பிரேதங்களையும் தயிலத்திலிட்டுக் காப்பாற்றும்படி சேடியர்கட் குத்தரவு செய்து உடனே சில தூதர்களைக்கூவி எனது பிள்ளைகளைக் கொன்றவன் எவனோ ? அவனை விரைவில் அறிந்துவரக் கடவீர்களென்று பல வெகுமதிகளை அவர்கட்குக் கொடுத்தனுப்பி பின்னுஞ் சில தூதர்களை அழைத்து அவ்விபத்தைத் தனது நாயகனாகிய பதங்காசுரனுக்கு அறிவித்துவருமாறு கட்டளையிட்டனள். அவ்வாறே அவ்விருவரு வகுப்பினரும் தத்தமேவலை நோக்கிச் சென்றார்கள்.

இவரிவ்வாறாக, பறவைரூபங்கொண்டிருந்த மகோற்கட மூர்த்தியானவர்மீட்டும் பழைய வடிவத்தினைக்கொண்டு அந்தகாசுரன் முதலிய மூவராலழிபட்டிருக்கின்ற நகரத்தை தமது அருட்கண்ணுற்பார்த்தருளினர். உடனே அந்நகரமானது முன்னிலும் மேலான விம்மிதங்களை வாய்ந்து பிரகாசித்தது. இறந்து கிடக்கின்ற உயிர்களனைத்தும் மீட்டும் உயிர்பெற்றெழுந்து தத்தமிருக்கையை யடைந்தன. பின்னர் மகோற்கட மூர்த்தியானவர், அரசன்முதலிய யாவருந் தம்மைப் புடைசூழ்ந்து துதிசெய்யும்படியாக அரண்மனையின்க னெழுந்தருளி யிருந்தனர்.

முன்னர் பிரமரை பென்பவள் ஏவலால் இரண்டு பிரிவாகச் சென்றதூதர்களில் ஒரு பிரிவார், நரகாதனுடைய தூதர்களால் பதங்காசுரனிறந்துபோன மையைக்கேட்டு அசுரசெந்திரை அவளிடத்திற்சென்றார்கள். அதைக்கேட்ட மாத்திரத்தில் அவள் மீட்டும் மூர்ச்சையாகி வீழ்ந்து பின்னர் தெளிந்தெழுந்து அளவற்ற துக்கசாகரத்தில் மூழ்கினவளாகி, ஐயையோ ! மிக்க பராக்கிரம சாலிகளாகிய எனது பிள்ளைகளிறந்துபோன தல்லாமல் என் பிராணநாயகரும் இறந்து எனது யிரைவாட்டினரோ வென்று புலம்பி அழுதுகொண்டிருந்தனள். அச்சமயத்தில் மற்றொரு பிரிவார் விரைந்துவந்து அம்மா ! உமதுகுமாரர்கள் காசிராசனிடத்திலிருக்கின்ற ஓர் பிராமணப் பிள்ளையாலிறந்து போனார்கள். உமது கணவரும் இன்னு மனவற்றபேரு முவனுற்றனிற்

ந்துபோயினனென்று சொன்னார்கள். உடனே பிரமரையானவள் அளிந்த கனியிற்பட்ட கடுங்காற்றைப்போல மனந்தளர்ந்து ஆ ஆ அ, ஆ, நன்றுபிருக்கிறது நன்றுபிருக்கிறது அவுணநடைய பராக்கிரமமெல்லா மிவ்வாறு நசிக்குமா? ஓர் பிராமணப்பிள்ளையால் நமது கணவரும் பிள்ளைகளும் வீணபவீரர்களும் அழிந்தார்களென்றால், இதைவிட அவமானம் நமது குலத்திற் கென்னவிருக்கின்றது. இத்தினம்யாமேன போய் அப்பிராமணச் சிறுவனுயிரைவாங்கி மடிக்கின்றேனென்றெழுந்து மேலான கீர்த்தியைப்பெற்ற அதிதியைப்போல வடிவெடுத்து சில அவுணவீரர்கள் சிடராகவும், சில அவுணமாதர்கள் சேடிய ராகவும் உருக்கொண்டு தான் கொண்ட தோலக்கிற்கேற்றபடி புடைசூழ்ந்து வரச்செய்து, கொடிய விடத்தினைக் கலக்கப்பட்டி ருக்கின்றதெ வாமிர்தத்திற்கினியான சில பண்டங்களை கையில்வைத்து பெரியோர்களுங் கண்டவுடன் வணக்கங் கொள்ளத்தக்க வேடத்தோடு காசிப்பட்டணத்திற்குச் சென்றனள். அப்பட்டணத்திலுள்ள ஆடவரும் ஸ்திரீகளும் அவளைக் கண்டவுடன் அதிதிவந்தனளென்னினைத்து ஆனந்த மபமாகி சிலர் புட்பங்களைக்கொண்டுவந்து தூவினர்கள் சிலர்பாதத்திற் சலத்தினைவிட்டுப் பூசைசெய்தார்கள். சிலர் பரிமளப்பொடி தூவினர்கள் சிலர் மாலைதரித்தார்கள், சிலர் தாம்பூலங கொண்டுவந்து கொடுத்தார்கள் சிலர் கனிவருக்கங்களைக் கொண்டுவந்து உபசரித்தார்கள். சிலர் ஆபரணங்களையும் வஸ்திரங்களையுங் தந்தார்கள். சிலர் பொன்னையும் இரத்தினங்களையும் பொழிந்தார்கள். சிலர் என்ன காட்சி கிடைத்ததென்று வியந்தார்கள். சிலர் எமது துன்பமெல்லாம்போயினவென்று நயந்தார்கள். சிலர் சனங்களை விலக்கிக்கொண்டு சென்று அருகிற் கூடினர்கள். சிலர் அவ்வாவை அரசனுக்கறிவிக்குமாறுவோடினர்கள். சிலர் பண்ணேடுங்கூடிப் பாடினர்கள். சிலர் பரதசாஸ்திரப்படியாடினர்கள். இவ்வாறு சகலரும் ஆனந்தங்கொண்டு உபசரிக்கும்படியாக வஞ்சவடிவங்கொண்டுவந்த அப்பாதகி ஞெரிலென்று அரண்மனையிற்சென்று இராஜஸ்திரீகள் வசிக்கின்ற அந்தப்புரத்திற் சென்றனள். உடனே அவ்வந்தப் புரவறையில்-காப்பாளர் அரசன் றேவிக்கறிவிக்க, அரசன்றேவி எதிர்கொண்டுசென்று தாயினுஞ் சிறந்தீர் வந்தீரோ? வாருமென்றழைத்துவந்து ஓர் தங்கச் சிங்காதனத்தின்மீது இருக்கவைத்து பாதபூசை முதலிய உபசாரங்களைச்செய்து அம்மா, முனிவருடைய துணையில்லாமல் தேவரீர்மாத்திரம் தனியே வருதற்கான காரணம் யாதென்று கேட்டனள். அதற்கு அக்கொடியாள் அவ்வரசன் றேவியைப்பார்த்து மகளே, அன்பிற்சிறந்த அரி

வைபர் ஒருகாலத்துப் புருடீனப பிருந்திருக்கினுபிருப்பர் தமது புத்திரர்களீன ஒரு கணமேமனும் பிரிந்திருக்கமாட்டார்கள் யானும் எனது மகோற்கடமூர்த்தியைக் காணதிருந்கமாட்டாமல் முனிபுங்கவரைத் தனியே வனத்தின் கண்விடுத்து வந்தேதனென்று சொல்லினள். அதை க்கேட்டவுடன் அரசன்றேவி, ஓர் சேடியைக் கூவிவீதியிலே வீனியாடல் செய்கின்ற மகோறகடமூர்த்தியை யழைத்துவாருங்களென்று கட்டளீயிட்டனள். மற்றொருசேடிக்கு அரசனீ யழைத்துவரும்படி ஆக்கியாபித்தனள். அவ்வாறே அவர்கள் அவ்வீருவரிடத்தினுஞ்சென்றறிவித்தார்கள் உடனே அரசன் மனமகிழ்ந்து அப்பாதகியிடத்தில் விரைந்துவந்து அவளுடைய பாதங்களிற் பூக்களீச்சொரிந்து பூசையெய்து இரத்தினங்கள் வஸ்திராபரணங்கள் கனிவர்க்கங்கள் முகலீயதையுறைகளீத்து, அண்ணீப அடிபேனீயு மோர் பொருளாக கினீத்துத் தேவரீர் இங்ஙன மெழுதருளினீரோ வென்று பசைசார்த்த மொழிகளினற்றுதிசெய்து அனந்தமுறை, சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, தேவரீர் அடிபேன்மீது கிருபைவைத்து இலஞ்ஞ இங்கிருும் எனது குமாரனுடைய விவாகம் நிறைவேறிய மறுநாளீக்கே உம்மையும் மகோற்கடமூர்த்தியையும் அடியே னழைத்துக்கொண்டு சென்று எனது குருசுவாமிகளிடத்தில் விசிக்கும்படி விடுத்து, மீட்டும் இங்ஙகரத்திற்குத் திருப்புகிறேன் அதுகாறும் தேவரீர் தயைவைத்திருத்தல் வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதனீ இப்பாதகியிடம்கேட்டு அரசனே! யானெரு நிமிடமேனும் மகோற்கட மூர்த்தியைபபிரிந்திருக்கேன். என்னீ எவ்வாறேரு மயக்கி அவரைபழைத்துக்கொண்டுவந்துவிட்டனீ. அது முதல் கன்றைப் பிரிந்ததலீயிற்று பசுவைப்போலத் தயங்கினேன். இனி அரைக்கணமேனும் குழந்தையைப் பிரிந்து எனது முனிபுங்கவருக்குப் பணிசெய்யும் வலியிலேன். அம்முனி புங்கவரும் அரை நிமிடம் என்னைப் பிரிந்திரார். ஆதலால் இப்போதே மகோற்கடமூர்த்தியை என்னீடங்கூட்டி அனுப்பிவிடவேண்டுமென்று கேட்டனள். அச்சமயத்தில் மகோற்கடமூர்த்தி வந்தனர். வந்தவரை அப்பாதகி எனதருமைக்குழந்தாய் வாருமென்று தழுவி விரைவிலெடுத்துத் தனது மடியின்மீது வைத்துக்கொண்டனள் அவள் வஞ்சகத்தை சுவாமியறிந்து அம்மா! எனக்கு என்னகொண்டு வந்தீனியென்றுகேட்டனர். உடனே அவ்வஞ்சகி தனது சேடியர்களிடத்திற் கொடுத்து வைத்திருந்த சிற்றுண்டிகளீவாங்கி மகோற்கட மூர்த்தியினுடைய திருக்கரத்திற்கொடுத்தனள். அவையனீத்தையும் எமதையன் விரைந்து வாங்கி வாங்கி வாய்மடித்தனர். விடங்கலஞ்திருக்கின்ற அச்சிற்று

ண்டிகளே சுவாமி வாங்கிப்புசிக்கப் புசிக்க அவைகளேச்கொடுத்தாகூ சிக்கும் அவளுக்குச் சீடாகவும் சேடியாகவும் வந்த அவுணருக்கும் அவுணஸ்திரீகளுக்கும்விட வேகங்கலிக்கேறி இறங்து போனார்கள் அவ்வற்புதத்தை யாவரும்பார்த்து ஆச்சரியங்கொண்டு முன்னர் அப் பாதகி இன்னுளென்று அறிந்துகொண்டு மகோற்கடமூர்த்தியை அள வற்றவேதாக மங்களாற் றுதிசெய்தார்கள்.

கேட்டீர்களோ சவனகாதி முனிவர்களே ! இவ்விதமாக அவுண பாதகர்கள் வஞ்சஞ்செய்த அளவற்றவக்ஷணைகளேயெல்லாம் எமது மகோற்கடப்பெருமானுரைத்து அவைகளே யவர்களுயிரோடு நாசமாக்கிய திருலீலாவிநோதங்கள் இன்னுமனந்தமுள. அவைகளே விரிக்கிற்பெரு குமாதலால், இதுகாறுஞ்சொல்லிய வளவில் நிறுத்தி மற்றொருபோது அக்காசிப்பட்டணத்திலுள்ள வீடுகள்தோறும் தாமொருவரே ஏக காலத்தில் அநேகராகி விருந்து புரிந்தருளிய திருலீலாவிநோதங்களேச்சொல் லுவோங் கேட்பீர்களாக.

ஓர்நாள் அக்காசிநகரத்திலுள்ள யாவரும் அரசனுடைய கொலுச் சபையில்வந்து மிக்க மனவருத்தத்தோடு மவுனப்பணிக்கெழுந்து ஆண்டவனே ! சகலலோகங்களுஞ் சுகமடைதற் பொருட்டுத் திருவ வதாரஞ்செய்தருளிய மகோற்கட மூர்த்தியைத் தேவரீர் இங்கதரத் துள்ளோர் யாவருங் கிருதார்த்தர்களாகும்படி அழைத்துவந்து வைத் திருக்கின்றீர் அதற்கு யாங்கள் செய்யுங் கைம்மாறு ஒன்றையுங் காணேம், பூபாலகராயினர் தம்மையடுத்த சனங்கட்குத் தீன்பங் களேப்போக்கி இன்பங்களே யூட்டுவிப்பது அவர்களுடைய கடமை யென்று சொல்லிய நீதி சாஸ்திரப்படி, தேவரீரும் அக்கடமையை அடியேங்கட்கு உண்டாக்கிப் பாதுகாத்து வருகின்றீராயினும், அடி யேங்கள் தேவரீரிடத்தில் விண்ணப்பஞ்செய்து கொள்வதற்கான ஒருகுறை விருக்கின்றது, அவ் விண்ணப்பத்திற்நுத் தேவரீர் செவி கொடுத்தருளல் வேண்டும். அதாவது; அடியேங்களுடைய வீடும் பாக்கியமும் பயனடையும்படியாக மகோற்கட மூர்த்திக்கு அமுது செய்விக்க விருப்பங் கொண்டிருக்கின்றோம். அவ்விருப்பத்தைத் தேவரீர் தயைசெய்து அங்கீகரித்து சுவாமியை அடியேங்களோடு அனுப்பல் வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்கசனவர்களேப் பார்த்து ஓ பத்தியிற் சிறந்தவர்களே ! கிருபைக்கடலாகிய மகோற் கடப் பெருமான் இப்பட்டணத்தில் வசிக்கின்ற காளெல்லாம், யா வர் சமீபத்திலிருந்து அமுதூட்டித் திருப்தியடைவதல்லாமல் ஒரு காளாயினும் அந்த மேலான மூர்த்தியையாம் பிரிந்திருக்கமனமொவ்

வோம் அன்றியும் அவருடைய இச்சையின்படியாய் அன்பு செய்து நடந்துகொள்வதையன்றி நமதிச்சையின்படி அவரை வரச்செய்வது சகுதியன்று. அவருடைய குறிப்பு உங்கள் மீதிருந்தாலும் அவர் ஒருவர் நீங்கள் பலர் ஆதலால் அக்கிருபாமூர்த்தி ஒவ்வொருமணிக்கு ஒவ்வொரு காள்வரினும் அனேகவருடஞ்செல்லும் இதனைத் தீர்க்காலோசனைசெய்யக் கடவீர்களென்று சொல்லினன். அச்சமையத்தில் மகோற்கடமூர்த்தியும் அங்ஙனம்வாது அளவற்றபேர்களால் சபை நிறைந்திருப்பதைக்கண்டு நீங்கள் யாவரும் இங்கே கூடியிருக்கின்ற காரணம் யாதென்று வினவியருளினர் அக்கிருபாவசனத்தை அங்ஙகரத்தார் கேட்டமாத்திரத்தில் உடன்முழுது மூர்மாமஞ் சிதம்பூத்து அளவற்ற களிப்பின் மூழ்கினவர்களாகி யாவரும் பணிக்தெழுந்து இருகரங்களையுஞ் சிரமேற் கூப்பினின்று ஓபரம கருணைநிதியே! ஓபக்தவத்சலனே! ஓதீனசரண்ய மூர்த்தியே! அடியேங்களெல்லாக் தேவரீருக்குத் திருவமுது செப்விக்கவேண்டி எமதாண்டையாகிய இராசாதி ராசனிடத்தில் விண்ணப்பஞ் செய்துகொண்டோம் அதற் கவர் சம்மதமாக வில்லையென்று யாவரும் ஓதினவிதமாகச் சொன்னர்கள்.

அவர்கள் சொல்லினபதை சுவாமிகேட்டு யாவரும் சந்தோஷிக்கும்படி 'சற்றேர நிதானித்து அன்பர்களே, இராசா எப்போதும் போலவே நமக்கு போசனஞ்செப்விக்கட்டும் நீங்கள் யாவரும்போயுங் களுங்கள் வீடுகள்தோறும் விருந்து செய்புங்களென்று திருவாய் மலர்ந்தனர். அத்திருவருளையாவருஞ் சிரமேற்கொண்டுசென்று அவ்வவர்களுடைய வீடுகளையும் முற்றங்களையும் வீதிகளையும் அலங்காரஞ்செய்து அவ்வவர்கட்குண்டான செல்வத்திற்கேற்றபடி விருந்து சமைத்தார்கள். இவ்வாறு யாவரும் தங்கள் தங்களுடைய வீடுகளில் தனித் தனியாய் அத்தியந்த சந்தோஷத்தோடு விருந்துசெய்துகொண்டிருக்கின்ற காளில் அந்நகரத்தில் சுக்கிலரென்று மோரேழைப்பிராமணர் நித்திய தரித்திர ராகவிருக்கும் அவரும் அவருடைய கற்பிற் சிறந்த வித்துருமையென்கின்ற பத்தினியும் மனமொத்துவினக் கினம் பிச்சையில் தங்களுக்குக் கிடைத்தமட்டும் ஒவ்வோர்திதிக்கு அமுது செய்வித்துக்கொண்டு காலந்தள்ளி வருவார்கள். அத்தினமும் பழையபடி சுக்கிலரானவர் தமது கையில் ஓர் தண்டமும் உபாதானப் பாத்திரமு மேந்திக்கொண்டு வீடுகள்தோறும் பிச்சைக்குச் சென்றனர். சென்றவர் அத்தினத்தில் ஒரு வீட்டிலேனும் ஓர் பிடியரிசியும் போடப் பெறுதவராகி வீணே பலவீடுகள்தோறும் அலைந்து திரிந்து மீட்டுத் தமது மனைக்கண்வந்து, தமது பத்தினியாகிய வித்துருமையைக்

கூவுப்பெண்ணே இது வரையில் கொஞ்சமாயேனுங் கிடைத்து வந்த தில் எஞ்சியிருப்பது புல்லரிசித் தவிடாயினும் அதனைப் பாகமாய்ச் சமைத்துவைக்கக்கடவை. இத்தினம் இங்ஙகரத்தாரெல்லாம் மகோற் கடமூர்த்திக்கு விருந்து செய்கிறார்கள். யாமும் அவருக்கு விருந்து செய்து பிறவித்தன்பத்தை யொழித்துக் கொள்ளுவோமென்றனர். அவையனைத்தும் வித்திருமைகேட்டு, சுவாமி! இங்ஙகரத்திலுள்ள வர்களெல்லாம் செல்வத்தின் மிகுந்தவர்கள். மகோற்கடமூர்த்தி யானவர் இத்தினம் அவர்கள் வீடுகள்தோறுஞ்செய்த அறுசுவை போஜங் கூடியவுண்டியை உண்ணவிருப்பது நிச்சயமே. அவர் கமது ஏழைக்குடிலுக்கும் எழுந்தருளுவரோ வென்றனள் அதற்குச் சுக் கிலர் அவளைப்பார்த்துப், பெண்ணே! நம்மிடத்திலும் அவரதுபெருங் கருணையிருக்குமாயின் வருவரென்று சொல்லித்தாமவ்விடத்தினின்று ங்கியனத்திற்குச்சென்று வன்னிப்பத்திரமும் அருகு மெடுத்துவந் தி அவற்றில் பழுதில்லாதபடி ஆய்ந்து வைத்து, கங்கையிற் சென்று ஸ்நானம் பண்ணிப் பூசைசெய்து கொண்டிருந்தனர். அவருடையபத் தினியும் எஞ்சியிருந்த புல்லரிசியையெல்லா மெடுத்து ஊராய்ந்து மிக்க பாகத்தோடு சமைத்துவைத்தனள். இவ்வாறு அகரத்தினெல் லாம் மகோற்கடமூர்த்திக்கு விருந்து செய்கிற சம்பிரமத்திலிருக்க, அதை ஈரதமுனிவரறிந்து சனகர் முதலிய முனிபுங்கவர்கட்கு அறி வித்தனர் உடனே அவர்கள் காரசனுடைய அரண்மனையை நோக்கி வந்தார்கள் அம்மாத்திரத்தில்அசனவிறைஞ்துதிர்கொண்டு சென்று அவர்களைபபத்தியோ டழைத்துவந்து தனித்தனி இரத்தின சிங்காதனங்களி லிருக்கவைத்து, பாதபூசை முதலிய வுபகாரங்களைச் செய்து, கற்பகம் காமதேனு-சிந்தாமணி- நவநிதி முதலியவைகளை யெல்லாம் அடித்தம்பருக்குக் கடைக்கண்பார்வையில் கொடுத்தருள த்தக்க வல்லபமும், மகத்துவமுடைய சுவாமிகளெல்லாம் அற்பனுகிய அடியேனிடத்தில் வந்தகாரணம் யாதோ அதனை யான்கடைத்தேறு மாறுதிருவாய்மலர்ந்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற் கம்முனி புங்கவர்கள் அவனைப்பார்த்து, ஓ லோகபால்னே! நியான சமாதிகளாலே பெறத்தக்க பேறுகிய ஓர் நிட்களப்பொருளே! உனது மனைக்கண் உலகமெல்லாம் உச்சரித்தற் பொருட்டு சகளமாயெழுந் தருளி யிருப்பதாகக் கேள்வியுற்ற யாங்கள், அதனைத் தரிசிக்கவும் அதற்குத் தொண்டுசெய்யும் பேற்றினைப்பெற்ற நின்னைக் காணவும் வந்தோமென்று சொன்னார்கள். அச்சமயத்தில் மகோற்கட மூர்த்தி

அங்கன மெழுந்தருளினர். உடனே சனகர் முதலாயினோர் சுவாமிபைப் பலமுறை பணிந்தெழுந்து வேதாகமங்களினுல் அளவற்ற தோத்திரங்களைச் செய்து, அவருடைய கிருபையைப் பெற்றவர்களாகித் தம்பதிகளைச் சேருவதற்கு விண்ணப்பஞ் செய்தார்கள். அதற்கு மகோர்கடமூர்த்தி அம்முனிவர்களைப் பார்த்து அன்பர்களே! இராசனுடைய வீட்டிலே கம்படனிருந்து சிருஙது சாப்பிட்டு பின்னருங்கள் பதவிகளைச்சேரலா மென்று திருவாய் மலர்ந்தனர் அதறகம் முனிவர்கள் மகாபாக்கியமென்று ஆனந்தித்து கர்கையில் ஸ்நானஞ் செய்யச் சென்றார்கள். அந்தரத்தின மெல்லாம் தங்கடங்கள் மணிகளி எல்லாப்போசனங்களையுஞ் சமைத்துவந்தார்கள். அபபோது சுக்கிலரென்கிற ஏழைப்பிராமணநடைய பத்தியை உலகத்திலுள்ளோர் கட்கு அறிவித்தற் பொருட்டு முன்னகாய் அவருடைய புற்கூரை வீட்டினுடைய முன்றிலின்கண எழுந்தருளி நின்றனர் அதைக்கண்டு சுக்கிலர்கண்டு எனது செல்வமவந்ததென்று ஆனந்தக்கடலாடி. ஓர்கமண்டலத்திற் சலங்கொண்டுவநது அவரது திருவடிகளின் அபிஷேகித்து, அவ் வபிஷேகித்த சலத்தைத் தமது சிரத்தின்மீது புரோட்சித்துக் கொண்டு, புறவீருளியலைக் தொலைநது, அகவிருளுந் தொலைவெய்தும்படி உளநிலுநிகொண்டு சிதலிபாற்றினன்பட்டிருக்கின்ற வேர் மணையின்மீது, எமது கர்த்தனே யெழுந்தருளச்செய்து, வன்னிப்பத்திரத்தினாலும் அபரிஞுபா திருவடிகள் குளிரும்படியாக மிகுந்த பத்தியோடு அருசித்து, வேதாகமங்களினுற் பலமுறை துதிசெய்து. வெகுநாள் பிரிந்ததை மூடாமல் அங்கங்கே சூரியகிரணத்தாற் பாயப் பட்டிருக்கின்ற ஓரறைவீட்டில் சுவாமிபை யழைத்துக்கெண்டு போயிருக்கவைத்தனர். உடனே அவர் பத்தினியாகிய வித்துப்பமை வந்து சுவாமிபையப் பணிந் தெழுந்து. தான் சமைத்துவைத்த புல்லரிசிச் சோற்றையுங் குழம்பையும் மோதகம் அப்பம் முதலியசிற்றுண்டிகளையும் ஓர் டரிகலத்தில் வைத்து ஓ கிருபாமூர்த்தியே! யேழை அடியேங்களாற் சமைத்துவைதத இவ்வுணவையையும் தேவரீர் அக்கிகரித்துக் கிருபையோடும் புசித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனள். அவளன்புக்குச் சுவாமி மனமகிழ்ந்து பத்தியோடு பரிமாறிய வுணவுகளை யெல்லாங் கிருபையோடு புசித்துக் கைபூகிமற்றோரிடத்தில் ஓர் தருப்பைச் சயனத்தின்மீது எழுந்தருளினர். பின்னர் சுக்கிலர் சுவாமியருகில்வந்து இளைப்பாறு கிறவரையில் தமது கையில் விசிறியேக்திப்பணி செய்திருந்தனர். இவ்வாறு மிகுந்த அன்போடு பணிசெய்திருக்கின்ற சுக்கிலரை சுவாமிபார்த்து அன்பனே! அதிதிபூசை செய்வாருள்,

உன்னையொப்பவர் இவ்வுலகின்கண் எவ்விடத்திலுமில்லை. நீபோய் போசனஞ்செய்து உனது மனைவியோடு மிங்ஙனம் வருகவென்று திருவாய்மலர்ந்தனர். அவ்வாறு சுக்கிலர் சென்று சுவாமி புசித் தருளிய பரிகலச் சேடத்தைத் தமதுமனைவியோடுண்டு, பின்னர் அவளுடன் மிக்க மனமகிழ்வியோடு சுவாமியிடத்தில்வந்து பணிந் தனர் பணிந்தவர்கள் மீட்டுமெழுவதற்குமுன் சதுர்வேதங்களானுங் காணுதற்கரிய கர்த்தர், தமது சுயரூபத்தை அவர்கட்குக் கடாட்சிக் கத்திருவுளங்கொண்டு, யானைவதனமும் பத்துக்கரங்களும் விளங் கும்படியாய் ஏனைய அவயங்களெல்லாம் பிரகாசிக்க இருமருங்கினுஞ் சித்திபுத்திகள் சமீபதாய்ச்சிக்கவாகன மூருது தரிசனங்கொடுத்தனர். அத்தரிசனத்தைக்கண்ட சுக்கிலரும் வித்துருமையும் அளவற்ற களிபபிலாழ்ந்தவராகி விழிகளில் ஆனந்தபாஷ்பஞ் சொரிந்து, மீட்டும் பலமுறைபணிந் தெழுந்து இருகரங்களையுஞ் சிரமேற் கூபபி அள வற்ற துதிகளைச் செய்தார்கள், அவர்களை மமதையன் கிருபை யோடு பார்த்தருளி, அன்பீர்களே உங்களுக்கு வேண்டியவரங்களைக் கேளுங்களென்று திருவாய்மலர்ந்தனர். அதற்கந்த மேல்கள். சுவா மியைத் தொழுதெழுந்து ஓ கிருபாமூர்த்தியே! அடியேங்கட்குத் தேவரீருடைய திவ்வியசரணார விந்தங்களில் இடைவிடாத பத்தியும் முத்தியுங் கொடுத்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அவ் வாறே அவர்கட்கு சுவாமிகொடுத்தருளி, இருதிறன்பேரன் முத லாயினோரும் பொறுமை கொள்ளத்தகுமாறு பாக்கியங்களை அவர் கட்குத்தந்து, மீட்டும் மகோற்கடபபிள்ளையாராகத்திருவுருக்கொண்டு அரசனுடைய மனை யின்கணெழுந்தருளினர். அப்போது முன்னரே ன்ராஜனுஞ் செய்யசென்ற சனகாதி முனிபுங்கவர்க ள் தங்கடங்கள் நியமங்களுமுடித தக்கொண்டிவந்தனர் உடனே அரசன்தனது சுற் றத்தினரை யெல்லாம் வருவித்து, சுவாமியை அழது செய்வதற் கழைத்தனன். அங்ஙகரதினரும் வொருமிக்கவகுசுவாமியையழைத் தார்கள். அவர்களை சுவாமிபார்த்து இலைஇருங்கள். இதோவந்த னமென்று திருவாய்மலர்ந்தனர். அதைக்கேட்டமாதரதிரத்தில் யாவரு மனமகிழ்ந்து தத்தம் வீடுகளை நோக்கிச் சென்றார்கள் அவர்கள் செல்லுமுன்ன ம் மகோற்கடப்பிள்ளையார் அவ்வவர்கள் வீடுகள்தோறு மெழுந்தருளி யிருந்தனர். அதை அவ்வவர்களுங்கண்டு அற்தோ? பிழைத்தனம்பிழைத்தனமென்று திடுக்குற்றெழுந்து பணிந்து மிக்க

வுள்ளன்போடு சுவாமிக்கு அமுதுபரிமாற ஆரம்பித்தார்கள். அரச னுடைய மனையிலும் எப்போதும்போலத் தாம் சனகாதி முனிவர் களும் அரசனும் அவனுடைய பந்துக்களும் தமது பந்தியிலிருந் துண்ணுமபடியாகத் திருவமுதுசெய்தனர். ஏனையர் மனைகளிலும் அந்த ஏககாலத்திற்றானே ஓர் வீட்டில்தபோலமிட்டுக்கொண்டுஸ்நானஞ் செய்கின்றவராயும், ஓர் வீட்டில் சந்தியாவந்தனஞ் செய்கின்றவ ராயும், ஓர் வீட்டில் தியானம் செய்கின்றவராயும், ஓர்வீட்டில் போச னஞ் செய்கின்றவராயும், ஓர் வீட்டில் சங்கீதங் கேழ்க்கின்றவராயும், ஓர்வீட்டில் சாட்டியம பார்க்கின்றவராயும் இருந்தனர்.

இவ்வாறு வீடுகள் தோறும் வேறுவேறுருக வேண்டியபடி லீலை யாடல் செய்து, அந்த நகரத்தின்கணுள்ள பேர்க்கெல்லாம் தமதுதிரு வருளேவழங்கி, அளவற்றபாக்கியங்களீயம் அவர்கட்குக் கொடுத் தருளினர். இவ்வற்புதக் திருலீலையாடல்களீ யெல்லாம் சனகாதிய முனிபுங்கவர்கள் பார்த்துப்பேரானக் தக்கடலிற் றிளைத்தவர்களாகிய அத்தினம் முழுவதும் மங்குனேயிருக்து, மறுநாள் முதல் அந்நகரத் தின்கண் சிற்பசாஸ்திரவிதிப்படி ஓரலையஞ்சமைத்து, அவ்வாலயத் தில் மகோற்கட மூர்த்தியினுடைய திருவுருவத்தைப் பிரதிட்டை செய்து, அம்மூர்த்திக்குத்தமது அபிதானத்தால் சனகாதிகளீசர் ரென்று திருநாமஞ்சாத்தி, அவ்வாலயத்தருகில் ஓர்தடாகந் தோடு வித்து, அத்தடாகத்திற்குக் கமலசுருண்டி யென்று பெயரிட்டு, அதில் தாங்கள் ஸ்நானஞ்செய்து, கமலசமூர்த்தியும் அத்தீர்த்தத்தால அபிடேகமாட்டி, வேதாகமவிதிப்படி பலகால் பூசித்துவந்தார்கள். அவர்களிடத்தில பகோற்கடமூர்த்திகளுக் கிருபையுண்டாகி சித்தி புத்திகள் சமேதராய் சிங்காசனமூர்த்தியாகீனமுகமும் பத்துக்கரங் களும் விளங்கும்படியாக அவர்கட்குக் காடசிகொடுத்தருளினர். அக் காட்சியைக்கண்டவுடன் அம்முனிபுங்கவர்கள் ஆனந்தக் கிடலாடி அளவற்றதுதிகளீ அவ்வேபாடுசெய்து பணிகந்தார்கள் அவர்கட்குஎன் னையுமோராடிமையாகவுடைய கமலசமூர்த்தியானவர் தவத்திலும், யோகத்திலும், ஞானத்திலும், நற்குணத்திலும மேன்மையாகக்கடவீ ரென்று வரங்கொடுத்தருளி; மீட்டுமுன்போலவே மகோற்கடமூர்த்தி யாகத் திருவுருக்கொண்டு லீலையாடல் செய்திருந்தனர் பின்னர்சனக ராதியமுனிவர் மிகுந்த அன்பினுல்சுவாமியை விட்டுப்பிரியமாட்டாத வர்களாகி, அந்நகரிற்றானே சிலகால மிருந்து சாங்கள் பிரதிட்டை செய்த கமலசமூர்த்தியை, மூற்றினும்பூசித்துத் தங்கடங்கள் பதவி களீநோக்கிச்சென்றார்கள். சனகர்முதலிய நால்வரும் பூசித்த அம்

மூர்த்தியைப் பின்னர் தேவர்கள் முனிவர்கள் முதல் அக்கரத்தி னுள்ளோர்யாவரும் பூசித்துச்சகல துன்பங்களினின்று நீக்கி, மகோற் கடமூர்த்தியினுடைய கிருபையும், அளவற்றவரங்களையும் பெற்று வாழ்ந்திருந்தார்கள்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! இது காறும் தமது அறக்கருணையால் அடியார்களுக்குப் பற்பல திருமேனிகளைக்கொண்டு செய்தருளிய திருவிளையாடலைச் சொன்னேனும். இப்பால் தமது மறக் கருணையால் கொடியவினைகளை நாசஞ்செய்து புத்தஞ்செய்த திருவிளை யாடலைச் சொல்லுகிறேன் கேட்பீர்களாக

பிரமன்வீண்டு உருத்திரனென்னும் காமங்களோப்பெற்ற திரி மூர்த்திகளாரூபமாக விளக்கிச்சாசாப் பிரபஞ்சங்களை யெல்லாம் படைத்தும் காத்தலுஞ் சங்கரித்து மிராகின்ற வேதாக மங்களாலுக் தேடிக் காண்பரிய மூலாதாரக் கடவுளென்னும் மகோற்கட மூர்த்தி யானவர், நரான்தகனை சேவப்பட்ட அவுணவீரர்களை யெல்லாம் மீட்டுந் திரும்பச் செல்லவிடாமல் சங்கரித்து வந்தபடியால், அப்பாத கன்கோபத்தக்கொண்டு, நாமனுப்பியவீரர்கள் மகோற் கடனைக் கொன்றார்களா? அல்லவெனில், மாண்டார்களோ? இது காறும் ஒருவசேனாதிபதிவீரரைக்காணேமே! இதை எவரிலிருந்து கொளள வேண்டுமென்று தனக்குள் உசாவிக்கித்து, நூலினன்றுஞ் சகலனென் றுஞ்சொல்லுகின்ற இரண்டு தூதர்களைக்கூவி, நாம்மகோற்கடனைக் கொன்று வரும்படியேவிய தூதர்களில் ஒருவசேனும் மீண்டு வரக்கா ணேம். அவர்கள் எங்கு எவ்வாறுயினரோ? அதனை விரைவிலறிந்து வரக் கடவீர்களென்றுபேவினன். உடனே அத்தூதர்கள் மானிட வலிவோடு காசிநகரத்துள்வந்து, நாரான்தகனுடைய வீரர்களையெல் லாம் • மகோர்கட மூர்த்தியானவர் ஒவ்வொரு வினையாட்டினுல் காரஞ் செய்தமையைக் கேட்டுத் நடுக்குற்று, வீதியிலே சிறுர்க ளோடும வினையாடல் செய்கின்ற மகோற்கட மூர்த்தியையுக் தமது மலவிரு லொழியும்படியாகக் கரிசித்துப், பார்வைகளைய ணுப்ப் பலசிறுர்களோடும வினையாடுமிவன், நமதுசுத்தவீரர்களை யெல் லாங் கொன்றுனென்பது என்ன ஆச்சரியம்? இவனைநாமே பிடித்துக் கொன்று, நம்மையனுப்பிய நரான்தகற்குப் பெருமகிழ்ச்சியை யுண்டா க்குவோ மென்று நினைத்து, தங்கள் சுயரூபத்தோடு மெழுந்து மகோற்கட மூர்த்தியினுடைய திருக்கரங்களைப் பிடித்தார்கள். அப் போது சுவாமி, அக்கைகளையுதறி மீட்டுமவர்களைத் தமது திருக்காத்

தாற் பிடித்துக்கொண்டு, தாமுமவர்களைப்போல பெரிய ரூபமெடுத்து அவ்விருவரையும் பூமின்கண் அறையப்போயினர். அதற்கப்பாதகர்கள் பயந்து துதிசெய்து சுவாமீ ! அடியேங்கள் நராந்தகனு லேவப்பட்ட தூதர்கள். அடியேங்களைத் தேவரீர் கொல்லாது காத்தருள வேண்டு மென்று பிரார்த்தித்தார்கள். அதைக் கிருபைக் கடலாகிய கர்த்தன் கேட்டு, அவர்களை நிலத்தில் விடுத்து இதுகாறும் பற்பல பஞ்ச வடி வங்களோடு நம்மிடத்து வந்த உங்கள் வீரர்களை யெல்லாங் கழுகுகட் கும் பருந்துகட்கும் இரையாக்கினேம். இன்னும் வரத்தக்கவர்களாய வரேனும் இருக்கின் அவர்களையுங் கொல்லக் காத்திருக்கின்றோம். அ றிவென்பது எள்ளத்தனையு மில்லாத நராந்தகனிடத்தும் தேவர்களி னிடத்தும் நீங்கள் சென்று இதுகாறு முடித்ததையும் இனி முடியப் போகின்றதையுஞ் சொல்லுவீரேல், இதுகாறு முடிந்தமையை உலக முழுவதுஞ் சொல்லும் இனி முடிக்கப்போகின்றமையை யாமே சொல் லக்கண்மின்கள் அவர்களிப்போது அனுபவிக்கும் பெருஞ்செல்வத்தி னையும் வலியபிராணனையும் இன்னுஞ் சிலகாலனுபவிக்க வேண்டுவர் களாயின் தாங்கள் செலுத்திவருகின்ற கொடுங்கோலைக்சுடந்து, உண் மையாகிய வேதநெறியை வளர்த்து தேவர்கட் கெல்லாம் அவ்வவர்க ளுடைய பதவிகளை முன்போல அனுபவிக்கக் கொடுத்து, தீவினையிரு ளின்றோடி முடிந்தபின்று உலகமெலாஞ் சொல்லிச் சந்தோஷமடையு ம்படியாகச் செங்கோலை நடாத்திவரச் சொன்மின்கள், அச்செல்வத் தினையும் போக்கடித்துக் கொள்ள வேண்டுவார்களாயின், இத்தினமே தங்கள் சேனைகளோடியுத்தத்திற்கு வரச்சொல்லுங்கள் இதைச் சொ ல்லும நிமித்தமே உங்களைக் கொல்லாது கிருபைபோடு விடுத்தனம். நீங்கள் விரைவிற் சென்று அவர்கட்கு அறிவியுங்களென்றீயிடைகொ டுத்தனுப்பினன்.

உடனே அத்தூதர்களியாவரும், உய்ந்தோமுய்ந்தோமென்றோடி நராந்தசனிடத்திற் சென்று பணிந்தெழுந்து ஆண்டவனே ! தேவரீரு டைய கட்டளையின் படியே சென்ற நமது வீரர்களெல்லாம் அம்ம கோற்கடலை ழுன்னின்று வெல்லுவது மிகவும் அரிதென்று நினைத்து தனித்தனி வெவ்வேறு மாயா ரூபங்களைக் கொண்டு சென்று சகலரும் அக்காரிப் பட்டணத்தில் அச்சிறுவ னொருவனு லிறந்தார்கள். அவர் களுட் சிலர்கள் இறந்த விவரங்களை யெல்லாங் கேள்வியுற்ற வண்ண ஞ்சொல்லுகின்றோம்? கந்துரனென்பவனும், விகண்ட னென்பவனும், அப்பட்டணத்துப் புரோகிதர்களாகிப் போயிறந்தார்கள். பதங்களும், விழுலனும் காற்றுகச்சென்றிறந்தார்கள். கூடன்சிலையாகி யிறந்தனன்

காமனும் குரோதனும் கருணையாகிச் சென்றிறக்கார்கள் குண்டன் யாணவடிவங் கொண்டிறந்தனன் கிரம்பை அச்சிறுவனுக்குத் தனது கையிலுள் விஷத்தயிலமிட்டிறந்தனள் சுவாலாமுகன் கெருப்பாகியிறந்தனள். விசாரணன் வாயுவாகியிறந்தனன் மோகன் சோதிடனாகியிறந்தனன். கூபனுங்கந்தரனும் கிணறுதவணையு மாகியிறந்தார்கள். அந்தகன் துங்கன் அப்பன் என்னும் இவர்கள் இருள்மலை மழையு மாகியிறந்தனர் பிரமரை அத்தியாகியிறந்தனள். இவ்வாறு இங்கிருந்துசென்றமேன்னவ பாக்கியமத்தினையுடையநமதுவீரர்களெல்லாம் பிறந்தார்கள். யாங்களும் அச்சிறுவனைப் பிடிக்கவேர்க்தோம். அப்போதச்சிறுவன் எங்கட்குச் செய்ய வேர்ந்ததகாலாகலத்திற்கஞ்சி உடனே கீழ்ப்பணிந்தோம். அதற்கவன் எங்களை மாத்திரம் விடுத்து உங்களாசர்கட்குச் செல்லுமும் உரிமும் வேண்டுமானால அவர்கள் இதமுதலேனும் செய்வோர்செய்துதுக: இல்லையெனில் இதனைபேசகல சேனைகளோடும் போர்க்களத்திற்கு வருகவென்றுசொல்லி எங்களை விடுத்தனன். அச்சிறுவனேவினால், ஒராயுதங்களுமில்லாதவன் அருகிற்றன க்கொருதுணையுமில்லாதவன். சிறிதுஞ் சேனையில்லாதவன் பலகிராக்களோடு நீயுமிடத்திற்சென்று வீரோயாகிக் தகுதியுடையவன். இத்தன்மைத் தானவன் தன்னைபெற்றிக்கின்ற சதகருக்களை இமைப்போதி லழிக்கின்றனன் ஓ சகலபுவலோகவாசர்! அச்சிறுவனுடைய பாக்கிரமத்தையும் அவன் இதுகாறும் நமவரைச்செய்த கொடுமைகளையும் யாமறிந்தவளவினுங் கேட்ட வாளிலுஞ் சொன்னும் இனித் தேவரீர் சித்த மடியேங்கள் பாக்கியமென்று சொன்னர்கள்.

அவையனைத்தையும் கராந்தகன்கேட்டித் தனக்கு அருந்தினையாகவிருந்த சுறாதத்தினரும் அதிகூரர்களும்போய், ஒருசிறுபையனுக்குப் பின்னிட்டிறந்துபோனர்களே என்னும் மனவருத்தமானது ஒரு பக்கத்திலிருக்க, மானமுங்கோபமும் மேற்பட்டவனுகி, உடனே தனக்கு உரிமைபாராட்டவல்ல மந்திரிகளை யழைத்து இனிநாமே காசிப்பட்டணத்திற்சென்று அச்சிறுவனையழிக்கவேண்டி மிகுதலால், இக்நிமிஷத்தில் நமது சேனைகட்கெல்லாம் யுத்தத்திற்காயத்தமாயிருக்கும்படிகட்டளை செய்வீர்களென்று ஆக்கியாபித்தான். அம்மாத்திரத்தில் அவ்வமைச்சர்களும் புத்தியென்று தொழுது வெளிவந்து சில காரியக்காரர்களையழைத்து நமதுசால்வகைச்சேனைகளும் நிமைப்போதில் யுத்தத்தோடு இங்ஙனம் வந்துசேர்வதாக வள்ளுவனைக்கொண்டு எங்கும் முரசறைவிக்கக் கடவீர்களென்று கட்டளையிட்டனர் அக்க

ட்டனையை யவர்கள் வள்ளுவனுக் கறிவிக்க, அவனும் பேரிகையோடு ஓராணியின் மீதேறி நராந்தகனுடைய சேனைகள் எவ்வெவ் விடங்களி லிருக்கின்றனவோ அவ்வவ் விடங்களிற் சென்று முரசறைந்தனன். அம்முரசி னோசையைக்கேட்ட சகல சேனைகளும் உடனே சர்வாயுத பாணியராக நராந்தகனுடைய அரண்மனை வாய்தலில்வந்து நெருங்கினர்கள்.

இப்பால் நராந்தகனவன், தனது தொழுத் னையைக் கடந்து ஆயுதசாலையிற் புகுந்து வயிரநவசத்தை யெடுத்து விசாலமாகிய மார் பிலணிந்து, திவ்விய பாணங்கள் நிறைந்திருக்கின்ற அம்புபெய் தூணி யை முதுகிலிறுக்கி, விரல்நோ றாக் நாகைகளை மாட்டிப் பர்வதா கிருதிபர்க விளங்குங் கனுசைக் காக்கிற கொண்டி தும்பை மாலையைக் கிரீடத்திற் சுற்றித் தண்டாயுதம் வேல் சக்கிரம் முதலிய ஆயுதங்களை யெடுத் துக்கொண்டு வெளிவந் து, அளவற்ற திவ்விய அசுவங்களைப்பூ ட்டப்பட்டு நவரத்தினமயமாய் சொலித்திருக்கின்ற தனது சொர்ண இரதத் தின்மீது சிங்காசனீப்போலத் தாவியேறி, யாவரும் இந்திர னே? இவனென்று சந்தேகங் கொள்ளுப்படிக்குக் கெம்பீரமாய் வீற் றிருந்தனன். அத்தருணத்தில் தனக்குத் தோழராய்ப் பிராணபதமாக விருக்கின்ற அமைச்சர் முதலாயினோர் சர்வாயுத பாணியராய்த் தங்க ள் தங்கள் வாகனங்கள்மீ து ஏறினர். வீராதி வீரராக விருக்கின்ற அ ளவற்ற சேனைத்தலைவர்கள், பலபுரளிகளைப் பூண்டிருக்கின்ற தேர்களி லேறி வில் வாள் வேல் சக்காம பிண்டிபாலம் முசலங்கப் பாணமாகிய ஆயுதங்களையுங் கொடியபாண வித்தைகளையும் தாங்களவர்களாய்த் தம து காவலிலிருக்கின்ற சகல சேனைகளையுங் கூட்டிக்கொ ண்டு சத்தசா கரங்களும் பெருகியதைப்போல ஆரவாரித்து அத்திர சத்திரங்களோ ட ராளமாகத்தாங்கி நமக்குப் போர்செய்தத் தென்கிற ஐயவுற்காகத்து டன் வந்து மகாபாதகனுடைய நராந்தகனுடைய இரதத்தைப் புனிசூழ் ந்து நெருங்கினர்.

இப்பால் தங்களரசன் குறிப்பையறிந்த சேனாதிபதிகளும் கத்தம் படைகளைத்தூண்ட அதனுள் பலவெள்ளக் கணக்கில் கடல்போலனின் ங்குஞ் சேனைகளும் அரண்மனை வாய்தலினின்றும் வெளிக்கொண்டி இரணபேரி ஜயபேரி வெற்றிச்சங்கம் - சின்னம்-கோடி ஆகுளிகாளம் பறைகுட - முழா சல்லரி - மல்லரி - முதலிய நொற்பறைகள்கணகண வென்று முழங்கவும், அசபடங்கள்வாகனத்தைமூடிப் படபடவென்ற சையவும், பூரணச்சந்திரனைப்போல முத்துக்களினற் சோடித்த

க்கிறந்த தவளக்குடைகள் ஈான்கு மருங்குங் கவிக்கவும், மன்திரமிரி யைப்போல விளங்குந்தோர்கள் கெற்கரத்தோனிகளைச் செய்தோடவும் மதயானைகள் வீறிட்டுப்பகைவரைச் சீறிப் பிரசண்ட மாருதத்தைப் போலவேகமாய் நடக்கவும், புரவிக்கூட்டங்களானவை ஈான்கு பாதங் களினும், பூண்டிருக்கின்ற பொன்வெண்டயங்கள் கலிக்க, அலிகளுக் குச் சமதையாகத்தாஸி, வானவெல்லியினுங் திசைகளினுஞ் சமுத்திர ங்களினும்பாய்ந்து இடிமுழங்கினைப்போலக் கீனத்தோடவும், பிறை யையொத்த கோரதந்தங்கள் விளங்க, அரக்கினுஞ் சிவந்து உருண் டகண்களை யுறுத்தித். தீப்பொறிகள் சிதறப்பார்த்துப் பூமிகடுங்கும் படியாகக் கால்களைப் பெயர்த்துவைத்து நடக்கும் ஆலகாலத்தை யொ த்த அவுணப்படைகள் வீராவேசங்களுடன் சிங்காதமும் அட்ட காசங்களைச் செய்து ஆர்ப்பரிக்கவும், சத்தசாகரங்களும் ஏககாலத்தி ல் ஒன்றுய்க்கூடி முத்தியடைவருவது போல அளவற்றகாடி களையும் மலைகளையுங் கடந்து காசிப்பட்டணத்தைவந்து வளைத்துக் கொண்டு, அப்பட்டணத்தை ஈாற்புறத்தஞ் சூழ்ந்த ஓர்களை யெல்லாம் கெருப்பி ட்டுக் கொளுத்தியும் கொள்ளையிட்டும் சகலவுயிர்களையுங் கொன்றும் தங்கள் தங்கள் வயிறுநிரம்பத் தின்றும் திரிந்துகொண்டிருக்கார்கள்.

அச்சம்பவத்தை யறிந்த சிலதூதர்கள் காசிராசனிடத்தி லோடி அறிவித்தார்கள், அதைக்கேட்ட மாத்திரத்தில் அரசனுக்கு அதிக கோபமுன்டாகி உடனே அமைச்சர்களை வரவழைத்து நமது பட்ட ணத்தின்மீது ஈாசந்தகன் படையெடுத்து வந்தான். நீங்கள் விரைவில் நமது ஈால்வகைச் சேனைகளையும் போர்க்கோலத்தோடு வெளிப்படும் படி உத்தரவுசெய்யக் கடவீர்களென்று ஆக்கியாபித்தனன். அதற் கவ்வமைச்சர்கள், அரசனேப்பணிந் தெழுந்து, ஆண்டவனே! பிரகற் பதி தேவருடைய புத்திக்கு மேலான புத்தியையுடைய தேவரீருக்கு மற்றையர் ஆலோசனையைச் சொலலப் புகுவது அறிவின்மையாயினும், ஒவ்வோரமையங்களில் அடியேங்களால் சொல்லப்படுவன வற் றைத் தக்கபடி ஆராய்ந்து சொல்லவேண்டு மென்று நீதிநூல்களிலுள் ளபடியால், அவ்வாறே அடியேங்கள் மனத்தின்க ணுண்டாகிய யோ சனைகள் சிலவுள. அவைகட்குத் தேவரீர் செவிகொடுத்தருளல்வேண் டும். படையெடுத்து வந்த வேற்றரசர் மெலியார்களாயின் அவர்களே யெதிர்த்து யுத்தஞ்செய்தழிக்க வேண்டும் ஒத்த வலியினராயின் அவ ர்களைக் கூட்டிவந்தணைனைப் பேதித்துத்தன் வசப்படுத்திக் கொண் டு பின்னர்வெல்லு மாற்றலிலுைலவர்களே வெல்லல்வேண்டும் இவ்விரண் டு மின்றி வலியர்களாயின் அவர்கட்குக் கன்னி வத்திரம் பொன்முத

லியவைகளைக் குறைவறக்கொடுத்தும், உலகைபெற விருத்தூட்டியும், மனமிரங்கும்படித் துதிசெய்தும், சினேகஞ்செய்து கொள்ளல்வேண்டும் இவையனைத்தும் அரசர்க்குரைத்திலிருக்கின்ற நீதிநூல்களின. துணிபு நாமோ எளியர்கள் நமக்குப் பகையாகிவந்த நாசுந்தகனை மிகவும் வலியன் அவனுடைய சேனைகளெல்லாங் கடல்போலப் பிரகாசிக்கின்றன. நமது சேனைகள் ஓர் சாலிற்றங்கிய நீர் போலிருக்கின்றன. அவனுடைய பராகிரமம் சூரியகிரணம் போலச் சகல புவனங்களிலுஞ் சொலிக்கின்றது. நமது பராக்கிரமமோ மின் மினிப்பூச்சியி னொளி பைப்போல மின்னுகின்றது. அடியேங்கள் சொல்லிய இவ்வாலோசனைகளெல்லாம் அடிகளுடைய திருவுள்ளத்தினு முண்டி. ஆதலால் மேலான சேனைகளோடும் பராக்கிரமத்தோடும்வந்த அக்கொடியவனுகிய நாசுந்தகன் நம்மைத் துன்பப்படுத்தாத விதமாக நாமவனுடையபாதத்தைச் சரணமடைவதே முடிவு, இம்முடிவைத் தீர்க்காலோசனை செய்து விரைவில் நயந்து கொள்ளவேண்டுவதே நம்போலியர்க் கேற்ற தருமமென்று சொன்னார்கள். இவையனைத்தையும் அருகிற் கேட்டுக் கொண்டிருந்த புரோகிதர் முதலாயினோரும், இப்போது அமைச்சர்களாற் கூறப்பட்ட கருமமே தக்காலத்தில் முடித்துக்கொள்ள வேண்டிய கருமமென்று சொல்லினர். பின்னர் சகலபுவன கர்த்தா வாகிய மகோற்கட மூர்த்தியினுடைய திருவடித்தாமரைகளில் மடைதிறந்தாலொத்த பத்தியை வைத்திருக்கின்ற காசிமகாராசன் புன்னகை செய்து. நிகரற்ற ஆலோசனைகளை யுரைத்தவல்ல மனுநீதிகளில் குறைவற்ற கேள்விகளையுடைய அமைச்சர்களே! நாம் கொடியபாதகனுகிய நாசுந்தகனுக்கு எளியரா மென்பது திண்ணமே. ஆயினும், அனுதினவத்துவாய் ஆதிமத்தியாந்தரகிதாய் சகல பிராணிகளிடத்துங்காரணபூதமாகப் பொருந்தி நடிப்பித்துக்களித்திருக்கு மேலவராய் ஒப்பாருமிக்காரு மில்லாத மகோற்கட மூர்த்தியே நமமையெல்லாம்பாதுகாத்திரட்சிக்கும் பொருட்டு இங்ஙனம் எழுந்தருளியிருக்கின்றனர். அத்தேவனும் அப்பாதகனுக்கு எளியரோ! இப்போது படையெடுத்துவந்த இவ்வந்தகனையும், அவன் சகோதரனுகிய மற்றோ ரந்தகனையும் இமைப்போதில் சங்கரித்து எல்லாவெற்றிகளும் நம்மைச் சேரும்படியாம் ஒன்றுன பரமேஸ்வரனே நம்மிடத்தி லெழுந்தருளி யிருக்க, நமக்கினி யென்னகுறை நேரிருக்கின்றது? அன்பர்களே! இனிநீங்கள் யாதொன்றிற்கு மஞ்சாதுநமது பராக்கிரம மெல்லாம் பாழாகாதபடி விரைவில் சகலசேனைகளோடும் யுத்தத்திற்காயத்தமாகக் கடவீர்க ளென்று ஆக்கியாபித்தனன், அதன்மீது அமைச்சர்களும் மற்றபரி

சனங்களும் அரசனைப் பணிக்தெழுந்து ஆண்டவனே! மேலான கட வுள் இங்ஙன மெழுந்தருளி யிருப்பதைச் சிறிதும் யோசியாது அடி யேங்களுடைய புத்திமயக்கத்தில் பற்பலகூறினேம். அக்குற்றங்களைத் தேவரீர் பொறுத்தருளல் வேண்டும். இதோகமது நால் வகைச்சேனை களையும், ஆயத்தப்படுத்து இன்றேமென்று சொல்லி, அத்தச் சேனைக ளிருக்கு மிடங்களோறும் வள்ளுவனைக்கெண்டு முரசறைவித்தார்கள் அம்முரச ஞைசையைக்கேட்ட சேனைகளெல்லாம் போர்க்கோலத் தோடும் வெளிக்கொண்டுவந்து அரசனுடைய அரண்மனைத்தலை வாய லை நெருங்கினர்கள்.

அதற்குமேல் அரசன் மூலகாரணக்கடவுளாகிய கணேச பூசை செய்து, போசனஞ்செய்து முடித்துக்கொண்டு, ஆயுதசாலைபுள், நுழைந் து பொன்மலையாகிய மகமேருவின்மீது சந்திரனது சோடசகலைகள் பரவிக்காட்டுவதுபோல் வயிரக்கவசத்தைச் சொன்னவடிவைப் பெற்ற மார்பிடத்திறுக்கித் திவ்விபபாணங்கள் நிறைந்திருக்கின்ற அம்பு பெ ய்துணியை முதுகிற்கட்டி, இரத்தினமயமாகிய புட்டில்களை விரல்க டோறு மணிர்து பகைவருபிரை யுண்ணும் யமனியொத்த பாரித்தவி ல்லைத் தொழுதெடுத்து இடக்காத்திற்பற்றிப் பற்பல தேவாஸ்திரங்க ளை வலக்காத்திற்றாங்கி சிரோரத்தினமயமாகச் சோடித்திருக்கின்றகிரீ டத்தின்மீது தாமரைமாலையைச்சூடி தண்டாயுதம் வேல், சக்கரம் மூச லம்-பாசம்முதலிய ஆயுதங்களை யெடுத்துக் குகையிலிருந்து புறப்பட்ட இராசகண்டீரவத்தைப்போல வெளிவருது சத்தசாகங்களும் பெரு க்கெடுத்ததுபோல அதிகவுற்சாகங்களுடன் ஆர்ப்பரித்திருந்கின்ற நால் வகைச் சேனைகளையு மழைத்துக்கொண்டு, அரமனை வாய்தலில் வந்திருக்கின்ற சேனாதிபதிகளை பெல்லாங்கண்டு. அவ்வவர்கட்கு அ ளவற்ற கோமங்கள் யானைகள் குதிரைகள் ஆயுதங்கள் ஆபரணங்கள் முதலியன வெகுமதிகளைச் செய்து பொன்வண்டில் அச்சு - மச்சு - குத் துக்கால் கொடுங்கை இடக்கியம்கொடை முதலிய சிங்காரங்களைக் கொண்டு நவரத்தினமயமாகப் பிரகாசித்திருக்கும் தேரின் மீதாரோக ணித்து, விருதுக் கொடிகள் மகாதோரணங்கள் தசபடங்கள் வெண் சாமரைகள் வெண்பட்டுக் குடைகள் ஆலவட்டங்கள் மயிற் பிஞ்சு கள் முதலிய சின்னங்களானவை நாற்புறத்தும் விளங்க, தேர்க்குவி தூலைக்குவிவு-நற்றுக்குவி-சஞ்சக்குவி - நரம்புக்குவி யென்னும் ஐவகைக்குவிகளிலு பதினெண் வாத்தியங்கள் அண்டங்களதிர முழ ங்க, அளவற்ற பெரியோர்களும் முனிவர்களும் மங்கலவாழ்த்து சொ ல்லும்படியாக அரமனைவாயிலைக் கடந்ததன து பகைவர் வடவையைப்

போலச்சீறி யெதிர்பார்த்திருக்கும் இரணக்கள வெல்லையைச் சேர்ந்து தனது இட்டதெய்வத்தினை மனதிற்றியானித்து, மதம் பொழிகின்ற யானைகட்குச் சிங்கமானது தனது வரைக்காட்டுமாறு கர்ச்சனையிடு வதுபோலச் சத்துருக்களடங்கும் படியாக வெற்றிச்சங்கினை முழக்கி னன். அம்முழக்கினைக் கேட்டகராந்தகனுந் தனது இட்டதெய்வத்தி னைத் தியானித்து வெற்றிச் சங்கினை முழக்கினன்.

பின்னர் அரசர் தம்பிரான் சேனைகளும், அ்வுணர் தம்பிரான் சேனைகளும் அதிக வேகத்தோடு ஒன்றோடொன்று நெருங்கி இரதவீ ரர்களோடு இரதவீரர்களும், யானைவீரர்களோடு யானை வீரர்களுங், குதிரை வீரர்களோடு குதிரைவீரர்களும், பதாதிவீரர்களோடு பதாதி வீரர்களும், கைகலந்தெதிர்த்து ஈதுதங்களினம் ஈதுபிறரின மென்று தெரிந்து கொள்ளுவதற்கு வமையாக ஆகாயமெங்குந் தூளிபடங் கள் போர்ப்ப அத்தூளிபடங்களை உதிரவெள்ளங்கள்மாய்ப்ப, இவ்வித ஆடம்பரங்களோடு இரண்டினங்களுஞ் சமர்புரியுங்காலத்தில். இரத மற்றவர்கள் யானை மீதேறியும், யானையற்றவர்கள் குதிரைமீதேறியும், குதிரையற்றவர்கள் நிலத்தின் மீதிருந்தும், நிலத்திலிருந்தவர்கள் வே று கதியின்றிமாய்ந்தும் வாளற்றவர்கள் வாளிகளைத்தொடுத்தும், வா ளியற்றவர்கள் வேல்களெறிந்தும், வேலற்றவர்கள் சூலத்தினைச் செ லுத்தியும், சூலமற்றவர்கள் சக்கரத்தைத் தூண்டியும், சக்கரமற்றவர்கள் மழுவையேந்தியும் மழுவற்றவர்கள் எழுவைக்கடாவியும், எழுவற்றவர் கள் கதையற்றவர்கள் முசலத்தினையடிததும், முசலமற்றவர்கள் விச னங்களி லிருந்தும், இவ்வாறு யாவரும் அளவற்ற படைகளைமாறி மா றி எடுத்து யுதஞ்செய்தபோது இருவகைச்சேனைகளினுங்கணக்கற்ற ஓபர் மண்டைதிறந்தும் மூளைகள் சிதறியும்: விழிதெரித்தும், வாய்கள் பிளந்தும், பற்களுதிர்ந்தும், கழுத்துகளொடிந்தும், புயங்கள் சரிந்து ங், கரங்கல் முறிந்தும், வயிறுகிழிந்தும், குடல்களிசைந்தும், ் தடை கள் தகர்ந்தும், கால்களொடிந்தும்போயினர். அப்போதவ்வெல்லையெ ங்கும் பற்பலகோடி சுவந்தங்கள் கூத்தாடின, பூதபசாசங்கள் காளிக் கூட்டங்கள் அங்கிருக்கின்ற நிணமாகங்களை யெல்லாந் தெவிட்ட வுண் டு அரசர் பெருமானுடைய வீரத்தினையும் அவுணர் பெருமானுடைய வீரத்தினையும் புகழ்ந்து பாடிக்கொண்டு திரிந்தன, கழுகு-பருந்து காக்கை முதலியவைகள் நிணங்களை யெல்லாந் திருத்தியாகிப் புசித்து வானவெல்லையிற் பந்தலிட்டுலாவின, நாய் நரி முதலியவைகள் பிணங்க ளைப்பிடுங்கித் தின்று ஊளையிட்டுத் திரிந்தன? அளவற்ற வீரர்தங்கள்

முடிசிதறிக்க வந்த தங்களாகியும் பட்டல வாட்போர்களே விளையாடிச் சொர்க்கம் புகுந்து அங்கு அரம்பையருடைய நடனங்களைப் பார்த்துக்கொண்டு மிருந்தார்கள்: இவ்விதமாக இருவகைச் சேனைகளினுமுள்ள இரதகஜதுரகபதாதிகள் அளவற்றன மாண்டும், காசிராசனுடைய அமைச்சர்களும் சேனைத்தலைவர்களும் எவ்வளவேனு மனத்திண்கண்ச்சமில்லாமல் மிக்கபராக்கிரமத்தோடு அவுணவீரர்களே யெல்லாம் இடைவிடாது அதனுசெய்து கொண்டிருந்தனர் அதனால் அவுண சேனைகள் மிகுதியும் வலியுள்ளன வாயிருந்தும் தயிரியமும் பராக்கிரமமுங் குறைபட்டவர்களாகிக் காசிராசனுடைய சேனைகட்கெதிர் நிற்கமாட்டாது பின்னிட்டோடத் தலைப்பட்டார்கள்,

இப்பால் அதனை நரான்தகன்கண்டு, ஆ, ஆ! நமதுசேனைகளுடைய பராக்கிரம மிகனன்று மிகனன்று பெனக்கோபநலகைகொண்டு, ஓஅறிவற்றவர்களே! அற்பசேனைகள் செய்யும் போரினுக்குஞ் ஏஞ்மெகின்றீர்கள், நின்மின்கள் நின்மின்கமென்று கையமர்த்திப் பிரளயத்திற் குநிகரான அளவற்ற ஆயுதங்களே நாற்புறத்தும் வீசிக்கொண்டு அதிரவீராவேசத்துடன் ஒடிவந்து தானேயுத்தஞ்செய்ய நேர்ந்தனன். அதனைப் பின்னனியிலிருந்த காசிராசனும் அமைச்சர்களும் பார்த்து ஞெரேலென்று தங்கள் சேனைகளே முன்னணியிலே கொண்டு வந்து நிறுத்தி அவுணராசன் விடுகின்ற படைகட்கெல்லாம் பிரதியாக வேறு வேறு படைகளேவிடுத்து யுத்தஞ் செய்தார்கள். இவ்வாறு காசிராசனும், நரான்தகனுங் காலாந்தகரைப்போலச்சிறி ஒருவரை யொருவர் வெல்ல வேண்டுமென்னுங் கருத்தினுல் தமது விற்களில் அளவற்ற திவ்விய பாணங்களே ஒருமுனையிற் பூட்டிக் காட்டினிடத்தில் கல்மழை பொழிவதற் கொப்பாக இரதகஜதுரகபதாதிகளின் பெருக்கின்மீது பிரயோகித்தனர். அம்மாத்திரத்தில் இருவருடைய பாணங்களும் ஒன்றோடொன்றுரய்ந்து நாற்புறங்களினுங் தீக்களே யிறைத்து அதிக டவதத்திடன் ஆலகால விடத்தினைப்போலச் சிறிச்செழித்தோங்கித் தழைத்திருக்கின்ற தோப்புகளில் சூரைக்காற்று புகுந்தாற்போல இருவகைச் சேனைகளையும் வாட்டி வருகின்றபோது மேருகிரியைப்லோலப் பாரித்திருக்கின்ற தேரனிகளெல்லாஞ் சிதைந்து அச்சுமச்சு குத்துக்கால் கொடுங்கை முதலிய உறுப்புகள் பின்னப்பட் டிறைந்தும், தமது கார்ச்சேனையினுல் திசையாணைகளையுங் கலங்கச் செய்யவல்ல யானைப் பந்திகள் மூமூவதுங் கலங்கி மத்தகம் துதிக்கை தோடுமுதலிய அவயவங்கள்மூறிந்தும் அலைகளைப்போலத் தாவிப்பாய்வல்ல புரவிக் கூட்டங்களெல்லாமயங்கி வெண்டயங்கள் கலிக்குக் கால்களும் முகவுரிகளுஞ் சிதைந்

தும், ஐயவுற்சாகத்தோடும் வீரபாக்கிறமத்தோடும் போராட வல்லப தாதிக ளனேகத்தும் நடுங்கிச்சிரம் கரம் - உரம் - கால் தொடை அங்க க்கள் கண்டதண்டப்பட்டு மாண்டும் போயின. இவ்விதமாக அவ்விரு திறத்தாருடைய சதுரங்க சேனைகளும் சின்னபின்னப் பட்டழிகின்ற போது மனிதர்கட்கெல்லாம் யமனென்று சொல்லத்தக்க பெயரினைப் படைத்த அவுணராச னுவன், காசிராசனுடைய சேனைகளின் நடு வே நூழிலாட்டோடுந் தண்ணென்று பிரவேசித்து அவ்வரசனை அ வன் புத்திரர்களோடும் அமைச்சர்களோடும் ஒருங்கிடியாகப் பிடித்து ச்சிறையி லீட்டனன். உடனே அவுண பாதகர்கள் ஐயபேரி யடித்தன ர். அவ்வோசையை வேறு வேறுப் நின்று யுத்தஞ் செய்கின்ற அவுண ராசனுடைய சேனைத் தலைவர்க ளெல்லாம் கேட்டு ளெரேலென்று அவனிடத்தில் வந்து பணிக்தெழுந்தனர். அவர்களை நோக்கி பா ர்த்து ஒருத்த வீரர்களே! நாம் வந்த காரியம் பலித்தது காசிராச னைச் செயித்தனம். அவன் எமக்குத் தோல்வி யடைந்தவனே யாம். எக்காலத்தினும் அழிவுறுத காசிநகரும் நமது வசமாயிற்றெ னறு சந்தோஷ வார்த்தைகளைப பேசித் தான் சிறையிட்ட அரசன் முதலியோரை அழைத்துக் கொண்டு காசிநகரிற பிரவேசிப் பதாயினன்.

இச்சம்பவங்களை யெல்லாம் அறிந்த சில தூதர்கள் அவ்வரசன் பத்தினியாகிய அம்பை யிடத்தில் விரைந்தோடி அறிவித்தார்கள் அதை யவள் கேட்டவுடன் வேடன் செலுத்திய பாணம்பட்டு வாடும் மானைப்போலக் கதறிக் கூந்தலவிழ்ந்து நிலத்தில் புரளச் சரீரம் நடுங் குந்தைத் தூக்கவெப்பத்தினல் விழிகளினுதிரமான தூற்றெறித்தோட க்கோடுகோடெனப் புலம்பித் தாமரையிற்பட்ட சலத்தை யொப்பமனம் நிலைபெறாமல் கலங்கினவளாகி வலையிற்பட்ட மஞ்ஞையை நிகர்த்துவா டிப் பரதவித்துத் துடிக்கிறபட்டு ஐயையோ! நமது காவலருடைய் பரரக் கிரமும் புத்திரர்களுடைய ஆண்மையுங் அமைச்சருடைய சாமார்த்திய மும், சேனைத் தலைவர்களுடைய வீரமும் ஒன்றுமில்லாமற்போய் இவ் விதவாபத்தும் நேர்ந்தவிதா? என்னுசைக் கணவரையும் குமாரர்களை யும் உரிமையிற்சிறந்த ஏனைய துணைவர்களையும் எப்போது இங்கு வர க்காணப்போகின்றேன்? தெய்வமே யென்று புலம்பி தீயிற்பட்ட புகை யைப்போலப் பதைபதைத்து வாடுவள், நாற்றிசைகளினும் விழிகளைச் சுற்றிப்பார்ப்பள், கரங்களைப் பிசைந்துகொண்டு இனி யென்ன செய் வதென்று தியங்குவள், நேர்ந்த வாபத்தைப் பலவா றெண்ணுவள், பின்னர் சிறிதுநேரம் அசைவற்றுச் சோர்ந்திடப்பள், கரங்களை விரி

தீது அவ்வனியாயமெங்கேனு முண்டோவென்று தன்னேத்தானு சா வுவள். எனது வாழ்வுக் கழிவு நேர்ந்தீதோ வென்று பலமுறை வாயி லறைந்து கொள்ளுவள், சரீரம் புழுங்கி வெயர்க்க வருந்துவள், சமூ த்திரத்தினலிகளின் பெருக்கடங்கும் படிக்குப் பெருமூச்செறிவள், நி லத்தைக் கங்களினல தழாவி மோதுவள், இவ்விதங்களாக அரசன் பத்தினிபாகிய அம்பை யென்பவள் தக்கசாகரத்துண் மூழ்கிமுன்னர் சகலரும் நடுங்கும்படியாக வந்த இடையூறுகளை யெல்லாம் நீக்கியரு ளிய நமது கர்த்தர் இன்று இருக்கின்ரு ரன்றே ? அவர் இப்போதும் வழுக்தருளிப் போர்க்குச் செல்லுவாரெனில், அவ்வவுணர்களேச் சங் கரித்து நமதுயிரைக் காப்பாற்றுவரென்று சிறிது மனக்தேறி உடனே தன்னிருக்கையை நீங்கிச்சென்று மகோற்கட மூர்த்தியைப் பணிந்தன ள். அப்போதவள் வந்து பணிந்தெழுந்த குறிப்பினேத் தாமறிந்துகொ ண்டு அம்மணி! நீ அஞ்சவேண்டாம் சத்துருவினுடைய சேனைகளேயு ம அவனல்நேர்ந்த இடையூறுகளேயும் இந்நிமிஷத்தில் நாசஞ் செய்கி ன்றேரும். நீபயபபடாமல் அந்தப் புரத்திற்குச் செல்லுகவென்றுவிடை கொடுத்து, அதிகோபத்துடனே யுத்தத்திறகு வெளிக்கொண்டனர்.

அப்போது சுவாமியினுடைய முகத்தினின்றுஞ் சிலவீரர்கள்ஐக் துமுகத்தோடும், சிலவீரர்கள் பத்துமுகத்தோடும், சில வீரர்கள் ஆறு முகத்தோடும் சிலவீரர்கள் ஆயிரமுகத்தோடும், உண்டாகி அம்முக ங்களுக கிரட்டியான கைகளேயும் அக்கைகள்தோறும் படைகளேயும் ஆயிரம்யோசனே யுயர்வையும் அவ்வுயர்வுக் கேற்றமற்ற வுறுப்புகளே யும் பெற்றவர்களாகி எதிரில் நின்றார்கள். அவர்களுள் சிலருண்டி ரீண் டிருக்கின்ற முகமயிரும், சிலருக்த அழற்பிழம்பை வீசவல்ல மூன்று கண்களும், காற்புறந்தும் நிமிர்ந்தாடும்படியான சடைகளும், அடிவ யைல வீழ்ந்து தொங்குகின்ற தாடியும், சகல பராக்கிரமங்களினுஞ் சிறந்த குரூரனென்னும் பெயரினேப் படைத்த ஓ வீராதிவீரன்மகோ ற்கட மூர்த்தியைக் கெதிர்நின்று பணிந்து சுவாமி ! அடியேனேப் பசியா னது மிகவும் வாட்டுகின்றது. விரைவிலெனக்கு ஆகாரஞ் கொடுத்தரு ளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்குசுவாமி நரான்தகனுடை யசேனைகளேச் சுட்டிவீரனே ! இதோ எதிரிலிருக்கின்ற சேனைகளேயெ ல்லாம் வாய்மடுத்து அச்சேனைகட்கு; நடுவேயிருக்கின்ற காசிராசனேயு ம் அவன் புத்திரர்களேயும் அவன் அமைச்சர்களேயும் கொண்டு வந்து விடுவாயாக, அப்பாலும் பசியடங்காதாயின் இன்னுமளவற்ற ஆகார ங்களேக் கொடுக்கின்றேமென்று விடைகொடித் தனுப்பினர், உடனே

அக்குரூரன் புத்தியென்று சந்தோஷித்து வனத்தினீஸ்வரக்கிச் செல்லும் வடவைக்கனல்போல நராந்தகனுடைய சேனைக்கெதிரே சென்றான். ஏனையவீரர்களும் அவனைப் படைசூழ்ந்து நடந்தனர் இப்பால் குரூரனுவன் சகலரையும் பின்னேநிறுத்தி தானொருவன் மாத்திரம் நராந்தகனுடைய சேனைக்குள் புகுந்து சிலரை ஆரவாரத்தினும் கொன்றும் சிலரை உறுத்த பார்வையினும் கொன்றும் சிலரைக் கைகளால் இழுத்துக் கொன்றும், சிலரைக் கால்களினல் இடறிக்கொன்றும் சிலரைப்பூமியி லறைந்து கொன்றும, சிலரைத தேரிஷ்மீ தெறிந்துகொன்றும் சிலரை யானையின்மீது கடாவிக்கொன்றும், சிலரைக் குதிரைமீத றைந்து கொன்றும் கோபமடங்காதவனுப்த் தேர்களேயெடித்துத் தேர்கள்மீதறைந்தும் யானைகளேயெடித்து யானைகள்மீதறைந்தும் குதிரைகளேயெடித்துக் குதிரைகள்மீது சாடியும், பதாதிகளே யெடித்துப் பதாதிகள்மீது மோதியும, இவ்வாறு காலவதைசச் சேனைகளேயுஞ் சின்னபின்னபடக்கொன்று அளவற்றவீரர்களே வாய்மடித்தும் போதாதுஇன்னுஞ் சேனைகளுண்டோவென்று நாறறிஷ்டகனினும் விழிகளேப் பரப்பிக குரூரனுவன் அட்டகாசஞ் செய்துக்கொண்டிருந்தனன்.

அச்சம்பவததை நாரதகன் கண்டமாத்திரததில் அதிக உக்கிரம பிரவேஷித்து விழிகளில அனறபொறிகள்கிதறி ஆலகாலத்தைப்போல ச்சீறி அதிவேகத்துடன் அசுராதகனுகிய குரூரனெதிரில் தனதுதேரை நடாத்திவந்து இதோ உன்னுண்மை யடக்கி யமலோகங் குடியேற்றுகிறேன் னென்று சபதம்பேசி வில்லே யெடித்து வளைத்து ஊழிகாலத்து மழைபோல அளவற்ற பாணங்களே ஒரே தொடையிற் பூட்டிப் பிரயோகித்தான். அவன்விட்ட பாணங்களெல்லாம் வசரிப் பாறையின் மீது விழுந்த மழைத்துளியைப்போலக் குரூரன்மீது பட்டு உடைந்தும் குறைந்தும் சிதைந்தும் பொடிந்தும் மடிந்தும் முறிந்தும்போயின இவ்வாறு புகழற்றவர்களேப் பொன்னுலகு எவ்வாறு ஏற்கின்றதோ அவ்வாறு தான்விட்ட பாணங்களெல்லாம் குரூரனிடத்திற் சென்று பயன் படாதுபோனதை நாரதகன் கண்டு மனங்கலங்கி வருந்தினவனுப் உடனே பயிரிப்பதையிடாது காட்டழலிப்போலச்சீறி இச்சில நேத்தில் இவன் பிராணனே யமலோகங் குடியேற்றுகின்றே னென்று கோபித்து ஓர்வேலாயுதத்தையெடுத்துப்பிரயோகித்தனன். அவ்வேலாயுதமானது நிரிலோகங்களேயும் ஏழுகாலத்தில் விழுங்குவதுபோலவுந் தெரிந்தவா அதனைக் குரூரன் தடுக்காது அருகேவரப் பார்த்து முரு வெருமுக்க விட்டனன். அமமுச்சியினுல் அவ்வேலாயுதமானது உரருவிதிப்பட்டு இலைக்குரிப்பாம்பு சென்றுவெளியேறுவதுபோ

14

டிக்கிறபறக்குபோயது. அதற்குமேல் நராந்தகன் மந்தரகிரியைப்போலப் பாயித்திருக்கின்ற ஓர் தாயுதத்தை அதிவேகமாகப் பிரயோகித்தான். உடனே அக்கதாயுதம் வெளிப்பட்டுப் பிரசண்டமாருதம்போல இரணக்களமெங்கும் உலாவிக்கொண்டு சூரரனுடைய மார்புக்கு நேராகவர அதை அவன் கண்டமாத்திரத்தில் சர்வசங்கார மூர்த்தியைப்போலப் பொங்கி விருகளிற் றீப்பொறிகள் குபீல் குபீலென்று கொட்ட உறுத்துத்தனது மார்பைக்காட்டினன். அப்போதக்கதாயுதமானது அவன் மார்பிற் பட்டு கல்லின்மீதன்றந்த காளாஞ்சிபோல நறுங்கிப்போயது. அப்பால் நராந்தகன் ஆலகாலம்போலப் பொங்கி ஓர் முசலாயுதத்தையெடுத்து இடம் வலமாகசுழற்றிக் சூரரனுடைய தோளுக்கிலக்காக ஏவினன். அப்போது சூரரனுக்கு அதிகோபம் பிரவேசித்துத் தனது புயங்களைநோக்கி வருகின்ற முசலத்தினைத்தனகரத்தினற்பற்றி மீட்டும் நராந்தகனுடைய இரதத்தின்மீதெறிந்தனன். அம்மாத்திரத்தில் நராந்தகனுடைய இரதமானது காதலிசேர்ந்த பாவையர்க்குப் பசலையெவ்வாறு பறக்குமோ அவ்வாறுடைந்து பொடிபட்டு நுறுங்கிப்போயது அப்போது நராந்தகன் வேறொரு தேரிலேறிச சூலாயுதத்தை யெடுத்துவிட்டனன் அதைக்சூரன் தனது விரலினற்றெறிக்க அது பூமியைபிளந்துக்கொண்டு பாதாள லோகத்திற் சென்றது. அதற்குமேல் நராந்தகன் ஓர் சக்காயுதத்தை யெடுத்துப் பிரயோகித்தான். அதைக்சூரனவன் பூமியில் விழாத படி தனகரத்தை நீட்டி ஓர் தொடியைப்போலத் தரித்துக்கொண்டனன். அப்பால் அவுணராசன் சிங்கதத்தைகோபாக்கிறி இனி இதனிலுஞ் சிறந்தாயுதமொன்றுமிலலையென்று ஓர் மழுவாயுதத்தையெடுத்துவிடுத்தனன். அதைப்பூதராசன் ஓர் நிமைப்போதில் தனது கரத்தாற்பற்றி அனிசசம்பூவினைப்போலக் குழைத்தனன். இவ்வாறுதான்விடுக்கின்ற ஆயுதங்களெல்லாங் சூரரனல் சின்னசின்னப்பட்டு நாசமடைந்ததை வஞ்சகங்கள் குடிகொண்டிருக்கும் வனத்தினுடைய நராந்தகன் கண்டு இரவுத்திராகாரமாகக் கோபித்து, வடவாமுகாக்கினி சிறியெழுந்ததுபோலத் தனது தேரைச் சூராவளிக்காற்றினுங் கடுகிச் செலுத்திவந்து உரையிற்சொருகியிருந்த வாளாயுதத்தினு லவனெ டனுனன். அவ்வாள் அக்குரரனுடைய மொய்ம்பிற் பட்டமாத்திரத்தில் இரண்டுதண்டங்களாகி நிலத்தில்வீழ உடனே நராந்தகனுவன் மற்றோராயுதத்தினை யெடுக்க நேர்ந்தனன். அதற்குமுன் சூரனவன் அப்பாதகனுடைய தேரைத் தனது காலினுலெட்டியுதைக்க

அவ்வுதைபட்டமாத்திரத்தில் அத்தேரானது நராந்தகனோடு நூறு காததூரம் உருண்டுசென்று அச்சுவேறு மச்சுவேறு கொடுங்கைவேறு குத்துக்கால் வேறுகப்போயது.

உடனே நராந்தகன் பூமியிற்குதித்து ஓர் சிறிய சகட்டின்மீது வாயுவேகத்தினு முந்திவந்து இனி இவனே தேவாஸ்திரங்களினால் வெல்லுவதே காரியமென்று தீர்மானித்து மகமேருவுக்கொப்பாகப் பாரித்திராநின்ற தனதுவில்லை யெடுத்துநாட்டி வட்டகாரமாக வளைத்துநாணேற்றித்திசைகளதிரக் குணத்தொனிசெய்து அதில் வருணாஸ்திரத்தை அபிமந்திரித்துத் தொடுத்து ஆகர்ணந்தபரியந்த மிழுத்து ப்பிரயோகித்தனன். அது வெளிப்பட்டமாத்திரத்தில் அதிக விசை வோடும் வானத்தெழுந்து அளவற்ற இடிகளையும் மின்னல்களையுங்காட்டி அமோகமாகிய நீரைப்பெருக்கி எங்குஞ் சலப்பிரவாகத்தினையுண்டாக்கி ஆவ்ஆவென்று சீறிக்கொண்டுவர அதைக்குரூரன் தனது கரத்தை நீட்டிப் பிடித்துத் தண்ணீரைப் போலத் தனது வாயிலிட்டு விழுங்கினன். பின்னர் பகைவன் வாயுவாஸ்திரத்தைப பிரயோகித்தனன். அவ்வஸ்திரமானது பிரசண்ட மாருதத்தைப் பெருக்கிப் பர்வதங்கள் விருட்சங்கள் முதலானவைகளைப் புரட்டிக்கொண்டுவர அதை வீராதி வீரனாகிய குரூரன் கரத்திலேந்தி சர்ப்பத்தைப்போலப் புசித்துவிட்டனன். பின்னர் நராந்தகன் அக்கினியாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகித்தனன், அவ்வஸ்திரமானது உடனே அட்டதிசைகளிலும் பரவிக்கோடியவனலை யிரைத்துக்கோடையிடிகளைப் போலயிறைத்து வடவைக்குச் சமானதையாகச்சீறி மேலிட்டுவர அதன் உக்கிரத்தையும் மகத்துவத்தையுங் குரூரன்கண்டு விழிகளிற் சுவாலை வீசுப்படியாகப் பிடித்து வாயிலிட்டு விழுங்கினன் பின்னர் நராந்தகனானவன் பிரமாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகித்தனன். அவ்வஸ்திரம் வெளிப்பட்டமாத்திரத்தில் அளவற்ற கொடிய பாணவிதங்களைப் பெருக்கிக் கலகலவென்று நகைத்து விஷங்களைக்கக்கி இடியேற்றினைப்போல முழங்கிக்கொண்டுவந்து தன்னைச்சமீபிக்க அதனை ஓர் கொடிப்போதில் தனது வாயை ஆவென்று திறந்து விழுங்கினன். பின்பு இராட்சதப்பாதகன் மனம் பொறுமல் தான் முன்னம் அரிய தவங்களைச் செய்து மகாவிஷ்ணுவிடத்திற் பெற்றுவைத்திருந்த ‘காராயணாஸ்திரத்தை யெடுத்து மனப்பூர்வகமாக தூபதீப நைவேத்தியம் முதலிய பூசைகளை நிரப்பிவணங்கிப்போற்றி ஒபடைகளுக்கரசே! அதோ நிற்கின்ற பூதகணத்தலைவனுடைய சிரத்தைக்கண்டித்து அவன் பிராணனை யுண்வொக்கடவையென்று வேண்டி அதிகவேகத்தோடும் பிரயோகித்துக் களித்துப்பார்

த்திருந்தனன். அவ்வஸ்திரமானது வெளிப்பட்டவுடனே தடத்தகாய மாய்ப் பிரகாசித்து அனலியிறைத்துப் பலகோடி அண்டரங்களோப்ப டைத்துக் கோடியிடிகளோப்பலக் குமுறிளரிந்து புகைந்துகொண்டு எங்குந்தன்மயமாய் அதிக மகிமைகளைக்காட்டிச் சீறி இரைந்து பகை வனெங்கே யென்று தேடிச் சமீபத்தில் வந்தமாத்திரத்தில் அதையுங் குரூரனவன் விநாயகமூர்த்தியினுடைய கடாட்சத்தினுல் ஓர் கவள மாக விழுங்கினன். அவ்வதிசயத்தைத் நாரந்தகன் கண்டு பிரமித்துமுன் னம் அளவற்ற மகிமைகளையுடைய பலவாயுதங்களை விடுத்தோம். அவைகளெல்லாம் அவன்மீது குறிதப்பாது சென்றும் பயன்பெறாமல் நாசங்கிப்போயின. பின்னர் மகாகோபாவலங்களினுல் கிடைக்கப்பெற் றிருந்த ஒப்பற்றதேவாஸ்திரங்களை விடுத்தோம். அவைகளெல்லாம் பதினுக்கு ஒன்றும்விடாமலே கனிந்தவாழைக் கனியைப்போல உட் கொண்டனன் இனியாம செய்யவேண்டிய முயற்சிகளென்ன விருக் கின்றது. இவன் செய்கைகளைப் பார்க்குமிடத்தில் மகா அற்புதமாக விருக்கின்றன ஆயினும் இவனுடைய நிறத்தை இன்னு மறிவோமெ ன்று ஆக்கிரமித்துக் கோடையிடியைப்போலக்குமிறி அடா பூசப்பய லே! நீயோ என்னை வெல்லவல்லவன். இதோஉனது பிராணனைவாங்கி யமலோகங் குடியேற்றுகின்றேன் பாரென்று வசைமொழிகளைப்பேசித் தனக்குப்பிராப்தமாய்வைத்திருந்த யாவராலுந் தடைசெய்தற்கரிய பாசுபதாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகிக்க கோர்த்தனன். அவ்வா றெடுத்துப் பிரயோகிப்பதன் முன்னங்குரூரனவன், அவ்வவுணபாத கனைச் சகட்டினுடு மெடுத்துச் செண்டைப்போல அதிவேகமாய்ச் சுழற்றி ஆகாயத்திலெறிந்த அவன்மீட்டும் பூமியில் விழுவ தன்முன் அங்குநிறைக்கணகபபட்டிருந்த காசிராசனையும் அவன் புத்திரரையும் அமைச்சர்களையும் அழைத்துக்கொண்டு சென்று அவர்களை மகோற் கடமூர்த்தியினுடைய சந்நிதானத்தின் முன்னர் விடுத்துப் பணிந்த னன். உடனே அரசன் முதலாயினுரும் பணிந்தார்கள், அப்போது மகோற்கடமூர்த்தியானவர் குரூரன் முதலாயினுர்க்கு அநுக்கிரகஞ் செய்து இனிகாமே அவுணராசனைச் சங்காரிக்க வேணுமெனத் திருவு ளங்கொண்டனர். முன்னர் ஆகாயத்தில் எறியப்பட்ட சகடமானது நாரந்தகனுடு சத்தலோகங்கள் வரையிற்சென்று அவ்விடத்தினின் றும் பூமியில்வீழ்ந்து நாறுங்கித்துகளாயது. பின்னர்நாரந்தகன் சிறிது நேரம் மூர்ச்சையாயிருந்து மீட்டுந்தெளிர்தெழுந்து, ஆஆஆஆ! என் னகாரியஞ்செய்தோம். இதுபரியந்தம் மகோற்கடனை உருவத்தினுலும் வயதினுலும் சிறுவனென்றுநினைத்து அவனுடைய பெருமைகளை மறி

க்காமல் மிகவும் இகழ்ச்சிபல்லவோசெய்தனம், அவன் நம் முன்னர் ஒருவனுய் வந்துநின்றான். பின்னர் அவன் தன்னுடைய முகத்தில்நின் றுஅளவற்றவீரர்களை யுண்டாக்கினன் அவ்வீரர்களுள்ளும் ஒருவனே நம்முடன் வந்தெதிர்த்தான், எதிர்த்த அவ்வொருவனும் ஓராயுத மேனுங்கையினுற் றொட்டவனல்லன்? தனது ஆரவாரிப்பு முதலிய வேலுக்களினுலேயே நமது கடல்போன்ற சேனைகளையெல்லாங் கலக்கி வாட்டினன். பர்வதங்களையும் பொடிபடுத்தவல்ல மது ஆயுதங்களை யெல்லாந்தும்சப்படுத்தினன், அளவற்றதவங்களினுற் கிடைக்கப்பெற் றிருந்த தேவாஸ்திரங்களையெல்லாம் வெல்லக்கட்டியைப்போலப் பிடி த்து விழுங்கிவிட்டனன் அவனுண்மையை என்னென்று பேசப்படும் இதுபரியந்தம் அரிபிரமேந்திராதிகளை சயமடைத்தமது பராக்கிரம ங்களை ஓர் நிமைப்போதில் அழித்துவிட்டனன் மகோதரனுடையு முகத்திலுதித்த அளவற்றவீரர்களில் ஒருவனை இவ்வகைத் தானவ னைனல். ஏனைய வீரர்களுடைய திறங்களை யாவராற் கணிக்கக்கூடும், இனிமகோற்கடனை சுதாவில் வந்து யுத்தஞ்செய்ய நேர்ந்தால் யாம் என்னபாடுபடோம், இனித்தேவர்களுங் கண்டஞ்சத்தக்க மாயவித் தைகளினுல் யுத்தஞ்செய்து அச்சிறுவனை அதஞ்செய்யவேண்டுவதே யல்லது மற்றொரு விதத்தினுலவன் மாளத்தக்கவனன்றென்று தீர்மா னித்தது உடனே அளவற்ற பேகரூபங்களைப் உருக்கொண்டு மின்னல் இடிகளைப்பெருக்கி அண்டங்களதிரக்குமுறி யாவரும் பிரளயகாலம் நேர்ந்ததென்று பிரமிக்கும்படியாக யானைகதுதிக்கைபோல் அமோக மாகிய வருஷதாரைகளைப் பொழிந்துகின்றனன்.

அதை மகோற்கடமூர்த்தி கண்டு, இவ்வஞ்சகன்செயல் நன்றுயி ருப்பதென்று உறுத்துத் தமதுவில்லில் அதிகமகிமைகளைப் பெற்றிரு க்கின்ற நீட்சண்ணியமுள்ள சரங்களைத்தொடுத்து ஓ படைகளே? நீங் கள் பிரசண்டமாருதவடிவத்தினதாங்கி வேகமாய்ப்பாய்ந்து தரா தகன் கொண்டிருக்கின்ற மேகவருவங்களை இமைப்போதில் மாற்றிவ ருக்கடவீர்களென்று ஆக்கியாபித்துப்பிரயோகித்தனர். அத்திவ்விய பாணங்கள் வெளிப்பட்ட மாத்திரத்தில் அதிகவேகங்கொண்டு கடை யுகக்காற்றினுமேலிட்டு அண்டகடாகமதிர்ந்து குலகிரிகளுநுண்டிமற் றப்புவனகோடிகள் அல்லோலகல்லோலப்பட்டுத் தயங்கும்படி ஆர்ப் பரித்துத்தாவி, விண்-மண்-திசாதிசைகள் முதலிய விடங்களில் நிறை ந்து உலகமெல்லா மிருளடையும்படி ஆகாயவெளிமுழுவதும் மூடிக் கொண்டிருக்கின்ற மேகங்களையெல்லாம் நிமைப்போதில் நாசஞ்செய் து, பழையபடி உலகங்கள் களித்திருக்க நிறுத்தி, உருவகாமக்கிரியை

களற்றுப், பரபரவஸ்துவாக விளங்கும் மகோற்கடப் பெருமானுடைய சன்னிதானத்தையடைந்தன.

அதற்குமேல் சாந்தகன் ஊழித்தீயினுருக்கொண்டு பூமிமுதல் அண்டகோளபரியந்தம் கொழுந்து விட்டெரியச் சுவாலைவீசிச் சராசரப் பிரபஞ்சங்களையெல்லாம் கொளுத்தியிஞ் சுட்டுஞ்சாம்பலாக்கியுங் கரித்தும் எரித்தும் இவ்விதப் பாடுகளைப் படுத்தியு மிருந்தனன். அதை மகோற்கடமூர்த்திகண்டு கோபித்து, தமது திருக்கரத்திறபற்றி யிருக்கின்ற விஸ்வேயிறுக்கித் தெய்வீகமுள்ள சிவபாணங்களைப்பூட்டி ஓபடைகளே! சாங்காலம் சேர்ந்த காரணத்தினல் அவியுஞ் சமயத்தற்ற விளக்கினைப்போல அவுணபாதகன் அதிகவல்லவையைப் பெற்றவனல் பூமண்டலமும் ஆகாயமுற்றும் நிறைந்தழலுருவாகியிருக்கின்றனன் நீங்கள் சத்தசரகாப் படிவந்தினைத்தாங்கிப் பெருகி அலைகளின் வலியினல் நிமைப்போதில் அதனைக்கரைத்து உருத்தோற்றமு மழித்துத் திரும்பக்கடவீர்க ளென்று பிரயோகித்தனர். அச்சிறந்த பாணங்கள் வெளிப்பட்டவுடன் •பிரளயவெள்ளத்தினும் பதின்மடங்கதிகரித்துப்பாய்ந்து வானத்தையளாவத் திரைகளோடு அண்டங்களை முழங்கி அதிவேகங்கொண்டு பாய்ந்து மண்ணிண்ணெங்கும் அழன்று நின்றதீக்களையெல்லாம் அதப்படுத்தித்தமது சாகர வுருவங்களினின்றுமாறிப் பழையபடி செருக்களத்திற் றிருவிளையாடல் செய்திருக்கின்ற மாகிறைவனைச் சேர்ந்தன.

உடனே சாந்தகன் சராசரப் பிரபஞ்சங்களை வாட்டவல்ல பிரசண்ட மாருதப்படிவத்தினைத் தாங்கி ஓவென்னு மிரைச்சலைக்காட்டி வீறிமேலெட்டி அண்டபுவனங்களி னடிக்குகள் குலுங்குலுங்கு தத்தளிக்கமோதியும், திகைத்து நிற்கின்ற பூதவீரர்கள் பதைபதைத்துக் கைகாலொடிந்தலைபத்தக்கதாக மாறியும், திசைகளனைத்துஞ் செவிடுபடக்கலக்கியும், குலகிரிகள் சிறுதேர்களைப்போ லுருளத்தள்ளியுங், கடல்களைக் கலக்கியும். இவ்விதமான உற்பாதங்களைக்காட்டிப் பேரொலிசெய்து நின்றனன். அப்பாதகன் செய்துவருகின்ற அனர்த்தங்களை லோகநாயகன் கண்டு கோபாக்கினிகொண்டு மன்னுயிர்கள் படிந்துதக்க வருத்தத்தினையொழிப்பதாய்த் திருவுளங் கொண்டவராய் அத்தட்சணத்தில் சூரபமாகிய திவ்வியபாணங்களை ஆராய்ந்தெடுத்து தமது ஒப்பற்ற தனுசிற்பூட்டி ஓகணைகளே! நீங்கள் விசாலமாகிய படங்களை வாய்ந்த பல்லாயிரங் கோடிநாகவினங்களி னுருவங்களைக்கொண்டு தாவி அவுணபாதகன் செய்யும் மாயா வல்வினைகளனைத்தையும் நிமைப்போதி லழித்து மீளக்கடவீர்களென்றேவினர். அம்மாத்திரத்தில் அப்பாணங்

கள் விறிவானத்தெழுந்து பற்பல சிங்களைக்கொண்டிருக்கும் படங் களை விரித்துவிஷச்சுவாலை பெருகப் புஸ்புஸ் என்று சிறுமேலிட்டு எங் கனும் பரந்து நரர்கட் கெல்லாம் யமனீப்போலச் சகல பிராணிகளை யும் அலைத்துத்திரிக்கின்ற அவுணபாதகனுடைய வாயுவின்பெருக்கினை த்தையும் உண்டுவெற்றியுடன் பழையபடிக்கு மகோற்கட மூர்த்தியினு டைய சந்நிதானத்தை யடைந்தன

இவ்விதங்களாகத் தான் கொள்ளுகின்ற வடிவுக்கு ளனைத்தையு ம் மீறவொட்டாம லடக்கிவருவதை நாரந்தகன் நினைந்து நினைந்து மா னமும் வயிரமும் மனதைச்சுட்டலைக்க மண்டியெரிந்து இரவுத்திரா காரமாகக் கோபித்துதியும் புகைப்படலமும் வியத்தக்கதாகப் பெரு மூச்செறிந்து நல்லகாரியம் இச்சிறுவன் சாமார்த்தியங்களை யறிஞிற் போமென்று உறுத்துநூதனமாகிய கோரரூபங்களைக்கொண்டு மகோற் கடமூர்த்தியை வெல்லக்கருதி ஒருபுறத்தில் பலகோடியிராக்கதர்களை உரு வங்களை பெற்றுப் பிரளயவெள்ளத்தைப்போல வளைந்து கொண்டு வம்மவரை அதாவதைப்படுத்திய வுண்மைச் சொற்பமாக வீடமாட் டோம், பாலகனுக விருந்தபோதிலும் இரங்கோம். எத்தலங்களிலோடி யொளிப்பினும் தொடர்ந்து வாட்டுவோம். சிறைச்சாலையி லடைத்துவ ருத்துவோ மெனப் பல வசைமொழிகளைப்பேசிச் சத்திசூலம் பிண்டி பாலம் கப்பணம்கணிச்சி சக்கிரம் தண்டாயுதம் குந்தம் வளைகடி முத லிய ஆயுதங்களை யுமோகமாகச் செலுத்தியும், ஒருபுறத்தில் பூதங்க ளாகவந்து பர்வதங்களை வீசிக்கர்ச்சித்தும், ஒருபுறத்தில்எமனீப்போ ல அளவற்ற வரூவங்கொண்டு நின்று ஆவ் ஆவென வாயைத்திறந்து மேலிட்டும், ஒருபுறத்தில் பேய்க்கூட்டங்களாக நின்று விழுந்த ளான வை அனலையொப்பக்கார்நி வாய்களில் அனற்பொறிகளை யிறைத்துச் சீறியும், ஒரு புறத்தில் புகைப்படலங்கள் மேலிட பிரளயத் தீயுருக் கொண்டு அதிக ஒசை யெழுமண்டியெரிந்து வாட்டியும், ஒருபுறத்தில் பிரசண்டமாருதமாக ஓவென்னு மிறைச்சலிக்காட்டிச் சகலருந்திடுக் கிட்டு வாடமோதியும், ஒருபுறத்தில் சர்வசங்காரகாலத்து சராசரப்பிர பஞ்சங்களையழிக்குவெழும் பெருவெள்ளத்தைப்போலத் தாவி அலை களைமோதிப் பூதப்படைகளை வாரியலைத்தும், ஒருபுறத்தில் ஆலகால விஷத்தை யொப்பக்கணன்று எதிர்ப்பட்ட வனைத்தையுங் கொளுத்திக் திரிந்தும், ஒருபுறத்தில் காளமாநாகங்களை ளுருக்கொண்டு விஷச்சுவா லைகளைக்கக்கி மேலிட்டுக் கடிந்து வருதியும், ஒருபுறத்தில் மேகசால ங்களாய் மின்னல் இடிகளைப்பெருக்கி அக்கினிகள் முதலிய மழைக ளைப் பொழிந்து சாடியும் ஒருபுறத்தில் கடார்தகாரமாகிய இருள்வடி

வகொண்டு சிதராதியர் நிகைக்கும்படிக்கு மூடியும், ஒரு புறத்தில் இடியேற்றினப்போல அண்டங்களதிரக் குமுறிக் கலக்கியும், ஒருபுறத்தில் வரைகளாய் விழுக்துகொன்றும், ஒரு புறத்தில் சதரங்கசேனைகளினுருக்கொண்டு எதிர்த்து கம்மவரைக்கொன்ற பழியைவாங்குவோம், குத்துவோம், வெட்டுவோம், கொல்லுவோம் உதிரத்தைக்குடிப்போமென்று பல கொடுமைகளைப்பேசி கிரிக்தும், ஒருபுறத்தில் அளவற்ற யானைகளாய் மதங்களைப்பெருக்கி வீறிட்டுத் துதிக்கரங்களில் இருப்புலக்கைகளைக் கொண்டு சுழற்றிச் சாடியும், ஒருபுறத்தில் அனேக சிக்காரர்களைப்போலக் கர்ச்சித்தலைத்தும், ஒரு புறத்தில் பலச்சக்கரவாகப் புள்ளினுருப்பெறுப்பெருங்காற்றைமுச் சிறகுகளை வீசிப் பூதவீரர்களைச் சருகினைப்போலப் பறக்கடித்து மிருந்தனன்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! ஜயசாலியாகிய நரான்தகன் முடித்த மாயவித்தைகளின் பெருக்கத்தையும் கொடுமைகளையும் இன்னவிதமென்று விரித்துச் சொல்லவும் போதுமோ? அம்மம்மா! அவன் சாமார்த்தியங்களுக்கு இவ்வுலகங்களில் ஒரு வரையும் ஒப்புசொல்லக்கூடாது, இவ்விதமாக அப்பாதகன் பற்பல வருவங்களைத்தரங்கி சொல்லக்கூடாத கொடுமைகளையும் அனர்த்தங்களையும் விளைத்து வருவதை எமதையன்கண்டு அவனெடுக்கின்ற வருவங்களுக்கெல்லாம் பதிலாகத் தாமும் வேறுவேறு முருக்கொண்டு அழித்து வந்தனர். அப்பால் நரான்தகன், இனி என்னசெய்ய வல்லோமென்றெண்ணமுற்று இச்சிறுவனை நாம் வெல்லுவதரிது. பராக்கிரமத்தினும் வயதினும் நம்மினும் பெரியவன் ஒருவனிருக்கிறன் ; அவன் வக்தாலன்றியு மாத்திரமிவனை வாட்டுதல் கூடாது. என்று தீர்மானித்து உடனேயிவ் ஒற்றர்களைக்கூவி கடக்தகாரியங்களனைத்தையுந் தனது தமையனுக் கறிவித்து வருவாறு விடைகொடுத்தனுப்பி, அவன் வருகிறவரையில் நாம் சும்மாயிருக்கக்கூடாதென்றெண்ணி மேருகிரிக்கினியான ஓர் வில்லையெடுத்து வளைத்து அதற் கொடுமையான அம்புகளை அளவற்ற கோடிகளாகத் தொடுத்துப் பிரயோகித்தனன். அதை மகோற்கட மூர்த்திகண்டு தாமுமோர் மந்திரகிரிக்கு நிகரான வில்லையெடுத்துக் குனித்து அதில் அவனினுமேலாக அளவற்ற சிலீ முகங்களைதொடுத்துப் பிரயோகித்தனர். பின்னரவ் விருதிறப் படைகளும் வெளிப்பட்ட மாத்திரத்தில் ஒன்றுட னொன்று உராய்ந்து கொண்டு நரற்றிசைகளினுர் தீப்பொறிகளை யிறைத்து நாகங்களை யொப்பச் சீறிக்கொண்டு நெடுநேரம் அளவற்றபோர்களைச் செய்து நிற்கையில் மகோற்கட மூர்த்தியினுடைய பாணங்கள் அவுணராசனுடைய கொடி

யகணங்களே யெல்லாஞ் சின்னபின்னப்படுத்தி அவனுடைய சரீரத்தைச் சலல்லடைக் கண்களாகத் துளைத்து அவனுடைய இரதங்கள், சாரதிகள், பதாதைகள், குதிரைகள், வில்லுகள், அம்புகள், கிரீடங்கள், ஆபரணங்கள், முதலானவைகளே நாசஞ்செய்து அவன் புயங்க ளிரண்டினையும் அறுத்து ஒருபுயத்தை அவன் தந்தைக்கு முன்னும் மற்றொருபுயத்தை அவன் தமயன்முன்னும் கொண்டுபோய்வீசி எம்மை யடிமையாகவுடைய மகேசற்கட மூர்த்தியினுடைய சங்நிதானத்தை யடைந்தன, இவ்விதமாக இரண்டு புயங்களுஞ் மற்று நிற்கின்ற நராந்தகனுடைய தேகபத்தை அந்தரவாசிகளாயிருந்த தேவர்கள் கண்டு ஆனந்தக்களிப்பின் முழ்கிக் களிமிகுதியினுற் கர்த்தனிப்புக ழ்ந்து சுற்பகமலர்களே யிறைததுக் கொண்டாடினர்.

அப்பாதகனுகது வீரதபலத்தினுற் குறைந்த புயங்கள் எதாப்பிரகாரங்கிளைக்க அதனுல் நராந்தகன் முன்னிலும் அதிக உக்கிரத்துடன் உளங்காரிதது நிற்ப அதைக் களிப்புற்றிருந்த தேவராதியர்கண்டு மனந்திடுக்கிட்டுத் தேகமெலியவர்த்து நடுகடுங்கி இவ்விடத்தில் நிற்போமாயின் இன்னு மிப்பாதக னென்செய்வனே வென்னு மேக்கத்தினுற் பலதிசைகளிலும் ஓடத் தலைப்பட்டனர், இக்காரணங் களைத் தேவதேதேவோத்தமனுப் சுயஞ்சோதிவடிவாக விளங்கு மகேசற் கடப் பெருமான்கண்டு நீங்கியபுயங்களே மீளத்தோற்றகின்ற அவன் தவதன்மையும் அத்தவத்தை நாசமாக்கவல்ல காரியத்தையும் நிதானித்து யோசிக்கின்றபோது அசுரேந்திரனுனவன் நாகசர்ப்பத்தினைப் போலச்சீறி மகேசற்கட மூர்த்தியைப் பார்த்து இதனைப் பேசுவதாயினன். ஓ பாலனே! இவ்விதமாக நீ அளவற்றகாலம் உனது சுடுசரங் களைக்கொண்டு எனது உறுப்புக்களைக் கண்டிப்பையாயினும் மீளமீளக் கினைத்து யதாப்பிரகாரம் சண்டை கொடுக்குங் கிறத்தைப் படைத்திருக்கின்ற அதிசூரனுகும் என்னுடன் போராடி இரண்டு க்ங்களைப் பெற்றிருக்கின்ற நீ பற்பல பாணங்களைச் செலுத்திச செலுத்திக் கைகால்களேளாய்த்து இனைப்பதன்றி யாதொரு பிரயோசனங்களையும் பெறவதறிதாய் அத்தகைய அபலனுகிய பிள்ளாய் நீ யோசதித்துச் சண்டை கொடுக்கவல்லே யான்பூருவத்தில் சிலபிராணைக் குறித்து அளவற்ற தவங்களைச்செய்து பெற்றிருக்கின்ற சிறந்தபேறுகளைக் கேட்டதில்லையோ! உன் தகப்பனே யொத்தவன் எனது மனவுறுதிக்கு மெச்சிப் புகழ்ந்திருக்குங் காரியங்களே எவ்வளவும் எண்ணிப் பார்த்தவனல்லே. சற்றுங் காணகாரியங்களைப் பகுத்தறியும் விவேகம் இன்னமும் விளங்காத பாலனுதலால் போராடி அழித்துப்போக

லாமென நினைத்துச் சிலபூதரைக் கூட்டிக்கொண்டு துரிதமாக வந்து விட்டனீ, பிள்ளே மைப்பருவத்தினுல் கொண்ட தூணிவு உனது பிராணபரியந்தம் வந்து நேர்ந்துவிட்டதை, நீ இன்னும் அளவற்றபுகங்கள் வருந்தித் தலேகீழாய் நின்று பொருந்தபோதினும் யான் பின்னிடைப்பட்டவனன்று. ஆகலால் நீ உதவிசெய்திருக்கிறபடிக்கு என்னே முடிக்க உன்னலொருபோதும் முடியாது, உன்னேப் பெற்றவனுலும் மாவதில்லே. இந்நிமிஷத்தி லுன்னேப்பற்றிக் கசக்கி, வாயிற்போட்டுக்கொள ளவல்லேனுயினும் குழந்தைப் பருவத்தினுல் முன்பின் போசிபாமல் வந்துவிட்டனேயென்றும் உன்பிதாவானவர் நம்மிடத்திற் பரிபூரண கடாட்சம் வைத்திருப்பதனுலும் மனம்பொறுக்கிதன், இதைக்கருதி இந்நிமிஷத்திற் பிராணனேத் தப்பித்துக்கொண் டோடுவையாயின் அரி திற்பெற்ற புனது தாய்தாதையர்க்குப் பிள்ளேயாய் இன்னுந் சிலபோ தும், பிழைத்திருப்பை, தெரியாமையிஞல் நீ செய்திருக்கின்ற குற்றங் களே மன்னித்து விட்டுவிடுகிறேன் என்று சொல்லினன். இவ்வாறு தைகளனித்தினேயுங் கர்தகன் திருச்செவிகளிலேற்றுக் குமுகைக செய்து அவுணராசனே! நீ எனனசெய்யப் போகின்றனே நீ சனித்த போது விதித்தகாலங்கழிந்து உன்னுயிர பிராணனேயுங் கொண்டு போகப் பின்புறத்தில் இயமனுங் காத்துத் திரிகின்றனன்? விவேகமற் றவனே வீண்வார்த்தைகளே யாடிவதிற் பயனென்னே? இனியோர் கணப்போதினுள் உனது உயிரை வாங்கவிருக்கின்றேன். அதை நீயே காணவிருக்கின்றனே உனக்குச சிவபிரான்கொடுத்த மேலானவரங்க ளெல்லா முடியுங்காலம் வந்துசேர்ந்ததென்று திருவாய்மலர்ந்து, சிவ பிரான்கொடுத்தருளிய பிரகமமென்னும் மேருவில்லினே இருகுதை களும் பொருந்தவளைந்து அண்டங்களதிரக் குணத்தொனி செய்து சிவபிரான் திரிபுரனுடைய வுயிரைவாட்டிய பாணத்தை அதிற்றொடு த்து ஓ படைகளுக்கரசே! மாயவித்தைகளேச்செய்து புவனங்களே வாட்டுகின்ற இக்கொடிய பாசகனுடைய சிரத்தைவிடாமற் கண்டிதது நிமைப்போதில் மீளாக்கடவையெனப் பணித்து, அவ்வுறை வீரர்களே யெல்லாம்வென்ற ஐயப்பிரவாகத்தினேயுடைய நாரதகன் சிந்திரனுக் கிலக்காகப் பிரயோகித்தனர். அத்திவ்வியபாணம் வெளிப்பட்டமாத் திரத்தில் கோடிசூரியப் பிரகாசத்தினேப் பரப்பிச் சண்டமாருதமும் மஞ்சப்பாய்ந்து தரிபாக்கினியை வீசி விஷங்களேப்பெருக்கிப் பலதே வாஸ்திரங்கள் முதலிய வுற்பாதங்களேப் படைத்துவிட நாகத்தினே யொப்பச் சீறிச்சென்று அவுணராசனுடைய சிரத்தைக் கண்டிதது,

அதனை அவன் தந்தையினுடைய முகத்தின்முன் கொண்டுபோயெறிந்து, மீட்டும் சமதாகர்த்தன் திருக்காத்தி லமர்ந்தது அந்நிமிஷத்தில் அவனுடைய தபோபலத்தினால் மீட்டும் பழையபடி சிரமுண்டாகப்பெற்று, இரண்டு புயாசலங்களோடுந் தட்டித் தேவர்கள் சூரியராகியர்கள் குலைகுலைந்து நடுநடுங்கி வாடத்தக்கதாக ஆர்ப்பரித்தனன்.

அவ்வற்புதத்தை மகோற்கட மூர்த்திக் கருகிருந்து பார்த்துக்கொண்டிருக்கின்ற வீரர்களுங் காசிராசன் முதலானவர்களுங் கண்டு ஐயையோ! இப்பாதகனுடைய சிரமானது இவ்வளவு அரிதிற்றுணிபட்டுஞ் சிவபெருமானுடைய வரத்தினால் மீட்டும் மூனைத்து நிற்குமானால் இவன் எவ்விதத்தில நாசப்படுவதென்று கலங்கி வாடினர்கள். பின்னர் - ஆக்கவும், காக்கவும், அழிக்கவும் வல்ல எமது மகோற்கட மூர்த்தியானவர் அவன் பேற்றிருக்கின்ற வரத்தின் மகிமையைத் திரிலோகங்களினும் பிரகாசிக்கச் செய்ய வேண்டு மென்று திருவுளங்கொண்டவராய், மீட்டும் தமது பிரகாத்திற் பாணத்தைத் தொடுத்துப் பிரயோகித்து அவனுடைய சிரமானது சொர்க்க லோகத்தில் அரசியற்றிவருகின்ற அவன் தமையனாகிய தேவாந்தகன் முன்னர் விழும்படி செய்தனர். உடனே அவனுக்கு வேறொருதலையுண்டாக அதனையும் அவ்வாறே கண்டித்து, அவன் மனைவியர்முன்பு விழும்படி செய்தனர் இவ்வாறு அபபாதகனுக்கு சிரங்கள் பூனைக்குந்தோறும் தாமும் அச்சிரங்களை யெல்லாம் இடைவிடாது கண்டித்து பூலோகம் புவலோகம் - சுவலோகம் - கனலோகம் - தபோலோகம்-மகாலோகம் சத்தியலோகமென்னு மேழுலகங்களினும், அதலம்-விதலம்-சுதலம்-தராதலம்-இரசாதலம்-மகாதலம்-பாதாளம-என்னுங் கீழேழுலகங்களினும், அளவற்ற மலைகளினும், வனங்களினும் நதிகளினும் சமுத்திரங்களினும் வனைய விராசசியங்களினும் பரந்தருளும்படியாக வெதிர்த்து தமது திருக்கரங்களின் பராக்கிரமத்தை யாவரும் தரிசிக்கும் படியாகக்காட்டிப் பின்னர் அவ்வவுணராசன் எவ்வித வுயிர்களினுமுங். எத்தன்மைத்தான ஆயுதங்களினலு மாள்வதரிதென்று தேர்ந்து சகல லோகங்களுந் தம்மிற் காணும்படி சத்தசாகரங்கள், பெரும்புறக்கடல் சூழ்ந்த பூமண்டலங்கள், அதினுட்பட்ட திசைகள், தீவுகள், விண்ணுமிகள் எறும்புமுதல் யானை யீறாகச்சொல்லாநின்ற எண்பத்து நான்குலட்ச ஜீவபேதங்கள், மும்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் இருடிகள், கெருடகாற்தருவர், சித்தவித்தியாதரர் பன்னகர், அவுணர், கின்னரர், கிம்புருடர் ஏகாத சருத்திரர், துவாதசாதித்தர், சூரியசந்திரர் முதலிய கவக்கிரகங்கள், இருதுக்கள்

காலங்கள் முதலான சமஸ்தமும் ஆதிதேவனுடைய மகோற்கட மூர்த்தி யினுடைய திருமேனியி லமைந்ததல்லது வேறொன்றில்லை யெனச் சக லருந் திருட்டாந்தமாகத் தரிசித்துக் கிருதார்த்தராதற்பொருட்டுவிசு வரூபத்தைக் கொண்டருளினர். அவ்வற்புதத்தை ஈசாந்தகன்பார்த்து அளவற்ற வேதாகமங்களினுலுந் தேடிக் காண்பரிய சுயஞ்சோதிப்படி வத்தினை கேரிற்கண்டும், பிரார்த்தவினையின் சம்பந்தப் பட்டவனுய் முன்னம் பாலனுகவிருந்தவினை நம்மை பெதிர்த்து யுத்தஞ்செய்து வெல்ல கிர்வாகமற்று. இப்போது ஓர் மாயத்தினுல் ஓர் பெரிய ரூபங் கொண்டு நிற்கின்றனன், இனிகாமும் இவனைப்போலப் பேருருக்கொ ண்டு வெல்லவேண்டுமென்று யோசித்தவனுய், தானும் உருவத்தில் மாத்திரம் சரியானவனுகி சுவாமியெதிரில் அட்டகாசஞ்செய்து நின் றனன், அக்குறிப்பினை எமகையனறிந்து அவனுடைய மார்பைத் தமது திருவடியின் பெருவிரலின் நகத்தினுலிப் பிளந்து உயிரை விண்ணுலகேற்ற உடலை பூமிமீதுதள்ளி அனிசசப்பூவினைப் போலத் தேய்த்தருளினர்.

இசசபகாத்தைக்கண்ட தேவர்கள் ஆனந்தக்களிப்பின் மூழ்கிப் பஞ்சகற்பக மலர்களை வாரிவாரிசசொரிந்து வாழ்த்திச் செயங்கொண் டாடினர்கள். சூரன்முதலிய வீரர்களுங் காசிராசன் முதலியோரு மிக்க மகிழ்ச்சியடைந்தவர்களாகி விசுவரூபங்கொண்டிருக்கின்ற சுவா மியைப் பலமுறைப்பணிக்கெழுந்து கர்த்தனே! இப்பெரிதான திரு மேனியை அடியேங்கள் தரிசிக்கும் வல்லபத்தினையுடையோ மல் லோம், சுவாமிகள் சுயரூபத்தினைக்காட்டி ஆட்கொண்டருளல் வேண் டுமென்று பிரார்த்தித்தார்கள். உடனே அவர்கள் பயம்நீங்குமபடி யாக அவ்விசுவரூபத்தினை மாற்றிப் பழயபடி மகோற்கட மூர்த்திப் ப டிவத்தினைக்காங்கி சகலதேவைகளும் புடைசூழ்ந்து வருமபடியாகச் சமர்க்களத்தினின்று நீங்கிக் காசிபட்டணத்தை யடைந்து யதாப்பிர காரம் அரசனுடைய அரண்மனையின்க ணெழுந்தருளி யிருந்தனர். அப்போது நராகட்கெல்லாம் அந்தகனென்னும் பெயரினைப்படைத்து சகல வுயிர்களையும் வாடடிவதை கொடுமபாதகனுகிய அவுணராசன் மாண்டமையை ஏனைபதீபங்களுக்கும் அறிவிக்கச் சொல்லுவான் பொலச் சூரியனுவன் மேற்றிசைக்கடலில் அத்தமான மாயினன்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! இது பரியந்தம்மகோ ற்கடமூர்த்தியானவர் நராந்தகனைச் சங்கரித்து முத்திகொடுத்தருளிய திருவிளையாட்டினைச் சொன்னேம். இனி அவன்தமையனுகிய தேவாந்

தகணியுஞ் சங்கரிக்கு முத்திக்கனுப்பிய திருவிளையாடலே பாத்தமாகச் சொல்லுவோங் கேட்பீர்களாக.

சொர்க்கலோகத்திலே விண்ணவராகிய தேவர்களெல்லாம் தனதர நடக்கும்படியாக அரசியற்றிவந்த தேவர்தகனனவன் தன்னெதிரில் திடீலென்றுவீழ்ந்த தலையிலீணக்கண்டு இது நமது தம்பியினுடைய தலீபேபியென்று நிர்மாளித்து தனதுள்ளத்திற் பலவாரூன எண்ணங்களீ யெல்லா மெண்ணிப் பரிதபித்திருக்கின்ற சமையத்தில், அங்கிருந்த சிலர் அத்தேவர்கனை வணங்கி நின்று ஆண்டவனே! இத்தன்மைத்தான தலீகள் அளவற்றனவாப் உநிரத்தீகாடு சகல லோகங்களினும் விழுந்துகொண் டிருக்கின்றன வென்று சொன்னார்கள். அதைக்கேட்டலுந் தேவர்தகன், சிறிதுமனங்தீதரி, இவ்விவான்றபன்றி அனேகர்தலீகளீக் கண்டதாகச் சொல்லுகின்றமையால், அவன் மாண்டவனல்லன், இவ்வளவிலேனும் அவனெடு யுத்தஞ்செய்யக்கவன் சாரிபனுடைய புத்திரனையன்றி வேறெருவனல்லன். காமும இனித் தாமதஞ்செய்யாமல் பூலகத்திற்குச் செல்லவேண்டுமென்று சொல்லிக்கொண் டிருக்கையில் முன்னர் ராக்ஷதகனு லேவிய தூதர்கள் அப்போது வந்த தேவர்தகனைப் பணிந்தெழுந்து ஆண்டவனே! சுகிராசனனவன் தனது புத்திரனுக்கு விவாகஞ் செய்யும் நிமித்தஞ் சாரிப முனிவனுடைய புத்திரனைப் பூசாகிதனுக வழைத்துக்கொண்டுபோனான் போகிறமார்க்கத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த தேவரீருடைய சிறிப தக்ஷதையைக் கொன்றான் அச்சம்பவத்தை அவருடைய பிள்ளீகள் இருவோருங்கண்டு எதிர்த்தார்கள். அவர்களீயும் அப்போதே கொன்றனன். அதைத் தேவரீருடைய தம்பியார்கேட்டு அவ்வரசனழைத்துவந்த சிறுவனைக் கொன்றுவரும்படியாக அவர்கள் தனித்தனியாகவுந் தனீயாகவும் அளவற்ற மாயவுருவங்களீக்கொண்டு சென்று அச்சிறுவனுடையை கரத்திலுல் மாண்டார்கள். அதன்மீது தேவரீருடைய தம்பியார் சகல சேனீகளோடுஞ் சென்று யுத்தஞ் செய்துகொண்டிருந்தனர். இப்போதவர் அளவற்ற யுத்தக்கலீயுல் இனீப்புறீறித் தேவரீரையல்லாமல் சத்துருவைக் கொல்லுவது மிகவுமரிதென்று நிதானித்து இவ்விடத்திற் கெம்மை யனுப்பினரென்று சொன்னார்கள். அவையனீத்தையுந்தேவர்தகன்கேட்டு, மூட்டினுற்றுத்திரியும் பிராமணச் சிறுவனுடைய பராக்கிரமம் மிகவன்று எனக் கோப ரகைகொண்டு உடனே அமைச்சர்களீக்கூவி ஈம்சேனையாவும் யுத்தத்திற் காயத்தமாகும்படி கட்டளீயிடுவீர்களென்று ஆஞ்ஞாபித்தான், அவ்வேனையில் அவர்கள் தந்தையாகிய இரௌத்திர

கேதென்பவன் தன்னெதிரில்வீழ்ந்த தலையை சிவிகையின்மீதேற்றிவந்து தேவாந்தகன் முன்னே வைத்து மைந்தனே உனதுதம்பி காசிராசனுடன் யுத்தஞ்செய்யச் சென்றனன், அவன் அவ்விடத்தில் இறந்தாற்போற் றோணுகின்றது அவனுடைய தலை நமது முன்னேவந்து வீழ்ந்தது அதையும் இதோ கொண்டுவருகிருக்கிறேன் பாரென்று காட்டினன் அதைத் தேவாந்தகன் பார்த்துத் தக்கதைபே தப்பியினுடைய தலை இவ்வொன்றுதானே? அளவற்றவிடங்களில் அளவற்ற தலைகள் விழுந்துகிடக்கின்றன் அதினெனில் அவனுக்குச் சிவபிரான் கொடுத்தருளிய வரத்தினால் தலைகள் அமோகமாக வளர்ந்துகொண்டு வருகின்றன. அவன் இறப்பானென்று தேவர்கள் நினைக்கவேண்டுகில்லை. காலும் அவ்விடத்திற்கு யுத்தஞ்செய்யப்போக விருக்கிறேன் தேவரீர்யாதொன்றிற்கும் கிலேசமுறுமல இருக்கையைச் சேர்ந்திருக்கலாமென்று விடைகொடுத்தனுப்பி இனி நடக்கப்போகின்ற காரியத்திற் கேற்றபடி அளவற்ற சேனைகளை கூட்டிக்கொண்டு அவர்கட கெல்லாம் அனேக வெகுமதிகளைச் செய்து அரண்மனையினின்றும் வெளிக்கொண்டுபூலோகத்தை நோக்கிச் சொல்லுவதாயினன் அப்போது நாங்கள இனுடைய இறத்தலையறிந்த சில அவுணதூதர்கள் வாயினும் வயிற்றினும் மறைத்துகொண்டு, கண்களில் நீர்பெருகக் கோடுகோடெனப் புலம்பி ஆயுவேகத்தினும் மேலிட்டு யுத்தசன்னத்தஞ்சுய் வருகின்ற தேவாந்தகனெதிரிற் சென்று அடியற்ற பனையைப்போல அவன் பாதத்தில் வீழ்ந்து வாயெழாமற் சற்றுநேரங்குழறி கடைசியில் இங்ஙனே விண்ணப்பஞ் செய்வதாயினர்.

ஆண்டவனே! என்னசொல்லப்போகின்றேம், காசிபமுனிவர் புத்திரனே அழைத்துவந்திருக்கின்ற காசிராசனேடு தேவரீருடையதம்பி அளவற்ற சேனைகளுடன் சென்று போராடினர் அதனால் காசிராசன் முதலியோர் பட்டபாட்டை யாவராலுஞ்சொல்லிமுடிவதன்று பின்னர் அவனழைத்துவந்த அப்பிராமணச் சிறுவன் போருக்குவந்து இமைப்போதில் தனது முகத்தினின்றும் அளவற்ற வீராகளை யுண்டாக்கிக் கொடிய சமரை வினவித்தனன். அதற்கும் அவராஞ்சாதி பற்பல மாயவித்தைகளைக் கொண்டு போராடினர். முடிவில் அச்சிறுவன் ஓரேபாணத்தினால் வெட்டியெறியுந்தோறும் வளர்ந்துவந்த சிரங்களெல்லாம் பலபுவனங்களினுஞ் செல்ல வீசித்தனது விசுவரூபத்தினால் அவரைத்தரையிற் குழையும்படி தோய்த்துக் கொன்றுவிட்டிதனதுபடைத்தலைவர்களெல்லாம் புடைசூழும்படியாகச் சயப்பிரதாபத்துடன் காசிநகரைச்சேர்ந்து வளித்திருக்கின்றனன் என்றுசொல்லினர்.

அச்சொல் தனதுசெவிகளில் விஷத்தைப்போல நுழைந்த மாத்
திரத்தில் மனங்நிடிக்கிட்டுத் தயரவெப்பமானது தேகத்தைக் கொ
ளுத்த மயிர்க்கால்களேடாறும் அழற்சுவாலைவீசித் தகிக்க விழிகளில்
நீர்ப்பெருக்குற்று உதிரப்பாய வாய்புலர்ந்து சுவாச மெழுந்தோறும்
புகைப்படலமும் வெப்பமும் தோற்றச் சோர்ந்து பதை பதைத்து
வருந்தி அக்கினியை யுண்டவன்போலக் கனைத்து விழுந்து, கடகட
வெனப்புரண்டு, நிலைதெரியாமல் வழுவிக் குண்டாங்கரணம் போட்டுரு
ண்டு சத்தமேகங்களும் ஒருமித்துக் கர்ச்சிப்பதுபோலக் கதறிக் கரங்
களைத்தட்டி நிலத்திலறைந்து திகைத்து மதிமயங்கித் தனக்குக்கிடை
த்திருந்த வலியும் வீரமும்மானமும் மற்றமுள்ள சிறப்புகளையுமிழந்து
விசனமென்னும் நீர்ச்சுழியிற்பட்டுத்தியங்கி ஓ என்னையனே ! ஓ என்
னப்பனே ! ஓ என்னுசைத் துணைவனே ! தானவர் குலத்தினை விளக்க
வந்த தலைவனே ! உன்னையொத்த வீராதி வீரனைத் தூதாேடி வந்து
மாண்டனரென்று சொல்லுவார்களோ ? ஆதியில் இந்திரனுடைய தேவ
ர்களையும், பூமண்டலத்தினரையும் புறந்தந்தோடப் போர்முனையில்
வென்று தமியேனுக்கு வெற்றியைத் தந்தனையே ? அத்தகைய ஐயசா
லியாகிய உன்னை இத்தினம் சமர்க்களத்தில் ஓர் பாலன் கொல்லவுமா
யிற்றே ? நமக்கு நிகர் பணிகின்ற யமனும் உன்னரிய பிராணனைப் பய
மற்றுக் கொண்டுபோகத் துணிந்தனனே ? சண்டை கிடைத்ததென்று
கேட்டவுடன் மகிழ்ந்து புயாசலங்கள் வானத்தளாவப் பூரித்து மேல்
நடந்துவாட்டும் வீரபரக்கிரம சம்பன்னனே ! சத்திராதிகளென்னும்
மதயானைக் கூட்டங்கட்கு வலியசிங்காயனை யொத்த கண்ணியனே !
உன்னைப்பறிகொடுத்து யாதொரு துணையுமின்றிப் பரதவிக்கின்ற என
அதுணபத்தினிகளைத் தயிரியங்களைச் சொல்லித்தேற்ற வனமிராங்கா
யோ ? உன்னைப் பிதாவைப்போலவும், பிள்ளையைப்போலவும், எக்கா
லத்தும் நம்பியிருந்த என்னைச் சுதந்தமாய்மறந்துவிடலாகுமோ ? உன்
னையே பிராணபதமாக நம்பியிருந்த ஏன்னைச்சற்றும் நினையாமல் இப்
பூவுலகத்திலுள்ள சம்பத்துக்களை விடுத்து சொர்க்கலோக போகத்தி
லிச்சைவைத்து அவ்வாழ்வை நீமாத்திரந்தனித்துப்போய் அனுபவிக்
கவுங் கற்றனையோ ? ஒதுணைவனே ! உனது திருமுகப்பொலிவைஇனி
எக்காலத்திற் காணப்பெறுவேன் ? நம்மை யரிதிற்பெற்ற தாய்தந்தை
யர் இக்காரியத்தை யறிவார்களாயின் என்ன பாடு படுவார்களோ
உனது சரத்தினைக்கொண்டு மதிமயங்கிவந்த தன்தைதக்குத் தம்பி யாவ
ராலு மிறக்கானென்று பல வுறுதிகளைச் சொல்லி யனுப்பினேனே!
ஐயோ! இனி இதைக் கேள்வியுற்றாயின் தமியேனை எவ்விதங்களில்

ங்கிப்பரோ ! யானுந் தோற்றவில்லையே யென்று இவ்விதமகளாகச் சொல்லிப் புலம்புகிறதேவாந்தகனே அருகிருந்த அமைச்சர் முதலாயி னோர்தேற்ற, ஒருவாறு தேர்ந்து மானமுங் கோபமும் மனதைவாட்ட நல்லகாரியம் நல்லகாரியமென்று சிரக்கம்பிதஞ் செய்து எனதுபிராண னீயொத்த அருந்துணைவனைக் கொன்றவீரன் எவனே அவனைக்கொ ன்று வெற்றிமாலைசூடாமல் ஏனையா மாலைகள் முதலாகிய அலங்காரங் களே மறந்தும் வேண்டேன் அதுபரியந்தம் எவ்வலகைப்பட்ட பகிரரி னும் உணவுங்கொள்ளேன் என்று சபதங்கூறி மதயானையை யொத்த வலிபெற்றவர்களாய் அளவற்ற சிரங்களையுங் கரங்களையு முடையவர் களாய் சிங்கம் கரடி புலி யாளி யானை இத்தகைய மிருகங்களின்முகங் களைப் படைத்தவர்களாய் வீரபராக்கிரம சாலிகளாய் இருட்கூட்டத் தினைச் சீய்க்கவல்ல வில்-வாள்-தோமரம்-பிண்டி-பாலம். கப்பணம் முசுண்டிமுதலிய ஆயுதசவரட்சணைகளைப் பெற்றவர்களாய் தன்னைப் புடைசூழ்ந்திருந்த நால்வகைச் சேனைசமுத்திரங்களையுங் கூட்டிக்கொ ண்டு இரணபேரி-சயபேரி-வெற்றிச்சங்கம்-தவண்டி-மல்லரி சல்லரி-தக் கைமுதலிய பொற்பறைகள் அண்டங்களதிர முழங்க தசபடாங்கள் வானத்தையளாவப் படபடென்றசைய வெண்சாமரை ஆலவட்ட முத லிய இராப சின்னங்களைப் பலகோடி அவுணமுதியோர்கள் பலர்திர ஏவி இராசாதிராசனே சயப்பிரதாபத்தைப் பெற்றுவாக் கடவை யெ ன்று பலவாழ்த்துகளைப்பேசிப் புஷ்பங்களே யிறைக்க சுமங்கல மங்கை யர்கள் பற்பல ஆலங்களைச்சுழற்றி நிற்கபட்டுவர் புகழ வித்துவசனங் கள் பாமாலைசாற்ற இவ்விதசம்பிரமங்களோடு பூலோகத்திலிறங்கி அ ளவற்ற மகிமைகளோடுஞ் சிறப்புற்றிருக்கின்ற காசிநகரத்தை யடைந் து சுரான்தனும் மகோற்கடனும் யுத்தஞ்செய்த சமர்க்களம் எங்ஙன மென்று விசாரித்து தெரிந்துக்கொண்டு அங்ஙனந் தனது சேனைகளை யெல்லாம் நிறுத்தித் தானுமிருந்தனன். அப்போது முன்னர்நாசாந்தக ன்செய்த சமர்ச்சுவையினை யறிந்து மேற்றிசைக்கடலில் மறைந்து செ ன்ற சூரியனனவன்மீட்டுக் தேவாந்தகன் செய்யுஞ் சமர்ச்சுவை யினை யுமறிவோ மென்று வந்தவன் போலக் கிழக்திசைக் கூலி ஓதைய தாயினன்.

இப்பால் நரான்தகன் சகோதரனுகிய தேவாந்தகனுடைய வர லாற்றினையறிந்த அவ்விடத்திய தூதர்கள் காசிராசனிடத்தி லோடிப் பணிந்தெழுந்து, ஆண்டவனே ! தேவாந்தக னனவன் அளவற்ற சேனைகளோடு இப்பட்டணத்திற்கு வெளியில் இறங்கி யிருக்கின்று னென்று சொல்லினர். அதை அரசன்கேட்ட மாத்திரத்திற் றடுமாறி

மகோற்கட மூர்த்தியிடத்திற் சென்று பணிந்தெழுந்து அளவற்ற தோத்திரங்களைச்செய்து ஓ சகலபுவனதார கர்த்தனே! சுராந்தகனுடைய தமையனுகிய தேவாந்தகன் யுத்தசன னத்தலுய் சொர்க்கலோ கத்தினின்றும் வெளிக்கொண்டு இங்ஙனம் வந்திருக்கின்றனன். அவனியுன்தேவரீர் சங்கரித்து அடியேனை முற்றினுங் காத்தருள வேண்டு. மென்று பிரார்த்தித்தான் அவனை மகோற்கடமூர்த்தி கிருபையோ டும் பார்த்து அரசனே! அஞ்சவேண்டாமென்று திடஞ் சொல்லி அத்தேவாந்தகன் கண்டு நடுங்கத்தக்க ஓர் பெரிய வடிவத்தினைக் கொண்டு, நான்கு கரங்களும், அக்கரங்களில் வில்-வாள்-பரசு-பாசம் என்னும் நால்வகை ஆயுதங்கள் விளங்க, சித்திபுத்திகளுடனே சிங்க வாகனமூர்ந்து, கொடிகொடை முதலிய சின்னங்களோடு, பற்பல பூதவீரர்கள் புடைசூழும்படி, ஆகாயமார்க்கமாக அப்பட்டணத்தினின்றும் வெளிக்கொண்டு சமர்க்களத்திலிறங்கி அங்குஜயவற்சாகத் தோடு ஆர்ப்பரித்திருக்கின்ற தேவாந்தகனுடைய சேனைமுத்திரங்களைக்கண்டு தமது இடப்பாகத்திலிருக்கின்ற சித்திதேவியை நோக்கிப் பெண்ணே! இதோ நமக்கெதிரில் நின்ற பெரிதான சேனைகளை யழிக்கத்தக்க வேறேதில சேனைகளைச்சிருட்டிக் கடவையென்று திருவாய் மலர்ந்தனர். உடனே சித்திதேவியார் அவ்வாக்கினையைச் சிரமேற் கொண்டு சுவாமியை வலம்வந்து பணிந்து, அணிமா-மகிமா-கரிமா இலகிமா-பிராத்தி-பிராகாமியம்-ஈசத்துவம்-வசித்துவம் எனச் சொல்லா நின்ற அட்டமா சித்திகளை எண்ணிதசத்திகளாக்கி, அவ்வவர்கட் கேற்ற நால்வகைச் சேனைகளையும் ஆயுதங்கள் முதலியவைகளோடு உண்டு பண்ணினர்.

அவ்வதிசயத்தையுற் தேவாந்தகன்கண்டு தனது சேனைத்தலைவர் களைக்கூவி ஓ வீரர்களே! நாம்மிங்குவந்தபின்பு பகைவனுடைய சேனை மிகவும் அற்பமாகவுக்கது. இப்போது அவ்வற்பமும் சத்தசாகரங்க ளைப்போல அளவற்ற சேனைகளாய் விளங்குகின்றன. இத்தன்மைத் தான மகத்துவத்தினைப்படைத்த சேனைகளோடு நாமெதிர்த்துவென் றேமாயின், நமக்கு யழியாதகீர்த்தி யெங்கும்பரவி நிற்கும். ஒருவேளை அழிந்தோமாயினும் அக்கீர்த்தி நமக்குக் கிடைப்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. ஆதலால் நமது சேனைகளை அணிவகுத்திப்பகைவனு டைய சேனைகளைச்சின்னபின்னப் படுத்தக் கடவீரென்று சொல்லி அளவற்ற வெகுமதிகளைச் செய்தனன், அவ்வாறே அப்படைத்தலை வர்கள் சகல சேனைகளையும் அணிவகுத்து யுத்தஞ்செய்வதாயினர்.

அந்தயுத்தத்தினுடைய திறத்தினைத் திருமான்முதலிய தேவர்கள் ஆகாயமார்க்கத்திற் கூடிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்,

இப்பால் இருபதைச் சேனைகளினுமுள்ள வீரர்கள், வெற்றிச் சங்கம் முதலியவைகளை முழக்கித் தமது முடிகளிற் றும்பை மாலைகளைச்சூடி அணிமாசத்தியுடனே கத்தமனும், மகிமாவுடனே-எக்குமனும், லகிமாவுடனே தால் சங்கனும், கரிமாவுடனே-தீர்க்கதந்தனும், பிராப்தியுடனே-,கண்டனும், பிராகாமியையுடனே - காலாந்தகனும், ஈசத்துவத்து-னே-தூம்சயனனும், வசித்துவத்துடனே இரத்தகேசியும் ஏனைய சேனைகளுமாக வெகுர்த்துக் காடாந்தகாரமாகிய இருட் கூட்டமும் அதைநாசப்படுத்தவல்ல சூரியனுடைய கிரண சமூகங்களும் ஒன்றுக்கொன்று போருக்கெழுந்தது போல ஒருவரை யொருவர் விற்களினாலெய்துக்கொடிய நீட்சண்ணியமுள்ள பாணவருஷங்களைப்பொழிந்தும், தோமரம்-பரசு - சூலம்-குந்தம் - குலுந்தடிமுதலிய ஆயுதங்களை வீசியும், இந்திராஸ்திரம்-வருணாஸ்திரம்-வாயுவாஸ்திரம் அக்கினியாஸ்திரம் முதலிய கெய்வப் படைகளைப் பிரயோகித்தும் வானளாவநிற்கின்ற பர்வதங்களைப் பிடுங்கிக் கிறுகிறெனச் சுழற்றிப் பந்தைப்போலக்கடாவியும், திசைகளைமூடிக்களைகளை விரித்திருக்கின்றபோரிற்தமரானகளை வேருடன்பிடுங்கிச் சுழற்றிமோதியும், ஒவ்வொரு ஆகத்தில் நூபிரம்பதினாயிரம் யானைகளைவாரித் தேரணிகள் நூறுங்கி விழுவீசியும், பல இரதங்களைத்தூக்கி அளவற்ற குதிரைப் பந்திகள் நிலத்திறைபட்டுருளச்சாடியும், கணக்கிறந்த குதிரைகளைத் தூக்கி அதிவற்றசேனைகள் சின்னுபின்னப்பட்டு மாளத்தாக்கியும், கழுத்துகளை முறித்தும், கங்களை யொடித்தும், விலாக்களொடியக் குத்தியும்; மார்பிளக்கவறைத்தும், கால்களைத் தட்டியும், விழுந்துருள உதைத்தும், நிமுத்தைகவவிக் கொணடிருக்க மோதியும் வானத் திற்பறக்கஎற்றியும், திசைகளில்வீசியுந், சமுத்திரத்திற்கு மிளவிட வெறித்தும், சுள்ளிகளைப்போல வொடித்தும், பேபாத்தினுல் மேல் விழுந்து ஊட்டியைக்கடித்தும். உதிரத்தைக் குடித்தும். இடித்தும், நூத்தியும், மோதியும், தட்டியும்முட்டியும் மொத்தியும்; பிசைந்தும், கசக்கியும், திட்டிவும், மாதரம்போன்ற புஜங்களை ஒடித்தும். தலைகளைஎரித்தும், மூணைகளைவாய்வழியிற்கக்கருக்கியும் , கண்மணிகளைப்பிடுங்கி ரட்சத்திரவீதிகளி லெறிந்தும், வயிற்றைப்பிறிக் குடர்களைப் பிடுங்கி மாலையாகப்போட்டும், வாரி நிலத்திலறைந்தும், வலிய கால்களினுற்றுதைத்தும், சதைத்தில் இவ்விதங்களாம ஒருவர்க் கொருவர் அமோகமாகிய யுத்தத்தைவளர்த்தனர்.

அக்காலத்தில் இருநிறச் சேனைகளிலும் அளவற்றபேர் மாண்டு இரணக்களமானது அலகளைச்சுருட்டி மோதிக் கொண்டோடவும், மூனிகள் சந்திரகாந்தப்பாறைகளைப்போல இரைந்துகாட்டவும், பிண கலைகள் பெருத்தேதாங்கவும், பூதபசாசங்கள்-காளிக்கூட்டங்கள்-உதி ரமாமிசங்களைத் தெவிட்டவுண்ட வெறியினால் ரணபத்திரகாளியைப் புகழ்ந்து தித்தேதாமென்று நடித்துத் தாணங்கைக் கூத்தாடவும், நாய் நரிகள் இங்குமங்கும் ஊளமிட்டோடவும்-கழுகு-பருந்து - காக்கை கள் பசியற்றுவானவெல்லையிற் கூச்சலிட்டுலாவவுமாகி யிருந்தது.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! அக்காலத்தில் ரணக் களமிருந்த வேடிக்கையை இவ்வகைத்தெனப் பேசப்படுவதோ, இவ் விதமாகச் சித்திதேவியினுடைய சேனைகளுங் தேவர்களுடைய சேனை களும் வெஞ்சினமும, நெடுமொழியுங்கூறித் தத்தமிறைவர்களுடைய கண்களில் நீர்பெருகும்படியாகச் சமர்செய்துமாண்டு வீரசொர்க்கத் திணையே முக்கியமாகக் கருதிப்போராடி முன்னிலையில் சித்திதேவியி னுடைய சேனைகள் மேலிட்டு வடவாமுகாக்கினியைப்போல மண்டி யெரிந்து சத்துருக்களேறி வந்த கோடானுகோடி இரதங்களையு மெ டுத்து ஒன்றடனொன்றைத் தாக்கிப்பொடியாக்கி யெறிந்தும், மிக்க மதம்பொருந்திய யானைகளின் துதிக்கரங்களைப் பற்றி இபகி றெ றெனச்சுழற்றி யானைகளின்மீது மோதிச்சின்னிபின்னப்படச்சாய்த் துடை, குதிரைப்பந்திகளேவாரி குதிரைப்பந்திகண்மீ தெறிந்து தும் சப்படக் கொன்றும், சில தேவசேனைகள் பிரசண்ட மாருதத்தைப் போலச் சுழன்று அளவற்ற அவுணவீரர்களேவாரி அவுண சேனை களின்மீது மோதிக்கண்ட துண்டப்படச் சாடியும், மலைகளேயொத்தப் புயங்களைக்கொண்டு தாக்கிப்பல அவுணர்களே உருட்டியும், வலிய கரங்களினால் கோடையிடிகளேயொப்பக்குத்திக் கொன்றும், பாதங்க ளேச்சுலவி ஒவ்வோருதையிற் கணக்கிறந்த இராட்சதரைத் தரையிற் கிடத்தியும், ஒவ்வோரறையினாற் கோடானுகோடி அவுணவீரர்களை மடித்தும்; பல அவுணவீரர்களுடைய சிரங்களானது பெருங் காற் றிற்பட்டுதிராகின்ற தெங்கின்குலைகளைப்போல இரணக்கள மெங்கும் புரளும்படிக்கு மோதியும்; இவ்வாறு அமோகமாக விருக்கின்றபொழுது கூட்டங்களிற் சிங்காராசர்கள் பாய்ந்தலைப்பதைப்போல எதிர்த்துவந்த அவுணசேனைகளையெல்லாம் அதப்படுத்தி வீறியிருக்கின்ற சமயத் தில, அவுணசேனைகள் மனவுக்கமற்று நிலைகலங்கித் தத்தளித்து இறந்தவர்களைப்போக மற்றையர் பயபீதியினால் தளர்ந்து பின்னிடைவ தை வலியும்வீரமும்பெற்று, அணிமாசத்தியோ டெதிர்த்து நின்ற

கத்தமனென்னும் சேணைத்தலைவன் கண்டமரத்திரத்தில் மண்டியெரிந்துமானமும் கோபமும் மனதைவாதிக்கத் தனதுதேரை அதிகவிரைவோடுந் தூத்திக்கொண்டுவந்து, அவுண சேனைகளையெல்லாம் பயப்பாடதீரென்று ஆதரித்து நிறுத்தித், தனதுபாரித்த வில்லிலெடுத்து நிறுத்திகாணேறறி மணிகள் சத்திக்கத்தக்கதாக வலீத்து விஷத்துவையலிட்டிருக்கின்ற அளவற்ற பாணங்களை ஒன்றனந்தமாகப் பிரயோகித்தார்ப்பரித்தனன். அப்பாணங்கள் வெளிப்பட்டவுடன் வானத்தெழுந்து பற்பல அனற்பொறிகளை யுண்டுபண்ணிக்கொண்டு அதிக வேகத்தோடுசென்று புத்தினிடத்திற் சர்ப்பசங்கணுழைவதைப் போலப் புசபல பாக்கிரமசாலிகளாகிய சேணைகளிற் பாய்ந்து உருவிச்செல்ல அக்கொடுமைக்குத் தேவசேணைகள் ஆற்றப் படாதவர்களாய்க் கலங்கிவாடிப் பின்னிட அதை அணிமாதிசத்தினால் கண்டு, தனதுதேரை அபபாதகனருகிற் முரத்திவந்து அடா இராட்ச்சப்பயலே! என்கலிகிழாகாவிழுகின்றனை? மிஞசவேண்டாம், இனி உன் சிலம்பமொன்று மிங்ஙனம் நடவாது. உன் பிராணனைக்கொண்டு போக யமனைபோலவந்திருக்கின்றேன், இனிபிழைத்து ஊரைப் போவோமென்னும் எண்ணத்தை விட்டுவிடக்கடவை யென்றபல வசைமொழிகளைக் கூறி, வெற்றிமாலை யணிந்திருக்குந் தனது தண்டாயுதமொன்றை யெடுத்துக் கிறுகிறெனச் சுழறறி அவனுடைய தேரின்மீது கோடையிடியைப்போல மோதினன். அப்போதிரதமானது அச்சுவேறுமச்சுவேறாகச் சிதைந்து குதிரைகள் சின்னபின்னப்பட்டு சாரதிகளியுடைது மாண்டதை அவுணவீரன்கண்டு இரவுத்திராகாரமாகக் கோபித்து தனது வில்லிற கணைக்கிறந்த பாணங்களைத் தொடுத்து அடிபேயே! இச்சிறந்த பாணங்களினால் உன்சொத்தை வெட்டிப் பூமியிற்றள்ளிச் சயம்பெருமற்போவேனுயின் இனியென் பிராணபரியந்தம் இவ்வில்லைக்கரத் திறறெடுவதில்லெனபதாக பிரதிக்கினைச் செய்துப் பிரயோகித்தனன். அப்படைகள் வெளிப்பட்டமாத்திரத்தில் அதிகமகிமைகளைக்காட்டி அட்டதிசைகளிலும எரிந்துபுதைந்து கொண்டுவருவதை அணிமாசத்திகண்டு அதிக கோபாவேசத்தோடு அப்பாதகனுடைய தேரிற்பாய்ந்து அவன் காத்திற்கொண்டிருந்த வில்லையொடித்தெறிந்து அவன்கையைப்பிடித்து மேனதூங்கிசசுழற் காற்றினைப்போல வட்டாகாரமாகக் கிறுகிறெனச் சுழற்றி வீசினள் உடனே அக்கந்தமன் விறுப்பினீத்து மடங்கிப்பித்தளைப்போலமதி மயங்கிச்சோர்ந்து பெருங்கூச்சலிட்டுப்பதைபதைத்துத் திடிதடிச்சு மாண்டனன். இவ்வாறே மகிமாசத்தியானவள் தனது வேலாயுதத்தினுல் எக்கும னென்பவனைக் கொன்றாள். லகிமாசத்திகாலசங்கனென்

பலனே ஓர் வாளாயுதத்தினால் வதைத்தனள். கிரிமாசத்தி தீர்க்கதந்தனைச் சூலத்தினால் மாய்த்தனள் பிராத்திரசத்தி கண்டனென்பவனைத் தனது கையினாற்குத்தி நாசஞ்செய்தனள். ஈசத்துவசத்தி அற்சயனென்பவனை ஓரம்பினாற் சாய்த்தனள். வசித்துவசத்தி இரத்தகேசனை ஓர் வச்சிராயுதத்தைவிட்டு வதைத்தனள்.

இவர்களுசெய லிவ்வாறுக, பிரகாமியசத்தியோடு மெதிர்த்துநின்ற காலந்தகனென்பவன் மகாபராக்கிரமசாலியாய் நெடுநேரஞ் சிறிது மிளையாது போர் செய்துவர அவன் வீரத்தினை அச்சத்திகண்டு இவ்வற்பன் நமது படைகளோடு நீடித்து யுத்தஞ் செய்வது வெகுநேரத்தி வெகுநேரத்தியெனக் கோபாதகைசெய்து, தனது சேனைகட்குத் தயிரியங்களைச் சொல்லிக் கூட்டிக்கொண்டு இரதத்தைத் தூரத்திக்கொண்டுபோய் அவுணசேனைகளை நாற்புறத்தும் வளைத்துத் தங்கத் தகடுகள் பூண்டு இருகுதைகளினும் மணிகள் சத்திக்கும் யாரித்தவில்லை வட்டாகாரமாக வளைத்துத் திசைகளதிரக் குணத்தொனி செய்து விஷத்துவைய மிட்டிருக்கின்ற நிவ்வியபாணங்களை அமோகமாகப் பூட்டிப்பிரயோகித்தனள் அப்பாணங்கள் அனலை யிறைத்துப் புகைகளைப்பெருக்கி அதிக உற்பாதங்களை விளைத்துக்கொண்டு தடைக்கஞ்சாமல்மீறி வேகமாய்ப் பாய்ந்து அவுண வீரர்களுடைய சரீரங்களில் சுமுக்கு சுமுக்கென்று தைத்து சல்லடைக் கண்களாகக் துளைத்துவாட்ட, அவ்வுபத்திரங்களை யவ்வீரர்கள் சகிக்கமாட்டாமல் தயிரியத்தை விடுவித்துத் தலைவிரிகோலமாய்த் திசையெங்கணும் பறந்தொளிக்கத் தொடங்கினர். அதைக் காலாந்தகன்கண்டு, மனம்புழுங்கி நம்மவர்களிப்பாடுபடுவதோவெனச் சீறி கண்களி லனற்பொறிகள் சிதறத் தந்தகதாகத் தனது தேரை விசையிற் முரத்திவந்து பிரகாமிய சத்தியையினில் சிறுத்தி மேருவையொத்துப் பாரித்திரா நின்றவில்லை வளைத்துத் திசைகளதிரடங்காரத்தொனி செய்து அரிய தவங்களினும் பெற்று யாவரையுந் தடைசெய்வதற்கரிய கொடிய பாணங்களைத்தேடி யெடுத்துப்பூட்டி இவைகளினால் உன்னரிய பிராணனை வாங்குகின்றே னென்றுபேசிப் பிரயோகித்தனன். அப்பாணங்கள் வில்லிலிருந்து வெளிப்பட்ட மாத்திரத்தில் குறு குறென்னுஞ் சத்தத்துடன் அதிக மகிமைகளைக் காட்டிக்கொண்டு வர்து பிரகாமியசத்தியினுடைய தேரையும் வில்லையும் பொடிபடுத்தின. அக்கொடுமையா லச்சத்தி திடுக்கிட்டு இந்திரியங்கள் லேங்கி வாயுலர்ந்து மனம்மயங்கி சோம்பித் வில்லையும் பாணங்களையுந் தேரில் நழுகவிட்டுத் தேக மெங்கணும் வியர்க்கக் கிலேசித்து, யாதொரு செய்கையுமற்றிருந்தனள் அச்சம்பவத்தை வசித்துவ சத்திய

நின்று இந்த அபலனே எம்மவர்கட்கு இவ்வித இடையூறினைச்செய்ய வல்லவனென்று ஆங்கோபித்துத் தனது தேரை மனோவேகத்தினும் மூர்த்தித் தரத்திக்கொண்டு வந்து சண்டமாருதத் தினைப்போல அவனுடைய தேரிற்பாய்ந்து இமைப்போதில் அவனுடைய கழுத்தை முறித்துத் தலையானது கடலிற்போய் விழும்படி யெறிந்தனள். உடனே மூர்ச்சையாகித் தேரில்விழுந்து கிடந்த பிராகாமிய சத்தியானவள் மூர்ச்சை தெளிந்தெழுந்து பகைவ னெங்கே யென்று தேடினள். அதைமுசலன் பல்லனைச் சொல்லாநின்ற இரண்டு அவுணசேனாபதிகள் கண்டு அளவற்ற சேனைகளோடுங் தமது தேரை வாயு வேகத்தினும் விரைவாகத் தூரத்திக்கொண்டு வந்து விழிகளிற்றீயெழ உறுத்துப் பார்த்து அடிபேய்களே ! சற்றும் எண்ணிக்கை யில்லாமல் எம்மவர் களை இப்படிக்குக் கொல்லத் துணிவீரோ ? உங்கள் பிராணனைக் கொண்டு போகும் யமனைப்போல இங்குவந்திருக்கின்றோம் சற்று நேரத்தில் உங்களைத் தென்னாட்டிற் குடிபேற்றுவோம். இதுவரையில் நீங்களெதிர்த்துப் போராடினவர்களைப்போலீ எங்களை நினைக்கவேண்டாமென்று இவ்விதவீரங்களைப்பேசி வாயுவேகத்தினு மேலிட்டுத் தங்கள்மீது உறுத்து வருவதை வசித்துவசத்திகண்டு, இந்திர தனுசையொத்த வில்லைக் கொண்டு. இடியைநிகர்த்த குணத்தொனியைக் காட்டி மின்னலைப்போன்ற அலகையுடைய சரங்களை சோனைப் பெய்யலுக்குச் சமதையாகச் சொரிந்து ஆர்ப்பரித்தனள்.

அப்பாணங்கள் வெளிப்பட்ட மாத்திரத்தில் காற்றிசைகளினும் வடவா முகாக்கினிகளைப் பெருக்கிக்கொண்டு சென்று அவ்வவுணர்களுடைய தேர்களிற் பாய்ந்து புகை தெரிக்துகொண்டு ஒருவரையும் அப்புறம் இப்புறம் போகவொட்டாமல் வளைத்துக் சரீரமுற்றும் தொளைத்தும், பிளந்தும், கண்டதுண்டமாக வெட்டியும், கால்களைத் தரித்தும், புசங்களைச்சரித்தும், மார்பை பிளந்தும், சிரங்களைக கண்டித்தும், வயிற்றைப்பீறிக் குடர்களை யிறைத்தும், மேருவைப்போலப் பரித்திருக்கின்ற தேர்களெல்லாம் அச்சொடிந்து வண்டிகளுநுண்டு மச்சுகள் நுறுங்கிக் கொடிங்கைகள் துகள்பட்டுக்கொடை கோடி முதலிய வைகள் பறந்து போகும்படி காசப்படுத்தியும், நீலகிரியைப் போலக்கறுத்த தேகத்தைப் பெற்றிருக்கின்ற மதயானைகளெல்லாம் வீறிட்டுக்கலங்கி இரத்தின முகபடாமணிந்த மத்தகங்கள் பிளந்துபணையையொத்த துதிக்கைகள் வெட்டுண்டு பிறையை யொப்ப விளங்குந் தந்தங்கள் இறைந்து பரித்த கால்களற்று வீழும்படிக்குத் தும்சப்படுத்தியும், அலகைப்போலத்தாவிச் சமர்செய்யவல்ல பஞ்சல்ட்சணங்களாலாகிய

குதிரைகளெல்லாம் அல்லோல கல்லோலப்பட்டுப் பின்னி விட்டிருக்கும் பிடரி மயிராயுடைய சிங்களரும்து சொர்ன வெண்டயங்கள் கலிக்குங் கால்கள் தறிந்து சாமரங்களே யொத்த வால்கள் பரக்து மாளரும் படிக்குச் சாடியும், இவ்விதமாக இரதகஜதுரகபதாதிகளாகிய சேனைகளே யெல்லாம் அகா அதப்படுத்தின. அக்காலத்திற் பெருகிய உதிரமானது கடலேப்போல இரைந்து அலைகளேவீசிச் சமுத்திரத்திற் பாய்ந்தது. சமர்க்கள முழுவதும் பிணமலைகள் பெருத்துவானத்தையளாவக்குயர்ந்தன. பலகோடிக வந்தங்கள் கூத்தாடின. அவ்வரிய போரிற் பிழைத்திருந்த சில அவுணர்கள் அதிககாயங்களிஞல் மனம் வருந்தி நிலேபெற்று நிற்கபபடாமையால் திகைத்துத் தங்கள் பிராணனேக் காப்பாற்றிக் கொள்ளும்பொருட்டு மானத்தையும் வீரத்தையும் பறிகொடுத்தோடி திசாதிகளிலும், பூவட்டங்களிலும், பர்வதச் சாரல்களிலும், வனந்தரங்களிலும், தீவாந்தரங்களிலும் பதுங்கினர். இவ்விதமாக அவுணசேனைகள் வலியிழந்து பின்னிடுவதையும் தேவ சேனைகள் அலங்கார உயித்தியங்களேச் செய்து சயசாலிகளாய் வீறிக்திரிவதையும் அதிருர்களாகிய முசலனும் பல்லனுங்கண்டு மனம்புழுங்கி கும்மவர்கள் இப்பாடி படுவதோவெனச்சிறி மந்தரகிரியை யொத்துப் பரிர்திருக்கின்ற தங்கள் விற்களே வளைத்துக் குரூரமாகிய அளவற்ற பாண்வித்தங்களேத் தொடுத்து தமது சேனைகளேச் சின்னபின்னப் படுத்திய வசித்துவசத்தியின்மீது கரவேகமாகப் பிரயோகித்தனர். அம்மாத்திரத்தில் அப்பாணங்கள் திருகிகென்றெரிர்து வந்து பலகோடிமைகளே விழுக்க, அதணவசித் துவசத்தி சகிக்கமாட்டாது சிறிது களர்ந்தனள். அத்தளர்ச்சியை அணிமாசத்தி யறிந்துவந்து தனது வில்லில் அளவற்ற பாணங்களேயும, சக்கரம் - பிண்டி - பாலம் - தோமரம் - சூப்பணம்-முசலம்-சூலம்-தண்ட முதலிய படைகளேயுஞ் செலுத்தி ஆர்ப்பரித்தனள். அதற்கு அவ்விரண்டவுணசேனாபதிகளும் இளேயாது காங்களும் பல பாணங்களேயும் படைகளேயும் பதிலுக்குப் பதில் பிரயோகித்து அணிமாசத்தி தனது தேரோடு பின்னிட்டோடும்படி செய்து இரண்களமெங்குஞ் சக்கிராகாரமா யுலாவிக்கொண்டிருந்தனர். அப்போது பிராத்தி சம்பிரும் ஈசத்துவசத்தியும் ஏதென்ன விபரீதமென்று திகைத்து தமது இரதங்களேத் துரத்தி ஓடிவந்து அடா அவுணப்பயல்களே! எம்மை நீங்களோ வெல்ல வல்லவர்கள்? இதோ வுங்களுயிரைவாங்கி யமலோகங் குடியேற்றுகின்றேரும் பாருங்களென்று வசை மொழிகளேப்பேசிக்கொண்டு தங்கள் விற்களில் தேவாஸ்திரங்களேப்பூட்டி ஓபடை கட்கரசே! அதோ நிற்கின்ற அவுணவீரர்களுடைய சிரங்களேக் கண்டித்து அவர்கள் பிராணனேயுண்டு மீண்டுவரக் கடவீர்களென்று சொ

ல்லிப் பிரயோகித்தார்கள். அவர்கள் விடுத்த அவ்விரண்டு அஸ்திரங்களும் வெளிப்பட்டவுடன் தகதகாயமாய்ப் பிரகாசித்து அனலி யிரைத்துப் பலகோடி பிரம்மாஸ்திரம் - வருணாஸ்திரம் - வாயுவாஸ்திரம் - சூபோஸ்திரம் முதலியவைகளைப் படைத்தக்கு முறியெரிந்து புகை கொண்டு எங்குந்தமதுமயமாய் அதிக மகிமைகளைக் காட்டிச்சீறி யிரைந்து காடார்ந்த காரமாகிய இருட்பெருக்கைப் பிரகாசம்பொருந்திய கிரணங்களையுடைய சூரியனனவன் எங்கு மில்லாதபடி மாய்ப்பது போல அவுண சேனைகளை யெல்லாம் நாசப்படுத்தி இரண்டகளமத்தியில் மகாபராக்கிரமத்தோடு வீறியிருக்கின்ற அவ்வவுண சேனாபதிகளுடைய மாயங்களையுஞ் சிரங்களையும் கண்டித்தெறிந்து வானகத்தையில் முழுகி மீட்டுந் தம்மைச் செலுத்திய சத்திகளிடத்திற் சென்று சேர்ந்தன.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! எத்தகையராலுஞ் சகிக்க வொண்ணாத அவுணசேனைகள் இவ்விதமாக இரைந்து பரந்து போனதையும் அவர்களைப் போற்றியிருந்த வீர பராக்கிரம சாலிகளாகிய கணக்கிறந்த படைத்தலைவர்கள் சின்னபின்னப்பட்டு மாண்டதையும், தேவசேனைகளும் பூதவீரர்களும் சயவுற்றராகங்களுடன் களித்து இரணக்கள மெங்கும் எதிரின்றித் திரிவதையும் சகல தேவர்களையும் வென்ற வீராதி வீரனாகிய தேவாந்தகன் கண்டமாத்திரத்தில் வடவா முகாக்கினியைப்போலக் கொதித்துத் தீயும் புகையுமெழ நகைத்துக் கற்பக மலர்களை யணிந்த புயாசலங்களையுடைய இந்திரன் முதலிய தேவர்கள் தங்கள் பதங்களையிழந்து சின்னபின்னப்பட்டு வாடியோடக் கொடிய போரைச் செய்த செயசாலிகளாகிய நமது சேனை வீரர்கள், இக்கினம் அபலராகிப் பூதங்களினலும் படை வீரர்களினலும் இப்பாடு படுவதோ? சகல தேவர்களையும் வென்ற கீர்த்திப் பிரதாபத்தினைப் பெற்ற எனது கண்காணச் சத்துருக்கள் வலியுள்ளவர்களாய்ப், புசபல பராக்கிரமசாலிகளாகில் இராட்சதவீரர்களை வாட்டிச் ஜயம்பெறுவது வெகுகோர்த்தியாக விருக்கின்றது? நடந்த போன காரியங்களை நினைந்து நினைந்து மனம் வருந்துவதினல் பிரயோசனம் ஒன்றுமில்லை, இனி காலதாமதஞ் செய்யாமல் நானே போர் முனையில் நடந்து சத்துருக்களை வதைத்துக்கொண்டு கொடிய போரைச் செய்து ஓர் நாழிகைப் போதிற் சின்ன பின்னப்பட வாட்டிக் கொல்லுகிறேனென்று சபதம்பேசித் தனது குலகுருவாகிய சுக்கிரனை மனதிற்றியானித்தான், உடனே அச்சுக்கிரன் அவனிடத்தில் வந்து அவன் கருத்தின் வண்ணம் இரணக்களத்தில் இறந்து கிடக்கின்ற அவுணசே

சேனைகளெல்லாம் அவன் பெரும்பினன், அதை ஈசத்துவசத்தி கண்டு விழிகளில் வடவாமுகாக்கினி தோன்றும் படியாக ஆலகால விடத்தைப்போலக் கோபித்துத் தனது புருவத்தை நெரித்தனள். அவளுடைய கோபத்தினின்று அதிக இரவுத்திராகாரத்தோடு மற்றொருசத்தி உற்பவித்து சுக்கிரனிடத்திலோடி அவனே யெடுத்து விழுங்கித் தனது வயிற்றில் வைத்துக்கொண்டு ஆகாயமார்க்கமாகச் சென்றனள், அவரால் பிழைத்தெழுந்த சேனைகளெல்லாம் ஈசத்துவ சத்தியினுடைய கோபாக்கினியால் மீட்டு மிறந்துபோனர்கள். அச்சம்பவத்தைத் தேவாந்தகன் கண்டு கோபமிகுதியினற் புருவம் நெற்றியிலேற மண்டியெரிந்து வாயுவேகமும் மனோவேகமும் பிற்படத்தக்கதாகத் தனது தேரை விரைவில் முடுக்கிக்கொண்டு சென்று மகமேருவுக்குச் சமமையாகப் பாரித்துத் தங்கத்தகடுகள் பூண்டிருக்கும் வில்லினை யெடுத்து நாணேற்றிச் சர்வசங்கார காலத்தில் தேவாதி தேவனுகிய சிவபிரான் அண்டரண்ட புவன சராசரங்களை யொடுக்க நினைத்தபோது ஊழிமேகங்ளொன்றுபட்டு வருஷிப்பதைப்போலக் கெலிப்புடன் விற்றிருக்கின்ற அணிமாமுதலிய எட்டுசத்திகள்மீதும் அவர்களுடை சேனைகள்மீதும் அப்பாணங்கள் வெளிப்பட்ட மாத்திரத்தில் கோடையிடிகளைப் பெருக்கி, விழிகள் சுழலினாலீத், தீயைவீசிப் புகழ்ந்து, பற்பலகொடுமைகளைக் காட்டி அதிக மகிமையுடன் பிரசண்ட மாருதத்தைப்போல வேகங்களைக்கொண்டு குறுகுறெனச்சீறிவர, அதை ஐயசாலிகளாகிய பூதசேனைகள் கண்டமாத்திரத்தில் வடவையைப்போலச்சீறிக் குழிபட்டிருக்கின்ற விழிகளில் தீப்பொறிகள் சிதறத்தாவி அஷ்டகுலாசலங்களுக்குச் சமதையாக ஓங்கிநிற்கின்ற பர்வதங்களைப் பெயர்த்தெடுத்துக்கொண்டு தேவாந்தகனுடைய மார்புக்கிலக்காகக் கிறுகிறெனச் சுழற்றிவிவென வீசி ஊழிக்காலத்திற் பெருகும் இடிகளைப்போல ஆர்ப்பரித்தனர். அப்பர்வதங்கள் அதிகவேகத்தோடும் திசைகள் தோன்றுபடிகிறைத்து குமிறிமேலிட்டுச் சென்று தேவாந்தகனுடைய மார்பிற்போய்த் தாக்கிய மாத்திரத்தில் மலையின் மீதெறிந்த வெள்ளரிக் கனியைப் போலத்தூள்பொடியாகிப் பிரயோசனப் படாமற் போயின. பின்னர் பூதசேனைகள் கதை-முத்தலைச்சூலம்-சக்கரம்-வேல்-தோமரம்-பிண்டிபாலம்-எறியீட்டி எழு-மழு-காலபாசம்முதலிய ஆயுதங்களை ஒன்றனாந்தமாகவீசி யுத்தஞ் செய்தார்கள். அவைகளை யெல்லாந் தேவாந்தகனுவன் அளவற்ற பாணங்களைத் தூண்டிப்பொடிபடுத்தி மீட்டும் சூரமாகிய கோடானுகோடி பாணங்களைக் கரவேகங்கொண்டு செலுத்திப்பூதசேனைகளுடைய சரீரங்களை யெல்லாஞ் சல்லடைக் கண்கள் போலா

கும்படி தூண்டினன். அக்கொடுமைக்கு அப்பூதசேனைகள் ஆற்றமா ட்டாது மதிமருண்டு வாடியும் சோர்ந்தும் மரணமூர்ச்சை யடைந்தும் பங்கப்பட்டும் மானமிழந்தோடியும் இவ்விதமாகத் தாவரித்து எதிரில் நின்று போராட வகையில்லாமற் பின்னிட்டனர்.

அச்சம்பவத்தை அணிமாதி அட்டமாசத்திகளுங்கண்டு மனம் பொறுமல் தயிரிய சாலிகளாய்த் தங்களிரதங்களே வாயுவேகத்தினு முந்தித் தாந்திக்கொண்டுவந்து வானியளாவி நிற்கின்ற பர்வதங்களே யும் திசைகள் மூடத்தழைத்திருக்கின்ற மரங்களேயும் தண்டம் பிண்டி பாலம்-எழு மழுமுதலிய ஆயுதங்களேயும் சோணமாரியைப்போல அமோகமாய்த் தேவாந்தகன்மீது சொரிந்து அட்டகாசஞ் செய்தார் கள் அச்செய்கைக்கு இராசாதி இராசன் நகைத்துப் பினாகத்தையொ த்த தனதுவில்லில் அதிகதீட்சண்ணிபமுள்ள பாணங்களே அபாரமா கப்பூட்டிப் பிரயோகித்துத் தன்மீதுவருகின்ற பர்வதங்கள் முதலான வைகளேத்துகள் பறக்தோடத்கண்டித்தும்; துண்டித்தும், தண்டித்தும் சின்னப்பவெட்டியும், தட்டியும், இடித்தும், பொடித்தும், இவ்வித மாக இமைப்போதில் சூரியன்முன் பனிபோல விலக்கி ஆர்ப்பரித்து மீட்டும் ஆயிரக்கோடி காராசங்களேச்செலுத்தி அவர்களேறியிருந்த பரிரித்தேர்களே வண்டில் அச்சுமச்சு குத்துக்கால் கொடுங்கை கொ டிகோடைமுதலிய உறுப்புகள் வெவ்வேறுகச் சிதைந் துருளும்படிக் குச் சாடிவேகமுள்ள குதிரைகளேக் கண்டதுண்டப்படுத்திச் சாரதி களேக்கொன்றும், அவர்களேச் சூழ்ந்திருக்கின்ற பூத சேனைகள்மீது பின்னும் அளவற்ற கடோமாகிய பாணங்களேப் பிரயோகித்தனன். அவ் வாளிகள் தெளிப்பட்டவுடன் புகைந்து தீயையிறைத்துக் குமுகுமென் றும் ஆவ்வீவென்றும் உரப்பிக்கொண்டு அதிவேகமாகவர்து பாய்ந்து பூதசேனைகளுடைய மார்பையும் கண்டத்தையும் முகத்தையும் புயங் களேயும் சல்லடைக் கண்களாகத் தூளேத்தும் கண்டித்தும் பிளந்தும் வெட்டியும் 'இரணக்களமெங்கும் உதிரப் பிரவாகம் பெருக்கெடுத் தோடச்செய்தன. இவ்வாறு தங்கள் இரதங்களும் பூதசேனைகளுஞ் சின்னபின்னப்பட்டுச் சிதறி மயங்கிப்போனதை அட்டமா சத்தி களுள் அணிமாசத்திகண்டு மனம்நொந்து மானமும் கோபமும் மன தையூட்ட வடவா முகாக்கினியைப்போலக் கோபித்து, அதிவேகத் தோடும் தேவாந்தகனுடைய இரதத்தின் பாய்ந்து தனது வாளாயுதத் தைக் கிறுகிறெனச்சுழற்றி அவன் புயத்தின்மீது வீசினள். அப்போ தவ்வாளாயுதமானது அவன் புயத்தின்மீது பட்டுத்துணி பட்டுப்போ யது. உடனே தேவாந்தகனுவன் ஜடியனலே பொப்பக் கொந்தித்து

உருத்தெழுந்து தானுமோர் வாளாயுதத்தை யெடுத்து அணிமாசத்தி யின்மீது வீசினன். அதனை அவள் தனது கையினுற்பறித்து நாற்றி சைகளினும வீர்வீரெனத்சி அவனுடைய சொன்ன மருத்தினிலுள்ள இரத்தினங்களெல்லாஞ் சிதறிச் சரீரமுழுவதும் வெட்டுண்டு பெற்றி யிற்கட்டப்பட்டிருக்கின்ற பட்டமுஞ் சின்னுபின்னப்பட்டு நிலத்தில் உதிரும்படியாகச் செய்தனள். உடனே தேவாந்தகனனவன் மண்டி யெரிந்து சர்ப்பத்தைப்போலச் சிறி வேமிருரு வாளாயுதத்தைக் கரத் திற்கொண்டு அணிமாசத்தியினுடைய நாசியை யறுக்கும்படி நேர்ந்த னன். அதனை யச்சத்தியானவள் தனது கையிலிருந்த வாளாயுதத்தி னுல் துணித்து மீண்டனள். அப்போது தேவாந்தகனனவன் இரவுத் திராகாரமாகக் கோபித்து, அடிபேயே! எங்கே ஓடுகின்றீனை நில்லுநில் லு. யான்வைத்திருக்கின்ற படைகளிலெல்லாம் அற்பமாகிய வோர்வா ளாயுதத்தை ஒடித்துவிட்டோமென்று கொவ்வடையாதே? முன்பு தேவர்களேயெல்லாஞ் சின்னுபின்னப்பட வாட்டி ஜயம்பெற்றிருக்கின் றனான் இப்போதனக்கும் உன்னுடன் வந்திருக்கின்ற இப்பெண்பிள் ளைகட்கும் அஞ்சுவேனென் றெண்ணவேண்டாம், இதோ உங்களனை வரையு மிமைப்போதில் வாட்டி வின்குடி யேற்றுகின்றே னென்று ஆக்கிரமித்து மந்தரகிரியைப்போல விளங்குந் தனது வில்லியெடுத்து நாட்டியிருதுகைகளும் ஒன்றுபடவளைத்து நாணேற்றிக் குணத்தெனி செய்தனன். அத்தினியைக்கேட்ட மகிமாசத்தியானவள் மண்டி யெரிந்து, அனலியொப்பச் சொலித்திருந்தும முண்டைக் கண்களு டைய அவனனே! ஏன் இதற்குள் பொரியைப்போலத் துள்ளுகின் றனை? சற்றும் பயமில்லாமல் எங்கள் முன்னம் இவ்விதவார்த்தைக ளைப் பேசியபடியால், உனக்கு முடிவுகாலஞ் சமீபித்தது இனிப்பத னமாய்த் தப்பித்துக்கொள்ளக் கடவையெனச்சொல்லித் தனதுகரத் திலேந்தியிருந்த சக்கராயுதத்தை விடுத்து அவுணராசனுடைய கொ டையினை நிலத்தில் வீழ்த்தினள். உடனே அப்பாதகன் மானமேலிட் டவனுகித் தனது தேரினின்று நிலத்திற் குதித்து அதிககோபாவேசத் துடன் தண்டாயுதத்தைக் கரவேகமாகச் சுழற்றிக்கொண்டு இடசாரி வலசாரியாகச்சுழன்று தன்னையெதிர்த்து நிற்கின்ற எட்டு சத்திகளை யும் அப்புறமிப்புறம் போகவொட்டாமல் வளைத்துக்கொண்டு ஒவ்வொ ருகுறிவைத்து மோதியும், அவர்கள் மோதலைத் தடுத்தும், ஆட்டுக் கடா வினைபோலச்சிறிது பின்னிடைத்தும், மீட்டுமவர்க ளருகிற்செ ன்று மார்பு புயம் தலை முதலிய விடங்களில் கோடை யிடியைப்போ லத் தாக்கியும், இவ்விதமாக இரணக்களமெங்குஞ் சுழற் காற்றி

னீப்போல வட்டணைவந்து எமனுங்கண்டு நடுங்கும்படிக்குத் தண்டா யுதப்போரினை வரிசைக்கிரமப்படி நடத்தி அகோராயுதத்தினைச் செய் தனன். அந்த யுத்தத்திற்கு அவ்வெண்வகைச்சத்திகளும் ஆற்றமாட் டாதவர்களாய்த்திகைத்து அணிமாசத்தி பலஹீனப்பட்டு மயங்கின் றனள். மகிமாசத்தி காயங்களின் உபத்திரவத்தினல்வருந்தி அக்கித் திருந்தனள். கிரிமாசத்தி மனஆக்கமற்றுப் பிரமித்து நின்றனள். லகி மாசத்தி மிகவும் வருந்தி எங்கினள். பிராத்திசத்தி சரீரம் பதைபதை க்க நின்றனள். பிராகாமியசத்தி எழுந்திருக்கச் சக்திபற்றுக் கிடந்த னள். ஈசத்துவசத்தி தக்கசகாயத்தி லழுந்தினள். வசித்துவசத்தி பல விதமாகவைது பெருமூச் செறிந்தனள். இவ்வாறு சித்திதேவி படைத் தருளிய அட்டமாசத்திகள் மயங்கியும் அக்கித்தும் பிரமித்தும் ஏங் கியும் பதைபதைத்தும், சத்திபற்றும், சோபித்தும், பெருமூச்செறிந் தும், படாதபாடுகளைப் பட்டுப் பின்னிட்டதை விநாயகமூர்த்தியினு டைய வலதுபாகத்தி லிருக்கின்ற புத்திதேவியார்கண்டு தியெழு கதை த்து, ஒருபாதகன் நம்மவரைபல்லாம் இப்பாடு படுத்துவனே வெண் ணமனம் வாதிக்கத் திருமேனி முழுவதும் புழுங்கி மயிர்க்கால்க டோ றும் அனல்வீசக் கொதித்து விநாயகமூர்த்தியினுடைய திருவடிகளி ற்பணிந்தெழுந்தனர். உடனே அவரெதிரில் இரண்டு பர்வதங்களைப ழிஞ்ன முஸ்கலும், மேகமண்டலத்தையளாவிய முகமும், ஆகாயத் தையளாவிய முடியும், அட்டதிசைகளிலும் பரந்து சிவந்திருக்கின்ற சடைகளும், அழலெழச்சிவந்து காட்டுகின்ற விழிகளும், பற்பல ஆயு தங்களேயேந்திய நீண்ட கரங்களும், அடியெடுத்த வைக்குந்தோறும் ஆதிசேடனே நெளியச்செய்யவல்ல பருத்தகால்களுமுடைய ஓர் சத்தி யானவள் வுத்தேவியென்னும் பெயரோடுண்டாகித் தன்னைப் படை த்தருளிய புத்திதேவியாரைப் பணிந்தெழுந்தனள். உடனே புத்தி தேவியார் அச்சத்தியைப்பார்த்து மகளே! இதோ நம்மெதிரில் வீர பராக்கிரமத்தோடு நிற்கின்ற தேவாந்தகனையும் அவனைக் கடல்போ லப் புடைசூழ்ந்திருக்கின்ற சேனைகளையுஞ் சின்னபின்னமாக நாசஞ் செய்து பின்னர் இங்ஙனமீளக்கடவையென்று ஆக்கியபித்து விடை கொடுத்தனர். அச்சத்தியும் அகற்றிசைந்து சென்று தேவாந்தகனு டைய சேனைசமுத்திரங்களில் சகல பிராணிகளையும் வாட்டவெழுந்த ஆலகால விடத்தினைப்போலப்பாய்ந்து சிலரை சின்னபின்னப்பட வா ரிப்பூமியிலறைந்தும்சிலரை ஆகாயவெளியிற்சுழற்றிக் காற்றிற்சருகை யொப்பவீசியும், சிலரைவிண்டு பிரமனுலகங்களில் அலறிவிழச் செலு த்தியும், லரைச் சத்தசாகரங்களிலும் பெரும்புறக்கடலிலுந் தவளைக

னைப்போல மிதக்கும்படிக்குக் கடாவியும், சிலரைத்தூக்கித் தென்னை னியையொப்பச் சூரியனுடைய ரதத்தில்மோதியும், சிலரைத் திசைக டோறும் இறைத்தும், சிலரை அம்மானையையொப்பச் சுலவியெற்றி யும், சிலரைச் சரீரம் நொறுங்கும்படியாக அண்டச்சுவரிற் மூக்கியும், சிலரைப்பந்தைப்போலெறிந்தும், சிலரை யமலோகஞ் சேர்த்தும், சில ரைப் பொன்னுட்டிற் போக்கியும், சிலரை வடவைக் கனலுக் கிரையா க்கியும், சிலரை வாயுமண்டலத்திற் சக்கிராகாரமாகச் சுழல விசியும். சிலரைத் தீவாந்தரங்களி லெறிந்தும், சிலரை லோகமெங்கணும் பரப் பியும். சிலரை வலியபாதங்களால் தேய்த்துக்கொன்றும், சிலரை விரல் களினுலெற்றி மாய்த்தும், சிலரை மண்ணுடன் கலந்துபோக மிதித் தும், சிலரை உதைத்தருட்டி வதைத்தும், சிலரைப்பருத்த கரங்களி னற் பிசைந்தும், சிலரைப் பிணநாரினைப்போலக் கிழித்தெறிந்தும் சிலரைக் கற்பகத்தையொத்த புயங்களினுற்றழுக்கி வாட்டியும், சிலரைப் பாயும்வேகத்தினுல் மாய்த்தும், சிலரை அதட்டிக் கொன்றும், சில ரை வார்த்தையுரப்பிற் சிதைத்தும், சிலரைவெறித்த பார்வையால் மடி த்தும், சிலரை எழுவாயுதத்தினுல் வதைத்தும், சிலரை மழுப்படை யைக்கொண்டு மாய்த்துச் சிலரைக் கொழுவினுலடக்கியும், சிலரை முத்தலைச் சூலத்தினுற் குத்திக் களத்திற் படுத்தியும், சிலரைத் தண் டாயுதத்தினுல் மோதிக் கொன்றும், சிலரை வில்லினுலடித் வீரதலங்கள் பமடியும், இவ்விதங்களாக இரணக்கள முழுவதுஞ் சூறைமாருதம் போலச் சுழன்று சுழன்று தேவாந்தகனுடைய சேனைகளில் ஒருவ ரையுந்தப்பவிடாமல் நாசஞ்செய்து பின்னர் அவனையு மெடுத்துத் தனதுபிலத்தையொத்த வாயிறபோட்டு மெல்ல மெல்ல உமிழ்வீரைப் போல விழுங்கிக்கொண்டு அவ்விடநின்று நீங்கித் தனது தேவியாகிய புத்திதேவியை நோக்கிச்சென்றனள்.

அப்போது யாவராலும் அழியா வரம்பெற்றிருக்கின்ற 'தேவா தகனனவன் சூக்குமவடிவோடு அவள் வயிற்றினின்றும் வாயின்வழி யாக வெளிப்பட்டு உய்ந்தோம் உய்ந்தோமென் றேடித் தனது தா தையிருக்கின்ற காத்திரமென்னும் பட்டணத்தையடைந்து இன்புற்ற தினன். அச்சத்தியுந் தன்னையின்ற புத்திதேவியாரிடத்தில் வந்து பணிந்தெழுந்து கரங்கூப்பி சிரமேற் கூப்பிகின்று அளவற்ற துதிக ளோச்செய்து அன்னையே! தேவரீரிட்டருளிய கட்டளையின்படியே தே வாந்தகனைப் புடைசூழ்ந்திருந்த சேனைகளெல்லாம் மாய்த்தேன் அவனையும் எனது வாயிலிட்டு விழுங்கி வயிற்றில் வைத்திருந்தேன் பின்னாவன் சூட்சும வடிவங்கொண்டு வெளிப்பட்டு ஓடிப்போயினன்

இனிமேலும் அவன் யுத்தஞ்செய்ய வருவானாயின் தப்பாது கொல்லுகின்றேனென்று சொல்லி அங்கனே யிருந்தனள். முன்னர் காத்திராகையைநோக்கிச் சென்ற தேவாந்தகனனவன் அங்குவந்த நிருக்கின்ற தனது தந்தையை யடைந்து பணிந்தெழுந்து கனக்கு நேர்ந்த அபசயங்களைக்கூறி இனி எனது சத்துருவை இமைப்போதில் வெல்லுதற்கு உபாயத்தினை எனக் கருளல் வேண்டுமென்று பிரலாபித்துக் கேட்டுக் கொண்டனன்.

சகல மந்திரங்களிலும் வல்ல இரவுத்திரகேதுவானவன், தமது குமாரன் சொல்லிய வரலாற்றைக் கேட்டு அவனுக்கு வெற்றியைத்தரவல்ல ஓர் மந்திரத்தைத் தனக்குள் ஆராய்ந்து அதனைச் சாஸ்திரவிதிப்படி அதனது பீஜத்தோடும் அனுட்டிக்கத்தக்க முறைமை போலும் அவனுக்குபதேசித்து மைந்தனே! ஒரு வேள்விமுன்னிலையில் இம்மகா மந்திரத்தைச் செபஞ்செய்து வருவையாயின் அவ்வேள்விக் குண்டத்தினின்று சகலமானபேரும் நடுங்கும்படியாக வோர்குதிரை யுண்டாகும். அக்குதிரையின்மீது நீ யேறிக்கொண்டு யுத்தஞ் செய்வையாயின் உடனே ஜயமடைவையென்று சொல்லினன். அக்கார்ணத்தைச் சூரியனுவன் கண்டு பயந்து மறைந்தவன் போலத தனதுகிரணங்களனைத்தையும் ஒடிக்கிக்கொண்டு சென்று மேற்றிசைக்கடலில் குளித்தனன்.


டனே அவுணபாதர்களுடைய மனம்போல எங்கு மிருள் மூடிக்கொண்டது. அன்றிரவிற்றானே தேவாந்தகனனவன் ஆறுகோணமாக ஓர் ஒமகுண்டஞ் சமைத்து அதில் சாத்திரமுறைமைப்படி நீயினைவளர்த்து அவ்வேவமத்திற்கு வேண்டிய பொருள்களனைத்தையுந் தனித்தனியே அதிற்சொரிந்து தனது தக்தையா லுபதேசிக்கப்பெற்ற மந்திரத்தை அனேகமுறை கணித்திருந்தனன். அப்போது அவ்வேமகுண்டத்தினின்று மைநாக பர்வதம்போல மகாபராக்கிரமத்தோடு ஓர்கறுத்த குதிரையானது உலகமெல்லாம் நடுங்கும்படியாக உண்டாயது. அதனைடு அண்டங்களெல்லாம் ககைளினூற்றட்டிப் பெயர்க்கவல்ல வலியும் வீரமுமுள்ள அளவற்ற சூரர்கள் ஆயுதபாணியராயுண்டானார்கள். அவ்வற்புதத்தைத் தேவாந்தகன் பார்த்து மகிழ்ச்சிக்க மார்க்கம் இதைவிடவேறென்ன விருக்கின்றதென்று சந்தோஷித்து அவ்வேள்வியைப்பூரணஞ் செய்து நிறைவேற்றினன். உடனே தனது ஒற்றை வண்டிலைப் பூண்ட தேரில் ஏழுபச்சைக்குதிரைகளைப் பூட்டி நடத்துகின்ற சூரியனுவனை அவ்வேள் விக்குண்டத்தினின்றும் உதித்தகுதிரைபைக் காணுதற்கு வருவான்போலக் கீழ்த்திசைக் கடலில் உதயமாயினன்.

இப்பால் தேவாந்தகனனவன், நித்திய விதிகளை முடித்துக் கொண்டு அறுவகைச்சுவையோடு பிராமண போசனஞ் செய்வித்து சொர்க்கமத்திய பாதாளங்கள், திசைகள், தீபாந்தரங்கள் முதலியவிடங்களில் தான்வைத்திருந்த அளவற்ற மூலப்படைகளை எக்காலத்தில் வரவழைத்து அவர்கட் கெல்லாங்கரி, பரி, தேர், படைக்கலம் முதலிய சிறப்புகளைக்கொடுத்து ஓமகுண்டத்தினின்று முதித்த குதிரையின்மீது ஆரோகணித்து அக்குதிரையோடு முதித்தவீரர்களும் தன்னைப் புடைசூழ்ந்து வரும்படியாக அந்நகரத்தினின்றும் வெளிக்கொண்டு முன்போலவே யுத்தகளத்தை யடைந்தனன். மகோற்கட மூர்த்தியும் முன்னியகாள் அத்தமானகாலத்தில் யுத்தகளத்தை விட்டு அரசனுடைய அரண்மனையின் கண்படுத்திருந்து அத்தினங்காலையில் நித்தியவிதிகளை முடித்துக்கொண்டு யுத்தகளத்தை யடுத்தனர் ஓர் பால்முன்னர் நரான்தகனுடைய யுத்தத்தினு லுண்டான குரூரனும், ஓர்பால் அணிமாதி அட்டமாசத்திகளும், ஓர்பால்பத்தினிதேவியாலுண்டான பௌத்தேவியும், ஓர்பால்சித்தினிதேவியாலுண்டான சேனைகளும் ஓர்பால்மகோற்கட மூர்த்தியாலுண்டான பூகவீரர்களும், தனித்தனியே அணிவகுத்து நின்றார்கள் தேவாந்தகனும தனது சேனைகளெல்லாம் அணிவித்து நின்றனன்

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே? இவ்வாறு இரணபேரீ ஜயபேரி, வெற்றிச்சங்கம் தவண்டை, மல்லரி, சல்லரி, ஆகுளி; சின்னம், எக்காளம், தம்பட்டை முதலிய போர்ப்பறைகள் கோடைகால இடிகளுக்கொப்பாகக் கணகணென் றதிரத்தக்கதாய்ப் புறப்பட்டு வந்த இருவகைச் சேனைகளினும் உள்ள இத கஜ துரகபதாதிகளின் பெருக்கை என்னென்று சொல்லுவேன்? பொன்மயமாகிய வண்டில் அச்சு மச்சு முதலிய சிறப்புகளைப் பெற்ற தேரணிகள் இவ்வளவெனக் கணிக்கப்படுவனவோ? இத்திரமுகபடாம் பிரகாசிக்கப் பிறையைநிகர்த்துக் காட்டுங் கோடுகளில் வயிரப் பூஷணங்களைத் தரித்து இருப்புலக்கைகளைத் தடிக்கரங்களிலேந்தி நீலகிரியையொத்த பாரித்தேதகங்களுடன் மேகங்களுமஞ்சியோட வீறிட்டுச்செல்லும் யானைக் கூட்டங்களோ ஒருவராலுங் கணிக்கப்படாது இரத்தின வெண்டயங்கள் கால்களிற் சத்திக்க அலைகளைப்போலப் பாயும் வேகமுள்ள புரவிப்பந்திகள் அளவிடப்படுவனவோ? வில்வாள் வேல் தண்டம் சூலம் சக்கரம் தோமரம் பிண்டிபாலம் முசலம் கப்பணம் முதலிய பற்பல படைகளைத்தாங்கி வீராவேசத்துடன் வடவையும் ஆலகாலமும் பலவருக்கொண் டெழுவதைப்போற் கொக்கரித்துச் சீறிவரும் படைவீ

ர்களின் பெருக்கைப் பிரமனுலும் நிதானிக்கப்படாது. இத்தகைய சதுரங்க சேனைகளினும் பெருத்துண்டான பலவாத்தியவதிர்ச்சியும் ரதங்களோடுங் கற்கரத்தொனியும் மதயானைகள் வீறிடு மொழியும் புவிப்பந்திகளின் கணப்பிரேனைசையும் படைவீரர்களுடைய ஆரவாரங்களும் ஏகமாபோங்கிப் பிரளய காலத்தைப்போல் மண்ணிண் திசைகளெங்களுஞ் செவிடுபட முழங்கின. ஆகாயத்தை யளாவிச் செல்லும் இரதபந்திகளின் மீது நாட்டியகொடிகளும், யானைகள் மீது விளங்குஞ் சண்டாக்களும், ப்படைவீரர்கள் தாங்கியிருக்கின்ற வெற்றித் துவசங்களும் வானவெல்லையை மூடிப் ப்டபடென்றசைந்தன. இவ்வித ஆடம்பரங்களுடன் சுமார்கள முழுவதும் ஊடுகாட்ட விடமில்லாமல் நிறைந்திருக்கின்ற இருதிறச் சேனைகளு மனவெழுச்சியுடன் போரைக்குறித்து மேலிட்டு இரதவீரர்களோடு இரதவீரர்கள் கைகலந்து கெறகரத் தொனிகளைச் செய்தோதும் பொன்வண்டில்களை யுருட்டி அச்சுக்களைத் தகளபடித்திக் குத்துக்கால்களை நுழக்கிப் பலகொத்து மணிகள் கலகல வென்றசையக் கொடுங்களைச சிதைத்துச் சொரின கல சங்களை நிலத்திலுருட்டிச் சாரதிகளைமாய்த்துப் பூட்டி யிருக்கின்ற புரவிப்பந்திகள், சிங்கரிகைகள், புலிக்கூட்டங்கள், முதலியவைகளைக் களத்திற்கிடத்திச் சிறகற்ற பர்வதங்களுக் கொப்பாக அளவற்ற இரதங்களை இரணக்களம முழுவதுங் குவித்தும், யானைவீரர்கள் மேலிட்டு இருபுறங்களினுமாறி யெலிக்கும் யருத்தமணிகளைக் கலகல வென றசைதாடத் தாக்கி இரத்தினமயமாகிய சித்திரமுகபடாம் போர்த்திருக்கும் மதகசத்தைச் சிதைத்து இருப்புலக்கைகளைப் பணையை யெத்தசையும் பருத்த தந்திகாங்களைச் சர்ப்பங்களைப்போலச் சமர் பூமியெங்களும் புரளத்தரித்து. நட்சத்திர ராசிகளுக் கொப்பாக முத்துக்கள நிசைதோரு மிறையும்படிக்குத் தவளநிறம் பெற்ற வலிய தந்தங்களைப் பிளந்து, சிறியவிழிகளைக் கல்லி யெறிந்து மேகங்களு மஞ்ச வீறிடுக் தொனியைப் பெற்ற பருத்த கழுத்துக்களை வெட்டி, உரலைப்போன்ற பாரித்த கால்களைதகர்த்து, அசைவு பெற்றிருக்கும் வால்களைத் துண்டித்து, நீலகிரிக்கொப்பாக விளங்குங்கரிய உடல்களை இருகூருக்கிக், காளமேகங்கள் வழுவியதுக் கொப்பாக அளவற்றயானைகளையுத்தகள முழுவது வீறிட்டு விழத்தள்ளியும், குதிரை வீரர்களோடு குதிரைவீரர்கள் மலிந்து சத்துருக்கள் திடுக்கிடும்படிக்குப் பிடரிமயிர்களலீலைக்கணக்குங் குரலோசையினைவாய்ந்த கழுத்துகளைத்தரித்துக் சிதைத்துச் சாமரையையொத்த ரீண்டவால்களைக்காற்றிற் பறக்க வெட்டியெறிந்து, வெண்டயங் கல்கல்லென வொலிக்கப்பாயுங்

கால்களை முறித்துக்கடலி னீடத்தெழுப்பி அலைகள் மறியஅதற்கிய வப்போர்க்கள மெங்கணும் அளவற்ற குதிரைகளைமாய்த்தும், பண்ட வீரர்களோடு படைவீரர்கள் மூன்ஈந்து சிரங்களிற் கவித் திருக்கின்ற வயிரமுடிகளைச் சிதைத்து, வீரபட்டங்களைத்தகர் செய்து மூன்னூ ரங்களை தாங்கிக் கலகலென்னு மோசையெழ வதினிக்குங் கழுத்து களை யறிந்து கொடுமைகளைப்பேசும் வாய்களைப் பிளந்து பற்களை யுதிர்த்துத்தியெழ உருத்துப்பார்க்கும் கண்களைக்கல்லி மணிகளிட்டி ழைத்திருக்கும் வாகுவலயங்களைப் பொடிபடுத்திப் பர்வதாகிருதிகர ஓங்கித்திரண்டிருக்கும் புயங்களைச் சரித்து வயிரகவசங்களைக்துகள் செய்து விசாலமாகிய மார்பைப்பிளந்து விற்களையும் பாணங்களையுங் கொண்டிருக்கும் கரங்களைக்கண்டித்து வீரவெண்டயங்களை நூறுத்தெ ரிஷபத்தினைப்போலக் கெம்பீரகாக நடக்குங் கால்களைத் துண்டித்து மூதுகுகளில் இறுக்கியிருக்கும அம்புபெய் குதைகளை அறுத்தெ றிந்து அலைகளி லடங்கியிருந்தபல படைகளைத்தகர் பண்ணி. சண்ட மாருதத்தின் மோதலிற்பட்ட மரங்களைப்போல யுதத்தள முழுவது மளவற்ற பதாதிவீராகளை சின்னபின்னபபட வாடடியும், இவ்வாறு வீராதிவீர்களாய் புசபலபராக்கிரமசாலிகளா யிராநின்ற இருதிறப் படைகளினுமுள்ள நாலவகைச் சேனைகளுங் கலந்து போராடுகையில் அவுணசேனைகள் மனவெழுச்சியுடன் மேலிட்டிருபபதைத் தேவசே னைகள் கண்டு வடவாமுகாக்கினியைப்போலச சிறி இபபாதகர்களு டைய வலிமை அடக்கவேணுமென்று கெக்கலி கொட்டிமரங்கள் பர்வ தங்கள் ஏனைய படைகள் முதலானவைகளைக் கொண்டு தாக்கிய போது அவுணசேனைகளும் தீரமாகக் கொதித்து மின்னலைப்போலப் பளபளத்து விளங்கும் வாளாயுதங்களைவீசி வெட்டியும் சுறியேவல களினற் குத்தியும் பருத்ததண்டாயுதங்களைக் கறகறெனக் சுழற்றிமோ தியும், தங்கத்தகடுகள் பதிந்திருக்கின்ற நீண்ட விற்களை வளைத்து ஈரேணற்றிக் குணத்தொணிகொண்டு விடத்தோலைய விட்டிருக்கின்ற கொடிய பாணவருஷங்களைப பொழிந்தும் கப்பணக் கழுமுன்பிண்டி பாலம் சக்கரம் சூலம் முதலிய படைகளை ஒன்றனைந்தமாகக் கடாவியும் வாட்டுவதாயினர். அக்கொடுமைக்குத் தேவபடைகள் சிறிது மஞ்சா மல் திட்சித்தராய் வடவையைப்போற் பொங்கி வானத்தை யளாவித் திசைகளை மூடித் தழைதிருக்கின்ற மராமரங்களைச் சக்ராதாரமா ச்சுழற்றிக் கைகொண்டமட்டும் மோதியும், பருத்த மலைகளைக்க ளெண்டை யொப்பக் கடாவியும், இருப்புலக்கைகளினுற் சாடியும் தண்டாயுதங்களைக் கொண்டு மோதியும், வேலடிகளை வீசியும் அள வற்ற யுத்தங்களைச்செய்தனர். இவ்விதமாக சயசாலிகளாயெ தேவ



15 மகோத்கடர்



16 வல்லபகணேசர்.

சேனைகளும் அவுணச்சேனைகளும் பின்னிடையாமல் ஒருவரை ஒருவர் வென்றிவேண்டுமென்கிற ஆவேசத்தினால் கைகலந்து போராடி மூண்டிலியில் இருநிறச் சேனைகளினும் அளவற்றபேர் சின்னபின்னப்பட்டு இரணக்களமெங்கணும் மலைகளைப்போல விழுந்து குவிந்தார்கள். அப்போது அச்சமற்களத்தில் மண்டான உதிரவெள்ளமானது தடுமாறிக்கொண்டோடி கடலிற் பாய்ந்து அக்கடலினுடைய கருநீரையெல்லாஞ் செந்நீராக்கியது. அப்பிரவாகத்தில் காக்கை கழுகு பருந்து முதலியவைகள் முழுக்கிக்களித்து வானதைதழுந்து சிறகுகளை யுலர்த்தி வட்டமிட்டன. நாய்நரிமுதலிய மிருகங்கள் மாமிசங்களையும் மூளைகளையும் பிடுங்கி வாரிவாரித்தின்று ஊளையிட்டன. பலகோடி கவந்தங்கள் நாடகசாலைபோல நடித்தன. பூதபிசாசங்கள் காளிக்கூட்டங்கள் பதிதணிந்துக் காங்களைக் கோர்த்துக்கொண்டு பம்பை சுறறியும், வெறிபுரடலிச்செய்தும், நிதிதோமென நடித்தும், படைவீரர்களுடைய புகழைப் புகழ்ந்தும, பாடியுங் கொண்டாடின.

இவ்வாறு யுத்தகளமானது பொலிவுறுமாபடி இருநிறச சேனைகளும் பின்னிடையாமல் அதிதாகமாகிய போரைவிரும்பிதுவரும்போது மூன்னர் மகோற்கட மூர்த்திபா மண்டான சூரனனவன் தனதிசேனைகளில் அளவற்றபேர் மாண்டிருபபதைக்கண்டு தனதிதேரை மிகுன வேகத்தினும் விரைவாகத தூரத்திக்கொண்டுவந்து தேவாந்தக னெதிரில் நிறுத்தி அடா ராட்சசப்பயலே! நேற்றையதினம் ஓர் பெண்பூ தஞ்செய்த போரினுக்குபிப பின்னிட்டோடிப்போயின நீ இத்தினம் மகாபராக்கிமசாலியா யுத்தகளத்தில் வந்து சண்டைகொடுக்க சேர்ந்தனை, இத்தினம் நீ எவ்விதத்தினும் ஊரைப்போய் சேருவோமென்னும் எண்ணத்தை விட்டுவிடக்கடவை, இதோ சற்றுநேரத்தில் உனது யிரையுமமிலோகத்திற் குடியேற்றுவன் பயந்தோடினும் விடமாட்டேனென்று அதிகோபங் கொண்டவனுப்த் தன்கரத்தில் மேருகிரிபை ப்போல் விளங்கும் வில்லை நிறுத்தி நாரியைப் பிடித்து ஒருதரம் டங் காரவேசசையைக் காட்டினன். அவ்வோசையி னதிர்ச்சி கிரியினுள் மண்டலங்களெத்தும் அல்லோல கல்லோலப்பட்டு அவற் றுட்பட்ட பிராணிகள் பொறிகலங்கித் திப்பிமைகொண்டு நின்ற நின்ற விடங்களிற் சோர்ந்து கிடந்தன. இவ்விதமாகக் குரூரனவன் பலவசைகளைக்காட்டி நாணெளியைக் காட்டியமாத்திரத்தில் தேவாந்தகனவன் கோபமிருதியினுல் வடவையைப்போலச்சீறி, அடா பூதப்பயலே! சற்றும் பயமில்லாமல் இவ்வார்த்தைகளை என்முன்னம் பேசினை உனக்

கும் உன்னைச் சேர்ந்தவர்கட்கும் மூடிவுகாலஞ் சமீபித்தது பதனு மாய்த தப்பித்துக்கொள்ளக் கடவையெனச் சொல்லித் தனது கரத் தில் மகதாகிரியைப்போல நிளங்கும் பாரித்த வில்லோகாட்டி நாணேற் றிட்டுக் குணத்தொனி காட்டினன். அத்தொனியினுல் அந்தரவாசிக ளும் மற்றையருரு திகிற்பட்டு மிகவும் வாடி மயங்கினர். இப்பால் குரு ரனனவன் தேவாந்தகனுடைய செய்கைக்கு மெச்சிச் சிரக்கப்பிதஞ் செய்தவனுப்த் தனது கரத்திற்பிடித்த வில்லென்னு மேகமானதுகணை களென்னு மழைதனுலலிப் பெய்ததுபோல அதிக குரூரங்களைப் பெற்றிருக்கின்ற வயிரவாளிகளை அதிமாகமாகச்செலுத்தி ஆர்ப்பரித் தனன் அவைகள் வெளிப்படடவுடன் புகைதெரிந்து அலை வீசி எங்குமபரந்து அதிவேகமாக வரும்போது தேவாந்தகன் தன்னிலலில் அளவற்ற பாணங்களைப் பூட்டிப் பெருமபுறக் கடல்மீது சோணமாரி பெய்வதற்காப்பாகப் பிரயோகித்தருள சிங்கநாதஞ் செய்தனன். அப் பாணங்கள் வெளிப்பட்ட மாத்திரதில ஒன்றனந்தமாகப் பெருகித் தியையும புகைப்படலங்களையும வீசி கிடகிடென்றுக் குமுகுறென்னும் இரைச்சலிட்டுக்கொண்டு மேலிட்டுச் சர்ப்பங்களைப் போலச் சீறி உருகுதப் பாய்ந்து பூமண்டலம் வானவெல்லை அஷ்டதிசைகள் மற் றைப்புவனங்க ளெங்களனும் நெருங்கி ஆரவாரித்திருக்கின்ற கணக்கி றந்த பூதவெள்ளங்களையும் தேவரனிகளையும் யாகைகளு டகங்களையும் புரவிப்பெருக்கையும் வினைதுகொண்டு தாக்குவது போ லு தேவதே வனைகளினுடைய தேவரனிகளினது உருளை-அச்சு-மசசு-கூதலுக்கால் கொடுங்கை முதலானவைகளை வெவ்வேறுகப பின்னப்பட்டுக் குவிந் தும் மதயானைக் கூட்டங்கள் பணையைபோன்றகையுங் திதிக்கை வெலு, பிறையையொத்த தந்தங்களை வேறு, மததளத்தை நிகர்த்தமத் தகமவேறு, உரலினைப்பொருவும் கால்வேறுகக் கண்டிக்கப்பட்டு மலை களாகச் சேர்ந்தும் குதிரைப்பந்திகள் சவரியினைப்போன் றகையும் பிடரிமயிரினைவாய்ந்த கழுத்தகள் தனிபட்டுக் கடிவாளம் பொடி பட்டு அலைகள்போற் றுவங் கால்களறபட்டு சாமரையைப்போன்ற சையும் வால்க ; தெறிபட்டு ரணக்கள மெங்கும் நிறைந்தும் மகா பாக்கிரமசாலிகளாய்ப் பலபடைகளை யேந்திச் சண்டை செய்கின்ற பதாதிவீரர்கள் கவசத்தினை சிரீடங்களைத் தாங்கிய சிங்கள் வெட் டுண்டுவரைகளை யொத்த தோள்கள் சரிந்து மார்பு பிளந்து வயிறு பிறுண்டு குடல்களிறைந்து கால்களகற்று ரணக்கள முழுவதங்குன்று களைப்போலக் குவிந்தும் இவ்விதமாகச் சூருவலிக் காற்றினிடத்தகப் பட்ட மேகங்களைப்போலக் குரூரனுடைய கால்வகைச் சேனைகளும்

ஈராந்தகனுலேலிய சாங்களினுற் கின்னுபின்னப்பட்டு மாளும்போது
திந்திதேவியாலுண்டான அணிமாதி அட்டமா சத்திகளும் இனைத்த
ஈர்களாகி புத்திதேவிபடைத்த பவுத்திதேவியும் அக்கொடுமைக்கஞ்சி
ஈருந்தினுள். மகோற்கட மூர்த்திபாலுண்டான பூதகணக்க ளெல்லா
ம் பயந்து திக்காலொருவரா போடத் தலைப்பட்டனர். இவ்வாறுதேவ
சேணைகளை யெல்லாம் அதப்படுத்திய தேவாந்தகன் அதிக வுற்சாகத்
துடன் ரணக்கள மெங்கும் உலவி வருவதையும் தனது சேணைகள்
பின்னிடுவதையுங் குரூரன் கண்டு தீங்கள் ஒன்றற்கு மஞ்சிவேண்டுவ
தில்லை யெனக் கையமர்த்தி நிறுத்தித் தனதுதேரை அவுணராச னெ
திரிற் ரூத்திவந்து காளகூடத்தைப்போல மண்டியெரிந்து கொல்லை
க்கனியையொப்ப விழிகள் சிவந்து தீப்பொறிகள் குரில் குரிலெனக்
கொட்ட உறுத்துப்பார்த்து பற்களை நெறநெறனக் கடித்து உதட்டை
யதுக்கி மிரிக்காலுகடோறும் அனலெழும்படிபாகச் சர்ப்பத்தைப்
போலச் சீறி நல்லகாரிபம் சுற்றும் எண்ணிக்கை யில்லாமல்லம் வரை
வருத்திய உன்னுனவத்தை இமைப்போதிலடக்கி வாட்டுன்ற னெ
னக் கோபித்துச் சொர்க்கம் மத்தியும் பாதலம் கடல்கள் மலைகள்
திசைகள் தீவாந்தரங்கள் முதலானவைக ளெல்லாங் கலங்கித் திப்பி
மை கொள்ளும்படியாகத் தனது வில்லில் ஊழியிற் பெய்து மேகத்தை
போல அளவற்ற பாணங்களை ஒரு தொடையிற் பூட்டிப் பிரயோகித்
துச் சத்தசாகர வெல்லையினும் அவைக ளிடையிற்பட்ட தீவுகளெங்
கணு நிறைந்திருக்கின்ற கணக்கிறந்த அவுண வெள்ளங்களையும் புர
ளிப் பெருக்கையும் யானைக் கூட்டங்களையும் தேரணிகளையுந் தும்சப்
படுத்தினன். அக்காலத்தில் அவுணராசன் வடவைபோற் சீறித்
தனது வில்லில் அளவற்ற கொடிய பாணங்களைப் பிரயோகித்துச்
சிங்கநாதஞ் செய்தனன். அவைகள் வெளிப்பட்டவுடன் புகைந்தெ
ரிந்து அனற்பொறிகளை யிறைத்து அதிவேகங் கொண்டுவரக் குரூர
னுனவன் தனது வில்லில் அளவற்ற தீட்சணியமுள்ள சாங்களைப் பூட்
டிப் பிரயோகித்துச் சாந்தகனேவிய பாணங்களின் வீரூப்பை யடக்கி
மற்றுரூசரத்தினுல் அவன் கையிலிருந்த வில்லைப் பிடுங்கிபடித்தினன்.
உடனே தேவாந்தகன் மற்றுரு வில்லையெடுத்து அதில் கணக்கிறந்த
பாணங்களைக் குரூரனுடைய உடல் முழுவதுந் தைக்கும்படியாகப் பிர
யோகித்தான். அம்மாத்திரத்தில் குரூரனுவன் கோபதகை செய்து
கல்லது உன் வீரூப்பை இதோ அழிக்கிறே னென்று தீயி
னுல் கொடுமையுற்ற பலபாணங்களினுல் தன்மேல் வருகின்ற கணை
களைத்துகள்படித்தி வடவைத்தீயும். ஊழிகாலமு மஞ்சும்படியான வே

மேற மூன்று பாணங்களினு லப்பாதகனுடைய கழுத்தணிகளையும் இர
த்ன கிரீடத்தையும் செவிகளிலணிந்த குண்டங்களையும் பொடிபடுத்தி
னன். இப்பால் தேவாந்தகனுனவன், அளவற்ற தவங்களினுற் பலதே
வர்களிடத்தினின்றும்.பெற்றிருந்த மணிமுடி முதலானவைகள் சின்
ஞபின்னப்பட்டுப் போகலும் சிவாத்தினத்தையிழந்த நாகம்போலமதி
மயங்கி மானமுங் கோபமும் மனதைவாட்ட ஒருதேரிலென்று தனது
வில்லை இருகுதைகளு மொன்றுபட வளைத்து இனி இவனைத் தெய்வப்
படைகளினுல் வெல்லுவேனெனத் தீர்மானித்துத் திரிலோகங்களுந்தி
கைத்து வாடும்படிக்கு வியாக்கிராஸ்திரத்தை யெடுத்துப் பூட்டித் தன
து மனதினுல் சோடச வுபசாரங்களையுஞ் செய்து பிரயோகித்தனன்.
அவ்வஸ்திரம் வெளிப்பட்ட மாத்திரத்தில் வலிய கால்களையும் வச்சிர
த்தை யொத்துக்காட்டும் நீண்டபற்களையும் பெற்றிருக்கிற பல்லாயிரங்
கோடி வியாக்கிரங்களி னுருக்கொண்டு உலகங்க ளெங்கும் நிறைந்து
பெருமூச்சுக்களைவிட்டு அண்டகோளகையு மதிர்ந்து கிடுகிடாய்க்கும்
படிக்குக் கர்ச்சித்து பிறையைப்போல வளைந்திருக்குங் கூரியகரங்களி
னுல் அளவற்ற பூதர்களை வாரிவாரி வயிற்றைப்பீறி அதாகதப்படுத்து
வதைக் குரூரன்கண்டு, மிசையில் தனது வில்லில் கஜாஸ்திரத்தைப்பூ
ட்டிப் பிரயோகித்தனன். அவ்வஸ்திரம் ஒன்று அளவற்ற கஜங்களாய்
மதங்களைப் பெருக்கி பீறிட்டுத் துதிக்கைகளில இரும்புலக்கைகளேர்க்
கொண்டு சுழற்றிப் பிலத்துவாரங்களை நிகர்த்தவாய்களைத் திறந்துகரு
மாணிலையில் விளங்குந் தருத்திக் கொடபாக விஷச்சுவாலை பெருகப்
புஸ்புஸ் என்று பெருமூச்சுகளைவிட்டு மைகாக பர்வதங்கள் அளவற்ற
உருவிணைக்கொண்டு வந்ததைப்போல மேலிடறி ஆலகாலவிஷமுழு மஞ்ச
ச்சிறி, அஷ்டதிசைகளைத் தாங்கும் ஐராவதமுதலிய யானைகளைப் பிடி
த்துத் தள்ளியி, பூமிக்கச்சாணியாகப் பாதலம் வரையிற்போய் வானம்
வரையி லுயர்ந்திரா நின்ற மகமேருவைக் குலுங்கத்தாக்கிக், கால்க
ளினுற் பெயர்த்து, விழிகளில் வடவாமுகாக்கினியை வீசிச், செவிகளி
னசைவினுல் சண்டமாருதத்தைப் பெருக்கிப், பிலத்திலிருக்கின்ற சே
டனுதியாக ஆசர்கள் திகைத் தேங்கும் படிக்கும் பூமியைக்
கால்களினுற்றுக்கி, அண்டகோள்கை நெக்குவிட் டதிரும்படியரீ
கப் பிறையையொத்த கோடிகளினுல் முட்டி, சொர்க்கமத்திய
பாதலமெங்கும நடுநடுங்கக் கூத்தலிட்டு, அவுணபாதகனேவிய அத்தி
ரத்தின் வலியையொடுக்கிப், பின்னர் அவனையுங் கொல்லுவதாக ஆக்
கிரமித்துச் சென்றது.

* அப்போது தேவாந்தகனுனவன், காலாந்தகனிடம் போலக் கொ
ந்தித்துத்தானிழந்து பெற்றிருந்த சிம்மாஸ்திரத்தைச் சோடச உபசார
ங்களுடன் வழிபட்டுப் பிரயோகித்தனன். அவ்வஸ்திரமானது வெளி
ப்பட்டவுடன் அளவற்ற நாசிங்க வடிவங்களைக் கொண்டு, கெருங்கிச்
ண்டிருக்குஞ் சிவந்த மயிர்களைச் சிலிர்த்து, வடவையைப்போலச்சீறிக்
கொக்கரித்து' விழிகளில் அனற் சமூகங்களைவீசி நாசிகளில் பிரசண்
டமாருதத்தைப் பெருக்கி, உலகங்களனைத்தும் நடுக்கிட்டு நடுங்கும்ப
டிக்கு ஆர்பாட்டங்களைச் செய்துகொண்டு சென்று சூரன் விட்ட க
ஜாஸ்திரத்தைத் தகர்படுத்திப், பின்னர் அவனையும் பாய்ந்து கொல்
லுமாறு சீறிச்சென்றது அப்போது சூரனுனவன் நல்லகாரியம் நல்
லகாரியமென்று நகைத்துச சரபாஸ்திரத்தை விடுப்படி பூஜித்துப் பிர
யோகித்தனன். அத்திவ்வியபாஸ்திரம் வானத்தெழுந்து சீறிக் கணக்கி
றந்த சரபசார்ந்தால வருக்கங்களைக்காட்டி வடவைக்கனலும் ஆலகாலமு
ம் நடுங்கி அஞ்சக்கொத்து அதிவேகத்துடன் சென்று அவுணராச
ன் சிம்மாஸ்திரத்தை நாசமாக்கி, அங்குள்ள அவுண சேனைகளை யெல்
லாம் அகாதகப் படுத்திக்கொண்டிருந்தது. அக்கொடுமையைத்தேவா
ந்தகன் கண்டு தான்செலுத்திய தேவப்படைக ளனைத்தும் பிரயோச
னப்படாமற் பின்னிட்டதையும் பகைவன்படை வீரரிட் டிருப்பதையும்
நிதானித்து, இப்படை முற்காலத்தில் விண்டுவானவர் நாசிங்க வடி
வைக்கொண்டு உலகங்கள தத்தளிக்கச்சிறிய கொடுமையை யடக்கப்ப
ரமசிவ கடாட்சத்தினுல் வீரபத்திரக்கடவுள் திருவவதாரத்தினைக்கொ
ண்ட தெய்வப்படையாதலால் இதனைவிவிரைன்றினுல் வெல்லுவதரிது
நாமும் அத்தகைதாக படையைக் கொண்டே தடைசெய்யவேண்டுமென
யோசித்துத்தானும சரபாஸ்திரத்தை யெடுத்து சாத்திர விதிப்படி
பூஜித்துப் பிரயோகித்தனன். அப்படையும் முன்னர் சூரன்விட்ட ப
டைபைப்போல அளவற்ற மகிமைகளைக்காட்டி யெழுந்து அவுண சே
னைகளெல்லாஞ் சின்னபின்னப்பட வாட்டிக்கொண் டிருக்கின்ற சரபா
ஸ்திரத்துட னெதிர்த்துச் சராசரப் பிரபஞ்சங்க ளனைத்தும் அல்லோக
ல்லோலப்பட்டு வாடி யொடுங்கும்படிக்கு ஒன்றுக்கொன்றுபின்னிடை
யாமல் அகோரயுததங்களைச செய்து கொண்டிருக்கும்போது, பிரமன்
முதலிய தேவர்கள் மானிடர் பாதலவாசிகள் முதலாயினோர் காங்களை
க்கூப்பிப் பத்தி விசுவாசங்களுடன் துதித்து ஓ படைகளுக் காசாகவி
ருக்கின்ற சரபாஸ்திரங்களே ! எறும்பு முதல் யானையீறாகச் சொல்லா
நின்ற சகல பிராணிகளும் வாடிப் பின்னப்பட வொட்டாமல் இரட்சிக்
கவேண்டும். உங்களால் நேர்ந்திருக்கின்ற வருத்தங்களுக்குத் தாபரி

க்க வொட்டாமல் சகல பிராணிகளும் சோருகின்றன. இதணைத்திருவு ளத்திற் கொண்டு கிருபையுற்றுப் பாதுகாக்க வேண்டுமென்று பலவித ங்களினுற் போற்றுவதை அவ்வஸ்திரங்களறிந்து மன்னுபிர்களுக் கிர ங்கி உடனே தங்கள் செய்கைகளே யுள்ளடக்கிக் கோபந்தணிந்து தங்க ளே லிடுத்தவர்க ளிடத்திற் போய்ச் சேர்ந்தன. பின்னர் குரூரனை வன் அவற்றின் செய்கைகளைக் கண்டதிசயித்து அரையிலிருக்கும் உ ரையிற் சொருகிய வாளாயுதத்தைக் கரத்திலேந்தி விரைவிலென்றுதே ரைவிட்டு கிலத்திற் பாய்ந்தனன். அம்மாத்திரத்தில்தேவாந்தகனவ ன் மனந்தளர்ந்து ஐதோ இவன் நிடலென்று ஓ ரெண்ணங்கொண்டு நம்மோடு வாட்போர் செய்ய வருகிறன். இனி யிவனே வாட்போரினு ம் வெல்லுவதரிது இனி யென்ன செய்வோ மென்று போதித்தந்தன தமனத்தில் ஓர் துணிவைக்கொண்டு ஆகாயத்தில்உருத்தோற்றதபடி மறைந்து பூர்வத்தில் தனது தவமுயற்சியினுல் பெற்று வைத்திருந்த மோகனஸ்திரத்தைக் கரத்திலெடுத்துத் தூபதீப நைவேதனிய வி திக ளோனதபூசையில் நிரப்பி மந்திரத்தை யுச்சரித்து ஓதேவாஸ்திரமே நீ இங்கிபிஷத்தில் துரிதமாகச் சென்று நமக்குச் சென்ம வயிரிகளாக த்தோன்றி வருத்துகின்ற தேவசேனைகள் பூதவீரர்கள் முதலாயினு ருடைய அறிவைப்போக்கி வாட்டித் திரும்பக் கடவை யென்று போ ற்றிச் செலுத்திக் குரூரன் முன்னே ஓர் கந்தருவாஸ்திரத்தை யெடுத் தனிட்டனன்.

கேட்டீர்களோ சவனகாதி முனிவர்களே! தேவாந்தக னென்னு ம்மகா கொடும்பாதகன் முதலிலேலிய மோகனஸ்திரமென்னும் படை யோ எத்தகைய வீரபராக்கிரம சாலிகளின்மீதிற் செலுத்தப்படு மாயி னும் கெருங்கியவுடன் அவர் பஞ்சேந்திரியங்கள் நிலைகளிபேபெத்து அறிவை யழித்துப் பிரேதத்தைப்போலச் சோபித்துக் கிடக்கச் செய் யவல்லது, அத்தகைய சிறப்புள்ள வெற்றிப் படையானது வெளிப்ப ட்ட மாத்திரத்தில் உக்கிராகாரமாகக் கோபித்துக் கிரணங்களைப்பரப்பி உலகங்களே மகிழச செய்துலவுஞ் சூரிபனைபையடக்க காடார்ந்தகா ரமாகிய இருளோடிபருக்கிப் பூமியிலிருக்கின்ற பல்லுயிர்களும் நடு நடு ங்கித் தெளிவில்லாமல் அந்தகாரப்போலக் கியங்கிவாடித் தத்தளிக்க த்தக்கதாகச் சிறு நகைத்துக்கொண்டுவர அதன் மகிமைகளையும் வலி மையையும் தேவசேனைகளும் பூதப்படைகளுங் கண்டவுடன் துக்கசாகரத் திலமுழ்ந்திப் பயப்பிராந்தி கொண்டு மனந்திடுக்கிட்டுவாடி மூர்ச்சித்த னர். அவர்கட்குத் தலைவராக விருந்த வீரர்களும் பித்தரைப் போல மதிமயங்கித் தேரைவிட்டு நிலத்தில்வீழ்ந்து சோர்ந்தனர், அணிமாதி

அட்டமாசத்திகளுந் தங்கள் மீது வீறிவருகின்ற பகைவன் பாணத் தைத் தடுக்க வகையற்றவர்களாய்க் காத்திற்பற்றியிருந்த விற்களோடும் பாணங்களோடுஞ் சோரனிட்டுக் கீழ்த்து விழுந்தனர் குரா ஞனவன் இத்தப்படையை எத்த வுபாயத்தினல் வெல்லலாகுமென்று யோசித்து யாதுங் தோன்றுமை லிருந்தனன். அதற்குள் தேவாந்தகன் இரண்டாவ தேவிய கந்தருவாஸ்திரமானது அளவற்ற கந்தருவர்களுடைய வடிவ ங்களைக்கொண்டு சிலது பேரியாழ் - சகோ யாழ் - மகரயாழ் செங் கோட்டியாழென்னும் பலயாழ்களை வாசித்துக்கொண்டும், சிலதுதோ ற்கருவி - துளைக்கருவி - நரம்புக்கருவி - கஞ்சக்கருவி - மிடற்றுக்கருவி யென்னும் பலவாத்தியங்களைச் செய்து கொண்டும், சிலது பயிரவி- தேவகுகிரியை-மேகவிரஞ்சி-குறிஞ்சி-பூபாளம முதலிய பலசங்கீதங்க ளைப் பாடிக்கொண்டும, சிலதுபாவப்-அராகம்-தாளம் என்னு மூன்று மடங்கிய பாதசாத்திர வீதிப்படி அங்கம் உபாங்கம் - பிரத்தியாங்கம்- அலர்முகராகம்-கரப்பிரசாரம் - சிரகாகருமம - காகேக்கரம் - சகரகர ணம் தானகம்-சுத்தசாரி-தேசிசாரி-நியாயம்விருத்தி - பிரசிசாரம்-பூம ண்டலம்-ஆகாயமண்டலம்-சுத்தக்கரணம்-உறுபுலித கரணம்-அகாகாரம் இரேசிதம் ஆகிய இருபது பேதமும், இவற்றுள் எண்வகை நிருத்தமு ம், இரேகாதி அங்கம் பதினறும், கால்வகைக் கரணமும், இருவகை க்கரமும், கால்வகை புரிகை முதலாகிய பதினறும, மடிபபுவகை இ ருபத்தெட்டும், பூசாரிகள் பதினறும், முப்பத்திரண்டு தேசிசாரிகளு ம், முப்பத்தைந்து ககனசாரிகளும், பதினறு பாடபேதங்களும், பத தொன்பது, படகபேதங்களும், இருபத்தெட்டு பாடவகைகளும், பஞ்ச தாளமும் சக்கதாளமும் சவதாளமும் தசதாளப் பிரமாணமும சீதக்க ட்டளை இருபத்தெட்டும் சாளமுதலிய கட்டளை முப்பத்தைந்தும் பிற வும் ஆராய்ந்து கடனமாடிக்கொண்டும், இவ்வாறு ஒவ்வொன்று ம் ஒவ்வொரு விதமாக சாலங்களைக்கொண்டு குரானனதிரிபு சென்று ஆரவாரித்திருந்தன.

அப்போது குரானனவன் வாட்போருக்கஞ்சி மறைந்து போன தேவாந்தகன் மீட்டும் வருவானுயின் அவன் யலியைபடக்கி வாட்டு வோமென்று எண்ணிக் கந்தருவர்கள் செய்யும் ஆடல்களைக் கண்களி க்கப் பார்த்தும் பாடுகின்ற சங்கீதங்களைச் செவிகுளிரக் கேட்டுமெவடி க்கையாயனந்த முற்றிருந்தனன். அக்காரணத்தை ஆகாயத்தில் மறைந் திருக்கின்ற தேவாந்தகன் கண்டு நமக்குச் சகாயகாலம் உண்டாயிற் றென்று களித்து விரைவில் யாவரு மறியாதபடி யுத்த களத்துக்குவந் து வேதாகம விதிப்படி ஓர் திரிகோணகுண்டத்தை யமைத்து அதி

ல் ஓமாக்கினியை மந்திரபூர்வகமாக உண்டாக்கி, ஆயிரம் அசுரர்க
ளோப்பெயியிட்டு, அவர்கள் மாமிசங்களையும் உதிரங்களையும் ஆயிரமா
யிரம் குடங்களில் நிரப்பி, ஆகுதிகொடுத்துப், பஞ்ச முத்திரையென்னு
மாதனத்திலிருந்து அதிக உக்கிரமாக ஓர்யாகஞ் செய்து முடித்தனன்
அப்போதந்த யாககுண்டத்தினின்றும் ஓர் பெரிய பெண் பூதமானது
உலகமெல்லாம் நடுங்கும்படி. ஆகாயத்தை யளாவியபெரியஉருவத்தோ
டுவட்டமாய்ப் பருத்திருக்கின்ற கண்களும், கோரைப் பற்களும், மலை
களுக்கு நிகரான ஸ்தன்னியங்களும், நீண்டமயிர்களும், பிலத்துவார
ங்களையொத்த பெரியவாயும், வடவா முகாக்கினியைவீச வல்ல நெட்
டுயிர்ப்பும், ஆலகாலமும் நடுங்கும்படியான கோபமுங்கொண்டு உற்ப
த்தியாகித் தன்னைவருவித்த தேவார்த்தகணைப் பார்த்து, ஓ இராசாதிரா
சனே! என்னைப் பசியான துஷ்டிக்காலத்திலெழும்புவடவைப்போல்
வாட்டுகின்றது, அப்பசி உன்னிலிட்டு நீங்கத்தக்கமார்க்கத்தினை விரை
வில்யோசித்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டது. அதற்
குத் தேவார்த்தகன் சந்தோஷித்து மகோற்கட மூர்த்தியினுடைய சே
னைபக்காட்டி, ஓ பாரிடமே! இதோ நிற்கின்ற சேனைகளையெல்லாம்
உனது பசியுரத்தினைக் கடவையென்று சொல்லினன். அப்பாதகன்
அச்சொல்லை முடிக்குமுன்னம் அப்பூதமானது மோகனஸ்திரத்தினால்
மயங்கி மூர்ச்சையாகிக்கிடக்கின்ற சேனைகளையெல்லாம் எடுத்து வாயி
லிட்டுக் கொள்ளும்படியாக விரைந்து ஆக்கிரமித்துவர அக்கொடுமை
யையும் முன்னர் யுத்தகளத்தில் நடந்த செயல்களையு மறிந்திருக்கின்ற
மகோற்கட மூர்த்தியானவர் அவ்வுபாதகனுடையமோகனஸ்திரத்தின்
வலியை யடக்க வேண்டுமென்று [redacted] திருவுளங் கொண்டு உடனே ஞானப்
படையை எடுத்து வில்லிற்பூட்டிப் பிரயோகித்தனர். அப்படை வெளிப்
பட்ட மாத்திரத்தில் இருளெல்லாம் நீங்கி ஒரு சூரியனைப்போலச் சொலித்துச்
சிறிப்பாய்ந்து தேவார்த்தகன் செலுத்தியிருக்கின்ற மோகனப்படையை
அதப்படுத்தியது, தெவசேனைகளும் பூதவெள்ளங்களு மடைந்திருக்கி
ன்ற மயக்கங்களெல்லாம் சூரியனைக்கண்ட பனிப் படலத்தைப்போலப்
பறந்துபோயின. சூரனைநிகர் லாடல்பாடல் செய்திருந்த கந்தருவப்
படையானது விலகிப்போய் விட்டது. இப்பால் சூரனானவன் தேவார
த்தகன்செய்த வஞ்சகங்களையெல்லாம் தெரிந்துகொண்டு இப்பாதகன்
கம்மவரை மோகனப்படையினால் வாட்டியதல்லாமல் கம்மையுங் கந்த
ருவப்படையினால் மயக்கினனேயென்று கோபாகைசெய்து முன்னம்
காத்தி லேக்கியிருந்தவாளினால் அப்பாதகனை வெட்டவோங்கிச் சென்

னன். அதற்குள் புத்திதேவியாலுண்டானபௌத்ததேவியானவள் அவ
ணிறுத்தி, தேவாந்தகனேவிய பூதத்தை வாவென்று யுத்தஞ்செய்வ
தாயினள் பின்னர் இரண்டுசண்டமாருதங்கள் ஒன்றோடொன்றெதிர்ப்
பதுபோலவ்விரண்டு பூதங்களு மொன்றோடொன்றெதிர்த்து விழிக
ளில் வடவைக் கனலெழக் கோபித்துக் காங்களீப் பிகைந்துகொண்டு
பூமிபெயரும்படிக்கும் பாதங்களீப்பெயர்த்து முன்னடிவைத்துப் பின்
னடிவாங்கிப் பரய்ந்தும் புசங்களீத் தட்டியும், ஒருவரை யொருவர்
உருத்துப் பார்த்தும் வீரங்களீப்பேசியும், காங்களீப் பிடித்தமாக்
கிக்கொண்டு முகத்தினும் புயத்தினும் மார்பினும் மற்ற உறுப்புகளி
னும் குறிகொண்டு குத்தியும்! அதைத் தடுத்து மீளத்தாக்கியும், கற்ப
கத்தை யொப்பவலிய புயங்களினலிடித்தும், கால்களீப் பின்னித்தட்டி
யும், உதிரம் பிறிட்டோட நெற்றியினுங் தலையினுங் குட்டியும், கன்னம
பிளக்கவறைந்தும, இடசாரி வலசாரியாகத்திரிந்தும், இவ்விதங்களில்
இருவரும் அண்டங்களீயெல்லாஞ் சுற்றியும் அகிலடலெல்லாஞ் சுழ
ன்று பூவட்டமெங்கணுஞ் சுலாவியும் உரகர்வாழ்கின்ற பாதலங்களிற்
சென்று குலாவியும், ஒருவர்க்கொருவர் பின்னிடையாமல் மற்போ
ரைச்செய்துகொண்டு வரும்போது, பவுத்தீதவியானவள் அதிக தீரத்
தோடு மேலிட்டுக் கோடையிடிகளீப்போலக் காங்களினலும், புஜத்
தினலும் இடைவிடாது தாக்க அத்தாக்கலைத் தேவாந்தகனுடைய
பூதமானது தாளமாட்டாது வலிகுன்றிக்கை கால்சோர்ந்து இரத்த
வெள்ளம் பெருக்கெடுத்தோடும்படியாகச் சோர்ந்து நிலத்தில் வீழ்ந்
தது உடனே பவுத்தீதவியானவள் அவருடைய வொருகாலைத் தன்
னொருகாலினல் மிதித்துப் பணிகாரத்தைப்போலக்கிழித்து ஒரு கிற்றிலைக்
கீழ்த்திலைசக்கடலினும் மேலேறாது கீழ்த்திசைக் கடலினுமெறி
ந்து யுத்தகளத்தினின்றும் நீங்கித் தன் மேற்றிசைக் கடலினுமெறி
ந்து யுத்தகளத்தினின்றும் நீங்கித் தன் மேற்றிசையின்ற புத்திதேவியினிடத்
தென்று சேர்ந்தனள்.

இப்பால் தனது பூதம் நாசப்பட்டதைத் தேவாந்தகன்கண்டு இர
வுத்திராகாரமாகக் கோபித்துத் தனது தேரை இரண்டாக மெலுக
ணுஞ் சக்கிராகாரமாகச்சுழற்றித் தேவசேனைகளீமீதும், பூதகணங்
களீமீதும், அளவற்ற பாணங்களீச் சோனைமாரியைபோலப் பிரயோ
கித்தனன். அதைக் கண்டசேனாபதியாகிய குரூரன்கண்டு, அடா கள்வ
னே! முன்னம் வாட்போருக் கஞ்சியொளிந்தனை? நீ மீட்டும் வெட்க
மில்லாமல் சண்டைசெய்யவந்தனை? இனி எவ்விதத்தாற்றப்பிப்போக
லிருக்கின்றனை? இதோ உன்னரிய பிராணனை வாங்கி வீரசொர்க்கத்
திற்குடி யேற்றுகிறேனென்று சிறித் தனது வில்லில் சர்ப்போப சாங்க

மாகச் சரவருஷங்களைச் சொரிந்தனன். அக்காலத்தில் தேவாந்தகனு னவன் கணக்கிறந்த கொடியபாணவகைகளைக் கோடைகாலத்து மழை த்தினலைகளைப்போல ஒன்றன்பி னொன்றுகச் செலுத்திக் குரூரன் லிட் டகணங்களையெல்லாம் பொடியாக்கி அவனுடைய தேரையும் தூறுங்கி விழச்செய்தனன். அதனல் குரூரன் அதிக கோபம் பிரவேசித்து உட னே மற்றொரு தேரிலேறி அவுணராசன் செலுத்திய பாணங்களுக் கொப்பாகத்தானும் அளவற்றபாணங்களைச் செலுத்தினன். இவ்விரு வீரர்களுஞ்செலுத்திய பாணகோடிகளின் கொடுகைகளைத் தேவர்கள் முதலாயினோர் ஆற்றமாட்டாது திகைத்து மிகவும் வாடிப் பதுங்கினர் பூதப்படைகளும் அவுணப்படைகளுங் கைகாலாடப்படாமல் கண்ட துண்டமாகவெட்டுண்டும், மாண்டும், சோர்ந்தும், பலதிசைகளினு மிறைத்தும், இவ்விதமாக இரணகளத்தில் ஒருவருந் தோற்றப் படா மல் மறைந்தனர். அணிமாதி அட்டமாசத்திகளும் வீரிய சேனைத்த லைவர்களும் பலகாயங்களைப் பட்டுவருத்திதிகைத்துப் படாத பாடு களைப்பட்டு நின்றனர். இவ்வாறு வடவையும் ஆலகாலமும் பகைத்துப் டொருவதைப்போல இருதிறத்தாரும்போராடித் தங்கள்தேர்களைநொ புப்போதில் அனந்தமுறைச் சக்கிராகாரமாகவும், வட்டணை யாகவும், இடசாரி வலசாரியாகச் சுழற்றித் தாக்கியும், சூரிய சந்திராள் தங்கள் கதிகள் தப்பிச்செல்ல அளவற்ற சரவருஷங்களைத் தூண்டியும், இ ரணக்களத்தில் ஒதுங்கிப் பதுங்கியிருந்த தேரணிகளைப் பொடிபட வாட்டியும், யானைப் பந்திகளைக் கண்டதுண்டப்பட வெட்டிக் குவித தும், குதிரைப் பெருக்கைச் சிதைத்துக்கெடுத்தும் அவுண வீரரை மடக்கிக்கொண்டு சின்னபின்னப்படத் தூண்டித்தும், பூதவெள்ளத் தை யலைத்துச் சிரம்-கரம்-உரம்-பதம் முதலிய வுறுப்புக்களை வெவ் வேறுகவெட்டி யெறித்தும், தங்களிர தங்களை மேலுலக மேழினுஞ் செலுத்தி வானவெல்லை யெங்குநும் பலனிவந்தும், பூலோக முழுவ தும் உலாவியும், சத்த சாகாங்களிற் சென்று சுழன்றும் சக்கிரவாளகி ரிக்கு அப்புறத்திற்பாய்ந்தும், பாதாளலோகங்களைக் கதக்கியும், சத் தியலோகம் வைகுந்தம் முதலிய வைப்புகளிற்சென்று உலாவியும், மீட்டுஞ் சமர்க்களத்தையடைந்து பலவீரங்களைப் பேசியும், இரத மோடும் வேகத்தினுல் ஒருவரை யொருவர் முட்டியும், தெற்காத்தொ னிகளைச்செய்தோடும் வண்டில்களை இடிகளை யொப்பத் தாக்கியும், விண்ணவர்கள் திகைத்து மயங்கும்படிக்கு கூஷ்ணப்போதில் அஷ்ட திசைகளிற் பாய்ந்தும் மீண்டும் இடையிடையில் சக்கரம்-பாசம் தண்

சூலம் முதலிய படைகளை எறிந்தும், ஒருவரையொருவர் சீறிப்

பார்த்து நீயெவ்வளவு உன்சாமர்த்திய மெவ்வளவு உண்னை கொடிப் போதில் வாட்டி நிலத்திற்றள்ளுகின்றேனென்றும் கொடிய சபதங்க ளோப்பாடியும், தங்கள் விற்சாதுரியங்களையும் காவேக சரவேகங்களை யும் நிரூனித்துப் புகழ்ந்துவிட காகங்களோப்போலச் சீறியும், அண் டங்களதிர நகைத்தும், பாதலவாசிகள் நடுங்கக்கர்ச்சித்தும், சிங்க நா தங்களோச்செய்தும், பர்வதாகிருதியாகப் பருத்திருக்கும் புயங்களைத் தட்டியும். மீசைகளை முறுக்கியும், இந்த யுத்தம் வெகு கோர்த்தியாக விருக்கின்றதென்றுகளித்தும், அடிக்கடி சயத்தைக்குறித்து வெற்றி ச்சங்கங்களோப் பொம்பொமென் றூதியும், இபபடிக்கு வீராதி வீர ராகிய அவ்வீரவருடை கொடிய சித்திரப்போரைச் செய்துவரும்போது பூமண்டல வெலல்லையில் வாசஞ்செய்பவரும் விண்ணகத்திற் சஞ்சரிப் பவரும் அவர்கள் செய்கைகளைப பார்த்து அற்புதங் கொண்டவர்க ளாய் இந்தச சூரரைப்போலச் சண்டைகொடுத்த அவரை இதற்கு முன்னம் யாவரையுங் கண்டிலம் கேட்டதுமில்லை இக்காலத்திலுங் தெரிந்ததுமில்லை பிறகாலத்திலுங் கிடைக்கபாடடாது, புசபலபராக் கிரமசாலிகளாகிய இவர்கள் சவரியத்திற்கிணையெடுத்துக்காட்ட யாவ ருமில்லையெனக் கொண்டாடினர். அப்போது குரூரனவன் மேலிட் டுத தேவாகதகனுடைய தேகரிப்பாய்ந்து வச்சிராயுதத்தினைக் கையிலெ னைச்சுழற்றி விசாலமாய் வயிரதண்டினைப்போல உறுதி பெறறிருக்கின்ற மார்பு நெக்குவிட்டு உதிரம்பெருகும படிக்குக் கோடையிடியைப்போ லத் தாக்கிமீண்டனன் அத்தாக்கலினல் தேவாந்தகன் சோர்ந்து மூர் ச்சித்து மீட்டுந்தெளிந்தெழுந்து ஓர் தண்டாயுதத்தை எடுத்துக்கொ ண்டுவஜ்ர வயிரக்குன்றினைப போலப் பாரித்திராவினற குரூரனுடைய தோளின்மீது எமனுங்கண்டு அஞ்சுமபடிக்கு மோதினன். அம்மோ தலிலக் குரூரன் சலிக்கமாட்டாது பெருமூசசெறிந்து மூர்ச்சித்துத் தேரிற்பாய்ந்தனன்.

பின்னர் தேவாந்தகன் அவன் தெளிந்து எழுந்திருப்பதற்குமுன் மற்றத் தேவதேசீனைகள் பூதவெள்ளங்கள் மத்தியிலிருந்து தேரை மூடு க்கிவந்து தனது வில்லில கணக்கிறந்த நிவ்வியாஸ்திரங்களோப் பிரேயோ கித்துச் சிங்காரஞ்செய்தனன். அவ்வஸ்திரங்கள் ஒன்றனற்தமாகப் பெருகிச் சிலது அனற்படிவமாய்த் தீயை யிறைத்தோடியும், சிலது ஆலகாலவிடத்தை யொப்பமண்டி எரிந்து தகித்தும், சிலது காடாந்த காரமாகமூடிப் பூதரீனைத் திசை தெரியாமலிடித்தும், சிலது காலாந் தகரை நிகர்த்துச் சீறிப்பாய்ந்தும், சிலது அனலக்கக்கிக்கொடியகாப்

பத்தைப்போல விரிக்கொண்டு தாவியும், சிலது சூரியகிரணங்களுக்கு ச்சமதையாகச் சொலித்து மேலிட்டும், சிலது மின்னலைப் பரப்பிக் கொண்டோடியும், சிலது கோடையிடிகளைப் பெருக்கியுலாவியும், சில தது சக்காத்துக்குச் சமதையாகச் சுழன்றும், சிலது வச்சிராயுதங்களைப் போலத் தாக்கியும், சிலது இந்திர தனுசுக்கொப்பாகப் பற்பலவான மேகங்களைப் பெருக்கி அதா அத்ஞ்செய்தும், சிலது சூலங்களுக் கொப்பாகப் பாய்ந்தும், சிலது பிரசண்ட வாயுவைப்போல வேகங் கொண்டுலாவியும், சிலது சூரவளிக்காற்றினுக்கொப்பாக எதிர்த்தவர் களைப் புட்டியும், சிலது வாளாயுதங்களைப்போலச் சங்கரித்தத் திரிக் தும், சிலது பாரித்த தண்டாயுதங்களாய் வாட்டியும், சிலதுவேலைநிக ர்த்ததுமஞ்செய்தும், சிலது சிங்கம் புலியாதியகொடியமிருகங்களுக் கொப்பாகக் கர்ச்சித்துக்கொன்றும், இவ்வாறு அவுணபாதகன்விட்ட பாணங்களெல்லாம் மகோகாற்கட மூர்த்தியினுடைய சேனசமுத்திரத் திற்புகுந்து ஒருவரையும் அப்புறமிப்புறம் போகவிடாமல் அல்லோல கல்லோலப் படுத்தும்போது அந்தரவாகிகளாய்ச் சமர்களத்தில் நட க்கும் வீனைதங்களைப் பார்த்துக்கொண்டிருந்த விண்டுவாதி தேவர் ள், இப்பிரமைகொண்டு இன்று மிப்பாதகன் என்னசெய்ய விருக் கின்றனனேயென்று வருந்திகாலாதிகளிற் பிராணனைக்கொண்டுபோ குங் கூற்றுவனைக்கண்ட மன்னுயிரைப்போல நடுநடுங்கிக் குலை குலைந் தமதி மயங்கி எங்களும் நிற்கவும் பயந்து தலைத்தலை சிதறியோடி ஞான நாயகராகிய மகோற்கடமூர்த்தியைக் குறித்துப் புலம்பி முறை யிடுவதாயினர்.

தீனராகிய தொண்டர்களுக் குற்றவினைகளைப் போக்கித் பாது காத்தருளும்பொருட்டு விருதக்கொடியை நாட்டியிருக்கும் பக்தவச் சலனே! தமது வழியடிமைகளாக விருக்கின்ற அடியேங்களை வாட்டி யலைக்குஞ் சத்துருக்களை இடியேற்றினை யொப்பவலைக்குந் தீனசரண் னியனே! அடுத்தோர்களுக்கு அஞ்ஞான விருளைப்போக்கிப் பேரா னந்தத்தைப்பெறச் செய்ய வல்லபரஞ்சுடரின் மூலமே! வேதாகமங் கள் முதலியவற்றினில் எண்ணியள விடுதற்கரிய கர்த்தனே! திரிமூர்த் திகளில் முதன்மை பெற்றிருக்கின்ற சிவபிரான்பெற்றருளிய கடவுளே பாமாலைகளினும் புகழவல்ல தொண்டருக் கெளிமையான ஞான காய கனே! என்றிவ்வாறு அனந்தமுறை துதிசெய்து, ஓஓ சகல புவனதா ரக்கர்த்தனே! ஓஓ சச்சிதானந்தப்பொருளே! ஓஓ பரப்பிரம சொரூபி யே! அடியேங்கள் முறையிடுக் தக்கவருத்தங்களைத் திருச்செவினி லேற்றுப் பாதுகாத்து இரட்சிக்கவேண்டும் சுவாமிகள் காலதாமதஞ்

செய்தால் சர்வசங்காரகாலத்தைப்போல நாசமடைவோம், ஒதினை யாஞ்சேவ! கொடியரிற் கொடியனுமிய இந்திதவாக்கன் செய்யுஞ் செய்கைகள் தேவரீர் திருவிழிகளிற காணப்படவில்லேபா? இன்னமுஞ் சற்றுநேரஞ் தேவரீர் பராமுகமாயிருந்தால் அக்கள்வன் பிரபஞ்சங்களனைத்தையுங் நிமைப்போதிற்கவரி காரஞ்செய்து போடுவதற் கையமில்லை. மேலும், என்னென்ன அனர்த்தங்களைச் செய்வனே தோற்றவில்லே ஓ எமது குலதெய்வமே! வரைவில் இருபபுபுற்றுத் தேவாக்தகளுடைய இபபாகங்களைக்கொன்று மன்னுபிர்களபடும் வருத்தங்களை நீக்கியாள வேண்டுமென்று பலவாராகத் துதித்து வேண்டினர்.

அவ்வேண்டுகோளை எமது கர்த்தன் திருச்செவிகளிலேற்றுத்தேவாக்தகளுலகிய உலக உபத்திரவங்களைத் தவிர்த்து நிலேபெறச்செய்யத் திருவுளங் கொண்டவராய்ச் சாரதிபாகிய வாயுதேவனைப்பார்த்து நமதுதேரை வீரைவில் தேவாக்தகளென நிறற் கொண்டுபோகக் கடவையென்று திருவாய் மலர்ந்தனர். அவ்வாக்கியம் இந்திரன் முதலாகிய தேவர்களுடைய செவிகளில் அமுதத்தினைப்போல நுழைந்தமாத்திரத்தில் சுந்தோகுசாகரத்தில் மூழ்கித் தேகபரவசத்தராய் அனந்தக் கூத்தாடி செய முண்டாகக் கடவதென்று வாழ்த்தினர்கள். அப்போது வாயுதேவன் புரவிகளையதட்டி சுவரத்தின மயமாகிய தேரைமணிகள் ஒத்திக்க வாயுவேகத்தினுல் கடுகித் தரத்திக்கொண்டுபோய் இராணக்களத்திற் சுயசாலியா யுலாவிக்கொண்டிருக்கின்ற தேவாக்தகளுடைய தேருக்குநேராக நிறுத்தினன். அப்போது அண்டரண்டபுவனங்களேயெல்லாம் வென்று சகலலோகங்களிலுங் தனது ஆரசாஞ்ஞையினைச் செலுத்தி நீடித்திருக்கும் ஆயுளையும் வரிரதிகத்தினையும் பெற்றிருக்கின்ற அமரர்கட்கெல்லாம் எமனென்று சொல்லும் படியான இராதிராசனுகிய தேவாக்தகனுனவன் தனக்கெதிரில்வந்த சுவரத்தினமயமாகிய தேரினிடத்தில் பரிசுத்த மனத்தினையுடைய ஞானவான்கள் கருத்தினுக்குமெட்டாத நின்மலக்கடவுளாகிய மகேசுரகடவுர்த்தியினது சூரியனுளியினை மேலிட்டுக்காட்டுஞ் சுயஞ்சோதிவடிவத்தினை நேரிற்கண்டு, அதுபரியந்தஞ் செய்திருந்த கொடியவினைகளனைத்தினையும் போக்கப்பெற்றவனுய்ச் சிறிது நிதானித்துச் சர்வசங்காரமூர்த்தியாகிய சிவபிரானனித்தருமமான் இவினையாருமென்று நிச்சயித்து, சுத்தவீரனுதலாற் கோபாக்கினி மனதைவாட்ட எமது கர்த்தனைப்பார்த்து, ஓ பாலனே? மேலானதவங்களைப் பெற்றிருந்த எனது தம்பியைக்கொன்றனை? அதனுல்யாவராலும் வெல்லுதற்கரிய வெனக்குரீ மாதுபட்டனை? பிரமன் விண்டு - உருத்திரன் முதலிய தேவர்க

எல்லாம் ஒன்றாகக்கூடி என்னுடன் அளவற்றகாள் யுத்தஞ்செய் தாலும் அதிவீரனாகிய என்னை ஒருக்காலத்திலும் வெல்ல மாட்டார் கள் உனக்குதவியாகக் கூட்டிக்கொண்டுவந்த வீரர்களெல்லாம் அக்கி னிமுன்பட்ட பஞ்சுமலையைப்போலச் சமர்க்களத்துக் கிரையாகப் போனதைக் கண்டனை? அந்த வீணைப்போல நீயு முடிந்து போவை யேயன்றி வெற்றிபெறப் போகின்றதில்லை. இனியேனுஞ் சாகாமற் பிழைத்திருக்க மனமுண்டாயின் நான் சொல்லுவதைக் கேள்? உன் னை இப்போதே உயிருடன் விடுகின்றேன் நீஇந்த ஆயுதங்களை எடு த்தெனக்குத் தொந்தரை கொடுக்காமல் என்னை யடித்து வாழ்ந்துக் கொண்டிருவென்று தனது பிரதாபங்களையும், வீரத் தன்மையையும் செயப் பெருக்குகளையும் அவுண பாதகன் விரித்து விரித்துச் சொ ல்ல அவையனைத்தையும் அருவருவாக விளங்கும் மகோதரப்பெரு மான் கேட்டுப் புன்னகை செய்து ஓ அவுணராசனே! விண்ணுலகமு முதலும் தன்பத்தை விளைத்துக்கொண்டிருந்த அற்பபுத்தியுடைய நீயும் மண்ணுலகமுழுவதும் கொடுங்கோலச்செலுத்தி ஆண்டுவந்த உனது தம்பியும் தாய்வயிற்றிற் கருப்பமான காள்முதற்கொண்டு மேற் றையவரையில் சகோதரரென்று சொல்லும்படியாக வாழ்ந்தீர்கள். அத்தன்மைத்தான உங்களிருவரில் ஒருவனைச் சொர்க்க லோகத்தில் தேவனுகபிருக்கவைத்தோம், அவனுக்குச் சகோதரனைப் பிரிந்தோ மென்னும் வருத்தமிருக்குமல்லவா? ஆதலால அவனுக்கு அவ்விடத் திலும் நீயே சகோதரனாயிருக்கும்படியாகவும் யுத்தகளத்தில் மாண்டு அங்குசென்றிருக்கின்ற உனது சேனைகளும் உன்னையே அரசாக்கிக் கொள்ளும்படியாகவும், இப்போதே தேவனுக்கி அங்ஙனமனுப்புகின் றோம் அஞ்சவேண்டாமென்று திருவாய்மலர்ந்தனர்.

அவையனைத்தையும் தேவாந்தகன்கேட்டு, அதிகோபங்கொண் டுகொவ்வைக்கனியை பொப்ப விழிகள் சிவந்து அழற்சுவாலை யெழப் பெருமூச்செறிந்து வடவையைப்போலச்சீறி மந்தரகிரிக்குச் சமமை யாகப்பரித்து நீண்டிருக்கும் வில்லைக் கரத்திலெந்தி இருகுதைகளும் ஒன்றுபடவீக்கி நாணேற்றி அதில் விஷயங்களைக்காக்கவல்ல நிட்சை ணியமுள்ள பாணவருஷங்களை அபரிமிதமாகப்பூட்டி மகோதரத்தை மூர்த்தியின்மீதும் அவர் ஆரோகணித்திருக்கின்ற இரதத்தின்மீதும் உதயகிரியைப் பனிப்படலம் மூடியதைப்போலச் சொரிந்து சிங்கத்தை யொப்பக் கர்ச்சித்தனன். அதனை மகோதரன் மூர்த்திகண்டு இவன் வில்வித்தை வெருகோர்த்தி வெருகோர்த்தி யென்று நகைத்து மகமேரு வெனும் பிறைமாலிய வில்லைத் தமது கரத்திலெடுத்து வலித்து

அதிலே கணக்கிறந்த பாணங்களைத்தொடுத்துவிடுத்துத் தீயையிறைத் துக்குமுறிக்கொண்டு மேலிட்டு வருகின்ற அவுணன் படைகளெல் லாஞ் சின்னபின்னப்பட வாட்டிப்பின்னர் இரண்டு கணையினால் அவ னுடைய தூணியையும் வில்லையும் பொடிப்படுத்தினர். உடனே தே வாந்தகன் வேறொரு வில்லை யேந்திவந்து சுவாமியினுடைய தேரின்மீ தும்எவர் நிட்சண்ணியமுள்ள ஆயிரப்பாணங்களை பிரயோகித்தான் அப்போது எமதையனும் அத்தொகைப் பாணங்களினால் அவைய னைத்தையும் துகள்படுத்தி வேறே மூன்றுபாணத்தினால் அப்பாதக னுடைய தேரையும், தேர்ப்பாகனையுங், குதிரைகளையுங் துணித்து நாசமாக்கினர் அதற்குச்சற்று மிகையாது உடனே மற்றொரு தேரில்வந் துதனது வில்லில் பதினாயிரங்கணைகளை ஓரே தொடையிற் பூட்டிப் பிரயோகித்தனன். அக்கணைகளுக்கு மாறாக மகோற்கட மூர்த்தியான வர் பற்பல வாளிகளைத் தூண்டி அதஞ்செய்து, பின்னுஞ் சிலகணை களினால் அவனுடைய கிரீடத்தையும் வில்லையுந் தேரையும் சேமத் தேர்களையும் கொறுக்கிப் பொடிபடுத்தினர். பின்னர் தேவாந்தகனான வன் முன்னர் தனது தந்தையுபதேசித்த மந்திரத்தின்படி ஓமகுண்ட த்தினின்றும் உதித்த குதிரையின்பேரில் ஏறிக்கொண்டுவந்து ஓர் வா ளாயுதத்தைக் கடகடவென்று சுழற்றி மகோற்கட மூர்த்தியினுடைய மார்பின்மீது வீசினன் உடனே எமதையனனவர் தமது மழுவாயுத த்தினால் அவன் வாளையும் அவனையுமிருந்த குதிரையையுஞ் சின்ன பின்னமாக நிலத்தில் வீழ்த்தினர். இப்பால் தேவாந்தகன் பாதசாரி யாய் நின்று மனமானது மனதை வாதிக்க இரவுத்திரா காரமாகக் கோபித்து இப்பாலன் எந்தபாணங்களினாலும் சமீபப்பட்டவனன்று ஆதலால் தேவாஸ்திரங்களைச்செலுத்தி வாட்டிச் செயற்பிரதாபத்தை ப்பெறக்கட வேனென்று துணிவுகொண்டவனாய், அம்புபெய் தூணியி லிருந்த 'வருணாஸ்திரம்' வாயுவாஸ்திரம், கருடாஸ்திரம், எமாஸ்தி ரம், நீராயணாஸ்திரம் என்னும் 'இதப' டைகளையு மெத்துத்தூப தீபகைவேத்தியம் முதலிய உபசாரங்களை மானதபூசையினால் நிறை வேற்றி வில்லிற்பூட்டி நீங்கள் பேராய்ச் சத்தசாகரங்களைப்போல ஆ வாரித்திருக்கின்ற தேவசேனைகளையும் பூதவெள்ளங்களையும் அதபப டித்துவதன்றி, அவைகட்குத் தலைவராகவிருக்கின்ற வீரர்களையும் சிவ குமாரனையும் நாசப்படுத்தி மீளக்கடவீர்களென்று மகாபூர்வமாகப் பிரயோகித்தனன். அதை எமதையன்கண்டு, அவைகட்குமாறாக அக் கினியாஸ்திரம், நாகாஸ்திரம், ரிஷபாஸ்திரம், பிரமாஸ்திரம், சரபாஸ் திரம் என்னும் ஐவகைப் படைகளைப்போக்கினர். பின்னர் அவனர்

பெருமான்விட்ட அத்திரங்களும், தேவர்பெருமான்விட்ட அத்திரங் களும் வெளிப்பட்டமாத்திரத்தில் ஒவ்வொன்று அளவற்ற வடிவங் களைக்கொண்டு வருணாஸ்திரம் சர்வசங்காரகாலத்தில் உலகங்களெழி க்கச் சத்தசாகரங்களையு முடைத்துக்கொண்டெழும் பெரும்புறக் கட லைப்போலச் சலப்பெருக்கை யுண்டுபண்ணி அலைகளைப்பெருக்கி அதிக வேகமாய் புரண்டுவர, அக்கினியாஸ்திரமானது ஊழிகாலத் தெழும் வடவாமுகாக்கினியைப்போல அனற்சுவாலைகளை வீசி உலகங்களை மூடியிருந்த சலப்பெருக்கை நிமைப்போதில் வரவுவண்டது வாயுவாஸ் திரம் யுகாந்தகாலத்தெழும் பிரசண்டமாருதத்தைப் பெருக்கிச் சூரு வளியைப்போல வேகங்கொண்டு வீசியது நாகாஸ்திரமானது விசால மாகிய படங்களை விரித்துக் கொண்டுவந்து சூரியனுக் தியங்கி வாடத் தக்கதாக மேலிட்டு வாயுவின் பெருக்கைத்தங் கிகித்தது, கருடாஸ் திரம் விசாலமாகிய சிவந்த சிறகுகளை விரித்துக்கொண்டு நாகாஸ்திரத் தினுலுண்டான சர்ப்பக்கூட்டங்களைமடக்கிக் கூரியநகங்களினுல் பிள ந்தும், மூக்கினுற்கொத்தியும், சிறகடியினுல் மாய்த்தமதாப்படுத்திய துரிஷபாஸ்திரமானது அண்டகோளகையு மதிர்ந்து கிடுகிடாய்க்கும் படிக்குக் கொச்சித்துவந்து கருடாஸ்திரத்தினுடைய வலியையும் செ ய்கைகளையும் நிமைநேரத்தில் மழுத்தியது ஏமாஸ்திரம் அதிக மகிமை களைக்காட்டி ஆர்ப்பாட்டங்களைச் செப்துகொண்டு நந்திப்படையு னைதிர்க்க, பிரமாஸ்திரமானது வடவைபைப்போலச் சீறிக் கொக்க ரித்துக் கணக்கிறுந்த திவ்விய பாணகோடிகளைப் படைத்து நந்திப் படையோ டெதிர்த்துகின்ற ஏமாஸ்திரத்தை நாசப்படுத்தியது நார சிங்கவடிவைக் கொண்டிருக்கிற நாராயணாஸ்திர மானது அளவற்ற மாயைகளை விரித்து எங்கும் இருளின் பெருக்கை நிரப்பி அதிக உச் சாகத்துடன் சர்ப்பத்தைப்போலச் சீறிவந்து நந்திப்படையுட னெதி ர்த்து யுத்தஞ்செய்ய வீரபத்திரவடிவங் கொண்டிருக்கின்ற சரபாஸ் திரமானது வடவைக்கனலும் ஆலகாலமும் நடுங்கி அஞ்சுகொதித்து அதிகவேகமாய்வந்து நந்திப்படையுடனே போராடுகின்ற நாராயண ஸ்திரத்தை ஒடக்கிக்கொண்டு அதன் வீராப்பையெல்லாமடக்கித் தூர த்திவிட்டது இவ்வாறு தெய்வப்படைகள் பத்தும் ஒன்றை யொன் றெதிர்த்துப் போராடுகின்ற சிக்காரங்களைத் தேவாந்தகன் கண்டுஅப் போரில் தனது படைகள் பின்னிட்டதையும், மகோற்கட மூர்த்தியினு டைய படைகள் வீறியிருப்பதையும் நிணைந்து நிணைந்து மனம் வருந்தி மீட்டுந் தைரியங்கொண்டு எந்தப்படையழியினும் பரமசிவகடாட்சத் தினும் பெற்றிருக்கின்ற இப்படையு மழியுமோவென்று யோசித்து

நிமைப்போதில் சராசரப் பிரபஞ்சங்களையும் வாட்டிச் சாம்பராக்கவல்ல உருத்திரமூர்த்திவடியாகிய பாசுபதாஸ்திரத்தை யெடுத்துத் திருமஞ்சன ஸ்தபதிபமுதலிய சோடச உபசாரங்களையும் மானபூசையினல் முடித்த பக்தி பூர்வமாகத் துதித்து வாழ்த்தி வில்லிற்பூட்டி. வட்டாகாரமாக வலையவலித்துப் பிரயோகித்தனன்.

இவ்வாறு தமது பிதாவினுல் அனுக்கிரகித்திருந்த படையினைப் பகைவன் செலுத்தக்கண்ட மகோற்கடமூர்த்தியானவர் உடனே தாமும் தம்மிடத்திருந்த பாசுபதாஸ்திரத்தினை யெடுத்துப் பிரயோகித்தனர். பின்னர் அவ்விரண்டு தெய்வீகப்படைகளும் மீறி வானத்தெழுந்து லோகமாயகனுக்கு உருத்திரவடிவங்களைக்காட்டி ஒருபுறத்தில் பிரசண்ட மாருதத்தை யெழுப்பியும், ஒருபுறத்தில் வடவா முகாக்கினியைக் காட்டியும், ஒரு புறத்தில் ஆலகால விடத்தைப் பெருக்கியும் ஒருபுறத்தில் வரிசைவர்களைச் சிருட்டித்தும், ஒரு புறத்தில் பத்திரகாளி கணங்களைப்பண்ணியும், ஒருபுறத்தில் வீரபத்திரர்களை வெளியிட்டும் ஒருபுறத்தில் தர்க்காதேவிகளை வரவழைத்தும், ஒரு புறத்தில் சண்டிகளைத் தோற்றக்காட்டியும், ஒருபுறத்தில் பூதபசாசுடாகினி வருக்கங்களைக் கக்கியும், ஒருபுறத்தில் எமகாலங்கிலியரைச் சிருட்டித்தும், ஒருபுறத்தில் காடாந்தகாரமாகிய இருளைப்பெருக்கியும், ஒரு புறத்தில் எமகாலங்கிலியரைச் சிருட்டித்தும், ஒரு புறத்தில் காடாந்தகாரமாகிய இருளைப்பெருக்கியும், ஒரு புறத்தில் அக்கினி மழையைப் பொழிந்தும், புறபுறத்தில் இடி மின்னல் குமுறல்களை யுண்டாக்கியும், ஒரு புறத்தில் அவுணர்களைப் படைத்தும், ஒரு புறத்தில் அதிக வீரபராக்கிரமத்தோடு கூடிய பூதங்களைச் சிருட்டித்தும், ஒரு புறத்தில் சடாமுனிக்கூட்டங்களை யுண்டாக்கியும், ஒரு புறத்தில் சக்கரம் தண்டம் மூசுண்டி முதலிய படைகளைப் படைத்தும், ஒரு புறத்தில் அக்கினியாஸ்திரம் நாகாஸ்திரம் பிரம்மாஸ்திரம் முதலிய தெய்வப்படைகளைக் கக்கியும், ஒரு புறத்தில் பைதண்டம் காலபாசம் முதலியவைகளை யுண்டாக்கியும், இவ்வாறு அவ்விரண்டு பாசுபதாஸ்திரங்களும் பற்பல காட்சிகளைக்காட்டி மண்ணிண்ணெல்லிடங்களினுமுலலி, அல்லோலகல்லோலப் பிரதாபம்போது பூதவெள்ளங்களும் தேவசேனைகளும் பஞ்சேந்திரியங்களும் நிலைபிறழ்ந்து கைகால் நடுங்க இனைத்துச் சோர்ந்தனர் அணிமாதி அட்டமாசத்திகள் மதிமருண்டு வாடினர். சூரரஞ்சியவீரர்கள் பயப்பிராந்தியினல் நிலைத்து மகோற்கட மூர்த்தியருகிற்சென்று சூழ்ந்தனர் அவுணபாதகர்களனைவரும் குலை குலைந்து

நடுநடுங்கிச் சின்னபின்னப்பட்டுச் சோர்ந்தனர் வானத்தை யளாவ நின்றதேரணிகள் பொடிப்பொடியாய்க் குலைந்தன. மதயானைக் கூட்டங்கள் வெறியடங்கி வீரிட்டு மாண்டன புரவிப்பந்திகள் வாயுவைப் போலத் திசைகெட்டோடின. பதினுலகங்களில் வாசஞ்செய்கின்ற பிராணிகளனைத்தும் பயப்பிரசந்திகொண்டு இது தானே பிரளயகால மெனத் துக்கசாகரத்திற் சேர்ந்தனர். இவ்விதமாய் சாசரப் பிரபஞ் சங்களனைத்தும் நிகைத் துவாடும்படிக்குச்சங்காரக் கடவுளானவர் இரண்டு நவைக்கொண்டு விளையாடுவதைப்போல இரண்டு பாசுபதாஸ்திரங்களுஞ் சீறி ஒன்றுக்கொன்று பின்னிடையாமல் சிலநேரம் நிகராகப்போராகாட்டித் தங்களிடத்துண்டாகிய பாணகோடிகள் முதலியவற்றைத் திருப்பிக்கொண்டு தங்கள் கொடுமையில் மாறுபட்ட அண்டங்கள் புவனங்கள் விண்-மண்-பாதலம் முதலிய விடங்களை யதாப்பிரகாரம் நிலைபெறச்செய்து தங்களிச்செலுத்திய தலைவர்கள் கரத்தில் வந்து சேர்ந்தன.

அதனைக்கண்ட தீதர்க ளெல்லாஞ் சந்தோஷப் பெருக்கினல் கரங்களைக் கொட்டி நகைத்து பாசு பதாஸ்திரத்தினுல் பாதகன் செயம் பெறுதகாரணத்தினுல் அவனுக்கு நாசகாலம் வந்துவிட்டதென்பதற் கையமில்லையெனக் களித்தனர். அப்போது கேளாக்கதன் தனது பாணம் வியர்த்தமாகக் திருப்பியதையும், சமுகதிரா தீபாலத் தன்னைச் சூழ்ந்திருந்த சகரக்க சேனைகள் மாய்ந்ததையும கண்டு இதைத் தக்கணப்போதில் சாசரப பிரபஞ்சங்களைத் தகித்துச் சாம்பராக்க வல்ல பாசுபதாஸ்திரத்தை விடுத்தனம். அஃது பகைவரை வென்று வெற்றிபெறுமல் அபலமாகத் திருப்பிவிட்டது. இனி நேஷுத்துவதற்கு அதனிலுஞ் சிறந்தபாண மென்னவிருக்கின்றது இனி மாய்கைப்பெருக்கினுலல்லது இப்பாலனைச் செயிக்கவொண்ணுதென்று நிதானித்து விரைவில் சுக்கிரன் தனக்குபதேசித்திருந்த மோகன மந்திரத்தைச் செபித்து அதன் முயற்சியினுல் அளவற்ற மாயப் போர்களை னேற்று ஆரவாரித்தனன், அம்மாயங்களையெல்லாம் நிமைப்போதில் எமதாண்டவன் ஞானபபடையிலைச் செலுத்திமாய்த்தனர். இவ்வாறு தேவர்களனுடைய பராக்கிரமத்தை விண்டுவாதி சகலருக் கண்டு பிரமிக்கும்படி கொடிப்போதில் சகலலோகங்களையும் நீறுக்கவல்ல எமதையன் அவனேடு ஒருநாள் முழுவதும் யுத்தஞ்செய்து மறுநாள் விடியற்காலையில் அவன் முன்னைக் தவமுயற்சியினுற் சிவபிரானிடத்திற் பெற்றிருக்கின்ற வரங்களை யோசித்து உடனே சகலாலும்போற்றப்படுகின்ற யானைமுகத்தினைக்கொண்டு தமது தந்தங்களிலொன்றை

பொடித்தனர். அச்செயலைத் தேவர்த்தகன் கண்டு தனக்குச் சிவபி ரான் திருவாய் மலர்ந்திருக்கின்ற முடிவினைக் கருத்தி லெண்ணினனே சமூர்த்தி பொடித்துக் கையில்வைத்திருக்கின்ற கொம்பினைப்பறித்து முறித்தெறியும்படிக்கு மேலிட்டு ஓடிவந்து தேரின்மீது பாய்ந்தனன். அப்போது சுவாமி அக்கொம்பினால் அவன் சிரத்திற் குத்தினர், உட னே அவன் சிரமானது ஆயிரம்பத்தலாகப் பிளந்து அவனுயிரானது சோதிரூபமாக யாவருங்காண வெளிக்கொண்டுவந்து விநாயகப்பெரு மானுடைய திருவடிகளில் அடிக்கியமாயது.

கேட்டீர்களோ சவுனகாதிமுனிவர்களே! இவ்விதமாகத் தேவர் தகன் மாண்டுபோனதைத் தெரிந்த பூதசேனாதிபதியாகிய பானுகம் பன் அதிகமான உற்சாகத்துடனே வானத்தை யளாவப் புயங்கள் பூரித்துக்கர்த் தன் குணதிசயங்களையும் வெற்றிப் பாட்டினையும் ஆனந்த பரவசனுப்க் கொண்டாடிப் போற்றித் தேவர்கள் கரங் களைக் கொட்டி வாழ்த்தெடுப்பத் தனது சுந்தரமுள்ள ஆயிரம் வாய்களிலோதுக்தவள நிறம் பெற்றிருக்கின்ற உன்னதமுள்ள சுரி முகச்சங்கங்களைச் சேர்த்து உலகங்க ளனைத்துஞ் செவிடுபடுத்தி நிகைத்து மதிமருண்டு வாடிச் சோரும்படிக்குப் பேரொலி யெழுப் பொம்பொம்பென் நூதினன். மகா விஷ்ணுவானவர் மனமெழிந்தவ ராகிப் பலமுத்தைப் பழித்து விளங்கும் தமது ஒவந்த அகாத்தில் பாஞ்ச சன்னியமென்னுஞ் சங்கினைவைத்து முழக்கினர். இந்திரனுக் குண்டாகிய சந்தோடத்தின் பெருக்கை இப்படிப்பட்டதென்று என் போலியர்களாற் சொல்லப்படுவதோ? பிரமன் முதலிய ஏனையதேவர் கள் ஒகைமேராய் ஆனந்தக் கூத்தாடி, எமது ஐயன் பெருமைகளைப் பலமுறை கொண்டாடிப்போற்றி மகாந்தங்களை இறைத்துத் தேனைப் பெருக்கித் திசாதிசைகளிற் பரிமளித்திருக்கும் பஞ்சாத்ப பகமலர்களை வாரி வாரிச் சோனைப் பெய்யலிபோப்பக் காத்தலை முத்தாளியிருக் கின்ற திருத்தேரின்மீது சொரிந்தனர். கருடகாக்தவர் ஆகாயத்தில் தோற்கருவி - துளைக்கருவி - முதலிய வாத்தியங்களை அளவற்ற களி யாடல்களோடு முழங்கி ஆனந்தித்தனர். மூன்று லோகங்களிலுமுள் ள் பிராணிகள் முன்னரவனுண்டான தன்பங்களையெல்லாம் போக் கிச் சந்தோஷசாகரத்தி லாழ்ந்திருந்தனர் சகலலோகங்களிலுக் தரு மதேவதையானவள் குடிகொண்டு விநோபாடினள்

இப்பால் என்னே யடிமையாகவுடைய விநாயகப் பெருமானு வர் அப்போது கொண்டிருக்கின்ற யானவதனத்தினை மாற்றி முன்

போலவே மகோற்கட வடிவங்கொண்டருளினர். உடனே காசிராசனும் தேவர்கள் முனிவர்கள் முதலாயினோரும் புத்த முதத்தைத் தெவிட்ட உண்டவர்களைப்போல மனமகிழ்ச்சி பெற்றவர்களாய்த் தேகபரவசப் பட்டு சத்த சாகரங்களு மொலித்தெழுமாறுபோல ஆனந்தக்கூத்தாடி விழிகளிற்போத நீரைப் பெருக்கி உடன் முழுவதும் உரோமாஞ்சிதம் பூத்து, வேதவாக்கியங்களினும் பலமுறை துதித்து, சந்தனம் புட்பம் தூபதீபம முதலிய உபசாரங்களே ஆகமவிதிப்படி நிறைவேற்றித் தம திடத்திற் கடகூஷித்திருக்கின்ற திருவருளின் பெருக்கை நினைந்து நினைந்து களிமிகுதியினும் செயசெயவெனப்போற்றிக் கொண்டாடினர். இப்பால் மகோற்கடமூர்த்தியானவர் செயபேரி வெற்றிச் சங்கம் முதலியவைகள் அண்டங்களதிர முழங்க, பூதவீரர்கள் யாவரும் ஆயன் இருபைப் பெருக்கின் காரணங்களேயும் வீரபராக்கிரம சேயப்பி ரதாபத்தையும் மங்கள கரமாகிய குணசம்பத்துகளையுங் கொண்டாடிப் புடை சூழ்ந்துவர, சித்திபுத்திகள்சமேதராய்ச்சிங்கவாகனமூர்த்து எழுந்தருளி அணிமாதி அட்டமாசத்திகளும் பவுத்தேவியென்கின்ற பெண்பூதமும் குரூரன் முதலிய வீரர்களும் அதிக மனவெழுச்சியுடன் ஆரவாரித்து இருமாருங்கினும் நெருங்கிக், காசிப் பட்டணத்தில் வந்து அரசனுடைய அரண்மனைக்குள்ளே நுழைந்துகொலுச் சபையில் நவரத்தின கசிதமாய் விளங்காநின்ற சிங்காதனத்தில் வீற்றருளினர்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! மகோற்கட மூர்த்தியானவர் மகாவரப் பிரசாதியாகிய தேவாந்தகனைச் சங்காரஞ்செய்தருளியவிதம் இது. இனிக்காசிராசனுடைய குமாரனுக்கு விவாகஞ் செய்து முடித்து மீட்டுங்காசிப முனிவரிடத்திற்சென்று அவ்விடத்தினின்றுந் தமது லோகத்திற் கெழுந்தருளி காசிராசனுக்கு முத்தியைக்கொடுத்தருளிய விதத்தையுங் தொகுத்துச் சொல்லுகின்றோங் கேட்பீராக. இப்பால் கொலுச் சபையிலெழுந்தருளி யிருக்கின்ற மகோற்கடமூர்த்தியைக் காசிராசன் பணிந்தெழுந்து இருகரங்களையுஞ் சிரமேற் கூப்பிநின்று, ஓ பக்தவச்சலனே! ஓ பாஞ்சுடரே! ஓதின தயாளுவே! தேவரீர் செய்தருளிய யுத்த வலகுகாரங்களைத் தரிக்கக், வந்த தேவர்கள் முதலிய யாவரும் இனித் தேவரீருடைய கிருபையினல் நடத்தப்போகின்ற விவாக மகோற்சவத்திற்கு இங்கனே இருந்து போரும்படியாக சுவாமிகள் அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தனன். சுவாமியுமதற்கிசைந்து யாவரும் விவாகத்திற் கிருந்துபோரும்படி கட்டளையிட்டருளினர். அதற்குமேல் காசிராசன்

சுவாமியிடத்தில் விடைபெற்றுச் சென்று சகல தேசங்கட்குஞ் சுபிய ரண்ப் பத்திரிக்கை யனுப்பவும், விவாகத்திற்கு வேண்டிய பதார்த்தங் களைச் சேகரிக்கவும் மந்திரிகட்குஉத்தரவுபண்ணி, அங்கிருக்கின்றதே வர்கள் முதலாயினோர்க்குத் தக்கபடி உபசாரங்களைச் செய்து அவ்வ வர்கட்கு வேண்டுங் காரியங்களில் ஒரு தாழ்வுமில்லாதபடி ஈடாத்திவ ந்தனன். விவாகப் யத்திரிகையைப் பார்த்த மறுதேயத் தரசர்களும்ப ந்துசனங்களும் மற்றுமுள்ள நகரவாசிகளுஞ் தங்கடங்கள் பரிவாரங்க ளோடுஞ் சுற்றத்தினரோடும் வந்து காஞ்சிராசனுடைய அரண்மனையைச் சேர்ந்தனர். விவாகத்திற்கு வேண்டிய காரியங்களையெல்லாம் அமைச் சர்கள் கிரமப்படிசெய்து நிறைவேற்றிவைத்தார்கள்.

இப்பால் சகலலோக நாயகராகிய மகோற்கட மூர்த்தியானவர் புரோகிதராகி நல்ல முகூர்த்தங்களைப்பார்த்து அங்கு தர்ப்பணம் முத லிய கிரியைகளைச் செய்தவைத்து இராச புத்திரனையும் மகதேசத்து இராசன் புத்திரியையும் விவாக மண்டபத்தி லிருக்கவைத்து ஹோம நாள் வரையில் கவக்கிரக பூஜை முதலியவைகளை வேதாகம முறை மைப்படி நிறைவேற்றி அதற்குமேல் அங்குவந்திருந்த பிரமஞ்சிய தே வர்கள் முனிவர்கள் முதலாயினோரை அவ்வவர்கள் யதாஸ்தானத்திற் குப் போகும்படி விடைகொடுத்து யுத்தகளத்தில் ஈசத்திவ சத்தியா னுண்டான மற்றொரு சத்தியை வரவழைத்து அவள் முன்னரெடுத்து விழுங்கியிராக சுக்கிரனை உமிழச்செய்து, அச்சுக்கிரனைப பழையபடி ஆகாயத்திற் சஞ்சரிக்கும்படி விடுத்தருளினர். பின்னுல் சுவாமியினி டத்தினின்றும் விடைபெற்றுச செல்லுகின்ற தேவர்கள் முதலாயி னோரைக் காஞ்சிராசன் பணிந்து நிற்க அவர்கள் அக்காஞ்சிராசனைப் பார் த்து, ஓ தவசிலனுகிய இராசாதிராசனே! கரைகாணுத தக்க சாகரத் துள் மூழ்கி ஓர் தரவுமில்லாமல் மயங்கி யிருந்த எங்களுக்குத் தக்க படி பேரின்பங் கிடைக்கும்படியாக ஞானவான்களாலுங் காண்டற் கரியவொண்ணுத பரப்பிரம வஸ்துவை இங்ஙன மழைத்து வந்து அவுணர்களை யெல்லாக் தொலைத்து எங்களுடைய சத்துருக்களையுந் தன்பங்களையும் போக்கின சற்குண நிதியாகிய உனக்கு யாங்கள் என் னகைம்மாறு செய்யப்போகின்றனம், நீ திரிகாணத்தாலும் ஒன்முன கர்த்தாவை வழிபட்ட காரணத்தினுல் உன்னைத் தரிசித்த போர்கள் தர் மார்த்த காமமோட்ச மென்கின்ற நால்வகைப் புருஷார்த்தங்களையு பெளிதி லடைவார்களெனில், நீ இவ்வுலகத்தில் விரும்பத்தக்க காரி யம் ஒன்றுமில்லை. ஆயினும் உன்மீது எங்கட் குண்டா யிருக்கின்ற பிரீதியினுலே யாங்கள் கொடுக்கின்றவரங்களையும், ஒப்புக்கொள்ள

வேண்டுமென்று சொல்லி அவ்வவர்கள் தங்களாற்றலுக் கேற்ற வரங் களைத் தனித்தனிகொடுத்துத் தத்தம்பதிகளை நோக்கிச்சென்றார்கள். பின்னர் மகோற்கட மூர்த்தியானவர் சுகிராசனை நோக்கி, அரசனே? இன்றையதினம் அஸ்தமயானத்திற்கு முன்னே நாமும் நமது தாய் தங்கையரிடத்திற் செல்லவேண்டு மாதலால் விரைவில் இரதத்தைத் தருமிக்கக் கடவையென்று சொல்லினர். அச்சொல்லைக் கேட்டமாத் திரத்தில் அரசன் ஆவைப்பிரிந்த கன்றுபோல விம்மி விம்மி யழுது அறிவழிந்து மூர்சையாகிவீழ்ந்து மீட்டுந்தெளிந்தெழுந்து, சுவாமி யை யழைத்துக்கொண்டு வந்தபோது மீட்டும் விரைவிற் கொண்டு வந்து விடும்படி அதிதியாகிய தாயினால் சொல்லப்பட்டதை நினைந்து சிறிது துயரத்தினின்றும் நீங்கிச் சித்திபுத்திகள் முதலான சத்திகட் குங் குரூரன்முதலிய வீரர்கட்கும் மகோற்கட மூர்த்திக்குந் தக்கபடி வெவ்வேறு இரதங்களைச் சோடித்துக்கொண்டு வரும்படி அமைச்ச ருக்காக்கியாபித்தனன் அவர்களவ்வாறே இரதங்களை அரண்மனைவா யிலிற் கொண்டுவந்து நிறுத்த மகோற்கடமூர்த்தியானவர் சிரோரத்தி னங்களினுற் சோடித்திருக்கின்ற சிங்காதனத்தை விட்டிரங்கி அர சன். அமைச்சர், சேனைத்தலைவர் முதலாயினோர் புடை சூழ்ந்து போ ற்றிவர, வெண்சாமரைகள், ஆலவட்டங்கள் குடைகள், கொடிச்சீலை கள் முதலிய சின்னங்களைப் பல ரசைத்துச்செல்ல, திருச்சின்னம் பிள்ளாங்குழல் முதலியவைகளைப் பலர் வாசிக்க, அருகில் தீவட்டி களைப் பலரேந்தி நடக்க, பாட்டுவர் புகழ, வித்து வசனங்கள் கொண் டாட, கட்டியக்காரர் எச்சரிக்கை சொல்ல தேவமங்கையர்கள் நடிக்க, சுமங்கலிகள் ஆலங்களைச் சுழற்றிவர, இவ்விந வைபவங்களோடு சித் திதேவி புத்திதேவி முதலாயினோருடன் கொலுச்சபையினின்றும் வெளிக்கொண்டு அவ்வவர்களை வேறுவேறு இரதங்களி லேறிவரக் கட்டளையிட்டு, சுவரூபினமயமாயிரானின்ற மற்றெருதேரில் அரசன் சாரதியாக விருக்கும்படி தாமாரோகணித்து, சயபேரி-வெற்றிச்சங் கங் குடமுழா முதலிய வாத்தியங்கள் அண்டங்களதிர முழங்கும் படிக்கு உட்கோட்டையைக் கடந்து வெளிக்கோட்டையில் வரும் போது அங்கு வீசிக்கின்றவர்களெல்லோரும் மெலிந்த உள்ளத்தோடு மெய்யன்புகள்ள ஓடிவந்து மகோற்கட மூர்த்தியினுடைய தேரைப் புடைசூழ்ந்து சுவாமியினுடைய பிரிவை யாற்றமாட்டாதவர்களாய் விழிகளில் நீரருவி பாயும்படியாகத் துக்கித்து நின்றார்கள். அவர்களை மகோற்கடமூர்த்திதேற்றி, ஓ பத்திமையிற் சிறந்தவர்களே? நுமக்கு கணபதி மூர்த்தமாகப் பொன் முதலியவைகளினாலே சமைத்து உங்

கள் மனிகடோறும் வைத்துப் பூசித்து எல்லாக் இலேசங்களையும் நீக் கிக்கொள்ளக்கடவீர்களென்று அனுக்கிரகஞ் செய்தருளினர் அவ்வ னுக்கிரகத்தை யாவருஞ் சிரமேற்கொண்டு மீட்டுந் திரும்பிவிட்டார் கள். உடனே முன்னர் சுவாமியோடு பிரதிதினம் விளையாடல் செய் திருந்த சிறுவர்கள் யாவரும் ஓடிவந்து கர்த்தனைப் பணிந்து தெழுந்து கடிகடுக்கிக் இலேசித்து விழிகளில் நீருருவைப் பெருக்கி. ஓ கருணைக் கடலே! ஓ எங்கள் கண்மணியே! ஓ பெருஞ்செல்வமே! ஆன்மகோ டிகட்கு மலரிருளீக்கி முத்தியைத்தர வல்ல பரா பரமாயிருக்கின்ற தேவரீர் அப்பெருமைக் கேற்றபடி யிராமல் அடியேங்கள் சிறமைக் கேற்றபடி இப்பூவுலகத்தில் ஓர் பாலனுக அவதரித்து விளையாடுகின்ற வகைப்போன்றும், விளையாடல் காட்டுகின்றவகைபோன்றும், தொழு கைபோலவும், தொழனல்லாதவகைப் போன்றும். கொடுப்பவன் போன்றும், கொடுப்பதை யேற்பவன்போன்றும், அடிப்பவன் போன் றும். அடிப்படுகின்றவன்போன்று மிருக்கின்ற அடியேங்களி லொரு வராகிப் போசனஞ்செய்யுண்டும், ஆடையாதிகளை யுடுத்தும், ஆப ரணாதிகளை யணிந்தும், எல்லா விளையாடல்களையும் இதுகாறு மெங்க ளோடுங் கூடவிருந்து விளையாடிக்கொண்டிருந்த தேவரீர் இத்தினம் அடியேங்களைவிட்டுப் பிரிந்து போகும்படி நினைத்தபடியால், நீர்வற் றியகுளத்தில் மீன்குட்டிகள் பதைத்து இறக்குமாபோல் இனியடி யேங்களிறந்துபோவது சித்தம். அலலாவிடில் தேவரீர்போகுவதை விடுகின்றீரை, சுவாமிகளோபிரிதல் ஓர் தினைப்போதும் உயிர்வைத்தி ரோம், என்று இவ்வாறு பலமுறை விம்மி விம்மி அழுது குமுறுற்றார் கள். அவர்களை மகோற்கடமூர்த்தி கிருபைபண்ணி பார்த்தருளி, ஓ அன்பிற் சிறந்தவர்களே! யாம உங்களைவிட்டுப் பிரியோம் எக்காலத் தும் உங்களுடைய சூட்சுமபுத்தியில் வசிப்போம். உங்கட்கு யாதே னுந் தீங்பம நேருமாயின் அப்போதே சுமை நினைமின்கள், அத் தீங்கங்களையாமே நிவர்த்திசெய்தருளுவோம் என்றிவ்வா றுலதே றுதல் சொல்லி அவர்களை யனுப்பிவிட்டனர்.

இப்பால் காசிராசன் தேரை விரைவிற் றூண்டி அங்கார முழுவ துக்தாண்டி அளவற்ற காடுகளையுங் காடுகளையுங்கடந்து காசிப முனி வருடைய ஆச்சிரமத்திற்குச் சமீபமாகச் செலுத்திக்கொண்டு வந்த னன். அவ்வையவைக்காசிப முனிவரும் அவர் பத்தினியாகிய அதிதி யுமறிந்து எதிர்கொண்டனர், உடனே மகோற்கடமூர்த்தியானவர்கம துதாய்தந்தையர் வந்தார்களென்று ஆனந்தமுற்று கெடுநேரமென்று தேர விட்டிறங்கி அவர்கள் எதிரிற் சென்றனர். அப்போது தந்தையா

இய காசிபமுனிவர் அத்தியந்த சந்தோஷத்தோடு சுவாமியை அணைத் தக்கொண்டனர். அதிதியாகிய தாயும் சுவாமியைத்தழுவி ஆனந்த முற்றனள். அருகிலிருந்த மற்ற முனிவர்கள் முதலியினோர் சுவாமி யைப்பலமுறைவந்தித்து உபசரித்தார்கள். அவ்வவர்கட்குத் தக்கபடி சுவாமியும் பற்பல உபசாரங்களைச் சொல்லியருளினர். பின்னர் காசி ராசனுவன் காசிபமுனிவரையும் அவர் பத்தினியையும் பணிக்கித் தூழ்ந்து கைகூப்பிநின்று, என்னையாளுடையவர்களே உங்களுடையதிரு பாகடாட்சத்தினுல் பூமிபாரம் நீங்கி விவாகமும் நிறைவேறியது முன் னர் நீங்கள் உத்தரவு செய்தபடி சுவாமியை விரைவில் அழைத்துவரா மலிருந்ததற்குக் காரணம் யாதெனில் இவ்விடத்தினின்று வெளிக் கொண்ட அத்தினமே தமக்கெதிரில் ஆயுதபாணியராய் வந்த அளவ ற்ற அவுணர்களைக் கொன்றனர். அதற்கெடுத்த மூன்றுநாள் யாவரும் ஆனந்த மெய்துமபடி சித்தி புத்திகளை விவாகஞ் செய்தருளினர். ஐந்தாநாள் மூன்று அவுணர்களைச் சங்காரித்தனர்; ஆறுநாள் சோபிட ஞகவந்த ஓரவுணனை மாய்த்தனர். ஏழாநாள் இணருகவுக தவனியாக வும் வந்த இரண்டவுணரை நாசஞ்செய்தனர். எட்டாநாள் அப்பா சுரன் மூதலாயினோரை அதஞ்செய்தனர். ஒன்பதாநாள் அம்பாசுர னுடைய தாபைக் கொன்றனர். பத்தாநாள் நமது பட்டணத்தி லுள் ளோராற் செய்யப்பட்ட விருந்தை நுகர்ந்தருளினர் பதினேராநாள் நராந்தகனைச் சொர்க்கலோகத்திற் கனுப்பினர் அப்பால் இரண்டு நாள் தமையனுகிய தேவாந்தகனுடனே அளவற்ற யுத்தங்களைச் செய்து பதினலாம்நாள் உதயத்தில் அவனையுஞ் சொர்க்கலோகத்திற் கனுப்பினர். அதற்குமேல் பதினுறுநாள்வரையில் எனது நமராணுக்கு விவாகஞ்செய்வித்தருளினர். இருபதாம்நாளாகிய இத்தினம் உங்களி டத்தில் யதாப்பிரகாரம் வந்திசேர்ந்தனர் என்று அவ்விடத்தினின்று புறப்பட்டநாள் முதல் பிரதினம் மகோற்கடசுவாமிகள் நீர்ஆதிய திருவிளையாடல்களை யெல்லாம் பாந்தமாகச் சொல்லினன். அவ்வற்பு தத்திருவிளையாடல்களையெல்லாம் காசிபமுனிவரும் அதிதியும் செவி க்கமுதாகக் கேட்டுச் சந்தோஷித்து காசிராசனையும், மகோற்கட மூர்த்தி மூதலானோரையும் ஆச்சிரமத்திற் கழைத்துக்கொண்டு வெளி யிலிருந்திட்டனர் அத்தினமெல்லாம் யாவரும் ஒருவரோடொருவர் அளவளாவியிருந்து மறுதினங் காலையில் காசிராசனுவன் மகோற் கடப்பெருமான் முதலாயினோரை அணைகடந்த பத்தியோடும் பணிக் துதுதிசெய்து அளவற்ற வரங்களைப்பெற்று சுவாமியினுடைய திரு வடிகளில் மனதை நிறுத்தி அரிதில் இவ்விடத்தினின்று நீங்கிக் காசி

நகரைவந்து சேர்ந்தனன், அப்பால் இலாள்களுக்குப்பின் மகோற்க டமூர்த்தியானவர் காசிபமுனிவரையும் அதிதியையும் திருவையோடு பார்த்து, குரவர்களே ! நீங்கள் அளவற்றகால் அரிய தவங்களைச்செ ய்து கம்மைத் தரிசித்துப்பிரார்த்தித்தபடி யாம் உங்களிடத்தில் புத் திரனுக அவதரித்துத் துட்டர்களே யெல்லாஞ் சங்கரித்துச் சிட்டர்க ளையெல்லாம் பாதுகாத்துத் தேவர்கட்குச் சொர்க்கலோக முதலான வைகளைக் கொடுத்து எங்கும் வேதாகம நெறிகளைப்பரவச் செய்தோ ம், இனி நமதுலகத்திற்குச் செல்லவேண்டுமென்று திருவாய் மலர்ந் தனர். அதைக் கேட்டவுடன் முனிவரும் அதிதியும் ஓர் முகூர்த்த காலம் வரையில் பொறிகலங்கி நின்று விழிகளில் அருவிபாய எமது கர்த்தனைப் பார்த்து, ஓ எங்கள் குலதெய்வமே ! எக்காலத்தில் தேவ ரீருடைய திருவு நவைக்கண்டு தரிசிக்கப்போகின்றோ மென்றுபுலம்பி னர்கள். அவர்களை மகோற்கட மூர்த்திபார்த்து, அன்பர்களே! நாம் உமாதேவியிடத்தில் குழந்தையாக அவதரிக்கப் போகின்றனம். அப் போது நீங்கள் நம்மைக் காணலாம் கிலேசப்பட வேண்டா மென்று தேற்றி, சித்திபுத்தி முதலான நமது பரிசனங்களோடும் மறைந்து ஆனந்த புவனமென்கின்ற தமது லோகத்தை யடைந்தருளினர். அத ற்குமேல் காசிபமுனிவரும் அவர் பத்தினியும் ஓர் ஆலயஞ் சமைத்து மகோற்கட மூர்த்தியைப்போல சொரூபத்தினுலே ஒருருவஞ் செய்து வைத்துப் பிரதினம் வேதாகம முறைமைபடிப் பூசை செய்துவந் தார்கள். அவ்வாறே உலகின்கணுள்ள மற்றைபருந் தங்கடங்கள் வீடு கள்தோறும் விநாயக மூர்த்தியைப்போல ஒருருவஞ் சமைத்து வை த்து காளு வரையில் சகல பாக்கியங்களையு மனுபவித்து வருகின் றனர்கள்.

காசிராசன் தனது நகரஞ் சேர்ந்தபின்னர், சகலலோகாயகரா கிய கர்த்தாவே தனது ஆசிரியருடைய புத்திரராகித் தனது புத்திரரு டைய விவாகத்தினிமித்தம் அரண்மனையில் வந்திருந்து உண்ணல் உடு த்தல் முதலானவைகளைச் செய்து அளவற்ற அற்புதத் திருவிளை யா டல்களை நடாத்தி யிருந்த செயல்களை யெல்லாம் நினைந்து நினைந்தமற் றொரு காரியத்தினும் மனதைச் செலுத்தாமல் தவத்திற்சிறந்த அரிய பெரியோர்களுடைய சொற்பனத்தில் காண்டற் கருமையா யிருக்கி ன்ற வண்துவை நவீலில் நேராகக்கண்டு தரிசிக்கும்படி எளிதிற்கிடை த்திருந்தும் பாவியேன் கை நழுவவிட்டேனே ? சூரியனுதியின்மணி யை யிழந்த உலகமும், கண்மணியை யிழந்த விழிகளும், கண்மணி

யை யிழந்த நாகமும், உண்மணியை யிழந்து வாடுகின்றனன்னுடுமோ, ப்பாகா. என்றிவ்வாறு பலமுறை தனக்குத்தானே நொந்துகொண்டு கற்போன்ற நெஞ்சையுடையவர்களும் கண்டவுடன் சரையும்படியாக உள்ளுக்குள்ளே அனலிற்பட்ட மெழுகுபோல உருகிவிழிகளில் நீர்ப் பசுமையற்று நெடுமேவங்கியேங்கி மகோற்கடமூர்த்தியினுடைய ஆல யத்தில் அடிக்கடி அன்பாய்ச் செல்லுவதும், அங்கு செய்யத்தக்க கருமங்க ளின்னவையெனத் தெரியாமல் மதிமயங்கி வாடுவதுமாக யிருநதனன். அவ்வா றிருக்கும் நாளியில், ஒருநாள் முற்கல முனிவர் தற்செயலா யங்கெழுந்தருளினர். அப்போது எல்லா வடிவங்களையும் மகோற்கட மூர்த்தியினுடைய வடிவமாக நினைந்து நினைந்து தாபரித் திருக்கின்ற காசிராசன் அம்முனிவரையும் மகோற்கட மூர்த்தியாக வே நினைத்து மிக்க பத்தியோடு மெதிர்கொண்டு பணிநது பலமுறை துதிசெய்து, சுவாமி ! அடியேனுடைய நாதராகிய மகோற்கட மூர்த் தியினுடைய திருவடிகளை எக்காலத்திற்காணப்பெறுவேனென்றுகேட் டனன். அதற்கம்முனிவர் சந்தோஷங் கொண்டு அரசனே ! ஐயாயிர வருடஞ் சென்றபின் அக்கருத்தாவினுடைய திருவடிகளைக் காணப் பெறுவை. அதுபரியந்தம் இங்கே உதைசாட்சியினைச் செலுத்திக் கொண்டிரு முடிவில்லா விநாயகக்கடவு ளுன்னிடத்திற்கு ஓர் லீமான மனுப்புவர் இஃதுண்மையென்று சொல்லிப் போயினர், பின்னர் ரிச னனவன் மனக்கேதறி மழைத்துளிக் கெதிர் பார்த்திருக்கின்ற சாதகப் பட்சியைப்போல விநாயக மூர்த்தியினுடைய திருவடிகளைத் தியானஞ் செய்து சுவாமியினுடைய திருவருளத்தை பூசித்துக் கொண்டு வந்த னன். இவ்வாறு ஐயாயிரவருடஞ் சென்ற பின்னர் சிறையிலின்று வெ ளிப்பட்டவர்போல அரசன் மேனான மகிழ்ச்சிகொண்டு, தனது அரசு நிலையைப் புத்திரனிடத்தி லொப்புவித்து விநாயக மூர்த்தியினுடைய திருவருளுக் கெதிர்ப் பார்த்திருந்தனன். அப்போது தம்மை விழைந் தோர்கள் ஆண்பாலாயினும் பெண்பாலாயினும் அவர்கள் இருதயத மலத்தில் சதாகாலமும் வாசஞ் செய்தருளுகின்ற விநாயகக் கடவுள் ஓர் தெய்வவிமான மனுப்பினர். அவ்வற்புதத்தைக் காசிராசன் கண்டு ஆனந்தபரவசனுகி, ஆடிப்பாடிக் கரையற்ற களிப்பினுல் கரங்களைக் கொட்டி, அனந்தமுறை வலம் வந்து பூமியில் அடியற்ற மரம்போல வீழ்ந்து பணிந்தெழுந்து சுவாமியினுடைய பேரருளை வியந்து வியந்து துதிசெய்து அளவறறமேலான சந்தோஷ கரத்தோடும் அவ்விமானத் தினுள் தாரோகணித்தனன். அம்மாத்திரத்தில் அவ்விமானமானதுமே

ருந்து குயவர் உலகம் முதலிய சகல உலகங்களையுங் தாண்டி

அண்டப் பித்தியிலே பிரகாசித்திருக்கின்ற கற்பகருவலோகம் கவுரிலோகம் முதலியவைகளைக் கடந்து சிவலோகம்போய்ச் சேர்ந்தது உடனே அரசனுவன் விமானத்தினின்று மிறங்கி அங்கே சுவர்ணமயமா யிராநின்ற ஆலவத்தில் அளவற்ற சிவகணங்கள் புடைசூழும் படியாகச் சிம்மாதனத்தி லெழுந்தருளி யிருக்கின்ற விநாயமூர்த்தியி னுடைய திருமுன்னர் சென்று அனந்தமுறை பணிந்தெழுந்து ஈசர் தமும்பேறும்படி வாழ்த்தி அடியேனைப் புன்மையினின்று நீக்கிப் புரந் தருளவேண்டும் இறைவனே என்று பிரார்த்தித்தனன் அப்போது அணுவை மேருவாக்குவதுபோல அடுத்தவர்களுடைய மலபாசங்களை நீக்கித் தன் மயமாக்கவல்ல விநாயகக் கடவுளானவர் உடனே அவ்வரசனுக்கு மேலான அறிவைக்கொடுத்துத் தமது சரீரத்தி லிருக்கும் படியான காட்சியையு மளித்தனர்

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே! இவ்வாறு காசிராசனுவன் விநாயகமூர்த்தியுடைய பெருங்கருணையினல் அகண்டாகார பரிபூரண சோதிமயமாகிய பேரின்ப முத்தியையடைந்து பிரமானந்த சாகரத்தின் மூழ்கி யிருந்தனனென்றால், அவன் செய்திருக்கின்ற தவத்தின் பெருமையை யாவர் உரைசெய்ய வல்லவர்கள் என்று சூத புராணிகர் கூற சவுனகாதி முனிவர்கள் அவரை பணிந்தெழுந்து சுவாமீ முன்னர் விநாயக்கடவுள் தமது ஆனந்த புவனமென்கின்ற லோகத்திற் கெழுந்தருளினரென்று திருவாய்மலர்ந்த தேவரீர் மீட்டும் அக்கடவுளுடைய வலுக்கிரகத்தினல் காசிராஜன் சிவலோகமடைந்து விநாயக மூர்த்தியினுடைய சாமீபமுத்தியை யடைந்தானென்றது அடியேங்களுடைய மனதிற் சந்தேகத்தினை யுண்டாக்கியது ஆதலால் சுவாமிகள் அச்சந்தேகத்தை நிவர்த்திசெய்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள் அதற்குச் சூதபுராணிகர் நல்ல கேள்வியை யேளினீர்களென்று சந்தோஷித்து, ஓ அருந்தவர்களே சிவலோகத்தி லெழுந்தருளியிருக்கின்ற சிவபிரானுவரே சிருட்டியாதிமுத்தொழில்கட்கும் பிரமன் முதலிய மூன்று மூர்த்திகளானதுபோலத் தம்மை விழைந்தோர்க்குச் சகல விக்கினங்களையு நீக்கிவேண்டிய வரங்களை யளித்துத் தேவர்மக்கள் முதலியயாவரும் வழிபடத்தக்க தெய்வமாகி எல்லாக் கடவுளர்க்கு முன்னதாகப் பூசைகொண்டதம்மோடொப்பாரு மிக்காருமில்லாத பெருமை தோன்றும்படியாக விநாயகமூர்த்தியென்னும் திருநாமத்தினைத் தரித்தருளி சகல வான்மீகோடிகட்கும் இம்மையிலே போகபாக்கியங்களையும் மறுமையில் மோக்ஷ சாம்பிராச்சியத்

திணையும். எளிதில் அருள்செய்யும்படி வேறே ஒரு திருவுருவங்கொண்டருளினார்; ஆதலால் சிவபிரானென்னும் திருமேனிக்கும் விநாயகமூர்த்தியென்னுஞ் திருமேனிக்குஞ் சிறிதே பேதமாகும். ஆயினும் அவ்விரண்டு திருவுருவங்களினு முள்ளவஸ்து ஒன்றுகவேயிருக்கும். அவ்வருவங்களிலும் ஐக்து முகங்களும் பத்துக்காங்களும் பதினைந்து விழிகளும் சந்திரனைத்தரித்த சடைமுடியும் சர்ப்பாபரணமும் ஆக்கல் முதலிய முத்தொழில்களும் பூதகணங்களும் கொன்றைவண்ணி அமுகு முதலியவைகளை யணிந்திருக்கின்ற சிறப்பும் பேதமில்லாமல் ஒத்திருக்கின்றதைக் கண்டிருக்கின்றீர்கள். அத் திருவுருவங்களிலுள்ள வத்துவும் ஒன்றுதலாலே அம்மூர்த்திகள் வசிக்கின்ற உலகமும் ஒன்றுகவேயிருக்கின்றது. அவ்வுலகமே ஆனந்த புவனமென்றும் நிஜாலோகமென்றும் சிவலோகமென்றும் வழங்கப்பட்டிருக்கின்றது. அதனால் முத்திவளத்தை யளிக்கத்தக்க கணேசமூர்த்தி வாழ்கின்ற உலகமும் அதுவேயாகும். அக் கணேசமூர்த்தியினுடைய திருவடிகளில் அன்புவைத்த மெய்யடியார்கள் மிக்கமகிழ்வோடு வீசஞ்செய்கின்ற உலகமும் அதுவேயரம் ஆகலால் சிவபிரான் விநாயகக்கடவுளென்னு மிரண்டு திருமேனிகட்கும் அத்திருமேனியி லிருக்கின்ற இரண்டுவஸ்துக்களுக்கும் அவர்கள் வசிக்கின்ற உலகங்கட்குஞ் சற்றும் பேகமில்லையென் றறியக்கடவீர்கள்.

மகோற்கட விநாயகர் திருவவதாரப் படலம்

மூற்றிற்று.

பதினேராவது

உடுண்டி விநாயகர்

திருவவதாரப் படலம்.

ஆதலான் மலேவே யில்லே யறமகோற் சுடர்தஞ் செய்கை
யோதின மவரே மீள வுமையிடர் தோற்றி நம்மை
மேதக வருளு டுண்டி விளைய ளை வாமுங்
காலலி னறைவா மின்பக் கடலுளீ ரினிது கேண்மின்.

ஓ சவுனகாதி முனிவர்களே! விநாயகமூர்த்தி மகோற்கடர் திருவவதாரங்கொண்டு நாசாந்தகணியர் தேவாந்தகணியரும் காசஞ்செய்து காசிராசனுக்கு முத்தியளித்த திருவிளையாடலேச் சொன்னேம், இப்பால் உடுண்டிவிநாயகர் திருவவதாரங்கொண்டு செய்தருளிய திருவிளையாடலேச் சொல்லுவோம் கேட்பீர்களாக

இப்பூவுலகத்திற் சகலாலும் புகழத்தக்க கைவர்த்த மென்னுந் தேயத்திலே அசபடங்கள் முதலிய சிறப்புகளே வாய்ந்த பெம்மை மென்னுமோர் பட்டணமுண்டு, அப்பட்டணத்தில் பிரமசுரமென்னுமோர் அசுரன் சிவபெருமானுடைய திருவடித் தாமரைகளைக் கருதி அளவற்றகாள் தவஞ்செய்தனன். அத்தவத்திற்குச் சிவபெருமான் திருவுளங் கூர்ந்து பிரத்தியட்சமாக, உடனே அவ்வசுரன் கொம்மென் றெழுந்திருந்து வேதாகமங்களினுல் பலமுறை துதிசெய்து நின்றனன் அப்போது சிவபிரான் நீகருதியவரம் யாதென்று கேட்டருள, அதற்கவ்வசுரன் மீட்டுந் தொழுதெழுந்து, ஓ தினதயாளுவே ? எனது கையை யாவர்முடியில் வைத்தாலும் அவர்கள் உடனே வெந்து சாம்பலாகும்படியான வரத்தினைக் கொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான், அதற்குக் கர்த்தன் புன்னகை செய்து அவனிசசையின்படி கொடுத்தருளினர். அப்பொழுதே அப்பாதகன் அவ்வரத்தைச் சோதிப்பவனுகித் தனது கையை சுவாமியினுடைய திருமுடியின்மீது வைக்கபத்தனித்தனன் அதை சுவாமியறிந்து தாம் கொடுத்தருளிய வரத்தைத் தாமேயழிப்பது தகுதியல்லவென்று கருதி, அப்பாதகனுக்குத் தோற்றுதபடி வியாகபகாயினர். அப்போ தவ்வசுரன் எதிர்நின்ற திருவுருவைக் காணுதவனுகி சொர்க்காதி புவனங்களினுந் திசைகள்-தீபங்கள்-வரைகள்-வனந்தரங்கள் முதலிய இடங்களினுந் தேடித்திரிந்தனன். அச்செய்தியை விண்டுவதற்கு விஸ்வரூபியாயிருக்கின்ற சிவபிரானே இக்கொடியவன் காணவல்லனே ? இவன் பெற்றிருக்கின்ற வரத்தினுல் இனித் திரிலோகங்களையும் நீருக்கத் தணிகுவன். இவனை நாம் ஒருபாயத்தினுலழித்துவிட வேண்டுமென்று தீர்மானித்து சோடிசூரியப் பிரகாசமாய் இலக்கணத்திற்கு மேற்பட்ட வடிவுடன், மோகினிரூபமெடுத்து மாய்கைக் கரியான பார்வதிகண்டாலும் மயங்கத்தக்க கிடைகொடி பாவனைகளைப் பெற்று, வண்ணிறந்த பனிதர்களுடைய கரீலத்தில் பஞ்சபுட்பபாணங்களைக் காமேவகமாகப் பிரயோகிப்பதுபோலத் தெளிந்த நீலமணிபோலக் கறுத்து, வெண்மை யொளிகொண்டு, கடையிற் செவ்வரி பாய்ந்து, நெருங்கிய கருமைவாய்ந்த பெல்லிய உரோமங்களைப பொருந்தி நீண்டு விளங்குகின்ற விழிமலர்களை காற்றி சைகளினுஞ் சுழற்றிப் பார்த்து மேககாலங்களைப்போன்று கண்டவர் வியப்பெய்த நீண்டு, பரிமளித்து நெய்து இருண்டுதாழ்ந்து பூங்கொத்துகளைப் பொருந்தி விளங்குகின்ற கூந்தலை இருமருங்கினுஞ் செலுத்தி படியாக அலங்கரித்து, புடைபரந்து மேலெழுந்து நீலமணி சோர்ந்ததைப் பொப்பான நிலீமுகம் வாய்ந்து இடை தோன்றுமல் நெருங்கி மார்பி

னிட முழுவதும் நிறைந்து தடையின்றிப் பருத்துப் பூரித்துத் தம்மு ளிரண்டு மொத்து இடையீனை வருத்தி நிமிர்ந் திருக்கின்ற தனங்களில் ஒன்றை வெளிப்படுத்தி. செம்பஞ் சூட்டிய பாதங்களிலணிந்த சிலம்புகளுங் காஞ்சனி லமைந்த வலீயல்களுங் கலிக்க, அன்னத்தைப் போல மெல்லன நடந்து, அரும்புகின்ற புன்முறுவலிலினீதத்துக்கினியை நிகர்த்துக் கொஞ்சி வசனித்துப் பிரமசுர னெதிரிற் சென்றனர்.

அம்மாத்திரத்தில் அவ்வசுரன் அனலிற்பட்ட மெழுகைப்போல மனங்கரைந்து விரகாக்கினிமேலிட்டு உள்ளத்தையும் உடலையும் வாட்டச்சோர்ந்து வெம்பிகாமவெள்ளம் பெருகவருந்தி யாணையுண்ட விளாங்கனியைப்போல வுள்ளுடைந்து சிவகடாட்சத்தினுல் வந்த மோகினியின் இலக்கணவடிவைப் பாதாதிகேச பரியந்தம் நோக்கி நோக்கித்தாபரித்திருக்கப்படாமல் மெல்ல மெல்ல நெருங்கிக் கூரிய வேலைப்போல விளங்கிக் காதளவுமோடிச் செவ்வரிபரந்து மைதிமிர்ந்து பாலியொப் பவிளநகை விடத்தினுங் கறுத்து மான்பார்வையினைப் பழித்த நேத்திரங்களைப் படைத்திருக்குப் பெண்கள் சிகாமணியே ? உமதுதிருநாமம்யாது ! நீர் இருக்குமிடம் பூவுலகமோ ! பொன்னகரோ ! பிரமனுலோ ? மன்மதன்பதியோ ? வைகுந்தநாடோ ? சற்றே திருவாய்மலர்ந்தேதும் பெண்ணே கண்ணே ? எனது தவப்பேற்றினுல் இங்ஙன மெழுந்தருளினீர் ? உமது சுந்தரவடிவையும் நிலையையுங் கண்டமாத்திரத்தில் மனந்தாளவிலலே. செல்வபபெருக்கினையுடைய பொன்னகரத்தினும், சமுத்திரஞ் சூழ்ந்த பூமண்டலப பரப்பிலும், ஆதிசேடனையொத்தவன் வாழும் பாதலத்தினும், அதிக சுந்தரவதிகளாகிய பெண்களனைவருக்கும் நாயகமாகப் புகழவல்ல சர்வமங்கள ரூபலாவண்ணிய முள்ள உமது பெருமைகளை யாவராற் புகழப்படும் ? கறுத்து நீண்டிருக்குங் கூந்தலிலாய்ந்த பாவாய் ! உமது மங்களகரமாகிய தோற்றம் எரிர்ப்பட்ட மாத்திரத்தில் இத்தலத்தைக் கடந்தப்புறம் போகச் சம்மதபபடாமல் மதிமயங்கி வருந்துகின்ற எனது மனங்களிக்கத் தக்கதாகப் பவழத்வ்ய மொத்துக் கேகயத்தைப் பழித்தவிளங்குந்திருவாயை விண்டு ஓர் வார்த்தையாடீரோ ! அல்லது தமது அருள் நோக்கத்தைச் செலுத்தி எனது விண்ணப்பத்தினைச் செவிகொடுத்து வினவி மறுமொழியாட மாமிரங்கீரோயின் யானென்ன செய்வேன் ! எனது மனமுங் தேகமும் பூரித்துக் களிக்கும்படி நகை முகத்தை யாயினுங் காட்ட வொண்ணுதோ ! அஃதில்லாமற் போயினும் சேற் கெண்டையைபபோலீர் பிறழுந் திருநோக்கத்தினைக் குளிர்ச்சியாகச் செலுத்த

நீணியீரோ? உமது தரிசனை கிடைத்தமாத்திரத்தில் மனவிலே கலவ்விப் பொறிகள் மயங்கிக் காமக்கவலியிற் பட்டுழலுஞ் தமியேன் இனிகனித் துப்பிழைக்கும் மார்க்க மொன்றைக் காட்டாமலுஞ் சற்று மென்னி டத் தன்பைச் செலுத்தாமலும்; இரக்கமற்று இவ்வாறே இருப்பீரா யின் சத்தியமாகச் சொல்லுவேன் எக்காலத்தினுங் நீராத பழி பாத கம் உம்மைச்சேருவதற் கையமில்லே. பராமுகமாயிராமற் தரிதமாயடி யேன் பேரிற் திருவைசெய்து உமதினைக்கதைக் கடாட்சிக்க வேண் டும், நீரிட்ட பணிகளீச் செய்யக் காத்திருக்கின்றேன். நீர் விரும்பிய வ ணத்தையும் இன்னிமிடத்திற் றாவல்லேன், காமனெனினும் பிராணனை யிழப்பதற்கு முன்னக் தபைசெய்து அதற்குரிய வின்பசாதனத்தைக் கடாக்ஷித்துப் பாதுகாப்பதன்றி, இனியான் மன்மதசாரங்கட் கிரையா காமல் உமது கடகங்கணங்களணிந்த திருக்காத்தினும் பிடித்தணை த்து ஆதரிக்கவேண்டுமென்று வெளுத்த பற்களைத்திறந்து காங்கை நீட்டிப் பற்பல விதங்களாகக் கெஞ்சிக் கெஞ்சி இரந்து அக்கினியிற் பட்டகாந்தண்மலையொதது மெய்கருகி விரகாக்கினியினல இறந்த வண்ணப்போல இவ்விதங்களாக அலைந்தழன்றனன்.

இவையனைத்தையும் விண்டுவாகிய மோகினிகேட்டுப் புன்னகை யோடு சிலதூரம் வீணைவாசித்தும், சிலதூரம் சங்கீதங்களைப் பாராட் டியும், சிலதூரம் சாமீத்தியங்களோ விரிததும், சிலதூரம பரதவிதிப் படி நடித்தும், அன்னத்தைப்போல மெல்ல மெல்ல நடந்தனள். இவ் வாறு புன்னகைமாத்திரமும்பி மறுமொழியாடாமற் செல்லுகின்ற மோகினியினுடைய நூபுரப்பைப் பிரமாசுரன் கண்டு கோங்கரும்பை யொப்பக் குருத்துப், பொற்குடத்தைப் பழித்து விம்மித் ததும்பித் தேமல்பரந்திருக்குங் தனபாரங்களைப் படைத்த பெண்ணமூதே! உமது மங்களகரமாகிய வடிவின் பொலிவையுங் குணதிசயங்களையுங் கண்டபோதே மன்மதசரங்கட்கிரையாகி விரகாக்கினியைத் தாபரிக்க மாட்டாமல் மிகவும் வருந்தி தூலிதூரத்தி லிருந்து உம்மையே நாடி வருகின்றேன், இனித் தேவரீர் சென்தாமரை மலரையொத்த திருவடி களல்லது வேறுகதியில்லே எக்காலத்திலும் உம்மைப் பிரியவறியேன். சற்றும் இடைவிடாமற் கலந்து சுலவியிருக்க விரும்பினேன், மாவடு வைப்போலப் பசுமைதாடி யிருக்கும் விழிகளையுடைய வணிதாரத்தின மே! தீனனுடிய யான் தம்மைவிட்டுப் போகவுங் தணிவனோ! அப்ப டிக்குச் செய்யவெத்தனப்படினும் மனமொருமித்து நிற்குமோ! உட லைப் பிரிந்து உபிர் தாபரித்திருக்க வல்லதோ! இக் காரணங்களை

விரித்து விரித்துப் பேசவும் வேண்டுமோ! மின்னலொயொப்பக் காட்டி: மறையும் மெல்லிய இடையையுடையபேதாய்! மைதிகிர்ந்து வேலைப் போலக் காட்டுக் தேவரீர் கூரிய கண்களின் சுழல்வலையிற் பட்டு வாடி வருந்தித் திகைத்தவதிபடுகின்ற அடியேனுக்குத் தமது பூர்ணகிருபா ரோக்கக் கடையையாவது காட்டலாகுமோ? இதையன்றி இனியான் பிழைக்கும் மார்க்கம் வேருண்டோ? இவ்வபாயகாலத்திற் சிறிதுத யைசெய்து தேவரீருடைய திருக்கரத்தினுல் அடியேனே யீணத்து ஊசலாடி இவ்வுயிரைக் காக்கக்கடவீர். கண்ணுடி யொன்றேயன்றி மற்றவைகட் கொப்பாகாது வட்டமாய் விளங்கும் அழகிய கபோலங் களையுடைய நங்காய்! அடியேன் பிறந்தபோதே தேவரீர் களித்து நீராடுவதற்கு யோக்கியமான சுனையாகவாவது கொங்கைகளினிடத் திற் பூசும் பரிமளமிருந்த சாந்தமாகவாவது கறுத்து நீண்டிருக்குங் கூந்தலிற் சொருகவல்ல சுகந்தகந்தங்களிலேசும் புதியமலராகவாவது உருப்பெற்றுத் தம்மைச்சேர்ந்து மகிழ்ச்சி பெறுதிருக்கும் பாக்கியத் தைப் பெருமற் போயினேன் இடபோது விரகாகினி மேலிட்டுத் தேகத்தையும் மனததையுஞ் சுட்டுக் கொளுதலுவதினுல் மிகவும் வாடு கின்றனன். தமது கிருபைக்குப் பாததிரனுதற் பொருட்டு இனி யான் செய்து கொள்ளவேண்டுங் கடமையாதோ ஒன்றுங் தோறவில்லை. அதைத் தயைசெய்து காடபிரியின் தேவரீருடைய மஞ்ஞபீஷ்டப் படிக்குக் கார்த்திருக்கின்றனள். ஒ என்ஞசைக் கண்மணியே! எனது மனக்களிப்பெய்த விளங்கி அடியேன் பின்பற்றி வருவீரியின் அங்ங மிடதகில் பொன்னுலக வாழ்வைப பெற்றிருக்கும் அமரபால்திரீகள ணவரும் வணங்கிவேண்டிய தொண்டுகளேச்செய்து போற்றிவரும்படி யாக வைப்பதன்றித் தெய்வலோக முற்றினும் நீரோடனுபவித்துக் களி த்திருக்கவைப்பேன். தேவரீர் மனதில் விருப்புற்றவைகளேத் திருவாய் விண்டு சொல்லுவீரியின் அவைகள் எத்தகையவாயினும் ஓர் கொடி ப்போதிற் றேடித்தரவல்லேன். என்று இவ்விதங்களில் பற்பல இன் சொற்களேப்பேசிக் காமலாகிரியினு லுண்டாகும் வருத்தங்களேக் காட் டிக் கெஞ்சித் தொடர்கின்றபோது மோகினியானவள் சிறிது மனமிர ங்கினவள்போல நின்று, ஒ அரசனே! யான் காட்டியஞ் செய்கின்ற பெண். நீரோ தீரத்தோடு சகலரையுஞ் சயிக்கவல்லவீரர் யான் ஒன் றினும் நாட்டமில்லாமல் என்னிச்சையாற் செல்கின்றபோது என்னி டத்தில் நீர்காமலாகிரியினுல் உளம்மயங்கிக் கருத்தழிந்த பித்தனே பொபயப்பேசிக் கலவியை யிச்சித்து வழக்காடுவது ஞாயமோ? ஆயி னும் பாதசாத்திரத்திற் கூறியமுறைமைப்படி எனக்கெதிர்நின்றுயான்

செய்யும் அவிநயத்தைப்போல நாட்டியஞ் செய்ய வல்லவர் யாரோ அ வர்களையன் சேர்வதல்லது எனதுமனம் வாடியகாலத்தும் மற்றொரு வரையான் சேரேன், இதுவே எனது பிரதிக்ஞை யென்று சொல்லி னள். இவ்வாறு விண்டுவாகிய மோகினி சொன்ன வஞ்சகத்தைப் பிர மாசுரன்கேட்டுச் சிறிதும் அதனை அறிந்து கொள்ளாதவனாகி மேகத் தை நிகர்த்த கரிய கூந்தலையுடைய மின்னே என்னுயிரே ! நீர் எவ்வ ண்ணம் அவிநயம் பிடிக்கின்றீரோ அவ்வண்ணமே யானும் உமக்கெ திர் நின்று பிடிக்கின்றேனை, அதன் பின்னேனுஞ் சிறந்த பவளதண் டுபோற் றிரண்டு விளங்குகின்ற தமது செவ்விதழ்மூலக் கிருபை செய் ய வெண்ணுவீரோ வென்றுகேட்டனன். அதற்கு மோகினியானவள் அவ்வாறே ஆகுகவென்று சொல்லித் தனது கங்களைக் கூப்பிக் கொ ண்டு அவ்வசுரனுக்கெதிரில் நின்றனள். அவனுந் தனது கங்களைக்கூ ப்பிக்கொண்டு அம்மோகினிக் கெதிரில் நின்றனன். பின்னர் மோகினி யானவள் தனது கங்களிலொன்றைப் பிடித்துத் தன்தலைமீது வைத் தனள். அப்போது அவ்வசுரன் தான் பெற்றிருக்கின்ற வரதானை மற ந்தவனுகித்தானும் அவ்வாறே தனது கையைப் பிடித்துத் தன்தலைமீ து வைத்துக்கொண்டனன். அந்நிமிஷத்தில் முன்னர் சிவபெருமானு டைய நகையால் திரிபுரத்தார் எவ்வாறழிந்தார்களோ அவ்வாறு பிர மாசுரன் வெந்து சாம்பராயினன். மோகினி வடிவங் கொண்டு வந்த விண்டுவானவர் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினர்.

கேட்டீர்களோ சவுனகாதி முனிவர்களே ? கிடைத்தற்கரிய மே லான வரத்தைத் துட்டர்களாயினும் தேவர்களிடத்திற் பெற்றவர்க ளாயினும் அவ்வரத்தினாற்றமே யழிவடைவது மேலோர் சொல்லுவா ர்கள். அதுபோலவே உலகத்தை யெல்லாம் நீருக்கலைல வரத்தினைப் பெற்ற இவ்வசுர பாதகன் தானே அவ்வரத்தின் பயனை யடைந்தவ னினன். பின்னர் விண்டுவானவர் அம்மோகினி வடிவோடு பான்மக மென்கின்ற அவ்விடத்திற்றனே வந்திருந்தனர். அதுதல் அதகல த்தை யாவரும் முருகதை யென்று வழங்குவார்கள் இவ்வாறு பிரமா சுரனுக்கு நேர்ந்த சம்பவத்தினை அவன் குமாரனை தராசத மனன் பவனறிந்து ஈங்கள் குலக்குருவாகிய சுக்கிரனிடத்திற்சென்று பணிக தெழுந்து கண்களில் நீரைச்சொரிந்து தனது தந்தைக்குநேர்ந்த கொ டுமைகளைச் சொல்லித் துக்கித்து, சுவாமீ ! எனது தந்தையாரை நீரு க்கிய விஷ்ணுமுதலிய எல்லாத் தேவர்களையும் அடக்கி அவர்கட்கெல் லாம் யானேதனிவனாகி திரிலோகங்களையுஞ் சயப்பிரதாபத்தடனரு

ம்படியாகத் தேவரீர் கிருபைசெய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்குச் சுக்கிரன் மனதிரங்கி நீ பயப்பட வேண்டாமென்று பலதேறுதல்களைச் சொல்லித் தீக்ஷைசெய்து, சிவபெருமானுடைய பஞ்சாக்கரத்தை யுபதேசித்து, நீ இம்மந்திரத்தினால் பெரிய தவங்களைச்செய்து அரிய வரங்களைப் பெறுதியென்று விடைகொடுத்தனன். அம்மாத்திரத்தில் தூராச்சதன் அமுதுண்டவனே யொப்பக்களிப்பெய்தி மிக்க இறுமாப்புடனே வனஞ் சென்று தனது ஒற்றைக் காலவங்குட்ட வீரலே நிலத்திலூன்றி வெய்யல் - பனி - மழை - குளிர் முதலானவைகட்கஞ் சாது சரீரம்முழுவதும் புற்றுக்கள் மூடிக்கொள்ளவும், அப்புற்றுக்களினின்று செடிகள் முளைக்கவுமாக மெய்ம்மறந்து, இடை விடாமல் பஞ்சாக்கரத்தைச் செபஞ் செய்துகொண்டு ஆயிரம் வருடம் வரையில் நிராகாரமாயிருந்து அரிய தவத்தினைச் செய்தனன். அத்தவத்திற்குச் சிவபெருமான் மனதிரங்கி உமா தேவியாரோடு இடப வாகனத்தின் மீதெழுந்தருளி அவனெதிரில் வந்து அச்சூராசதன்மீதுமூடிக்கொண்டிருக்கின்ற புற்றுக்களையுஞ் செடிகளையுஞ் சீக்கும்படி தமது பூதகணங்கட்காக்கியாபிக்க அவ்வாறே அவர்கள் சீர்த்துச் சுருதிகளாலு மறிதற்கரிய சுவாமி வந்தாரென்று தெரிவிக்க, உடனேசூராசதன் பதறியெழுந்து பலமுறை சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து இருகரங்களையுஞ் சிரமேற் கூப்பி விழிகளில் ஆனந்த பாஷ்பஞ் சொரிந்து உடல் முழுவதும் உரோமாஞ்சிதம் பூத்து மொழிதடுமாறி மனமுருகி வேதாகமங்களினால் அளவற்ற துதிகளைச் செய்து நின்றனன். அத்துதியினத்தையுஞ் சிவபிரான்கேட்டு சந்தோஷித்து உனக்குவேண்டிய வரங்களைக் கேளென்று திருவாய் மலர்ந்தனர். அப்போது சூராசதன் மீட்டும் பணிந்தெழுந்து, ஓ நித்தியப்பொருளா யிருக்கின்ற கர்த்தனே! தேவரீராக தேவரீரதசத்தியமாக, நும்மிருவாற் றரப்பட்ட தனியராக, அரவணையிற் றுயில்கின்ற விண்டுவாக, பதுமமிடத்தனுதிய பிரமனுக, வின்னும் வெவ்வேறு யிருக்கின்ற பலவகைப்பட்ட தேவர்களாக, உடகர்களாக, தானவர்களாக, நரர்களாக, பனிதர்களாக, நாறகான் மிருசம் முதலிப் பல உயிர்களாக, இந்த எண்பத்து நான்கு நூறுயிரமென்னும் தோற்றங்களல்லாமல் இனிவேறே தோற்றம் யாதேனுமுண்டாகுமெனில் அதனுலாக, இவ்வகைப்பட்ட நீங்கள் யாவரும்பலமுறை என்னைக் கொல்லும்படி முயன்றீர்களாயினும், யான் இறக்காம லிருக்கவுந் தேவர்கள் முதலிய சகலரும், எனதேவலுக் கிசையும்படி திரிலோகங்களையும் யானரசாண்டிருக்கவும், அவ்வாறு அரசாளுங் காலத்திலும், செல்வச் செருக்கி லழுந்தாமல் தேவரீருடைய திருவடிகளி

ல் குறையாத பத்தினிவைத்திருக்கவும், திருபை செய்யவேண்டு மென்று ரோத்தித்தான். அவையனைத்தையுஞ் சிவபிரான் கேட்டருளிதேஜோ ன்மயமாப் எக்கும்போக்குவர்த் தில்லாமல் நிறைத்திருக்கின்ற நமது ரத்தியே உமையினிடத்தில் விநாயகராக வந்து உனது சரத்திற்றூனை வைத்து ஆடக்குவதை தளிர ரீனையவரங்க வனைத்தையுந் தந்தோ மென்று திருவாய்மலர்ந்து அந்தர்த்தான மானோர்.

இப்பால் துராசதனுவன் விண்டுவாதிய தேவர்கள் கவலிகொ ள்ளும்படியாக சிஷ்டிருமானிடத்தில் சகலவரங்களையும் பெற்றுக் கர்க்த னெழுந்தருளிப நிசையைசேர்க்கிட பலமுறை பணிக்கெழுர்த்து மிகுந்த இறுமாப்புடன் முகுந்தையென்னும் பட்டணத்திற் போய்ச்சேர்ந்தனன். இவனிவ்வாறு பலவரங்கள பெற்றுவந்த மையை இராக்கதர்களறிந்து உடனே அவனியாவரும் பணிந்து கூடினர்கள். பின்னர் துராசதனுவன், அவ்விராக்கதர்களும் நால்வகைச சேனைகளும் புடைசூழமபடி யுத்த சன்னத்தனுப் சகல ஆயுதங்களையும் தரித்துக்கொண்டி பூவுலகத்தை நோக்கிச்சென்றனன், அதுகண்ட அசர்கள் யாவரும் உடனே வெளிக்கொண்டி வந்து சிலர் பலபோர்களைப புரிந்துமானத்தினு லிறந்தார்கள் சிலர் அப்போரிற தோற்றுத் திசாதிசைகளில் மறைந்தார்கள். சிலர் அவனிப்பணிந்து பகுதி செலுத்துவதானர்கள், சிலர் அவனுக்கு ஏவல்களைச் செய்பவல்ல சேவர்களானர்கள் இவ்வாறு இத்துராசதன் பூவுலகத தரசர்களை யெல்லாம்வென்ற பின்பு பொன்னுலகை நோக்கிச் சென்றனன். அச்சமபவத்தைத் தேவேந்திரனறிந்து உடனே தனது சுற்றத்தினரோடு வெளிபபட்டுக் காசிகரைச் சேர்ந்தனன். அதையறிந்த துராசதன் அவ்வுலகத்தை ஓரக்கனுல் ஆளும்படி செய்து சத்திபலோகத்திற்குட் போகினன். அங்கரசாளகின்ற பிரமனுவன் பயந்து தானும் அவ்வாறே காசிகரைச் சேர்ந்தனர், அதுகேண்ட துராசதன் அவ்விடத்திலும ஓரக்கதனை அரசாளவைத்து வைகுந்தலோகத்தை யடைந்தனன். அவ்வைகுந்த வாசிகளாகிய விண்டுவும் அவ்வாறே காசிதேசத்தைச் சேர்ந்தனர். பின்னர் துராசதன் அவ்விடத்திலும ஓரக்கனை யாளவைத்து இவ்வாறே மற்றலோகங்களையுங் கைகொண்டி ஆங்காங்கு ஒவ்வோரக்கனை அரசாளவைத்து தான் பூவுலகத்திலுள்ள முகுந்தை யென்னும் பட்டணத்தில்வந்து திரிலோகங்களுந் தனது ஆக்ஞையின்படி நடந்து கொள்ளக்கொடுங்கோலச் செலுத்தித் தன்னின்றிக்கார் எவ்வுலகங்களினு மில்லையென்னு மிறுமாப்புளனே அரசாட்சி செய்து வந்தனன். இவ்வாறிருக்கும் நாளையில் ஒருநாள் அத்துராசதனுவன் சகல ஷிசனங்களுஞ்

தண்ணீப் புடைசூழும்படியாகக் கொலு விருக்கின்றபோது எவ்வுலகங்களும் நமது ஆக்கினைக்குள்ளாயின. ஆகவே இனி நமக்கடங்காத தொன்று மில்லையென்று சொல்லினன். அதை அருகிருந்த அமைச்சர்கள்கேட்டு, ஆண்டவனே! பிரமன் விண்டு உருத்திரன் முதலாயுள்ள தேவர்களும், முனிவர்களும், சித்தர்களுந் தத்தமிருக்கைபைக்கடந்து இப்போது காசிநகரை யடைந்திருக்கின்றார்கள். அக்காசியை வென்றுலன்றே திரிலோகங்களுந் தேவரீருடையகுடைக்குளடங்குமென்றனர். அதைத்துராசதன் கேட்டுமாத்திரத்தில் இது வோகமக்கரிதென்று புன்னகைசெய்து அந்நிமிடத்தில் சகல சேனைகளோடும் வெளிப்படக்கடவீர்களென்று ஆக்கிபாபித்தனன். அவ்வாக்கினைக் கேட்ட யாவரும் ஒருசேரலென்று யுத்தசன்னத்தராய் சமூத்திரம்போல வந்து நெருங்கினார்கள். உடனே துராசதனுனவன் அச்சேனைகளனைத்தையும் நடத்திக்கொண்டுசென்று காசிநகரைச் சேர்ந்தனன். அக்கொடியவன் வரவைத் தேவர்முதலாயினோர்க ளறிந்துகாசிநகரை யாள்கின்ற விசுவநாத மூர்த்தியைய டைந்து சரண் புகுந்தார்கள். அப்போது விசுவநாதர் அவனுக்குத் தாங்கொடுத்தருளிய வரங்களை நினைத்து அவனை யடக்கத்தக்கதாள் இன்னும் வரவில்லையென்றுணர்ந்து மிக்க சோர்வோடுஞ் சரண்புகுந்திருக்கின்ற தேவர்கள் முதலாயினோர்க்குத்தக்கபடி தயைவார்த்தைகளைக்கூறி அவர்களோடு தாமும் அக்காசிநகரத்தினின்றும் வெளிக்கொண்டு கேதாரமென்னுந் தலத்தையடைந்தனர்.

பின்னர் துராசதனுனவன், காசிநகரத்துள் நுழைந்து தேவர்கள் முதலாயினோரும் மாயமாய் மறைந்துபோன செய்தியை யறிந்து நகைத்து மிகுந்த சந்தோஷத்துடன் அளவற்றநாள் அக்காசிநகரிற்றானே இருந்து திரிலோகங்களினும் தனது ஆக்ஞாசக்கரத்தைச் செலுத்திவந்தனன். இவ்வாறெண்ணிறந்தநாள் அத்துராசதன் சகலலோகங்களினுங் கொடுங்கோலைச் செலுத்தி வருவதனால் தேவர்கட்கு அவிர்பாகமும், ஸ்திரீபோகமுங் கிடையாமல் மனம்கொந்து யாவரும் பிரமனிடத்திற் சென்று பணிந்து அதனைச் சொல்லுவதானார்கள் ஓ வாணிகேள்வரே! நம்மை யெல்லாம் எங்கும் நீலிபெறவொட்டாமல் துர்க்கிருத்தியஞ் செய்துவருகின்ற துராசதன் எப்போது நாசமடைவன்? இவனையடக்கி நாசஞ்செய்யவல்லவர் யாவர்? இவனுக்கு இத்தன்மைத்தான சிறந்தவரங்கள் கிடைத்தது யாவரால்? இவையனைத்தையு மடியேங்கட்குத் தேவரீர் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள் அதற்குப் பிரமன் சொல்லுவான் ஓ மித்திரரே

இராசதம் தாமதம்சாத்மீக மென்னும் முக்குணங்கட்கும் பிரமன் விண்டு உருத்திரன் என்னும் மூன்று மூர்த்திகளாக விருப்பதன்றி அம்மூக் குணங்களோத தாந்தாமே ஆண்டருளுவதால் குணேச ரென்றும், அக் குணவிகாரங்களிற் பொருத்தமில்லாதிருப்பதினாற் குணாதி ரென்றும், அக்குணங்களைக் கடந்திருப்பதினாற் குணாதீத ரென்றும் சகலலோகங் களினும் பரிபூரணமா யிருத்தலால விசுவவியாபியென்றும் அவ்விசுவ த்தை யாண்டு அழியாவனலந் தோன்றலால் விசுவகர்த்தரென்றும் அவ் விசுவத்தைப் பிரளயகாலத்தில் சங்கரிப்பதால் விசுவசங்காரியென்றும் மேலானதென்று சொல்லதக்க யாவற்றுள்ளும் மேலாகி யிருத்தலினா ல் பராபரனென்றுஞ் சொல்லுகின்ற சிவபிரான் ஒருவருண்டு. அச்சிவ பிரானுடைய தேசோன்மயமாகிய ஓர் சத்தியே உமாதேவியாருடைய திருமுக மண்டலத்தில் விநாயகமூர்த்தி யென்னுந் திருகாமத்துடனே அவதரிக்கும். அக்காலமே அத்துராசதன் நாசமாங்காலம். அவனுக் குமேலான வரங்களைக் கொடுத்தவர் இவ்விசுவநாதரேயாதலினி அ ப்பாதகனுடைய கிலேசங்களைத்தையுங் கலக்கி இறுதிசெய்ய வல்லவர்மு ன்சொன்ன விநாயக மூர்த்தியாதலால், அம்மூர்த்தி திருவவதார ஞ் செய்தருளும்படி விரைவில் உமாதேவியாரை மிக்கபனவுறுதியாடு துதிசெய்வீர்களாக வென்றனன். அவையோத்தையுந் தேவர்கள் செ விகுளிரக் கேட்டு கவலைக் கடலினின்றுங் கரைபுனைவர்களாய் யாவ ரும் உமாதேவியாருடைய சந்நிதானத்திற் சென்று துதிசெய்வ தா னார்கள்.

ஒருத்திபாதியுலகனைத்து மோரம்புமருளையுலகத்தில்
வருத்தமிகற்றப்பலவருவாய் வயங்காகின்றசத்தியே
கருதையகன்றவருவாளே கடவுள்முனிவர்முதலோர்செய்
பெருதவழிபாட்டினுக்கிரங்கும் போனகப்பெண்ணமுதே.

குணமேசொரூபமானவளே குணத்தையாளுங்கோமளமே
குணகாரணமேகுணாதீதக் கொமபேவேதந்துதிப்பவளே
தணவாதவனிதரிப்பவளே தருதாபசங்கமகற்றனக்கு
நிணராதாரமானவளே நீடுந்தேவசொரூபியே.

அடியார்பிழையறுத்தவர்கட்கடக்கில்பொருளுங்கொடுப்பவளே
கொடியார்கதத்தைக்குமைத்தவர்க்குங் கோதில்கருணைசுரப்பவளே
மிடியால்வருந் தமைமைப்புரப்ப வேண்டும்வேண்டுமெக்காலு
முடியாமுதல்வி அடியேமை முழுத்தவருள்செய்தனித்திருளே.

இவ்வாறு துதிசெய்து நிற்கின்ற தேவர்களெதிரில் உமாதேவியார் தமது சோடசகலைகளால் நிறைந்திஷ்களங்க பூர்ணசந்திர பிம்பம் போன்ற முகாரவிந்தமும், நீலத்தினம் போலும் வண்டுகளுக்கு நிகராகிய அழகிய அஞ்சனங்களால் நிறைந்திருவிழிகளும், பிரவாளரத்தினங்களுக்கு நிகர்த்த அதிரோஷ்டங்களும், கஜராச துதிக்கையைப் போன்ற நீண்டபாகுக்களும், செங்காந்தள்களுக் கொப்பாகிய அஸ்தங்களும், நூதனமாகத் தளிர்த்துச் சோபித்துக்கொண்டிராநின்ற பல்லவங்களையொத்த பழங்களும், மதித்தமத தேயத்தின் மஸ்தகத்தைநிகர்த்தகுசகும்பங்களும் மிருகராசகிடைக்குச் சமானமாகியகிற்றிடையும் விளங்கும்படியாகத் தெரிசனந்தந்து, ஓவிபுதர்களே ! உங்களுக்குவேண்டிய வரம்யாதென்று திருவாய்மலர்ந்தனர். அபோபது தேவர்கள் உய்ந்தோம் உய்ந்தோமென்று ஆனந்தபரவசத்தாலாடிமீட்டும் வேதாகமங்களால் பலமுறை துதிசெய்து சூராசதன் செய்துவருகின்றகொடுமைகளையும் அவனல் தாங்களனுபவித்து வருகின்றதுன்பங்களையும்விபரமாகச்சொல்லி! ஓ சகலபுவனேஸ்வரி ! இனித்தேவரீர் தீனராகிய அடியேங்கண்மீது கிருபைசெய்து எல்லாத் துன்பங்களையும் நீக்கிச்சுகத்தைக் கொடுத்தருளல் வேண்டும். இதுவே யாங்கள் கருதியவரமென்று பிரார்த்தித்தார்கள். இவ்வாறு அவுணபாதகனுடைய கொடுமைகளையும், அவனல் தாங்களடைந்திருக்கின்ற இடுக்கண்களையும், உமாதேவியார் கேட்டமாத்திரத்தில் மனங்கொந்து விழிகள் செந்தாமரைக் காடுபோற் செவப்பக் கோபங்கொண்டனர். அம்மாத்திரத்தில் தேவியாருடைய முகத்திலிருந்து கோடிசூரியர்கள் எக்காலத்தில் தோயஞ்செய்ததுபோல அளவற்ற பிரகாசங்களையுடைய திருமேனியும், சந்திரனைத்தரித்த சடாமகுடமும், துதிக்கரங்களோடுகூடிய பஞ்சமுகங்களும், பத்துக்கைகளும், அக்கைகள்தோறும் படைகளும், கஸ்தூரிப்பொட்டிட்ட நெற்றியும், பூணூலணிந்த மார்பும், அளவற்றரத்தின பரணங்களும், பற்பல இரத்தினபரணங்களும், துஷ்டசனர்களைச் சங்கரிக்கும்படியான இரவுத்திரமும், சிஷ்டசனர்களைப் பரிபாலிக்கத்தக்க கருணையும், விளங்கும்படியாக என்குணமாயும், ஏகவஸ்துவாயுமிராநின்ற விநாயகமூர்த்தி திருவவதாரஞ்செய்தனர்.

அப்போது உமாதேவியார் கோபமாறி ஆனந்தங்கொண்டு விநாயகமூர்த்திக்கு வக்கிரதுண்டரென்ற திருநாமந்தரித்தவரும்வியப்பெய்தும்படியாகப்பூசனைபுரிந்து வேதாகமங்களால் பலமுறைதுதிசெய்து சிங்கவாகனங்கொடுத்து, சுவாமீ ? இராக்கதர்களால்சுகமிழந்துவருந்துகின்றதேவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்தித்த

னர். விண்டுமுதலிய எல்லாத்தேவர்களும் வக்கிரதுண்ட மூர்த்தியை ப்பணிந்து துதிசெய்து, ஓவிக்கினராகீரே! பத்தர்கட் குறியவரா யிருக்கின்ற விதகரே! மனுஜிகள் கடந்தவரே! புண்ணிய முதல்வரே? பூரணரே? எமது கர்த்தாவாகிய தேவரீர் பாதபதுமங்களைத் தரிசித்துத்துதிசெய்ய அடியேங்கட்கு கிடைத்தபோதே பெரிதான பேறுகள் பெற்றோம், சுத்தபவித்திரர்களாயிஞ்ய எம்மை யடைந்திருந்த துன்பக்களைத்தும் நீங்கின. நாங்கள் வகித்திருந்த பதவிகளை மீட்டுங் கிடைக்கப் பெற்றனம் என்று சொன்னார்கள். இப்பால் வக்கிரதுண்ட மூர்த்தி தேவர்களுடைய குறிப்பைத தெரிந்துகொண்டு உமாதேவியாருடைய திருவடிகட்கு வந்தனைபுரிந்து யாவருஞ் சயசமவென்று துதிசெய்யும்படியாகச் சிங்கவாகனத்தி லாரோகணித்து அளவற்ற பூதசேனைகளோடுங் காசிநகரைநோக்கி எழுந்தருளினார். அவர் பின்னர் விசுவகாதரும் உமாதேவியாரும் விண்டுபிரமனுதிய தேவர்களும் முனிவர்கள் முதலிய சகலரும் காசிப்பட்டணத்திற் சென்றார்கள் முன்னர் துராசதனுடைய கொடுமைக்கு ஆற்றாதாடிய விசுவகாதர் முதலிய சகலரும விநாயகமூர்த்தியை முன்னிட்டுக் கொண்டுவந்ததை அவுணாசன் கேட்டுக் கோபங்கொண்டு தனது சேனைகளுக்குக்கையும் வெளிப்படுப்படி முசறைவித்தான். அம்மாத்திரத்தில் மழையொலி கேட்ட பயிர்களைப்போல அவனது கால்வகைசேனைகளும் உவகைகொண்டு ஆர்ப்பரவிப்பொறப்ப தரித்தனவந்து பணியுமபடி சக்கிரவாளகிரியைச்சூழ்ந்த பெருப்புறக்கடல் போலத் தன்னைப் புடைசூழ உடனே தான் சகல வாயுதங்களையுஞ் சேகரித்துக்கொண்டு இரதத்திலேறி சேனைபெருக்கோடு காசிநகரத்திற்கு வெளியே வந்

இப்பால் துராசதனுவந்த அவுணசேனைகளுடனே பூதசேனைகள் எதிர்த்து விசயலட்சுமி குதிகொள்ளும்படியாக அளவற்ற யுத்தங்களைச் செய்தார்கள். அப்போது யுத்தகளமுழுவதும் பிணங்கள் மலைமலையாகக் குவிந்தன. ஆகாயமுழுவதுங் கழுகுகளும் பருந்துகளும் 'ந்தலிட்டுலாவின எங்கும் உதிரவெள்ளம் பெருத்து இறைச்சலிட்டது. அந்த யுத்தத்திலே பூதசேனைகள்மீறி அவுண சேனைகட் குவலிகுன்றியது. குடைகொடிமுதலிய சின்னங்கள் அறுபட்டன பூதசேனைகள்மீது துராசதன் பாய்ந்து, வில்லைவளைத்து ஒவ்வொரு தொடையில் ஆயிரமாயிரமாக அளவற்ற பணங்களைப் பிரயோகித்தான். அதனல்வீறியிருந்த பூதசேனைகட்கு வலிகுன்றியது குடை கொடிமுதலிய சின்னங்கள் அறுபட்டன. இரதக்க துரகமுதலியவைகள் கின்

ஞபிண்ணமாயின. இவ்வாறு பூதசேனைகள் தமதுபடைகளும்நடைகளு மற்றுப் பூமியில் வீழலும், துராசதனுனவன் சயமடைந்தவனைக்கருதி மீட்டும் அதிவேகததோடி தனது இரதத்தைச் செலுத்திக் கொண்டு சென்று வக்கிரதண்டமூர்த்தியை எதிர்க்கவந்தனன். அப்போது சுவாமி அத்துராசதனைப்பார்த்து, ஓ அவுணராசனே! அரிய தவங்களினால் சிவபிரானிடத்தில் மேலானவரங்களைப் பெற்றிருக்கின்றனை? அவைகளைப் பின்னர் காப்பாற்றிக் கொள்ளும் வலுகையை நாடாமல் வீணே ஒழிக்கும் வகைதேடினை இனியேனும் புலிவரங்களையொழித்துக்கொள்ளாமல் சுகமடையவேண்டிய மார்க்கத்தைச் சொல்லுகின்றேம் நிணவாய்க் கேழ்ப்பையாக சொர்க்கலோகத்தை முன்போலத் தேவர்கள் ஆளும்படிவிடுத்து, நீ நம்மைச் சரணடைந்து நன்மார்க்கத்தி லிருக்கக்கடவை அவ்வாறிருப்பையாகில் இன்னு மளவற்றகாலம் எல்லாப் போகபாக்கியங்களையு மனுபவித்துக்கொண்டு அதனுல் விளைகின்ற ஆனந்தக்கடலில விளையாடிக்கொண்டிருக்கலாம். இல்லேல் இப்போது தேவர்களெல்லாம் உன்னுல் எவ்வளவுதுன்ப மனுபவிக்கின்றார்களோ அவ்வளவு துன்பமும் இனி நம்மால் உண்டாவதை சூழ்ந்துகொள்ளும் என்று திருவாய்மலர்ந்தனர். இவையனைத்துங்காய்ந்த ஊசி காதில் நுழைந்ததுபோல அவன்செவியிற் பட்டமாத்திரத்தில் அதிகோபங்கொண்டு, ஆ அ-ஆ அ பிள்ளாய்! நீ சொன்னவார்த்தைகள் மிகவழகாயிருந்தன, பாக்கியமற்ற சிறந்த விண்டுவே முதலியோர் என் கண்ணுக்கு முன்னர் நிற்கப்பயந்து ஓடிப்போயினர். பெரியோர்களிடத்திற் பழக்கமில்லாத பாலகனதலினுல் இளங்கன்று போல சிறிது மச்சமில்லாமல் என்னிடத்தில் இவ்விதவார்த்தைகளைக் கூறினை, அளவற்ற தவங்களைச்செய்து சிவபிரானிடத்தில் மேலானவரங்களைப் பெற்றிருக்கின்ற என்னை வெல்லுவது உன்னு லேலாது இனி தப்பிப்பிழைக்க வேண்டுவையேல் உன்னை விடுகின்றேன்? இப்போதே பின்பாராமற்சென்று உனது தாய் தந்தையரிடத்திற் சேரக்கடவையென்று சொல்லினன், அதை சகலலோகநாயகராகிய கர்த்தன் கேட்ட மாத்திரத்தில் கோபகைசெய்து, மீட்டு மவனைப் பார்த்து அடாபோதாய? சிவபிரானிடத்தில் அரியவரங்களைப் பெற்றிருக்கின்றேமென்று கொவ்வப்படவேண்டாம், அவர்கொடுக்கின்ற வரத்தினுலேயே கெட்டுப்போனவர்களனேகருண்டு அவர்களுள் நீயுமொருவனுயினை என்று சொல்லித் தமது சிங்கவாகனத்தை அவனுடைய தேருக்குநேராகச் செலுத்திக் கரத்திலிருந்த மழுவாயுதத்தினுல் அவன் மார்பிற்குத்தினர். அத்தாக்கலினுல் அவன் சரீரத்திற்கோ சூனமு

மில்லாமற் போனதினால் துராசதன் இடியேற்றினிப்போலக்கர்ச்சித் தச்சீறிச் சுவாமியின்மீது தனது வாளாயுதத்தைச் சுழற்றி வீசினன் அவ்வாளைச் சுவாமி தமது மழுவாயுதத்தினால் விலக்கி அவன் கெற்றியில் தமது கரத்தினாற் குத்தித்திரும்பினர். அக்குத்தினால் அவனது கெற்றிபிளந்து உதிரவெள்ளம் பெருகியது. அப்போது துராசதனவன் மூர்ச்சையாகிச் சற்றுநேரம் உயிர்கிடங்கினவனைப்போல மிருந்து மீட்டுந் தெளிந்தெழுந்து யுத்தஞ்செய்ய வலியற்றுகாணித் தனதிருக்கையைநோக்கிச்சென்று ஆசாசந்தீர்த்துக்கொண்டிருந்தனன்.

யுத்தகளத்தில் மிறந்து கிடக்கின்ற பூதர்களையெல்லாம் சுவாமியெழுப்பிக்கொண்டு தமது பாசறையிற் சேர்ந்தருளினர். அப்போது இருளைநீக்கி உலகத்தை விளக்கவல்ல சூரியனவன் மேற்றிசைக்கடலிற் குளித்தனன். உடனே விண்ணவரைக் காக்கவந்த விநாயக மூர்த்தியினுடைய கிருபையைப்போல சோடசகலைகளோடு நிலாவந்த சந்திரனவன் உதயமாயினன். உலகத்துள்ள சாசரங்களெல்லாம் அவ்வெண்ணிலவில் மூழ்கித் திருமேனி முழுவதுந் திருவெண்ணிற்றினியனிக்க தொண்டர்கட் கொப்பாயின. இப்பால துராசதனவன் தனது மந்திரிகளை யருகிலழைத்துவைத்து யாங்களுகத்தோடு யுத்தஞ் செய்யவந்த ஓர் சிறந்த புருடனைச் சிறுவனென் றெண்ணினேன். பின்னரீவனைக் கலந்து பார்க்குமளவில் அவனுக்கு நிகராயினோர் ஒருவருமில்லை. வலியிற்பெரியவனுயினுஞ் சேனையிற் சிறிதையுடையவனாயிருக்கின்றனன் யாமோ வலியினுஞ் சேனையினும் அவனிலும் மிகுந்தேயிருக்கின்றோம். ஒருவேளை யவனுக்கு யாம்தோல்வி யடையநேரிடும் ஆதலால் இனி நமக்குள்ள எல்லாச் சேனைகளையுங் கூட்டிகொண்டு நாளையதினம் யுத்தத்திற்குப் போகவேண்டுமென்று சொல்லினன். உடனே அமைச்சர்கள் அவ்வாறே செய்யக்கடவமென் றெழுந்து, திரிலோகவீரனும் அட்டதிசைகளினுமுள்ள சகலசேனைகளும்வந்து சேரும்படி எங்கும் தூதர்களை யனுப்பினர்கள். அத்தூதர்களால் எங்குமுள்ள எல்லாச்சேனைகளும் வந்து துராசதனுடைய அரண்மனைவாயிலே நெருங்கின அப்போது யுத்தவலங்காரத்தைக் காணவந்தவன் போலச் சூரியனவன் கிழக்கதிசைக்கடலி லுதயமாயினன்.

இப்பால் துராசதனவன் நித்தியவிதிகளை நிறைவேற்றிக்கொண்டு கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, தானைப்படை, கைப்படை, மூலப்படை என்னு மறுவகைப் படைகளும், மந்திரியர், கருமாதிகாரர், சுற்றத்தார், கடைகாப்பாளர், நகரமாக்கள் படைத்தலை

வர், இவுளிமறவர், யாணைவீரர் என்னு மெண்வகைத் துணைவர்களும், தக்கமுறைமைப்படித் தன்னைப் புடைசூழ்ந்து வரச்சென்று யுத்தகளத்தை யடித்தனன் விநாயகமூர்த்தியும் பூதவீரர்களுடனே வந்து சேர்ந்தனர். இப்பால் துராசதனுமிவனுடைய பெருஞ்சேனைகளைச் சுவாமி பார்த்து இவையனைத்தையும் ஒர் கணப்போதில் யாமே வெல்லுதுமென்றுகருதி, தம்மைச்சூழ்ந்துவந்த தேவர்களும் பூதர்களு மருட்கையடையும்படி சிலவடிவம் சிங்கவாகனத்துடனே பத்து கைகளும் சிலவடிவம் மயில்வாகனத்துடனே ஆறுகைகளும், சிலவடிவம் பெருச்சாளிவாகனத்துடனே நாலுகைகளும், சிலவடிவம் மான்வாகனத்துடனே இரண்டுகைகளும், இவ்வாறு பற்பலவாகனங்களிற் பற்பலவடிவங்களாக ஐம்பத்தாறு பேதமாகத் திருவுருக்கொண்டு துராசதனுடைய சேனைசமுத்திரத்திற் புகுந்து சமர்வினையாட்டினைச் செய்தனர். அப்போது அச்சேனை வீரர்களின் அளவற்றபேர் வீரசொர்க்கத்தையடைந்தார்கள். அளவற்றபேர் சோர்ந்து வீழ்ந்தார்கள். அளவற்றபேர் பாதலலோகத்தில் மறைந்தார்கள். அளவற்றபேர் திசைதிசைகளிலோடிப் பதுங்கினர்கள் இவ்விதமாகத் தனது சேனைகளனைத்தும் அழிகின்றதைத் துராசதன்பார்த்து நம்மவரும இப்பாடி படுவதோவென்று கோபித்து, அக்கினியாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகித்தனன். அவ்வஸ்திரமானது எங்கு மனற்காலிகளெரிக்கொண்டிருந்த சேனைகளெல்லாம் நடுங்குமாறு ஆக்ரமித்துவர அதை சுவாமி பார்த்து நகைத்துப் பற்சனியாஸ்திரத்தை யெடுத்து விடுத்தனர். அம்மாத்திரத்தில் அவ்வத்திரமானது அளவற்ற மின்னல்களையும் இடிகளையும் பெருக்கி சத்தமேகங்களுங் கலந்து வருஷிப்பதுபோல மழைகளைச் சொரிந்து அக்கினியாஸ்திரத்தினுடைய வலியையடக்கியது. அதைக் கண்ட துராசதன் வாயுவாஸ்திரத்தை யெடுத்து விடுத்தனன் அவ்வஸ்திரமானது பற்சனியாஸ்திரத்தை யுண்டான மேகங்களை யெல்லாஞ் சின்னபின்னப்படுத்தி எங்கும் பிரசண்டமாருதத்தைப் பெருக்கிக் கொண்டுவர, அதை சுவாமிகண்டு பர்வதாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகம் பண்ணினர். அப்பர்வதாஸ்திரம் வெளிப்பட்ட மாத்திரத்தில் மந்தரம் இமயம் முதலிய அளவற்ற பாவதங்களை யுண்டாக்கி பூமி தொட்டு ஆகாயவரையில் முட்டி வாயுவாஸ்திரத்தின் வலியையழித்தது. பின்ன ரவுணராசனுவன் இனியிவனை யுருத்திரப்படையினால் வெல்லுவேமெனக்கருதி அதனைச் சேடசுவுபசாரங்களோடு ஸ்மரித்துப் பிரயோகித்தனன். அப்படை வெளிவந்த மாத்திரத்தில் வீறி வானத்தெழுந்து பர்வதாஸ்திரத்தினுடைய வீரப்பிணையடக்கிப் பூத

வீரர்களுடைய சமுகத்திறபுகுந்து சின்னபின்னமாக்கியது. உடனே சுவாமியுந் தம்மிடத்திருந்த உருத்திரப்படையினை விடுத்தனர். பின்னர் இரண்டு உருத்திரப்படைகளுங்கூடி அளவற்ற போர்க்கோலங்களைத்தன. அதனால் அண்டவெடிக்குகலெல்லாங் குலுங்கின. சத்த சாகரங்களும் வற்றிப்போயின. பூதலத்திலுள்ள சாசரங்களெல்லாம் நீரையின இப்பால் அவ்வத்திரங்களிரண்டும் ஒன்றோடொன்று நெடுநேரம் யுத்தஞ்செய்து சமர்க்களத்தில் விறகாய் கிடக்கின்ற சேனைகளை யெல்லாம் விரைவிலெழுப்பித் தமமையவிய தலைவர்களிடஞ்சென்று சேர்ந்தன.

பின்னர் அவுணராசனுனவன், அரியதவத்தினாற் கிடைத்திருந்த உருத்திரப்படையும் வெற்றிபெறுமற் றிருமபியதை எண்ணி யெண்ணி யேக்கமுற்று மானமுங் கோபமும் மேலிட்டவனுகித் தன்னுருவத்தை மறைத்துப் பற்பலமாயைகளை விரித்தனன். அவன் மாயைகளையெல்லாம் ஞானசொரூபியாகிய எமது கர்த்தன் தூர் தொடிப்போதிலொழித்தருளினர். இவ்வாறு துராசதனுனவன் அனேக அன்திரங்களை மாறிமாறிவிடுத்தும் அளவற்ற மாயைகளைச் செப்புமய பயன்பெறாமற் போனதினுல், மனம் நொந்து இப்பாலனுகிய வக்ரதுண்டரை வெல்லவொன்றினுங்கூடாத ஆதலால் இனியாம் தம்மி மறைந்து போவதே உத்தமமென்று தீர்மானித்தான். அதை சுவாமியறிந்து அவனுக்குச் சிவதீரான் கொடுத்தருளிய வரதையும் பேரித்து அண்டமுகடையளாவத்தக்கதாக ஓர் பேருருவோடு மவனெதிரில் வந்து அவலுசெயில் ஒருபாதத்தையூன்றி மற்றொருபாதத்தைக் காத்தலத்தில் வைத்து, ஓ அவுணராசனே! நீ சிவபெருமானிடத்தில் அழியாவரம்பெற்றிருப்பதினுல் இக்காரியப்பட்டனத்து மேற்றிசை வாய்களில் எக்காலத்தும் நமது பாதத்தின்கீழிருந்து இவ்விடத்தில் பழிபாதகங்களைச் செய்து வருகின்ற துட்டர்களை யடக்கிக்கொண்டிருக்கக் கடவையென்று அதுக்கிரகஞ் செய்தனர் மேலான தவங்களைச் செய்து அரியவரங்களைப் பெற்றிருக்கின்றது ராசதனுனவன் தனது சிரத்தில் விநாயகமூர்த்தியினுடைய திருவடியை வைக்கப்பெற்றதினுல் உடனே சகல மாயாபாசங்களினின்றும் நீங்கி மெய்ஞ்ஞான செல்வத்தைப் பெற்றுத்தியானத்த சொரூபனுகி அவ்வவர்கள் செய்து வருகின்ற தீமைகளையெல்லாம் நிவர்த்திசெய்துக் கொண்டிருந்தனன். தேவர்கள் கற்பகமலர்களைச் சொரிந்தார்கள். ஆகாயத்தில் பஞ்சவாத்தியங்களு முழங்கின. முனிவர்கள் வேதாகமங்களினுற் துதிசெய்தார்கள். மற்றுமுள்ளமெய்யடியார்களெல்லாம் விநாயகமூர்த்தியை அளவற்ற துதிகளினுற் கொண்டாடி ஆனந்த மெய்தினர். சிவபிரான்முன்பேலவே உமா

தேவியாரோடு காசிநகரத்து ஸ்ரீராகின்ற திருக்கோயிலில் எழுந்தருளி பிரமனுதியர் புடைசூழ்ந்து வணங்கும்படி வீற்றிருந்தனர். திரிலோ கங்களினு முண்டாயிருந்த எல்லாத் தீங்குகளுங மொழிந்தன. எங்கும் வேதாகமவிதிகள் தழைத்தோங்கின. ஆங்காங்கு யாகாதிகிரியைகள் நிறைவேறின. இந்திரன் முதலிய தேவர்கட்கு இடைவிடாது அவிர்ப் பாகங் கிடைத்தவந்தன. வன்னி மந்தாரை ஆறகு இவைகளிஞல் தேவர்கள் முனிவர்கள் முதலியயாவரும் விநாயகமூர்த்தியை வழிப் பட்டு அவரது பெருங்கருணையினுற் றங்கள் பதவிகளோ யதாப்பிராகாம டைநது ஆனந்தமெய்தினுகள். தருமமுதலிய நான்கு பொருளையு மெளிதிறறவல்ல எமது கர்தனுக்குச சகலரும் உண்டிவிநாயகரே ன்னுந திருநாமதையசசாத்தித் துதிசெய்தார்கள். அதுமுதல் அக் காசி நகரமும் உண்டி நகரமென்னும் மற்றொரு பெயரையும் வகித்தி ருக்கின்றது. இஃதன்றி விசுவநாதமூர்த்தி சந்நிதிக்கெதிரே ஐந்துமு கத்தோடுகூடிய வக்கிரதுண்டமூர்த்தி யுமர்க்கருளினர். கோயிலுக் குச் சத்தாவரணமாக ஈர்சுறறிலும் மற்ற ஐம்பத்தாறு மூர்த்திகளும் வதிந்த நளினர். ஆக ஐம்பத்தாறு மூர்த்திகளையும் காளதிவரையில் தேவர்கள் முதலிய சகல வான்மாக்களும் பூசித்துப் பெறத்தக்க பேற் றினையடைந்து வருகின்றர்கள். இந்த ஐம்பத்தாறு மூர்த்திகளில் ஒரு மூர்த்தியை விதிவிலக்கொன்றாற் தேறுதலெண்கள் பூசித்தாலும் அவர் கள் சகல தன்பங்களினின்றும் எளிதில் நீங்கி எல்லாப போகபாக்கி யங்களையும குறைவறபபெற்று சுகமாக வாழ்ந்திருபபார்கள.

கேட டீர்களோ சவனகாதிமுனிவர்களே? தாராசத்துடைய ஆண் மையை யடக்கும்படி உண்டிவிநாயகர் திருவவதாரங் கொண்டரு ளிய அவரே மற்றொருபோது திவோதாசனென்னு மோரரசனிடத் திற்சென்ற ஓர் திருவிளையாடலுண்டு அதனையும் பாத்தமாகச் சொல் லுகின்றேறும் கேட்பீர்களாக. பூர்வத்திலே பாற்பமெனச்சொல்லும்ஓர் கற்பகமிருந்தது அக்கற்பத்தில் சுவாயம்பு மதுவென்னுமோர் சக்ரவர் த்தியிருந்தனன். அவன் இறந்து போயினபின் அறபதினுயிரவருடம ழைபொழியாஞல் சகல தேசங்களுங் காடாகியழிந்தன. இவ்வா று அழிந்தபோகவும் பிரமனுவன் மனமிரங்கி இனி இவ்வுலகங்க ளைப் பாதுகாக்க ஓரரசனை நியமிப்பானுகப் பூவுலகமுழுவதுஞ் தேடிச் சென்றனன். அவ்வாறு செல்லுகையில் காசிநகரத்தில் அரசருலத்தி னனுன இரிபுஞ்சயனென்னு மொருவன் அரிய தவத்தினைச் செய்து கொண்டிருக்கக் கண்டு அவனருகிற் சென்று அவன தவத்தைப் புக ழ்ந்து, அரசீனை! பூமியில் அரசாட்சி செய்வாரின்றிச் சகலதேசங்

களுங்காடாயின எல்லாப்பொருள்களு மழித்துபோயின ஆதலால் நீ உனது செங்கோலைக்கொண்டு அரசாட்சி செய்யவேண்டும் உனக்கு ஆதிசேடன் தனதுபுத்திரியாகிய அங்கமோகினியை விவாகஞ்செய்து கொடுப்பன் தேவர்கள் கற்பகவிருட்சத்திலிருந்து அனேக ஆடையா பரணங்களைக் கொடுப்பார்கள் அப்போது நீசகலபோகபாக்கியங்களை யுங் குறைவின்றி யனுபவித்திருக்கக்கூடும் உன்னையாவருங் கிவேதாச னென்று அருமைப்பெயரிட்டழைப்பார்கள் என்று பற்பல சந்தோ ஷவார்த்தைகளைக்கூறி அப்போதே அவனுக்கு அரசாட்சிக்குரிய கிரீ டத்தினையுந் தரித்தனன். அதற்கு இரிபுஞ்சயன் பிரமனைப்பணிந்தெ ழுந்து, சுவாமி! தேவர்கள் காசிநகரத்தைவிடுத்து அப்பாற்போனலன் றியான் உலக அரசாட்சியினுக் குடன்படேனென்று சொல்லினன். அதற்குப் பிரமன் அவ்வாறே செய்யுமென்று ஒப்புக்கொண்டு வழக் கப்படி விகவரதமூர்த்தியைத் தரிசிப்பதற்கு அவரது சன்னிதானத் திற்குச்சென்றனன். அப்போதுசிவபிரான் அளவற்றாளாய்த்தவஞ் செய்துகொண்டிருக்கின்ற மந்தாகிரிக்கு அனுகிரகஞ் செய்யும்படி உமாதேவியாரோடு இடபவாகனத்தின் மீதெழுந்தருளி ஸ்ரீகாமகர்-சுப் பிரமணியர் நந்திகேஸ்வரர் முதலிய தலைவர்கள்பிரமன் விண்டுமுதலிய தேவர்கள் பிருங்கிமுதலிய கணநாதர்கள் இந்திரன்முதலிய திக்குப்பா லகர்கள்மாதேவர்முதலிய பதினொருருத்திரர்கள் அமார்முதலிய பதி னெண்கணத்தர்கள் முப்பத்துமுக்கோடிதேவர்கள் எண்பத்தெண்ணா யிரம் இருடிகள் புடைசூழ்ந்துவரவும் இடக்கை-உடக்கை உமிமுத லிய தப்பட்டைவாத்தியங்களையும். கொடி-கொடை சாமரை ஆலவட் டமுதலிய சின்னங்களையும் பூதகணங்களேந்தி இருமருங்கினு மார வாரித்து நடக்கவும் இவ்விதவைபவத்தோடு அம்மந்திரகிரிக்கு நேரா கச் சென்றனர். அப்போது அம்மந்திரகிரியும் அதனருகிற் றவஞ்செய் துகொண்டிருந்த மரீசிமுனியும் சுவாமியை எதிர்கொண்டு பணிந்து துதிசெய்தார்கள் அவ்விருவரில் சிவபிரான் மரீசிமுனியைப் பார்த்து உனக்குவேண்டிய வரத்தினைக்கேளென்று திருவாய்மலர்ந்தனர். அத ற்கம்முனிவர் சுவாமீ? அடியேற்குத் தேவரீருடைய திருவடிகளில் இடைவிடாதபத்தியும் சிவலோகவாசமுந் தரவேண்டுமென்று பிரார்த் தித்தனர். உடனே பரமசிவகடாட்சத்தால் அவரொண்ணத்தின்படி ஓர் விமானம் வர அதில் அம்முனிவர் ஆரோகணித்துச் சிவலோகம்போ யச்சேர்ந்து வழுத்திருந்தனர்.

இப்பால் சிவபிரான் மந்தாகிரியைப்பார்த்து உனக்கு வேண்டி ய வரம் யாதென்று கேட்டனர். அதற்கு மந்தாகிரியானது மீட்டும்

பணிந்தெழுந்து, சுவாமீ! எல்லாத்தலங்களினுஞ் சிறந்த காசித்தலத்தி லே சுவாமிகள் எவ்வாறு வாசஞ்செய்கின்றீரோ அவ்வாறே குசத்தி விலிருக்கின்ற அடியேனிடத்திலு மெழுந்தருளி சகலருக்கும் வேண் டிய வரங்களை யனுக்கிரகஞ் செய்துக்கொண்டு அடியேற்குப் பெரு மையையும் மகிமையையுங் கிருபைசெய்ய வேண்டுமென்று பிரார்த்தி த்தது. அத்தருணத்தில் பிரமனும் சுவாமியைப் பணிந்தெழுந்து, கர்த் தனே! உலகத்தில் அரசாட்சி செய்பவரில்லாமல் அறமதிஞரிவரு டம் மழையில்லாமல் சகலதேசங்களும் காடாயின. அதில் எவ்விதத் திலேனும் உலகத்திற்கு ஓரசனே நியமிக்கவேண்டுமென்று கருதிச் செல்கின்ற அடியேன் காசித்தலத்தில் அரிய தவத்தினைச் செய்துகொ ண்டிருந்த இரிபுஞ்சயனென்னு மோரரசனைக் கண்டு அரசாட்சிசெய்ய வைத்தேன். அவனே காசித்தலத்தில் தேவர்களுடைய சஞ்சாரமில் லாதபடி இவ்வரசாட்சிக் குட்படுவனென்றனன். அதற்கடியேன் அவ்வாறே செய்யுதுமென்று சொல்லி சுவாமிகளிடத்தில் விண்ணப் பஞ்செய்துகொள்ள வந்தனன். இவ்வுலகம் வித்தியையுமாறும் காசித்தலத்தில் தேவர்களுடைய சஞ்சாரமொழியுமாறும் சுவாமிகள் மந்தரகிரிக்கு அவ்வரத்தினைக் கொடுத்தருள வேண்டுமென்று பிரார் த்தித்தான். அதற்குமேல் சிவபிரான் மந்தரகிரிசெய்த அரியதவத்தி னையும் பிரமதேவனுடைய விண்ணப்பத்தையு நிதானித்து அவ்வாறே மந்தரகிரிக்கு வரங் கொடுத்தருளி, தம்மோடுவந்த தேவர்களுடன் அக்கிரியிற்முனை யெழுந்தருளியிருந்தனர், அன்றுமுதல் காசித் தலத் தில் தேவர்களுடைய சஞ்சாரமில்லாதிருந்தது. இவ்வாதாசனும் அக் காசித்தலத்திற்றனை யிருந்து ஆதிசேடன் புத்திரியாகிய அனங்க மோகினி யென்பவளை விவாகஞ்செய்து தேவர்கள் தந்த கற்பகவிருட் சத்தினுடைய ஆபரணங்களைத் தரித்துக்கொண்டு தனது கீர்த்தியா னது எண்டிசைகளினும் பரவும்படியாக நீதிவழுவாமல் செங்கோல் செலுத்தித் தவஞ் தானமுதலிய எல்லாத தன்மங்களையும் கடாத்தி அரசாட்சி செய்தவந்தனன்.

அவன் செய்துவந்த அரசாட்சியினல் திங்கடோறு மும்மாரிபெ ய்தன. எங்கும் பயிர்வர்க்கங்கள் செழித்தன. ஊர்கடோறுங் குடிகள் தழைத்தோங்கின. யாகாதிகிரியைகள் குறைவின்றி நடந்து வந்தன. தேவர்கட்குச் சதாகாலமும் அவிற்பாகமுங் கிடைத்து வந்தது. எல் லாவான்மாக்களும் ஆனந்தமயமாகி யிருந்தார்கள். மிருகமழை-மழை யின்மை-மிருகாற்று-தன்னரசு-வேற்றரசு-துன்மரணம்-பாவவினை - கள்ளர்-தரித்திரர்-நோயாளர்-விதவையர்-மலடர் முதலிய குற்றங்களின

த்தும் பெயரில்லாமலொழிந்தன. காஞ்சிக்குரான் தகுதியான காரியங்களே தழைத்தோங்கின. இவ்வாமல திவேர்தாசனுவன் கங்கையில்வந்து ஸ்நானஞ் செய்துபோகவே யழைத்து உடனே ஸ்நானஞ் செய்வித்தல் கோவிலிருக்கின்ற விகவாதர் உடுண்டி விநாயகர்-சுப்பிரமணியர்-திருமால்-வயிரவர் தண்டபாணி முதலிய மூர்த்திகளைத் தொழாதிருக்கின்றீரை யழைத்துப் பதறியாய்த் தொழச் செய்வித்தல் முதலிய நன்மார்க்கங்களையும் கடைப் பிடித்தனன். இவ்வாறு திவேதாசனுனவன் அளவற்றாள் தனது செங்கோன் முறைமையில் வழுவாதபடி அரசாட்சி செய்துவந்தும் தேவர்கள் காசியிற் சஞ்சார மில்லாதிருப்பதைக் குறித்து மனக் தளர்வுற்று இயாவருக்குங் குலக்குருவாகிய பிரகஸ்பதி தேவரிடத்திற் சென்று பணிக்தெழுந்து சுவாமீ! இனி அடியேங்கள் காசித்தலத்தில் எவ்வாறுசஞ்சரித்திருக்கக்கூடுமென்றுகேட்டார்கள். அதற்குப் பிரகஸ்பதி தேவராலோசித்து, அன்பர்களே! அவ்விடத்தில் நடக்துவருகின்ற நன்மார்க்கங்கள் வறுமையின் உடனே எல்லா மாறுபாடுகளும் நடக்கும். அப்பால் தடையின்றிப் போகக்கூடுமென்று சொல்லினர். அவைத் தேவேந்திரன்கேட்டு உடனே அக்கினிதேவனைக் கூவி நீ இன்றுமுதல் காசியில் அக்கினி யில்லாதபடி செய்யவேண்டுமென்று சொல்லினன் அவ்வாறேயவன் செய்ய, அதனால்வேள்வியாகியாதிகள் நடத்துவதற்கு வழியில்லாமல்முனிவர்களெல்லாம் திரண்டோடிக் திவேதாசனிடத்தில் முறையிட்டார்கள். செங்கோன் முறையிற் றவறாததிவேதாசன் அதைக் கேட்டமாத்திரத்தில் மனக்களார்ந்து தேவர்களெல்லாங் கூடிச்செய்த சூழ்ச்சியாகுமென்று தீர்மானித்து! ஓ அருந்தவர்களே! இவ்வக்கினி யொன்றேயல்லாமல் மழையையும் காற்றையும் சூரியசந்திரரையும் அவ்வாறே வசிக்கவொட்டாமற் செய்யினும் செயியட்டும் நானே யாவுமாயிருந்து தருமமெறிகெடாதவகை செய்விக்கின்றேன் நீங்களிருக்கையிற் சீருங்களென்றனன். அதுகேட்ட முனிவர்களெல்லாங் களிகொண்டு கடந்தார்கள், பின்னர் திவேதாசனுனவன் தானே அக்கினியையும் மேகமாயையும் காற்றையும் சூரியசந்திராளாகியு மிருந்து அவைகளினின்று தானும் வேறாகி அரசாட்சி செய்து வந்தனன்.

கேட்டீர்களோ சவனகாஷிமுனிவர்களே! செங்கோன் முறைமையிற்றவராத ஓரரசனிருப்பாளையின் இப்பூமிதேவிக்குக் கிடைத்தற்கரிய பொருள் என்ன விருக்கின்றது. இப்பால் திருவேதாசனுனவன் உலகம் முழுவது மளிக்க வல்ல அரசனும் அவ்வுலகத்திற்கு வேண்

மும்பொருள்களே விளைப்பவனுந்தானே யாகியிருத்தலும் தேவர்களெ
லாம் வெட்கித் தலைகவிழ்ந்தார்கள் காசித்தலத்திலுள்ள எல்லாவு
யிர்களுங் களிப்படைந்தன. இவ்வாறுஎண்பதினுயிரவருடங் கடந்
தபின்னர் விசுவநாதமூர்த்தி மந்தரகிரியை வெறுத்தவராய்க் காசித்த
லத்தை நினைந்து தேவர்களைகூவி இனியாம் காசித்தலத்தில் வசிக்கும்
படி எண்ணினேம், ஆதலால் நீங்களவ்விடஞ் சென்று திவோதாசன்
செங்கோல் முறைமையிற் றவரும்படி செய்யுங்களென்று கட்டளை
யிட்டருளினர், அக்கட்டளையைத்தேவர்கள் சிரமேற்கொண்டு யாவ
ருந் தனித்தனி வேறுவே றுருவங்களே யடைந்துசென்று தம்மாற்கூ
டிய முயற்சிகளைச் செய்தார்கள். அவ்வாறு செய்தும் திவோதாசன்
தருமநெறியிற் கெடாதிருப்பக்கண்டு மனந்தளர்ந்து சிவபிரானபணிக்
தருளிய கட்டளையை முடித்திலோமே! அந்தோ! இதென்னபாவ
மென்று தக்கித்து அப்பிழை நீங்குமாறுபாவருந்தங்களபிமானத்தில்
சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்தார்கள் அக்காரணத்தைக் சிவ
பிரானறிந்து யோகினிகளை விடுத்தனர். அவர்களும் அத்தேவர்கள்
போலாயினர். பின்னர் சூரியனேயேவினர் அவனும் அவ்வாறேயாயி
னன். அதன்பின் பிரமனேவிடுத்தனர் அவனும் அவ்வாறே யாயினன்
அப்பால் கணநாதர்களை யெல்லாம்விடுத்தனர் அவர்களும் அவ்வாறே
தம்மாற்கூடிய உபாயங்களைச் செய்தும் காரியம் நிறைவேறுமற் கவலை
கொண்டு முன்சென்றவர்களைப்போல தாமும் தவத்திலிறங்கினர்கள்
இவ்வாறு தம்மைமேலவப் பட்டவர்களெலலாம் மீட்டுந் திரும்பாமற்
றவஞ் செய்திருப்பதைச் சிவபிரானறிந்து இக்காரியத்தைமுடிக்கவல்ல
வர் விநாயகமூர்த்தியேயென்று தமக்குள் நிச்சயித்து உடனே உடு
ண்டி விநாயகரிடத்தில் தமதெண்ணத்தை யறிவித்தனர். அதற்கு
ஏமது கர்த்தனிசைந்து இலக்கணவடியின் மேற்பட்ட பேரழகினை
வாய்ந்த ஓர்பாலசோதிடராய்த் திருவுருக்கொண்டு காசமலத்தில் ஓர்
புத்தகத்தினைத்தாங்கி திரகாலவர்த்தமானங்களையு மறிந்து சொல்ல
வல்லவராய்க் காசிநகரத்துட் சென்று அவ்வவர்களுடைய நித்திரை
யில் சிலபயங்கரமான சொப்பனங்களை யுண்டாக்கியும் அக்கனவைப்
பகலில் அவர்களிடந்தோறுஞ் சென்று தாம்சோதிடத்தினு லறிந்து
சொல்பவர்போல ஒன்றினும் பிழையாமற் சொல்லியும், இக்கனவினுல்
இன்னபயன் கூடுமென்று உரைத்தும், அவ்வாறே பலிக்கும்படி செய்
வித்தும், அங்நகரத்திற்சில உற்பாதங்களை யுண்டாக்கி இன்ன உற்பா
தத்தால் இன்னகெடுதி நேருமென்று போதித்தும், ஆகாயத்தி லிருக்
கின்ற கோள்களை மாறுபடுத்தி அதையாவருக்குங் காட்டி இன்னமா

றுபாட்டினால் இன்னதாழ்வுகள் நேருமென்றுசாற்றியும், இக்கனவு களினாலும் உற்பாதங்களினாலும் கோள்களுடைய மாறுபாடுகளினா லும் இங்ஙகரம் உண்மையாய் அழிந்துவிடும் ஆதலால் நீங்களனைவ ரும்தப்பிப்பிழைக்கவேண்டுமேல்இப்போதேவேறுதேசங்களிற்செ ன்றுவாழக்கடவீர்களென்றுஅஞ்சுவித்து, அந்நிமிடத்தில்ஊரினின் றும் ஓடச்செய்தும் அஞ்சி ஓடிப்போனவர்கள்போக நின்றவர்கள் இனிஇதமக்கு என்னநேருங்குவியோயிருக்கின்றதோவென்று பயந்துசெ ய்யத்தக்க நற்கருமங்களில் மனதைச் செலுத்தாமல் மாறுபடும்படி டாத்தியும் இவ்வாறுகரத்தினரையெல்லாம்பயந்தோடவும்முறை முறைதப்பவுஞ் செய்திருந்தனர், நிவோதாசனுடையஅரமனையில் அக் தப்புரத்தில் நுழைந்து அங்குவசித்திருக்கின்ற இராச ஸ்திரீகளி டத்திற் றனித்தனிசென்று அவர்கட்கு முன்னடந்ததையும், இப் போது நடக்கின்றதையும், இனிநடக்கப்போகின்றதையும், உள்ள துள்ளபடியே சொல்லியருளினர். அவர்களுள் லீலாவதியென்பவள் சோடசவுபசாரங்களோடும் பூசித்து நிறுததிக்கொண்டு அப்போ தே ஓர்தூதுவனைக்கூவி வேதவாக்கியம்போலயாவையும் உள்ளபடி யறிந்துசொல்லவல்ல ஓர்சோதிடர்இங்ஙனம்வந்திருக்கின்றானென்று அரசனுக்கறிவிப்பாயென வாக்கியாபித்தனள். அவனவ்வாறேசெ ன்று அறிவிக்க, அரசன் அவனைப்பார்த்து அச்சோதிடரை இங்ங னமழைத்துவாருங்களென்று கட்டளையிட்டனன். அக்கட்டளை யைக் கேட்டமாத்திரத்தில் எமதுநத்தாகிய சோதிடர் அரசன் கொலுச்சபையிற்சென்றுகண்டவுடன்அவன்மனமுழுவதுங்குழை யுப்படி பிரபஞ்சமாயையினை நீத்த துறவினரைப்போலக் குளிர்ந்த முகத்துடனே அவனெதிரில் நின்றனர் நிவோதாசன் சுவாமியின் வரவைக் கண்டமாத்திரத்தில் எதிர்கொண்டழைத்துவந்து ஓராத னத்திலிருத்தி மிக்கபேருவகையோடும்பணிந்து துதிசெய்துசுவாமீ! இதுகாறும் இவ்வுலகத்தைப் பஞ்சேந்திரியம்போலப் பாதுகாத்து அரசாட்சிசெய்துவந்தேன், அவ்வரசாட்சியில் அடியேற்கிப்போது வெறுப்புண்டாயிற்று. ஆதலால் இவ்வாட்சி என்னை விட்டொழியு மோ அல்லது முன்போலவே இருக்குமோவென்று மனதிற்சிறிதுங் கவடில்லாமற் கேட்டனன். அதற்கு வேதநெறியிற் பிழையாத மெய்யடியார்கட்கு நற்கருமங்களேயே சாற்றவல்ல பெருங்கருணை வாய்ந்த விநாயகமூர்த்தியானவர் தாமே உத்தரங்கூறுது அரசனே! இத்தினத்திற்குப் பதினேழாம்நாள் ஓர் அந்தணர்வருவர் அவரே

நீகேட்ட கேள்விக்கு மறுமொழி கூறுவர். அவர்சொல்வதை நீயன் போடுகேட்டு நடந்துகொள்ளுகவென்று சொல்லினர். அவ்வாக்கி யத்தை அரசன் செவிக்கினிமையாகக்கொண்டு சுவாமிக்கு விடை கொடுத்தனுப்பி அந்தப்புரத்திற் சென்றனன். இப்பால் உடுண்டி விநாயகர் காஞ்சிநகரத்திற்சென்று நடாத்தியதிருவிளையாட்டினையும், திவோதாசனுக்கு ஓரந்தணன்வருவானென்று உணர்த்திவந்த காரி யத்தையும், சிவபெருமா னுணர்ந்து விண்டுவை அந்தணராகப்போ கும்படி உத்தரவுசெய்தருளினர் உடனே விண்டுவானவர் பவுத்த னுகவும் இலக்குமி கவுந்தியாகவும் உருக்கொண்டு இருவருங் காசி நகரத்திற்சென்று பவுத்தனுகிய விண்டுவானவர் ஆடவர் கூட்டத் துட்புகுந்து நம்மைப்கோல உயிர்வைத்திருக்கின்ற பசுக்களையும் ஆடுகளையுங் கொலைசெய்து வேள்வி நடத்துகின்றீர்களன்றே அவ் வேள்விகளினல் வரும் புண்ணியமானது அக்கொலையினல் நேரும் பாவத்தைத் தெதிர்நிற்கவல்லதோ கொலையானது இம்மையிற் சகல புண்ணியங்களையுங் கெடுப்பதன்றி மறுமை யில்நரகத்தினையும்விளை க்குமென்று அறியிர்களோ? பாவகருமங்களைப் புண்ணியகருமங்க ளென் றெண்ணி நடத்துவோர்க்கு அருள் எங்ஙனங்கிடைக்கும்? அன்தோ கொலைய சகல பாவங்கட்குந்தாய்தந்தையாக சகலசாத் திரங்களும் முறையிடுகின்றனவே. என இவ்வாறு பசுத்தம்ப முத லியவைகளைச்செய்து யாகாதி கிரியைகளை நடத்திவருகின்றவர்க ளுடைய மனமெல்லாம் மாறுபடும்படியாகப் போதித்து, அவர்கள் செய்துவருகின்ற மற்றெல்லாக் கருமங்களினும் பலகுற்றங்களைக் காட்டிவந்தனர். கவுந்தியாகிய இலக்குமியானவள் மங்கையர் கூட் டத்துட்புகுந்து பிரமன் புததிரர்களாகிய காசிபர்மரீசி தக்கன்முத லாயினோர் ஒருவருக்கொருவர் சகோதரர்களாகியிருந்தும் தக்கனு டைய புத்திரிகளைமற்றையர் விவாகஞ்செய்து தேவர்கள் முதலிய சகலரையும் பெற்றுமேன்மை யடைந்தார்கள். |அவர்களே அவ்வா றுக நீங்கள் வெவ்வேறு முறைகளை வைத்துக்கொண்டு இன்ப மனு பவிக்கின்றீர்கள் முறைமைபாராட்டி யனுபவிப்பதினு மண்டாகு மின்பமும் ஒரிஞ்மோ? உயர்மக்களாயினோர் ஒருகாலத்துஒருபொ . ருளால் ஐம்புலனு நுகர்தற் சிறப்புடைத்தாய் இன்பத்தைக் காத் தற்பொருட்டு முறைபேப்பரேயன்றி பலகாலத்து பலபொருளால் பலனுன்பங்களையும் விளைப்பதாகிய முறைகாத்தற் பொருட்டு இன் பத்தை நீக்குவரோ? ஐயோ இதென்னபாவம்! நிணித்தவர்களுடனே கூடியனுபவிக்கின்ற இன்பமே யின்பம். நிணியாதவர்களிடத்தில்

முறைமைபாராட்டிக் கூடுவதினால் பலதுன்பமே. என இவ்வாறு அக்கினிசாட்சியாய் விவாகஞ்செய்த கணவர்களேயெனறி ஏனை யோரை எள்ளத்தனையும் நினையாத மங்கையரெல்லாங்கற்புநிலைமை யினின்று கலியும்படியாகப் போதித்தனள். இவ்விருவர்களுடைய போதனையினைற் காஞ்சிகரத்திலுள்ள ஆடவர்களும், ஸ்திரீகளுந்தத் தம்நெறிகளிற் பிறழ்ந்து பிரஷ்டத்துவ மடைந்தார்கள். இவ்வாறு பதினறுநாள் சென்ற பின்னர், பதினேழாம்நாள் காலையில் திவோ தாசனெழுந்து இத்தினம் ஒரத்தணர் வருவாரென்று சோதிடர் சொல்லிப்போயினரேயெனத் தனது மனதில் நினைத்தனன் அப் போதே அவ்வத்தணராகிய விண்டுவானவர் அரசனெதிரிற்போய் நின்றனர். அவரை யுகண்டவுடன் அரசனவன் ஆசனங்கொடுத் திருக்கச்செய்து சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து இருகரங்களை யுங்கூப்பி எதிரின்று சுவாமி! தேவரீர விண்டுவென்று யானறிந்து கொண்டேன், தேவரீருடைய வஞ்சகத்தொழிலினல் இம்மேலான காஞ்சிகரத்தினுள்ளோர் மறுபட்டு நெறிபிறழ்ந்தார்களென்று மறி ந்தேன், இவையனைத்தும் தேவர்களாற் செய்த சூட்சியென்று தெ ரிந்துகொண்டேன், எனது அஞ்ஞான மனத்தைத் தொலையும்படி கிருபையோடு முன்னமெழுந்தருளிய உண்டி விநாயகருடைய வல்லபத்தையுங் கண்டறிந்தேன், முற்காலத்தில் அளவற்றபேர் தேவர்கட்கெல்லாம் பலதுன்பங்களை விளைத்த நாசமாயினர் அது போலே யானும் எனது அறிவின்மையினல் தேவர்களையெல்லாம் புறப்படுத்தினேன். இனியேனு மத்தேவகளைப புறப்படுத்தியபாவ ங்களெல்லாமொழிந்து சிறந்த பேரின்பத்தை யானடையுமார்க்கம் தேவரீர் கிருபைசெய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான்' அவை யனைத்தையும் விண்டுகேட்டு இவன் ஈண்பதினுயிரம் வருடம் நீதி யிற்றவராதபடி அரசாட்சிசெய்து வந்தவனதலால், இவனிடத்தில் உண்மையைபே பேசவேண்டுமென்று நினைத்துத்தமதுநிசரூபத்தை அவனுக்குக்காட்டி அரசனே! இக்காசித்தலத்தை விசுவநாதமூர்த் திக்குக்கொடுத்திடுவையாயின் அளவற்ற புண்ணியங்களைச் செய் தோர்கட்கு என்னபேறு கிடைக்குமோ அப்பேறு உனக்குக் கிடை த்திடுமென்று சொல்லித் தமதிருப்பிடஞ்சென்று, தமதூர்தியாகிய கருடனையழைத்து நாம் காஞ்சிகரத்திற்சென்று கடத்திய காரியங் களெல்லாம் மந்தாகினியி லிருக்கின்ற விசுவநாத மூர்த்திக்கு அறி வித்து வரும்படி ஏவினர் பின்னர் திவோதாசன் விண்டுசொல்லிட போனவார்த்தையினை நினைந்து மனமகிழ்ந்து காஞ்சிநாத்தை விசுவ

காதமூர்த்திக்கே விடுத்துத்தன தரசுரிமையைத் தனது புத்திரனிடத்தில் ஒப்புவித்துத் தனது பொக்கசத்திலுள்ள பொருள்களிற் பாதியெடுத்து [illegible]தமூர்த்திக்கு யாவரும் வியக்கத்தக்க ஓர் கோயிலினைச்சமைத்து அதில் ஓர்சிவலிங்கத்தினைப் பிரதிட்டை செய்து பூசித்திவந்தனன் இவ்வாறு சிலகாலம் ஆனபின்பு சிவபிரான் அவ்வரசனே அச்சிவலிங்கத்திற்றானே அயிக்கியஞ் செய்தருளினார் முன்னர் விண்டுவால் விடப்பட்ட கருடனனவன் மனோவேகத்திலும் விரைவாக மந்தரகிரியிற்சென்று விசுவநாதமூர்த்தியைப் பலமுறைபணிந் தெழுந்து தாமனுப்பிய உடுண்டி விநாயகராலும், மகாவிஷ்ணுவினாலும் நடந்தேறிய காரியங்களெல்லாம் விவரமாகச் சொன்னன். அவையனைத்தையும் விசுவநாதமூர்த்தி கேட்டுச்சந்தோஷமாகச் சகலசனங்களோடும் வெளிச்கொண்டுகாசித்தலத்தையடைந்தனர். உடனே காசியிலிருந்த துண்டிராசர்முதலாயினோர்சிவபிரானை எதிர்கொண்டுசென்று வணங்கினர்கள் அவர்களையெல்லாஞ் சிவபிரான்தம்மோடழைத்துக்கொண்டு சென்று காசித்தலத்துள் நுழைந்து சகலருஞ் சயசயவென்றுபோற்றும்படியாகத்திருக்கோயிலின்கண்சென்று விற்றிருந்தருளினார் உடனே அங்கரத்தினரெல்லாஞ் சென்று பணிந்தார்கள். விசுவநாதமூர்த்தியும் விசாலாட்சியம்மனும் முகமலர்ந்து இம்மேன்மையான காசிநகரவாழ்க்கையை உம்மாலன்றே கிடைக்கப்பெற்றோமென்றுசொல்லித்துண்டிராசரைமிக்க பேருவகையோடு மணைத்து உச்சிமோந்து தமக்கெதிர்நிற்கின்ற விண்டுவின்மீது கிருபாநோக்கத்தைக் கடாட்சித்தருளினர். அப்பால் மாசிமாதம் அமரபட்சத்து அங்காரக சதுர்த்திவர அந்நாளில் சுக்திரோதயகாலத்தில் தேவர்கள் முனிவர்கள் முதலாயினோரோடு சிவபிரான் துண்டிவிநாயகரைப் பூசித்து அக்காசித்தலத்தில் எக்காலமும் பிரியாதிருக்கத்தக்க வாழ்க்கையைப் பெற்றனர்.

உடுண்டி விநாயகர் திருவவதாரப படலம்.

முற்றிற்று



கடவுள் துணை.

பன்னிரண்டாவது

வல்லபை விநாயகர்

திருவவதாரப் படலம்.

பதினென்ரூன வவதாரம் பகர்ந்தா மினிப்பன்னி ரண்டென்னத்
துதிசெ யவதா ரமும்புகல்வாந் தொடுத்த விழைவாற் கேளென்று
பொதிசெ யிதழி னமுதகுத்தப் பொறிவண்டு மலர்க்கமலத்
ததிபன் வியாத முனிவனுக்கங் கருள்செய்தாங்குள் ளுறக்கேளீர்.

ஓ சுவுனகாதி முனிவர்களே! விநாயகமூர்த்தி உடுண்டி விநாய கர் திருவவதாரங்கொண்டு துராசதனை வென்று காசிசுகரைக் காத் தருளிய திருவிளையாடலைச சொன்னேம், இப்பால் வல்லபை விநா யகர் திருவவதாரங்கொண்டு செய்தருளிய திருவிளையாடலைசசொ ல்லுவோம் கேட்பீர்களாக

முன்னொருகாலத்தில் பிரமதேவரானவர் தமதுசதசதியலோகத தில் மரீசி முதலிய சிறுவிதிகளும் தேவர்கள் முனிவர்கள் முதலாயி னோரும் பரிசுத்தமனத்தினராய்ப் புடைசூழ்ந் திருக்கும்படி சிங்கா தனத்தில் வீற்றிருக்கின்றபோது ஒருநாள் தமதுபுத்திரருட்சிறந்த மரீசியென்பவர் அவரைப்பணிந்தெழுந் துசிருட்டிதிதிசங்காரமென் னும் முத்தொழில்களை நடாத்திவரும் மும்மூர்த்திகளுள் தலைவராய் அம்மூர்த்திகட்கு முத்தொழில்களைச செய்வித்தவராய், ஞானமே வடிவாகவுடையவராய், சத்தியமான வேதப்பொருள்களில் வல்லவ ராய் சகலலோகங்கட்குமீசராய், எல்லாப்பொருள்களுக்குங் கர்த் தாவாய், சருவவியாபியாய், சிவசாட்சியாய்இன்னுமிவ்வகைப்பட்ட குணதிசயங்களுடைய முதல்வர்யாரோ அவரை அடியேங்கட்குத் தேவீர் திருவாய்மலர்ந்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தனர். அதற்குப் பிரமதேவன் தம்மோ டொப்பாரு மிக்காருமில்லாதவிநா யகமூர்த்தியைத் தியானஞ்செய்து தமகருள்வஸ்து நிச்சயத்தெரிந் துகொண்டு ஆனந்தபரவசத்தராய் விழிகளில்போதரைப்பெருக்கி நத்தழும்பேறும்படி வேதங்களினும் றுதிசெய்து மிக்க மனவருக் கத்தோடு மரீசிமுனிவரைப்பார்த்து மைந்தனே! முன்னொருகாலத் தில் மூலவாணவத்தின் செருக்கினல் யானும் விண்டுவுந் தனித்த னிப் பிரமம்யானென்றுதருக்கி யுத்தஞ்செய்தனம். அப்போது மூல

லகத்தில் எங்க ளிருவரின்மத்தியில் கொழுந்துவிட்டெரிகின்ற அக் கினிரூபமாய் அண்டகோடிகண்முழுவதும் நீண்ட சோதிதோன்றி யது. அவ்வாறு நின்ற சோதியெவரோ அவரே ஆகாயமத்தியகர், அவரே சர்வேசர், அவரே கணேசர், அவரே மூவருள்ளும் முதன் மையாய் நீ வினயிய குணங்களனைத்தும்பொருந்தி நின்றவர்என்று சொல்லினன். அதற்கு மரீசிமுனிவர் மீட்டும் தொழுதெழுந்து சுவாமீ! சகல வுயிர்களையும் ஆக்கல் அழித்தலாதி தொழில்களைப் பெற்று வாழ்கின்ற உங்களைப்போல அந்த அரனும் அழித்தற் றொழிலைப் பெற்று இருப்பதால் அவர் உம் மூவருளொருவராயிருக்க வேண்டுமேயன்றி உம்மிருவருக்கும் மேலானவராய் முதன்மைபெற் றிருப்பது எந்தகாரணத்தாலென்று வினவினன். அதற்குப்பிரமன் புன்னகைகொண்டு மைந்தனே! ஆதியில் என்னையும் விண்டுவையுஞ் சிருட்டித்த எங்கட்கு ஆக்கவுமளிக்கவுமானவல்லபமுங்கொடுத்து எங்களிதயத்தின்கண்ணு மிருந்து எங்களின் முன்னிலையில் அவ்வி ரண்டு தொழில்களையும் நடாத்துகின்றார். மேலும் மோகிதராகிய எங்களை இவ்வாறு சிருட்டித்துக் காத்தபின்பு எங்களைச் சங்கார முஞ் செய்கின்றனர் அன்றியும் ஆதியில்வேதாகமகலைகளியாவையு மூண்டாக்கி எங்கட் கோதுவித்தவரும் அவரே, பூவில் மணமும் அழலில் வெப்பமும், எள்ளில் நெய்யும், மணியிற் பிரகாசமும், விறகிற் புகையும்போல ஆன்மாக்கள் தோறும் நிறைந்திருக்கின்றவரும் அவர் ஒருவரே. அவருடைய சங்காரத்தி லழியப்பட்ட எங்களை மீட்டுந்தமது பெருங்கருணையினல் சிருட்டித்துங்காத்துமெல்லாச் சுகங்களையுங் கொடுத்தருளுகின்றனர் ஆதலால் சங்கார கர்த்தன் அவ்வொருவரே எங்கட்கு முதல்வனென்றறியக்கடவையென்றனன். அப்பால் மரீசிமுனிவர் மீட்டும் பிரமதேவனைப்பார்த்து அத்தனே? தேவரீர்கூறியதனைத்து முண்மையே. எல்லாம் பிரமமயமென்று தம் மையொத்த மேலோர்கள் சொல்லியிருக்க சங்காரகர்த்தராகிய, உருத்திரமூர்த்தியால் சகல வேதாகம புராணங்களுண்டானதன்றி அவைகளையெங்கட் குபதேசித்ததுவும் அவரேயென்று தேவரீர் எவ்வாறு சொல்லக்கூடும். அச்சங்தேகத்தினை அடியேற்கு நிவர்த் தியசெய்தருளவேண்டும் என்று கேட்டனன் அதற்குப்பிரமதேவன் சந்தோஷங்கொண்டு மூன்னர் தாம் மகேச்சராரால் உபதேசிக்கப் பெற்றஓர் அதுபூதியை அம் மரீசிமுனிகளுக்குச் சொல்வதாயினர்.

மாயையைத் தொழிற்செய் தியக்கிடவந்த மாயையிற் கலந்து நிற்றலினல், மாயையைக்கடந்த வவர்தமைமாயா சரூபியென்றுரை

வழங் குதல்போ, லாயவெப் பொருளும் விரவிநிற்றலினு லத்தகு மொற்றுமை கோக்கி, மேயகல் லுபகா ரத்தினு லெலையு மேதகு பிரமமென் றதுவே.

தங்குமொற் றுமையாற் சொன்னதே யன்றிச் சகலமும் பிரம மோ வாகா, மங்குத லின்றிச் சகலமும் பிரம மயமெனுஞ் சுருதியி னருத்த, மெங்கணு மெஞ்சப் பொருளினுமிறைவரியைந்துடன்மன் னுகின்ருரென், றங்கவர் தம்மை யுரைத்ததே யாகு மதுவன்றியொ ன்றன்ற தன்றே ••

அன்னதா கையினுற் பிறப்பிறப்பின்ற் பகிலவாதிக்கமாய் விபு வா, யன்னிய மின்றிச் சகலவான்மாவினர்தரியாமியாயிருக்கு, முன் னரு மீசர் யாவரோ வவரே முழுதருள் கணேசரன்னவரே, மன்னி யசகத்துக் கொருபெருங் கர்த்தர் மற்றுவே றொருவரு மிலரே.

அவன்பரஞ் சோதி தத்துவாதீத னருணின னனகந்ற் குணத் தோன், சிவன்பரத் தினுக்கும் பான்வெகுரூபி திகழ்பர தத்துவ னீசன், றவறினிற் குணத்தன் சர்வகல்யாணர் தமக்குமோர் காரு ணனென்ன, வெவர்களுங் துதிக்கப் படுவரக் கணேச ரெங்களேத் தினம்புரக்கின்ருர்.

வெளியென வவர்தா மீனத்தையும் பொதிந்து விளங்குகின் ருரவருள்ளே, வெளியிடை யனேத்துங் கிடப்பனபோல விரவின வா ருயி ரணைத்து, மொளியுறு ஞானக் கரவரி வுரிததாங் குறுசமு சா ரத்தி நீங்கிக், களிபெறு மிந்த வியல்பறிந்தவரே கவியுடைக் கழலி ணையடைவார்.

இத்தகு கவியின் மகத்துவ மென்ன வியம்பிடமுடியுமோமுடி யா, வுத்தமவேத மானதியாதோ ரிடதுபசாரமாவெனினும், வைத் தநே மியையுஞ் சொல்வதோ வந்த வைப்பினு மிதார்த்தமேயாகத், தத்துவாதீத ஞனதேவேசன் றண்ணிய சொல்வது கண்டாய்.

அன்னியமான பாவனைதன்னு லரிமுதற் றேவரைக் குறித்து, மன்னிய முனிவர் தங்களைக் குறித்தும் வருத்திடுகிருமங்க ளெல் லாம், பன்னரு மேக பாவனையதனற் பரவுதேவேசர்தம்பாங்காத், தன்னுவ தலது வேறொரு பாலுக் தன்னுரு தெனச் சொலுஞ் சருதி.

எங்கள்பா லீருந்து தனுகரணங்க ளியக்கியொற்றித்தநிற்கை யினு, லெங்களு_யாளுஞ் சம்புவினுடைய_வெழிற்பஞ்சடப் பாதிக

டமையு, மிங்குபோட் டவர்கட் கருள்வரமாதி யியல்புறு மருளையுஞ் சுருதி, யெங்களுக் கியல்பா யுள்ளனவாக வியம்பிடு முகமனையொ ருசார்.

மெய்ஞ்ஞா னிவனே டொப்ப வெங்களையும் வைத்தெவனுரைக் கின்றுள்வனே, சிப்க்குகாடும் பாவி யாய்நரகத்திற் றுழ்ஞுவன் யாவ னெங்களையு, மியக்குமீச் சுரனே டொப்பமேலாக வியம்புகின் றுன ந்தப் பாவி, பபக்குமெத் துயர்க்கு மாகாரமான பகையெனப் பாவி யா கின்றேம்.

அதிகபுண் ணியங்க ளியற்றினோர்க்கின்ப மருள்சிவனுக்கணை ச்சாரே, பதியவ ருள்சேர் நாங்களே பசுக்கள் பன்னிய விதற்கொ ருசான்று, முதிர்கட லுலகில் விதியினு லெம்மான் முற்றிய பூசனை கொண்டு, கதிகொடுத் தனேகங் கணேசமூர்த் திகடாங் கவின்றிரு க்கின்றன காணுப்.

அந்தமூர்த் திகளே புத்திமுத்திகளே யாதரித்திரந்தவர்க் கெல் லாஞ், சிந்துமா மழைபோல் வழங்குகின் றனவச் செய்கையான்மீ கிய நீயும், பந்தம்வீ டிரண்டுங் தமக்குருக் கணேசர் பதங்களே சரணமா வடைதி, யிந்தவா றெனக்கு மியச்சுரர் தம்மா லியம்பி டப் பட்டது கண்டாய்.

இவ்வாறு பிரமநிச்சயத்தையும், வேதாகமபுராணங்களுண்டா ன காரணத்தையும், அப்பிரமமே துஷ்டசன நிக்கிரகஞ் சிஷ்டஜன பரிபாலனஞ்செய்யும்பொருட்டு கணேச மூர்த்தியாகத் திருவவதா ரங்கொண்டெழுந்தருளியதையும், விவரமாக உபதேசித்து மைந்த னே அளவளாவியமோகவுள்ளத்தினுய் கணேசருக்குமேலானமூர் த்தியுண்டென்று சிறிதும்நினையற்கவென்று சொல்லினன். இவைய னைத்தையும் மரீசிமுனிவர்கேட்டு சந்தேகங்களினின்று நீங்கித் தெ ளிவெய்தி, முன்னெருபோது அப்பிரமனுடைய சிருட்டியா லுண் டான மானதசரசுவன்னுர் தடாகக்கரையிற்சென்று மேலான செல் வத்தைப்பெறவேண்டுமென்று கணேசமூர்த்தியை மனதிற் நியானி த்து மழைபணிவெய்யலாதிகட் கிளையாது, இருபத்தோராயிரவரு டம் நிராகாரமாகவிருந்து அரியதவத்தினைச் செய்தனர் அத்தவஞ் திற்கு கணேசமூர்த்தி மனதிரங்கி நவரத்தினஆபரணங்களால்அல ங்கரிக்கப்பட்டிருக்கின்ற மூடிகவாகனத்தின்மீது மழுவாயுதத்தி னேத்தாங்கிய திருக்கரத்தோடு தரிசனந்தந்தனர். உடனே மரீசிமு னிவர் திகைத்தெழுந்து அனந்தமுறைச் சாஷ்டாங்கமாகப் பணிந்

சூழ்ந்து வேதாகமங்களினிற்றுதிசெய்து நின்றனர். அதற்கு விநா
யகமூர்த்தி திருபைசெய்து அன்பனே ! உனக்கு வேண்டிய வரங்க
ளைக் கேளென்று திருவாய்மலர்ந்தனர். அதைக் கேட்டமாத்திரத்
தில்மரீசி முனிவர் ஆனந்த பரவசத்தராகி ஆடிப்பாடி அனந்தமு
றை வலம்வந்து தாமுள்ளத்தில் விழைந்தவரங்களில் ஒன்றையும்
விடாமற் கேட்பதாயினார்

தேவதேவ மாதேவ மாதவ பூசுரித திதிமபாத
பாவ நாசக சரணாலயினை வாழ்த்தி கருணை செயுந்தலைவ
பூவனாரியர் பிரமாதிரமக புவன தாமபர் தலைதமகுகுவ
காவல்புரியு மதிகாரவ கலைபோன் றனைத்த தரல்வேண்டும்

யாங்குள் ளவரு மெனதாணை யிகவா திபற்றி வாழ்வேண்டும்
யாங்கு மடியேற குனைநிருனா ம நாடந் தோறு முறுதலவேண்டும் [டும்
யாங்கு மெனதியமையாவர னெனைநி னாணை சாரந்திடல்வேண்
யாங்கு மடியேற கோரிட நீவெப்தா கிருதல மீயண்டுமே

வேதபாரா யணராக மிருப்புனரா பதினெனரா
போத மேதுமு புரியாரா யிலவகார்முகு மைகதாயலா
நாத நாபேற் குறைவேண்டுங் காலபா யடியே னினையன்றி
காதலால்வே றெருதெபவவ கருதா திருதலை வேண்டுமே

வள்ள லெனுமெம பெருமானின வாம பாதத திருகின்று
தெள்ளு மருளிர சுரியான வைபே பினைதுபு தகிரியாய்
நள்ள வேண்டி மவடன்னை நாயென் வதுவை செய்தனிர்பக
கொள்ள வேண்டுமு கீபென்னைக் குலைபா தனிக வேண்டுமே.

இவ்வாறு மரீசிமுனிவர்கேட்ட வரங்களையெல்லாம் விநாயக மூர்த்தி கொடுத்தருளி அகத்தியனாமாயினார். இப்பால் அம்முனிவர் அமுதுண்டவைபோபாசதத்தினதிதமதிதருவையாகிபரிமளித்த வனே நீனைதனர் அருபபோலப்பிரமதவனபதுதிஅப்புதத்திரன் கொண்டிருகினற கோடபாட்டினை நிதானித்து ஐயோ! வேத நூலாலும் அளவிடற்கரிய மேலான மூர்த்தியை அரியதவத்திலை தரிசிக்கப்பெற்றும் சற்றேனு முத்தியின்கண் விருப்பம வையாது மோகத்தை விருத்தியாகவல்ல போகத்தை வீணேவிழைந்தனன். அவனுடைய கனழானுபவத்தையுகந்த விநாயகமூர்த்தியும்அவன் விரும்பியவரங்களைக கொடுத்தருளினர் இனியவன் அவையனைத்

தையும் அனுபவித்தே தீரவேண்டும். முத்தியும் அக்கடவுளுக்கே சத்தா லல்லது அவனுக்குக் கைகூடாது. என்று பலவாறு தமக் குள் நினைத்து அம்மரீசி முனிவரிடத்திற் சென்றனன். உடனே அம்முனிவர் பிரமதேவனைப் பணிந்தெழுந்து அண்ணலே! யான் வாழ்ந்துய்வதற்கு ஓர்தெய்வ நகரத்தினைச் சிருட்டித்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டனன். அதற்குப் பணிந்தகுமாரனே ஆசீர்வதித்துத் திரிலோகத்தினுமில்லாத ஓர் நகரத்தினைச் சிருட்டித்து அதற்குப் பிரமநகரமென்று பெயரிட்டுக் கொடுத்தனன். அந்நகரத்தில் மரீசிமுனிவர் பிரவேசித்து நவரத்தினமயமாய் கோடி சூரியோதயம்போல விளங்குஞ் சபாமண்டபத்தில் கொலுவிருந்து பிரகற்பதி பகவானைச்சேர்ந்த அளவற்றதேவர்களும் சுக்கிரபகவானைச் சேர்ந்த எண்ணற்ற இராக்கதர்களும் சூரியன்முதலிய கோள்களும் இந்திரன் முதலிய திசைக்காவலர்களும் மற்றுமுள்ள சகலரும் பணிந்து புடைசூழும்படியாக அரசாட்சி செய்துவந்தனர். அப்போது பிரமதேவன் தேவவல்லியென்னும் ஓர்கன்னிகையைச் சிருட்டித்துக்கொடுக்க அம்மரீசிமுனிவர் வேதாகமவிதிப்படி விவாகஞ் செய்து மேலான ஆயிரம்பிள்ளைகளையும் பெண்களையும் ஈன்று சகல போகபாக்கியங்களையுங் குறைவறப்பெற்று வாழ்ந்திருந்தனர்.

கேட்டீர்களோ ரவுனகாதிமுனிவர்களே! இனிமரீசிமுனிவருக்கு விநாயகமூர்த்தி கொடுத்தருளிய வரத்தினால், உமாதேவியார் வல்லபையாகத் திருவுருக்கொண்டதும், அவ்வல்லபையை எமதுகர்த்தன் கணேசமூர்த்தியாகத் திருவுருக்கொண்டு வந்து விவாகஞ் செய்தருளியதுஞ் சொல்லுவோங் கேட்பீர்களாக.

இவ்வாறு மரீசிமுனிவர் அரசாட்சிசெய்துவருகின்றகாலத்தில் ஒருநாள் கைலாயத்தில் விண்டுவாதியதேவர்களும்புடைசூழ்ந்துவரும் படியாகச் சிவபிரான் திருவோலக்க மண்டபத்தில் வீற்றிருக்கின்ற போது உமாதேவியார் சிவபிரானைப் பணிந்தெழுந்து ஓ சகலதேவர் கட்குமேலான கடவுளே! ஓ அடியார்கட் கருள்செய்யவல்ல வள்ளலே! ஓ எங்கும் வியாபியாயிருக்கின்ற சோதியே! ஓ சூரபானன்தாரே இவ்வுலகங்களிலுள்ள சராசரங்களினிலைமையை அடியாட்குரைத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனள். அதற்குச்சிவபிரான் திருவுளமாகி பெண்ணே! நிமித்தம் துணை உபாதானமெனச் சொல்லுகின்ற மூன்றுகாரணத்தினால் உலகங் காரியப்படுகின்றது. அக்காரணம் மூன்று மின்றிக் காரியமான உலகமில்லை. இவற்றுள் நீ

த்தகாரணம்யாம் தணைக்காரணம் சமதுசத்தி. உபாதானகாரணம்
ம்மாயை இம்மூன்றினுள் தணைக்காரணமாகிற சத்திரீயேயென்
றறியக் கடவையென்றனர் அதைக்கேட்ட உமாதேவியார்த் தருத்தி
கின்று சுவாமீ! சத்தியானேயாகில் எவ்விதத்தில் போகிக்கிறார் தே
வரீர்க்கு உடலும் உருவமும் யானன்றி வேறில்லை எனதிசையினு
லன்றோ சகலலோகங்களு மதைகின்றதென்றனர் இவ்வாறு உமா
தேவியார் தருக்கிக்கூறிய வார்த்தையினைச் சிவபிரான்கேட்டுக்கோ
பங்கொண்டு, பெண்ணே! சமதுபெருமையை எவ்வளவும் ஒருவரா
ல் காணுதற்கருமையாயிருக்க நீ சிறிதும் காணமில்லாமல் சமக்கு
முன்னே உன்னைநீயே புகழ்ந்துகொண்டனை, சிருட்டிமுதலிய முத்
தொழிலகளும் சூரியனுக்குமுன் சமலம்போலப்பூத்து நின்றொழி
தல் சம்மாலன்றி மற்றை ஒருவரா லாவதிலலையென்பதை இப்போதே
தெரியச்செய்கின்றோம் பாரென்று உலகங்களிலுள்ள சத்திகளையெ
ல்லாம் ஒடுக்கிக்கொண்டனர் அம்மாத்திரத்தில் சூரியன்-சந்திரன்-
அக்கினி யென்னும் முச்சுடர்களும் இல்லாமற்போயின. அதனால்
இரவும்பகலுமில்லாமல் எத்தொழில்களுமாறு சர்வசங்காரகாலம்
போலாயது. அச்செயலை உமாதேவியார்நோக்கி இனியாம்யாதுசெய்
யக்கடவோமென்று பயந்துநடுங்கி, தாம்கொண்டிருந்த கருத்தினை
யெல்லாமொழித்து, சிவபிரானுடைய வல்லபமின்றி யுலகும் நிலவு
தலில்லையெனத் தமக்குள்நிச்சயித்து அவரது திருவடிகளில் அன
ந்தமுறை தொழுதெழுந்து இருகரங்களையுங் கூப்பி நின்று துதி
செய்வதாயினர்

சயதேவ தேவ சயபத்தர் நேச சயவெங்கு நின்ற தகிவ
சயவா ரணங்கண் முறையிட்டி ரின்னு மறியாமை நின்ற சரண
சயநா ரணற்கு மறையோற்கும் யாக்குந் தனுவாதி நல்கு மிறைவ
சயநாத வின்று னியல்புள்ள வாறு தமியேனுணர்ந்து தொழுதேன்.

வித்தின்றி நாறு வளரப் பணித்து விமலத் தடைந்த வுயிரின்
கொத்தின்றி யேனை விணையிற் படர்ந்து குழையாவி யாவு மலமார்
தித்தின்றி யைந்து தொழிலாணு முத்தி பெறவாகி நின்ற பெரும
னத்தின்றி யினறு னியல்புள்ளவாறு தமியேனுணர்ந்துதொழுதேன்

அனுபாய மான மணியின் சகங்க ளடை தோறு மாறு தகர்வுற்
றினியேது வேறு கதியென்று தம்மு ளிறுமாந் திருக்கு பவரை
னியாத மும்மை யுருவா யிருந்து ளரிசிற் பிரிந்த மருவும்
-ரியீச வின்று னியல்புள்ள வாறு தமியேனுணர்ந்துதொழுதேன்:

இவ்வாறு உமாதேவியார் துதிசெய்து கர்த்தனே! தேவரீரையன்றி ஓரணுவும் அசையாதென்பதை யறிந்தனன். அடியாள் அறிவின்மையினல்செய்த அபராதத்தினைப் பொறுத்துக்காப்பதன்றி பழையபடி உலகத்தையெல்லாம் உண்டாக்கி யருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்குச் சிவபிரான் மனமிரங்கி முன்னர் பதினெருகோடி உருத்திரர்க ளுண்டாகும்படி நினைத்தருளினர். அம்மாத்திரத்தில் அவர்களெல்லாம் நித்திரையினின்றுநீங்கினவர்களைப் போல பொள்ளென் றெழுந்தார்கள். எழுந்த பதினெருகோடி யுருத்திரர்களும் ஏகசித்தர்களாய்ச் சிவபெருமானுடைய திருவடிகளை மனதிற்றியானித்து நடந்தகாரியங்க ளனைத்தும் கர்த்தனது திருவிளையாட்டென்றறிந்துஉறங்கியிருக்கின்ற ஆன்மகோடிகட்கெல்லாம் அறிவையுண்டாக்கும்பொருட்டு த திருவிடைமருதூரென்னுந் தலத்தினைச்சார்ந்து சிவராத்திரியாகிய அவ்விரவில் நாலுகாலமும் வேதாகமவிதிப்படி பூசைசெய்தார்கள் அப்பூசனைக்குச்சிவபிரான்கிருபைசுரந்து அவர்களைதிரிற் பிரத்தியட்சமாயினர் உடனே அவ்வுருத்திரர்களெல்லாம் திகைத்தெழுந்து அனந்தமுறை தீர்க்கதண்டஞ்செய்து கரங்களைச் சிரமேற்கூப்பிநின்று துதிசெய்வதானார்கள்

போற்றி விச்சுவ ரூபனு யிருந்தபு ரணனே
போறறி யாவையும் படைததனித தழிக்கும்புண் ணியனே
போற்றி யெவ்வகைப் பொருளுகுஞ் சுதந்தரப் பொருளே
போற்றி யெற்றைக்கும் பொன்றுமுத் தனுவுடை முதலே.

வீர போற்றிமூம் மலதையும் வேரொடுங் களையுஞ்
சூர போற்றிதுட் டழையடுஞ் சூலங்கை யேந்துங்(
தீர போற்றிநற் றிருவிடை மருதெனச் சிறந்த
ஊர போற்றியெம் முளத்தம ரொருவனே போறறி.

இவ்வாறு யாவருந் துதிசெய்து ஒ சர்வேசனே! சகலலோகங்களையும் பழையபடி யுண்டாகுகி யருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குச் சிவபிரான் மனமகிழ்ந்து அவ்வாறே சகலலோகங்களுமுண்டாகுகவென்று அநுக்கிரகஞ் செய்து அன்பர்களே! உங்களுக்குவேண்டிய வரங்களைகேண்மின்களென்று திருவாய்மலர்ந்தனர் உடனே அப்பதினெருகோடி உருத்திரர்களும்மறுபடியும் பணிந்தெழுந்து, ஓபக்தவச்சலனே! யாமெல்லாம்இவ்விரவில்நேயும் நாலுவேதாகமவிதிப்படி எவ்வாறு நாற்காலமும்பூசித்தோமோ அவ்வாறே இனியாவரும்பூசிக்கவேண்டும். இச்சிவராத்திரியால் அடியேங்க

டருண்டாகியபுண்ணியமெல்லாமே அவ்வனவும்அவ்வம்பினர்க்கு
உண்டாகவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதுவும் சிவபிரான்
கொடுத்தருளி அந்தர்த்தானமாயினர். இவ்வாறு அவர்கள் கேட்ட
வரங்களைச் சிவபிரான்கொடுத்து மறையும்முன்னமே அவரது பெ
ருங்கருணையினல் விண்டுமுதலாயினர் அறிவுடையவர்களாயெழு
ந்தார்கள் சூரியனுதி முச்சுடர்களும் உலகத்திற்பிரகாசித்தன. இப்
பால் அறிவுடையவர்களாயெழுந்த தேவர்கள் முனிவர்கள் முதலா
யினர் இவையனைத்தும் சிவபெருமானுடைய திருவிளையாட்டென்
றறிந்துயாவரும் அத்திருவிடைமருதூரிற்றரிசனஞ்செய்து எமதுகர்த்
தனைவேதாகமமுறைப்படி வழிபட்டுப் பின்னர் யாவருங் கயிலாய
வரைக்குச்சென்று சிவபிரானை அனேகமுறைப்பணிந்து துதிசெய்
து ஓ தீனசரண்யராகிய கிருபாளுவே! யாங்களனைவரும் அளவற்ற
நாள் இருளிற்கிடந்து நித்திரைசெய்திருந்ததும், பின்னர் சுவாமிக
ளுடைய கிருபையினல் ஆநந்தநிரைனிங்கி அறிவுற்றெழுந்ததும்
சுவாமிகளுடைய திருவிளையாட்டாயினும் நித்திரையிலிருந்த அத்
தீனகாலமாயாங்கள் நித்திய கன்மாதிகளின்றி நீங்கியகுற்றம்நீங்
குமாறு ஓர் பிராயசித்தந் தயைசெய்பவேண்டுமென்று பிரார்த்தி
த்தார்கள் அதற்குப் பரமபாதமென்பதோ சிறிதுமில்லாத எமது
கர்த்தனுவா சருளாயிற்று ஓதவத்தர்களே! நுங்களுற்றம் பார்ப்ப
தியினுடைய தருகலினுண்டானதால் நீங்கள் செய்துகொள்ளவே
ண்டிய பிராயசித்தமொன்றுமிலலே இனறுமுதல் நீங்கள்யாவரும்
விசனமில்லாமல் சகலகருமங்களையும் வேதாகமமுறைமைப்படி செ
ய்துகொள்ளலாமென விண்டகொடுத்தனர அதை அவர்க ளனைவ
ருங்கேட்டு மனமகிழ்ந்து தத்தம்பதிகளோடுசென்று எல்லாக்
கருமங்களையும் வழுவின்றி நடத்திச சுகமுற்றார்கள்

• இப்பால் உமாதேவியார் பரமேஸ்வரருடைய திருவுளக்குறிப்
பினையுணர்ந்து மிக்க பயபகதியுடனே காதகனைப் பணிக்கெழுந்து
சுவாமீ அடியாளபொருட்டுத தீதவீர் சகலலோகங்களையும் இரு
ளில ஒடுக்கிவைத்தபடியால அப்பாவ மெண்ணிவிட் டொழியுமாறு
யான் செய்துகொள்ளவேண்டிய பிராயச்சித்தம் யாதோ அதனைத்
தேவீர் திருவாய்மலர்ந்தருள வேண்டு மென்று பிரார்த்தித்தனர்.
அதற்குச் சிவபெருமான் புன்னகைசெய்து மிக்கமனமகிழ்ச்சியோடு
மாதேவியாரைப்பார்த்து, பெண்ணே நீமகருமுன்னிருந்து உண்
ணோநீயே உயர்த்திப்பேசினை? அப்பெரும் பிழையினல் உலகத்தில்
இருள்மூடிக்கொண்டது. அதனல் சகல வான்மாக்களுந் தத்தங்க

